
திருத்தலங்கள் வரலாறு



UG.3095

திருத்தலங்கள் வரலாறு

பதிப்பாசிரியர்
வித்துவான் சு. பாலசாரநாதன்

உதவி
எஸ். சாயிராமன்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

நூல் நிலையம்
பெசன்ட்நகர்: சென்னை 600 090

1990

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்.
வெளியீடு எண்—106

முதற் பதிப்பு 1990 பிரதிகள் : 1200

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை 600 090.

விலை: ரூ. 60.

Published with the Financial Assistance of
National Archives
Government of India, New Delhi.

கலாக்ஷேத்திரம் அச்சகம், சென்னை 600 041

பொருளடக்கம்

பதிப்புரை

சிற்றாராய்ச்சி — xvii

மூவரும் பாடியதலங்கள் — xvii

தலமுறை அட்டவணையும் பதிகத்தொகையும் — xviii

தலமுறை அட்டவணை — xxii

நூல்

பாடல் பெற்ற தலங்களின் விவரம்
அகத்தியான் பள்ளி முதல் ஓமாம்புலியூர் வரை — 1–128

கச்சி அநேதங்காபதம் முதல் திருவிடைவாய் வரை — 1–344

அநுபந்தம் — 1–13 345–660

பிழையும் திருத்தமும் — 661–660

பதிப்புரை

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

ஐயரவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் சங்கநூல்களையும், பிரபந்த வகைகளையும், புராணங்கள் முதலிய நூல்களையும் ஆராய்ந்து தமிழுலகிற்கு அளித்துள்ளார்கள். அவர் தம் வாழ் நாளில் சுமார் நூறு நூல்கள் வரை பதிப்பித்துள்ளார்கள். அவர் தமிழமறையாகிய தேவாரத்தை நன்முறையில் பதிப்பிக்க வேண்டும் என்று ஆராய்ந்து வைத்துள்ள கையெழுத்துப்பிரதிகள் பல. அவர் சுவடிகளைச் சேகரிக்கச் சென்ற இடங்களில் உள்ள கோயில்கள் வரலாற்றை ஆராய்ந்து குறித்துவைத்துள்ள ஏடுகள் பல. வித்துவான் தியாகராச செட்டியாருடைய முயற்சியால் கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

பிறகு ஐயரவர்களுக்குச் சேலம் இராமசாமி முதலியாருடைய நட்புக் கிடைத்தது. சீவகசிந்தாமணி என்னும் நூலைக் கொடுத்துப் பாடம் சொல்லவேண்டும் என்று கூறவே, ஐயரவர்களும் அந்நூலை வாங்கிக் கொண்டு வந்து ஆராயும் பொழுது, மேலும் பல சங்கத்தமிழ்நூல்களைப்பற்றி அறிந்து கொண்டார். 'சீவகசிந்தாமணி' யைப் பதிப்பிக்கும் பொழுது தம் குமாரருக்கு எவ்வித வீட்டுக்கவலைகளும் இல்லாதவாறு ஐயரவர்களின் தகப்பனார் பார்த்துக் கொண்டார்கள். தகப்பனாருக்குப் பிறகு ஐயரவர்களின் குமாரர் திரு. கலியாண சுந்தரையர் குடும்பப் பொறுப்பைக் கவனித்துக் கொண்டார்கள். ஆகவே பல நூல்களைத் தமிழுலகிற்கு அவர் அளித்துள்ளார்கள். கவலை இருப்பின் ஆராய்ச்சித்துறையில் ஈடுபடுவது கடினம்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களால் தமிழ் வியாசர் என்று சிறப்பிக்கப் பெற்ற ஐயரவர்களுக்குத் தேவாரத்தில் அளவிலா ஈடுபாடு உண்டு. தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் சில பதிகங்களைப் படித்துவிட்டுத்தான் மற்ற அலுவல்களைக் கவனிப்பார்கள். அவர் தினந்தோறும் பஞ்சாக்ஷர ஜபத்தை இருபதினாயிரம், முப்பதினாயிரம் என்ற கணக்கில் செய்துள்ளார்கள் என்பதை அவர் குறித்து வைத்துள்ள நாட் குறிப்புக் களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஐயரவர்களுடைய முன்

னோர்கள். சிவ வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். ஐயரவர்களும் சிவ வழிபாட்டினைச் செய்து வந்தார்கள். ஐயரவர்களின் பேரர் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள் தினந்தோறும் தேவார பாராயணமும் சிவபூஜையும் செய்து வருகிறார்கள்.

ஒரு சமயம் உடல்நலம் குன்றி இருக்கும் பொழுது தம் மாணவராகிய திரு. கி. வா. ஜ. அவர்களிடம் தேவாரத்தைத் தாம் பதிப்பிக்க இருப்பதாகவும் உடனிருந்து உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

ஐயரவர்கள் திருச்சோற்றுத்துறைக்குச் சென்றிருந்தபோது வயது முதிர்ந்த ஒரு பெண்மணியிடம் தாம் ஏனையோரைக் கேட்டும் அறிந்திராத அத்தலத்தைப் பற்றிய புராணவரலாறு முதலிய செய்திகளை மிக்க ஆர்வத்துடன் விசாரித்தறிந்து அதனை 'அன்னம் படைத்தவயல்' என்ற கட்டுரையாக நல்லுரைக் கோவையில் எழுதியுள்ளமை தலவரலாறுகளை அறிந்துணர்வதில் அவருக்குள்ள பேரன்பைப் புலப்படுத்துகிறது. 1942ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் தேதி திருக்கழுக்குன்றத்தில் உடல்நிலை மிகவும் மோசமாகி வரும் நேரத்தில் அருகிலிருந்த தம் மாணவராகிய திரு. வேணுகோபாலன் என்பவரை அழைத்து திருக்கழுக்குன்றப்பதிகத்தைப் படிக்கச் சொன்னார்கள். அவருடைய மாணவர் படித்து வரும்போது ''பிழைகள் தீரத் தொழுமின் பின் சடைப் பிஞ்ஞகன் என்று இருந்ததை பின் சடை என் பதைப் பிழை என்று நினைத்துப் பின்னுசடைப் பிஞ்ஞகன் என்று திருத்தி வாசிக்கச் செய்தார்கள். இதனால் இறைவனடி சேரும் தருணத்திலும் தேவாரத்தில் மிகுந்த ஈடுபாடு இருந்ததை அறிந்து கொள்ளலாம்.

நூல்நிலையத்தில் தேவாரத்தைப் பதிப்பிக்க வேண்டுமென்று பத்தாண்டுகளுக்கு முன்பு திரு.நீ.கந்தசாமிப்பிள்ளை அவர்களைக் கொண்டு பதிப்பிற்குக் கொடுக்கும்படி தயார் செய்து வைத்திருந்ததையும் இந்நூலில் சேர்த்துள்ளோம்.

நூல்நிலையத்தின் முன்னாள் பாதுகாவலராக இருந்த அமரர் ரா. விசுவநாத ஐயர் அவர்கள் பல நூல்களிலிருந்தும் விஷயங்களைத் திரட்டி எழுதி வைத்திருந்ததையும் இந்நூலில் சேர்த்துள்ளோம்.

275 திருத்தலங்களும் அச்சான பிறகு ஐயரவர்கள் பல காகிதக் குறிப்புக்களாக எழுதி வைத்திருந்த பாடல் பெற்ற தலவரலாற்றுச் செய்திகள் கிடைத்தன. தமிழுலகுக்குப் பயன்

படவேண்டுமென்று கருதி அவற்றை அநுபந்தம் ஒன்றிலும், ஐயரவர்கள் தேடி வைத்திருந்த சிவஸ்தலக் குறிப்புக்கள் என்ற சுவடி (சுவடி எண் 1173) அநுபந்தம் இரண்டிலும் தேவாரத்தில் வரும் சுவாமி, அம்பிகையின் திருநாமங்கள் அநுபந்தம் மூன்றிலும் தீர்த்தங்களும் அவை தொடர்பான தலங்களும், தலவிருக்ஷங்களும் அநுபந்தம் நான்கிலும் 64 மூர்த்தித் தலங்களும், மூர்த்திகளின் திருநாமங்களும் பஞ்சசாதாக்கியத்தலங்களும் அநுபந்தம் ஐந்திலும் பூசித்தவர்கள் தலங்கள் முதலியன அநுபந்தம் ஆறிலும் மூவரும் பாடிய பதிகம் செய்யுள்தொகை, பாடல் பெற்ற தலங்கள் ஆகியவற்றைக் கூறும் தேவார விளக்கம் (சுவடி எண் 1177), திருப்பதிக் கோவை (சுவடி எண் 587-F1) ,திருப்பதிக் கோவை (சுவடி எண்: 664) ஆகிய சுவடிகள் அநுபந்தம் ஏழிலும் சுவாமி, அம்பிகையின் வடமொழித் திருநாமங்கள் அநுபந்தம் எட்டிலும் (அம்பிகையின் திருநாமங்கள் வடமொழிப் படியே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டு; பாலசுகாம்பிகா.) சிவஸ்தலங்களுக்குரிய மரம், செடி, கொடி முதலிய விவரங்கள், தேவாரத்தில் வந்துள்ள நதிகள், தீர்த்தங்கள், முடிபுப் பெயர்கள், கோயில் விமானங்கள் முதலியன அநுபந்தம் ஒன்பதிலும் கோயில்கள், திருவிழாக்கள் முதலியன அநுபந்தம் பத்திலும் சிவபெருமானைப் பற்றிய செய்திகளும், பூசித்துப்பேறு பெற்றோர் முதலிய விவரங்களும் அம்பிகை, கணபதி, முருகன் ஆகியோர் பற்றிய செய்திகள் முதலியனவும் அநுபந்தம் பதினொன்றிலும் தேவாரவைப்புத் தலங்கள், வைப்புத்தலப்பாட்டு (சுவடி எண் 584 L) ஆகியவை அநுபந்தம் பன்னிரண்டிலும் பாடல் பெறாத ஏனைய தலங்களைப் பற்றிய ஐயரவர்களின் குறிப்புக்கள் அநுபந்தம் பதின்மூன்றிலும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இந்நூலைப் பதிப்பிக்கும் போது பல செய்திகளைத் தேடி ஆராய்ந்து எழுதி Proof திருத்திக்கொடுத்தல் முதலிய பணிகளை மிக்க ஆர்வத்துடன் செய்து கொடுத்தவர் இந்நூலகத்தில் பணிபுரியும் திரு. எஸ். சாயிராமன் என்பவர். அவருக்குள்ள, ஐயரவர்கள் குறித்து வைத்தவை எல்லாம் அச்சாகவேண்டும் என்ற எண்ணமானது மிகவும் போற்றத்தக்கது.

இந்நூலகத்தில் தமிழ்ப் பண்டிதராகப் பணிபுரியும் திருமதி P. ரங்காபாய் என்பவர் திருத்தலங்கள் வரலாறு சம்பந்தமான கையெழுத்துப் பிரதிகளை ஆர்வமுடன் பிரதி செய்தி கொடுத்தார்கள்.

இப்பதிப்பிற்குப் பயன்பட்ட ஏட்டுச் சுவடிகளும்

கையெழுத்துப் பிரதிகளும்: ஏட்டுச்சுவடிகள் 7 (584, 584 L, 1210, 587-F (1), 664, 1173, 1177 F,)

கையெழுத்துப் பிரதிகள் 11 (71, 100, 101, 102, 282, 283, 284, 286, 446, 447)

இந்நூலை அச்சிடுவதற்கு மானியம் அளித்த மத்திய அரசுக்கு நன்றி.

இந்நூலை அச்சிட்டுக் கொடுத்த கலாக்ஷேத்திர அச்சகத் தாருக்கு நன்றி.

பெசன்ட் நகர்
சென்னை-90.
21-2-1990.

வித்துவான் சு. பாலசாரநாதன்,
ஆராய்ச்சித்துறைப்பிரிவு,
டாக்டர் உ.. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்.

சித்ராராய்ச்சி

சிவலிங்கம்

சிவலிங்கத்தில் 5 மூர்த்திகள் இருக்கிறார்கள். ஐந்தும் சேர்ந்தால் தான் சிவலிங்கம். சிவலிங்கம் பிரணவயந்திரமாக உபநிடதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 5×5=25. தத்துவம் 36. இவை சேர்ந்தது சிவலிங்கம் . 36 தத்துவங்களுடன் ஆதியாயிருக்கிற மஹாஸ்தல லிங்கங்களுமுண்டு.

துவாதசாந்த லிங்கஸ்தலம்—1
ஷோடசாந்த லிங்கஸ்தலம்—1.

சிலலிங்கத்தை வழிபட்டால் யாவற்றையும் வழிபட்டதாகும். நினைத்தாலும் எல்லாவற்றையும் நினைத்ததாகும். போய்ப் பார்த்தால் எல்லாவற்றையும் பார்த்ததாகும். இப்படியே வேத உபநிடதங்கள் கூறுகின்றன. சிவலிங்க வழிபாட்டின் பயனை 28 ஆகமங்களும் விரிவாகக் கூறுகின்றன. சமயாசாரியர் இதனை உணர்ந்து வழிபட்டு வீடுபேற்றினை அடைந்திருக்கின்றனர்.

சிவம் என்பது வேதம். சக்தி என்பது ஆகமம்.
ஆண்பால் யாவும் சிவம். பெண்பால் யாவும் சக்தி.

யாவும் சிவ சக்தியைத் தவிர வேறில்லை. சிவத்துக்கு லிங்கமும், சக்திக்குத் திரிகோணமும் அடையாளம்.

சிவம் பிந்து; சக்தி நாதம்
சிவம் ஸத்து; சக்தி சித்து
சிவம் மந்திரம்; சக்தி யந்திரதந்திரம்.

சொல்லின் பயன் சிவம். சொல் சக்தி. இந்த சிவசக்தி ஐக்கியமே இமயம் முதல் இராமேசுவரம் வரை சிவாலயங்களில் லிங்க வடிவமாகத் திகழ்கிறது.

பூ-சிவம்: வாசனை-சக்தி. இது போன்று எல்லாவற்றையும் அறியலாம். இந்த அறிவே ஞானம். இதை யறியத் தெரியாதது பசு. இந்தக் கொடூரமான கலியுகத்தில் சிவசக்தியை யறியும் பொருட்டு உலகத்தில் பலகோடி தலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தலத்திலும் பல லிங்கங்கள் இருக்கின்றன. சிவலிங்கமில்லாத பூமியே இல்லை. கலியுகத்தில் இதற்காகவே நாயன்மார்கள் அவதரித்து தலங்கள் தோறும்

சென்று தரிசித்தும் முக்தி அடைந்தும் பிறருக்கு முக்தியடையும் வழியையும் காட்டியிருக்கிறார்கள். இத்தக்கலியுகத்திற்குச் சிவ ஞானமே ஞானம். வேறு ஞானமில்லை. நாயன்மார்களில்லாத தலங்களில்லை. அடியார்களுக்காக ஆதியாய் ஏற்பட்ட மூர்த்திகள் பல. 63 நாயன்மார்களுக்காகச் சில.

காலமுறைப்படி இலக்கிய வரலாற்றை நன்கு ஆராயும் போது தமிழ், சம்ஸ்கிருத இலக்கியங்களில் தேவாரம் பெற்ற தலங்கள் மிகப் பழங்காலந்தொட்டே அதிகரித்து வந்த முறையையும் அந்தந்தக் காலகட்டங்களில் தேவாரத் தலவரலாற்றுச் செய்திகள் பெருகி வந்தமையையும் தெரிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாகச் சங்ககால முதல் தேவாரகாலத்துக்கு முற்பட்ட சிலப்பதிகாரம் போன்ற காவிய காலம் வரை பாடல் பெற்ற தலங்கள் எங்ஙனம் படிப்படியாக எண்ணிக்கையில் மிகுதியாயின என்பதும் அத்தலவரலாற்றுச் செய்திகள் பெருகிய வகையும் தமிழ் இலக்கிய நூல்களை வரலாற்று ரீதியில் ஆராய்வோர்க்கு நன்கு புலனாகும்.

இக்காரணங்கருதியே வேதமுதலாய் புராணம் ஈறான வடமொழி இலக்கிய வரலாற்றுச் செய்திகளையும் சங்க நூல்கள் முதல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமந்திரம் வரை தமிழ் இலக்கிய வரலாற்றுச் செய்திகளையும், தேவாரம் பெற்ற தலங்களைக் கூறும் வகையில் மிகச் சுருக்கமாகத் தந்துள்ளோம்.

வேதத்தில் கூறப்படும் பாடல்பெற்ற தலங்கள்:

கோயில் என்னும் சிதம்பரத்தலச் சிறப்பு புராணங்களில் மட்டும் புகழப்படுவதன்று. வேதத்திலுள்ள தர்சனோபநிஷத்திலே சிதம்பரம் ஹ்ருதய மத்தியிலுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. ''அருமறைச் சிரத்தின் மேலாம் சிற்பரவியோம மாகும் தில்லைச் சிற்றம்பலம்'' என்று பெரிய புராணம் கூறுவதால் வேதசிரசாகிய உபநிடதங்களில் ஞானாகாசவடிவமாக தில்லைத் திருச்சிற்றம்பலம் சொல்லப்பட்டுள்ளது.

இராமசேவரம்: தெய்வத்தால் சிருஷ்டிக்கப்பட்ட பெருவாரியாக மரங்களாலான இங்குள்ள பாலம் (சேது) தென்கடலிலுள்ள ஜலத்தின்மீது அமைக்கப் பெற்றிருக்கிறது. துக்கத்தால் துன்புறுபவனே! அப்பாலத்தை நீ பற்றிக்கொண்டு அதிசயிக்கும்படி அடையத்தக்க பரம பதத்தை அடைவாயாக என்று சேதுவின் சிறப்பு, ரிக்வேதஸம்ஹிதை மண்டலம் 10, சூக்தம்

115-3 இல் கூறப் பெற்றுள்ளது. சேதுவின் இருபுறங்களிலும் பரந்து அழியாமல் இருக்கும் இரண்டு சமுத்திரங்கள் புரள்கின்றன. இந்தச் சேதுவைத் தரிசிப்பவர் ஸம்சாரத்தைக்கடக்கின்றனர் என்று யஜுர் வேதம் தைத்ரீய ஸம்ஹிதை 3—2—2—2 கூறுகிறது. அறிஞர்கள் விஷ்ணுவின் உயர்ந்த அம்சமாகச் சேது ஸ்தலத்தைக் காண்கின்றனர் என்றும் இந்தத் தைத்ரீய சம்ஹிதை 1—3—6—12—13 கூறுகிறது. யஜுர் வேதத்தில் தீர்த்தங்கள் கூபம் முதல் கங்கை வரை 19 ரூபங்களாகவும், ஓட்டங்களைக் கருதி 15 ரூபங்களாகவும் சொல்லப்பட்டுள்ளன. ஸ்ரீருத்ரத்திலும் தீர்த்தம் கூபம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ருத்ரத்தில் வந்துள்ள அரண்யம் என்ற சொல்லால் விளங்குந்தலங்கள்:

வேதாரண்யம், வில்வாரண்யம், கோடம்பூர், திருக்காட்டுப்பள்ளி முதலியன.

ஓஷதீனாம்பதி: என்ற சொல்லால் விளங்கும் மருந்து மரங்களும் தலங்களும்:

ஔஷத விருக்ஷங்கள்	தலங்கள்
மருதமரம்	திருவிடைமருதூர்
புன்கமரம்	திருப்புன்கூர்
கடுக்காய்	திருக்குறுக்கை
வேம்பு	புள்ளிருக்கு வேளூர்

இதிகாசத்தில் வந்துள்ள பாடல் பெற்ற தலங்கள்:

வால்மீகி ராமாயணம்: காவேரியும் ஸமுத்திரமும் சேருமிடத்திற்குச் சமீபத்திலுள்ள சுவேதாரண்ய க்ஷேத்திரத்தில் (திருவெண்காடு) முன்பு ருத்ரனுடைய நேத்ராக்னியால் யமன் கொளுத்தப்பட்டது போல இராமன் விடுத்த பாணாக்னியால் சுரன் கொளுத்தப்பட்டுத் தரையில் விழுந்து உயிரிழந்தான் என்று ஆரண்ய காண்டம் 30ஆம் சர்க்கத்தில் கூறப்பட்டுள்ளது.

கோகர்ணம்: இத்தலமானது கங்கையைப் பூமிக்கு வருவிக்கும் பொருட்டுச் சிவபெருமானைக் குறித்துப் பகீரதன் தவம் செய்த தலமென்றும் இமயமலையின் அடிவாரத்தில் உள்ளதென்றும் ஸ்ரீ வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 42ஆம் ஸர்க்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இராமேசுவரம்: சேதுவின் வடக்குக் கோடியான இந்த ஸ்தலம் வெகு புண்யமானது. மூவுலகத்தாராலும் பூஜிக்கப் பட்டது; மிகவும் பரிசுத்தமானது; மஹாபாபங்களைப் போக்கக் கூடியதென்று சேதுஸ்தலமாகிய இராமேசுவரத்தலச் சிறப்பு ஸ்ரீ ராமன் சீதைக்குத் தெரிவிப்பதாக வால்மீகிராமாயணம் யுத்த காண்டத்தில் கூறப் பெற்றுள்ளது.

மகாபாரதத்தில் வந்துள்ள பாடல் பெற்றஸ்தலங்கள்: ஸ்ரீ பர்வதத்தில் தேவியுடன் மிக்க காந்தியுள்ள மகாதேவரும் தேவர்களோடு கூட மிக்க பிரியமுள்ள பிரம்மாவும் வாசம் செய்தார்கள். ஸ்ரீ பர்வதம்-திருப்பருப்பதம். மூவுலகங்களிலும் புகழ் பெற்றதும் எல்லா உலகத்தாலும் வணங்கப் பெற்றதுமான கோகர்ணம்.

சிவரகஸ்யத்தில் வந்துள்ள பாடல் பெற்ற ஸ்தலங்கள்: ஸ்ரீகாளத்தி (திருக்காளத்தி), காஞ்சி (திருக்கச்சி), நினைத்த மாத்திரத்தில் புண்ணியத்தைக் கொடுக்கும் அருணாசலம் (திருஅண்ணாமலை), விருத்தாசலம் (திருமுதுகுன்றம்), ரத்னகிரி (வாட்போக்கி), மாதுர்ப்பூ தேஸ்வரசிகரம் (திரிசிராப்பள்ளி), மதுரை (திருஆலவாய்), கஜாரண்யம் (திருவானைக்கா), பஞ்ச நதம் (திருவையாறு), கும்பகோணம் (குடமூக்கு) மத்தியார்ச் சுனம் (திருவிடைமருதூர்) மாயூரம் (திருமயிலாடுதுறை), சுவேதவனம் (திருவெண்காடு), ஸ்ரீ வாஞ்சியம், சாயாவனம் (சாய்க்காடு), தேஜினிவனம் (திருவீழிமிழலை), அமிர்தகடேசம் (திருக்கடவூர்), தோணிபுரம் (சீகாழி), வைத்தீஸ்வரம், (புள்ளிருக்கு வேளூர்), வேதாரண்யம் (திருமறைக்காடு), கமலாலயம் (திருவாரூர்).

பதினெண் புராணங்களில் வந்துள்ள பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களும் அவற்றின் வரலாறுகளும்:

ஸ்காந்தம்: திருக்கேதாரம்: ஸ்ரீ பார்வதி பரமேசுவரர்க் குச் சுபஸ்தானம். இத்தல தீர்த்தத்தில் உழுந்தளவு நீரைப்பரு கினாலும் மறு பிறப்பில்லை. இத்தலத்தில் லிங்க வடிவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கேதாரேசுவரரென்ற ஸதாசிவனை முருகப்பெருமான் மனத்தினால் பூசித்தார். ஸ்ரீ மகாதேவ னுக்குப் பிரியமாயுள்ள ஸ்ரீ சைலம் (திருப்பருப்பதம்) என்ற தலத்தைத் தரிசித்தார். ஸ்வர்ணமுகியின் கரையில் இருக் கின்ற தக்ஷிண கைலாஸம் என்னும் ஸ்ரீ காளஹஸ்தி (திருக் காளத்தி) யையும் தரிசித்தார். ஸ்ரீ வடாடவிக்கு (திருவாலங்

காடு) எழுந்தருளி அங்கு விஷ்ணு முதலிய தேவர்களால் பூஜிக்கப் பட்டவரும் திருவடியைச் செங்குத்தாகத் தூக்கி நடனஞ் செய்வ தால் மிக அலங்காரமாய் விளங்கியவருமான ஸ்ரீ வடாடவீசு வரரை மனத்தினால் பூசித்தார். காஞ்சீபுரத்துக்கு (திருக்கச்சி) வந்து பராகாச குகாஸ்வரூபியாகிய தேவியையும் சகலவேதங் களும் ஒன்றாய் உருவமெடுத்த மாமரத்தின் அடியில் விளங்கிய அழிவற்ற உண்மைப் பொருளுமாகிய சிவபெருமானையும் முருகப் பெருமான் பூசித்தார். அருணாசலமாகிய திருவண்ணா மலையிலும் பூசித்தார். பெண்ணையாற்றங்கரையிலுள்ள நவ நீதபுரம் என்ற திருவெண்ணெய் நல்லூரைத் தரிசித்துக்கொண்டு விருத்தாசலம் (திருமுதுகுன்றம்) என்ற திருத்தலத்தில் எழுந் தருளியிருக்கும் சிவபெருமானைத் தரிசித்த பின்பு பூலோகத்தில் விளங்கிய சிரேஷ்டமான தலமென்று சொல்லப்படும் சிதம்பரத் தில் (கோயில்) எழுந்தருளியிருக்கும் சிவபெருமானையும் தரிசித் தார். ஸ்ரீ மாயூரத்துக்கு (திருமயிலாடுதுறை) வந்து பூசித்தார் பின்னர் காவேரியின் வட பாகத்திலுள்ள மண்ணி யாற்றுக்கு எழுந்தருளினார். இங்கு விசுவகர்மாவானவன் மூவுலகிலும் பிரசித்தமாய்த் தெரியப்பட்டதும் குமரக் கடவுளுடைய திருநாமத்தைக் கொண்டதனால் மங்களகரமாயுள்ளதும் மிக நேர்த்தியானதுமான குமாரபுரம் (திருச்சேய்ஞலூர்) என்ற நகரத்தை உண்டாக்கினன். இத்தலத்தில் முருகப்பெருமான் தம் தாய் தந்தையரைப் பூசித்து உமையம்மையோடு எழுந்தருளிய சிவபெருமான் திருவருளால் பாசுபதாஸ்திரம், சாங்கராஸ்திரம் முதலிய மேன்மையான அஸ்திரங்களைப் பெற்றுக் கொண்டார். மற்றும் காஷாபுரம் (சீகாழி), பராசலம் (திருப்பரங்குன்றம்) முதலிய தல வரலாறுகளும் ஸ்காந்தத்தில் கூறப்பட்டுள்ளன. ஸ்காந்தத்தின் ஸ்தானவைபவ காண்டத்தில் திருக்குற்றாலத்தல வரலாறு விரிவாகக் கூறப் பெற்றுள்ளது. கணபதியால் கொல்லப்பட்டுக் கயமுகாசுரன் ரத்தம் பெருகி இறந்த ஸ்தலம் மகாரக்தவனம் (திருச்செங்காட்டங்குடி) என்ற பெயருடைய பட்டணமாயிற்று. இத்தலத்தில் கணபதி விதிப்படிச் சிவலிங் கத்தைப் பிரதிஷ்டித்து தமது திருநாமத்தால் கணபதீசுவரர் என்று பெயரிட்டுப் பூசை செய்தார். முசுகுந்த சக்கரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஸ்ரீதியாகராஜ மூர்த்தி யான ஸ்ரீ சோமாஸ்கந்தரை சிறந்த தலங்களுள் மிகச் சிறந்ததான ஸ்ரீகமலாலயத்துக்கு (திருவாரூர்) வந்து அங்கு அத்தியாக ராஜமூர்த்தியைச் சாத்திர முறைப்படி பிரதிஷ்டை செய்தார். மேலும் அவ்வரசன் மிகுந்த பக்தியையுடையவராகி அச்சோமாஸ் கந்தமூர்த்திக்குப் பூஜை உற்சவம் முதலியவற்றைச் செய்து வந்தார். ஏகாதசருத்ரர் சிவபூஜை செய்த தலம் ஸ்ரீ மத்யார்

ஜ்ஞானம் (திருவிடைமருதூர்) என்று ஸ்காந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சிவமஹாபுராணம்: பன்னிரு ஜோதிர் லிங்கஸ்தலங்களில் பாடல் பெற்றவையான திருக்கேதாரம், ஸ்ரீ சைலம் (திருப் பருப்பதம்) இராமேசுவரம் என்ற மூன்று ஜோதிர்லிங்க ஸ்தலங் கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. பஞ்ச பூதஸ்தலங்களும் லிங்கங் களும் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ கமலாலயத்தில் (திருவாரூர்) தாம் பைரவமூர்த்தமாக இருப்பதாகச் சிவபெருமான் திருவாய்மலர்ந் தருளியுள்ளார்.

கூர்ம புராணம்: சிலாத முனிவர் பூமியை உழுகையில் உண்டான அழகிய ஆண் குழந்தைக்கு நந்தியென்று பெயரிட்டு வளர்த்து வந்தார். நந்தி 4 கோடி முறை ஸ்ரீருத்ரம் ஜபித்து சிவபெருமான் திருவருள் பெற்றார். நந்தி வழிபட்ட லிங்கத் திற்குப் பரமனருளால் ஜப்யேச லிங்கம் என்ற பெயர் வழங்க லாயிற்று. திருவையாற்றுக் கோயில் சோமாஸ்கந்தர் மண்ட பத்தின் பின் பகுதியில் ஜப்யேசுவர மண்டபம் அமைந்துள்ளது. பஞ்சநதீசுவரருக்குச் ஜப்யேசுவரர் என்ற திருநாமமும் உண் டென்பதைக் கூர்மபுராணம் தெரிவிக்கிறது. திருக்கேதாரம் ஸ்ரீபர்வதம் (திருப்பருப்பதம்), கோகர்ணம் முதலிய பாடல் பெற்ற தலங்களும் இப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன.

பாகவதம்: ஸ்ரீ சைலம் (திருப்பருப்பதம்), காமகோடி என்று பிரசித்தமான காஞ்சீபுரம் (திருக்கச்சி), பரமசிவனுடைய சாந் நித்யம் காணப்படும் கோகர்ணம் என்று பெயர் பெற்ற சிவ க்ஷேத்ரம் ஆகிய தலங்களுக்குப் பலராமர் சென்று தரிசனம் செய்து கொண்டதாகப் பாகவதம் கூறுகிறது. விரிப்பிற் பெருகுமென்று 18 புராணங்களில் இங்குக் கூறாத மற்ற புராணங் களில் வரும் தேவாரத் தலவரலாறுகள் குறிக்கப்படவில்லை.

சங்க இலக்கியங்களில் வந்துள்ள பாடல்பெற்ற தலங்கள்:

பத்துப்பாட்டு

திருமுருகாற்றுப்படை: திருப்பரங்குன்றம். பொரு நராற்றுப்படை : திருவெண்ணி: இத்தலம் பொருநராற்றுப்படை யில் வரலாற்றுத் தொடர் புடையதாகவெண்ணிப்பறந்தலை எனக் குறிக்கப் பெற்றுள்ளது. காஞ்சீபுரம் உலகத்திலுள்ள நகரங்களில் சிறந்ததென்று பெரும்பாணாற்றுப் படையில் சொல்லப்பட்டிருக்கிறது.

மதுரைக்காஞ்சி: தலையாலங்கானம் என்று தலையாலங் காட்டைக் கூறுகிறது. உறையூரும் திருஆலவாய் என்னும் மதுரையும் பத்துப்பாட்டில் சிறப்பிக்கப் பெற்றுள்ளன.

எட்டுத்தொகை

நற்றிணை : அம்பர்: அம்பர் சூழ்ந்த அரிசிலம் தெள்ளறல் என்று நற். 141 ஆம் செய்யுளில் குறிக்கப் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தரும் இத்தலத்தை அரிசலம் பொருபுனல் அம்பர் என்கிறார். திருத்தலையாலங் காடு நற். 387 ஆம் செய்யுளில் ஆலங்கானம் என்று வந்துள்ளது.

குடவாயில்: தேர்வண் சோழர் குடந்தை வாயில் என நற். 379. ஆம் செய்யுளில் பாடப் பெற்றுள்ளது இத்தலமே யாகும்.

மூக்கீச்சுரம்: திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற இத் தலம் நற். 400 ஆம் செய்யுளில் சோழர் உறந்தை (உறையூர்) என்று வந்துள்ளது.

சாய்க்காடு: நற். 73 ஆம் செய்யுளில் இத்தலம் கூறப் பெற்றுள்ளது.

குறுந்தொகை: வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை என்று உறையூராகிய மூக்கீச்சுரம் 116 ஆம் செய்யுளில் வந்துள்ளது. ஆயினும் மூக்கீச்சுரம் எனக் குறிக்கப் பெறவில்லை. ஞானசம்பந்தரே முதன் முதலாக மூக்கீச்சுரம் என்று உறையூரைப் பாடியுள்ளார்.

திருக்கோவலூர்: நடுநாட்டின் கண்ணதாகிய இந்நகரம் (இத்தலம்) ஐங்குறு நூற்றிலும் பிறதொகை நூல்களிலும் அம் மூவனாரால் பாராட்டப் பெற்றிருத்தலின் இந்நகரம் அவர் காலத்தில் மிக விளக்க முற்றிருந்தது என்று கூறலாம்.

பரிபாடல்: கோழி (மூக்கீச்சுரம்) என்று உறையூர் குறிப்பிடப் பட்டுள்ளது. திருவாலவாய், திருப்பரங்குன்றம் முதலியனவும் இந்த நூலில் சிறப்பிக்கப் பெற்ற தலங்களாகும்.

கலித்தொகை: 59 ஆம் செய்யுளில் வந்துள்ள நான்மாடக் கூடல் என்னுஞ் சொல்லிற்குப் பொருளாக நச்சினார்க்கினியர் திருவாலவாய், திருநள்ளாறு ஆகிய 2 தலங்களையும் குறிக் கின்றார். திருப்பரங்குன்றமும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளது.

அகநானூறு: திருக்கோவலூர், சாய்க்காடு முதலியன.

புறநானூறு: அம்பர், ஆடுதுறை, ஆலங்கானம் (திருத் தலையாலங்காடு) ஆலங்குடி (இரும்பூளை), ஆவூர், உறையூர், கருவூர், கள்ளில், கானப்பேர் (காளையார் கோயில்), குட வாயில், கோவலூர், சிறுகுடி, மதுரை, வெண்ணி.

சிலப்பதிகாரத்தில் வந்துள்ள பாடல் பெற்ற தலங்கள்: உறந்தை-கோழி (மூக்கீச்சுரம்), கச்சி, தலைச்செங்காடு (தலைச் சங்காடு), ஆலவாய். மணிமேகலையில் வந்துள்ள பாடல் பெற்ற தலங்கள்: காஞ்சி, ஆலவாய், புள்ளிருக்கு வேளூர்.

திருமந்திரத்தில் வந்துள்ள பாடல் பெற்ற தலங்கள்: திருவாவடுதுறை, திருக்கடவூர், திருக்குறுக்கை (கொறுக்கை யென்று சொல்லப்படுகிறது), கோயில் (சிதம்பரம்).

திருவாசகத்தில் வந்துள்ள பாடல் பெற்ற தலங்கள்: அண்ணாமலை, அவிநாசி, ஆரூர், ஆலவாய் (மதுரை) ஆனைக்கா இடைமருது, ஈங்கோய்மலை, ஐயாறு, கச்சி (ஏகம்பம்), கடம்பூர், கழுக்குன்று, கழுமலம், குற்றாலம், கோகழி (திருவாவடுதுறை), சிராப்பள்ளி, கோயில் (தில்லை–சிற்றம்பலம்) , துருத்தி, தேவூர், பராய்த்துறை, பழனம், புறம்பயம், பூவணம் வாஞ்சியம், வெண் காடு.

பிரபந்தவகை நூல்களிலும் பாடல் பெற்ற தலங்கள் வந்துள்ளன. திருக்கயிலை (இமயமலை) வேதம், இதிகாசம் முதலான நூல்களிலும் சங்க இலக்கியங்கள் முதலான தமிழ் இலக்கியங்களிலும் கூறப்பெற்றுள்ளது. கோயில் திருக்கயிலைக்கு ஒப்பானது என்று மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந் தருளியுள்ளார்.

ஐயரவர்கள் குறித்து வைத்துள்ள சில சிறப்பான தல வரலாற்றுச் செய்திகள்:

திருஆரூர் என்பதிலுள்ள 'ஆர்' என்பது பிருதுவியைக் குறிக்கும். திருவாரூர் பிருதுவித்தலமாதலின் இத்தலப்பெயரில் 'ஆர்' என்று வருவதே பிருதுவியைக் குறிக்கும் வகையில் அமைந் துள்ளது.

தேவாசிரய மண்டபம்: தரி சனத்திற்கு வரும் தேவர்கள் முதலியோர் சமயம் பார்த்துக் கொண்டு தங்கியிருத்தற்கு முன்பு இடமாக இருந்தது. தேவாசிரியன் மண்டபம் என்றே நூல்

களில் வழங்குகின்றதாயினும் தேவாசிரய மண்டபம் என்பதே சரியாகும். தேவர்கள் ஆச்ரயித்த மண்டபம் தேவாசிரயம் ஆகும்.

இன்னம்பர்: சூரியன் வழிபட்ட தலமாதலின் இனனம்பர் என்பது ஐயரவர்கள் குறிப்பு; இனன்—சூரியன். ஸ்ரீவாஞ்சியம் என்னும் தலத்திற்குத் திருமகள் திருமாலை விரும்பிச் (வாஞ்சித்து) சிவபெருமானை வழிபட்ட தலம் என்று ஐயரவர்கள் கொண்டுள்ளமை தனிச்சிறப்புடைத்து (ஆதாரம் பாகவதம்).

ஓமாம்புலியூர் வடதளி: வடதளி—ஆலமரத்தின் கீழுள்ள தளி (கோயில்) என்று ஐயரவர்கள் குறித்துள்ளனர். சிவபெருமான் ஆலமரத்தின் கீழ் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளி அம்பிகைக்குப் பிரணவோபதேசம் செய்த கோயிலாதலின் இத்தலக் கோயில் வடதளி எனப்படும். பிரணவோப தேச நிகழ்ச்சியையும் வியாக்கிரபாதர் வழிபட்டதையும் ஒருங்கே சேர்த்து இத்தலம் ஓம் ஆம் புலியூர் (ஓமாம்புலியூர்) என வழங்கலாயிற்று.

ஐயரவர்கள் சிவபெருமானை ஓட்டகம் பூசித்ததென்று குறித்துள்ளார். அபிதானமணிமாலை என்ற எமது நூல்நிலைய வெளியீடான நிகண்டு நூலில் நெடுங்களம் என்ற பெயருக்கு ஓட்டகம் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலின் நெடுங்களம் என்ற திருத்தலத்தில் ஓட்டகம் சிவபெருமானை வழிபட்டதாகக் கொள்ளலாம். தவளை ஊற்றத்தூரில் பூசித்தது. வீழிமிழலையில் வடக்கு வீதியின் மேற்கில் நாவுக்கரசர் கோயில் கொண்டிருக்கிறார். ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் இருந்த மடங்கள் இவ்விடமே.

நரசிங்கம் பேட்டை: நரஸிம்மம் வழிபட்ட தலம்.

உருத்திரகோடி: ராமர் பூசித்த ஸ்தலம். இது கள்ளி மேட்டுக் குப்பம்.

ஆக்கூர்: சிறப்புலியார் வெள்ளானையாக இருந்தவராதலின் இத்தலத்தில் செங்கணான் கட்டிய கோயில் பூர்த்தியடையவில்லை. திருக்கலய நல்லூர்: அம்பிகை தவக் கோலத்தில் மேலைப் பிரகாரத்தில் நிற்கிறாள். 2 அகழியுண்டு. பிரம்பூர்: முருகர் ஸ்தலம்; சிவஸ்தலமும் உண்டு. கீழைப்பிரம்பூர் என இரண்டுண்டு. சேலம் பக்கத்துள்ள திருமணிமுத்தாநதிக்கரையில் பஞ்சலிங்க ஸ்தலங்கள்: ஸ்வயம்பு:

1. சுரவனேசர் (சேலம்) அம்பிகை: ஸ்வர்ணாம்பிகை.

2. உத்தமசோழபுரம்: ஸ்வாமி: சுரபுரேசர், அம்பிகை: பெரியநாயகி.

3. வீரபாண்டி: ஸ்வாமி: வீரபாண்டீசர்.

4. ப்ரமத்தி: ஸ்வாமி: பீமேசர், அம்பிகை: சிவகாமசுந்தரி.

5. நஞ்சையிடையாறு: ஸ்வாமி: திருவேலிநாதர். அம்பிகை: திருவாயிலுடையார்.

காமன் கோயில்: இது பங்களூரில் சிக்கப்பேட்டைத் தெரு விலுள்ளது. பூஜாநிவேதனமும் மாசிபூர்ணிமையில் உத்ஸவமும் நடக்கின்றன.

அயிலூர் வாலீசுவரம்: இவ்வூர் காட்டுப் புத்தூருக்கு அருகே யுள்ளது.

கொங்குதண் குமரித்துறை: குமரிகொங்கு: நாமக்கல் தாலுகா மோகனூர்ச்சிவபெருமானுக்குக் குமரீசுவரரென்று பெய ராதலால் மோகனூராக இருத்தல் வேண்டும்.

மூவரும் பாடிய தலங்கள்

திருஞானசம்பந்தர் பாடிய தலங்கள்	219
திருஞானசம்பந்தர் பதிகத்தில் வைப்பாக வந்துள்ள தலங்கள்	12
திருஞான சம்பந்தர் பாடாத தலங்கள்	43
	274
திருநாவுக்கரசர் பாடிய தலங்கள்	125
,, பதிக வைப்புத்தலங்கள்	98
,, பாடாத தலங்கள்	51
	274
சுந்தரர் பாடிய தலங்கள்	84
,, பதிக வைப்புத்தலங்கள்	54
,, பாடாத தலங்கள்	136
	274

தலமுறை அட்டவணையும் பதிகத்தொகையும்

(சுவடி எண் 584)

காவிரியின் வடகரைத்தலங்கள்:

சிதம்பரம்	11
திருவேட்களம்	2
திருநெல்வாயில்	1
திருக்கழிப்பாலை	8
திருப்பெருமணம்	1
திருமயேந்திரப்பள்ளி	1
திருமுல்லைவாயில்	1
(தென் திருமுல்லைவாயில்)	
திருக்கலிக்காமூர்	1
திருச்சாய்க்காடு	4
திருப்பல்லவனீச்சரம்	2
திருவெண்காடு	6
திருக்காட்டுப்பள்ளி	1
(கீழைத்திருக்காட்டுப்பள்ளி)	
திருக்குருகாவூர்	2
திருக்கழுமலம்	71
திருக்கோலக்கா	2
திருப்புள்ளிருக்குவேளூர்	3
திருக்கண்ணார்கோயில்	1
திருக்கடைமுடி	1
திருநின்றியூர்	4
திருப்புன்கூர்	3
திருநீடூர்	1
திருஅன்னியூர்	2
திருவேள்விக்குடி	3
திருஎதிர்கொள்பாடி	1
திருமணஞ்சேரி	2
திருக்குறுக்கை	2
திருக்கருப்பறியலூர்	2
திருக்குரக்குக்கா	1
திருவாழ்கொளிபுத்தூர்	3
(திருவாளொளிபுற்றூர்)	
திருமண்ணிப்படிக்கரை	1
திருஓமாம்புலியூர்	2
திருக்கானாட்டுமுள்ளூர்	1
திருநாரையூர்	5
திருக்கடம்பூர்	3
திருப்பந்தணைநல்லூர்	2
திருக்கஞ்சனூர்	1
திருக்கோடிகா	4
திருமங்கலக்குடி	2
திருப்பனந்தாள்	1
திருஆப்பாடி	1
திருச்சேய்ஞலூர்	1
திருந்துதேவன்குடி	1
திருவியலூர்	1
திருக்கொட்டையூர்	1
திருஇன்னம்பர்	5
திருப்புறம்பயம்	3
திருவிசயமங்கை	2
திருவைகாவூர்	1
திருவடகுரங்காடுதுறை	1
திருப்பழனம்	6
திருஐயாறு	18
திருநெய்த்தானம்	6
திருப்பெரும்புலியூர்	1
திருமழபாடி	6
திருப்பழுவூர்	1
திருக்கானூர்	2
திருஅன்பிலாலந்துறை	2
திருமாந்துறை	1
திருப்பாற்றுறை	1
திருஆனைக்கா	7
திருப்பைஞ்ஞீலி	3
திருப்பாச்சிலாச்சிராமம்	2
திரு ஈங்கோய்மலை	1
ஆகத்தலம் 63க்குப்பதிகம்	239

காவிரியின் தென்கரைத் தலங்கள்:

திருவாட்போக்கி	1
திருக்கடம்பந்துறை	1
திருப்பராய்த்துறை	2
திருக்கற்குடி	3
திருமூக்கீச்சுரம்	1
திருச்சிராப்பள்ளி	2
திருஎறும்பியூர்	2

திருநெடுங்களம் 1
திருமேலைக்காட்டுப்பள்ளி 2
திருஆலம்பொழில் 1
திருப்பூந்துருத்தி 3
திருக்கண்டியூர் 2
திருச்சோற்றுத்துறை 6
திருவேதிகுடி 2
திருத்தென்குடித்திட்டை 1
திருப்புள்ளமங்கை 1
திருச்சக்கரப்பள்ளி 1
திருக்கருகாவூர் 2
திருப்பாலைத்துறை 1
திருநல்லூர் 5
திருஆவூர்ப்பசுபதீச்சுரம் 1
திருச்சத்திமுத்தம் 1
திருப்பட்டீச்சுரம் 1
திருஆறை 1
(திருப்பழையாறை
வடதளி)
திருவலஞ்சுழி 5
திருக்குடமூக்கு 2
திருக்குடந்தைக்
கீழ்க்கோட்டம் 1
திருக்குடந்தைக்காரோணம் 1
திருநாகேசம் 6
(திருநாகேச்சுரம்)
திருஇடைமருதூர் 12
திருத்தென்குரங்காடுதுறை 2
திருநீலக்குடி 1
திருவைகல்மாடக்கோயில் 1
திருநல்லம் 2
திருக்கோழம்பம் 2
திருஆவடுதுறை 8
திருத்துருத்தி 3
திருஅழுந்தூர் 1
திருமயிலாடுதுறை 3
திருவிளநகர் 1
திருப்பறியலூர் 1
திருச்சொம்பொன்பள்ளி 3
திருநனிபள்ளி 3
திருவலம்புரம் 4
திருத்தலைச்சங்காடு 1
திருஆக்கூர் 2
திருக்கடவூர் 5
திருக்கடவூர்மயானம் 3
திருவேட்டகுடி 1
திருத்தெளிச்சேரி 1
திருத்தருமபுரம் 1
திருநள்ளாறு 7
திருக்கோட்டாறு 2
திருஅம்பர்ப்பெருந்
திருக்கோயில் 1
திருஅம்பர்மாகாளம் 3
திருமீயச்சூர் 1
திருமீயச்சூர் இளங்கோயில் 1
திருத்திலதைப்பதி 1
திருப்பாம்புரம் 1
திருச்சிறுகுடி 1
திருவீழிமிழலை 23
திருவன்னியூர் 1
திருக்கருவிலிக்கொட்டிட்டை 1
திருப்பேணுபெருந்துறை 1
திருநறையூர்ச் சித்தீச்சரம் 4
திருஅரிசிற்கரைப்புத்தூர் 3
திருச்சிவபுரம் 4
திருக்கலய நல்லூர் 1
திருக்கருக்குடி 1
திருவாஞ்சியம் 3
திருநன்னிலத்துப்பெருங்
கோயில் 1
திருக்கொண்டீச்சுரம் 2
திருப்பனையூர் 2
திருவிற்குடி வீரட்டம் 1
திருப்புகலூர் 8
திருப்புகலூர்
வர்த்தமானீச்சரம் 1
திருஇராமனதீச்சுரம் 1
திருப்பயற்றூர் 1
திருச்செங்காட்டங்குடி 4
திருமருகல் 3
திருச்சாத்தமங்கை 1
திருநாகைக்காரோணம் 7
திருச்சிக்கல் 1
திருக்கீழ்வேளூர் 2
திருத்தேவூர் 2
திருப்பள்ளியின் முக்கூடல் 1
திருவாஞ்சூர் 34
திருவாஞ்சூரறநெறி 2
திருவாஞ்சூர்ப் பரவையுண்
மண்டளி 1
திருவிளமர் 1
திருக்கரவீரம் 1
திருப்பெருவேளூர் 2
திருத்தலையாலங்காடு 1
திருக்குடவாயில் 2
திருச்சேறை 3

திருநாலூர்மயானம் 1
திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் 1
திருஇரும்பூளை 1
திருஅரதைப்பெரும்பாழி 1
திருஅவளிவணல்லூர் 2
திருப்பருதியமம் 1
திருவெண்ணியூர் 3
திருப்பூவனூர் 1
திருப்பாதாளீச்சுரம் 1
திருக்களர் 1
திருச்சிற்றேமம் 1
திருஉசாத்தானம் 1
திருஇடும்பாவனம் 1
திருக்கடிக்குளம் 1
திருத்தண்டலைநீணெறி 1
திருக்கோட்டூர் 1
திருவெண்டுறை 1
திருக்கொள்ளம்பூதூர் 1
திருப்பேரெயில் 1
திருக்கொள்ளிக்காடு 1
திருத்தேங்கூர் 1
திருநெல்லிக்கா 1
திருநாட்டியத்தான்குடி 1
திருக்காறாயில் 1
திருக்கன்றாப்பூர் 1
திருவலிவலம் 4
திருக்கைச்சினம் 1
திருக்கோளிலி 4
திருவாய்மூர் 3
திருமறைக்காடு 10
திருஅகத்தியான்பள்ளி 1
திருக்கோடிக்கரைகுழகர் 1
ஆகத்தென் கரைத்தலம் 127

ஆகச் சோழமண்டலம் தலம் 190.

ஈழத்தில்

திருக்கோணமாமலை 1
திருக்கேதீச்சுரம் 2

ஆக ஈழத்தில் தலம் 2க்குப் பதிகம் 3.

பாண்டி தேசத்தில்

திருஆலவாய்—மதுரை 11
திருப்பரங்குன்றம் 2
திருஆப்பனூர் 1
திருஏடகம் 1
திருக்கொடுங்குன்றம் 1
திருப்புத்தூர் 2
திருப்புனவாயில் 2
திருஇராமேச்சுரம் 3
திருஆடானை 1
திருக்கானப்பேர் 2
திருப்பூவணம் 4
திருச்சுழியல் 1
திருக்குற்றாலம் 2
திருநெல்வேலி 1
ஆகப் பதி 14 க்குப்பதிகம் 34

மலைநாட்டில்

திருஅஞ்சைக்களம் 1
திருஅவிநாசி 1
திருமுருகன் பூண்டி 1
திருநணா 1
திருக்கொடி மாடச் செங்குன்றூர் 1
திருவெஞ்சமாக்கூடல் 1
திருப்பாண்டிக்கொடுமுடி 3
திருக்கருவூர் ஆனிலை 1
ஆகக் கொங்கிற் பதி 7க்குப் பதிகம் 10.

நடுநாடு

திருநெல்வாயில் அரத்துறை 3
திருத்தூங்கானைமாடம் 2
திருக்கூடலையாற்றூர் 1
திருஎருக்கத்தம் புலியூர் 1
திருத்தினைநகர் 1
திருச்சோபுரம் 1
திருஅதிகை வீரட்டம் 18
திருநாவலூர் 1
திருமுதுகுன்றம் 11
திருநெல்வெண்ணெய் 1
திருக்கோவலூர் 2
திருஅறையணிநல்லூர் 1
திருஇடையாறு 1
திருவெண்ணெய்நல்லூர் 1
திருத்துறையூர் 1
திருவடுகூர் 1
திருமாணிகுழி 1

திருப்பாதிரிப்புலியூர் 2
திருமுண்டீச்சுரம் 1
திருப்புறவார் பனங்காட்டூர் 1
திருஆமாத்தூர் 5
திருஅண்ணாமலை 5

ஆகநடுநாட்டுப்பதி 22க்குப் பதிகம் 62.

தொண்டைநாடு

திருக்கச்சி ஏகம்பம் 12
திருக்கச்சிமேற்றளி 2
திருஓணகாந்தம் (திருஓணகாந்தன்தளி) 1
திருக்கச்சி அநேகதங்காபதம் 1
திருக்கச்சிநெறிக்காரைக் காடு 1
திருக்குரங்கணின் முட்டம் 1
திருமாகறல் 1
திருஒத்தூர் 1
திருப்பனங்காட்டூர் 1
திருவல்லம் 1
திருமாற்பேறு 6
திருஊறல் 1
திருஇலம்பையங்கோட்டூர் 1
திருவிற்கோலம் 1
திருஆலங்காடு 4
திருப்பர்சூர் 3
திருவெண்பாக்கம் 1
திருக்கள்ளில் 1
திருக்காளத்தி 4
திருஒற்றியூர் 8
திருவலிதாயம்—பாடி 1
திருமுல்லைவாயில் 1
திருவேற்காடு 1
திருமயிலாப்பூர் 1
திருவான்மியூர் 3
திருக்கச்சூர் ஆலக்கோயில் 1
திருஇடைச்சுரம் 1
திருக்கழுக்குன்றம் 3
திருஅச்சிறுபாக்கம் 1
திருவக்கரை 1
திருஅரசிலி 1
திருஇரும்பைமாகாளம் 1

ஆகத்தொண்டை நாட்டில் பதி 32க்குப் பதிகம் 68.

துளுவ தேசத்தில்

திருக்கோகர்ணம் 1

வடதேசத்தில்

திருப்பருப்பதம் 3
திருஇந்திர நீலப் பருப்பதம் 1
திருஅநேகதங்காவதம் 1
திருக்கேதாரம் 2
திருநொடித்தான்மலை 7

ஆகபதி 5க்குப் பதிகம் 14.
ஆகப் பதிகள் 274க்குப் பதிகம் 797.
காரைக்கால் அம்மை 2.
ஆகப்பதிகம் 799

பொன்னிவட கரையதனில் அறுபதுடன் மூன்று
புகழ்பெறுதென் கரையதனில் நூற்றிருபத் தேழு
மன்னிய ஈழத்திரண்டு பாண்டிபதினான்கு
மலைநாட்டில் ஒன்று கொங்கில் ஏழு நடு நாட்டில்
இன்னியல்சேர் இருபதுடன் இரண்டு தொண்டை நாட்டில்
எண்ணான்கு துளுவில் ஒன்று வடக்கில் ஐந்து மூவர்
உன்னியருள் பதிகமுறு பதிகள் தொகையுரைக்கில்
ஓரிருநூற் றெழுபத்து நான்காம் என்றுரையே.

காவிரிக்கு வடகரையிலுள்ள ஸ்தலங்கள் பக்கம்

(திருக்) கோயில் 113
திருவேட்களம் 337
திருநெல் வாயில் 193
திருக்கழிப்பாலை 44
திருநல்லூர்ப் பெருமணம் 167
திரு மயேந்திரப்பள்ளி 270
தென்திருமுல்லை வாயில் 291
திருக்கலிக்காமூர் 43
திருச்சாய்க்காடு 127
காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் 61
திருவெண்காடு 330
கீழைத்திருக் காட்டுப்பள்ளி 60
திருக்குருகாவூர் 86
ஸ்ரீகாழி 62
திருக்கோலக்கா 118
திருப்புள்ளிருக்கு வேளூர் 236
திருக் கண்ணார் கோயில் 33
திருக்கடைமுடி 31
திருநின்றியூர் 183
திருப்புன்கூர் 242
திருநீடூர் 188
திருஅன்னியூர் 18
திருவேள்விக்குடி 340
எதிர்கொள்பாடி 112
திருமணஞ்சேரி 260
திருக்குறுக்கை வீரட்டம் 89
கருப்பறியலூர் 40
குரக்குக்கா 83
திருவாளொளிபுற்றூர் 320
திருமண்ணிப்படிக்கரை 260
ஓமாம்புலியூர் 128
திருக்கானாட்டுமுள்ளூர் 73
திருநாரையூர் 180
திருக் கடம்பூர் 19
திருபந்தணைநல்லூர் 200
கஞ்சனூர் 16
திருக்கோடிகா 110
திருமங்கலக்குடி 258

திருப்பனந்தாள் 217
ஆப்பாடி 22
திருச்சேய்ஞலூர் 143
திருந்துதேவன்குடி 152
திருவியலூர் 323
கொட்டையூர் 101
இன்னம்பர் 107
திருப்புறம்பயம் 238
திருவிசயமங்கை 323
திருவைகாவூர் 342
வடகுரங்காடுதுறை 84
திருப்பழனம் 209
திருஐயாறு 115
திருநெய்த்தானம் 191
திருப்பெரும்புலியூர் 252
திருமழபாடி 272
திருப்பழுவூர் 211
திருக்கானூர் 73
திரு அன்பில் ஆலந்துறை 18
திருமாந்துறை 281
திருப்பாற்றுறை 229
திருஆனைக்கா 47
திருப்பைஞ்ஞீலி 257
திருப்பாச்சிலாச்சிராமம் 222
திருஈங்கோய்மலை 108

காவிரிக்குத் தென்கரையிலுள்ள ஸ்தலங்கள்:

வாட்போக்கி 316
திருக்கடம்பந்துறை 17
திருப்பராய்த்துறை 205
திருக்கற்குடி 57
மூக்கீச்சுரம் 292
திரிசிராப்பள்ளி 129
எறும்பியூர் 113
நெடுங்களம் 190
(மேலைத்) திருக்காட்டுப்பள்ளி 60
திருஆலம்பொழில் 37
திருப்பூந்துருத்தி 244
திருக்கண்டியூர் வீரட்டம் 32

திருச்சோற்றுத்துறை 146
திருவேதிகுடி 339
தென்குடித்திட்டை 162
திருப்புள்ளமங்கை 236
திருச்சக்கரப்பள்ளி 124
திருக்கருகாவூர் 72
திருப்பாலைத்துறை 228
திருநல்லூர் 166
ஆவூர்ப் பசுபதீச்சுரம் 46
திருச்சத்தி முற்றம் 124
பட்டீச்சுரம் 197
பழையாறை வடதளி 212
திருவலஞ்சுழி 295
திருக்குடமூக்கு 80
திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் 96
குடந்தைக்காரோணம் 77
திருநாகேச்சுரம் 175
திருஇடைமருதூர் 54
(தென்) குரங்காடுதுறை 86
திருநீலக்குடி 189
வைகன்மாடக் கோயில் 342
திருநல்லம் 165
திருக்கோழம்பம் 121
திருஆவடுதுறை 41
திருத்துருத்தி 155
திருஅழுந்தூர் 14
திருமயிலாடுதுறை 258
விளநகர் 324
திருப்பறியலூர் வீரட்டம் (பரசலூர்) 214
திருச்செம்பொன்பள்ளி 141
திருநனிபள்ளி 172
திருவலம்புரம் 298
திருத்தலைச்சங்காடு 150
திருஆக்கூர் 19
திருக்கடவூர் வீரட்டம் 21
திருக்கடவூர்மயானம் 22
திருவேட்டக்குடி 338
திருத்தெளிச்சேரி 161
தருமபுரம் 149
திருநள்ளாறு 169

திருக்கோட்டாறு	111
அம்பர்ப் பெருந்திருக்கோயில்	8
அம்பர் மாகாளம்	10
திருமீயச்சூர்	283
திருமீயச்சூர் இளங்கோயில்	283
திலதைப்பதி	153
திருப்பாம்புரம்	227
சிறுகுடி	135
திருவீழிமிழலை	328
திருவண்ணீயூர்	314
கருவிலிக் கொட்டிட்டை	41
பேணுபெருந்துறை	255
நறையூர்ச்சித்தீச்சரம்	171
திருஅரிசிற்கரைப்புத்தூர் (அழகார்புத்தூர்)	12
சிவபுரம்	134
திருக்கலய நல்லூர்	43
திருக்கருக்குடி	39
திருவாஞ்சியம்	314
நன்னிலம்	174
திருக்கொண்டீச்சுரம்	104
திருப்பனையூர்	219
திருவிற்குடி வீரட்டம்	326
திருப்புகலூர்	230
திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்	283
இராமனதீச்சுரம்	95
திருப்பயற்றூர்	202
திருச்செங்காட்டங்குடி	138
திருமருகல்	270
சாத்தமங்கை	126
நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)	177
சிக்கல்	128
கிழ்வேளூர்	75
தேவூர்	163
பள்ளியின்முக்கூடல்	214
திருஆரூர்	25
திருஆரூர் அரநெறி	29
திருஆரூர்ப்பரவையுண்மண்டளி	30
திருவிளமர்	325
கரவீரம்	37
பெருவேளூர்	253

திருத்தலையாலங்காடு 151
திருக்குடவாயில் 82
திருச்சேறை (உடையார் கோயில்) 144
திருநாலூர்மயானம் 181
திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் 24
திருஇரும்பூளை 104
திருஅரதைப்பெரும்பாழி 11
திருஅவளிவணல்லூர் 13
பரிதிநியமம் 206
வெண்ணி 333
திருப்பூவனூர் 250
பாதாளீச்சுரம் (பாம்பணி) 225
திருக்களர் 55
திருச்சிற்றேமம் (சிற்றாய்மூர்) 136
திருஉசாத்தானம் 109
இடும்பாவனம் 52
கடிக்குளம் (கற்பகனார்கோயில்) 24
தண்டலைநீணெறி 148
கோட்டூர் 112
திருவெண்டுறை (திருவண்டுதுறை) 333
திருக்கொள்ளம்பூதூர் 105
பேரெயில் 256
திருக்கொள்ளிக்காடு 107
தெங்கூர் 160
நெல்லிக்கா 192
திருநாட்டியத்தான்குடி 179
திருக்காறாயில் 70
கன்றாப்பூர் 59
வலிவலம் 300
கைச்சினம் 99
திருக்கோளிலி 122
திருவாய்மூர் 318
திருமறைக்காடு 274
அகத்தியான்பள்ளி 1
கோடி 109
திருவிடைவாய் 343

ஈழநாட்டு ஸ்தலங்கள்

திருக்கோணமலை 113
திருக்கேதீச்சரம் 98

பாண்டி நாட்டு ஸ்தலங்கள்

திருஆலவாய் 38
ஆப்பனூர் 21
திருப்பரங்குன்றம் 203
திருஏடகம் 114
திருக் கொடுங்குன்றம் (பிரான்மலை) 100
திருப்புத்தூர் 234
திருப்புனவாயில் 241
இராமேசுவரம் 96
திருஆடானை 21
திருக்கானப்பேர் 71
திருப்பூவணம் 245
திருச்சுழியல் 137
திருக்குற்றாலம் (குறும்பலா) 92
திருநெல்வேலி 196

சேரநாட்டு ஸ்தலம்

திருஅஞ்சைக்களம் 3

கொங்குநாட்டு ஸ்தலங்கள்

திருஅவிநாசி 14
திருமுருகன்பூண்டி 288
திருநணா 164
கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) 99
வெஞ்சமாக்கூடல் 330
திருப்பாண்டிக்கொடுமுடி 223
கருவூர் ஆனிலை 42

நடு நாட்டு ஸ்தலங்கள்

திருநெல்வாயில் அரத்துறை 194
பெண்ணாகடம் 251
கூடலையாற்றூர் 94
எருக்கத்தம்புலியூர் 113
திருத்தினைநகர் 154
திருச்சோபுரம் (தியாகவல்லி) 145
திருஅதிகைவீரட்டம் 6
திருநாவலூர் 182
திருமுதுகுன்றம் 285

திருநெல்வெண்ணெய் 195
திருக்கோவலூர் வீரட்டம் (கீழூர்) 119
அறையணிநல்லூர் 16
இடையாறு 93
திருவெண்ணெய் நல்லூர் 334
திருத்துறையூர் 159
வடகூர் 294
திருமாணிகுழி 279
திருப்பாதிரிப்புலியூர் 226
திருமுண்டீச்சுரம் 284
புறவார் பனங்காட்டூர் 241
திருஆமாத்தூர் 23
திருஅண்ணாமலை 4

தொண்டைநாட்டு ஸ்தலங்கள்

கச்சி ஏகம்பம் 1
கச்சித் திருமேற்றளி 8
திருஓணகாந்தன்தளி 125
கச்சி அநேகதங்காபதம் 1
கச்சி நெறிக் காரைக்காடு 7
குரங்கணில் முட்டம் 83
திருமாகறல் 279
திருஓத்தூர் 126
வன்பார்த்தான் பனங்காட்டூர் 216
திருவல்லம் 302
திருமாற்பேறு 281
திருஊறல் (தக்கோலம்) 110
இலம்பையங் கோட்டூர் 106
திருவிற்கோலம் 327
திருஆலங்காடு 34
திருப்பாசூர் 220
திருவெண்பாக்கம் (திருவுளம்பூதூர்) 336
திருக்கள்ளில் 56
திருக்காளத்தி (ஸ்ரீகாளஹஸ்தி) 65
ஒற்றியூர் 122
திருவலிதாயம் 299
வடதிருமுல்லைவாயில் 290
திருவேற்காடு 341
மயிலாப்பூர் 267

திருவான்மியூர் 321
திருக்கச்சூர் 15
இடைச்சுரம் 53
திருக்கழுக்குன்றம் 45
அச்சிறுபாக்கம் 2
திருவக்கரை 293
அரசிலி (ஒழிந்தியாப்பாட்டு) 11
இரும்பை மாகாளம் 105

துளுவ நாட்டுஸ்தலம்

கோகர்ணம் 107

வடநாட்டு ஸ்தலங்கள்

திருப்பருப்பதம் 207
இந்திரநீலப்பருப்பதம் 94
திருஅனேகதங்காவதம் 17
திருக்கேதாரம் 95
திருக்கயிலாயம் 34

சிவக்ஷேத்திர விளக்கம் என்னும் நூலில் உள்ளபடியே தேவாரப் பாடல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.



மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்.

திருத்தலங்கள் வரலாறு

1. திரு அகத்தியான்பள்ளி : (சோழநாடு)

வேதாரணியத்துக்குத் தெற்கில் ஒரு மைல் தொலைவில் உள்ளது இத்தலம். இரயில்வே நிலையம் உள்ள தலம். பார்வதி தேவியாருக்கு இமயமலையில் நடந்த திருமணத்தை அகத்தியர் இத்தலத்திலிருந்து தரிசித்தார். சுவாமி: அகத்தீசுவரர். அம்பிகை : பாகம்பிரியாள், பாகம்பிரியாநாயகி, சௌந்தரநாயகி. தீர்த்தம் : அக்னி தீர்த்தம் (கோயிலுக்கு எதிரில்). சுவாமி சந்நிதி : கிழக்கு. அம்பாள் சந்நிதி : தெற்கு. தலவிருட்சம் : அகத்தி. பிறசெய்திகள், அகத்தியர் திருவுருவம் கோயிலில் உள்ளது. மிக அழகியது.

(இக்கோயிலிலுள்ள ஒரு சிலா சாசனத்திலிருந்து குலசேகர பாண்டியனுக்கு (கி. பி. 1268-1308) இருந்த வியாதி வேதாரணியம் கோயிலில் உற்சவம் நடத்தி நீங்கப் பெற்றது) வெளியாகிறது. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம்.

அகத்தி யான்பள்ளி யகத்திய நாதரம்
பிகைபோ் பாகம் பிரியாள் அக்கினி. (சிவக்ஷேத்திர விளக்கம்)

வாடிய வெண்டலை மாலைசூடி மயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய எம்பெரு மான்அகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னுர்கட்கில்லையாம் பாவமே.
(திருஞா. 2ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள் :

அகத்தியான் பள்ளி அமர்ந்தான் கண்டாய். மறைக்காடு. திருநா.
அறப்பள்ளி யகத்தியான் பள்ளி. பொது. திருஞா.
ஆதி யகத்தியான் பள்ளி யண்ணாமலை. பொது. திருநா.

2. திரு அச்சிறுபாக்கம் : (தொண்டை நாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். சென்னைக்குத் தெற்கே ஐம்பத்தொன்பது மைலில் உள்ளது. சிவபெருமான் முப்புரத்தை அழிக்கத் தேரேறிச் செல்லும்போது விநாயகரை நினைக்காத காரணத்தினால் தேரின் அச்சு முறிந்தது. அக்காரணத்தால் இந்தத் தலத்திற்கு அச்சிறுபாக்கம் என்ற பெயர் ஏற்பட்டது.

கண்ணுவரும் கௌதமரும் பூசித்ததலம். மூலத்தான இரு மூர்த்திகளுள் முக்கியமானவர் கோபுரவாயிலுக்குச் சற்று வடபுறத்தில் நந்தி, பலிபீடம், துவஜத்தம்பங்களோடு ஆட்சீசர் ஆக விளங்குகின்றார்.

சுவாமி :- பாக்கபுரேசுவரர், ஆட்சிகொண்டநாதர்
அம்பிகை :- சுந்தர நாயகி.
விருட்சம் :- கொன்றை.
தீர்த்தம் :- தேவதீர்த்தம்.
அம்பிகைக்கு இளங்கிள்ளையம்மை என்ற பெயரும் உண்டு.
வடமொழிப்பெயர் : பாலசுகாம்பிகை.

கங்கையிலிருந்து வையையுடைப்பை அடைக்க மண் கொணர் கையில் பாண்டியனுடைய வண்டியின் அச்சு இங்கு முறிந்தது என்பர். திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம்.

பாக்க மச்சிறு பாக்கபு ரேசர்
வாக்கு யர்சுந்தர மாதுமை சுந்தரம். (சிவ.)

பொன்திரண் டன்ன புரிசடை புரள
பொருகடல் பவளமொடு அழல்நிறம் புரைய
குன்றிரண் டன்ன தோளுடை அகலம்
குலாய வெண்ணூலொடு கொழும்பொடி அணிவர்.
மின்திரண் டன்ன நுண்ணிடை அரிவை
மெல்லியலாளைஓர் பாகமாப் பேணி
அன்றிரண் டுருவம் ஆயஎம் அடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.
(திருஞா. 1ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள் :

வடகச்சியு மச்சிறுபாக்கம். பொது. திருநா.
அச்சிறுபாக்க மளப்பூரம்பர். பொது. திருஞா.

இரண்டாம் ராஜராஜசோழனுடைய சாசனமுள்ளதலம்.

3. திரு அஞ்சைக்களம் : (மலைநாடு)

திருச்சூரிலிருந்து கொடுங்கோளூர் போகும் பஸ் ஏறிக் கொடுங் கோளூருக்கு எதிர்கரையில் இறங்கி உப்பங்கழி வழியே வஞ்சி (சிறு படகு) அமர்த்தி நேரே (அம்பலம்) கோயிலுக்குப் போகலாம். கொடுங் கோளூர்சென்று சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி கோயில் என்று கருதப்படும் பகவதி கோயிலைத் தரிசித்து, பஸ் மூலம் அம்பலம் சேரலாம். நீராடி ஈரஉடையுடனாவது அல்லது பட்டுடையுடனாவது செல்லவேண்டும். அஞ்சைக்களத்தப்பர் சில அங்குல உயரமே உள் ளார். 'தலைக்குத் தலைமாலை' என்னும் பாசுரம் கூறுவதைத் திருமேனியின் சிரசில் தரிசிக்கலாம். முதற்பிராகாரத்தில் ஒரு சிறு அறையில் சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரரும் செப்புத் திருமேனிகளாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். ஆடிச்சுவாதி யன்று தமிழ்மக்கள் திரளாகக் கூடுகின்றனர். இங்கிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் வெள்ளானை மீது கயிலாயம் சென்றனர். சுவாமிபெயர் : அஞ்சைக்களத்தீசர், வஞ்சிக்குளேசுவரர். அம்பிகை : உமையம்மை. சந்நிதி: கிழக்கு. தீர்த்தம் : சிவகங்கை. சுந்தரர் பாடிய தலம். நடராசர் இத்தலத்தில் உண்டு. மற்றஇடங்களில் இல்லை.

மேலை மலைநாட்டில் விளங்கிடு மோர்சிவன்
ஆலள மதுதிரு வஞ்சைக் களமே.

அதிலுறை யஞ்சைக் களத்தப் பர்பக
வதிநா யகியம்மன் மகிழ்சிவ கங்கை. (சிவ.)

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே
சடைமேற்கங்கை வெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல்கொண் டசைத்ததென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்த்ததென்னே
மலைக்குநிகர் ஒப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டலைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரங்கள் :

அஞ்சைக்களத் துள்ளாரை யாற்றுள்ளார்—வீழிமிழலை. திருநா.
ஆழிகடலரையா வஞ்சையப்பர்க்கறிவிப்பதே. கயிலாயம், சுந்தர.

கொடுங்கோளூரஞ்சைக்களம் செங்குன்றூர். பொது. திருநா.
நல்விடைக் குளமுந்திருக்குளத்தோடஞ்சைக்களம். பொது. திருநா.

4 திரு அண்ணாமலை: (நடுநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். பஞ்சபூதத்தலங்களுள் தேயுதலம். விராட்புருடனின் மணிபூரகத்தலம். நினைக்க முத்தி அளிக்கும் நிர்மலத்தலம். மலை உயரம் கடல் மட்டத்திற்கு 2668 அடி. செந்நிறமுடையது. சோணையென்னும் பெயருடையது. தட்டுப் புழுகால் அபிஷேகம்நடைபெறும். சுவாமிக்கும், அம்பிகைக்கும் அஷ்ட பந்தன மருந்து சாத்தப்படாமல் சுவர்ணபந்தனம் செய்யப் பெற்றுள்ளது விசேடம். அருணகிரிநாதர் வழிபட்ட தலம். அவர் பாடலுக்கு இரங்கிப் பிரபுடதேவ மகாராசனுக்குக் காட்சி கொடுத்தார் முருகன். முருகன் சந்நிதி கீழைக் கோபுர வாயிலுக்கருகில் திருக்குளத்தின் வடபாலுள்ள 16 கால் மண்டபத்தில் ஒருகாலில் ''கம்பத்தினையனார்'' கோயிலாக உள்ளது. அங்கிருந்து மேற்கே சென்று வல்லாள கோபுர வாயிலுள் நுழையும் போது வடபுறம் இருக்கும் முருகனே அருணகிரியாரை ஆட்கொண்டதாகத் தெரிகிறது.

மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடிய தலம். பார்வதி தேவியார் தவம் செய்து இறைவன் இடப்பாகம் பெற்றதலம் என்றும் கூறுவர். மலை எட்டுமைல் சுற்றளவு உள்ளது. இங்கு 360 தீர்த்தங்கள் உள்ளன. அணி அண்ணாமலை (அடியண்ணாமலை). பஞ்சமுக தரிசனம் என்னும் மலையின் 5 சிகரக்காட்சி முதலியன புகழ் பெற்றவை.

உற்சவம் கார்த்திகை மாதம் நடக்கும்.

நான்காம் நாள்	வெள்ளிக் கற்பக விருட்சம், காமதேனு.
ஐந்தாம் நாள்	வெள்ளி ரிஷபம்.
ஆறாம் நாள்	வெள்ளி ரதம்.
பத்தாம் நாள்	தீபதரிசனம்.

பத்தாம் திருநாளன்று அதிகாலையில் பரணிதீபதரிசனம். அண்ணாமலையார் சந்நிதிக்கு எதிரில் ஐந்து பெரிய நெய்த்தீபங்கள் ஏற்றி, பஞ்ச பிரம மந்திரத்தோடு பூசை செய்யப்படும். மாலை பஞ்சமூர்த்திகளும் மலையை நோக்கிப் பிராகாரத்தில் நிற்க, ஆறு மணிக்கு ஐந்து பரணி தீபங்களையும் ஒரு பெரிய கொள்கலத்தில் சேர்ப்பர். மலைமீது தீபமும் ஏற்றப்படும். அர்த்தநாரீசுவரர் வெளி வரும்போது சுவாமி கோயிலைத்தாளிட்டு மறுநாட்காலையில்தான் திறப்பார்கள் மலையே சுவாமி ஆதலால். தைமாதம் திருவூடல் உற்சவம் நடைபெறும். இத்தலத்தைக் குறித்துச் சம்பந்தர் இரண்டு பதிகங்களும், அப்பர் மூன்றுபதிகங்களும் பாடியுள்ளனர்.

மலைமேல் வடக்குத் திக்கில் முலைப்பால் தீர்த்தம். குகை நமச்சிவாயர் மடத்துக்குப் பக்கம் பாததீர்த்தம். துர்க்கையம்மன் கோயில் ஒன்று தனியே இருக்கின்றது. விருபாக்ஷிகுகை, பவளக் குன்றுக்கு வடக்கே துர்க்கைகோயில் உள்ளது. கட்கதீர்த்தம் துர்க்கை தபசு செய்த இடம். பவளக்குன்று முருகன் தலம். வடவீதியில் ஒரு தலம். தெற்குவீதி திருவூடல்வீதி. தக்ஷிணாயன உற்சவம் 10 நாள். அதன்முடிவில் திருவூடல் உத்தராயண உற்சவம் 10 நாள். தலவிருட்சம் மகிழ். பாண்டவதீர்த்தம் என்பதொன்று உண்டு. பத்தாம் நாள் கடைசி வேடுபறி. மட்டையடி தீபம் போடுகிறவர் மீனவர்.

அடி அண்ணாமலை அருணாசலத்தின் வாயு மூலையிலுள்ளது. அணி அண்ணாமலை திருவண்ணாமலையைச் சார்ந்ததொருதலம்.

சுவாமி: அருணாசலேசுவரர்.
அம்பிகை: உண்ணாமுலை உமை, அபீதகுசநாயகி.
தீர்த்தம்: திக்பாலகர் தீர்த்தம்.
நேர்வடக்கு ஆதி அருணாசலம் உண்டு.

ஸ்தலபுராணம்: 'அருணாசல புராணம்' என்ற புராணம் சைவ எல்லப்ப நாவலரால் பாடப் பெற்றது.

அண்ணா மலையுறை அருணா சலேசர்
உண்ணா முலையுமை உயர்திக்கு பாலகர். (சிவ.)

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம்
அறுமே.
(திருஞா. 1ஆம் திரு.)

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவி லேனே.
(திருநா. 4ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள்:

அண்ணாமலையுறையு மண்ணல் போலும்—சாய்க்காடு. திருநா.
அண்ணாவையாறனே யென்றே னானே—ஐயாறு. திருநா.

அண்ணாநின்னையல்லாலினியாரை நினைக்கேனே—மழபாடி. சுந்தர.
அண்ணா நின்பொற்பாத மடையப் பெற்றால்—ஆனைக்கா. திருநா.
ஊக முகிலுறிஞ்சு சோலை சூழ்ந்தவுயர் பொழிலண்ணா
விலுறை கின்றாரும்—இடைமருதூர். திருநா.
அண்ணாவு மாரூரு மேயார் போலும்—ஆக்கூர். திருநா.
அண்ணாமலை யமர்ந்தாராரூருள்ளார்—வீழிமிழலை. திருநா.
பெண்ணாணென நின்ற பெம்மான் பிறைச்சென்னி
யண்ணாமலை நாடனாரூருறையம்மான்—நாகைக்காரோணம். திருஞா.
அண்ணாமலையானை யானைந்தாடு மணியாரூர் வீற்றிருந்த
வம்மான்றன்னை—நாகைக்காரோணம். திருநா.
அண்ணாவும் கழுக்குன்று மாயமலையவை வாழ்வார்—
பெருவேளூர்—திருநா.
அண்ணாமலை யுறையு மண்ணல் கண்டாய்—மறைக்காடு. திருநா.
அண்ணாமலை யேனென்றீராரூருளீர்—பரங்குன்றம். சுந்தர.
ஆர்த்தருவி வீழ்சுனை நீரண்ணாமலை—அதிகை. திருநா.
விடங்களூர் திருவெண்ணி யண்ணாமலை—இடையாறு. சுந்தர.
ஒற்றியூர் உறையும் அண்ணாமலை அண்ணல்—இலம்பையங்
கோட்டூர். திருஞா.
அண்ணா வாலங்காடா—ஆலங்காடு. சுந்தர.
அண்ணாமலையான்காண்—காளத்தி. திருநா.
அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தாறு—பொது. திருஞா.
அண்ணாமலை எம் அண்ணலை—பொது. திருநா.
அகத்தியான்பள்ளி அண்ணாமலை—பொது. திருநா.
காளத்தி கழுக்குன்றங் கண்ணாரண்ணா—பொது. திருநா.

5. திரு அதிகைவீரட்டம் : (நடுநாடு)

பண்ணுருட்டி இரயில்வே நிலையத்திலிருந்து தென்கிழக்கில் ஒரு மைலில் உள்ளது. கெடில நதியின் வடகரையில் இருக்கிறது.

பெயர்ப்பொருள் : சிவத்தலங்களுள் மேம்பட்டது. கோயிலும், சிவலிங்க மூர்த்தியும் பழைய பல்லவ சிற்ப முறையில் அமைந்துள்ளன. அப்பர் சுவாமிகள் மகேந்திரவர்மனால் துன்பத்துக்காளாகிப் பிறகு அவன் இடித்த அமண் பாழிகளின் கற்களைக் கொண்டே கட்டிய குணபரேசுவரம், வீரட்டேசுவரர் திருக்கோயிலுக்கு அருகில் உள்ளது. 'நாவுக்கரசு' என்று அழைத்தவர் வீரட்டேசுவரரே.

அப்பரும் திலகவதியாரும் சரியைத் தொண்டு செய்ததலம். சுந்தரருக்குச் சித்தவடமடத்தில் திருவடி தீக்ஷை நடந்தது. திருவதிகை எல்லைக்குள்ளேயே சித்தவடமடம் உள்ளது. கெடில நதியின் தென்கரை ஓரமாக ஒரு ஊற்று இடைவிடாது பெருகிக் கொண்டு பின் ஒரு வாய்க்காலாக ஓடுகிறது. ஷை தீர்த்தம் வெயிற் காலத்தில் குளிர்ந்தும், குளிர்காலத்தில் வெப்புற்றும் இருக்கிறது மிகவும் ஆச்சரியகரம். ஷை ஸ்தலவிமானம் பலதேவர்களும் கூடிய தேர்வடிவமாக அமைந்துள்ளது. கெடிலத்தின் தெற்கே மூன்று காதம் வரையில் சிவந்த பூமியாகவே இருக்கிறது. திரிபுரம் எரித் தமையால் இப்படியிருக்கிற தென்று நினைக்கிறார்கள். இரண்டு காதவழிக்கப்பால் வேகாக்கொல்லையென்று ஓரிடமுள்ளது. இது மட்டும் வெள்ளை.

பலதலங்களிலுள்ள கல்வெட்டுக்களில் திருவிழாவிற்கு முன் திருவீதி ஆண்டார்கள் திருவதிகைக்கு ஒப்பாக வீதிகளைத் துப்புரவு செய்ய வேண்டு மென்றுள்ளது அப்பர் சுவாமிகளுடைய உழவாரத் தொண்டுக்குச் சான்று பகர்வதாகும். பாண்டிநாட்டுத் தலங்கள் பல வற்றுள் திருக்கொடி ஏற்றத்திற்கு முன்னாள் அப்பர் சுவாமிகள் திருவீதித் திருக்கண் சாத்தும் உற்சவம் நடக்கிறது.

சுவாமி : வீரட்டேசுரர்
அம்பிகை : திரிபுர சுந்தரி
தீர்த்தம் : கெடிலம்.
இது கருடநதி எனவும் வழங்கும்.
திலகவதியார் வழிபட்ட தலம்.

கோயிலுக்குள்ளே திருக்குளமும் சூலை நோய் தீர்த்த கிணறும் இருக்கின்றன. கர்ப்பக்கிரகம் தேர்போல் பதுமைகளால் கட்டப் பட்டது. நிழல் பூமியில் விழாது. அப்பருக்கு மூல உற்சவ விக்கிர கங்கள் உள்ளன. லிங்கம் பட்டைகளால் திகழ்கிறது. மூவராலும் பாடப்பெற்ற தலம். அதிகை, அதிகையூர், அதிகைவீரட்டம், வீரட்டம்.

திருவதி கைப்பதி சிவன்வீ ரட்டர்
பெரிய நாயகி பெருகிய கெடிலம். (சிவ.)

கூற்றாயி ன வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்

தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.
(திருநா. 4ஆம் திரு.)

குண்டைக் குறட்பூதம் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா னாடும் வீரட் டானத்தே.
(திருஞா. 1-ஆம் திரு.)

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேற் கொள்பிறையானை விடைமேற்கொள்
விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்தன் அடிக்கொண்டு என்முடிமேல் வைத்திடும்
என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை
இறைபோதும் இகழ்வன்போல் யானே. (சுந்தர)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரங்கள் :

அதிகை மூதூரரசினை ஐயாறமர்ந்தவையனை—
பொது. திருநா.
அறஞ்சு ழதிகை வீரட்டத்தரிமானேற்றை யடைந்தேனே.
பொது. திருநா.
அண்டர்தொழுமதிகை வீரட்டானம். பொது. திருநா.
கடவூர் வீரட்டானங்காமருசீரதிகை மேவிய வீரட்டானம்.
பொது. திருநா.
அதிகை வீரட்டான மாட்சி கொண்டார். பொது. திருநா.

6. திரு அம்பர்ப் பெருந்திருக்கோயில் : (சோழநாடு)

பூந்தோட்டம் இரயில்வே நிலையத்திலிருந்து தென்கிழக்கே இரண்டு மைலில் உள்ளது. அம்பர் மாகாளத்துக்குக் கிழக்கே முக்கால் மைலில் உள்ளது.

சோமாசி மாற நாயனார் வழிபட்ட தலம்.
சுவாமி : பிரமபுரீசர். அம்பிகை : பூங்குழலம்மை.
தீர்த்தம் : பிரம தீர்த்தம். விருட்சம் : புன்னை.

திரிசிரபுரம் மகாவித்துவான் பிள்ளையவர்கள் ஒரு புராணம் இயற்றியுள்ளார். அம்பிகையின் வடமொழிப் பெயர்: சுகந்த குந்தளாம் பிகை. ஒரு பஞ்சகாலத்திற் பொருளில்லாமல் வருத்தமுற்ற நந்த னென்னும் அரசனுக்கு நாள் தோறும் படிக்காசு அருளினமையால் இத்தல விநாயகருக்குப் படிக்காசுப்பிள்ளையார் என்னும் திருநாமம் அமைந்தது. இத்தலத்தில் உள்ளதீர்த்தம் அன்னமாம் பொய்கை. அன்னவடிவங்கொண்ட பிரமதேவர் உண்டாக்கிய தீர்த்தம் இது. சுவாமி எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் கோச்செங்கட் சோழ நாயனாரால் திருப்பணி செய்யப்பெற்ற் பெருமை வாய்ந்தது என்பது இத்தலத்துத் தேவாரங்களால் விளங்கும். இந்தத்தலம் மிகவும் பழைமை வாய்ந்தது ; திவாகரத்தில் ஒளவைபாடிய அம்பர்ச் சேந்தன் என்றதிற் கூறப்பட்டதும் ''தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணா வதுஞ்சோழ மண்டலமே-பெண்ணாவாள் அம்பர்ச் சிலம்பி யரவிந்த மேமலராம் செம்பொற் சிலம்பே சிலம்பு" என்ற தனிப்பாடலிற் சொல்லப்பட்டதும் இத்தலமே யாகும். மன்மதன் பூசித்த தலம். வடபக்கம் : பாதாளேசுவரர். புன்னாக விருட்சத்தின் கீழ் செங்கட்சோழன் பிரதிஷ்டை. புன்னாகவனேசுவரர் மாடக்கோயில். கிழக்கு முகம். அம்மன் தெற்குமுகம். சம்பந்தர் பாடியதலம்.

அம்பர் கோயி லமர்பிர மேசர்
கொம்பவள் பூங்கொடி யன்ன தீர்த்தம். (சிவ.)

எரிதர அனல்கையில் ஏந்தி எல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே.
(திருஞா.3ம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரங்கள்.

அம்பர் நகர்ப் பெருங்கோயிலமர்கின்றான்காண்—சிவபுரம்
திருநா.

அன்னமாம் பொய்கை சூழம்பரானை—நாகைக்காரோணம்
திருநா.

அம்பரானை அமலனை யாதியை—கடுவாய்க்கரைப்புத்தூர்
திருநா.

ஊறலம் பருறையூர் நறையூர்—அதிகை. திருநா.
ஆறைவடமாகறலம் பரையாறு பொது. திருநா.
அச்சிறுபாக்க மளப்பூரம்பர் பொது. திருநா.
அரிச்சந்திரத்துள்ளாரம்பருள்ளார் வீழிமிழலை திருநா.

7. திரு அம்பர் மாகாளம் : (சோழநாடு)

பூந்தோட்டத்திலிருந்து ஒரு மைல்.வைகாசி ஆயில்யம் சோமயாஜி யாகம். இறைவன் புலையன் புலைச்சியாகத் தோன்றியது பெரிய புராணத்தில் கூறப்படவில்லை.

''காளியேத்தும் அம்பர் மாகாளம்'' என்றதால் காளி வழிபட்ட தலம் என்று தெரிகிறது.

சுவாமி : மாகாளநாதர் காளகண்டேசுவரர்
அம்பிகை : பயக்ஷய நாயகி.
தீர்த்தம் : மாகாள தீர்த்தம்.
விருட்சம் : மருதமரம்.

பாணலிங்கம். இலிங்கத்திற்கு எதிரில் அமிர்தபிந்து. சற்றுவடக்கே நாகராஜனும் அவர் பூசித்த இலிங்கமும் அம்மையும் உள்ளன. சம்பந்தர் பாடிய தலம்.

காளி நான்கு கைகளுடன் பூஜிக்கும் கோலமுள்ள விக்கிரகம் உண்டு. ''படியுளார்'' என்னும் பதிகத்தில் ஆறாவதில் ''நங்காளி யேத்தும் அழகனார்'' என்றது இதைத் தெரிவிக்கின்றது.

கோச்செங்கட் சோழன் பூசித்த லிங்கம் வடக்குப்பிராகாரத்தி லுள்ளது. இங்கு சோமாசிமாற நாயனாருக்கு உற்சவம் நடக்கிறது.

கிழக்கு முக சந்நிதி. ஸோமயாஜிக்குக் காட்சிகொடுத்த நாயகர். பிரமபுரி என்றும் பெயர். விநாயகருக்குச் சமீபத்தில் சதுர்முக பிரம்மா இருக்கிறார். விருஷப லிங்கம். சந்நிதி: வாசுகிலிங்கம் வருண லிங்கம். சுவாமி ஆதிசக்தியால் பூசிக்கப்பெற்றவர். தீர்த்தம் : அமிர்தவாவி. வாசுகி லிங்கத்தின் சமீபத்தில் வாசுகியும் இருக்கிறது. சண்டீசுவரர் சந்நிதி மேற்குப்பார்த்தவாசல். தெற்குப் பிராகாரத்தில் மகாகாள முனிவரும் காளியும் இருக்கின்றனர்.

திருமாகா ளந்திகழ் காள கண்டர்பால்
வருபச்சை நாயகி மகிழ்தேவ தீர்த்தம். (சிவ.)

அடையார் புரம்மூன்றும் அனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே
(திருஞா 1-ஆம் திரு.)

8. அரசிலி : (ஒழிந்தியாப்பட்டு) (தொண்டைநாடு)

புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் வடமேற்கே ஐந்து மைல் சென்று இரும்பை மாகாளத்தையடைந்து அங்கிருந்து ஒட்டன்பாளையம் வழியாய் வடகிழக்கே மூன்று மைல் தொலைவு சென்றால் இத்தலத்தை அடையலாம்.

சுவாமி : அரசிலி நாதர். அம்பிகை : பெரியநாயகி.
தீர்த்தம் : அரசிலி தீர்த்தம். சம்பந்தர் பாடிய தலம்.

அரசிலி நகர்சே ரரசிலி நாயகர்
பெரிய நாயகி பெருகிய அரசிலி (சிவ.)

பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமும் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியம் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக் கிடம்அர சிலியே.
(திருஞா. 2-ஆம் திரு.)

9. திரு அரதைப் பெரும்பாழி : (சோழநாடு)

அரித்துவாரமங்கலத்தின் மரூஉப்போலும். இத்தலத்திற்குச் சமீவனம் என்ற பெயரும் உண்டு. அவளிவணல்லூருக்குக் கிழக்கே ஒருமைல் தொலைவில் உள்ளது, இத்தலத்திற்கு நான்கு மைலில் கோயில்வெண்ணி என்ற ஊர் இருக்கிறது.

வராக மூர்த்தியின் கொம்பை முறித்துச் சிவபிரான் தம் அணிகலங்களுள் ஒன்றாக்கிய தலம். சந்நிதியில் பிலம் ஒன்று மூடப்பட்டிருக்கிறது. திருமால் தோண்டிய பள்ளம் என்பர். சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : பாதாளேசுவரர். அம்பிகை : அலங்கார நாயகி.
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்.

பனுவர தைப்பெரும் பாழி சவுமிய
வனநா தரலங்கார வல்லி பிரமம். (சிவ.)

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.
(திருஞா. 3-ஆம். திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரம்.

ஆலங்காடு மரதைப் பெரும்பாழி பழனம். பொது. திருநா.

10. திரு அரிசிற்கரைப்புத்தூர் : (அழகார் புத்தூர்) (சோழநாடு.)

கும்பகோணத்திலிருந்து நான்கு மைலில் உள்ளது. புகழ்த் துணை நாயனாருக்குப் பொற்காசு கொடுத்த தலம். அவர் முத்தி பெற்ற தலமும் இதுவே.

உண்மையானந்த முனிவர் பூசித்த தலம்.
சுவாமி : படிக்காசு அளித்த நாதர், அழகியர்.
அம்பிகை : அழகாம்பிகை.
தீர்த்தம் : அரிசிலாறு.
மூவரும் பாடிய தலம்.

உத்தரி சிற்கரை யூர்படிக் காசு
வைத்தவ ரழகம்மை மகிழ்வா ணாசுரம். (சிவ.)

மின்னும் சடைமேல் இளவெண் திங்கள் விளங்கவே
துன்னும் கடல்நஞ் சிருள்தோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலார் அரிசில் அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

முத்தூ ரும்புனல் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரன்அடி போற்றி என்பாரெல்லாம்
மொய்த்து ஊரும் புலன்ஐந்தொடு புல்கிய
மைத்து ஊரும் வினைமாற்றவும் வல்லரே.
(திருநா. 5-ஆம் திரு.)

மலைக்கும்மகள் (அஞ்சும்) மதகரியை
உரித்தீர் எரித்தீர் வருமுப் புரங்கள்
சிலைக்கும்கொலைச் சேஉகந்து ஏறு ஒழியீர்
சில்பலிக்கு இல்கள்தொறும் செலவு ஒழியீர்
கலைக்கொம்பும் கரிமருப்பும் இடறி
கலவம் மயில்பீலியும் காரகிலும்
அலைக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகன் நீரே (சுந்தர.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரம் :-
அந்தன்காண் புத்தூரிலமர்ந்தான்தான்காண்—சிவபுரம்—திருநா.

11. திரு அவளிவணல்லூர்: (சோழநாடு)

கோயில் வெண்ணி என்ற ஊரிலிருந்து ஐந்து மைலில் உள்ளது. வராகாவதாரத்தில் சிவபெருமானால் கொம்பு முறியப் பெற்ற திருமால் பூசித்ததலம். காசியப முனிவர் பூசித்ததலம்.

பெயர்காரணம் :- குருக்களின் மூத்த பெண்ணை மணந்தபின் தீர்த்தயாத்திரைக்குச் சென்றிருந்த மருமகன் திரும்பிவந்தபோது தன் மனைவி குருடாயிருப்பதைக்கண்டு அவள் தங்கையையே தான் மணம் செய்து கொண்டேன் என்று சாதிக்க, சுவாமி அவள் இவள் என்று சாட்சி கூறி நிரூபித்தார். அவள் தீர்த்த மூழ்க இழந்த கண்ணையும் பெற்றாள். இதற்கு மேற்குப் பூளைவனம் (இரும்பூளை) கிழக்குப் பாடலிவனம். சுப்பிரமணியர் தலம். இடபாரூடர் வாலை நீட்டிக் கொண்டிருக்கிறார். தைமாதம் அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுப்பர்.

சுவாமி : சாட்சி நாயகேசுவரர்
அம்பிகை : சௌந்தரநாயகி
தீர்த்தம் : சந்திரபுட்கரணி
சம்பந்தரும், அப்பரும் பாடிய தலம்.

அவளிவ ணல்லூ ரரன்சாட்சி நாதர்
சவுந்தர நாயகி சந்திர புட்கரணி. (சிவ.)

கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடுகு லாவித்
தம்பரிசி னோடுசுடு நீறுதட வந்திடப மேறிக்
கம்பரிய செம்பொன்நெடு மாடமதில் கல்வரைவி லாக
அம்பெரிய வெய்தபெரு மானுறைவ தவளிவண லூரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

தோற்றினான் எயிறு கவ்வித் தொழிலுடை அரக்கன்
தன்னைச்
தேற்றுவான் சென்று சொல்லச் சிக்கெனத் தவிரும் என்று
வீற்றினை யுடைய னாகி வெடுவெடுத்து எழுந்தவன்தன்
ஆற்றலை அழிக்க வல்லார் அவளிவ ணல்லூ ராரே.
(திருநா. 4-ஆம் திரு.)

12. திரு அவிநாசி : (கொங்குநாடு)

திருப்பூர் இரயில்வே நிலையத்திற்கு வடக்கே எட்டுமைல் தொலைவில் உள்ளது.

சுந்தரர் முதலை வாயினின்றும் பிள்ளையை மீட்டுக்கொடுத்து அருளியதலம். மடுவின் பெயர் தாமரைக்குளம். இதன் கரையில் சுந்தரர் கோயிலில் முதலைவாய்ப்பிள்ளை எழுந்த கற்சித்திரம் உள்ளது. இவ்வரலாறு ஹரதத்தரால் புகழப்பட்டது. சிறுவன் முதலை வாயினுள் புகுந்த ஊர் புக்கொளியூர். அவிநாசி—அழிவு இல்லாதது. சுந்தரர்பாடிய தலம்.

சுவாமி : அவிநாசி ஈசுவரர்.
அம்பிகை : கருணாம்பிகை.
விருட்சம் : பாதிரி.

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரம்.

அவிநாசி கண்டா யண்டத்தான் கண்டாய்.
கொட்டையூர். திருநா.

அருந்த விநாசி யவிநாசி நாதர்
பெருங்கருணை நாயகி பெருகிய முதலை. (சிவ.)

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின் றேன்உணர்ந்
துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியேபர மேட்டியே.
(சுந்தர.)

13. திருஅழுந்தூர் : (சோழநாடு)

இப்போது தேரழுந்தூர் என்று வழங்குகின்ற தாயினும் திருவழுந்தூரென்பதே இதன் இயற்பெயராகும். இதற்குத் திருஞான சம்பந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்

பதிகம் ஒன்றுண்டு. அதில் அழுந்தை என்று இதன் பெயர் சொல்லப் பெற்றுள்ளது. இவ்வூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்வாமியின் திருநாமம் வேதபுரீசர். சிவாலயத்தில் தனியே இருக்கும் மகா மடேசுவரர் என்ற மூர்த்தி தீர்த்தத்தின் அதிஷ்டான தெய்வமென்று பெரியவர்கள சொல்லுவார்கள், ''அழுந்தை மாமறையோர் வழிபாடு செய் மாமட மன்னினையே'' என்ற தேவாரப் பகுதியால் திருஞான சம்பந்தராற் பாடப்பெற்ற மூர்த்தி இந்த மகாமடேசுவரராகத்தான் இருக்கவேண்டும். இங்கே முற்காலத்தில் வேதகோஷம் நிரம்பியிருந்ததால் வேதபுரி என்ற பெயர் இவ்வூருக்கு அமைந்தது பொருத்தமாகும்.

கோயிலுக்கு வடபால் ஸ்ரீமட தீர்த்தம் என்று ஒரு குளம் இருக்கிறது. இந்த லிங்கம்தான் ஆதியில் உள்ளதென்றும் சொல்லுகிறார்கள். கோயிலுக்கு வடபுறம் சிறிது தூரத்தில் கடகடம்பைக் குளம் என்று ஒன்றிருக்கிறது. படித்துறையின்றிக் குளம் வெட்டப்பட்டு உபயோகத்திலிருக்கிறது. மக்களெல்லோரும் கடகடம்பைக் குளம் என்கிறார்கள். அதற்கு மேற்பால் ஒரு சிவாலயம் இருந்த தாயும் அதற்குக் கடம்பவனம் என்று பெயர் என்றும் ஜீரணமாய்ப் போய்விட்ட படியால் அதிலிருந்த கடம்பவனேசுவரர் என்னும் லிங்கத்தைக் கோயிலில் கொண்டுவந்து வைத்து விட்டதாகக் கேள்வி என்றும் சொல்லுகிறார்கள். கோயிலிருந்த இடம் இப்பொழுது நன்செய் நிலமாக இருக்கிறது. இந்த அடையாளம் ஒன்றும் தெரியவில்லை.

வேதபுரீசுவரர் கோயில் தெற்குப் பிராகாரத்தில் அம்பிகை இன்றி மூன்று லிங்கங்கள் மட்டும் உள்ளன. கடம்பவனேசுரர், ருத்ரபதீசர், கைலாசநாதர் என்று பெயர்கள் வழங்குகின்றன.

கடம்பவனேசுவரர் போல மற்ற இரண்டு லிங்கங்களுக்கும் ஆலயமிருந்து ஜீரணமாய் விட்டதென்று தெரிகிறது.

கடகடம்பையில் விசேஷ காலங்களில் வைதீகர்கள் கதம்பவன தீர்த்தமென்று சங்கற்பம் செய்து நீராடுவதாகத் தெரிகின்றது.

ஒரே வீதியில் ஒரு முனையில் சிவத்தலமும், எதிர்முனையில் பாடல் பெற்ற விஷ்ணுத்தலமும் உள்ளன. ஊரின் பெயர்க் காரணம் : ஊர்த்துவரதன் அரசன் தேர் இங்கே மேலே செல்லாது அழுந்தினமையின் தேரழுந்தூர் என்ற பெயர் ஏற்பட்டது என்று தெரிகிறது. இது மாடக்கோயில். வேதங்கள், தேவர்கள், திக்பாலகர்கள் பூசித்துப் பேறுபெற்ற தலம்.

வியன்றிரு வழுந்தூர் வேதபு ரீசர்
அயன்பணி செளந்தரி அருள்சித் தாமிர்தம். (சிவ.)

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபாட விம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம்மன் னினையே.
(திருஞா 2ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்குந் தேவாரங்கள்.

ஆரூரார் பேரூராரழுந்தூருள்ளார்—வீழிமிழலை—திருநா.
ஆவடுதண்டுனற யழுந்தூராறை—பொது. திருநா.
கோட்டூர்க்கொழுந்தே யழுந்தூராரசே கொழுநற் கொல்லேறே.
பொது. சுந்தர.

14. திரு அறையணி நல்லூர் (நடுநாடு)

இவ்வூர் திருக்கோவலூர் இரயில்வே ஸ்டேஷனுக்கு அருகி லுள்ளது. 'அறகண்ட நல்லூர்' என்று வழங்கப்படுகிறது. இங்கே சம்பந்த சுவாமிகளுடைய திருப்பாதம் இருக்கிறது. இவ்வூரில் ஓரிடத்தில் வெட்டிய காலத்தில் சில உற்சவ விக்கிரகங்கள் கிடைத் தனவாம். சுவாமி பெயர் : ஒப்பில்லாத ஈசுவரர், ஒப்பில்லாத நயி னார். அம்பிகை பெயர் : செளந்தரிய கனகாம்பிகை என்று வடமொழி யிலும் அழகியபொன்னம்மை என்று தமிழிலும் வழங்கும். தீர்த்தம் : பீமதீர்த்தம்.

இங்கேயுள்ள சாசனத்தில் 'ஒப்பொருவரும் இலாத ஆளுடையார்' என்றபகுதி ஒன்று இருக்கிறது. ''பூமாது விளங்க'' எனத் தொடங்கும் சாசனம் ஒன்றும் வேறுபல சாசனங்களும் இருக்கின்றன.

கோயிலுக்குப் பின்னே பெண்ணையாறு ஓடுகிறது. கோயில் குன்றின்மேல் அமைந்துள்ளது. பஞ்சபாண்டவர் படுக்கை என்ற ஓரிடம் இருக்கிறது.

கற்பாறையில் குடையப்பெற்ற குகைக்கோயில் வேறொன் றுள்ளது. மலைமேல் வலம் வரும் போது ஓரிடத்தில் நின்றுபார்த் தால் அண்ணாமலை நன்கு தெரியும். சம்பந்தர் இங்கிருந்தே ''உண்ணாமுலை உமையாளொடும்'' எனத் தொடங்கும் பதிகம் பாடினார்.

மேற்குப் பார்த்த சந்நிதி. சுவரில் விநாயகர் உருவம் இருக் கிறது. அம்பிகைக்கு அரைமுடிசார்த்திப் பார்க்கும் இடம். சம்பந்தர் பாடல்பெற்ற தலம்.

அறையணி நல்லூர் அறையணி நாயகர்
நறைகமழ் திருவரு ணாயகி யாறணி. (சிவ.)

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலைநீறணிந் தாரழல்
ஆடினார்அறை யணிநல்லூர் அங்கையால்தொழு
வார்களே.
(திருஞா. 2-ம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரம்.

அறையணி நல்லூருமர நெறியும். (அதிகை. திருநா.)

15. திரு அனேகதங்காவதம் : (கௌரிகுண்டம்) (வடநாடு)

ரிஷிகேசத்திலிருந்து பஸ் மூலமாகவும், கால்நடையாகவும் செல்லலாம்.

கடல்மட்டத்துக்குமேல் 12000 அடி உயரம். இத்தலத்திற்குச் செல்லும் வழியில் தேவப்பிரயாகையில் அலகநந்தா, மந்தாகினி நதிகள் கூடுகின்றன. தேவப்பிரயாகை என்பது கண்டங்கடி நகர் என்னும் பாடல்பெற்ற விஷ்ணுத்தலம். உமாதேவியார் தவம்புரிந்த இடமாகையால் கௌரிகுண்டம் என்று பெயர். சம்பந்தர் காளத்தியிலிருந்து இத்தலத்தைப் பாடினார். சூரிய சந்திரர் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம். அனேகதர்—விநாயகர்.

சுவாமி : அருண்மன்னேசுரர்.
அம்பிகை : மனோன்மணியம்மை.

அனேக தங்கா வதமரன் காபதேசர்
என்னாயி ஞானம்மை இன்புறு ஞானம். (சிவ.)

நீடல் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை
சூடல் மேவுமறை யின்முறை யாலொர் சுலாவழல்
ஆடல் மேவுமவர் மேய அனேகதங் காவதம்
பாடல் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே.
(திருஞா. 2-ம் திரு.)

அனேகதங்காபதம் என்று பாட பேதம் உண்டு.

16. திரு அன்பில்ஆலந்துறை (சோழநாடு)

லால்குடி இரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே மூன்று மைல். கொள்ளிடக்கரைத்தலம். பிரமன், வாகீச முனிவர் பூசித்த தலம். செவிசாய்த்த விநாயகர். இங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் ஆனாய நாயனாருடைய ஊராகிய மங்கலவூர் என்னும் திருமங்கலம் இருக்கிறது. சம்பந்தர், அப்பர் இருவராலும் பாடப்பெற்ற தலம்.

சுவாமி : சத்திய வாகீசுரர்.
அம்பிகை : சௌந்தர நாயகி.
தீர்த்தம் : கொள்ளிடநதி, காயத்திரி தீர்த்தம்.
விருட்சம் : ஆலம்.

அன்பி லாலந்துறை யாலந் துறையார்
இன்ப சவுந்தரி எழில்கா யத்திரி. (சிவ.)

வானஞ் சேர்மதி சூடிய மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை கிற்கிலை
ஆனஞ் சாடியை அன்பிலா லந்துறைக்
கோன்எம் செல்வனைக் கூறிட கிற்றியே.
(திருநா. 5-ம். திரு.)

கணைநீடெரி மாலர வம்வரை வில்லா
இணையாளயில் மூன்றும் எரித்த இறைவர்
பிணைமாமயி லுங்குயில் சேர்மட அன்னம்
அணையும் பொழில்அன் பிலாலந் துறையாரே.
(திருஞா. 1-ஆம். திரு.)

17. திரு அன்னியூர் (சோழநாடு)

நீடூருக்கு மேற்கே மூன்றுமைல் தொலைவில் உள்ளது. வருணன் பூசித்த தலம். பங்குனி மாதம் 24-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதிவரை சூரியபூசை.

சுவாமி : ஆபத்சகாயேசுரர்.
அம்பிகை : பெரியநாயகி.
தீர்த்தம் : வருண தீர்த்தம்.
விருட்சம் : எலுமிச்சை.

திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற தலம்.

அன்னியூர் மேவும் ஆபத் சகாயர்
மன்னு பெரியம்மை மகிழ்சிவ கங்கை. (சிவ)

மன்னி யூரிறை சென்னி யார்பிறை
அன்னி யூரமர் மன்னு சோதியே. (திருஞா. 1-ம். திரு.)

தலங்கள் தோறும் எழுந்தருளியிருந்தாலும், சென்னியில் இளம்பிறை சூடி அன்னியூரில் எழுந்தருளியிருக்கின்ற எம்மிறைவனே, நிலைபெற்ற சுயம்பிரகாசத் திருமேனியை உடையவன் என்பது பொருள்.

பாறு அலைத்த படுவெண் தலையினன்
நீறு அலைத்த செம்மேனியன் நேரிழை
கூறு அலைத்தமெய் கோள்அரவு ஆட்டிய
ஆறு அலைத்த சடைஅன்னி யூரரே.
(திருநா. 5-ம் திரு.)

18: திருஆக்கூர். (சோழநாடு)

இத்தலம் மயிலாடுதுறை இரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் வழியில் 10 மைல் தொலைவில் உள்ளது.

ஆர்க்கூர் - கஸ்யபுரம். ஆர்க்கூர் என்பது ஆக்கூர் என மருவியது போலும்.

சிதம்பர விநாயகர் கோயில் : சத்யவாக்குப் பிள்ளையார் கோயிலின் பின்புறத்துள்ள தீர்த்தத்தின் தென்கரையிலுள்ளது.

சுவாமி : சுயம்புநாதர், தான்றேன்றீசர்.
- அம்பிகை : கட்கார நேத்திரி. வாளரங்கண்ணி, வாணெடுங் கண்ணியம்மை.
தலவிருட்சம் : சரக்கொன்றை.

தனக்கிருந்த வயிற்று வலியையும், குஷ்டத்தையும் போக்கிக் கொள்ளவேண்டிச் சிலந்திச் சோழன் கனவில் தோன்றிய சிவ பெருமான் கட்டளைப்படி ஆயிரம் மாந்தர்களுக்கு நாடோறும் அன்னமளித்துப் பின்னர் எண்ணுவான் ஒருவர் குறைவதைக் கண்டு மனம்வருந்த, அவ்வமயம் கிழவடிவமாக வந்த சுவாமியைக் கண்டு பிடித்து வலஞ்செய்வதற்கு நெருங்குகையில் அவர் ஓடிப் புற்றில் ஒளிந்து கொண்டார். அரசன் துரத்திப் பாரைக்கோலால் பெயர்க்கையில் சுவாமி காட்சி கொடுத்தார். சிவலிங்கத்தின் மீது பாரைக் கோல் வடு இன்றுமுண்டு.

ஆயிரத்திலொருவர்: மகாமண்டபத்தில் தெற்கு நோக்கிய அறையில் கையில் தண்டேன்றிய விருத்த வடிவத்தோடு நின்ற கோலமாய் உள்ளார். உற்சவ வடிவம். தான்தோன்றி மாடக் கோயில். (தான்தோன்றி - சுயம்பு.

சிலந்திச் சோழன் பிம்பமும் கோயிலுமுள்ளது.

இது சிறப்புலி நாயனர் முத்தி பெற்ற தலம்.

தீர்த்தம்: ஆம்பலம்பூப் பொய்கை. இது கோயிலுக்கு மேற்கிலுள்ள தீர்த்தம்.

ஆயிரத்திலொருவர் சந்நிதி தனியாக அமைந்துள்ளது.

இத்தலத்தில் சிறப்புலியும், அவர் மனைவியாரும் சிலைவடிவில் இருக்கிறார்கள்.

சொற்றிரு வாக்கூர் சுயம்பு நாதர்
நற்றவக் கட்கநேத் திரிநற் குமுதம். (சிவ.)

அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினான் தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே.
(திருஞா. 2-ம் திரு.)

முடித்தா மரையணிந்த மூர்த்தி போலும்
மூவுலகும் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலும்
கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தா மரைக்காடே நாடும் தொண்டர்
குற்றேவல் தாம்மகிழ்ந்த குழகர் போலும்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே.
(திருநா. 6-ம் திரு.)

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள்:

''ஆக்கூரிற்தான்றோன்றி நீயே யென்றும்'' திருநெய்த்தானம்.
திருநா.

''ஆக்கூரில் தான்தோன்றிப் புகுவார் போல'' வலம்புரம்.
திருநா.
''மறைக்காடு மேயானே ஆக்கூரானே'' பள்ளியின் முக்கூடல்.
திருநா.
''ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும்'' திருவதிகை. காப்புத்.
திருநா.

19. திரு ஆடானை (பாண்டியநாடு)

காரைக்குடியிலிருந்து முப்பத்திரண்டு மைல் தொலைவில் உள்ளது. பேருந்து செல்லுகின்றது. நல்ல வழி.

துர்வாசரின் சாபத்தால் ஆட்டுத்தலையும், ஆனையுடலும் பெற்ற வருணனுடைய புதல்வனை வாருணி இங்கு வழிபட்டு மீண்டும் தேவ சரீரம் பெற்றதால் ஆடானை என்று தலப் பெயராயிற்று. கோயில் பெரிது. கோயிலுக்குள் சூரிய தீர்த்தமும் வெளியில் கீழ்ப்புறத்தில் வருண தீர்த்தமும் உள்ளன. சூரியன் நீலரத்னத்தால் சிவலிங்கம் செய்து பூசித்தான்.

தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.
சுவாமி ; ஆடானைநாதர் (அஜகஜேசுவரர்): ஆதிரத்நேசர்.
அம்பிகை : சிநேகவல்லி: அன்பாயிம்மை.
தீர்த்தம் : சூரியதீர்த்தம்; வருணதீர்த்தம்.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

ஆதி யாந்திரு வாடானை யாடானை
நாத ரம்பாயி நலமிகு ஞானம். (சிவ.)

மாதோர் கூறுகந் தேற தேறிய
ஆதியானுறை ஆடானை
போதி னாற்புனைந் தேத்துவார்தமை
வாதியாவினை மாயுமே.
(திருஞா. 2-ம் திரு.)

20. திரு ஆப்பனூர் (பாண்டிய நாடு)

மதுரையிலிருந்து வடக்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. ஆற்று வெள்ளத்தால் தடைப்பட்ட ஒரு பாண்டிய மன்னன் ஆப்பு ஒன்றைத் தாபித்துப் பூசை செய்தான். அதில் சிவபெருமான் தோன்றியமையால் ஆப்பனூர் என்று தலத்திற்குப் பெயர் ஏற்பட்டது

அர்ச்சகரொருவர் மணலை உலையிலிட்டு அன்னமாக்கியமையால் அன்னவிநோதர் என்ற பெயர் சுவாமிக்கு ஏற்பட்டது.

திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் ஒரு புராணம் இயற்றியுள்ளார்.

சுவாமி ; திருவாப்புடையார், இடபேசுவரர், அன்னவிநோதர்.
அம்பிகை ; குரவங்கமழும் குழலம்மை.
தீர்த்தம் ; இடபதீர்த்தம்.
திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சீர்திரு வாப்பனூர் சிவனாப்ப நாதர்
பார்வதி யம்மன் பதுமப் பொய்கை. (சிவ.)

முற்றும் சடைமுடிமேன் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம் அதுகொண் டுரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருஆப்ப னூரானைப்
பற்றும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே.
(திருஞா. 1-ம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரம் :-

முத்தியர் மூப்பிலர் ஆப்பினுள்ளார் — ஆலர்ப்பசுபதீச்சுரம் — திருஞா.

21. திருஆப்பாடி (சோழ நாடு)

இத்தலம் ஆடுதுறை இரயில்வே நிலையத்திற்கு அருகில் இருக்கிறது. திருப்பனந்தாளுக்குத் தென்மேற்கே ஒரு மைல் தொலைவில் இருக்கிறது. மண்ணியாற்றின் தென்கரையிலுள்ளது.

சுவாமி : பாலுகந்தீசுவரர், க்ஷீரபுரிநாதர், க்ஷீரபுரீசுவரர். அம்பிகை : பெரியநாயகி. தீர்த்தம்: மண்ணியாறு. விருட்சம். ஆத்தி. சண்டேச நாயனார் பூசை செய்து முக்தி பெற்ற தலம்.

இங்கிருந்த இடையன் ஒருவன் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டுபோகும்போது, வழியில் தினந்தோறும் கால் தடுக்கிப் பால் கவிழ்ந்துகொண்டு வருதலையுணர்ந்து கையிலிருந்த கொடுவாளால் அவ்விடத்திலோச்ச, அங்கிருந்து இரத்தம் வெளிப்படக்கண்டு மனமிரங்கிப் பாலுகந்தநாதரே என்று தொழ, சுவாமி அவனுக்கு அருள் செய்த இடம். திருநாவுக்கரசர் பாடிய தலம்.

லிங்கத்தின் பக்கத்தில் சண்டேசருள்ளார். சுவாமிக்குப் பூசை யானவுடன் இவருக்குப்பூசை நடக்கின்றது. வேறிடத்தில் இல்லை. மகாசிவராத்திரியில்தான் இவருக்குப் பட்டம்.

கோயில் மிகப் பழையது. சுவாமியின் வடமொழி திருநாமம் க்ஷீரபுரிநாதர் அம்பிகை, பிரகந்நாயகி. ஆத்தி பழைய மரம். ஸ்ரீ சண்டிகேசுவரர் மணலில் லிங்கம் அமைத்துப் பூசித்த தலம். ஆத்திமரத்தடியில் ஒரு சிவலிங்கம் சாய்ந்திருக்கிறது. இந்தத் தலத்தில் சண்டிகேசுவரர் இருவருளர். தேரடிப் பிள்ளையார் என்று ஒரு பிள்ளையார் இருக்கிறார். திருத்தேர்விழா நடைபெற்றதாகத் தெரிகிறது. சிவராத்திரி அமாவாசை சண்டிகேசர் முத்தியடைந்த தினம். அன்று பிரமோற்சவ தீர்த்தம். அம்பிகையின் திருவுருவம் மிகச் சிறந்த அமைப்புடையதாக இருக்கிறது. இங்கே கோப்பெருஞ் சிங்கனுடைய சாசனம் ஒன்று இருக்கிறது. இங்கே கந்த சஷ்டியில் காவடி எடுக்கும் வழக்கம் இருக்கிறது. சிவாலயத்திற்கு ஒரு வேலி நிலம் இருக்கிறது.

அர்த்த மண்டபத்துக்கும் மகாமண்டபத்துக்கும் மத்தியில் உள்ள சுவாமிக்குத் தீபாராதனை செய்தவுடன் சண்டேசருக்குத் தீபாராதனை. சண்டீசனர் திருவவதாரம் செய்து உடலுடன் சிவபெருமான் திருவடியில் வீற்றிருந்த தலம்.

பண்பாய்ப் பாடி பாலுகந் தீசர்
நண்பாய்ப் பெரிய நாயகி மண்ணி. (சிவ)

கடலகம் ஏழி னோடும் புவனமும் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரும் ஒள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்த மாலை தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னும்ஆப் பாடி யாரே.
(திருநா. 4-ம் திரு.)

22. திரு ஆமாத்தூர்: (நடுநாடு)

இத்தலம் விழுப்புரம் இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கில் நான்கு மைல் தொலைவில் உள்ளது. பம்பை என்னும் ஒரு சிற்றாற்றின் வடகரையில் இத்தலம் உள்ளது.

சுவாமி: அபிராமேசுவரர்; அழகியநாயனார். அம்பிகை; முத்தாம்பிகை. விருட்சம்; வன்னி. தீர்த்தம்: கம்பாநதி. இது சிவ சந்நிதிக்குச் சமீபத்தில் குறுக்கே ஓடுகின்றது. சந்நிதியில் அழகான படித்துறை உண்டு. சத்தியாநிர்த விவேசனி என்று ஒரு திருவட்டப் பாறையிருக்கிறது. இதனிடம் சென்று பிரமாணம் செய்வது அக்கால வழக்கம். காமதேனு பூசித்துக் கொம்பு பெற்ற இடம். இராமர் பூசித்தது. சுவாமி சந்நிதி கிழக்குமுகம். அம்பிகை சந்நிதி மேற்கு

முகம். சந்நிதியின் அருகில் கம்பையாற்றின் படித்துறையுள்ளது; பசுக்களுக்குத் தாயகமான தலம். பிருங்கிமுனிவர் சக்தியின் சாபத்தால் வன்னி மரமாகி, பிறகு அவர் சக்தியைத் துதித்துச் சாபம் நீங்கப் பெற்றார். அம்பிகை கோயிலுக்குப் பெரிய கோபுரம். ஊரின் ஒரு புறத்தில் புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் சமாதி இருக்கிறது. தலபுராணம் அச்சிடப்பெற்றுள்ளது.

இரட்டைப் புலவர்கள் திரு ஆமாத்தூர்க் கலம்பகம் பாடி இருக்கின்றார்கள். இத்தலம் இரட்டையர்களுக்கு முன்பு தொல்காப்பியத் தேவரால் பாடப்பெற்றுள்ளது என்பது தமிழ் நாவலர் சரித்திரத்தால் தெரிகின்றது.

இத்தலப் பாசுரங்கள் சிலவற்றில் இறைவன் அழகியரே என்று அழைக்கப்படுவதற்கேற்பக் கல்வெட்டுக்களிலும் அழகிய நாயனார் என்று பெயர் காணப்படுகிறது. வடமொழியில் அபிராமேசுவரர் என்று வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் தேவாரங்களைப் பண்ணோடு கற்றுச் சந்நிதியில் பாடும் படி பொருட்டுப் பல குருடர்களுக்கு ஆகாரம் முதலியன அளித்து வரும்படி ஒரு சோழன் ஏற்பாடு செய்திருந்தான் என்னும் செய்தி சிலாசாசனங்களால் அறியப்படுகிறது.

இத்தலத்தைப் பற்றிச் சம்பந்தர் இரண்டு பதிகங்களும் நாவுக்கரசர் இரண்டு பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர்.

திருவா மாத்தூர் சிவனழ கியநாதர்
தரைசே ரிளங்கொடி சாம்பவி பம்பை. (சிவ.)

வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று வலிசெய்து
வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர் அழகியரே
ஆமாத்தூர் ஐய னாரே. (திருநா. 6-ம் திரு.)

துன்னம்பய் கோவெணமுந் தோலும் உடைஆடை
பின்னம் சடைமேலோர் பிள்ளை மதிசூடி

அன்னம்சேர் தண்கானல் ஆமாத்தூர் அம்மான்தன்
பொன்னம் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே.
(திருஞா. 2-ம் திரு.)

காண்டனன் காண்டனன் காரிகை யாள்தன்
கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத் தூர்எம் அடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன்
கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள்:

திருப்பரதிரிப்புலியூர் திருவாமாத்தூர் — அதிகை. திருநா.
கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமும் — பொது. திருஞா.
ஐயாறசோகந்தியாமாத்தூரும் ... பொது. திருநா.

23. திருஆரூர் (சோழநாடு)

இத்தலம் இரயில்வே நிலையத்தையுடையது. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றிலும் சிறந்தது.

மூர்த்தி - புற்றிடங்கொண்டார், திருமூலட்டானநாதர், கச்சி ஏகம்பத்தையும் இதையும் பிருதிவிஸ்தலமாகக் கருதுவர்.

சந்நிதிக்குத் தெற்கில் தனிச்சந்நிதியாயுள்ள தியாகராஜ ஸ்வாமி சந்நிதி மிகப் பிரபலம்.

திருவாரூர் என்பதில் ஆர் என்றது பிருதிவியைக் குறிக்கும்

திருமால் இம்மூர்த்தியைத் தம் இதய ஸ்தானத்தில் வைத்துப் பூஜித்தார். மூச்சு இழுத்தல் விடுதல் காரணமாக ஏற்படும் அசைவே திருநடனம். ஏழுவிடங்கர்களுள் திருமால் பூசித்தது இவரையே. இந்த நடனம் அஜபா நடனம். பங்குனி உத்திரப் பெருவிழாவின் வசந்தன் உற்சவத்திலும் திருத்தேர் விழாவிலுமே சுவாமி தாம் இருக்கும் திருவோலக்க மண்டபத்தை விட்டு வெளியே வருகிறார். ஆதிரை விழாவின் சிறப்பினை அப்பர் சுவாமிகள் சிறப்பித்துள்ளார். முத்து விதானம் மணிப்பொற்கவரி என்ற தேவாரம். சுந்தரர் பரவையார் திருமணம், சுந்தரருக்காகத் தூது சென்றது இங்கு நடந்தவை.

திருமூலட்டானத்தின் பெயர் ; பூங்கோயில்.

இத்தலம் சோழ மன்னர்கள் முடிசூட்டு விழாக் கொண்டாடிய ஐந்து நகரங்களுள் ஒன்று. மனுநீதிச் சோழனுடைய நகராக இருந்தது.

''திக்கெலாம் நிறைந்த புகழ்த்திருவாரூர்'' (ஆரூர். 6-ஆம் திரு.)

பிறக்க முத்தி தரும் தலம். நமிநந்தி அடிகளுக்கு ஆரூரிற் பிறந்தார் எல்லோரையும் சிவகணங்களாக்கிக் காட்டினார். 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' ஏயர்கோன் கலிக்காமர், காடவர் கோன், கழற்சிங்கர், செருத்துணைவர், தண்டியடிகள், திரு நீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர் வாழ்க்கைத் தொடர்பு கொண்ட ஊர். திருத்தொண்டத் தொகை தேவாசிரய மண்டபத்தில் நிகழ்ந்தது. சுந்தரர் வலக்கண் பெற்ற தலம். வானோர் பூசிக்கும் திருவாரூர் என்று கூறுகின்றார் அப்பர் சுவாமிகள்.

தீர்த்தம் : கமலாலயம். இக்குளத்து நீர்கொண்டு நமிநந்தி அடிகள் திருவிளக்கேற்றினார். பிறவிக்குருடரான தண்டியடிகள் இக் குளத்தின் மேற்குப்புறத்தை அகழ்ந்து விரிவாக்கும்போது தடை செய்த சமணர்களைக் குருடாக்கித் தாம் ''நாட்டம் மிகுதண்டி'' அடிகளாயினர்.

மாற்றுரைத்துக் காட்டிய விநாயகர். ருத்ரபாத தீர்த்தம்; உத்திரப் பெருவிழாவின் இறுதியில் சுவாமி தீர்த்தம் கொடுப்பர்.

ஏழு திருமுறைகளிலும் மிகுதியான பாடல்கள் இத்தலத்துக்கு உண்டு. மூவரும் பாடியதலம்.

சுவாமி ; வன்மீகநாதர். அம்பிகை: அல்லியங்கோதை.

தீர்த்தம் ; கமலாலயம்.

திருமுறைகளை வகுக்க உதவிய அபயகுல சேகர சோழரும் அநபாய சோழரும் ஆண்டபதி.

விறன்மிண்டர், நமிநந்தி, செருத்துணை, தண்டி, கழற்சிங்கர் முதலியோர் முத்திபெற்ற தலம். சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையானது. அசபா நடனம், தியாகேசர் தலம். இத்தலத் திற்கு ஒரு புராணமும், தியாகாசை லீலையும், உலாவும் உண்டு.

ஜைநர்கள் இருந்த இடம் மடப்புறம் என்று இப்பொழுது வழங்கு கின்றது.

அசுவினி தேவர், வாதாபிவில்வலர் ஆகியோர் பூசித்த தலம்.

திருவாரூர் வன்மீகத் தியாகராம் அல்லியம்
பரைக மலாலயம் பார்வதி கமலம் (சிவ.)

சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ முத்தி யாகுமே. (திருஞா. 1-ம் திரு)

குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக்
குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனல் ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி யான்திரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. (திருநா. 4-ம் திரு)

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. (சுந்தரர்.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள்:

ஆரூரும் புகுவானே யறிந்தோமன்றே. கோயில். திருநா,
சுரும்பமரும் கடிபொழில்கள் சூழ் தென்னூர்சுடர்க் கொழுந்தை. கோயில். திருநா.

திரூவாரூர்த் திருமூலட்டான மேயார் - கோயில். திருநா.
அணியாரூர் நின்றுஅந்தி கொள்ளக் கொள்ள - கோயில் திருநா.
அடிநாறும் கமலத் தராரூராதி யானஞ்சுமாடு மாதிரையனூர் கழிப் பாலே. திருநா.

திருவாரூர்த் திருமூலட்டானன் கண்டாய், கோடிகா. திருநா.
திருவாரூரே சிந்திப்பனுடந் திரைக்காவிரிக் கோட்டத்தையாறு டைய வடிகளோ - ஐயாறு. சுந்தர.
ஒற்றியூராரூராய் நீயே யென்றும் - நெய்த்தானம். திருநா.
அண்ணலாரூராதி யானைக் காவே. ஆனைக்கா. திருஞா.
மகேந்திரருமான வாரூராதி யானைக்காவே. ஆனைக்கா. திருஞா.
அவிர்சடையாரூரர்தலைபுரிந்த பலிமகிழ்வாய். நெடுங் களம். திருஞா.
அணிபொழில் சூழாரூருறைகின்ருகும் - இடைமருதூர் திருநா.
திருவாரூரென்று முள்ளார் - இடைமருதூர். திருநா.

பொழிலாரூர்புக்குறைவர். இடைமருதூர். திருநா.
ஆரூர்மேவிய வமரர்கள் தலைவா - இடைமருதூர். சுந்தர.
சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொன்னே.
ஆவடுதுறை. சுந்தர.
சினவிடையைமேற்கொண்டு திருவாரூருஞ்சிரபுரமும்
இடைமருதும் சேர்வார் போல — வலம்புரம். திருநா,
அண்ணுவு மாரூருமேயார் போலும் — ஆக்கூர்த்தான்தோன்றி
மாடம். திருநா
ஊர்தானுவதுல கேழுமுடையார்க் கொற்றியூராரூர் - கடவூர்
மயானம். சுந்தர.
எம்மிறை செல்வத் திருவாரூர் மேயான் - வீழிமிழலை திருஞா.
அண்ணுமலை யமர்ந்தாராரூருள்ளார் - வீழிமிழலை. திருநா.
ஆரூரார் பேரூரார முந்தூருள்ளார் - வீழிமிழலை. திருநா-
ஆயவன் காணூருலம்மான்ருன்காண் - சிவபுரம். திருநா.
திருவாரூர்த் திருமூலட்டானமேயாய் புகலூர் - திருநா.
மாடவீதி மதிலாரூரிடங் கொண்டமைந்தன் றன்னே
செங்காட்டங்குடி. திருநா.
அண்ணுமலை நாடனு ரூறை யம்மான் - நாகைக்காரோணம்
திருஞா.

அண்ணுமலையானே யானைந்தாடு மணியாரூர் வீற்றிருந்த
அம்மான் தன்னே. நாகைக்காரோணம். திருநா.
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கிற் றிகழும் திருவாரூர்.
புக்கிருந்த தீவண்ணர் நீரே—நாகைக்காரோணம்— சுந்தர.
அணியாரூர் புகப்பெய்த வருநிதியுமதனில்—நாகைக்கா. சுந்தர.
நெய்த்தானமேயானே யாரூரென்னும் பதியானே—பள்ளியின்
முக்கூடல் திருநா.
செஞ்சடைமேற்றிங்கள் சூடுந் திருவாரூர்த் திருமூலட்டானமேய
கொற்றவனே. பள்ளியின் முக்கூடல். திருநா.
இருங்கனக மதிலாரூர் மூலட்டானத் தெழுந்தருளியிருந்தானே
ஆரூரநெறி திருநா.
புகழ்நிலவு பொழிலாரூர் மூலட்டானம் பொருந்திய
வெம்பெருமானே—ஆரூரநெறி. திருநா.
ஐயாறுமேயானே யாரூரானே — தலையாலங்காடு. திருநா.
மஞ்சடுத்த நீள்சோலை மாடவீதி மதிலாரூர் புக்கங்கே
மன்னினாரும், வெண்ணியூர் திருநா.
தில்லையூர் திருவாரூர் சீக்காலி நல்வல்ல மூரென வல்வினே
மாயுமே - பூவனூர். திருநா.
குளிராரூர் கோயிலாக் கொண்டான் கண்டாய் - மறைக்காடு.
திருநா.
அற்றப்பட வாரூர தென்றகன்ருயேர—கோடிக்குழகர் - சுந்தர.
அண்ணுமலை யேனென்றீராரூருளீர் - பரங்குன்றம். சுந்தர
ஆரூரிற்றனியானேகாண் - புத்தூர் - திருநா.

அக்கரும்பு பெரும்புன்னை நெருங்குசோலை ஆரூருக்கதிபதிகாண் புத்தூர் - திருநா.

திருவாரூர் தேவூர் திருநெல்லிக்கா—அதிகை. திருநா.

சிந்தையூர் நன்று சென்றடைவான் றிருவாரூர்—இடையாறு. சுந்தர.

திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா. கச்சியேகம்பம். திருநா.

ஆரம்பாம்பு வாழ்வதாரூ ரொற்றியூரேலும் மதன்று ஓணகாந்தன்தளி. திருநா.

ஐயாறு மாரூரு மானைக்காவும் — ஆலங்காடு. திருநர.

சீராருந் திருவாரூர்ச்சிவன்பேர் செள்ளியில் வைத்த வாரூரன் தமிழ் வல்லார்க் கடையா வல்வினைதானே, வெண்பாக்கம். சுந்தர.

ஆறேறு செஞ்சடையெம் மாரூரன் காண் கோகர்ணம். திநா.

ஆரூர் தில்லையம்பலம் வல்ல நல்லம்—பொது. திருஞா.

ஆனைக்காவிலணங்கினை யாரூர் நிலாயவம்மானை பெர்து. திருநர்.

ஆரூர் மூலட்டான மானைக்கவும் பொது. திருநர.

பிறையூருஞ் சடைமுடி யெம்பெருமானர்ரூர். பெர்து. திருநர.

ஆரூரத்தர்வை யாற்றமுதே. பொது. சுந்தர.

24. திரு ஆரூர் அரநெறி : (சோழநாடு)

இது ஆரூர்க்கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் மேற்குச் சந்நிதி. தனிக்கோயில். இங்கு நமிநந்தி அடிகள் தொண்டு புரிந்து நீரால் விளக்கேற்றினார். சுவாமி: அரநெறி அப்பர், அகிலேசுரர். அம்பிகை : வண்டார்குழலி, அகிலேசுவரி. அசலேசுவரம் சந்நிதி : மேற்கு.

கல்வெட்டுக்கள்: கயமாணிக்க வளநாட்டைச்சேர்ந்த திருவாரூர், அதிராச வளநாட்டைச் சேர்ந்த திருவாரூர், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர். இராஜராஜன் II பெரிய கோபுரத்தையும் சபாபதி மண்டபத்தையும் கட்டினான். செம்பியன் மாதேவியார் அரநெறிக் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவித்தாள். லக்தமதண்டம நாயக்க உடையாருக்கு நன்றாக அவன் மந்திரி ஒரு கோபுரம் கட்டினான். வீதிவிடங்கநாதர் கருப்பக் கிருகத்தையும், வன்மீகநாதர் கோயிலையும் பொன்வேய்ந்தான்.

நம்பியாரூரர் தாயான இசைஞானியார் கௌதம கோத்திரத்தாரான ஞானசிவாசாரியாருடைய புத்திரி என்பது ஒரு கல்வெட்டால் தெரிகிறது.

தியாகராஜ சுவாமி கோயில் இரண்டாம் பிராகார வடசுவரில் மனுசரித தூல்முழுதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

அரநெறி மகிலுமண் அகிலுமை பாவையுள்
வருமண் டலாபரண மகிழ்சிறு மெல்லடி. (சிவ.)

பொருங்கைமத கரியுரிவைப் போர்வை யானைப்
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தி னானைக்
கரும்புதரு கட்டியைஇன் னமிர்தைத் தேனைக்
காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
இருங்கனக மதிலாரூர் மூலட் டானத்
தெழுந்தருளி இருந்தானை இமையோர் ஏத்தும்
அருந்தவனை அரநெறியி லப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே.
(திருநா. 6-ம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கப்படும் தேவாரங்கள்

அந்தமில் புகழாரூரரநெறி-ஆரூர். திருநா.
அறையணி நல்லூருமரநெறியும். அதிகை. திருநா.

25. **ஆரூர்ப்பரவையுண்மண்டளி:-** (சோழநாடு)

ஆரூரில் கிழக்கு ரத வீதியில் திருத்தேர் நிலையின் அருகில் உள்ளது.

சுவாமி: தூவாய் நாயனார். பரவையுள்மண்டலேசுவரர்.
அம்பிகை: பஞ்சின் மெல்லடியம்மை.

ஒரு காலத்து வருணன் இந்நகர் மீது அனுப்பிய கடலை உண்டமை பற்றி இந்தத்தலத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று. துருவாசர் பூசித்த தலம். முனிவர் உருவம் விநாயகர் அருகில் உள்ளது. சுவாமியின் உருவம் கண்ணாடிபோல் பளபளப்பாக இருக்கும். இத்தலத்திலுள்ள சிறிய குளத்தில் மூழ்கிச் சுந்தரர் ஒரு கண் பார்வை பெற்றார். சுந்தரர் பாடிய தலம்.

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயே கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்
காவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே.

(சுந்தரர்.)

ஆரூர்ப்பொது

திருவாரூர் சோழநாட்டுத் தேவாரம் பெற்ற சிவத் தலங்களில் ஒன்று; காவிரியின் தென்பாலுள்ளது இதற்குரிய தேவாரப் பதிகங்கள்: 34. (திருஞா. பதிகம். 5; திருநா. 21 சுந். 8.) திருவாசகம் முதலிய நூல்களிலேயும் இத்தலம் மிகவும் பாராட்டப் பெற்றுள்ளது.

பதினோராந் திருமுறையில் உள்ள சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருவாரூர் மும்மணிக்கோவையும், பெரிய புராணத்திலுள்ள திருவாரூர்ச் சிறப்பும் இத்தலப்பெருமையை நன்கு விளக்கும்.

திருவாரூர் அரநெறி, பரவையுண்மண்டளி என்பனவாகிய பாடல் பெற்ற வேறு இரண்டு தலங்கள் இதனிடத்தே உள்ளன.

இத்தல சம்பந்தமான தமிழ்நூல்கள் வருமாறு:

(1) **கமலாயச்சிறப்பு:**

இது வடமொழியிலுள்ள கமாலய மாகாத்மியம் என்பதன் மொழி பெயர்ப்பு; சிதம்பரம் ஸ்ரீமறைஞான சம்பந்தர் என்பவரால் கி. பி. 1547-ஆம் வருடம் இயற்றப் பெற்றது.

(2) **திருவாரூர்ப்புராணம்:**

நிரம்பவழகிய தேசிகருடைய மாணாக்கராகிய அளகைச் சம்பந்த ரென்பவரால் நாகரகண்டம் என்னும் வடமொழி நூலின்மொழி பெயர்ப்பாகச் செய்யப் பெற்றது. இந்நூல் கி. பி. 1592-ஆம் வருடம் அரங்கேற்றப் பெற்றது.

(3) தேரூர்ந்த சோழபுராணம்: மனுநீதிச்சோழன் தன்மகனைத் தேர்க்காலிலிட்டு ஊர்ந்த வரலாற்றைக் கூறுவது.

(4) தியாகராசலீலை: திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் கி. பி. 1845—ஆம் வருடம் இயற்றப் பெற்றது. தியாகராசப்பெருமான் இயற்றிய 360 லீலைகளுள் முதல் 13 லீலைகளையும் 14-வது லீலையின் முற்பகுதியும் உடையது.

(5) திருவாரூர் நான்மணிமாலை: ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இயற்றியது.

(6) தியாகராசர் பள்ளு; 16 ஆம் நூற்றாண்டில் கமலை ஞானப் பிரகாசர் இயற்றியது.

(7) தியாகராசர் குறவஞ்சி: 17 ஆம் நூற்றாண்டில் இயற்றியது.

(8) திருவாரூர் பன்மணிமாலை: இலக்கணவிளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் பாடியது.

(9) திருவாரூர் ஒருதுறைக்கோவை: வெறிவிலக்கு என்னும் துறையில் அமைந்த நானூறு செய்யுட்களையுடையது. கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் என்பவர் இயற்றியது.

(10) கமலாம்பிகை பிள்ளைத்தமிழ்:

(11) திருவாரூர்க்கோவை: 16 ஆம் நூற்றாண்டில் எல்லப்ப நயினார் இயற்றியது.

(12) திருவாரூர் மாலை.

(13) கமலாம்பிகை மாலை.

(14) தியாகராசர் கழிநெடில்.

(15) தியாக வசந்தக் கலிப்பா.

(16) திருவாரூர் உலா: அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது.

(17) திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி: வித்துவான் தியாகராச செட்டியார் இயற்றியது. இவையன்றிப் பல தனிப்பாடல்களும் வடமொழி தென்மொழிக் கீர்த்தனங்களும் உண்டு.

வடமொழியில் இத்தல வரலாறுரைக்கும் நூல்கள்:-

1. அஜபாரஹஸ்யம் 2. ஆடகேச்வர மாஹாத்மியம் 3. கமலாலய மாஹாத்மியம் 4. நாகரகண்டம் 5. தியாகராச லீலை 6. சமத்காரபுர மாஹாத்மியம் 7. தியாகராஜ மாஹாத்மியம் 8. தேவயாகபுர மாஹாத்மியம் 9. தேவாச்சரய மாஹாத்மியம் 10. முசுகுந்தபுர மாஹாத்மியம் 11. ராமகயா மாஹாத்மியம் 12. ஸ்ரீபுர மாஹாத்மியம், 13. ஸ்கந்தபுர மாஹாத்மியம் 14. க்ஷேத்திரவர மாஹாத்மியம் என்பன.

ஸ்ரீ தியாகராசர்: இவர் முதலில் திருப்பாற்கடலில் திருமாலால் வழிபடப் பெற்றுப் பின்பு அவரால் இந்திரனுக்கும் பின்பு அவனால் முசுகுந்த சக்கரவர்த்திக்கும் அளிக்கப் பெற்று அப்பால் அவ்வரசனால் இத்தலத்திற்கு எழுந்தருளியவர். இவர் அராக்கச்சையையும் ஆடரவக் கிண்கிணிக் காலையும் தியாக விநோதமென்னும் பரிவட்டத்தையும் உடைவாளையும், உதரபந்தனத்தையும் வீரகண்டயமென்னும் வாளையும் தலைச் சீராவையுமுடையவர். மேற்கூறிய பரிவட்டம் ஐந்து கோடுகளையுடையதாய்த் தியாகவன்னமெனவும் இக்காலத்தில் வழங்கும்.

இவருடைய திருநாமங்கள்: அசைந்தாடிய பெருமான், அடிக்காயிரம் பொன்னளிப்பவர், அந்தியும் சந்தியுமாடுவார், இரத்தின சிங்காதனாதிபதி, இருந்தாடழகர், கம்பிக்காதழகா, கருணாகரத் தொண்டைமான், கனகத்தியாகேசர், கிண்கிணிக் காலழகர், செங்கழு நீர்த்தாமர், செம்பொற்சிங்காதனாதிபதி, செவ்வந்தித் தாமர், செவ்வந்தித் தோட்டழகர், தியாக சிந்தாமணி, தியாகப் பெருமாள், தியாகப் பெருமான், திருவந்திக் காப்பழகர், மணித்தண்டிலசைந்தாடிய பெருமான், முன்னிலும் பின்னழகர், வள்ளல், வீதிவிடங்கப் பெருமானென்பனவும் இவற்றின் பரியாயப் பெயர்களுமாம்.

திருவிழா: மாதந்தோறும் இதில் நடைபெறுமாயினும் மார்கழி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் நடைபெறுந் திருவிழாக்கள் மிக்க விசேடமுடையன. ''முத்துவிதானம்'' என்னும் தேவாரப் பதிகத்தால் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின் பெருமை நன்கு புலப்படும்.

பாத தரிசனம்: மார்கழித் திருவாதிரையும் பங்குனி யுத்திரமும் ஸ்ரீதியாகேசருடைய பாத தரிசனத்திற்குரிய விசேட காலங்கள்.

இவருடைய நடனம்: ஹம்ச நடனம், அஜபா நடனம், நாதாந்த நடனம், புயங்க நடனமென்று பாராட்டப் பெறும்.

தேவசபை: இது தியாகேசர் எழுந்தருளியிருக்குமிடம்.

திருச்சாலகம்: இது தென்றல் தவழ்ந்து வருதற்கு ஸ்ரீதியாகேசருக்கு நேரே தென்பாற் சுவரில் அமைக்கப் பெற்றுள்ள கற்பலகணி.

வாத்தியங்கள்: சுத்தமத்தளம், பஞ்சவாத்தியங்கள், பஞ்சானன முரசு முதலியன.

மாணிக்கத்தண்டு: இஃது இவரை எழுந்தருளப்பண்ணும் பிள்ளைத்தண்டு அல்லது திருவாடுதண்டிற்குரிய பெயராக அமைந்துள்ளது.

பச்சைக்கருப்பூரம் : மற்றைத் தலங்களில் ஸ்வாமி திருத்தேருக்கு எழுந்தருளுந்தினத்தின் முதல் நாளில் கிருஷ்ண கந்தம் சாத்தப் படுவது போல் இவருக்கு ஷி தினத்திற் பச்சைக்கருப்பூரம் சாத்துதல் மரபு.

தியாகக்கொடி : இவருடைய துவசம் இப்பெயரால் வழங்கும்.

ஆழித்தேர் : இஃது இவருடைய திருத்தேரின் திருநாமம்.

இடபதேவர் : இவர் தியாகேசருடைய சந்நிதியிலுள்ள திருநந்திதேவர். நின்ற திருக்கோலமாகவே உள்ளார்.

திருவந்திக்காப்பு : இவருடைய ஆராதனைக் காலங்களுள் திருவந்திக்காப்பு மிக்க விசேடமுடையதென்பர்.

தேவாசிரயம் : தரிசனத்திற்கு வரும் தேவர்கள் முதலியோர் சமயம் பார்த்துக்கொண்டு தங்கியிருத்தற்கு முன்பு இடமாக இருந்த தென்றும், அந்த இடத்தில் இப்பொழுது ஆயிரக்கால் மண்டபமுள்ள தென்றும் சொல்லுவர்.

திருவீதிகள் : (1) அடிமுடி நேடிய திருவீதி, (2) செந்தாமரை நாறிய திருவீதி, (3) பொன்பரப்பிய திருவீதி, (4) புகழாபரணத் திருவீதி என்று சில திருவீதிகளின் பெயர்கள் இத்தலத்தில் வழங்கும்.

ஐந்துவேலி : இத்தலத்திற் கோயில், குளம், செங்கழுநீரோடை என்பவற்றுள் ஒவ்வொன்றும் ஐவைந்து வேலியாக உள்ளதென்பர்.

ஸ்ரீதியாகராச மூர்த்திக்கு முசுகுந்த சக்ரவர்த்தியால் வைவசுவத மனுவந்திரத்தில் செய்விக்கப்பெற்று அக்காலம் தொடங்கி இன்று வரையில் சோழ அரசர்கள் முதலியவர்களால் பரிபாலனம் செய்யப் பெற்று வந்ததும், ''ஆழித்தேர் வித்தகனை யான்கண்ட தாருரே'' எனத் தேவாரத்தால் சிறப்பித்துப் பாராட்டப் பெற்றதுமாகிய திருத் தேர் வாய்ந்ததும் இத்தலமேயாகும்.

''ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ'' என்னும் தேவாரப் பதிகத்தால் இத்தலத்தின் பழமை யாவருக்கும் நன்கு புலப்படும்.

26. திரு ஆலங்காடு: (தொண்டைநாடு)

சென்னைக்கு மேற்கே 27 மைலிலுள்ள திருவாலங்காடு இரயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 3-மைலில் உள்ளது.

செப்பேடுகளில் கங்கைகொண்ட சோழன் என்ற முதல் இராசேந்திரன், பழையனூராக் கிராமத்தைத் திரு ஆலங்காடுடைய

மகாதேவர்க்குத் தானமாகக் கொடுத்த செய்தி விவரிக்கப் பெற்றுள்ளது. தானச் செய்தியை ஊரார் அறியும் பொருட்டு, பிடி சூழ்ந்து படாகை நடப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது. பெண் யானையைக் கிராம எல்லை முழுமையையும் சுற்றிவரச் செய்து ஆங்காங்கு கள்ளியும் சூலக்கல்லும் நாட்டப்பட்டது. இவ்வூரில் 'தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாததாகவும்' என்ற குறிப்பினால், அக்காலத்தில் கோயில் மரங்களிலிருந்து கள் இறக்குதல் இல்லை என்று தெரிகிறது.

காளியோடு தாண்டவம் புரிந்த சிவபெருமான், அவள் சமமாக ஆடுவதைக் கண்டு அவளைத் தோற்கடிப்பதற்குக் கருதித் தமது இடது காலைத் தலையளவு உயர்த்தி ஊர்த்துவ தாண்டவம் புரிந்த அருமைத் தலம். ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி 8 கைகளுடைய கவர்ச்சிமிக்க திருவுருவத்தோடு விளங்குகிறார்.

காரைக்காலம்மையார் தலையாலே நடந்து வந்து ''இறைவா! நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க'' வேண்டிப் பெற்ற வரத்தால், பதஞ்சலி வியாக்கிரபாதர்களோடு அம்மையார் திருவுருவமும் நடராசர் சபையில் இருக்கிறது. அம்மையார் தலையால் நடந்துவந்த இந்தத் தலத்தைத் தம் காலால் மிதிக்க அஞ்சிய சம்பந்தர் ஊருக்கு வெளியில் ஓரிடத்தில் தங்கி, அன்று இரவு துயிலும்போது அவர் கனவில் வந்து ஆலங்காட்டப்பன் ''நம்மை மறந்தனையோ பாடுதற்கு'' என்று நினைவூட்ட அடுத்தநாள் தலத்துக்குள் சென்று இறைவனைப் பதிகம்பாடி வணங்கினர்.

ஆலங்காட்டு நீலி வஞ்சனையால் உயிர்நீத்த வணிகனுக்கு உறுதியளித்த 70 வேளாளர்கள் உயிர்விட்டனர்.

இவ்விரண்டையும் சேர்த்துச் சம்பந்தர் கூறுகிறார். (1-ஆம் திரு). கூத்தப்பிரான் சபைகள் ஐந்தனுள் இது இரத்தினசபை அல்லது மணிமன்று எனப்படும். பழையனூர் ஆலங்காட்டிற்கு ½ மைல் தொலைவிலுள்ளது. அங்கு, காரைக்காலம்மையார் கோயிலொன்றுண்டு. தேவார முதலிகள் மூவர்கட்கும் அம்மையார் முற்பட்ட வராகையால் அவர் திருவாக்கு மூத்ததிருப்பதிகம் எனப்படுகிறது. அற்புதத் திருவந்தாதியோடு அம்மையார் திருவாக்கு முழுமையும் 11-ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி திருவீதிக்கு எழுந்தருளிப் பழையனூர்க்குச் சென்று பங்குனி உத்திரத்திலும் மார்கழித் திருவாதிரை அன்றுமாக ஆண்டுக்கிருமுறை முஞ்சிகேச முனிவர், கார்க்கோடக முனிவர் ஆகிய இருவருக்கும் காட்சியளிப்பார்.

இரத்தின சபை: ஊர்த்துவ தாண்டவம் காளியுடன் ஆடியது.

சுவாமி தேவர்சிங்கப்பெருமான், அமிர்ததாண்டவேசுவரர், முஞ்சிகேசுவரர்.

அம்பிகை: வண்டார் குழலி.

தீர்த்தம்: முத்தி தீர்த்தம்.

விருட்சம்: பலா.

கணபதி: வல்லபகணபதி பத்துக்கரங்கள் வாய்ந்தது. பிருங்கி முனிவர் ஆலயம், காளிகோயில் முதலியன தனித்தனியே உள்ளன. ஊருக்குக் கிழக்கே பழையனூர் உள்ளது.

கார்க்கோடகர், காரைக்காலம்மையார் இவர்களுக்குத் திருத் தாண்டவக்காட்சி அளித்து முத்தி கொடுத்த தலம்.

சபாநாயகர்: ஊர்த்துவ தாண்டவேசுவரர்

தங்களுடைய வாக்குத் தவறி விட்டதேஎன்று 70 வேளாளர் முத்தியுற்றதலம்.

இங்கு, தெற்கு வீதியில் காரைக்காலம்மையாருக்கு ஒரு மடம் உண்டு. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியது. மூவரும் பாடியதலம்.

திருவா லங்காடு சேர்வட வாரணியர்
அருளால் வனநாயகி ஞான தீர்த்தம். (சிவ.)

வெள்ளநீர்ச் சடையர் போலும் விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே உருகி நின்றங் குகப்பவர்க் கன்பர் போலும்
கள்ளமே விளைக ளெல்லாம் கரிசறுத் திடுவர் போலும்
அள்ளலம் பழனை மேய ஆலங்காட் டடிக ளாரே.
(திருநா. 4-ம் திரு.)

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்(டு)
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே.
(திருஞா. 1-ம் திரு.)

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென்
முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே
தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா
பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன் அடியார்க்
கடியேன் ஆவேனே.

(சுந்தரர்.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப்பாடல்கள்

பழையனூராலங்காட்டடிகள் பண்டோர்-வீழிமிழலை. திருநா.
ஆலங்காட்டிலந்தேனை. பொது. திருநா.
ஆலங்காடு மரதைப் பெரும்பாழி-பொது. திருநா.
பலர்பாடும் பழையனூராலங்காடு. பொது. திருநா.
தண்டந்தோட்டந் தண்டங்குறை தண்டலையாலங்காடு. பொது.
சுந்தர.

27. திரு ஆலம்பொழில் :- (சோழநாடு)

தஞ்சாவூருக்கு வடக்கே 5 மைல் தொலைவில் உள்ளது. அஷ்டவசுக்கள் பூசித்த தலம். மேற்குநோக்கிய சந்நிதி. சப்த ஸ்தான தலங்களுள் ஒன்றான திருப்பூந்துருத்தியிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : ஆத்மநாதேசுவரர்.
அம்பிகை : ஞானாம்பிகை.
தீர்த்தம் : குடமுருட்டி.
விருட்சம் : ஆலமரம்.
ஆலம் பொழில்வா ழாத்தும நாதர்
வாலஞா னாம்பிகை மகிழ்திருப் பாற்குளம். (சிவ.)

கருவாகிக் கண்ணுதலாய்நின்றான் தன்னைக்
கமலத்தோன் தலையரிந்த காபா லியையை
உருவார்ந்த மலைமகளோர் பாகத் தானை
உணர்வெலா மானானை ஓசை யாகி

வருவானை வலஞ்சுழியெம் பெருமான் தன்னை
மறைக்காடும் ஆவடுதண் டுறையும் மேய
திருவாஞைத்தென் பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே.
(திருநா. 6-ம் திரு.)

28. திரு ஆலவாய் (பாண்டியநாடு)

பாண்டியநாட்டின் தலைநகர். தமிழ்ச் சங்கங்கள் திகழ்ந்த தலம். சிவபெருமான் 64 திருவிளையாடல்கள் செய்த தலம். அங்கயற் கண்ணியம்மையார் அவதாரம் செய்து பாண்டியன் திருமகளாக வளர்க்கப்பெற்று, சோமசுந்தரராக வந்த சிவபெருமானைத் திரு மணம் செய்து கொண்டு அரசுபுரிந்த பழம்பதி. மும்மையால் உல காண்ட மூர்த்தி நாயனார், நின்றசீர் நெடுமாறநாயனார், மங்கையர்க் கரசியார், குலச்சிறைநாயனார் முதலியோர் வரலாற்றுத் தொடர்பு டைய வளநகர். திருஞான சம்பந்தர் அனல்வாதம், புனல் வாதம் முதலியன செய்து சமணர்களைத் திருத்திச் சைவம் பரப்பிய திருநகர். ஒரு பாண்டியனுக்காகக் காலை மாற்றி ஆடிய கூத்தப்பிரான்கற்சிலை யுருவில் வெள்ளியம்பலத்துள் காட்சி அளிக்கிறார். புலவர்கள் ''பொன்னுக்கு வெள்ளி கால்மாற்று அதிகம்'' என்று தில்லையோடு ஒப்பிட்டு, இக்கால் மாறிய திருவிளையாடலை நயம்பெறக் கூறுவர். அங்கயற்கண்ணி அம்மையார்கோயில் வெளிப்பிராகாரத்தில் திருமலை நாயக்க மன்னர் தமது தேவியரோடு சிலையுருவிலுள்ளார். அம்மை யின் சந்நிதிக் கெதிரில் பொற்றாமரைத் தீர்த்தம் உள்ளது. இத் திருக்குளத்தின் பெருமை சங்ககாலத் தொடர்புடையது. சங்கப் பலகை மிதந்து தக்க புலவர்களையும் அவர்கள் நூல்களையும் தாங்கி, ஏனையோரையும் அவர் நூல்களையும் கவிழ்த்துவிடும் அற்புதம் சங்ககாலத்தில் இந்தத் திருக்குளத்தில் நிகழ்ந்தது. ''நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' என்ற நக்கீரர் தமது பிழையை உணர்ந்து இக்குளத்தில் மூழ்கிக் ''கோபப்பிரசாதம்'' என்ற நூலை இயற்றியதும் இத்தலமே. இப்பொற்றாமரைத் தீர்த்தத்திலேதான் தருமபுரத் தாபனர் கையில் அவ்வாதீன வழிபடு மூர்த்தி ஆகிய சொக்கலிங்கக் கடவுள் திருவுருவம் திருவருளால் கிடைத்தது. குமரகுருபர சுவாமிகள் ''மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்'' பாடி அரங்கேற்றியபோது அம்மை ஓர் இளம்பெண்ணாக வந்து தமது கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றைக் கழற்றி அவருக் குப் பரிசாக அளித்ததும் இத்தலத்தில். சில நூற்றாண்டுகட்கு முன் நிகழ்ந்த திருவிளையாடல் சித்திரைப்பெருவிழாவில் மீனாட்சியம்மன்

திக்குவிஜயம், திருக்கலியாணம் முதலியனவும், பாண்டியன் ஜ்வரம் தீர்த்தது, சமணரைக் கழுவேறச் செய்தது, ஆவணி மூலத்திரு விழாவில் பிட்டுக்கு மண் சுமந்தது முதலியனவும், ஏனைய மாதங்களில் வெவ்வேறு திருவிளையாடல்களும் உற்சவங்களாக நடைபெறுகின்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிதுரைத் தேவர் முதலிய பெரியோர்களால் நான்காவது தமிழ்ச் சங்கம் நிறுவப் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றது. திருக்கோயில் வெளிப் பிராகாரத்தில் சங்கப்புலவர்கள் கற்சிலையுருவில் காட்சியளிக்கின்றனர். சுவாமி சந்நிதிக்கெதிரில் இரு கற்றூண்களில் துர்க்கையும், வீரபத்திரரும் பெரிய சிலையுருவில் வெண்ணெய் சாற்றப்பெற்றுக் காட்சியளிக்கின்றனர். வாதவூரடிகள் வரலாற்றுத்தொடர்பும் இத் தலத்துக்குண்டு. வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவனபுராணம், பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம், பெரும் பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், குமரகுருபரர் இயற்றிய மதுரைக்கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் இத்தலத்தைக் குறித்து எழுந்த நூல்கள்.

சுவாமி : சொக்கநாதர், சோமசுந்தரர்.
அம்பிகை : மீனாட்சி.
தீர்த்தம் : பொற்றாமரை.
விருட்சம் : கடம்பமரம்.
ஸ்தலவிநாயகர் : சித்திவிநாயகர்.

வழுதி நாட்டிற்றிரு மதுரைசொக் கேசர்வேல்
விழிமீ னாட்சிவே கவதிபொற் றாமரை. (சிவ.)

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

(திருஞா. 3-ம் திரு.)

வேதியா வேதகீதா விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி ஒடுங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியம்சூடும்
ஆதியே ஆல வாயில் அப்பனே அருள்செய் யாயே.
(திருநா. 4-ம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும்
தேவாரப்பாடல்கள்

கொடிமாட நீடெருவு கூடல் கோட்டூர்-புறம்பயம். திருநா.
ஆலவாய் மேவினாய் நீயே யென்றும். நெய்த்தானம். திருநா.
நரியைக் குதிரை செய்வானு நரகரைத்தேவு செய்வானும்.ஆரூர்.
திருநா.
திருவாலவாயுறையுஞ் செல்வனாரும். வெண்ணீயூர். திருநா.
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி
தருமிக் கருளினோன்காண். புத்தூர். திருநா.
கூடலால் வாயிலார் நல்லகொன்றைசூடினார். அதிகை.திருநா.
தில்லைச் சிற்றம்பலமுந் தென்கூடலும்.அதிகை. திருநா.
ஏயீச்சுரமு நல்லேமங் கூடல். அதிகை. திருநா.
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா. கச்சியேகம்பம்.
திருநா.
மதிகூர் திருக்கூடலிலால வாயும்-பொது. திருஞா.
ஆற்றிற்பழனத் தம்மானை யாலவாலயெம் அருமணியை-பொது.
திருநா.
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர்கூடல். பொது. திருநா.
மடுவார் தென்மதுரை நகராலவாயில்-பொது. திருநா.
சிட்டனைத் திருவாலவாயிற் கண்டேன். பொது. திருநா.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

திருவாலவாய் என்பது பாண்டிவள நாட்டிலுள்ள தேவாரம்
பெற்ற பதினான்கு தலங்களில் ஒன்று.

பதினான்கு தலங்களாவன:

''கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகநெல் வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்றிருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்" என்பன.

இத்தலம் கருணைக் கடலாகிய ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் ஆன்மாக்களை உய்வித்தருளவெண்ணி, 64 திருவிளையாடல்கள் செய்தருளிய ஒப்புயர்வற்ற பெருமை வாய்ந்தது.

இத்தலத்திற்குரிய பழைய வரலாறுகளைப் புலப்படுத்தும் வடமொழி நூல்களும் வடமொழித் துதிகளும், தனித்தமிழ் நூல்களும், தனிப் பாடல்களும் பல உள்ளன என்பது யாவருக்கும் தெரிந்ததே. வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துச் செய்யப் பெற்றனவாய் மூர்த்தி விசேட முதலியவற்றை விளங்கத் தெரிவிக்கும் நூல்கள் சில. அவை திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், திருவிளையாடற்புராணம், அட்டமிப் பிரதக்ஷிண மான்மியம் என்பன.

29. திருஆவடுதுறை: (சோழநாடு)

நாரசிங்கன்பேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே 1½ மைல் தொலைவில் உள்ளது இத்தலம். திருமூல நாயனார் திருமந்திரம் அருளிய தலம். சம்பந்தர் தமது தந்தையார் வேள்வி செய்யும் பொருட்டு இறைவனைப்பாடி ஆயிரம் பொற்காசு பெற்றுக் கொடுத்ததைத் தேவாரம் கூறுகின்றது.

திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர் தொடர்பும் இத்தலத்துக்குண்டு. திருவாவடுதுறை ஆதினத் தலைமைத் திருமடம் இங்குளது.

பசுவடிவுடன் உமாதேவி பூசித்ததால் ஆவடுதுறை. தருமதேவதை பூசித்ததலம்.

தியாகராஜ சந்நிதி இருக்கிறது. ஆயிரம்பொன் சுவர்ணத் தியாகர். முசுகுந்தர் புத்திரர் - புத்திரத் தியாகர்.

கிழக்கே சித்தர்காடு என்ற ஊர் இருக்கிறது. நிருதிமூலை: சாத்தனூர். உற்சவம் கொள்பவர் சோமாஸ்கந்தர். துவஜா ரோகணம் செய்பவர்: தியாகர். தீர்த்தம் கொடுப்பவர் கனைத் தெழுந்த நாயகர். மூவரும் பாடிய தலம்.

ஆவடு துறைமா சிலாமணி ஞானத்
தியாகர் ஒப்பிலா முலைதிகழ்கோ முத்தி. (சிவ.)

கங்கை வார்சடை யாய்கண நாதா
கால காலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றாளே
பூத நாதனே புண்ணியா புனிதா

செங்கண் மால்விடை யாய்தெளி தேனே
தீர்த்த னேதிரு வாவடு துறையுள்
அங்க ணாஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே.

(சுந்தரர்.)

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு சுலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை யரனே.

(திருஞா. 3-ம் திரு.)

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடைவைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர்போலும் ஆவடு துறைய னாரே.

(திருநா. 4ம். திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும்
தேவாரப்பாடல்கள்

ஆவடுதுறை யுளானே யைவராலாட்டப்பட்டேன்—கோடிகா. திருநா.
மறைக்காடு மாவடுதண்டுறையுமேய திருவானை. ஆலம்பொழில். திருநா.
ஆவடுதண்டுறையழுந்தூராறை—பொது. திருநா.
கடம்பந்துறை யாவடுதுறை மற்றுந்துறையனைத்தும்
வணங்குவோமே. பொது. திருநா.
ஐயன்மேய பொழிலணியாவடுதுறையதே. பொது. சுந்தர.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தம் தந்தையார் செய்த வேள்விக்காக ஆயிரம் பொன் சிவபெருமானிடம் இருந்து இத்தலத்தில் பெற்றனர். அதனால் அங்கே உள்ள தியாகராசமூர்த்திக்குச் சுவர்ணத்தியாகர் என்ற பெயர் வழங்கும்.

ஒருமுறை அம்பிகை சிவாக்ஞையால் இங்கே பசுவடிவத்துடன் வந்து இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி அப்பசு வடிவம் நீங்கப்

பெற்றமையின் இத்தலத்திற்குக் கோமுக்தி, கோகழி என்னும் பெயர்கள் வழங்கும். அம்பிகை தன் சுயரூபம் பெற்ற காலத்து அப்பிராட்டியைச் சிவபெருமான் அணைத்தெழுந்தார் என்பது புராண வரலாறு. அதற்கு அடையாளமாக அணைத்தெழுந்த நாயகர் என்ற திருநாமத்தோடு ஒரு மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். உற்சவத்தில் தீர்த்தம் கொடுக்க எழுந்தருளுபவர் அம்மூர்த்தியே.

இத்தலத்தின் ஆலயத்தில் பல அரசமரங்கள் உள்ளன. அவை படரும் அரசு. மண்டபத்தின் மதிலின் மேலும் படர்ந்திருக்கும் தலவிருட்சம் அந்த அரசே; அதனால் அதற்கு அரசவனம் என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. சிறந்த சித்தரும் நாயன்மார்களுள் ஒருவருமாகிய திருமூலர் இத்தலத்தில் தவம்புரிந்து திருமந்திரத்தை அருளிச் செய்தனர். ஆலயத்தினுள் அவர் எழுந்தருளியிருக்கும் கோயில் ஒரு குகையைப் போன்ற தோற்றமுடையது.

மடத்தைச்சார்ந்த ஓரிடத்தில் திருமாளிகைத் தேவர் என்னும் சித்தருடைய ஆலயம் உண்டு. போகரின் சிஷ்யரும் திருவிசைப்பா பாடியவரும் ஆகிய அவர் ஒரு சமயம் அக்கோயில் மதில்களின் மேலுள்ள நந்தி உருவங்களையெல்லாம் உயிர் பெறச் செய்து ஒரு பகையரசனோடு போர் புரிய அனுப்பினார் என்பது பழைய வரலாறு, அதுமுதல் இவ்வாலய மதிலின் மேல் நந்திகள் இல்லாமல் போயினவாம்.

இங்கே சுவாமி சந்நிதியிலுள்ள ரிஷபம் மிகப் பெரியது. ''படர்ந்த அரசு வளர்ந்த ரிஷபம்'' என்று ஒரு பழமொழி இப் பக்கங்களில் வழங்குகின்றது.

இவ்வாலயம் திருவாவடுதுறை மடத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்டது. இயல்பாகவே சிறப்புள்ள இவ்வாலயம் ஆதீன சம்பந்தத்தால் பின்னும் சிறப்புடையதாக விளங்குகிறது.

குருபூசை நடைபெறும் காலத்தில் இவ்வாலயத்திலும் ரததோற்சவம் நடைபெறும். உற்சவம் பத்துநாள் மிகவும் விமரிசையாக நிகழும். ரதசப்தமி அன்று தீர்த்தம். பெரும்பாலும் ரதசப்தமியும் குருபூசையும் ஒன்றையொன்று அடுத்தடுத்தே வரும். சில வருஷங்களில் ஒரே நாளில் இரண்டும் வருவதும் உண்டு. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் ஸ்ரீ கோமுத்தீசர் வீதியில் திருவுலா வருவார். ஆதீனகர்த்தர் பரிவாரங்களுடன் வந்து உற்சவம் ஒழுங்காக நடைபெறும்படி செய்விப்பார். தியாகராச மூர்த்தியின் நடனமும் உண்டு. அதற்குப் பந்தர்க்காட்சி என்று பெயர். ஆலயத்தில் உற்சவமும் மடத்தில் குருபூசையும் ஒருங்கே நடைபெறுவது ஒரு சிறப்பாகவே இருக்கும்.

தலவிநாயகர்கள் இருவர்:-

1. துணைவந்த விநாயகர்; இவர் அம்பிகை பசுவடிங் கொண்டு வந்தபொழுது துணையாக வந்தவர்;

2. அழகிய விநாயகர்; இவர் அகத்திய முனிவருக்குப் பஞ்சாக்ஷர உபதேசம் செய்தவர்.

சுவாமியின் திருநாமங்கள்:-

ஸ்ரீ ஸ்வயம் வியக்தேசுவரர், பிரகாசமணிநாதர், மாசிலாமணி யீசர், கோமுத்தீசர் கோகழிநாதர், அணைத்தெழுந்த நாயகர், பூகைலாஸேசுவரர், புத்திரத்தியாகர், போதிவனநாதர், போதியம்பல வாணர், மகாதாண்டவேசுவரர், அர்த்தத்தியாகர், முத்தித்தியாகர், சிவலோகநாயகர் என்பனவும் இவற்றின் வேறு பரியாய நாமங்களுமாம்.

தேவியாரின் திருநாமங்கள்:-

அதுலகுச நாயகி, ஒப்பிலா முலையம்மை, ஒப்பிலாள்.

தலத்தின் திருநாமங்கள்:-

கோமுக்தி, கோகழி, திருவாவடுதுறை, பூகைலாசம், நந்திநகர், தியாகபுரம், போதிவனம், அரசவனம், மகாதாண்டவபுரம், வேத புரம், சித்தபுரம், நவகோடிசித்தபுரம், முக்திக்ஷேத்திரம், சிவபுரம் என்பனவும் இவற்றின் பரியாய நாமங்களுமாம்.

தீர்த்தங்கள் மூன்று:-

1. முத்தி தீர்த்தம் அல்லது கோமுக்தி தீர்த்தம், 2. கைவல்ய தீர்த்தம், 3. பத்மதீர்த்தம் என்பன. இவை முறையே திருக் கோயிலின் எதிரிலும், திருக்காவிரியிலும், ஸ்ரீகொங்கணேசுவரர் கோயிலின் பக்கத்திலுமுள்ளன.

விருட்சம்: திருவரசுகள் படர்ந்து விளங்குதலால் இவை படர்ந்த அரசுகள் என்றும் நிலவரசுகள் என்றும் வழங்கப்படும்.

சபை: போதியம்பலம் அல்லது அரசம்பலம்.

நந்தி: தருமநந்திதேவர்.

இத்தலத்தில் சிவபெருமான் நிகழ்த்தியருளிய விசேடங்கள்.

1. லீலார்த்தமாக நேர்ந்த பசுவடிவத்தை உமாதேவியார்க்கு நீக்கி அணைத்தெழுந்து நின்று இத்தலத்தைக் கைலையங்கிரியாகக் காட்டினார்.

2. தமது கட்டளைப்படி தேவர்கள் படர்ந்த அரச விருட்சங்களாகத் தோன்றி விளங்க அவற்றின் நிழலில் எழுந்தருளியிருந்தனர்.

3. மகப்பேறுகருதிவந்த முசுகுந்த சக்கரவர்த்திக்கு இந்தத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் காட்டிப் புத்திரப் பேறும் அளித்தனர்.

4. தம்மைப்போற்றிய தருமதேவதையை இடபவாகனமாகக் கொண்டதன்றிச் சந்நிதியில் அரசவிருட்சத்தின் நிழலில் கோயில் கொண்டிருக்கும்படிக்கும் வரமளித்தனர்,

5. தேவர்களும் முனிவர்களும் செய்த பிரார்த்தனைக்கு இரங்கி அரசவிருட்சத்தின் நிழலில் அமைந்த அம்பலத்தில் மகா தாண்டவம் புரிந்தனர்.

6. திருமூலநாயனாரைத் தடுத்தாட்கொண்டு ஆகமசாரமாகிய திரு மந்திரத்தை வெளிப்படுத்தத் திருவருள் புரிந்தனர்.

7. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்குப் பொற்கிழியளித்தனர்.

8. சில முனிவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்தருளினர்.

9. சில அந்தணர்களுக்கு வேதத்தை ஓதியருளினர்.

10. போகர் முதலிய சித்தர்களுக்கும் நவகோடி சித்தர்களுக்கும் அவர்கள் விரும்பிய வண்ணம் அட்டமாசித்திகளையும் பிற வற்றையும் அருளினர்.

இத்தலத்தில் கோச்செங்கட்சோழநாயனார் திருப்பணி செய்து பேறு பெற்றனரென்றும், சித்தர்கள் பலர் எப்பொழுதுமே தங்கி யிருக்கின்றார்களென்றும் புராணங்கூறும்.

ஸ்ரீ அணைத்தெழுந்தநாயகர்: இவர் உமாதேவியாரை அணைத்தெழுந்தகோலமாக எழுந்தருளியிருப்பவர். உற்சவாந்தத் தில் கோமுக்தி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருள்பவர் இவரே.

ஸ்ரீ தியாகராசர்: முசுகுந்தருக்குச் சிவபெருமான் திருவாரூர்த் தியாகராசராகக் காட்சி கொடுத்தது தொடங்கி இவர் சந்நிதி இங்கே உளதாயிற்று; இவர் வீரசிங்காதனமுடையார். இவருடைய நடனம் சுந்தரநடனம். உற்சவத்தில் திருத்தேர் ஊர்ந்தருள்பவர்

இவரே. இவரது பந்தர்க்காட்சி மிக அற்புதமானது. திருவாரூரில் ஸ்ரீ தியாகராசர்க்குள்ள சிறப்புக்கள் இங்கும் உள்ளன.

30. ஆவூர்ப்பசுபதீச்சுரம் : (சோழநாடு)

பட்டீச்சுரத்திற்குத் தென்மேற்கே 4½ மைலில் உள்ளது. சுந்தரப்பெருமாள் கோயிலிலிருந்து 4 மைல்.

வசிட்டரால் சாபம் பெற்ற காமதேனு வந்து வழிபட்டுச் சாபம் நீங்கிய தலம். காமதேனு உலகிற்கு வந்த இடம் கோவந்தகுடி. தற்காலத்தில் கோவிந்தகுடி என்று மருவி வழங்குகின்றது. மணிகூடம், அசுவத்தவனம் என்றபெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோயில். பிரமன், சப்த ரிஷிகள், தேவர்கள், இந்திரன், சூரியன் முதலியோர் வழிபட்டதலம். சங்ககாலப் புலவர்களாகிய ஆவூர்கிழார், ஆவூர் மூலங்கிழார் முதலிய புலவர்கள் தோன்றிய தலம்.

சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : பசுபதீசுவரர், அசுவத்தநாதர், ஆவுருடையார்.
அம்பிகை : மங்களாம்பிகை, பங்கஜவல்லி.
தீர்த்தம் : காமதேனு தீர்த்தம், பிரமதீர்த்தம்.
விருட்சம் : அரசு.

சேர்திரு வாவூர் சிவன்ப சுபதி
யார்மங் களநா யகிசெறி பிரமம். (சிவ)

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடு வார்தம்
மனத்தார் திங்கட்
கண்ணியர் என்றென்று காதலாளர் கைதொழு
தேத்த இருந்த வூராம்
விண்ணுயர் மாளிகை மாட வீதி விரைகமழ்
சோலைசு லாவி எங்கும்
பண்ணியல் பாடல றாத ஆவூர்ப்பசுப தீச்சுரம்
பாடு நாவே.

(திருஞா. 1-ம். திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரங்கள் :
ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும். அதிகை. திருநா.
ஆக்கூரிற்றான்றோன்றி மாடமாவூர். பொது. திருநா.

31. திரு ஆனைக்கா (சோழநாடு)

இத்தலம் ஸ்ரீரங்கம் இரயில்வே நிலையத்திற்குக் கிழக்கில் ½ மைல் தொலைவில் உள்ளது.

மதகரிவனம், அத்தியாரணியம், தானப்பொருப்புவனம் உரலடிவனம், மதமாதங்கவனம் என்பன இத்தலத்தின் பெயர்கள்.

பஞ்சபூதஸ்தலங்களுள் இது அப்புஸ்தலம். காவிரி, கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கும் இடைப்பட்ட மூலஸ்தான மூர்த்தி யிருக்கும் இடம் தரைமட்டத்திற்கும் கீழாக இருப்பதால் எப்போதும் தண்ணீர்க் கசிவு இருந்துகொண்டேயிருக்கும். ஆறுகளில் வெள்ளம் வரும்போது ஓயாமல் இறைத்துக் கொண்டே இருந்தாலன்றி ஜம்புகேசுவரரைத் தரிசனம் செய்ய முடியாது. தண்ணீரை அப்புறப் படுத்துவதற்கு இப்பொழுது ஒரு கருவி உள்ளது. இத்தலத்தில் மிகப்பழைய காலத்தில் வெண்நாவல் மரங்கள் நிறைந்த காடு இருந்தது. இக்காட்டில் ஒரு முனிவர் தவம் புரிந்தார். ஒருநாள் அவரெதிரே ஒரு வெண்ணாவற்பழம் விழுந்தது, அதை முனிவர் திருக்கைலாயம் சென்று இறைவனுக்கு நிவேதித்துப் பிரசாதமாக உண்டார். பிரசாதமாகையால் கொட்டையையும் உமிழாமல் உண்டு விட்டார். இறைவன் திருவிளையாடலால் அக்கொட்டை முளைத்து முனிவர் தலைவெடிக்குமாறு மரமாக வளர்ந்தது. முனிவர் விண்ணப்பிக்க இறைவன் கட்டளைப்படி முனிவர் மீண்டும் நாவற்பழம் விழுந்த இடத்திற்கே மரமாக நடந்து வந்து சேர்ந்தார். இறைவன் இம்மரத்தடியில் அவர் பூசையை ஏற்று ஜம்புலிங்கமாக ஆனார். நாவல் மரம் (வெண்ணாவல்) ஸ்தலவிருட்சம் ஆயிற்று.

திருக்கயிலாயத்தில் புஷ்பதந்தன் மால்யவான் என்ற இருகண நாதர் போட்டியிட்டுத் தொண்டாற்றுவதில் பெருமை கொண்டு ஒருவரை ஒருவர் சபித்துச் கொண்டு முறையே யானையும் சிலந்தியும் ஆயினர். இருவரும் முறையிடுதற்கு இரங்கிய சிவபெருமான் இத் தலத்தில் வழிபட்டு விமோசனம் பெறுமாறு அருளினார். யானை யும் சிலந்தியும் ஜம்புலிங்கத்தை வழிபட்டன. யானை பூவும், நீரும் கொண்டு வழிபட்டது. மரத்திலிருந்து சருகுகள் விழாதபடி ஜம்புலிங்கத்திற்குச் சிலந்தி தனது வாய்நூலால் பந்தல் அமைத்தது. இப்பந்தர் அநுசிதம் என்று யானை அழித்து வழிபட்டுச் சென்ற பிறகு, சிலந்தி நாடோறும் புதிய பந்தல் அமைத்து வந்தது. பத்தரையழிக்கும் யானையைத் தண்டிக்க எண்ணிய சிலந்தி துதிக்கைக்குள் நுழைந்து மூளையைக் கடித்தது. யானை இறந்தது. உள்ளே புகுந்த சிலந்தியும் இறந்தவுடனே யானையும் சிலந்தியும் முறையே புஷ்பதந்தனும் மாலியவானுமாக ஆயினர். ஜம்புகேசுவரர்

அவர் முன்தோன்றிப் புஷ்பதந்தனை மறுபடியும் கணநாதன் ஆகும்படியும், அவன் யானை வடிவு நினைவுக் குறியாக இத்தலம் ஆனைக்கா என்று பெயர் எய்தும்படியும், மாலியவான் சோழமன்னனாகப் பிறந்து பல தொண்டுகள் புரிந்து பிறகு வீடு எய்தும்படியும் அருள் புரிந்தார். சிலந்தியும் கோச்செங்கண்ணனாகப் பிறந்தது. இம்மன்னன் சிவபெருமானுக்கு 70 மாடக்கோயில்கள் (யானை உள்நுழையாதபடி) சிறிய வாயிலாக வைத்து எடுப்பித்தான். அவ்வாறு எடுப்பித்த கோயில்களுள் இக்கோயிலும் ஒன்று. உமாதேவியார் பூசித்த தலங்களுள் ஒன்று. நாடோறும் அம்மன்கோவில் அர்ச்சகர் பெண்ணுடையைத் தரித்துக் கொண்டு உச்சிக்கால பூசைவேளையில் சுவாமி கோயிலில் வழிபாடு செய்கிறார். பிரமோற்சவத்தில் பங்குனிமாதம் சித்திரை நட்சத்திரத்தன்று பஞ்சப் பிரகார உற்சவம் மிக விமரிசையாக நடைபெறும். சோமாஸ்கந்தர் அம்மன் வேடமும், அம்மன் சுவாமி வேடமும் பூண்டு ஐந்து வீதிகளிலும் வலம் வருவார்கள். ஆயிரக் கணக்கான மக்கள் தரிசனம் செய்வார்கள். திருநீற்றையே கூலியாகக் கொடுத்து ஒரு பெரியார் கட்டிய திருநீறிட்டான் மதில் இன்றும் உள்ளது. சோழ மன்னன் ஒருவன் காவிரியில் நீராடும் போது கழுத்திலிருந்த பதக்கம் நழுவி வெள்ளத்தோடு போயிற்று. அவனும் சிவார்ப்பணம் என்று போனான். நாடோறும் ஆற்றிலிருந்து வரும் திருமஞ்சனத்தில் அது அகப்பட்டுத் திருமஞ்சனம் செய்யும்போது இறைவன் திருமேனியில் விழுந்தது.

அம்பிகை அகிலாண்டேசுவரி திருவுருவம் அழகும் அருளும் நிரம்பியது. இத்தலத்திற்கு அருமையான புராணத்தைக் கச்சியப்ப முனிவர் இயற்றியுள்ளார். இத்தலத்திற்குக் கமலை ஞானப்பிரகாசர் **தந்திவனப்புராணம்** என்ற நூலை இயற்றியுள்ளார்.

சுவாமி : ஜம்புகேசுவரர், சம்புலிங்கப் பெருமான்.
சம்புநாயகர், அமுதப்பெருமான்.
அம்பிகை: அகிலாண்டநாயகி, அகிலாண்டேசுவரி,
தீர்த்தம்: காவிரி.
விருக்ஷம்: வெண் நாவல்.
சுவாமியை அம்பாள் பூசித்ததாக ஐதீகம்.

அம்பிகை தீர்த்தத்தைத் திரட்டிச் சிவலிங்கத் திருவுரு அமைத்த காரணத்தால் சுவாமியின் திருநாமம் செழுநீர்த்திரள் என்றும் கூறப்படும்.

திருவானைக்காவுக்குரிய சப்த ஸ்தானங்கள்

1. திருவானைக்கா 2. திருச்செந்துறை 3. திருப்பராய்த்துறை 4. திருப்பைஞ்ஞீலி 5. திருப்பாச்சிலாச்சிராமம் 6. திருவீதிகுடி 7. திருவாலந்துறை.

தலத்தின் வேறுபெயர்கள் :

இத்தலம் திருவானைக்காவல், கஜாரண்யம், ஜம்புகேசுவரம், ஜம்புவீச்சரம், வெண்நாவல்வனம், சம்புவனம், ஞானக்ஷேத்திரம், ஞானதலம், ஞானபூமி, காவை, தந்திபுகாவாயில், அமுதேசுவரம், தந்திவனம், இபவனம் என்றும் பெயர்பெறும்.

சுவாமியின் பெயர்கள் :

ஜம்புகேசுவரர், ஜம்புநாதர், சம்புநாயகர், வெண்ணாவலீசர், ஜம்புலிங்கம், அப்புலிங்கம், அமுதலிங்கம், அமுதேசுவரர், பிரமலிங்கம், பிரமீசர், கஜாரண்யநாதர், பச்சாதாபேசுவரர், ஆதிப் பெருஞ்செல்வர், சங்கரேசுவரர், செழுநீர்த்திரள் என்ற பெயர்களும் வழங்கும்.

நவ தீர்த்தங்கள் :

1. **பிரம தீர்த்தம் :** இது தெற்கில் 4-ஆம் பிராகாரத்தில் சாலைக்குத் தென்புறம் உள்ளது.

2. **இந்திர தீர்த்தம் :** இது 3-ஆம் பிராகாரத்தில் தென்மேற்கில் காசி விசுவநாதர் சந்நிதிக்குப் பக்கத்தில் இருக்கிறது.

3. **சம்பு தீர்த்தம் :** இது 3-ஆம் பிராகாரத்திற்குக் கிழக்கில் பழைய ஜம்புகேசுவரர் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

4. **இராமதீர்த்தம் :** இது 5-ஆம் பிராகாரத்திற்கு வெளியே சந்நிதிக்குத் தெற்கில் உள்ள தெப்பக்குளம். இதில் தைமாதப் புனர்வசு நட்சத்திரத்தில் தெப்பத்திருவிழா நடைபெறும்.

5. **ஸ்ரீமத் தீர்த்தம் :** இது மூலலிங்கத்திற்கு அருகில் சிற்றாறாக உள்ளது.

6. **அக்கினி தீர்த்தம் :** இது 3-ஆம் பிராகாரத்தில் தென்கிழக்கில் வசந்தமண்டபத்திற்குப் பக்கத்தில் உள்ள பெரிய கிணறு.

7. **அகத்திய தீர்த்தம் :** இது அம்மன் கோயிலில் முதல் பிராகாரத்தில் சந்நிதிக்கு முன்பு பள்ளியறைக்குப் பக்கத்தில் உள்ள சிறிய கேணி.

8. **சோம தீர்த்தம் :** இது ஸ்ரீரங்கத்தில் உள்ள சந்திர புட்கரிணி என்று சொல்லுகிறார்கள்.

9. **சூரிய தீர்த்தம் :** இது 4-ஆம் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் ஆயிரக்கால் மண்டபத்திற்குமுன் உள்ள தெப்பக் குளம். இதில் ஆடிமாதம் பூரநட்சத்திரத்தன்று தெப்பத்திரு விழா நடைபெறும்.

சுற்றுக் கோயில்கள்: இராசராசேசுவரர் கோயில், நீலவிண் டீசுவரர்கோயில், சங்கரேசுவரர்கோயில், பிடாரிகோயில், வீரபத்திர சுவாமி கோயில், சுப்பிரமணியசுவாமி கோயில்.

சிற்பங்கள் : சுவாமி சந்நிதிக்கு முன்பு உள்ள பெரிய துவஜஸ்தம்ப மண்டபம் சிறந்து விளங்குகிறது. நான்கு பெரிய தூண்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தூணுக்கும் மேல் எட்டுச் சிங்கங்கள் தாங்குவதாகக் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு தூணிலும் தலவரலாறுகளைத் தெரிவிக்கின்ற சிற்பங்கள் உள்ளன. பக்தர்கள் இம்மண்டபத்தைக் கண்டு மகிழ்வர்.

புராதனத் திருப்பணிகள் :

'திருவானைக்காத் திருப்பணி மாலை' என்னும் நூலின் மூலமாக இக்கோயிலின் மதில்கள், கோபுரங்கள் மண்டபங்கள் முதலிய வைகள் சோழர்களாலும், பாண்டியர்களாலும், நாயக்கமன்னர் களாலும், பக்தர்களாலும் அவ்வப்போது திருப்பணி செய்யப்பட்ட வைகளை அறியலாம்.

திருப்பணி மாலையிலுள்ள முற்காலத் திருப்பணிகளைப் பற்றிய விவரம்.

1. **கோச்செங்கட்சோழன் :** திருச்சாலகக்கெண்டிகை, மண்டபம், கோபுரம், தந்திபுகாவாயில், மாடவீதி, 18 மடம், எண்டிசை இடபக்கொடிகள்.
2. **விஜயபாலன் அகளங்கவளவன் :-** இரண்டாம் பிரா காரத்தின் மதில், கோபுரம், மண்டபம்.
3. **விக்கிரமசோழன் :-** மூன்றாம் பிராகாரம், மதில், மண்டபம், கோபுரம்.
4. **இராமர் :-** திருக்குளம், சிவலிங்கம், வசந்த மண்டபம்.
5. **சுந்தரபாண்டியன் :-** நான்காம் பிராகாரத்தின் கோபுரம் முதலியன.

6. **சிவமுனிச்சித்தர் :-** (முக்கட்செல்வர்) திருநீறிட்டான் மதில், 4 கோபுரங்கள் முதலியன.

7. **ஸ்ரீசங்கராச்சாரியார் :-** பிரசன்ன விநாயகர் பிரதிட்டை, தாடங்கப்பிரதிட்டை.

8. **குலசேகர பாண்டியன் :-** விண்ணோங்கு மண்டபம்.

9. **மதுரைவரகுண பாண்டியன் :-** விடையாத்தி மண்டபம்

10 **திருநீற்றுச்சோழன் :-** யாகசாலை, கோடைவிழா மண்டபம்.

11. **அழகனருள் முதலியப்பன் :-** நிலாஎறிக்கும் மண்டபம், சிவலிங்கப்பிரதிட்டை, சிகரத்துக்குப் பொன்முலாம் பூச்சு.

12 **வரிசைப்பெருமாளையன் :-** நீராழி மண்டபம் புஷ்கரிணி, திருமாளிகைப்பத்தி மைய மண்டபம்.

13. **சொக்கப்பய்யன் :-** வீரேச்சுவரத்துக்கு மேற்கே ஓர் மண்டபம்.

14. **சம்புநாதசெட்டி :-** ரோகிணிநட்சத்திரத்தீர்த்தம், நாலுகால் மண்டபம், பூசக்கட்டளை.

15. **சுப்பிரமணிய மகாமுனி:** செங்கழுநீர்விநாயகர் திருப்பணி, கோபுரம், சந்நிதிக்கு முன் பிள்ளையார்கோயில்.

16. **மாணிக்கவாசகன் :-** கருங்கற்சிங்காசனம்.

17. **தெய்வராயன் :-** திருவளர்சோலையில் நந்தவனம், மணி மண்டபம்.

18. **ரெங்கஜயதுங்கன் :-** அம்மன்கோயில் கம்பத்தடியில் உயர்மண்டபம்.

19. **பேரம்பலத்துறைவர் சைவமுனி :-** ஆயிரக்கால் மண்டபம்.

20. **சிவந்திநாதன் :-** தாழைக்குடி மண்டபம்.

21. **மந்திரிப்பெருமான் :-** வெங்கங்குடி மண்டபம்.

22. **கச்சிசெட்டியப்பநாயக்கர் :-** காவிரியின் கரையில் தன்பேரால் பதினாறு கால்மண்டபம் அமைத்தது.

23. **கனகய்யன் (மறைவல்லோன்) :-** மேலத் தெருவில் கைலாய வாகன மண்டபம். இவையன்றி, வாணாதிராயன், நித்தியானந்த நாராயணதீக்ஷிதன், திருமலைநாயக்கன்,

சுப்பிரமணியமகாமுனிவன் முதலியவர்கள் காலத்தில் பல திருவாபரணங்கள், வாகனங்கள், கோரதம் முதலிய திருப்பணிகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வழிபட்டோர் :- பிரமன், திருமால், திக்குப்பாலகர், அஷ்ட வசுக்கள், சம்புமுனி, அம்பிகை, சிலந்தி, யானை, இராமர், பராசரர், சோழன், கோச்செங்கண்ணான், கௌதமர், குபேரன், அகத்தியர், சூரியன், சந்திரன், இந்திரன், அக்கினி முதலானவர்கள்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியர், அருணகிரிநாதர், கமலை ஞானப்பிரகாசர், காளமேகப்புலவர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள், வித்துவான் தியாகராச செட்டியார்.

தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அர்த்த சாமத்தில் அபிடேகமில்லை.

ஐம்முகப்பிள்ளையார் :- ஏரம்ப விநாயகர் என்று ஆகமங்கள் கூறும். தந்தைக்குள்ள ஐந்து முகம் இவருக்கும் உண்டு. தெய்வத் திருவுருவங்களின் தலையின் மிகுதி ஞானவிசேடத்தையும், கைகளின் மிகுதி செயல் மிகுதியையும் காட்டும். தந்தையைப் போல் பிள்ளை.

திருவானைக்காத் திருப்பணிமாலை (கையெழுத்துப் பிரதி எண் 718 அ.)

சோழன் செங்கணான் முதல் மாணிக்கவாசகன் வரை நாற்பத்து மூவர் செய்த திருப்பணியை விளக்கி 56 பாடல்களில் கூறுவது இந்நூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கையெழுத்துப் பிரதி மிகவும் சிதிலமான நிலையில் உள்ளது.

32. திரு இடும்பாவனம் (சோழநாடு)

இத்தலம் திருத்தருப்பூண்டி இரயில்வே நிலையத்திற்குத் தென் மேற்கே 10 மைல் தொலைவில் உள்ளது. நெடும்பாலம், பாண்டி, தில்லைவிளாகம் முதலிய இரயில்வே நிலையங்களிலிருந்தும் இத்தலத்தை அடையலாம். இடும்பன் பூசித்த தலம். இடும்பனது தலைநகர் குன்றஞர்.

விநாயகர்:-வெள்ளை விநாயகர்.
சுவாமி:-சற்குண நாதேசுரர்.
அம்பிகை:-மங்கள நாயகி.
தீர்த்தம்-சீதபுஷ்கரிணி.

அகத்தியருக்குத் தரிசனம் கொடுத்த மணக்கோலம் உண்டு. கடோற்கசன் பிறந்தஇடம். பீமன் தடியால் அடித்து உண்டாக்கிய தீர்த்தம் உண்டு என்பர். திருநானசம்பந்தர் பாடிய தலம்.

இடும்பா வனஞ்சேர் இறைசற் குணேசர்பால்
நடம்புரி மங்கள நாயகி சீதம். (சிவ.)

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திரள் உந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன் மிகுகுன்றில்
இனமாதவர் இறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே.
(திருஞா. 1 - ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல் இடும்பாவனம் எழுமூர் தோழூர். பொது. திருநா.

33. இடைச்சுரம் : (தொண்டைநாடு)

இத்தலம் செங்கற்பட்டிலிருந்து கிழக்கே திருப்போரூருக்குப் போகும் வழியில் 5½ மைல் தொலைவில் உள்ளது. மூலஸ்தானலிங்கம் மிகவும் பளபளப்புள்ளது. சிதம்பரம் இரத்தின சபாபதியைத் தரிசிப்பதுபோல் பின்புறம் கற்பூரம் காட்டினால் நன்றாகத்தெரியும். ''மரகதலிங்கம்'' 'இடைச்சுரம் மேவிய இவர்வண்ணம் என்னே' என்று ஒவ்வொரு பாசுரத்திலும் ஞானசம்பந்தர் புகழ்கிறார்.

சுவாமி:- இடைச்சுரநாதர்
அம்பிகை—இமையமட்க்கொடியம்மை
தீர்த்தம் :- மதுரம்

சநற்குமாரர் பூசித்ததலம். திருஞானசம்பந்தர் பாடியதலம்.

எழிலி டைச்சுர மிடைச்சுர நாதர்
வழுவிலா மதுர வசனி மதுரம். (சிவ.)

வரிவளரவிரொளி யரவரை தாழ
வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்
கரிவளர் தருகழல் கால்வல னேந்திக்
கனலெரி யாடுவர் காடரங் காக
விரிவளர் தருபொழில் இனமயில் ஆல
வெண்ணிறத் தருவிகள் திண்ணென வீழும்
எரிவள ரினமணி புனமணி சாரல்
இடைச்சுரம் மேவிய இவர்வண மென்னே.
(திருஞா. 1ஆம். திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப்பாடல்.

எந்தம் பெருமாற் கிடமாவது விடைச்சுரமுமெந்தை
தலைச்சங்காடும். அதிகை. திருநா.

34. திருஇடைமருதூர் :- (சோழநாடு).

இரயில்வே நிலையம் உள்ள தலம். வரகுணபாண்டியன் வரலாற்றுடன் தொடர்புடையது. பட்டினத்தடிகள் வழிபட்டதலம். அவர் அருளிய மும்மணிக்கோவை பெற்றது. இங்குத் தைப் பூசத்தில் நீராடுதல் சிறந்தது. தைப்பூச உற்சவச்சிறப்பானது தேவாரத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. உருத்திரர், உமை, விநாயகர், முருகன், பிரமன், திருமால் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி : மகாலிங்கேசர்.

அம்பிகை : பெருநலமுலைநாயகி, பிருகத்சுந்தரகுசாம்பிகை.

தீர்த்தம் : காவிரி. விருட்சம் : மருதம்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய மருதவனப் புராணம் இத்தல சம்பந்தமானது.

தருமபுரம் பதிப்பில் திருவிடைப் பிச்சக் கட்டளை என்ற தலைப்பின் கீழ் உள்ளவை.

விநாயகர் : ஆண்டபிள்ளையார்-ஆஞ்ஞாகணபதி. இத்தலத்திற்கு 180 கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் 33 அச்சாகி உள்ளன.

முதல் குலோத்துங்கன் ஆட்சியில் 38-ஆம் ஆண்டில் நிலங்கள் அளந்து வரிக்கூறு செய்யப்பட்டமையை ஒரு கல்வெட்டின் மூலமாக அறியலாம். பரகேசரிவர்மன் 4 ஆம் ஆண்டு விளக்குக்காகக் கொடுக்கப்பட்ட தங்கத்தின் கணக்கு உள்ளது. ஒரு கல்வெட்டினால் கூத்து விகற்பங்கள் இங்கு நடைபெற்றன என்று தெரிகிறது. உய்யக்கொண்ட வளநாட்டு திரைமூர் நாட்டு இடைமருது. ஆண்டபிள்ளையார் பேட்டைக்குச் (ஆண்டலாம் பேட்டை) சிவாக்ரபுரம் என்றும் பெயர் (தெற்கு.)

மருதவாணன்பேட்டை :- மேலை வீதிக்கு மேற்கு.

ஏகநாயகன்பேட்டை : (ஏனம்பேட்டை) தெற்கு வீதியில் இரயில்வேபாதைக்குத் தெற்கு.

திருப்பணிப் பேட்டை இழுப்பணிப் பேட்டை. திருவிடைமருதூர் கீழண்டை எல்லை.

கைலாயம் பேட்டை. - திருவிடைமருதூர் வடக்கு வீதிக்கு வடக்கு

துண்டராயன்பேட்டை - தொண்டிராயன் - வடமேற்குக் காவிரி மூலைத்தெரு. இங்கிருந்த தெரு போய்விட்டது.

சுவாமி: சோமாஸ் கந்தர் சோதிமய மகாலிங்கம், ஏகநாயகர், அம்பிகை : மூகாம்பிகை பெருநலமாமுலை, பிருகத்சுந்தரகுசாம்பிகை. வாடாமுலை ஏகநாயகரின் பக்கத்துள்ள தனி அம்பிகை. அன்பிற் பிரியாள் மருதவாணர் பக்கத்துள்ளார்.

அம்பாயம்மை : போகசத்தி மகாலிங்கத்தின் பக்கத்துள்ளவர்.

கோயில் வேலைக்காரர் : ஆதிசைவர். 6; ஜபக்காரர். 4; ருக் மூவர். ஸாம இருவர். புராணம் வாசிப்போர் ஒருவர். கட்டியம் கூறுவோர் ஒருவர்.

அர்ச்சனை வாசிப்போர் இருவர்; சோதிடம் சொல்வோர் ஒருவர்; தேவாரம் ஓதுவோர் ஒருவர்; பாகவதர் இருவர்; சதிபதிகள் இருவர்; வீரமுஷ்டி ஒருவர்; வைராகி, பரிசாரகர் 16 பேர்.

காலம் : (1) உஷக்காலம் (2) காலை சந்தி (3) உச்சி (4) சாயரட்சை (5) 2 - ஆம் காலம் (6) அர்த்தசாமம்.

மடங்கள் : மேற்கு வீதியில் சடைச்சிமடம்; அகோரசிவாசாரியார் மடம், வாணியமடம்; வடக்குவீதியில் வண்ணான் மடம்; செம்படவன் மடம்; கீழை வீதியில் கம்மாளர் மடம்.

சுத்திரம் :- சந்நிதியின் தென்புறத்தில் பிச்சைக்கட்டளைச் சத்திரம்.

மண்டபம் :- தாசிதையா மண்டபம் இது காருண்யாமிருதத்திற்கு மேற்புறமுள்ளது. முதல்நாள் திருவிழா.

கம்மாளர் மண்டபம் :- யானைகட்டுமிடத்திற்குக் கீழ்புறம். 4-ஆம் நாள் திருவிழா. திருமலைராயன் பட்டினத்தார் மண்டபம்; சந்நிதி வடசிறகில் சதிபதி வீடுகளாய் உள்ளன

கொத்தன் மண்டபம் :- சந்நிதியின் வடசிறகு கோடியிலுள்ளது, 2-ஆம் திருநாள்.

வாணிய மண்டபம்: இது மேலைவீதியில் மேல்சிறகில் வடக்குக் கோடி.

உடையார்பாளையம் ஜமீன்மண்டபம் :- திருபுவனசாலையின் வடபுறத்துள்ளது. 7-ஆம் திருநாள்.

சிவாஜி மண்டபம் :- இதில் புஷ்ய விடையாற்றி நடைபெறும். இதற்கு அருகில் சிவாஜி ருத்திரன் தோப்பும் தன்செயும் உள்ளன.

பிடாரி :- சிங்கனேரிக் குளத்திற்கு வடகரைக் கோயிலிலுள்ளாள். இவள் உலகரட்சி.

பிடாரி 2: ஆடுதுறைக்குப் போகிற சாலையில் கீழ்ப்புறத்திலுள்ளது. தத்தாத்திரேயர் பூசித்த தலம்.

சுவாமி மகாலிங்கர் என வழங்குதகேற்பச் சிவாலய அமைப்பினை ஒட்டித்திருவலஞ்சுழி விநாயகர் சந்நிதியாகவும், சுவாமிமலை

சுப்பிரமணியர் சந்நிதியாகவும், திருச்சேய்ஞலூர் சண்டீசர் சந்நிதியாகவும், சூரியனார்கோயில் நவக்கிரகங்கள் சந்நிதியாகவும், சீகாழி வைரவக்கடவுள் சந்நிதியாகவும், திருவாவடுதுறை நந்திதேவர் சந்நிதியாகவும், திருவாரூர் சோமாஸ்கந்தர் சந்நிதியாகவும், திருவாலங்குடி தக்ஷிணாமூர்த்தி சந்நிதியாகவும் இவ்வாறு பரிவார சந்நிதிகள் அவ்வத் தனிச்சிறப்புடன் தனித்தலங்களாகவே அவ்வவற்றிற்குரிய இடங்களில் விளங்குதல் இத்தலத்தின் பெருமையை நன்கு விளக்குவதாகும்.

மேலும் தம்மைப் பூசிக்கும் முறையை யாவருக்கும் அறிவுறுத்தற் பொருட்டு இறைவன் தம்மையே தாம் பூசித்த பெருமையும் உடையது இத்தலம். மூவரும் பாடியதலம். ஏகநாயகர் என்பது இத்தலத்து உற்சவ மூர்த்தியின் திருநாமம்.

திருவிடை மருதூர் சிவன்மரு தப்பர்
பெருநல முலையாள் பெருங்கரு ணாநதி (சிவ.)

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடா முலைமங் கையும்தா னும்மகிழ்ந்
தீடாவுறைகின்ற இடைமரு தீதோ. (திருஞா. 1ஆம் திரு.)

காடுடைச் சுடலைநீற்றர் கையில்வெண் டலையர் தையல்
பாடுடைப் பூதம் சூழப் பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண் டாரே.
(திருநா. 4ஆம் திரு.)

கழுதை குங்குமம் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நான்உழன் றுட்டடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்

அழுது நீஇருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேஎன மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. (சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப்பாடல்கள்:-

இடைமரு தோடீங்கோய் நீங்கா இறையவனை.
புள்ளிருக்கு வேளூர். திருநா.
ஏறுகந் தேறவைத்தார் இடைமருதிடமும் வைத்தார்.
ஐயாறு. திருநா.
இடைமருதும் ஈங்கோயு நீங்காதேற்றின் மிசையானை.
ஆனைக்கா. திருநா.
எழிலானை இடைமருதினிடங் கொண்டானை. கற்குடி.
திருநா.
சிரபுரமும் இடைமருதும் சேர்வார் போல. வலம்புரம்
திருநா.
இடைமருது இன்னம்பர் ஏகம்பமும். அதிகை. திருநா.
எந்தையூர் எய்த மானிடையாறு இடைமருதே.
இடையாறு. சுந்தர.
எற்றுமூர் எய்தமானிடை யாறிடை மருதே.
இடையாறு சுந்தர
(இடையாற்றுப்பதிகம் மற்றப் பாடல்களிலும் சுந்தரர் இடைமருதாரைக் குறிப்பிட்டுள்ளமை காண்க)
ஐயாறும் இடைமருதும் ஆள்வான்ருன்காண்.
கச்சியேகம்பம். திருநா.
இடைமரு தோடேகம்பத் தென்று நீங்கார். பாசூர் திருநா.
இனவஞ் சொலிலா விடைமா மருதும். பொது. திருஞா.
இடைமருதீங் கோய் இராமேச்சுரம். பொது. திருநா.
இடமாக்கி இடைமருதும் கொண்டார்பண்டே.
பொது. திருநா.

ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம்

மத்தியார்ஜுனம் என்பதன் ‘மொழிபெயர்ப்பு இடைமருதூர் என்பது. அர்ஜுனம் என்பது மருதமரத்தின்பெயர். வடக்கே மல்லிகார்ஜுனமும் தெற்கே புடார்ஜுனபுரமும் இருப்பதால், மத்தியிலுள்ள திருவிடைமருதூர் மத்தியார்ஜுனம் என்று வழங்கப்படுகின்றது.

விநாயக வணக்கம்

“உலகமுணர்ந் திடுகருணை யதனெடுநெஞ்
சகமதினி டுவகை யெய்தி
அலகில்புக ழுறுகவிகை நிழறனின்மெய்
யன்பர்குல மதனைக் காக்கக்
குலவுமுப நிடதவரி யணைமீது
பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங்
கிலகுமிடை மருதாண்ட விநாயகனை
யெப்பொழுது மிறைஞ்சி வாழ்வாம்.

நைமிசவனத்திலே சௌனகாதி முனிவர்கள் பௌராணி கோத்தமராகிய சூத முனிவரை வணங்கி, “ஸ்வாமி ! அடியேங்கள் உய்யும் வண்ணம் எல்லா விசேஷங்களும் அமைந்த சிவஸ்தல மொன்றை நவின்றருள்க” என்று பிரார்த்தித்தனர். அவர் நெடுநேரம் சமாதி பொருந்தியிருந்து பின்பு நெஞ்சம் நெக்குருக்க கண்ணீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப ஸ்ரீ ஜோதிர் மய மகாலிங்க மூர்த்தியையும், ஸ்ரீ பிருகத்சுந்தர குசாம்பிகையையும், தமதா சாரியராகிய வியாச முனிவரையும் தியானித்துத் துதித்து இந்த ஸ்தலத்தின் மகிமையை அருளிச் செய்வாராயினர்.

தலமகிமை

“இலங்குமந் திரங்க டம்மி
லிசைக்குமஞ் செழுத்து நீடு
நலந்தரு நூல்க டம்மி
னவின்றிடு மறையு மெண்ணும்

பலன்தரு தேவர் தம்மிற்
பரமனு மதிக மென்னத்
தலங்களி லதிக மாகுந்
தனியிடை மருதுமன்னே.

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுப் பற்பல ஸ்தலங்களை உண்டாக்கியருளினர். அவற்றுள் ஸ்ரீ அருணாசலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருக்கேதாரம், திருவாரூர், திருவலஞ்சுழி, திருவேரகம், ஸ்ரீ சிதம்பரம், திருவெண்காடு, ஸ்ரீ கும்பகோணம், ஸ்ரீ மத்தியார்ச்சுனம் என்னும் பதினெரு தலங்கள் சிறந்தன. அவற்றினுள்ளே அநாதியாக இருத்தலானும், எல்லா உயிர்களுமொடுங்கிய மஹாராத்திரியில் அவ்வுயிர்களை எழுப்புதற் பொருட்டு ஏகாதச ருத்திரர்கள் வந்து வழிபட்டுச் சிவானுக்கிரகம் பெறும்படி விளங்கினமையானும், திருவலஞ்சுழி முதலிய மிகச் சிறந்த தலங்களை விநாயகர் முதலிய பரிவார தேவதா ஸ்தலங்களாகக் கொண்டிருத்தலானும், மத்தியார்ச்சுனமே சிறந்தது. திருவலஞ்சுழி விநாயகக் கடவுளுக்கும், சுவாமி மலை சுப்பிரமணியப் பெருமானுக்கும், திருவாப்பாடி சண்டேசுர நாயனாருக்கும்; சூரியனார் கோயில், சூரியன் முதலிய நவக்கிரகங்களுக்கும், சிதம்பரம் நடேசப் பெருமானுக்கும், சீகாழி பைரவக் கடவுளுக்கும், திருவாவடுதுறை நந்தி தேவருக்கும், திருவாரூர் ஸோமாஸ்கந்தருக்கும், திருவாலங்குடி தக்ஷிணாமூர்த்திக்கும் இருப்பிடங்களாம்.

மத்தியம்-நடு. அர்ச்சுனம்-நின்மலம். இது நின்மலமான ஸ்தானமென்று பொருள்பட்டு மத்திய சப்தத்தோடு சேர்ந்து நின்று, இத்தன்மையையுடைய (ஆதி சக்தியின் ஹிருதயகமல) மத்திய ஸ்தானத்தை உணர்த்திப் பின்பு அந்த ஹிருதய கமல மத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய ஸ்ரீ ஜோதின்மய மகாலிங்கப் பெருமான் முனிவர்களுக்குக் காட்சியளித்தற் பொருட்டு இங்கே எழுந்தருளியிருக்கின்றமையால், அப்பெயர் இந்தக்ஷேத்திரத்திற்கும் வந்தது. அல்லாமல் பின்பு ஒரு காலத்தே தரிசித்தற்கு வந்த உரோமச மகாமுனிவர் அர்ச்சுன வனத்தின் மத்தியில் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருப்பக் கண்டு,"இந்தக்ஷேத்திரம்மத்தியார்ச்சுனம்" என்று வழங்கியபடி கொள்வதும் பொருந்தும். இன்னும் இது தமக்கு ஆதிசக்தி காட்சி கொடுத்தற்கு முனிவர்கள்

உண்டாக்கின சண்பகச் சோலையையுடைமையால் சண்பகவன மென்றும், ஆதிசக்தி எழுந்தருளியிருத்தலாற் சக்திபுரமென்றும் சக்தியும் முனிவர்களும் தவம் செய்து பேறு பெற்றமையால் தபோவனமென்றும், சிவபெருமான் ஜோதி வடிவாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினமையால் ஜோதிநகரமென்றும் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களையும் உடைமையால் சர்வதீர்த்தபுரம் என்றும், வில்வத்தை உடைமையால் வில்வவன மென்றும், தன்னிடத்திலிருந்து செய்யப்படும் ஒவ்வொரு புண்ணியமும் பற்பலவாக விருத்தியாதலால் தருமவிருத்திபுரமென்றும் பூமியின்கண் சிவலோகமாக இருத்தலாற் பூலோக சிவலோகமென்றும், வீரசோழன் வழிபட்டு ஆலயத் திருப்பணி செய்து காடுவெட்டி நகரம் உண்டாக்கி நித்திய நைமித்திகங்களை விதிப்படி புரிவித்தமையால் வீரசோழ நகரமென்றும் சொல்லப்படும். இந்த க்ஷேத்திர மகிமை ஸ்காந்த புராணத்திலும், லிங்க புராணத்திலும், பிரம கைவர்த்தத்திலும், சிவரகஸ்யாதிகளிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மருதவிருக்ஷத்தின் வரலாறும், சிவபெருமான் காட்சி கொடுத்தருளிய முறையும்

திருக்கைலாய மலையிலே ஒப்புயர்வில்லாத செம்பொன் திருக்கோயிலிலே அனந்தகோடி சூரியர் உதித்தாற் போன்ற ஒளியையுடைய ரத்தின சிங்காதனத்தின் மேலே எழுந்தருளியிருந்து மகாதேவர் தமது ஞானசக்தியாகிய உமாதேவியாருக்கு ஆகமங்களை உபதேசித்து அருளினார். தேவியார் அவற்றையெல்லாம் திருவுளங்கொண்டு. மகிழ்ந்து எழுந்து வணங்கி, ''எம்பெருமானே! இவ்வுலக வளங்களையும், ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்படி தேவரீர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களையும், அவற்றுள் சிறந்ததாகிய ஒன்றனையும் காட்டியருளல் வேண்டும்'' என்று பிரார்த்திக்க, ''நின்குறிப்பு மிகவும் அழகிது'' என்று மகிழ்வுற்றுச் சிவபிரான் உமாதேவியாரோடும் ரிஷபாரூடராய்த் திருக்கைலாயத்தினின்றும் புறப்பட்டு, எல்லா விசேஷங்களையும் காண்பித்துக் கொண்டுவந்து காவிரி மாநதியை யடைந்து அதன் மகிமைகளை எடுத்து உரைத்து, அதன் தென்கரையில் உள்ளதாகிய இந்த க்ஷேத்திரத்திற்கு நேராக ஆகாயத்தில் எழுந்தருளினார். அப்போது கைலையங்கிரியானது தமது பிரிவாற்றாமையால் மிகவும் உன்னதமான மருத மரமாகி அவ்விடத்தே நிற்கக் கண்டு அதனுடைய நிழலில் ரிஷபத்தை நிறுத்தி உமாதேவியாரை நோக்கி, ''ப்ரியே! இந்த ஸ்தலம் அநாதியாயுள்ளது; நமக்கு அதிகப் பிரீதியை உண்டு பண்ணுவது; இதற்கு ஒப்பான ஸ்தலம் எங்கும் மில்லை இதன் அழகை நீ காண்பாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினார். உமாதேவியார் ஆங்காங்குள்ள தபோவனங்களையும்.

அவ்வனங்களில் காசிபர் முதலிய முனிவர்கள் தவஞ்செய்தலையும், மற்ற விசேஷங்களையும் நோக்கி அன்புற்று ஆனந்தப் பெருக்க மடைந்தனர். அப்பொழுது உமாதேவியாருடைய திருவிழிகள் கருணை வெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் கிழக்கே சென்று காருண்யாமிர்தம் என்று பெயர்பெற்று ஒரு தீர்த்தமாக விளங்கியது. அக்காலத்தில் சிவபிரானது. திருவிழிகளும் கருணை வெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் இரண்டு பிரிவாகப் பொன் நிறமுற்றுச் சென்று நீர்வற்றிக் கிடந்த வடமேற்கிலுள்ள தடாகத்திலும் தென் திசையிலுள்ள தடாகத்திலும் பாய்ந்தது. அவ்விரண்டனுள், வாயு திக்கிலுள்ள தடாகத்திலே உயிர் போய் உலர்ந்து கிடந்த ஜலசரங்கள் யாவும் உயிர் பெற்று ருத்ர கணங்களாகி ஸ்வாமியை வலஞ்செய்து வாழ்த்தி வணங்கி விமானத்தின் மீதேறிச் சிவபுரம் அடைந்தன. அங்கே தவஞ் செய்யும் முனிவர்கள் தம்முட் பேசிக் கொள்ளும் வினாவிடைகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அப்பால் பார்வதி தேவியாரோடு சுவாமி ஒரு முகூர்த்த காலம் அவர்களுக்குத் தோன்றாத வண்ணம் எழுந்தருளியிருந்தனர். அப்போது அங்கே வந்த அகஸ்திய முனிவரை முனிவர்கள் கண்டு பேரானந்தமுற்று எதிர் சென்று வணங்கி, "தேவரீர் இங்கே எழுந் தருளியது அடியேங்கள் செய்த பெருந்தவமேயன்றி வேறன்று. ஆதலால் யாங்கள் உய்ந்தோம். 'யாக முதலிய கருமங்களைச் செய்யிற் பயனளிப்பது அக்கருமமோ? அன்றி யளிப்பவர் சிவபெரு மானோ? என்னுஞ் சந்தேகம் எமக்கு நெடுநாளாக வுள்ளது. இதனை நீக்கியருளல் வேண்டும்"என்று பிரார்த்திக்கவே அகஸ்திய முனிவர் 'கன்மம் தானே பயன் தராதென்றும் தருபவர் சிவபெரு மானே' என்றும், பத்தி நெறியாலேயே அவரை அடைய வேண்டு மென்றும், அந்தப் பத்திநெறி பெருந்தவத்தா லெய்தற்பாலதென்றும் பற்பல நியாயங்களால் விளக்கி, "முனிவர்களே! அவனருளாலே அவனை அடைய வேண்டுமென்று வேதாகமங்கள் கூறுகின்றன; ஆதலால், நீவிர் அருளாகிய உமாதேவியாரைக் குறித்துத் தவஞ் செய்து அவராற் சிவபெருமானை அடையுங்கள்" என்று கூறியரு ளினார். அப்பொழுது உமாதேவியார், "இவர்களுக்குக் காட்சி கொடுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கவே சிவபெருமான், "நாம் இப்பொழுது இவர்களுக்கு வெளிப்படுவது முறையன்று; அகஸ்தியன் மொழிப்படியாகுக" என்று கூறி உமாதேவியாரோடும் கைலை மலைக்கு எழுந்தருளினார்.

பின்பு, அகஸ்திய முனிவர் கட்டளையின்படி எல்லா முனிவர் களும் அவரோடு கூடி ஸரஸ்வதிதேவியைக் குறித்துத் தவஞ்

செய்து வேதாகமங்களின் உண்மைப் பொருளையறிந்து பின்பு லட்சுமிதேவியைக் குறித்துத் தவம் செய்து சிவாராதனத்திற்கு வேண்டிய பாக்கியத்தை அடைந்து, பின்பு சிவபெருமானைத் தமக்குப் பிரத்தியட்சமாகத் தரிசிப்பித்தற்குச் சிற்சக்தியான ஆதி சக்தியின் அருள்பெற வேண்டி, அந்தச்சக்திக்குப் பிரியமான சண்பக சோலையொன்றை உண்டாக்கி, அந்தச் சோலையில் காட்சியளிக்க வேண்டுமென்று தவஞ்செய்தனர்; அப்போது அம்பிகை பரமசிவனிடத்துப் பிரியாவிடை பெற்று எழுந்தருளிக் காட்சி கொடுக்கவே முனிவர்கள் தரிசனம் செய்து ஆனந்த பரவசர்களாகி, ''தாயே! நாங்கள் சிவபெருமானையும் தரிசிக்கும்படி திருவுளங் கொண்டருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தனர். உடனே பார்வதி தேவியார், ஹிருதய கமல மத்தியில் சிவபெருமானை நினைந்து மௌனமாய்ச் சிவயோகஞ் செய்தனர். முனிவர்கள் அம்பிகைக்குத் தொண்டு செய்து கொண்டு தவம் புரிந்திருந்தனர்,

இப்படி நிகழுங்காலத்தில் அம்பிகையின் ஹிருதயகமல மத்தியில் நினைந்தபடியே சிவபெருமான் ஜோதின்மய மகாலிங்க மூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினார். முனிவர்கள் யாவரும் தரிசிக்க வாற்றாது திகைத்து, உமாதேவியாருடைய திருவருளால் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார்கள். பின்பு சிவபெருமான் அருள்மயமாகிய அந்த ஜோதின்மய மகாலிங்கத்தினின்று பிறைமுடியும், மான் மழு அபயம் வரதம் அமைந்த திருக்கரங்கள் நான்கும், தரிசித்தற்கினிய மற்ற அவயவங்களும் விளங்க ஏகநாயக மூர்த்தியாக எழுந்தருளிக்காட்சி கொடுத்தருளினார். அப்பொழுது தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள், குபேரன் பொன்மாரி பெய்தான். கந்தர்வர்கள் இனிமையான கானஞ் செய்தார்கள். பூதகணாதிபர்கள் வாத்தியங்களை முழக்கினார்கள். இங்ஙனம் காட்சி கொடுத்தருளிய ஏகநாயகரை உமாதேவியார் வணங்கித் துதித்தார். முனிவர்களும் வணக்கத்துடன் துதிசெய்து, 'நாம் செய்த தவம் பலித்தது' என்று ஆனந்த பரவசர்களாயினர். அப்பொழுது சிவபிரான் பார்வதி தேவியாரை நோக்கி, ''நினது தவங்கொண்டு மகிழ்வடைந்தோம்; நினது கருத்தின்படிக்கும், நமது அன்பனாகிய அகஸ்திய முனிவன் முனிவர்களுக்குக் கூறியபடிக்கும், இம்முனிவர்களுக்குக் காட்சி கொடுத்தோம். எம்மோடு அபேதமாகிய உனக்கு எம்மால் தருதற்குரியது யாது? யாவரும் அறியும்படி நாம் முன்னர் வடிவமாகக்கொண்ட ஜோதின்மய மகாலிங்கத்தை இந்த க்ஷேத்திரத்தில் அநாதியாகவுள்ள நம் உருவமாகிய லிங்கத்தோடு கலப்

பித்துப் பூசிக்கின்றோம்; இதனைஒருதினம் பூசிப்பவர்கள் இருமைப் பயனையும் எளிதில் அடைந்து முக்தியின்பத்தையும் அடை வார்கள்'' என்று மொழிந்தருளி, விஷ்ணு முதலிய தேவர்கள் தத்தமக்கு இயன்ற பணிகளை அன்போடு செய்து பக்கத்தே நிற்கையில், தாம் உரைத்தருளிய வேதாகம விதிப்படி அம்மூர்த்தியை அர்ச்சித்தனர்; பின்பு அருகே ஏவல் செய்து நின்ற தேவர்கள் யாவருக்கும் அவரவர் கருதிய வரங்களை யருளி உமாதேவியாரை நோக்கிப் புன்முறுவல் செய்தனர். அப்பொழுது உமாதேவியார், ஸ்வாமி! திருமால் முதலிய தேவர்கள் தத்தம் எண்ணம் வாய்ப்பத் தேவரீரைப் பூசிக்கின்றனர். தேவரீர் என்ன பயனைக் குறித்துப் பூசித்தீர்?'' என்று கேட்கவே சிவபெருமான், ''உமையே, நம்மைப் பூசிக்கும் முறையை இம் முனிவர்க்கு அறிவுறுத்தற் பொருட்டே'' என்று சொல்லி உமாதேவியாரது வேண்டுகோளின்படி முனிவர் களை நோக்கி, ''நீங்கள் வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள் ளுங்கள்'' என்றனர்; அவர்கள் ''கிருபாநிதியே! அடியேங்களுக்குச் சிவஞானம் அருளுக'' என்றார்கள். சிவபிரான் அப்படியே ஞானோபதேசஞ்செய்து சிவலிங்கத்தின் பெருமையையும், பூசை செய்யும் முறையையும், பூசிப்பவர்கள் அடையும் பயனையும் விரித்துச் சொல்லியருளினர். அப்பால் தேவர்களும் முனிவர்களும் விசுவகர்மாவை வருவித்து ஆலயம் அமைக்கும்படி கூற, அவன் விதிப்படி கர்ப்பக்கிருகமும். அர்த்த மண்டபம் முதலிய மண்டபங் களும், திருமாளிகைப்பத்தி முதலியனவும், ஆவரண தேவர்கள் ஆலயங்களும், வலப்பக்கத்தில் பிருகத்சுந்தரகுசாம்பிகையின் ஆலயமும் ஒருகணப்பொழுதில் மனத்தால் நிருமித்தனன். அவ்வால யங்களில் அந்தஅந்தத் தேவர் எழுந்தருளியிருப்ப அவர் விதிப்படி பூசை புரிந்து இன்புற்றனர்.

உரோமசமுனிவரும் வீரசோழனும் வழிபட்டது

உரோமசர் என்னும் முனிபுங்கவர் மருதவனேசரை வணங்குதற் பொருட்டுத் தமது தபோவனத்தினின்றும் புறப்பட்டுப் பல நாடுக ளையும் கடந்து இந்த ஸ்தலத்தை அடைந்து இதனது சிறப்பை நோக்கி வருங்கால், திருக்கோயிலின் வடமேற்கிலுள்ள தீர்த்தத்தில், ஒரு காகம் வந்து படிந்து பொன்னிறமுற்று மருதமரத்திலிருந்து பரமசிவனைத் துதிப்பதை வியப்புடன் நோக்கி, ''காக்மே! உன் வரலாறு யாது? சொல்'' என்று வினவினார். காகம், ''நான் முற் பிறப்பில் ஒரு பிராமணன். வேதசாஸ்திர புராணங்களையும், விதி விலக்குகளையும் நன்றாக அறிந்தவன். ஒருநாள் சூரிய கிரகண புண்ணிய காலத்தில் பலரும் ஸ்நானம் செய்து தான தர்மாதிகளைப் புரியும்போது நானும் சென்று ஸ்நானம் பண்ணிச் செய்யவேண்டு

வனவற்றை எல்லாம்செய்துஓர்அரசனிடத்தில்தானம்வாங்கினேன், ஆசை அடங்காமையால் மற்றோர் அரசனிடத்தும் சென்று தானம் வாங்கத்தொடங்கினேன். அவன் எனது மார்பிலுள்ள சந்தனத்தைக் கண்டு, 'நீ முன்னமே யாரிடத்தேனும் தானம் வாங்கியதுண்டோ?' என்று வினவ, நான் 'ஆம்' என்றேன். அரசன் கோபமுற்று, 'வீடுதோறும் சென்று, இரைகளைக் கவரும் காகம்போலப் பலரிடத்தும் தானம் வாங்கக் கருதினமையால் நீ காக வடிவம் அடையக் கடவாய்' என்று சபித்தான். நானும் அரசனைச் சபிக்க எண்ணுங்கால், அவனது புரோகிதனாகிய சுசங்கியன் என்பவன் என்னைப்பணிந்து, 'பல உயிர்களையும் காக்கின்ற அரசனைச் சபியற்க. அரசன் சபியாவிடினும் நீ காகவடிவமடைதற்குத் தடையில்லை; நீ அடையும் காகவடிவம் ஒரு புண்ணிய தீர்த்தத்தால் நீங்கும்' என்று கூறி மிகவும் பிரார்த்தித்துக் கொண்டமையால்,நான் கோபம் தணிந்து காகவடிவம் பெற்றுப் பழைய ஞாபகத்தோடும் பல தீர்த்தங்களிலும் படிந்து முன்னர் அடைந்துள்ள தவப்பேற்றால், இந்த ஸ்தலத்தை அடைந்து இந்தத் தீர்த்தத்தில் படிந்து, இந்த ஜோதின்மய மகாலிங்கத்தின் கிருபையால் பொன்வடிவம்பெற்றேன். உம்மையும் தரிசித்தேன்; நற்கதியும் அடைவேன். இனி எனக்கு என்னகுறை?' என்று சொல்லிற்று. அப்போது சிவகிருபையால் கோடி சூரியப்பிரகாசமுள்ள விமானமொன்று பல தேவகணங்களோடும் வரவே, காகம் குத்திரவடிவமுற்று அதிலேறிப் பல சிறப்புடன் கயிலையங்கிரியிற் சென்று அளவில்லாத இன்பமுற்றிருந்தது.

இவ்வாறு சென்றதைக் கண்ட உரோமசமகாமுனிவர் மிக்க ஆச்சரியமுற்று மருதவனத்தால் மூடப்பட்ட திருக்கோயிலை அடைந்து ஸ்வாமியை வணங்கி, அடியேனையும் ஆட்கொண்டருளல் வேண்டும்' என்று பிரார்த்தித்து, வெளியே வந்து ஒருவரையும் காணாமல் திகைப்புற்றுப் பரமசிவனைப் பிரார்த்தித்து, நின்றார். அப்பொழுது தமக்குக் காட்சியளித்த திருநந்தி தேவரை நமஸ்கரித்து, ''இத்திருக்கோயிலில் எல்லாச் சிறப்பும் அமைந்திருப்ப' மனிதர்கள்மட்டும் இல்லாமைக்கு என்ன காரணம்?'' என்று வினாவினர், அப்போது திருநந்தி தேவர், ''முன்னம் இங்கிருந்து சிவாராதனம் செய்து வந்த அகஸ்திய முனிவர் முதலானோர் சிவாஞ்ஞையால் திருவெண்காட்டை யடைந்து அங்குள்ள முனிவர்களோடு யாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நீங்கினமையால் பௌத்தர் மேலிட்டு இத்தேசத்தாரையும் சோமனையும் வேறுபடுத்தினர். அதனால் இந்நகரம் மருதங்காடு கொண்டது. பூசித்தற்கு வேறொருவரும் இல்லாமையால் விநாயகக் கடவுள்

சிவாராதனம் செய்தலோடு சிவாஞ்ஞையால் அன்பர்களுக்கு யாதேர் இடையூறும் அணுகாவண்ணம் ஆண்டு வருகிறார். உமது வரவையும், உம்மால் இங்கே சிவநேயம் தழைத்தோங்கு மென்பதையும், முன்பு சிவபிரான் விநாயகருக்குக் கூறியருளினர்'' என்று கூறினர். முனிவர் ஆனந்தமுற்று, ''ஸ்வாமி, அடியேனுக்குச் சிவபூசா விதியை அருளுக'' என்று வேண்ட அப்படியே அவர் உபதேசித்தருளினர். பின்பு முனிவர் நாள்தோறும் பூசித்து ஸாம்பதக்ஷிணாமூர்த்தியாகத் தமக்குப் பரமசிவன் காட்சி கொடுத்தருளப் பெற்று மீட்டும் சிவாராதனம் செய்துகொண்டு இந்த ஸ்தலத்தே வசித்திருந்தார்.

அக்காலத்தில் காஞ்சீபுரத்தில் சோழப் பரம்பரையில் தோன்றிய வீரசோழன் என்பவன் எல்லா வித்தைகளிலும் சிறந்து சிவபக்திச் செல்வம் வாய்ந்து அரசாண்டு வந்தான். அவன் ஸ்தல யாத்திரை செய்ய நினைந்து புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டே வந்து, இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்வாமி தரிசனம் செய்து, அளவிறந்த மகிழ்ச்சியுடையவனாகி உரோமச மகாமுனிவரால் கட்டளையிட ப் பெற்று விதிப்படி ஆலயத்தில் பணிசெய்து, காடுவெட்டி நகரமுண்டாக்கி அதில் நான்கு வருணத் தாரையும் மற்றையோரையும் முறையே குடியேற்றிச் சிவபிரானுக்கு நித்திய பூஜை முதலியவற்றை முன்னையிலுஞ் சிறப்பாகச் செய் வித்துப் புஷ்யோத்ஸவத்தையும் விதிப்படி நடத்தி, மேலும் வேண்டு வனவற்றையெல்லாம் செய்து இந்த ஸ்தலத்திலிருந்தே பலநாள் அரசாண்டு வாழ்ந்து, தனது புத்திரனுக்கு மகுடம் சூட்டிப் பின்பு சிவபதமடைந்தான். உரோமச மகாமுனிவரும் பல முனிவரோடு இந்த ஸ்தலத்திலேயே சிவயோகம் பயின்று வசித்திருந்தார்.

மார்க்கண்டேய முனிவர் பேறுபெற்றது

மார்க்கண்டேய முனிவர் அர்த்தநாரீசுரவடிவம் தரிசிக்க விரும்பி இந்த ஸ்தலத்தை அடைந்து தவம் செய்து பரமசிவன் அந்த வடிவினராகிக் காட்சியளிக்கவே தரிசனம் செய்து பேரானந்த மடைந்தார்.

சுகீர்த்தி மகப்பேறடைந்தது

காஞ்சீபுரத்தில் முன்னம் அரசனுகவிருந்த சுகீர்த்தி என்பவன் தனக்குப் புத்திரன் இல்லாமையால் வருந்தினான். அக்காலத்தில்

திருவெண்காட்டில் யாகம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த அகஸ்திய முனிவரை அடைந்து பணிந்து தன் மனக்குறையை விண்ணப்பம் செய்தான். அவர், ''பிதிரர்களுக்குத் திருப்திசெய்தால் புத்திரன் உண்டாவான். அதற்கு மற்ற இடங்கள் எல்லாவற்றினும் திருவிடைமருதூரே சிறந்தது. அந்த க்ஷேத்திரத்தில் அங்ஙனம் செய்து பேறு பெற்றோர் அநேகர். நீயும் அங்கே சென்று நான் சொன்னபடி செய்து பேறுபெறுக'' என்று கூறியருளினர். அரசன் விடை பெற்று இந்த ஸ்தலத்தையடைந்து சுவாமி தரிசனம் செய்து பிதிர்களுக்குத்திருப்தி செய்து, சற்புத்திரனை யடைந்து பெரு மகிழ்வுற்றுப் பல நாள் இந்த ஸ்தலத்தின்கண் இருந்து அரசாண்டு பின்பு புத்திரனுக்கு முடிசூட்டிச் சிவபதமடைந்தான்.

வசிஷ்டர் முதலியோர் சித்தி பெற்றது

வசிஷ்டர் முதலிய பல முனிவர் அஷ்டமாசித்தியைப் பெறுதற் பொருட்டு ஒரு யாகம் செய்ய நினைந்தனர். அப்போது ஸ்ரீ சுப்பிர மணியக் கடவுளைப் பணிந்து தம்முடைய எண்ணத்தைக் கூறி, ''யாகம் செய்தற்குரிய ஸ்தானமொன்று தெரிவித்தருளுக, என்று விண்ணப்பம் செய்ய, அவர் இந்த ஸ்தலத்தின் மகிமைகளை அறிவுறுத்தி அம்முனிவர்களுடன் இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்வாமியை அவர்களுக்குத் தரிசனம் செய்வித்துக் கங்காதேவியை நினைத்தனர். உடனே வந்த கங்காதேவியை நோக்கி அவர், ''சிவபிரானுக்கு அபிஷேகத்திற்பொருட்டும், யாவருமாடி உய்தற்பொருட்டும் இந்த ஸ்தலத்தில் இருப்பாயாக, என்று வேண்டினர். எனவே' கங்காதேவி அவ்வாறே மூலஸ்தானத்துக்கு வடகிழக்கில் ஒரு கிணறு வடிவாய் அமர்ந்தனள். குமாரக் கடவுள் அந்தக்கங்கா தீர்த்தத்தினுல் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து பூசித்தனர். முனிவர்களும் குமாரக்கடவுளின் கட்டளைப் படியே காவிரியிலும் மற்றத் தீர்த்தங்களிலும் இந்தக் கங்காதீர்த்தத் திலும் ஸ்நானம் செய்து பரமசிவனை வழிபட்டு அவரது ஆக்ஞை பெற்று, பின்பு வேண்டுவனவற்றைக் கொண்டு குறித்தபடி யாகம் செய்தார்கள்; முடிவில் பரமசிவன் அம்பிகையோடும் ரிஷபாரூட ராய்க் காட்சியளித்தனர். முனிவர்கள் தரிசனம் செய்து தாம் விரும்பிய சித்திகளை அடைந்து பல நாள் இந்த ஸ்தலத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்து தம்மை அடைந்தவர்களுக்கும் அந்தச் சித்திகளை அளித்து ஸ்வாமியிடத்தில் விடைபெற்றுத் தங்கள் தங்கள் தபோமவனடைந்து தவம் செய்வாராயினர்.

தீர்த்த மகிமை

(1) **காருண்யாமிர்தம் :** இந்த ஸ்தலத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் இது சிறந்தது. இதில் சித்திரை விஷு புண்ணிய காலத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இந்தத் தீர்த்தத்தின் வடகீழ்த் திக்கில் திரிமூர்த்தி வடிவினதாகிய அரசமரமொன்று உண்டு. சோமவார அமாவாசையில் காலையில், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அந்த அரசமரத்தை ஏழுமுறை வலம் வருபவர்கள் உலகை யெல்லாம் வலம் வந்த பலனையடைவார்கள். வேதாத்தியயனம் செய்யாத பிராமணனும், சிவலிங்கத்தையும் பெண்களையும் விற்றவனும்' மதுபானம் செய்தவனும்' சிராத்தம் செய்யாமல் விட்டவனும், களவு கொலை செய்தவனும், மாதா பிதாக்களை இகழ்ந்தவனுமாகிய இவர்கள் இதில் ஸ்நானம் பண்ணுவாராயின் அப்பாவத்தினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானம் செய்பவன் அஷ்டைசுவரியத்தையும், சதுர்த்தச வித்தைகளையும் அடைவான்; விரோதிகளும் வியாதிகளும் நீங்கப் பெற்று, மறுமையிற் சிவ சாரூபத்தையும் பெறுவான். உலகத்திலுள்ள எல்லாப் புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணின பலனை ஒருங்கே அடைவான். இதில் ஏதாவது ஒருகாலத்தில் ஸ்நானம் பண்ணிப் பிதிர்களைக் குறித்துத் தர்ப்பணம் செய்வோர் ஒரு வருஷத்திலுள்ள பிதிர் தினங்களாகிய தொண்ணூற்றாறு தினத்திலும் பிதிர் சிராத்தம் பண்ணின பலனை அடைவார்கள். இந்தத் தீர்த்தத்தால் பேறுபெற்றோர் பலர். தொண்ணூற்றாறு சிராத்தங்களாவன: மந்வாதி 14 ; மாளயம் 16 ; யுகாதி 4. ஸங்கிராந்தி 12 ; தர்சம் 12 ; வியதீபாதம்,13 ; வைதிருதி. 13; அஷ்டகம் 12.

முன்னொரு காலத்தில் கங்கை, யமுனை, தாமிரபர்ணி, வாணி, சோணபத்திரை முதலிய நதிகள் திருக்கைலாயத்தை அடைந்து பரமசிவனை வணங்கி வழிபட்டு, ''ஸ்வாமி, ஸ்நானம் பண்ணுபவர்கள் எம்பால் நீக்கிய பாவங்களால் மலினமுற்று வருந்துகின்றோம், இத்துன்பம் நீங்குமாறு அருள்புரிக'' என்று பிரார்த்திக்கவே பரமபதி, ''காருண்யாமிர்தத்தில் ஸ்நானம் பண்ணுங்கள். உங்கள் எண்ணம் வாய்க்கும்'' என்று அருளினர். அதுகேட்டு அவர்கள் மகிழ்வுற்று விடைபெற்று இந்த ஸ்தலத்தை யடைந்து இதில் ஸ்நானம் செய்து தமது மலினம் நீங்கினர், அவ்வாறே வருஷந் தோறும் சித்திரை விஷுபுண்ணியகாலத்தில் இதிலாடித் தம் குற்றங்களைப் போக்கித் தமக்குரிய இடங்களை அடைவாராயினர்.

இவ்வண்ணம் நிகழுங்காலத்தில் மிதிலா நகரத்தின் அரசனுகிய இஷ்டரோம னென்பவன் புத்திரன் இல்லாமல் வருந்தி உதங்க

முனிவரால் ஏவப்பட்டு மனைவியோடு இந்த ஸ்தலத்தை அடைந்து தினந்தோறும் காருண்யர்மிர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பரம சிவனை வழிபட்டிருக்கும்போது, அவன் மனைவி கருப்பமுற்று, ஒரு சற்புத்திரனை ஈன்றாள். அரசன் மகிழ்ந்து சிலநாள் மருதவனே சருக்குப் பல பணிகள் செய்து வந்து பின்பு தன் நகரமடைந்து புத்திரனுக்குப் பதினறு பிராயமாகுகையில், காசிராஜன் புத்திரியை விவாகம் செய்யக் கருதி, தனக்குரிய எல்லாப் பரிவாரங்களோடும் காசி நகரமடைந்து, அந்நகரத்தரசனுல் அமைக்கப்பட்ட மாளிகையை மேவி,மறுநாட் காலையில் ஸ்நானம் பண்ணுதற்பொருட்டுக் கங்கைக்கரையை அடைந்து நின்றான். அப்போது ராசகுமாரன் முன்னதாக அக்கங்கையில் இறங்கினன். அந்தக் காலம் கங்காநதி இந்தக் காருண்யாமிர்த்தத்துக்கு வருங்காலமாதலால் அந்தக் குமாரனுடு அந்தர்வாகினியாக இந்தத் தீர்த்தத்தை அடைய அக்குமாரன் கண்டோர் ஆச்சரியமுறும்படி கரையேறி இந்நகரில் அரசாண்டுவந்த சோழராஜன் மனையில்அவனுல்ஆதரிக்கப்பட்டிருந்தனன். அங்கே இஷ்டரோமன் கங்கையில் இறங்கிய தன் புத்ரனைக் காணாமல் கவலையுற்று நிகழ்ந்ததை ஆகாயவாணியால் அறிந்து' உடனே புறப்பட்டுச் சில நாட்களில் இந்த க்ஷேத்திரத்தையடைந்து, தன் புத்திரனைக் கண்டு மகிழ்வுற்று அவனுடன் சென்று சுவாமி தரிசனம் செய்து விடைபெற்றுக் காசியையடைந்து அப்புத்திரனுக்கு விவாகம் செய்வித்துத் தனது ராஜதானியாகிய மிதிலாநகரம் சென்று அரசாண்டு வாழ்ந்திருந்தான்.

(2) **பாணதீர்த்தம்:** இது திருக்கோயிலுக்கு வடகீழ்த்திசையில் உள்ளது. இதற்குத் தேவதை இராமன். தீர்த்தபாலர் முருகக் கடவுள். ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் அரசு. இதில் வைகாசிமாசத்துப் பௌர்ணமியில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் பால், தயிர், நெய் என்பனவற்றைத் தானஞ் செய்தல் வேண்டும். இதில் பிதிர்களைக் குறித்துக் தர்ப்பணம் செய்தால் கயையில் செய்த பலன் உண்டாகும். முன்னம் தசரதசக்கரவர்த்தியின் ஆக்ஞைப்படி தண்டகாரணியத்தை அடைந்த இராமன் இந்த ஸ்தலத்தை அடைந்து, தனது நியமத்தை முடித்தற் பொருட்டுத் தீர்த்தமுண்டாக்கவேண்டி, ஒருபாணத்தைப் பூமியில் பிரயோகம் செய்ய உண்டானமையால் இது பாணதீர்த்தமென்று பெயர் பெற்றது. இதன் வடகரையில் இராமனால் அர்ச்சிக்கப்பட்டு எழுந்தருளியிருக்கிற பாணலிங்கத்தைத் தரிசிப்போர் வேண்டியவற்றைப் பெறுவர்,

(3) **பராசர தீர்த்தம் :** இது காருண்யாமிர்தத்துக்கு வட கிழக்கில் ஓரம்புவீழ்தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை வாயு. தீர்த்தபாலர் வைரவக்கடவுள். ரிஷி கண்ணுவர். விருக்ஷம் வேம்பு. இதில் மார்கழி மாசத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் நிலதானம் செய்தல் வேண்டும். பராசர முனிவர் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி இன்புற்றனர். இதனால் இத்தீர்த்தம் பராசரதீர்த்தமென்று பெயர் பெற்றது.

4. **சோம தீர்த்தம் :** இது காருண்யாமிர்த தீர்த்தத்துக்குக் கிழக்கே ஓரம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை சந்திரன். தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். விருக்ஷம் அடம்பு. இதில் சோமவாரத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். ஸ்நானம் பண்ணுவோர் கன்னிகாதானம், பாயசதானம், பலதானம் முதலியவற்றைச் செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் பஞ்சமகாபாதகம் (கொலை, பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை) முதலியன நீங்கும். இந்த க்ஷேத்திரத்திலுள்ள கனக தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி க்ஷயரோகம் ஒழிந்த சந்திரனால் உண்டாக்கப் பட்டதாதலின் இஃது இப்பெயர் பெற்றது.

(5) **வேறொரு சோம தீர்த்தம்:** இது கனக தீர்த்தத்துக்குத் தென்மேற்கே ஓரம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை ஸ்ரீசங்கரர். தீர்த்த பாலன் சந்திரன். ரிஷி துர்வாசர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் நெய், எள், வஸ்திரம் அரிசி, புஷ்பம், சந்தனம் என்பவற்றைத் தானம் செய்ய வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் இழிகுலத்தோருடைய ஆகார சேஷமும், ஸ்திரீ சேஷ முதலியனவும் புசித்ததனால் உண்டாகும் தோஷமும் நீங்கும். சந்திரன் முற்காலத்தில் பெரிய பாவமொன்றைச் செய்து அதனால் தனது கலை குறைதலைக் கண்டு மிகவும் கவலையுற்று இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக் கலை வளரப் பெற்று வாழ்வுற்றனன். இதனால் இந்தத் தீர்த்தமும் இப்பெயர் பெற்றது.

(6) **ருத்ரதீர்த்தம் :** இது மூலஸ்தானத்துக்குத் தெற்கே உள்ளது. இதன் தேவதை ஈசுவரன். தீர்த்தபாலன் கருடன். ரிஷி பிப்பிலர். விருக்ஷம் தமாலம். இதில் நீராடுவோர் தேன்; கம்பளம் இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் கொடிய வியாதிகள் எல்லாம் தீரும் ''யாம், சிவபெருமானை ஒத்திருக்கிறோம்'' என்று தருக்கிய உருத்திரர்

பலர் அவரால் சபிக்கப்பட்டு மீன் வடிவமுற்றுச் சில நாளைக்குப் பின் இந்தத் தீர்த்த சம்பந்த விசேஷத்தால் அம்மீன்வடிவம் நீங்கிப் பண்டை வடிவமுற்றுச் சிவபெருமானுக்கு அணுக்கர்களாயினர். இதனால் இந்தத் தீர்த்தம் உருத்திர தீர்த்தமென்று பெயர் பெற்றது. மற்றொரு காலத்தில் நிமிச்சக்கரவர்த்தியின் குமாரனான திருஷ்டகேது என்பவன் தன் புத்திரனுக்கு ஏற்பட்ட கண்டமாலை என்ற நோயைத் தீர்த்தற்குப் பலவாறு முயன்றும் அது தீராமையாற் கவலை கூர்ந்து, பூர்வ ஜன்மத்தில் செய்த சிவத்துரோகத்தால் அவனுக்கு அந்த நோய் வந்ததென்பதையும் இந்த ருத்ர தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் அது நீங்குமென்பதையும் காத்தியாயன முனிவரால் அறிந்தான்; பின்பு இந்த ஸ்தலத்தையடைந்து இதில் ஸ்நானம்' பண்ணுவித்தவுடனே கண்டமாலை இருந்த இடம் தெரியாமல் காய்ந்து போயிற்று. அரசன் கண்டு மகிழ்ந்து வெகு காலம் இந்த ஸ்தலத்திலேயே வாசஞ்செய்து தன் தேசத்தில் பாதியை ஸ்ரீ மகாலிங்கப்பெருமானுக்கு அர்ப்பணம் செய்து பின்பு தன் நகரை அடைந்து வாழ்ந்திருந்தான்.

(7) **பதும தீர்த்தம்:** இது இரண்டாவதான சோமதீர்த்தத்துக்குத் தென் கிழக்கில் உள்ளது. தேவதை ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி. தீர்த்தபாலன் நாகமுகன். ரிஷி பிரம்மா. விருக்ஷம் வில்வம், இதில் ஸ்நானம் பண்ணுவோர் தானியம், வெல்லம், உப்பு, பருத்தி இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதில் நீராடினால் எல்லாச் செல்வங்களையும் பெறலாம்; பாவங்கள் எல்லாம் நீருகும். முன்பு இதில் ஸ்நானம் பண்ணிய விசேஷத்தால் மகாபலி சக்கரவர்த்தி மூன்று உலகங்களையும் ஆண்டான்.

(8) **பாண்டவ தீர்த்தங்கள்:** இவை பதும தீர்த்தத்துக்குத் தெற்கே தரும தீர்த்தம், வீமதீர்த்தம் அர்ச்சுன தீர்த்தம், நகுல தீர்த்தம், சகாதேவ தீர்த்தம் என ஐந்தாக உள்ளன. இவற்றுக்குத் தேவதைகளும் தீர்த்தபாலகர்களும் முறையே சம்பு, நந்திதேவர் சுப்பிரமணியர், பிருங்கி, சண்டேசுரர் என்பவர்களாவர். ரிஷிகள், பரத்துவாசர், ஜதுகர்ணர், கௌதமர், மாண்டவியர், பயிலர் என்பவர்கள். விருக்ஷங்கள் நாவல், மா, நெல்லி, ஆல், வேம்பு என்பன. இவற்றில் ஸ்நானம் பண்ணுவோர் முறையே உதகும்பம், குடை, விசிறி, வஸ்திரம், பாதுகை என்பவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதில் ஸ்நானம் செய்தால் எல்லாச் செல்வமும் உண்டாகும்; நோயும் பகையும் நீங்கும். சூதாட்டத்தினால் தம் செல்வம் முழுவதையும் இழந்த பாண்டவர் ஐவரும் வனவாசம் பண்ணுகையில், கண்ணபிரானால் ஏவப்பட்டு இந்த ஸ்தலத்தை

அடைந்து சிவபிரானைத் தரிசித்து அப்போது உண்டான அசரீரி வாக்கின்படி இந்தத் தீர்த்தங்களை முறையே உண்டாக்கி, இவற்றில் பலநாள் ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்து பின்பு தமக்குரிய எல்லாச் செல்வங்களையும் அடைந்தனர். இதனால் இந்தத் தீர்த்தங்கள் பாண்டவ தீர்த்தமென்று பெயர் பெற்றன.

(9) **இந்திர தீர்த்தம்:** இது திருக்கோயிலுக்குக் கிழக்கே உள்ள சோமதீர்த்தத்துக்குத் தெற்கே இருக்கிறது. தேவதையும். ரிஷியும்இந்திரன். தீர்த்தபாலர் சந்திரசேகரர். விருக்ஷம் முள்ளிலவு. இதில் ஸ்நானம் பண்ணுவோர் இரும்பு, வெள்ளி, எருமை, பால், தாம்பூலம் இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இந்திரன் முன்பு வலாசுரனைப் போரில் வெல்ல மாட்டாமல் வஞ்சனையால் கொன்ற தோஷத்தையும், பகாசுரனைக் கொன்ற தோஷத்தையும் இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் அகற்றிப் பரிசுத்தனையினர். இதனால் இஃது இந்திரதீர்த்தமென்று பெயர் பெற்றது.

(10) **அக்கினி தீர்த்தம்:** இஃது இந்திரதீர்த்தத்துக்குத் தெற்கே மூன்றம்புவீழ் தூரத்தில் உள்ளது. தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்தபாலன் அக்கினிதேவன். ரிஷி கபிலர். விருக்ஷம் நெல்லி. ஸ்நானம் பண்ணுவோர் தயிர்,நெய்,கறவைப் பசு இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். க்ஷேத்திர பாலராகிய பைரவக்கடவுள் ஒரு தினம் உலாவி வருகையில் அவருடைய சூலம் அழுந்திய இடத்தில் உண்டானமையால், முன்பு இதற்குச் சூலகாதமென்று ஒரு பெயர் உண்டாயிற்று. அக்கினிதேவன் காண்டவவனத்திலுள்ள உயிர்களை எல்லாம் எரித்து வருத்தினபோது தனக்கு ஏற்பட்ட பாவத்தை இதில் ஸ்நானம் பண்ணிப் போக்கி உய்ந்தனன். அதனால் இது. பின்பு அக்கினிதீர்த்தமென்று பெயர் பெற்றது.

(11) **யம தீர்த்தம்:** இஃது அக்கினி தீர்த்தத்துக்குத் தென் மேற்கில் ஏழம்புவீழ் தூரத்தில் இருக்கிறது. இதற்குத் தேவதை அகோரமூர்த்தி. தீர்த்தபாலன் ரிடன், ரிஷியமன். விருக்ஷம்பாதிரி இதில் ஸ்நானம் பண்ணுவோர் எள், இரும்பு, பொன், பருத்தி, கம்பளம், எருமை, எருமைக்கடா இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் இம்மையில் குஷ்டநோய் முதலியனவும், மறுமையில் யமவாதையும் நீங்கும். இந்தத்தலத்தில் தவம் செய்த அம்பிகையின் தவச்சாலையைக் காத்திருந்த யமனால் உண்டாக்கப்பட்டதனால் இது யமதீர்த்தமென்று பெயர் பெற்றது. ஸ்தலத்தை அடைந்து இராகவனால் உண்டாக்கப்பட்டதாதலின்

மற்றொரு காலத்தில் அகஸ்திய முனிவர் சிவபெருமானது அகோர வடிவத்தைக் காண எண்ணி, இந்தத் தீர்த்தத்தின் கரையில் தவம் செய்து, தம் எண்ணப்படியே பரமசிவன் காட்சி கொடுத் தருளப் பெற்றுப் பின்னும் வேண்டிய வரங்களைப் பெற்றனர். அகஸ்திய முனிவருக்குக் காட்சி கொடுத்தவண்ணமே இதன் கரையில் சிவபெருமான் அகோர வடிவாக எழுந்தருளியிருக்கின் றனர். இதில் ஸ்நானம் பண்ணி இந்த மூர்த்தியைத் தரிசிப்போர் தம் இஷ்டசித்திகள் எல்லாவற்றையும் பெற்றுத் திருவருளுக்குப் பாத்திரராவார்.

(12) **நிருதி தீர்த்தம்** : இது யமதீர்த்தத்துக்கு மேற்கே மூன்று அம்புவீழ் எல்லையில் உள்ளது. இதற்குத் தேவதை விரூ பாக்ஷர். தீர்த்தபாலன் நிருதி. ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் கருங்காலி. இதில் ஸ்நானம் பண்ணுவோர் கூஷ்மாண்டம், உழுந்து எண்ணெய், எள்ளன்னம் முதலியவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதனால் ஜ்வரம் முதலிய நோயும், பைசாச முதலியவற்றால் உண்டாகும் வாதையும் நீங்கும். நிருதி இதனை உண்டாக்கி இதனால் யாவரும் நன்மையடையும் வண்ணம் சிவபெருமானிடத்து வரம் பெற்றனன். இதனால் இது நிருதி தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(13) **வருண தீர்த்தம்** : இது திருக்கோயிலுக்கு மேற்கே பதினைந்து அம்புவீழ் தூரத்தில் இருக்கிறது. இதற்குத் தேவதை சத்தியோஜாதமூர்த்தி. தீர்த்தபாலர் விநாயகக் கடவுள், ரிஷி பரத்து வாசர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் தாம்பூலம், குதிரை முதலியவற்றைத் தானம் செய்யவேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தில் எவ்வித நடுக்கங்களும் நீங்கும். திரிபுரத்து அசுரர் களால் மிகுந்த துன்பமுற்ற தேவர்கள் இந்தத் தலத்தை அடைந்து காருண்யாமிர்த முதலிய தீர்த்தங்களில் ஆடிப் பின்பு இந்த வருண தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி இதன் கரையிலிருந்து தவம் செய் தனர்; அப்போது ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி சத்தியோஜாத மூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுத்து. "தேவர்காள் சிறிதும் நடுக்க மடையவேண்டாம்" என்று அபயமளித்து, அம்முப்புரங்களையும் அப்பால் நகைத்தெரித்துத் தத்தம் பதவியை அடையும்வண்ணம் தேவர்களுக்கு அருள் புரிந்தனர். இந்தக் காரணத்தால் இதன் கரையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு நடுக்கந் தீர்த்த வரென்னும் திருநாமம் வழங்குகிறது, இந்தத் தீர்த்தம் வருணனால் உண்டாக்கப்பட்டதாதலின் வருணதீர்த்த மென்று பெயர் பெற்றது.

(14) **வாயு தீர்த்தம்** : இது வருண தீர்த்தத்துக்கு வடக்கே ஓர் அம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதன் தேவதை வாயு, தீர்த்த பாலர் முருகக் கடவுள். ரிஷி கண்ணுவர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் கன்னிகாதானம், சத்திரதானம், சுவர்ண தானம் இவற்றைச் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்தஸ்நானத் தால் வாயு சம்பந்தமான நோய்கள் யாவும் நீங்கும். கிருகலன் என்ற ஒரு பிராமணன் தன் குலாசாரம் முழுவதையும் விட்டொழிந்து பதிதன், பதிதன் என்று எல்லாராலும் தள்ளப்பட்டான்; பின்பு வேடனுகப் பிறந்து இந்தஸ்தலத்தை அடைந்து இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தான்; அப்பால் மகாபரிசுத்தனுகிச் சிவபதமடைந் தான். இது வாயுவினுல் உண்டாக்கப்பட்டதனுல் வாயு தீர்த்த மென்று பெயர் பெற்றது.

(15) **குபேரதீர்த்தம்:** இது வாயு தீர்த்தத்துக்குக் கிழக்கே ஐந்து அம்புவீழ் எல்லையில் உள்ளது. இதன் தேவதை குபேரன். தீர்த்தபாலன் கண்டாகர்ணன். ரிஷி மார்க்கண்டேயர்.விருக்ஷம் சண்பகம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் மோதகம், கரும்பு, சர்க்கரை, புஷ்பம், கோதுமை என்பவற்றைத் தானம் செய்தல் வேண்டும். குபேரன் இதை உண்டாக்கி இதில் ஸ்நானம் செய்வோர் எல்லாச் செல்வங்களையும் பெறும்பொருட்டுப் பரமசிவனிடத்து வரம் பெற்றான். இது குபேரனுல் உண்டாக்கப்பட்டதனுல் குபேர தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(16) **ஈசான தீர்த்தம்:** இது குபேர தீர்த்தத்துக்குக் கிழக்கே இரண்டு அம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்தபாலன் மாணிபத்திரன். ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் விளா. இதில் ஸ்நானம் பண்ணுவோர் ருத்ராக்ஷம், வஸ்திரம் இவற்றைத் தானம் செய்யலாம். இந்தத் தீர்த்த ஸ்நானம் நல்ல சந்தானத்தையும் சிவஞானத்தையும் அளிக்கும். மார்க்கண்டேய முனிவர் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினமையால் சிவஞானமுற்று யமவாதையொழிந்து தீர்க்காயுளையும் பெற்றனர். ஈசானனுல் உண்டாக்கப்பட்டமையின் ஈசான தீர்த்தமென்று இது பெயர் பெற்றது.

(17) **கிருஷ்ண கூபம்:** இது திருக்கோயிலுள் ஈசான திக்கில் கிருஷ்ணனுல் உண்டாக்கப்பட்டது. இதில் அஷ்டமி திதியில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இதனுல் கடன் கொடாமை முதலிய பாவம் நீங்கும்; எல்லா ஐசுவரியங்களையும் பெறலாம் வாமனமூர்த்திக்கு மூன்றடி மண் கொடுக்க உடன்பட்ட

மகாபலியைக் கொடாதே யென்று அசுரகுருவாகிய சுக்கிராசாரியர் தடுத்தமையால் தம் கண்ணை இழந்தார். பிறகு இதில் ஸ்நானம் பண்ணிக் கண்ணைப் பெற்றார். இது சிவபெருமானை அபிஷேகித்தற் பொருட்டுக் கிருஷ்ணனால் உண்டாக்கப்பட்டதனால் இந்தப் பெயர் பெற்றது.

(18) **கனக தீர்த்தம்:** இது மூலஸ்தானத்துக்கு வடமேற்கில் உள்ளது. பரமபதியாகிய சிவபெருமானது திருவிழிகளினின்றும் பெருகிய பொன்னிறமுள்ள கருணை வெள்ளம் தன்னிடத்துப்பாயப் பெற்றமையால் கனகதீர்த்தமென்று பெயர் பெற்றது. இது காகத்துக்குப் பொன்னிறமருளி உருத்திர வடிவம் அளித்தமை யாற் கனகதீர்த்தமெனவும் பெயர் பெறும். ஒருவன் இதை நோக் கினாலும், தொட்டாலும், எவ்வகைப் பாவத்தினின்றும் நீங்குவான். சந்திரன் குரு பத்தினியாகிய தாரையைப் புணர்ந்தமையால் தனக்குண்டான க்ஷயரோகத்தை இதிற் படிந்து மாற்றிக்கொண் டதுமன்றிப் பின்னும் சிவபெருமானுக்கு எட்டுத் திருமேனியில் ஒரு திருமேனியாகவும், இடக்கண்ணுகவும், முடியாகவும் விளங்கும் பேற்றையும் பெற்றான். துங்கபத்திரா நதி தீரத்திலுள்ள சப்தகோடீசுவரமென்னும் ஓர் அக்கிரகாரத்தில், சிவாராதனத்தில் சிறிதும் வழுவாத ஒரு பிராமணன் இருந்தான். அவன் ஒருநாள் ஆராயாமல் புழு வெட்டுண்ட மலரைக்கொண்டு, பூசித்ததனுல், இரண்டு கண்களையுமிழந்து வசிஷ்ட முனிவர் நியமனத்தால் இந்த ஸ்தலத்தை அடைந்து, இத்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக் கண்களைப் பெற்றனன். இவனே மறுமையில் விசுவாமித்திர முனிவனுகிப் பிரசித்தி பெற்றான்.

(19) **கங்கா கூபம்:** இது திருக்கோயிலுக்குள் மூலஸ்தானத் துக்கு வடகீழ்த்திக்கில் உள்ளது. இதன் வரலாறு முன்னே சொல்லப்பட்டது. இதைத் தொழுவோரும் புரோக்ஷணம் செய்து கொள்வோரும் எல்லாப்பாவங்களினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவலிங்கம், சிவிகை, ரதம், வெள்ளைக் குடை, சுவர்ணம் என்பனவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதற்கு வடதிசையில் அர்த்தநாரீசுவரரும், அக்கினி திக்கில் விபண்டக முனிவரும். கீழ்த்திசையில் பைரவரும். நிருதி திக்கில் பிரமாவும் இதைக் காப்பவர்களாக எழுந்தருளியிருக்கின்றனர். இதன் மேற்கில் மருத விருக்ஷம் உள்ளது. இதன் சமீபத்தில் பிதிர் க்களைக் குறித்து எந்த விசேஷ காலத்திலாயினும் தர்ப்பணம் செய்தின் ஒரு வருஷத்திலுள்ள பிதிர் தினங்களாகிய தொண்ணூற்று தினங்களிலும் காசிக்ஷேத்திரத்தில் செய்ததாகப் பாவித்து அப் பிதிர்கள் மகிழ்வார்கள்.

(20) **கருட தீர்த்தம்:** இது திருக்கோயிலுக்கு எதிரே சிறிது தூரத்தில் உள்ளது. கருடன் இதில் ஸ்நானம் செய்து பராக்கிரமம் பெற்றுத் தேவலோகத்தில் சென்று அங்குள்ள எல்லாத்தடைகளையும் அகற்றி அமிர்தம் கொணர்ந்து நாககணங்களுக்கு ஈந்து அந் நாககணங்களின் தாயாகிய கத்துருவுக்கு அடிமைப்பட்டிருந்த தனது தாயாகிய விநதையை அவ்வடிமைத்திறத்தினின்று மீட்டனன். இதனால் இது கருடதீர்த்த மென்னும் பெயர் பெற்றது.

(21) **வசுதீர்த்தம்:** இது யமதீர்த்தத்திற்கு வடகீழ்த்திக்கில் உள்ளது. இதில் சுக்கில பக்ஷத்தின் அஷ்டமி திதியில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இது வசுக்களால் உண்டாக்கப்பட்டமை யால் இப்பெயர் பெற்றது.

(22) **சூரிய தீர்த்தம்:** இது வசுதீர்த்தத்திற்கு வடக்கே உள்ளது. இதில் ஆதிவாரம் உதயகாலத்தில் ஸ்நானம் செய்தால் எல்லா நோய்களும் நீங்கும். இது சூரியனால் உண்டாக்கப்பட்ட தனால் இப்பெயர் பெற்றது.

(23) **மருத்துக்கள் தீர்த்தம்:** இது சூரியதீர்த்தத்துக்குப் பக்கத்தே இருக்கிறது. இதனால் வாதநோய் நீங்கும். மருத்துக்கள் இதில் ஸ்நானம் பண்ணி, கர்ப்ப வாசம் செய்யும்போது இந்திரனால் அறுபட்ட தம் குறையுடல் வளரப்பெற்றார்கள். இதனால் இஃது இப் பெயர் பெற்றது.

(24) **நரசிங்க தீர்த்தம்:** இது வருணதீர்த்தத்துக்குத் தெற்கே உள்ளது. இதில் நீராடுவதனால் குஷ்ட நோய் நீங்கும். இது நரசிங்கமூர்த்தியால் உண்டாக்கப்பட்டமையின் இப்பெயர் பெற்றது.

(25) **நந்தி தீர்த்தம்:** இது வருண தீர்த்தத்துக்குக் கிழக்கே உள்ளது. இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவஞானமடைவர். இது திருநந்திதேவரால் உண்டாக்கப்பட்டமையின் இப்பெயர் பெற்றது.

(26) **துரோண தீர்த்தம்:** இது வருண தீர்த்தத்துக்கு மேற்கே உள்ளது. இதில் துரோணாசாரியர் ஸ்நானம் பண்ணி அசுவத்தாமா என்னும் புத்திரனைப் பெற்றார். இதனால் இஃது இப்பெயர் பெற்றது.

(27) **இராகவ கூபம்:** இஃது அம்பிகையின் சந்நிதியில் உள்ளது. இராவணனைக் கொல்லுவதற்குச் சென்றபோது, இந்த

ஸ்தலத்தை அடைந்து இராகவனுல் உண்டாக்கப்பட்டதாலின் இஃது இப்பெயர் பெற்றது.இதில் ஸ்நானம் பண்ணுவோருக்குச் சத்துருபயம் நீங்கும்.

(28) **சூர தீர்த்தம்:** இது வருண தீர்த்தத்துக்கு வடக்கே பதினெட்டு அம்புவீழ் எல்லையில் உள்ளது. இது தேவர்களால் உண்டாக்கப்பட்டதனுல் இப்பெயர் பெற்றது. இது சிவப்பேற்றை அளிக்கும்.

(29) **மூனிதீர்த்தம்:** மூலஸ்தானத்துக்குத் தெற்கே உள்ளது. இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவகிருபைக்கு உரியவராவர்.

(30) **கச்சப தீர்த்தம்:** இஃது இந்த ஸ்தலத்துக்கு உத்தர திசையிலுள்ள மகாமகிமை பொருந்திய காவிரிநதியின்வடபுறத்தி லுள்ள ஒரு துறை. இதற்குத் தேவதை வாமதேவர். தீர்த்தபாலர் வீரபத்திரர். ரிஷி கச்சபர். விருக்ஷம் மா. இதில் ஸ்நானம் செய்வோர் எள்ளன்னம், சிவிகை, தானியங்கள் முதலியவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதில் ஸ்நானம் பண்ணுவோர் மறுமையில் அரசராவர். கச்சப முனிவர் நாள்தோறும் இதில் ஸ்நானம் பண்ணிப் பெருந்தவம் செய்து, ஸ்ரீ மகாலிங் கப்பெருமான் வாம தேவமூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுக்கத் தரிசித்து ''எம்பெருமானே! இந்தத் திருவுருவத்தோடு இவ்விடத்தே எக் காலத்தும் எழுந்தருளியிருத்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். பரமசிவன் அவ்வாறே எழுந்தருளி யிருக்கின்றனர். அம்மூர்த்தியைத் தரிசித்துப் பேறு பெற்றவர் அநேகர். கச்சப முனிவர் தவம் புரிந்து பேறு பெற்றதனுல் இது கச்சபதீர்த்தம் என்ற பெயர் பெற்றது.

(31) **கௌதம தீர்த்தம்:** இது கச்சப தீர்த்தத்துக்கு மேற்கே ஓரம்புவீழ் தூரத்தில் உள்ளது. தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். இதில் ஸ்நானம் பண்ணுவோர் பூமி, கறவைப்பசு இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். அகல்யை இந்திர சம்பந் தத்தால் தனக்கு நேர்ந்த தோஷத்தை இதில் ஸ்நானம் செய்து நீக்கிப் புனிதமானுள்.

(32) **கல்யாண தீர்த்தம்:** இது காவிரியின் தென்புறத்தே, மூன்றம்புவீழ் அகலம் கிழக்கு மேற்கெல்லை உள்ள ஒரு துறை. இதன் தேவதை மத்தியார்ச்சுனேசுவரர். தீர்த்தபாலர் திருநந்திதேவர். ரிஷி உரோமசர். விருக்ஷம் அரசு. இதில் ஸ்நானம் செய்வோர் பசு, பொன் முதலியவற்றை அந்தணர்களுக்குத் தானம்

செய்தல் வேண்டும். இஃது எல்லாத்தீர்த்தங்களிலும் உத்தமமாகச் சொல்லப்படுகிறது.

இந்த ஸ்தலத்தில் காசிபர் முதலிய முனிவர்களுக்குச் சிவ தத்துவத்தை உபதேசித்த ஸ்ரீ அகஸ்திய மகாமுனிவருடைய பூர்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு ஏகநாயகராகிய பரமசிவன் திருவுளங்கொண்டிருப்பதை உமாதேவியார் அறிந்து, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி விதிப்படியே பூரகர்மா, ஆதிசக்தி பூசை இவற்றைச் செய்து அவரை விவாகம் செய்து கொண்டார். அகஸ்திய முனிவர் அந்தத் திருமணக் கோலத்தைத் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார். இதனால் இது கல்யாண தீர்த்தமென்று வழங்கப்பட்டது.

ஆகாயத்தில் விமானத்தில் எழுந்தருளியுள்ள நித்திய கல்யாண சூபிகளாகிய பார்வதி பரமேசுவரர்கள் இந்த மகா நதியினுடைய இரண்டு தீரங்களிலும், ஐந்து யோசனை அளவாக இருந்து தவம் செய்யும் முனிகணங்களின் சிரத்தா பக்திகளையும், தவச் செயல் களையும் கண்டு மகிழ்வுறுகையில், அவர்கள் திருவிழிகள் பொழிந்த ஆனந்தபாஷ்பம் இவ்விடத்தே வீழ்ந்தமையால், முன்னரே கல்யாண வடிவினதாகிய காவிரியிலுள்ள இந்தத் துறை கல்யாண தீர்த்தமென்று பெயர் பெற்றதாகக் கூறுவதுமுண்டு. இதையல்லாமல் தன்னிடத்து ஸ்நானம் பண்ணினோர் எல்லாமங்களங்களையும், முக்தியின்பத்தையும் எளிதினடையச் செய்வதாலும் இது கல்யாண தீர்த்தமென்று சொல்லப்படும். இதில் விதிப்படி ஸ்நானம் பண்ணிக் கரையிலிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபம் பண்ணுவோர் சிவசாயுஜ்யத்தை அடைவர், கின்னரர் முதலிய தேவகணத்தினர் யாவரும் தினந்தோறும் இதில் ஸ்நானம் பண்ணித் தத்தம் நியமங்களை முடித்துச் சிவார்ச்சனைசெய்து எப்பொழுதும் மகிழ்ச்சி யோடு இருப்பர். இதில் ஸ்நானம் பண்ணுதற்கு எல்லாக் காலமும் உரியவையாயினும் சோமவாரம் விசேஷம்; அதிலும் ஆதிவாரம் விசேஷம்; அதிலும் அமாவாசை விசேஷம்; அதிலும் சூரியோபராகம், சந்திரோபராகம் மிகவும் விசேஷமாம். எல்லா வற்றிலும் மிகச்சிறந்தது தைப்பூசம். அதிலும், குருவாரத்துடன் கூடிய புஷ்யநாள் மிகவும் விசேஷம். இந்தக் குரு புஷ்ய தினத்தில் கங்கை முதலிய எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இதில் வாசம் செய்கின்றன. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் கோடி ஜன்மங்களில் செய்த பாவம் நீங்கும். இந்தக் காரணத்தால் இந்தக் கல்யாணதீர்த்தத்துக்குப் புஷ்யதீர்த்தமென்றும் ஒரு பெயர் உண்டு' இதில் ஸ்நானம் பண்ணிப் பேறு பெற்றோர் பலர். அவருட் சிலர் சரித்திரம் வருமாறு :

(i) மகா பரிசுத்தனாகிய பரிட்சித்து மகாராஜனைக் கடித்துக் கொன்றமையால் தக்ககன் தனக்குண்டான தோஷத்தை இதில் ஸ்நானம் பண்ணி நீக்கி உய்ந்தனன்;

(ii) கலிபுருஷனால் அளவற்ற துன்பமுற்ற நள மகராஜன் இதில் ஸ்நானம் பண்ணிப் பின்பு தன் மனைவியையும், மக்களையும், தேசத்தையும் அடைந்து வாழ்ந்தனன்;

(iii) தம்மைக் கண்டு சூதமுனிவர் எழவில்லை என்று பலராமர் சினந்து அவரைக் கொன்ற தோஷத்தை இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் போக்கினர்;

(iv) தைப்பூசத்தில் இதிற் படிந்தமையாலே பகீரதன் பெறுதற்கரிய ஆகாய கங்கையைப் பூமியில் வருவித்துத் தன் முன்னோரை நற்கதியடைவித்தனன்;

(v) மிகக் கொடியோனாகிய ஒருவன் சிவராத்திரி புண்ணிய காலத்தில் இதில் முழுகித்திருக்கோயிலிற் சென்று சிவத்திரவியத்தை அபகரித்துக் கொண்டு வெளியே வந்தபொழுது மரணமடைந்தான், உடனே அவனைக் கிங்கரர்கள் யமனிடம் கொண்டு போய் விட யமன் அவனை நோக்கி, "நீ சிவராத்திரியில் கல்யாண தீர்த்தத்தில் முழுகினதால், எமது தண்டனைக்கு உரியனல்லன்; கைலையங் கிரிக்குச் செல்வாயாக" என்று விட்டு விட்டனன்;

(vi) விதேக நாட்டிலே காபிலமென்னும் ஊரிலுள்ள ஒரு பிராமணன் சில ஸ்திரிகளையும் சில பாலர்களையும் கொன்று சம்பாதித்த ஆபரணங்களைக் கொண்டு ஐந்து ஸ்திரீகளை விவாகம் செய்து கொண்டான். அவனுடைய பாவ மிகுதியால் அந்த ஐவரும் இறந்த பின்பு கள்விற்போர் குலத்தினளாகிய ஒருத்தியைச் சேர்ந்திருந்தான். ஒரு குழந்தையைப் பெற்று அவளுமிறக்க, "இதுவன்றோ இவள் மரணத்துக்குக் காரணமாயிற்று" என்று அக் குழந்தையைக் கிழித்து ஆற்றில் விட்டனன். பின்பு அப்பாவங்களால் பைத்தியம் பிடித்து முயலகன் (வலிப்பு) முதலிய கொடிய வியாதிகளை அடைந்து, எல்லாராலும் இழிவுபடுத்தப்பட்டு மிகவும் துன்பமுற்று, ஒருநாள் தற்செயலாய் இத்தலத்தை அடைந்து வீதியில் நோயினால் வசமற்றுக் கிடந்தனன். அன்றைய தினம் தைப்பூசமாதலால், புஷ்யதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி வருவோர்களுக்குள்ளே சில பிராமணர் இவனைக் கண்டு இரங்கி எடுத்தபோது, அவர்கள் கையிரம் பட்டதனால் இவன் பித்த மயக்க

மற்று உணர்ச்சியுற்று அவர்களை வணங்கிச்சென்று புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பரிசுத்தனாகி மருதவாணரைத் தரிசித்துக் கொண்டு சில நாளிலிருந்து முக்தி பெற்றான்.

(33) சேஷ தீர்த்தம் : இது காவிரியின் தென்புறத்திலுள்ள ஒரு துறை, ஆதிசேஷன் ஒரு காலத்தில் இந்தப் பூமியைத் தாங்கும் வன்மை இல்லாதவனாகி மெலிந்து இந்த ஸ்தலத்தையடைந்து இத்துறையிற் படிந்து வன்மை பெற்று மகிழ்ச்சியுற்றுச் சென்றான்' இதனால் இஃது இப்பெயர் பெற்றது.

(34) கந்த தீர்த்தம் : இது சேஷ தீர்த்தத்துக்குக் கிழக்கே உள்ளது. தேவகண்டகனாகிய சூரபன்மாவை வதம் செய்தற் பொருட்டு வீரபாகு தேவர் முதலிய தம்பிமாரோடும், லட்சம் வீரரோடும், இரண்டாயிரம் வெள்ளம் பூதகணங்களோடும், தேவர்களோடும் எழுந்தருளிய குமாரக்கடவுள் இதில் ஸ்நானம் பண்ணி மருதவனேசுரரைத் தரிசித்து அருள்பெற்று வீரமகேந்திர மடைந்து வெற்றி பெற்றனர். இதனால் இத்துறை கந்த தீர்த்தம் என்று பெயர் பெற்றது,

(35) ஐராவத தீர்த்தம்: இது காவிரியின் தென்புறத்திலுள்ள ஒரு துறை. ஐராவதம் இத்துறையில் படிந்து துர்வாச முனிவர் சாபத்தால் தனக்குண்டான காட்டானை வடிவம் நீங்கப் பெற்றது. இதனால் இத்துறை ஐராவத தீர்த்தமென்று பெயர் பெற்றது. இதற்கு முன்னமே இது விநாயக தீர்த்தமென்று வழங்கப்பட்டது.

வரகுண பாண்டியர் வழிபட்டது

பாண்டியநாட்டிலே மதுராபுரியில் வைதிக நெறியும் சைவ நெறியும் தழைத்தோங்க அரசியற்றிய வரகுண பாண்டியர் ஒருநாள் காட்டுக்குச் சென்று வேட்டையாடி விரைந்து திரும்பி வருகையில் சூரியாஸ்தமனமாயிற்று. அப்போது வழியில் அயர்ந்து கிடந்த ஒரு பிராமணன் அவர் ஏறிய குதிரையினால் மிதிக்கப்பட்டு இறந்தான். அரசர் அதனை அறியாமல் தம் நகரத்தை அடைந்தார். பிரமஹத்தி அவரைப் பற்றி மிகவும் வருத்தியது. அதனால் அவர் மனம் நொந்து பல தான தருமங்களைச் செய்து வந்தார். ஒன்றினாலும் அது தீரவில்லை. பின்பு தமது குலதெய்வமாகிய சோமசுந்தர மூர்த்தியைப் பிரார்த்தித்து வந்தார். ஒருநாள் சிவபெருமானுடைய திருவருளினாலே, ''வரகுண! இன்னும் சிலநாளில், நீ மத்தியார்ச்

சுனம் அடைவை; அப்போது இது தீரும். கவலைப்பட வேண்டாம்'' என்று ஆகாயத்தில் ஓர் அசரீரி உண்டாயிற்று. மன்னர் அது கேட்டு மகிழ்ச்சி யடைந்தார். சிலநாட்களுக்குப் பின் சோழராஜன் யுத்தம் செய்வதற்கு வர, அரசர் அவனுடு யுத்தம் செய்து அவனைத் துரத்திக்கொண்டே வந்து இந்த ஸ்தலத்தை அடைந்தார். அடைந்த தினம் குருபுஷ்யமாதலால் மிகவும் மகிழ்வுற்று விதிப்படி புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அளவிறந்த தானங்களை அந்தணர் களுக்கு அளித்தார். பின்பு காருண்யாமிர்தத்திலும் நீராடித் திருக் கோயிலுக்குள்ளே செல்கையில் அப்பிரமஹத்தி நடுநடுங்கி வெளியே நின்று விட்டது. அரசர் மகிழ்ந்து விதிப்படி சுவாமியையும் அம்பிகையையும் தரிசித்து இந்த ஸ்தலத்திலே என்றும் வசித்தல் வேண்டும் என்ற குறிப்புடையவராகிச் சிவபெருமான் கட்டளைப்படி மேலைவாயில் வழியே சென்று, திருவீதியில் ஒரு பக்கத்தில் ஒரு மாளிகை கட்டுவித்துக் காலந்தோறும் சென்று சுவாமி தரிசனத் தோடு நூறு அசுவமேதப் பிரதட்சிணமும் செய்துகொண்டு அம் மாளிகையில் தங்கி அரசியற்றுவாராயினர்; பின்பு மேலைக் கோபுரத்தைத் தம் பெயரால் கட்டுவித்துத் திருக்கோயிலுக்கு வடக்கே சோமசுந்தரக் கடவுளுக்கு ஓர் ஆலயம் இயற்றுவித்து இன்னும் பற்பல பணிகள் செய்து வந்தார்.

இப்படியிருக்க ஒரு தினம் சென்று நமஸ்காரம் செய்யும்போது மருதவாணர், ''வரகுண! கைலையங்கிரியின் கொடுமுடியை யொப்ப ஒரு மதில் கட்டுவித்து அதனை வலஞ்செய்க; அதைச் செய்யுமொரு பிரதட்சிணம் ஆயிரம் பிரதட்சிணத்துக்கு ஒப்பாகும். நமக்கு மிக உவப்பாம்'' என்றருளக் கேட்டு அரசர் அவ்வாறே புரிவித்து வலம் வருவாராயினர்.

பின்னொருநாள், கொடிய கள்வனொருவனைச் சிரச்சேதம் செய்தற்பொருட்டுக் காவற்காரர்கள் இறுகக் கட்டிச்கொண்டு செல்லுகையில், அவன் நெற்றியில் திருநீறு விளங்குவதைக், கண்டு, கட்டை அவிழ்த்து விடுவித்து அவனுக்கு வேண்டும் பொருளை அளித்து நயமொழி புகன்று விடுத்தனர்.

வேறொரு நாள், இரவிலே நரிகள் ஊளையிடுதலைக் கேட்டு, இவை ஆலவாயானை அழைக்கின்றன வென்று மனமுருகிப் பிடித்து வருவித்து நல்ல வஸ்திரங்களால் அவற்றைப் போர்த்து விடுத்தனர்.

மற்றொரு நாள் ஒரு தடாகத்தில் தவளைகள் சப்திப்பதைக் கேட்டு, ''இவை ஹரஹர என்று சப்திக்கின்றன'' என்று கருதி

இரத்தினங்களையும் பொன்களையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தனர்.

ஒருநாள் திருமஞ்சன தைலத்துக்காக உலர்த்திய எள்ளைக் கோயில் வேலைக்கார னொருவன் எடுத்து உண்பதைக் கண்டு, ''நீ இதை உண்ணலாமோ?'' என்றனர். அவன் 'எள்ளுண்டகடனைத் தீர்க்க வேண்டும்' என்னும் பழமொழிப்படி ''மருதவாணர்க்கு மறுபிறப்பிலும் அடிமையாய் வருதற்பொருட்டு உண்கின்றேன்'' என்று கூற, ''அப்படியாயின், எனக்கும் இதிற் சிறிது கொடு'' என்று சொல்லி அவன் எச்சில் எள்ளை வாங்கி யுண்டனர்.

அப்பால் ஒருநாள், தலையோடொன்று இந்த க்ஷேத்திர எல்லையில் கிடத்தலைக் கண்டு மனமுருகி அதனைத் தமது மலர்க்கரத்தால் எடுத்துக் கண்ணீர் வெள்ளத்தாலாட்டி, ''உம்மைப்போல் தமியேனும் இந்த ஸ்தலத்து எல்லையில் என் தலைகிடக்கப்பெறுவேனே?'' என்று மனமுருகினர்).

பின்னொருநாள், திருக்கோயிலின் முன்னே நாய்மலம் கிடத்தலைக் கண்டு, ''இதை எடுப்பவர்க்கு என் தேசத்தில் காற்பங்கு கொடுப்பேன்'' என்று எண்ணி முதற்பிரதட்சிணமும் அஃது எடுக்கப்படாமையால், ''அரைப்பங்கு கொடுப்பேன்'' என்று இரண்டாம் பிரதட்சிணமும், ''முக்காற் பங்கு கொடுப்பேன்'' என்று மூன்றும் பிரதட்சிணமும், ''முழுமையும் கொடுப்பேன்'' என்று நான்காம் பிரதட்சிணமும் செய்தார். அதுவோ எடுக்கப்படவில்லை. அது கண்ட அரசர் ''என் தேசம் எனக்கே உரியது'' என்று சொல்லி அதைத் தமது திருக்கரத்தினால் எடுத்துப்புறத்தே எறிந்தார்

வேறொருநாள், திருவீதிப்பிரதட்சிணம் செய்யும்போது, பழுத்த வேப்ப மரங்கள் வெயிலில் நிற்றலைக் கண்டு, ''அந்தோ!. சிவலிங்கத்தை யொத்த திருவுருவங்கள் பலவற்றைத் தாங்கிய இவை வெதும்புகின்றனவே'' என்று இரங்கி அம்மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி கட்டுவித்தனர்.

பின்னர் ஒருநாள், தாம் விவாகம் செய்து கொண்ட சோழராஜன் புத்திரியை இரவில் அந்தப்புரத்தில் கண்டு, ''இவள் எம்பெருமானுக்கே உரியவள்'' என்று நினைத்து, உடனே ஒருவரும் அறியாவண்ணம் அழைத்துக்கொண்டு ஆலயத்தை அடைந்து திருமுன் நின்று, ''மருதவாணு! இப்பெண்ணை அங்கீகரித்தருள்க.'' என்று பிரார்த்தித்துக் கதவைத் தட்டி அழைக்கவே சிவபெருமான்

கதவைத் திறந்து, ''வரகுண! வருக'' என்றழைத்தார். அப்போது பாண்டியர், ''ஸ்வாமி! இப்பெண்மணியை அங்கீகரித்தருள்க!'' என்று பிரார்த்திக்க, எம்பெருமான், வலக்கை மாத்திரம் வெளியே தெரிய அப்பெண்ணை உட்கொண்டருளினர். அரசர் அதுகண்டு ''இந்தக் கை மாத்திரம் எளியேனுல் தீண்டப்பட்டதென்றே நீக்கியருளினீர்?'' என்று மனம் தளரவே, சிவபெருமான், ''உனது அன்பை உலகத்தார் அறியும்படி இக்கையை நானே அங்கீகரிப்போம்'' என்று கட்டளையிடுதலும் அரசர் மகிழ்ந்து வெளியே வந்தார். திறக்கப்பட்ட கதவுகள் முன்போலவே மூடப்பட்டிருந்தன. அரசரையும் தேவியையும் மன்னியிலுள்ளோர் தேடிப் பின்பு அரசரை மட்டும்கண்டு, '' தேவியர் எங்கே? '' என்று வினவ அவர், ''மகாலிங்க மூர்த்தியினிடத்தில் இருக்கிறார்'' என்றார். அவர்கள் ஆச்சரியமடைந்து பூசிப்பவர்களோடு உள்ளே புகுந்து மகாலிங்கப்பெருமான் முடிமீதுகை விளங்குதலைக் கண்டார்கள். சிவபிரான் உடனே அக்கையை உள்ளே வாங்கியருளினார். அது கண்ட அரசர் மசிழ்ச்சி யடைய, மற்றவர்கள் அச்சமும் அதிசயமும் அடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்.

இவ்வாறு வரகுணர் பல நாள் இந்நகரில் வசித்துக்கொண்டிருந்து மருதவாணர் கட்டளையின்படி தமது மதுராபுரியை யடைந்து சோமசுந்தரமூர்த்தி சிவலோகம் காட்டியருளத் தரிசித்துப் பலநாள் அர்சாட்சி செய்து சிவபதமடைந்தனர்.

ஹம்ஸத்துவசன் பேறு பெற்றது.

சோழநாட்டில் உறையூரிலே நற்குணநற்செய்கை இயல்பாகவே அமைந்து அரசாண்ட ஹம்ஸத்துவசச் சோழனென்னும் ஒருவன் இருந்தான். அவன் கங்காஸ்நானம் பண்ணும் விருப்பங் கொண்டான். தான் சென்று படிந்து வரக்கூடாமையை நினைந்து வருந்தி, தனக்கு மித்திரனுகிய பிராமணன் ஒருவனை அழைத்து ''நீர் என்பொருட்டுச் சென்று கங்கா ஸ்நானம் பண்ணி அந்தப் பலனை எனக்குத் தருக'என்று பிரார்த்தித்தனன். அந்தப் பிராமணன் ''என் மனைவி இளையளாதலாலும் வேறு துணை இல்லாமையாலும் நான் செல்வதற்கு இயலாது'' என்றனன். அரசன், ''உமது மனைவியை நான் பாதுகாப்பேன். நீர் கவலை அடையவேண்டாம் என்று உறுதிமொழி கூறிப்போகச் செய்து, தான் சொன்னபடியே அவன் மனைவியைப் பாதுகாத்து வந்தனன். காசிக்குச் சென்ற அந்தணன் கங்கா ஸ்நானம் செய்து, காவடி தாங்கி உறையூரை

யடைந்து மறுநாட் காலையில் அரசனைக் காணலாமென்று எண்ணி, அன்றிரவில் தன் மனைக்குச் சென்று காசிக்குப் போய்வந்த வரலாறு களை மனைவிக்குக் கூறிக்கொண்டிருந்தான். இங்கே இப்படி யிருக்க முன்போலவே பாதுகாத்தற் பொருட்டு இவ்வந்தணன் வீட்டுப் புறம்பே வந்த அரசன், 'இவ்வீட்டிற்குள் ஆடவர் சப்தம் ஏது?' என்று ஐயுற்று, அந்நியனொருவன் வந்துள்ளான் எனத் துணிந்து கடுங்கோபம் கொண்டு சுவரேறி வீட்டினுள்ளே சென்று தன் கையிலிருந்த வாளாயுதத்தால் அவனைக் கொன்று, பின்பு மித்திரன் என அறிந்து வருந்தினன். பிரமஹத்தி அவனைப்பற்றியது, அப்பால் அரசன் அதனால் அளவில்லாத துன்பமுற்று, அதனைப் போக்குவதற்கு வழி தெரியாமல் தடுமாறிச் சில பெரியோருடைய கட்டளையின்படி ஸ்தல யாத்திரை செய்துகொண்டே வந்தான். அப்படிவரும்போது இத்தத் தலத்தை யடைந்து வருண தீர்த்தத்தில் நீராடி அங்குள்ள ஸ்ரீகற்பகரேசரால் தன் நடுக்கம் முற்றும் ஒழிந்து, பின்பு புஷ்யதீர்த்தத்திலும் காருண்யாமிர்த்தத்திலும் ஸ்நானம் செய்து கீழைக் கோபுர வாயில் வழியாகத் திருக்கோயி லுக்குள்ளே செல்லுகையில் பிரமஹத்தி கோபுரத்துக்கு வெளியே நின்றுவிட்டது. பின்பு அரசன் உவப்புற்றுச் சுவாமி தரிசனம் செய்து பல பணிகள் இயற்றிப் பல வரங்கள் பெற்றுத் தன்னகரை அடைந்து வாழ்வுற்றான்.

வீரசேனன் பேறு பெற்றது.

தாம்பிரபர்ணி தீரத்திலுள்ள ஒரு நகரின் அரசனுகிய வீரசேனன் என்பவன் வேட்டையாடும் போது மிருகத்தைக் குறித்து எய்த பாணங்களுள் ஒன்று குறி தப்பிச் சென்று ஒரு பிராமணனைக் கொன்றது. பின்பு அரசன் பிரமஹத்தியால் பிடியுண்டு வருந்தி இந்தத் தலத்தை அடைந்து புஷ்ய தீர்த்தத்தில் நீராடித் திருக்கோ யிலுக்குள்ளே செல்லுகையில் பிரமஹத்தி நீங்கி முன்னவற்றேடு கூடியது. பின்பு அரசன் சுவாமி தரிசனம் செய்து தனது நகரத்தை அடைந்தான்.

சித்திரகீர்த்தி பாண்டியன் மகப்பேறு பெற்றது.

பாண்டிய நாட்டில் மதுராபுரியில் முன்னம் அரசாண்ட சித்திர கீர்த்தி பாண்டியன் என்பவன் புத்திரன் இல்லாமையால் மனம் வருந்தினன். சாபாலி முனிவரால் தனது முற்பிறப்பின் வரலாற்றை

அறிந்து, அவரால் ஏவப்பட்டு அவன் இந்தத் தலத்தை அடைந்து காருண்யாமிர்தத்திலும் புஷ்ய தீர்த்தத்திலும் ஸ்நானம் பண்ணி மருதவனேசரைத் தரிசித்துச் சில நாளில் நல்ல புத்திரனைப் பெற்றான்; பின்பு பல நாள் இந்தத் தலத்தில் வசித்துக்கொண்டேயிருந்து மருதவாணருக்குப் பங்குனித் திருவிழாச் செய்வித்துத் தன் நகரை அடைந்தான்.

இன்னும் ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் ஒருகாலத்தில் பொதியிலிருந்த உலர்ந்த மீன்கள் உயிர் பெற்றுத் துள்ளித் தடாகத்தில் குதிக்கும்படி அருளினர், செங்கல்லைப் பொன்னுக்கினர். தனக்குப் புத்திரன் இல்லாமையால் பொற்பதுமை ஒன்று செய்வித்து அதனைப் புத்திரனுகப் பாவித்துப் பாராட்டிக்கொண்டிருந்த ஒரு சோழன் பிரார்த்திக்க, அந்தப் பிரதிமைக்கு உயிரளித்து, உயிர்பெற்ற அந்தப் பொன்னுருவச் சோழனுக்கு உடனே முக்தியளித்து அச்சோழனுக்கு மகப்பேறு அளித்தார். ஒரு சிவயோகியினுடைய ஆகாரசேஷம் புசித்து வந்த நாயொன்றைப் பூர்வ ஞானத்தோடு அரச கன்னிகையாகப் பிறக்கும்படி செய்து முக்தியளித்தார். தம் குருமரண காலத்தில் தமது யில் எழுதிய மஹா வாக்கியத்தை ஒரு கழைக்கூத்தப் பெண் ஓலையில் எழுதிக் காதில் போட்டுக்கொள்ள, அதனைப் பெறுதற் பொருட்டு அவளுக்குப் பல நாள் அடிமை வேலை செய்து, அதனைப் பெற்ற திரியம்பகரென்னும் ஒரு வேதியர் பெருமான் இந்தப் புஷ்ய தீர்த்தத்தில் நீராடத் தொடங்கியபோது வேதியர்கள், ''ஸ்வாமி! இவர் தைப்பூசமாடல் தகுமோ!'' என்று வினவ, ''திரியம்பகன் தைப்பூசம் ஆடல் தகும் தகும் தகும்'' என்று மூன்று முறை மொழிந்தனர். மருதவாணரது திருவிளையாடல்கள் இன்னும் பல உள்ளன.

பிரதக்ஷிண மகிமை.

முதலாவது அசுவமேதப் பிரதக்ஷிணம். இது திருக்கோயிலினது வெளிமதிலின் உள்ளதாக வலம் வருதலாம். இதன் மகிமைகளைப் பின் வரும் பாடல்களால் அறிக:

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

அதினுள் திசைவலம் வருவோர் பெறுவர்க
ளணிநீ டிலகிடு முயர்செல்வம்

மதிநன் குறுவர்கண் மகவுற் றிடுவர்கண்
மருவார் தமைவென் றிடுவார்கள்
சதிர்பெற் றிடுவார்கள் பிணியற் றிடுவர்கள்
சகமெச் சுறுவர்க ளிவையன்றிப்
பதிமொன் றவணுற மதனுக் கியல்புறு
பரிமே தப்பல னடைவார்கள். (1)

மகரா லயம்வரு தருமிப் புவிதனை
வலம்வந் திடினுறு வதுமெய்தும்
புகழ்வா ரணமுக விறைவே லவன்மறை
புகல்வோ ரநுமதி முனமெய்தி
மிகுமா தரவொடு செயினெய் திடுபயன்
விரைவெய் திடும்வெங் கொலையாதி
இகழ்பா தகவினை யவர்செய் தனவுள
யாவுந் தெருமர லுடனேகும். (2)

வருநா ளொருமண் டலமரை மண்டல
மருவொரு கான்மண் டலவெல்லை
ஒருநா லிருபதின் மேலா றிருதொகை
யோரே ழெனுமூன் றினுளொன்று
கருதா வவரவர் வன்மைக் கிசைதரு
கணிதம் பெறவந் திடல்வேண்டும்
ஒருவா றதில்வல னுற்றோர் கூவந்
துழிவந் துழியறை கிற்பாமால். (3)

கையா மிணைமலர் குவியா மனமொடு
கருணைத் திருமுக மலர்வெய்த
மெய்யா லொருவலஞ் செய்வா ரதணிடை
வினைநீத் துளமெண் ணியவெய்திப்
பையா டரவணி யெம்மா னுறைதரு
பதியுற் றுறைவர்கண் மகிழ்வோடு
தையா மதியினில் விழவிற் புரிதரு
தகையோர் பெறுபலன் புகல்வார்யார்? (4)

இந்தப் பிரதக்ஷிணம் செய்து பேறு பெற்றோருள்ளே சிலர் சரித்திரம் வருமாறு:

[1] சூரியகுலத்தரசனுகிய யுவனுசுவன் மகப்பேறு கருதித் தனது குருவாகிய வசிஷ்ட முனிவரோடு இந்தத் தலத்தை யடைந்து புத்திரகாமேஷ்டி யாகம் செய்து தன்மகிஷிவிக்குக் கருப்பமுண்டாதற் பொருட்டு அம்முனிவர் மந்திரித்து வைத்த தீர்த்தத்தைத் தாகமிகுதியால் அறியாமற் குடித்துக் கருப்பமடைந்து கருப்பசிசு வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டமையால் மூர்ச்சை யடைந்து விழுந்து, ஆயுள்வேதியர்கள் கிழித்த அவ் வயிற்றைப் பொருத்தித் தைத்துப் பல மருந்துகளோக் கொடுக்க மூர்ச்சைதெளிந்து, அவ்வயிற்றுப்புண் ஒன்றுலும் தீராமையால் இந்த அசுவமேதப் பிரதக்ஷிணம் செய்து, புண் ஆறப்பெற்றுப் பின்பு வசிஷ்டமுனிவரோடும், குழந்தையோடும், மற்றவர் களோடும் தனது நகரத்தை அடைந்து இன்புற்றிருந்தான்.

[2] மேற்கூறிய யுவனுசுவனுடைய வயிற்றைக் கிழித்து வெளிப் பட்ட மாந்தாதா, தனக்குத் திறைகொடாத கலிங்கதேசத் தரசனேடு போர் செய்து புறங்கொடுத்தோடிய அவ்வரசனேக் கொன்று பழியடைந்து சோர்வுற்று வசிஷ்டமுனிவரால் அறிவுறுத் தப்பட்டு இந்தப் பிரதக்ஷிணம் செய்து, மருதவாணர்க்கு வசந்த மகோத்ஸவத் திருக்கல்யாணம் புரிவித்து, விகிநில முதலியவற்றை ஈந்து, சிவபிரான் ஆகாசவாணியால், ''அரசனே! உனது பாவம் நீங்கியது. நீ நகரத்தையடைந்து அரசு புரிக; பின்பு நமதுலகடைக!'' என்று கூறியருளக் கேட்டுத் தனது நகரை அடைந்து, பலநாள் அரசாண்டு சிவாஞ்ஞையின்படி சிவலோக மடைந்து .பேரின்பமுற்றான்.

(3) தொண்டை நாட்டில் ஸ்ரீ காஞ்சிபுரத்தில், முன்னே அர சாண்டுவந்த வசுமானென்னும் ஓர் அரசன் கங்காஸ்நானத்துக்குச் சென்றான். அப்போது அவனது நாட்டைப் பகைவர் அபகரித்துக் கொண்டனர். அரசன் கேட்டுக் கவலையுற்றுச் சாபாலி முனிவரை யடைந்து தனது குறையைக் கூறினன். அம்முனிவர், ''அசுவமேதஞ் செய்'' என்று கூற, அரசன், ''பொருளில்லாமையால் என்னுல் இயலாது'' என்றனன். பின்பு அம்முனிவர், '' திருவிடைமருதூரை அடைந்து அசுவமேதப் பிரதக்ஷிணம் செய்வாய்'' என்றனர். அரசன் அப்படியே இந்தத் தலத்தை அடைந்து சிவபிரானே வணங்கி விதிப்படி இந்தப்பிரதக்ஷிணம் செய்து பராக்கிரமம்

உடையவனுகிப் பகைவரை வென்று அவர் நாட்டைக் கவர்ந்து, அதனே மருதவனேசருக்கு அர்ப்பணம் செய்து மார்கழி மாதத்து உற்சவமும் நன்கு புரிவித்துத் தன் நகரடைந்து வாழ்ந்து முடிவில் சிவகதியுற்றன்.

இரண்டாவது கொடுமுடிப் பிராகாரம்: இஃது அசுவமேதப் பிரதக்ஷிணத்துக்கு உள்ளே உள்ளது. பரமசிவன் கட்டளைப்படி வரகுண பாண்டியரால் கட்டுவிக்கப்பட்டது. இதனைப் பிரதக்ஷிணம் செய்தால் கைலாசகிரியைப் பிரதக்ஷிணம் செய்தலே ஒக்கும். தேவகணத்தினர் யாவரும் தினந்தோறும் இதைச் சூழ்ந்து வருவார்கள். இதனைப் பிரதக்ஷிணம் செய்வோர்க்குப்பிணி, தரித்திரம், பாவங்கள் முதலியன நீங்கும்; ஆரோக்கியம், செல்வம், புண்ணியங்கள் முதலியன ஓங்கும். ஞானம் வளரும்; அஞ்ஞானம் தளரும். புகழ் கூடும், இகழ் ஓடும்.

மூன்ருவது பிரணவப்பிராகாரம்: இது கொடுமுடிப்பிராகாரத்துக்கு உள்ளே இருக்கிறது, இது பிரணவ பிராகாரமென்பதற்கு அடையாளமாக இப்போதும் நாதோற்பத்தி வழங்கிவருகின்றது.

நாரத முனிவர் வழிபட்டது.

நாரத மகாமுனிவர் ஒரு காலத்தில்சத்திய லோகத்தைஅடைந்து பிரமதேவரை வணங்கி, "ஸ்வாமி! உலகத்திலே சிவஸ்தலங்கள் எவ்வளவு உள்ளன? அவற்றுள் சிறந்தன எவை? அருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கவே, பிரமதேவர் மகிழ்வுற்று, "அநேக கோடி ஜன்மங்களிலே செய்த பெரும் புண்ணியத்தாலேயே கிருபாசமுத்திரமாகிய பரமசிவனது மகிமைகளைக் கேட்பதற்கு ஒருவருடைய மனம் விரும்பாநிற்கும்; ஆதலால் நீர் பெரும் புண்ணியம் உடையீர்; சொல்லுதலால் நானும் பெரும்புண்ணிய முடையேன்" என்று பின்வருமாறு சொல்லுகிறர்:

"முனிபுங்கவ! பூமியினிடத்து அளவில்லாத சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள்ளே ஏழாயிரத்து நானூறும், அவற்றுள் ஆயிரத்தெட்டும், அவற்றுள் நூறும், அவற்றுள் அறுபத் தெட்டும், அவற்றுள் இருபத்துநான்கும், அவற்றுள் எட்டும் சிறந்தனவாம். அவ்வெட்டு ஸ்தலங்களாவன: திருக்கைலாயம், ஸ்ரீஅருணசலம், ஸ்ரீகாசி, திருக்காளத்தி, திருவாலவாய், ஸ்ரீசிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர். இந்த எட்டில் திருவிடைமருதூர் ஆதிசக்தியின் இருதயகமல மத்தியமாய் விளங்காநிற்கும்.

அநாதியாகிய அந்தத் தலத்தை உமாதேவியாருக்குக் காண்பித்தற்பொருட்டு மகாதேவர் திருக்கைலாயத்தினின்றும் முன்னொரு காலத்தில் எழுந்தருளினர். அவர் வருமுன்னமே அந்தக் கைலையங்கிரி அந்தத் தலத்தில் மருதவிருட்சமாகி நின்றது. அந்த விருட்சத்தைத் தரிசித்தால் கைலாயத்தைத் தரிசித்த பலன் உண்டாகும். அதனை வலம்செய்தாலும், பணிந்தாலும், பூசித்தாலும் கைலைக்குச் செல்லுதல் போலாம். அந்த மத்தியார்ச்சுனத்தில் பிறந்தாலும், இறந்தாலும், கணப்பொழுது தங்கினாலும், அதன் மகிமைகளைப் படித்தாலும், அதைத் தரிசித்தாலும், நினைத்தாலும் ஒருவன் எல்லாத் துன்பங்களினின்றும்நீங்கிச் சிவசாயுஜ்யத்தைஅடைவான். அன்றியும் யஜமானன், மாதா, பிதா, குரு இவர்களுக்குச் செய்த அபராதங்களும் அந்தத் தலத்தை அடைதலால் நீங்கும். முன்னம், வரகுண பாண்டியரையும் ஹம்ஸத்துவசச் சோழனையும் வேறோர் அரசனையும் பற்றி மிகவும் வருத்திய கொடிய பிரமஹத்திகள் அந்தத்தல விசேஷத்தால் நீங்கின. அதில் உள்ள புண்ணிய தீர்த்தங்களுக்கு அளவில்லை. அவற்றில் செய்த அணுவளவு புண்ணியமும் மேரு அளவாக வளரும். முற்காலத்தில் விபண்டகமுனிவர் பல முனிவர்களோடும் இருபத்துநான்கு சதுர்யுகம் அந்த ஸ்தலத்தில் தவம் செய்து சிவ சாயுஜ்யத்தை அடைந்தனர். பின்பு நானும் அந்தத் தலத்தை யடைந்து ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியைப் பூசித்துப் பங்குனித் திருவிழாவும் நடத்தினேன். என்னைப்போன்ற அநேக பிரம்மாக்களும், அவர்களைப் பெற்ற அநேக அச்சுதர்களும் அந்தத் தலத்தை அடைந்து பசுபதியைத் தரிசித்துத் தத்தமக்கு வேண்டிய பயன்களைப் பெற்றார்கள். இன்னும் அந்தத் தலத்தில், அசுவமேதப் பிரதக்ஷிண மென்று ஒன்றுண்டு. அதில் பிரதக்ஷிணம் செய்தால் குருடன் கண் பெறுவான். வறியன் செல்வமடைவன். குஷ்டம், க்ஷயம் முதலிய நோய்களெல்லாம் நீங்கும். பைசாசங்கள் எல்லாம் ஏங்கும். அந்தப் பிரதக்ஷிணம் செய்து பேறு பெற்றோர் பலர். அதன் பெருமையை அநேகம் நாவுடையோர் ஒருவாறு சொல்லலாமேயன்றி நான் சொல்லுதற்கு உரியனோ? அங்கே எழுந்தருளிய ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின் திரவியங்களுள் அணுவளவேனும் ஒருவன் அபகரிப்பானாயின், அவன் எல்லா நரகத் துன்பங்களையும் அடைந்து பின்பு நூறு சண்டாள ஜன்மம் எடுத்து, அதன் பின்பு நூறு நாய்ப் பிறப்புற்று அப்பால் புழுவாய்ப் பிறப்பான், இது நிச்சயம், நிச்சயம் இதற்கு ஒரு கதை சொல்வேன்:

"சம்பகாவதி என்னும் பெயரையுடைய ஒரு நகரத்திலுள்ள அதிசீலனாகிய விநதனென்னும் வேதியன் ஒருவனுக்குப்

பாபத்தால் தேவவிரதனென்று ஒரு புத்திரன் பிறந்தான். விநதன் உரிய காலங்களிலே அவனுக்கு ஜாதகர்மாதிகளை முறையே நடத்தி வேதாத்தியயனம் செய்வித்து வருகையில், ஒருநாள் தான் சொல்லியதைப் புத்திரன் உட்கொள்ளாமையால் அவனைக் கோபித்தான்; உடனே தேவவிரதன் தகப்பனைப் புடை பெயரா வண்ணம்தூணோடு சேர்த்து இறுகக்கட்டிவிட்டு, அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப் பல கீழ் மக்களோடும் கூடிப் பல விடங்களில் களவு செய்து பின்பு திருவிடைமருதூரை அடைந்தான். அடைந்த தினம் திருவிழாக்காலமாதலால், ஸ்ரீ ஏகநாயகப் பெருமான் உமாதேவி யோடு எல்லா ஆபரணங்களும் அணிந்து, திருவீதியில் எழுந் தருளினார். அப்போது யாவரும் தரிசனம் செய்து கண்படைத்த பயனை அடைந்தார்கள். அந்தத் தேவவிரதன் சுவாமியினுடைய திருமேனியிலும் அம்பிகையின் திருமேனியிலும் உள்ள திருவா பரணங்களை எல்லாம் நோக்கி, 'இவை கிடைத்தால் எவ்வளவோ செய்து கொள்ளலாம்; இவற்றை மட்டும் அபகரிப்பது விசேஷ மன்று; இன்னும் சேமத்திலுள்ள ஆபரணங்களை எல்லாம் கவர்ந் தால் எவ்வளவோ நன்மை அடையலாம்; இவற்றைக் கவர்வதற்கு இவ்வாலய விசாரணையை எப்படியாவது பெறவேண்டும்' என்று தன்னைச் சூழ்ந்து நின்ற திருடர்களுக்கும் தூர்த்தர்களுக்கும் கூறி, அதிகாரம் பெறுதற்பொருட்டு அரசனை அடைந்து அவனை மகிழ்வித்து, 'இந்தக் கோயில் விசாரணை செய்வதற்கு எனக்கு அதிகாரம் கொடுத்தால் மிகவும் செவ்வையாக நடத்துவேன்' என்று கூறி, அதிகாரம் பெற்றான். அந்தத் தலத்துத் திருவீதியிலுள்ள மனை ஒன்றிலே தங்கியிருந்து எல்லா ஆபரணங்களையும் ஒருங்கே கவர்ந்து போவதற்குச்சமயம் பார்த்துக்கொண்டே அதிகாரம்செய்து வரும்நாளில், அவனுக்கு வலப்புறத்தில் ஒரு பிளவைஉண்டாயிற்று. அதில் ஈ மொய்யாதபடி ஆலயத்துள்ளே ஒரு திருவிளக்கிலிருந்த நெய்யில் ஒருதுளியை எடுத்து, அப்பிளவையின் மீது தடவித் தன் மனைக்குச் செல்லுகையில் ஒரு பாம்பு கடிக்க அவன் இறந்தான். அக்கொடிய பாவியை யமகிங்கரர் பிடித்துக்கட்டிக்கொண்டு போய், இருபத்தெட்டுக் கோடிநரகிலும் வீழ்த்தி, வெகுகாலம் வருத்திய பின்பு அவன் நூறு சண்டாள ஜன்மத்தை அடைந்து பின்பு நாய்ச் சன்மம் நூறடைந்து, பின்பு அந்தத் திருவிடைமருதூரில் மலப் புழுவாய் ஜனித்துக் கிடந்தனன். அந்தக் காலம் பூச விழா வாதலால் பூசத்துறையில் ஸ்நானம் செய்த ஒரு பிராமணன் கூட்டத்தில் செல்ல முடியாமல் ஒதுங்கியபோது அவன் பாதம் புழுவின்மேற் பட்டது. படவே அந்தப் பாதம் பூச தீர்த்த சம்பந்தமுள்ளதாதலால், அவன் அப்புழு வடிவம் ஒழிந்து தேவர்

உருவம் பெற்று, அரம்பையர் இருபுறத்தும் சாமரை வீச, விமான மேறி வானுலகடைந்து அளவற்ற இன்புற்று வீற்றிருந்தான்.

"ஆதலால், சிவத்துரோகம் பொல்லாது! பொல்லாது!" என்று கூறக் கேட்டு நாரதமுனிவர், "ஸ்வாமி! அந்தத் தலத்தை அடையும் முறையையும், அடைந்து அங்கே செய்வனவற்றையும் ஆங்குள்ள தீர்த்தங்களில் நீராடும் கிரமத்தையும் கூறியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்; பிரமதேவர் அவற்றை முறையே கூறக்கேட்டு விடைபெற்று இந்தத் தலத்தை அடைந்து விதிப்படி எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணிச் சுவாமி தரிசனம் செய்து பூச விழாவும் தரிசித்துப் பேராத பேரானந்த முற்றனர். இந்த மகா சரித்திரத்தைக் கேட்ட சவுனகாதி முனிவர்கள் சூத முனிவரோடும் இந்த ஸ்தலத்தை அடைந்து ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியையும், ஸ்ரீ பிருகத் சுந்தர குசாம்பிகையையும் வழிபட்டுப் பெரும் பேறு பெற்றனர்.

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

"போற்றலுறு மருதவனப் புராண மென்னப்
புகலிதனைப் படிப்பவர்கள் கேட்போர் யாரும்
மாற்றரிய வினையினெடு பகையை வென்று
மன்னுநெடுஞ் செல்வமொடு மகவு மெய்த்தித்
தேற்றமுறு புவியினிடை நீடு வாழ்ந்து
திகழுறுவிண் ணுலகில்வள ரின்பந் துய்த்துச்
சாற்றலுறு பரஞான மருவி யீசன்
சரணபங் கயநிழல்வீற் றிருப்பர் மன்னே."

மத்தியார்ச்சுன மான்மியம்

முற்றும்

வஸந்தோத்ஸவத்
திருக்கல்யாண வரலாறு

ஸ்ரீ அகஸ்தியமுனிவர், இந்த க்ஷேத்திரத்தில் முன்னம் காசீபர் முதலிய முனிவர்களுக்குச் சிவதத்துவத்தை உபதேசித்து, அவர்களோடு அம்பிகையைக் குறித்துத் தவம் செய்து அருள்பெற்று,

அந்த அம்பிகையோடும் முனிவர்களோடும் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருக்கையில், சிவபிரான் ஏகநாயக மூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சிகொடுத்து, ''உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருள, முனிவர்கள் யாவரும் தத்தமக்கு வேண்டியவாறே வரங்களைப் பெற்று உய்ந்தார்கள். அகஸ்தியமுனிவர், ''ஸ்வாமி! தேவரீரைப் பிரியாமல்விளங்கும் உமாதேவியார், பர்வதராசனுடைய வேண்டுகோளின்படி அவனுக்குப் புத்திரியாக அவதரித்துத் தவம் செய்தபோது காட்சி கொடுத்து, உமாதேவியாரைத் திருக்கல்யாணம்செய்து, ஸ்ரீஸ்கந்ததேவரைப் பெற்று, அவரால் ஹரிப்பிரமாதி தேவர்களுக்கு நேரிட்டிருந்த துன்பங்களை மாற்றிப் பாதுகாத்தருளினீர். அவ்வாறே இந்தத் தலத்திலும் தேவரீருடைய ஆக்ஞையினாலே பிரிந்து தவம் புரிந்து காட்சிபெற்ற உமாதேவியாரைத் திருமணம் செய்து காட்சியளித்து அடியேங்களைக் காத்தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அப்படியே வைசாக மாசத்தில் உத்தர நட்சத்திரத்தில் அம்பிகையைத் திருக்கல்யாணம் செய்து அகஸ்திய முனிவருக்கும் மற்ற முனிவர்களுக்கும் காட்சி கொடுத்தருளினார்.

பின்பு சூரிய குலத்தரசனாகிய மாந்தாதா என்பவன் பெரியோர்கள் சொல்ல அறிந்து, வஸந்தோத்ஸவத்தின் ஆறாம் திருநாள் உத்தரநட்சத்திரத்தில் இந்தத் திருக்கல்யாணத்தை விதிப்படி புரிவித்துப் பெறும்பேறு பெற்றான்.

இந்தத் திருக்கல்யாண மகோத்ஸவத்தை வேதாகம விதிப்படி பிரபலமாய் நடத்தவேண்டுமென்று வேதவித்துக்களாகிய அந்தணர்களும், ஆகம நிபுணர்களாகிய ஆதிசைவர்களும் விரும்பியபடி திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து 16-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீசுப்பிரமணிய தேசிக சுவாமிகள் கட்டளைப் பிரகாரம், காசிவாசியும், மேற்படி ஆதீனத்துக் காறுபாறுமாகிய சுப்பிரமணிய சுவாமிகளால் சிவதேசமுள்ள சில கனவான்களுடைய உதவியால் கலியப்தம் 4986-இல் நிகழ்ந்த தாரணஞ முதல் வஸந்தோத்ஸவத்தின் ஐந்தாம் திருநாள் அம்பிகை தவமும் ஆறாந் திருநாள் உத்தரநட்சத்திரத்தில் திருக்கல்யாணமும், ஒன்பதாந் திருநாள் வரையினதாகிய மூன்று நாளும் ஔபாஸனாதி கிரியைகளும், பத்தாம் திருநாள் விசாகத்தில் ஔதும்பர பூசை முதலியனவும் தீர்த்தமும் அன்றிரவில் வெள்ளிரதக் காட்சியும் நடத்தப்பட்டு வருகின்றன.

பூமேவு மனுகுலத்து மாந்தாதா வெனுங்குரிசில்
புரைய விந்நாள்
தூமேவு மிடைமருத வாணருக்குத் திருமணத்தைச்
சுருதி யோடு
பாமேவு மாகமஞ்சொல் விதிப்படியே புரிவித்துப்
பயன்பெற் றுய்ந்த
மாமேவு துறைசையிற்சுப் பிரமணிய முனிவர்பிரான்
வாழ்க மன்னே!

மத்தியில் சில வருஷங்கள் இந்த மகோத்ஸவம் நடை பெறாமல் நின்றிருந்தது. ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியினிடத்து விசேஷ ஈடுபாடுள்ளவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்தில் 20-ஆம் பட்டத்தில் இப்போது எழுந்தருளியிருப்பவர்களுமான ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் 1938-ஆம் ஆண்டு முதல் முன்னிலும் மிக்க சிறப்புடன் இவ்விழாவை நடப்பித்துப் பக்தகோடி களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்துவருகிறார்கள்,

35. இடையாறு நடுநாடு

திருவெண்ணெய் நல்லூருக்கு வடமேற்கு 3 மைல் தொலைவில் உள்ளது இத்தலம். மாம்பழப்பட்டு இரயில்வே நிலையத்திலிருந்து தென்மேற்கு 4½ மைல் தொலைவு வழியில் பெண்ணையாற்றை யும் மலட்டாற்றையும் கடக்க வேண்டும். சுந்தரர் பாடிய தலம்.

சுகர் பூசித்ததலம்
சுவாமி :- இடையாற்றீசுரர்
அம்பிகை :- சிற்றிடைநாயகி
தீர்த்தம் :- பெண்ணைநதி

சித்தலிங்கமடம் இடையாற்றுக்கு மேற்புறம் பெண்ணையின் தென் கரை இடையாறு (பிறிதொன்று)

அறந்தாங்கிக்குத் தென்மேற்கில் 2 மைல் தொலைவில் உள்ளது சேலம் ஜில்லாவில் மணிமுத்தா நதிக்கரையில்ஓர் இடையாறு உண்டு.

ஏரிடை யாறு இடையா றப்பர்
நாரி சிற்றிடை நாயகி சிற்றிடை - (சிவ.)
முந்தையூர் முதுகுன்றம் குரங்கணின் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றிடைவான் திருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமான் இடையா றிடைமருதே. (சுந்தரர்)

36. இந்திரநீலப்பருப்பதம் வடநாடு

சென்னையிலிருந்து கல்கத்தா சென்று அங்கிருந்து பகல்பூர் தார்பங்கா, ரக்சூல், பிக்கதொரி செல்லும் பாதையில் ரக்சூலி வாவதுஅல்லது பிக்கதொரியிலாவது இறங்கி, அங்கிருந்து சுமார் 60 மைல் தொலைவிலுள்ள நேபாள தேசத்திலுள்ள காட்மாண்டு தலைநகர் செல்ல வேண்டும். அங்குப் **பசுபதி நேபாளம்** என்று பெரியபுராணத்தில் திருமூலர் வரலாற்றிலுள்ள பசுபதி கோயிலைத் தரிசித்து, அங்கிருந்து வடகிழக்கில் மலைமேலேறி ஏறக்குறைய 100 மைல் தொலைவு சென்றால் இந்திரநீலப்பருப்பதம் செல்லலாம். இது கடல் மட்டத்தின் மேல் சுமார் 18,000 அடி உயரமுள்ளதெனக் கணிக்கப்பட்டுள்ளது. கேதாரம், கயிலாயம் செல்வது போலவே பனிக்கட்டியின் மீது செல்ல வேண்டிய இடங்களுமுண்டு. ஒருமலை நாகப்படம் போல் கவிந்து ஈசானதிக்கை நோக்கியிருக்கிறது. கட்டப்பட்ட கோயில் இல்லை. ''ஸ்தலம் சுயம்பு'' ஆகிய மலையின் பகுதியே. குழிவான கீழ்ப்பகுதியே பீடம். இந்தக் கீழ்ப்பகுதி நீல மயமான கற்பாறை. இதற்கு வடமேற்கில் ஒரு பள்ளத்தாக்கில் ஓடுவது நீலகங்கா என்னும் சிறிய ஆறு. ஈசன் சந்நிதிக்குச் சிறிது வடகிழக்கில் பச்சை நிறமுள்ள சுயம்பு கற்பாறையே சுயம்பு அம்பிகைசுவாமியின் அருகில்அர்த்தசித்திர வடிவில் ஒருபாறையில் இந்திரன். இத்தலத்தில் சுவாமியை இந்திரன் பூசித்தான். சம்பந்தர் காலத்தியிலிருந்தே பதிகம் அருளினார். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

வடநாட்டிலுள்ள ஐந்து தலங்களுள் ஒன்று.

சுவாமி :- நீலாசலநாதர்
அம்பிகை :- நீலாம்பிகை
தீர்த்தம் :- இந்திர தீர்த்தம்

நீலப் பருப்பதம் நீலா சலநாதர்
நீலாம் பிகையெனும் நிமலி நன்னீலம். (சிவ.)
குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்
திலகும் மான்மழு வேந்தும் அங்கையன்
நிலவும் இந்திர நீலப் பர்ப்பதத்
துலவி னுன்அடி யுள்க நல்குமே. (திருஞா 2-ஆம். திரு.)

37. இராமனதீச்சுரம் சோழநாடு

இத்தலம் நன்னிலம் இரயில்வே நிலையத்திலிருந்து 4½ மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்கு மேற்கில் திருக்கண்ணபுரம் என்னும் விஷ்ணுதலம் இருக்கிறது. இராமனதீச்சுரமும்கண்ணபுரமும் சேர்ந்து இருக்கின்றன. திருப்புகலூருக்குக் கிழக்கேஒரு மைலில் உள்ளது இராமர் பூசித்த தலம்.

சுவாமி :- இராமநந்தீசுவரர், இராமநாதேசுவரர், இராமலிங்கேசுவரர்.
அம்பிகை :- கருவார்குழலியம்மை, சூடிகாம்பாள், சரிவார்குழலி
தீர்த்தம்: சூரியபுட்கரணி, சூரிய பூசை.

நந்தி பூசித்த தலம். சோமாஸ்கந்தர். அம்பிகை கையில் ரிஷபம் இருக்கிறது. துர்வாச முனிவர் தபசு செய்த இடம். சிவலிங்கம் சுப்பிரமணியர் விசேடம்.

இராமநந்தீசுவரம் என்பதன் மரூஉ. சுவாமி கையில் நந்தி குழந்தையின் உருவமாக இருக்கிறர்.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

துதிரா மனந்தீச் சுரம்ராம நாதர்
குதிகொளும் சரிவார் குழன்மணி கங்கை. (சிவ.)
சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளும் அவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்குமன் இராமன தீச்சரமே. (திருஞா. 1ஆம் திரு)

38. இராமேசுவரம் பாண்டிநாடு

இரயில்வே நிலையம் உள்ள கடற்கரைத் தலம்.ஒரு தீவில் இருக்கிறது. காசிக்குச் செல்கின்றவர்கள் கங்காதீர்த்தம் கொண்டு வந்து இராமநாதேசுவரருக்கு அபிஷேகம் செய்து காசியாத்திரையை முடிப்பார்கள். 36 தீர்த்தங்கள். இங்குச் சிவராத்திரியை ஒட்டி 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. ஆடி அமாவாசையை ஒட்டி 10 நாட்கள் அயநோற்சவம் நடைபெறுகிறது. இராமன் இங்குச் சிவபூசை செய்தார். ஆஞ்சநேயர் கொண்டுவந்த ஒரு லிங்கமும் உண்டு; அவர் காசி விசுவநாதர் என்று வழங்கப் படுகிறார். இராமேசுவரம் - தேவை என்றும் வழங்கும்.

நிரம்பவழகியதேசிகர் என்னும் புலவர் சேதுபுராணம் என்ற நூலை இயற்றியுள்ளார். இராமேசுவரம் பிரபந்தத் திரட்டு என்ற நூலும் உண்டு. திருஞானசம்பந்தரும், அப்பரும் பாடிய தலம்.

சுவாமி :- இராமநாதேசுவரர்
அம்பிகை :- மலைவளர்காதலி, பர்வதவர்த்தினி
அம்பிகைப் பற்றித் தாயுமானவர் பாடியுள்ளார்.
தீர்த்தம் :- தநுஷ்கோடி

சேதுமாதவர் சந்நிதி இராமலிங்கம், லவன் லிங்கம், விபிஷண லிங்கம்-கற்பூர சோதியில் ஸ்படிக ரூபமாக விளங்குகின்றன.

தூயரா மீச்சுரம் ராமநா தரென்
தாய்பரு வதவர்த் தனிதனுக் கோடி. (சிவ.)

பாசமும் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக்கலர்கள் கொண்டு மதியினுல் மால்செல் கோயில்
நேசமிக் கன்பி னுலே நினைமின்நீர் நின்று நாளும்
தேசமிக் கான்இ ருந்த திருஇ ராமேச் சுரமே
(திருநா. 4. திரு.)

அலைவளர் தண்மதி யோடய லேயடக் கியுமை
முலைவளர் பாகம்மு யங்கவல் லமுதல் வன்முனி

இலவளர் தாழைகள் விம்முகா னல்இரா மேச்சுரம்
தலவளர் கோலநன் மாலயன் தானிருந் தாட்சியே.
(திருஞா. 3ஆம். திரு.)

இத்தலத்தைப் பற்றிக் கூறும் பிற தேவாரங்கள் :
இராமேச்சுரத்தின்ப னீயே யென்றும் - நெய்த்தானம் - திருநா

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடும் **சேதுபந்தனம்** செய்து சென்று புக்கு — வலம்புரம் - திருநா.

எழிலாரிராச சிங்கத்தை **யிராமேச்** சுரத்தெமெழிலேற்றை-
பொது. திருநா.

இடைமருதீங்கோ **யிராமேச்** சுரம் - பொது. திருநா.

அந்தண் கானலீடுதிரை **யிராமேச்சுர** மென்றென்று
ஏத்தி யிறைவனுறை சுரம்பலவு மியம்புவோமே - பொது. திருநா.

ஈழநாட்டு மாதோட்டந் தென்னுட்டிராமேச்சுரம் - பொது. சுந்தரர்

இராமநாத சுவாமி கோயில் கீழவாசல்
அநுமார் மண்டபம்

இந்த மண்டபத்தின் கீழைக்கோடியில் வடபுறத்தில் அநுமார் ஆலயம் இருக்கின்றது. இவர் சந்நிதி தெற்கு நோக்கியது. அநுமார் திருமேனி முற்றும் செந்நிறமாய் இருக்கிறது. இதற்குக் காரணம் கோயில் திட்டத்தில் சனிக்கிழமை தோறும் சாத்தப்படும் ஈயச்செந்தூரத்தோடு விராய வெண்ணெயும் என்று தெரிகிறது. வெண்ணெய் இருபங்கும், செந்தூரம் ஒரு பங்கும் சாத்துவது வழக்கமாம். அநுமாரால் நர்மதையிலிருந்து கொண்டுவரப்பட்ட இரண்டு லிங்கங்களுள் ஒன்று அநுமார் கோயிலின் மேற்குமடவிளாகத்தில் உள்ள அறையில் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார். இவர் பெயர் மாரூதீசுவரர் (ஆத்மலிங்கம்)

அநுமார் இரண்டு லிங்கங்கள் கொண்டு வருகையில், நாரதர் "நீ பூஜை பண்ணுதற்கு ஒரு லிங்கம் வேண்டாமா? என்று கூற அநுமார் மீண்டும் சென்று வேறொரு லிங்கம் கொண்டுவந்தமையால் பூசித்தற்குக் காலம் தாழ்த்தது. இராமர் அநுமார் வர்க்காணாமை

யால் சீதை வண்டலாடுமிடத்தில் மணலால் பிடித்துவைத்த லிங்கத்தையே முனிவர்கள் வாக்கின்படி பூசித்தார். பூசித்தமையை அறிந்து தாம்கொண்டுவந்த லிங்கம் பூசிக்கப்படாமையை நினைந்து பூசித்த லிங்கத்தை விசுவரூபம் கொண்டு வாலைச் சுற்றி இழுக்குங் காலத்தில் வால் அறுந்து விட்டது. இழுத்ததின் குறிப்பும், கோபத் தின் குறிப்பும் தான் மேனி சிவத்தற்குக் காரணம் என்று சொல்லு கிறார்கள்.

இலக்குமி தீர்த்தம்

இது அநுமார் மண்டபத்தின் தென்பக்கத்தில் உள்ளது. படித் துறை நன்றாயிருக்கிறது. இத்தீர்த்தத்தின் மேல்கரையில் திருமகள் ஆலயம் இருக்கின்றது. வடிவம் மகாலட்சுமி வடிவம் விநாயகரும், இரண்டு லிங்கங்களும், அம்பிகை வடிவமும் கோயிலின் கீழ்ப்புற மண்டபத்தில் உள்ளன.

அநுமார் மண்டபத்தின் மேற்புறத்தே கிழக்கு மேற்காக அதை யொட்டி ஒரு பெரிய மண்டபம் இருக்கின்றது. அது அனுப்பு மண்டபம் என்று சொல்லப்படும். சுவாமி அங்கே வந்து வெளியே செல்லுவதும், திரும்ப அங்கே வந்து காட்சியளித்து உள்ளே செல்லு வதும், வழக்கமாதலின் அப்பெயர் பெற்றது.

மேல்புறம் கீழைக் கோடித் தூணில் அகோர வீரபத்திரர் எழுந் தருளியிருக்கின்றார். அதே தூணில் மேற்புறத்தில் காளி உருவம் இருக்கிறது. அதற்கு நேர் தெற்குத் தூணில் அகோர வீரபத்திரர் இருக்கிறார். இம்மண்டபத்தின் இருபுறத்தூண்களிலும்(எவ்வெட்டுத் தூண்களிலும்) பல வடிவங்கள் உள்ளன. அவை இம்மண்டபம் கட்டுவித்த பிரபுக்களுடைய உருவங்கள் என்று சொல்லுகிறார்கள்.

அனுப்பு மண்டபத்தின்மேல் புறமுள்ள பிராகார மண்டபம் சொக்கட்டான் மண்டபம் என்று சொல்லப்படும். இது இராமநாத புரம் சம்ஸ்தானம் பதினொன்றாம் பட்டத்தில் இருந்த காத்த தேவ ராகிய முத்து விஜய ரகுநாத சேதுபதி (1729-1795) முதல் பதினைந்தாம் பட்டமாகிய முத்துராமலிங்க சேதுபதி முடிய ஐந்து பட்டத்தார் காலங்களில் முத்திருளப்ப பிள்ளையால் கட்டி முடிக்கப் பெற்றது. இம்மண்டபம் போன்று நான்கு பக்கத்தும் சொக்கட்டான் சாரியுள்ள மண்டபம் வேறு எவ்விடத்தும் இல்லை. கிருஷ்ண அய்யங்கார் உருவச்சிலை சுவாமி சந்நிதி கீழைவாசலின் தெற்குக் கோடியில் உள்ளது.

அம்மன் சந்நிதியில் சொக்கட்டான் மண்டபத்தின் தென் புறத்தில் மூன்றாவது தூணில் முத்துவிஜய ரகுநாதசேதுபதி உருவச் சிலை இருக்கிறது. அதற்கு மேல்புறத் தூணில் வடுகநாத தேவர். அதற்கு அடுத்த தூணில் ஹிரண்யகர்ப்பயாஜி ரகுநாத சேதுபதி சொர்ணயக்ஞோபவீதமும், காலில் வீரகெண்டையும் சேதுபதி உருவங்களுக்கு அடையாளமாய் இருக்கின்றன. அவர்கள் உறவின ர்கள் உருவச் சிலைக்கு அடையாளங்கள் இல்லை. மற்றத்தூண்களில் அவர்கள் உறவினர்கள் உருவச்சிலைகள் இருக்கின்றன. ஆறாவது மேற்புறத்தூணில் உலகநாதமுனிவர் ஆதியில் இருந்த தருமகருத்தர். இவர்கள் வம்சத்தார்கள் திருவாடானையைச் சார்ந்த ஊரணங்குடி, மும்முடிகாத்தான் என்ற ஊர்களில் உள்ளார்கள். இவர்கள் கார் காத்த வேளாளர்கள். வடபுறத்தின் ஆறாவது மேற்புறத்தூணில் இராவாகு மாமுனி காஷாயம் தரித்தவர்கள் இவர்கள் வம்சத்தவர் களே இராமேசுவரம் தேவஸ்தானம் தருமகர்த்தர்களாய் இருந்தார் கள். இவர்களில் யாரேனும் சிவபதம் அடைந்துவிட்டால், அந்தப் பரம்பரையில் உள்ள வெள்ளைவேட்டிக்காரர்களுள் யாரேனும் தகுந்தவர்களுக்குத் திருவாடுதுறை ஆதினத்தார்கள் காஷாயம் கொடுத்தனுப்புவது முன்பு வழக்கமாயிருந்துவந்தது. உலகநாதமுனி இராவாகுமாமுனி இராமநாதமாமுனி இம்மூவரும் ஜடாதரிகள். இவர்களுக்குச், சேதுபதிகளால் கிராமங்கள் விட்டுக்கோவில் விசார ணையும் சர்வசுதந்திரபாத்தியதையும் கொடுக்கப்பட்டுமேற்பார்வை மாத்திரம் வைத்துக் கொண்டார்கள். சேதுபுராணத்தில் ஆசிரியரால் செய்யப்பட்ட குருஸ்துதியில் இராமநாதமுனிவர் என்று கூறப் பெற்றவர் இந்தப் பரம்பரையினரே. அவருடைய மடமும், கிராமங் களும் தேவஸ்தானத்தாரால் ஏலத்திற்கு எடுக்கப்பட்டன. முன்பு தர்மகர்த்தாமடம் என்று வழங்கப்பட்டு வந்தது. தேவ ஸ்தானத்திற்கு வந்த பிறகு இராமமந்திரமடம் என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

கலியாணமண்டபம்:- இது அம்மன் சந்நிதியில் சொக்கட்டான் மண்டபத்திற்குக் கிழக்கே உள்ளது. இதன் மேலைக்கோடியில் கிழக்குப்பார்த்த தூண்கள் இரண்டிலும் தர்மகர்த்தர்களாகிய இரண்டு முனிவர் உருவங்கள் உள்ளன. இதன் தெற்குவரிசையில் கிழக்கிலிருந்து ஆறாவது தூணில் முத்துவிஜயரகுநாத சேதுபதி காத்ததேவர் உருவம்உள்ளது. இவர்காலிலுள்ள வீரகெண்டையின் இடையில் ஒருதலையும் உடைவாளும் சொர்ணயக்ஞோபவீதமும் இருக்கின்றன. மற்றைத்தூண்களில் சேதுபதிகளுடைய அடைப்பைக் காரர்கள் உருவங்கள் உள்ளன. இம்மண்டபம் மகாலக்ஷ்மி

கோயிலுக்குத் தென்பக்கத்தில் உள்ளது. இம்மண்டபத்தின்தென் புறம் பசுமடம் உள்ளது. இது முன்பு 'பண்டிதாஸ்' என்ற மகாராட்டிரர் ஒருவர் பெயரால் வழங்கப்பட்டு வந்தது. பண்டிதாஸ் என்பவர் சந்யாசீ. இம்மடத்தின் தெற்கே சோமவாரக்கட்டளை என்ற கட்டடம் இருக்கிறது. கிழக்குச் சொக்கட்டான் மண்ட பத்தின் வடபுறம் சபாபதி கோயிலும் தென்புறம் பத்ரகாளி கோயிலும் உள்ளன. சொக்கட்டான் மண்டபத்து நாற்புறத்திலும் இராமாயணம், பாரதம், பாகவதம் என்பவற்றிலுள்ள சரித்திரப் பகுதிகள் சித்திரவடிவங்களாக எழுதப்பெற்றுள்ளன. மிகவும் நன்றாகவுள்ளன. சில வடிவங்கள் மாத்திரம் அழிந்துள்ளன.

கட்டளை:- திருவனந்தபுரம் மகாராசா கட்டளை; இதற்குரிய கட்டளைகள் உதயமார்த்தாண்டன் கட்டளை, உச்சிக்காலக் கட்டளை, சாயரக்ஷைக்கட்டளை ஆடி, மாசி உற்சவத்தில் இரண் டாம் திருநாள் மண்டகப்படிச்செலவு சம்ஸ்தானத்தைச் சார்ந்தது. இதற்குரிய வரும்படி மூவாயிரம் ரூபாய். இதை நான்கு முறையாகத் திருவனந்தபுரம் அரசர் கொடுத்து வருகிறார்.

இராயர் கோபுரங்கள் இரண்டு உள்ளன. அவை வடக்கும் தெற்கும் உள்ளன.

மாதவ தீர்த்தம்:- இது தெற்குச் சொக்கட்டான் மண்டபத்தின் வடபுறம் சேதுமாதவசுவாமி கோயில் தென்புறம் உள்ளது. இதனைச் சுற்றி வைகாசி வசந்தோற்சவத்தில் சுவாமியும் அம்பி கையும் பத்தியுலாத்துவது வழக்கம். இச்சொக்கட்டான் மண்ட பத்தின் தென்மேற்கு மூலையில் கன்னிமூலை மண்டபம் இருக் கின்றது. இது கன்னிமூலைக் களஞ்சியம் என்று சொல்லப்படும். இதன் வடபுறம் மேல்புறம், தென்புறம் நந்தவனம் ஒன்றுள்ளது. மேற்குச் சொக்கட்டான் மண்டபத்தின் மேல்புறம் மூன்று கோயில்கள் உள்ளன. இந்தப் பிராகாரம் கட்டுவதற்கு முன்பே அமைக்கப்பட்டிருந்தன. மூன்று கோயிலிலுள்ள லிங்கங்களின் பெயர்கள் கிருஷ்ணதேவராயலிங்கம். மேற்குச்சொக்கட்டான் மண்டபத்திற்கு மேலைத்துறவை மண்டபம் என்பது பெயர். மேற்குச் சொக்கட்டான் மண்டபத் தென்சிறகினிடையில் மூன்று சேதுபதிகள் உருவச் சிலைகள் உள்ளன. இப்பட்டத்திருந்த சேதுராமநாதபண்டாரம் என்பவருடைய உருவச்சிலையும் அமைக் கப்பட்டுள்ளது. இவர்களில் முத்துராமலிங்க சேதுபதி ஒருவர் உற்சவத்தின் ஆறாந் திருநாளில் சுவாமி எழுந்தருளி மண்டகப் படிகொள்வது வழக்கம்.

சேதுமாதவர் கோயில்:- இதைச்சுற்றி முறையே நளதீர்த்தம், நீலதீர்த்தம், கலாக்ஷதீர்த்தம் என்று மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. வடக்குச் சொக்கட்டான் மண்டபத்தின் தென்புறம் கலாயதீர்த்தம் இருக்கிறது. சேதுமாதவர் கோயிலுக்கு வடபுறம் 1. பாபபக்ஷேசுரர் 2. புண்யதானேவசுரர் ஆலயங்கள் இருக்கின்றன. அதற்கு நேரே கிழக்கில் தசரதர்கோயில் இருக்கின்றது. அதன் அருகில் வடக்கே கந்தமாதனதீர்த்தம் இருக்கின்றது. இவையாவும் கிணற்று வடிவங்களே. தனித்தனி உள்ளன (1) கிழக்கு நோக்கியது (2) மேற்கு நோக்கியது

இந்தத் தலத்தில் அறுபத்துநான்கு தீர்த்தங்கள் உள்ளன. சொக்கட்டான் மண்டபத்து வாயு மூலையில் ராமலிங்கப் பிரதிஷ்டை முதலியன உள்ளன. இது பாஸ்கர சேதுபதி மானேஜ் மெண்டு காலத்தில் செய்யப்பட்டது.

உப்பூர் வெய்யிலுகந்த விநாயகர் ஸ்ரீ இராமரால் பூசிக்கப் பட்டவர்.

தேவிப்பட்டினம்:- இங்கே இராமர் நவக்கிரகப்பிரதிட்டை செய்து திலகேசுவரரையும் பூசித்தார். இங்கு ஜகந்நாதப்பெருமாள் கோயில் இருக்கின்றது, இராமநாதசுவாமி கோயில் நந்தி மண்டபத்தின் தென்பாரிசத்தில் சக்தி விநாயகர் உள்ளார். அஷ்டதிக்கிலும் பாதுகாவற்கு முன்னோரால் நியமிக்கப்பட்ட எட்டுத் தெய்வங்களுள் ''சேதுமாகாளி'' என்பவளும் ஒருவர்.

1 கிழக்கு உஜ்ஜயினி மாகாளி (2) தென்கிழக்கில் முனீசுவரர் (3) தெற்கில் சேய்த்தாக நம்பநாயகி என்னும் காளியும் தெற்குக் கோபுர வாயிலில் கருப்பண்ணசுவாமியும் (4) மேற்கே துர்க்கை யம்மன் (5) வடக்கே சேதுமாகாளி. நான்கு நேர் திசைகளில் நான்கு காளிபிரதிஷ்டை.

தீர்த்தங்கள்:-

1. சுக்ர தீர்த்தம்:- இது சுவாமி கோயிலுள்ளிருந்து இரண்டாம் பிராகாரத்து அம்மன் சந்நிதிக்கும், சுவாமி சந்நிதிக்கும் மத்தியில் கிணற்று வடிவமாய் உள்ளது.

2. வேதாள தீர்த்தம்:- மண்டபத்தின் மேற்கே ஐந்து மைலில் தில்லைநாயகி அம்மன்கோயில் தென்புறத்தில் ஊருணி வடிவமாய் உள்ளது.

3. பாபவிநாச தீர்த்தம்:- மண்டபம் என்ற ஊருக்குள் சேதுபதி சத்திரத்திற்கு வடக்கே ஊருணி வடிவமாயுள்ளது.

4. சீதா குண்டம்:- தங்கச்சிமடம் சத்திரத்திற்கு வடபுறம் ஊருணி வடிவமாயுள்ளது. இப்பொழுது மணல் மூடிஇருக்கின்றது. சிதையின்கோயில் கரையில் உள்ளது.

5. மங்கல தீர்த்தம்:- பாம்பன் இராமேசுவரம் ரோட்டில் தங்கச்சி மடம் சத்திரத்திற்குக் கிழக்கே ஊருணி வடிவமாக உள்ளது.

6. அமுத தீர்த்தம்:- ஏகாந்தராமசுவாமி கோயிலுக்குள் கிணற்று வடிவமாய் உள்ளது. ஏகாந்தராமசுவாமி கோயிலுள் இலக்குமணன் அநுமார், சுக்ரீவன் சகிதராய் இராமர் இருக்கிறார்.

7. பிரமகுண்டம்:- இராமேசுவரம் மேலைவீதியிலிருந்து நேர் வடக்கே ஒரு மைல் தூரத்தில் ஊருணி வடிவமாய் உள்ளது.

8. அநுமகுண்ட தீர்த்தம்:- அதே மார்க்கத்தில் அரை மைல்தூரத்தில் கல்வெட்டுக்குளமாய் உள்ளது.

9. அகத்திய தீர்த்தம்:- அக்னி தீர்த்தத்திற்கு வடக்கே குள வடிவமாய் உள்ளது.

10. இராம தீர்த்தம்:- ஆலயத்திற்கு மேற்கே பாம்பன் ரோட்டின் தென்புறம் குளவடிவமாக உள்ளது.

11. இலக்குமண தீர்த்தம்:- இந்தத் தீர்த்தத்திற்கு மேற்கே அதே ரோட்டின் (பாம்பன்) தென்புறம் குளவடிவம். இராம தீர்த்தம், இலக்குமணதீர்த்தம் என்ற இரண்டிலும் இராமர்கோயிலும் இலக்குமணக் கோயிலும் உள்ளன.

12. சடாயு தீர்த்தம்:- இராமேசுவரத்திற்குத் தென்புறம் மூன்று மைலுக்குள் குளவடிவம்.

13. இலக்குமி தீர்த்தம்:- சுவாமி கோயில் அனுப்பு மண்ட பத்தின் தென்பக்கத்திலும் அம்பாள் கலியாண மண்டபத்திற்கு வடபக்கத்திலும் கல்வெட்டுக்குளமாய் உள்ளது.

14. **அக்னி தீர்த்தம்:-** சுவாமி சந்நிதிக்குக் கிழக்கே சமுத்திர வடிவமாயுள்ளது.

15. **சிவகெங்கை** சுவாமி சந்நிதி நந்தி மண்டபத்திற்குத் தென்புறம் கல்வெட்டுக் குளவடிவமாய் உள்ளது.

16. **சங்க தீர்த்தம்:-** சுவாமி சந்நிதி இரண்டாம் பிராகாரத் திற்கு வடபுற மூலையில் கிழக்குப்பக்கமாகக் கிணற்று வடிவில் உள்ளது.

17. **முத்தீர்த்தம்:-** சுவாமிகோயில் இரண்டாம் பிரகாரம் வட புறம் மேற்குக் கோடியில் தென்பக்கத்தில் கிணற்று வடிவாய் உள்ளது.

18. **கோடிதீர்த்தம்:-** சுவாமி சந்நிதி முதல் பிரகாரம் வடபுறம் விசாலாக்ஷியம்மன் கோயில் கீழ்ப்பக்கம் கிணற்று வடிவாய் உள்ளது இராமநாதர் அபிஷேகத்திற்கும் இத்தீர்த்தமே.

19. **சாத்தியாமிருத தீர்த்தம்:-** பர்வதவர்த்தினி அம்பாள் சந்நிதி நவசக்தி மண்டபத்தின் தென்பாகம் கிணற்று வடிவமாய் உள்ளது.

20. **சர்வ தீர்த்தம்:-** சுவாமி கோயில் முதல் பிராகாரம் தென் புறம் கிணற்று வடிவமாய் உள்ளது.

21. **தனுஷ்கோடி தீர்த்தம்** ரத்னாகரம் மகோததி சங்கமம்.

22. **பாலோடை** (தேவதீர்த்தம்) நம்பநாயகிஅம்மன் கோயி லுக்குப் போகும் வழியில் ஓடை வடிவமாய் உள்ளது.

23. **கவிகுண்டம்** (கவிதீர்த்தம்) பாம்பன் பைரவ சுவாமி கோயிலுக்குத் தென்புறம் குளவடிவமாய் உள்ளது.

24. **சரசுவதி காயத்திரி:-** சுவாமி கோயிலில் உள்ள தாமோதரவிலாசம் என்ற தோப்பின் வடபாகத்தில் கிணற்று வடிவ மாய் உள்ளது. இத்துடன் சாவித்திரி தீர்த்தமும் சேர்ந்திருக்கிறது.

பற்றுஞ் சகனிற் பதினைந்து நூற்று மூப்பான் பருவ
நற்றும் புவியினையாள் வீர பூபதி நாளிற் றோன்ற
குற்றம் கடிந்தவர் ராமநாதன் கோயி லென்பார்
கற்றும் கடுந்தவங்கள் புரிரா மநாதனமைத்தனனே.

ஸ்ரீ பார்வதவர்த்தினி அம்மன் சந்நிதிக்கு முன் முதற்பிராகாரத்தில் தென்பக்கத்தில் சாத்தியாமிருதம் என்ற தீர்த்தம் ஒன்றிருந்த தாயும், அது கட்டிட நிர்மாணத்துக்கு இடைஞ்சலாக இருந்ததை உத்தேசித்தும் அதற்கு நேர்கிழக்கில் நவசக்தி மண்டபத்திருப்பதாகவும் சேதுசமஸ்தானம் பூர்வீக சாஸ்திரத்தில் விஜயரகுநாத சேதுபதி காலத்தில் நடந்ததாக எழுதப்பட்டிருக்கின்றது.

நந்திவேர் மிகப்பெரியவர், அவருக்கு முன்புள்ள இரண்டு தூண்களில் இரண்டு நாயகர் வடிவங்கள் இருக்கின்றன. வடபால் வீரப்பநாயகர் தென்பால் விசுவநாத நாயக்கர்.

39. திருஇரும்பூளை சோழநாடு

நீடாமங்கலம் இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கே கும்பகோணம் போகும் வழியில் உள்ளது. நான்குமைல் தொலைவு. இத்தலம் ஆலங்குடியென்றும் வழங்கும். இங்குத் தக்ஷிணமூர்த்தி சந்நிதி விசேடம். வியாழக் கிழமைகளில் வழிபாடு செய்தல் சிறப்புடைத்து. குருப் பெயர்ச்சியின் போது மக்கள் திரளாக வந்து வழிபாடு செய்வர். தக்ஷிணமூர்த்தியே திருத்தேரில் எழுந்தருளுவார்

பிள்ளையார் :- 'கலங்காமல் காத்த பிள்ளையார்' கோபுர வாயிலில் உள்ளார். விஷத்தால் கலங்கிய தேவர்களைக் கலங்காமல் காத்தவர். இவருக்கு அகளங்க விநாயகர் என்ற பெயரும் உண்டு. தக்ஷிணமூர்த்தி விஷவேகத்தால் மூர்ச்சித்த தேவர்களுக்கு ஞானோபதேசம் செய்தமையால் இவருக்கு உற்சவாதிகள் நடைபெறுகின்றன.

சுவாமி :- காசி ஆரணியேசுரர், ஆபத்சகாயர்

அம்பிகை:- ஏலவார் குழலியம்மை, ஏலாளகாம்பா.

தீர்த்தம் :- அமிர்த புஷ்கரணி தீர்த்தம், கோயிலைச் சுற்றி அகழி போல் உள்ளது, தேவர்கள் செய்த அமிர்தாபிஷேகம் இவ்வாறு ஆயினமையின் இப்பெயர் பெற்றது,

ஏலவார் குழலி :- கைலையங்கிரியில் பந்தாடுகையில் ஏதோ ஒரு குறிப்பால் தன்னை நிற்கச் சொன்னதாக நினைந்து சூரியன் நின்று

விட்டமையால் உலகியல் தம்பித்தது. அதனலுண்டான தோஷத் தைப்பரிகரித்தற்குச்சிவாக்ஞையால் அமிர்த புஷ்கரிணியின் ஈசானத் தில் குழந்தையாய் அவதரித்து, அங்கு நீராட வந்த ஒரு வேதிய ரால் எடுத்து வளர்க்கப்பட்டுச் சமீபத்திலுள்ள ஓரிடத்தில் தவஞ் செய்து, பரீக்ஷார்த்தமாக வந்த சிவபெருமானேடு வாதாடி அவரைத் திருமணம் செய்துகொண்டார்.

விசுவாமித்திரர் முதலியோர் பூசித்த தலம். இத்தலம் ஆலங்குடி என்று வழங்கப்படுகிறது. ஆலங்குடித் தல புராண வசனம் அச் சிடப்பெற்றுள்ளது. விநாயகர் கலங்காமல் காத்த பிள்ளையார்.

கருதிரும் பூலை காசியா ரணியர்
அருளேலக் குழலீசு வரிய முதப் பொய்கை (சிவ.)

சீரார் கழலே தொழுவீர் இதுசெப்பீர்
வாரார் முலைமங் கையொடும் முடனுகி
ஏரார் இரும்பூ ஹையிடங் கொண்ட ஈசன்
காரார் கடல்நஞ் சமுதுண் டகருத்தே
(திருஞா. 2-ம் திரு)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரம் : இரும்பு தலா ரிரும்பூளையுள்ளார் -- வீழிமிழலை-திரு.நா.

40. இரும்பை மாகாளம் தொண்டை நாடு

இத்தலம் புதுச்சேரி இரயில்வே நிலையத்திலிருந்து வடமேற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து நேரே கூவத் திற்குப்பஸ் மூலம் போய் குறுக்கே ஒரு மைல் தொலைவு போக வேண்டும். கிறிஸ்தவர்கள் மிகுதி. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : மாகாளேசுவரர்
அம்பிகை : குயில்மொழி அம்மை
மாகாளர் பூசித்த தலம்
அத்திரி மகரிஷி இருந்த தலம்.

இரும்பைமா காளத் திறைமா காளர்
சுரர்க்கருள் குயிலுமென் சொல்லிமா காளம். (சிவ)

மண்டுகங்கை சடையிற் கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரம்மூன் றெரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய் விளங்கும் இரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாய்நின்ற மாகாளமே.
(திருஞா. 2-ஆம் திரு)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல். இரும்பைப்பதி மாகாளம் வெற்றியூரும்: பொது. திருஞா.

41. இலம்பையங் கோட்டூர் தொண்டைநாடு

இத்தலம் கூவத்தீற்குத் தென்மேற்கு 2 மைல் தொலைவில் உள்ளது,

சுவாமி : சந்திரசேகரர்

அம்பிகை : கோடேந்து முலையம்மை

தீர்த்தம் : சந்திர தீர்த்தம்

அரம்பையர் பூசித்த தலம், கிறித்தவர்கள் நிறைந்த கிராமம், பிரதி தினமும் ஒரு வேளை பூசை நடக்கிறது.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்

இலம்பையங் கோட்டூர் இறைசந் திரசேகரர்
இலந்தழைத் திடுகோ டேந்து முலையிந்து (சிவ.)

மலையினுர்பருப்பதந் துருத்தி மாற்பேறு
மாசிலாச்சீர் மறைக்காடு நெய்த்தானம்
நிலையினுன் எனதுரை தனதுரையாக
நீறணிந் தேறுகந்தேறிய நிமலன்

கலையினுர்மடப்பிணை துணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினுர்பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே.
(திருஞா. 1 ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவராப்பாடல் ஏமநல்லூரிலம் பையங்கோட்டூர் இறையான்சேரி - பொது. திருநா:

42. இன்னம்பர் (இன்னம்பூர்) சோழ நாடு

கும்பகோணத்திலிருந்து 4 மைல்தொலைவில் உள்ளதுஇத்தலம்.

சுவாமி : எழுத்தறிநாதேசுவரர்

அம்பிகை : கொந்தார் பூங்குழலம்மை

தீர்த்தம் : ஐராவத தீர்த்தம்

அகத்தியர் பூசித்து இலக்கணம் உபதேசிக்கப்பட்ட தலம். சிவபெருமான் கணக்கராய்க் கோயிற்கணக்கை அரசனிடம் ஒப்பு வித்த தலம். ஐராவதம் பூசை செய்த தலம். கர்ப்பக் கிருகத்தின் மேற்பாகம் யானையின் உருவம் போல் செய்யப்பட்டுள்ளது. கோயிலுக்குள் பலாமரமும் சண்பகமரமும் இருக்கின்றன. நர்த்தன விநாயகர் கோயில் கம்பத்தில் இருக்கிறார். அம்மன் சந்நிதி இரண்டு வெளிப் பிராகாரத்தில் சுகந்த குந்தளாம்பா சந்நிதி. கஜப்ருஷ்ட விமானம். வைகாசி சிவராத்திரியில் வேடனுக்குக் காட்சி கொடுத்த தலம். யமனைச் சம்ஹாரம் செய்த இடம் என்பர். நந்தி திரும்பி யிருக்கிறது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

இன்னம் பூர்வாழ் எழுத்தறி நாயகர்
மின்கொம் பனையாள் மெய்யயி ராவதம். (சிவ.)

எண்டிசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே.
(திருஞா. 3-ஆம். திரு)

விண்ணவர் மகுடகோடி மிடைந்த சேவடியர் போலும்
பெண்ணொரு பாகர் போலும் பேடலி ஆணர்போலும்
வண்ணமால் அயனும் காணு மால்வரை எரியர்
போலும்
எண்ணுரு அநேகர் போலும் இன்னம்பர் ஈசனாரே.
(திருநா. 4 ஆம் - திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் : அங்க மோதியோராறை மேற்றளி நின்றும் போந்து வந்தின்னம்பர்த் தங்கினேமை யுமின்ன தென்றிலர் சுபுறம்பயம். இன்னம்பராரீங்கோய் மலையாரின் சொற்கரும்பணையாள்
வீழிமிழலை - திருநா.

ஏந்து மழுவாளரின்னம்பரார் - ஆரூர். திருநா.

இடைமரு தின்னம்பரேகம்பமும் - அதிகை. திருநா.

இன்னம்பரேரிடவை யேமப்பேறூர் - பொது. திருநா.

43. திருஈங்கோய்மலை (திருவிங்கநாதமலை) சோழநாடு

இத்தலம் குழித்தலை இரயில்வே நிலையத்திலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. அகத்திய முனிவர் ஈ உருவம் கொண்டு பூசித்த தலம், காலையில் கடம்பர் கோயிலையும் உச்சிவேளையில் இரத்தினகிரியையும், மாலையில் திருவீங்கோய் மலையையும் கார்த்திகை சோம வாரங்களில் தரிசித்தால் விசேட பலன் கிடைக்கும். ''காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திருவீங்கோய் நாதர்''.

சுவாமி: மரகதாசலேசுரர்

அம்பிகை: மரகதவல்லியம்மை

கோயில் குன்றின் மேல் இருக்கின்றது. 500 படிகள் இருக்கும் ஈங்கோய், மாகதாசலம், மரகதமலை, மரகதலிங்கம், சுந்தரர் போன பொழுது சுவாமி புளியில் ஒளிந்திருந்தார். அவர் பொன் கேட்டதும் சுவாமி புளியங்காயைப் பறித்து வீழ்த்தினர். அது பொன் ஆயிற்று என்பர். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

மருவும் ஈங்கோய் மலைமரக தேசர்
மரகத வல்லி மனமகிழ் அமிர்தம். (சிவ)

வானத் துயர்தண் மதிதோய் சடைமேல் மத்த
மலர்சூடித்
தேனெத் தனமென் மொழிமான் வீழியாள் தேவி
பாகமாக்
கானத் திரவீல் எரிகொண் டாடும் கடவுள் உல
கேத்த
ஏனத் திரள்வந் திழியுஞ் சாரல் ஈங்கோய் மலையாரே.
(திருஞா . 2 ஆம் திரு)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவராப் பாடல்கள்: இடைமருதோ டீங்கோய் நீங்கா விறையவனே-புள்ளி ருக்குவேளூர். திருநா.

இடைமருதும் ஈங்கோயு நீங்காதேற்றின் மிசையானே - ஆனைக்கா திருநா.

ஈங்கோய் நீங்காதுறையு மிறைவன்றன்னே - கற்குடி. திருநா.

ஏலமண நாறும் ஈங்கோய் நீங்கார் - இடைமருதூர். திருநா.

இன்னம்பராரீங்கோய் மலையார் - வீழிமிழலை. திருநா.

அண்ணமலை யீங்கோயு மத்திமுத்தாற கலாமுதுகுன்றம்
பொது. திருஞா

இடைமருதீங்கோய் இராமேச்சுரம்- பொது. திருநா.

44. திரு உசாத்தானம் சோழநாடு

இத்தலம் முத்துப்பேட்டை இரயில்வே நிலையத்திருந்து வடக்கே இரண்டுமைல் தொலைவில் உள்ளது. இங்குச் சங்கர வேதாந்திகள் மடம் ஒன்றுள்ளது. இராமர் இலக்குமணர், அநுமார் ஜாம்பவான் சுக்கிரீவர் முதலியோர் பூசித்த தலம். கோவிலூர் என்று வழங்கபடுகிறது.

சுவாமி: மந்திரபுரீசுரர்

அம்பிகை: பெரியநாயகி

இராமர் இலங்கைக்குப் போகுமுன் இங்கு உபதேசம் பெற்றார். மந்திரபுரீசுரர் இலிங்கம் வெண்மை நிறச் சுயம்பு. காட்சி கொடுத்த நாதர், அதிகாரநந்தி இருக்கிறார்கள். மாமரம் திரு உசாத்தானத்திற் குரிய தல விருட்சமாதலின் இத்தலம் மாவனம் என்று கூறப்பட்டு இப்போது சூதவனம் என்று வழங்கப் படுகிறது.

பிள்ளையார்; சூதவநப்பிள்ளையார்

சூதவநப் புராணம் அச்சிடப் பட்டுள்ளது. இத்தலத்திற்குரிய பிரபந்தம் திருவுசாத்தான நான்மணிமாலையாகும். திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

மருவுசாத் தானம்மந் திரபுரி யீசர்
பெரிய நாயகி பெருகிய நிருமலம். (சிவ)

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போரிடைச் சுக்கிரீ வன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

(திரு.ஞா. 3 ஆம் திரு)

45. திரு ஊறல் தக்கோலம் தொண்டைநாடு

இரயில்வே நிலையம் உள்ள தலம். கோயிலின் மேற்புறம் மலைச்சரிவில் ஓர் இயற்கை ஊற்று உள்ளது. இதிலிருந்து தண்ணீர் கோயிலின் உட்பிரகாரத்தில் தரைமட்டத்தில் ஒரு நந்தி வாயின் வழியாக விழுந்து ஒரு சிறு குளத்தை நிரப்பி வழிந்து ஓடு கிறது. சோழ மன்னனுக்கும் மேலைச் சளுக்கிய மன்னனுக்கும் போர் நிகழ்ந்த இடம். இங்கு மணற் பெருவெளியாக இருக்கிறது. இத்தலம் திருவாலங்காட்டின் தென் எல்லையிலுள்ளது. ஸ்ரீநட ராஜருக்கும் காளியம்மைக்கும் தர்க்கத்தால் நடனம் செய்ய நேர்ந்த போது காளி அங்ஙனம் செய்யக் காலை எடுக்கையில் அம்பிகை சொல்லக் காளி நாணமுற்று முகத்தைத் திருப்பிக் கொண்டனள். காளி அந்தக் கோலத்தோடு நிற்கிறாள். இந்தக் காளிக்குத் தக்காளி என்பது பெயர். தர்க்ககாளி என்பது தக்காளி என மருவியதென்பர். நந்தி வாயிலிலிருந்து தீர்த்தம் வருகிற கோயிலுக்குப் பொக்கேசுவரர் கோயில் என்னும் பெயர். கங்காதரேசுவரர் என்ற பெயருமுண்டு.

சுவாமி பெயர் ஜலநாதேசுவரர்: திருவூறனுதர். அம்பிகை. கிரி ராஜ கன்னிகை. இது தக்ஷன்யாகம் செய்த இடம். கோயிலுக்குத் தென்மேற்கில் திருமாறேசுரர் கோயிலும் இதே திக்கில் கணபதி புரமும் வாயு மூலையில் இரண்டு மைலில் பரமேசுவர மங்கலமும் கிழக்கே அநந்தாபுரமும் தென் கிழக்கில் கேசவபுரமும் ஊருக்கு வடக்கே சோமேசுவரரும் ஈசானியத்தில் இலும்பேசுவரரும் தெற்கில் ஊர் நடுவில் வீரபத்திரசுவாமியும் இருக்கிறார்கள்.

இந்தத் தலம் தக்கன் யாக குண்டம். தெற்கே பிரமநதி என்று ஒரு நதி ஓடுகின்றது. அது பிரப்பங்கால் என்று வழங்குகிறது. வடக்கிலும் கிழக்கிலும் கல்லாறென்றநதி ஓடுகிறது. இந்தக் கிராம தேவதை பயிண்டியம்மனுக்குப் பிரார்த்தனை நிமித்தம் சேலை அணிந்து கொள்ளும் வழக்கம். ஆண், பெண், பெரியோர், சிறியோர் எல்லோருக்கும் உண்டு. இந்தத் தழை அணிந்து கொள்ளும்போது கௌபீனம் முதலியன அணிந்து கொள்ளக்கூடாது. இவ்வூர்க் கோயிலுக்கு நிருதிமூலையில் திருமாம்பழேசுவரர் கோயிலுண்டு. இவர் பஞ்ச பாண்டவருடன் வந்த கௌதம முனிவரால் பூசிக்கப் பெற்ற வர். மேற்கூறிய முனிசுவரருக்கு இவ்விடத்திலுள்ள மரம் வருஷம் ஒன்று ஒரு மாம்பழம் கொடுத்தது பற்றி இவருக்கு இப்பெயர். இக் கோயிலில் பஞ்ச பாண்டவர், திரௌபதி, கௌதம முனிவர் இவர் களுடைய வடிவங்கள் இருக்கின்றன. பெரிய புராணத்தில் "சுரகுருவாய்" என்னும் செய்யுளால் கூறப் பெற்ற தலம் இதுவே. இதிலுள்ளநந்தி திருவொற்றியூர்த் தலபுராணம் ஸ்தலச் சருக்கத்துள் கூறப்பெற்றுள்ளது. திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

ஊறல் அம்பதிசேர் ஊறல் நாயகர்
ஊறல் நாயகி உளமகி ழூறல் (சிவ)

மாறில் அவுணர் அரணம் அவைமாயவோர் வெங்
கணையாலன்று
நீறெழ எய்தவங்கள் நிமலன் இடம்வினவில்
தேறல் இரும்பொழிலும் திகழ்செங்கயல் பாய்வயலும்
சூழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார்கழல் உள்ளுதுமே.
(திருஞா 1-ம் திரு)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

உண்ணீரா ரேடகமு மூறலம்பர்- அதிகை. திருநா.

ஒற்று மூரொற்றியூர் திருவூறலொழியாப் பெற்றமேறி - இடை யாறு.சு.

ஊறலாய ருளா யென்று ரைப்பரே - பொது. திருநா.

உஞ்சேனை மாகாள மூறலோத்தூர் - பொது. திருநா.

46. **எதிர்கொள்பாடி :** (மேலூத்திருமணஞ்சேரி) சோழநாடு, குற்ருலம் இரயில்வே நிலையத்திலிருந்து ஐந்து மைல் தொலைவு சென்ருல் இத்தலத்தை அடையலாம்.

பரதமுனிவர் மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு அழைத்துத் திருமணம் செய்து கொடுத்தார். இவ்வாறு எதிர்கொண்டு அழைத்த இடமே **எதிர்கொள்பாடி** யாகும்.

சுவாமி:- ஐராவதேசுரர்

அம்பிகை:- மலர்க்குழல் மாதம்மை.

ஐராவதம் பூசித்த தலம்.

வேள்விக்குடியில் திருமணம் செய்து கொண்ட இராசகுமாரன் ஒருவன் மனைவியுடன் தன் நகர் செல்லும்பொழுது சிவபெருமான் அவனுடைய அம்மாளைப் போல இத்தலத்தில் தங்கியிருந்து எதிர்கொண்டு அவனை அழைத்துப் போனதனுலே **எதிர்கொள் பாடி** என்னும் பெயர் வந்தது.

சந்நிதி : மேற்கு.

சுந்தரர் பாடிய தலம்.

பாசமில் எதிர்கொள் பாடியயி ராபதர்
வாசம லர்க்குழல் மகிழ்சிவ கங்கை. (சிவ).

மத்தயா னை ஏறிமன்னர் சூழவரு வீர்காள்
செத்தபோ தில் ஆரும்இல்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர்கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே.
(சுந்தரர்)

47. எருக்கத்தம்புலியூர் : (நடுநாடு) சுவேதார்க்கவனம் என்று வடமொழிப் பெயர். திருமுதுகுன்றத்திற்குத் தெற்கே ஏழு மைல் தொலைவில் உள்ளது. திருநீல கண்டயாழ்ப்பாணர் அவதரித்த தலம். கோயிலுக்குள் வெள்ளருக்கஞ்செடி ஒன்றுள்ளது. ருத்ர சன்மர் வழிப்பட்டுத் தம் ஊமை நீங்கியது. இங்கு ருத்ரசன்மரின் பிம்பம் உள்ளது. இங்கிருந்து நான்கு மைல் தொலைவில் ஸ்ரீமுஷ்ணம் என்ற விஷ்ணுதலம் உள்ளது.

எருக்கவிருட்சம் கோயிலுக்குப் பின்புறம் இருக்கிறது.

சுவாமி: சுவேதார்க்கவனேசுவரர், திருக்குமரேசர்

அம்பிகை : நீலமலர்க்கண்ணியம்மை, வீருமுலையம்மை (அபின்ன குசநாயகி)

தீர்த்தம்: ஸ்கந்த புஷ்கரிணி. விருட்சம்: வெள்ளெருக்கு திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

எருக்கத்தம் புலியூர் இறைநீல கண்டர்
மருக்கமழானந்த வல்லியா னந்தம். (சிவ)

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனு யிடுகங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே.
(திருஞா. 1ஆம் திரு)

48. எறும்பியூர்: (திருவெறும்பூர்) சோழநாடு,

இத்தலத்திற்கு இரயில்வே நிலையம் உண்டு. கோயில் குன்றின்மேல் உள்ளது. தேவர்கள் எறும்பு உருவமெடுத்துப் பூசித்த தலம்.

சுவாமி: எறும்பீசுரர்

அம்பிகை: நறுங்குழல் நாயகி.

தூஷணன் என்னும் அசுரன் பூசித்தது. விஷ்ணுவும் பிரமனும் தைமிச முநிவர்களும் பூசித்த தலம். இலிங்கம் வடபுறம் சாய்ந்துள்ளது.

திருநாவுக்கரசர் பாடிய தலம்.

திருவெறும் பூர்வாழ் சிவனெறும் பீசர்
வருநறுங் குழலாள் பார்வதி பிப்பிலிகம் (சிவ)
விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பி னூறல் அருததோர் வெண்டலை
எறும்பி யூர்மலை யானெங்கள் ஈசனே.
(திருநா 5 ஆம் திரு)

இத்தலத்தைப் பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல் எறும்பியூரே ராருமேம கூடம் - பொது திருநா.

49. திருஏடகம்: பாண்டியநாடு

சோழவந்தான் இரயில்வே நிலையத்திற்குத் தெற்கு மதுரைக்குப் போகும் வழியில் மூன்று மைல் தொலைவில் உள்ளது. சம்பந்தர் ''வாழ்க அந்தணர்'' என்று தொடங்கும் பதிகம் எழுதி மதுரையில் வைகையாற்றி லிட்ட ஏடு, ஆற்றோட்டத்தை எதிர்த்துச் சென்று தங்கிய இடம். திருக்கோயில் ஆற்றோரத்தே உள்ளது. கோயில் பழமையானது,

சுவாமி: ஏடகநாதேசுரர்

அம்பிகை: ஏலவார்குழலி மாதேவியம்பிகை. திருமால், கருடன், ஆதிசேடன், சாத்தனூர் பூசித்ததலம். தலபுராணம் அச்சிடப் பெற்றுள்ளது. இலிங்கம் ஏடுபோல் இருக்கும்.

சைனர்களோடு பேசிய தோஷம் தீர்தற்பொருட்டுத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இத்தலத்தில் பிரதிஷ்டை செய்து பூசித்த சிவலிங்கப் பெருமானுக்குச் சிறுமையிற்றெள்ளியார் என்பது திரு நாமம். இத்தலத்தில் வையை ஆற்றின் தென்கரையில் பாண்டியன்

படை வீடு செய்து அதிற்சிலகாலமிருந்து வழிபாடு செய்து வந்தான். சேடனூர் - திருவேடகம். ஆதிசேடன் பூசித்த தலமாதலின் இஃது இப்பெயர் பெற்றது.

திருஞான சம்பந்தர் பாடிய தலம்

இயன்றிரு வேடக மேடக நாதர்
வியன்சுந் தரநா யகிவே கவதி. (சிவ)
வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே.
(திரு ஞா 3 ஆம். திரு).

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில்வழங்கும் தேவாரப்பாடல்கள்: உண்ணீராரேடகமுமூறலம்பர்;- அதிகை. திருநா.
ஓமாம்புலியூரோரேடகத்தும் - பொது. திருநா.

50. திருஐயாறு

தஞ்சாவூருக்கு வடக்கே ஏழு மைல் தொலைவில் இத்தலம் உள்ளது. அப்பர் சுவாமிகளுக்குக் காட்சியளித்த தென்கயிலாயம். ஆடி அமாவாசையன்று உற்சவம். சுந்தரருக்காக ஆற்றில் மணல் வழி தோன்றிற்று. இந்திரன், வாலி முதலியோர் வழிபட்ட தலம். சித்திரைப் பெருவிழாவில் இறைவர் தம்மைத்தாமே பூசித்த ஆத்ம பூஜை உற்சவமாக நடக்கிறது. இப்பெருவிழாவின் இறுதியில் சப்த ஸ்தான உற்சவம். நந்திகேசுவரரும் அவர் தேவியாரும் வெட்டி வேர்ப் பல்லக்கிலும் ஈசுவரனும் அம்பிகையும்கண்ணுடிப்பல்லக்கிலும் காட்சி. திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, வேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய 6 தலங்களுக்குச் சென்று மீளுதல். ஆட்கொண்டார் சந்நிதி. குங்குலியக் குழியுடன் தியாகராஜர் சமாதி உள்ளது.

சுவாமி பெயர்: பஞ்சநதீசுவரர், செம்பொற்சோதீசுவரர்.
அம்பிகை: தருமசம்வர்த்தனி, அறம் வளர்த்த நாயகி.
தீர்த்தம்: காவிரி.

அப்பர் சுவாமிகள் எழுந்து வந்ததாகச் சொல்லும் தீர்த்தம் கோயிலுக்கு வடமேற்கில் உள்ளது.

சுசரிதன் என்ற ஒரு அந்தணப்பிள்ளையை இயமன் தொடர்ந்து வர, சுவாமி வெளிப்பட்டு இயமனை விலக்கி அப்பிள்ளையைச் சோதி ரூபராய் ஆட்கொண்டதாகவும், ஆதலால் அவர் சந்நிதிக் கெதிரில் ஒரு குழி உண்டாக்கி அதில் குங்கிலியம் போட்டுக் கொண்டு வருவதாகவும் சொல்லுகிறார்கள். தம்மை அர்ச்சிப்பவர் காசியிலிருந்து வரத்தவறியபோது சுவாமி தம்மையே தாம் பூசித்துக் கொண்ட தலம். ஐயாறதனில் சைவனுகியும். (திருவா)

தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது. நந்தி பூசித்த தலம்.

வேறு பெயர்கள்: பஞ்சநதம், பூலோககைலாயம்.

கோயிலின் மறுபெயர்: காவிரிக்கோட்டம். கோயில் ஐந்து பிராகாரங்கள்;

ஜபேச மண்டபம் அல்லது முத்திமண்டபம். சூரியபுட்கரிணி, சந்திராமிர்தபுட்கரிணி இறைவனுடைய சடைக்கங்கை, அம்பிகையின் திருமுலைப்பால், திருநந்தி தேவருடைய வாய் நுரை இவ்வைந்தும் நதிகளின் வடிவங்களாக இருக்கப் பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது.

சுற்றுக்கோயில்கள்: (1) தக்ஷிணகைலாயம் (சூரியபுஷ்கரிணிக்குத் தென்கரையில்) (2) உத்தரகைலாயம் மற்றொரு பெயர் லோகமாதேவீச்சுரம். (3) தண்டபாணிகோயில்.

மூர்த்திகள்; 1. ஐயாறப்பர் (சுயம்பு) இவர் வேறுபெயர்கள்: கைலாயநாதர், ஜபேசர், பிரணதார்த்திஹரர்.

2. அம்பிகை: அறம் வளர்த்த நாயகி - தர்மாம்பிகை. திரிபுர சுந்திரி

3. விநாயகர்: ஆதிவிநாயகர் முதலிய பல விநாயகர் உருவங்கள். முருகப்பெருமான் கையில் வில்லேந்தியுள்ளார். ஆதலால் தநுசு சுப்பிரமணியர், வில்வேள் நாயனர் என்றும் பெயர்.

(4) தக்ஷிணமூர்த்தி வலப்பக்கமுள்ள மேல் நோக்கியுள்ள வலது கையில் கபாலம். கீழ்நோக்கியுள்ள வலக்கையில் சின் முத்திரை. மேல்நோக்கிய இடக்கையில் சூலம். கீழ்நோக்கிய இடக் கையில் சிவஞானபோதம், திருவடியின் கீழே ஆமை. இவருக்குச் சுரகுருசிவயோக தக்ஷிணமூர்த்தி என்ற பெயர்.

(5) ஆட்கொண்டார்: வீரவடிவம்.இவர் காலின் கீழே கண்கள் பிதுங்க உடல் நடுங்க நா தொங்க இயமன் கிடக்கிறுன்.

தீர்த்தங்கள்: மேலே ஐயாறு என்ற பெயர்க் காரணம் காட்டு மிடத்துக் கூறிய தீர்த்தங்களோடு காவிரித்துறை இங்கு முக்கிய மானது. விருக்ஷம் - வில்வம்.

புராணம்: (1) தன்னேத்தான் பூசித்த வரலாறு. இந்த ஐதீகத்தில் இன்றும் சோமாஸ்கந்த மண்டபத்தில் ஒரு ஸ்படிகலிங்க மும் அம்பிகையும் பூசிக்கப்பட்டு வருகின்றனர்.

(2) நந்தி: சிலாதல முனிவர்மகனர் - முதல் தோற்றம். செபேசுவரர். தவம் - கலியாணம்.

(3) அகத்தியர் குறுமுனியானது

(4) ஆட்கொண்டார் - சுசரிதன் யம பயம் நீக்கியது இயம பயம் நீக்கிய மூர்த்தியே ஆம்.

(5) அம்பிகை - இரு நாழி நெல் கொண்டு தவம் புரிந்தது.

தொன்மை: சூரிய வம்சம் பிரிய விரதன் பூசித்தது. கரிகால் பெரு வளத்தான். வேங்கி நாட்டு விமலாதித்தன். இராசராசன் மனவி ஓலோக மாதேவி உத்தர கைலாயத்தை நிலே நிறுத்தினுள். சடாவர்மன் சுந்தர பாண்டியன் - இராசவள நாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாறு.

உத்தரகைலாசம்: முதலாம் இராசராசன் மனவியான தந்தி சக்தி விடங்கியரான ஓலோகமாதேவியார் ஆவர். ஆதலால் இக்

கோயில் ஓலோகமாதேவீச்சரம் என வழங்குவதாயிற்று. இவர் காலம் 985-1006. ஆகையால் இக்கோயில் இக்காலத்தில் கட்டப் பட்டது.

சோமாஸ்கந்தருக்கு ஓலோகமாவீதிவிடங்கர் எனப்பெயர். இவள் தன் கணவன் சதயநாளிலும் இங்கு விழாக் கொண் டாடினாள். கல்வெட்டுக்களால் பல அணிவகைகள், ஆடை வகை களின் பெயர்கள் தெரிய வருகின்றன.

தென்கயிலாயம்: இராசேந்திரதேவனின் மணவியான பஞ்ச வன்மா தேவியாரால் புதுப்பிக்கப்பட்டது.

பராந்தகன் I 905—947 பல கல்வெட்டுக்கள் விளக்குகள் அமைப்பது பற்றி உள்ளன,

இராஜராஜன் I 985—1015. 17 கல்வெட்டுக்கள் - விளக்கு வைத்தலைப் பற்றியவையே.

இராசேந்திரசோழதேவன் 1011—1043 சிதைவு பட்டுள்ளன, இராஜாதி ராஜன் 1018—1052. 32 ஆண்டைய நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன.

பரகேசரி இராசேந்திரன் 1050—1063. 3 ஆம் ஆண்டில் நில மளித்தது. இராசேந்திரன் I செய்தி விளங்கவில்லை.

பாண்டியன் சடாவர்மன் சுந்தரபாண்டியன் - 2 ஆம் ஆண்டில் நிலமளித்தான்.

விஜயநகர தேவராயர் (1422 - 1449) நிலம் அளித்தது, சதாசிவராய் (1080)

வீரசேவை உடையார் — 19 வேலி நிலம் கொடுத்தது.

மண்டபங்கள் : (1). முத்திமண்டலம் (நாகப்பட்டினம், ஐயாறு, காசி இம்மூன்றிடங்களிலே மட்டும் உள்ளன) (2) நூற்றுக்கால் மண்டபம் (தண்டபாணி கோயிலாக இருக்கிறது) (3) உற்சவ

மண்டபம் (4) ஆஸ்தானமண்டபம் (5) பிரசங்கசபாமண்டபம் (6) சொக்கட்டான் மண்டபம் ஐயாறப்பர் சந்நிதியில்.

விழாக்கள்: (1) சித்திரை மாதத்தில் 12 நாட்கள் விழா சிறப்பாக நடக்கும், 5-ஆம் திருவிழா நாளன்று இறைவன் தன்னைத் தானே பூசித்துக் கொள்ளுதல். (2) சித்திரைப் பூர்ணிமையில் ஏழூர்விழா. (3) மாதவிழா, (4) பங்குனியில் நந்தியின் திருமணம். சுவாமி திருமழபாடிக்கு எழுந்தருளுவார்.

சுற்றுத்தலங்கள்: திருப்பழனம், திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம்.

சிற்பங்கள்: பிரமா, க்ஷேத்திரபாலர் அழகானவை. தக்ஷிண கைலாயத்தில் கருப்பக்கிரக வெளிச்சுவரிலும் கொடுங்கை முதலிய வற்றிலும் காணப்படும் சிற்பங்கள் அனந்தப்பூர், ஜில்லா ஹேமாவதி என்ற ஊரில் உள்ளனவாம்.

கல்வெட்டுக்கள்: 70க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. 1894 இல் 43-ம், 1918 இல் 22ம் 1924 இல் 1 படி எடுக்கப்பட்டன. ஏனையவை பின் எடுக்கப்பட்டவை. இவற்றுள் அறியப்படுவன. (1) ஐயாறப்பர் கோயில் துவாரபாலகர் இரண்டு கைகளோடு இருக்கிறார். பல்லவகாலப் படைப்பு. (2) 3 ஆம் பிராகாரத்துக் கோபுரம் விக்கிரமசோழன் படைப்பு. (3) 1381 இல் வீரச்செவ்வண உடையார் காலத்தில் செந்தலைக் கருப்பூர் கச்சி வீரப் பெருமாள் மகனார் பல சீர்திருத்தங்கள் செய்தார். (4) மேலக் கோபுரம் முதற் பிராகாரத்துத் திருமாளிகை பூசப்படித்துறை அச்சுதப்ப நாயக்கர் காலத்தன. (5) முதலில் அம்மை திருப்பெயர் திருக்காமகோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்றும் உலகுடை நாச்சியார் என்றும் குறிக்கப்பட்டுள்ளார். இப்பொழுது தர்மாம்பிகை தர்மசம்வர்த்தினி என்று கூறுகின்றனர்.

பெயர்கள்: (1) முதல் இராசராசன் காலத்து - இராசேந்திர சிங்கவள நாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாறு (2) III குலோத்துங்கன் - புவனமுழுதுடையாள் வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாறு.

சப்தஸ்தானமும் முனிவரும்:

கண்டியூர்	—	காசிபன்	சூரியபுட்கரிணி
பூந்துருத்தி	—	கௌதமன்	மரவுரி
சோற்றுத்துறை	—	ஆங்கிரச	நேதி - நியதி
பழனம்	—	குற்சன்	சூரியபுட்கரிணி
திருவேதிகுடி	—	அத்திரி	பரம பஞ்சாக்கரம்
நெய்த்தானம்	—	பிருகு	சாகம்-இலை
திருவையாறு	—	வசிட்டன்	தவங்களை இயன்றன்,

மூவரும் பாடிய தலம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்
டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழை
யென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவை
யாறே.

(திருஞா. 1ம். திரு)

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும்
பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின்
புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன
கண்டேன்.

(திரு நா 4 ஆம் திரு.)

பரவும் பரிசொன் றறியேன் நான் பண்டே
உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த
நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கழுகுண்ணத் தெங்கங்
குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா
றுடைய அடிகளோ. (சுந்தரர்)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்குந் தேவாரப் பாடல்கள்: ஐயாற கலாத வையன் கண்டாய் - கோடிகா. திருநா.

அடைவே புனல்சூழை யாற்றுர் தாமே. திருப்பழனம். திருநா

அந்திப்போ தனலுமாடி யடிகளே யாறுபுக்கார். நெய்த்தானம் திருநா

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார் - வீழிமிழலை திருநா

அயவந்தி யுள்ளான்கா ணையா றன்காண் - சிவபுரம். திருநா

பொன்னிசூ ழையாற்றெம் புனிதன் றன்னே - செங்காட்டங்குடி திருநா

ஆனேருன் றூர்ந்துழலு மையா றன்காண்- ஆரூர் திருநா.

ஐயாற்றுத் தரிசனமுறை

விடிய 6 நாழிகைக்கு எழுந்து புஷ்ய தீர்த்தத்தில் நீராடிக் கோயில் வந்து தக்ஷிணகயிலாஸம் வந்து வணங்கிப் பிரதக்ஷிணமாக நந்தி ஸந்நிதானம் வந்து 5, 12 தரம் நமஸ்கரித்து, கோபுர வாயிலின் தென்புறம் உள்ள தேவியோடு எழுந்தருளியுள்ள (கர்ணமுடி — நந்திபத்தினி) நந்திப்பிராணைப் பத்தினியைக் கொண்டு தரிசிப்பித்து தானும் தரிசித்து, அபீஷ்டப் பிரார்த்தனம் செய்து, செப்பியேசுவரர்

ஸந்நிதியில் (தக்ஷிணாமூர்த்தி) 25 தரம் ஜபித்து, சூரிய புஷ்கரிணியில் ஸ்நானம் செய்து விபூதி தரித்து, ஈர உடையோடு திருப்பழனம் வட வீதி வழியாகக் கோயிலுள் ஸ்வாமி தரிசனம் செய்து, திருச்சோற்றுத் துறை வலம் வந்து திருவேதிகுடி, திருக்கண்டியூர், பூந்துருத்தி, நெய்த்தானமாகிய தலங்களுக்கு புருஷ பாரியைகள் நடுவில் யாரும் போகாத வண்ணம் சென்று, குங்குலிய நாயனரை (ஆட்கொண் டார்) தரிசித்து பஞ்சாக்ஷரம் ஜபம் செய்து, ஐயாறப்பர்க்கு அர்ச்சனை செய்வித்துப் பிரஸாதங்களைப் பத்தினியுடன் உட் கொண்டு சிவனடியார்கட்கும் உண்பித்துச் செய்ய வேண்டும்.

51. திரு ஒற்றியூர்: தொண்டைநாடு

இரயில்வே நிலையம் உள்ள தலம். சென்னைக்கு வடக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. புற்றிடங்கொண்டார். வன்மீகர்; படம்பக்கநாதர் - மூலஸ்தானமூர்த்தியின் பெயர் கள். புற்றிடங்கொண்டாருக்கு வடக்கே ஆதிலிங்கம் வெகு பளபளப்பாய் இருக்கிறது. கார்த்திகை பௌர்ணமிக்கு அடுத்த இரண்டு நாட்கள் புற்றின் மீது உள்ள கவசம் எடுத்து விடப்படும். புற்றுகவே உள்ள மூர்த்தியைத் தரிசிக்கலாம்.

பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் சோழமன்னன் எல்லாத் தலங் களின் படித்தரத்தையும் குறைத்தனுப்பிய கட்டளை ஓலையில் இவ்வூர் இறைவன் ஒருவரும் அறியாதபடி, 'ஒற்றியூர் நீங்கலாக மற்றையூர்க் கிக்கட்டளை' என்று எழுதியபடியால் எழுத்தறியும் பெருமான் எனப் படுகிறார். வடிவுடையம்மனுக்கு மலையாளத்து அந்தணர் பூசை செய்கிறார். சப்த விடங்கக் கணக்கில் சேராத தியாகராஜ தலம். மாசி பௌர்ணமி தீர்த்தவிழாவை யொட்டி 10 நாள் விழா. 9-ஆம் திரு நாள் மகிழடி சேவை பிரபலம். கர்ப்பக்கிரகம் கஜப்பிருஷ்ட வடிவு. 'வாவியெல்லாம் தீர்த்தம், மணலெல்லாம் சிவலிங்கம்' - பட்டினத் தடிகள். பட்டினத்தடிகள் முத்தித்தலம். கலிய நாயனார் தொண்டு செய்த தலம். சங்கிலி நாச்சியார், சுந்தரர் திருமணம். ஆதிசங்கரர் லகுலீசர் உருவங்கள் உள்ளன.

சுவாமி: ஆதிபுரீசுவரர்; மாணிக்கத் தியாகர்.

அம்பிகை: வடிவுடையம்மை

தீர்த்தம்: பிரம தீர்த்தம் மரம்: மகிழமரம். வட்டப் பாறை யம்மை துர்க்கை சந்நிதி. பிரளயத்தை மேல் வராமல் தடுத்ததால் ஒற்றியூர். ஏலேலருக்கு மாணிக்கங்கள் கொடுத்ததால் மாணிக்கத் தியாகர். வாசுகியை இறைவர் தம் உருவத்தில் சேர்த்துக் கொண் டதால் படம் பக்க நாதர். ஸ்தல புராணம் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சாகாத தலபுராணமொன்றும் திருஞான சம்பந்த சுவாமி கள் அருளிய பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பதிகங்கள் ஐந்தும் சுந்தரர் அருளிய பதிகம் இரண்டும் இத்தலத்திற்கு உள்ளன.

வளர்திரு வொற்றியூர் மாணிக்கத் தியாகர்கண்
களிகூ ரமர்ந்தநா யகிகம லாசனன். (சிவ)

வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீ தன்றன் பாதம்
மெள்ளத்தான் அடையவேண்டின் மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார் காயத்துக் கலந்து நின்று
உள்ளத்துள் ஒளியு மாகும் ஒற்றியூ ருடைய கோவே.
(திரு ஞா. 4ஆம் திரு)

விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன் வெண்மழுவாள்
படையவன் பாய்புலித்தோல் உடைகோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண்தோ
டுடையவன் ஊனமில்லி யுறை யும்மிடம் ஒற்றியூரே.
(திரு ஞா. 3 ஆம்திரு)

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றுனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே.

(சுந்தரர்)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:-

ஊரும தொற்றியூர் மற்றையூர் பெற்றவா நாமறியோம்- வேள் விக்குடி.சு.

ஒற்றியூரொற்றி யாவுடையான் கண்டாய் - கோடிகா. திருநா.

நலமாகு மொற்றியூரொற்றியாக — புறம்பயம் - திருநா.

உமையுருவனுய் ஒற்றியூர் பதியாகிலும் — புறம்பயம் - திருநா.

ஒற்றியூராரூராய் நீயே யென்றும் — நெய்த்தானம் - திருநா.

உரையாரும் புகழானே யொற்றியூராய் — ஆனைக்கா - திருநா.

ஊர்தானுவதுலகேழு முடையார்க் கொற்றியூராரூர், கடவூர் மயானம். சு.

உமையாளோடு மிமையோர் பெருமானுரொற்றியூரார் — வீழி மிழலை. திருநா.

ஒற்றியூரிற் பற்றியாள்கின்ற பரமன்றன்னை — நாகைக் காரோணம் திருநா.

ஆவணமோ வொற்றியோ வம்மானுர்தாம் —ஆரூர். திருநா.

ஒற்றியூர் மேவினுன் காண் — ஆரூர். திருநா.

ஒற்றியூரென்ற வூனத்தினுலது தானோ—கோடிக்குழகர்-சு.

படம்பக்கம் கொட்டுந் திருவொற்றியூர் — பரங்குன்றம்-சு.

ஓதமேவிய வொற்றியூரையுமுத்தி நீர் மகிழ்வீர் — முருகன் பூண்டி. சு.

உரையார் தொழநின்ற வொற்றியூரும் — அதிகை. திருநா.

ஒற்றுமூரொற்றியூர் திருவூறலொழியாப்பெற்றமேறி — இடையாறு சு.

ஒற்றியூரும் ஊரே யுணரக் கூறிர் — ஆமாத்தூர் - திருநா.

திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா — கச்சியே கம்பம் - திருநா.

ஆரூரொற்றியூரேலும் மதன்று — ஓணகாந்தன்றளி - சு.

ஒற்றியூர் பற்றி யிருந்தார் தாமே — ஆலங்காடு - திருநா.

ஒற்றியேறு கந்தேறு மொருவனூர் — பாசூர் - திருநா.

கச்சிமேய கண்ணுதலிக் கடலொற்றி கருதினுமே — பாசூர் - திருநா.

கருதுமிடந் திருவொற்றியூரிடங் கொண்டிருந்த பிரான் — வெண்பாக்கம் சு.

திருவொற்றியூரான்காண் — காளத்தி - திருநா.

தண்பொழிலொற்றி மாநகருடையாய் — வடதிருமுல்லைவாயில் சு.

கடலொற்றியூர் மற்றுறையூரவையும் — பொது - திருஞா.

திரைசூழ்ந்த வொற்றியூரெம்முத்தமனே — பொது - திருநா.

உறையூர் கடலொற்றியூரூற்றத்தூர் — பொது - திருநா.

அளப்பூரோமாமபுலியூரொற்றியூரும் — பொது - திருநா.

ஊரடங்கவொற்றிநகர் பற்றிக் கொண்டார் - பொது. திருநா.

52. திருஓணகாந்தன் தளி தொண்டைநாடு

காஞ்சீபுரத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது இத்தலம். சர்வதீர்த்தத்திற்கு அருகிலுள்ளது. சுந்தரர் பொன்பெற்ற தலம்.

சுவாமி : ஓணகாந்தேசுவரர்.

அம்பிகை : காமாட்சியம்மை.

வாணுசுரனுடைய சேனைத்தலைவர்களாகிய ஓணனும் காந்தனும் பூசித்துப் பேறுபெற்ற தலம். சுந்தரர் பாடிய தலம்.

ஓணகாந் தன்றளி யோண காந்தீசர்
ஓணகாந் தீசுவரி யுயர்தளி தீர்த்தம் [சிவ]

நெய்யும் பாலும் தயிருங் கொண்டு
நித்தம் பூசனை செய்ய லுற்றார்
கையில் ஒன்றும் காணம் இல்லைக்
கழல டிதொழு துய்யின் அல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட ஆடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறென் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே.

(சுந்தரர்)

53. திரு ஒத்தூர் தொண்டைநாடு

காஞ்சிபுரத்திலிருந்து பத்தொன்பது மைல் தொலைவில் உள்ளது இத்தலம். காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி போகும் பஸ் வழி. கோயிலின் மேற்கில் சேயாறு (செய்யாறு) ஓடுகின்றது. சிவபெருமான் ஆல நிழலில் இருந்து தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தை உபதேசித்த தலம். சம்பந்தர் அடியார் வேண்டுகோளுக்கு இணங்கி ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய தலம். தைமாதம் இரதசப்தமியைத் திருநாளாகக் கொண்ட பத்துநாள் திருவிழா நடக்கிறது. நந்தி கிழக்கு நோக்கி உள்ளது. வேதபுரி எனவும் வழங்கும். ஒத்து-வேதம். பூசித்தோர் - சூரியன், வேதம்.

திருஞானசம்பந்தர் பாடியதலம்
சுவாமி : வேதநாதேசுவரர்.
அம்பிகை : இளமுலை நாயகி, பாலாம்

தீர்த்தம் : கல்யாணகோடி தீர்த்தம்.
மூலியில் உள்ளது. விருட்சம் - பனை

கோயிலுள் கல்லினுல் செய்யப்பட்ட ஒரு பனை.
அது பாதி பெண், பாதி ஆண். ஆதிகேசவப்பெரு
உள்ளே இருக்கிறது ஸ்தலபுராணம் கருணைரக்கவிர
யது. காமூர் : திருஒத்தூருக்குக் கீழ்ப்பக்கம்
கருணைரக்கவிராயர் பிறப்பிடம்.

சுவாமிபெயர் : வீரட்டேசுவரர்.

நந்திகேசுவரர் கிழக்கு முகம். இப்படியே திருவலம், திருமுல்லை
வாயிலிலும் உள்ளார்.

பிராகாரம் மூன்று. அம்பிகை தெற்குமுகம். ரதசப்தமி
அன்றைய தினம் இரதம்.

மிகுதிரு வோத்தூர் வேதநா தர்வெண்
ணகைமுக வேத நாயகி வேதம் [சிவ]
பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங்கால்
ஒத்தூர் மேய வொளிமழு வாள்அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. [திரு ஞா 1- ஆம் திரு]

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும்
தேவாரப் பாடல்கள் :

ஒத்தூரொருநாளு நீங்கார்போலும் — சாய்க்காடு. திருநா.
ஒத்தூருமுறையூருமேவினுனே — ஆரூரநெறி. திருநா.
ஒத்தூருமாற்பேறு மாந்துறையும் — அதிகை. திருநா.
நெற்குன்ற மோத்தூர் நிறைநீர்மருகல் — பொது. திருஞா.
உஞ்சேனை மாகாளமூற லோத்தூர் — பொது. திருநா.
உறையூரு மோத்தூரு மூற்றத்தாரும் — பொது. திருநா.

சோழநாடு

ஃ இரயில்வே நிலையத்திற்கு வடக்கே 11 மைல்
.. கொள்ளிட நதியைக் கடக்க வேண்டும்
ஃ பத்தொன்பது மைல் தொலைவில் உள்ளது.
டி வழியாகப் பஸ் மூலம் போகலாம்.

மி : துயர்தீர்த்தநாதர்

மபிகை : பூங்கொடிநாயகி

தீர்த்தம் : கொள்ளிடநதி.

தக்ஷிணமூர்த்தியிடம் அம்பிகை பிரணவ உபதேசம் பெற்ற தலம். "பிரணவ வியாக்கிரபுரம்" என்று ஒரு பெயர். புலிக்குப் பயந்து வில்வமரம் ஏறிய வேடனுக்கு முத்தி. நடராஜர் இருக்குமிடத்தில் தட்சிணமூர்த்தி இருக்கின்றார். தட்சிணமூர்த்தி இருக்குமிடத்தில் நடராசர் இருக்கிறார்.

கோயிலுக்குக் கிழக்கே வடதளி என்ற ஒரு ஆலயம் இருக்கிறது. திருஞானசம்பந்தர், அப்பர் பாடிய தலம்,

உயரோ மாம்புலி யூர்துயர் தீர்த்தவர்
வியனூர் பூங்கொடி விமலிகொள் ளிடமாம். (சிவ.)

பூங்கொடி மடவாள் உமையொரு பாகம்
புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிருள் நட்டம் ஆடுமெம் விகிர்தர்
விருப்பொடும் உறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே.

(திருஞா. 3-ஆம். திரு)

திருத்தலங்கள் வரலாறு

55. கச்சி அநேகதங்காபதம்: (தொண்டை நாடு)

காஞ்சி நகரின் வடமேற்கே 1½ மைல் தொலைவில் உள்ளது. புத்தேரித் தெருவிற்கு அருகிலுள்ளது. காஞ்சீபுரத்திலுள்ள சிவாலயங்களில் அம்பிகையின் மூலஸ்தானம் இல்லை. காமாக்ஷி யம்மன் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது. அநேக பேசம் என்றும் வழங்கும். விநாயகர் பூசித்த தலம்.

சுவாமி : அநேகதங்காபதேசுவரர்.
அம்பிகை : காமாட்சியம்மை.

கணபதியும் குபேரனும் பூசித்த தலம்.

ஆனை உரித்தான் வயல் எனப் பெரிய வயல்கள் கோயி லுக்கே மேற்கே உள்ளன. சுந்தரர் பாடியதலம்.

அனேகதங் காவதம் அரன்கா பதேசர்
மனோன்மணி தானும் வனமை தானும். (சிவ.)

தேனெய் புரிந்துழல் செஞ்சடைஎம்பெரு
மானதிடம்திகழ் ஐங்கணையக்
கோனைஎரித்தெரி யாடிஇடங்
குலவானதிடம்குறை யாமறையாம்
மானைஇடத்ததொர் கையன்இடம்மதம்
மாறுபடப்பொழி யும்மலைபோல்
யானைஉரித்தபி ரானதிடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. (சுந்தரர்)

56. கச்சி ஏகம்பம்: (தொண்டை நாடு)

இரயில்வே நிலையம் அமைந்துள்ள தலம்.

ஐயடிகள்காடவர்கோன் அரசாட்சி செய்த நகர். மறவாது கல்லெறிந்த சாக்கியர்; திருக்குறிப்புத் தொண்டர்முத்தி பெற்ற தலம்.

அம்பிகை சிவபூசை செய்து தழுவப் பெற்ற சிவலிங்கம் தழுவக் குழைந்த கம்பன் என்ற பெயர் பெற்றது.

என்றும் அழியாத மாவடியின் கீழ் இறைவன் இருத்தலால் ஏகம்பன் ஆயினன்.

காஞ்சிப்பதியிலுள்ள எல்லாச் சிவாலயங்களும் தேவார வைப்புத்தலங்களே.

மூலஸ்தானம் மணலால் ஆனதால் அதற்கு அபிடேகமில்லை. புனுகுச்சட்டமே சாத்தப் பெறுவது. ஆவுடையாருக்கே அபிடேகம். சிவலிங்கத்தின் பின்புற மாடத்தில் திருமணக்கோல உருவில் பார்வதியும் பரமேசுவரரும் காட்சியளிக்கின்றனர்.

காமாட்சியம்மையார் இருநாழிநெல்கொண்டு 32 அறமும் வளர்க்கிறார். குமரகோட்டத்தின் அமைப்பு சோமாஸ்கந்தர் உருவம் போன்றது.

குமரகோட்டத்தில் பூசைசெய்த சிவாசாரியரே கந்தபுராண ஆசிரியர்.

பஞ்சபூத ஸ்தலங்களுள் மணல் இலிங்கமுள்ள இந்த ஸ்தலம் பிருதிவித்தலம்.

சுந்தரர் இங்கு இடக்கண் பெற்றார். முத்தி தரும் நகரங்கள் ஏழனுள் இது ஒன்று. 108 விஷ்ணுஸ்தலங்களுள் 14 ஸ்தலங்கள் இவ்வூரில் உள்ளன.

சோழன் கரிகாற்பெருவளத்தான் அமைத்த நான்கு ராஜ வீதிகள் இங்கு உள்ளன. மதில்களின் சிறப்புக்கள் தேவாரங்களில் கூறப்பட்டுள்ளன. இதைக்கொண்ட தொண்டைநாட்டுப் பகுதிக்கு எயிற்கோட்டம் என்ற பெயர்க்குக் காரணம் இம்மதில்கள் ஆதலால் காஞ்சிப்புரத்திற்குப் பழம்பெயர் கச்சிப்பேடு என்பது. கச்சிப்பேட்டு இளந்தச்சனார், பெருந்தச்சனார், காஞ்சிக்கொற்றனார், நன்னாகையார் முதலிய சங்கப்புலவர் இந்தநகரத்தினர்.

மணிமேகலையால் இந்நகரின் அக்கால வாணிகம் சமயப் பெருமக்கள் கூடியிருந்த சிறப்பு முதலியனவற்றை அறிகிறோம். பல்லவர் காலத்திலும் இந்நகர் சிறப்புற்று இருந்தது. ''பாரூர் காலத்திலும் இந்நகர் சிறப்புற்று இருந்தது. ''பாரூர் பல்லவனூர்'' என்பது சுந்தரர் தேவாரம். மாதவச் சிவஞானயோகிகள் காஞ்சிப்புராணம், மகாபாடியம் முதலிய நூல்களை இயற்றி

யுள்ளார். கல்வி கரையிலாத காஞ்சி மாநகர் என்பது அப்பர் சுவாமிகள் வாக்கு. நகரேஷு காஞ்சி என்று வழங்குவதும் காண்க. திருவாசகம், திருக்கோவையாரிலும் இத்தலம் குறிக் கப்படுகின்றது.

சுவாமி : ஏகாம்பர நாதர்.
அம்பிகை : ஏலவார் குழலி; காமாட்சியம்மை.
தீர்த்தம் : கம்பாநதி.
விருட்சம் : மா.

விகடசக்கர விநாயகர், மாவடி முருகர், நிலாத்துண்டப் பெருமாள். சந்நிதிகள்.

காஞ்சிபுரம் : வராஹகங்கை, வராகநதீசுரர். மேற்கே ஏழு மைல் தொலைவில் வழுவூர் என்று ஒரு ஸ்தலம் இருக்கிறது. ஆண்டார் கோயில் என்று வழங்கும்.

உருவிலியாரென்பது தெற்கே பிறையூர், பிரம்ஸபை, சூரசூர், மணிகண்டேசம் காஞ்சி. கையர் தொகைக்களமாகிப் புகுதரும் மணிகண்டீசம்.

காஞ்சி. குரு, மச்சம், பரசுராமன் முதலியோர் பூசித்தி தலம். ஆடசன்பேட்டையில் திருக்குறிப்புத் தொண்டனார் ஆலயம் இருக்கின்றது.

''விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன் கச்சிக் கம்பன்காண்'' (அப்பர்)

''ஏல வார்குழ லாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே'' (சுந்தரர்)

இம்மேற்கோள்களால் இறைவன் திருநாமம் கம்பன் என்றே ஊகிக்க இடமுண்டு.

சுந்தர மேவிய தொண்டை மண்டலந்தனில்
இந்துவாழ் சடையா னெழிற்றலம் புகல்வேன்.
இறைகாஞ் சிப்பதி யேகாம்ப ரர்பால்
உறைகா மாட்சி யுமைகம் பாநதி. (சிவ.)

கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தின் நீரா னான்காண்.
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கும் மின்காண்
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்காண் நிலாவூரும் சென்னி யான்காண்
நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்ச டைமேல்
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே.

(திருநா. 6-ஆம் திரு.)

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி நூலொருபால்
பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தார் அவர்போற்ற அணங்கினொ
டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே

(திருஞா. 1-ஆம் திரு.)

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅமரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்காணக்
கண்அடி யேன்பெற்ற வாறே.

(சுந்தரர்)

மூவரும் பாடிய தலம்

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

காமருபூங் கச்சியேகம்பன்றன்னை—கோயில். திருநா.
கணம்புல்லன் கருத்து கந்தார் காஞ்சி யுள்ளார்—
கழிப்பாலே. திருநா.
ஏகம்பமேவி யிருந்தார் போலும்—சாயக்காடு. திருநா.

மாடங்காட்டுங் கச்சி யுள்ளீர்—வெண்காடு. சுந்தர.
மதிற்கச்சி மன்னுகின்ற கம்பனை எங்கயிலாயமலையான்
றன்னை—நாரையூர். திருநா.
மதிற்கச்சி யேகம்ப மேயான் கண்டாய் —மங்கலக்குடி.
திருநா.
ஏகம்பமேயானே யென்றேனானே—ஐயாறு. திருநா.
கச்சியேகம்பனே யென்றேனானே—ஐயாறு. திருநா.
ஏகம்பமேவியிருந்தாய் நீயே—ஐயாறு. திருநா.
ஏகம்பமேய விறைவனீயே—ஐயாறு. திருநா.
ஏகம்பத் தென்னீசனீயே என்றும்—நெய்த்தானம். திருநா.
கறைகலந்த பொழிற் கச்சிக் கம்பமேய கனவயிரத்திரடூணே
மழபாடி. திருநா.
கச்சியேகம்பனே காரோணத்தாய்—ஆனைக்கா. திருநா.
மகிழ்ந்தானைக் கச்சியேகம்பன்றன்னை—ஆனைக்கா. திருநா
கடிகொள் பூம்பொழிற்கச்சியேகம்பனார்—துருத்தி. திருநா.
எழிலாருமேகம்பமேயான்றன்னை—துருத்தி. திருநா.
கம்பனே கச்சிமா நகருளானே—சோற்றுத்துறை. திருநா.
இன்னமுதை மன்னிய சீரேகம்பத்திலுறைவானை—நாகேச்
சுரம். திருநா.
ஏகம்பமே யாரு மெல்லா மாவார்—இடைமருதூர். திருநா.
கச்சியேகம்பனை—நள்ளாறு. திருநா.
கச்சியேகம்பன்றன்னை—வீழிமிழலை. திருநா.
கலிக் கச்சிமேற்றளியுளார் குளிர்சோலை யேகம்பத்தார்—
வீழிமிழலை. திருநா.
ஏகம்பனாருறைகின்ற கருவிலிக் கொம்பனார்—கருவிலி.
திருநா.
ஏகபேமேயானை—செங்காட்டங்குடி. திருநா.
கம்பனைக் காலாற் காய்ந்த காலனை—நாகைக்காரோணம்
திருநா.
ஏகம்பமேயானை எம்மான் றன்னை—நாகைக்காரோணம்
திருநா.
கச்சி யேகம்பன்றன்னைக் கனலெரியாடுவானை—
பெருவேளூர். திருநா.
காமருபூம்பொழிற் கச்சிக்கம்பன்றன்னை—தலையாலங்
காடு. திருநா.
திகழுந் திருக்கச்சி யேகம்பனை—கடுவாய்க்கரைப்புத்தூர்.
திருநா.
கச்சிப் பொலி காமக் கொடியுடன் கூடியிச்சித்திரும்பூளை
இடங்கொண்ட வீசன்—இரும்பூளை. திருஞா.

கச்சியேகம்பத்தெங்கடவுளாரும்—வெண்ணியூர். திருநா.
காமருபூங் கச்சியேகம்பத்தான்காண்—புத்தூர். திருநா.
கொழும்பவளச் செங்கனிவாய் காமக்கோட்டி
கொங்கையிணையமர் பொருதுகோலங்கொண்ட
தழும்புளவே. —அதிகை. திருநா.
இடைமருதின்னம்பரேகம்பமும்—அதிகை. திருநா.
கச்சியூர் கச்சி சிக்கனெய்த்தானமிழலை—இடையாறு. சு
இருக்கு மூரினியறித்தோமேகம்பமோ—ஆமாத்தூர். திருநா.
கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர் தன்னுள்ளார்—
கச்சிமேற்றளி. திருநா.
கச்சிமூதூர் காமக் கோட்ட. முண்டாக—ஓணகாந்ததன்றளி.
சுந்தர.
காரணவுமணி மாடங்கடைநவின்ற கலிக்கச்சி—கச்சி நெறிக்
காரைக்காடு. திருஞா.
மல்கு செல்வக்கலைநிலவு கையானைக் கம்பன்றனை—
மாற்பேறு. திருநா.
கற்பனவுந் தானேயாய கச்சியேகம்பனை—மாற்பேறு.
திருநா.
உளங்கொள்வாருச்சியார் கச்சியேகம்பன்—இலம்பையங்
கோட்டூர். திருநா.
ஊராகவேகம்பமுகந்தார் தாமே—ஆலங்காடு. திருநா.
கச்சிமேய கண்ணுதலைக் கடலொற்றி கருதினானை—
பாசூர். திருநா.
இடைமருதோ டேகம்பத் தென்றும்நீங்கார்—பாசூர்.
திருநா.
வியன் கச்சிக் கம்பன் காண்—காளத்தி. திருநா.
இடிப்பான் காணென் வினையை யேகம்பன்காண்—
காளத்தி. திருநா.
ஏகம்பமேவினான் காண்—காளத்தி. திருநா.
ஏகம்பமேயான்காண்—காளத்தி. திருநா.
எரிபவள வண்ணன் காணேகம்பன் காண்—காளத்தி.
திருநா.
திருவேகம்பத்தான்காண்—காளத்தி. திருநா.
ஏகம்பமேவினார் தாமிமையவர் பரவியேத்த—பருப்பதம்.
திருநா.
வடகச்சியு மச்சிறு பாக்கநல்லம் கூரூர்—பொது. திருஞா.
கச்சிப் பலதளியுமேகம் பத்துங் கயிலாத நாதனையே
காணலாமே—பொது. திருநா.

காஞ்சீபுரம்: ஏழுவாரத்திற்கு முரிய ஏழு தீர்த்தங்கள். இஷ்டசித்தி : இது கச்சபேசுவரர் கோயிலுக்குள் உள்ளது. (ஞாயிறு).

(2) திங்கள். சிவகங்கை, ஏகாம்பரேசுவரர் கோயில்.

(3) செவ்வாய் மங்களதீர்த்தம்; கங்கை கொண்டான் மண்டபத்துக்கு அடுத்தது.

(4) புதன் : இந்திர தீர்த்தம், சங்கதீர்த்தம், இரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்தது.

(5) வியாழன் : காயாரோகணம்.

(6) வெள்ளி : காமாக்ஷியம்மன் கோயில்.

(7) சனி : சர்வதீர்த்தம்.

கச்சி குமரகோட்டம் : இதில் பிராகாரத்தில் நவவீரர்களும் வீரபத்திரக்கடவுளும் எழுந்தருளியிருக்கிறார்கள். யந்திரம் வட புறத்தில் தனியே பூசிக்கப்பட்டு வருகிறது.

இதில் ஏகாம்பரேசுவார் கோயிலின் பெரிய கோபுரவாயிலில் வலப்பபுறச்சுவரில் பின்வரும் பெயர்கள் காணப்படுகின்றன.

வேங்கடபதிதேவ மகாராயர்
அச்சுதப்ப நாயக்கர்

காஞ்சீபுரத்திற்குப் பெயர் பன்னிரண்டு.

காஞ்சீபுரம்	இலயசித்து
திரிபுவனசாரம்	பிரமபுரம்
காமபீடம்	விண்டுபுரம்
தபோமயம்	சிவபுரம்
மும்மூர்த்திவாசம்	சகலசித்தி
தூண்டீரபுரம்	கன்னிகாப்பு

காஞ்சீபுரத்தில் மாமரத்தின் அடியில் அம்பிகை தூண்டா விளக்கு ஏற்றி வைத்தமை பெரியபுராணத்தால் அறியலாம். நதிகள் ஏழு : பம்பை, கம்பை, மஞ்சள்நதி, வேகவதி, பாலி, சேயாறு.

57. கச்சி நெறிக்காரைக்காடு: (தொண்டைநாடு)

சுவாமி : காரைத்திருநாதேசுவரர்

இது காரைத்தருக்கள் செறிந்திருந்தமையால் இப்பெயர் பெற்றது. சத்தியவிரதம் எனவும் வழங்கும். சிவி என்னும் இந்திரனும்

புதனும் பூசித்துப் பேறுபெற்ற தலம். இந்திரன் பூசித்தமையால் இந்திரேசம் எனவும் கூறப்படும்.

சுவாமி: காரைத்திருநாதேசுவரர்.
அம்பிகை : காரார்குழலி. காமாட்சியம்மை.

திருஞானசம்பந்தர் பாடியதலம்.

நெறிக்காரைக் காடு நெறிக்காரை நாதர்
கறைக்குழல் கமலாம் பிகைகமழ் காரை. (சிவ.)

வாரணவு முலைமங்கை பங்கிரைாய் அங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரங்கள்:

58. கச்சித் திருமேற்றளி: (தொண்டை நாடு)

இந்த ஆலயம் காஞ்சீபுரத்தின் மேற்குப்பக்கத்தில் உள்ள பிள்ளைப்பாளையத்தில் இருக்கிறது. இக்கோயிலில் சிவபெருமான் சந்நிதிகள் இரண்டுண்டு. ஒன்று திருமால் உருவம் ஓதவுரு கீசர் என்ற பெயர். மற்றொன்று திருமேற்றளிநாதர் சந்நிதி. சந்நிதித்தெருவின் கோடியில் ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) கோயில் உள்ளது. இவர் வருகையால் இப்பகுதி பிள்ளையார் பாளையம் எனப்பெயர் பெற்றது. பச்சிமாலயம் எனவும் வழங்கும்.

முருகக் கடவுளுடைய பார்வையால் திருமால் இலிங்கமான தலம்.

சுவாமி : திருமேற்றளிநாதர்.
அம்பிகை : காமாட்சியம்மை.
தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்.

மகாவிஷ்ணு சிவசாரூபம் பெறத் தவம் செய்யப் பெற்ற தலம். புதன் பூசித்த இடம்.

அப்பரும் சுந்தரரும் பாடிய தலம்.

மெய்த்திரு மேற்றளி மேற்றளி நாதர்பண்
வைத்தநற் குழல்வாய் மென்மொழி வாரிதி. (சிவ.)

மறையது பாடிப் பிச்சைக் கென்றகந் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேற் பெய்வளை யாள்தன்னோடும்
கறையது கண்டங் கொண்டார் காஞ்சிமா நகர்தன்
னுள்ளார்
இறையவர் பாட லாடல் இலங்குமேற் றளிய னாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளிஉறையும்
எந்தாய் உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே.
(சுந்தரர்)

கலிக்கச்சி மேற்றளியுளார் குளிர்சோலை யேகம்பத்தார்—
வீழிமழலை. திருநா.
கலிக்கச்சி மேற்றளியே யிருக்கக் கண்டேன்— பொது.திருநா.

கச்சியில் அமலன் விரும்பிய தலங்கள்

வாலீசம் : வாலி பூசித்த தலம்.
நந்தீசம் : நந்தி பூசித்த தலம்.
மயானம் : கச்சிமயானம்.

(இது தேவர்கள் முதலியோர்களின் உடலிற்புகுந்து அவர்கள் வன்மையைக் கவர்ந்து மெலிவித்த பண்டாசுரனை அழித்தற்கு எல்லோரையும் சாம்பராக்கிப்பின்பு அவனைக் கொன்று மீட்டும் அவர்களைப்படைத்த தலமென்பர். இது தேவாரம் பெற்ற தலம்.

விண்டுவேசம் : திருமால் தான் கண்ட திருநடனத்தைத் திருமகள் முதலியோரும் காண வேண்டிச் சிவலிங்கப் பெருமானைத் தாபித்துப் பூசித்த தலம்.

மத்தள மாதவேசம் : இறைவனுடைய திருநடனகாலத்தில் மத்தளங் கொட்டுதற்குத் திருமால் வரம்பெற்ற தலம்.

செவ்வந்தீசம் : வாயுதேவன் செவ்வந்தி மலராற் பூசித்துக் கந்த வாகனென்னும் பேர் பெற்ற தலம்.

வருணேசம் : வருணன் பூசித்துத் தலைமை பெற்ற தலம்.

மாதலீசம் : இந்திரன் தேர்ப்பாகனாகிய மாதலி இராமபிரானுக்குத் தேர்ப்பாகனாகி இராவண சங்காரத்தின் பின்பு அவருடன் வந்து பூசித்த தலம்.

திருமாற்பேறு : திருமால் பூசிக்கச் சிவபெருமான் மகிழ்ந்து சக்கராயுதம் அளித்த தலம்.
இது தேவாரம் பெற்ற தலம்.

அனந்த பற்ப நாபேசம் : இஃது உமாதேவியாருடைய சாபத்தாற் பாம்புருவங் கொண்ட திருமால் பூசித்துப் பழைய உருவம் பெற்ற தலம்.

அகத்தீசம் : அகத்தியர் பூசித்த தலம்.

கடகேசம் : உமாதேவியார் ஏகாம்பரநாதரைப் பூசித்தற்கு முன் கடகமணிந்து பூசித்த தலம்.

காப்பீசம் : உமாதேவியார் ஏகாம்பரநாதரைப் பூசித்தற்காகக் காப்பணிந்து பூசித்த தலம்.

இராமேச்சுரம் : இராமர் இராவணனைக் கொன்ற பாவம் நீங்கப் பூசித்த தலம்.

பரசிராமேச்சுரம் : அரசர்குலத்தை அழித்தற்குப் பரசுராமர் பூசித்துப் பரசென்னும் ஆயுதத்தையும் வரத்தையும் பெற்ற தலம்.

அபிராமேச்சுரம் : வாமனர் மாவலியை வெல்வதற்குப் பூசித்து வரம் பெற்ற தலம்.

விச்சுவநாதம் : காசியிலும் இத்தலம் சிறந்ததென்று எண்ணி விசுவநாதக் கடவுள் இங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலம்.

சிவாத்தானம் : பிரமன் பூசித்து வரம் பெற்ற தலம்.

நவக்கிரகேசம் : நவக்கிரகங்கள் வழிபட்ட தலங்கள்.

யோகாச்சாரியார் சூழ்தானம் : சுவேதர் முதல் இலகுளீசரீறாகிய யோகாசாரியர் தனித்தனியே பிரதிட்டித்துப் பூசித்த தலங்கள்.

மங்களேசம் : உமாதேவியார் பாங்கியாகிய மங்களை பூசித்த தலம்.

தானே தோன்றும் தானம் : தான்றோன்றீசம். சிவபெரு மான் தானே தோன்றிய இடம். இஃது உபமன்னிய முனிவர் பூசித்துப் பாற்கடலைப் பெற்ற தலம்.

இறவாத் தானம் : சுவேதர், மார்க்கண்டேயர் முதலியோர் வழி பட்டுச் சாவாவரம் பெற்ற தலம்.

சுரகரேசம் : சுராக்க னென்னும் அசுரனைச் சிவபெருமான் சங்காரம் செய்த தலம்.

தீர்த்தேசம் : இஃது அம்பிகையின் பூசையை அழித்தற்காக வந்த எல்லாத் தீர்த்தங்களும் பூசித்த தலம்.

பிறவாதத்தானம் : வாமதேவரென்னும் முனிவர் பூசித்துப் பிறவாவரம் பெற்ற தலம்.

கச்சபேசம் : கூர்மாவதாரமெடுத்த திருமால் வழிபட்ட தலம்.

சாத்தேசம் : ஐயனார் பூசித்து வரம் பெற்ற தலம்.

கயிலாயம் : திருமாலும் நாரதரும் திரிபுராதியரை மயக்கிய பாவத்தை நீக்கிக் கொள்வதற்குப் பூசித்த தலம்.

கற்கீசம் : திருமால் கற்கி வடிவமெடுத்த பொழுது பூசித்த தலம்.

ஆடகேசம் : இரணீசம்; இரணியன் பூசித்து வரம் பெற்ற தலம்.

அமரேசம் : ஒவ்வொரு தேவரும் தாம் தாம் முதலென்று அகங் கரித்த பொழுது சிவபெருமான் ஒரு துரும்பினால் அவர்கள் செருக்கினைப் போக்கிய பின்பு அவர்கள் பூசித்த தலம்.

இரேணுகேசம் : பரசுராமருடைய அன்னையாகிய இரேணுகா தேவி தான் தெய்வமாக வேண்டுமென்று பூசித்து வரம் பெற்ற தலம்.

சவுனகேசம் : சவுனக முனிவர் பூசித்து வீடு பெற்ற தலம்.

காமேசம் : காமன் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

பராசரேசம் : பராசர முனிவர் பூசித்துத் தம் தந்தையாரைக் கொன்ற அரக்கர் கூட்டத்தை அழித்தற்கு வரம் பெற்ற தலம்.

பாண்டவேசம் : பாண்டவர்கள் தனித்தனியே சிவலிங்கங் களைப் பிரதிட்டித்துப் பூசித்த தலங்கள்.

வராகபுரம் : திருமால் வராகாவதாரமெடுத்த பொழுது பூசித்த தலம்.

மணிகண்டேச்சுரம் : சிவபெருமானை விடமுண்ணும்படி செய்த பாவத்தைப்போக்கிக் கொள்ளுதற்குத் தேவர்கள் பூசித்த தலம்.

புண்ணிய கோடீச்சுரம் : திருமால் பூசித்துப் பிரமனையும் உலகையும் படைத்தற்கு வரம் பெற்ற தலம்.

சத்த தானம் : முத்தியை விரும்பி அத்திரி முதலிய ஏழு முனிவர் களும் தனித்தனியே சிவலிங்கங்களைப் பிரதிட்டித்துப் பூசித்த தலம்.

சோமேசம் : சந்திரன் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

இட்டசித்தி : ததீசி முனிவரும் பிரமன் முதலியோரும் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

சுக்கிரனுக்கு அமிர்த சஞ்சீவியும் ததீசிமுனிவர்க்கு வச்சிர யாக்கையும் சிவபெருமான் வழங்கிய தலம்.

அயிராபதேசம் : ஐராவதம் பூசித்து இந்திரனுக்கு வாகன மாதற்கு வரம் பெற்ற தலம்.

ஒணன்காந்தன் பத்திபுரிசூழல் : வாணாசுரனுடைய சேனைத் தலவைர்களாகிய ஒணனும் காந்தனும் பூசித்துப் பேறு பெற்ற தலம். இது தேவாரம் பெற்றது.

முத்தீசம் : கருடன் பூசித்துத் தாயின் சிறையை நீக்கிப் பாம்பு களை அலைத்தற்கு வரம்பெற்ற தலம்.

அநேகதங்காவதம் : இது விநாயகர் பூசித்த தலம். தேவாரம் பெற்றது.

வாணீசம் : வாணாசுரன் பூசித்துச் சிவபெருமானைத் தன்னுடைய மதிலின் வாசலைக் காத்தருளும் வரத்தையும் பின்பு சிவகணத்தலைமையையும் பெற்ற தலம்.

அந்தகேசம் : இரணியாட்சன் மகனாகிய அந்தகாசுரன் பூசித்து உலகையாண்டு கடைமுறை அருள்பெற்ற தலம்.

சலந்தரேசம் : சலந்தராசுரன் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

பணாதரேசம் : நாகங்கள் பூசித்துச் சிவபெருமானுக்கு ஆபரண மாகி அந்த மகிழ்ச்சியால் கருடனைச் சுகமாவென்று கேட்கும் வன்மை பெற்ற தலம்.

பணமணீசம் : தன்னுடைய படத்திலிருந்த மணிகளால் வாசுகி பூசித்துப்பேறு பெற்ற தலம்.

சார்ந்தாசயம் : இது வேத வியாசர் சிவபரத்துவத்தை மறுத்த குற்றந்தீரப் பூசித்த தலம்.

தக்கேசம் : தக்கன் பூசித்துத்தன் பாவந் தீர்ந்து கணநாதனாகும் பேறு பெற்ற தலம்.

சித்தீசம் : உமாதேவியார் நீராடுகையில் ஓடிய மஞ்சள் நீரிடை எழுந்த மஞ்சணீர்க் கூத்தர் கோயில் கொண்டருளிய தலம்.

மதங்கேசம் : மதங்க முனிவர் ஐம்புலன்களையும் அடக்கி யாள்வதற்குப் பூசித்த தலம்.

அரிசாப பயந் தீர்த்த தானம் : திருமால் பூசித்துப் பிருகு முனி வர் இட்ட சாபத்தைத் தீர்த்துக் கொண்ட தலம்.

மாலிங்கம்—மகாலிங்கம் : திருமாலும் பிரமனும் தாம் தாம் முதன்மை எனத்தருக்கி நின்றபொழுது சோதிலிங்கமாக எழுந்த சிவபெருமானால் மயக்கம் போக்கப் பெற்றுத் தாபித்துப் பூசித்த தலம்.

ஆதிபதேசம் : கலைமகள் பிரமதேவர் செய்த யாகத்தைத் தடுத் தற்கு நதியாக வந்த பொழுது அந்நதியைத் தடுக்கும் வன்மை பெறும் பொருட்டுத் திருமால் விளக்கொளியாகிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்த தலம்.

விடுவச்சேனேசம் : திருமாலுடைய சக்கராயுதத்தை வீர பத்திரக் கடவுளிடமிருந்து பெற வேண்டி விஷ்வக்ஸேனர் பூசித்த தலம்.

வன்னீச்சுரம் : அக்கினி பூசித்துத் தேவர்களுக்குரிய அவிர்ப் பாகத்தைப் பெறும் வன்மை பெற்ற தலம்.

நாரசிங்கீச்சுரம் . திருமால் இரணியனை அழித்தற்குப் பூசித்து வரம் பெற்று நரசிங்காவதாரமெடுத்து இரணியனைக் கொன்று பின்பும் வழிபட்ட தலம்.

மாண்டு கன்னீச்சுரம் . மாண்டு கன்னு முனிவர் வழிபட்டு ஐந்து தெய்வ மங்கையரை அடைந்த தலம்.

மாகாளேச்சுரம் : மாகாளனென்னும் நாகம் பூசித்து முத்தி பெற்ற தலம்.

வன்மீகநாதம் : தேவர்கள் கீர்த்தியைத் திருமால் வெளவிச் செல்ல அதனைப் பெறுதற்காக இந்திரன் ஒரு புற்றில் கரையனாகி முயன்று தன் எண்ணம் நிறைவேறப் பெற்றுப் பூசித்த தலம்.

பல பத்திரராமநாதம் : இது பலராமன் பூசித்த தலம்.

மச்சநாதம் : திருமால் மச்சாவதாரம் எடுத்த பொழுது பூசித்த தலம்.

முக்கால ஞானேசம் : சில முனிவர்கள் பூசித்து முக்காலங்களை யும் அறியும் ஆற்றல் பெற்ற தலம்.

காதம்பம் : கடம்பர்கோயில்; முருகக் கடவுள் பூசித்த தலம்.

ஒத்தூர் : வேதபுரி எனவும் வழங்கும்: சிவ பெருமான் ஆலநிழலில் இருந்து தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தை உபதேசித்த தலம். இது தேவாரம் பெற்றது.

சதுரானன சங்கரம் : சிவ பெருமான் பிரமதேவருக்கு நான்கு முகங்களினின்றும் மறைவெளிப்பட அருளிய தலம்.

மறைநூபுரம் : வேதங்கள் பூசித்து இறைவனுக்கு சிமம்பாலக அமைந்ததும், பிரமன் பிரளைய முடிவிற் பூசித்து வேதங் களைப் பெற்றதுமாகிய தலம்.

கண்ணீச்சுரம் : திருமால் பூசித்து விடத்தின் வெப்பை நீக்கிக் கொண்ட தலம்.

வீரராகேச்சுரம் : இராமர் வழிபட்டு இராவணனை அழித்தற் குரிய வீரத்தைப் பெற்ற தலம்.

வீராட்ட காசம் : இறைவன் திரு நடனம் செய்கையில் வீர நகை காட்டியதும் கொங்கணர் பூசித்துச் சித்திகள் பெற்ற தும் திருமால் பூசித்துப் பவள நிறத்தை அடைந்ததுமாகிய தலம்.

சேனாபதீச்சுரம் : முருகக் கடவுள் பூசித்த தலம்.

மேற்றளி : முருகக்கடவுளுடைய பார்வையால் திருமால் இலிங்கமான தலம். தேவாரம் பெற்றது.

காரோணம் : பிரளய காலத்தில் பிரமன் திருமால் இவர் களுடம்பைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்ட தலம். முருகவேளும் உமாதேவியும் இறைவன் காயத்தில் ஆரோ கணஞ் செய்த தலமெனவும் கூறுவர். இது தேவாரம் பெற்ற தலம்.

குரங்கணில் முட்டம் : குரங்கு, அணில் காக்கை என்பவை பூசித்த தலம். இது தேவாரம் பெற்றது.

உருத்திரர் சோலை : சிவ பெருமான் உருத்திரர்களைப் படைத்து அவர்களுக்கு அதிகாரம் நல்கிய தலம்.

உருத்திரேசம் : உருத்திரர் பூசை செய்த சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள்.

59. திருக்கச்சூர்: (தொண்டை நாடு)

சிங்கப்பெருமாள் கோயில் இரயில்வே நிலையத்திற்கு வட மேற்கு 10 மைல் தொலைவில் உள்ளது இத்தலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகட்காக இறைவன் பிச்சையெடுத்துச் சோறூட்டிய இடம். சப்தவிடங்கக் கணக்கில் சேராத தியாக ராச தலம். கச்சூர் ஆலக்கோயில் என்றும் வழங்கும் ஆலக் கோயில் என்பது கோயிற் பெயர். 'ஆல்' தலவிருட்சமாதலின் ஆலக்கோயில் என்பது கோயிற் பெயர். இத்தலப் பதிகத்தில் மலைமேல் மருந்தே எனவருதலால், இங்குள்ள மலைமேல் மருந் தீசர் கோயிலும் இருக்கிறது.

சுவாமி : விருந்திட்டஈசர். மருந்தீசர்.
அம்பிகை : அஞ்சநாட்சி கன்னியுமையாள்
தீர்த்தம் : கூர்ம தீர்த்தம்.

அமுதம் திரண்டு வருவதற்காக விஷ்ணு (கச்சபம்-ஆமை) கூர்மமாய் இருந்து பூசித்த தலம்.

தாழக் கோயில் : கச்சபேசுரர். அஞ்சநாட்சி அம்மன் ஆலயம். பிராகாரத்தில் விருந்திட்ட ஈசுவரர். கோயிலுள் அமிர்த தியாகர் வீற்றிருக்கிறார்.

மலைக்கோயிலுக்குப் போகும் வழியில் தாலமூலவிநாயகர் அல்லது கருக்கடி விநாயகர். அதற்குமேற்கே இரந்திட்ட ஈசுவரர் கோயில் இருக்கின்றது. சந்நிதி மேற்கு நோக்கி இருக்கிறது. சுந்தரர் பாடியதலம்.

குவிக்கச் சூராலக் கோயில் விருந்திட்
டவருமை யம்மை யன்புறும் விருந்து. (சிவ.)

முதுவாய் ஓரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கென்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமா றிதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே. (சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரங்கள்: கச்சினங் கற்குடி கச்சூராலக் கோயில்—பொது திருநா. இளங்கோயின்மணிக் கோயிலாலக்கோயில் பொது திருநா.

60. கஞ்சனூர்; (சோழநாடு)

நாரசிங்கன்பேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது இத்தலம். காவிரியின் வடகரையில் உள்ளது. பிரமன் பூசித்த தலம். அக்னிதேவனும் வழிபட்டுள்ளான். ஹரதத்த சிவாசாரிய சுவாமிகள் பழுக்கக் காய்ச்சிய பீடத்தின் மீது அமர்ந்து சிவபரத்துவத்தையும் சைவ சமயமேன்மையையும் நிலைநாட்டிப்பல வடமொழி நூல்கள் அருளிச் செய்த தலம். அவருக்குத் தனி ஆலயம் உண்டு.

இங்கு நடராசர், சிவகாமி சிலாரூபங்களாக உள்ளனர். மானக்கஞ்சாறநாயனார் தம் அருமைக் குமாரத்தியின் விவாக மகோற்சவ காலத்தில் அப்பெண்ணின் கூந்தலை அடியோடரிந்து மகாவிரத சமய அந்தண சீலராயும், ஆதிசைவராயும் திருவேடம் பூண்டு வந்த சிவபெருமானுக்குக் கொடுக்க நீட்டி முத்தியடைந்த தலம். திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : அக்னீச்வரர்
அம்பிகை : கற்பக நாயகி
தீர்த்தம் : அக்னி தீர்த்தம்.
விருட்சம் : புரசு.
அற்புதக் கஞ்சனூர் அக்கினி யீசர்
கற்பக நாயகி கனலோன் தீர்த்தம்.

மூவிலைநற் சூலம்வலம் ஏந்தினானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடை(ி)யான் றேறு வானை
நால்வேதம் ஆறங்க மாயி னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோவை
அயன்திருமா லானானை அனலோன் போற்றும்
காவலனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே.
(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையுங் கயிலாய நாதனையே
காணலாமே—பொது. திருநா.
நாஞ நன்னிலந் தென்பனையூர் வடகஞ்சனூர்பொதுதிருநா.

61. திருக்கடம்பந்துறை: (சோழநாடு)

குழித்தலை இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது இத்தலம்.

காலையில் இத்தலம், கட்டுச்சியில் வாட்போக்கி (இரத்தினகிரி), மாலை ஈங்கோய்மலை ஆகியமூன்றையும் கார்த்திகை சோம வாரங்களில் தரிசித்தால் புண்ணியமுண்டு என்று பெரியோர்கள் கூறுவர். வடக்கு நோக்கிய சந்நிதி. கண்ணுவ முனிவருக்கும், தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்பவிருட்சத்தில் தோன்றிக் காட்சி கொடுத்த தலம். கடம்பர் கோயில் என்றும் வழங்கும்.

சுவாமி : கடம்பவனநாதேசுவரர்.
அம்பிகை : முற்றிலலாமுமுலை அம்மை.
தீர்த்தம் : காவிரி. விருட்சம் : கடம்பம்.

கடம்பர் ஐந்து :

1. கோயில் கடம்பன்—கோயிற் கடம்பனூர். சுவாமி கைலாசநாதர். அம்பிகை : அளகாம்பிகை. கிழக்கே ஒரு மைல்.

2. ஆதிக்கடம்பர்: இதற்குக் கிழக்குக் கால்மைல் தொலைவு. ஆழியூர் என வழங்கும். சுவாமி: ராசராசேசுவரர்.

3. வாழிக் கடம்பர் : கடம்பர் வாழ்க்கை. இதற்குஅரை மைல் தொலைவு ஈசானம். திருநாவுக்கரசர் பாடிய தலம்.

4. இளங்கடம்பனூர்.

5. பெருங்கடம்பனூர் பிரஹ்மகந்தபுரி.

இந்த ஐந்திலும் முருகர் சிவபிரதிஷ்டை செய்து பூசித்தார். முருகனுக்குச் சூரஹத்தி விமோசனம். பாலசுப்பிரமணியராக வடக்கு நோக்கி இதில் ஐந்து கடம்பனிலும் எழுந்தருளியிருக்கின்றனர். ஆதிசேஷன் பூசை. அநந்தேசுவரர். அபிராமி.

நந்தி, பலிபீடம் தெற்கே விலகியிருக்கிறது. ஒரு ஆதி சைவர் பிரிந்த பொழுது அவர் மனைவி கர்ப்பமுற்றதைப் பழித்தது கண்டு பொறாத அவள் கற்பை நிலைநிறுத்தும் பொருட்டு சுவாமி ஒரு பூவை எறிய அது தூற்றியவர்களைக் கொன்று விட்டது.

கருங்குட்டம்—கூபரூபம். குட்டநோய் தீரும்.

இத்தலம் கடம்பை, கடம்பந்துறை கடம்பவனம் தட்சிண காசி, குழித்தண்டலை எனவும் வழங்கும். பிரமதேவர் வழி பட்டுத் திருக்கோயில் முதலியன அமைத்துத் திருத்தேர் விழாவும் நடத்தினமையால் பிரமபுரம் என்றும் சோமகாசுரனிடத்திலிருந்து திருமால் வேதங்களை மீட்டதற்குக் காரணமாகிய திருவருளைப் பெற்ற இடமாதலிற் சதுர்வேதபுரி என்றும், முருகவேள் பூசித்துப் பேறு பெற்றமையின் கந்தபுரம் என்றும் இது பெயர் பெறும். இத்தலத்தில் சத்தகன்னியர் பூசித்து, தம்மை வருத்திய பிரமகத்தியினின்றும் நீங்கினர்; வேதசன்மா என்னும் ஓரந்தணர் தவம்புரிந்து மதுரையில் நிகழ்ந்த திருமணக் கோலத்தை இங்கே தரிசித்தனர்.; அகத்திய முனிவர் பூசித்துப் பேறுபெற்றனர்.

இத்தலத்துத் திருக்கோயிலில் பிரமதேவர், சத்த மாதர் கள், அகத்திய முனிவர் முதலியவர்களுடைய திருவுருவங்கள் தனித்தனியே உள்ளன. இப்பொழுது கடம்பர்கோயிலைச் சார்ந்ததும், குழித்தலை என வழங்குவதுமாகிய ஊரின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் திருநாமம்

ஸ்ரீ சுந்தரேசுவர் என்பது. அம்பிகையின் திருநாமம் ஸ்ரீ மீனாட்சி என்பது. இவற்றை நோக்கும்பொழுது கடம்பர் கோயிலில் சிவபெருமான் திருமணக்கோலம் காட்டியதன் அறிகுறியாக இவ்வாலயம் பண்டைக் காலத்தில் அமைக்கப் பெற்றதென்று கருதப்படுகின்றது.

இத்தலத்திற்குத் திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றும், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய திருவெண்பா ஒன்றும், ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழும் உண்டு.

காளத்தி என்பவரால் இயற்றப் பெற்ற அந்தாதி ஒன்று உண்டென்று தெரிகின்றது. மதுரைத் திருபணிமாலையால், பாகை என்னும் ஊரிலிருந்த காளத்தியப்ப முதலியாரென்பவர் ஒருவர் மதுரையில் சில திருப்பணிகள் செய்தாரென்று புலப்படு கின்றது. அவர் இவ்வந்தாதி செய்தவராகக் கருதப்படுகின்றார்.

இவையன்றி வடமொழியில் ஒரு புராணம் உண்டு. திருவாரூர் முத்துசாமி தீக்ஷிதரென்னும் சங்கீத வித்துவானால் கேதாரகௌளராகத்தில் இயற்றப்பெற்ற மிகச் செவ்விதாகிய ''நீலகண்டம் பஜே'' என்னும் வடமொழிக் கீர்த்தனம் ஒன்றும் இத்தலத்திற்கு உண்டு.

கடம்பன் துறைவாழ் கடம்ப வனேசர்தம்
இடம்பெறு முற்றிலா முலையிசை ஞானம். (சிவ.)

முற்றி லாமுலை யாளிவ ளாகிலும்
அற்றம் தீர்க்கும் அறிவிலள் ஆகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றாள்எங்கள் பேதையே.
(திருநா. 5-ஆம் திரு.)

62. திருக்கடம்பூர்: (சோழநாடு)

சிதம்பரத்திலிருந்து பதினைந்து மைல் தொலைவிலும், காட்டுமன்னார் குடியிலிருந்து மூன்று மைல் தொலைவிலும் இத்தலம் உள்ளது. ஆலயம் கரக்கோயில். மூலஸ்தானம் ரதம் சக்கரம், குதிரையுடன் சிற்பமுறையில் அமைந்துள்ளது. தேவேந் திரன் பூசித்து அமிருதம் உண்டாகும்படி வரம்பெற்ற தலம். இந்திரன் தன் கரத்தால் அகழ்ந்து கொண்டு போக முயன்றதால்

கரக்கோயில் என்று வழங்கலாயிற்று என்பர். கணங்கள் பூசித்த தலம். கடம்பைக்கரக் கோயில் என்றும் வழங்கும்.

ஒரு மைல் தொலைவில் கடம்பூர் இளங்கோயில் என்ற வைப்புத்தலம் உள்ளது. கருப்பக் கிரகம் இந்திரவிமானம். மேலைக்கடம்பூர் கீழைக்கடம்பூர் என இரண்டுண்டு. கீழைக் கடம்பூரில் பழைய தலம் உண்டு.

இதற்குக் கிழக்கேயுள்ள கீழைக் கடவூரில் திருக்கரைக்கோயில் என்று ஒரு சிவாலயம் உண்டு. (வைப்பு).

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

அத்தமுள் கடம்பர் அமுத சுடேசர்
வித்துவ சோதி விளங்காதி தீர்த்தம். (சிவ.)

வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாள்தொழ வீடெளி தாமே.

(திருஞா. 2-ஆம் திரு.)

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனை யுந்தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

காட்டூர் கடம்பூர் படம் பக்கங் கொட்டுங் கடலொற்றியூர்—பொது. திருஞா.
கடம்பை யிளங்கோயிறன் னினுள்ளும்—பொது. திருநா.
காட்டூர்க் கடலே கடம்பூர்மலையே கானப்பேரூராய்—பொது. சு.

கடம்பூர்க் கரக் கோயிலின் முன் கண்டது—பரங்குன்றம். சு. கடம்பூர்க் கரக்கோயில் காப்புக்களே—அதிகை. திருநா.

63. திருக்கடலூர் வீரட்டம்: (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ளது. மாயூரத்துக்குக் கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் வழியில் உள்ளது.

திருக்கடலூருக்குக் கிழக்கு ஒரு மைல் தொலைவில் திருக் கடலூர் மயானமும், மேற்கு மூன்று மைல் தொலைவில் ஆக் கூரும், வடமேற்கு மூன்று மைல் தொலைவில் திருத்தலைச் சங்காடும், தென்மேற்கு நான்கு மைல் தொலைவில் திருவிசைப்பா, திருப்புகழ் பெற்ற முருகர் தலம் திருவிடைக் கழியும் இருக்கின்றன.

மார்க்கண்டேயர் என்றும் 16 வயது எனும் சிரஞ்சீவித் தன்மைபெற்ற தலம். அமிர்த கடமே சிவலிங்கமாயிருத்தலின் அமிர்தகடேசுவரர் என்பது இறைவன் பெயர். காலசம்ஹார மூர்த்தி சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. குங்குலியக்கலய நாயனாரும், காரி நாயனாரும் தொண்டு செய்து முத்தி பெற்ற தலம். திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்த சாத்திரம் இயற்றிய உய்யவந்ததேவ நாயனார் அவதரித்த தலம். அபிராமி பட்டர் அபிராமி அந்தாதிபாடி அம்மையின் அருள் பெற்ற தலம். சித்திரைப் பெருவிழாவில் ஆறாம் நாள் கால சம்ஹார உற்சவம் மிக விசேடம். கார்த்திகை சோம வாரந்தோறும் 1008 சங்கா பிடேகமும் விசேடம். காலசம்ஹார மூர்த்தியின் அருள் பெறு தற்கு அன்பர்கள் தங்கள் 60 ஆண்டு நிறைவை இத்தலத்தில் ஆயுஷ்ய ஹோமம் முதலியன செய்து கொண்டாடுவதுண்டு. அட்டவீரட்டானங்களுள் இத்தலமும் ஒன்று.

மறுபெயர்கள் : வில்வவனம், பிஞ்சிலவனம், கடலூர். கோயில் 5 பிராகாரங்கள். மேற்குப் பார்த்த சந்நிதி கணபதி—கள்ளவாரணர். (சோரகணபதி)

சுவாமி : அமுதலிங்கம்; இலிங்கத்தின் உச்சியில் ஒரு பிளப்பும் மேனியில் தழும்பும் உள்ளன.

அபிராமி கோணங்கள் 9-ம் நிறைந்தவர்.
இத்தல சம்பந்தமான கல்வெட்டுக்கள் 54.
மூவரும் பாடிய தலம்.

கடவூர் அமிர்த கடேசர்தம் பங்கில்
திடவபி ராமி தேவி அமிர்தம். (சிவ.)

பொடியார் மேனியனே புரிநூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர் கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்அமுதே எனக் கார்துணை நீயலதே.
(சுந்தரர்)

சடையுடை யானும்நெய் யாடலா னுஞ்சரி கோவண
உடையுடை யானும்மை ஆர்ந்த ஒண்கண் உமைகேள்
வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் கும்கட வூர்தனுள்
விடையுடை அண்ணலும் வீரட்டா னத்தர னல்லனே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கடவூரில் வீரட்டனீயேயென்றும்—நெய்த்தானம். திருநா.
ஊராக் கைலாயமலை வைத்தார் கடவூர் வைத்தார்—நல்லூர். திருநா.
பாடலோவாக் கடவூர் வீரட்டமென்னுந்தளியினூர்—புகலூர். திருநா.
கடவூரில் வீரட்டங் கருதினானை—செங்காட்டங்குடி. திருநா.
பிச்சையூர் திரிவான் கடவூர் வடபேமூர்—இடையாறு. சு.
கடவூர் வீரட்டானங் காமருசீர் அதிகைமேவிய வீரட்டானம்—பொது. திருநா.
கலிசேர் புறவிற் கடவூராளி காணவருளாயே—ஊர்த்தொகை. பொது. சு.

64. திருக்கடவூர் மயானம் : (சோழநாடு)

இத்தலம் கடவூருக்குக் கிழக்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. மணல்வழி. மேற்குப் பார்த்த சந்நிதி.

இத்தலத்திலுள்ள ஒரு கிணற்றிலிருந்துதான் திருக்கடவூர் வீரட்டேசுவரருக்கு அபிடேக நீர் கொண்டுவரப்படுகிறது.

பங்குனி மாதம் சுக்கிலபக்ஷம் அசுவினி நட்சத்திரத்தில் இதில் நீராடுவது விசேடம்.

சிவபெருமான் பிரமதேவரை நீறாக்கி அவரை மறுபடியும் உயிர்ப்பித்து அவருக்குச் சிருஷ்டித் தொழிலைக் கொடுத்த தலம். மூவரும் பாடிய தலம்.

சுவாமி: பிரமபுரீசுரர்
அம்பிகை: நிமலகுசாம்பிகை
தீர்த்தம்: பிரம தீர்த்தம்

கடவூர் மயானம் கனபிரம் மேசர்
வடிவுள நிமலகுயாம் பிகைமகிழ் பிரமம். (சிவ.)

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின்
மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படை
சூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர்
தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா
னடிகளே.
(சுந்தரர்)

வரிய மறையார் பிறையார் மலையோர்சிலையா
வணக்கி
எரியமதில்கள் எய்தார் எறியும்முசலம் உடையார்
கரியமிடறும் உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவார் அவரெம் பெருமான்
அடிகளே.
(திருஞா. 2-ஆம் திரு.)

குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கட வூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமா னடிகளே.
(திருநா. 5-ஆம் திரு.)

65. கடிக்குளம்; (கற்பகனூர் கோயில்) (சோழநாடு)

திருத்தருப்பூண்டி இரயில்வே நிலையத்திலிருந்து தென் மேற்கே 11 மைல் தொலைவில் இத்தலம் உள்ளது.

கற்பகப் பிள்ளையார் சிவபெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்ற தலம். விநாயகர் விசேடம். விநாயக தீர்த்தம் இருக்கிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : கற்பகேசுரர்.
அம்பிகை : சௌந்தரநாயகி.
தீர்த்தம் : விநாயக தீர்த்தம், இலக்குமிதீர்த்தம்.

கவின்கடிக் குளம்வாழ் கற்பக நாதர்
சவுந்தர நாயகி தண்ணிலக் குமியாம். (சிவ.)

பொடிகொள் மேனிவெண் ணூலினர்
தோலினர் புலியுரி அதளாடை,
கொடிகொள் ஏற்றினர் மணிகிணின்
எனவரு குரைகுழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு
கடிக்குளத் துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும்
அடியரை முன்வினை மூடாவே.

(திருஞா. 2-ஆம் திரு.)

66. திருக்கடுவாய்க்கரைப் புத்தூர் (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து வலங்கைமான் வழியாய்த் திருவாரூர் செல்லும் வழியில் இத்தலம் இருக்கிறது. கடுவாய் என்ற ஆறு இப்பொழுது குடமுருட்டி என்று வழங்குகின்றது. காசியபரிஷி முதலியோர் பூசித்த தலம். ஆண்டான் கோயில் என்று வழங்குகிறது.

பாண்டியனுடைய கரடி வடிவம் நீங்கிய இடம்.

இத்தலத்திற்கு அபூர்த்தியாக ஒரு புராணம் இருக்கிறது. அது அச்சிடப்பெறவில்லை.

சுவாமி : சொர்ணபுரீசர். அம்பிகை : சிவாம்பிகை.
திருநாவுக்கரசர் பாடிய தலம்.

பொற்கடு வாய்க்கரைப் புத்தூர் சுவர்ணர்
கற்தாகே சுவரிநா யகிமகழ் சூலம். (சிவ.)

ஒருத்த னைமூ வுலகொடு தேவர்க்கும்
அருத்த னைஅடி யேன்மனத் துள்ளமா
கருத்த னைக்கடு வாய்ப்புன லாடிய
திருத்த னைப்புத்தூர்ச் சென்றுகண் டுய்ந்தெனே.
(திருநா. 5-ஆம் திரு.)

நைமிசாரணியத்திலுள்ள முனிவர்கள் ஒரு சமயம் சிவத் தலங்களுள் சிறந்ததான ஒரு தலத்தின் சிறப்பை அறிய விரும்பி, சூதமாமுனிவரிடம் கேட்க, அவர் மகிழ்ச்சியுடன் கடுவாய்க்கரைப் புத்தூரின் சிறப்பினை எடுத்துக் கூறலானார்.

காவிரிக்குத் தெற்கிலும் கும்பகோணம் என்னும் தலத் திற்கு அக்கினிமூலையில் ஏறக்குறைய எட்டு மைல் தூரத்திலும் இத்தலம் அமைந்துள்ளது.

திருச்சேறை என்னும் தலத்திற்குத் தென்மேற்கிலும், திருவிடைமருதூர் என்னும் மத்தியார்ச்சுனத் தலத்திற்குத் தெற்கிலும், ஆலங்குடி என்னும் தலத்திற்கு வடக்கிலும் உள்ளது.

இங்கு எழுந்தருளியிருக்கும் ஈசனை வழிபட்டவர்கள் வறுமை நீங்கி, இறுதியில் மோட்சத்தையடைவர்.

ஒரு சமயம் கைலாயத்திலிருக்கும் சிவபெருமான் பார்வதி யுடன் ஆகாய வழியே செல்லும் பொழுது வளம் நிறைந்த காவிரிக்குத் தென்கரையிலுள்ள கொன்றை மரங்கள் நிறைந்த காட்டினைப் பார்த்து, பூமியிலிறங்கி வந்து அழகினைக் கண்டு, கையிலுள்ள சூலத்தை அவ்விடத்திலூன்ற, அக்காட்டில் கங்கை யாறு தோன்றிற்று. ஒரு வன்னி மரம் உண்டாயிற்று. அதன் கீழ் சிவபெருமான் இலிங்க உருவமாக விளங்குவதைக் கண்டாள் பார்வதி. அங்குத் தோன்றிய கங்கை நீரையெடுத்து அபிஷேகம் செய்து மலர்களைச் சூட்ட தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சிவபெருமான் எழுந்தருளி அடியார்கள் வேண்டுகின்ற வரங் களையெல்லாம் அளிப்போம் என்று கூறி அந்தலிங்கத்தில் கலந்தார். சூலத்தை ஊன்றியதால் உண்டாகிய கங்கை வாவி யாக ஆயிற்று. உமை சந்திரனைத் தலையில் அணிந்துள்ள சிவபெருமானின் மலர்ப்பாதத்தைத் தலைமேல் சூடி, சிறந்த ஆபரணங்களினால் அலங்காரம் செய்தாள். அதனால் இவ்வூரில்

எழுந்தருளியுள்ள சிவனுக்குச் செம்பொன்னாதர் என்று பெயர் வழங்கலாயிற்று. பார்வதி தேவியாருக்கும் சிவசேகரி என்னும் பெயர் ஏற்பட்டது. இந்தச் சரித்திரத்தைக் கேட்பவர்கள் பூமியில் நெடுநாள் வாழ்ந்து வீடுபேற்றையடைவர்.

ஒரு சமயம் உரோமச முனிவர் எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடக் கருதி, குகையை விட்டுக் கிளம்பி இமய மலையிலுள்ள தீர்த்தங்கள் பலவற்றிலும் நீராடி, பூமியை வலம் வர நினைத்து, தீவினையெல்லாவற்றையும் போக்கும் கேதாரகூஷ்திரம் வந்து நீராடி ஈசனை வணங்கி, திரியம்பகம் என்னும் தலத்திற்குச் சென்று ஈசனை வணங்கி, காசித் தலத்திற்குச் சென்று கங்கையில் நீராடி விசுவநாதரை வணங்கி, ஸ்ரீ சைலம் சென்று ஈசனைத் தொழுது, விருபாக்ஷம், காஞ்சி, சிதம்பரம், வேளூர், திருவாரூர், மறைக்காடு, திருவிடைமருதூர் திருச்சேறை முதலான தலங்களுக்குச் சென்று ஈசனைத் துதித்து கடுவாய்க் கரைப்புத்தூர் என்னும் இவ்வூருக்கு வந்து, வன்னி மரத்தின் கீழ் வீற்றிருக்கும் செம்பொன்னாதரைக் கண்டு மனமுருகி அஷ்டதிக்பாலகரால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தத்தில் நீராடிச் சிவனைக் குறித்துத் தவம் இயற்றினார். அப்பொழுது பார்வதியுடன் ஈசன் முனிவர் முன் தோன்றி, முனிவரைப் பார்த்து ''உனக்கு வேண்டியவற்றைக் கேள்'' என்று கூற முனிவர் வணங்கி ''எப்போதும் உன்பாதத்தின் நினைவு என் இதயத்தில் இருக்க வேண்டும். என்று கேட்க, சிவனும் ''முனிவரே! வன்னி மரம் மூன்றுளது. முத்தியோடு மற்றவற்றையும் அளிக்கும் ஒன்று கையில் உள்ளது. இரண்டாவது மறைக்காட்டில் உள்ளது; மூன்றாவது இத்தலத்தில் உள்ளது'' என்று கூறி இலிங்கத்தில் மறைந்தார். உடனே முனிவர்தெய்வத்தச்சனான மயனை நினைத்தார். நினைத்த மாத்திரத்தில் மயன் முனிவர் முன் தோன்றி வணங்கி, ''என்னால் இங்குச் செய்ய வேண்டிய பணியாது? என்று கேட்க, முனிவர் சிவபெருமானுக்கு ஓர் ஆலயம், கண்டவர் அதிசயிக்கும்படி அமைப்பாயாக'' என்றார்.

நல்ல வேளையில் விநாயகரை வணங்கிப் பெரிய மண்டபங்கள், பிராகாரங்கள், ஏழு கோபுரங்கள் முதலியனவற்றை மேன்மையாக அமைத்தான். சூல தீர்த்தம், திக்பாலகர்களால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தங்களுக்குக் கல்லினால் படிக்கட்டுக்கள், கட்டினான். நல்ல வேளையில் முனிவர் ஆவரண தேவதைகளை மலர்களால் அர்ச்சித்து ஓமம் செய்து இறைவனையும் இறைவியையும் பிரதிட்டை செய்தார். அவ்வமயம் தேவர்கள் இப்புவியில் இந்நகர் புதியது என்றுகூற, நிலத்திலுள்ளவர்கள்

தேவர்கள் கூறியதைக் கேட்டுப் புத்தூர் என்று பெயரிட்டனர். இந்நகரில் வாழ்பவர்கள் நினைத்த பொருளை அடைந்து இறுதியில் பெரும் பதத்தை அடைவர். இந்தச் சரித்திரத்தைச் சொல்லுகிறவர்களும் கேட்கிறவர்களும் தேவபோகத்தையடைவார்கள்'' என்று சூதமாமுனிவர் கூற முனிவர்கள் ஈசனின் ஆனந்த நடனத்தைக் கூற வேண்டும் என்று கேட்டனர்.

பதஞ்சலி முனிவர் நடனத்தைக் காண விரும்பி, கடுவாய்க் கரைப்புத்தூருக்கு வந்து உரோமச முனிவரைக் கண்டார். பின்பு செம்பொன்னாதர் வீற்றிருக்கும் கோயிலுக்கு வந்து இறைஞ்சித் துதித்து ''அடியார் உள்ளத்துன் உறையும் இறைவா'' உன் நடனத்தைக் காண்பதற்கு மனம் விரும்பி வந்தேன் என்றார். முனிவர் விருப்பப்படி இறைவன் நடனமாட முனிவர் கண்டு மகிழ்ந்து, துதித்து பார்வதியை வணங்கி ''என்பிறப்பை ஒழிப்பாய்' என்று இறைஞ்சினார்.

சூரிய குலத்தில் தோன்றிய அரிச்சந்திரன் நாரதரை அழைத்து நன்கு உபசரித்து அசுவமேதயாகம் செய்திட அருள் புரிவீர் என்று கேட்க, அவர் ''அரிச்சந்திரனிடம் தீர்த்த யாத்திரை செய்து யாகத்தைச் செய்வாயாக'' என்று சொன்னார்.

உடனே அரசன் பூமியில் உள்ள எல்லாப் புனித தீர்த்தங்களிலும் நீராடி, இறுதியில் புத்தூருக்கு வந்து சூலதீர்த்தத்தில் நீராடி செம்பொன்னாதரையும் இறைவி சிவசேகரியையும் வணங்கிக் கொடியேற்றி இரதோற்சவத்தை நடத்தி வைத்தான். உலகில் உள்ளோரை விசாக நட்சத்திரத்தில் சூலதீர்த்தத்தில் நீராடச் செய்தான்.

வங்க நாட்டு மன்னன் வீரவர்மன் நெடுநாள் பிள்ளையில்லாமல் வருத்தமுற்று இருக்கின்ற வேளையில் முனிவரை யழைப்பித்து உபசாரம் செய்து மக்கட்பேறு உண்டாக வழி சொல்லுங்கள் என்றான். முனிவர் அரசன் கூறியதைக் கேட்டு ''மன்னா! பூமியிலுள்ள புனித தீர்த்தங்களில் நீராடினால் மகப்பேறு உண்டாகும்'' என்று கூறினார். அரசனும் அவர் கூறியபடி சேனைகள் சூழ கங்கை முதலான நதிகளில் நீராடி, புத்தூர் வந்து சூலதீர்த்தத்தில் நீராடி, செம்பொன்னாதரையும் சிவசேகரியையும் வணங்கித் துதித்தான். இறைவன் அவ்வரசனுக்கு மக்கட்பேறு உண்டாக அருளினார். அரசனும் மக்கட் செல்வத்தைப் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தான்.

எல்லாத் தலங்களிலும் இறைவன் முன்னிருக்கும் நந்தியெம் பெருமான் இத்தலத்தில் மட்டும் சிறிது விலகியிருக்கக் காரணம் என்ன? என்று முனிவர் கேட்க சூதமா முனிவர் கூறலுற்றார்.

மயந்தன் தந்தையின் சாபத்தால் பூமியில் சுண்டத் தேவனாகத் தோன்றி மலையிலிருந்து நல்ல கற்களை எடுத்துக் கொண்டு வரும்பொழுது கடுவாய்க்கரைப்புத்தூர் என்னும் இத்தலத்தினை அடைந்தான். காவிரியில் நீராடி அனுட்டானங் கள் முதலியவற்றைச் செய்து இலிங்க தரிசனம் செய்ய எண்ணி தம்முடன் வந்தவர்களிடம்'' நீங்கள் ஈசன் எழுந்தருளியுள்ள இடத்தைக் கண்டு வந்து சொல்லுங்கள்'' என்று கூற அவர்கள் தென்புறம் சென்று புற்களும் பூண்டுகளும் மூடியிருந்த இலிங் கத்தைக் கண்டு வந்து சுண்டத்தேவரிடம் கூறினார்கள். உடனே சுண்டத்தேவர் இலிங்கத்தை வணங்கித்தோத்திரஞ் செய்து புற் பூண்டுகளை ஆட்களைக் கொண்டகற்றி அழகிய ஆலயம் ஒன்று கட்ட எண்ணி மலையிலிருந்து கற்களைக் கொண்டு வந்து கோயிலைக் கட்டினான். முசுகுந்த சக்கரவர்த்தி ''இதனைக் கண்டு பொறாமையினால் தன் ஏவலர்களைக் கூப்பிட்டு அவனைப் பிணித்து இக்கணமே இங்குக் கொண்டு வாருங்கள்'' என்று கூற, ஏவலர்கள் சுண்டத்தேவரைக் கட்டிக் கொண்டு வந்து முசுகுந்தன் எதிரில் நிறுத்த, அவன்தன் கையிலுள்ள வாளினால் வெட்டினான். சுண்டத்தேவரின் தலை பூமியில் விழுந்து துடித்து ஆலயத்திற்குச் சென்றது. நந்தியெம் பெருமான் அதனைக் கண்டு இத்தலை செம்பொன்னாதரை அடையும் என்று தெரிந்து சிறிது விலகி நின்றார். அத்தலை சிவபெருமானையடையவும் சுண்டத்தேவருக்கு வீடுபேற்றை நல்கினார். முசுகுந்த சக்கரவர்த்தி இதனைக் கண்டு, செம் பொன்னாதரை வணங்கித் துதித்துக் கோயிலைச் சிறப்பாகக் கட்டி ஆரூரினை அடைந்தான்.

ஒரு சமயம் கயாசுரன் என்பவன் இந்திரனோடு போர்புரிய வந்தான். இந்திரன் போர் செய்வதற்கு அஞ்சி ஓட, அவன் மனைவி இந்திராணி நாமும் எவ்வுலகத்திற்குப் போவோம் என்று உள்ளம் ஏங்கி, பூலோகத்திற்கு வந்து இந்நகரினை அடைந்து சிவசேகரியை வலஞ்செய்து பூசித்துக் கொண்டிருந்தாள்.

இந்திரன் நகரமான அமராவதிக்குக் கயாசுரன் தன் சேனை களுடன் வந்தான். அங்கு இந்திரன் இல்லாததை அறிந்து அவன் மனைவிமேல் மோகம் கொண்டு அவளைத் தேடலானான். அவனும் எங்கும் புலோமசையைத் தேடிக் காணாமல் புத்தூருக்கு வந்தான்.

ஏழு கன்னியர்களும் இந்திராணியை அடைந்து கயாசுரன் இவ்விடம் வந்திருப்பதைத் தெரிவிக்க, அவள் ஆவி சோர்ந்தாள். அவ்வமயம் உமையானவள் சப்த மாதர்களை அழைத்து ''நீங்கள் அவ்வசுரனுடன் போர் செய்து அவனை அழியுங்கள்'' என்று கூற, அவர்கள் அவ்வசுரனுடன் போர் செய்து தலையை வெட்டி வீழ்த்தினர். விண்ணவர்கள் மனம் மகிழ்ந்தனர்.

சௌனகாதி முனிவர்கள் சூதமா முனிவரைப் பார்த்து ''விருத்த காவிரிக்குக் கடுவாய் நதி என்று பெயர் வரக் காரணம் யாது''? என்று வினவச் சூதர் கூறலானார்.

அகத்திய முனிவர் சோழ நாட்டிலே உள்ள புண்ணியத் தலங்களைத் தரிசிக்க எண்ணி ஆரூர் சென்று கமலாலயத்தில் நீராடி வன்மீகநாதரை வணங்கி, மாயூரம், சாய்க்காடு, திருவெண்காடு, வேளூர், திருவிடைமருதூர், ஐயாறு, பழனம், சோற்றுத்துறை, வேதிகுடி, கண்டியூர், பூந்துருத்தி, நெய்த்தானம், நியமம். மறைக்காடு முதலிய தலங்களுக்குச் சென்று அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி, ஈசனை வழிபட்டுப் புத்தூருக்கு வந்தார். அங்குள்ள சூலதீர்த்தத்திலும் அஷ்டதிக் பாலகர்களால் உண்டாக்கப்பட்ட தீர்த்தத்திலும் நீராடி, செம் பொன்னாதரையும், சிவசேகரிஅம்மையையும் வணங்கினார். பின்பு செம்பொன்னாதருக்குக் காவிரி நீரால் நீராட்டக் கருதி, காவிரியை இரு கூறாக வரும்படி வேண்ட, அவ்வண்ணமே நவபுரத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் காவிரியானது வரத் தேவர்கள் கண்டு மகிழ்ந்தனர். முனிவரும் அந்நீரை எடுத்து ஈசனுக்கு நீராட்டிச் சிவபெருமான் சிறப்புக்களைப்பலவாறு புகழ்ந் தார்.

செம்பொன்னாதரும் உளம் மகிழ்ந்து புனிதா! ''இந் நகர்க்கு இருபுறத்திலும் காவிரியை வரும்படி செய்தாய். வடக்குப் புறம் கடுவேகமாக வந்த காவிரிக்கு இன்று முதல் கடுவாய் என்று பெயர் வழங்கட்டும்'' என்று கூறி மறைந்தார். இந்தச் சரித்திரத்தைக் கேட்பவர்கள், படிப்பவர்கள் நீங்காத செல்வத்தை இப்புவியில் அடைந்து கடைசியில் சிவ பதவி அடைவார்கள்.

இவ்வாலயத்திற்குத் தெற்கே விநாயகர் எழுந்தருளி யிருக்கக் காரணம் என்ன? என்று முனிவர்கள் கேட்க, சூதமா முனிவர் கூறலானார்.

ஒரு சமயம் கும்பகர்ணன் உலகத்திலுள்ளோர்களைத் துன்புறுத்தி வந்தான். அவர்கள் அவனுடைய கொடுமையைத்

தாங்க முடியாமல் பிரமனிடம் முறையிட. அவர் மனம் நொந்து நீ எப்பொழுதும் உறங்கிக் கொண்டிருப்பாயாக என்று சபிக்கவே அவன் அங்கேயே வீழ்ந்து உறங்கலானான்.

இராவணன் தன் தம்பிக்கு ஏற்பட்ட சாபத்தைப் போக்க எண்ணி பிரமனை வழிபட அவர் ஆறு மாதத்திற்கு ஒரு நாள் உறக்கம் நீங்கி எழுந்திருப்பான் எனக் கூறினார்.

உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட கும்பகர்ணன் மனிதர்களைக் கொன்று தின்ன, அவர்கள் நடுங்கி, நவபுரத்திற்கு வந்து செம்பொன்னாதரின் பாத கமலத்தை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தனர். ஈசன் அவர்கள் கனவில் தோன்றி நீவீர் மனக்கலக்கம் அடைய வேண்டாம்'' என்று கூறினார்.

கும்பகர்ணன் சோழ நாட்டிலுள்ளவர்களைத் துன்புறுத்தவே அவர்களெல்லோரும் நவபுரத்திற்கு ஓடி வந்தனர். கும்பகர்ணனும் அவர்களைப் பின் தொடர்ந்துவர, அவர்கள் தேவி முன் நின்று அண்டர் நாயகியே! உன் அடைக்கலம் எங்களைக் காப்பாற்றுவாயாக என்று ஓலமிட்டனர். தேவி தன் மகனான கணபதியை நோக்கி ''இந்தக் கும்பகர்ணனை இலங்கைக்கப்பால் உயிரோடு தூக்கியெறி'' என்று கூற விநாயகரும் தன் தும்பிக்கையால் எடுத்து வீசியெறிந்தார். புவியிலுள்ளவர்கள் துன்பம் நீங்கினம் என்று எண்ணி, கயமுகனை மலர்களால் அர்ச்சித்துப் போற்றினர். அன்று முதல் கும்பகர்ணப்பிள்ளையார் என்ற பெயர் வழங்கலாயிற்று.

தென் மதுரையில் பௌத்தர்களை அடித்துக் கொல்ல, அவர்களில் ஒருவனான சைன வல்லபன் என்பவன் யாவருக்கும் தெரியாமல் சோழநாட்டிற்கு ஓடிவந்து கிருமி கண்டன் என்னும் அரசனிடம் சரண் அடைந்தான். அரசனும் அவனுக்கு அபயம் அளித்திடவே அவன் நாளடைவில் அரசனைத் தன்வயமாக்கி தன்மதக்கொள்கைகளைக் கூறி, ஈசனையும் அந்தணர்களையும் நிந்திக்கலானான்.

சைன அரசன் வல்லபனைச் சேர்ந்தவர்களும் சோழநாடு வந்தடைந்தனர். சைனவல்லபனின் துர்ப்போதனைகளைக் கேட்டு அந்தணர்களைத் துன்புறுத்தலானான். அரசனின் மனைவியான காந்திமாமதி என்பவள் மன்னனை வணங்கி ''அந்தணர்களைத்தெய்வமாய்த் தொழல் நம் கடமையாதலால் அவர்களை நிந்திக்காதீர் என்று கூறினாள். அரசன் அவள் கூறியதையும் கேட்காமல் துன்புறுத்தவே மறையவர்கள் எல்லோரும் பக்தி

யில்லாதவன் பதியில் வாழ்வது பாவம். பாண்டி நாட்டிற்குச் செல்வோம் என்று எண்ணிக் கிளம்பி நவபுரத்திற்கு வந்து இன்று இரவு இவண் தங்கிக் காலையில் செல்வோம், என்று எண்ணித் தங்கள் கடமைகளை நன்கு செய்து ஆல கண்டனையும் சிவ சேகரியையும் துதித்திருந்தனர். அன்றிரவு இறைவி அவர்கள் கனவில் நீங்கள் இவ்விடம் விட்டு ஏகன்மின் இறையவர் காப்பார் என்று கூறினாள்.

மறுநாள் கதிரவன் எழுமுன் துயில் நீங்கி, தாங்கள் கண்ட கனவை ஒருவர்க்கொருவர் உரைத்தனர்.

பௌத்தனும் அரசனிடம் சென்று 'அவர்கள் எல்லோரும் நவபுரத்திற்குச் சென்று விட்டனர். அவர்களைப் பந்தனம் செய்க என்று கூறி ஆயுதபாணிகளான பவுத்தர்களைஅனுப்பி அவர்களைப் பிடித்துச் சிறையிலிடுங்கள் என்றான். கொடுந் தொழிலர்களான பௌத்தர்கள் அவனை வணங்கி நவ புரத்திற்கு யாவரும் அறியா வண்ணம் வந்து வாயுமூலையில் இருக்க, அதனையறிந்து உலக மாதவான பார்வதி தேவியார் தம் கணவரிடம் ' நம்மை அடைந்தவர்களுடைய துன்பத்தை நீக்குவது நம் கடமை யல்லவா? என்று கூற ஈசனும் கிழ வேதியர் வேடம் தாங்கி கை, தலை, கால்கள் நடுங்க நடந்து பௌத்தர்கள் இருக்குமிடத்திற்கு வந்து தீயோர்களைக் கல்லாகச் சபித்திட்டார். அந்தணர்கள் மகிழ்ச்சியடைந்து பூசைகள் இயற்றி எங்களுடைய இடரையகற்றிய கருணைக் கடவுளே என்று போற்றினார்கள். அன்று முதல் அங்கு எழுந்தருளியிருக்கும் ஈசனுக்குக் ''காருணியேசர்'' என்ற திருநாமம் ஏற்பட்டது. இந்தச் சரித்திரத்தைக் கேட்பவர் இறைவர் வாழ் பதத்தை அடைவர்.

குறிப்பு : கடுவாய்க்கரைப்புத்தூர் புராணத்தின் உரை நடை - ஆக்கம்.

67. திருக்கடைமுடி: (சோழநாடு)

ஆநந்த தாண்டவபுரம் இரயில்வே நிலையத்திற்கு வட கிழக்கே இரண்டு மைல் தொலவில் திருநின்றியூர் உள்ளது. அவ்வூருக்குத் தென்கிழக்கே நான்கு மைல் தொலைவில் இத்தலம் உள்ளது. நனிபள்ளிக்கு வடமேற்கு ஒரு மைல் தொலைவு. இப்பொழுது கீழையூர் என்று வழங்குகிறது. பிரமன் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. கீழூர் என்றும் ஒரு பெயர் உண்டு.

(மு.ரா. கட்டுரைத்திரட்டு-ஆராய்ச்சித் தொகுதி பக்கம் 280) ''தஞ்சாவூர் மாவட்டம் கோவிலடி என வழங்கும் பேரூர்க்குக் கீழ்பால் 10 மைல் தொலைவில் உள்ள திருச்சென்னம் பூண்டியே சிலாசாசனப்படி 'கடைமுடி' என்னும் தலம் என்பர்.

சுவாமி : கடைமுடிநாதேசுரர் (கடைமுடி ஈசர்) அந்திசம் ரக்ஷணீசுரர்:

அம்பிகை : அபிராமி. (அபிராமவல்லி).
தீர்த்தம் ஸ்ரீ கடைமுடி. விருட்சம் : கிளுவை.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

கடைமுடி வாழுங் கடைமுடி யார்நூல்
இடையபி ராமி இன்புறு கடைமுடி. (சிவ.)

அருத்தனை அறவனை அமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை அல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே.
(திருஞா. 1-ஆம் திரு.)

68. திருக்கண்டியூர் வீரட்டம் (சோழநாடு)

இத்தலம் தஞ்சாவூருக்கு வடக்கே ஆறு மைல் தொலைவில் திருவையாற்றுக்குப் போகும் வழியில் இருக்கின்றது.

ஆதிகாலத்தில் ஐந்து முகங்களைப் பிரமன் பெற்றிருந்தான். பற்பல உயிர்களுக்குத் துன்பம் விளைவித்தான். தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி அவனுடைய ஐந்தாவது தலையைச் சிவபெருமான் கண்டித்து எறிந்தமையால் கண்டியூர் வீரட்டம் ஆயிற்று. சப்தஸ்தானதலங்களுள் ஐந்தாவது. அட்ட வீரத் தலங்களுள் ஒன்று. மேற்குப் பார்த்த சந்நிதி. மாசி மாதம் 13—15 தேதிகளில் சூரிய பூசை. சாதாதபர் பூசித்த தலம். பிரமா, சரசுவதி திருவுருவங்கள் உள்ளன.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

வியன்றிருக் கண்டியூர் வீரட் டேசர்
நயந்தரு மங்கள நாயகி பொன்னி. (சிவ.)

வானவர் தானவர் வைகல் மலர்கொணர்ந்
திட்டிறைஞ்சித்
தானவர் மால்பிர மன்னறி யாத தகைமையினான்
ஆனவ னாதி புராணனன் றோடிய பன்றியெய்த
கானவ னைக்கண்டி யூரண்ட வாணர் தொழுகின்றதே.
(திருநா. 4-ஆம் திரு.)

வினவினேன்அறி யாமையில்லுரை செய்ம்மினீரருள்
வேண்டுவீர்
கனைவிலார்புனற் காவிரிக்கரை மேயகண்டியூர்
வீரட்டன்
தனமுனே தனக் கின்மையோதம ராயினரண்ட
மாளத்தான்
வனனில் வாழ்க்கைகொண் டாடிப்பாடியயிவ்
வையமாப்பலி தேர்ந்ததே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கொடுங்கோளூர் தண்வளவி கண்டியூரும்—புறம்பயம். திருநா.
கண்டியிற்பட்ட கழுத்துடையீர் கரிகாட்டிலிட்ட—வீழிமிழலை.
திருநா.
கண்டியூர் வீரட்டங் கருகாவூரும்—பொது. திருநா.
காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்—பொது. திருநா.
கண்டியூர் கண்டியூர் என்பீராகில்—பொது. திருநா.
காளகண்டனுறையுங் கடைமுடி கண்டியூர்—பொது.

69. திருக்கண்ணூர் கோயில் (சோழநாடு)

வைத்தீசுவரன் கோயிலிலிருந்து தென்கிழக்காக 1½ மைல் தொலைவு சென்றால் இத்தலத்தையடையலாம். குறுமாணக்குடி என்று இப்பொழுது வழங்குகிறது.

கௌதம முனிவரால் இந்திரனுக்கு உற்ற சாபம் நீங்கும் பொருட்டு இத்தலத்திலுள்ள சிவபெருமானே விண்ணவர் வழி பட்டதனால் இந்திரன் தன் சாபம் நீங்கி ஆயிரம் கண் பெற்றான். இந்திரனுக்குச் சாபவிமோசனம் கிடைத்த தலம். அதனால் தலப்பெயர் கண்ணார் கோயிலாயிற்று.

குறுமாணி (சிறிய பிரமசாரி) யாகிய வாமனர் சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்ற தலமாகையால் குறுமாணிக்குடி என்பது குறுமாணக்குடி என மருவித்தலத்தின் பெயர் வழங்கலாயிற்று.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : கண்ணாயிரேசுரர், சஹஸ்ரநேத்ரேசுவரர்.
அம்பிகை : முருகுவளர் கோதையம்மை, சுகந்தகுந்தளாம்
தீர்த்தம் : இந்திர தீர்த்தம், மணிகர்ணிகை [பிகை.
விருட்சம் : சரக்கொன்றை.

அருள்கண்ணார் கோயில் கண்ணாயிர முடையார்
முருகு வளர் கோதை முதிர்மணி கர்ணிகை. (சிவ.)

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

காளத்தி கழுக்குன்றங் கண்ணாரண்ணா—பொது. திருநா.

70. திருக்கயிலாயம்: (வடநாடு)

கயிலாயம் நொடித்தான்மலை என்று வழங்கப் பெறும். இமயகிரியின் சிகரங்களுள்ஒன்று. 22980 அடி உயரம். பனிக் கட்டியாலாகிய ஒரு பெரிய ஸ்தூபிபோல் இருக்கிறது. இதைப் பிரதக்ஷிணம் செய்ய 29 மைல் ஆகும். மிகமிகக் கடினமான யாத்திரை. சம்பந்தர் காளத்தியிலிருந்தே பதிகம் ஓதினார். அப்பர் கயிலாயம் செல்லும் வழியில் ஒரு முனிவர் வடிவில் சிவபெருமான் தோன்றி ஒரு தீர்த்தத்தில் முழுகச் சொல்லி, யாதும் சுவடுபடாமல், திருஐயாற்றில் அவரை எழச் செய்து அங்குக் கயிலாயக் கோலம் காட்டியருளினார். சுந்தரர் கயிலாயத்திற்குச் சிவபெருமான் அனுப்பிய வெள்ளானை மீதேறிச் சென்றனர். காரைக்கால் அம்மையார் தம்தூல உடலை உதறி எறிந்து, எலும்புக் கூட்டோடுள்ள பேய் வடிவத்தோடு தலையினால் நடந்து சென்று சிவசந்நிதி அடையும் போது சிவபெருமான். அம்மையே' என்னும் செம்மை ஒருமொழி உலகெல்லாம் உய்யவே அருளிச் செய்தார். அங்கு வரம் பெற்றுத் திருவாலங்காடு சேர்ந்து நடம்

கண்டார். சேரமான் பெருமாள் நாயனார் தமது குதிரையின் செவியில் பஞ்சாக்கரம் ஓதி வான்வழியாகச் சுந்தரரை எதிர் சேவித்துக் கயிலை சார்ந்து கயிலைநாதன் சந்நிதியில் ''திருக் கயிலாய ஞான உலா'' பாடினார். பன்னிரு திருமுறைகளில் இப் பனுவல் ஒன்றேகயிலாய நாதன் திருமுன்பு நேரே விண்ணப்பிக்கப் பெற்ற பெருமையுடைத்து. சுந்தரர் தோழரான பெருமிழலைக் குறும்ப நாயனார் யோகக் காட்சியில் சுந்தரர் கயிலைக்குச் செல்வதை அறிந்து யோகநெறியில் பிரமநாடி வழியாகக்கபால மோட்சம் எய்திக் கயிலை சேர்ந்து சுந்தரரை எதிர்கொண் டழைத்தார். ஔவை மூதாட்டியார் ''சீதக்களப'' எனத் தொடங்கும் அகவல்பாடி விநாயகர் பூசை செய்ய, பூசையின் இறுதியில் விநாயகப் பெருமானின் துதிக்கையால் தூக்கப்பட்டு நேரே கயிலை சேர்ந்தார். கயிலாயநாதன் அருளினால் தான் அவன் காட்டக் கண்டு அவன் திருவுருவைத் தரிசிக்க இயலும் இன்றேல் பனிமலைச்சிகரம் ஒன்றையே கண்டு திரும்ப வேண்டும்.

மூவரும் பாடிய தலம்.

வளர்கயி லாய மலைபர மேசுரர்
இளமைசேர் பார்வதி எழில்ச ரவணையே. (சிவ.)

அருள்வட திசையிலி லைந்துசி வாலயம்
பரிவொடு பணிய பழவினை யறுமே.

வாளவரி கோளபுலி கீளதுரி தாளின்மிசை நாளும்
மகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில கோளகளி
றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ மீளிமிளிர்
தூளிவளர்பொன்
காளமுகில் மூளுமிருள் கீளவிரி தாளகயி லாயமலையே.
(திருஞா. 3-ஆம் திரு.)

கனகமா வயிர முந்து மாமணிக் கயிலை கண்டும்
உனகனா யரக்க னோடி எடுத்தலும் உமையாள்அஞ்ச
அனகனாய் நின்ற ஈசன் ஊன்றலும் அலறிவீழ்ந்தான்
மனகனா யூன்றி னானேல் மறித்துநோக் கில்லை
யன்றே.
(திருநா. 4-ஆம் திரு.)

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன்
பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட் படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்
புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை
உத்தமனே.
(சுந்தரர்)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

கயிலாய மாமலையார் காரோணத்தார்—கோயில். திருநா.
வடகயிலை மலையது தம்மிருக்கை போலும்—சாய்க்காடு.
திருநா.

வலிசேர் கயிலையும் பொதியிலுமிடமெனவுடையார்—பிரமபுரம்.
திருஞா.
எனையாளுங் கயிலையென்னும் பொருப்பவனை—புள்ளிருக்கு
வேளூர். திருநா.
எங்கயிலாயமலையான்றன்னை—நாரையூர். திருநா.
கயிலாயமேவி யிருந்தான் கண்டாய்.—கோடிகா. திருநா.
சீ கயிலாயத் தன்னை—ஆப்பாடி. திருநா.
கங்காளர் கயிலாய மலையாளர் கானப்பேராளர்—ஐயாறு.
திருஞா.
கணிநிறமன்ன கயிலைப் பொருப்பன—ஐயாறு. திருநா.
கயிலாயா காரோணா வென்றேனானே—ஐயாறு. திருநா.
வடகயிலை மன்னியிருந்தாய் நீயே.—ஐயாறு. திருநா.
வான்கயிலை மேவினாய் நீயே என்றும்—நெய்த்தானம். திருநா.
வெண்கயிலை மேவினாய் நீயே என்றும்—நெய்த்தானம்.
திருநா.
கயிலாயமலையாய் நின்கழலே சேர்ந்தேன்.—ஆனைக்கா. திருநா.
கயிலாய மலை வைத்தார் கடலூர் வைத்தார்—நல்லூர். திருநா.
கடிக்கமல மலர்வைத்தார் கைலை வைத்தார்—நல்லூர். திருநா.
கன்மலிந்த கயிலை மலைவாணர் போலும்—குடந்தைக்கீழ்க்
கோட்டம். திருநா.
காளத்தியானைக் கயிலைமேய நல்லானை—நள்ளாறு. திருநா.
கயிலாய மேவினானை—வீழிமிழலை. திருநா.

கயிலாய மலையுளார் காரோணத்தார்—வீழிமிழலை. திருநா.
வண்கயிலை மாமலை மேன் மன்னி நின்ற செங்கனகத்திர

டோளெஞ் செல்வன்றன்னை—செங்காட்டங்குடி. திருநா.
கயிலாயமலையுளானை—பள்ளியின் முக்கூடல். திருநா.
காளத்தி கயிலாய மலையுளானை—ஆரூரநெறி. திருநா.
இறைதானிறவாக் கயிலை மலையான்—நெல்லிக்கா. திருஞா.
கலைமலி செம்பொற் கயிலாய மலையானே—காறாயில். திருஞா.
கயிலாய மென்னுந் தெய்வமலையவன்காண்—வலிவலம்.
திருநா.
விண்டடவு பூங்கயிலை வெற்பன் கண்டாய்—மறைக்காடு.
திருநா.
வலமேந்திரண்டு சுடரும் வான்கயிலாய மலையும்—அதிகை.
திருநா.
கார்த்தயங்கு சோலைக் கயிலாயமும்—அதிகை. திருநா.
கயிலாயந் தம்முடைய காப்புக்களே—அதிகை. திருநா.
கயிலைமலையினான்காண்—முண்டீச்சரம். திருநா.
செழுங்கயிலாயத் தெஞ்செல்வர்போலும்—ஆமாத்தூர். திருநா.
இமய வடகயிலைச் செல்வன்றான்காண்—கச்சியேகம்பம்.
திருநா.
கலைநவின்றான் கயிலாயமென்னு மலையவன்—மாற்பேறு.
திருஞா.
கயிலைமலையை யுடையார்தாமே—ஆலங்காடு. திருநா.
கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளான்—காளத்தி. திருநா.
வீரன்காண் வியன்கயிலை மேவினான்காண்—கோகர்ணம்.
திருநா.
கண்ணார் கழுக்குன்றங் கயிலை கோணம்—பொது. திருஞா.
மானக் கயிலை மழகளிற்றை மதியைச் சுடரை மறவேனே—
பொது. திருநா.
காலங் கடந்தானிடங் கயிலாயமும்—பொது. திருநா.
கயிலாத நாதனையே காணலாமே—பொது. திருநா.
கலிவலி மிக்கோனைக்கால் விரலாற் செற்ற கயிலாத நாதனையே
காணலாமே—பொது. திருநா.
கந்த மாதனங் கயிலைமலைகேதாரம்—பொது. திருநா.

71. கரவீரம்: (சோழநாடு)

இத்தலம் திருவாரூருக்கு மேற்கே ஏழு மைல் தொலைவில் உள்ளது.

சுவாமி: கரவீரநாதர்; பிரமபுரேசர்; அலரிவனநாதர்.
அம்பிகை: பிரத்யக்ஷ நாயகி. கிழக்குமுகம்.

சந்நிதி : கிழக்கு. தீர்த்தம் : பிரமதீர்த்தம்.
விருட்சம் : அலரி.

பிரமரும், கௌதம முனிவரும் பூசித்த தலம்.
திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

கரவீர மேவுங் கரவீர நாதர்
பிரத்தி யக்ஷநா யகிபிரம தீர்த்தம். (சிவ.)

அரியும் நம்வினை யுள்ளன ஆசற
வரிகொள் மாமணி போற்கண்டம்
கரிய வன்திக ழுங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

கருப்பறியலூரார் கரவீரத்தார்—வீழிமிழலை. திருநா.
கந்தங்கமழும் கரவீரமும்—அதிகை. திருநா.
கச்சூரால‌க் கோயில் கரவீரங்காட்டுப்பள்ளி—பொது. திருநா.

72. திருக்கருகாவூர்: (சோழநாடு)

இத்தலம் பாபநாசம் இரயில்வே நிலையத்திற்கே தெற்கே நான்கு மைல் தொலைவில் உள்ளது.

ஆதரவு அற்ற ஒரு பெண்ணுக்குத் தெவியார் மருத்துவம் பார்த்துக் கருவைக் காத்தமையால் இத்தலத்திற்குக் கருகாவூர் என்று பெயர்

சுவாமி : முல்லைவனேசுரர்.
அம்பிகை : கரும்பனையாளம்மை, கருப்பரக்ஷகி.
தீர்த்தம் : பிரமதீர்த்தம்.
விநாயகர் : கற்பக விநாயகர்.
கணபதி, நந்தி, இலிங்கம். மூன்றும் சுயம்பு.
இலிங்கம் முல்லைக்கொடி சுற்றிய அடையாளத்துடன் விளங்குகிறது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

முதிர்கரு காவூர் முல்லைவ னேசர்பால்
வதிகரும் பனையாள் மலரோன் தீர்த்தம். (சிவ.)

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூர்எம்
அத்தர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே.
(திருஞா. 3-ஆம் திரு.)

குருகாம் வயிரமாம் கூறு நாளாம்
கொள்ளும் கிழமையாங் கோளே தானாம்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்
ஒருகால் உமையாளோர் பாகனுமாம்
உள்நின்ற நாவிற்கு உரையாடியாம்
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாம் கருகாவூர் எந்தை தானே.
(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

இன்சொற் கரும்பனையாளுமையோடுங் கருகாவூரார்—
வீழிமிழலை. திருநா.
கனமஞ்சினமால் விடையான் விரும்புங் கருகாவூர்—நல்லூர்
பொது. திருஞா.
கருகாவூரிற் கற்பகத்தைக் காண்டற்கரிய கதிர்ஒளியை—பொது
திருநா.
கண்டியூர் வீரட்டங் கருகாவூரும்—பொது. திருநா.
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற்கருகாவூரானே. பொது.
சுந்தரர்.

73. திருக்கருக்குடி: (சோழநாடு)

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே இரண்டேமுக்கால் மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்குக் கிழக்கே ஒன்றரை மைல் தொலைவில் ஏனாதிநாயனார் தலமாகிய எயினனூர் இருக்கின்றது. இராமர், பிரமன், சற்குணன் என்னும் அரசன் ஆகிய மூவரும் பூசித்த தலம். மருதாந்த நல்லூர் என்று வழங்கப்படுகிறது.

சுவாமி : சற்குணலிங்கேசர், பிரமபுரீசுவரர், கருக்குடி நாதர்.
அம்பிகை : சர்வாலங்கிருத நாயகி, அத்வைத நாயகி.
தீர்த்தம் : யமதீர்த்தம்.

மணல் இலிங்கம். சுவாமி, அம்மன் உருவங்கள் சிறியன. ஒரு செட்டி தன் தாயுடன் அறியாது. புணர்ந்த தோஷம் இங்கு நீங்கிற்று. அவள் உருவம் தேவி சந்நிதிக்கெதிரில் உள்ளது.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

தங்குகருக் குடிவாழ் சற்குணர் சர்வா
லங்கிருத நாயகி அந்தகன் தீர்த்தம். (சிவ.)

நனவிலும் கனவிலும் நாளுந் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்தும் நின்மலன்
கனைகடல் வையகந் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே.
(திருஞா. 3-ஆம் திரு.)

74. கருப்பறியலூர்: (சோழநாடு)

'மேலைக்காழி' என்றும் வழங்கப்பெறும். இத்தலம் வைத்தீசுரன்கோயில் இரயில்வே நிலையத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. ஆலயத்திற்குக் 'கொகுடிக் கோயில்' என்று பெயர். தலைஞாயிறு என்று வழங்கப்படுகிறது.

கொகுடி முல்லை படரும் மரமும் இலிங்கமும் பிராகாரத்தில் உள்ளன. இந்திரன் பூசித்த தலம். அவன் ஒரு சமயம் கயிலாயம் சென்றபோது இறைவன் ஒரு பூத உருவத்தில் அவன் முன்தோன்ற அவரை அறியாமல் அவரைத் தன்வச்சிராயுதத்தால் எறிந்தான். கடவுள் கோபம் கொள்ள இந்திரன் வேண்ட அவன் குற்றத்தை அவர் பொறுத்தார். ஆதலால் குற்றம் பொறுத்த நாதேசுரர்.

வேறுபெயர்கள் : யூதிகாவனம், கன்மநாசபுரம், ஆதித்த புரம், மேலைக்காழி.

விநாயக நதி தலத்தின் இருபக்கங்களிலும் ஓடுகிறது. ஞாயிறுகாணி என்ற பெயரும் உண்டு. திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி : குற்றம் பொறுத்தநாதர், அபராத க்ஷமேசுவரர்.
அம்பிகை : கோல்வளைநாயகி, விசித்ரபாலம்பிகை.
தீர்த்தம் : இந்திரதீர்த்தம், சூரிய தீர்த்தம் விருட்சம் : கொகுடிமுல்லை.

கோதகல் பறியலூர் குற்றம் பொறுத்தவர்
மாதுகோல் வளைநா யகிவான் பரிதி. (சிவ.)

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.
(திருஞா 2-ஆம் திரு.)

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பா வண்ணம்
கைம்மாவின் உரிவைபோர்த் துமை
வெருவக் கண்டானைக் கருப்பறியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயில்ஆடும் கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. (சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

கருப்பறியலூரார் கரவீரத்தார்—வீழிமிழலை. திருநா.
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூருங் கயிலாயநாதனை—
பொது. திருநா.
கருப்பறியற் பொருப்பனையகொகுடிக்கோயில்—பொது.திருநா.

75. கருவிலிக் கொட்டிட்டை: (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் இத்தலம் உள்ளது. இவ்வூருக்கு ஒன்றரை மைல் தொலைவில் கோனேரி ராஜபுரம் என்னும் திருநல்லம் இருக்கிறது. 2½ மைல் மைல் தொலைவில் திருவன்னியூர். இந்திரனும் தேவர்களும் பூசித்த தலம். சற்குணன் என்ற அரசன் பூசித்து முத்தியடைந்த தலம். உருத்திரகணங்கள் பூசித்ததாகத் தேவாரம் கூறுகின்றது.

ஆலயத்திற்குக் 'கொட்டிட்டை' என்று பெயர்.

திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : சற்குண நாதேசுரர்.
அம்பிகை : சர்வாங்க சுந்தரி.

தவத்திருக் கருவிலி சற்குண நாதர்
நவில்சர் வாங்க நாயகி யோமம். (சிவ.)

மட்டிட்ட குழ லார்சுழ லில்வலைப்
பட்டிட் டுமயங் கிப்பரி யாதுநீர்
கட்டிட் டவினை போகக் கருவிலிக்
கொட்டிட் டையுறை வான்கழல் கூடுமே.
(திருநா. 5-ம் திரு.)

76. கருவூர் ஆனிலை: (கொங்குநாடு)

இத்தலத்திற்கு இரயில்வே நிலையம் உண்டு.

எறிபத்தர், புகழ்ச்சோழர், சிவகாமியாண்டார், கருவூர்த் தேவர் முதலியோர் வரலாறுகள் விளங்குமிடம். காமதேனு பூசித்ததால் கோயில் ஆன்நிலை (ஆனிலை) ஆயிற்று.

சுவாமி : பசுபதீசுரர்.
அம்பிகை : கிருபாநாயகி.
தீர்த்தம் : பிரம தீர்த்தம்.

காமதேனு பூசை செய்து சிருட்டித் தொழில் செய்ய வரம் பெற்று அகிலமும் அளித்த காரணத்தால் ஊருக்குக் ''கருவூர்'' என்றும் சுவாமிக்குப் பசுபதி என்றும், கோயிலுக்கு ஆநிலை என்றும் பெயர். இலிங்கம் வடபுறம் சாய்ந்துள்ளது தேவி சந்நிதி—2.

திருவிசைப்பா பாடிய கருவூர்த்தேவர் அவதரித்த தலம். அவருடைய சந்நிதி தெற்குப் பிராகாரத்தில் உள்ளது.

ஸ்தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.

திருக்கரு வூர்வாழ் சிவன்பசு பதியார்
பருப்பத மருள்கிருபா நாயகி பங்கயன். (சிவ.)

தொண்டெ லாம்மலர் தூவி ஏத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை
அண்ட னாரரு ளீயும் அன்பரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

77. திருக் கலயநல்லூர்: சாக்கோட்டை (சோழநாடு)

இத்தலம் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே வலங்கை மான் போகும் வழியில் 3 மைல் தொலைவில் உள்ளது.

சுவாமி : அமிர்தகலேசுவரர்.
அம்பிகை : அமிர்தவல்லி.
தீர்த்தம் : சதுர்வேத தீர்த்தம்.

அரிசில் நதியின் தென்கரையில் உள்ளது.
உயிர்களைச் சேமித்த கலயம் பிரளயத்தில் தங்கிய இடம் இத்தலம். சுந்தரர் பாடிய தலம்.

அருங்கலைய நல்லூர் அமுத கடேசர்
மருங்குறை யமிர்த வல்லிநால் வேதம். (சிவ.)

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.
(சுந்தரர்)

78. கலிக்காமூர்: (அன்னப்பன்பேட்டை) (சோழநாடு)

தென்திருமுல்லைவாயிலுக்குத் தென்மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது இத்தலம். வேறு பெயர்கள். அன்னப்பன்

பேட்டை. பல்லவனீச்சரம். உப்பனாறு கடத்தல் வேண்டும் பராசர முனிவர் பூசித்த தலம். கடற்கரை ஓரம். திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : சுந்தரரேசுரர்.
அம்பிகை : அழகம்மை; அழகுவனமுலையம்மை.
தீர்த்தம் : அம்புவி தீர்த்தம்.

செழுகலிக் காமனூர் சேர்சுந்த ரேசுரர்
அழகிய வனமுலை அம்புவி தீர்த்தம். (சிவ.)

மடல்வரை யின்மது விம்முசோலை வயல்சூழ்ந்
தழகாரும்
கடல்வரை யோதங் கலந்துமுத்தம் சொரியும்
கலிக்காமூர்
உடல்வரை இன்னுயிர் வாழ்க்கையாய ஒருவன்
கழலேத்த
இடர்தொட ராவினை யானசிந்தும் இறைவன்
அருளாமே.
(திருஞா. 3-ஆம் திரு.)

79. திருக்கழிப்பாலை: (சோழநாடு)

சிதம்பரத்திலிருந்து இத்தலம் ஏழு மைல்தொலைவில் உள்ளது. இந்திரகீல புரம் என வழங்கும். பழைய தலம் கொள்ளிடநதி வெள்ளத்தில் போயிற்று. காரை மேட்டில் இவ்வூர் முன்பு இருந்தது.

இப்போதுள்ள கோயில் நெல்வாயில் ஆகிய சிவபுரியில் ஒரு தனிகோயிலாக இருக்கின்றது. திருக்கழிப்பாலை சுவாமி சிவ புரியில்தென்பக்கத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக் கிறார். பாலையப்பர் கோயில் என்று வழங்குகிறது. கோயில் கிணறு பால்நிறமுள்ளது. வன்மீக முனிவர் பூசித்த தலம். மூவரும் பாடிய தலம்.

சுவாமி : பால்வண்ணநாதேசுரர்.
அம்பிகை : வேதநாயகி.
தீர்த்தம் : கொள்ளிடம்.

திருக்கழிப் பாலை சிவன்வெண்ணெய் நாதர்
நரர்க்கருள் வேத நாயகி கொள்ளிடம். (சிவ.)

புனலா டியபுன் சடையாய் அரணம்
அனலா கவிழித் தவனே அழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

வண்ணமும் வடிவும் சென்று கண்டிலள்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்
கண்ணுலாம் பொழில்சூழ் கழிப்பாலைஎம்
அண்ணலே அறிவான் இவள் தன்மையே.
(திருநா. 5-ஆம் திரு.)

செடியேன் தீவினையில் தடுமாறக் கண்டாலும்
அடியான் ஆவஎனாது ஒழிதல் தகவுஆமே
முடிமேல் மாமதியும் அரவும் உடன்துயிலும்
வடிவே தாம்உடையார் மகிழுங்கழிப் பாலையதே.
(சுந்தரர்)

80. திருக்கழுக்குன்றம்: (தொண்டைநாடு)

தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு சிவதலங்களுள் ஒன்று திருக்கழுக்குன்றம். இத்தலத்தைப்பற்றிய செய்திகள் திருக்கழுக்குன்றத்து உலா முதலிய இத்தலசம்பந்த மான நூல்களாலும் சாசனங்களாலும், வேறு நூல்களிலுள்ள சிலபகுதிகளாலும் அறியப்படும்.

தேவாரம்—மூவரும் அருளிய பதிகங்கள்.
திருவாசகம்—திருக்கழுக்குன்றப் பதிகம்.
பட்டினத்தார் பாடல்
திருப்புகழ்
தனிப்பாடல்கள்.

திருக்கழுக்குன்றக் கோவை—இராமநாதபுரம் சோம சுந்தரம்பிள்ளை இயற்றியது.

திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா—காஞ்சிபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியார் இயற்றியது.

வேதகிரீசர் பதிகம் : திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் இயற்றியது. திருக்கழுக்குன்றத் தந்தாதி.
மலைமருந்துப் பதிகம்.
சமீபகாலத்தில் சிலர் பாடிய வேறு சில நூல்களும் உண்டு.

வடமொழியில் 32 அத்தியாயங்கள் அடங்கிய தலபுராணம் ஒன்றும், வேதகிரீசுவராஷ்டகம் முதலிய சில துதிநூல்களும் உள்ளன.

இத்தலச் செய்திகளை விரிவாக விளக்கும் புத்தகங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வசன நடையில் பலரால் எழுதப் பட்டிருக்கின்றன. புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் இத்தல சரித்திரத்தைச் சுருக்கமாக வசனத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

இத்தலத்திலுள்ள சிலாசானங்கள் அரசாங்கத்தாரால் படியெடுக்கப் பெற்றுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றிலிருந்து இத்தலம் களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டைச் சார்ந்ததென்பதும் உலகளந்த சோழபுரம் என்னும் பெயர் இதற்குச் சிலகாலம் வழங்கி வந்ததென்பதும் அறியப் படுகின்றன. இங்கே நமிநந்தியடிகள் மடமென்ற பெயரோடு ஒரு மடம் இருந்ததாகத் தெரிகின்றது. ஒரு சாசனத்தில் இத் தலத்தில் எழுந்தருளியுள்ளசிவபெருமான் திருநாமம் திருமலை ஆஞ்டைய நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளது. சண்முகப் பிள்ளையாரென்னும் மூர்த்தியைப் பற்றிய செய்தியொன்று ஒரு சாசனத்தில் சொல்லப்படுகின்றது.

இத்தலம் வடமொழியில் பக்ஷிதீர்த்தம் என்று கூறப்படும். வடநாட்டில் பெரும்பாலும் இப்பெயரே வழங்கும். இத்தலத் தில் யுகந்தோறும் இரண்டு கழுகுகள் வேதகிரீசரை வழி பட்டமை பற்றித் திருக்கழுக்குன்றம் என்னும் பெயர் இதற்கு உண்டாயிற்று. அப்பெயரே கங்காசலம், கழுகாசலம், திருத்திர கிரி என்று வேறுபட்டு வழங்கும். இன்றும் தினந்தோறும் உச்சிக்காலத்தில் இரண்டு கழுகுகள் இங்கே வந்து தமக்குக் கொடுக்கப்படும் உணவை உண்டு செல்வதைக் காணலாம். மிகப் பழைய காலந் தொட்டு இந்நிகழ்ச்சி நடைபெற்று வரு கின்றது.

வேதங்கள் நான்கும் இங்கே மலை உருவாக இருத்தலின் இது வேதகிரி என்னும் பெயர் பெறும். மறைக்கோடு, வேதப் பொற்றை, சுருதிமலை என்பன இதன் பரியாய நாமங்கள்.

இந்திரனுக்குச் சாபத்தைப் போக்கிய தலமாதலின் இந்திரபுரி எனவும், கோடி ருத்திரர்கள் பூசித்தமையின் உருத்திரகோடி எனவும், வாழையைத் தலவிருட்சமாகப் பெற்றமையின் கதலிவனமெனவும், சிவபெருமான் வீற்றிருக்கப் பெறுதலின் சிவபுரம் எனவும், தன்பாற் செய்யப்பெற்ற தருமங்களில் ஒன்று கோடியாகிப் பயனளித்தலின் தருமகோடி எனவும், மலைகளுள் சிறந்தமையின் திருமலை எனவும், பன்னிரு சூரியர்களாலும் பூசிக்கப் பெற்றமையின் தினகரபுரி பரிதிபுரி எனவும், கயிலை மலையின் ஒரு சிகர மாதலின் தென்கயிலை, தக்ஷிண கைலாசம் எனவும், நந்தி வழிபட்டமையின் நந்திபுரி எனவும், திருமால் நலம் பெற்றமையின் நாராயணபுரம் எனவும், பிரமதேவன் சாப விமோசனம் அடைந்தமையின் பிரமபுரி எனவும், வசுக்கள் குறை நீங்கியமையின் வசுபுரி எனவும் வழங்கும். உருத்திரகோடிகிரி நந்திகிரி எனத் திருமலைக்குத் தனிப்பெயர்களும் உண்டு.

இத்தலத்தில் சிவபுரநந்தவனமென ஒன்று உள்ளது. அதனால் இத்தலத்திற்குச் சிவபுரம் என்ற பெயர் முற்காலத்து வழக்கில் இருந்ததை அறியலாகும். திருமலை என்னும் திருநாமம் சிலாசாசனத்தில் காணப்படுகின்றது. அம்பிகையின் திருநாமமாகிய திருமலைச் சொக்கநாயகி என்பதிலிருந்தும் இதனை அறியலாகும். நாராயணபுரம் என்பதை வேத நாராயணபுரம் என்று கூறுவாரும் உண்டு.

மூர்த்திகள் :

விநாயகர் : இந்தத் தலத்தில் அங்கங்கே பல விநாயகர்கள் எழுந்தருளியிருக்கின்றனர். இங்கே மலைக்குக் கீழே உள்ள திருக்கோயிலில் வண்டு வனப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்றனர். இவர் திருநாமம் வடமொழியில் பிரமராரண்ய விநாயக ரென வழங்கும். சங்கதீர்த்தத்தின் வடமேற்கில் சந்நிதி விநாயகர் என்றும், சண்முக விநாயகர் என்றும் இரண்டு மூர்த்திகள் உள்ளனர்; இரட்டைப்பிள்ளையார் என்று ஒருங்கே சேர்த்து வழங்கும் வழக்கமும் இருந்து வருகின்றது. கல்வெட்டில் இவ்விருவருள் ஒருவராகிய சண்முக விநாயகருடைய திருநாமமே காணப்படுகின்றது. அவர் ஆறு திருமுகங்களை உடையவராக விளங்குகின்றனர்.

தேரடியில் தேரடிப்பிள்ளையார் என்னும் விநாயகரும் திருவாவடுதுறை மடத்துக்கு நேரில் சொக்கப்பிள்ளையார் என்னும் மூர்த்தியும் உள்ளார். கிரிப்பிரகஷிண சாலையில் சித்தாத்ரி விநாயகர், அன்னக்காவடி மடத்துப்பிள்ளையார்,

கோடி விநாயகர், முடி காட்டும் விநாயகர், ஆலடிப்பிள்ளையார் என்னும் மூர்த்திகளைக் காணலாம். சித்தாத்ரி விநாயகர் அகத்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றவரென்பது ஓர் ஐதிஹ்யம்,

சிவபெருமான் : திருமலையின்மேல் ஒரு கோயிலும், அடிவாரத்தில் ஒரு கோயிலும் சிறப்புடைய நிலைமையில் உள்ளன. மேலுள்ளதை மலைக்கோயில் என்றும், கீழ் உள்ளதைத் தாழக் கோயிலென்றும் வழங்குவர். தாழக் கோயில் என்பது தாழ் வரைக் கோயில் என்பதன் மரூஉ வென்று தோற்றுகின்றது. மலையின்மேல் எழுந்தருளிய பெருமான் வேதகிரீசர் என்னும் திருநாமம் உடையார். கீழுள்ள கோயிலிலுள்ளவர் பக்தவத்சலர் என்னும் திருநாமம் பூண்டவர். இம்மூர்த்தியைச் சுரகுரு என்னும் சோழ அரசன் பிரதிஷ்டை செய்தான் என்பர். சங்க தீர்த்தத்திற்குத் தென்கிழக்கு மூலையில் உருத்திரகோடி என்று வழங்கும் ஆலயம் ஒன்று உண்டு. அஃதுள்ள ஊர் ருத்திரன் கோயில் என்று வழங்குகின்றது. திருமலையாளுடையாரைத் தரிசித்துப் பேறுபெற்ற கோடி உருத்திரர்கள் நிறுவியது அது. உருத்திரகோடீசர் என்பது அக்கோயில் பெருமானது திருநாமம். மலையில் எழுந்தருளியுள்ள மூர்த்தியே பிரதானர். அவருடைய திருநாமங்கள் பல. இத்தலத்திற்கு எனத் தனியே சகஸ்ரநாமம் ஒன்று இருந்ததென்று ஊகிக்க இடமுண்டு. சில பெரிய தலங்களுக்குத் தனியே சகஸ்ரநாமங்கள் உள்ளன. இப்பொழுது இருபத்தைந்து நாமங்களையுடைய அருச்சனை ஒன்று வழக்கில் இருந்து வருகின்றது.

இத்தலத்து மூர்த்திக்குரிய திருநாமங்களுள் உருத்திர கோடீசர், திருமலையாளுடையார், நந்திகிரீசர், வேதகிரீசர் என்பன தலத்தின் பெயரோடு தொடர்புடையன. மலையின் உச்சியில் எழுந்தருளியிருத்தலின் மலைக்கொழுந்து என்னும் திருநாமம் உண்டாயிற்று. மலையின்கண் எழுந்தருளியிருத்தலினாலும் பிறவிப்பிணியை நீக்குதலாலும், இங்கே வந்து பிரதக்ஷிணமும் தரிசனமும் செய்து சிலகாலம் தங்கியிருப்போர்களுடைய நோய் முதலிய நீங்குதற்குக் காரணமாதலாலும் மலை மருந்து என்னும் திருநாமம் இம்மூர்த்திக்கு வழங்குகின்றது.

இத்தலத்தில் அடிவாரத்தே ஓரிடத்தில் உள்ள மண்ணை எடுத்து மருந்துபோல அன்பர்கள் உட்கொண்டும் புறம் பூசியும் நோய் நீங்கப் பெறுவர். அம்மண் மலைமருந்து என்று கூறப்படும். ஆஞ்சநேயர் சஞ்ஜீவி பருவதத்தைக் கொணருகையில் அதன் ஒரு பகுதி இத்தலத்தில் விழுந்ததென்றும் அதனால்

இத்தலத்தில் இத்தகைய அமைப்புக்கள் உள்ளனவென்றும் ஒரு கர்ணபரம்பரையான செய்தி இருந்து வருகிறது. இம்மலையின் ஒரு பகுதிக்குச் சஞ்சீவிக் குன்று என்னும் பெயர் வழங்குகிறது.

இத்தலத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் பொன் வேண்டி வந்தாராக அவருக்கு முதலில் சிவபெருமான் ஒளித்தனர்; அதனால் நம்பிக்கொளித்தபிரான் என்னும் திருநாமம் உண்டாயிற்று. பின்னர் சுந்தரர் எம்பிரானைத் தேடிக் கண்டபோது அவருக்குப் பொன்னளித்தனர் என்பது வரலாறு ''ஸ்வர்ணப்ரதர்'' என்று அருச்சனையுள் காணப்படும் திருநாமம் இவ்வரலாற்றைக் குறிப்பதாக அமைந்திருக்கின்றது. பொன்னிட்டநாதர் என்று இது தமிழில் வழங்கும். அன்றியும் ஒரு காலத்தில் அன்பர்கள் பலருக்கு இறைவர் பொன்வழங்கியதாகவும் கூறுவர்.

வேதகிரீசர் சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பொன்னைத் தராமல் மேற்குக் கோபுரவாயில் வழியாகச் சென்று மறைந்திருப்ப, சுந்தரர் தெற்குக் கோபுரவாயில் வழியாகச் சென்று சிவபெருமானைக் கண்டு பொன் பெற்றனரென்பர். இவ்வரலாற்றின் அடையாளமாக இப்பொழுதும் உற்சவத்தின் நாலாந் திருநாளன்று இறைவர் இத்தலத்தின் தென்மேற்கு மூலையிலுள்ள கணக்கர் மண்டபத்தில் வழக்கத்திற்கு மாறாக மேலைக் கோபுர வழியாகச் சென்று எழுந்தருளியிருப்ப, சுந்தரமூர்த்தி நாயனார் யானை வாகனத்தில் அமர்ந்து தெற்குக் கோபுர வழியாகச் சென்று அவரைத் தரிசித்து உபதேசமும் பொன்னும், பெறுதல் நடைபெற்று வருகின்றது.

அம்பிகையின் திருநாமங்கள் : மலைமேல் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமங்கள் திருமலைச் சொக்கநாயகி, திருமலைச் சொக்கி, பெண்ணினல்லாள், அணியாதழகியவம்மை யென வழங்கும். அடிவாரத்தில் உள்ள பக்தவற்சலர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம் திரிபுரசுந்தரி என்பது.

தீர்த்தங்கள் : இத்தலத்திற்குரிய நதி பாலாறு. அது வடமொழியில் பாஹுலேய நதி, ஸ்கந்த நதி, குகநதி என வழங்கும். க்ஷீரநதி என்றும் கூறுவர்.

இங்கே பன்னிரண்டு தீர்த்தங்கள் முக்கியமானவை. அவை இந்திர தீர்த்தம், சம்பு தீர்த்தம், உருத்திரகோடி தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், மெய்ஞ்ஞான தீர்த்தம், அகத்திய தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், கௌசிக தீர்த்தம், நந்தி தீர்த்தம், வருண தீர்த்தம், அகலிகை தீர்த்தம், சம்பாதி தீர்த்தம் என்பன.

இவற்றுள் சம்பாதி தீர்த்தம் என்பது மலையின் மேலுள்ள சுனை. அது பக்ஷி தீர்த்தம் எனவும் வழங்கும். அதன்கண் நாயொன்றும், இரணியசேதா என்னும் மந்திரியும் மூழ்கிக் குட்ட நோய் நீங்கப் பெற்றரென்பது புராண வரலாறு. பக்தவற்சலர் கோயிலிலுள்ள தடாகமே நந்தி தீர்த்தம் எனப்படும். இதன் கரையில் நந்தி தேவருடைய திருவுருவம் உண்டு.

இப்பொழுது ஆண்டராஜன் குளமென்று வழங்குவது விசுவாமித்திர தீர்த்தம் என்றும், பிரதக்ஷிண சாலையிலுள்ள கோடி தீர்த்தம் என்பதே வருண தீர்த்தம் என்றும், பொன்னிட்ட நாதர் குளம் என்று வழங்குவதே அகத்திய தீர்த்தம் என்றும், சேரான் குளம் என்று வழங்குவதே மார்க்கண்டேய தீர்த்த மென்றும் கூறுவர்.

இப்பன்னிரண்டு தீர்த்தங்களையன்றி இங்கே மிகப் பிரசித்தி பெற்றதும் நன்னீரையுடையதுமாகிய சங்கதீர்த்தம் என்னும் பெரிய தடாகம் ஒன்று உண்டு. அதனிடையே நீராழி மண்ட பம் அமைத்திருக்கின்றது. பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை அங்கே சங்க தீர்த்த புஷ்கரம் என்னும் ஒரு திருநாள் நடைபெறும். கன்னியாராசியில் குருவரும் நாளே அது. அக் காலத்தில் மூன்றரைக் கோடி தீர்த்தங்கள் அதன்கண் வந்து ஆடுகின்றன என்பது ஐதிஹ்யம்.

மார்க்கண்டேயருக்காக அத்தீர்த்தத்தில் சங்கு உண்டான மையின் சங்கதீர்த்தமென்னும் பெயர் அதற்கு அமைந்ததாம். சிலவருஷங்களுக்கு முன் அதன்கண் சங்கு உண்டாயிற்று என்பர். அச்சங்கத்தின் படம் திருக்கழுக்குன்ற வரலாறு கூறும் ஒரு புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மார்க்கண்டேயர் அருச் சித்த சிவலிங்கப் பெருமான் மார்க்கண்டேசுவரர் அல்லது தீர்த்தேசுவரர் என்னும் திருநாமத்தோடு அத்தீர்த்தத்தின் கரை யில் எழுந்தருளியிருக்கிறார்.

மண்டபங்கள் :

இத்தலத்தில் பழையனவும் புதியனவுமாகிய மண்டபங்கள் பல இருக்கின்றன. மலையின் இடையே 'ஒருகல் மண்டபம்' என ஒன்று உளது. அதன்கண் சிவலிங்கப் பெருமானும் வேறு சிலமூர்த்திகளும் உள்ளனர். சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த தாகவும் மிகப் பழமையானதாகவும் பல்லவர்காலத்தில் அமைக்கப்பட்டதாகவும் அம்மண்டபம் காணப்படுகின்றது. அதில் சிலாசாசனங்கள் இருக்கின்றன.

மலையின் அடிவாரக் கோயிலில் ஆமை மண்டபம் என்று ஒன்று உள்ளது. அங்கும் சிறந்த சிற்பங்கள் உள்ளன. இம் மலையில் பல குகைகள் இருக்கின்றன.

பூசித்துப்பேறு பெற்றோர் :

இந்தத் தலத்தில் வழிபட்டுத் தாம் வேண்டிய வரங்களைப் பெற்றோரும், தம்பாவங்கள் நீங்கினோரும், தாம் உற்றசாபம் நீங்கப் பெற்றோரும், வாசம்செய்து இன்புற்றோரும், தரிசனம் செய்து நோய் முதலியன நீங்கப்பெற்றோரும் பலராவர். அவர்களில் சிலர் பெயர் வருமாறு : அகத்தியர், அகலிகை, ஆதி என்னும் முனிவர் (கழுகு), இடி, இந்திரன், இரணிய சேதா என்னும் மந்திரி, உருத்திரர்கோடி, கங்கை முதலிய நதிகள் கணிகை ஒருத்தி, சடாயு (கழுகு), சண்டன் (கழுகு), சத்த மாதர், சந்திரன், சம்பாதி (கழுகு), சம்பு (கழுகு), சம்புகுத்தன் (கழுகு), சம்புலிங்கம் என்னும் பிராமணன், சனகமுனிவர், சுரகுரு என்னும் சோழன், திருஞானசம்பந்தர் முதலிய நால்வர், திருமால், திலோத்தமை, நந்திதேவர், நாய் ஒன்று, பன்னி ரண்டு சூரியர், பிரசண்டன் (கழுகு) பிரமதேவர், மாகுத்தன் (கழுகு), மார்க்கண்டேயர், முனிக்கணம், யக்ஷன் ஒருவன், வசிட்டர், வசுக்கள் எண்மர், வருணன், விசுவாமித்திரர் வேதங் கள் முதலியோர்.

இவர்களுள் அகத்தியர் பெயரால் ஒரு லிங்கமும் தீர்த்தமும் உள்ளன. இடி பூசிப்பதற்கு அறிகுறியாக இக்காலத்திலும் சில முறை கோயிலில் இடி படிதல் உண்டென்பர்.

இத்தலத்தில் முற்காலத்தில் நாச்சிமுத்து என்னும் கணிகை ஒருத்தி வாழ்ந்திருந்தாள். அவள் ஒருவேணவரால் பாடப் பெற்ற திருக்கழுக்குன்ற மாலை என்னும் நூலில் ஒரு செய்யு யுளைத் தினந்தோறும் கூறி வேதகிரீசரை வழிபட்டு வந்தாள். ஒருநாள் பெருங்காற்றும் மழையும் வந்தமையின் திருக்கோயி லுக்குச் செல்ல இயலவில்லை. ''ஐயோ ! இன்று எம்பெரு மானை வழிபட முடியவில்லையே! என் செய்வேன்! நான் அவர் சந்நிதியிற் சென்று தொழும் வகையின்றித் திகைக்கின்றேன். எம்பெருமான் இவ்வீட்டு முற்றத்தில் எழுந்தருளினால் எவ் வளவு ஆனந்தமாகப் பாடி மகிழ்வேன்! இந்தத் தடைகளைப் பொருட்படுத்த வேண்டாமே! என்று வருந்தி. ''முற்றத்திலே வந்து முன்னிற்கிலோ'' எனவரும் ஒரு செய்யுளைப் பாடத் தொடங்கினாள். அச்செய்யுளில் பாதி முடிந்தவுடன் வேத கிரீசர் இடபவாகனாரூடராய் அவள் முற்றத்தில் எழுந்தருளி

னார். விம்மிதமடைந்த கணிகை மற்றப்பாதியைப் பாடி முடித்து அவரை வணங்கி மகிழ்ந்தாள். பிறகு இறைவர் எழுந்தருளும்போது அவரது பிரிவாற்றாமல் இடபவாகனத்தின் திருவடியைப் பிடித்தாள் அப்படியே இறைவர் அவளைக் கைலாயத்திற்கு அழைத்துச் சென்றார். அதுகண்டு அங்கே நின்ற மாலையின் ஆசிரியராகிய வைணவரும் நாச்சிமுத்தின் காலைப் பிடித்துக்கொண்டு தாமும் கயிலை புக்கனர்.

சுரகுரு என்னும் சோழன் மகாபலிபுரத்தில் இருந்து ஆண்டான் என்றும் அவனுக்கு நேர்ந்த கோஹத்தி இத்தலத்தில் நீங்கியதென்றும் தலபுராணம் உரைக்கும். அவனுடைய கோஹத்தி தோஷம் ஒரு காக்கையுருவாகச் சென்று வீழ்ந்து ஒரு குன்று வடிவாயிற்று என்றும் அதுவே இப்பொழுது தெற்கே காக்கைக் குன்று என்று வழங்குகின்றது என்றும் கூறுவர். அடிவாரக் கோயிலில் உள்ள மண்டபத்தில் சுரகுருச் சோழன் வரலாற்றைப் புலப்படுத்தும் சிற்பங்கள் பல உள்ளன.

திருஞான சம்பந்தர் முதலிய மூவரும் இம்மலையே சிவரூப மாதலின் இதன்மேல் ஏறுதற்கு அஞ்சிக் கீழிருந்தபடியே திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளினர். அவர்கள் அங்ஙனம் நின்று பாடிய இடம் மூவர் பேட்டையென வழங்குகின்றது. அவ்விடத்தில் மாணிக்க வாசகரையும் சேர்த்து நால்வருடைய திருவுருவமும் அமைத்த நால்வர் கோயில் என்று ஓராலயம் உண்டு.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் தாம் கண்ட குரு மூர்த்தியின் திருக்கோலத்தை இத்தலத்தில் தரிசிக்கப் பெற்று ஒரு பதிகம் பாடியுள்ளார். அதற்கு அறிகுறியாக அடிவாரக் கோயிலில் மாணிக்கவாசகருக்காகக் கிழக்கு முகத் தனிக்கோயிலும் அதற்கெதிரில் திருப்பெருந்துறை என்று வழங்கும் கோயிலும் உள்ளன. அங்கே பலிபீடமாத்திரம் உள்ளது. மலைவழியினிடையே ஒரு மண்டபத்தில் இரண்டு திருவடிகள் உண்டு. மாணிக்கவாசகர் தாம் கொணர்ந்த திருவடிநிலைகளை இங்கே வைத்துவிட்டனரென்றும் அவையே இவையென்றும் சிலர் கூறுவர்.

திருமால், பிரமதேவர், இந்திரன் என்னும் மூவரும் இங்கே வழிபட்ட வரலாற்றை நினைப்பூட்டும் அறிகுறிகளாக அவர்களுடைய திருவுருவங்கள் திருமலைக் கோயில் கருப்பக் கிருகத்தின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

தலவிருட்சம்: இத்தலத்திற்குரிய விருட்சம் வாழை. அதனால் கதலிவனம் என்று இது கூறப்படும். ''கதலிவனமேவு பெருமாளே'' என்பது திருப்புகழ். சுவாமி கோயிலுக்கும் அம்பிகை கோயிலுக்கும் இடையே வாழை மரம் ஒன்று உள்ளது. இத்தலத்தில் 5-ஆம் திருநாளன்று பகலில் கதலி வாகனக் காட்சி நடைபெற்று வருகின்றது. மலைமேலுள்ள வேதகிரீசப்பெருமான் திருவுருவம் வாழைப் பூவைப் போன்றதாக இருக்கின்ற தென்றும் மேலே சுவசமிடப் பட்டிருக்கின்ற தென்றும் தெரிய வருகின்றது.

திருவிழாக்கள்: முற்காலத்தில் இத்தலத்தில் ஆடி மாதத்தில் உத்தராட நக்ஷத்திரத்தில் திருத்தேர் விழா நடைபெற்று வந்தது; திருக்கழுக்குன்றத்து உலாவினால் இச்செய்தியை அறியலாகும். இப்போது சித்திரை மாதத்தில் நடைபெற்று வருகின்றது. வேதகிரீசர் இத்தலத்திலிருந்து ஒரு முறை சென்று பார்வதி தேவியாரை மணந்ததாகப் புராணம் கூறும். ஆதலின் இங்கே திருக்கல்யாண உற்சவம் சிறப்புப் பெற்றது. இப்பொழுது வைகாசி மாதத்திலும், ஆடி மாதத்திலும், பங்குனி மாதத்திலும் திருக்கலியாண உற்சவங்கள் நடைபெறுகின்றன.

கார்த்திகை மாதத்தில் கடைசிச் சோமவாரத்தில் திருமலைப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். தை மாதத்தில் பூசநட்சத்திரத்தில் சங்க தீர்த்தத்திலும் மறுநாள் நந்தி தீர்த்தத்திலும் தெப்பத்திருவிழா நடைபெற்று வருகின்றது.

பிறசெய்திகள்: இத்தலத்தின் சுற்றளவு ஏழரைக்காத மென்று புராணம் முதலியன கூறும். இதற்குரிய ஆகமம் காரணம் என்பது திருக்கழுக்குன்ற உலாவில் காணப்படும் செய்தி. இப்பொழுது பெரும்பாலும் காமிகாகமப்படியே யாவும் நிகழ்த்தப் பெறுகின்றன.

ஸ்ரீவைஷ்ணர்கள் இக்கோயிலில் சில கைங்கரியங்களைப் பரம்பரையாகச் செய்து வருகிறார்கள். ஒரு வைஷ்ணவப் பெரியாருக்கு இத்தலத்தில் நன்மை உண்டானது பற்றி இவ் வழக்கம் இருந்து வருகின்றதாம். தாதாசாரியர் கோபுரம் என்று ஒன்று உள்ளது. அதுதாதாசாரியார் என்னும் ஸ்ரீவைஷ்ணவப் பெரியார் ஒருவரால் செய்விக்கப் பெற்றதென்று தெரிய வருகின்றது.

கழுகாசல சதகம் என்னும் நூல் எளிய நடையில் பக்திச் சுவை ததும்ப அமைந்திருக்கின்றது. அதனைப் பாடியவர் இன்னாரென்று இப்பொழுது விளங்கவில்லை.

அந்நூலாசிரியர் குன்ம நோயால் துன்புற்று மிகவருந்தி இங்கே வந்து ஸ்ரீவேதகிரீசப் பெருமான் திருவருளால் அக் கொடிய நோயினின்றும் விடுபட்டார்.

நாள்தோறும் இத்தலத்திற்கு வரும் கழுகுகளைத் தரிசிக்கப் பல ஊர்களிலிருந்து அன்பர்கள் வந்து செல்கின்றனர். பல வருஷங்களுக்கு முன் இவ்வூருக்கருகில் உள்ள சதுரங்கப் பட்டணத்தில் இருந்த டச்சுக்காரரும், மேல் நாட்டினர் பிறரும் இத்தலத்தைப் பற்றியும், கழுகுகள் தினந்தோறும் வந்து செல் வதைப் பற்றியும் சில குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கின்றனர்.

கழுகுகளுக்கு உணவு கொடுப்பதற்கென்று பக்ஷிபண்டாரம் என வழங்கும் சைவபரம்பரையினர் இத்தலத்தில் இருந்து வரு கின்றனர். சிலகாலம் இவ்வுரிமை செங்குந்தர்களுக்கும் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

இத்தகைய பெருஞ்சிறப்பையுடைய இத்திருத்தல மூர்த்தி யின்பால் இவ்வூரைச் சூழவிருக்கும் ஊர்களிலுள்ளார் ஈடுபட்டு இம்மூர்த்தியைக் குலதெய்வமாகத் தொழுது வருகின்றனர். இதைச் சூழ்ந்துள்ள இடங்களில் பலர் வேதாசலம், வேதகிரி, ருத்திரகோடி என்னும் பெயர்களை உடையவர்களாக இருத்தல் இதற்கு ஓர் அறிகுறியாகும்.

திருக்கழுக் குன்றம் சிவன்வேத கீதர்
நரர்க்கருள வேத நாயகி பட்சி. (சிவ.)

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிராணிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (சுந்தரர்)

தோடுடையான் ஒருகாதில் தூயகுழைதாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்து உண்ணும்
நாடுடையான் நள்ளிருள் ஏமம் நடம் ஆடும்
காடுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

(திருஞா. 1-ஆம் திரு.)

மூவிலைவேல் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலானானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலாலம் உண்டு உகந்த ஐயன் தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.
(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கழையாடு கழுக்குன்ற மமர்ந்தான் கண்டாய்—கோடிகா. திருநா.

அண்ணவுங் கழுக்குன்று மாய மலையவை வாழ்வார்—பெரு வேளூர். திருஞா.

கண்ணூர் கழுக்குன்றங்கயிலே கோணம்—பொது. சு.

81. திருக்களர் : (சோழநாடு)

திருத்தருப்பூண்டி இரயில்வேஸ்டேஷனிலிருந்து சற்றேறக் குறைய 5-மைல்.

சுவாமிபெயர் : களர்முளைநாதேசுவரர்; அடைந்தாருக்கு அருள் செய்யாதின்ற நாதர்.

அம்பிகை : அழகேசுவரியம்மை, அமுதவல்லி.

தீர்த்தம் : துருவாச தீர்த்தம்.

துர்வாச முநிவரும், பராசர முநிவரும், காலவ முநிவரும் பூசித்த தலம்.

இங்கு நடராசர் துர்வாசருக்கு நடன தரிசனம் கொடுத்தார். துர்வாசவிக்ரகம் நடராசருக்கு எதிரில் இருக்கின்றது. வலம்புரி விநாயகர். ஆதியப்பபாவலர் இயற்றிய தலபுராணம் அச்சிடப் பெற்றுள்ளது.

இந்தத் தலத்திற்குப் பாரிசாதவனம் என்று பெயர். வட மொழியிலும் புராணம் ஒன்று உண்டு. களரிடை முளைத்த கரும்பு என்றார் சிவப்பிரகாச முனிவரும்.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

கழறு திருக்களர் களரின் முளைத்தவர்
அழகுமங் களநா யகிவாச தீர்த்தம். (சிவ.)

நீரு ளார்கயல் வாவி சூழ்பொழில்
நீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணும்
ஒருவ னேயொளிர் செஞ்ச டைம்மதி
ஆரநின் றவனே அடைந்தார்க் கருளாயே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:

கண்ணீ களர்காறை கழிப்பாலியும்—பொது. திருநா.

82. திருக்கள்ளில்: (தொண்டை நாடு)

வடமொழியில் வஜ்ரவனம் என்று வழங்கப்பெறும். சென்னையில் பெரியபாளையம் நாகலாபுரம் பஸ் ஏறிக் கன்னிப் புத்தூர் (கன்னிப்பேர்) என்ற இடத்தில் இறங்கி இரண்டு மைல் தொலைவு சென்றால் இத்தலத்தை அடையலாம்.

பூண்டி, திருத்தணி, திருவள்ளூர் பஸ்ஸில் ஏறி அத்திப் பேட்டையில் இறங்கி, கொடுதலையாற்றையும், பூண்டிவாய்க் காலையும் கடந்தால் இத்தலம் சேரலாம். திருக்கண்டலம் என்று வழங்குகிறது இத்தலம்.

சுவாமி : சிவாநந்தேசுரர்.
அம்பிகை : ஆனந்தவல்லியம்மை.
தீர்த்தம் : சிவாநந்த தீர்த்தம்.

பிருகுமுனிவர் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

திருக்கள் ளிப்பதி சிவாநந்த நாயகர்.
மருக்கமழானந்த வல்லியா னந்தம். (சிவ.)

முள்ளின்மேல் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூ றைக்கொடி விளைந்த

கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய் தல்ஒரு தலையே.

(திருஞா. 1-ஆம் திரு.)

83. திருக்கற்குடி: (சோழநாடு)

திரிசிராப்பள்ளிக்குத் தென்மேற்கே 20 மைல் தொலைவில் உள்ளது. கோயில் ஒரு சிறிய மலைமேல் உள்ளது. மேற்குப் பார்த்த சந்நிதி. சந்நிதி இரண்டு.

ஈழநாட்டரசன் உச்சிக் காலத்தில் வந்து பூசித்து முத்திபெற்ற தலம். கரன் பூசித்த தலம். உய்யக் கொண்டான் மலை என்றும் வழங்கும். திரிசிரன் திருச்சிராப்பள்ளியிலும், தூஷணன் திருவெறும்பியூரிலும் பூசித்தார்கள்.

பெயர்க்காரணம்: கல்லைக் குடியாகக் கொண்ட இடம். கல்லின் சாரத்தைக் குடித்துவிட்டதால் கற்குடி. கோயில் 50 அடி உயர மூள்ள பாறையில் உள்ளது.

ஐந்து பிராகாரங்கள்.

பெருமானின் பெயர்கள் : ஜ்ஜீவனேசுரர் உச்சிநாதர், முத்தீசர், கர்ப்பநாதர், உச்சிநாதசுவாமி உய்யக் கொண்ட நாயனார், விழுமியார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய கற்குடி மாலை என்ற ஒரு நூல் உண்டு.

கல்வெட்டுக்கள் : இத்தலம் இராசராசன் காலத்துப் பாண்டிய குலாசனி வளநாட்டு ராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலத்துக் கற்குடி எனவும்,

குலோத்துங்கன் காலத்து, இராசமகேந்திர வளநாட்டு உறையூர்க் கூற்றத்துப்பிரமதேயமானஷி சதுர்வேதி மங்கலத்துக் கற்குடி எனவும்,

முதல் இராசேந்திரன் காலத்துக் கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கற்குடி எனவும்

மல்லிகார்ச்சுன மகாராசா காலத்து இராசகம்பீர வள நாட்டுப் பிரமதேயமான உய்யக் கொண்டான் திருமலை எனவும் வழங்குகின்றது.

அம்பிகை : அஞ்சனாட்சி.
மேற்குப்பார்த்த சந்நிதி.
ஓது கற்குடிவா ழுச்சீவ நாதர்
மாதஞ் சனாட்சி மகிழிந்து தீர்த்தம். (சிவ.)

மூத்தவனை வானவர்க்கும் மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூர்க்கப் பாம்பொன்
றார்த்தவனை அக்கரவம் ஆர மாக
அணிந்தவனைப் பணிந்தடியார் அடைந்த அன்போ
டேத்தவனை இறுவரையில் தேனை ஏனோர்க்கு
இன்னமுதம் அளித்தவனை இடரை யெல்லாம்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

(திருநா. 6-ஆம் திரு.)

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகமதாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பமதெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலையாரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

விடையா ருங்கொடியாய் வெறியார்மலர்க் கொன்றை யினாய்
படையார் வெண்மழுவா பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அடிகேள் எம்பெருமான் அடியேனையும் அஞ்ச
லென்னே. (சுந்தரர்)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

கற்குடியார் விற்குடியார் கானப்பேரார்—வீழிமிழலை. திருநா.
கற்குடி காளத்தி வாட்போக்கியும்—பொது. திருஞா.
கச்சினங் கற்குடி கச்சூர்—பொது. திருநா.
கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி—பொது. திருநா.

84. கன்றாப்பூர்: (சோழநாடு)

திருவாரூருக்குத் தெற்கே உள்ள மாவூர் ரோட் இரயில்வே நிலையத்திற்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. கன்றுக்குட்டியைக் கட்டி வைக்கும் தறியிலிருந்து இறைவன் வழிபாடு ஏற்றனன்.

கோடரியால் வெட்டின குறி சுவாமிமேல் உள்ளது. இடும்பன் பூசித்த தலம்.

மாதினி என்னும் பெண்ணுக்கு அருள் செய்த இடம். கோயில் கன்றாப்பூர் என வழங்கும். இதற்கருகில் கன்னாப்பூர் என வழங்கும் ஒரு தலம் உண்டு. பசுக்களுக்கு அநுக்கிரகம் செய்த இடம்.

சுவாமி : நடுதறியப்பர், நடுதறிநாதர், வத்ஸநாதர்.
அம்பிகை : மாதுமை நாயகி.
தீர்த்தம் : ஞானதீர்த்தம்.

திருநாவுக்கரசர் பாடிய தலம்.

நவில்கன் றாப்பூர் நடுதறி நாயகர்
புவியணி மதுரமா துமைபுகழ் ஞானம். (சிவ.)

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம்.
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைந்துருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.
(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

கன்றாப்பினடுதறியைக் காறையானை—தலையாலங்காடு. திருநா.
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூரும்—பொது. திருநா.

85. கிழைத்திருக்காட்டுப்பள்ளி: (சோழநாடு)

சிகாழியிலிருந்து ஒன்பது மைல் தொலைவில் உள்ளது. திருவெண்காடு வழியே செல்லலாம். ஆரணியேசுவரர் கோயில் என்றும் பெயர் உண்டு. விருத்திராசுரனைக் கொன்றதனால் நேர்ந்த பழி பற்றித் திரிந்த தேவேந்திரன் அப்பழி நீங்கித் தேவலோகத்தை ஆள வேண்டுமென்று தேவர்கள் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்கு மேற்கில் மதிற்சுவரிலிருந்து கடலொலி போன்ற ஒலி கேட்கப்படுகிறது.

சுவாமி : ஆரணிய சுந்தரேசுவரர்
அம்பிகை : அகிலாண்டநாயகி
தீர்த்தம் : அமுதப் பொய்கை

பகர்திருக் காட்டுப் பள்ளியா ரணியர்
அகிலாண்ட நாயகி அமுதப் பொய்கை.

செய்யரு கேபுனல் பாயவோங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி
விண்டவ ரேறுவர் மேலுலகே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

திருக்காட்டுப்பள்ளி திருவெண்காடும்—அதிகை—திருநா.
நீறணிவானமர் காட்டுப்பள்ளி—பொது.திருநா.
கோயில் கரவீரங் காட்டுப்பள்ளி—பொது. திருநா.
கரப்பள்ளி திருக்காட்டுப்பள்ளி—பொது. திருநா.

86. (மேலைத்)திருக்காட்டுப்பள்ளி. (சோழநாடு)

பூதலூர் இரயில்வே நிலையத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது.

உறையூர் நந்தவனத்தில் திருடிய செவ்வந்தி மலரை அரசன் தன் மனைவியருக்குக் கொடுப்ப, அவர்களுள் மூத்தவள் மட்டும் அம்மலரை அரண்மனையிலுள்ள சிவபெருமானுக்கு அணிவித்து வந்தாள். உறையூரில் மண்மாரி பெய்ய அவள் தப்பி மேலைத் திருக்காட்டுப்பள்ளிக்குவர சுவாமி இரங்கி அவளுக்குகாகக் கானல் வெப்பம் தணிவித்து அருளினார். கணங்கள் பூசித்த தலம்.

சுவாமி : தியாடியப்பர்.
அம்பிகை : வார்கொண்ட முலையம்மை, சௌந்தரநாயகி.
தீர்த்தம் : காவிரி, சூரிய தீர்த்தம்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சீர்காட்டுப் பள்ளி தியாடி நாதர்
வார்காட்டு மென்முலை மாதுமை சூரியன். (சிவ.)

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி யுண்பதும் வெண்தலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே.

(திருஞா. 3-ஆம் திரு.)

மாட்டுப் பள்ளி மகிழ்ந்து உறைவீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளி கண்டீர் கெடுவீர் இது
ஓட்டுப் பள்ளி விட்டு ஓடல் உறாமுனம்
காட்டுப் பள்ளி உளான்கழல் சேர்மினே.

(திருநா. 5-ஆம் திரு.)

87. காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்.: (சோழநாடு)

சீகாழிக்குத் தென்கிழக்கே பத்து மைல் தொலைவில் உள்ளது. காவிரி கடலோடு கலக்கும் சங்கமத்துறையில் அமைந்த நகராதலின் 'கூடல்' என்று காவிரிப் பூம்பட்டினம் வழங்கப் பெறுகிறது. இந்நதி கடலோடு கலக்கும் சங்கமத்துறை சிறந்த புண்ணிய தீர்த்தமாகும். 'சோழர்களுடைய பழைய இராசதானி யாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனால் நிருமிக்கப்பட்ட ஏழரங்குகளையுடைய ஒரு புத்தாலயமும் உண்டு. இந்நகரத்தின் பழைய பெயர் சம்பாபதியென்பது; இது காகந்தியென்றும் புகா ரென்றும் கூறப்படும்.

காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கோயிலாதலின் காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம் என்று தலப்பெயருடன் சேர்த்துக் கோயிற் பெயரும் வழங்கப்படுகிறது. பல்லவன் திருப்பணி செய்தபின் பல்லவனீச்சரம் என்றாயிற்று. கடல்கொண்டு எஞ்சியுள்ள புகார் நகரின் சிதைவு இன்றும் கடலுட் காணப்படுகிறது. திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அதில் ஒன்று ஈரடி. தாம் பாடிய இத்தலப்பதிகத்தின் 3 பாசுரங்களில் சம்பந்தர் 'புகார்' என்று குறித்துள்ளமை கருதத்தக்கது. பல்லவ மன்னன் பூசித்த தலம். இயற்பகை நாயனாரும் பட்டினத்தடிகளும் அவதரித்த தலம்.

சுவாமி : பல்லவனேசுரர்.
அம்பிகை : சௌந்தர நாயகி.
தீர்த்தம் : காவிரி.

பல்லவ னேச்சுரம் பல்லவ னேசுரர்
நல்ல சௌந்தர நாயகி புராணம். (சிவ.)

அடையார்தம் புரங்கள் மூன்றும் ஆரழலில் அழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும் வித்தகர் மேயஇடம்
கடையார் மாடம்நீடி எங்கும் கங்குல் புறந்தடவப்
படையார் புரிசைப்பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே

(திருஞா. 1ஆம் திரு.)

88. ஸ்ரீகாழி: (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். இத்தலம் காவிரி நதியின் வடகரையிலுள்ள சிவக்ஷேத்திரங்களுள் ஒன்று; திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அவதரித்தருளிய பெரும்பேறுடையது. 71 தேவாரத் திருப்பதிகங்கள் பெற்றது. இத்தலத்துக் கோயில் தருமையாதீனத்தைச் சார்ந்தது. ஞானசம்பந்தப் பெருமான் சந்நிதிதனியேயுள்ளது. இதற்குச் சீகாழி என்பதனோடு பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை நகர், கொச்சைவயம் அல்லது கொச்சை, கழுமலம் என்கிற பன்னிரு காரணத்திருநாமங்கள் உண்டு. இது பற்றிப் பன்னிரு நாமப்பதி எனவும் குருலிங்க சங்கமங்களின் விசேட முண்மையின், குருலிங்க சங்கமப்பதி எனவும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த

திருவெழுகூற்றிருக்கை, திருமாலை மாற்று என்பனவற்றைப் பெற்றிருத்தலின், திருவெழுகூற்றிருக்கைப்பதி, திருமாலை மாற்றுப்பதி எனவும் இத்தலம் பெயர் பெற்று வழங்கும்.

சுவாமி : பிரமபுரேசர், தோணியப்பர், சட்டைநாதர்.
அம்பிகை : திருநிலைநாயகி.
தீர்த்தம் : பிரமதீர்த்தம்.

இத்தலத்தில் சிவபெருமான் பெரியநாயகர் என்னும் திரு நாமம் பூண்டு பெரியநாயகியாரோடு திருத்தோணிமேல் எழுந் தருளியிருக்கும் மலை ஒன்றுண்டு. அது திருத்தோணிமலை என்று பெயர் பெற்று வழங்கும். அம்மலையின்மேல் ஒரு பாகத் தில் ஸ்ரீசட்டைநாதப் பெருமானுடைய திருக்கோயில் ஒன்றும் இருக்கின்றது. திருத்தோணியப்பருக்கு மான், மழு இல்லை.

இத்தலத்தின் மற்ற விசேடங்களை சீகாழித் தலபுராணம் முதலியவற்றால் உணர்க. அம்பிகையின் வடமொழிப்பெயர்: ஸ்திரசுந்தரி. கணநாதநாயனார் வசித்த தலம்.

அருணாசலக்கவிராயர் பாடிய தலபுராணம் அச்சிடப்பெற் றுள்ளது. திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சீகாழிக்கோவை என்ற நூலும் உண்டு. சீகாழிக் கலம்பகம் என்ற நூலும், ஒருலா நூலும் இருக்கின்றன.

சட்டைநாதர்: திருமேனி சுதையாலானது. தெற்குப் பார்த்த சந்நிதி. பலிபீடம் தெற்குப் பிராகாரத்தில். அதற்குத் தான் நாடோறும் அபிஷேகாதிகளும் நைவேத்தியமும் செய்வார் கள். வெள்ளிக்கிழமை அர்த்த சாமத்தில் புனுகுக் காப்புச் சாத்தப்பெறும். பின்பு வடைமாலையும் பாயசான்னமும் நைவேத்தியம். தேங்காய் இந்தச் சந்நிதியில் உடைப்பதில்லை. பூரணபலமாகவே நிவேதிக்கப்படும். தண்டபாணி, வடுகநாதர் என்ற வேறு பெயரும் உண்டு.

தீர்த்தங்கள் : 22 தீர்த்தங்கள். சிறந்தவை: பிரமதீர்த்தம், காளி தீர்த்தம் (கரிக்குளம்) இதில் கழுமலநதி, விநாயகநதி, புறவ[illegible] என்ற ஆறுகள் அடங்கியுள்ளன. காளியின் பழி இங்[illegible]ங்கிற்று.

[illegible]ருகன், காளி, பிரமன், திருமால், குரு, இந்திரன், சூரி[illegible] சந்திரன், அக்கினி, ஆதிசேஷன், ராகு, கேது, பைரவர், விய[illegible] முதலியோர் பூசித்த தலம்.

ஊழிக்காலத்தில் இறைவன் 64 கலைகளையும் ஆடையாகக் கொண்டு பிரணவத்தோணியில் தேவியுடன் வந்து ஊழியில் அழியாத இத்தலத்தில் தங்கினார்.

உட்கோயில்கள் 10: முக்கியமானவை ஸ்ரீ காளிபுரீசுவரர்: தருமதேவதை பூசித்தது. குமரர்கோயில் 18 புராணேசுவரர் கோயில்.

மண்டபங்கள் : ஆஸ்தானமண்டபம், வலம்புரிமண்டபம். வலம்புரி மண்டபம் 8 பைரவர்களின் யோகஸ்தானம். 8 பைரவர்கள் : சுதந்தரபைரவர், சுயேச்சை பைரவர், உலோக பைரவர், கால பைரவர், உக்கிரபைரவர், பிக்ஷாஹர பைரவர், நின்மாணப்பைரவர், பீஷணபைரவர்.

இம்மண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவு 8 அர்த்த சாமம் முடிந்ததும் பைரவ வழிபாடு நடைபெறும்.

மூவரும் பாடிய தலம்.

பிரம புரம்வாழ் பிரம புரீசர்
திருநிலை யழகி செழுநதி கழுமலம். (சிவ.)

தோடுடையசெவி யன்விடை ஏறியோர்
தூவெண் மதிசூடி
காடுடையசுட லைப்பொடி பூசியென்
உள்ளம் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்(து)
ஏத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுர மேவிய
பெம்மான் இவனன்றே.

(திருஞா. 1-ஆம் திரு.)

மாது இயன்று மனைக்குஇரு என்றக்கால்
நீதிதான் சொலநீ எனக்குஆர் எனும்
சோதி ஆர்தரு தோணிபுரவர்க்குத்
தாதி ஆவன் நான் என்னும் என்தையலே.

(திருநா. 5-ஆம் தி

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்அருள் தந்தளம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தளம் மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பூசத்தினார் புகலிந்நகர் போற்றுமெம் புண்ணியத்தார்—
திருநின்றியூர். சு.
கழுமலத்தார் செழுமலர்த்தார்க்குழலியோடும்—வீழிமிழலை
திருநா.
கானூரான் கழுமலத்தான் கணபதீச்சரத்தானே—
செங்காட்டங்குடி. திருஞா.
புலங்கள் பூந்தேறல்வாய்ப் புகலிக்கோனை—நாகைக்
காரோணம். திருநா.
காழியானைக் கனவிடையூருமெய்—திருநெல்வாயிலரத்
துறை. திருநா.
பிரமபுரம் சுழியல் பெண்ணாகடம்—திருவதிகை. திருநா.
பேரூர் பிரமபுரம் பேராவூரும்—பொது. திருநா.
காழி கடனாகைக் காரோணத்தும்.—பொது. திருநா.
தோணிபுரந்துருத்தி சோமீச்சரம்—பொது. திருநா.

89. திருக்காளத்தி (ஸ்ரீ காளஹஸ்தி). (தொண்டைநாடு)

புகைவண்டி நிலையம் உள்ளது. ரேணி குண்டா புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கு 15 மைல். சுவர்ணமுகி என்ற ஆறு வடக்குநோக்கி ஓடுகிறது. அந்த ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

ஸ்ரீ—சிலந்தி; காளம்—பாம்பு; ஹஸ்தி—யானை ஆகிய மூன்றும் பூசித்து முத்திடைந்த தலம்.

மலைமேல் உச்சியிலிருந்த குடுமித்தேவர் வழிபாடே கண்ணப்பநாயனார் செய்தது என்பதும் மலைமேல் ஏறியே தேவார முதலிகள் மூவரும் வழிபட்டனர் என்பதும் பெரிய புராணத்தால் அறியப்படும். ஆனால் நாம் இப்போது பொன் முகலியாற்றங் கரையில் ஊர்த்தரை மட்டத்திலுள்ள கோயிலுக் குள் இருக்கும் மூர்த்தியையே வணங்குகின்றோம். ஆற்றிலி ருந்து சில படிகளேறி ஆலயம் செல்வதால் இப்போதுள்ள ஆலய மும் மலைமீதுள்ளதென்பாரும் உளர். பஞ்சபூதத்தலங்களுள் இது வாயுத்தலம். மூலத்தானத்துள்ள விளக்குகள் எப்போதும் காற்றில் அசைந்து கொண்டே இருக்கும். மூலத்தானத்திலுள்ள திரு உருவில் சிலந்தி, பாம்பு, யானை மூன்றும் உள்ளன. சுயம்பு லிங்கம். நீண்ட பல செங்குத்தான உட்குழிந்த குடைவுகள் நிரம்பிய திருமேனி. பச்சைக் கர்ப்பூரம் சேர்ந்த நீரே அபிஷேகம். திருநீற்றோடு இவ்வபிஷேக தீர்த்தமும் விநியோகிக்கப்படுகிறது. கர்ப்பக்கிரக வாயிற்படிக்கருகில் கண்ணப்ப நாயனார் காட்சிய ளிக்கிறார். 11-ஆம் திருமுறையிலுள்ள கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியும் திருக்கண்ணப்ப தேவர் திருமறமும் இத்தல சம்பந் தமாக நக்கீரரால் பாடப் பெற்ற நூல்களாகும். தென்கயிலாயம் என்று கூறப்படும் நகரங்களுள் இத்தலமும் ஒன்று. மகா சிவராத் திரியை 5-ஆம் திருநாளாகக் கொண்ட திருவிழா மாசி மாதத்தில் நடக்கிறது. விராட் புருஷனுடைய விசுத்தி ஸ்தலம். மேற்கு நோக்கிய சந்நிதி. உருத்திரர் பூசித்த தலம். நக்கீரதேவர், இந்திரன், இராமன், முசுகுந்தர்—இவர்கள் வழிபட்ட தலம். நக்கீரராற் பிரதிட்டை செய்யப் பெற்றதாகக் கருதப்படும் ஒரு சிவலிங்கப் பெருமான் நக்கீரநாதர் அல்லது நக்கீரலிங்கம் என்னும் திருநாமத்தோடு இத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். கோயிலுக்கு வடக்கில் துர்க்காம்பிகை மலை தெற்கில் கண்ணப்பர் மலை. கிழக்கில் குமாரஸ்வாமிமலை. ஊர்மத்தியில் பிரஸந்த வரதப் பெருமாள் கோயில் இருக்கிறது. மூவரும் பாடிய தலம்.

காதல் காளத்திவாழ் காளத்தி நாதர்
கோதை ஞானப்பூக் குளிர்பொன் முகரி. (சிவ.)

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற

கற்றாண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவனென் கண்ணு ளானே.
(திருநா. 6-ஆம் திரு.)

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே.
(திருஞா. 3-ஆம் திரு.)

செண்டா டும்விடையாய் சிவனேஎன் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன்எங் காளத்தியாய்
அண்டா உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே.
(சுந்தரர்)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

காளத்திக் கற்பகமாய் நின்றான் கண்டாய்—கோடிகா. திருநா.
காளத்திக் கற்பகமு நீயேயென்றும்—நெய்த்தானம். திருநா.
காளத்தியானைக் கயிலை மேய நல்லானை—நள்ளாறு. திருநா.
கந்தமாதனத்துளார் காளத்தியார்—வீழிமிழலை. திருநா.
காளத்தி காரோண மேயார் போலும்—ஆரூர். திருநா.
காளத்தி கயிலாய மலையுளானை—ஆரூரநெறி— திருநா.
கருநீல வண்டரற்றும் காளத்தியும்—அதிகை. திருநா.
காளத்தி மலையான்றன்னை—முதுகுன்றம். திருநா.
கல்லலகு தாங்கொண்டு காளத்தியார்—ஆமாத்தூர். திருநா.
கருநிலவு கண்டனைக் காளத்தியை—மாற்பேறு. திருநா.
கானகத்துக் கருங்களிற்றைக் காளத்தியை—மாற்பேறு. திருநா.
கற்குடி காளத்தி வாட்போக்கியும்—பொது. திருஞா.
கல்லிற்றிகழ் சீரார் காளத்தியும்—பொது. திருநா.
காளத்தி கழுக்குன்றம்—பொது. திருநா.

காளத்தி:

இந்தத் தலத்துக்குத் தட்சிண கைலாஸம் அல்லது தென் கயிலாயம், தென்கயிலை, திருக்காளத்தி, ஸ்ரீ காளஹஸ்தி அல்லது சீகாளத்தி, காளத்தி, சிவாநந்தகிரி, சிவாநந்தைக நிலையம், விஞ்ஞான க்ஷேத்திரம், கண்ணப்பபுரம், மும்முடிச்சோழபுரம், முதலிய வேறு காரணப்பெயர்களுமுண்டு.

தட்சிணகைலாஸம் என்னும் பெயரின் காரணமும் திருக்காளத்தி என்னும் பெயரின் காரணமும் திருக்காளத்திப் புராணம் முதலியவற்றால் விளங்கும்.

மெய்யன்பையே திருவுருவமாகக் கொண்ட ஸ்ரீ கண்ணப்ப நாயனார் இடையீடின்றி வழிபட்டு ஆறு நாட்களில் முத்தி பெற்ற பெரும்புகழ் வாய்ந்தது இத்தலம். இன்னும் விராட் புருஷனுடைய விசுத்திஸ்தானமென்றும், பிரமதேவருடைய அநாகத ஸ்தானமென்றும், பஞ்சபூதஸ்தலங்களுள் வாயுஸ்தல மென்றும், பஞ்சாக்ஷரஜபலித்தியை விரைவில் தந்தருளுவதென் றும், சிவஞானத்தை அளிக்கவல்ல காசி, சிதம்பரம், விருத்தா சலம், காளத்தி என்னும் ஸ்தலங்கள் நான்கனுள் ஒன்று என்றும் ஒரு நாளேனும் நியமத்துடன் வசிப்பவர்களுக்குக் கலியின் பீடையை மாற்றிப் பிறவித் துயரை நீக்கவல்ல காசி, காளத்தி என்னும் ஸ்தலங்கள் இரண்டனுள் ஒன்றென்றும் நூல்களில் பாராட்டப் பெற்றது இத்தலமே. இத்தலமகிமையும், தீர்த்த விசேடமும் வழிபட்டுப் பேறு பெற்றோருடைய மேம்பாடுகளும் திருக்காளத்திப் புராண நூலாலும், தேவாரம் முதலிய திருமுறை களாலும் அறியலாம்.

இத்தலம் சிவஸாரூப்பியம் தரும்.

ஸ்தலவிநாயகர் இருவர்: (1) பஞ்ச சந்திவிநாயகர்: ஐஞ் சந்திவிநாயகரெனவும் இவர் கூறப் பெறுவர்.) (2) பாதாள கணபதி.

சுவாமியின் திருநாமங்கள்: தென்கைலைநாதர், திருக் காளத்திநாதர், ஐங்குடுமித்தேவர், ஐந்துகொழுந்து, குடுமித் தேவர், ஆராவமுது, கணநாதர், கல்லாலடியார், கல்லாலடியிற் கரும்பு, மருந்து, மலைமேல்மருந்து, காபாலி (காவாலி) காளத்தி, காளத்திக் கற்பகம், சோதிவிடங்கர், பொன் முகரித் துறைவர் என்பவை முதலியன.

அம்பிகையின் திருநாமங்கள்: ஞானப்பிரஸூனாம்பிகை, ஞானப்பூங்கோதை, ஞானக்கொழுந்து, ஞானசுந்தரி, ஞானப் பேரொளி, சிற்புட்பகேசி, வண்டார் குழலாள் என்பன.

தலவிருட்சங்கள் இரண்டு: அகண்டவில்வம், கல்லால்.

இத்தலத்திற்குரிய நதி: பொன்முகரி. இது சந்நிதியில் உத்தரவாகினியாய்ச் செல்லுதலின் மிகச் சிறந்ததாகக் கூறப்படுகின்றது. இதன் மகிமை திருக்காளத்திப்புராணத்தாலும், வேறு நூல்களாலும் அறியலாம்.

மற்றத் தீர்த்தங்கள்: பிரமதீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், இந்திர தீர்த்தம் அல்லது வச்சிரதாரை, மாயூர தீர்த்தம், உருத்திர தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், அரகர தீர்த்தம், மகாமோகினி தீர்த்தம், மணிகன்னி அல்லது மணிகர்ணிகை, பகவதி தீர்த்தம், பைரவ தீர்த்தம், மாகாளதீர்த்தம், மகாகாளி தீர்த்தம், மூகதீர்த்தம் முதலியன.

இத்தலத்தைச் சூழ்ந்துள்ள மலைகள், கனகதுர்க்கைமலை, குமாரகிரி, இந்திரகிரி, நீலகிரி, சித்தகிரி என்பன. பீடங்கள் இரண்டு. (1) ஆகமபீடம் (2) வைதிகபீடம். இவற்றுள் முதலாவது திருக்காளத்தி நாதருக்குரியது. இரண்டாவது தக்ஷிணாமூர்த்திக் குரியது. வைதிகபீடம் தென்பீடம் எனவும் வழங்கும்.

இத்தலத்திலுள்ள வேறு கோயில்கள்: பகவதிகோயில், இந்திர நாதர் கோயில், மணிகர்ணிகேசர் கோயில், காலபைரவர் கோயில் ஆயிரவிலிங்கப் பெருமான் கோயில், மூகேசர் கோயில், மகிஷாசுரமர்த்தனி கோயில், மார்க்கண்டேசர்கோயில், யக்ஷேசுவரர் கோயில் முதலியன.

வழிபட்டுப்பேறு பெற்றோர்: திருமால், திருமகள், பிரமதேவர், சரஸ்வதி, சிலந்தி, காளன் என்னும் பாம்பு, யானை, பிரமரிஷிகளாகிய சனகாதிகள், சுவேதாசுவதரர் இறுதியாகவுள்ள நூற்றுப் பன்னிரண்டு தேவரிஷிகள், உரோமசர், அகத்தியர், வசிஷ்டர் முதலிய முனிவர்கள், அஷ்டதிக்பாலகர், யோகினியாகிய நீலைமுதலியோர், அக்னிப்பிரபன் முதலிய அசுரர்கள், மணிமான் முதலிய யக்ஷர்கள், ஆதிசேஷன் முதலிய நாகர்கள் முசுகுந்தன் முதலிய அரசர்கள் ,சங்கப்புலவராகிய நக்கீரர் மதுரைக்கன்னியரிருவர், யாதவவேந்தன் முதலியோர்.

இத்தலத்தின் பழைய வரலாறுகளைத் தெரிவிக்கும் நூல்கள்: வடமொழியில் ஷடத்தியாயி, ஸ்ரீகாளத்திமான்மியம், தக்ஷிணகைலாஸ மாஹாத்மியம், ஸ்வர்ணமுகரீ மாஹாத்மியம் சூதசம்ஹிதையிலுள்ள மூன்று அத்தியாயங்கள் அடங்கிய புத்தகமொன்று, வாசிஷ்டலைங்கத்திலுள்ள 12 அத்தியாயம் அடங்கிய

புத்தகமொன்று ஆகிய இவைகளும் தெலுங்கில் வழங்குகிற தூர்ச்சடிகவி செய்த புராணம் ஒன்றும் ஆகிய இவைகளாம். இவற்றையன்றி வடமொழியிற் பர்வத மாஹாத்மியமென ஒன்றுண்டென்று சொல்லுகின்றனர்.

''யாதவவேந்தர் ஒருவர் பண்டைக் காலத்தில் நாராயண நகரத்தில் அரசு புரிந்து வந்தபோது திருக்காளத்திநாதர் ஓரடியார் வேடங்கொண்டு சென்று இத்தலவிசேடத்தைக் கூறி இவரை ஆட்கொண்டு பணிபுரியும்படி கட்டளையிட்டு மறைந்தருள. யாதவ அரசர் இத்தலத்திற்கு வந்து பலவகைப்பணியும் நல முறப் புரிந்து பின்பு முத்தி பெற்றனர்.

நரசிங்கப்பதி, 'ஸிஹ்மாசலம்' என்று ஸ்வர்ணமுகரீ மாஹாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது.

சேறைக்கவிராசபிள்ளை இயற்றிய திருகாளத்தி நாதருலா திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை ஆகிய இரண்டும் ஐயரவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

90. திருக்காறாயில். (சோழநாடு)

திருவாரூருக்குத் தெற்கே 8 மைல் தொலைவில் உள்ளது. தேவேந்திரன், முசுகுந்தன் முதலியோர் பூசித்த தலம். பிள்ளையார் கடுக்காய்ப்பிள்ளையார். ஒரு வர்த்தகன் ஜாதிக்காய் மூட்டையைக் கடுக்காய் மூட்டை என்று சொல்ல அவ்வாறே ஆகி, அவன் வேண்ட ஜாதிக்காய் ஆயிற்று.

சப்தவிடங்கத்தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள தியாகராச மூர்த்திக்கு ஆதிவிடங்கர் என்பது திருநாமம். ஆதிவிடங்கர்க்குட நடனம். காராகருஸ்தலம்.

திருஞான சம்பந்தர் பாடிய தலம்.
சுவாமி: கண்ணுயிர நாதேசுவரர்
அம்பிகை: கைலாய நாயகி
தீர்த்தம்: இந்திர தீர்த்தம், பிரமதீர்த்தம்
தயாவுளகா ருயில்கண் ணுயிரந் தரித்தவர்
தியாகர் கயிலாச நாயகிசீர் பிரமம். (சிவ.)

நீராளே நீள்சடை மேலொரு நிரைகொன்றைத்
தாராளே தாமரை மேலயன் தான்தொழும்
சீராளே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊராளே என்பவர் ஊனமி லாதாரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

91. திருக்கானப்பேர். (பாண்டிநாடு)

இத்தலம் சிவகங்கையிலிருந்து 11 மைல் தொலைவில் உள்ளது. நாட்டரசன் கோட்டை இரயில்வே நிலையத்திலிருந்து 6 மைல் தொலைவு. இத்தலத்திற் சுந்தரேசுவரர், சோமேசுவரர், காளையீசரென்று மூன்று சிவலிங்கப்பொருமான்களுடைய சந்நிதிகள் உள்ளன. விக்கிரமசோழன் மகள் சுகந்தகேசியை மணம் புரிந்த வரகுணபாண்டியர், அவளுடைய அழகின் மிகுதியைக் கண்டு இத்தலத்திற் சிவபெருமானுக்கு அர்ப்பணஞ் செய்தனரென்பதும் அவளுடைய கூந்தலின் நறுமணம் எங்கும் பரவியது பற்றி இத்தலம் சுகந்த வனம் அல்லது கந்தவனமென்று பெயர் பெற்றதென்பதும் இத்தலபுராண வரலாறுகள். அச்சானதொன்றும், அச்சாகாததொன்றுமாக இரண்டு தலபுராண நூல்கள் இத்தலத்தினுக்கு உண்டு. சுந்தரர் கனவில் சுவாமி காளையாகத் தோன்றித் தாமிருப்பது கானப்பேர் என்றுரைத்து அவரை வணங்கச் செய்து பதிகம் பெற்ற காரணத்தால் 'காளையார் கோயில்' என்று தலப்பெயர் வழங்குகிறது. 'கானை' யென்றும் இத்தலம் குறிக்கப்பெறும். ஐராவதம் தனக்கிருந்த சாபம் தீரும்பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டுச் சாபம் தீர்ந்தது என்பது இத்தலபுராண வரலாறு, 'மானமா மடப்பிடிவன்கையா யாலகிடக், கானமார் கடகரி வழிபடுங்கானப்பேர்'' (திருஞா. தே.) என்பதனாலும் உணர்க. ஐராவதத்தால் உண்டாக்கப் பெற்ற மிகப்பெரியதான தடாகமொன்று யானை மடுவென்னும் பெயருடன் இத்தலத்தேயுள்ளது.

''காளை தேட---சொக்கர்சுகிக்க---சோமர் அழிக்க'' என்று வழங்கும் பழமொழியும் இத்தல சம்பந்தமானதாகும்.

தஞ்சாவூர்க் கல்வெட்டு ஒன்றிற் பாண்டி நாட்டைச் சேர்ந்த திருக்கானப்பேர்க் கூற்றம் கூறப்பட்டுள்ளது. சிவகங்கை ஸம்ஸ்தானத்திற்குத் தலைவராக இருந்த மருது பாண்டியர் இத்தலத்திலுள்ள மிகவும் பெரியதான யானை மடு என்னும் தீர்த்தத்தையும் செப்பஞ் செய்து நாற்புறமும் படித்துறைகள் கட்டுவித்தார்; இந்தத் தலத்தில் கோபுரமும் கட்டுவித்தார். திருஞான சம்பந்தரும் சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி: காளையீசர், சுந்தரேசுவரர், சோமேசுவரர்.
அம்பிகை: சௌந்தரநாயகி, சொர்ணாம்பிகை, மீனாட்சி.
தீர்த்தம் : யானைமடு.

பொற்றிருக் கானப்பேர்காளை யப்பர்
பொற்கொடி நாயகி புட்பவன தீர்த்தம். (சிவ.)

தொண்டரடித் தொழலும் சோதிஇளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்ட ரிகப்பரிசாம் மேனியும் வானவர்கள்
பூச லிடக்கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்டல் எனத்திகழும் கண்டமும் எண்தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.
(சுந்தரர்)

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழில் கானப்பேரண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ அடியரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கானப்பேர் காதல் வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே—
கழிப்பாலை. திருநா.
கானப்பேர் காதலார்—பந்தணைநல்லூர். திருநா.
கானப் பேராளர் மங்கைபங்களார்—ஐயாறு. திருஞா.
கற்குடியார் விற்குடியார் கானப்பேரார்—வீழிமிழலை.
திருநா.
நான்முகனு மிந்திரனும் மாலும் போற்றக் காவார்ந்த
பொழிற்சோலைக்கானப்பேராய்—புகலூர். திருநா.
கறையார் பொழில்புடைசூழ் கானப்பேரும்—அதிகை.
திருநா.
வண்டார் சோலைக் கானப்பேரூரான்காண்—காளத்தி.
திருநா.
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்பேரூர்—பொது. திருஞா.
கானப்பேரூர்க்கட்டியைக் கானூர் முளைத்த கரும்பினை.
பொது. திருநா.
காரார் கழுக்குன்றும் கானப் பேரும்—பொது. திருநா.

திருச்சுழியல் திருக்கானப்பேர்—பொது. சு.
காட்டூர்க் கடலே கடம்பூர்மலையே கானப்பேரூராய்—
பொது. சு.

92. திருக்கானாட்டுமுள்ளூர். (கானாட்டாம்புலியூர்) (சோழநாடு)

இத்தலம் சிதம்பரத்திற்குத் தென்மேற்கே பதினெட்டு மைல் தொலைவில் உள்ளது.

சுவாமி :பதஞ்சலி நாதேசுரர்.
அம்பிகை: கானார்குழலி (கோல்வளைக்கையம்மை)
தீர்த்தம்: சூரிய புட்கரிணி.

விருட்சம்: அத்தி, வெள்ளெருக்கு. சிவபெருமான் பதஞ்சலி முனிவருக்கு அருள் செய்த தலம்.

சுந்தரர் பாடிய தலம்.

கானாட்டு முள்ளூர் கனபதஞ் சலியார்
கானார் குழலி கதிர்புட் கரிணி. (சிவ.)

வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னானை
மறையவனை வாய்மொழியை வானவர்தங்
கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கியுமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தி
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று (னானை
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளரும் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டுதொழு தேனே.
(சுந்தரர்)

குறிப்பு: இத்திருப்பதிகம் இறைவன் எல்லாமாய் நிற்கும் தன்மையை வகுத்து அருளிச் செய்தது.

93. திருக்கானூர். (சோழ நாடு)

இத்தலம் பூதலூர் இரயில்வே நிலையத்திலிருந்து ஏழுமைல் தொலைவில் உள்ளது. மண்மூடி மறைந்திருந்த கோயில் சென்ற நூற்றாண்டில் அகழ்ந்தெடுக்கப் பெற்றது. உமாதேவியார் சிவ யோகம் செய்யும்போது சிவபெருமான் அக்கினிரூபமாகத்

தரிசனம் தந்தருளிய தலம். திருஞான சம்பந்தரும் திருநாவுக் கரசரும் பாடிய தலம்.

''உலகத்தின் உயிர்க்கெலாம் சுருவனாகி முளைத்தவன்'' ''காணூர் முளைத்த கரும்பு'' என்று திருநாவுக்கரசர் இத்தலத்தின் சிவலிங்கப் பெருமானைச் சிறப்பித்துப் பாடியதால் இத்தலமூர்த்தி சுயம்புவாக இருக்கலாம் என்பதும் சுவாமியின் திருநாமம் கரும் பேசுவரர் என்பதும் முறையே தெரிகின்றன.

சுவாமி: செம்மேனி நாதேசுவரர், செம்மேனியப்பர், கரும் பேசுவரர்.

அம்பிகை: சிவயோகநாயகி, சௌந்தர நாயகி.
தீர்த்தம்: கொள்ளிடம், வேத தீர்த்தம்.

செயதிருக் காணூர் செம்மேனி நாதர்
நயசிவ யோக நாயகி வேதம். (சிவ.)

திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுல கத்தி னுயிர்க்கெலாம்
கருவனாகி முளைத்தவன் காணூரில்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே.

(திருநா. 5-ஆம் திரு.)

வா னார்சோதி மன்னுசென்னி வன்னிபுனங்கொன்றைத்
தேனார்போது தானார் கங்கை திங்களொடுசூடி
மானேர் நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
காணூர்மேய கண்ணார்நெற்றி யானூர் செல்வரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

காணூரான் கழுமலத்தான் கணபதீச்சரத்தானே—
செங்காட்டங்குடி. திருஞா.
கானப்பேரூர்க் கட்டியைக் காணூர் முளைத்த கரும்பினை—
பொது. திருநா.
கடைமுடி காணூர் கடம்பந்துறை—பொது. திருநா.
கருகற்குரலாய் வெண்ணிக் கரும்பே காணூர்க்கட்டியே—
பொது. சு.

94. கீழ்வேளூர். (சோழநாடு)

இத்தலத்திற்கு இரயில்வே நிலையம் உண்டு. பதரி வனம் என்றும் வழங்கப்பெறும். திருவாரூருக்குச் சமீபம். கட்டுமலைக் கோயில். முருகன் பூசித்த தலங்களுள் ஒன்று. கட்டுமலை. கருங்கல் மலை. ஸ்தூபி முழுமையும் கருங்கல் கட்டிடம். முருகன் சந்நிதி விசேடம். ஆலயத்தின் பெயர் பெருந்திருக் கோயில்.

சரவணப்பொய்கை: சந்நிதிக்கு வெளியே தென்பால் உள்ளது. நாற்புறமும் படிக்கட்டும் மண்டபமும் உள்ளன. மிகவும் ஜீர்ணம் இதனுள் நிருதி மூலையில் கிணற்று வடிவமாக இந்திர தீர்த்தம் உள்ளது. இந்திரனுக்குக் குரு சாபவிமோசனத்தைச் செய்தது. கடிக்குளம்: இப்பொய்கை வேற்படையால் உண்டாயிற்று. வெளியிலிருந்து முதற்பிராகாரம் தோட்டம். வெப்பந்தவிர்த்தாண்டார் மேவிய பட்டீசுரர். முத்துப்பந்தர் உற்சவம். விநாயகர்: சுந்தரவிநாயகர் இரண்டாவது பிராகாரம் தென்கிழக்கில் இருக்கிறார். பெரிய திருவுருவம். பூசைக்கும் தலத்திற்கும் தீங்கு நேரிடா வண்ணம் அஞ்சு திக்குக்களிலும் காவல் பூண்டிருக்கிற அம்மைக்கு அஞ்சுவட்ட அம்மை என்று பெயர். சந்நிதி விசேடம் வாய்ந்தது.

சேஷ தீர்த்தம் குண்டலாகாரம், சேஷபுரீசுவரர் ஆதி சேஷனால் உண்டாக்கப்பட்டவை. கோயிலுக்கு வெளியில் மேற்கே அக்னி தீர்த்தம். கோயிலுக்கு வெளியே நிருதிமூலையில் பிரமதீர்த்தம். பெருமாள் வாயுமூலை. பெயர்: வேங்கடாசல பதி. சபேசருக்குப் பத்துப்புஜம். மாறியாடியவர்க்கு ஆனிமகத்தில் தரிசனம்.

பதரிவிநாயகர்—இலந்தையடிப்பிள்ளையார் உள்பிராகாரம் நிருதிமூலையில் இருக்கிறார். அறுபத்து மூவரும் தொகையடியார்களும் உளர். அகத்தியருக்காகக் கால்மாறியாடிய இடம்.

உள்பிராகார மேற்புறச்சுவரில் ஆதீனத்தாரும், ஏகோஜி, துக்கோஜி வடிவங்களும் உள்ளன.

தலவிருட்சம்: இலந்தை மிகப்பழையது. மூன்று மரங்கள். இதன்கீழ் அகத்திய லிங்கம் உள்ளது. மேற்கூறிய மரத்துக்கு அபிடேக நிவேதனம் உண்டு. விமானம் முழுவதும் கருங்கல் திருப்பணி. பஞ்சபூதலிங்கங்களும் உள்ளன. சம்பந்தரும், அப்பரும் பாடிய தலம். அகத்தியமுனிவருக்கு வலப்பாதம் தரிசன சபாபதி

மூர்த்தமாகச் சுவாமி எழுந்தருளியிருத்தலின் ஞானசம்பந்தர் கூத்தன் என்றார். குபேரபிம்பம் அம்மன் சந்நிதியில் தெற்கு நோக்கி உள்ளது. சிவ கைங்கரியத்தால் வறுமையுற்ற சந்திர குப்தன் என்னும் வைசியனுக்கு வேண்டிய பாக்கியங்களைக் கொடுக்கும் பொருட்டுக் குபேரன் வந்தனன். மலை. சித்திர கூடகிரி.

பூசரவணபுரம்: கீழ்வேளூர். மார்கழி மாதம் அமாவாசை நிறைபணி உற்சவம் நடக்கும். அரசாணிக்குளம். அக்னி தீர்த்தம். சோமாஸ்கந்தர் சந்நிதியில் வேங்கடபதி பிள்ளையின் வடிவம் இடத்தூணிலுள்ளது. க்ஷேத்திரசபாபதி வேறு. பிரளய காலத்தில் அழியாத இத்தலத்தில் பல ஸ்தல மூர்த்திகளும் இங்கேளழுந்தருளினர் என்பர்.

இவ்வூர்த்தலபுராணம் 45 அத்தியாயங்களைக் கொண்டது.

சுவாமி: கேடிலியப்பர், அக்ஷயலிங்கேசுரர்.
அம்பிகை: வனமுலை நாயகி, சுந்தரகுசாம்பிகை.
தீர்த்தம்: சரவணப்பொய்கை.

மலைக்கோயில்: 1. கீழ்வேளூர், 2. தேவூர், 3. சிக்கல், 4. அம்பர், 5. நன்னிலம், 6. தண்டலை, 7. வைகல், 8. ஆவூர், 9. நல்லூர், 10. வீழிமிழலை, 11. நறையூர், 12. வலிவலம், 13. ஆக்கூர்.

வினவு கீழ்வே ளூர்விமல ரடீசயராம்
வனமுலை நாயகி மகிழ்சிவ ஞானம். (சிவ.)

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பார் இல்லா தானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.

(திருநா. 6-ஆம் திரு.)

மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்
தருமரவோடும்
பன்னுலாவிய மறையொலி நாவினர் கறையணி
கண்டத்தர்
பொன்னு லாவிய கொன்றையந்தாரினர் புகழ்மிகு
கீழ்வேளூர்
உன்னுலாவிய சிந்தையார்மேல் வினையோடிடவீடாமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கேடிலியைக் கிளர்பொறி வாளர வோ டென்பு பூண்டானை
புள்ளிருக்குவேளூர். திருநா.
கேடிலியைக் கீழ்வேளூராளுங்கோவை—கஞ்சனூர். திருநா.
மறையான்றன் வாய்மூருங் கீழ்வேளூரும்—நாகைக்
காரோணம் திருநா.
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர்—நாகைக் காரோணம்.
சுந்தரர்.

கேடிலிகாண் கெடுப்பார்மற் றில்லாதான்காண்—
கோகர்ணம். திருநா.

95. குடந்தைக் காரோணம் (சாசிவிசுவநாதர்கோயில்)
(சோழநாடு)

மகாமகக்குளத்தின் வடகரையில் இருக்கிறது. நவநதிகளும் நவகன்னிகைகளாகப் பூசித்ததலம். உமை, மாந்தாதா முதலி யோர் பூசித்த தலம்.

இத்தலத்திலுள்ள விசுவநாதஸ்வாமி கோயிலுக்குத் தேவாரம் உண்டு. குடந்தைக் காரோணம் என்ற திருநாமம் தேவாரப் பதிகத்தில் காணப்படும். இவ்வாலயத்தில் நவதீர்த்தங் களும் கன்னிகையர் வடிவமாக அமைக்கப்பட்டுள்ளன. தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு அக்கன்னியர் மகாமகதீர்த்தத்தில் நீராடவரும் ஐதிஹ்யத்தைப் புலப்படுத்து கின்றன அந்தத் திருவுருவங்கள். அந்த ஒன்பதின்மரும் இங்கே வந்த பொழுது கங்கை வீரபத்திரர், கங்கை விநாயகர் என்னும் மூர்த்திகளும் இங்கே எழுந்தருளினர் என்று கூறுவர். மகாமகக்

குளத்தின் வடகரையில் கங்கை வீரபத்திரர் இப்போது எழுந் தருளியிருக்கின்றனர்.

சுவாமி: காசிவிசுவநாதர், சோமநாதர்.
அம்பிகை: காசிவிசாலாட்சி; தேனார்மொழி,

தீர்த்தம்: மகாமகதீர்த்தம்.
சுவாமி சந்நிதி மேற்குப் பார்த்துள்ளது.

ஏழை சோமநாதர் என்றும் வழங்கப்படுவர். திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

எந்தை காரோணத் திறைசோம நாதர்
சுந்தர நாயகி துதிகாசிப் பதியாம். (சிவ.)

வாரார் கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார் மழுவொன் றேந்தியந்தண் குழகன் குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோள் எந்தை காரோணத்
தாரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

96. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் (சோழநாடு)

கும்பகோணத்திலுள்ள நாகேஸ்வரஸ்வாமி கோயிலும் தேவாரம் பெற்றதே. குடந்தைக்கீழ்க்கோட்டம் என்று இக் கோயில் தேவாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மடந்தையார் கோயில் என்ற திருநாமமும் இதற்கு உரியது. இக்கோயிலில் உள்ள சபாபதிக்கு ஆடல் வல்லார் என்பது திருநாமம். இங்கே சிவபெருமானைச் சூரியன் பூசித்துப் பேறு பெற்றதாகத் தலபுராணம் கூறும். இதற்கு அறிகுறியாக இவ்வாலயத்தில் தனியே சூரியனுக்கு ஒரு கோயில் இருக்கிறது. அது சிறந்த சிற்ப அமைதியுடையது.

ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் 11, 12, 13 இந்த மூன்று தேதிகளிலும் சூரியனொளி காலையில் நாகேசுர ஸ்வாமி திருமேனியில் படிவது உண்டு. ஆலயம் அதற்கேற்ப ஆதிகாலத்தில் சிற்பிகளால் அமைக்கப்பட்டுள்ளது. அது சூரியன் பூஜை செய்வதற்குக் கருதப்பெறும். அதனைத் தரிசிக்கப் பல அன்பர் வந்து கூடுவர். ஸ்வாமி கோயிலின் உட்பிராகாரத்தில்

இராமாயணக் கதை முழுவதையும் தெரிவிக்கும் சிற்ப அமைப்புக் களைக் காணலாம்.

ஊர் நடுவேயுள்ள பெரியகோயில். ஆதிசேஷனும், சூரி யனும் பூசித்த தலம். நாகேசுவரசுவாமி கோயிலில் இப்போது எழுந்தருளியுள்ள கங்கை விநாயகர் விக்கிரகம் அழகானது. அர்த்தநாரீசர், பிரளயகால ருத்திரர் விக்கிரகங்கள் உள்ளன. திருநாவுக்கரசர்பாடிய தலம்.

வளர்கீழ்க் கோட்டம் மடந்தை பாகர்
அளவில் பெரியநா யகிமா மகமாம். (சிவ.)

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளும் கடந்தசுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலும்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர்போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கோட்டங் கொண்டார் குடமூக்கிலும் கோவலும்—
நாவலூர். சு.
குடமூக்கிற் கீழ்க்கோட்ட மேவினான்காண்—காளத்தி.
திருநா.
குடமூக்கிற் கீழ்க்கோட்டங் கோயில் கொண்டார்—பொது.
திருநா.
நாகேச் சரத்துள்ளார் நாரையூரார்—வீழிமிழலை.திருநா.
நாகேச்சர மிடமா நண்ணினானை—ஆரூர் அரநெறி.
திருநா.
நற்குன்றம் வலம்புர நாகேச்சரம்—பொது. திருஞா.
நாரையூர் நாகேச்சுர நல்லூர் நல்லம்—பொது. திருநா.
நாகேச்சுரம் நாகளேச்சுரம்.—பொது. திருநா.

97. திருக்குடமூக்கு (கும்பேசுவரர் கோயில்) (சோழநாடு)

சோழநாட்டில் ஒரு பெரிய நகரமாக விளங்கும் கும்ப கோணம் பல ஆலயங்களைத் தன்னிடத்தே கொண்டு அதனாற் சிறப்புப்பெற்ற சிறந்த ஸ்தலமாகும். கும்பகோணம் என்னும் வடமொழிப் பெயர் தமிழில் குடமூக்கு என்று கூறப் படும். அது குடந்தை எனவும் திருக்குடந்தை எனவும் மருவி வழங்குகின்றது. ஒரு பிரளய காலத்தில் அமிர்தகும்பம் மிதந்து வந்தபோது இவ்விடத்தில் சிவபெருமான் கிராதவடிவங்கொண்டு அதனை விழச்செய்து திருக்கோயிலில் எழுந்தருளினாரென்று புராணம் கூறும். கும்பேசுவரர் கோயில் இவ்வூரிலுள்ள சிவாலயங் களில் தலைமை பெற்றது. அதற்குத் தேவாரம் உண்டு. இங்கே எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம் மங்களாம்பிகை என்பது. இந்த ஸ்தானம் சக்தி பீடங்களுள் ஒன்றாகிய மந்திர பீடமாதலின் மந்திரபீடேசுவரி என்ற திருநாமமும் அம்பிகைக்கு வழங்கும். இவ்வலாயத்து விநாயகருக்கு ஆதிவிநாயகர் என்பது திருநாமம். ஏகபாண சாஸ்தாவின் திருவுருவமும் கிராத ரூபத் திலுள்ள சிவபிரான் திருவுருவமும் ஆலயத்தில் உள்ளன.

இந்த ஊரில் மகாமக தீர்த்தம் மிக்க விசேடமுள்ளது. பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை இங்கே நடைபெறும் மகாமகத்திற்கு இமயம் முதல் குமரி வரையிலுள்ள நாடுகளி லிருந்து ஜனங்கள் வந்து மகாமக நீராடிச் செல்வார்கள். காவிரி நதி இந்நகரத்திற்கு அணியாக விளங்குகிறது.

இத்தலத்தில் மார்க்கண்டேய முனிவர் பூமி தேவியை மகளாகப் பெற எண்ணி உப்பில்லாத உணவைப் புசித்துப் பலவருடங்கள் நோற்றனர். அவர் தவத்திற்கு மகிழ்ந்து அத்தேவி மகளாக அவதரித்து வளர்ந்து வந்தாள். அப்பொழுது அவளை மணந்து செல்ல எண்ணித் திருமால் மூப்பு வேடம் பூண்டு வந்தனர்.

பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் மகா மகத்தில் கும்பேசுவரர் வெள்ளி இடப வாகனத்தில் பஞ்சமூர்த்தி களோடு எழுந்தருளி மகாமகக் குளத்தில் தீர்த்தம் கொடுப்பர். இந்தக் குளத்தில் மூழ்குவதால் இந்தியாவிலுள்ள கங்கை, யமுனை, கோதாவிரி, கிருஷ்ணா, பெண்ணை, பொருநை, குமரி முதலிய எல்லாத் தீர்த்தங்களிலும் மூழ்கும் பயன் கிடைக்கும் என்பது புராண வரலாறு. ஏமரிஷி பூசித்த தலம்.

காலையில் முதலில் சூரியனுக்கும், மாலையில் முதலில் சந்திரனுக்கும் தீபாராதனை.

சுவாமி: கும்பேசர்
அம்பிகை: மங்களநாயகி
தீர்த்தம்: காவிரி, மகாமகதீர்த்தம்.

சுவாமி கும்பம் போன்றவர். சுயம்பு.

கும்பேசுவரருடைய சப்தஸ்தான உற்சவத் தலங்கள்: கும்பகோணம், கலயநல்லூர், வலஞ்சுழி, தாராசுரம், சுவாமிமலை, கொட்டையூர், மேலைக்காவிரி. இத்தலத்திற்கு இரு புராணங்கள் உள்ளன. ஒன்று. பழையதலபுராணம், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியுள்ள கும்பகோணப் புராணத்திற்கு வேறானது. இதில் பாயிரமும் 1406 செய்யுட்களும் உள்ளன. இதன் ஆசிரியர் அகோர முனிவர். நூல் அருமை யானது. அச்சாகாதது. மற்றொன்று: திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது. இது 2,384 செய்யுட்களை 70 படலங்களில் கொண்டுள்ளது. இந்நூல் அச்சான போதிலும் தற்சமயம் கிடைப்பதில்லை.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய தலம்.

புகழ்கும்ப கோணம் புனிதர்கும் பேசர்
மகிழ்மங் களநா யகிமா மகமாம். (சிவ.)

அரவிரி கோடனீ டலணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மண மல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே.

(திருஞா. 3-ஆம் திரு.)

அரவிரிகோடல்—பாம்பின் படம்போல மலரும் வெண் காந்தள்).

பூவ ணத்தவன் புண்ணியன் நண்ணிஅங்கு
ஆவ ணத்துடை யான்அடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

குடமூக்கிலுள்ளார் போய்க் கொள்ளம்பூதூர்—கோயில். திருநா.

குடமூக்கிலங்கொழிய—புறம்பயம். திருநா.

குன்றியூர் குடமூக்கிடம் வலம்புரங்குலவிய நெய்த்தானம்—வலஞ்சுழி. திருஞா.

குடந்தையிற் குழகர்போலும் கொல்புலித்தோலர்போலும்—ஆவடுதுறை. திருநா.

குடமூக்கிலிடமாக்கிக் கொண்டார் போலும்—வீழிமிழலை. திருநா.

எரிபவள வண்ணர் குடமூக்கிலார்—ஆரூர். திருநா.

குடமூக்குங் கோகரணங் கோலக்காவும்—அதிகை. திருநா.

கோட்டங் கொண்டார் குடமூக்கிலுங்—கோவலுங் கோத்திட்டையும்—நாவலூர். சு.

கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி—பொது. திருஞா.

தொலைவிலாதானுறையுங் குடமூக்கென்று சொல்லிக் குலாவுமினே—பொது. திருஞா.

கோலக்காவிற் குருமணியைக் குடமூக்குறையும் விட முணியை—பொது. திருநா.

கோட்டூர் குடமூக்குங் கோழம்பமும்—பொது. திருநா.

குடமூக்கே குடமூக்கே என்பீராகில்—பொது. திருநா.

98. திருக்குடவாயில். (சோழநாடு).

கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் உள்ளது இத்தலம். சோழர்களின் தலைநகரராக இருந்தது. திருணபிந்து முநிவர் பூசித்த தலம். திருக்குடத்திலிருந்து சுவாமி வெளிப்பட்டு அவருடைய குட்டநோயைத் தீர்த்த தலம். மாடக் கோயில். சந்நிதி மேற்குப் பார்த்தது. கோணத் தானம் என்றும் பெயர். கீழைவீதிக்குக் கிழக்கு அக்னி தீர்த்தம். திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : கோணேசுரர்.

அம்பிகை: பெரியநாயகியம்மை (பிருகந்நாயகி)

தீர்த்தம்: அமுத தீர்த்தம், கடுவாய்நதி (குட முருட்டியின் கிளையாறு)

விருட்சம்: கதலிவனம், பலாசவனம்.

குடவாயில் மேவுங் கோணநா தன்றன்
னிடமுறை பெரியநா யகியெழி லமிர்தம். (சிவ.)

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோ யில்நிலா யவனே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

கோவலூர் குடவாயில் கொடுமுடி—பூவனூர். திருநா.
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி—பொது. திருஞா.
மாடம்நீடு குடவாயில் குணவாயிலான வெல்லாம்.—
பொது. திருஞா.

99. குரக்குக்கா. (சோழநாடு)

திருக்கருப்பறியலூருக்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. ஆஞ்சநேயர் பூசித்த தலமாகையால் குரக்குக்கா என்ற பெயர் வந்தது. ஹநுமார் திருவுருவம் உள்ளது.

சுவாமி: குந்தளேசுவரர்.
அம்பிகை: குந்தளநாயகி.
திருநாவுக்கரசர் பாடியதலம்.

குரக்குக் காவாழ் கூந்தல் கருணேசர்
மருக்கமழ் கூந்தல் மாதுகந் தரமாம். (சிவ.)

மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்கும் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

கொங்கணங் குன்றியூர் குரக்குக்காவும்—பொது. திருநா.

100. குரங்கணில் முட்டம். (தொண்டை நாடு)

இத்தலம் காஞ்சீபுரத்திலிருந்து தெற்கே ஆறுமைல் தொலைவில் பாலாற்றின் தென்கரையில் உள்ளது.

திருவாயிலில் குரங்கு பூசித்தது. வடபாலில் அணிலும் தென்பாலில் காக்கையும் பூசித்தன. முட்டம்—காக்கை. காக்கை மடு கோயிலைச் சுற்றியுள்ளது. மேற்குப்பார்த்த சந்நிதி.

இத்தலத்திற்கு ஒரு புராணம் உண்டு. அச்சாகவில்லை.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: வாலீசுரர்.
அம்பிகை: இறையார் வளையம்மை.

குரங்கணில் முட்டம் குதிகொள் வாலீசர்
பரம்பரை யின்ப நாயகி பகர்பாலி. (சிவ.)

விழுநீர்மழு வாட்படை அண்ணல் விளங்கும்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயும்
கொழுநீர் வயல் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
தொழுநீர்மையர் தீதுறு துன்ப மிலரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

குரங்கணின் முட்டங் குறும்பலாவும்—அதிகை. திருநா.
முந்தையூர் முதுகுன்றங் குரங்கணின்முட்டம்—இடையாறு. சு.
கோல நீற்றன் குற்றாலங் குரங்கணின் முட்டமும்—பொது. சு.

101. (வட) குரங்காடுதுறை. (சோழநாடு)

ஐயம்பேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து 30 மைல் தொலைவில் உள்ளது இத்தலம். வாலி பூசித்த தலம். நட ராசர் சிவகாமி உருவங்கள் சிலையிலும் உள்ளன. தலப்பெயர்கள். ஆதி சிதம்பரம், நாளிகேரவனம், கபிநர்த்தனபுரம்.

வழிபட்டோர்: கணவனுடன் வந்த செட்டிப்பெண் ணொருத்தி, தாகத்தால் வருந்தியதை யறிந்த அக்கணவன் தீர்த்தம் கொண்டு வருவதற்குச் சென்றான். வருமுன் தாகத் தால் வருந்திய அவளுக்கு இரங்கிச் சிவபெருமான் ஒரு தென்னங் குலையை வளையச் செய்ய, அவள் இளநீர் ஒன்றைப் பறித்துச்சீவி இளநீரைப்பருகி உயிர்பெற்றாள். பின்பு வந்த கணவன் இதனை

அறிந்து விம்மிதமுற்று அவளை இங்கேயே இருக்கச் செய்து விட்டு உடனுறைதற்கு அஞ்சி வேறு தேயம் சென்றான். அவள் வழிபட்டுக் கொண்டேயிருந்து பின்பு முத்திபெற்றாள். இவள் வடிவம் முதற்பிராகாரத்தில் திருவாயிலுக்கு அருகே வடக்கில் மேற்கு நோக்கி அஞ்சலி செய்த வண்ணமாக ஆக்கப்பட்டுள்ளது. இதனால் சுவாமிக்குக் குலை வணங்கு நாதரென்றும் தயாநிதீ சுவரர் என்றும் திருநாமம் உண்டாயின.

சிட்டுக்குருவி பூசித்துப்பேறு பெற்றது. இதனால் சுவாமிக்குச் சிட்டுலிங்கம் என்பது பெயராயிற்று.

வாலி பூசித்துப்பேறு பெற்ற தலம். இது திருஞான சம்பந்தர் தேவாரத்தில் ''கோலமார் மலரொடு தூபமும் சாந்த முங் கொண்டு போற்றி வாலியார் வழிபடப்பொருந்தினார் என்றும், நீலமாமணி நிறத்தரக்கனை இருபது கரத்தொடொல்க, வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்' என்றும் கூறப்பட்டுள்ளன.

அனுமன்: இவர் இராமேசுவரத்திலிழந்த வாலினைச் சிதம் பரத்திலும், தென்குரங்காடுதுறையிலும் பெறாமல் இந்தத் தலத்தையடைந்து பூசித்துப் பெற்றார்.

சுவாமி: அழகு சடைமுடிநாதர்; குலைவணங்கீசர்.
அம்பிகை: அழகு சடைமுடியம்மை, சடாமகுடநாயகி.
தீர்த்தம்: காவிரி.
விருட்சம்: தென்னை.
திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

வடகுரங் காடு வனங்குலை வணங்கி
சடைமுடி நாயகி தகுகா விரியாம். (சிவ.)

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே
கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்மு பாதிரிகளே விரிவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளார் இடமென
விரும்பினாரே.

(திருஞா. 3-ஆம் திரு.)

(கொகுடிமுல்லை—முல்லைக்கொடியில் ஒருவகை.)

102. (தென்)குரங்காடுதுறை (ஆடுதுறை) (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ளதலம். காவிரியின் தென்கரையில் இருப்பதால் தென்குரங்காடுதுறை என்று வழங்கப்படுகின்றது. சுக்கிரீவனும் அநுமானும் பூசித்த தலம்.

சுவாமி: ஆபத்சகாயேசுரர்
அம்பிகை: பவளக்கொடியம்மை.
தீர்த்தம்: காவிரி.
திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய தலம்.

ஆய்குரங் காடுதுறை யாபத் சகாயரென்
தாய்பவ ளக்கொடி சகாய தீர்த்தம். (சிவ.)

பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ் சூழ
இரவிற் புறங்காட் டிடைநின் றெரியாடி
அரவச் சடையந் தணன்மேய அழகார்
குரவப் பொழில்சூழ் குரங்கா டுதுறையே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இரங்கா வன்மனத் தார்கள் இயங்குமுப்
புரங்கா வல்அழி யப்பொடி யாக்கினான்
தரங்கா டுந்தட நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்கா டுதுறைக் கோலக் கபாலியே.
(திருநா. 5-ஆம் திரு.)

103. திருக்குருகாவூர்: (சோழநாடு).

இறைவன் சுந்தரருக்குக் கட்டமுதும் தண்ணீரும் கொடுத் தருளிய தலம். இது திருக்கடாவூர் என வழங்குகின்றது.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குத் தை அமாவாசையில் திருவருளால் தாகசாந்தி செய்வித்த கூபதீர்த்தம். அதற்கு வடகிழக்கு ஒரு கடிகை தூரம் சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு சித்திராபருவத்தில் கட்டமுது கொடுத்து வேடரூபமாய் ஆலயத்திற்கு அழைத்து வந்து காட்டிய தலம்.

தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயம் தீர்த்தம் பால்நிறமாவது அற்புதக் காட்சியாகும். வெள்விடை பூசித்ததால் வெள்விடைநாதர்.

வெள்ளடை—பரமாகாசம்.

திருக்குருகாவூர்: ஸ்ரீ கபோதாவனபுரம். ஆவனம்-ரக்ஷை. தலப்பெயர்: விருஷப புரம். (1) ரத்நாங்குரேசுவரர். மணி வயிரக்கொழுந்து. பெரியபுராணம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் ''குருகாவூர் மணிவயிரக் கொழுந்தனார்'' என்றதும், இது பற்றியே. சுந்தரர் தேவாரம். ''இத்தனை''-விருஷபேசுவரர். வெள்விடை நாதர், வில்வாரணியேசுவரர். அக்னி புறாவடிவம் எடுத்துச் சிபிச்சக்கரவர்த்தியைச் சோதித்த தோஷத்தால் அவ்வடிவம் நீங்காமல் மூக்கினால் ஒரு நதியை உண்டாக்கி, அந்நீரைக் கொண்டு அபிடேகம் செய்து உரிய வடிவத்தைப் பெற்றமையால், திருக்குருகாவூர் என்பது பெயராயிற்று. விஷ்ணு வெள்விடையாக ஆனமையின் சுவேத விருஷபபுரம். திருமால் பூசித்து விடை வடிவமுற்றுச் சுவாமியைத் தாங்கிய இடம். வெள்விடை என்ற ஊர்ப்பெயர் வெள்ளடை என்றாயிற்று என்பர்.

திருஞானசம்பந்தருக்குச் சைனர்களோடு பழகிய தோஷத்தைப் போக்குதற்குக் கங்கை யாற்றை வெள்விடைக் கூபமாகிய தீர்த்தத்தில் வருவித்து ஆட்டுவித்தமையால் ரகசியாசி என்பர்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தயிரால் அமைத்த கட்டமுது அளித்தமையால் தத்யோதனபுரம். விஷ்ணுபூசித்தமையால் விஷ்ணுபுரம்.

பரத்துவாஜன் என்னும் அந்தணனுக்கு நேர்ந்த வறுமையைப் போக்குவதற்குக் குபேரனைக் கொண்டு அளவிறந்த மணிகளை அருளி அவன் அம்மணிகளை ஜ்வாலையோடு இருக்கச் செய்தமையால் ரத்நாங்குரேசுரர் என்பது சுவாமி பெயராயிற்று. சுந்தரரும் மாணிக்கம் முளைத்தெழுந்த வித்தனே'' என்றதும் இதுபற்றியே.

அம்பிகை பெயர்: நீலோத்பல விசாலாக்ஷி, காவியங்கண்ணியம்மை, காவியங்கண்மடவாள்.

தீர்த்தம்: வெள்விடை தீர்த்தம். சந்நிதிக்கு வெளியேகூபம்.

ஆதிப்பிரம தீர்த்தம்: பிரமன் பஞ்சமுகத்தோடு இருக்கையில் பூசித்து உண்டாக்கியது இந்தக்குளம்.

ஹம்ச தீர்த்தம்: ஹம்சம் உண்டாக்கியது; கோயிலுக்குத் தெற்குக் குளம்.

சரசுவதி தீர்த்தம்: வடக்குக் குளம்.

இந்திர தீர்த்தம்: இந்திரன் வலாசுரனைக் கொல்வதற்குரிய ஆற்றல் பெறுதற்கு வந்து உண்டாக்கியது. கிழக்குக் குளம்.

விஷ்ணு தீர்த்தம்: நிருதி மூலைக்குளம்.

வத்ஸ தீர்த்தம்: வத்ஸராஜன் வந்து திருப்பணி செய்து உண்டாக்கியது.

சிவதீர்த்தம்: சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கட்டமுது கொடுத்தற்குச் சுவாமி உண்டாக்கியது.

வருண தீர்த்தம்: வருணன் உண்டாக்கியது. வாயுமூலைக் குளம்.

உரோமச தீர்த்தம்: தெற்குக் குளம்.

புறாநதி: கபோதநதி. புறாவாய்க்கால்.

விநாயகநதி. புறாநதி சங்கமமாகப் பெற்ற சமுத்திரம். திருமுல்லைவாயில் புராணத்தில் இதுதேவ தீர்த்தம் என்று கூறப் பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் பசியோடு வரும்போது வெள் விடைநாதர்கட்டமுதுடன் பிராமணவடிவம் கொண்டு பந்தர் அமைத்து எழுந்தருளி இருந்த இடம் சித்திரப்பந்தரடி என்பது. இது சந்நிதிக்கு நேரே ஒரு மைல் தொலைவில் உள்ளது. சுவாமி சித்திரா பௌர்ணமியில் எழுந்தருளிக் கட்டமுது கொடுப்பது வழக்கம். இதற்குத் தெற்கே சுந்தரர் பரிசனங்களுடன் ஆன் மார்த்த பூசை செய்த இடம்.

இடமணல்: ஓரூர். இதற்குக் கிழக்கே இவர் பரிசனங்களைச் சேகரித்த இடம். சேகரம்.

எல்லோருக்கும் கட்டமுது பற்றுமா என்று கேட்டதற்குச் சுவாமி பற்றும் என்று சொன்ன இடம் பத்தம். (வரிசைப் பற்றுக்கு வடக்கு)

சுந்தரருக்குக் கூர்மாவினங் கற்பித்த இடம்

ஆமைப்பள்ளம்: (வரிசைப்பற்றுக்கு வடக்கு)

இவர் பரிஜனங்களுடன் உண்டற்குப் பந்தியாக இருந்த இடம் வரிசைப்பற்று—பந்திகிராமம்.

தாகசாந்திக்குத் தயிர் கொடுத்த இடம்.

வேட்டங்குடி: உண்டு துயின்று தெளிந்த பின்பு ஆலயம் தெரியாமல் வடபால் செல்லும் பொழுது வேடரூபங்கொண்டு தடுத்து அழைத்த இடம். வேட விக்கிரகம் சிலரூபமாகக் கோயிலில் உண்டு. சுந்தரர் தேவாரம்:

வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே'' என்பது. இது வரிசைப்பற்றுக்கு நேர்வடக்குள்ளது; ஓரூர்.

திருஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடிய தலம்.

மிகுகுரு காவூர் வெள்ளிடை நாதர்பால்
நகுகா வியங்கண்ணி நாயகி வெள்ளிடை. (சிவ.)

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

(சுந்தரர்)

சுண்ணவெண் ணீறணி மார்பில் தோல்புனைந்
தெண்ணரும் பல்கணம் ஏத்தநின் றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே.

(திருஞா. 3-ஆம்திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

சிறுநம்பி திருவெள்ளடைநம்பி—திருமுதுகுன்றம். சு.
குருகாவூர் வெள்ளடை குமரிகொங்கு—பொது. திருநா.

104. திருக்குறுக்கை வீரட்டம். (சோழநாடு).

மாயூரத்திற்கு (மயிலாடுதுறை) வடமேற்கில் பத்து மைல் தொலைவில் இத்தலம் உள்ளது. இதற்குத் தெற்கில் மூன்று மைல் தொலைவில் திருமணஞ்சேரி என்னும் தலம் இருக்கிறது. அட்டவீரட்டானங்களுள் மன்மதனை எரித்த தலம்.

சுவாமி: வீரட்டேசுவரர், யோகீசர் (உற்சவர்)

அம்பிகை: ஞானாம்பிகை, பூர்ணாம்பிகை (உற்சவர்)

தீர்த்தம்: திரிசூல தீர்த்தம், ஞான தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள்.

விருட்சம்: கடுக்காய்.

தீர்க்கவாகு வென்னும் ஒரு முனிவர் சிவபெருமான் எழுந் தருளியுள்ள ஸ்தலங்கடோறும் சென்று அவ்வத் தலத்திலுள்ள இறைவனுக்கு ஆகாய கங்கை நீரைக் கொண்டே திருமஞ்சனம் செய்யும் இயல்புடையவர். அவர் இத்தலத்தை அடைந்து அங் ஙனமே அபிஷேகம் செய்ய விரும்பித் தம் நீண்ட கைகளை உயரத்தூக்க அவை குறுகின. அக்காரணத்தால் இத்தலத்தின்

பெயர் குறுக்கையென்றே வழங்கலாயிற்று. இத்தலத்திற்கு அரிதகிவனம், கடுவனம், யோகீசபுரம் ஞானாம்பிகாபுரம், காமதகனபுரம், கம்பகரபுரமென வேறுதிரு நாமங்களும் வழங்கும். இலக்குமியின் நடுக்கம் போக்கியதால் கம்பகரபுரம்.

இத்தலத்துச்சபை கமனங்கநாசினி (காமாங்கநாசினிசபை) அல்லது ''சம்புவிநோதசபை''. விநாயகரும் தீர்க்கவாகுவும் குறுங்கையர்களாய்த் தெற்குப் பிராகாரத்தில் இருக்கிறார்கள். எதிரில் கடுக்காய் மரம். மகாவித்துவான் பிள்ளையவர்கள் இத்தலத்திற்குப் புராணம் ஒன்று செய்திருக்கின்றார்.

மேற்கு நோக்கிய சந்நிதி.

மதனஸம்ஹார மூர்த்தி. இவருக்கு வருடத்தில் அபிடேக காலம் ஆறு 1. சித்திராபௌர்ணமி, 2. வைகாசி விசாகம், 3. ஆடி தக்ஷிணாயனம் 4. மாசிமகம் 5. உத்தராயணம். 6.

பிரமோற்சவம்: மாசிமாதம் அசுவதி கொடியேற்றம். மாசி மகத்தில் சம்ஹாரம். உத்தரத்தில் திரிசூல கங்கைத் தீர்த்தங் கொடுத்தல்.

பிரமலிங்கம் கிழக்கே உட்பிராகாரம். இராமலிங்கம் ஊருக்கு மேற்கே ஒரு திடல். காமேசலிங்கம். குறுக்கைக்கு மேற்கே இரண்டு கல்தொலைவிலுள்ள காமேச புரத்திலுள்ள அபிராமி கோயிற்பற்று. இக் கோயிலில் மன்மத விக்கிரகமும் ரதி விக்கிரகமும் சுரங்கத்திலுள்ளன என்பது கர்ணபரம்பரை. லக்ஷ்மி லிங்கம்: வடக்கு வீதியில் வடமேற்கு மூலையில் லிங்கம் மட்டு முள்ளது. ஜயத்துவஜலிங்கம் வடக்கே ஒருமைலிலுள்ள வரக மடை என்னும் ஊரிலுள்ளது. ஞானநதி: பழவாறு என்று பெயர். வடக்கிலுள்ளது. பிராகாரம் இரண்டு. வெளிப்பிரா காரம் இடிந்து போய் விட்டது. கடுக்காய் விருட்சம் உட் பிராகாரத்தில் கிழக்கேயுள்ளது. இந்த விருட்சத்தின் கிழக்கே ரிஷபம் உண்டு. துர்க்கை கோயில் தென்மேற்கில் அக்கிரஹாரத் தின் பக்கத்திலுள்ளது. ஓமக்குளம். இந்த இடத்தின் சமீபம் பிரமன் யாகம் செய்த இடம் காளிகோயில். தெற்குவீதி கீழ்க்கோடியிலுள்ளது. ஸப்த கன்னிகைகள்: வடமேற்கில் ஒரு தோப்பிலுளர். அப்பர் சுவாமிகள் தேவாரம் 'அட்டமிமுன்னேழு நாளும் கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே'.

குறுக்கை விநாயகர்: உள் பிராகாரத்தில் நிருதி மூலை யிலுள்ள கோயிலிலுள்ளார்.

குறுங்கை மஹரிஷி: குறுக்கை விநாயகர் கோயிலுக் குள்ளே இவர் பிம்பமுண்டு.

ஸ்தல விருக்ஷம்: கடுமரம்; இதனால் இத்தலம் அரிதகிவன மென்று பெயர் பெறும். இது கீழைப்பிராகாரத்தில் நிற்கின்றது.

தீர்த்தம்: திரிசூல கங்கை. இது கோயிலுக்கு வெளியே ஸந்நிதியில் தடாக வடிவமாக வுள்ளது. இதில் சிவபெருமான் மன்மதனைச் சங்கரித்ததற்கு அடையாளமாக ஊரைச் சூழச் சில அறிகுறிகளுள்ளன.

கங்கணம் புத்தூர்: இது குறுக்கைக்குத் தென்கிழக்கில் ஒரு நாழிகை வழித் தூரத்திலுள்ளது. சிவபெருமானுடைய யோகத்தை மாற்றுவதற்கு மன்மதன் கங்கணம் தரித்த இடம்.

தேவநல்லூர்: இது கங்கணம் புத்தூர்க்கு மேற்கேயுள்ளது. சிவயோகத்தைக் கலைக்கும்படி மன்மதனைத் தேவர்கள் பிரார்த் தித்த இடம்.

வில்லியனல்லூர்: ஈசானத்தில் ஒரு நாழிகை வழித்தூரத்தி லுள்ளது. மன்மதன் போர் செய்தற்கு வில்லையெடுத்த இடம்.

கால்வளைமேடு: வடக்கே ஒரு நாழிகை வழித்தூரத்தி லுள்ளது. மன்மதன் வில்லைக்காலூன்றி வளைத்த இடம்.

திருநாவுக்கரசர் பாடியதலம்.

மிகுதிருக் குறுக்கை வீரட்டேசர்
சுகஞா னாம்பிகை சூல தீர்த்தம். (சிவ.)

ஆதியிற் பிரமனார்தாம் அர்ச்சித்தார் அடியி
ணைக்கீழ்
ஓதிய வேத நாவர் உணருமா றுணரல் உற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை
யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையும் சோலைக் குறுக்கைவீ ரட்ட
னாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்;

கூரார் குறுக்கை வீரட்டானமும்—பொது. திருநா.
கோவனகர் வீரட்டங் குறுக்கை வீரட்டம்—பொது. திருநா.
கொண்ட னாட்டுக் கொண்டல் குறுக்கை நாட்டுக் குறுக்கையே—பொது. சு.

105. திருக்குற்றாலம் (குறும்பலா) (பாண்டிநாடு)

உத்தாலகவனமென்றும் வழங்கும். தென்காசியிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ளது. இங்குள்ள சாரல் நீர்வீழ்ச்சி முதலியவற்றை அநுபவிக்க ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மக்கள் வருவார்கள். மலைமேலுள்ளது சண்பகாடவி. அருவியும் நெடு நேரம் நீராடுவதற்கு ஏற்ற வசதியுடன் இருக்கிறது. தலத்திற்கு அகத்தியமுனிவர் திருமால் உருவைக் குறுகச் செய்து சிவலிங்க மாக்கியதால் குற்றாலம் எனவும், பலா விருட்சம் தலவிருட்ச மாதலால் குறும்பலா எனவும் பெயர் ஏற்பட்டது. இத்தலத்தில் சிவபெருமான் அயன், அரி, உருத்திரன் என்னும் மும்மூர்த்தி களாகப் பண்டைக் காலத்தில் முறையே எழுந்தருளினார் என்பது புராணவரலாறு. முதல் நாள் பிரமதேவராகவும், இரண்டாம் நாள் திருமாலாகவும் மூன்றாம்நாள் உருத்திர மூர்த்தியாகவும், நான்காம்நாள் ஈசுவரனாகவும், ஐந்தாம் நாள் சதாசிவமூர்த்தி யாகவும், ஆறாம்நாள் வெள்ளிமயில் வாகனாரூடராகவும் திருக் கோலம் கொண்டு பவனிவருவார்.

நடராசருக்குரிய ஐந்து சபைகளுள் இது சித்திரசபை. இங்கு நடராசர் சுவரில் சித்திரரூபமாக இருக்கிறார். இதற்கு அருகில் கூத்தர்சபை இருக்கிறது. சித்திரை விஷுபுண்ணிய காலம் பிரசித்தம். மகுடாகமம் இத்தலத்திற்குரியது.

''கூறுமவர் கோலமொடு கோயிலிடை ஏகி
வீறுதமி ழாலரியை வேதமனு வாலே
ஆறுபுனை வேணியர னாதல்புரி பூசை
ஏறுமகு டாகமமெ னாவருள்செய் தானால்''

(திருக்குற்றாலப்புராணம் திருமால். 115)

இத்தல சம்பந்தமாகப் புராணமும், குறவஞ்சியும் உள்ளன.

'திரிகூடாசலம்' என்பது தலத்தின் மற்றொரு பெயர். கோயிலின் ஓரிடத்தில் விநாயகர், இலிங்கம், கோபுரம், மலை,

மலைவீழருவி ஆகிய பஞ்சதரிசனம் கிடைக்கும். சணபகாரண்யம். இத்தலத்தைச் சார்ந்ததாகிய ஒரு பூஞ்சோலை. இது பற்றியே இத்தலம் சண்பகக் குற்றாலம் என்று வழங்கப்படும்.

திருப்புகழ் பாடல் பெற்ற 'திருஇலஞ்சி' என்னும் ஊர் 10 மைல் தொலைவில் இருக்கிறது.

சுவாமி: குறும்பலாவீசர்
அம்பிகை குழல்வாய்மொழியம்மை
தீர்த்தம்: சித்ராநதி, வடவருவி
விருட்சம்: குறும்பலா.

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன்றன்னை—கோயில். திருநா.
கொங்கிற் கொடுமுடியார் குற்றாலத்தார்—கோயில். திருநா.
குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய்—கோடிகா. திருநா.
குரவங் கமழும் குற்றாலர் தாமே—பழனம்—திருநா.
கொல்லியான் குளிர் தூங்கு குற்றாலத்தான்—நெய்த்தானம். திருநா.
குற்றாலங் கோகரண மேயினானை—பூந்துருத்தி. திருநா.
கூர்ந்தவனே குற்றாலமேய கூத்தா—சோற்றுத்துறை. திருநா.
கொங்குவார் மலர்க்கண்ணிக் குற்றாலன்காண்—ஆரூர். திருநா.
சிற்றேமமும் பெருந்தண் குற்றாலமும்—அதிகை. திருநா.
குரங்கணின் முட்டங் குறும்பலாவும்—அதிகை. திருநா.
குறும்பலா நீடுநிரு நற்குன்றம்—பொது. திருஞா.
குற்றாலத்துறை கூத்தனல்லால்நமக் குற்றாராருளரோ—பொது. திருநா.
குழலார் கோதை வரைமார்பிற் குற்றாலத் தெங்கூத்தனை—பொது. திருநா.
கொடுமுடி குற்றாலம் கொள்ளம்பூதூர்—பொது. திருநா.
கோலநீற்றான் குற்றாலம் குரங்கணின் முட்டமும்— பொது திருநா.
கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா குற்றலா—பொது. சு.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

தாய குற்றாலம் குறும்பலா நாதர்
குழல்வாய் மென்மொழி யாள்மகி ழருவி (சிவ.)

வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடல்அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்.

(திருஞா. 1-ஆம் திரு.)

இப்பதிகம் அடியார்களை நோக்கி வினாவிய அமைப் புடையது.

திருக்குற்றாலம் அமைந்த நாடு தென்னாரிய நாடென வழங்கி வந்தது. இங்குள்ள மலை மூன்று சிகரங்களையுடையது. அதனால் திரிகூடாசலம் என்னும் திருநாமத்தைப் பெற்றது. இத்தலத்திற்கு நன்னகர் என்பது ஒரு பெயர். இத்தலத்தைச் சார்ந்த பூஞ்சோலைக்குச் சண்பகாரணியம் என்று பெயர் வழங் கும். இங்குள்ள வடவருவியும், தேனருவி என்னும் சிவமது கங்கையும் சிறப்புடையவை. வடவருவியில் மூழ்கினாரது பாவம் கழுநீராகப் பிரிந்து ஓடுமென்பது இத்தல ஐதிஹ்யம். இத்தலத் தின் திருக்கோயிலுக்குச் சங்கக் கோயில் என்ற பெயர் வழங்கும். சிவபெருமான் இங்கே குறும்பலா மரத்தினடியிலும் எழுந்தருளி யிருக்கின்றார். அம்பிகையின் திருநாமம் குழல்வாய் மொழி என்பது. இக்கோயிலில் மும்முரச மண்டபம் என்ற ஒன்று உண்டு. சிவபெருமான் இங்கே பிரமதேவராகவும், திருமாலாக வும் இருந்து விளங்கினார். அகத்தியர் வழிபட்டுப் பேறு பேற்றார். வடகரை ஸ்தானாதிபதியாக இருந்த பொன்னம் பலம்பிள்ளை இத்தலத்திலுள்ள சித்திரசபையைப் புதுப்பித்தா ரென்று தெரிகிறது.

இலஞ்சி முதலிய ஸ்தலங்களைப் பரிவார ஸ்தலங்களாகக் கொண்ட சிறப்புடையது இத்தலமாகும்.

106. கூடலையாற்றூர்: (நடுநாடு)

விருத்தாசலத்திலிருந்து புவனகிரி போகும் பஸ்ஸில் வளைய மாடதேவியில் இறங்கிச் சென்றால் வெள்ளாறும் மணிமுத்தாறும் கூடும் இடமே கூடலை ஆற்றூர். விருத்தாசலம் செல்லும்

சுந்தரரை இவ்வழியாகத்தான் போகவேண்டும் என்று சொல்லிய இறைவன் மறைந்து இத்தலப்பதிகம் பெற்றதைப் பாசுரம் தோறும் காணலாம்.

ஸ்ரீமுஷ்ணம் இங்கிருந்து நான்கு மைல்.

மணிமுத்தாற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் இடையில் இருந்ததை வேறிடத்தில் கட்டியிருக்கிறார்கள்.

சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி: நர்த்தன வல்லபேசுவரர், நெறிகாட்டுநாயகர்.
தேவி: பராசக்தி, ஞானசக்தி, புரிகுழலாம்பிகை.
தீர்த்தம்: மணி முத்தாநதி, வெள்ளாறு சங்கமம்.
சுவாமி: கிழக்கு முகம். அம்பிகை: தெற்கு முகம்.

இக்கோயிலில் நவக்கிரக சந்நிதி இல்லை. சனிபகவான் மட்டும் தனியாக உள்ளார். நடராச சபை இருக்கிறது.

கூடலை யாற்றூர் குறிநெறிகாட் டண்ணல்
ஏடவிழ் புரிகுழல் ஈசுவரி சங்கு. (சிவ.)

வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடிஅணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.

(சுந்தரர்)

107. திருக்கேதாரம் (வடநாடு)

இந்தியாவின் வடக்கே எப்போதும் பனியால் மூடப்பெற்றுள்ள கயிலாய பர்வதத்தின் ஒரு பகுதி கேதாரத்தலமாகும். கடல் மட்டத்திற்கு 11750 அடி உயரத்திலுள்ளதென்பர். வருடத்தில் ஆறு மாதகாலத்தில்தான் மக்கள் வழிபட முடியும்—அதாவது கோடைக்காலத்தில்—ஏப்ரல் முதல் செப்டம்பர்வரை. அக்டோபர் முதல் பனியால் மூடப்பெற்றுவிடுவதால் ஒருவரும் இந்தத் தலத்தை அணுக முடியாது. இத்தலம் ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்று. 12 ஜோதிர் லிங்கத் தலங்களாவன. 1. சோமநாதம் 2. ஸ்ரீசைலம் 3. உஜ்ஜயினி 4. ஓங்காரம் 5. திருக்கேதாரம் 6. டாகன்யாம் 7. ஸ்ரீ காசி 8. த்ரியம்பகம்

9. வைத்தியநாதம் 10. தாருகாவனம் 11. இராமேசுவரம் 12. குஷ்மேளம்.

ஹரித்வாரிலிருந்து ரிஷிகேசம் சென்று அங்கிருந்து வடக்கே 140 மைலுக்குமேல் செல்லவேண்டும். டில்லியிலிருந்தே யாத்திரை செல்லும் பேருந்துகள் விடப்படுகின்றன. ரிஷி கேசத்திலிருந்து பேருந்துகள் பதிரிநாத் வரை செல்கின்றன. ஆனால் கேதாரத்திலிருந்து கௌரிகுண்டம் என்ற இடம் வரை பேருந்து செல்கிறது. பிறகு சுமார் 10 மைல்கள் கால்நடைப் பயணம் அல்லது குதிரையில் செல்லலாம் டில்லியிலிருந்து ஒரு வாரத்திற்குள் பிரயாணத்தை முடித்துக் கொள்ளலாம். மிகுந்த குளிரும் பனியும் இருக்குமாதலின் உடல் முழுவதற்கும் கம்பளிப் போர்வைகளும் காலுக்கு உறையும், பாதரக்ஷை (பூட்ஸ்)யும் தேவை. கேதாரநாதர் கோயிலுக்கு அருகே மந்தாகினி நதி ஓடுகிறது. அதில் குளிர் (பனி) தாங்கச் சூரியோதயம் ஆனபின் ஸ்நானம் செய்து கேதாரநாதரைத் தரிசிக்கலாம். கேதார நாதரை யாவரும் தொட்டு வழிபடலாம். உட்பிராகாரத்தில் கௌரி அம்மையும் அர்த்த மண்டபத்தில் பஞ்ச பாண்டவர் சிலைகளும் உள்ளன. கோயிலுக்குப் பின்புறம் வெள்ளியங்கிரி ஜ்வலிக்கிறது. ஒரு புறம் அமிர்தகங்கை. மறுபுறம் பால் கங்கை இப்படிப் பலகங்கைகள் அருவியாக வழிந்து ஓடிக் கொண்டிருக் கின்றன.

கேதார நாதர் சுயம்புமூர்த்தி. இலிங்கமில்லை. கயிலை யின் ஒரு சிறுபகுதி அப்படியே காட்சியளிக்கிறது. அதைத்தான் உரிய காலத்துக்கு முன்விரைவில் காணமுயன்ற வீமனுக்காக இறைவன் எருமையின் உருவெடுத்துப் பூமியில் மறைந்ததாயும் அதன் பிருஷ்ட பாகம்தான் இங்கே தெரிகிறதென்றும். சொல்லப் பெறுகிறது. நாபித்தானம் மத்யமகேஷ்வர். மடிதுங்கநாதர், தாடி கல்பேஷ்வர். இந்த ஐந்து ஸ்தானங்களும் பஞ்ச கேதாரம் என்று குறிப்பிடப்படுகிறது. நேபாளத்திலுள் ளபசுபதிநாதரை முகமென்று குறிப்பிடுவது முண்டு. மேலே குறிப்பிட்ட செய்தி கள் திருக்கேதார யாத்திரை செய்த வி. கலியாண சுந்தரம் பிள்ளையவர்கள் திருக்கேதார யாத்திரை என்ற நூலில் வரையப் பெற்றுள்ளன.

பார்வதிதேவி இத்தலத்தில் நோன்பிருந்து கேதாரீசுவரரை வழிபட்டு அர்த்தநாரீசுவரப்பேறு பெற்றுள்ளார். கேதார முனி வர் சிவலிங்கப் பெருமானைப் பிரதிட்டை செய்து வழி பட்ட மையால் 'கேதாரம்' என்று இத்தலத்திற்குப் பெயராயிற்று. கங்கை தேவி மலர்தூவி பூசித்து இறைவனை வழிபட்டதாகவும்

தெரிகிறது. நரமுகமும் துதிக்கையும் கொண்ட பிள்ளையார் இருக்குந்தலம்.

பனியால் கோயில் மூடியிருக்கும் நாட்களில் தேவர்கள் பூசிப் பதால் மலர்கள் வாடுவதில்லை என்பது புராணவரலாறு. சம் பந்தரும் சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி: கேதாரேசுரர்.
அம்பிகை: கேதாரகௌரியம்மை.
தீர்த்தம்: மந்தாகினி.

கேதா ரந்திருக் கேதார நாதர்
மாதா கவுரி யம்மன்மந் தாகினி. (சிவ.)

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கேதார மேவினானைக் கேடிலியை—புள்ளிருக்குவேளூர். திருநா.
கேதிசரமேவினார் கேதாரத்தார்—வீழிமிழலை. திருநா.
மாகாளம் கேதாரமாமேருவும்—அதிகை. திருநா.
வழுவூர் வீரட்டம் மாதானம் கேதாரத்தும்—பொது. திருநா.
கந்தமாதனங் கயிலை மலைகேதாரம்—பொது. திருநா.

108. திருக்கேதீச்சரம் (ஈழநாடு)

இத்தலம் இலங்கையில் உள்ளது. தலைமன்னார் பியரி விருந்து 23 மைல் தொலைவிலுள்ளது பாலாவி ஆற்றின் கரையில் மாதோட்டத்திலுள்ளது. கேது பூசித்த தலம். பழைய கோயில். போர்த்து கீசியர் ஆட்சியில் தகர்க்கப்பட்டது. சம்பந்தரும், சுந்தரரும் இத்தலப் பதிகங்களை இராமேச்சுரத்திலிருந்து ஓதினார்கள். பிருகுமுநிவர், மாலியவான் பூசித்த தலம்.

சுவாமி: கேதீசுரர்
அம்பிகை: கௌரியம்பிகை
தீர்த்தம்: பாலாவி, கௌரி தீர்த்தம்.

கேதீச் சுரம்வாழ் கேதார நாதர்
காதல்கூர் கவுரியம் மன்கமழ் கவுரி. (சிவ.)

நத்தார்புடை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

(சுந்தரர்)

விருதுகுன்ற மாமேரு வில் நாண் அரவா அனல்ஏரி அம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்று உறைபதி எந்நாளும்
கருதுகின்ற ஊர் கனைகடல் கடி கமழ் பொழில் அணி மாதோட்டம்
கருதநின்ற கேதீச்சரம் கைதொழக்கடுவினை அடை யாவே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

கேதீசர மேவினார் கேதாரத்தார்—வீழிமிழலை. திருநா.
ஈழநாட்டு மாதோட்டம்—பொது. சு.

109. கைச்சினம் (சோழநாடு)

திருவாரூருக்குத் தெற்கிலுள்ள திருநெல்லிக்கா என்னும் இரயில்வே நிலையத்திற்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது. கச்சினம் என்று வழங்குகின்றது.

இந்திரன் பூசித்த கைவிரற்குறி இலிங்கத்தில் காணப்படுகிறது. திருணபிந்து முனிவர் பூசித்த தலம். ஸ்தலமான்மியம் அச்சிடப் பெற்றுள்ளது.

இந்திரன் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பூசித்து எடுக்க முயன்றபோது, எடுக்க வராமல் அவனது கை அடையாளம் திருவுருவத்தில் பதிந்த காரணத்தால் இப்பெயர் பெற்றது என்று தெரிகிறது. சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: ஹிருதய கமலநாதர்; கரச்சின்னேசுரர், கைச்சின நாதேசுரர்.

அம்பிகை: வெள்வளையம்மை.
தீர்த்தம்: இந்திர தீர்த்தம்; வஜ்ர தீர்த்தம்.

கள்ளமில் கைச்சினம் கைச்சின நாதர்
வெள்வளை மாதுதே வேந்திரன் தீர்த்தம். (சிவ.)

தையலோர் கூறுடையான் தண்மதிசேர் செஞ்சடை
யான்
மையுலா மணிமிடற்றான் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவே லேந்தி நிவந்தொளி சேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:

கச்சினங்கற்குடிகச்சூரலாக் கோயில்—பொது. திருநா.

110. கொடிமாடச் செங்குன்றூர். (திருச்செங்கோடு)
(கொங்குநாடு)

சேலம் மாவட்டம் சங்ரி துர்க்கம் இரயில்வே நிலையத்திற்குத் தென் கிழக்கில் ஆறுமைல் தொலைவில் உள்ளது.

மலைமேல் கோயில் . மலை உயரம் 1901 அடி. மூலத்தானத் திருவுருவம். அர்த்தநாரீசுவரர். சலவைக் கல்லால் ஆகியது. திருவடியில் நீரூற்று. வைகாசி மாதம் நடக்கும் தேர்த்திரு விழா அன்று அர்த்த நாரீசுவரர் எழுந்தருளுவார். முருகன் சந்நிதி பெரியது. இம்முருகனைத் தரிசித்தற்கு ''நாலாயிரம் கண் படைத்திலனே அந்தநான் முகனே'' என்கிறார். அருண கிரியார். சம்பந்தர் முன்பனிக் காலத்தில் இங்கு எழுந்தருளிய போது உடன்வந்த தொண்டர்குழாம் குளிர் சுரத்தால் வருந்தின போது திருநீலகண்டப்பதிகம்பாடி அதைப் போக்குவித்தார். சிலப்பதிகாரத்தில் 'நெடுவேள் குன்று' எனக் கூறப் பெற்றுள்ளது.

ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி ஒன்று ஆலயத்தில் இருக் கிறது. மலை சிவந்த நிறமாதலால் செங்கோடு' என்று ஆயிற்று., நாககிரி என்ற வேறு ஒரு பெயரும் உண்டு இத்தலம் முருகனுக்கு உகந்தது. மலையடிவாரத்தில் ஆறுமுக சுவாமியும், மலைமேல் சுப்பிரமணிய சுவாமியும் இருக்கின்றனர்.

திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: அர்த்தநாரீசுவரர்.
அம்பிகை: பாகம்பிரியாளம்மை.

படர்செங் கோட்டுப் பரனர்த்த நாதன்
இடமுறை யர்த்தநா ரீசுவரி சங்கு. (சிவ.)

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்
குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

111. திருக்கொடுங்குன்றம். (பிரான்மலை) (பாண்டியநாடு)

திருப்புத்தூர் வரையில் பஸ்ஸில் ஏறிச் சென்று அங்கு வேறு பஸ்ஸில் ஏறிச் சிங்கப்புணரி பஸ் மூலம் ஏழு மைல் தொலைவு சென்று சதுர்வேத மங்கலம் (மட்டியூர்) எனும் இடத்தில் இறங்கி மாட்டு வண்டியில் 5 மைல் தொலைவு சென்றால் இத்தலத்தை அடையலாம். இத்தலம் உக்கிரகிரி யென்று வடமொழியில் வழங்கும்.

இவ்வூரிலும் அயலூரிலும் பெண்களுக்குத் தேனம்மா என்று பெயர் வைப்பது வழக்கம். உமையாளொடு மேவும் என்றது (திருஞா. 1-14-4) மங்கைபாகரை, சுவர்க்க ஸ்தானத்திலுள்ளவர் இவர். மங்கை பாகத்தவன்-உமாபதி (திருஞா. 1-14-15). குட்டாச்சுனை (திருஞா. 1-14-8) இஃது குட்டந் தீர்த்தது. சுவாமி சந்நிதியிலிருந்து இப்போது மூடப்பட்டிருக் கிறது.

மகோதரமுநிவர், நாகராசன் முதலியோர் பூசித்த தலம். முருகன் விசேடம். ஞானசம்பந்தருக்கு 'நன்றாம்' என அசரீரி வாக்குக் கொடுத்த இடம். திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: கொடுங்குன்றீசர், உக்கிரகிரீசர்.
அம்பிகை: குயிலமிர்த நாயகி, தேனிற்பொலி மொழியாள்; அமுதாம்பிகை.
விருட்சம்: உறங்காப்புளி
பட்சி: கூகை, பாகா என்று அலறும்.
தீர்த்தம்: மதுபுட்கரிணி, குட்டாச்சுனை, அமிர்தகூபம்.

கொடுங்குன்றூர் சேர்கொடுங் குன்று நாயகர்
மடந்தைஞா னாம்பிகை மகிழ்சுந் தரமாம். (சிவ.)

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி ஐந்தும் அமர்ந்தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கொடுங்குன்றன்காண்—ஆரூர். திருநா.
நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றம்—இடையாறு. சு.
அகலாமுது குன்றங் கொடுங்குன்றமும்—பொது. திருஞா.

112. கொட்டையூர்: (சோழநாடு)

இத்தலம் கும்பகோணத்திற்கு மேற்கில் இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

மார்க்கண்டேயர் முதலியோர் பூசித்த தலம்

விநாயகர்: கோடி விநாயகர். திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கின ஏரண்டமுநிவர் இங்கு வெளிவந்தார். அவருடைய திருவுருவம் கோயிலில் உள்ளது.

அப்பர்சுவாமிகள் இவ்வூரையும் திருவலஞ்சுழியையும் சேர்த்துப் பாடியுள்ளார்.

ஊர் முன்பு ஆமணக்கங்காடாக இருந்தது. சுவாமி ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழிருந்து தோன்றியமையால் கொட்டையூர் என்று பெயர். சோழ மன்னனுக்கு ஒரு குவில் கோடிலிங்கமாகத் தரிசனம் கொடுத்ததால் ஆலயத்துக்குக் கோடீச்சுரம் என்ற பெயரும் வந்தது. இலிங்கத்தில் அநேக சிறிய லிங்கங்கள் உள்ளன. ஹேரண்டபுரம் என்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர். முற்காலத்தில் அத்திரி முநிவரின் புத்திரரான ஆத்திரேய முநிவர் இந்த ஹேரண்டவனத்தில் சுயம்புவாக எழுந்தருளியிருக்கும் கோடீசுவரர் என்ற திருப்பெயரோடு விளங்கும் சிவபெருமானைக் குறித்துத் தவம்புரிந்து கொண்டிருந்தார். அதனால் அவர் தங்கியிருந்த இந்த இடம் காரணமாக ஹேரண்ட முநிவர் என்று அழைக்கப்பட்டார்.

இவரே இத்தலத்திற்கு மேற்கேயுள்ள திருவலஞ்சுழி என்ற க்ஷேத்திரத்திற்கருகில் அந்தர்வாகினியாய் (கீழ்நோக்கி) ஒரு பிலத்தின் வழியே சென்று மறைந்த காவிரியை உலகுக்கு மீண்டும் அளிக்கக் கருதி, தம்மையே பலியாக அர்ப்பணம் செய்து கொண்டு, அந்தப்பிலத்தில் புகுந்து காவிரியுடன் வெளிவந்தார். இம்முனிவர் காவிரியுடன் வெளிவந்த இடம் மேலைக்காவிரி என்பர். இம்முனிவர் பெருமான் வலஞ்சுழி நாதர் என்ற பெயருடன் திருவலஞ்சுழி என்ற தலத்தில் லிங்காகாரமாகக் காட்சியளிக்கின்றார்.

இத்தலத்திலும் கோயிலின் ஹேரண்ட மரத்தின்கீழ் அமர்ந்து சிவபூசை செய்யும் பாவனையாக இம்முனிவர் பெருமான் திருவுருவம் இருக்கின்றது.

இத்தலத்திலுள்ள கோடீசுவரர் என்னும் மகாலிங்கத்தின் திருவுருவம் முழுவதும் பலாக்காயின் வெளிப்புறம் போல முட்கள் அடர்ந்ததாகக் காணப்படுகின்றது. அப்படித் தோன்றும் ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு லிங்கம் எனச் சொல்லுகின்றனர். அதனாலேயே அந்த மகாலிங்கத்திற்குக் கோடீசுவரர் என்ற பெயர் உண்டாயிற்று என்றும் இந்தச் சிவலிங்க தரிசனம் கோடி லிங்கதரிசனத்திற்குச் சமம் என்றும் கூறுவர். இத்தலத்தில் தவம்

புரிந்த பத்திரயோகி என்பவருக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு, ''இத்தலத்தில் செய்யப்படுகின்ற ஒரு நற்செயல் ஒரு கோடிப் பங்கு பலனைத்தரும்''. என்று அருள் புரிந்தனர்.

தேவியின் பெயர்: பந்தாடியம்மை. கந்துகக் கிரீடாம் பிகை என்பது வடமொழிப் பெயர்.

இங்குள்ள உற்சவ விநாயக மூர்த்தி உபயதேவிகளுடன் விளங்குகின்றார். திருவலஞ்சுழியிலும் இம்மாதிரி உபய தேவி யர்களுடன் விளங்கும் விநாயகமூர்த்தம் ஒன்று உள்ளது. இத் தலத்திலுள்ள காவிரி நதியின் தீர்த்த கட்டத்திற்குக் கோடி தீர்த்தம் என்று பெயர்.

இத்தலத்தைப்பற்றி, சரித்திர சம்பந்தமாக கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து பல குறிப்புக்கள் கிடைக்கின்றன. இத்தலம் இன்னம்பர் நாட்டுக் கொட்டையூர் எனச் சோழ சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பொழுது கோயிலில் மூன்று சோழ சாசனங்கள் காணப் படுகின்றன. அவைகளில் இரண்டு மூன்றாங் குலோத்துங்கனது காலத்தவையும் ஒன்று இரண்டாம் இராசாதிராசன் காலத்ததும் ஆகும்.

மூன்றாங் குலோத்துங்கன் காலத்துச் சாசனங்கள் இரண் டும் தனித்தனியே இருபெண்பாலர்களால் கோயில் ஆராதனங் களுக்கு வேண்டிய பாத்திரங்களும் பூசாதிரவியங்களும் அளிக்கப் பெற்ற விவரங்களைத் தெரிவிக்கின்றன.

மூன்றாவதாகிய இரண்டாம் இராஜாதிராஜன் காலத்துச் சாசனம் இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடந்து வந்த வசந்தோற்சவத்தில் ஆறாந்திருநாளன்று செய்ய வேண்டிய சில ஆராதனங்களுக்காக ஒருவரால் விடப்பெற்ற நிலத்தின் விவரங்கள் அடங்கியுள்ளன.

இத்தலம் திருநாவுக்கரசு சுவாமிகளது பதிகம் பெற்றுள்ளது. இப்பதிகம் திருவலஞ்சுழி இத்தலம் ஆகிய இருதலங்களையும் சேர்த்துக் கூறுகின்றமையால் மேற்கண்ட இருதலங்களுக்கும் உள்ள புராண சம்பந்தம் இனிது விளங்கும்.

இக்கோயில் இரண்டாங்கோபுரவாயிலில் மநுநீதிகண்ட சோழன் தன்மைந்தனைத் தேர்க்காலில் வைத்து இடறுகின்ற வாறு ஒரு சிறிய திருவுருவம் அமைக்கப்பெற்றுள்ளது. மிக்க அழகாக இருக்கிறது.

இத்தலசம்பந்தமாக, சிவக்கொழுந்து தேசிகர் கோடீச்சுரக் கோவை என்று ஒரு பிரபந்தம் பாடியுள்ளார். மேற்கூறிய புலவர் கோடீச்சுவர உலா பாடியுள்ளார் என்றும் தெரிகிறது.

கந்தார் கொட்டையூர் கடவுள் கோடீசர்
பந்தாடு நாயகி பகர்கோடி தீர்த்தம். (சிவ.)

கருமணிபோல் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணிமா நாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமரும் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையும் கோமான் தானே.
(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப் பாடல்:

நன்கான கோடீச்சுரங் கொண்டீச்சுரந்திண்டீச்சரம்—
பொது. திருநா.

113. திருக்கொண்டீச்சுரம். (சோழநாடு)

இத்தலம் நன்னிலத்திலிருந்து 1½ மைல் தொலைவில் உள்ள தூத்துக்குடி கிராமத்தில் முடி கொண்டான் நதியின் வடகரையில் உள்ளது. இத்தலத்திற்கு வில்வாரணிய க்ஷேத்திரம் என்ற பெயருண்டு. பார்வதி தேவியார் பூசித்த தலங்களுள் ஒன்று.

ஒரு காரணத்தால் அம்பிகை காமதேனு என்னும் பசுவாகி, சுவாமியைத்தேடி, இவ்வில்வ வனத்தில் கொம்பினால் உழுது வருகையில் சுவாமியின் சிரசில் கொம்பு பட்டு இரத்தம் வரத் தன்பாலை விட்டு ஆற்றி வழிபட்டனள். இலிங்கத்தின் உச்சியில் வடு இருக்கிறது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி: பசுபதீசுரர்.
அம்பிகை: சாந்த நாயகி.
தீர்த்தம்: க்ஷீரபுஷ்கரிணி தீர்த்தம்.

திருக்கொண் டீச்சரம் சிவன்பசு பதியார்
சுரர்க்கருள் சாந்த சுந்தரி கோசிகம். (சிவ.)

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேல்னாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கொளிலாது
கெட்டேன்
சேலுலாம்பழன வேலித் திருக்கொண்டீச் சரத்துளானே.
(திருநா. 4-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கொண்டலுள்ளார் கொண்டீச்சரத்திலுள்ளார்—வீழி மிழலை. திருநா.
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கூடல்—பொது. திருநா.
கோடீச்சுரம் கொண்டீச் சுரந்திண்டீச்சுரம்—பொது. திருநா.

114. திருக்கொள்ளம்பூதூர். (சோழநாடு)

இத்தலம் கொரடாச்சேரியிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. கோயிலின் பக்கத்தில் ஓடுகின்ற முள்ளியாற்றுக்கு எதிர்கரையில் சம்பந்தர் வந்தபோது வெள்ளம் போயிற்று. ஓடக்கோல்நிலைக்காமையால் ஓடத்தை மரத்தில் கட்டிவிட்டு ஓடக்காரன் வீட்டிலிருந்தான். சம்பந்தர் ஓடத்தை அவிழ்த்து விட்டு ஏறிக் கொண்டு 'கொட்ட மேகமழும்' என்னும் பதிகம் பாட 'நாவலமே கோலாக ஓடம் கோயிலருகில் சேர்ந்தது. இது ஐப்பசி மாதம் அமாவாசை யன்று உற்சவமாக நடக்கிறது.

கூவிளம் பூதூர் கொள்ளம்பூதூர் ஆயிற்று என்பர். கூவிளம்—வில்வம். 64 நடனத்துள் ஒன்று. ஆற்றின் மேல் கரையில் நம்பனார் கோயில் என்று ஒன்று இருக்கிறது. களர். துருவாசருக்கு நடன தரிசனம். தெற்கே அவிமுக்தேசுவரம் என்று ஒரு சிவஸ்தலம் இருக்கிறது. இங்கே ஞானசம்பந்தர் தோணியில் செல்கையில் அஞ்சேல் என்றது கோலுக்கு அகப்படாமல் சென்று நின்ற இடம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

தலப்பெருமை: இத்தலம் புராணப் பெருமை பெற்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றிலும் சிறப்புடையது. இத்தலத்து விநாயகர் மிகச் சித்தியுடையவர். தாம் தொடங்கும் காரியம் சித்தியானால் காட்சிக்கு எளியவர் ஆவர். வலஞ் சுழிப்பர். கனமிலாது விளங்குவர். காரியம் சித்தியாகாதாயின்

இக்குணங்கள் காணப்படாமல் இருப்பர். ''கரத்தினால் தொட்டெ டுக்கக் காரியம் சித்தி யாகின் வரத்தொடு சிறிய ரூபம் ஆகுவர் வலஞ்சு ழிப்பர் விரித்திடு கனமி லாது விளங்குவர் சித்தி யின்றேல் பரித்திடும் இனிய மூன்று குறியின்றிப் பதிந் திருப்பர்.'' (த. பு.)

இத்தலத்தில் எவ்வுயிரேனும் இறந்தால் வில்வவனேசன் தேவியொடும் வந்து வலச் செவியில் திருவைந்தெழுத்தை உப தேசித்து முத்தி அளிக்கும் பெருமையுடையது. ஒவ்வொரு யுகத்துக்கு ஒவ்வொரு பெயராய் வில்வவனம் முதலிய பெயர் களைப் பெற்றது. பிரமன் அகத்தியர், அர்ச்சுனன் முதலியோர் இத்தலத்தில் வந்து தங்கி வழிபட்டுத் தங்கள் பெயரால் தீர்த் தங்களை உண்டாக்கினார்கள். தலத்திற்கும் அவர்கள் பெயர் கள் அமைந்தன. அமுதத்தின் திவலைகளே வில்வமரங்களாகத் தோன்றின. தலவிருட்சமாகக் கொன்றையும் திகழ்கிறது. விநாயகர், கங்கை, காவேரி, சாண்டிலியர், ஆதிசேடன், இடைக் காடர், பிரமன், பிருகுமுனிவர், காசிபர், மார்க்கண்டேயர், கண்ணுவர், அகத்தியர், வசிட்டர், வாமதேவர் முதலியோரும் வில்வவனப் பெருமானை வழிபட்டார்கள். விண்ணோர் போற்றும்படியான இத்தலத்திற்கு வந்து தீர்த்தங்களில் நீராடி வழிபடுவோர் காசிக்குச் சென்று கங்கையில் நீராடிய பயனை அடைவர். பல கல்வெட்டுக்களையுடையது இத்தலம். கல்வெட்டுக் களால் திருக்கொள்ளம்பூதூராகிய இத்தலம் அருள்மொழி தேவ வளநாட்டுச் சோற்றூர்க் கூற்றத்தைச் சார்ந்தது என்பதும், இக்கோயிலுக்குச் சோழ மன்னர்களும், அவர்தம் அதிகாரிகளும், பொதுமக்களும் அவ்வப்போது நிலமும் பொருளும் வழங்கிப் போற்றி வந்துள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

சுவாமி: வில்வவனேசுரர்
அம்பிகை: சௌந்தராம்பிகை.
தீர்த்தம்: பிரமதீர்த்தம்.

வியன்கொள்ளம் பூதூர் வில்வவன நாதர்
நயம்பெறு சவுந்தர நாயகி பிரமம். (சிவ.)

கொட்ட மேகமழும் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

குடமூக்கிலுள்ளார் போய்க் கொள்ளம்பூதூர்த் தங்குமிட மறியார்—கோயில். திருநா.
கொள்ளமாகிய கோயிலுளானையார்—கடவூர். திருநா.
கொடுமுடி குற்றாலங் கொள்ளம்பூதூர்—பொது. திருநா.

115. திருக்கொள்ளிக்காடு. (சோழநாடு)

இத்தலம் ஆலத்தம்பாடியிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

அக்கினி பூசித்த தலம். சனிபகவான் சந்நிதி விசேடம். இவ்வூரில் சந்நிதிக்கெதிரில் மயானம் உண்டு. மேற்குப்பார்த்த சந்நிதி.

கொள்ளிகொளுத்த—கொள்ளிக்காடு
வெள்ளிமுளைக்க—தெங்கூர்
நெல்லிக்காய்க்க—நெல்லிக்கா.

சுவாமி: அக்னீசுவரர், தீவண்ணநாதர்.
அம்பிகை: பஞ்சினுமெல்லடியம்மை.
தீர்த்தம்—அக்கினி தீர்த்தம்

அயில்கொள்ளிக் காடு அக்கினி நாதர்
மயில்பஞ்சின் மெல்லடி மகிழ்சுடர் தீர்த்தம். (சிவ.)

நிணம்படு சுடலையான் நீறு பூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர் மாநடம்
உணங்கல் வெண்டலைதனில் உண்ப ராயினும்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக் காடரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும்தேவாரப்பாடல்.
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக்காடு—பொது. திருநா.

116. கோகர்ணம் (துளுவ நாடு)

இத்தலம் ஹுப்ளியிலிருந்து 94 மைல் தொலைவில் உள்ளது. பேருந்து வசதியுண்டு. வழி நெடுகத் தேக்குமரக் காடுகளும், மலைச்சரிவுகளும் இயற்கை வனப்புமிக்க சோலைகளும் உள்ளன.

இராவணன் கொண்டு வந்த லிங்கத்தை விநாயகர் ஓர் உபாயத்தால் பெற்றுப்பிரதிஷ்டை செய்த தலம். இராவணனால் பெயர்க்க முடியாமையால் ''மகாபல லிங்கம்'' என்று சொன்னான். இலிங்கம் பசுவின் காது போல் குழைந்து நீண்டிருப்பதால் கோகர்ணம் (பசுவின் காது). இராவணனைப் பந்தாடின த்விபுஜ விநாயகர் தனிக்கோயிலில் இருக்கின்றார். மிகவும் அழகான மூர்த்தி.

சிவராத்திரி அன்று கோடி தீர்த்த ஸ்நானமும் தரிசனமும் விசேடம். மேற்குப் பார்த்த சந்நிதி. எல்லோரும் சுவாமிக்கு அபிடேகம் செய்யலாம். ஸ்தலமான்மியம் அச்சாகியிருக்கிறது. சரசுவதி பூசித்த தலம்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி: மகாபலநாதர், மகாபலேசுவரர், ஆத்மலிங்கேசுவரர்
அம்பிகை: கோகர்ணநாயகி, தாம்ரகௌரி.
தீர்த்தம்: கோடி தீர்த்தம்.

கோகர் ணந்திருக் கோகர்ண நாதர்
கோகர் ணநாயகி கோகர்ண தீர்த்தம். (சிவ.)

சந்திரனும் தண்புனலும் சந்தித் தான்காண்
தாழ்சடை யான்காண் சார்ந்தார்க் கமுதா
னான்காண்
அந்தரத்தில் அசுரர்புரம் மூன்றட் டான்காண்
அவ்வுருவில் அவ்வுருவ மாயி னான்காண்
பந்தரத்து நான்மறைகள் பாடி னான்காண்
பலபலவும் பாணி பயில்கின் றான்காண்
மந்திரத்து மறைப்பொருளு மாயி னான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே.

(திருநா. 6-ஆம் திரு.)

என்றும் அரியான் அயலவர்க்கு இயல் இசைப்
பொருள்கள் ஆகி எனது உள்
நன்றும் ஒளியான் ஒளி சிறந்த பொன்முடிக் கடவுள்
நண்ணும் இடமாம்

ஒன்றிய மனத்து அடியார்கூடி இமையோர் பரவும்
நீடு அரவம் ஆர்
குன்றுகள் நெருங்கிவிரி தண்டலை மிடைந்து
வளர் கோகரணமே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

குற்றாலங் கோகரண மேவினானை—பூந்துருத்தி.திருநா.
குடமூக்குங் கோகரணங் கோலக்காவும்—அதிகை.திருநா.
கோலக்கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களால் பயனென்
—பொது. திருநா.

117. கோடி. (சோழநாடு)

கோடி எனப்படும் குழகர் கோயில் அகத்தியான் பள்ளி யிலிருந்து தெற்கே ஏழுமைல் தூரத்தில் உள்ளது. இது கடற் கரையிலுள்ள க்ஷேத்திரம். கோடிக்கரை எனவும் வழங்கப்படு கிறது.

பாற்கடலிலிருந்து கிடைத்த அமிர்தத்தைத் தேவர்கள் பருகி மீதியை வாயுதேவனிடம் கொடுக்க அவர் எடுத்து ஆகாய வழியாகச் செல்லுகையில் அது பூமியில் விழுந்து லிங்கரூபமாய் இங்குத் தோன்றியது. அது பற்றியே சுவாமிக்கு அமிர்தகடேசர் என்ற பெயர் உண்டாயிற்று. இங்குக்கோயில் பிராகாரத்திலுள்ள கிணற்றிற்கு அமிர்த தீர்த்தம் என்று பெயர். இக்கோயிலி லுள்ள சுப்பிரமணிய விக்கிரகம் மிக அழகானது. குழகர் கோயிலில் ஓரிடத்தில் வெட்டியபோது சில விக்கிரகங்கள் கிடைத் தனவாம். இது பற்றிய விவரம் சுதேசமித்திரன் வாரப்பத்திரி கையில் படங்களுடன் ஐயரவர்கள் காலத்தில் வெளியாகியிருக் கிறது. சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி பெயர்: அமிர்தகடேசுவரர்
அம்பிகை பெயர்: மையார் தடங்கண்ணி
தீர்த்தம்: அமுத தீர்த்தம்.

இங்குள்ள சுப்பிரமணியருக்கு ஒரு முகமும் ஆறு கைகளும் இருக்கின்றன. சுப்பிரமணியர் கோயிலுக்கருகிலுள்ள மணல் மேட்டில் இராமருடைய பாதம் சிலையில் இருக்கிறது. அங் கிருந்து இராவணனுடைய நகரத்தைப் பார்த்ததாக ஐதிஹ்யம்.

கடவுள் கோடிக் கரைசே ரமுத
கடேசர்மை யார்தடங் கண்ணி அமுதம் (சிவ.)

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டனகோ டிக்குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

மறைக்காட்டுக் கோடி மகிழ்ந்தார் போலும்—சாய்க்காடு. திருநா.
கோடியான் கண்டாய் குழகன் கண்டாய்—மறைக்காடு. திருநா.

118. திருக்கோடிகா. (சோழநாடு)

திருவிடை மருதூரிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ளது. கோடி முநிவர்கள் பூசித்த தலம். உருத்திரர் பூசித்த தலம். காவிரியின் வடபால் உள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் பாடிய தலம்.

சுவாமி: திரிகோடீசுரர்
அம்பிகை: வடிவாம்பிகை.
தீர்த்தம்: காவிரி. (சிருங்க தீர்த்தம்; குளம்)

திருக்கோடி காவல் சிவன்கோ டீசர்
மருக்கமழ் வடிவுள மங்கை அகத்தியர். (சிவ.)

நெற்றிமேற் கண்ணி னானே நீறுமெய் பூசி னானே
கற்றைப்புன் சடையி னானே கடல்விடம் பருகினானே
செற்றவர் புரங்கள் மூன்றும் செவ்வழல் செலுத்தி
னானே
குற்றமில் குணத்தி னானே கோடிகா வுடைய கோவே.

(திருநா. 4-ஆம் திரு.)

இன்று நன்று நாளைநன்று என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போது
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல் [மின்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கோடிகா மேயகுழகா வென்றும்—நெய்த்தானம். திருநா.
கொள்ளுமிலயத்தார் கோடிகாவுங்—அதிகை. திருநா.
கோவல் வீரட்டங் கோகர்ணம் கோடிகாவும்—பொது. திருநா.
கோலக்காவானைக் காவியன் கோடிகா—பொது. திருநா.

119. திருக்கோட்டாறு. (சோழநாடு)

திருக்கொட்டாரம் என வழங்குகிறது அம்பகாத்தூர் இரயில்வே நிலையத்திற்கு வடகிழக்கு 10 மைல் தொலைவில் உள்ளது. வெள்ளையானை பூசித்த தலம். வாஞ்சியாறு என்று ஒன்று உண்டு. இது அபிடேகத்தின் பொருட்டு ஐராவதத்தின் கொம்பால் கிழித்து உண்டாக்கியது. இவ்வூரிலிருந்து இரண்டு மைல் தொலைவில் 'இளையான்குடி' என்னும் ஊர் இருக்கின்றது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: ஐராவதேசுவரர்
அம்பிகை: வண்டமர் பூங்குழலம்மை
தீர்த்தம்: சூரிய தீர்த்தம்.

அண்டர்சேர் கோட்டா றயிரா பதேசர்
வண்டமர் பூங்குழல் மாதுமை சூரியன். (சிவ.)

கருந்த டங்கண்ணின் மாத ராரிசை
செய்யக் காரதிர் கின்ற பூம்பொழில்
குருந்த மாதவியின் விரைமல்கு கோட்டாற்றில்
இருந்த எம்பெரு மானை யுள்கி
இணைய டிதொழு தேத்தும் மாந்தர்கள்
வருந்து மாறறியார் நெறிசேர்வர் வானுடே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு—பொது. திருநா.
நள்ளாறும் பழையாறும் கோட்டாற்றொடு—பொது.
திருநா.

120. கோட்டூர். (சோழநாடு)

மன்னார்குடி இரயில்வே நிலையத்திலிருந்து தென்கிழக்கே பத்து மைல் தொலைவில் உள்ளது.

இந்த ஊரில் இரண்டு கோயில்கள் உள்ளன. மேற்கே உள்ளது. தேவாரம் பெற்றது. கிழக்கே உள்ளது திருவிசைப்பா பெற்றது. கீழ்க்கோட்டூர் மணி அம்பலம் என்று திருவிசைப்பா கூறும். தேவர்களும் குச்சர ரிஷியும் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. தேவி சந்நிதி கிழக்கு நோக்கியது.

சுவாமி: கொழுந்தீசர்
அம்பிகை: மதுரவசனாம்பிகை, தேன்மொழிப்பாவை.
விருட்சம்: வன்னி.

ஐராவதேசுரர் அகத்திய நதி. குள்ளனாறு பொய்கை)
திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

கோட்டூர் தனில்வாழ் கொழுந்தீ சுவரரெம்
பிராட்டி மதுர வசனிசீ ரமிர்தம். (சிவ.)

நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே
யொற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள்
சூழ்ந்தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற் கொழுந்தே
யென்றெழுவார்கள்
சால நீள்தல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர்
பாங்காலே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கொடிமாட நீடெருவு கூடல் கோட்டூர்—புறம்பயம். திருநா.
கோட்டூர் திருவாமாத்தூர் சோழம்பமும்—பொது. திருஞா.
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூரரசே.—பொது.சு.

121. திருக்கோணமலை. (ஈழநாடு)

தலைமன்னார் பியரிலிருந்து மதவாச்சி மாஹோ ஐங்ஷன்கள் வழியாக 221 மைல் தொலைவில் உள்ளது. இலங்கையில் கீழ்க்கடற்கரையிலுள்ளது. பழைய கோயில் போர்த்துகீசியரால் இடித்து விடப்பட்டது. இப்பொழுது கடலின் உள்விருக்கும் பாறைக்கே வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு நடக்கிறது. இராமேசுவரத்திலிருந்தே சம்பந்தர் இத்தலப்பதிகம் பாடினார். தேவேந்திரன் முதலியோர் பூசித்தது. தக்ஷிணகைலாசம் என்ற ஒரு பெயரும் உண்டு. ஈழநாட்டரசர் சிங்கை ஜகராஜசேகரர் இயற்றிய தக்ஷிணகைலாச புராணம் ஒன்று உண்டு. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: கோணேசுரர்
அம்பிகை: மாதுமையாளம்மை

கோண மாமலை கோணநா தச்சிவன்
கோண நாயகி கோண தீர்த்தம். (சிவ.)

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்.
கோணமா மலையமர்ந் தாரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

குறிப்பு: திருக்கோணமாமலை என்றும், திருக்கணாமலை என்றும் வழங்குவர். இது தட்சிணகைலாசம் மூன்றனுள் ஒன்று.

122. (திருக்)கோயில். (சோழநாடு)

(திருக்)கோயில் என்பது சிதம்பரத்தலத்தைக் குறிக்கும். சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருத்

தலங்களில் முதன்மையானதும் தொன்மையானதுமாகும் கோயில் என்கிற சிதம்பரம்.

ரயில் நிலையம் உள்ளது. ரயில் நிலையத்திற்கு மேற்கே சிதம்பரத் தலமும் கிழக்கே அண்ணாமலைப் பல்கலைக்கழகமுள்ள அண்ணாமலை நகரும் உள்ளன. திருப்பாதிரிப்புலியூருக்கும் மாயூரத்திற்கும் இடையேயுள்ள தலம்.

இத்தலம் உலகமாகிய விராட்புருடனுக்கு இருதய தாமரையாகத் திகழ்கின்ற காரணத்தால் புண்டரீகபுரம் என்னும் பெயருடையது. பஞ்ச பூதத்தலங்களுள் பொன்னம்பலம் எனப்பெறும் ஆகாசத்தலமாகும். ஐந்து சபைகளில் இதனைக் கனகசபை என்பர். பிறந்தாலும் இறந்தாலும் தரிசித்தாலும் முத்தியளிக்கும் திருத்தலமாக விளங்கும் பெருமை வாய்ந்தது. மகாசிவலோகம், பூலோக கயிலாயம், பொன்னம்பலம், சிற்றம்பலம், புலியூர், பெரும்பற்றப்புலியூர், தில்லைவனம், சிதாகாச க்ஷேத்திரம் என்ற பல திருப்பெயர்களுண்டு. இவ்வாலயத்தில் சிற்சபை, கனகசபை, நிருத்தசபை, தேவசபை, இராசசபை ஆக, ஐந்து திருச்சபைகள் உள்ளன. பொற்சபை இரணிய வர்மனாலும் முதலாம் பராந்தக சோழனாலும் பேரம்பலம் அநபாய மன்னனாலும் பொன்வேயப் பெற்றன என்பர்.

தலத்திற்குரிய தீர்த்தம் ஆலயத்திலுள்ள சிவகங்கையாகும். சிற்றம்பலத்தின் கண்ணே கூத்தப் பெருமான் ஆனந்தத் திருநடனம் புரிகின்றார். அத்திருநடனத்திருக்கோலம் ஓமெனும் எழுத்தின் வடிவுடையதும் ஐந்தொழிலையும் அறிவிப்பதுமாகும். அங்கு ஸ்படிகலிங்கமூர்த்தியும் இரத்தினசபாபதியாகிய மரகத நடராச மூர்த்தியும் எழுந்தருளியிருக்கின்றனர். ஸ்படிகலிங்க மூர்த்தி அழகிய சிற்றம்பலமுடையார் என வழங்கப்பெறுகின்றார். ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு வலது புறத்தில் சிதம்பர ரகசியம் உள்ளது. அதில் மந்திர சொரூபமாகிய திருவம்பலச் சக்கரம் அமைக்கப் பெற்றுள்ளது. இங்கு நடராசப்பெருமான் சகளத்திருமேனியாகவும், ரகசியம் நிட்களத்திருமேனியாகவும் ஸ்படிக லிங்க மூர்த்தி சகளநிகளத் திருமேனியாகவும் எழுந்தருளியிருப்பதாக நூல்கள் இயம்புகின்றன. பெருமானின் இடப்பக்கத்தில் சிவகாமி அம்மையும் சுவர்ணகாலபைரவரும் காட்சியளிக்கின்றனர்.

பொன்னம்பலத்தின் வடபால் சுயம்புமூர்த்தியாகிய திருமூலட்டானேசுவரரும் பார்வதியம்மையாரும் எழுந்தருளி

யுள்ளனர். வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் பூசித்துப் பேறுபெற்றதலம்.

ஆலயத்தில் கற்பகவிநாயகர், முக்குறுணிவிநாயகர் பாண்டிய நாயகம், சிவகாமியம்மையார் சந்நிதிகள் தனித்தனியே யுள்ளன. நவலிங்கம் எனப்பெறும் நவக்கிரகக் கோயிலும் உள்ளது.

இத்தலம் மூவர் தேவாரத்திருப்பதிகங்களையும் கொண்டது. 11 திருப்பதிகங்களில் ஞானசம்பந்தர் பாடியவை. 2. திருநாவுக்கரசர் பாடியவை 8 சுந்தரர் பாடியது—1.

மாணிக்கவாசகர், திருமாளிகைத் தேவர், சேந்தனார் ஆகிய மூவரும் பாடியுள்ளனர். குமரகுருபரர் சிதம்பரமும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ஆகிய மூன்றையும் இயற்றியுள்ளார். தல சம்பந்தமான இன்னும் பலநூல்களுண்டு.

கோவிந்தராசர் சந்நிதியும் இங்கே அமைந்துள்ளது. ஓரே காலத்தில் நடராசரையும் கோவிந்தராசரையும் தரிசிக்கலாம்.

ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு ஆண்டில் ஆறு காலந்தான் அபிடேகம் நடைபெறும். இது சம்பந்தமான பாடல் வருமாறு:

சித்திரையில் ஓணமுதல் சீரான உத்திரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும்—பத்திவளர்
மாசியரி கன்னி மருவுசதுர்த் தசிமன்று
ஈசர்அபி டேகதின மாம்.

ஆனித்திரு மஞ்சனமும் மார்கழித் திருவாதிரையன்றும் ஆயிரக்கால் மண்டபத்தில் விடியற்காலத்தில் அபிஷேகமும் பகலில் தரிசனமும் கண்கொள்ளக்காட்சிகளாகும். சித்திரை, ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் நடராசர் சந்நிதிக்கருகிலுள்ள மண்டபத்தில் மாலை 6 முதல் 9 வரை அபிடேகம் மிகச் சிறப்பாக நடக்கும். இவ்வபிடேகங்கள் தரிசித்தல் மிகவிசேடம். இத்தலத்தில் அர்த்தயாமதரிசனம் மிகவும் விசேடமுடையது. தில்லைவாழந்தணர்களாகிய தீட்சிதர்கள் இக்கோயில் நிர்வாகத்தைத் திறம்படச் செய்துவருகின்றனர்.

தேவாரப் பதிகங்கள் இத்தலத்திலேதான் கண்டெடுக்கப் பட்டன என்பது அனைவருக்கும் தெரியும்.

குறிப்பு:

டாக்டர் ஐயரவர்கள் 1924 முதல் 1927 ஆம் ஆண்டு வரை சிதம்பரம் தெற்கு வீதியில் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க் காலேஜில் தலைவராக இருந்து தமிழ்மாணாக்கர்கட்குப் போதித்து வித்துவான்களாகச் செய்ததோடு, தினந்தோறும் ஆனந்த நடராசமூர்த்தியின் அருட்பிரஸாதம் பெற்று இன்புற்றார். மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், வி.மு. சுப்பிரமணிய ஐயர், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், சிவப்பிரகாச தேசிகர் முதலிய பலர் அவரிடம் இக்கல்லூரியில் படித்த சிறந்த மாணாக்கர்களாவர்.

கோயில் என்றால் சிதம்பரத்தைக் குறிக்கும். வைணவர் கட்குக் கோயில் என்றால் ஸ்ரீரங்கம் என்பர். மிகப் பழங்காலத்தே இது தில்லை வனமாயிருந்தது.

புகழ்பெறு சிதம்பரம் புனிதர் சபாபதி
திகழ்சிவ காமி சிவகங்கை தீர்த்தம்.

திருமூலட் டானந் திருமூல நாதர்
பரையுமை யம்மை பரமா னந்தம். (சிவ.)

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

திருஞா. 1-ஆம் திரு.)

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

(திருநா. 5-ஆம் திரு.)

மடித்து ஆடும் அடிமைக்கண் அன்றியே மனனே
நீவாழும் நாளும்
தடுத்து ஆட்டி தருமனார் தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்

கடுத்து ஆடும் கரதலத்தில் தமருகமும் எரி அகலும்
கரிய பாம்பும்
பிடித்து ஆடி புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றும் அன்றே.
(சுந்தரர்).

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

தில்லை நடமாடும் தேவர் போலும்—திருச்சாய்க்காடு.
திருநா.
தில்லையம்பலத்துண்ணிறைந்தாடுங் கூத்தனை—
திருக்கோலக்கா. சு.
தில்லையம்பலத்திலுறை செல்வனார்—திருக்கோடிகா.
திருநா.
அணியார் தில்லையம்பலத்துள்நடமாடுமழகன்—
புள்ளிருக்குவேளூர். திருநா.
முதுமதி தவழ் பொழிற்றில்லை மன்றிலாடலதுடையார்—
வாள்கொளிபுத்தூர். திருஞா.
புலியூர் சிற்றம்பலத்தே நடமாடுவர்—வீழிமிழலை. திருநா.
பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பாழியார்—வீழிமிழலை
திருநா
செங்காட்டங்குடியான் சிற்றம்பலத்தான் கானூரான்—
செங்காட்டங்குடி. திருஞா.
பெரும்பற்றத் தண்புலியூர் பேணினானை—
நாகைக்காரோணம். திருநா.
மாளிகைகண்மல்கு தில்லை மணிகிகழுமம்பலத்தே
மன்னி—திருவாரூர். திருநா.
வானவர் தொழக் கூத்துகந்த பேரம்பலத்துறைவாய்—
திருக்களர். திருஞா.
பெரும்பற்றத் தண்புலியூர் மன்றாடிகாண்—திருப்புத்தூர்.
திருநா.
தில்லைச் சிற்றம்பலமேயாய் போற்றி—திருவதிகை.
திருநா.
ஆட்டங்கொண்டார் தில்லைச் சிற்றம்பலத்தே
—திருநாவலூர். சு.
பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப்புலியூர்—இடையாறு.
சு.
அம்பலமும் கோயிலாக் கொண்டார்தாமே—
திருவாலங்காடு. திருநா.

ஆரூர் தில்லையம்பலம் வல்ல நல்லம்—
க்ஷேத்திரக்கோவை—பொது. திருஞா.
சிற்றம்பலத்தெந்திகழ் கனியைத் தீண்டற்கரிய—பொது.
திருநா.
தில்லைச்சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி—பொது.
திருநா.
பெரும்பற்றப்புலியூரும் பேராலூரும்—பொது. திருநா.
அணிதில்லை யம்பலமாடரங்காக்கொண்ட—பொது.
திருநா.
தேங்கூருந் திருச்சிற்றம்பலஞ்சிராப்பள்ளி—பொது.சு.
புலியூர்ச் சிற்றம்பலத்தாய் புகலூர்ப்போதா—பொது.
சு.

123. திருக்கோலக்கா (திருத்தாளமுடையார் கோயில்)
(சோழநாடு)

சீகாழி கோயிலுக்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. ஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற தலம். ஞானசம்பந்தருக்கு இறைவன் நல்கிய இரண்டு பொற்றாளங்களுக்கு ஓசை கொடுத்தனள் ஆதலின் இத்தலத்து அம்பிகைக்கு ஓசை கொடுத்த நாயகி என்றும் இத்தலத்திற்குச் சப்தபுரியென்றும் பெயர். திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி: சத்தபுரீசுரர், சப்தபுரிநாதர்
அம்பிகை: ஓசைகொடுத்த நாயகி
தீர்த்தம்: சூரிய தீர்த்தம்.
மாசில் கோலக்கா வருஞ்சத்த புரியார்
ஓசை கொடுத்த உமையவள் சூரியன். (சிவ.)

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவ மென்கொலோ.

(திருஞா. 1-ஆம் திரு.)

குறிப்பு: இப்பதிகத்தினைக் கையினால் தாளவொத்து அறுத்துப்பாடுதலைக் கண்ட இறைவன் அருள்புரிந்து அஞ்செழுத்து எழுதிய செம்பொற்றாளம் அருளினன் ஆகையால் திருத்தாளம் உடையார் கோயில் எனவும் இதனை வழங்குவர்.

புற்றில் வாள்அரவு ஆர்த்த பிரானை,
பூதநாதனை, பாதமே தொழுவார்
பற்று வான்துணை எனக்கு எளிவந்த
பாவநாசனை மேவ (அ)ரியானை
முற்றலார் திரிபுரம் ஒரு மூன்றும்
பொன்ற வென்றி மால்வரை அரி அம்பா,
கொற்ற வில் அம்கை ஏந்திய கோனை,
கோலக் காவினில் கண்டு கொண்டேனே.

(சுந்தரர்)

நாளுமின்னிசையாற்றமிழ் பரப்பு
ஞானசம் பந்தனுக்குலகவர் முன்
தாளமீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மையாளனை யெண்மனக்கருத்தை
ஆளும்பூதங்கள் பாடநின்றாடு
மங்கணன்றனை யெண் கணமிறைஞ்சுங்
கோளிலிப்பெருங்கோயிலுளானைக்
கோலக்காவினிற்கண்டு கொண்டேனே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

குடமூக்கும் கோகரணம் கோலக்காவும்—திருவதிகை. திருநா.
கொண்டதோர் கோலமாகிக் கோலக்காவுடைய கூத்தன்—கச்சியேகம்பம். திருநா.
கோலக்காவிற் குருமணியைக் குடமூக்குறையும் விடமுண்ணியை—பொது. திருநா.
கோலக்கா வானைக்காவியன் கோடிகா—பொது. திருநா.

124. திருக்கோவலூர் வீரட்டம். (கீழூர்) (நடுநாடு)

இது பெண்ணையாற்றின் தென்கரையில் இருக்கின்றது. அந்தகாசுரனைச் சங்கரித்த வீரட்டம். மெய்ப்பொருள்நாயனார்

அரசுபுரிந்து முத்தியடைந்த தலம். இது மேலூர், கீழூர் என்று இருபகுதிகளையுடையது. சிவாலயம் கீழூரிலிருக்கிறது. மேற்குப் பார்த்த சந்நிதி. தேவி கோயில் தனியாக இருக்கிறது. கோவ லெனவும் வழங்கும். தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது. மெய்ப்பொருள்நாயனார் அவதரித்த தலம். மேலூரில் திரிவிக் கிரமப் பெருமாள் கோயிலுள்ளது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி: வீரட்டேசுரர்.
அம்பிகை: சிவாநந்தவல்லி.
தீர்த்தம்: பெண்ணைநதி.

மெய்த்திருக் கோவலூர் வீரட் டேசர்
உத்தமி சிவானந்த உமையவள் பெண்ணை. (சிவ.)

செத்தையேன் சிதம்ப நாயேன் செடியனேன் அழுக்குப் பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிடம் அறிய மாட்டேன்
எத்தைநான் பற்றி நிற்கேன் இருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வ தென்னே கோவல்வீ ரட்ட வீரே.

(திருநா. 4-ஆம் திரு.)

படைகள் கூற்றம் வந்து மெய்ப்பாசம் விட்ட போதின்கண்
இடைகொள்வார் எமக்கிலை எழுகபோது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன் கோவலூர் தனுள்
விடை அது ஏறும் கொடியினான் வீரட்டானம் சேர்துமே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கோவலூர் வீரட்டங் கோயில் கொண்டார்—வீழிமிழலை. திருநா.
கோவலூர் குடவாயில் கொடுமுடி—பூவனூர்—திருநா.
கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டூர்—பரங்குன்றம். சு.
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய்நல்லூர்—அதிகை. திருநா.
கோட்டங் கொண்டார் குடமூக்கிலுங் கோவலுங் கோத்திட்டையும்—நாவலூர். சு.
கொடுங் கோவலூர் திருக்குணவாயில்—பொது. திருஞா.
கொல்லிக் குளிரறைப்பள்ளி கோவல்—பொது. திருநா.
கோவனகர் வீரட்டம் குறுக்கை வீரட்டம்—பொது. திருநா.
கூழையேறு கந்தானிடங் கொண்டதும் கோவலூர்—பொது. சு.

125. திருக்கோழம்பம். (சோழநாடு)

நாரசிங்கன் பேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து தென் கிழக்கே இரண்டு மைல்தொலைவில் உள்ளது.

சந்தன் என்னும் வித்யாதரன் தேவேந்திரனால் குயிலாய்ப் போம்படி சாபம் பெற்று, அநேக நாள் கழித்து இங்குவந்து பூசித்து அவ்வுருமாறிப் பழைய ரூபம் பெற்ற தலம்.

லிங்கம் பசுவின் குளம்பின் கீழ் அகப்பட்டதால் மாட்டின் குளம்பு லிங்கத்தின் உச்சியில் வடுவாகக் காணலாம். இதற்குக் கோகுலாபுரம் என்ற ஒரு பெயருண்டு. குயில் பூஜித்துப் பேறு பெற்றமையின் இப்பெயர். கருப்பக்கிரகம் முதலியவற்றின் புறச்சுவரில் பல உருவங்கள் உள்ளன. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி: கோகிலேசுரர்
அம்பிகை: சௌந்தரநாயகி
தீர்த்தம்: மதுதீர்த்தம்.

கோழம் பங்கோகி லேசுரர் பங்கில்
வாழும் சௌந்தரி மாதுதேன் தீர்த்தம். (சிவ.)

நீற்றானை நீள்சடை மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென்முலை யாளையோர்

கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்பம் மேவிய
ஏற்றானை ஏத்துமின் நும்மிடர் ஏகவே.

(திருஞா .2-ஆம் திரு.)

வேழம்பத்து ஐவர் வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றி வீழ்வார் பல ஆதர்கள்
கோழம்பத்து உறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கொடுமழுவர் கோழம்ப மேயவீசர்—இடைமருதூர். திருநா.
கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமும்—பொது. திருஞா.
கோட்டூர் குடமூக்குக் கோழம்பமும்—பொது. திருநா.

126. திருக்கோளிலி (திருக்குவளை) (சோழநாடு)

திருவாரூருக்குத் தென்கிழக்கே 12 மைல் தொலைவில் உள்ளது இத்தலம். குண்டையூரில் பெற்ற நெல்லை ஆரூரிற் பெறச் செய்த அற்புதம் நடந்த இடம். குண்டையூர் இங்கிருந்து 3 மைல். சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள தியாகராச மூர்த்திக்கு அவனிவிடங்கர் என்பது திருநாமம். நடனம்: பிருங்க (வண்டு) நடனம்.

சுந்தரருக்கு நெல் அளித்த தலம்; பிரமன் பூசித்த தலம். அகத்தியர் பூசித்த லிங்கம் பிராகாரத்திலுள்ளது. பீமன் பகாசுரனைச் சம்ஹரித்த ஹத்தியை இங்குத் தீர்த்துக் கொண்டான். பகாசுரன் உருவமும் முன்கோபுரத்திலுள்ளது. மதுரையை தரிசிக்க விரும்பிய குண்டையூர் கிழாருக்குத் தரிசனம் கொடுத்த தலம். மூவரும் பாடிய தலம்.

பிறபெயர்கள்: பிரமதபோவனம். அவனிவிடங்கத் தலம்.

கதகாரண்யம் (தேற்றுமரவனம்) புஷ்பவனம்) தென்கயிலை, நவக்கிரகங்களின் குற்றங்களை நீக்கி அருள்புரிந்ததால் கோளிலி தலப்பெயர். பெருங்கோயில்: (கோயிற் பெயர்.) இரண்டாம்

பிராகாரம், உட்கோபுரம் சிற்பவேலை அமைந்தது. நவக்கிரகங்கள் ஒருமுகமாக உள்ளன. சண்டீசுரர் மூன்று உருவங்கள்.

ராசேந்திர சோழவளநாட்டு இடையள நாட்டு வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக் கோளிலி.

திருக்கோளிலி நாதருலா என்ற நூல் உண்டு. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

சுவாமி: சுந்தரேசர்.
அம்பிகை: மீனாட்சியம்மை.

கோளிலி கோளிலி கோமான் றியாகர்
நீள்வண் டமர்பூங் குழல்நிறை பிரமம். (சிவ.)

முன்ன மேநினை யாதொழிந் தேனுனை
இன்னம் நானுன சேவடி ஏத்திலேன்
செந்நெ லார்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன-னேஅடி யேனை மறவலே.
(திருநா. 5-ஆம் திரு.)

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடு படாத்திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே.
(திருஞா. 1-ஆம் திரு.)

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்
பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

எண்கண மிறைஞ்சுங் கோளிலிப்பெருங் கோயிலுளானை—
கோலாக்கா. சு.

127. திருச்சக்கரப்பள்ளி (சோழ நாடு)

ஐயம்பேட்டை இரயில்வே நிலையத்திலிருந்து முக்கால் மைல் தொலைவு. இந்திரன்குமாரனான ஐயந்தனும் தேவர்களும் பூசித்த தலம். விஷ்ணு பூசித்துச் சக்கரம் பெற்றார் (தேவாரம்). விநாயகர் முதலிய விக்கிரகங்கள் அற்புதம். அம்பிகை சக்கரவாகப்புள்ளாக வந்து பூசித்த தலம். சப்த தலங்களுள் முதன்மைத்து. சக்கரப்பள்ளி (பிராமி) அரிமங்கை (மாகேசுவரி) குலமங்கை (கௌமாரி) நந்திமங்கை (வைஷ்ணவி) பசுபதிமங்கை வாராகி) தாழைமங்கை. (மாகேந்திரி) புள்ளமங்கை (சாமுண்டி.) திருஞானசம்பந்தர் பாடியதலம்.

சுவாமி: ஆலந்துறையீசுரர் (சக்ரவாகேசுரர்).
அம்பிகை: அல்லியங்கோதை (தேவநாயகி)

நல்லசக் கரப்பள்ளி நவிலாலந் துறையார்
அல்லியங் கோதை அகமகிழ் காகம். (சிவ.)

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்கள்:

வண்சக்கரமால் உறைப்பாலடி போற்றக் கொடுத்த பள்ளி—பொது. திருஞா.

சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்கரப்பள்ளி—பொது. திருநா.

128. திருச்சத்தி முற்றம் (சோழநாடு)

தாராசுரம் இரயில்வே நிலையத்திற்குத் தென்மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது. பராசத்தி சுவாமியைத் தழுவி முத்தமிட்ட தலம். இந்நிகழ்ச்சியை உணர்த்தும் திருவுருவம் கோயிலில் உள்ளது. அம்பிகை செய்த பூசையை சுவாமி விரும்பி ஏற்றுக் கொண்டு திருவருள் புரிந்த தலம்.

''மட்டார் குழலிமலைமகள் பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சத்தி முற்றுத் துறையும் சிவக்கொழுந்தே''

என்பது தேவாரம். திருநாவுக்கரசர் திருவடிதீக்ஷை செய்தருளு மாறு விண்ணப்பித்த தலம். இத்தலத்தில் வேண்டிய திருவடி தீக்ஷை அவருக்குத் திருநல்லூரில் கிடைத்தது இத்தலமும் பட்டீச்சுரமும் சோழ அரசர்களுடைய அரண்மனையிருந்த இடத்தின் பக்கத்தன. பட்டீச்சுரமும் சத்திமுற்றமும் நெருங்கி யிருக்கின்றன. பட்டீச்சுரத்தின் வடக்கு வீதியே இத்தலத்தின் தெற்கு வீதியாக உள்ளது. ''நாராய் நாராய் செங்கால்நாராய்'' என்ற தொடக்கத்தையுடைய ஓர் அகவலைப் பாடிய சத்தி முற்றப் புலவரென்ற சிறந்த தமிழ்க் கவிஞர் மிக்க செல்வாக் கோடு இருந்து விளங்கிய இடம் இத்தலமேயாகும்.

''எம்மூர்ச் சத்தி முற்றத்து வாவியுள் தங்கி'' என அச் செய்யுளிற் குறிக்கப்பட்ட வாவி இப்பொழுதும் இத்தலத்துச் சிவலாயத்தின் தென்புறத்தே நல்ல நிலைமையில் உள்ளது. திருநாவுக்கரசர் பாடியதலம். தாராசுரம். ஐராவதேசுவரர் (வலஞ்சுழி) அம்பிகை கோயிலின் பின் பத்ரகாளி. அம்பிகை பெரிய நாயகி. இடப்பக்கம் கோயில். அதன் தீர்த்தம் யம தீர்த்தம். நடராசர் விசேஷம். உட்பிராகாரத்தில் நிருதிமூலை யில் விநாயகருக்கு வடக்கே முறையே யமனும் சாஸ்தாவும் கிழக்கு நோக்கியுள்ளனர். சரப மூர்த்தி. தக்ஷிணாமூர்த்தி கிழக்கு. எண்காற்புள் பூசித்த தலம்.

சுவாமி : சிவக்கொழுந்தீசர்.
அம்பிகை : பெரியநாயகியம்மை.
தீர்த்தம் : சூலதீர்த்தம்.

திருச்சத்தி முற்றம் சிவக்கொழுந்தீசர்
அருட்செறி பெரியநாயகிசூல தீர்த்தம். (சிவ.)

கோவாய் முடுகி யடுதிறற்கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய் முழங் குந்தழற்கைத்
தேவாதிருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே.

(திருநா. 4-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:
முழையூர் பழையாறைசத்திமுற்றம்—பொது. திருநா.

129. சாத்தமங்கை (சோழநாடு)

திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. திருநீலநக்கநாயனார் தொண்டு புரிந்த தலம். இத் தலம் மங்கை யென்றும் வழங்கும். ஆலயத்தின் பெயர் அயவந்தி. திருநீலநக்கநாயனாரின் மனைவியின் அன்பு வெளிப்பட்ட தலம். திரு நீலநக்கநாயனார் அவர் மனைவியார் இருவரும் அம்மன் கோயிலில் இடப்பக்கத்தில் மூல விக்கிரகங்களாக இருக்கின்றனர். அயவந்தி திருச்சாத்தமங்கையிலுள்ளது. சீயாத்த மங்கை என் பது இதற்குத் தென்பாலுள்ளது. முடிகொண்டான் ஆற்றுக்கு இருபுறமும் இவ்வூர் உள்ளது. திருநீலநக்க நாயனார் பிறந்த ஊர் கோயிலுக்குத் தென்பாலுள்ளது. சுவாமி பிரமபுரீசுவரர் அயவந்தீசுவரர். அம்பிகை: உபயபுஷ்பவிலோசனி, இருமலர்க் கண்ணி. தீர்த்தம் கோயிலைச்சூழ இருந்ததாகத் தெரிகிறது. சுவாமி அம்மன் இருசந்நிதிகளும் மேற்கு. அச்சந்தீர்த்த பிள்ளை யார். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : அயவந்தீசுவரர்
அம்பிகை: மலர்க்கண்ணம்மை
விருட்சம் : கொன்றை.
அருள்சாத்த மங்கை அயவந் தீசர்
நிறமலர்க் கண்ணி நீடிய பிரமம். (சிவ.)
''இருமலர்க் கண்ணி ஈடில் பிரமம்'' என்றிருக்கலாம்.

திருமலர்க் கொன்றைமாலை திளைக்கும்மதி
சென்னிவைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோ டுடனாவது மேற்ப
தென்றே
பெருமலர்ச் சோலைமேகம் உரிஞ் சும்பெருஞ் சாத்த
மங்கை
அருமல ராதிமூர்த்தி அயவந்தி அமர்ந்தவனே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

சாந்தை அயவந்தி தங்கினார்தாம்—வீழிமிழலை. திருநா.
அயவந்தியுள்ளான் காணையாறன்காண்.—சிவபுரம்.
திருநா.
ஒலிபுனல் சூழ்சாத்த மங்கை நீலநக்கர்க்கடியேன்—ஆரூர்.
சு.

130. திருச்சாய்க்காடு (சாயாவனம்) (சோழநாடு)

சீகாழிக்குத் தென்கிழக்கே 9 மைல் தொலைவில் உள்ளது. பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தின் பகுதியாக உள்ளது இத்தலமென்று ஞானசம்பந்தர் தேவாரத்தால் தெரிகிறது. காசிக்கு ஒப்பான ஆறு தலங்களுள் இத்தலமும் ஒன்று. இந்திரனும் ஐராவதமும் வழிபட்டதலம். இந்திரன் பூசித்தமையால் சுவாமியின் திருநாமம் இந்திரேசுவரர் என்றும் வழங்கும். கோயிலை ஓட்டித் தேர்போன்ற அமைப்புள்ள விமானம் சக்கரத்துடன் உள்ளது. இந்திரன் இக்கோயிலை விண்ணுலகுக்கு எடுத்துச் செல்ல முயன்றதாகத் தலபுராணம் கூறும். இயற்பகை நாயனார், அவரது மனைவி ஆகியோரது உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. இத்தலத்திற்கு இந்திரபுரி, சாயாவனம், தெய்வநாயகபுரம் முதலிய திருநாமங்களும் உண்டு. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியதலம்.

சம்பாபதிகோயில் : இது சாயாவனத்தின் கோயிலின் தென் பக்கத்திலுள்ளது; சம்பாபதியம்மன் கோயிலென்று வழங்கப்படுகின்றது; சந்நிதி வடக்கு முகம். பிடாரி கோயிலென்று இக் காலத்தவர் சொல்கிறார்கள்.

சுவாமி : சாயாவனேசுரர், இந்திரேசுரர்.
அம்பிகை : குயிலினு நன்மொழியம்மை (கோஷாம்பாள்)
தீர்த்தம் : காவிரி, சங்கமுகதீர்த்தம், ஐராவததீர்த்தம்.
விருட்சம் : பைஞ்சாய் (பசுமையான கோரை)

தயவுள்ள சாய்க்காடு சாயா வனேசுரர்
குயிலினுநன் மொழியாள் குளிர்சங் கமுகம். (சிவ.)

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணியறியார் கற்றாரும் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெம் தலைவன்தாள் சார்ந்தாரே.

(திருஞா. 2-ஆம் திரு.)

தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழுமார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற் றென்று மெய்கொள்வான் வந்த காலன்

பாடுதான் செலலும் அஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவினாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப்பாடல்கள்:

சங்கு திரையுகளும்சாய்க்காடாள்வர்—இடைமருதூர். திருநா.
மறைக்காடுஞ் சாய்க்காடு மன்னினானை—ஆரூரநெறி. திருநா.
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக்காடு—பொது. திருநா.

131. சிக்கல். (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். இத்தலத்தினைச் சூழ்ந்து ஓடும் நதி பாலை என்னும் பெயருடையது. தமது காமதேனுவைப் பெறும் பொருட்டு வசிட்ட முனிவர் இந்நதியில் மூழ்கிச் சிவபெருமானைப் பூசித்த தலம். காமதேனு இந்திருந்த படியால் அதன் பால் பெருகித்திரண்டு உறைந்து வெண்ணெயாயிற்று. அவ்வெண்ணெயை இலிங்கமாகச் செய்தமைத்து வசிட்டர் வழி பட்டமையால் சிவலிங்கப் பெருமான் திருநாமம் வெண்ணெய் லிங்கப் பெருமான் என்றாயிற்று. அந்த வெண்ணெய் லிங்கப் பெருமானை வசிட்டர் வேறிடத்தில் வைக்க எடுக்க முயலுகையில் அங்ஙனம் செய்ய இயலாமல் இலிங்கம் சிக்கிக் கொண்டமையால் இத்தலம் சிக்கல் என்னும் பெயர் பெற்றது. மல்லிகைக் காட்டின் நடுவே இத்தலம் இருந்தமையின் மல்லிகாரணியம் என்றும் வழங்கப்பெற்றது. மல்லிகை வீசேடம். கட்டு மலைமீது கோயில் உள்ளது. இக்கோயிலில் மூலவராகிய வெண்ணெய் லிங்கப் பெருமான் இருக்கின்றார். சிக்கலில் உள்ள முருகப்பெருமான் மிக்க அழகுடன் திகழ்வதால் சிங்காரவேலவர் என்னும் திருப்பெயருடையவர். ஸ்கந்த சஷ்டித் திருவிழாவின் ஐந்தாம் நாள் முருகப் பெருமான் வேல் பெறுவதும், ஆறாம் நாள் மேஷ வாகனத்தின் மீதேறிக் கொண்டு சூரசம்ஹாரம் செய்வதும் தரிசிக்கத் தக்க விசேடம் உடையன. கோயிலின் வடக்கே கோலவாமனப் பெருமாள் சந்நிதியுள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : வெண்ணெய்ப் பெருமான், வெண்ணெய்ப் பிரான் (நவநீதேசுவரர்), பால்வண்ணன்.

அம்பிகை : வேலொண் கண்ணியினாள், வேல்நெடுங் கண்ணி, சக்தியாயுதாகூி.
தீர்த்தம் : கூீர புஷ்கரிணி (பாற்குளம்)
விருட்சம் : மல்லிகை.

நயதிருச் சிக்கல் நவநீத நாதர்
அயில்நெடுங் கண்ணி சுந்தரப் பொய்கை. (சிவ.)

வானுலாவும் மதிவந்துலாவும் மதில்மாளிகை
தேனுலாவும் மலர்ச்சோலை மல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளை விழித்திட்ட வெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகந்நினைவார்வினையாயின நையுமே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்:

கச்சியூர் கச்சி சிக்கல்—இடையாறு. சு.

132. திரிசிராப்பள்ளி. (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். சிராமலை என்பது திரிசிராமலை என்பதன் நாமைகதேசம். திரிசிரன் என்னும் அரக்கன் இருந்து அரசாண்டு இறைவனைப் பூசித்துப்பேறு பெற்ற மையின் இப்பெயர் உண்டாயிற்று என்று இத்தலத்திற்குரிய புராணம் கூறும். இக்காரணம் பற்றியே திரிசிராப்பள்ளி, திரிசிர புரம், திரிசிரகிரி என்னும் பெயர்கள் அமைந்தன. முடியுடை வேந்தரான சோழருடைய இராசதாவி நகரமாகிய உறையூர் இதன்மேல்பால் அமைந்திருக்கின்றது.

இத்தலத்தைப்பற்றி அகநானூற்றில் குறுங்குடி மருதனார் என்னும் புலவர்

''கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து.''

என்று பாடியுள்ளார். இப்பகுதிக்குப் பழைய உரையாகிரியர்,

'உறையூர்க் குணாது குன்றமென்றது உறையூர்க்குக் கீழ்ப் பக்கத்ததாகிய சிராப்பள்ளிமலை' என்று பொருள் எழுதினர்.

கைலையங்கிரியின் கொடுமுடிகள் மூன்று வாயுவினால் பெயர்த்து வீசப்பட்டன என்பதும் அம்மூன்றனுள் ஒன்று இம் மலை என்பதும் (ஏனையிரண்டும் திருக்காளத்தியும் திருக்கோணா சலமுமாம்.) அதனால் இதற்குத் தட்சிண கைலாசம் என்னும் பெயர் வந்தது என்பதும் புராணவரலாறுகள். தென்கயிலை எனத் தமிழில் வழங்கும். சாரமாமுனிவர் என்பவரால் நாக லோகத்திலிருந்து கொணர்ந்து வளர்த்த செவ்வந்தி மலர்களாற் சிவபிரான் பூசிக்கப் பெற்றமையின் அவருக்குச் செவ்வந்தி நாதரெனவும் இத்தலத்துக்குச் செவ்வந்தி மாநகர் எனவும் திருநாமங்கள் அமைந்தன.

மலைமேல் எழுந்தருளியிருத்தலின் திருமலைக்கொழுந் தெனவும், கருவுற்றிருந்த வணிகப்பெண்ணிற்குத் தாயாகி வந்து மருத்துவம் புரிந்தமையின் தாயான செல்வர், தாயுமானவர், மாத்ருபூதேசுவரர் எனவும் இத்தலத்துச் சிவபெருமான் வழங்கப் பெறுவார்.

அம்பிகையின் திருநாமம் மட்டுவார் குழலம்மை, சுகுந்த குந்தளாம்பிகை என்பன.

இங்கே சிவாலயத்தில் செவ்வந்திவிநாயகர் என்ற விநாய கரும், மலையின் உச்சியில் உச்சிப்பிள்ளையார் என்ற விநாயகரும் எழுந்தருளியிருக்கின்றனர். விபீஷணனிடமிருந்து திருவரங்க நாதனை வாங்கி ஸ்ரீரங்கத்தில் வைத்துவிட்டு இம்மலையில் விநாயகக் கடவுள் ஏறி உச்சியில் அமர்ந்தனர் என்றதொரு கர்ணபரம்பரைச் செய்தி வழங்கி வருகின்றது.

இங்குள்ள குகையில் முருகக் கடவுள் எழுந்தருளியிருந்த தாகப் புராணம் கூறும்.

இத்தலத்திலுள்ள சிவபெருமானைப் பூசித்துப்பெறே பெற் றோர் அகத்தியர், அருச்சுனன், அநுமான், இந்திரன், இரத்தினா வதி என்ற செட்டிப்பெண், இராமன், உமாதேவியார் சப்த கன்னியர், சப்தரிஷிகள், சாரணர்கள், சாரமாமுனிவர், சித்தர் கள், சுரவாதித்தசோழன், திரிசிரன், நாககன்னியர், பாம்பு, பிரமதேவர், வண்டு, ஜடாயு முதலியோர். அநுமான் பூசித்த தற்கு அறிகுறியாக அநுமக்கொடியும், அநும முத்திரையும் இக் கோயிலுக்குரியனவாக வழங்கி வருகின்றன.

இத்தலத்துக்குரிய தீர்த்தங்கள் காவிரி, சிவகங்கை, பிரம தீர்த்தம், நன்றுடையான், தீயதிலான் முதலியன. இவற்றுள் பின் இரண்டு தீர்த்தங்களின் பெயர்களும் ''நன்றுடையானைத்

தியதிலானை'' என்ற தேவாரத் தொடரைப் பின்பற்றி அமைந்தன போலும். இங்கே நேஷனல் காலேஜுக்கு அருகில் காவிரியம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. சின்னையாப் பிள்ளையவர்கள் சத்திரத்திற்கருகில் ஓடத்துறைப் பிள்ளையார் கோயில் என ஒரு கோயில் உண்டு. முற்காலத்தில் காவிரி அவ்விடத்துக்கு அருகில் ஓடியிருக்கக்கூடும் என்றும் ஓடம் விடுந்துறையில் இருந்தமையின் அவ்விநாயகருக்கு அத்திருநாமம் உண்டாயிற்று என்றும் சிலர் சொல்வர். இங்ஙனம் ஆறுகள் பழைய காலத்தில் இருந்த நிலையிலிருந்து மாறிச் செல்லும் இடங்கள் பல உண்டு.

''குடகு காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீர''

என்று திருப்புகழில் உள்ள பகுதியால் காவிரி முற்காலத்தில் சிராமலைக்கருகில் ஓடியதாகக் கருதவும் இடமுண்டு.

சிராமலைக்கோயில் மிகப்பழமையானது. இவ்வாலயத்தில் பல்லவர்களால் அமைக்கப்பட்ட இரண்டு குகைகள் உள்ளன. மேலுள்ள குகையில் திருநாவுக்கரசருடைய வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் இருக்கின்றன. இக்கோயிலில் பல அருமையான சிலாசாசனங்களைக் காணலாம். அவற்றுள் முதல் மகேந்திரவர்மன் காலத்து வடமொழிச்சாசனம் ஒன்று. அச்சாசனம் தெரிவிக்கும் அப்பல்லவனுடைய பெயர்களில் குணபரன்என்பதொன்று. திருநாவுக்கரசரை அலைத்துப்பின் அவருடைய அருணிலை கண்டு சைவனாகிய குணபரனே அவன் என்று அறிஞர் கருதுகின்றனர். அப்பல்லவ அரசன் இங்கே ஒரு கோயில் எடுப்பித்துச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தான் என்று மேற்கூறிய சாசனம் தெரிவிக்கின்றது.

முதல் இராஜராஜன் காலத்துச் சாசனம் ஒன்றில் இவ்வூர் உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. வேறுள்ள சாசனங்களிலிருந்து இம்மலைக்குத் திருமலை என்னும் பெயரும், இறைவனுக்குத் திருமலைப் பெருமானடிகள் என்னும் திருநாமமும் உண்டென்பது அறியப்படுகின்றது.

அம்பிகை திருக்கோயிலில் ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அருளிச் செய்த ஸ்ரீஸௌந்தரியலஹரி கல்லில் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேலுள்ள குடைவரைக் கோயிலில் 104 செய்யுட்களடங்கிய சிலாசாசனமென்று இருக்கின்றது. அதில் முதல்

102 பாட்டுக்கள் ஒரு கலித்துறையந்தாதி (திரிசிராமலை அந்தாதி) நூலாகவும், 103-ஆம் செய்யுளாகிய கலித்துறையும் 104-ஆம் செய்யுளாகிய வெண்பாவும் நூல் செய்தார் இன்னார் என்பதை வெளியிடுவனவாகவும் உள்ளன.

தளவாய் முதலியாரவர்களால் வசந்தோற்சவத்திற்காக அமைக்கப்பட்ட பதினாறுகால்மண்டபமொன்று இங்கு உண்டு; அதற்குத் தளவாய் மண்டபம் என்று பெயர். திருமதிலில் தளவாய் முதலியாருடைய பிம்பமும், இத்தலத்தில் அவர்பெயரால் தளவாய்க்குளமென்ற தீர்த்தமும் உள்ளன. அவ்வக்காலங்களில் பலரால் இயற்றப்பட்ட வேறுபல மண்டபங்கள் இங்கே இருக்கின்றன.

இத்தலத்திலுள்ள சிவப்பெருமானுக்குப் பெரிய வெள்ளி ரிஷபவாகனம், வெள்ளிக்குடை, கமலவாகனம், கற்பக விருக்ஷ வாகனம், கிளிவாகனம், அன்னவாகனம், மயில் வாகனம் என்பன வற்றை வைத்தியலிங்கத்தம்பிரான் அவர்கள் (இவர் ஸ்ரீ மௌன சுவாமிகள் மடத்தில் 7ஆம் பட்டத்தில் தலைவராக இருந்தவர்) செய்தளித்தனர்.

சிவபெருமானின் 64 மூர்த்தங்களுள் ஒன்றான கங்காள மூர்த்தம் இத்தலத்தில் உள்ளது.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குறிஞ்சிப் பண்ணில் அருளிச் செய்த தேவாரப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிச் செய்த திருக்குறுந்தொகைப் பதிக மொன்றும் இருக்கின்றன. ஐயடிகள் காடவர்கோன் நாயனாரால் அருளிச் செய்யப்பெற்ற க்ஷேத்திரத்திருவெண்பாவில் இத்தலத் தைப் பற்றியதாக ஒரு செய்யுள் உள்ளது. அருணகிரிநாதரால் பாடப்பெற்ற திருப்புகழ்ப் பாக்கள் சில இத்தலத்திற்கு உண்டு.

தமிழ் நாவலர் சரிதையில் 'இறையனார் பொய்யாமொழிப் புலவர் முன்பு சிராமலையைப் பாடிய வெண்பா' என்னும் தலைப்பின்கீழ்,

''கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக்—காட்டானை
தேனீர் அருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை''

என்றதொரு வெண்பாவும், 'பொய்யாமொழியார் பாடல்' என் னும் தலைப்பில்.

''அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி
விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்கும் சிராமலையே.''

என்ற கலித்துறையும் இச்சிராப்பள்ளி விஷயமாகக் காணப்படு கின்றன.

இத்தலத்தில் எழுந்தருளியிருந்த சிவஞானச் செல்வராகிய தாயுமானசுவாமிகள் இயற்றிய சிரகிரித் தக்ஷிணாமூர்த்தி பதிக மும், சிராமலையப்பரைப் பாடிய வேறு சில செய்யுட்களும் உண்டு.

இத்தகைய சிறப்பமைந்த தலத்தின் சம்பந்தமாகச் சைவ எல்லப்பநாவலர் இயற்றிய புராணம் ஒன்று உண்டு; செவ்வந்திப் புராணம் என்பது அதன்பெயர்.

பழைய ஏட்டுச்சுவடியொன்றில் இருந்த ஒரேட்டில் இத் தலத்திற்குரிய உலாவின் இறுதிக்கண்ணிகள் சில எழுதப் பட்டிருந் தன. பலவிடங்களில் தேடியும் அந்நூல் முழுவதும் ஐயரவர் களுக்குக் கிடைக்கவில்லை. பழைய பதிற்றுப்பத்தந்தாதிகள் இரண்டும், திருச்சிராபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப் பெற்ற யமக அந்தாதி ஒன்றும் அவர்களுடைய மாணாக்கராகிய சோடசாவதானம் சுப்பராய செட்டியார் அவர்கள் இயற்றிய சிலேடை வெண்பா ஒன்றும் இத்தலத்திற்கு உண்டு. பல வடமொழிச் சுலோகங்களும், வடமொழி தென்மொழிக் கீர்த்தனங்களும் இத்தலமூர்த்தி விஷய மாக இருக்கின்றன. இத்தல சம்பந்தமான தனிப்பாடல்களும் உண்டு.

மாசில் சிராப்பள்ளி வருமா துருபூ
தேசுரர் மட்டுவார் குழலிசை பொன்னி. (சிவ.)

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

(திருஞா. 1-ஆம் திரு.)

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்குந் தேவாரபாடல்கள்:

சிரபுரமுமிடைமருதுஞ் சேர்வார்போல—வலம்புரம். திருநா
திருச்சிராப்பள்ளி எஞ்சிவலோகனை—நள்ளாறு. திருநா.
பராய்த்துறையார் சிராப்பள்ளியுள்ளார்—வீழிமிழலை.
திருநா.
தென்சிராப் பள்ளிச்சிவலோகனை—நாகைக் காரோணம்.
திருநா.
தென்னானைக்காவுஞ் சிராப்பள்ளியும்—அதிகை. திருநா.
சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி—பொது.
திருஞா.
உறந்தையோங்கு சிராப்பள்ளி யுலகம் விளக்கு ஞாயிற்றை
பொது. திருநா.
தேவன்குடி சிராப்பள்ளி தேங்கூர்—பொது. திருநா.
தேவூர் சிரபுரஞ் சிற்றேமஞ்சேறை—பொது. திருநா.
சிராப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன்பள்ளி—பொது.
திருநா.
சிராமலை தஞ்சேர் விடமாத் திருந்தக் கொண்டார்—
பொது. திருநா.
தேங்கூருந் திருச்சிற்றம்பலஞ் சிராப்பள்ளி—பொது. சு.

133. சிவபுரம். (சோழநாடு)

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. பிரமன் இத்தலத்தில் சிவபூசை செய்து உலகங்களைப் படைக்கும் ஆற்றலைப் பெற்றனன் என்று தலபுராணம் கூறும். ஆதிவராகம் பூசித்த தலம்; திருமால் சுவேதவராக உருவில் சிவபெருமானை வழிபட்ட தலம் இதுவென்று இத்தலத் தேவாரப்பதிகங்களால் அறியலாம். சுவேதவராகம்—வெள்ளைப் பன்றி. இந்த ஐதிஹ்யத்தைக் கோயில் மதிற்சுவரில் காணலாம். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : சிவபுரநாதர், பிரமபுரிநாயகர்.
அம்பிகை : சிங்காரவல்லி, பெரியநாயகி.
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்.
விருட்சம் : சண்பகம்
பெரிய சிவபுரம் பிரம புரீசர்
பெரிய நாயகி பெருகிய சூரியன். (சிவ.)

வானவன்காண் வானவர்க்கும் மேலா னான்காண்
வடமொழியுந் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.

(திருநா. 6-ஆம் திரு.)

இன்குரல் இசைகெழும் யாழ்முரலத்
தன்கரம் மருவிய சதுரன்நகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:

சின்னிலா எறிக்குஞ் சென்னிச் சிவபுரத்தமரர்ஏறே—
பொது. திருநா.

134. சிறுகுடி (சோழநாடு)

பேரளம் இரயில்வே நிலையத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் ஸுக்ஷ்மபுரி யென்று வட மொழியில் வழங்கும். செவ்வாய், கருடன், கந்தருவர்கள் பூசித்த தலம். அம்பிகையின் தோளில் சுவாமியின் கை அமைந்துள்ளது.

இத்தலத்துத் தேவாரம் 2-ஆம் பாட்டில் 'சிற்றிடையுடன் மகிழ்' என்பது இதைப்புலப்படுத்துகிறது. இத்தலக்கோயிலில்

உள்ள சந்தோஷ ஆலிங்கன மூர்த்தியே சிற்றிடையாளாகிய உமாதேவியாருடன் மகிழ்பவர். அம்பிகையின் திருநாமம் மங்கை யென்பது ஞானசம்பந்தர் தேவாரத்தால் தெரிகிறது.

சுவாமி : மங்களேசுவரர், கலியாணசுந்தரேசர்.
அம்பிகை : மங்கள நாயகி, மங்கை.
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்.

பாரிய சிறுகுடி பரன்மங்க ளேசர்
நாரி மங்கள நாயகி சூரியன் (சிவ.)

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே.

(திருஞா. 3-ஆம் திரு.)

135. திருச்சிற்றேமம் (சிற்றாய்மூர்) (சோழநாடு)

ஆலத்தப்பாடி இரயில்வே நிலையத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது.

அகத்தியர், தேவேந்திரன், நாகராசன், பிரமன், வேதங்கள் பூசித்த தலம்.

சுவாமி சந்நிதியில் தென்பக்கத்தில் ஒரு தேன்கூடு. சித்தர் கள் தேன் ஈக்கள் உருவெடுத்துப் பூசித்தமையால் இந்தத்தேன் கூட்டுக்குப் பூசை உண்டு.

தன்கணவனால் மறந்துவிடப்பட்ட அவன் மனைவிக்குத் தினம் ஒரு பொன் கோயில் சந்நிதியில் வைத்துக் காப்பாற்றின தால் சுவாமியின் திருநாமம் பொன்வைத்தநாதர். கணவன் திரும்பி வந்து சந்தேகப்பட, அப்பதிவிரதையின் பிரார்த்தனை யின்படி சந்நிதிக்குப் பின்னிருந்த ஆத்திலிருட்சம் கோயிலுக்கு முன்னும் பலிபீடத்திற்கு முன்னிருந்த நந்தி அதற்குப் பின்னு மாய் இடம் மாறியிருக்கும்படி சிவபெருமான் செய்தருளினார். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

குறிப்பு : பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் 'திருச்சிற்றம் பலம் இரயில்வே நிலையம். அந்த ஊர்க்கல்வெட்டு அவ்வூரைச் 'சிற்றாமூர்' என்கிறது. ஆதலால் திருச்சிற்றம்பலமே சிற்றேம

மாயிருக்கலாம். இவையன்றி திருத்தருப் பூண்டிக்கு மேற்கிலுள்ள ஈழிலூர், நேமம் என்ற ஊர்களிலுள்ள ஆலயங்களைச் சிற்றேமம் என்கின்றனர்.

சுவாமி : பொன்வைத்த நாதேசுவரர்
அம்பிகை : அகிலாண்டநாயகி.
விருட்சம் : ஆத்தி.
தீர்த்தம் : வேத தீர்த்தம், சுவர்ணபுஷ்கரிணி.

சுவாமிக்கு, பாலாட்டுக்த்தவர், ஆத்திவனநாதர், இந்திர புரீசுவரர், சர்ப்பபுரீசுரர், மதுபுரீசுரர், சித்தபுரீசுரர், பிரம புரீசுரர், வேத புரீசுரர் என்ற பல பெயர்கள் உண்டு.

புகல்சிற் றேமம் பொன்வைத்த நாதர்
அகிலாண் டேசுவரி அழகிய சொர்ணம். (சிவ.)

நிறைவெண்டிங்கள் வாண்முக மாதர்பாட நீள்சடைக்
குறைவெண்டிங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கை
யான்
சிறைவண்டியாழ்செய் பைம்பொழிற் பழனம்
சூழ்சிற்றேமத்தான்
இறைவனென்றே உலகெலாம் ஏத்தநின்ற பெருமானே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

சிற்றேமமும் பெருந்தண்குற்றாலமும்—அதிகை. திருநா.
தேவூர் சிரபுரம் சிற்றேமம் சேறை. —பொது. திருநா.

136. திருச்சுழியல் (பாண்டிநாடு)

மதுரையிலிருந்து 57 மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் பார்வதி தேவியார் தம்மைச் சிவபெருமான் மணம்புரியும்படி பூசித்த தலம். சதாநந்த முநிவர் பூசித்த தலம். ஸ்தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது. சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி : திருமேனி நாதேசுவரர், ஸ்ரீதனுநாதர், பூமிநாதர்.
அம்பிகை : துணைமாலைநாயகி, ஸகாயவல்லி.
தீர்த்தம் : கௌவைக்கடல்.

திருச்சுழி மேவும் திருமேனி நாதர்
அருட்டுணை மாலைநா யகிபிர ளயமாம். (சிவ.)

ஊனாய்உயிர் புகலாய்அக லிடமாய்முகில் பொழியும்
வானாய்அதன் மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
தேனாதரித் திசைவண்டினம் மிழற்றுந்திருச் சுழியல்
நானவிதம் நினைவார்தமை நலியார்நமன் தமரே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

பிரமபுரம் சுழியல் பெண்ணாகடம்—அதிகை. திருநா.
தென்னூர் கைம்மைத் திருச்சுழியற்றிருக்கானபேர்
—பொது. சு.

137. திருச்செங்காட்டங்குடி. (சோழநாடு)

நன்னிலம் இரயில்வே நிலையத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் உத்தராபதி என்றும் பெயர் பெறும். சிறுத்தொண்டநாயனார் பிள்ளைக்கறியமுது அளித்த தலம். இவ்வற்புதம் சித்திரைப் பரணி நாளன்று நடைபெறுகிறது.

சுவாமி : கணபதீச்சுரர்.
அம்பிகை : திருகுகுழல் நாயகி.
தீர்த்தம் : சூரியதீர்த்தம்
விருட்சம் : ஆத்தி.

கஜமுகாசுரனைக் கொன்ற பழி நீங்கும்படி விநாயகர் பரமசிவனைப் பூசித்த தலம். ஆலயத்திற்குக் கணபதீச்சரம் என்பது பெயர். கஜமுகாசுரனின் இரத்தம் பெருகிச் செங்காடாயிற்று.

கமலினி, போகர், திருமூலர், கொங்கணர், கருவூரார், சுந்தரர், நந்தனர், கோரக்கர், சட்டமுனி, கன்னியர், இடைக்காடர், சிவவாக்கியர், மச்சமுனி, ரோமரிஷி, அகத்தியர், பிரமர், மவுனி, உபமன்யர் இவர்கள் சித்திரங்கள் உத்தராபதீசுவரர் சந்நிதியில் தென்சுவரில் உள்ளன. சங்கரபார்வதி பிரமா, விஷ்ணு, மூலவிக்கிரகங்கள் தென்பிராகாரத்தில் உள்ளன. கணபதி,

ஞானசம்பந்தர் வடக்குப்பிராகாரத்தில், உள்ளனர். நவதாண்டவம் பைரவ பேதங்கள், காடவர்கோன், சிறுத்தொண்டர், உலகநாதர், உருத்திராபதி, சண்பக புஷ்பவாசனை, ஐப்பசி, சித்திரை, பரணி, திருவோணம், காடவர்கோன் மோக்ஷம். சத்யாஷாடருடைய சமாதி ஸ்தானத்தில் உண்டானது காட்டாத்தி விருட்சம். உருத்திராபதீசுரர் சந்நிதியில் சிறுத் தொண்டர், சீரளார், தந்த...சுரர், திருவெண்காட்டுநங்கை வடிவங்கள்ளன. ரக்தாரதாரணியம் (செங்காட்டங்குடி) கணபதீசுவரர் மூலஸ்தானம் உத்தராபதீசுவரர் பிக்ஷாடனமூர்த்தி. இவர் சிறுத்தொண்டருக்காக எழுந்தருளியவர். கஜமுகாசுரனைக் கொன்று பிரமஹத்தி தோஷமடைந்த கணபதி பூசித்துப் பேறு பெற்றமையின் கணபதீச்சுரம் ஆயிற்று.

வீதி 4-இல் கீழவீதியில் வருணனுக்கு உச்சிட்டதோஷம் நீக்கினமையால் அது வருணவீதி ஆயிற்று. தெற்கு வீதியில் பூமி தேவியின் சிரத்தில் சிலம்பார்க்க நடந்தமையின் அது சிலம் பார்க்க நடந்தவீதி எனப்படும். மேற்கு வீதியில் துவாதசாதித்யர்களுக்கு அனுக்கிரகம் செய்தமையின் அவ்வீதி துவாதசாதித்ய வீதி என்று கூறப்படும். வடக்கு வீதி ஐயடிகள் காடவர் கோன்வீதி.

ஸத்யாஷாடபுரம் : ஸத்யாஷாடரிஷி பூசித்தது. ஸந்நிதியிள்ள ஸத்ய புஷ்கரிணி இவர் உண்டாக்கியது. இதில் மூன்று கிணறுகள் உண்டு. இவை சூலத்தால் உண்டானவை. 'மந்திர புரி சப்தகோடி மந்திரங்களால் பூசிக்கப்பெற்றது.

1. மந்திரபுரி நாதர், மந்திர தீர்த்தம்.

2. செங்காடு. செங்காடர், செங்காடு தீர்த்தம் ரக்தாநாமுகி ரக்தபீஜன் என்ற அசுரர்கள் வரம்பெற்று வருத்தினமையின் தேவர்கள் வேண்ட சிவபெருமான் பைரவவேடம் பூண்டு அவர்களைக் கொன்றமையின் (செங்காடு).

3. சத்தியபுரி: சத்யாஷாடர் வழிபட்டமையின் இப் பெயர் பெற்றது.

4. இந்திரபுரி : இந்திரன் பூசித்து யோனிகள் மறையப் பெற்றான். இவன் பூசித்த லிங்கம் இந்திர நகரியிலுள்ளது.

5. ஆத்திவனம். பொய் சொல்லிய தாழை காட்டாத்தியாயிற்று. தாழம்பூ பூசித்த தலம்.

6. பாஸ்கரபுரி: பாஸ்கர தீர்த்தம், தெற்குவீதிக்கு வடக்கே உள்ளது. மாசி மாதம் சிவராத்திரி நாலாங் காலத்தின்பின் (சூரிய பூசை)

7. ஸமுத்ரபுரி.

8. கணபதீச்சரம்

9. நவதாண்டவபுரம்

1. வடாரணியம் : ஊர்த்துவதாண்டவம்

2. கைலாயம் : தேவதாண்டவம்

3. சுவேதாரணியம் : ரகஸ்யதாண்டவம்

4. சிதம்பரம் : ஆனந்ததாண்டவம்.

5. மதுரை : மாறியாடல்

6. கும்பகோணம் : ஆடல்வல்லவர்.

7. தாருகாவனம், வழுவூர்.

8. திருவதிகை—உபயபாதநர்த்தனம்.

9. ஸத்யாஷாடபுரம்—உபயபாதநர்த்தனம்.

சிறுத்தொண்டர்:

உமாமகேசுவர பண்டிதர் குமாரர் இவர். பரஞ்சோதி பண்டிதர் என்பது பெயர். இவர் இருந்த இடம் மேலீவீதிக்கு மேற்கே 1 பர்லாங்கில் இருக்கிறது. சிறுத் தொண்டன் ஏரி என்ற நன் செயும் சிறுத் தொண்டன் குளம் என்ற ஒரு குளமும் உள்ளன. இவர் அரண்மனை அங்கே இருந்ததற்கு அடையாளமாகச் சில அஸ்திவாரங்கள் உள்ளன. சீராளன் படித்தது திருமருகலில். திருமருகல் தெற்கு வீதியீல் சீராளன் பிள்ளையார் கோயில் என்று ஒரு கோயில் உள்ளது. இதில் பிள்ளைகள் வாத்தியார் வடிவங்களுள்ளன. சீராளன் குளம் ஒன்று பள்ளிக்கூடத்தின் பின் உள்ளது. பைரவர் சந்நிதியில் காடவர்கோன், சீராளன், சிறுத் தொண்டர், வெண்காட்டு நங்கை, சந்தனநங்கை வடிவங்கள் மூலஉருவங்களாகவும் உற்சவமூர்த்திகளாகவும் உள்ளன.

காட்டாத்தி, கோரக்ஷ சித்தருடைய சமாதி. இதற்கு அறிகுறி இம்மரத்தின் கீழ்பாலுள்ள பலிபீடமே.

கீழைப்பிராகாரத்தில் பைரவர்க்கு இரண்டு முறை தீபாராதனை.

சிறுத் தொண்டர் முத்தியடையவே இவர் தலைவராகிய ஐயடிகள் காடவர் கோன் வேண்ட 21 நாளில் ஒரு நாளீல் அவருக்கு முக்தி. இத்திருவிழா சண்பகோற்சவம்.

வேண்டு விநாயகர்: கோயிலின் கிழக்கே தீர்த்தத்தின் அக்கினி மூலையில் உள்ளார்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

ஒதுசெங் காட்டுறை உத்தரா பதியார்
கோதிலா வாய்த்த குழலி சத்தியமாம். (சிவ.)

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி இருந்தானை எண்டோள் வீசி
அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்றா லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க் கருள்செய் தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

(திருநா. 6-ஆம் திரு.)

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையும் செங்காட்டங்
குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதிச் சரத்தானே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வெண்காட்டார் செங்காட்டங்குடியார் வெண்ணி
நன்னகரார்—வீழிமிழலை. திருநா.
கணபதிச் சரத்தார்தங் காப்புக்களே—அதிகை. திருநா.
கற்குடி தென்கள்க்குடி செங்காட்டங்குடி—பொது. திருநா.

138. திருச்செம்பொன்பள்ளி (சோழநாடு)

இத்தலம் மாயூரத்திற்குக் கிழக்கே 7 மைல் தொலைவில் உள்ளது. இரயில்வே நிலையம் உள்ளது. செம்பொனார் கோயில் என்று வழங்குகிறது. இந்திரன், குபேரன், சிபி, சூரியன் பூசித்த தலம். இங்கு அம்பிகை நின்ற கோலம். ஒரு கால்

முன்னும் பின்னும். சுவாமி சந்நிதி கிழக்கு முகம். அம்பிகை சந்நிதி மேற்கு முகம். வடமொழிப் பெயர்: சுவர்ணபுரி.

சூரிய பூசை : சித்திரை மாதம் ஏழாம் தேதி முதல் பதினெட்டாம் தேதி வரையில் வருடந்தோறும் காலையில் சூரிய கிரணம் சுவாமிமேல்படும்.

கோயில் : மாடக்கோயில். செம்பொன்மலை என்பது ஐதிஹ்யம். தென்புறச்சுவரில் புராண ஐதிஹ்யங்கள் சிலாவடிவங்களாக அமைக்கப்பட்டுள்ளன. மாயூரப்புராணத்திலும், திருப்பறியலூர்ப்புராணத்திலும் இத்தலமகிமை கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம். தலபுராணமும், மான்மியமும் அச்சிடப்பட்டுள்ளன.

சுவாமி : சொர்ணபுரீசுரர்
அம்பிகை : மருவார்குழலி, சுகந்தவனநாயகி.
தீர்த்தம் : சூரியபுஷ்கரிணி, கோயிலுக்கு வெளியே தடாகமாகத் தெற்கே உள்ளது.

சுகஞ்செம் பொன்பள்ளி சொர்ணபுரி யீசுரர்
சுகந்தவன நாயகி துதிவீர பத்திரர். (சிவ.)

ஊனினுள் ளுயிரை வாட்டி உணர்வினார்க் கெளியராகி
வானினுள் வான வர்க்கும் அறியலா காத வஞ்சர்
நானெனிற் றானே யென்னும் ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானார் திருச்செம்பொன் பள்ளி யாரே.

(திருநா. 4-ஆம் திரு.)

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

திருச்செம்பொன்பள்ளி திருப்பூவணம்—அதிகை. திருநா. சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி—பொது. திருநா தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி—பொது. திருநா. திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன்பள்ளி—பொது. திருநா. சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன்பள்ளி—பொது. திருநா.

139. திருச்சேய்ஞலூர். (சோழநாடு)

இத்தலம் ஆடுதுறையிலிருந்து ஏழுமைல் தொலைவில் உள்ளது. முருகப்பிரான் பூசித்த தலங்களுள் ஒன்று.

எல்லா ஆலயங்களிலும் எவரை வணங்குதலால் சிவதரிசனம் பூர்த்தியாகுமோ அந்தப் பெருமை வாய்ந்த சண்டேசுவரர் அவதரித்ததலம். சேய்—குமாரக்கடவுள் தாம் உறைவதற்கு நல் ஊராகக் கொண்டமையின் சேய்நலூர். குமாரக் கடவுள் சூரசம்ஹாரம் செய்யச் சிவபிரானைப் பூசித்துச் சர்வ சங்காரப் படைக்கலம் (பாசுபதாஸ்திரம்) பெற்ற இத்தலம் குமாரபுரி யென்றும் வழங்கும். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி பெயர்: சத்தியகிரீசுவரர்.
அம்பிகை: சகிதேவி அம்மை. பொதுமக்கள் தோழியாயி என்பர்.
தீர்த்தம்: மண்ணிநதி

கோயிலுக்கு எதிரில் விஷ்ணு கோயில் ஒன்று இருக்கிறது.

இவ்வூரில் வேறொரு சிவன்கோயில் பழைமையானதாய் இருக்கிறது. சிபிச்சக்ரவர்த்தியால் தானம் பண்ணப்பட்ட வீடு களையுடைய 500 பிராமணர்கள் இங்கே இருந்தனர். இவ்வூரில் அரிச்சந்திரன் யாகம் செய்ததாகச் சொல்கின்றனர். இங்கே பல இடங்களில் யாகசாலைக் கற்களும், சிவலிங்கங்களும் அகப் படுகின்றன. இக்கோயிலிலுள்ள சண்டிகேசர் சிலாவிக்கிரகம் மிகச் சிறந்ததாக இருக்கிறது. கோயிலில் சில சாசனங்கள் எழுதிய கற்கள் இருக்கின்றன. சோழர்முடி கவித்தற்குரிய ஐந்து நகரங்களுள் இத்தலமும் ஒன்று.

இவ்வூரிலுள்ள விஷ்ணு ஆலயத்தில் பெரிய வாச்சான்பிள்ளை பெருமாள் திருவடியில் அஞ்சலிஹஸ்தராக எழுந்தருளியிருக்கும்

ஒருசிலாவிக்கிரகம் உண்டு. அவருடைய உற்சவ விக்கிரக மொன்றும் இருக்கிறது. இவ்வாலயத்தில் சில பழைய விக்கிரகங்களும் இருக்கின்றன. ஆஞ்சனேயர் விக்கிரகமொன்று திருவாய் புதைத்த திருக்கோலமாக இருக்கிறது. இவ்வூரில் ஓரிடத்தில் பழைய விக்கிரகங்கள் அகப்பட்டனவென்றும் அவற்றுள் இஃது ஒன்று என்றும் கூறுகின்றனர். இங்கே பெரியவாச்சான் பிள்ளை மரபினர் என்று கூறிக் கொள்ளும் ஒருவகை ஸ்மார்த்த சோழிய பிராமணர்கள் இருக்கின்றனர்.

தருமச் சேய்ஞலூர் சத்த கிரீசர்
பரைசகி தேவி பகர்சத்த தீர்த்தம். (சிவ.)

நூலடைந்த கொள்கையாலே நுண்ணடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப்பாடல்கள்:

வேதியர் வாழுஞ் சேய்ஞல் விரும்பு மாப்பாடியாரே.— ஆப்பாடி. திருநா.

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன்பள்ளி—பொது. திருநா.

140. திருச்சேறை (உடையார்கோயில்) (சோழநாடு)

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே ஒன்பது மைல் தொலைவில் உள்ளது. தெளமிய முனிவர் பூசித்த தலம். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : செந்நெறியப்பர், ஞானபரமேசுவரர்.
அம்பிகை : ஞானவல்லி.

திருச்சேறை யில்வாழ் செந்நெறி யப்பர்பால்
வரும்ஞான வல்லி மார்க்கண்ட தீர்த்தம். (சிவ.)

பெருந்திரு இமவான்பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனிதன்பா லங்கொரு பாகமாகத்
திருந்திட வைத்தார்சேறைச் செந்நெறிச் செல்வனாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரி அதள்பட உரிசெய்த விறலினர்
நறியுறும் இதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி அடிகள்தம் வளநகர் சேறையே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்கள்:

சேறை துலைபுகலூரகலாதிவை காதலித்தானவன்
சேர்பதியே—பொது. திருநா.
தேவூர் சிரபுரஞ் சிற்றேமஞ்சேறை—பொது. திருநா.

141. திருச்சோபுரம் (தியாகவல்லி) (நடுநாடு)

ஆலப்பாக்கம் இரயில்வே நிலையத்திற்கு வடகிழக்கே இரண்டு மைல்தொலைவில் உள்ளது. உப்பங்கழியைப் படகேறிக் கடக்க வேண்டும். அகத்தியர் பூசித்தது. மேற்குப்பார்த்த சந்நிதி. தியாகவல்லி என்னும் அரசகுமாரி பூசித்தனள். அவள் உருவமும் திரிபுவன சக்கரவர்த்தி உருவமும் பிராகாரத்தில் உள்ளன.

இத்தலம் மணலால் மூடப்பட்டிருந்து 125 வருஷங்களுக்கு முன் இரண்டு தம்பிரான்சுவாமிகளால் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களால் திருப்பணி செய்விக்கப்பட்டது. 'தம்பிரான் கண்ட தலம்' என்ற பெயருண்டு. சுற்றிலும் மணற்குன்றுகள்.

கல்வெட்டுக்கள் ஐந்து உள்ளன. இங்கே நர்த்தனகணபதி கோயில் இருந்ததாகவும், அதற்குச் சுந்தரபாண்டியன் நிவந்தம் அளித்த தாகவும் தெரிய வருகிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : சோபுரநாதர், மங்களபுரீசுரர்.
அம்பிகை : சோபுரநாயகி, சத்தியாயதாக்ஷி.

சோபுர மேவும் சோபுரநா தர்சேர்
சோபுர நாயகி சோபுர தீர்த்தம். (சிவ.

வெங்கணானை யீருரிவை போர்த்துவிளங் குமொழி
மங்கைபாகம் வைத்துகந்த மாண்பதுவென்
னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக் கடிகமழும் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுர மேயவனே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வரந்தையான் சோபுரத்தான்—செங்காட்டங்குடி. திருஞா.
சுற்றுமூர்சுழியல்திருச் சோபுரம்—இடையாறு. சு.

142. திருச்சோற்றுத்துறை (சோழநாடு)

தஞ்சாவூலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் வழியில் 6 மைல் சென்று திருக்கண்டியூரை அடைந்து தென்கிழக்கே 1½ மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். இந்தச் சிவஸ்தலம் திருச்சத்துறையென்று இப்பொழுது வழங்குகின்றது. இது மூவர் தேவாரப்பாடல் பெற்றது. ஓதனவனமென வட மொழியிற் கூறப்படும். ஓதனம்—அன்னம். இங்கே எழுந் தருளியுள்ள ஸ்வாமியின் திருநாமம் ஸ்ரீ ஓதனவனேசுவரர்; தொலையாச் செல்வர். அம்பிகையின் திருநாமம் அன்னபூரணி ஒப்பிலா அம்மை; ஒப்பிலாநாயகி. தீர்த்தம் : சூரியதீர்த்தம். திருவையாறோடு சம்பந்தப்பட்ட ஸப்தஸ்தான க்ஷேத்திரங்களுள் காவிரி தீர்த்தத் தலமாகிய இதுவும் ஒன்று. கௌதம மகரிஷி இங்கே இருந்து தவம் புரிந்ததாக ஓர் ஐதிஹ்யம் உண்டு. அதனால் இத்தலம் கௌதமாசிரம மென்றும் வழங்கப்படும். கோயிலுக்குள் திருவாயிலின் தென்கீழ்பால் கௌதமர் உருவம் உள்ளது. மற்றும் ஸ்வாமியைச் சூரியனும் இந்திரனும் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

தன்னிடம் பக்தியுள்ள அருளாளன் என்னும் அந்தணன் பொருட்டுச் சிவபெருமான் எடுக்க எடுக்கக் குறையாச்சோறு

அளித்துத் திருவருள் செய்த தலம். பஞ்சகாலம் ஒன்றில் அம்பிகை இங்கே பல ஏழைகளுக்கு அன்னம் படைத்ததாகச் சொல்வார்கள். சிலவயல்களில் அன்னமே விளைந்ததாம். இங்கே அம்பிகை ஒரு பஞ்ச காலத்திலே பெரிய வயல் ஒன்றில் அன்னமிட்டாளாம். அந்த வயல்கூட இருக்கிறது. அதற்கு அன்னம் படைத்த வயல் என்று பெயர்.

இந்த ஊரில் தெற்கே சோறுடையான் வாய்க்கால் என்று ஒன்றிருக்கிறது. சோறுடையான் என்பது இந்த ஊர்ஸ்வாமி பெயர். திருவையாற்றுப் புராணத்தில் இத்தலத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அன்னாவதாரஸ்தலம் என்பதும் இதன் பெயர். இங்கே கௌதமர் தவம் புரிந்தனர்.; பன்னிரண்டு வருஷம் பஞ்சம் உண்டான காலத்தில் சிவ பெருமானைப் பிரார்த்தித்து இத்தலத்திற் சில வயல்களில் அரிசியாகவே விளைய அவர் வேண்டினார். அங்ஙனம் இறைவன் வரமருள கௌதமர் அவ்வாறு விளைந்த அரிசியினால் அன்னதானம் செய்து வந்தார். கோயிலுக்குத் தென்மேற்கிலுள்ள அல்லிக் குளத்தின் கரையில் இருக்கும் வயலொன்றை அரிசி விளைந்த வயலாகக் கூறுகின்றனர். சோறுடையான் வாய்க்காலென்பது சோடறான் வாய்க்காலென்று இப்போது வழங்குகின்றது.

சோற்றுத் துறைவாழ் தொலையாச் செல்வர்
சாற்று தன்னொப் பிலாதவள் சூரியன். (சிவ.)

பொய்விரா மேனி தன்னைப் பொருளெனக் காலம் போக்கி
மெய்விரா மனத்த னல்லேன் வேதியா வேத நாவா
ஐவரால் அலைக்கப் பட்ட ஆக்கைகொண்டயர்த்துப் போனேன்
செய்வரால் உகளும் செம்மைத் திருச்சோற்றுத் துறையனாரே.

(திருநா. 4-ஆம் திரு.)

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னா தருளே துணையாக
ஒப்பர் ஒப்பர் பெருமான் ஒளிவெண்ணீற்(று)
அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே.

(திருஞா. 1-ஆம் திரு.)

அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழையீர் உரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்தும் கனகக் குவையும்
சுழல்நீர் பொன்னிச் சோற்றுத் துறையே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

சோற்றுத்துறை குருத்தியுள்ளார்போலும்—சாய்க்காடு. திருநா.
நென்மலிந்த நெய்த்தானம் சோற்றுத்துறை—புறம்பயம். திருநா.
விரிகதிரோன் சோற்றுத்துறை யார்தாமே—பழனம். திருநா.
மாதவத்து வளர் சோற்றுத்துறையார்—குடந்தைக்கீழ்க் கோட்டம். திருநா.
சொல்லார்ந்த சோற்றுத்துறையான் தன்னை—நாகைக்காரோணம். திருநா.
சோற்றுத் துறையான்காண்—ஆரூர். திருநா.
துருத்தி யுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத்துறை ஆள்வீர்—ஆரூர். சு.
துறையார் வனமுனிகள் ஏத்தநின்ற சோற்றுத்துறை—அதிகை. திருநா.
சொற்றான்காண் சோற்றுத்துறை யுளான்காண்.—காளத்தி. திருநா.
சோற்றுத்துறை எஞ்சோதியை—பொது. திருநா.
துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை—பொது. திருநா.
குயிலாலந்துறை சோற்றுத்துறைபூந் துறை —பொது. திருநா.
சோற்றுத்துறை என்பீராகில்—பொது. திருநா.
தொழலும் தொல்வினை தீர்க்கின்ற சோதி சோற்றுத் துறை—பொது. சு.

143. தண்டலைநீணெறி (சோழநாடு)

திருத்தருப்பூண்டி இரயில்வே நிலையத்திற்கு வடக்கே 2½ மைல் தொலைவில் உள்ளது. இப்பொழுது தண்டலைச்சேரி

என்று வழங்கப்படுகிறது. சிவபெருமான் கூர்மத்தை அடக்கி அதன் ஓட்டை அணிந்த தலம். அரிவாட்டாய நாயனார் செந் நெல் அரிசி, மாவடு, செங்கீரை நிவேதித்துப் பூசித்து முத்தி யடைந்த தலம். ஊட்டிதண்டலை என்று சிவபெருமான் கூறினார். அரிவாட்டாய நாயனார் பிறந்த ஊராகிய கணமங்கலம் இத்தலத்திற்கு ½ மைல் தொலைவில் உள்ளது. கோச்செங்கட் சோழன் வழிபட்ட தலம். இத்தலத்தின் பெயர் தண்டலை. கோயிலின் பெயர் நீணெறி. இக்கோயில் கோச்செங்கட்சோழன் அமைத்த 78 மாடக் கோயில்களுள் ஒன்று. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : நீணெறி நாதேசுவரர், ஸ்திரபுத்தீசுவரர்.
அம்பிகை : ஞானாம்பிகை.
தீர்த்தம் : ஓமக தீர்த்தம்.
விருட்சம் : குருந்தம்; இலைகளில் ஒரே இதழ் உள்ளது.

நீதிசேர் தண்டலை நீணெறி நாதர்
ஞானாம் பிகைந லஞ்சே ரோமகம். (சிவ.)

விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை யார்க்கிடம்
கரும்பும் செந்நெலும் காய்கமு கின்வளம்
நெருங்கும் தண்டலை நீணெறி காண்மினே.
(திருஞா. 3-ஆம் திரு.)

144. தருமபுரம் (சோழநாடு)

காரைக்கால் இரயில்வே நிலையத்திற்கு மேற்கே ½ மைல் தொலைவில் உள்ளது. திருக்கடவூர்ச் சிவலிங்கப்பெருமான் அமுத கடேசர் மீது பாசம் வீசிய பிழையை நீக்கிக் கொள் வதற்காக எமதருமராசன் பூசித்த தலமாதலின் இத்தலம் தரும புரம் என்று வழங்கும். தருமராசன் தாபித்தமையால் சிவ லிங்கப்பெருமான் திருநாமம் தருமபுரீசுவரர் என்பதாகும். மாயூரத்திற்கு மிக அருகிலுள்ள தலமாதலின் அத்தலத்தின் அம்பிகைக்குரிய அபயாம்பிகை என்ற திருநாமம் இத்தலத் திலுள்ள அம்பிகைக்கும் வழங்கப்படுகிறது. தரும தேவதை, இராமன், பிரமன் முதலியோர் பூசித்த தலம். இத்தலத்தில் எருது பூசித்ததாகவும் தெரிகிறது. திருஞானசம்பந்தர் பாடி யருளிய யாழ்மூரிப் பதிகம் பெற்ற அற்புதத் தலம். திருநீல கண்டயாழ்ப்பாணரின் தாயார் அவதரித்த தலமும் இதுவென்று

தெரிகிறது. இத்தலத்தில் தருமபுரஆதீன ஸ்தாபகராகிய குரு ஞான சம்பந்தருக்குக் கோயில் உண்டு.

சுவாமி : தருமபுரீசுவரர், யாழ்மூரிநாதர்.
அம்பிகை : மதுரமின்னம்மை, தேனமிர்தவல்லி, அப யாம்பிகை.
தீர்த்தம் : பிரமதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், தருமதீர்த்தம் சித்திரகுப்தத் தீர்த்தம்.

முதுதர்ம புரம்யாழ் மூரிநா தர்சதா
மதுர நாயகி மாலயன் தீர்த்தம். (சிவ.)

மாதர் மடப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையெனமகிழ்வர்
பூதஇனப்படைநின் றிசைபாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவர் ஆழ்கடல்வெண்டிரை
இரைந்நுரை கரைபொருது விம்மிநின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில்பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப்பாடல் கள்:

தருமபுரத்துள்ளார் தக்கூரார்—கோயில். திருநா.
தாழையூர் தகட்டூர் தக்கூர் தருமபுரம்—பொது. சு.

145. திருத்தலைச்சங்காடு. (சோழநாடு)

ஆக்கூர் இரயில்வே நிலையத்திற்கு வடகிழக்கே 1½ மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் வடமொழியில் சங்காரண்யம் என்று வழங்குகிறது: சங்குவனம் என்றும் கூறுவர். தலைச் சங்கு என்பது சங்குகளிலேயே தலையாய சங்காகிய பாஞ்ச சன்னியமாகும். (இப்பி ஆயிரஞ் சூழ்ந்தது—இடம் புரிச்சங்கு இடம்புரி ஆயிரஞ் சூழ்ந்தது—வலம்புரிச்சங்கு, வலம்புரி ஆயிரஞ் சூழ்ந்தது—சலஞ்சலம், சலஞ்சலம் ஆயிரஞ் சூழ்ந்தது—பாஞ்ச சன்னியம்.) திருமால் சிவபெருமானைப் பூசித்துப் பாஞ்ச சன்னியம் என்ற சிறந்த சங்கத்தைப் பெற்ற தலம். மாடக்கோயில். திருஞான சம்பந்தரால் தலைச்சங்கை என்று பாடப்பெற்ற தல மாகும்.

சுவாமி : சங்கருணாதேசுவரர்.
அம்பிகை : சௌந்தரநாயகி, பிருகத்சுந்தராம்பிகை.
தீர்த்தம் : காவிரி.

அருடலைச் சங்கா டமர்சங்கு நாயகர்
பெரிய சவுந்தரி பிறங்குகா விரியாம். (சிவ.)

நலச்சங்க வெண்குழையும் தோடும்பெய்தோர்
நால்வேதம்
சொலச்சங்கை யில்லாதீர் சுடுகாடல்லாற் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்
சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

தலைச்சங்கைப் பெருங்கோயின் தங்கினார்—வீழிமிழலை. திருநா.
இடைச்சுரமு மெந்தை தலைச்சங்காடும்—அதிகை. திருநா.
தலையாலங்காடு தலைச்சங்காடு—பொது. திருநா.
வண்பொழில்சூழ் தலைச்சங்காடு தலையாலங்காடு—
பொது. திருநா.

146. திருத்தலையாலங்காடு. (சோழநாடு)

தலையாலங்கானமென்னும் பெயரையுடையதோர் ஊரே இப்பொழுது தலையாலங்காடென்று வழங்கப்படுகின்ற சிவஸ்தலமாகும். இத்தலம் குடவாயிலுக்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. கபிலமகரிஷி பூசித்த தலம்; தாருகாவனத்து முனிவர்கள் அனுப்பிய முயலகன் முதுகின்மீது சிவபெருமான் நடித்த தலம். சிவபெருமான் திருநடனம் புரிந்தருளியதலமாதலின் நர்த்தனபுரியென்று வடமொழியில் வழங்குகிறது. கபிலமுனிவருக்குச் சிந்தாமணி கொடுத்த தலம். முனிவர் உருவம் இருக்கிறது. கோயில் மிகவும் ஜீர்ணமாயுள்ளது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : ஆடவல்லசுரர் (நர்த்தன புரீசுவரர்).
அம்பிகை : திருமடந்தையம்மை.
தீர்த்தம் : சங்கு தீர்த்தம்.

சுனதலை யாலங் காடாட வல்லவர்
அனைதிரு மடந்தைநா யகிசங்கு தீர்த்தம். (சிவ.)

தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக் கப்பாலைக் கப்பா லானை
ஆதிரைநா ளாதரித்த அம்மான் தன்னை
முண்டத்தின் முளைத்தெழுந்த தீயா னானை
மூவுருவத் தோருருவாய் முதலாய் நின்ற
தண்டத்தில் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.

(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

தண்டலையார் தலையாலங் காட்டிலுள்ளார்—வீழிமிழலை. திருநா.
பலர்காணத் தலையாலங்காட்டி னூடே—ஆரூர். திருநா.
தலையாலங்காடு தலைச்சங்காடு—பொது. திருநா.
வண்பொழில்சூழ் தலைச்சங்காடு தலையாலங்காடு—பொது. திருநா.

முண்டம்—நெற்றி. தீ சிவபெருமானது நெற்றிக்கண்ணில் தோன்றியது ஆதலால், ''முண்டத்தின் முளைத்தெழுந்த தீ ஆனான்'' என்றார். தண்டம்—இலிங்க உருவம்.

147. திருந்துதேவன்குடி. (சோழநாடு)

கும்பகோணத்திற்கு வடகிழக்கில் ஐந்து மைல் தொலைவில் உள்ளது. ஊர் இப்பொழுது இல்லை. கோயில் மட்டும் நன்செய் நிலங்களுக் கிடையில் இருக்கின்றது. இத்தலக்கோயிலைச் சூழ்ந்த அகழி திருமருவும் பொய்கையென்று ஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது. நண்டு பூசித்த தலம். இது ஒரு கற்றூணில் காட்டப்பட்டுள்ளது. ஒரு நிறப்பசுக்களின் பால் பதின்கலம் அபிஷேகம் செய்தால் இலிங்கத்தின் முடிமீது ஒரு பொன்னிற நண்டு ஊர்தல் தரிசனமாகுமாம். சுவாமியின் உருவம் முன்பக்கத்தில் வெட்டுண்டு பாதியாயிருக்கிறது. ஓரரசன் வியாதியால் பீடிக்கப்பட்டு எதனாலும் தீர்வடையாது சிவஸ் மரணையுடனிருக்க, இறைவர் கிழவர்போல வந்து, நோயைத்

தீர்த்தருளிய தலம் ''மருந்து வேண்டில்லிவை'' தேவாரம். தேவிசந்நிதிகள் இரண்டுள்ளன. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : கர்க்கடகேசுரர்.
அம்பிகை : அருமருந்து நாயகி, அரவிந்த நாயகி.
தீர்த்தம் : பங்கய தீர்த்தம்; திருமருவும் பொய்கை.

திருந்துதே வன்குடி சிவன்கர்க்க டேசர்
பரிந்தரு மருந்து நா யகிபங் கயமாம். (சிவ.)

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.

(திருஞா. 3-ஆம் திரு.)

148. திலதைப்பதி. (சோழநாடு)

பூந்தோட்டம் இரயில்வே நிலையத்திற்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. அரிசிலாறு இத்தலத்தைச் சூழ்ந்து ஓடுகிறது.

இத்தலம் செதலைப்பதி, திலதர்ப்பணபுரி என்றும்வழங்கும். சந்திரனும் சூரியனும் பூசித்த தலம். யானை, சிங்கம் வழிபட்ட தலம். இராமலக்குமணர்கள் தசரதன், ஜடாயு இவர்களுக்குத் திலதர்ப்பணம் செய்த இடம். இத்தலத்தில் காசி சித்தோஜி ராஜா பிதுர்தர்ப்பணம் செய்தார். இவரும் இவருடைய குருவும் சிலாரூபமாக இத்தலத்தில் இருக்கின்றனர். இவர்கள் பிதிரர் இருவர் இலிங்கவடிவில் காட்சியளிக்கின்றனர். மந்தாரவனேசுவரர் இலிங்கம். இங்குள்ள ஆதி விநாயகருக்குத் துதிக்கை இல்லை. தென்புறம் ஒரு கோயிலுண்டு. அதிலுள்ள சிவபெருமானுக்கு அழகர் என்பது பெயர். விருட்சம்: செம்மந்தாரை, இங்குத் தர்ப்பணம், சிரார்த்தம் செய்வது சிறப்பு. திருஞானசம்பந்தர் பாடிய தலம். இத்தலக்கோயிலின் பெயர் மதிமுத்தம்.

சுவாமி : மதிமுத்தீசுரர்.
அம்பிகை : பொற்கொடி நாயகி, பொற்றொடி நாயகி, மரகதவல்லி, ஸ்வர்ணவல்லி.
தீர்த்தம் : சந்திரதீர்த்தம், அரிசிலாறு.

பரவிய திலதைப் பதிமுத் தீசர்
அருள்பொற் கொடிநா யகியரி தீர்த்தம். (சிவ.)

பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்றவ் வழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள் சோலைம்மலர் மணங்கமழும் மதிமுத்தமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

149. திருத்தினைநகர். (நடுநாடு)

ஆலப்பாக்கம் இரயில்வே நிலையத்திலிருந்து 5½ மைல் தொலைவில் உள்ளது. இப்பொழுது இது தீர்த்தனகிரி என்று வழங்குகிறது. ஜாம்பவர் பூசித்த லிங்கம் தேவி கோயிலில் உள்ளது. பெரியான் என்னும் பள்ளன் உழுது கொண்டிருக் கையில் இறைவர் ஐங்கமர் போல் வந்து உணவு கேட்க, அவன் தன் ஊருக்குச் சென்று கொண்டு வருவதாகப் போனான். அவன் திரும்புவதற்குள் தினை விளைந்து பழுக்கும்படி இறைவர் அருளினார். அவனுக்கும், அவன் மனைவிக்கும் தரிசனம். தினையமுது நைவேத்தியம். தாமரைக்குளநீர் குட்டம் தீர்க்கும். சுந்தரர் பாடிய தலம். இத்தலத்துக்குப் புராணம் உண்டு.

சுவாமி : சிவக்கொழுந்தீசுரர்.
அம்பிகை : ஒப்பிலா நாயகி, இளங்கொம்பன்னாள்.
விருட்சம் : கொன்றை.
தீர்த்தம் : ஜாம்பவ தடாகம்.

திருத்தினை நகர்சேர் திருந்து நாயகர்
திருத்தினை நாயகி திருந்து தீர்த்தம். (சிவ.)

நீறு தாங்கிய திருநுத லாளை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்றம் இல்லியைக் கற்றையுஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல். திருத்தினை நகருறை சேந்தனப்பன்—கழுமலம். சு.

150. திருத்துருத்தி. (சோழநாடு)

இப்பொழுது குற்றாலம் என்று வழங்குகிறது. இரயில்வே நிலையம் உள்ள தலம். இந்தத் தலம் காவிரி ஆற்றினிடையில் இருந்தமையின் திருத்துருத்தியெனவும், குத்தாலமென்னும் ஒரு வகை மரத்தைத் தல விருட்சமாக உடைமையின் குத்தாலமெனவும் வழங்கப்படும். குத்தாலமென்பதன் சிதைவே குற்றால மென்பது. அப்பெயர் உத்தாலகமெனவும் வழங்கும். பாண்டி நாட்டிலுள்ள திருக்குற்றாலம் தெனாது உத்தாலகவனமெனவும் இத்தலம் வடாது உத்தாலகவனமெனவும் வழங்கப்பெறும். இங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் திரு நாமம் சொன்னவாறறி வாரென்பது; அது, 'சொன்னவாறறி வார் துருத்தியார்'' எனச் சுந்தரமூர்த்தி நாயனாரால் தேவாரத் திலும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இத்திருநாமம் வட மொழியில் உக்த வேதீசுவரரென்று வழங்கும். இங்குள்ள குளத் தில் மூழ்கிய சுந்தரர் உடலுறுபிணி நீங்கினார். சிவபெருமான் பிரம்மசாரியாய் வேதத்தைத் தாமே சொன்னதால் சொன்ன வாறறிவார் என்றும் இறைவியை மணப்பதாகச் சொல்லி அதன்படி நடந்ததால் மணவாளநாதர் என்றும் பெயர் பெற் றார். மணவாளநாதர் திருவுருவம் கோயிலில் உள்ளது.

சுவாமி : வேதேசுரர்.
அம்பிகை : முகிழாம்பிகை
தீர்த்தம் : காவிரி.

துருத்தி—ஆற்றிடைக்குறை.
குத்தாலம்—ஒருவகை ஆத்திமரமென்பர்.

சந்நிதி மேற்கு. காவிரி சந்நிதிக்கு எதிரே உத்தர வாஹி நியாக முன்பு ஓடியது. இதற்கு அடையாளமாக இடிந்துள்ள பழைய மண்டபங்களும், படித்துறைகளும் உள்ளன. காவிரி ஓடிய இடம் பழங்காவிரிப் பள்ளம் என்று கூறப்படுகின்றது. இக் காலத்தில் காவிரி ஊருக்கு வடக்கே கிழக்கு மேற்காக ஓடுகிறது.

வருணலிங்கம் : கோயிலுக்கு நிருதிமூலையிலுள்ள பழங் கோயிலிலுள்ளது.

மன்மதேசுவர சுவாமி கோயில் : இது காவல்நிலையத்திற்கு மேற்கேயுள்ளது; மன்மதன் பூசித்த தலம்.

சப்தரிஷீசுவர சுவாமி கோயில் : வடகு வீதியில் வாயு மூலையிலுள்ளது. கோயில் இடிந்து விட்டது.

விசுவநாத சுவாமி கோயில் : மேலைவீதியில் வீதிக்கு மேற்கே சந்நிதி.

அக்னீசுவர சுவாமி கோயில் : இது ஊருக்குக் கிழக்கே மாயூரம் போகிற சாலயின் வடக்கேயுள்ளது. இது விக்கிரம சோழன் பூசித்த தலம். செட்டியார் கோயில் என்றும் வழங்கும்.

சுவாமி பெயர் : சோளீசுரர்.

ஓங்காளீ சுவர சுவாமி கோயில் : இது அக்னீசுவர சுவாமி கோயிலுக்கு மேற்கே யுள்ளது.

வைரவர் கோயில்: இவ்வூரின் அக்கினி மூலையில் உள்ளது.

துணை வந்த விநாயகர் : இவர்மேலை வீதியில் மேற்கே சுவாமியை நோக்கி எழுந்தருளியிருக்கின்றனர்.

பரதலிங்கம் : கோயிலில் வசந்த மண்டபத்திற்கு மேற் குள்ள கோயிலிலுள்ளது அம்பிகையைவளர்த்த பரதமுனிவரால் பூசிக்கப்பட்டது.

சோமசேகரலிங்கம் : யாகசாலையின் தெற்கே கோயிலி லுள்ளது.

கல்யாணசுந்தரர் : அம்பிகையின் சந்நிதியிலுள்ள மண்ட பத்தில் மேற்கோரமாகவுள்ள செப்புப் பலிபீடத்தின் மேல் இரண்டு பாதுகை வடிவாக வுள்ளார்.

தேவியிருவர்: மிருது முகுளகுசாம்பிகை. அரும்பன்னவன முலை தெற்கு நோக்கிய சந்நிதி.

நாறுசாந்திளமுலையாள் : உட்பிராகாரத்தில் தெற்கே இவருக்கு ஆலயமுண்டு. இதற்கு எதிரேயுள்ள பலகணி வழி யாகப் பார்த்தால் பாதுகை, பலிபீடம் தெரியும்.

தக்ஷிணாமூர்த்திக்கு மேற்கே சிலாவடிவமாக நடராசமூர்த்தி யும் அதற்குமேற்கே அகத்தியருமுள்ளனர்.

சுவாமி பெயர் : உக்தவேதீசுவரர், சொன்னவாறறிவார்.

அக்னி தீர்த்தம் : இது அக்னீசுவரசுவாமி கோயிலில் தடாக வடிவாக உள்ளது.

சுந்தர தீர்த்தம் : கோயிலின் முதற் பிராகாரத்தில் சந் நிதிக்கு வடக்கே தடாக வடிவாக உள்ளது. இதன் மேல் கரையில் தெற்கு நோக்கிய சந்நிதியாக ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனாருடைய கோயிலுண்டு. சுந்தரமூர்த்தி நாயனாருடைய

திருமேனியிலிருந்த ஒருவகையான நோய் இதில் செய்த ஸ்நானத்தால் தீர்ந்து போனமையின் இஃது இப்பெயர் பெற்றது.

வலம்புரி விநாயகர் : உட்பிராகாரம் அக்னிமூலையில் உள்ளார்.

உத்தாலக விருட்சம் : இது தல விருட்சம். பெரிய பிராகாரத்தில் சந்நிதிக்குச் சற்றே தெற்கில் இருக்கிறது. இதற்குப் பூவுண்டு; காய்ப்பதில்லை. காய்த்தால் ஏதேனும் விசேட முண்டாகும் என்கிறார்கள்.

கச்சிவிநாயகர் கோயில்: இது கைக்கோளர் தெருவிற்கு மேற்கே கிழக்கு நோக்கியுள்ளது. இந்த விநாயகர் மீது திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பதிகமொன்று செய்திருக்கிறார்கள். இப்பதிகம் புராணம் இயற்றிய பின்பு செய்யப்பட்டது.

கோயிலுக்குப் பிராகாரம் இரண்டே. இதற்குப் பூசை காமிகாகமவிதிதான். கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் ''பூமாலை மிடைந்து '' என்று சிலாசாசன மிருத்தலின் இக் கோயில் விக்கிரம் சோழன் காலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டதென்று தெரிகிறது.

இந்திரபீடம் கரபாத்திரசுவாமி சமாதி கோயில்: இது பழைய காவிரியின் கரையில் சந்நிதிக்குத் தெற்கேயுள்ளது. இவருடைய ஊர் மாதிரிமங்கலம் . கையிலே பிக்ஷையெடுத்து உண்டமையால் இப்பெயர் பெற்றார். பிரதாபசிங்க மகாராசா காலத்தில் இவ்வூருக்கு வந்த சேதுபாவ சுவாமிக்கு உபதேசம் செய்து இங்கேயே தங்கினர். இவ்வாலயம் ஆதிசைவர்களால் பூசிக்கப்பட்டு வருகிறது.

க்ஷேத்திரபாலபுரம்: இவ்வூருக்குத் தெற்கேயுள்ளது. தொழுதாலங்குடி. இவ்வூருக்குத் தென்பால் ஒரு மைல் தொலைவு. குறுமுளைப்பாலி—குணதலைப்பாடி. இவ்வூரின் வாயு மூலையில் உள்ளது.

வில்லியநல்லூர்: இதற்கு வடபாலில் உள்ளது.

திருமணஞ்சேரி, எதிர்கொள்பாடி; திருவேள்விக்குடி; இம் மூன்று ஊரும் இவ்வூருக்கு ஈசானத்தில் உள்ளன.

பரிசில் வகுப்பார்கள், சைவவேளாளர், கைக்கோளர்கள். கந்த சஷ்டி உற்சவத்தில் வேஷம் போட்டுக்கொள்வதுண்டு.

இதற்குத் தமிழில் பழைய புராணம் ஒன்றும் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியபுராணம் ஒன்றும் உண்டு. உலா நூல் ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. மூவரும் பாடிய தலம்.

உருதிருத் துருத்தி யுத்தரவேதீசர்
மிருது முகிழாம் பிகைமிகு காவேரி. (சிவ.)

பொருத்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டா
இருத்திஎப் பொழுதும் நெஞ்சுள் இறைவனை ஏத்து மின்கள்
ஒருத்தியைப் பாகம் வைத்தங் கொருத்தியைச் சடையுள் வைத்த
துருத்தியஞ் சுடரி னானைத் தொண்டனேன் கண்ட வாறே.
(திருநா. 4-ஆம் திரு.)

வரைத்தலைப் பசும்பொனோ டருங்கலன்கள் உந்திவந்து
இரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடும் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி இடர்கெடுத் தானை.
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வியன்றுருத்தி வேள்விக் குடியார் போலும்—சாய்க்காடு. திருநா.

சோற்றுத்துறை துருத்தியுள்ளார் போலும்—சாய்க்காடு. திருநா.

வெண்காடும் வியன்றுருத்தி நகருமேவியிருப்பவனை—புள்ளிருக்குவேளூர். திருநா.

நியமந் துருத்தியு நீடூர்பாச்சில்—புறம்பயம். திருநா.

உமைவேண்டத் துருத்தி புக்கங்கிருந்தீர்—நாகைக் காரோணம்—சு.

திருத்துருத்தி திருப்பழனந்திருநெய்த்தானம்—ஆரூர். திருநா.

துருத்தியுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத்துறை. ஆள்வீர்—ஆரூர். சு.

சோற்றுத்துறை துருத்தி நெய்த்தானமும்—அதிகை. திருநா.

துருத்தி பழனமோ நெய்த்தானமோ—ஆமாத்தூர். திருநா.

துருத்தியார் பழனத்துள்ளார் தொண்டர்கள் பலருமேத்த—கச்சியேகம்பம். திருநா.

மலையினார் பருப்பதந் துருத்தி மாற்பேறு—இலம்பையங் கோட்டூர். திருஞா.

சோலைத் துருத்தி நகர்மேய சுடரிற்றிகழுந் துளக்கிலியை—பொது. திருநா.

சோற்றுத்துறை யெஞ்சோதியைத் துருத்தி மேய தூமணியை—பொது. திருநா.

தோணிபுரந்துருத்தி சோமீச்சரம்—பொது. திருநா.

சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானந்திருமலை—பொது. சு.

துருத்திச் சுடரே நெய்த்தானத்தாய் சொல்லாய் கல்லாலா. பொது. சு.

151. திருத்துறையூர். (நடுநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். இரயில்வே நிலையத்திற்கு 10 மைல் தொலைவில் உள்ளது. இப்பொழுது திருத்தஞ்சூர் என்று வழங்குகிறது.

சுந்தரர் காலத்தில் இத்தலம் பெண்ணையாற்றின் வடக்கே இருந்தது. இப்பழைய பெண்ணையாறு இப்போது மலட்டாறு எனப்படுகிறது. தலம் இவ்விரண்டிற்கும் நடுவே உள்ளது. நாரதர் பூசித்தது. மேற்குப் பார்த்த சந்நிதி. சிவஞானசித்தியார் என்ற சைவசித்தாந்த சாத்திரநூலாசிரியராகிய அருணந்தி

சிவாசாரியர் அவதரித்து முத்தி பெற்றதலம். இத்தலத்தில் சந்தானாசாரியராகிய அவருக்குக் கோயிலும் இருக்கிறது. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தவநெறி வேண்டிப் பெற்ற தலம். அவருக்குக் காட்சியளித்த மூர்த்தி மூலஸ்தான விமானத்தில் ரிஷபாரூடராய் வீற்றிருக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற சிவலிங்கப் பெருமான் தவநெறியப்பர் என்ற திருப்பெயருடையவர். அருணந்தி சிவாசாரியார் சந்நிதானமும், சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட சந்நிதானமும் கோயிலுக்கு வெளியே மேற்கே திருக்குளத்திற்கு அருகில் உள்ளன. கோயிலுள் அகத்தியர், திருமால், பீமன், சூரியன் பூசித்த லிங்கங்கள் இருக்கின்றன.

சுவாமி : பசுபதீசுரர், துறையூரப்பசுவரர், சிஷ்டகுருநாதர்.

அம்பிகை : பூங்கோதை நாயகி, சிவலோகநாயகி.
தீர்த்தம் : பெண்ணைநதி.
விருட்சம் : கொன்றை.
அம்பிகை சந்நிதி வடக்குப் பார்த்தது.

செயதிருத் துறையூர் திருத்துறை நாதர்
கயற்கண் நாயகி களிகூர் திருத்துறை. (சிவ.)

மலையார் அருவித் திரள்மா மணிஉந்திக்
குலையாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கலையார் அல்குற்கன் னியர்ஆடும் துறையூர்த்
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை—பொது. திருநா.
துறையூருந் துவையூரும் தோழூர்தானும்—பொது. திருநா.

152. தெங்கூர். (சோழநாடு)

திருநெல்லிக்காவல் இரயில்வே நிலையத்திலிருந்து ½ மைல் தொலைவில் உள்ளது. இத்தலக்கோயில் வெள்ளியங்குன்று, வெள்ளிமலை என்று கூறப்படும். இலக்குமியும், நவக்கிரகங்களும் பூசித்த தலம். பிராகாரத்தில் ஒன்பது லிங்கங்கள் உள்ளன.

தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய தலம். தேங்கூர் சரியான பெயர். பாஹ்ய நிரோதாம்பு புரம் என்பது இத்தலத்தின் வடமொழிப் பெயர்.

சுவாமி : வெள்ளிமலைநாதர்.
அம்பிகை : பெரியநாயகி.
தீர்த்தம் : சிவகங்கை.

மிகுதிருத் தேங்கூர் வெள்ளிமலை நாதர்
அகமகிழ் பெரியநா யகிசிவ கங்கை. (சிவ.)

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர்
போற்றக்
கரைசெய் மால்கட னஞ்சை யுண்டவர் கருதலர்
புரங்கள்
இரைசெய் தாரழ லூட்டி யுழல்பவர் இடுபலிக்
கெழில்சேர்
விரைசெய் பூம்பொழில் தேங்கூர் வெள்ளியங்
குன்றமர்ந் தாரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

திருவாரூர் மணவாளா திருத்தேங்கூரா—ஆரூர். திருநா.
பெருவேளூர் விளமர் தேங்கூர்—பொது. திருஞா.
தேவன்குடி சிராப்பள்ளி தேங்கூர்—பொது. திருநா.
தேங்கூருந் திருச்சிற்றம்பலஞ் சிராப்பள்ளி—பொது. சு.
நாங்கூருறைவாய் தேங்கூர் நகராய்—பொது. சு.

153. திருத்தெளிச்சேரி. (சோழநாடு)

காரைக்கால் இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கே ½ மைல் தொலைவில் உள்ளது. கோயில்பத்து என்றும் பெயர்.

அம்பிகை வழிபட்ட தலம். தீர்த்தச் சிறப்புடைய தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. பங்குனி மாதம் 13-ஆம் நாள் முதல் பத்து நாட்களுக்குச் சூரிய கிரணங்கள் சுவாமி மேல் விழுகின்றன. திருஞானசம்பந்தர் பாடிய தலம். கோயில் சிறியது.

சுவாமி : பார்வதீசுரர்.
அம்பிகை : சத்தி நாயகி, அம்படுத்தகண்ணுள்.
தீர்த்தம் : சத்தி தீர்த்தம்.

பைந்தெளிச் சேரி பார்வதி யீசர்
எந்தாய் சத்தி யீசுவரி சத்தி. (சிவ.)

பூவ லர்ந்தன கொண்டுமுப் போதுமும் பொற்கழல்
தேவர் வந்து வணங்கு மிகுதெளிச் சேரியீர்
மேவருந்தொழி லாளொடு கேழற்பின் வேடனாம்
பாவ கங்கொடு நின்றது போலுநும் பான்மையே.
(திருஞா. 2-ஆம் திரு.)

154. தென்குடித்திட்டை: (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். தஞ்சாவூருக்கு வட கிழக்கே ஆறு மைல் தொலைவில் உள்ளது. காமதேனு பூசித்த தலம். வெட்டாறு வெண்ணாறுகளுக்கு நடுவில் திட்டாக இருப்பதால் திட்டை என்று பெயர் பெற்றது.

சுவாமி : பசுபதீசுரர், வசிஷ்டேசுரர், தேனுநாதர்.
அம்பிகை : உலகநாயகி, சுகுந்தகுந்தளாம்பிகை, மங்கள நாயகி.
தீர்த்தம் : சக்கர தீர்த்தம், பசுதீர்த்தம், காவிரி.

வேதங்களும், விஷ்ணு முதலான தேவர்களும், வசிஷ்டர் கௌதமர், ஆதிசேடன் ஆகியோரும் பூசித்த தலம்.

இத்தலத்திற்கு வில்வாரணியம், தக்ஷிணகுடித்வீபம் வசிஷ்டாச்சரமம், தேனுபுரி என்னும் பெயர்கள் உண்டு.. தேறி என்பது மணல்திட்டை என்னும் பொருளில் திருநெல்வேலி ஜில்லாவில் வழங்கி வருகிறது.

இதற்குத்தேரூர் என்று ஒரு பெயர் உண்டு. இதன் வட மொழிப் புராணத்திலுள்ள பெயர்களுள் இரதபுரம் என்பது இதனை வலியுறுத்துகின்றது. அன்றியும் இவ்வூரைச் சேர்ந்த வயலொன்றுக்குத் 'தேரூரான் கட்டளை' என்ற பெயர்வழங்குவ தும் இதற்குச் சாட்சி. ''தேரூரார் மாவூரார்'' என்பது தேவாரம்.

தென்குடித் திட்டை சிவன்பசு பதியார்
மன்னுல காம்பிகை மகிழ்சக்ர தீர்த்தம். (சிவ.)

முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ நின்றவன் தன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் தென்குடித் திட்டையே.

(திருஞா. 3-ஆம் திரு.)

155. தேவூர். (சோழநாடு)

கீழ்வேளூர் இரயில்வே நிலையத்திலிருந்து தெற்கே 2 மைல் தொலைவில் உள்ளது. கட்டுமலைக்கோயில்.

கௌதமர், பிரகஸ்பதி, இந்திரன், குபேரன், சூரியன் முதலியோர் பூசித்த தலம். தேவகுருவாகிய பிரஹஸ்பதியால் வழிபடப் பெற்றவராதலின் சுவாமியின் திருநாமம் தேவகுருநாதர் என்று வழங்கும்.

சந்நிதியின் வெளியேயுள்ள பெரியதொரு வசந்த மண்டபம் பாழாகிவிட்டது. 38 வேலி. தேவகுருவுக்கு உபதேசம் செய்த இடம். தேவர்மலை 2: மேற்குப் பார்த்த சந்நிதி. 1. கௌதம புரீசுவரர். அம்பிகை இல்லை. கிழக்குப் பார்த்த சந்நிதி. 2 தேவபுரீசர். கதலிமலைமேல் பலவகை வாழைகள் உள்ளன. சம்பந்தமூர்த்தி சுவாமிகள் கருகை ஆற்றங்கரையிலிருந்து பாடினர். 'தேவூரதுவே' என்பது சாட்சி. விராடபுரம் மேற்கு; உத்தரபுரீசர். உத்தரன்பூசித்தான். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

மல்லன் தோட்ட...பசுபதீசர். சுவாமி: பசுபதீசுரர். அம்பிகை: பர்வதவர்த்தனி. தீர்த்தம்: மிருதசஞ்சீவினி.

சுவாமி: தேவபுரேசர், தேவகுருநாதர், கதலிவனேசர்.
அம்பிகை : மதுரபாஷிணி.
தீர்த்தம் : தேவதீர்த்தம்.
விருட்சம் : வாழை (கதலி).

வீரமுள தேவூர் தேவகுரு நாதர்
பார்வதி மதுர பாஷிணி தேவர். (சிவ.)

காடுபயில் வீடுமுடை யோடுகலன்
மூடுமுடை யாடைபுலிதோல்
தேடுபலி யூணதுடை வேடமிகு
வேதியர் திருந்துபதிதான்

நாடகம தாடமஞ்ஞை பாடவரி
கோடல்கை மறிப்பநலமார்
சேடுமிகு பேடையனம் ஊடிமகிழ்
மாடமிடை தேவூரதுவே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

வலிவலமும் தேவூரு மன்னியங்கேயுறைவானை—
நாகைக்காரோணம். திருநா.
திருவாரூர் தேவூர் திருநெல்லிக்கா—அதிகை. திருநா.
தேவூர் சிரபுரம்சிற்றேமம்சேறை—பொது. திருநா.

156. திரு நணா. (கொங்குநாடு)

ஈரோடு இரயில்வே நிலையத்திலிருந்து எட்டு மைல் தொலை வில் உள்ளது. இப்பொழுது பவானி என்று வழங்கப்படுகிறது. பதரிவனம் (இலந்தை வனம்) என்றும் கூறுவர்.

காவிரி, பவாநி, அமுதநதி (அந்தர்வாகினி) கூடுதலால் பவானி முக்கூடல் என்றும் பவானி கூடல் என்றும் வழங்கும்.

பத்மகிரி, நாககிரி (திருச்செங்கோடு) சங்ககிரி, மங்கலகிரி, வேதகிரி, என்னும் பஞ்ச கிரிகளும் சூழ்ந்திருப்ப அவற்றின் நடுநாயகமாக விளங்குந் தலம் இது. குபேரன், விசுவாமித் திரர், பராசரர் பூசித்த தலம். பிராகாரத்தில் பழைய இரண்டு இலந்தை மரங்கள் உள்ளன. தக்ஷிண அளகை, பராசரக்ஷேத் திரம், தக்ஷிணவதரிகாசிரமம், தக்ஷிணபிரயாகை, திரிவேணி சங்கமம்-வேறு பெயர்கள். தரிசித்தோருக்குத் தீங்கு நணுகாது. தீமை நண்ணா ஊர் ஆதலால் நணா. திருஞானசம்பந்தர் பாடியதலம்.

சுவாமி : சங்கமுகநாதேசுரர்
அம்பிகை : வேதாம்பிகை, பண்ணார் மொழியாள்.
தீர்த்தம் : பவானி, காவேரிசங்கமம்.
விருட்சம் : இலந்தை.

சீர்திரு நண்ணூர் சிவன்நண் ணாவுடை
யார்பண் ணார்மொழி யாள்பொன் பவானி. (சிவ.)

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மா னிடம்போலும்
அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு
பாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்கும்
திருநணாவே.
(திருஞா. 2-ஆம் திரு.)

157. திருநல்லம் : (சோழநாடு)

ஆடுதுறையிலிருந்து ஐந்து மைல்தொலைவில் உள்ளது. திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர், அவர் தேவியாகிய செம்பியன் மகாதேவியார் ஆகிய இருவர் திருவுருவம்உள்ளது. மேற்குப் பார்த்த சந்நிதி. நடராச விக்கிரகம் சிறப்புடையது. இப்பொழுது கோனேரிராஜபுரம் என்று வழங்குகிறது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : உமாமகேசுரர், மாமணியீசுரர்
அம்பிகை : மங்கள நாயகி. அங்கவளநாயகி, தேக சுந்தரி.
அம்பிகை சந்நிதி மேற்குப் பார்த்தது.

திருநல் லந்தனிற் றிகழுமா மகேசர்
கருந்தனங் கவளநா யகிமகிழ் கங்கை. சிவ.)

கொல்லத் தான்நம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதென் ஏழைகாள்
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே.
(திருநா. 5-ஆம் திரு.)

கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லான் நமையாள்வான் நல்லம் நகரானே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நல்லமு நல்லூருமேயார் போலும்—சாய்க்காடு. திருநா.
நள்ளாற்றின் மேயானை நல்லத்தானை—பள்ளியின்
முக்கூடல். திருநா.

நல்லமூர்தி நல்லூர் நனிபள்ளியூர்—பூவனூர். திருநா.
ஐயாற்றமுதன் பழனநல்லம்—அதிகை. திருநா.
பந்தணைநல்லூரும் பாசூர்நல்லம்—அதிகை. திருநா.
ஆரூர்தில்லையம்பலம் வல்லநல்லம்—பொது. திருஞா.

158. திருநல்லூர் : (சோழநாடு)

பாபநாசம் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே முக்கால் மைல் தூரத்தில் உள்ள உத்தமதான புரத்துக்குக் கிழக்கே தேவாரம் பெற்ற இந்தச் சிவஸ்தலம் இருக்கிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய அமர்நீதி நாயனார் அவதரித்த ஸ்தலம் இது. இங்கே கோயில் ஒரு கட்டுமலையின் மேல் இருக்கிறது. மாடக்கோயில். திருநாவுக்கரசர் திருவடி தீக்ஷை பெற்ற தலம். அவர் இத்தலத்தில் திருவடியை முடியாகப் பெற்றதற்கு அறிகுறியாக இத்தலத்தில் இன்றும் திருவடி நிலை உள்ளது. அமர்நீதி நாயனாரை இறைவன் ஆட்கொண்டு அவருக்கும், அவரது மனைவி, மைந்தன் ஆகியோருக்கும் முத்தி தந்தருளிய தலம். ஆதலின் இத்தலக் கோயிலில் அமர்நீதி நாயனார், இடுப்பில் குழந்தையோடு அவரது மனைவி உருவங்கள் கற்சிலையிலும் செப்புத் திருமேனியிலும் உள்ளன.

மகோற்சவத்தில் உத்தமதானபுரத்தார் பிள்ளையார் வாகனத்தையும், அன்னிக்குடியார் சுப்பிரமணியரையும், மணவாளம் பேட்டையார் சோமாஸ்கந்தரையும் எழுந்தருளப்பண்ண வேண்டும்.

பிருங்கிமுனிவரும், நரசிங்கமூர்த்தியும் பூசித்த தலம். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி ஒரு நாளக்கு ஐந்து வர்ணங்களாகத் தோன்றுகிறார். அகத்தியருக்குக் கலியாணக் காட்சி யளித்த தலம்.

சுவாமி—பொன்வண்ணம்; இலிங்கத்தில் சிலதுவாரங்கள்.
சுவாமி: கலியாணசுந்தரேசுவரர், பெரியாண்டேசுரர்.

அம்பிகை : கலியாணசுந்தரி; திரிபுரசுந்தரி.
தீர்த்தம் : சப்தசாகர தீர்த்தம்.

சுவாமி பக்கத்தில் அகத்தியலிங்கம்.
சாலிக்கிராமத்தில் செய்த விநாயகர்.
வைகாசியில் சப்தஸ்தான உற்சவம்.
தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.
உலகின் நல்லூர் நல்லூராண் டார்கா
தல்கிரி சுந்தரி சத்த சாகரமாம். (சிவ.)

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

(திருநா. 6-ஆம் திரு.)

கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோதும் முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே.

(திருஞா. 1-ஆம் திரு.)

159. திருநல்லூர்ப்பெருமணம் : (சோழநாடு)

கொள்ளிடம் இரயில்வே நிலையத்திற்குக் கிழக்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் தற்பொழுது ஆச்சாள் புரம் என்று வழங்கப்படுகிறது.

சம்பந்தர் திருமணம் நடந்த இடம். திருமணத்திற்கு வந்த அனைவரும் வீடுபெற உதவிய தலம். இத்தலத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருமணம் நடைபெற்ற காலத்தில் அம்பிகை இங்கே உள்ள ஸ்ரீ பஞ்சாக்கர தீர்த்தத்தின் கரையில் நின்று அடியார்களுக்கு வெண்ணீறளித்தருளினமையின் திருவெண்ணீற்றுமை யென்னும் திருநாமங்

கொண்டனள். திருநீலநக்கநாயனார், முருகநாயனார், நீல கண்டயாழ்ப்பாணர், சிவபாத இருதயர் நம்பியாண்டார் நம்பி கள் முதலானோர் தீயுட் புகுந்த பின்னர் தம் காதலியைக் கைப்பற்றிச் சம்பந்தர் சோதியுட் புகுந்து ஒன்றி உடனாய் முத்தி பெற்ற தலம். இத்திருநாள் வைகாசி மூலம்தோறும் நடைபெறு கிறது.

சிவக்கொழுந்து தேசிகர் பாடிய தலபுராணம் அச்சிடப் பட்டுள்ளது.

இத்தலப் பெயர் பெருமணம், நல்லூர், பெருமணநல்லூர் நல்லூர்ப்பெருமணம், என நானகு வகையாக வழங்கும்.

ஞானசம்பந்தருக்கு முன்பே இப்பெயர் இக்கோயிலுக்கு வழங்கியிருத்தல் வேண்டும். ஆச்சாள் (அம்பிகை) ஞானசம்பந்தர் திருமணத்துக்கு வந்த அனைவர்க்கும் வெண்ணீறளித்துச் சிவச் சோதியுள் கலக்கச் செய்ததால் ஆச்சாள்புரம் என ஆயிற்று. சுவாமி: சிவலோகத்தியாகர், அம்பிகை: திருவெண்ணீற்றுமை. தலவிநாயகர், மாவடிப்பிள்ளையார். தீர்த்தம்: பஞ்சாக்கர தீர்த்தம், கங்கா தீர்த்தம். விருட்சம்: மாமரம்.

கல்வெட்டுக்களில் அம்பிகையின் திருநாமம் சொக்கியார் என்று காணப்படுகிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

தலச்சிறப்பு :

தேவாரத்தில் திருஞானசம்பந்தர் 'நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே'' என்று குறிப்பிடுவதால் நல்லூர் என்ற பெயரே சம்பந்தர் வழக்கில் இருந்தது என்று தெரிகிறது. பெரு மணம் என்பது திருக்கோயிலின் பெயர். ஆண்மாக்களுக்கு முத்தி வழங்கும் திருக்கோயிலும் பெருமணம் என்று வழங்கலாயிற்று. மேலும் சம்பந்தப் பெருமானுக்குப் பெருமணம் நடந்த இட மாதலின் பெருமண நல்லூர் என்று வழங்கப் பெற்றது எனி னும் பொருந்தும். ஆனால் அவர் தம்தேவாரத்தில் தம் நிகழ்ச்சியைச் சொல்லிக் கொள்வாரா? என்று சிந்திக்க வேண்டி யது. இப்பெயர் பழமையான பெயர் என்பது மட்டும் தெளிவு.

தலம் மிகச் சிறியது. வசிட்டர் முதலியமுனிவர்களுக்குச் சிவலோகக் காட்சி அளித்த தலம். மாந்தாதா மன்னனால் திருப்பணி செய்யப் பெற்றது. கோயில் ஊருக்கு நடுவில் உள்ளது. இரண்டு பிராகாரங்களையுடையது.

வசிட்டர், பராசரர், பிருகு, ஜமதக்னி முதலிய முனிவர்கள் பதினாயிரம் ஆண்டு கடுந்தவம் செய்ய, சுவாமி கருணைகூர்ந்து

சிவலோகம் காட்டியருளினார் என்பது புராணவரலாறு. முருகனுக்கு, சிவபெருமான் சிவலோகத்தை அளிப்பதாகிய தலம் இது.

காகமுனிவர் இத்தலத்திற்கு வந்து தலத்தைக் காலால் மிதிக்க அஞ்சித் தலையாலேயே நடந்து திருக்கோயிலை அடைந்து இறைவனை வணங்கினார். சிவபெருமான் கட்டளையின்படி நிருதி திசையில் சிவயோகத்தில் அமர்ந்தார். சம்பந்தர் திருமணக் காலம் வரை முனிவர் சிவபூசை செய்து திருமணத்தில் தாமும் முத்தி பெற்றார்.

உரைபெரு மணஞ்சிவ லோகத் தியாகர்
பரையுமை யம்மை பஞ்சாக் கரமாம். (சிவ.)

கல்லூரார்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூரார்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூரார்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூரார்ப் பெருமணம் மேயநம் பானே.

(திருஞா. 3-ஆம் திரு.)

160. திருநள்ளாறு : (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். காரைக்காலுக்கு மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. மதுரையிலுள்ள நான்மாடங்களுள் ஒன்றுக்கு 'நள்ளாறு' என்று பெயர். சப்த விடங்கத் தலங்களுள் ஒன்றான இத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் தியாகராசமூர்த்திக்கு நகரவிடங்கர் என்பது திருநாமம். உன்மத்த நடனம். நளமகாராஜனைப் பற்றியிருந்த கலி தோஷம் இத்தலத்தில் அவன் பூசித்த காரணத்தால் நீங்கியது. சனிபகவான் சந்நிதியும் சனிப்பெயர்ச்சி விழாவும் விசேஷ மானவை. இத்தலம் தர்ப்பாரண்ய மாதலின் மூலவர் திருவுரு வம் (இலிங்கம்) தர்ப்பைக் கொழுந்துகள் சேர்ந்தன போன்று அமைந்துள்ளது. மதுரையில் ஞானசம்பந்தர் அனல் வாதம் செய்கையில் 'போகமார்த்த பூண்முலையாள்' எனத் தொடங்கும் இத்தலப்பதிக ஏட்டினை அனலில் இட்டும் அந்த ஏடு வேகாமல் பச்சையாகவே இருந்தமையால் அப்பதிகம் பச்சைப் பதிகம் என்று பெயர் பெற்றது. பச்சைத் திருப்பதிகம் பெற்ற அற்புதத் தலம் இதுவாகும். மூவரும் பாடிய தலம். தலபுராணம் அச்சானது. விநாயகர்: சொர்ண விநாயகர், கற்பகவிநாயகர். பிராகாரத்தில் பைரவர் உள்ளார்.

தலத்தின் வேறு பெயர்கள்: ஆதிபுரி, தர்ப்பாரண்யம், நளேசுவரம், நாகவிடங்கபுரம்.

சுவாமி; தர்ப்பாரண்யத்யாகர்.
அம்பிகை: போகமார்த்த பூண்முலையாள், அத்திரநயனி.
தீர்த்தம்: சரசுவதி தீர்த்தம், நள தீர்த்தம்.

பாகநள் ளாறுதர்ப் பாரண்ய த்யாகர்
போகமார்த்த பூண்முலை சரசுவதி. (சிவ.)

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும்
பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

(திருஞா. 1-ஆம் திரு.)

உள்ளா றாததோர் புண்டரிகத்திரள்
தெள்ளாறாச் சிவசோதித் திரளினை
கள்ளா றாதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றாஎன நம்வினை நாசமே.

செம்பொன் மேனிவெண் ணீறணிவானைக்
கரிய கண்டனை மாலயன் காணாச்
சம்பு வைத்தழல் அங்கையினானைச்
சாமவேதனைத் தன்னொப்பிலானைக்
கும்ப மாகரி யின்னுரியானைக்
கோவின் மேல்வருங் கோவினை எங்கள்
நம்பனை நள்ளாறனை அமுதை
நாயினேன்மறந் தென் நினைக்கேனே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்குந் தேவாரப் பாடல்கள்:

திருவாஞ்சியத்தார் திருநள்ளாற்றார்—கோயில். திருநா.
நள்ளாறு நாளும் பிரியார்போலும்—சாய்க்காடு. திருநா.
நக்கனை வக்கரையானை நள்ளாற்றானை—நாரையூர்.
திருநா.
நடமாடி நள்ளாறன் நீயேயென்றும்—நெய்த்தானம். திருநா.

நனிபள்ளி இன்று வைகி நாளைப் போய் நள்ளாறு சேர்து
மென்றார்—வலம்புரம். திருநா.
நள்ளாற்றின் மேயானை நல்லத்தானை—பள்ளியின்முக்
கூடல். திருநா.
நாவலூர் நள்ளாறொடு நன்னிலம்—பூவனூர். திருநா.
நள்ளாறு தெள்ளா றரத்துறைவாய்—புக்கொளியூர்
அவிநாசி. சு.
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியை—அதிகை. சு.

திருவாஞ்சியமுந் திருநள்ளாறும்—அதிகை. திருநா.
பாவநாசனூர் நனிபள்ளி நள்ளாற்றையமர்ந்த—
இடையாறு. சு.
நறையூரிற் சித்தீச்சரம் நள்ளாறு—பொது. திருநா.
நள்ளாறும் பழையாறுங் கோட்டாற்றோடு—பொது. திருநா.

குறிப்பு : இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானை ''நாகம்பூண்டு கூத்தாடு நள்ளாறனே'' என்று திருநாவுக்கரசர் பாடியிருப்பதாலும் இத்தலத்துக்கு நாகவிடங்கபுரம் என்ற பெயர் இருப்பதாலும் இத்தலத்தில் உள்ள தியாகராசமூர்த்தியின் திருநாமம் நாகவிடங்கர் என்றிருக் கலாம்.

161. திருநறையூர்ச்சித்தீச்சரம். (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. நாச்சியார் கோயிலுக்குப் போகும் பஸ் வழி. நறையூர். தலத்தின் பெயர். சித்தர்கள் பூசித்த காரணத்தால் இத்தலக் கோயிலின் பெயர் சித்தீச்சரம் என்பதாகும்; மாடக்கோயில்.

திருஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி; சித்தநாதேசுவரர்.
அம்பிகை : அழகாம்பிகை.
தீர்த்தம் : பிரம தீர்த்தம்.

திருநறை யூர்சேர் சிவன்சித்த நாதர்
நரர்பணி யழகம்மை நான்முகன் தீர்த்தம். (சிவ.)

பிறைகொள்சடையர் புலியினுரியர் பேழ்வாய்
நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்தும் கையர்கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர் மனையில் மகிழ்
வெய்திச்
சிறைகொள்வண்டு தேனார்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே
(திருஞா. 1-ஆம் திரு.)

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச் சரமே. (சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நறையூரிற்றாமுந்தவிர்வார்போல—புறம்பயம்—திருநா.
சித்தன்காண் சித்தீச்சரத்தான் காண்—சிவபுரம். திருநா.
உறையூர் நறையூர் அரணநல்லூர்—அதிகை. திருநா.
நறையூரிற் சித்தீச்சர நள்ளாறு—பொது. திருநா.
நறையூரு நல்லூரு நல்லாற்றூரும்—பொது. திருநா.
சித்தீச்சர மந்தண் கானலிடுதிரையிராமேச்சுரம்.—பொது
திருநா.
நாங்கூர் நாட்டுநாங்கூர் நறையூர் நாட்டுநறையூரே.—
பொது. சு.

162. திரு நனிபள்ளி : (சோழநாடு)

செம்பொனார் கோயிலிலிருந்து 2½ மைல் தெலைவில் உள்ளது. சம்பந்தர் தாயார் பிறந்த ஊர். நனிபள்ளி என்பது புன்செய். அடியார்கள் வேண்டுகோளின்படி பாலையாய் இருந்த இத்தலத்தை நெய்தலாகச் சம்பந்தர் பாடினார். 'பாலை நெய்தல் பாடியதும்' திருக்களிற்றுப்படியார். தம் தந்தையார் திருத்தோள்மிசை அமர்ந்து ஞானசம்பந்தர் ஆணை நமதே என்று பாடிய தலம். ஆவுடையார் கோயில் கொடுங்கை; திருநனி பள்ளி கோடி வட்டம், திருவீழிமிழலை வெளவானத்தி மண்டபம் என்று சேர்த்துச் சொல்லத்தகும் வேலைப்பாடுடையது. மூவரும் பாடிய தலம்.

சுவாமி : நற்றுணையப்பர்.
அம்பிகை : மலையான் மடந்தை.
தீர்த்தம் : சொர்ண தீர்த்தம்.

திருநனி பள்ளி சேர்நற் றுணையார்
வருபரு வதரா சன்மகள் சொர்ணம். (சிவ.)

காரைகள் கூகைமுல்லை களவாகை யீகைபடர்தொ
டரிகள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடமர்ந்த சிவன்மேய
சோலை நகர்தான்
தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயன்மேதி வைகும் நனிபள்ளி
போலும் நமர்காள்
(திருஞா. 2-ஆம் திரு.)

முற்றுணை யாயினானை மூவர்க்கும் முதல்வன்
தன்னைச்
சொற்றுணை யாயி னானைச் சோதியை ஆத ரித்து
உற்றுணர்ந் துருகி ஊறி உள்கசி வுடைய வர்க்கு
நற்றுணை யாவர் போலும் நனிபள்ளி அடிக ளாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

ஆதியன் ஆதிரையன் அயன்மால் அறிதற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங்காமறை
நான்கினையும்
ஓதியன் உம்பர் தங்கோன் உலகத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியன் நம்பெருமான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்குந் தேவாரப் பாடல்கள்:

நனிபள்ளியுள்ளார் போய் நல்லூர்த்தங்கி—கோயில்.
திருநா.

நல்லார் நனிபள்ளியின்றுவகி நாளைப்போய் நள்ளாறு சேர்துமென்றார்—வலம்புரம். திருநா.
நல்லமூர்திநல்லூர்நனிபள்ளியூர்.—பூவனூர். திருநா.
பாவநாசனூர் நனிபள்ளி நள்ளாறை யமர்ந்த—இடையாறு சு.
திருநனிபள்ளி சிர்மகேந்திரத்துப் பிறப்பில்லவன் பள்ளி பொது. திருஞா.
செழுநனிபள்ளி தவப்பள்ளி சீரார்பரப்பள்ளி—பொது. திருநா.

163. நன்னிலம். (சோழநாடு)

இரயில்வே நிலையத்திலிருந்து மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. கோச்செங்கட் சோழன் எடுப்பித்த கட்டுமலைக்கோயில்; பெருங்கோயில் என்று சுந்தரர் பாடியுள்ளார். தலம் மதுவனம் என்று பெயர் பெறும். சூரியன் பூசித்த தலம். தேவியார் சந்நிதியும் அகத்தீசுரர் சந்நிதியும் கீழே உள்ளன. சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி : மதுவனேசுரர், பிரகதீசுவரர்.
அம்பிகை : மதுவனநாயகி பிரகதீசுவரி
தீர்த்தம் : பிரமதீர்த்தம், தேவதீர்த்தம்.

பெருநன் னிலத்துப் பிரக தீசுரர்
அரிபிரக தாம்பிகை அண்டர்கள் தீர்த்தம். (சிவ.)

தண்ணியல் வெம்மையினான் தலையிற்கடை தோறும் பலி
பண்ணியல் மென்மொழியார் இடங்கொண்டுழல் பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையால்அடி போற்றிசைப்ப
நண்ணிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. (சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நாவலூர் நள்ளாறொடு நன்னிலம்—பூவனூர். திருநா.
நெடுங்கள நன்னில நெல்லிக்காவும்—பொது. திருநா.

நாஞ நன்னிலந் தென்பனையூர் வடகஞ்சனூர்—பொது.சு.

164. திருநாகேச்சுரம். (சோழநாடு)

இரயிலவே நிலையம் உள்ள தலம். சேக்கிழார் இத்தலத்தில் சூடுபாடு உள்ளவராக இருந்தார். தாம் குன்றத்தூரில் கட்டிய ஆலயத்திற்கும் திருநாகேச்சுரம் என்று பெயர் வைத்தார். சண்பகாரண்யம் என்று இத்தலத்திற்குப் பெயர்.

தீர்த்தம்: 12. 1. சூரியபுஷ்கரிணி. இது சந்நிதியின் தென்பக்கத்தில் கோயிலுக்குள்ளிருக்கும் குளம். இதற்கு முதலில் சூலதீர்த்தம் என்னும் பெயரிருந்தது.

2. கன்னியா தீர்த்தம் வடக்குவீதியில் கிழக்குக் கோடியில் உள்ளது. உமாதேவியால் இயற்றப்பட்டது.

3. இயம தீர்த்தம்: தெற்கு வீதியின் உட்புறத்தே தடாக வடிவமாக உள்ளது; வாய்க்கால்.

4. இந்திர தீர்த்தம்: ஊரின் வாயு மூலையிலுள்ளது.

5. கௌதம தீர்த்தம்: ஊரின் வடக்கே தடாக வடிவ மாக உள்ளது.

6. நாகதீர்த்தம்: இது தேப்பெருமாள் நல்லூர் குளம்.

சுவாமி: நாகநாதர்; மகாலிங்கம்.

அம்பிகை: கிரிகுசாம்பாள், குன்றுமுலையம்மை.

சுவாமி: அர்த்த நாரீசுவரர். இத்தலம் இப்போது மறைந் திருக்கிறது.

அம்பிகை: கிரி கன்னிகை. பிறையணி வாணுதளாள்.

குன்று முலையம்மை, பிறையணி வாணுதலாள் என்னும் பெயர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் பதிகத்திலுள்ளன. பூசித் தவர்கள்: கணபதி, நந்திகேசர், தேவேந்திரன், பார்வதி சூரியன், சந்திரன், பிரமதேவர், மகாவிஷ்ணு, கௌதமர் பராசரர் வசிஷ்டர், நளன், தருமபுத்திரர், சம்புமாலி (வங்க தேசத் தரசன்) சந்திரசேனராஜா, நாகராசர்.

உட்பிராகாரத்தில் நால்வர்களைச் சேர்த்து மேற்கே வடக்கு நோக்கிய பாவனையாக சேக்கிழார் திருவுருவமும் அவருடைய தம்பி, அவருடைய குமாரர், அவருடைய மனைவி முதலியவர் களுடைய வடிவங்களுமுள்ளன. மண்டபம் சேக்கிழரால் கட்டப் பெற்றமையால் சேக்கிழார் மண்டபம் என்று வழங்கும். இதில் வாகனங்கள் உள்ளன. கணநாதர் கோயில் என்று ஒன்று உள்ளது. உருவமில்லை. வெளிப்பிராகாரம் நிருதி மூலையில்

நாகராஜர் கோயில் என்று ஒன்றுள்ளது. பாம்புக்கஞ்சியவர்கள் இவரைப் பிரார்த்தித்தால் பயந்திருமென்று சொல்லுகிறார்கள்.

சேக்கிழார் விக்கிரகம் கோயிலிலுள்ளது. சங்க நிதி, பதுமநிதி மகாசாத்தா விக்கிரகங்களும் உள்ளன. மூவரும் பாடிய தலம். இத்தலசம்பந்தமாக ஞானசம்பந்தர் பதிகம் இரண்டும், நாவுக்கரசர் பதிகம் மூன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும் உள்ளன. நாளும் வணங்குவார் பிணிதீர்க்கும் சத்தியுடையது. இத்தலசம் பந்தமாக 16 கல்வெட்டுக்கள் உள்ளன என்று தெரிகிறது.

சுவாமி : சண்பகாரணியேசுரர்.
அம்பிகை : குன்றமுலைநாயகி.
தீர்த்தம் : சூரிய புஷ்கரிணி.

திருநா கேச்சுரம் சிவனா கேசுரர்
முருகுயர் குன்று முலைநாக தீர்த்தம். (சிவ.)

கச்சைசேர் அரவர்போலும் கறையணி மிடற்றர் போலும்
பிச்சைகொண் டுண்பர் பேரரு ளாளர் போலும்
இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச் சரவ னாரே
(திருநா. 4-ஆம் திரு.)

பொன்நேர் தருமே னியனே புரியும்
மின்நேர் சடையாய் விரைகா விரியின்
நன்னீர் வயல்நா கேச்சுர நகரின்
மன்னே எனவல் வினைமாய்ந் தறுமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

பிறையணி வாள்நுதலாள் உமையாளவள் பேழ் கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க நீலமால்விடம் உண்டதென்னே
குறையணி குல்லை முல்லை அளைந்துகுளிர் மாதவி மேல்
சிறையணி வண்டுகள்சேர் திருநாகேச் சரத்தானே.
(சுந்தரர்)

165. நாகைக்காரோணம் (நாகபட்டினம்) (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். புண்டரீக முனிவரைக் காயத்தோடு ஆரோகணம் செய்து கொண்டமையால் காயாரோகணம் என்பது காரோணம் என்று வழங்குகிறது.

அதிபத்தநாயனார் அவதரித்த தலம். சுந்தரர் பொன் பெற்ற தலங்களுள் ஒன்று. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் தியாகராசமூர்த்திக்கு 'அழகவிடங்கர்' என்பது திருநாமம். சுந்தர விடங்கர். பாராவார தரங்க நடனம். அலைபோல் நடனம்.

கோயிலில் முதலிலிருக்கும் விநாயகர் நாகாபரண விநாயகர். உள்ளே இருக்கும் விநாயகர் மாவடிப்பிள்ளையார். தியாகராசருக்கு எதிரில் சுந்தரர் பரவை நாச்சியாருடன் வீற்றிருக்கிறார். மூன்று புராணங்கள் இத்தல சம்பந்தமாக உள்ளன. புண்டரீகர் காஞ்சீபுரம் கும்பகோணம் ஆகிய தலங்களில் காரோணப் பிரதிட்டை செய்தார். நாகையில் 3-வது காரோண பீடம் இயற்றி அதில் காயத்துடன் மறைந்தார்.

சுவாமி : காயாரோகணேசுரர், ஆதிபுராணேசுரர்.
அம்பிகை : கருந்தடங் கண்ணி, நீலாயதாக்ஷி.
விருட்சம் : மா.
தீர்த்தம் : புண்டரீக தீர்த்தம், தேவ தீர்த்தம்.

நாகைக் காரோணம் நாதர்கா ரோணர்
ஆகுநீ லாய தாக்ஷியம் புயமாம். (சிவ.)

பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
திகழுந் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் தன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் தன்னைக்
காரார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றும் காண லாமே.

(திருநா 6-ஆம் திரு.)

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையும் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடல்நாகைக் காரோ ணத்தானே.

(திருஞா. 1-ஆம் திரு.)

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநாள்
இரங்கீர்
முத்தாரம் இலங்குமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெயக்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்.
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

(சுந்தரர்)

'காரோணம்' என்ற சொல் திருக்கோயிலைக் குறிக்கும். மகாசங்கார காலத்தில் சிவபெருமான் உயிர்களைத் தம்முள் ஐக்கியமாக்கிக் கொண்ட தலம்.

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கயிலாயமாமலையர் காரோணத்தார்—கோயில். திருநா.
காரோணத்தென்று மிருப்பார்போலும்—சாய்க்காடு.
திருநா.
கடனாகைக் காரோணங் கருதினானை—புள்ளிருக்கு
வேளூர். திருநா.
காரோணம் காதலார்—பந்தணைநல்லூர். திருநா.
கடனாகைக் காரோணம் கைவிட்டிந்நாட்பொன்மலிந்த
கோதை யருந்தாமுமெல்லாம் புறம்பயநம் மூரென்று
போயினாரே—புறம்பயம். திருநா.
கயிலாயா காரோணா வென்றேனானே—ஐயாறு. திருநா.
கச்சியேகம்பனே காரோணத்தாய்—ஆனைக்கா. திருநா.

காவார் கடைமுடியர் காரோணத்தர்—இடைமருதூர்.
திருநா.

கயிலாய மலையுளார் காரோணத்தார்—வீழிமிழலை.
திருநா.

காளத்தி காரோணமேயார் போலும்—ஆரூர். திருநா.

காரோணங் கழிப்பாலை மேயான்றன்னை—ஆரூரநெறி.
திருநா.

தெள்ளியாருள்கியேத்துங் காரோணந்தம் முடைய
காப்புக்களே—அதிகை. திருநா.

கச்சையூர் காவங் கழுக்குன்றங் காரோணம்—இடையாறு.
சு.

தண்காழி கடனாகைக் காரோணத்தும்—பொது. திருநா.

166. திருநாட்டியத்தான்குடி. (சோழ நாடு)

திருவாரூருக்குத் தெற்கே ஆறுமைல் தொலைவில் உள்ளது. 'நாட்டுவியத்தான் குடி' என்றும் வழங்கும். கோட்புலி நாயனார் தொண்டு புரிந்த தலம். நாயனாருடைய உருவம் கோயிலிலிருக்கிறது.

சிங்கடி வனப்பகையாரைச் சுந்தரர் புதல்வியராக ஏற்றுக் கொண்ட தலம். கோட்புலிநாயனார் இத்தலத் தீர்த்தங்களிலாடித்தான் குழந்தையைக் கொன்ற பாவத்தைப் போக்கினர். சந்நிதியிலுள்ளது சூரிய புஷ்கரிணி. ஆறு; வெள்ளை யாறு; வெண்ணற்றின் பிரிவு. கோட்புலி நாயனாருடைய உற்சவம் ஆடி மாதத்தில் கேட்டையில் நடக்கிறது. சுந்தர மூர்த்தி நாயனார் வந்தபோது சுவாமியும் அம்பிகையும் நீச வடிவம் கொண்டு நடவு நடச் சென்றனர். இவர் விநாயகரைப் பிரார்த்திக்க அவர் சுட்டிக்காட்ட இருவரையும் சென்று தரிசித்தனர். ஷெ விநாயகர் விரலைச் சுட்டிக் காட்டிய குறிப்போடு சந்நிதியிலுள்ளார். ஷெ பிள்ளையாருக்குக் கை காட்டு மூர்த்தி என்பது பெயர். ஷெ வயல் கோயிலுக்குக் கிழக்கே உள்ளது. பெயர் கோழி மேய்ந்தான் சுட்டளை என்பது. சந்நிதி கிழக்கு. யானை பூசை செய்ததால் கரிநாதேசுவரர். புகலக முனிவர், ஏமகண்ட முனிவர் தவம் செய்த இடம்.

ரத்னேந்திர சோழருக்கும் அவர் பிதாவுக்கும் பாகம் பிரித்து வைத்தமையால் ரத்னபுரீசுவரர்.

சுவாமி : ரத்னபுரீசுவரர், மாணிக்க வண்ணர்.
அம்பிகை : ரத்னபுரீசுவரி, மாமலர்மங்கை.
தீர்த்தம் : கரி தீர்த்தம் 2. கோயிலின் முன்னும் பின்னும் உள்ளன. சுந்தரர் பாடிய தலம்.

நாட்டியத் தான்குடி ரத்தினகிரி யீசர்
ஆயி மங்கைநா யகிசூ ரியனாம். (கிவ.)

பூணாண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீ ராகிலும் பெருமையை உணர்வேன்
பிறவே னாகிலும் மறவேன்
காணீ ராகிலும் காண்பனென் மனத்தால்
கருதீ ராகிலும் கருதி
நானேல் உன்னடி பாடுதல் ஒழியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரம்.

நல்லக்குடி நளி நாட்டியத்தான்குடி—பொது. திருநா.

167. திருநாரையூர். (சோழநாடு)

சிதம்பரத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ளது. காட்டு மன்னார்குடிக்குப் போகும் பஸ் வழி.

நாரை வழிபட்ட தலம். சூரியனும் முனிவர்களும் வழி பட்டதலம். நம்பியாண்டார் நம்பிக்கு விநாயகர் அருள் புரிந்த தலம். உளியினால் செதுக்கி உருவாக்கப்படாத சுயம்பு மூர்த் தியாதலின் இத்தல விநாயகருக்குப் பொல்லாப்பிள்ளையார் என்ற பெயர் உண்டாயிற்று. முதல் இராசராசனுக்குத் தேவாரம் இருக் கும் இடம் அருளியவர் இவரே. இத்தலத்தில் உள்ள நம்பியாண் டார் நம்பியின் செப்புத் திருமேனி மிகவும் சுவர்ச்சியாக இருக் கிறது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : சௌந்தரேசர்
அம்பிகை : திரிபுரசுந்தரியம்மை
தீர்த்தம் : காருண்ய தீர்த்தம்.
விருட்சம் : புன்னாகம்.

திருநா ரையூர் வாழ்சிவன் சவந்தரேசர்
மருவார் திரிபுர வல்லி காருண்ணியம். (சிவ.)

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள் செய்தானை
அல்லானைப் பகலானை அரியான் தன்னை
அடியார்கட் கெளியானை அரண்முன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே.

(திருநா. 6-ஆம் திரு.)

உரையினில் வந்த பாவம் உணர்நோய்கள் உம்ம
செயல் தீங்கு குற்றம் உலகில்
வரையின் நிலாமை செய்த அவை தீரும் வண்ணம்
மிகவத்தி நித்தம் நினைமின்
வரைசிலை யாக அன்று மதில்மூன்று எரித்து
வளர்கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சம் உண்டசிவன் மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்குந் தேவாரங்கள்:

நாகேச்சரத்துள்ளார் நாரையூரார் வீழிமிழலை. திருநா.
நல்லவர் கடாமேத்து நாரையூரும்—அதிகை. திருநா.
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்பேரூர்—பொது. திருஞா.
நாரையூர் நாகேச்சர நல்லூர் நல்லம்—பொது. திருநா.
நாலூரும் சோற்றூரு நாரையூரும். —பொது. திருநா.

168. திரு நாலூர்மயானம் (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து குடவாசல் போகும் பஸ் வழியில் உள்ளது. ஆபஸ்தம்ப முனிவர் பூசித்த தலம். பெரும்பாம்பு

ஒன்று லிங்கத்தின் சிரசில் சில சமயம் தென்படுகிறதாம். ஒரு மைல் தொலைவில் உள்ள நாலூர் என்ற கிராமத்தில் ஒரு கோயில் உள்ளது. மயானம் ஐந்து காசி மயானம், கச்சிமயானம், கடவூர்மயானம், வீழி மயானம் (தேதியூருக்கருகில்) நாலூர் மயானம். திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : பலாசவனேசர், ஞானபரமேசுரர்.
அம்பிகை : பெரியநாயகி, ஞானாம்பிகை.
தீர்த்தம் : சந்திர தீர்த்தம்.

சேலூருங் கண்மடவார் சிற்றிடைகற் றோர்தங்கை
நூலூரும் பான்மை நுவலரிய—நாலூர்ப்
பலாச வனேசர் பதாம்புயமெந் நாளும்
நிலாவுகவென் சென்னிமிசை நின்று.

மனமகிழ் நாலூர் மயானம் பலாச
வனநாதர் பெரியநா யகிமதி தீர்த்தம். (சிவ.)

பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூரும் செஞ்சடையான் வெண்ணூல்சேர்
மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான்றன் அடிநினைந்து
மாலூரும் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இது நாலூர் எனவும், நாலூர் மயானம் எனவும் இரண்டு பதிகளாகவும் உள்ளது. நாலூர் மயானத்திற்குத் தெற்கே ஒரு மைல் தொலைவில் நாலூர் என்னும் ஊர் உள்ளது.

169. திருநாவலூர் (நடுநாடு)

பண்ணுருட்டி இரயில்வே நிலையத்திலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. உமாதேவியார், திருமால், சண்டேசுவரர், கருடன் ஆகியோர் பூசித்ததலம். சுந்தர மூர்த்தி நாயனார் அவதரித்த தலம். நரசிங்க முனையரையரால் வளர்க்கப்பெற்ற தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சந்நிதி வெளிப்பிராகாரத்தில் தென்மேற்கில் உள்ளது. வரதராச சுவாமி சந்நிதி கோயிலுள் உள்ளது. நாவல் மரம் தேவி சந்நிதிக்குச் சமீபம்.

திருவெண்ணெய் நல்லூர் இராசப்பக்கவிராயர் புராணம் ஒன்று பாடியுள்ளார். சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி : திருநாவலேசுரர்; பக்த ஜனேசுவரர்.
அம்பிகை : சுந்தரநாயகியம்மை; மனோன்மணியம்மை.
தீர்த்தம் : கோமுகி. (சிற்றோடை) கெடிலநதி.
விருட்சம் : நாவல்

நாவ லூருறையு நாவ லீசரரிடம்
தாவி வருசுந் தரிதண் கருடன். (சிவ.

கோவலன் நான்முகன் வானவர்
கோனுங்குற் றேவல் செய்ய
மேவலர் முப்புரம் நீயெழு
வித்தவன் ஓரம்பினால்
ஏவல னார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளும் கொண்ட
நாவல னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்

நாவலூர் நள்ளாறொடு நன்னிலம். பூவனூர். திருநா.

170. திருநின்றியூர். (சோழநாடு)

ஆனந்த தாண்டவபுரம் இரயில்வே நிலையத்திற்கு வட கிழக்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது. பரசுராமர் உருவம் உள்ளது. லிங்கத்தின் சிரசில் வெட்டுப்பட்ட பள்ளம் காணப்படுகின்றது. சுவாமி ஒரு அரசன் வெட்ட வெளிப்பட்டார். இத்தலக்கோயில் பல மதில் சூழ்ந்த பெரிதான ஆலயமாக முற் காலத்திருந்ததென்பதற்குப் பல அடையாளங்களுள்ளன.

இந்திரனுக்குத் தமது முதுகென்பை யளித்தற்கு யோகத்தால் உயிர்நீத்த ததீசியுடம்பைப் பிரித்த தோஷ நிவர்த்திக்காகக் காமதேனு பூசித்தது. அக்காலத்தில் ஸ்வாமி புற்றுக்குள் எழுந்தருளியிருந்தார். லக்ஷ்மி பூசித்தனள். திருநின்ற ஊர்: வர்த்தி நிர்வாபணபுரம்; வடமொழிப்பெயர்.

சுவாமி : மகாலக்ஷ்மீசுரர், ஜமதக்னீசுவரர், பரிகேசுவரர்.
வர்த்திநிர்வாபணேசுவரர்.
அம்பிகை : உலகநாயகி.
தீர்த்தம் : நீலமலர்ப் பெய்கை (அகழி).

இயல்திரு நின்றியூர் இலக்குமி யீசர்
அயில்விழி லோக நாயகிநிர் மலமாம். (சிவ.)

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தம் சுடுநீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்நிலை யோர்க்கே.
(திருஞா. 1-ஆம் திரு.)

கொடுங்கண் வெண்டலை கொண்டு குறைவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்
நெடுங்கண் மங்கைய ராட்டையர் நின்றியூர்க்
கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே.
(திருநா. 5-ஆம் திரு.)

திருவும் வண்மையும் திண்டிறல் அரசும்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங்கணான்றனக் களித்த
வார்த்தை கேட்டுநுன் மலரடி அடைந்தேன்
பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவும் தெற்றியும் முற்றமும் பற்றி
திரட்டும் தென்திரு நின்றி யூரானே. (சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

தேனாரும் கொன்றையனே நின்றியூராய்—
திருவானைக்கா. திருநா.

மனக்கென்றும் வருவானை வஞ்சர்நெஞ்சி
னில்லானை நின்றியூர் மேயான்றன்னை—திருப்பூந்துருத்தி
திருநா.

தொலையாத வென்றியார் நின்றியூரும் நெடுங்களமும்—
திருவலஞ்சுழி. திருநா.
சென்றானை நின்றியூர் மேயான்றன்னை—நாகைக்
காரோணம். திருநா.
நீரார்நிறைவயல்சூழ் நின்றியூரும்—திருவதிகை. திருநா.
நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றமமர்ந்த—இடையாறு
சு.
சுரும்பமர் கொன்றையாய் திருநின்றியூருறை ஆதியே—
ஆமாத்தூர். திருஞா.
திருமலர்க் கொன்றையா னின்றியூர் மேயான்—
இலம்பையங் கோட்டூர். திருஞா.
நீருர்வயனின்றியூர் குன்றியூரும்—பொது. திருநா.
நின்றியூர் நீடூர் நியமநல்லூர்—பொது. திருநா.
நிறைக்காட்டனே நெஞ்சத்தானே நின்றியூரானே—
பொது. சு.

திருஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் திருப்பதிகம் ஒன்றும், சுந்தரர் திருப்பதிகம் இரண்டும் ஆக நான்கு திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டு ஒன்றும் உள்ளது.

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவனை வழிபடுவோர் அச்சம், பாவம், கேடு, நோய், இவை நீங்கப் பெறுவர் என்பதை ஒரு பாடல் மூலம் தெளிவாகக் கூறி யிருக்கின்றார்.

இக்கருத்தைத் திருநாவுக்கரசரும், சுந்தரரும் கூறியுள்ளனர். சுந்தரர் நாள் ஒன்றுக்கு ஒரு வேலி நிலத்தின் வருவாயின் மூலம் வழிபாடுகள் செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன் முந்நூற்றறுபது வேலி நிலத்தை அளித்து வழிபட்டபரசுராமனுக்குத் திருவடிப்பேறு அளித்த செய்தியை ''மொய்த்த சீர் முந்நூற்றறுபது'' என்று தொடங்கும் பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த ''கடிகமழும் நீலம்மலர்ப் பொய்கை நின்றியூர்'' என்னும் தேவாரத்தால் இத்தலத்திலுள்ள தீர்த்தமாகிய நீலமலர்ப் பொய்கையும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரங்களுள் ''செந்தண் மாமலர்த் திருமகண் மருவும் செல்வத்தென் திருநின்றியூரானே'' என்றதனுல் திருமகள் பூசித்தமையும், ''மொய்த்த சீர்முந்நூற்றறுபது வேலி மூன்று நூறு வேதியரோடு நுனக்கு ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி ஓங்கு நின்றியூர்

என்றுனக் களிப்பப் பத்தி செய்தஅப்பரசுரா மற்குப் பாதம் காட்டிய நீதிகண் டடைந்தேன்'' என்றதனால் பரசுராமர் பூசித்த மையும்,

''இரவி நீள்சுடர் எழுவதன் முன்னம்
எழுந்து தன்முலைக் கலசங்கள் ஏந்திச்
சுரபி பால்சொரிந் தாட்டிநின் பாதம்
தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டுப்
பரவி உள்கிவன் பாசத்தை அறுத்துப்
பரம வந்துநுன் பாதத்தை அடைந்தேன்
நிரவி நித்திலம் அத்தகு செம்பொன்
அளிக்கும் தென்றிரு நின்றியூ ரானே''

என்ற சுந்தரர் தேவாரத்தால் காமதேனு பூசித்தமையும்,

''வந்தோர் இந்திரன் வழிபட மகிழ்ந்து
வான நாடுநீ ஆள்கென அருளிச்
சந்தி மூன்றிலும் தாபரம் நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி அணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்''

என்றதனால் அகத்திய மகாமுனிவரோடு இந்திரன் பூசித்தமை யும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க.

திருநின்றியூர்—திரிநின்றவூர். இது சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இதற்கு இப்பெயர் வந்தது இன்ன காரணத் தாலே என்று விளங்கவில்லை. ஆனாலும் இத்தலத்திற்கு உரிய வடமொழிப் பெயராகிய 'வர்த்தி நிர்வாபணபுரம்' என்பதன் பொருளைக் கவனிக்கையில் திரிநின்றவூர் என்று இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இரேணுகையைக் கொல்வித்த தோஷத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு ஜமதக்னி முனிவரும், தந்தையின் கட் டளைப்படி தாயைக் கொன்ற தோஷத்தைப் போக்கிக் கொள் ளும்பொருட்டுப் பரசுராமரும், இந்திரனுக்கு முதுகென்பைக் கொடுத்தற்கு யோகத்தால் உயிரைத் துறந்த ததீசிமுனிவருடைய உடம்பைப் பிரித்த தோஷத்தைப் போக்குதற்கு வந்த காம தேனுவும் இத்தலத்தில் பூசித்துப் பேறுபெற்றனர்.

விஷ்ணுவின் உருவச்சிலையும், திருமகளின் உருவச்சிலையும் இந்த ஆலயத்தில் பூசிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தலத்தில் வீரசோழனுக்குப் பிரமஹத்தி தோஷம் நிவர்த்தியாயிற்று. இந்தச் சோழனுக்குப் பிரமஹத்திதோஷம் திருவிடை மருதூரில் பகற்காலத்து மட்டும் நீங்கி இராக்காலத்து நீங்காமையால் அதை நீக்கிக்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு தினமும் சிதம்பரத்திற்கு இரவில் போய்த் தரிசனம் செய்து வருவானாயினன். அக்காலத்தில் இத்தலத்திற்கு வந்தவுடன் அவன்கூட வரும் தீவர்த்திகளின் ஜ்வாலை ஒவ்வொரு நாளும் நின்று அப்பாற் போனவுடன் எரியத் தொடங்கும்.

இந்த வியப்பை அறிந்துதேடிப்பார்க்கையில் காமதேனுவால் பாலபிஷேகம் செய்யப்பட்டுப் புற்றுக்குள்ளே இருந்த லிங்கப் பெருமானைத் தரிசித்து மேற்கூறிய பிரமஹத்தி நீங்கப் பெற்றான். இவனுடன் வந்த தீவர்த்தி நின்று போதற்கு இடமாயிருந்தமையின் இத்தலம் வர்த்தி நிர்வாபணபுரம் என்று பெயர் பெற்றது.

இது பெரியதொரு நகரமாக இருந்தது என்பதற்கும் இக் கோயில் பலமதில்களையுடைய மிகப்பெரியதாக இருந்தது என் பதற்கும் சாட்சியாகப் பல அடையாளங்கள் உள்ளன.

இது நின்றி என்றும் வழங்கப்படுகின்றது. திருஞான சம்பந்தர்தேவாரத்தில் ''தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு நின்றியது தன்னில்'' என்று வந்திருத்தல் காண்க.

சுந்தரமூர்த்தி நாயனார் மூன்றாம் பாசுரத்தில் பரசுராமர் முந்நூறு அந்தணர்களுக்கும் சுவாமிக்கும் முந்நூற்றறுபது வேலி தாரை வார்த்துக் கொடுத்தார் என்று தெரிகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ''நீலமலர்ப் பொய்கை நின்றியூரின்னிலையோர்க்கே'' என்று இத்தலத்திற்குரிய தீர்த் தத்தை விசேடமாகக் கூறியிருக்கிறார்.

நீலமலர்ப் பொய்கை தீர்த்தம் அகழிவடிவாக உள்ளது. ஷி அகழி சூழ்ந்த கோயிலில் எழுந்தருளியிருத்தலின் சுவாமிக்குப் பரிகேசுவரர் என்பது திருநாமம். பரிகை—அகழி. இத்தலத்திற்கு வடமொழியில் ஒரு புராணமுண்டு. தமிழில் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வூர் பெரியதொரு நகரமாக இருந்தமை திருஞானசம்பந்தர் தேவாரத்தாலும் திருநாவுக்கரசர் தேவாரத் தாலும் தெரியவருகிறது.

திருநின்றவூரென்பது வேறு. அது தொண்டை நாட்டுத் திருப்பதிகளுளொன்று.

171. திருநீடூர் : (சோழநாடு)

இரயில்வே நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது முனையடுவார் தொண்டு புரிந்த தலம். முனையடுவார் பிம்பம் கோயிலிலிருக்கிறது. அவர் முத்தியடைந்த தலம். உற்சவ மூர்த்தி உண்டு. ஊழிக்காலத்தும் அழியாது நீடித்திருக்கும் தலம் நீடூர். இந்திரன், சூரியன், சந்திரன், நண்டு, காளி பூசித்த தலம். வேறுபெயர்கள்: வகுளாரணியம், மகிழாரணியம், மகிழவனம் என்பன. சூரியனுக்கு அபயமளித்த காரணத்தால் இத்தலத்திலுள்ள அம்பிகை 'ஆதித்யாபயப்ரதாம்கை' என்ற திருநாமங் கொண்டனள்.

ஆவணி மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியபூசை. வடமலை நாரணக்குடை மன்னர் இயற்றிய தலபுராணம் அச்சிடப் பட்டுள்ளது. சுந்தரர் பாடிய தலம்.

சுவாமி : அருட்சோம நாதேசுரர், கானநிர்த்தனசங்கரர்.
அம்பிகை : ஆதித்யாபயாப்ரம்பிகை, வேதநாயகி, ஆலால சுந்தரநாயகி, வேயுறுதோளியம்மை.
தீர்த்தம் : செங்கழுநீரோடை
விருட்சம் : மகிழமரம். இதனால் இத்தலம் பகுளாரணியம் என்று பெயர்பெறும்.

முதல்யுகத்தில் இந்திரனும், இரண்டாவது யுகத்தில் சூரியனும், மூன்றாவது யுகத்தில் பத்ரகாளியும், நான்காவது யுகத்தில் நண்டும் பூசித்த தலம். நண்டு சுவாமி சரீரத்தில் ஐக்கியம் என்றும் சொல்லுவர்.

தீர்த்தம்: ஆநந்த தீர்த்தம்: இது கோயிலுக்குத் தெற்கே அம்மன் சந்நிதியிலுள்ளது. இது செங்கழுநீர்ஓடை என்றும், கல்ஹார தீர்த்தம் என்றும் பெயர் பெறும்.

சந்திரபுஷ்கரிணி: இது தேவி கோயிலுக்குப் பின்புறம் உள்ளது.

இந்திர தீர்த்தம் : இது கிழக்கே யுள்ளது. முனி தீர்த்தம். இது அக்னிமூலையிலுள்ளது சூரியபுட்கரிணி: இது முனிதீர்த்தத்துக்கு அருகே உள்ளது. கங்கை என்றும் கூறப்படுகிறது. பத்ரகாளி அம்மன் கோயில்: இது சந்நிதியின் கிழக்கே வடக்கு

நோக்கியதாக அமைந்திருக்கின்றது. இந்தத் தேவியின் பெயர் ஆலாலசுந்தரி என்று வழங்கப்படுகிறது.

தொழுதிரு நீடுரருட்சோம நாதர்சேர்
கழையுறு தோளி செங்கமழ நீரோடை. (சிவ.)

ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை
ஒண்ணு தற்றனிக் கண்ணுத லானைக்
கார தார்கறை மாமிடற் றானைக்
கருத லார்புரம் மூன்றெரித் தானை
நீரில் வாளை வரால்குதி கொள்ளும்
நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்
பாரு ளார்பர வித்தொழ நின்ற
பரம னைப்பணி யாவிட லாமே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நியமந்துருத்தியு நீடூர்பாச்சில்—புறம்பயம். திருநா.
நிதியாளன்றோழனை நீடூரானை—பள்ளியின் முக்கூடல். திருநா.
நின்றியூர் நீடூர் நியமநல்லூர்—பொது. திருநா.

172. திருநீலக்குடி. (தென்னலக்குடி) (சோழநாடு)

ஆடுதுறை இரயில்வே நிலையத்திலிருந்து 2½ மைல் தொலைவில் உள்ளது. வருணனும், தேவகன்னிகைகளும் பூசித்த தலம். இரண்டு தேவி சந்நிதிகள் உள்ளன. நல்லெண்ணெய் அபிடேகம் செய்தால் பாதி இலிங்கத்தில் சுவறும். திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : நீலகண்டேசுரர், நல்லநாயகேசுரர்.
அம்பிகை : உமையம்மை அழகாம்பிகை.

நீலக் குடிசிவன் நெய்யாடி நாதர்
வாலை பெரிய நாயகி வன்னிலம். (சிவ.)

வைத்த மாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்த போது செறியார் பிறிவரே

நித்த நீலக் குடியர ணைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி—பொது. திருநா.

173. நெடுங்களம்: (சோழநாடு)

சோழகம்பட்டி இரயில்வே நிலையத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

வங்கிய சோழனுக்கு அநுக்கிரகம் செய்த இடம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : நித்தியசுந்தரேசுரர்.
அம்பிகை : ஒப்பிலாநாயகி.

நெடுங்கள மேவு நித்திய சுந்தரர்
திடந்தேரு மொப்பிலா தவள்திகழ் சூரியன். (சிவ.)

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நெடுங்கள மாநகரான்றன்னை—புள்ளிருக்குவேளூர். திருநா.
நின்றியூரு நெடுங்களமுமேவி வலஞ்சுழி. திருநா.
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக்காவும்—பொது. திருநா.

விள்ளாத நெடுங்களம் வேட்களம் நெல்லிக்கா—பொது.
திருநா.

நீள்சடையான் நெல்லிக்காவு நெடுங்களம்—பொது.
சு.

174. திரு நெய்த்தானம் (சோழநாடு)

தஞ்சாவூரிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. சப்தஸ்தான க்ஷேத்திரங்களுள் ஏழாவது. சரசுவதி பூசித்த தலம். தக்ஷிணாமூர்த்தி நின்ற கோலம். தில்லைத்தானம் என்று வழங்குகிறது.

சுவாமி : நெய்யாடியப்பர்.
அம்பிகை : பாலாம்பிகை.
தீர்த்தம் : காவிரி.

திருநெய்த்தானம் சிவன்நெய்யாடி
கருதுவா லாம்பிகை கனகா வேரி (சிவ.)

காலனை வீழச்செற்ற கழலடி இரண்டும்வந்தென்
மேலவா யிருக்கப்பெற்றேன் மேதகத் தோன்றுகின்ற
கோலநெய்த் தானமென்னும் குளிர்பொழிற்
கோயின்மேய
நீலம்வைத் தனையகண்ட நினைக்குமா
நினைக்கின்றேனே.
(திருநா. 4-ஆம் திரு.)

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய ஒருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நிறைவயல் சூழ் நெய்த்தானமேய செல்வர்—கோயில்.
திருநா.

நென்மலிந்த நெய்த்தானஞ் சோற்றுத்துறை—புறம்பயம். திருநா.
பூந்துருத்தி நெய்த்தான மேயார்தாமே —பழனம். திருநா
துருத்தி நெய்த்தானத்தாய் என்றேன் நானே—ஐயாறு. திருநா.
குன்றியூர் குடமூக்கிடம் வலம்புரங்குலவிய நெய்த்தானம்—வலஞ்சுழி. திருஞா.
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தானத்தார்—குடந்தைக் கீழ்க்கோட்டம். திருநா.
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தினானை—செங்காட்டங்குடி. திருநா.
நெய்த்தான மேயானை யாரூரென்னும் பதியானை—பள்ளியின்முக்கூடல். திருநா.
திருத்துருத்தி திருப்பழனம் திருநெய்த்தானம்—ஆரூர். திருநா.
சோற்றுத்துறை துருத்தி நெய்த்தானமும்—அதிகை. திருநா.
கச்சியூர் கச்சி சிக்கனெய்த்தானம்மிழலை—இடையாறு. சு.
துருத்தி பழனமோ நெய்த்தானமோ—ஆமாத்தூர். திருநா.
மாசிலாச்சீர் மறைக்காடு நெய்த்தானம்—இலம்பையங் கோட்டூர். திருஞா.
பேரூர் நன்னீள்வயல் நெய்த்தானமும்—பொது. திருஞா.
நீற்றிற் பொலிந்த நிமிர் திண்டோள் நெய்த்தானத் தெந்நிலாச் சுடரை—பொது. திருநா.
நிலமலி நெய்த்தா னத்தோ டெத்தா னத்தும்—பொது. திருநா.
சோழ நாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை—பொது. சு.
துருத்திச் சுடரே நெய்த்தானத்தாய் சொல்லாய் கல்லாலா—பொது. சு.

175. திரு நெல்லிக்கா. (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். திருவாரூருக்குத் தெற்கே எட்டு மைல் தொலைவில் உள்ளது. சூரியனும், பிரமனும் பூசித்த தலம். தீபாவளி முதல் ஏழுநாளும், மாசி மாதம் 18-ஆம் தேதி முதல் ஏழு நாளும் அத்தமனசமயத்தில் சூரியனுடைய கிரணங்கள் சுவாமிமேல் விழுகின்றன. திரு ஞானசம்பந்தர் பாடிய தலம்.

ஆமலகேச சோழன், உத்தமசோழன், இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழ அரசர்கள் வழிபட்டு நற்கதி யடைந்த தலம்.

சுவாமி : நெல்லிவனநாதேசுவரர், ஆமலகவனேசுவரர்.
அம்பிகை : மங்களநாயகி.
தீர்த்தம் : பிரமதீர்த்தம், சூரிய தீர்த்தம்.
விருட்சம் : நெல்லி.

நெல்லிக் காவுறை நெல்லிவ னேசர்
வல்லி மங்கள மாதயன் தீர்த்தம். (சிவ.)

அறத்தால் உயிர்கா வலமர்ந் தருளி
மறத்தால் மதில்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தால் தெரிவெய் தியதீவெண் டிங்கள்
நிறத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே.

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

திருவாரூர் தேவூர் திருநெல்லிக்கா—அதிகை. திருநா.
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக்காவும்—பொது. திருநா.
விள்ளாத நெடுங்களம் வேட்களம் நெல்லிக்கா—பொது. திருநா.
நீள்சடையானெல்லிக்காவும்—பொது. சு.

176. திரு நெல்வாயில் : (சோழநாடு)

சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. சுவாமி சம்பாநெல் விளையும் வயலில் தோன்றியவர். இந்தத் தலத்தில் ஆலயங்கள் இரண்டு உள்ளன. சிவபுரி என்று வழங்குகிறது. தெற்கே இருக்கும் ஆலயத்தின்முன் திருக்கழிப் பாலையில் இருந்த பால்வண்ணநாதர் இருக்கிறார். திருக் கழிப்பாலைக் கோயில் கொள்ளிடநதியால் கொண்டு போகப் பட்டது. நெல்வாயில் லிங்கத்தின் பின்புறத்தில் பார்வதி பரமேசுவரர் திருவுருவங்கள் உள்ளன.

நெல்வாயில் என்பது வேறு ஓர் ஊர். சந்நிதி. கிழக்கு திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : உச்சிநாதேசுவரர், மத்தியாந்நே சுவரர்.
அம்பிகை : கனகாம்பிகை
தீர்த்தம் : கிருபாசமுத்திரம்.

வளர்நெல் வாயில் வாழுச் சிநாதர்
கிளர்கன காம்பிகை கிருபா சமுத்திரம். (சிவ.)

புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னார்மணி நீர்நெல் வாயிலார்
நடையினுல் நால்விரற் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சி யாரே.

(திருஞா 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

நெடுங்களமு நெல்வெண்ணெய் நெல்வாயிலும்—
திருவதிகை. திருநா.

177. திருநெல்வாயில் அரத்துறை: (நடுநாடு)

பெண்ணாகடம் இரயில்வே நிலையத்திற்குத் தென்மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் கோயிலின் பெயரைக் கொண்டு திருவரத்துறை என்றும் வழங்கப்படுகிறது. 'நிவாநதியின்' வடகரையிலுள்ளது. சம்பந்தருக்கு முத்துச் சிவிகை குடை, சின்னங்கள் சிவபெருமானால் அளிக்கப்பட்ட தலம். ஆதித்துறை(காரியனூர்) திருவாலந்துறை, திருமாந்துறை, ஆடுதுறை, திருவதிட்டத் துறை (திட்டகுடி) திருக்கைத் துறை என உள்ள துறைகள் ஏழையும், சப்தரிஷிகள் பூசை செய்ய வேண்டி நீவா என்று அழைத்ததாக ஐதிஹ்யம். மூவரும் பாடிய தலம்.

கணபதிக்கு அருகில் உள்ள அஷ்டலக்ஷ்மிகளும், சுவரின் மாடங்களிலுள்ள சிற்ப வேலைகளும் பாராட்டற்குரியன.

சுவாமி : அரத்துறை நாதர்.
அம்பிகை : ஆநந்தநாயகி.
தீர்த்தம் : நீலமலர்ப் பொய்கை, வெள்ளாறு.

அரத்துறை மேவும் அரத்துறை யார்சேர்
பரைபே ரானந்த நாயகி வெள்ளாறு. (சிவ.)

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்தி
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடுகும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே

(திருஞா. 2-ஆம் திரு.)

கடவு ளைக் கட லுள்ளெழு நஞ்சுண்ட
உடலு ளானை ஒப்பாரி இலாதவெம்
அடலு ளானை அரத்துறை மேவிய
சுடரு ளானைக்க கண் டூர்நாம் தொழுவதே.

(திருநா. 5-ஆம் திரு.)

கல்வாய் அகிலும் கதிர் மாமணியும்.
கலந்துந்தி வரும்நிவ வின்கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடுறையும்
நிலவெண்மதி சூடிய நின்மலனே
நல்வா யில்செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன்
தொடர்ந்தேன் உய்யப்போவதோர் சூழல் செல்லே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

நள்ளாறு தெள்ளாறரத்துறை வாய் எங்கணம்பனே.
புக்கொளியூர் அவிநாசி. சு.

178. திருநெல்வெண்ணெய் (நடுநாடு)

உளுந்தூர்ப்பேட்டை இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கே நான்கு மைல் தொலைவில் உள்ளது. நெய் வெண்ணெய் என வழங்கப்பெறும். சநகர், சநற்குமாரர் முதலியோர் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : வெண்ணெயப்பர்.
அம்பிகை : நீலமலர்க்கண்ணி.

திருநெல் வெண்ணெய் சிவன்வெண்ணெய் நாதர்
கருதருங் குவளைக் கண்ணிநீர் வெண்ணெய். (சிவ.)

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவிய நீரே.
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல்வணம் இடுவது சொல்லே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரம்.
நெடுங்களமு நெல்வெண்ணெய் நெல்வாயிலும்—அதிகை.
திருநா.

179. திருநெல்வேலி: (பாண்டிநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். தாம்பிரவர்ணிநதியின் கரையில் இருக்கின்றது. இத்தலம் வேணுவனமென்றும் வழங்கும். இத்தலத்தில் இறைவன் மூங்கிலடியில் முளைத்தது பற்றி அவர் திருநாமம் வேய் முத்தென வழங்கும். சிவபெருமான் நிவேதனத்துக்குச் சேமிக்கப்பட்ட நெற்களஞ்சியத்தை வெள்ளமடித்துப் பேகாமல் வேலிகட்டிக் காத்தமையால் நெல்வேலியாயிற்று.

பஞ்ச சபைகளுள் ஒன்றாகிய தாமிரசபையை உடைய தலம். செப்பறை சுவாமி சந்நிதிக்கெதிரில் ஏழிசை ஒலி எழும்பும் கருங்கல் தூண்கள் உள்ளன. தாமிரபர்ணி நதிக்கரையில் உள்ள ஊர்களில் தலைமை பெற்று விளங்குவது இத்தலமாகும். இலக்கணக் கொத்தின் ஆசிரியராகிய ஸ்ரீசுவாமிநாத தேசிகர் இத்தலத்தைச் சிவபுரமென்று பாராட்டியிருக்கின்றார். இத்தலத்தின் பெருமைக்கு முக்கிய காரணமாக இருப்பவை ஸ்ரீகாந்திமதி ஸமேத ஸ்ரீஅனவரத நாயகர் திருக்கோயிலும் தாமிரபர்ணி யாற்றில் அமைந்துள்ள பல துறைகளுமேயாகும்.

ஆற்றின் நடுவில் உள்ள குறுக்குத்துறை முருகன் கோயில் சிறப்பு புடையது. மதுத்திவலை சிந்துபூந்துறை கமழ்திருநெல்வேலி. பாசுரத்தில் கண்டபடி ஆற்றங்கரையிலுள்ள ஒரு பகுதி சிந்து பூந்துறை என்று இன்றும் வழங்கப் பெறுகிறது.

திருமால், பிரமன், அகத்தியர் பூசித்த தலம். நெல்லையப்பர், வேணுவன நாதர் என்ற இரண்டு சந்நிதிகள் உள்ளன. தாருகாவன விசேடங்கள் இங்கு நடந்தன என்பர். இராவணன் கயிலையை எடுப்பது போன்ற விமானமண்டபம் ஒன்று பிராகாரத்தில் உள்ளது.

ஸ்தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.

சுவாமி : நெல்லையப்பர்; வேணுவனேசுரர், சாலிவாடீசுவரர்.
அம்பிகை : காந்திமதியம்மை.
தீர்த்தம் : தாம்பிரபர்ணி.

வினய நல்திருநெல் வேலியில் வேணு
வனநாதர் காந்திமதி யம்மன்தாம் பிரபன்னி. (சிவ.)

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை
மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய்
நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை
செல்வர் தாமே.

(திருஞா. 3-ஆம் திரு.)

180. பட்டீச்சுரம் : (சோழநாடு)

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே நான்கு மைல் தொலைவில் உள்ளது. பட்டீச்சுரத்திற்குக் கிழக்கே ஒரு மைல் தொலைவில் வைப்புத்தலமாகிய முழையூர் இருக்கிறது.

காமதேனுவின் கன்றுகிய பட்டி யென்பது வழிப்பட்டுப் பேறு பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. ஸ்ரீராமருக்குச் சாயைஹத்தி தீர்ந்த தலம். மார்கழி அமாவாசையன்று இந்த ஐதிகம் நடை பெறுகின்றது. கோயிலிலுள்ள நந்தி சற்று விலகியுள்ளது.

சுவாமி : பட்டீசுரர், தேனுபுரீசுவரர்.
அம்பிகை : பல்வளைநாயகி.
தீர்த்தம் : ஞான தீர்த்தம்.

இத்தலத்தில் வேறொரு வீதியில் சத்திமுற்றம் என்னும் தலம் இருக்கிறது. இராப்பட்டீச்சுரம், பேரூர்ப்பட்டீச்சுரம், என வேறு இரண்டு தலங்கள் இருப்பதால் வேறுபாடு அறிதற்கு இது பழைய பட்டீச்சுரம் என்று கூறப்படும். பழசை, (பழையாறு.) சோழர்களுடைய தலைநகரங்களுள் ஒன்று. சுந்தர சோழர் முதலியவர்கள் இந்நகரத்திலிருந்து அரசாண்டதாகத் தெரி கின்றது. இதிலுள்ள அரசர்கள் மீதுள்ள பாடல்கள் பல வீர சோழியவுரையில் மேற்கோளாகக் காணப்படும். பழையாறைக் குள் முழையூர், வள்ளலார் கோயில் (சுட்டுமலை இது) வடதளி, திருமேற்றளி, திருச்சத்திமுற்றம், அரிச்சந்திரபுரம், பாற்குளம் முதலிய சிலதலங்களும் தக்ஷிணதுவாரகையென வழங்கப்படும் கோணப் பெருமாள் கோயில் முதலிய பல தலங்களும் உண்டு. திருவலஞ்சுழியும் தாராசுரமும் இந்நகரத்தில் அடங்கியனவென்றே கூறுவர். மிகப்பெரியதாகவும், செல்வமுள்ளதாகவும் விளங்கி யது பட்டீச்சுரம். இத்தலத்தைச் சுற்றியுள்ள இடங்களிலெல் லாம் பழைய சரித்திரத்தை விளக்கும் சின்னங்கள் நிரம்பியிருக் கின்றன. பட்டீச்சுரத்தின் வடக்குவீதியும் திருச்சத்தி முற்றத்தின் தெற்கு வீதியும் ஒன்றே. அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் அவருக்குப் பட்டம் அளித்தவரும் முதல் மந்திரியாயிருந்தவரும் ஆகிய கோவிந்த தீக்ஷிதர் அவதரித்த ஊர் பட்டீச்சுரமே.

ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் திருப்பணி செய்ததலம். அவருடைய தும் அவர் பத்தினியுடையதுமான உருவங்கள் கைகுவித்து நிற்கும் வண்ணமாகக் கோயிலில் தேவியின் சந்நிதானத்தின் தென்புறமாக உள்ளன. அவர் வசித்த இடம் இத்தலத்திலுள்ள ஸ்ரீ தேனுபுரே சர் ஆலயத்தின் தென்பாலுள்ளதாகிய அக்கிரகாரத்தின் மேல் சிறகிலுள்ள வீடுகளில் ஒன்று.

வள்ளலார் கோயில் என்பது பரசுதீர்த்தன் புரம் என்று புராணத்தில் வழங்கும். இது தேவாரத்தில் 'மாடமழபாடி யுறை பட்டீச்சுரமேய' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வீரசைவர்கள் மிகுதியாக இருந்ததை ஆலயங்களிலுள்ள வீர பத்திரர் விக்கிரகங்களும், தனியாக வீரபத்திரருக்குரிய ஆலயங் களும் விளக்கும்.

வடதளி என்பது வள்ளலார் கோயிலுக்கு மற்றொரு பெயர். திருமேற்றளி என்பது பட்டீச்சுரத்திற்கு நேர் மேற்கே இருத்தலின் பெயர் பெற்றது போலும்.

சத்திமுற்றப்புலவர் பிறந்த ஊர். அவருடைய பரம்பரை யினர் இன்னும் இங்கே உள்ளனர். பட்டீச்சுரத்தில் குமர

கோட்டம் தனியே உள்ளது. சுவாமியின் திருவுருவம் மிகவும் நேர்த்தியானது. ஷி ஆலயம் கர்ப்பக்கிருகம் நந்தியாவர்த்தச் செடிகளால் சூழப் பெற்றிருத்தலின் நந்தியா வர்த்த வனம் என்று கூறுவர். இதன் உட்பிராகாரத்தில் வடக்கே ஒரு தீர்த்தம் உண்டு. இது தனுஷ்கோடி தீர்த்தம் என்று கூறப்படும். இராமனுக்குச் சாயாஹத்தி இங்கே நிவர்த்தியானது என்பர். அங்கே இராமனுடைய படம் கிணற்றுக்கு மேலே ஒரு புரையில் உள்ளது. இந்த ஆலயத்தில் அம்மன் கோயிலுக்குப் போகிற வழியில் வீரபத்திரர் விக்கிரகம் உள்ளது. பழையாற்றில் மூதேவியின் விக்கிரகமும், உச்சிஷ்ட கணபதியின் விக்கிரகமும் உள்ளன.

சோழர்களுக்குப்பின் நகரத்திற்கு உள்ளே திருமலை ராயனாறு பிற்காலத்தில் உண்டாக்கப்பட்டது என்பது நன்கு விளங்கும். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

பட்டீச்சுரத்திற்கு மேற்கே பெரிய மணல்மேடு உண்டு. அதற்கு நந்தன்மேடு என்று பெயர். ஆற்றின் வடகரையில் இரண்டு சிவாலயங்கள் பூசை நிவேதனங்களுடன் இருந்து வருகின்றன. ஒன்று பள்ளிப்படை வள்ளலார். மூலவர் திருவா. வடுதுறை நமச்சிவாய மூர்த்திக்கு அடுத்தவரான சிவப் பிரகாசர் வீரசைவத்தில் புகுந்த பின்பு இம்மடங்களைத் தம் பரம்பரையாக ஆக்கிவிட்டு (பேரூர், விருத்தாசலம், போரூர், துறையூர்) இங்கே வந்து பரகதி அடைந்தனர் என்பர். அவருடைய சமாதியும் அவர் பெயரால் ஒரு மடமும் உண்டு. பட்டீச்சுரத்தைச் சுற்றியுள்ள நான்கு படைவீடுகள்: 1. ஆரியப்படை வீடு, 2. பம்பைப்படை வீடு, 3. மணற்படைவீடு, 4. புதுப்படை வீடு. இவையாவும் பழையாற்றுக்கு வடக்கே உள்ளன.

பாற்குளம்: இது பட்டீச்சுரத்திற்கு ஈசானமூலையில் ஒரு நாழிகை வழித்தூரத்திலுள்ளது. தீர்த்தம் மிக்க வெள்ளை நிறமும், மிக்க சுவையும், மிக்க குளிர்ச்சியும் உள்ளது. இதில் திருச்சத்தி முற்றத்து ஸ்வாமி தை மாதம் ரதசப்தமியில் தீர்த்தம் கொடுப்பதுண்டு.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முத்துப்பந்தர் பெற்ற தலம். அவருடைய கோலத்தைச் சிவபெருமான் காணுதற் பொருட்டு அவர் கட்டளைப்படி நந்திதேவர் விலகினார்.

பட்டீச்சுரம் கோயிலில் திருமாளிகைப் பத்தியில் மேற்குக் கோடியில் எழுந்தருளியுள்ள விநாயகருக்கு மதவாரணப் பிள்ளையார் என்பது திருநாமம்.

பட்டீச்சுரம் முதலிய பல தலங்களைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிற பழையாறை என்னும் பழைய நகரத்தின் மரூஉவாகிய பழசை என்னும் பெயர் பட்டீச்சுரத்திற்குத் தலைமை பற்றி வழங்கும்.

வல்லபட் டீச்சுரம் வாழ்பட் டீசுரர்
பல்வளை நாயகி பகர்ஞான தீர்த்தம். (சிவ.)

பாடல்மறை சூடல்மதி பல்வளையோர்
பாகமதில் மூன்றொர் கணையால்
கூடளரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்பழை சையுள்
மாடமழ பாடியுறை பட்டிசரம்
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடு மவரே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்:

பழையாற்றுப் பட்டீச்சுரத்தாய் போற்றி—அதிகை. திருநா.

181. திருபந்தணைநல்லூர். (சோழநாடு)

இவ்வூர் குற்றாலத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. வடமொழியில் கந்துகபுரி யென்று வழங்கும். தலவிருக்ஷம் சரக்கொன்றை சுவாமியின் கர்ப்பக் கிரகத்தின் வடபால் உள்ளது. தென்பால் சட்டைநாதர் எழுந் தருளியுள்ளார். கர்ப்பக்கிரகத்திலும் கோபுரத்திலும் கல் வெட்டுக்கள் உள்ளன. அம்பிகை பசுத்துவம் நீங்கிய பின்பு தவமியற்றினள். அம்பிகை கோயிலுக்கு மேல்பால் பத்திரகாளி யும், கோபுரத்தில் ஐயனாரும் நிருதிமூலையில் திருமாலும் உள்ளனர். மண்ணியாற்றங் கரையில் வெள்ளைப்பிள்ளையார் கோயில் உள்ளது. இவ்வூருக்கு ஈசானமூலையில் அரசேரி என்னும் ஊரும் கண்ணுவாசிரமும் உள்ளன. பூபதி சூடாமணி என்னும் அரசன் திருப்பணி செய்த தலம். சிவலிங்கப் பெருமான் திருவுரு வம் சைகதமிருத்திகையாலானது. மிகச்சிறியது. திருமுடியில் குளம்புத் தழும்பு உள்ளது. சடையிலிருந்து பந்துண்டானது.

இத்தலத்தில் கலியாணசுந்தரமூர்த்தி பிரசித்தம். ஆதிகேசவப் பெருமாள் கோயில் சிவன் கோயிலுக்குள்ளேயே இருக்கின்றது. கைலையில் உமாதேவியார், லக்ஷ்மி, சரஸ்வதி இருவரோடும் பந்து விளையாடிக் கொண்டிருப்ப அப்போது சிவபெருமான் அங்கே வந்தார். ஒருவரும் அவர் வந்ததை அறிந்தும் மதிக்க வில்லை. அதனால் சினமுற்று அவர் அவர்களைப் பசுவாய்ப் போகும்படி சாபமிட்டார். பந்தையும் சடையில் ஒளித்தார்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி: பசுபதீசுவரர். அம்பிகை: காம்பனதோளி யம்மை, வேயுறுதோளியம்மை, வேணுபுஜாம்பிகை.

இவ்வூருக்கு 2 மைல் தொலைவில் கங்கை கொண்ட சோழ புரம் உள்ளது. இது வைப்புத் தலம். தேவகன்னிகைகளும், காமதேனுவும் பூசித்த தலம். மணவாளக் கோலம்.

கோட்டையின் சிதைவும் அகழியும் உள்ளன. தீர்த்தம்: சூரிய தீர்த்தம், வாலி தீர்த்தம் வழிபட்டோர்: இந்திரன், வாலி, கண்ணுவர். மாசிமாதத்தில் உற்சவம். மாசி மகத்தன்று தீர்த்தம். முருகக் கடவுள் கன்றாகவும் அம்பிகை பசுவாகவும் வந்தனர். கோட்டையின் நான்கு மூலைகளிலும் நான்கு பீரங்கி மேடுகள் உள்ளன. கோட்டைவாயில் வடக்கில் அநுமார் கோவில் உள்ளது. கோட்டை வாயிலில் பிள்ளையார் கோயில் உள்ளது. வாயுமூலையில் சக்கர தீர்த்தம்.

திருச்சிற்றம்பலம்:

பந்தணை நல்லூருக்குக் கிழக்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. சுவாமி பெயர்: நடனபுரீசுவரர். அம்பலவாணர். கிழக்கு முகம். அம்பிகை: சௌந்தரநாயகி தெற்கு முகம். பரசுராமருக்குப் பிரத்யக்ஷம் 2 வேலி நிலமுள்ளது. கார்காத்த வேளாளர் வீடுகள் 20 உண்டு. தலபுராணம் வடமொழியில் உள்ளது. நான்கு காலபூஜை நடக்கும். சந்திரனுடைய ஆத் மார்த்த பூஜாலிங்கம்; பெயர் சந்திரேசுவரர். பராசரர் வழி பட்ட தலம்.

ஞானசிந்து; கௌசிகவம்சத்து ரிஷி. இவருக்குச்சாரூப பதவி கொடுத்த இடம். இவராலேயே நடனபுரீசுவரர் என்னும் பெயர் உண்டாயிற்று.

சிறுகடம்பூர், காவனூர், விளத்தொட்டி ஆகிய ஊர்கள் இதன் சமீபமுள்ளன. தீர்த்தம்: 1. பராசர தீர்த்தம், 2. சந்திர தீர்த்தம்.

சுவாமி கோயிலுக்குக் கிழக்கே அம்பிகை கோயில் உள்ளது.

தேம்பொழில் பந்தணை சிவன்பசு பதியார்
காம்பன தோளி கதிர்புட் கரிணி. (சிவ.)

நோதங்க மில்லாதார் நாகம் பூண்டார்
நூல்பூண்டார் நூன்மேலோர் ஆமை பூண்டார்
பேய்தங்கு நீள்காட்டில் நட்ட மாடிப்
பிறைசூடும் சடைமேலோர் புனலும் சூடி
ஆதங்கு பைங்குழலாள் பாகம் கொண்டார்
அனல்கொண்டார் அந்திவாய் வண்ணங் கொண்டார்
பாதங்க நீறேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே.

(திருநா. 6-ஆம் திரு.)

குறிப்பு: 'பந்த நல்லூர்' என்றும், பந்தண நல்லூர் என்றும் வழங்கப்படும். உமாதேவியார் ஆடிய பந்து வந்து அணைந்த ஊர் என்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது.

182. திருப்பயற்றூர் : (சோழநாடு)

விற்குடி இரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே ஆறு மைல் தொலைவில் உள்ளது. பைரவ முனிவர் பூசித்த தலம். பாண லிங்கம் பயறு போன்று இருக்கும். திருப்பயத்தங்குடி என்று வழங்குகிறது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : திருப்பயற்றீசுரர்.
அம்பிகை : காவியங் கண்ணியம்மை.
தீர்த்தம் : தேவி தீர்த்தம்.

பயற்றூர் சேர்திருப் பயற்றூர் நாதர்
கயற்கா வியங்கண்ணி கமழ்தேவி தீர்த்தம். (சிவ.)

உரித்திட்டார் ஆனையின்தோல் உதிரஆ
றொழுகியோட
விரித்திட்டார் உமையாளஞ்சி விரல்விதிர்த்
தலக்கண்நோக்கித்

தரித்திட்டார் சிறிதுபோது தரிக்கில ராகித்தாமும்
சிரித்திட்டார் எயிறுதோன்றத் திருப்பயற் றூரனாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்:

பனையூர் பயற் றூர் பராய்த்துறையும்—அதிகை. திருநா.

183. திருப்பரங்குன்றம் : (பாண்டிநாடு)

இத்தலம் மதுரையிலிருந்து பேருந்து வழியில் 4 மைல் தொலைவில் உள்ளது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையை இயற்றித் தம்மோடு தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரைக் காப்பாற்றிய அற்புதத்தலம். முருகக் கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய திருவிளையாடல் ஒவ்வோராண்டும் இத்தலத்தில் பங்குனி மாதத்தில் நடக்கும் திருவிழாவில் நான்காந் திருநாளில் நடைபெற்று வருகின்றது. நக்கீரர் சிவபூசை செய்த சரவணப் பொய்கை என்னும் தீர்த்தம் கோயிலுக்கு அருகில் உள்ளது. உக்கிரகுலத்துப் பிறந்த பாண்டியன், இந்திரன் பூட்டிய ஆரத்தை இத்தலத்தில் வைத்தனன். இத்தலம் முருகக் கடவுள் முதலியோரால் பூசிக்கப்பெற்றது. இத்தலக் கோயிலில் நக்கீரர் பிம்பம் இருக்கிறது. இத்தலம் இமயமலைக்கு நிகரானது. திருமாலும் சிவபிரானும், பிரமதேவரும், துவாதசாதித்தியரும் மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும் ஏகாத சருத்திரர்களும், எட்டுத்திக்குப் பாலகர்களும் மற்றத் தேவர்களும் அசுரர்களும் தெய்வமுனிவர்களும் முருகப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு இம்மண்ணுலகில் வந்து உறைவதற்குரிய இடமாயிற்று இத்தலம்.

முருகனுடைய அறுபடை வீடுகளுள் இதுவே முதலாவது.

இத்தலத்தில் முருகன் தெய்வயானையாரைத் திருமணம் புரிந்தனன். இங்கு முருகனுக்கு உபயநாச்சியார் இலர். தெய்வயானையார் ஒருவரே இடப்பக்கத்தில் நாச்சியாராக உள்ளார். ஒவ்வொரு கிருத்திகை நாளிலும் பக்தர்கள் திரளாக வந்து வழிபடுகின்றனர். திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலம். சுந்தரர் மூவேந்தரோடு இங்குத் தரிசனம் செய்ததைத் தேவாரம் கூறும்.

சுவாமி பெயர் : பரங்கிரிநாதேசுவரர்.
அம்பிகை : ஆவுடைநாயகி.
தீர்த்தம் : காசி தீர்த்தம்.

மீன்கள் ஊதா நிறம், பொன்னிறம். அவல் போடுவார்கள். நிரம்ப அழகியதேசிகர் இயற்றிய புராணம் அச்சிடப்பட்டுள்ளது.

இங்குப்பெருமாள் கோயில் ஒன்று உண்டு. இது ஆறுமுகக் கடவுள் கோயிலுக்கு அடுத்த கீழ்ப் புறத்திலிருக்கிறது.

பரங்குன் றத்தில்வாழ் பரங்குன்று நாயகர்
பரங்குன்று நாயகி பரிந்தருள் சரவணை. (சிவ.)

நீடலர்சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலனந்திச் சுடரெரியேந்திச் சுடுகானில்
ஆடலனஞ்சொ லணியிழையாளை ஒருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே.
(திருஞா. 1-ஆம் திரு.)

கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டூர்
உமைக்கொண்டுழல் கின்றதோர் கொல்லைச்
சில்லைச்
சேத்திட்டுக்குத் தித்தெரு வேதிரியும்
சிலபூதமும் நீரும் திசைதிசையன
சோத்திட்டுவிண் ணோர்பலரும் தொழநும்அரைக்
கோவணத் தோடொரு தோல்புடைசூழ்ந்(து)
ஆர்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும்பாம்(பு)
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பண்குணத்தார் பாடலோடாட லோவாப் பரங்குன்றம்மேய
பரமர்போலும்—இடைமருதூர்.
திருநா.

பாசூர் பரங்குன்றம் மேயான்றன்னை—ஆரூரநெறி.
திருநா.

பண்ணார்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே—பொது.
திருநா.

184. திருப்பராய்த்துறை : (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ளது. அகண்ட காவிரிக்கரையி லுள்ளது. இந்திரன், குபேரன் சப்த ரிஷிகள் பூசித்த தலம். நாயும் இத்தலத்திலுள்ள சிவபெருமானைப் பூசித்ததாகத் தெரி கிறது. இதன் வடமொழிப் பெயர் தாருகாவனம் என்பது.

கருட கர்மவிபாகம் என்னும் நூல் பலவகையான சாந்தி களைப் பற்றிச் சொல்லும் பொழுது இத்தலத்தைப்பற்றிக் குறிப் பிடுகிறது. திருவானைக்காவிற்குரிய ஸப்தஸ்தானங்களில் இத் தலமும் ஒன்றுதிருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : பராய்த்துறை நாதர், தாருகாவனநாதர்.
அம்பிகை : பசும்பொன்னாயகி; ஹேமவர்ணாம்பிகை.
தீர்த்தம் : காவிரி; இங்கே தீர்த்தம் பல வுண்டு.
விருட்சம் : பராய்.

திருப்பராய்த் துறைசேர் சிவன்பராய்த் துறையார்
அருள்புரி பசும்பொன் நாயகி காவேரி. (சிவ.)

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே.
(திருஞா. 1-ஆம் திரு.)

பராய்-முருடுகள் உள்ள ஒருவகை மரம்.

கரப்பர் காலம் அடைந்தவர் தம்வினை
சுருக்கு மாறுவல் லார்கங்கை செஞ்சடைப்
பரப்பு நீர்வரு காவிரி தென்கரைத்
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வரே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பண்ணார் களிவண்டு பாடியாடும் பராய்த்துறை
—சாய்க்காடு. திருநா.

பராய்த்துறையும் பாசூருமேயான் கண்டாய்—கோடிகா.
திருநா.

பராய்த்துறையேன் என்றோர் பவளவண்ணர்—புறம்பயம்.
திருநா.

பராய்த்துறையும் வெண்காடும் பயின்றான்றன்னை—
ஆலம்பொழில். திருநா.

பராய்த்துறையார் சிராப்பள்ளியுள்ளார்—வீழிமிழலை.
திருநா.

பராய்த்துறை பைஞ்ஞீலியிடம் பாவித்தானை—
ஆரூரரநெறி. திருநா.

பனையூர் பயற்றூர் பராய்த்துறையும்—அதிகை. திருநா.

பராய்த்துறையான் பழனம் பைஞ்ஞீலியான்காண்—
காளத்தி. திருநா.

பராய்த்துறை யெம்பசும் பொன்னை—பொது. திருநா.

பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட்டூர்—பொது.
திருநா.

பயில்வாய பராய்த்துறை தென்பாலைத் துறை—பொது.
திருநா.

185. பரிதிநியமம்: (சோழநாடு)

சாலியமங்கலம் இரயில்வே நிலையத்திற்குத் தென்மேற்கே எட்டு மைல் தொலைவில் உள்ளது. தஞ்சாவூரிலிருந்து பட்டுக் கோட்டை போகும் பஸ் வழியில் பத்து மைல் தொலைவில் உள்ளது. சூரியன் பிரதி வருடமும் பங்குனி மாதம் 19-ஆம் நாள் சுவாமியைப் பூசிக்கிறார். பரித்தியப்பர் கோயில் என்றும் வழங்கும். மார்க்கண்டேயருக்கு மார்கழித் திருவாதிரையில் அநுக்கிரகம் செய்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி: பரிதியப்பர்.
அம்பிகை: மங்கள நாயகி.
தீர்த்தம்: சூரிய தீர்த்தம்.

பரிதி நியமம் பரிதியப்பர்
அருள்மங் களநா யகிசூ ரியனாம். (சிவ.)

விண்கொண்ட தூமதி சூடிநீடு விரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப்பேணார்
பலிதேர்ந்து.
கண்கொண்ட சாயலோ டேர்கவர்ந்த கள்வர்க்
கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும் பரிதிந் நியமமே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பரிதி நியமத்தார் பன்னிருநாள்—கோயில். திருநா.
பரிதி நியமத்தானைப் பாசூரானை—தலையாலங்காடு. திருநா.
குலாவு திங்கட் சடையான் குளிரும் பரிதிநியமம்—பொது. திருஞா.

பருத்தி நியமத்துறைவாய்—பொது. சு.

186. திருப்பருப்பதம் : (வடநாடு)

கர்னூல் ஜில்லாவிலுள்ள நந்தியால் இரயில்வே நிலையத்திற்கு வடகிழக்கே அறுபத்தாறு மைல் தொலைவிலுள்ளது. நந்திதேவர் மலைவடிவாக நின்று இறைவனைத் தாங்கி நிற்கும் திருத்தலம். இத்தலம் ஸ்ரீசைலம் என்றும் மல்லிகார்ச்சுனபுரம் என்றும் வழங்கப்படுகிறது. இத்தலத்திலுள்ள திருக்கோயிலில் நான்கு வாயில்களுள்ளன என்பது திருக்காளத்திப் புராணத்தால் தெரிகின்றது. இத்தலத்தைச் சம்பந்தரும், சுந்தரரும் காளத்தியிலிருந்தே பாடினர்.

மலையின் உயரம் கடல்மட்டத்தின்மேல் 1563 அடி. தூரத்திலிருந்து பார்த்தவர்களுக்கும் முத்தியளிக்கும் தலம். மூவரும் பாடிய தலம்.

சுவாமி : பருப்பத நாதர்.
அம்பிகை : பருப்பதநாயகி.
தீர்த்தம் : பாலாழி.

பருப்ப தந்திருப் பருப்பத நாதர்
பருப்பத நாயகி பகர்பா லாழி. (சிவ.)

கன்றினார் புரங்கள் மூன்றும் கனலெரி யாகச் சீறி
நின்றதோ ருருவம் தன்னால் நீர்மையும் நிறையும்
கொண்டு
ஒன்றியாங் குமையுந் தாமும் ஊர்பலி தேர்ந்து
பின்னும்
பன்றிப்பின் வேட ராகிப் பருப்பத நோக்கி னாரே.
(திருஞா. 4-ஆம் திரு.)

சுடுமணி உமிழ்நாகம் சூழ்தர அரைக்கசைத்தான்
இடுமணி எழிலானை ஏறலன் எருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே.
(திருஞா. 1-ஆம் திரு.)

மானும்மரை இனமும்மயில் இனமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமரம் உரிஞ்சிப் பொழில் ஊடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பருப்பதத்தே பல்லூழி நின்றார் போலும்—சாய்க்காடு.
திருநா.
பருப்பதத்தானைப் பைஞ்ஞீலியானை—
நாகைக்காரோணம். திருநா.
பருப்பதத்திலருங்கலத்தைப்பாவந்தீர்க்கு மருமணியை—
ஆரூர். திருநா.
பருப்பதம் பரவித் தொழுந் தொண்டர்கள்—
வெண்ணியூர். திருநா.
பருப்பதமும் பாசூரும் மன்னினாரும்—வெண்ணியூர்.
திருநா.
பருப்பதத்தான் கண்டாய்—மறைக்காடு. திருநா.
சீபர்ப்பதம் சிந்தை செய்தாய் போற்றி—அதிகை. திருநா.
இலங்கார் பருப்பதத் தோடேணார் சோலைக்கானார்
மயிலார் கருமாரியும்—அதிகை. திருநா.

மலையினார் பருப்பதந்துருத்தி மாற்பேறு—
இலம்பையங்கோட்டூர். திருஞா.
தெளியீருளஞ் சீபர்ப்பதந் தெற்கு வடக்கா—கேதாரம்.
சு.
பரங்குன்றம் பருப்பதம் பேணி நின்றே—பொது. திருஞா.
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப்பதம்—பொது. திருநா.
பருப்பதங் கைக் கொண்டார்—பொது. திருநா.

187. திருப்பழனம் : (சோழநாடு)

திருவையாற்றுக்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவி லுள்ளது. சப்தஸ்தானங்களுள் ஒன்று. அப்பூதி அடிகள் திருமகன் பாம்பு கடித்திறக்க, அப்பரடிகளால் உயிர் பெறுமாறு செய்தருளிய தலம். வடமொழியில் பிரயாணபுரி என்று மாறி வழங்கும். கௌசிகாசிரமம். விஷ்ணு (வேணு கோபாலர்) சந்நிதி இருக்கிறது.

இத்தலத்திற்கு அருகிலுள்ள திங்களூர் சந்திரன் பூசித்த தலம். பங்குனி, புரட்டாசிபெளர்ணமிகளிலும் அதற்கு முன்பின் இரண்டு நாட்களிலும் நிலா சுவாமியின்மேல் படுகிறது.

இங்கு வாழை அதிகம். ஆகையால் 'கதலிவனம்' என்று அழைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : ஆபத்சகாயர்.
அம்பிகை : பெரியநாயகி.
தீர்த்தம் : காவிரி.
விருட்சம் : கதலி.

அருள்திருப் பழனம் ஆபத் சகாயர்
பெரிய நாயகி பெருகிய மங்களம். (சிவ.)

ஆடினார் ஒருவர் போலு மலர்கமழ் குழலி னாளைக்
கூடினார் ஒருவர் போலுங் குளிர்புனல் வளைந்த திங்கள்
சூடினார் ஒருவர் போலுந் தூயநன் மறைகள் நான்கும்
பாடினார் ஒருவர் போலும் பழனத்தெம் பரம னாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

வேதம்ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளைஎருது ஏறிப்
பூதம்சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழனநகராரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்.—புறம்பயம்.
திருநா.
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தானத்தார்.—
குடந்தைக்கீழ்க்கோட்டம். திருநா.
பல்லார்பயில் பழனம்பாசூர் என்றும் பழனம்பதி—
திருவலம்புரம். திருநா.
பண்காட்டும் வண்டார் பழனத்துள்ளார்—வீழிமிழலை.
திருநா.
பாரார் பரவும் பழனத்தானை—நாகைக்காரோணம்.
திருநா.
திருத்துருத்தி திருப்பழனம் திருநெய்த்தானம்—திருவாரூர்.
திருநா.
துருத்தியுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத்துறை—ஆரூர்.
சு.
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத்தானை—ஆலவாய்.
திருநா.
ஐயாற்றமுதன் பழனம்நல்லம்—அதிகை. திருநா.
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி—இடையாறு.
சு.
துருத்தி பழனமோ நெய்த்தானமோ—ஆமாத்தூர். திருநா.
துருத்தியார் பழனத்துள்ளார்—கச்சியேகம்பம். திருநா.
பராய்த்துறையான் பழனம் பைஞ்ஞீலியான்காண்—
காளத்தி. திருநா.
அன்பன்காண் அணிபழனமேயான்றான்காண்—
கோகர்ணம். திருநா.
ஆற்றிற் பழனத்தம்மானை—பொது. திருநா.
அரதைப்பெரும்பாழி பழனம் பனந்தாள்.—பொது.
திருநா.
பழனம் பழனமே என்பீராகில்—பொது. திருநா.
பழனம் புகுவாரைப் பகலே கண்டேன்.—பொது. திருநா.

பழனம் பாம்பணி பாம்புரம்—பொது. சு.
பாங்கூர் பலிதேர்பரனே பரமா பழனப்பதியானே.—
பொது. சு.

188. திருப்பழூர் : (சோழநாடு)

அரியிலுருக்குத் தெற்கே தேவாரம் பெற்ற இச்சிவஸ்தலம் இருக்கிறது. இதில் உள்ள தலவிருட்சம் ஆல். பழூ என்னும் சொல்லுக்கு ஆலென்பது பொருள். ஆலமரத்தைத் தல விருட்சமாக உடையதாதலின் பழூரென்னும் பெயரும் ஆலந்துறை என்னும் பெயரும் இதற்கு உண்டாயின. இங்கே ஒரு சிவ தீர்த்தம் உண்டு. இத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான் திருநாமம் ஆலந்துறையீசர் எனத் தமிழிலும் வடமூலேசர் என வடமொழியிலும் வழங்கும். அம்பிகையின் திருநாமம் அருந்தவநாயகியென்பது. சிவபி ரானை மணந்து கொள்ளும் பொருட்டு அம்பிகை தவஞ் செய்தமையால் இத்திருநாமம் உண்டாயிற்றென்பது இத்தல புராண வரலாறு. அன்றியும் பரசுராமருக்குண்டான மாதுரு ஹத்தி தோஷம் இத்தலத்துக்கு வந்து தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பூசித்ததனால் நீங்கியதென்பர். தீர்த்த விசேடமுடைய தாதலின் துறையென்னும் பகுதி இத்தலப் பெயரோடு சேர்ந்திருக்கிறது. பரசுராமருடைய திருவுருவம், வட மூலேசருடைய மூலஸ்தானத்தின் முன்புள்ள நிலையின் மேலேயுள்ள கல் உத்தரத்திற் சயனித்த கோலமாக அமைக்கப் பெற்றுள்ளது. பரசு ராமர் தாம் வழிபட்ட காலத்தில் மலைநாட்டு அந்தணர்களைக் கொண்டு பூசை இயற்றச் செய்தனர். பிற்காலத்தும் மலைநாட்டு அந்தணர்பூசை இயற்றி வந்தனர். இது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரத்தில்,

''மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழூ ரூரே''

''அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்த மலிகின்ற பழூராளை''

என்று கூறப்படுகிறது.

சுவாமி : வடமூலநாதர், ஆலந்துறையீசர்.
அம்பிகை : அருந்தவநாயகி.
தீர்த்தம் : கொள்ளிட நதி.
விருட்சம் : ஆலமரம்.

வழுவறு பழுவூர் வடமூல நாதர்வேல்
வீழியருந் தவநா யகிமிகு பிரமம் (சிவ.)

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தன்எமை யாளுடைய அண்ணலிடம் என்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

189. பழையாறை வடதளி : (சோழநாடு)

தாராசுரத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம். பழையாறை, வடதளி என்று இரண்டு தலங்கள் இந்த இருதலங்களும் ஒரே பதிகத்தில் சேர்த்துப் பாடப்பட்டுள்ளன. வடதளியில் சுவாமி, அம்மன் ஆலயங்கள் தவிர வேறு இல்லை. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

பழையாறை சந்திரன் பூசித்த தலம். காமதேனுவின் புத்திரிகளுள் பட்டி பூசித்தது-பட்டீச்சுரம்.

விமலி-பழையாறை வடதளி
சயனி-திருமேற்றளி (கைலாசநாதர்-சபாநாயகி.)
நந்தினி-முழையூர் (பரசுநாதேசுரர்-ஞானாம்பிகை)

பழையாறு சோழ ராசதானியுள் ஒன்று. இதைச் சூழ்ந்து நாலு படைவீடுகளின் பேர்பெற்ற ஊர்கள் இருக்கின்றன. இந்த நகரத்தினுள் பண்டைக் காலத்தில் பட்டீச்சுரம், திருச்சத்தி முற்றம், வள்ளலார்கோயில் அல்லது வடதளி, முழையூர், திருமேற்றளி என்னும் சிவ ஸ்தலங்களும், கோணப்பெருமாள் கோயில் (தக்ஷிணத்துவாரகை) என்னும் பெருமாள் கோயிலும் உள்ளன. பழையாறை மேலைப்பழையாறை, கீழைப்பழையாறை என இரண்டு வகைப்படும். பழையாறை வைப்புத் தலம். இதற்கு வடக்கே பாற்குளம், அரிச்சந்திர புரம் என்னும் ஸ்தலங்கள் உள்ளன. பட்டீச்சுரத்திற்கு மேற்கே ராமநாதன் கோயில் என்று ஒன்று உள்ளது. அதன் சாசனத்தில் பள்ளிப்படைவீர மென்றும் பஞ்சவன் மாதேவீச்சுரம் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் ராஜராஜன் மனைவி. பழுவேட்டரையன் மகள். இத் தலத்திற்கு 15 அத்தியாயங்களில் புராணம் ஒன்று உள்ளது. வடதளி என்ற சொல்லுக்கு ஆலமரத்தின் கீழுள்ள கோயில் என்ற பொருள் உள்ளது.

பழையாறை	வடதளி
சுவாமி : சோமேசுவரர்	தர்மபுரீசுவரர்
அம்பிகை : சோமகலாநாயகி	விமலைநாயகி
தீர்த்தம் : சோம தீர்த்தம்	கௌரி தீர்த்தம்

சந்நிதி கிழக்கு. பிராகாரம் இரண்டு. கோபுரம் அபூர்த்தி யாக உள்ளது. வெள்ளைப்பிள்ளையார் பெயராலேயே நிலங் களின் பெயர்கள் உள்ளன.

திருப்பழை யாறை சிவன்ஆறை நாதர்
அருள்புரி யாறைநா யகிசிவ கங்கை.

வடதளிப் பிரமம் வடதளி நாதர்தம்
இடமுறை கவுரி இன்புறு கவுரி. சிவ.)

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னான்பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே.

(திருநா. 5-ஆம் திரு.)

இது பழையாறை என்றும், வடதளி என்றும் இரண்டு தலங்களாக இருக்கிறது.

இத்தலம் சோழராசதானியில் ஒன்று. இதைச் சூழ்ந்து நான்கு படை வீடுகளின் பேர் பெற்ற ஊர்கள் இருக்கின்றன; ஆரியப்படைவீடு, பம்பைப்படைவீடு, புதுப்படைவீடு, மணற் படை வீடு. இந்த நகரத்தினுள் பண்டைக் காலத்தில் பட்டீச்சுரம், திருச்சத்தி முற்றம், வள்ளலார் கோயில் அல்லது வடதளி, முழை யூர் திருமேற்றளி என்னும் சிவஸ்தலங்களும், கோணப் பெருமாள் கோயில் (தக்ஷிண துவாரகை) என்னும் பெருமாள் கோயிலும் உள்ளன. பழையாறை மேலைப்பழையாறை, கீழைப் பழை யாறை என்று இருவகைப்படும். பழையாறை வைப்புத்தலம். இதற்கு வடக்கே பாற்குளம், அரிச்சந்திரபுரம் என்னும் தலங் கள் உள்ளன. சாசனத்தில் பள்ளிப்படை வீடென்றும், பஞ்ச வன்மாதேவீச்சரமென்றும் கூறப்பட்டுள்ளது. இவர் ராஜராஜன் மனைவி.

190. பள்ளியின்முக்கூடல் : (சோழநாடு)

விற்குடிக்கு ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. பதின் மூன்று ஆலயங்கள் உள்ளன. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : முக்கோணநாதேசுரர்.
அம்பிகை : மைம்மேவுகண்ணி.

முருகு முக்கூடல் முக்கோண நாதர்
கருமை மேவு கண்ணிவான் பருதி. (சிவ.)

ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அயனொடுமா லறியாத ஆதி யானைத்
தாராரும் மலர்க்கொன்றைச் சடையான் தன்னைச்
சங்கரனைத் தன்னொப்பா ரில்லா தானை
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நீள்விசும்பாய் ஆழ்கடலைக் ளேழும் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே.
(திருநா. 6-ஆம் திரு.)

191. திருப்பறியலூர் வீரட்டம் (பரசலூர்) (சோழநாடு)

செம்பொனார் கோயிலிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. அட்ட விரட்டானத் தலங்களுள் ஒன்றான தக்கன் வேள்வி தகர்த்த வீரட்டானம். அவ்வேள்விக்கு வந்த வானோர் தீமையைப் பறித்தமையால் பறியலூர் ஆயிற்று. மேற்கு நோக்கிய சந்நிதி. வீரபத்திரர் தெற்குநோக்கி இருக்கிறார். அவர் பூசித்த தலம். அவர் காலடியில் தக்ஷன் இருக்கிறார்.

வேறு பெயர் : தட்சபுரம்.

இத்தல சம்பந்தமாகப் புராணம் ஒன்று உண்டு. ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீனப் பின்வேலப்ப சுவாமிகளாவர். சருக்கங்களும், 655 பாடல்களும் உள்ளன. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

அட்டவீரத்துள் ஒன்று. சுவாமி: தக்ஷபுரீசுவரர், வீரட்டேசுரர். சந்நிதி: மேற்கு. அம்பிகை: வாலாம்பிகை. இளங்

கொம்பனையாள். சந்நிதி: தெற்கு. சுவாமியின் வலப்பக்கம் உள்ளார்.

தீர்த்தம் : ஓம குண்டம். சந்நிதிக்குத் தெற்கே குளவடிவ மாக உள்ளது. இது தக்ஷன்யாகஞ் செய்த இடமென்றும், குளத்தின் அடியில் நீர்வற்றின காலத்தில் யாகவேதிகை, யாக குண்டம் முதலியன காணப்படுகின்றன என்றும் முதியோர் சொல்லுவர். உத்தரவேதி தீர்த்தம் என்றும் சொல்லப்படும்.

யாக சங்கர மூர்த்தி:—

அகோரவீரபத்திரர். இவர் மஹாமண்டபத்தில் ஓரறை யில் தெற்கே நோக்கி நின்றகோலமாக எழுந்தருளியுள்ளார். இந்த மூர்த்தியைப் பார்க்குங்கால் நம்முடைய பிராசீன சிற்பி களின் திறமை நன்கு வெளியாகின்றது. யாகஸம்ஹார மூர்த் திக்கு வருஷத்தில் ஆறுமுறை அபிஷேகமுண்டு.

(1) வருடப்பிறப்பு (2) ஆடிப்பிறப்பு (3) ஐப்பசிப்பிறப்பு (4) புரட்டாசி சதுர்த்தி (5) தைப்பிறப்பு (6) வைகாசித் திருவோணம். தை மாதப் பிறப்பு அபிடேகமும், வைகாசித் திருவோண அபிடேகமும் முன்பு நடந்தனவாம்.

சுப்பிரமணியமூர்த்தி:—இவருடைய உற்சவத் திருவுருவம் மயிலின்மீது ஒருகாலை வைத்து நின்று செல்லும் கோலமாக உள்ளது.

செங்கமுநீர்ப் பிள்ளையார்: இவர் சந்நிதியில் எதிரே யுள்ளார்.

கற்பகப்பிள்ளையார்: உள்ளே இருக்கிற நர்த்தன விநாயகர். கோயிலில் ஞானசம்பந்தர் விக்கிரகம்மட்டும் உற்சவ மூர்த்தியாக உள்ளது. இதற்குத் தமிழ்ப் புராணமொன்று உண்டு. செய்தவர் திருவாவடுதுறைப் பின் வேலப்பதேசிகர் இப் புராணத்தில் பாயிரத்தில் நந்திதேவர் முதல் பத்தாம்பட்டம் வேலப்ப தேசிகர் இறுதியாகவுள்ள ஆசிரியர்களின் துதிகள் கூறப்பட்டுள்ளன.

இத்தலத்தில் வடக்கே ஒரு தீர்த்தமும் ,மேற்கே ஒரு தீர்த் தமும், தெற்கே ஒன்றும் இருந்து இப்பொழுது நன்செய் நில மாகப் போய்விட்டன.

விளங்கும் பறியலூர் வீரட் டேசர்
இளம்கொம்பன நாயகி இந்து புட்குரிணி. (சிவ.)

மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்சோலை வீரட்டத் தானே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பறியலூர் வீரட்டம் பாவநாசம்—அதிகை. திருநா.
வியன்பறியல் வீரட்டம்—பொது. திருநா.

192. வன்பார்த்தான் பனங்காட்டூர் (தொண்டைநாடு)

இத்தலம் பனங்காடெனவும் வழங்கும். காஞ்சீபுரத்திலிருந்து ஒன்பது மைல் தொலைவில் இருக்கின்றது. சந்நிதிகள் இரண்டு. தெற்கில் இருப்பது. அகத்தியர் பூசித்தது.

சுவாமி : தாலபுரீசுவரர், பனங்காட்டீசுரர்.
அம்பிகை : ஸ்தூல கோமள பதாம்பாள்; அமிர்தவல்லி.
தீர்த்தம் : அமுத தீர்த்தம்.

வடக்கிலிருப்பது : புலஸ்தியர் பூசித்தது.

சுவாமி : கிருபாநாதேசுவரர்.
அம்பிகை : கிருபாநாயகி.
தீர்த்தம் : ஜடாசங்கை.
விருட்சம் : பனை.

கோவிலுள் எதிரொலி கேட்கிறது.

பனை ஊள்ளதலங்கள் ஆறு. 1. திருமழபாடி 2. திருப்பனந்தாள் 3. திருப்பனையூர் 4. புறவார் பனங்காட்டூர், 5. வன்பார்த்தான் பனங்காட்டூர் 6. திருவோத்தூர். பனம் பழம் சுவாமிக்கு நிவேதனம். சந்நிதியில் சமநிலையாக இரண்டு பனைமரங்கள் இருக்கின்றன. சுந்தரர் பாடிய தலம்.

பனங்காட் டூர்வாழ் பனங்காட் டீசர்
மனங்கூர் அமிர்த வல்லி யமிர்தம். (சிவ.)

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில்அன் புடையானை யாவர்க்கும்
அறியொண்ணா
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்
காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார்
சார்பென்னே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப் பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பழிநீர்மையில்லாப் பனங்காட்டுரும்—அதிகை. திருநா.
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட்டூர்—பொது.திருநா.
பனங்காடு பாவையர்கள் பாவநீங்க—பொது. திருநா.
பாட்டூர் பலரும் பரவப்படுவாய் பனங்காட்டூரானே—
பொது. சு.

193. திருப்பனந்தாள் : (சோழநாடு)

ஆடுதுறையிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் பலவகையிலும் விசேஷமான இடம். பண்டைக்காலம் முதற் கொண்டே தமிழ் நூல்களையும் பிறநூல்களையும் தன்னகத்தே தாங்கி வந்த பனந்தாளின் (பனையேட்டின்) பெயரைக் கொண்டதே இவ்வூர் தமிழ் வளர்த்தற்குரியது என்பதற்கு அறிகுறியாகும். இஃதன்றிச் சிவநேசம் பூண்ட தாடகையென்னும் மங்கையொருத்தி இத்தலத்தில் சிவபெருமானை நாள்தோறும் பூசித்துக் கொண்டுவருகையில், ஒரு தினம் சாத்துதற்காகப் பூமாலையை இரண்டு கையாலும் எடுத்த பொழுது, கட்டுக் குலைந்து அவளாடை நழுவத்தொடங்கியது; முழங்கையால் அவ்வாடையை இடுக்கிக் கொண்டு மாலைசாத்துதற்கு முடியாமல் அவள் மிக வருத்த முற்றனள். அப்பொழுது அவ்வருத்தம் பொறாமல் அவளன்புக்கிரங்கிச் சிவபெருமான் தமது திருமுடியை வளைத்து அம்மாலையை ஏற்றிக்கொண்டருளினென்பதும் இத்தல புராணக்கதை. தாடகை என்னும் பெண்ணிற்கு வளைந்தும் குங்கிலியக் கலய நாயனாருக்கு நிமிர்ந்தும் சிவபெருமான் அடியவர்களுக்கு எளியராய் இரங்கிய தலம் இது. க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில் இது சுப்பிரமணிய ஸ்தலங்களில் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. ஈசுவரன் சந்நிதி மேற்கு நோக்கியும் அம்பிகையின் சந்நிதி வலப்பாகத்தில் கிழக்கு

நோக்கியும் இருக்கின்றன. இவ்வாறு உள்ளவற்றை உபதேச ஸ்தலம் என்பர்.

இவ்வூர்ப் பக்கத்தில் ஓடும் நதியின் பெயர் சுப்பிரமணிய நதி என்பது. இக்காலத்தில் அது மண்ணி என மருவி வழங்கு கிறது. சில நல்ல பெயர்கள் அழகற்ற உருவமாக மருவுதல் இயல்பு. அவ்வாறில்லாமல் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இந்நதியின் பெயர் கழுவுதலாகிய நதி என்னும் பொருள் பட மண்ணி நதி என்று மருவியது விசேஷமே. புறத்தே உள்ள உடம்பின் அழுக்கையும், அகத்தே உள்ள பாவ அழுக்கையும் மண்ணுவதாதலின் மண்ணி என மருவியது மிக்க பொருத்த முடையது. எனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய இம் மூன்று சிறப்புக்களையும் உடையது இத்தலம் என்பது தெரிகிறது.

இரண்டாவது இராஜராஜ சோழன் இத்தலத்துள்ள செஞ் சடையப்பர் கொள்ளிடத்திற்குத் தீர்த்தங் கொடுக்க எழுந்தருளு வதற்குத் தன் பெயரால் 'இராஜ கம்பீரன் திருவீதி' என்ற சாலையை அமைத்து இருபுறமும் தென்னை மரங்களை வைக்கச் செய்தனன் என்று சிலாசாஸனங்கள் தெரிவிக்கின்றன.

பழைய தமிழ்ப் பாட்டொன்றில்,

''தண்ணீருஞ் சோறு மளித்தான் திருப்பனந் தாட்பட்டனே''

என்று கூறப்பட்டிருத்தலால் இத்தலத்தில் ஒருவர் முன்பு பஞ்ச காலத்தில் அன்ன தானம் செய்து வந்தாரென்று தெரிகிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம். சுவாமியின் திருநாமங்கள் 12. 1. அருணஜடேசர், 2. மிருத ஜீவேசுரர், 3. அஜபேசு வரர், 4. ஐராவதேசுவரர் முதலியன. அம்பிகைக்கு இரண்டு பெயர்கள். சந்நிதி கிழக்கு. சுவாமி சந்நிதிக்கு வலப்பக்கம் முதலில் இருக்கும் அம்பிகைக்குப் பாலாம்பிகை என்றும், பின் இருக்கும் அம்பிகைக்கு விருத்தாம்பிகை என்றும் பெயர்கள். சுவாமியிடம் உபதேசம் பெற்றுக் கொண்டதாக ஐதிஹ்யம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : செஞ்சடையப்பர், அருணஜடேசுவரர், தாலவனே சுவரர்.

அம்பிகை : பெரியநாயகி, பிருகந்நாயகி, தாலவனேசுவரி.

தீர்த்தம் : பிரமதீர்த்தம்.

விருட்சம் : பனை.

அரிய பனந்தாள் அரன்சடை யப்பர்
பெரிய நாயகி பிரம தீர்த்தம். (சிவ.)

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலோர்
வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை
மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

பாழிப்பழனம் பனந்தாள் பாதாளம்—பொது. திருநா.

194. திருப்பனையூர்: (சோழநாடு)

நன்னிலத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. சிவபெருமான் திருக்கூத்தோடு சுந்தரருக்குத் தரிசனம் கொடுத்த தலம். கோயிலில் உள்ள பிராகாரத்தில் இரண்டு பனைகள் உள்ளன. பனையின் அடியில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலம். பராசரர் பூசித்த தலம். இத்தலத்தில் கரிகால் வளவனுக்குப் பிள்ளையார் துணையாய் இருந்தார்.

திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி : அழகியர், அழகியநாதர் சௌந்தர்ய நாதர்,
அம்பிகை : பெரிய நாயகி.
தீர்த்தம் : அமிர்த புஷ்கரிணி.

தருதிருப் பனையூர் சவுந்த ரேசுரர்
பெரிய நாயகி பெருகிய அமிர்தம். (சிவ.)

மாடமாளிகை கோபுரத்தொடு
மண்டபம்வள ரும்வளர்பொழில்
பாடல் வண்டறையும்
பழனத் திருப்பனையூர்த்

தோடுபெய்தொரு காதினிற்குழை
தூங்கத் தொண்டர்கள் துள்ளிப்பாடநின்(று)
ஆடு மாறுவல்லார்
அவரே அழகியரே.

(சுந்தரர்.)

அரவச் சடைமேல் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கள்நாளும்
பரவிப் பொலியும் பனையூரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பனையூர் பயற்றூர் பராய்த்துறையும்—அதிகை. திருநா.
நாளு நன்னிலந்தென்பனையூர் வடகஞ்சனூர்—பொது. சு.

195. திருப்பாசூர். (தொண்டை நாடு)

திருவெவ்வுளூர் இரயில்வே நிலையத்திலிருந்து 4½ மைல் தொலைவில் உள்ளது. பாசு-மூங்கில். சிவபெருமான் ஒரு மூங்கிலின் அடியில் தோன்றினார். இத்தலத்தில் சிலகாலம் இருந்து அரசாட்சி செய்த கரிகாலச் சோழன் என்பவனைக் கொல்ல நினைந்து அவன் விரோதியாகிய ஒரு சிற்றரசன் குடத்தில் வைத்தனுப்பிய கொடிய பாம்பொன்றை இத்தலத்திறைவன் ஒரு பிடார வடிவம் எடுத்து வந்து பாம்பைப் பிடித்து ஆட்டி அப்பாம்பாலேயே அச்சிற்றரசனைக் கொல்வித்தார் என்பது பாசூர்ப்புராணத்துள் அரவமாட்டிய சருக்கத்தில் கண்ட வரலாறு.

'' வெற்றி யூருறை வேதிய ராவர்நல்
ஒற்றி யேறுகந் தேறும் ஒருவனூர்
நெற்றிக் கண்ணினர் நீளர வந்தீனப்
பற்றி ஆட்டுவர் பாசூர் அடிகளே '' (திருநா. தே.)

சந்திரன் பூசித்த தலம். தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : பாசூர் நாதர், வேயிடங் கொண்ட நாயனார்.
அம்பிகை : பசுபதிநாயகி, பணைமுலைநாச்சியார்.
விருட்சம் : மூங்கில்.

பாசூர் சேர்திருப் பாசூர் நாதர்
பாசு பதிநா யகிபாசு பதியாம். (சிவ.)

விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்பு மாகி
ஏழுலகும் தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற.
பண்ணாகி இன்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே.
(திருநா. 6-ஆம் திரு.)

சிந்தை இடையார் தலையின் மிசையார்
செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வார் ஊர்போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பாகப் பொழுதெலாம் பாசூர்த்தங்கி—கோயில். திருநா.
பராய்த்துறையும் பாசூரும் மேயான் கண்டாய்—கோடிகா. திருநா.
படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்—புறம்பயம். திருநா.
பாசூரமர்ந்தாயு நீயேயென்றும்—நெய்த்தானம். திருநா.
பல்லார்பயில் பழனம் பாசூரென்று—வலம்புரம். திருநா.
பாசூர் பரங்குன்றமேயான்றன்னை—ஆரூரநெறி. திருநா.
பரிதி நியமத்தானைப் பாசூரானை—தலையாலங்காடு. திருநா.

பருப்பதமும் பாசூரும் மன்னினாரும்—வெண்ணியூர். திருநா.
பராபரன் கண்டாய் பாசூரான் கண்டாய்—மறைக்காடு. திருநா.
பாசூருளீர் படம்பக்கம் கொட்டுந் திருவொற்றியூரீர்—பரங்குன்றம். சு.
பந்தணைநல்லூர் பாசூர் நல்லம்—அதிகை. திருநா.
பாசூர்நிலாய பவளத்தை—பொது. திருநா.
பாசூரம்மானே—பொது. சு.

196. திருப்பாச்சிலாச்சிராமம் : (சோழநாடு)

பிஷாண்டார் கோயிலிலிருந்து இரண்டரை மைல் தொலைவில் உள்ளது. விசயன் என்ற பாண்டியன் இத்தலத்தில் தனக்குற்ற தீக்கனா நீங்கிப் போனமையால் திருப்பணி முதலியன செய்து அருள் பெற்றான். திருஞானசம்பந்தர் கொல்லி மழவன் புதல்வியின் முயலக நோயைப் போக்கிய தலம். இத்தலத்தில் நடராசர் ஊன்றிய திருவடியின்கீழ் முயலகனில்லை. சர்ப்பம் இருக்கிறது. சுந்தரர் பொன்பெற்ற தலம். சுவாமி சந்நிதி கிழக்கு முகம் அம்பிகை சந்நிதி மேற்கு முகம். அம்பிகையின் பிம்பத்தைக் குளத்தில் காணலாம். கமலனென்னும் வணிகன் புத்திரியும் உமாதேவியாரின் கூறாக உள்ளவருமான புகழார் என்னும் மங்கையாரைச் சிவபெருமான் மணம் செய்து கொண்டருளிய தலம். இத்தலம் திருவாசி என்றும் வழங்கப்படுகிறது.

சுந்தரர் எட்டுச் செய்யுள்பாட 1000 பொன் செம்பாய்க் கொடுக்க, மறுபடியும் நான்கு செய்யுட்கள் பாடினவுடனே சிவபெருமான் திருவருளால் விஷ்ணுவைக் கொண்டு. அச்செம்புக் காசு முழுவதும் முலாத்துப் பொன்னாகக் காண்பிக்கப் பெற்று ஆனந்தம் அடைந்த தலம். திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி : மாற்றறிவாளர்.
அம்பிகை : அங்கிளமங்கை, பாலசௌந்தரி, வாலசுந்தரி.
விருட்சம் : வன்னி.
தீர்த்தம் : பிரமதீர்த்தம்; அன்னமாம் பொய்கை. இஃது அன்ன வாகனன் பொய்கை என்றும் வழங்கும்.

பாச்சி லாச்சிராமம் பரன்மாற் றறிவார்
ஆச்சி சவந்தரி யகமகிழ் பிரமம். (சிவ.)

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே.

(திருஞா. 1-ஆம் திரு.)

வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும்
நெஞ்சமும் வஞ்சம்ஒன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே ஒத்தோர் நச்சிலர் ஆகில்
இவரலா நில்லையோ பிரானார்.

(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நியமந்துருத்தியும் நீடூர் பாச்சில்—புறம்பயம். திருநா.
குடப்பாச்சிலுறை கோக்குளிர்வானே—
நாட்டியத்தான்குடி. சு.
மாட்டூர் மடப்பாச்சிலாச்சிராமம்—பொது. திருஞா.

197. திருப்பாண்டிக்கொடுமுடி: (கொங்குநாடு)

இரயில்வே நிலையம் உள்ளதலம். அகண்ட காவிரிக் கரையிலுள்ளது. மாமேருவின் சிகரங்களுள் ஒன்று கொடுமுடி. இதன் வரலாறு: பிரமனும் விஷ்ணுவும் வழிபட்டுத் தனித்தனியே இவ்வாலயத்தில் கோயில் கொண்டமர்ந்துள்ளனர். இதனை அறியாதார் இத்தலத்தைத் திரிமூர்த்தி சந்நிதி என்றும் வழங்குகின்றனர். இத்தலத்தில் ஒரு பாண்டியனுக்குக் கறை தீர்த்த

காரணத்தால் இது கறையூர் என்றும் வழங்கப்படும் என்பர். 'கறையூரில் பாண்டிக் கொடுமுடி' என்பது சுந்தரர் தேவாரம். சுந்தரர் நமச்சிவாயப்பதிகம் பாடிய தலம். ரங்கநாதர் சந்நிதி தனி. வன்னிமரத்தடியில் பிரமன் வீற்றிருக்கிறார்.

கறையூர், பாண்டிக்கொடுமுடியுள்ள ஊர்; பழைய ஊர்ப் பெயர். பாண்டிக்கொடுமுடி பழைய க்ஷேத்திரப்பெயர். ஒரு பாண்டியன் பூசித்தமையாலும் கயிலையின் ஒரு கொடுமுடியாக இது கூறப்படுவதாலும் இப்பெயர் பெற்றது. அகத்தியர் பூசித்த சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்த இடம் இதுவே. அந்த லிங்கம் கோயிலுக்குள்ளே வன்னிமரத்தின் வடபாகத்திலுள்ளது.

சுவாமி: மகுடலிங்கம், மகுடேசுவரர், மகுடபதி, கலியாண மகுடேசுவரர். அம்பிகை : சௌந்தராம்பிகை, வடிவுடையம் பிகை. விருட்சம் : வன்னி. ஊர் கறைசை எனவும் வழங்கப் படும். மூவரும் பாடிய தலம்.

கோதகல் பாண்டிக் கொடுமுடி கொடுமுடி
நாதர் பண்மொழி நாயகி காவிரி. (சிவ.)

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னீப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கிலும்
சொல்லும் நாநமச்சி வாயவே.
(சுந்தரர்)

பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடை
யாரும்
கண்ணமர் நெற்றி யினாரும் காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவர் ஏத்தநின்
றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி
யாரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

சிட்ட னைச்சிவ னைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கொங்கிற் கொடுமுடியார் குற்றலத்தார்—கோயில். திருநா.
பாண்டிக் கொடுமுடியும் தம்மூர்போலும்—சாய்க்காடு. திருநா.
கொடுமுடி யுறைபவர்—பிரமபுரம். திருஞா.
கோவலூர் குடவாயில் கொடுமுடி—பூவனூர். திருநா.
கொடுமுடி குற்றாலம் கொள்ளம்பூதூர்—பொது. திருநா.

198. பாதாளீச்சுரம் : (பாம்பணி) (சோழநாடு)

மன்னார்குடி இரயில்வே நிலையத்திற்கு வடக்கே ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. சுவாமிக்கு இரண்டு திருமுகங்கள் தோன்றுகின்றன. இப்பொழுது பாமணி என்று வழங்குகிறது. ஆதிசேடன் தனஞ்சயராக வந்து பூசித்த ஸ்தலம்; அன்னமகாராஜா அன்னமும் சொன்ன மகாராஜா வென்பவர் சொன்னதானமுஞ் செய்த இடம். இம்மூவருடைய பிம்பங்களும் இங்கே யுண்டு. இப்பொழுது பாமணி என்று வழங்குகிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : சர்ப்ப புரீசுவரர்.
அம்பிகை : அமிர்த நாயகி.
தீர்த்தம் : நாகதீர்த்தம்.

பாதா ளீச்சுரம் பரன்சர்ப் பபுரி
நாதர் அமுதநா யகிநாக தீர்த்தம். (சிவ.)

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மனநடையாள் ஒருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினா னுறைகோயில் பாதாளே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்:

அரதைப் பெரும்பாழி பனந்தாள் பாதாளம்—பொது.
திருநா.

199. திருப்பாதிரிப்புலியூர் (நடுநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். கடற்கரைத்தலம். வண்டிப்பாளையம், வசந்தம் பாளையம், பாடலி என்ற பகுதிகள். உள்ளன. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற சிவதலங்களுள் ஒன்று; இதற்குரிய பதிகம் 2. (திருஞா. 1; திருநா 1;) வடமொழி தென்மொழி இரண்டிலும் இதற்குப் புராணங்கள் உள்ளன; தொல்காப்பிய முதிவர் இயற்றிய கலம்பகமும் உள்ளது.

தலவிநாயகர் இருவர் : 1. சொன்னவாறறியும் விநாயகர். (2) மேற்குமதில் விநாயகர்.

சிவபெருமான் திருநாமங்கள் : கரையேற்றும்பிரான், கன்னிவனநாதன், சிவக்கொழுந்து, தேன்றாத்துணை முதலியன. இவற்றுள் கரையேற்றும் பிரான் என்பது கரையேற விட்ட வரெனவும் வழங்கும். சமணர்களால் கடலுள் வீழ்த்தப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரைக் கடலினின்றும் கரையேற விட்டது பற்றி 'கரையேறவிட்டவர்' என்னும் திருநாமம் இத்தலத்தின் ஸ்வாமிக்கு வழங்கலாயிற்று. அவர்கரையேறிய இடம் கரை யேறவிட்ட குப்பமென் வழங்கப்படுகின்றது. தோன்றாத் துணை என்னும் திருநாமம் தேவாரத்துள்ளும் வருகின்றது. சிவக் கொழுந்து என்னும் திருநாமம் இத்தலத்து மூர்த்திக்குரிய தென் பது திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகத்தால் தெரியவருகின்றது.

அம்பிகையின் திருநாமங்கள் : பெரியநாயகி, தோகை நாயகி என்பன. இவற்றுள் தோகைநாயகி என்னும் திருநாமம் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தால் தெரிகின்றது. இத்தலத்தின் திருநாமங்கள்: கடைஞாழல், கன்னிகாப்பு, கன்னி காவனம், கன்னிவனப்பதி, கன்னிவனம், திருப்பாதிரிப்புலியூர், பாதிரிப் புலிசை என்பன.

தலவிருட்சம் ; பாதிரி. அது பல மலர்களை ஒரு காலத் தில் பூத்தது என்னும் செய்தியைக் கலம்பகம் மூலம் அறியலாம். பூசித்துப் பேறு பெற்றோர் : கரத்திற் கண்ணுடையவர், காலிற் கண்ணுடையவர், வியாக்கிரபாதர், உபமன்னியு முனிவர், பதஞ்

கலி முனிவர், மாதிராசன், முந்நூற்று அறுபது அந்தணர். கெடிலம் இத்தலத்தைச்சார்ந்த நதியாகும்.

இத்தலத்துத் திருக்கோயிற் கருப்பக்கிருகத்தின் மேல் புறச் சுவர் சிலாசாஸனத்துள்ள, ''தழைத்த திருப்பாதிரிப்புலியூர்'' என்பது முதலிய இரண்டு செய்யுட்களால் கன்னிவனப் புராணம், புலியூர் நாடகமென்னும் இரண்டு நூல்கள் ஒரே புலவரால் இயற்றப் பெற்று இத்தலத்திற்குரியனவாயிருந்தமை வெளியாகின்ற தென்றும் சிலா சாஸனங்களில் ஸ்வாமி திருநாமம் கடைஞாழல் மஹாதேவ ரென்றே வழங்கப்படுகின்றதென்றும் அறியலாம்,

சுவாமி : தோன்றாத்துணைநாதர். பாடலீசுரர்.
அம்பிகை : பெரியநாயகி.
தீர்த்தம் : கெடில நதி. விருட்சம் : பாதிரி.

பாதிரிப் புலியூர் பரன்தோன் றாத்துணை
நாதர் தோகை நாயகி புவிதீர். (சிவ.)

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன்
தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி
யோங்களுக்கே.
(திருநா. 4-ஆம் திரு.)

முன்னம் நின்ற முடக்கால் முயற்கருள் செய்துநீள்
புன்னை நின்று கமழ்பா திரிப்புலி யூருளான்
தன்னை நின்று வணங்கும் தனைத்தவ மில்லிகள்
பின்னை நின்ற பிணியாக் கையைப்பெறு வார்களே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்:
திருப்பாதிரிப்புலியூர் திருவாமாத்தூர்—அதிகை. திருநா.

200. திருப்பாம்புரம் (சோழநாடு)

பேரளத்திலிருந்து நாலரை மைல் தொலைவில் உள்ளது. நாகராஜன் பூசை செய்த தலம். அவரது மூலவிக்கிரகமும், உற்சவ விக்கிரகமும் உள்ளன. கார்க்கோடகனும் பூசை செய்த தலம்.

பிரமனும், அகத்தியரும் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : பாம்புரேசுவரர்.
அம்பிகை : வண்டார் பூங்குழலியம்மை.
தீர்த்தம் : பிரம தீர்த்தம்.
விருட்சம் : வன்னி.

பாங்குன் றம்பாம் புர நாதர்
பூங்குழல் வண்டுசேர் போதன் தீர்த்தம் (சிவ.)

சீரணிதிகழ்திரு மார்பில்வெண்ணூலர்
திரிபுரமெரிசெய்த செல்வர்
வாரணிவனமுலை மங்கையோர் பங்கர்
மான்மறி யேந்திய மைந்தர்
காரணிமணிதிகழ் மிடறுடையண்ணல்
கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தரு நான்மறையாளர்
பாம்புர நன்னகராரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பாம்புரமே காதலானை—நாகைக்காரோணம். திருநா.
பழனம் பாம்பணி பாம்புரம் தஞ்சை தஞ்சாக்கையே.
பொது. சு.

201. திருப்பாலைத்துறை : (சோழநாடு)

பாபநாசத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது. தாருகாவனத்து முநிவர்கள் ஏவிய புலியைச் சிவன் உரித்து அதன் தோலைத் தரித்து அருளிய தலம். அம்மன் சந்நிதி தனியாகத் தெற்கிலுள்ளது. வசிஷ்டர், ஸ்ரீராமர், சீதை, இலக்குமணர், தௌமியர், அருச்சுனன் முதலியோர் வணங்கிய தலம்.

பாவநாசத்துக்கு அரை மைல் தொலைவில் மேற்கில் 108 சிவாலயம் என்னும் தலம் இருக்கிறது. பாண்டியன் கரடியாக வந்த இடம். கரடியாக வந்த பாண்டியன் தீர்த்தத்தில் விழுந்து தன் பழைய உருவைப் பெற்றதலம். இத்தலத்தில் பேஷ்வாக்களென வழங்கும் மகாராஷ்டிரப் பிராமணச் செல்வர்கள்

இருந்தார்கள். திருநாவுக்கரசர் பாடிய தலம். இரண்டாம் இராசராச சோழனால் இத்தல மகாதேவருக்குச் சிலநிலங்கள் வழங்கப் பட்டன என்பதும் அந்நிலங்கள் உள்ள இடத்திற்கு ராஜ கம்பீரநல்லூரென்னும் பெயர் வைக்கப்பட்ட தென்பதும் குறிப்பிடத்தக்கவை.

சுவாமி : பாலைவனநாதர், பால்வண்ணநாதர்.
அம்பிகை : தவளவெண்ணகைமங்கை.
தீர்த்தம் : காவிரி.

பாலைத் துறையுறை பால்வண்ண நாதர்
வாலத் தவளவெண் ணகைமகிழ் பொன்னி. (சிவ.)

நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையும் கூட்டினார்
சூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால்நெய் ஆடுவர் பாலைத் துறையரே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

பயில்வாய பராய்த்துறை தென்பாலைத்துறை—பொது.
திருநா.

202. திருப்பாற்றுறை (சோழநாடு)

திருவெறும்பூர் இரயில்வே நிலையத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது.

மார்க்கண்டேய முநிவர் பூசிக்கும்போது அபிஷேகத்திற்குப் பசும்பால் கிடைக்காமையால் வருந்த சிவபெருமான், பால் பெருகும்படி அநுக்கிரகித்த தலம். "பாற்றுறை மேவிய பத்து நூறு பெயரான் என்ற அடியால் சகஸ்ரநாம அர்ச்சனை இங்கு விசேடம் என்று தெரிகிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : ஆதிமுதல்வர், மூலநாதர்.
அம்பிகை : மேகலாம்பிகை, மோகநாயகி.

ஆகம் பாற்றுறை ஆதிமூ லேசர்வாழ்
மோக நாயகி முக்கிய கொள்ளிடம். (சிவ.)

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரா ராதி முதல்வரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

203. திருப்புகலூர் : (சோழநாடு)

திருப்புகலூர் நன்னிலத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் முக்காலத்துக்கும் தலைவராகிய சிவபெருமானுடைய மூர்த்தங்கள் எழுந்தருளியிருக்கும் பூதேசுவரம், வர்த்தமானேசுவரம், பவிஷ்யேசுவரம் என்ற மூன்று சந்நிதிகள் உண்டு. அவற்றுள் வர்த்த மானேசுவரம் என்னும் சந்நிதியில் எழுந்தருளிய பெருமானைத்தனியே பாராட்டும் தேவாரப் பதிகம் ஒன்றுண்டு. இங்கே ஓர் அகழி இருக்கிறது. அதன் கரையில் பதினெட்டுச்சித்தர்களுடைய ஆலயங்கள் உள்ளன. இத்தலம் சரண்யபுரியென்றும், பூலோக சரண்ய புரமென்றும் வடமொழியில் வழங்கும். சந்திரசேகரர் சந்நிதி விசேடம் அதற்கு நேராக அக்னி பகவான் உருவம் இத்தலத்திலுள்ள வர்த்த மானேசுவரம் கோயிலினுள் உள்ளது. கோயிலைச் சுற்றி அகழி உண்டு. தாயாருடைய பூசைக்காகச் சிவலிங்கத்தைக் கொண்டு போகப் பாணாசுரன் பூமியைப் பறித்தமையால் இத்தீர்த்தம் உண்டாகியது.

அவன் அசைத்தபோது சாய்ந்தமையால் சுவாமி கோணப் பிரானாக ஆனார். மூவரும் பாடிய தலம்.

சுவாமி : அக்னீசுரர், கோணப்பிரான்.
அம்பிகை : கருந்தாழ்குழலி, சூடிகாம்பாள் (சூடிகைகூர் ணகுந்தளம்)

தீர்த்தம் : அக்னி தீர்த்தம்.
விருட்சம் : புன்னை.

திருப்புகலூர்அந்தாதி பாடுவித்த ருத்திரகணிகையின் பெயர் சிந்தாமணி. அவள் சுவாமிக்குக் கற்பணி, பொற்பணி மிகுதியாகச் செய்வித்துச் சிவலிங்கப் பிரதிஷ்டையும் செய்வித்தாளாம். நூற்றுக்கால் மண்டபம் செய்வித்தவளும் அவளே. அக்கினி தீர்த்தம் வாண தீர்த்தம் என்றும் பெயர் பெறும். கோயிலைச் சூழ்ந்துள்ளது. தென் பக்கத்தில் சிலவிடத்தில்

இல்லை. கருந்தாழ் குழலி பிராமணப் பெண்ணின் பிரசவ காலத்தில் மருத்துவம் பார்த்தமையின் அம்பிகை என்று தெரிந்து மூன்று வேலி சர்வ மானியம் விடப்பட்டது. புகலகம் என்ற ஊரில் தோசைக் கட்டளை.

சந்திரசேகரர் சந்நிதியில் அக்னிதேவர் மூலமூர்த்தியாகவும், உற்சவ மூர்த்தியாகவும் எழுந்தருளியுள்ளார். எல்லாப் பொருள்களையும் உண்ட தோஷத்தை நீக்குவதற்கு இந்தத்தலத்தில் சத்யோஜாதம் முதலிய ஐந்து சிவலிங்கப் பெருமான்களைப் பூசித்தபோது சத்யோஜாத மூர்த்தியினின்று சிவபெருமான் சந்திரசேகரராக எழுந்தருளி அத்தோஷத்தை நீக்கியருளினார்.

சந்திரசேகர மூர்த்தி, பிரதானமூர்த்தி உட்பிராகாரத்தின் தென்பாகத்தில் பாணாசுரனுடைய திருவுருவம் உத்ஸவமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறது. இவர் பூமி தேவியின் பிள்ளை. நடராஜர் நடன தரிசனம் கொடுத்தருளியதுண்டு. குலோத்துங்கன் திருப்பணி. அறுபத்துமூவருடைய திருவுருவங்கள் மூலமூர்த்திகளாக உள்ளன. சந்திரசேகரருக்குத் தென்றல் வாயிலுண்டு. அக்னி பகவானுக்குப் பந்தற் காட்சியும், பாத தரிசனமும் உண்டு. மூலஸ்தானம், சத்யோஜாதம். தென்மேற்கில் தத் புருஷம். திருநாவுக்கரசர் திருவுருவம் நிருதி மூலையில் மூல மூர்த்தியாகவும். உத்ஸவ மூர்த்தியாகவும் உள்ளது. வலப்பக்கத்தில் அப்பூதியடிகளின் திருவுருவம் உற்சவமூர்த்தி. இதே மூலையில் வாதாபி கணபதி. பக்கத்தில் அகோரமூர்த்தி, வாதாபி வில்வலன் இருவர் வடிவமும் விநாயகர் சந்நிதியிலுள்ளன. வாதாபி விநாயகரைச் சார்ந்து சம்ஹாரத்தையும் அடைந்தனர்களாம்.

பூதேசுவரர் தக்ஷிணாமூர்த்திக்கு முன்பு கிழக்கு முகமாகவும், பவிஷ்யேசுவரர் தலவிருட்சத்தின்கீழ் மேற்கு முகமாகவும், இவருக்குத் தென்பால் வர்த்தமானேசுவரர் கிழக்கு முகமாகவும் கோயில் கொண்டுள்ளனர். முருக நாயனார் வர்த்தமானேசுவர் ஸந்நிதிக்குத் தபன மண்டபத்தில் வடக்கு முகமாக உள்ளார்.

தக்ஷிணாமூர்த்தியின் கீழ்பால் நடராஜரின் உருவம் உள்ளது.

பூமிதேவிக்கும் ஸத்யாஷாட ரிஷிக்கும் நடன தரிசனம் காட்டினர். நளன், சனி வடக்குப் பிராகாரம். சரஸ்வதி அன்ன பூரணி, சீராளர், சிறுத்தொண்டர். புன்னை விருட்சம். (மிகப் பழையது) வாமதேவர் திரிபுர ஸம்ஹாரமூர்த்தி.

சிவலிங்கப் பெருமான் வடபுறம் சாய்ந்திருக்கிறார். வர்த்த

மானீசுவரருக்குத் தேவியில்லை; நாகேசுவரர், பசுபதீசுவரர், என்றும் பெயர். நாகம் ஆதிசேஷபூஜை. ஈசான்யத்தில் சிங்க வடிவம் கொண்டு திருநாவுக்கரசரை ஐக்கியம் செய்து கொண்டது சிலாரூபமாயிருக்கிறது. ஈசானத்தில் பரத்வாஜ ரிஷி சிவலிங்க வடிவமாக உள்ளார்.

அருந்திருப் புகலூர் அக்கினீசர்
கருந்தாழ் குழலிகனலோன் தீர்த்தம் (சிவ.)

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே
(திருநா. 6-ஆம் திரு.)

இப்பதிகம் திருவடிமுத்தி எய்திய போது பாடியதாகும்.

குறிகலந்த இசை பாடலினான் நசையால் இவ்வுல
கெல்லாம்
நெறி கலந்தது ஒரு நீர்மையனாய் எருதுஏறிப் பலி
பேணி
முறிகலந்தது ஒருதோல் அரைமேல் உடையான் இடம்
மொய்ம்மலரின்
பொறிகலந்த பொழில் சூழ்ந்து அயலே புயல் ஆரும்
புகலூரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்.

அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயறவு இல்லையே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

புகலூரை யகலாத புனிதன் கண்டாய்:—கோடிகா. திருநா.
பூம்புகலூர் மேய புராணர் போலும்—இன்னம்பர். திருநா.
புறம்பயனையறம் புரிந்த புகலூரானை—கற்குடி. திருநா.
பூந்துருத்தி மேயானைப் புகலூரானை—ஆலம்பொழில். திருநா.
பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூருள்ளார்—குடந்தைக் கீழ்க்கோட்டம். திருநா.
புறம்பயத் தெம் பெருமானைப் புகலூரானை—நள்ளாறு. திருநா.
புறம்பயமும் புகலூருமன்னினானை—செங்காட்டங்குடி. திருநா.
புகலூர்க்கே போயினார் போரேறேறி யாய்ந்தேயிருப்பார் ஆரூர். திருநா.
புகலூரும் பூவணமும் பொருந்தினான் காண்—ஆரூர். திருநா.
புகலூரும் புறம்பயமுமேயான்றன்னை—ஆரூரரநெறி. திருநா.
பூதநாதனைப் பூம் புகலூரனை—வெண்ணியூர். திருநா.
புகலூரும் பூவணமும் பொருந்தினாரும்—வெண்ணியூர். திருநா.
திண்டிச்சரமுந் திருப்புகலூர்—அதிகை. திருநா.
சேறைதுலை புகலூரகலாதிவை காதலித்தானவன் சேர்பதியே—பொது. திருநா.
புறம்பயத்தெம் முத்தினை புகலூரிலங்கு பொன்வினை—பொது. திருநா.
புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர் புறம்பயம்: பூவணம்—பொது. திருநா.
புகலூர்ப் போதா மூதூரா—பொது. சு.

204. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்: (சோழநாடு)

இத்தலம் புகலூர்க் கோயிலில் கோணப்பிரான் சந்நிதியின் வடக்குப் பக்கத்திலுள்ளது. முருகநாயனார் தொண்டு செய்த

தலமாதலின் அவரது திருவுருவம் இங்கு உள்ளது. திருஞான சம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : வர்த்தமானேசுரர்.
அம்பிகை : கருந்தாழ் குழலி
தீர்த்தம்: அக்கினி தீர்த்தம்.

வர்த்த மானீச்சரம் வர்த்தமா னீச்சுரர்
குற்றமில் கருந்தாழ் குழலுமை யக்கினி. சிவ.)

பட்டம் பால்நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிருள் ஆடும் நாதனார் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும் பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமா னீச்சரத் தாரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்: சாதிகீத வர்த்தமானர் சண்பை நகராரே—சீகாழி. திருநா.

205. திருப்புத்தூர் : (பாண்டிநாடு)

காரைக்குடி இரயில்வே நிலையத்திலிந்து 15 மைல் தொலை வில் உள்ளது. இத்தலம் சூரைமா நகருக்கு அருகில் உள்ளது. இத்தலத்துத் தீர்த்தங்களுள் ஒன்றான சீதளிதீர்த்தம் திருமகளால் உண்டாக்கப் பெற்றது. இத்தலத்தில் பிரணவம் தன்பொருள் சிவபெருமானே என்பதை அறிவிக்க வேண்டித் தவம் செய்து கொன்றை மரமாகிச் சிவபெருமானுக்கு நிழல் செய்கின்றது. இத்தலத்திலுள்ள ஆலயத்திற்கு ஸ்ரீதளியென்று பெயர்; இலக்குமி பூசித்த கோயில். இங்கே எழுந்தருளியுள்ள சிவ பெருமான் திருநாமம் ஸ்ரீதளீசுவரரென்பது. இது திருத் தளியானென்று வழங்குவதும் உண்டு. வயிரவர் சந்நிதி விசேடம். சபாபதி விக்கிரகமும், சிவகாமி அம்மன் விக்கிரகமும் சிலாரூபத்தில் இருக்கின்றன. தாண்டவம் ஏழனுள் கௌரீ தாண்டவத்தை இத்தலச் சிற்சபையில் பரமசிவன் அம்பிகைக்குக் காட்டியருளினர். திருமகள் காணத் திருநடனம் புரிந்தருளிய தலமென்று இத்தலபுராணம் கூறும். விஷ்ணுவுக்கும் சந்நிதி இருக்கிறது. இலக்குமி தீர்த்தத்தில் கிருட்டினசர்மா குசகேசவர் ஏவலால் மூழ்கிச் சக்கரம் கண்டு மருது தழுவியது. கோயிலுக்கு

வடமேற்கே ஸ்ரீதளி தீர்த்தமும் கிழக்கே சிவகங்கையும் இருக்கின்றன. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்

ஆதிசந்திரன்: காசிபர் சந்திரனை மதுரை ஆதிசந்திரனாகச் சபித்தார். அந்தணருக்குப் பூதானம் செய்தமையால் சாபவிமோசனம். இந்திரலோகத்தில் இவன் இருந்த ஆசனம் கரியதாயிற்று. தேரில் அந்தணரை ஏற்றி வருகையில் அச்சு முறிந்தது. சீதளி நாதன் ஈரத்துணியோடு வந்தார். தலபுராணம் அச்சிடப் பெற்றுள்ளது.

சுவாமி : ஸ்ரீதளிநாதர், புத்தூரீசுவரர்.
அம்பிகை : சிவகாமி, சௌந்தரிய நாயகி
தீர்த்தம் : கருடதீர்த்தம், சிவகங்கை, ஸ்ரீதளி தீர்த்தம்
விருட்சம் : கொன்றை.

பவமிலாப் புத்தூர் பரன்புத் தூரீசர்
சிவகாமி யம்மன் தீர்த்தம் கருடன். (சிவ.)

புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்த்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவன மேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி னான்காண்
விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேதம் நான்கும்
தெரிந்துமுதல் படைத்தோனைச் சிரங்கொண் டோன்காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பாகத் தான்காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவனென் சிந்தை யானே.
(திருநா. 6-ஆம் திரு.)

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்கும் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியார் அவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூருள்ளார்—வீழிமிழலை. திருநா.
புத்தூரில் அமர்ந்தான்றான் காண்—சிவபுரம். திருநா.
புத்தூர் உறையும் புனிதனைப் பூவணத் தெம்போரேற்றை—பொது. திருநா.
புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்—பொது. திருநா.

206. திருப்புள்ளமங்கை : (சோழநாடு)

பசுபதிகோயில் இரயில்வே நிலையத்திற்கு வடமேற்கு ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. வடாரண்யம் என்பது வடமொழிப் பெயர். சிவபெருமான் விஷத்தை உண்டருளிய தலம். பசுபதி கோயில் என்றும் ஆலந்துறை என்றும் வழங்கப் பெறும். இதனைத் திருவாலந்துறை என்பர். இக்கோயிலின் வடபுறத்தே தேனடை உண்டு. கோயிலின் தென்புறம் நான்கு முனிவர்களுக்கும் விநாயகர் உபதேசித்த வண்ணமாய் இருக்கிறார்.

அம்பிகை சக்கரவாகப்பறவையாக வந்து பூசித்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : வடதீர்த்தநாதர், ஆலந்தீர்த்த நாதர்.
அம்பிகை : அல்லியங்கோதை
தீர்த்தம் : காவிரி

புள்ளமங் கையில்வாழ் பொற்பசு பதியார்
வள்ளல் நாயகி மகிழ்சிவ தீர்த்தம். (சிவ.)

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்தான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே.

(திருஞா. 1-ஆம் திரு.)

207. புள்ளிருக்குவேளூர் : (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். வைத்தீசுவரன் கோயில் என வழங்கும். சம்பாதி, சடாயுவென்னும் பறவைகள் இரண்டும் வேதங்களும் முருகக் கடவுளும் சிவபெருமானைப் பூசித்த

ஸ்தலமாதலின் இப்பெயர் பெற்றது. காவிரிப்பூம் பட்டினத் திற்கு அருகிலுள்ளதும் சம்பாதிபுரமென்று வழங்கப்படுவதுமாகிய இத்தலத்திறைவனை ஒரு யோசனை தூரத்திலிருந்து பூக் கொணர்ந்து சம்பாதி பூசித்தான். மற்றும் இராமர், இலக்குவன், ஏழுமுனிவர் பூசித்த தலம். இத்தலத்துக்குப் பல திருநாமங் களுண்டு. அவை: ஆதிவயித்திய நாதபுரி, கந்தபுரி, குருசூர், சடாயுபுரி, தினகரபுரி, பருதிபுரி, புள்ளூர், வேதபுரி, வேளூர் முதலியன. இத்தலத்தில் திருக்கோயிலில் விபூதிக் குண்டத் திலிருந்து வெண்சாந்தெடுத்தும் அங்க சந்தானத் தீர்த்தத் தினின்று மண்ணெடுத்தும் உண்டோர் நோய் நீங்கிச் சுகம் பெறுதல் கண்கூடு. இத்தலத்தில் பிசாசினால் பீடிக்கப்பட்டவர் கள் வழிபட்டு அதனின்றும் நீங்கி அருள் பெறுவார்கள். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : வைத்தியநாதர், தீராநோய் தீர்த்தருள வல்லான் தீராவினை தீர்த்த தம்பிரான்.

அம்பிகை : தையல் நாயகி, பாலாம்பிகை.

விருட்சம் : வேம்பு.

தீர்த்தம் : அங்கசந்தானத் தீர்த்தம், சித்தாமிர்தத் தீர்த் தம் (அம்பிகையின் சந்நிதிக்கு முன்னுள்ள விசேட தீர்த்தம்).

சிவஸ்தலங்களுள் விசேடமானவை ஐந்து. மதுரை, திருக் கேதாரம், திருவானைக்கா திருவாஞ்சியம், புள்ளிருக்குவேளூர்.

தலக்காவல்கள் : கிழக்கு—வைரவர்.

மேற்கு : வீரபத்திரர்
தெற்கு : கற்பக விநாயகர், துர்க்கை.
வடக்கு : காளி.

சித்தாமிர்தத் தீர்த்தம் பெயர்க்காரணம். சித்தர்கணம் வைத்தியநாத சுவாமி திருவடியில் தேவாமிருதத்தால் அபிடேகம் செய்தபோது அவ்வமிர்தம் பெருகி இத்தீர்த்தத்தில் கலந்தது. இத்தீர்த்தத்தில் நீராடிய விசேடத்தால் சூரியன் அமுதமய மாயினன். இத்தீர்த்தத்திற்கு யுகம்தோறும் இருடிகள் முதலி யோர் தனித்தனியே இருப்பர். கலியுகத்தில் சதானந்தர். அங்க சந்தான தீர்த்தம் : தாரகனோடு போர் செய்து மூர்ச்சித்துக் கிடந்த தேவர்களைக் காக்க இறைவன்தன் சூலத்தால் தீர்த்த முண்டாக்கித் தேவர்களது சிதைந்த அங்கத்தை அத்தீர்த்த நீரில் நனைத்துப் பொருந்தச் செய்தமையால் இப்பெயர் பெற்றது.

விருட்சம் : வெள்ளெருக்கு தெய்வம், வைத்தியநாதர். காவற்கடவுள் அங்காரகன்.

இத்தலத்தைப் பற்றிய நூல்கள் :

சிவஞானதேசிகர் (தருமை 10-வது சந்நிதானம்) இயற்றிய முத்துக்குமாரசுவாமி திருவருட்பா.

படிக்காசுத் தம்பிரான் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் இயற்றியுள்ளார்.

சிதம்பரமுனிவர் பாடிய க்ஷேத்திரக்கோவைப்பிள்ளைத்தமிழ் முத்தப்பருவத்தில் முத்துக்குமாரர் தோத்திரம் வருகிறது. இதில் முருகன் கவிசொல் என்று ஆணையும் தந்து அடியெடுத்துக் கொடுக்கப்பாடிய புலவர் பலர் பெயர்களும் வந்துள்ளன. காள மேகப் புலவரும் இராமலிங்க சுவாமிகளும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர்.

உம்பர் புள்ளிருக்கு வேளூர் வயித்தீசர்
அம்பிகை தையல் நாயகி சித்தாமிர்தம். (சிவ.)

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

வெள்ளெ ருக்கர வம்விர வும்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளி ருக்கும் உணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப்பாடல் : புள்ளிருக்கு வேளூராய் நீயே என்றும் —திருநெய்த்தானம். திருநா.

208. திருப்புறம்பயம் (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது இத்தலம். பிரளய காலத்தில் ஊழிவெள்ளம் சிவாஞ்ஞையால்

இதன் புறத்தே சூழ்ந்திருந்தது பற்றி இஃது இப்பெயர் பெற்ற தென்பர், ''பாஹ்யாம்பு புரம்'' என்பது இத்தலத்தின் வட மொழிப்பெயர். தக்ஷிணாமூர்த்திக்குரிய 24 முக்கியத் தலங் களுள் இத்தலமும் ஒன்று; சனகாதி நால்வர்க்குத் தர்மோப தேசம் செய்தருளிய தலம். பிரமன் பூசித்த தலமாகையால் பிரம தீர்த்தம் உள்ளது. இத்தலத்தில் அரித்துவசன் என்னும் அரசனுக்குத் துர்வாசமுனிவர் சாபத்தால் ஏற்பட்ட முயலக நோய் நீங்கியது. ரத்னவல்லியென்னும் வணிகப்பெண்ணின் வேண்டுகோளின்படி அவளுக்குக் கணவனாக நிச்சயிக்கப்பட்டு, பாம்பு கடித்து இறந்த தனகுப்தன் என்னும் வணிகனைச் சிவ பெருமான் விடதாரியாக வந்து உயிர்ப்பித்தருளியதலம்; திரு ஞான சம்பந்தர் தம் திருநோக்கால் இவ்வணிகனுக்கு விஷம் தீர்த் தருளியதாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் முதலிய நூல்கள் கூறும். இவ்விருவருக்கும் நிச்சயிக்கப்பட்டிருந்த திருமணம் நடப்பதற்கு இத்தலத்திறைவன் மதுரைக்குச் சென்று சாட்சி சென்ன காரணத்தினால் சாட்சி நாதர் என்று வழங்கப் படுகிறார். இத்தலவிநாயகர் பிரளயங்காத்த விநாயகர் என்னுந் திருப்பெயருடையவர். விநாயகர் வெண்மை நிறம். விநாயக சதுர்த்தி அன்று ஒரு ஆடம்தேன் அபிடேகம். மற்ற நாட்களில் அபிடேகம் கிடையாது.

கோயிலுக்கு விறகு கொண்டு வந்த ஒரு நீசனுக்குச் சுவாமி தட்சிணாமூர்த்தி ரூபமாகத் தரிசனம் கொடுத்தார். கோயிலின் கிழக்கே உள்ள ஒரு குளக்கரையில் இந்தத் தட்சிணாமூர்த்தி இருக்கிறார். மூவரும் பாடிய தலம்.

சுவாமி : சாட்சிநாதர்
அம்பிகை : கரும்பன்ன சொல்லம்மை, கரும்படு சொல்லம்மை.
விருட்சம் : வன்னி, புன்னை.
தீர்த்தம் : பிரம தீர்த்தம்.

தருந்திருப் புறம்பயஞ் சாட்சி நாயகர்
கரும்படு சொல்லி கழுநீர் பிரமம். (சிவ.)

கொடிமாட நீள்தெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டியூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகும் ஒற்றியூர் ஒற்றியாகப்

படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமும் கைவிட் டிந்நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயம் நம் மூரென்று போயி னாரே.
(திருநா. 6-ஆம் திரு.)

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்.
(திருஞா. 2-ஆம் திரு.)

அங்கம் ஓதி ஓர் ஆறைமேற்றளி நின்றும் போந்துவந்து இன்னம்பர்த்
தங்கினோமையும் இன்னது என்றிலர் ஈசனார் எழு நெஞ்சமே
கங்குல் ஏமங்கள் கொண்டு தேவர்கள் ஏத்தி வானவர் தாம்தொழும்
பொங்கு மால்விடை ஏறிசெல்வப் புறம்பயம் தொழப் போதுமே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

புறம்பயனை யறம் புரிந்த புகலூரானை—சற்குடி. திருநா.
பூவணமும் புறம்பயமும் பொருந்தினானை—திருவாலம் பொழில். திருநா.
புறம்பயத் தாரறம் புரிபூந்துருத்தி புக்கு—குடந்தைக் கீழ்க்கோட்டம்—திருநா.
புறம்பயத் தெம்பெருமானைப் புகலூரானை—நள்ளாறு. திருநா.
புன்கூரார் புறம்பயத்தார் புத்தூருள்ளார்—வீழிமிழலை. திருநா.
புறம்பயமும் புகலூரு மன்னினானை—செங்காட்டங்குடி. திருநா.
பூவணமோ புறம்பயமோ வன்றாயிற்றான் பொருந்தாத வாழ்க்கை—ஆரூர். திருநா.

போந்தாரடிகள் புறம்பயத்தே—ஆரூர். திருநா.
புகலூரும் புறம்பயமுமேயான்றன்னை—ஆரூரரெநெறி.
திருநா.

209. புறவார் பனங்காட்டூர் (நடுநாடு)

முண்டியம்பாக்கத்திலிருந்து ஒன்றரைமைல் தொலைவில் உள்ளது. சித்திரை 1-ஆம் தேதி முதல் 7 நாள்வரை ஒவ்வொரு நாட்காலையிலும் சூரியோதயத்தில் கிரணங்கள் முதலில் சுவாமி மேலும், பின்பு அம்பிகை மேலும் விழுகின்றன. சூரியன் பூசித்த தலம். பனையபுரம் என்று வழங்கும். சிபிச் சக்கரவர்த்திக்குத் தரிசனம் கொடுத்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : பனங்காட்டீசுரர்.
அம்பிகை : புறவம்மை, மெய்யரிவை, மெய்யம்பாள், ஸத்தியாம்பிகை.

தீர்த்தம்: பத்ம தீர்த்தம்.
விருட்சம் : பனை.

பனங்காட் டூர்சேர் பனங்காட் டீசர்தம்
மனங்கூர் பதுமநா யகிமகிழ் பதுமம். (சிவ.)

விண்ண மர்ந்தன மும்ம தில்களை
வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய
பிஞ்ஞ காபிறை சேர்ந்து தலிடைக்
கண்ணமர்ந் தவனே கலந்தார்க் கருளாயே.
(திருஞா. 2-ஆம் திரு.)

210. திருப்புனவாயில் (பாண்டி நாடு)

அறந்தாங்கியிலிருந்து 22 மைல் தொலைவு சென்று மீமிசல் போய், ஏழு மைல் மாட்டு வண்டியில் சென்றால் இத்தலத்தை அடையலாம். ஆடானையிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவு சென்றாலும் இத்தலத்தை அடையலாம். கடற்கரையிலுள்ள தலம். மூலஸ்தானலிங்கம் மிகப் பெரியது. ஆவுடையாரைச் சுற்றி உடுத்த முப்பது முழம் நீளமுள்ள பரிகூற்குப் பழம்பதி, விருத்த பதி என்ற [illegible] வேதங்களும் பூசித்த தலம்.

பாண்டி 14 தலமும் இவ்வூரில் இருப்பதாக ஐதிகம். 14 லிங்கங்கள் உள்ளன. ஊருக்குத் தெற்கே (பாம்பாறு) சர்ப்பநதி ஓடுகிறது. இதற்குத் தெற்கில் கடற்கரையில் நீத்தானம் என்று ஒரு தலம் உண்டு. சுந்தரர் பாடிய தேவாரப்பதிகத்தால் இத் தலம் பாலையாகத் தோற்றுகின்றது. திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி : பழம்பதிநாதர்
அம்பிகை : கருணைநாயகி
தீர்த்தம் : லக்ஷ்மி தீர்த்தம், பிரமதீர்த்தம்.

புனவாயில் மேவும் புனவாயில் நாதர்
அனைபரங் கருணைநா யகிகரு ணாநதி. (சிவ.)

சித்தம் நீநினை என்னொடு சூளறும் வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளனூர்
பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்டறாப்புன வாயிலே
(சுந்தரர்)

211. திருப்புன்கூர் (சோழநாடு)

வைத்தீசுவரன் கோயிலிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் சிவபிரான் புன்கமரத்தின் அடியில் எழுந்தருளியுள்ளார். திருநாளைப் போவாருக்காகச் சிவபெருமான் கட்டளைப்படி நந்தி விலகிய தலம்.

கஞ்சாரணியம் என்று இத்தலத்திற்கு வேறு ஒரு பெயர் உண்டு. கவசம் சாத்திய லிங்கம். புனுகு சட்டம் சாத்தினால் மட்டும் கவசமின்றித் தரிசிக்கலாம். திரிபுரம் எரிபட்டபோது எஞ்சிய மூவரில் ஒருவன் இறைவன் நடமாடும்போது மணிமுழா முழக்குவன் எனச் சுந்தரர் இத்தலப் பதிகத்தில் கூறியபடி நடராசாவின் தென்மேல் பால் ஓர் உருவம் மணிமுழா முழக்குவதைக் காணலாம். பன்னிரு வேலியென்ற கிராமம் இத் தலத்துக்கு மேற்கே ஒரு நாழிகை வழித்தூரத்திலுள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளாக மழையின்மையால் பஞ்சம் நேரிடவே இறைவன் பன்னிருவேலி யென்ற இந்தக் கிராமத்தைப் பெற்றுக் கொண்டு மழை பொழியச் செய்து பஞ்சம் நீங்குமாறு திருவருள் செய்த தலம். இத்தல புராணம் அச்சிடப்பட்
பாடிய தலம்.

சுவாமி : சிவலோகநாதர்.
அம்பிகை : சொக்கநாயகி அம்மை, சௌந்தர நாயகி.
தீர்த்தம் : இடபதீர்த்தம்.
விருட்சம் : புன்கமரம்

திருப்புன்கூர் வாழ்சிவ லோக நாதர்
விருப்புறு சொக்கநா யகிவிடை தீர்த்தம் (சிவ.)

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயிர் அதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தைநீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்அடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.
(சுந்தரர்)

முந்தி நின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப்பேணா தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்கும் தூநெறியாய் நின்றான் தன்னைத்
திறமாய எத்திசையும் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை
நிறமாம் ஒளியானை நீடு ராணை
நீதனேன் என்னேநான் நினையா வாறே.
(திருநா. 6-ஆம் திரு.)

நீதன்–நீசன்.

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பொழிலானைப் பொழிலாரும் புன்கூரானை—கற்குடி. திருநா.
பூவார் புனலணவுபுன்கூர்வாழ்வர்—இடைமருதூர். திருநா.
புன்கூரார் புறம்பயத்தார் புத்தூருள்ளார்—வீழிமிழலை. திருநா.
பூம்புகார்க் கற்பகத்தைப் புன்கூர்மேய—
நாகைக்காரோணம். திருநா.
திருப்புன்கூர் மேவிய செல்வனாரும்—வெண்ணியூர். திருநா.
புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்—பொது. திருநா.
செய்யில் வாளைகள் பாய்ந்துகளுந் திருப்புன்கூர் பொது. திருநா.

212. திருப்பூந்துருத்தி : (சோழநாடு)

திருக்கண்டியூருக்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது. திருவையாற்றுக்குரிய சப்தஸ்தான தலங்களுள் ஆறாவது தலம். இத்தலம் புஷ்ப வனமென வழங்குமாதலின் சுவாமியின் திருநாமம் புஷ்பவனநாதர் என்பதாகும். அப்பர்பெருமான் இங்குத் திருமடம் அமைத்துப் பல பொதுப் பதிகங்கள் அருளினார். அத்திருமடச்சிதைவு இன்றுமுள்ளது. சம்பந்தர் அப்பரைக்காண வந்த போது அப்பர் ஒருவரும் காணாதபடி அவருடைய சிவிகையைத் தாங்கியது இங்கு நிகழ்ந்தது.

சோழன் துருத்தியை வைத்துப் பூசிக்கச் செய்ன்னதால் இத்தலம் திருப்பூந் துருத்தி என்று வழங்கும் என்பர். பூந்துருத்தியாதலின் இத்தலம் காற்றோடு தொடர்புடையது. பட்டீச்சுரத்தைப்போல திருஞானசம்பந்தருக்காக நந்திகள் விலகின தலம். தேவேந்திரனும், காசியபரும் பூசித்த தலம்.

சுவாமி : புஷ்பவன நாதர், பொய்யிலி.
அம்பிகை : உருவுடையம்பிகை, அழகாலமர்ந்தநாயகி.
தீர்த்தம் : காசிப தீர்த்தம்.

பொழிபூந் துருத்தி புட்ப வனேசர்பால்
அழகா லமர்ந்தநா யகிகாசி கங்கை. (சிவ.)

மாலினை மாலுற நின்றான் மலைமகள் தன்னுடைய
பாலனைப் பால்மதி சூடியைப் பண்புண ராரமதில்மேல்

போலனைப் போர்விடை யேறியைப் பூந்துருத்
திம்மகிழும்
ஆலனை ஆதிபு ராணனை நானடி போற்றுவதே.
(திருநா. 4-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பூந்துருத்திப் பொய்யிலியாய் நின்றான் கண்டாய்—
கோடிகா. திருநா.
பூந்துருத்தி நெய்த்தான மேயார்தாமே—பழனம். திருநா.
பூந்துருத்தி மேயானைப் புகலூரானை—ஆலம்பொழில்.
திருநா.
புறம்பயத்தார் அறம்புரி பூந்துருத்தி புக்கு—
குடந்தைக்கீழ்க்கோட்டம். திருநா.
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தினானை—
செங்காட்டங்குடி. திருநா.
பூந்துருத்தி நகர்மேய புராணனாரும்—வெண்ணியூர். திருநா.
பூந்துருத்தி மேயான்றன்னை—திருமுதுகுன்றம். திருநா.
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில் பொல்லாப்
புலாற்றுருத்திபோக்கலாமே—பொது
திருநா.

213. திருப்பூவணம் : (பாண்டிநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். வைகையாற்றங்கரையில் உள்ளது. தமிழ்வேந்தர் மூவரும் வழிபட்ட தலம். இங்குச் சூரியன் பூசை செய்தான். இங்குப் பஞ்சசஸ்தூபிகள் உள்ளன. இவை ஈசனது ஐந்து முகங்களைப் போல்வன. பஞ்சலிங்கங்களும் மற்றும் சூக்ஷ்ம லிங்கங்களும் உள்ளன. பொன்னணையாள் விக்கிரகம் உள்ளது. சூரியன் பூசை செய்த சோமாஸ்கந்த மூர்த்திக்குக் காந்தி நாயகர் என்று பெயர். உற்சவ மூர்த்தி பெயர் அழகிய நாயகர். கன்னத்தில் நகத்தழும்பு உள்ளது.

அதிகாரநந்தி : இவருக்குக் கபிநந்தி என்று பெயர். சந்நிதி-5 திருப்புகழ்-3 மேனி. ருத்ராக்ஷமேனி. வடிவு: சைதன்ய வடிவு. ஆகிருதி : சர்ப்பாகிருதி. மனோன்மணியம்சம் வலப்பாகம். கௌரீயம்சம் இடப்பாகம். சுந்தரமூர்த்தி நாயனார். 210 பேருடன் இங்கு வந்தார். 6 கால பூசை. 1. திருவனந்தல். 2. விதைபூசை, 3. காலசந்தி, 4. திரிகாலம், 5. திரிகால சந்தி, 6. உச்சிக்காலம், 7. சாயரக்ஷை, 8. அர்த்தசாமம்

இங்கு 18 சித்தர்கள். வடவால விருட்சம் ஒன்று உள்ளது. அதில் ஒரு தெய்வம் உள்ளது. அதற்கு ஐடாதரமுனி என்று பெயர். பிரார்த்தனைத்தலம். நடராச தாண்டவம். பிரம தாண்டவம்.

பூவண மேவும் பூவண நாதர்
பூவண நாயகி புந்திகூர் வைகை. (சிவ.)

வடியேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(திருநா. 6-ஆம் திரு.)

அறைஆர் புனலும் மாமலரும் ஆடுஅரவு ஆர்சடைமேல்
குறைஆர் மதியம்சூடி மாது ஓர்கூறு உடையான் இடம் ஆம்
முறையால் முடிசேர் தென்னர்சேரர் சோழர்கள் தாம் வணங்கும்
நிறைஆர் ஒளிசேர் செம்மை ஓங்கும் தென்திருப் பூவணமே.

(திருஞா. 1-ஆம் திரு.)

திருவுடை யார்திரு மால்அய னாலும்
உருவுடை யார்உமை யாளைஓர் பாகம்
பரிவுடையார் அடைவார்வினை தீர்க்கும்
புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பூவணமும் புறம்பயமும் பொருந்தினானை—
ஆலம்பொழில். திருநா.
பூவணத்தவன் புண்ணியன்—குடமூக்கு. திருநா.
பூவணமோ புறம்பயமோ வன்றாயிற்றால்—ஆரூர்.
திருநா.
புகலூரும் பூவணமும் பொருந்தினான்காண்—ஆரூர்.
திருநா.
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை—ஆரூரரநெறி.
திருநா.
புகலூரும் பூவணமும் பொருந்தினாரும்—
வெண்ணியூர். திருநா.
பொதியிலானே பூவணத்தாய்—வலிவலம். திருஞா.
திருச்செம்பொன்பள்ளி திருப்பூவணம்—அதிகை. திருநா.
தென்புறம்பயம் பூவணம் பூழியூரும்—பொது. திருஞா.
புத்தூருறையும் புனிதனைப் பூவணத் தெம்போரேற்றை—
பொது. திருநா.
பூவணக் கிழவனாரை—பொது. திருநா.
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்—பொது. திருநா.

பாண்டி நாட்டுள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் பதினான்கனுள் ஒன்று; இதற்குரிய தேவாரப் பதிகம் 4. (திருஞான. 2; திருநா. 1; சுந். 1) கருவூர்த் தேவர் திருவிசைப் பா-1. இத்தலத்திற்கு வடமொழி தென்மொழி இரண்டிலும் புராணங்கள் உள்ளன. தலவிநாயகர்கள்: கற்பக விநாயகர், மணிமந்திரவிநாயகர், ஒட்டுக்கல் வெள்ளைவிநாயகர்.

சுவாமியின் திருநாமங்கள் : புஷ்பவனநாதர், பாஸ்கரபுரீசர், பிதிர்மோக்ஷபுரீசர், பிரஹ்மபுரீசர் ரகசிய சிதம்பரேசர், திருப்பூவணேசர், அடைவார் வினைதீர்ப்பவரென்பன; சந்நிதி கிழக்கு.

அம்பிகையின் திருநாமங்கள் : சுந்தரநாயகி, தடிதம்பை, சுவர்ணவல்லி, அன்னபூரணி, அழகியநாயகி, அழகியமின், மின்னனையாள், மின்னம்மை, மின்னாளென்பன. அம்பிகையின் திருக்கோயில் சுவாமியின் திருக்கோயிலுக்கு வலப்பக்கத்துள்ளது.

நாயகர் திருநாமங்கள் : சௌந்தர நாயகர், அழகிய நாயகர், அழகுக்கு ஆருமொவ்வாதவர் என்பன; பொன்னனையாளுடைய நகத்தழும்பைப் பெற்றருளியவர் இவரே, அத் தழும்பை இன்றும் காணலாகும்.

தலத்தின் திருநாமங்கள் : புஷ்பவனம், புஷ்பவனகாசி, புஷ்பபுரம் பாஸ்கர க்ஷேத்திரம், பிதிர்மோக்ஷபுரி, பிரஹ்மபுரி, ரகசிய சிதம்பரம், திருப்பூவணம், திருப்பூவணக்காசி என்பன. பூவை எனவும், திருப்புவனம் எனவும் இதன்பெயர் வழங்கும்.

தீர்த்தங்கள் வையை, மணிகர்ணிகை, அல்லது மணிகுண்டம், தேவி குண்டம், பாபநாசம், பிரஹ்ம தீர்த்தம், லக்ஷ்மி தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், நளதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம். வசிஷ்ட தீர்த்தம் முதலியன.

தலவிருட்சம் ; பலா.

வழிபட்டுப்பேறு பெற்றோர்கள் : விநாயகர், உமாதேவியார், திருமால், திருமகள், பிரமதேவர், அகத்தியர், காளி, சூரியன், திரணாசனர், தருமஞ்ஞர், ஸுஜ்ஜோதி மகாராஜா, மார்க்கண்டேயர், வசிஷ்டர், இந்திரன், சந்திரன், நளன், சாகாசனர், பெண்ணனையாள் முதலியோர்கள்.

என்பானது மலர் அல்லது சிலையாகும் என்பது ஐதிஹ்யம். வையை நதியிலுள்ள மணல்கள் சிவலிங்கங்களாகத் தமக்குத் தோன்றினமையின், அவற்றை மிதித்தற் கஞ்சித் தரிசித்தற்கு அக்கரையிலேயே நின்ற திருஞானசம்பந்தர் முதலியோர் பொருட்டுச் சிவபெருமான் திருநந்திதேவரைச் சிறிது சாய்ந்திருக்கும்படி கட்டளையிட, அவர் அப்படியே சாய்ந்திருந்தன ரென்று பெரியோர் சொல்லுகின்றனர். அந்தத் தோற்றத்தை இன்றும் காணலாகும். இதனை, ''செப்பு மூவர் சொற்றமிழ் துதிக்க விருப்பொடு வந்துவையை மணற்சிவ லிங்கமென மனத்தெணி முன்பு வடகரைக்கவர் நின்று தமிழ் பாடுபொழுதேயிடப மாமுதுகு சாயும்வகை யே செய்து முன் மூவர் தரிசிக்க மகிழ் நேசர்'' (புஷ்பவனநாதர் வண்ணம்) என்பதனாலும் உணர்க. பொன்னனையாள் மடம் என்றும், பொன்னனையாள் மண்டபம் என்றும் இரண்டு கட்டிடங்கள் இத்தலத்தில் உள்ளன. அவற்றுள் முன்னது பொன்னனையாள் சிவனடியார்களை அமுது செய்வித்த இடமென்றும் பின்னது அவள்பொருட்டு மதுரைச் சோமசுந்தரக் கடவுள் வந்து ரசவாதம் செய்தருளிய இடமென்றும் சொல்லுகின்றனர். கோரக்கசித்தருடைய ஆலயமொன்று இத்தலத்தில் இருக்கின்றது.

தலவரலாறு:

வாலகில்லிய முனிவர்களை அவமதித்த குற்றத்தால் திருமாலைப் பிரிந்த திருமகளார் இங்கே வந்து தவஞ் செய்து

அப்பால் திருமாலால் அங்கீகரிக்கப் பெற்றனர். இத்தலத்தில் உடலை வெறுத்து உப்பில்லாத இலைக்கறியை மாத்திரம் உண்டு சிவயோகஞ் செய்து கொண்டிருந்த ஒரந்தணன் ஒரு நாளிரவிற் பெருமழை பெய்யுங்காலத்தில் மிக்க பசியோடு வந்த ஒரு பிராமணனுக்குத் தனக்குப் பாகம் செய்து வைத்திருந்த இலைக்கறியை அளித்து அவனை யுண்பித்து அப்புண்ணியத்தால் வீடுபேற்றையடைந்தான். இத்தலத்தில் உமாதேவியாருடைய திருக்கரத்தால் வைக்கப்பெற்ற விருக்ஷம் கிருதயுகம் முதலிய நான்கிலும் முறையே பாரிசாதம், வில்லுவம், வன்னி, பலாவாக ஆயிற்று. திருப்பூவண நாதர், பொன்னனையாளென்னும் உருத்திரகணிகைக்கு இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கித் திருவுருவங் கொண்டருளினர். பொன்னனையாள் அச்செம்பொன்னால் இயற்றுவித்த மூர்த்திக்கு அழகிய நாயகர் என்று பெயர். தம்மை அடைவாருடைய எல்லாப் பாவங்களையும் தீர்த்தருளுதல் பற்றித் திருப்பூவணேசருக்கு அடைவார் வினைதீர்ப்பவர் என்பது திருநாமம். சுவாமி பலாமரத்தின் அடியில் எழுந்தருளியுள்ளார். நளச்சக்கரவர்த்திக்குக் கலியின் துன்பம் இத்தலத்தில் நீங்கியது. நளபதக்கமென வழங்கும் மூன்று பதக்கங்கள் இன்றும் இத்திருக்கோயிலில் உள்ளன. நவக்கிரகங்களும் நக்ஷத்திரங்களும் வலஞ்செய்யும் சிறப்புடையதலம். கௌதமி நதிக்கரையிலுள்ள திரணாசனரென்னும் பிராமணரொருவர் ஸ்தல யாத்திரை செய்பவராகி இத்தலம் வந்து அம்பிகையை மட்டும் தரிசித்து ஸ்வாமியைத் தரிசியாமற்சென்ற பாவத்தால் ராக்ஷஸ வடிவம் பெற்றுத் துன்புற்று நாரதமுனிவருடைய கட்டளையின்படி இத்தலத்திலுள்ள பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அவ்வுருவம் நீங்கப்பெற்று விதிப்படி தரிசித்து முத்தி பெற்றனர். இத்தலத்திலுள்ள மணிகர்ணிகா தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த விசேடத்தால் அகத்திய முனிவர் கடல்நீரை உண்டருளினர். கோதாவரி நதிக்கரைக் கண்ணதாகிய போகவதி நகரத்தரசனான தேவவன்மாவென்னும் அரசன் புத்திரனான சுச்சோதிகன் நாரத முனிவர் கட்டளைப்படி இத்தலம்வந்து ஸ்வாமி தரிசனம் பண்ணி மணிகர்ணிகையில் தர்ப்பணாதிகளைச் செய்து பிதிரர்களை முத்தியடைவித்தான். இறந்த தன்னுடைய பிதாவின் என்புகளைக் கங்காநதியிலிடுவதற்கு அவற்றை ஒரு குடத்தில் அடைத்து வைத்துக்கொண்டு செல்லும் தருமஞ்ஞனென்னும் அந்தணன் ஒருவன் இத்தலம் வந்து மணிகர்ணிகையின் கரையில் இருக்கையில் அவ்வென்புகள் தாமரை மலரும் நீலோற்பல மலருமாயின. திருக்கண்ண தேவர் என்பவர் அழகிய நாயகருக்கு முன் மண்டபமும், சபாபதி மண்டபமும் கட்டியவர். பூவணலிங்கம்பிள்ளையென்பவர் கொடிக் கம்பத்தையும் அதன்

அருகிலுள்ள மண்டபத்தையும் பொன்னொளீ வீசுமாறு அமைத்தவர். மற்றும் அம்பிகை கோயிலின் முதற் பிராகாரத் திருமதிலும் மண்டபமும் கட்டுவித்தார். ஈசுவர மூர்த்தியா பிள்ளையென்பவர் மணிகர்ணிகை தீர்த்தக்கரையில் மதில், மண்டபம் மதிலின் உட்பக்கத்தில் தீர்த்தக் குளத்தை மக்கள் சுற்றி வருவதற்கேற்ப நடைபாதை (ஆள்வாரி-ஆளோடி), படிக்கட்டு முதலியன அமைத்தவர்.

214. திருப்பூவனூர் : (சோழநாடு)

நீடாமங்கலம் இரயில்வே நிலையத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களில் அடிக்கடி சொல்லப்படும் வெண்ணிக் கூற்றத்தைச் சேர்ந்தது.

சுகமுனி முதலானோர் புஷ்பவனம் வைத்துப் பூசித்து முத்தி பெற்ற தலம்.

இங்கு இரண்டு சுவாமி சந்நிதிகளும், இரண்டு அம்பிகை சந்நிதிகளும் உண்டு. திருநெல்வேலியிலுள்ள ஓர் அரசன் மகள் காந்திமதி என்பவள் பல கலைகளும் தேர்ந்து வருவாரை வாதில் வென்றாள். பின்பு தலயாத்திரையை மேற்கொண்டு பூவனூருக்கு வந்தாள். சிவபெருமான் கிழவராக வந்து அவளுடன் சதுரங்க மாடி அவளைத் தோல்வியுறச் செய்து திருமணம் செய்து கொண்டார். அவள் பராசத்தியின் அம்சம்.

குடகு தேசத்தரசன் பெண்ணைச் சதுரங்கமாடிக் கொண்டு வந்தமையால் சுவாமிக்குச் சதுரங்கவல்லவன் என்னும் பெயர் உண்டு. அந்த அம்பிகை ராஜராஜேசுவரி.

சுவாமி : புஷ்பவனேசுரர், புஷ்பவனநாதர்.
அம்பிகை : கற்பகவல்லி.
தீர்த்தம் : சுருங்குழி தீர்த்தம்.
விருட்சம் : பலா.

பொற்றிருப் பூவனூர் புட்ப வனேசர்
சுற்பக வல்லி சுருங்குழி தீர்த்தம். (சிவ.)

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்கள் ஆவரே.
(திருநா. 5-ஆம் திரு.)

புனிதன்-தூயவன். நூறுநூறாயிரம்-ஒருகோடி.
பாறி-அழிந்து.

215. பெண்ணாகடம் : (நடுநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். விருத்தாசலத்திற்குத் தென்மேற்கே 11 மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்தின் பெயரான பெண்ணாகடம் என்பது சுருக்கமாகக் கடந்தை யென்று வழங்கும். கோயிலின் பெயர் தூங்கானை மாடம். அப்பர் சுவாமிகள் சிவபெருமானைத் தம் திருமேனியில் திரிசூல முத்திரையும் ரிஷப முத்திரையும் பொறித்தருளுமாறு வேண்டி அங்ஙனமே பொறித்தருளப் பெற்ற அற்புதத்தலம். சைவ சித்தாந்த சந்தானாசாரியர்களில் முதல்வரான மெய்கண்டாரது அவதாரத் தலம்.

மூலத்தானத்துக்கு நான்கு பக்கமும் பலகணியுள்ளன. கஜப் பிருஷ்ட விமானம். கட்டுமலை. ஏறும்வழி வேறு. இறங்கும் வழி வேறு. படிகள் உள்ளன. கட்டுமலையில் உள்ளவர் ஜவந்தீசுவரர். கோச்செங்கட்சோழனார் பிரதிஷ்டை. ஜவந்தீசர் திருமேனியில் 24 பட்டைகள் உள்ளன. தலவிருட்சம் சண்பகம். பரமானந்த தீர்த்தம் சந்நிதியிலுள்ளது. கபில தீர்த்தம் கோயிலுக்கு மேற்கு. அஷ்டதீர்த்தம். பெண்–தேவகன்னியர். ஆ–காமதேனு, கடம்-ஐராவதம் இவர்கள் பூசித்ததால் இப்பெயர். வழிபட்டோர்; தண்டகாசுரனை வதைத்த பழிதீர இந்திரன் பூசித்ததலம்.

விநாயகர் ஒன்பதின்மர் வினைதீர்த்த விநாயகர் அக்னி மூலையிலுள்ளவர். குடவரை சப்த கன்னிகைகள் பூசித்தது.

நந்தி மங்கலம் : பெண்ணாகடத்திற்கு வடக்கே உள்ள ஊர். ஆலகால விஷத்தைத் தீர்த்துக் கொள்ளச் சுவாமி இங்கே எழுந்தருளினார். கடந்தைமாலை என்று ஓர் ஊர் உண்டு. வடமடவளாகத்தில் மேலக்கோடியில் மறைஞானசம்பந்தர் அவதரித்த இடத்தில் மடம் கட்டப்பட்டுள்ளது. ஊருக்குத் தென் மேற்கே அச்சுதக்களப்பாளர் மேடொன்று இருக்கிறது. நந்தி கிழக்கு முகமாக வுள்ளார்.

இதற்குத் தெற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள மருதூரில் தான் சந்தானாசாரியருள் ஒருவரான மறைஞான சம்பந்தர் அவதாரம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : சுடர்க்கொழுந்தீசர், பிரளயகாலேசுவரர்,
கடந்தைநாதர், புஷ்பவனேசுவரர்.

அம்பிகை : சுடந்தை நாயகி, ஆமோதனாம்பிகை.
விருட்சம் : சண்பகம்.

தூங்கானை மாடஞ் சுடர்கொழுந் தீசர்பால்
ஓங்கும் கடந்தைமா துமைவெள் ளாறு. (சிவ.)

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி
மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்
சுடர்க்கொழுந்தே.
(திருநா. 4-ஆம் திரு.)

ஓடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
அடங்கும் இடம்கருதி நின்றீரெல்லாம்
அடிகள் அடிநிழற்கீழ் ஆளாம்வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவி எங்கும்
கெழுமனைகள் தோறும் மறையின்ஒலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பெண்ணாகடத்துப் பெருந்தூங்கானை மாடத்தார்—
வீழிமிழலை. திருநா.
சோதிலிங்கத் தூங்கானை மாடத்தானை—ஆரூரநெறி.
திருநா.
பிரமபுரஞ்சுழியல் பெண்ணாகடம்—அதிகை. திருநா.
பெண்ணையருட்டுறை தண்பெண்ணாகடம்—பொது.
திருநா.

216. திருப்பெரும்புலியூர் : (சோழநாடு)

திருவையாற்றுக்கு வடமேற்கே 2½ மைல் தொலைவில் உள்ளது. வியாக்கிரபாதர் பூசித்த தலம். சுவாமி இருக்கும்

இடத்திலுள்ள கற்கள் தாமரைபோல் வட்டமாய்ப் போடப் பட்டிருக்கின்றன. கோயிலுக்கு மேற்கில் திருமழிசை யாழ் வாரின் பெருமையை உலகினருக்கு அறிவித்த பெருமாள் சந்நிதி உள்ளது. புலிக்கால் முனிவர் பூசித்த காரணத்தால் இத்தலத் திற்கு இப்பெயர் வந்தது.

சுவாமி : வியாக்கிரபுரீசர்
அம்பிகை : சௌந்தரநாயகி
தீர்த்தம் : கொள்ளிடம்

மெய்ப்பெரும் புலியூர் வியாக்கிர புரீசர்
ஒப்பில் சவுந்தரி யுமைபொன் னிநதி. (சிவ.)

மண்ணுமோர் பாகம் உடையார் மாலுமோர் பாகம் உடையார்
விண்ணுமோர் பாகம் உடையார் வேதம் உடைய விமலர்
கண்ணுமோர் பாகம் உடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகம் உடையார் பெரும்புலி யூர்பிரி யாரே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பாழியார்—
வீழிமிழலை. திருநா.
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்—பொது. திருநா.
பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்—பொது. திருநா.

217. பெருவேளூர் (சோழநாடு)

தலையாலங்காட்டுக்குக் கிழக்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. கொரடாச்சேரியிலிருந்து 8½ மைல் தொலைவில் உள்ளது. காட்டூர் ஐயன்பேட்டை என்று தற்பொழுது வழங்கு கிறது. கௌதமர் முதலியோர் பூசித்தது. பூ ஸ்கந்தபுரம், சுவாமி அவிமுக்தேசுவரர்; பிரியாநாதர். சந்நிதி கிழக்கு. மலைக் கோயில். அம்பிகை: பாகம்பிரியாள் மின்னளையாள் இறைக்

கொண்டநாயகி. அபின்னாம்பாள். தீர்த்தம்: சரவணப் பொய்கை (தாமரைக்குண்டம்) விருட்சம்: வன்னி. சமீவனம். சுப்பிரமணியர் பூசித்தது. விஷ்ணுவுக்கு மோகினித்தன்மை நீங்கியது. இதனைச் சுற்றிப் பன்னிரண்டு கோயில். விநாயகர் மெய்க்க விநாயகர். வெளி-வாயுமூலை. (1) ஐராவதேசுவரர். ஐராவத தீர்த்தம். (2) துர்க்காபதீசுவரர். துர்க்கை வடிவம். நேர்கிழக்கு (3) கங்காதரேசுவரர். கங்கையால் பூசிக்கப் பெற்றவர். சந்நிதி-கிழக்கு. அம்பிகை: ஆனந்தவல்லி. தீர்த்தம்: கருவங்குளம். (4) ராமநந்தீசுவரர். தீர்த்தம்: கிணறு. கிழக்கில் கோயிலில்லை. (5) இராப்பட்டீசுவரர். சந்நிதி : மேற்கு. சர்வரீசுவரர். சர்வரீசுவரி. சிவபெருமான் கண்ணைமூடியதோஷம் நீங்கத் தேவி பூசித்த தலம். தீர்த்தம்: லக்ஷ்மி, சரஸ்வதி. துவார பாலகர். அக்கினிமூலை. (6) சோழபுரீசுவரர். சந்நிதி: கிழக்கு தெற்கு. மணக்கால். (7) அகத்தீசுவரர். அம்பிகை: ஒப்பில்லாதவள். தீர்த்தம்: திருக்குளம். (8) பிரமபுரீசுவரர் அம்பிகை இல்லை. தீர்த்தம்: பிரம குண்டம். (9) லக்ஷ்மி புரீசுவரர். 10. சரசுவதி வாணீசுரர். (11) புனிதலிங்கேசுவரர். (12) பெருமாள் கோயில் வைகுண்டநாராயணப் பெருமாள் வன்னிமரத்தடியில் பிருங்கி முனிவருள்ளார். தலபுராணம் 636 பாடல்களைக் கொண்டது. பழையவாக்கு ஆசிரியர்: ரங்கசாமி வாத்தியார்; புராணம் செய்தவர். வடக்கு வீதியில் இருந்தார். அவர் எழுதிய புராணம் சருக்கம் 25. ''கந்தபுரி வேளூர் விளங்குதல புராணம் காந்தத்தின் வடநூறென்னூற் கவியதாக செந்திருதன யன்பேட்டைவளர் நமச்சிவாயன் சேயனிதி வணிகன் ரங்கசாமி செய்யுள் செய்து வந்த சதுர்யுகம் கலியில் வருமிது சகாத்த வருட மதாயிரத்தெழு நூற்றெழுபது நான்கதன்மா, னிந்தணி வேணியர் கோயில் திருமுன்பு தருஞ் சொலினிய கவிதனக்கருள் பெற்றரங் கேற்றினானே.'' திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

பெறும்பெரு வேளூர் பிரியாத நாயகர்
நிறைகொண்ட நாயகி நிறைந்தமூ டிகமாம். – (சிவ.)

மறையணி நாவினானை மறப்பிலார் மனத்துளானைக்
கறையணி கண்டன்றன்னைக் கனலெரி யாடினானைப்
பிறையணி சடையினானைப் பெருவேளூர்பேணினானை
நறையணி மலர்கள்தூவி நாடொறும் வணங்குவேனே.

(திருநா. 4-ஆம் திரு.)

அண்ணாவும் கழுக்குன்றும் ஆயமலை அவைவாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த
அருள்செய்வார்
கண்ணாவார் உலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ஆணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

இல்லார்ந்த பெருவேளூர்த் தனியேபேணி—ஆரூர். திருநா.
பேறனூர்பிறைச் சென்னியினான் பெருவேளூர்—
இடையாறு. சு.
அணியார் பெருவேளூர் விளமர் தேங்கூர்—பொது.
திருஞா.
பெருவேளூர் எம்பிறப்பிலியை—பொது. திருநா.
பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்—பொது. திருநா.

218. பேணுபெருந்துறை : (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. அரிசிலாற்றின் கரையில் உள்ள தலம். திருப்பந்துறை என வழங்கப்பெறும். சிவசத்தி, பிரமன் முதலியோர் பூசித்தது. சுப்பிரமணிய சுவாமி மூகைத் தன்மை நீங்கிய தலம். திருக் கடம்பந்துறையிலும் இந்த ஐதிஹ்யம் உண்டு.

சுவாமி : சிவானந்தேசுவரர், பிரணவேசுவரர்.
அம்பிகை : மலையரசியம்மை, மங்களாம்பிகை.
தீர்த்தம் : மங்கள தீர்த்தம்.
விருட்சம் : வன்னி.

பேணு பெருந்துறை பிரான்சிவா னந்தர்
சேணுயர் மலையாள் சின்மயா னந்தம். (சிவ.)

பைம்மாநாகம் பன்மலர்க்கொன்றை பன்றிவெண்
கொம்பொன்று பூண்டு
செம்மாந்தையம் பெய்கென்றுசொல்லிச் செய்தொழில்
பேணியோர் செல்வர்

அம்மானோக்கிய அந்தளிர்மேனி அரிவையோர்பாகம்
அமர்ந்த
பெம்மான்நல்கிய தொல்புகழா ளார்பேணு பெருந்
துறையாரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

219. பேரெயில் : (சோழநாடு)

குழிக்கரை இரயில்வே நிலையத்திற்குத் தெற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. இவ்வூர் சிறிய கிராமமாக உள்ளது. கோயில், குளம் இரண்டும் நாட்டுக்கோட்டை நகரத்தாருள் காரைக்குடி அ. ராம. கதி. இராமசாமிச் செட்டியாரின் திருப் பணிகளைப் பெற்று 1938-ல் மகாகும்பாபிடேகம் செய்விக்கப் பெற்றது. கிழக்கு நோக்கிய சந்நிதி. மூன்று நிலைகளுடன் இராஜகோபுரம் அமைந்துள்ளது. ஒரே பிராகாரம் மேற்குப் பிராகாரத்தில் கற்பக விநாயகர். முருகக் கடவுள் மகாலக்ஷ்மி ஆகியோர் கோயில்கள் இருக்கின்றன. கிழக்கே பைரவர். ஐயனார். திருவாயில்களில் சூரிய சந்திரர் உள்ளனர். தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே துர்க்கை இருக்கின்றனர். துவார விநாயகரை அடுத்து மகா மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளும், நடராசப் பெருமானும் உள்ள னர்.

அம்பிகை தெற்கு நோக்கி அருள்பாலிக்கின்றாள். திருநாவுக் கரசர் அருளிய திருக்குறுந்தொகைப்பதிகம் ஒன்று இத்தலத் திற்குள்ளது.

இத்தலத்து முருகப்பெருமானுக்குச் சித்திரைச் சஷ்டியில் விழா நடைபெறும்.

சபாபதி விக்கிரகம் மிக அழகானது.

சுவாமி : ஜகதீசுவரர்
அம்பிகை : ஜகந்நாயகி, பெண்ணமிர்த நாயகி.
தீர்த்தம் : அக்னி தீர்த்தம்.
தலவிருட்சம் : நாரத்தை

வங்காரம் பேரையூர் என்றும் ஓகைப் பேரையூர் என்றும் வழங்கப்பெறும்.

திருப்பே ரெயிலுறை சிவன்சித்தி நாதர்
அருள்புரி பெரியநா யகியக் கினியாம். (சிவ.)

மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறைகொள் கண்ட முடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண் ணீற்றினர்
பிறையும் சூடுவர் பேரெயி லாளரே.

(திருநா. 5-ஆம் திரு.)

220. திருப்பைஞ்ஞீலி. (சோழநாடு)

பிக்ஷாண்டார் கோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து சற்றேறக் குறைய மூன்று மைல். திருவானைக் காவிற்குரிய சப்தஸ்தானங்களில் ஒன்று. அப்பர் சுவாமிகளுக்காகப் பந்தர் அமைத்து இறைவன் கட்டமுது தந்தருளிய அற்புதத் தலம். வாழை இத்தலத்திற்குரிய விருட்சமாதலின் இத்தலம் அரம்பை வனம் வாழை வனம் எனவும் வழங்கப்படும் நீவிச்செடி இத்தலத்துக்கு உரியது. வாழை பூசித்த தலம். இத்தலத்திலுள்ள சிவபெருமான் திருநாமம் ஆரணியவிடங்கர். விடங்க வேடம். மூவரும் பாடிய தலம்.

சுவாமி : நீலகண்டர்.
அம்பிகை : விசாலாக்ஷியம்மை
விருட்சம் ; கல் வாழை.
பூதங்கள் பூசித்த தலம். தேவி சந்நிதிகள் இரண்டு.

பைஞ்ஞீலி—பசியவாழை. நீலிவனம் எனவும் இத்தலத்திற்குப் பெயர் உண்டு. இத்தலத்தில் நவக்கிரகங்கள் விக்கிரகங்களுக்குப் பதிலாகத் தீபங்களால் வழிபடப்படுகின்றன.

மதுரை மெய்ப்பாத புராணிகர் திருப்பைஞ்ஞீலிப்புராணம் இயற்றியுள்ளார்.

அழிவில் பைஞ்ஞீலி யாரணிய விடங்கர்வேல்
விழிவிசா லாக்ஷி விசாலாக்ஷி தீர்த்தம். (சிவ.)

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடம் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடம் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே.

(திருஞா. 3-ஆம் திரு.)

உடையர் கோவணம் ஒன்றும் குறைவிலர்
படைகொள் பாரிடம் சூழ்ந்த பைஞ்ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க்கு இல்லை அவலமே.

(திருநா. 5-ஆம் திரு.)

கார் உலாவிய நஞ்சை உண்டு இருள்கண்டர்
வெண்தலையோடுகொண்டு
ஊர்எலாம் திரிந்து என்செய்வீர் பலிஓரிடத்திலே
கொள்ளும் நீர்
பார்எலாம் பணிந்து உம்மையே பரவிப் பணியும்
பைஞ்ஞீலியீர்
ஆரம்ஆவது நாகமோ சொலும் ஆரணீய விடங்கரே.

(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

பைஞ்ஞீலி மேவினாய் நீயே என்றும்.—நெய்த்தானம். திருநா.
பராபரனைப் பைஞ்ஞீலி மேவினானை—நள்ளாறு. திருநா.
பராய்த்துறை பைஞ்ஞீலியிடம் பாவித்தானை—
ஆரூரநெறி. திருநா.
பாரார் பரவும் சீர்ப்பைஞ்ஞீலியும்—அதிகை. திருநா.
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட்டூர்—பொது. திருநா.
பருப்பதத்தானைப் பைஞ்ஞீலியானை—
நாகைக்காரோணம். திருநா.
பராய்த்துறையான் பழனம் பைஞ்ஞீலியான்காண்—
காளத்தி. திருநா.
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி—இடையாறு. சு.

221. திருமங்கலக்குடி : (சோழநாடு)

ஆடுதுறை இரயில்வே நிலையத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

சூரியன், திருமால், காளி, பிரமன், அகத்தியர் இவர்கள் பூசித்த தலம்.

சுவாமி : பிராணவரதேசுரர்.
அம்பிகை : மங்களநாயகி
தீர்த்தம் : காவிரி, மங்கல தீர்த்தம்
விருட்சம் : கோங்கிலவம்

அரசனது தண்டலாளர் ஒருவர் அரசனது பணத்தைக் கொண்டு ஆலயத் திருப்பணி செய்ததை அரசனறிந்து அவரை அழைப்பிக்க. சிவபக்தரான அவர் அரசனது ஆஞ்ஞைக்குப் பயந்து உயிர் துறந்தார். அவர் உடலைத் திருமங்கலக்குடிக்கு அப்பாற் கொண்டு போகும்படி அரசன் கட்டளையிட்டான். அவ்வுடல் திருவியலூருக்கு வர அத்தண்டலாளர் மனைவி வேண்டிக் கொள்ள மங்களநாயகியின் திருவருளால் அவர் உயிர்த் தெழுந்தார். சிவபிரானது கண்ணைப்பொத்தினமையால் கிளி வடிவமடைந்த அம்பிகைக்கு ஷே வடிவம் மகர சங்கராந்தியில் நிவர்த்தியாயிற்று. அகத்தியருடைய ஆன்மார்த்தலிங்கம் உள்ளே ஈசானியத்தில் கோயில் கொண்டிருக்கிறார். பிரமோற் சவம் பங்குனி ருத்ரபாதம், தீர்த்தங் கொடுத்தல் நடைபெறும். மங்கல வம்சம், மங்கலக்ஷேத்திரம் மகரசங்கராந்தியில் திருக் கலியாண உற்சவம் முன்பு நடந்தது. இப்போது நின்றுவிட்டது. மாந்துறை போகநாயகி வலப்புறம் சந்நிதி: கிழக்கு. இது குதிரை பூசித்த தலம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

கோதின் மங்கலக் குடிமா ணிக்க
நாதர் மங்கள நாயகி மங்களம். (சிவ.)

தங்க லப்பிய தக்கன் பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள் செய்தவன்
கொங்க லர்க்குழல் கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய மணாளனே.

(திருநா. 5-ஆம் திரு.)

சிரின்ஆர் மணியும் அகில் சந்தும் செறிவரை
வாரி நீர்வரு பொன்னி வடமங்கலக்குடி
நீரின் மாமுனிவன் நெடுங்கைகொடு நீர்தனைப்
பூரித்து ஆட்டி அர்ச்சிக்க இருந்த புராணனே.

(திருஞா. 2-ஆம் திரு.)

222. திருமணஞ்சேரி : (சோழநாடு)

குற்றாலம் இரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 5 மைல் தொலைவில் வடகிழக்கில் இவ்வூர் உள்ளது. எதிர்கொள்பாடி, மேலைத்திருமணஞ்சேரி. இதுகிழைத் திருமணஞ்சேரி. மன்மதன் பூசித்த தலம். குலச்சிறை நாயனார் வழிபட்ட தலம். அம்பிகை இத்தலத்தில் மணக்கோலத்தில் இருக்கிறாள். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : அருள்வள்ளனாயகேசுரர்.
அம்பிகை : யாழின்மென்மொழியம்மை.
தீர்த்தம் : சமுத்திரம்.

தேவுறை திருமணஞ் சேரி வள்ளலார்
கோவையாழ் மென்மொழி குளிர்சமுத் திராமம். (சிவ.)

அயிலாரும் அம்பத னாற்புர மூன்றெய்து
குயிலாரும் மென்மொழி யாளொரு கூறாகி
எயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

பட்டம் நெற்றியர் பாய்புலித் தோலினர்
வட்டம் நின்று நவில்பவர் நாள்தொறும்
சிட்டர் வாழ்திரு ஆர்மணஞ் சேரிஎம்
வட்ட வார்சடையார் வண்ணம் வாழ்த்துமே.
(திருநா. 5-ஆம் திரு.)

223. திருமண்ணிப்படிக்கரை : (சோழநாடு)

இத்தலம் வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே ஒன்பது மைல் தொலைவில் உள்ளது. சோழவள நாட்டில் காவிரிமா நதியின் வடக்கேயுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று; பண்டைக் காலத்தில் மண்ணியாற்றின் படிக்கரையிலிருந்தமையின் இஃது இத்திருநாமம் பெற்றது. மிக்க அருகேயோடிய மண்ணியாறு இத்திருக்கோயிலைச் சிதையாதபடி பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒதுக்கி வெட்டிவிடப் பட்டதெனவும் அது காரணத்தால் இத்தலம் பழமண்ணிப்படிக்கரை என்று வழங்குமெனவும் சொல்லுவர்; தேவாரத்தில் இத்தலம் ''பழமண்ணிப் படிக்கரை'' என்று கூறப் பெற்றிருத்தலும் இவ்வுண்மையை

விளக்கும். இதனால், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திற்கு முன்னமேயே மண்ணிநதி ஒதுக்கப்பெற்றதென்று தெரிகின்றது. இருப்பைப்பட்டு அல்லது இலுப்பைப்பட்டு, மதூகவனம் எனவும் இதன்பெயர் வழங்கும் (பட்டு-ஊர்; மதூகம்—இருப்பை மரம்)

இத்தலத்திற்குரிய விநாயகமூர்த்திகள் இருவர்: 1. வலம்புரி விநாயகர் 2. நடனவிநாயகர்.

சுவாமி, ஐந்து மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கின்றனர், அவர்கள் திருநாமங்கள்: 1. படிக்கரை நாயகர், 2. நீலகண்டேசர் 3. முத்தீசர், 4. பரமேசர், 5. மகதீசர்.

அம்பிகைகள் இருவருளர்; அவர்கள் திருநாமங்கள்: (1) மங்கலநாயகி. (2) அமுதகரவல்லி.

தீர்த்தங்கள் மூன்று : (1) பிரமதீர்த்தம், (2) மண்ணியாறு (3) கொள்ளிடம்.

தலவிருட்சம் : தெய்வவிருப்பை.

வழிபட்டுப்பேறு பெற்றோர் : பிரமதேவன், பஞ்ச பாண்டவர் முதலியோர்கள்.

இத்தலத்தைச் சார்ந்த தலம், நாகபுரம் என்பது. அவ்வூர் இக்காலத்து மணன்மேடென்று வழங்கப்படுகின்றது. அதில்

சுவாமியின் திருநாமம்	நாகலிங்கம்
அம்பிகையின் திருநாமம்	சுந்தரவல்லி
தீர்த்தம்	நாகதீர்த்தம்
விருட்சம்	புன்னை.

வழிபட்டுப்பேறு பெற்றோர்: ஆதிசேடன், தௌமியமுனிவர் முதலியோர்.

இத்தலத்திலுள்ள வலம்புரி விநாயகருக்குத் துதிக்கையானது வலமாக வளைந்து மதப்பெருக்குற்று நாசியோடு கூடியிருத்தல், உயிர்கள் வலம்புரிந்தால், அருட்பெருக்குற்று அவற்றிற்கு இவர் அத்துவித முத்தியளித்தலைப் புலப்படுத்துகின்றது. நடன விநாயகர் பிரளய வெள்ளத்தின் நடுவே கூத்தாடியதற்குக் காரணம் இத்தலத்துப் பெருமையை அறிந்தமையே. மண்ணியாற்றுக்கு முருகக் கடவுளால் அழைக்கப் பெற்று இத்தலத்துக்கு வந்தமையின் சுப்பிரமண்ணியநதியென்று பெயர் வழங்கி வந்தது.

செழுமண்ணிப் படிக்கரைத் திருநீல கண்டர்
வழுவிலா அமிர்தகர வல்லி யமிர்தம். (சிவ.)

முன்னவன் எங்கள்பிரான் முதல் காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள்பிரான் திருநீலமிடற் றெம்பிரான்
மன்னிய எங்கள்பிரான் மறைநான்கும்கல்
லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான் பழமண்ணிப் படிக்கரையே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:

மண்ணிப்படிக்கரை வாள்கொளி புத்தூர்—பொது. திருநா.

224. திருமயிலாடுதுறை : (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். இத்தலம் சோழ நாட்டின்கண் காவிரிக்குத் தென்பாலுள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய ஒருசிவஸ்தலம். மாயூரமென்று இப்பொழுது வழங்கப்பெறும். மயிலையென்னும் பெயர் இத்தலத்தின் மற் றொருபெயராகிய மயிலாடுதுறை யென்பதன் மரூஉவாகும். தொண்டை நாட்டிலுள்ள மயிலாப்பூரென்னும் சிவ ஸ்தலத் திற்கும் மயிலையென்னும் பெயர் உண்மையின், அது வடமயிலை யென்றும், இது தென்மயிலை யென்றும் வழங்கும். முருகக் கடவுளின் தலமாகிய மயிலாசலத்திற்கும் மயிலை யென்னும் பெயருண்டு. இந்த மாயூரம் நாவலந்தீவில் மிகப் புகழ்பெற்ற ஸ்தலம்.

ஸ்காந்தம் முதலிய மகாபுராணங்களிலும் மகேதிகாசமாகிய சிவ ரகஸ்யத்திலும் துலாகாவேரி மாகாத்மியத்திலும், ஸ்ரீசிதம்பர புராணம் முதலிய தலபுராணங்கள் பலவற்றிலும் இத்தலம் பல படச் சிறப்பித்துப் பாராட்டப் பெற்றுள்ளது. வடமொழியில் ஸ்ரீ மாயூர புராணம், ஸ்ரீரிஷபதீர்த்த மாகாத்மியம் முதலிய நான்கு புராணங்களும், அவற்றின் மொழி பெயர்ப்பாகப் பொன் விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலர் என்பவர் சற்றேறக் குறைய 400 வருடங்களுக்கு முன்பு இயற்றிய புராணமொன்றும், திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவானுமாகிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் 119 வருடங் களுக்கு முன்பு இயற்றப்பட்ட புராணமொன்றும், திருமயிலைத் திரிபந்தாதியை யன்றி ஸ்ரீ அபயாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலிய

பிரபந்தங்களும் தென்மொழி வடமொழிகளிற் சிறந்த ஸங்கீத வித்துவான்களால் இயற்றப்பட்ட பல கீர்த்தனங்களும் பல ஸ்தோத்திரங்களும் தனிப் பாடல்களும் இத்தலத்திற்கு அமைந் திருக்கின்றன.

பிரமதேவர் பூசித்தமையின் பிரமலிங்கம் எனவும், தேவர் முதலியோர் எண்ணியவற்றை வரையாதருளிச் செய்தமையின் ஸ்ரீ வரதானேசுவரர் அல்லது வள்ளலாரெனவும், தட்சன் புத்திரி யாக அவதரித்தமை பற்றி வந்த திருநாமமாகிய தாட்சாயணி யென்பதை அவன் பாலுள்ள வெறுப்பினால் நீக்கிக்கொள்ள நினைந்து மயில் வடிவம் பெற்றுப் பூசித்து வழிபட்ட அம் பிகைக்கு ஆண்மயிலாக ஆடியருளிக் காட்சியளித்துப் பின்பு தாண்டவமாடி அனுக்கிரகம் செய்தமையின் கௌரீ மாயூர நாதர், கௌரீ தாண்டவேசுவரர் அல்லது மாயூரநாதர் எனவும் ஸ்வாமியின் திருநாமங்கள் இங்கே வழங்கும்; இன்னும் வெவ் வேறு காரணங்களால் வந்த விருத்தர் (கிழவர்) முதலிய பல பெயர்களும் உண்டு.

மிகவும் அச்சமுற்றுத் தன்னைச் சரணடைந்த ஒரு மயிலுக்கு அபயமளித்துப் பாதுகாத்தமையின், அபயப் பிரதாம்பிகை, அபயாம்பிகை, அஞ்சல்நாயகி, அஞ்சலையென்னும் திருநாமங் கள் அம்பிகைக்கு இங்கே வழங்கலாயின.

இந்த ஸ்தல விருட்சம் மா.

இத்தலத்தின் திருநாமங்கள் : பிரமபுரம், பிரமவனம், கௌரீமாயூரம், மாயூரம், மயிலாடுதுறை, மயிலை, சூதவனம் முதலியன. துறையென்பது தீர்த்த விசேடமுள்ள இடத்தைப் புலப்படுத்தும் ஒருபெயர்.

தீர்த்தங்கள் : அகஸ்திய தீர்த்தம், அநவித்யாஸரஸ், விருஷபதீர்த்தம், கணேச தீர்த்தம், காசியப தீர்த்தம், இந்திரன் முதலிய திக்பாலகர் தீர்த்தங்கள், பாபநாச தீர்த்தம் பிரம தீர்த்தம் முதலிய 86-தீர்த்தங்கள் உள்ளன.

வருஷந்தோறும் ஐப்பசி மாதத்தில் ஒவ்வொரு தினத்தும் ஸ்ரீ மாயூரநாதர் ஸ்ரீ அபயாம்பிகையுடன் காவேரிக்கு எழுந் தருளிக் காலையில் விருஷப தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத் தருளும் மகிமை வாய்ந்த ஸ்தலமாதலின், ஐப்பசி மாதம் மூப்பது தினங்களிலும் ஸ்ரீ காசி முதல் கன்னியாகுமரி வரை யிலுள்ள இடங்களிலிருந்து வந்து ஸ்நானம் செய்துவிட்டுச் செல் லும் லட்சக்கணக்கான பக்த ஜனங்களின் தொகுதி யாவருடைய

உள்ளத்தையும் கனியச் செய்யும். அக்காட்சி பக்தி இல்லாதவர் களுக்கும் பக்தியை உண்டு பண்ணும், தெய்வமில்லை யென்பவர் களுக்கும் புநர்ஜனமில்லை யென்பவர்களுக்கும் அவை உண் டென்னும் கருத்தைப் பிறப்பிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை

விருஷப தீர்த்தத்தில் கங்கை வந்து நீராடுவதற்கு அறிகுறி யாக ஐப்பசி மாதத்தில் அமாவசையில் பகல் பதினைந்து நாழிகை வேளையில் இந்த விருஷப தீர்த்தத்திலிருந்து எடுத்து ஒரு பாத் திரத்தில் வைக்குந் தீர்த்தம் மிகுந்த தூய்மையோடு பல வருடங் களிருத்தலை நேரே அறிந்து பார்த்தோர் பலர்.

இந்த ஸ்தல தரிசனத்திற்கு எழுந்தருளிய திருஞான சம் பந்தமூர்த்தி நாயனாருக்குக் காவேரிப் பிரவாகத்தை வடியச் செய்து துறையைக் காட்டி அவரை இங்கே வர விடுத்தமையின், கிழக்கேயுள்ள திருவிளநகரில் (1) துறை காட்டும் வள்ளலென வும், நல்ல வாக்கை விரும்பித் தவஞ்செய்த ஸ்ரீ பிருகஸ்பதி பகவானுக்கு அதனை அருளிச் செய்தமையின் இதன் தெற்கே யுள்ள தாருகாவனத்தில் (பெருஞ்சேரியில்) (2) வாக்குக் காட்டும் வள்ளல் (வாகீசர்) எனவும், ஒரு சமயத்தில் வழி தெரியாமல் மயங்கிய தேவர்களுக்கு வழிகாட்டி அருளினமையின் மேற்கே யுள்ள மூவலூரில் (3) வழி காட்டும் வள்ளல் (மார்க்கஸகாயர்) எனவும் சிவஞானத்தை விரும்பித் தவஞ் செய்த ஸ்ரீ விருஷப தேவருக்கும் ஏனையோர் பலருக்கும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி மோனமுத்திரை காட்டிச் சிவஞானத்தை உபதேசித் தருளினமையின் உத்தர மாயூரத்தில் (வள்ளலார் கோயில்) (4) கை காட்டும் வள்ளலெனவும் திருநாமங் கொண்டு வள்ள லாகிய ஸ்ரீ மாயூர நாதர் வீற்றிருக்கின்றனர்.

(1) ''காவிரித்துறை காட்டினார்'' (திருவிளைநகர்த் தேவாரம்); ''துறை காட்டும் வள்ளலோ வென்றிறைஞ்சினர்''. (2) ''வாக்கருள் வள்ளலென்று, பெருக்கவெவ்வுலகு மேத்தப் பிறங்கினா ன்னைய மூர்த்தி''; (3) ''வழிகாட்டும் வள்ளலோ வென்றுரைத்தனர்'', (4) இடபமுன் பெற்றாற்போல வெண்ணி லார்க் கருளு நீரால், உடனமரவன் கை காட்டும் வள்ளல் என்றொரு பேர் பெற்றான்'' மாயூரப்புராணம், (மாயூர வள்ளல் நாற்றிசை வள்ளலாகிய படலம்).

இதன் எல்லை ஒரு யோசனை யென்றும், எட்டு வீரட்டத் துள் காலஸம்ஹார க்ஷேத்திரமாகிய திருக்கடவூரும், தட்சயாக ஸம்ஹரா க்ஷேத்திரமாகிய திருப்பறியலூரும், கஜஸம்ஹார க்ஷேத் திரமாகிய வழுவூரும், காமதகன க்ஷேத்திரமாகிய திருக்குறுக்

கையும் இதன் எல்லைக்குள் உள்ளனவென்றும் இத்தல புராணங்கள் கூறா நிற்கும். இது, ''பாரவாவுமா சூர வெல்லையுட் சாரவானர்வா, யாரவேத்திட'', ''இட்ட மாயவீ, ரட்ட நான் கெனிற், பட்ட மான்மியம், சட்ட யார்சொல்வார்'' (மாயூரப் புராணம், காமன் பூசைப் படலம், 17-8) என்பவற்றால் அறியப் படும்.

ஸ்ரீ மாயூரநாதரை வழிபட்டுப் பேறு பெற்ற ஸப்தமாதாக்கள் தனித்தனியே பூசித்துத் தவஞ்செய்து கொண்டிருந்த ஏழு சிவஸ்தலங்கள் இதன் பக்கத்தே உள்ளன. அவற்றுள், (1) பிராமி பூசித்த ஸ்தலம் திருத்தான்றோன்றீசம் (சுயம்புநாதர் கோவில்) (2) மாகேசுவரி பூசித்தது கருணாபுரி (கருணாம் பேட்டை); (3) கௌமாரி பூசித்தது கஞ்சாறு (ஆநந்த தாண்டவபுரம்); 4) வைஷ்ணவி பூசித்தது பசுபதீசுவரம் (வள்ளலார் கோவிலுக்கும் தரும புரத்திற்கும் இடையிலுள்ளது); (5) வாராகி பூசித்தது சக்திபுரி (கழுக்காணி மட்டம்); (6) இந்திராணி பூசித்தது தருமபுரம்; (7) சாமுண்டி பூசித்தது வள்ளலார் கோயில். இது ஷை புராணத்திலுள்ள சத்தபுரப் படலத்தால் அறியலாகும்.

ஸ்ரீ மாயூரநாதரை வழிபட்டுப் பேறுபெற்ற இந்திரன் முதலிய திக்பாலர்களும் மற்றைத் தேவர்களும் அகத்தியர் முதலிய பல முனிவர்களும் ஏனையோர் பலரும் தத்தம் பெயரால் பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கங்களும் தீர்த்தங்களும் இத் தலத்தைச் சூழப் பல உள்ளன.

மேற் கூறிய தேவர் முதலியோர்களை அல்லாமல், கழுகு, கிளி, குதிரை, நரி, யானை, வானரம், கரம் முதலிய அஃறிணைகளும், ஸ்ரீ மாயூர நாதரை வழிபட்டுப் பேறு பெற்றன வென்றும் அந்தப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

மயில் வடிவம் நீங்கி இயற்கையான திருவுருவமுற்ற அம்பிகையின் பிரார்த்தனைப்படி சபையொன்றை நிருமித்து அதில் ஸ்ரீ மாயூரநாதர் தாண்டவமாடியருளி விஷ்ணு முதலிய தேவர்களின் பிரார்த்தனையின்படி அம்பிகையை இங்கே திருமணம் செய்தருளினர். அந்தச் சபைக்கு ஆதிசபை என்பதும் அத் தாண்டவத்திற்குக் கௌரீதாண்டவம் என்பதும் திருநாமங்கள். மேற்கூறிய திருமணம் வருஷந்தோறும் துலாமாஸ உத்ஸவத்தில் ஏழாவது திருநாளின் மாலையில் நடை பெற்று வருகின்றது. மயிலாடு துறையுறையுமணாளனாரும்'' என்னும் தேவாரமும் இதனை நன்கு புலப்படுத்தும்.

கங்கையின் பிரிவாற்றாமையினால் ஸ்ரீ காசி விசுவநாதர்

தம்முடைய பரிவாரங்களுடன் இங்கே எழுந்தருளி விருஷப தீர்த்தத்தின் தென்பக்கத்தில் கோயில் கொண்டிருக்கின்றனர்.

முக்தியை விரும்பிப் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று தவம் செய்துவந்த தம்பதிகளாகிய நாதசன்மா அநவித்தை என்பவர் கள் முடிவில் திருவையாற்றை யடைந்து தவஞ் செய்து ஸ்ரீ ஐயா றப்பர் கட்டளையின்படி இத்தலத்திற்கு வந்து தவஞ் செய்ய, ஸ்ரீ மாயூரநாதர் அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்த தன்றி 'எம்மைத் தரிசித்த பலனை உங்களைத் தரிசித்த பின்பே யாவரும் அடையக்கடவர்' என்றும் அருளிச் செய்ய, கேட்ட அவர்கள் பேரானந்த முற்றுத் தாம் இங்கே பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கங்களில் ஐக்கியமாயினர்; அவர்கள் பிரதிட்டித்த சிவலிங்கங்கள் அவர்கள் பெயராலேயே வழங்கப் பெற்று வரு கின்றன. அவற்றுள் அநவித்தை ஐக்கியமான லிங்கம் என் பதற்கு அறிகுறியாக அதற்கு இக்காலத்தும் புடவையே சாத்தப் பட்டு வருகின்றது. ஸ்ரீ மாயூரநாதரையும் ஸ்ரீ அபயாம்பிகையை யும் தரிசிப்போர் ஸ்ரீசண்டிகேசுவர சண்டிகேசுவரிகளைத் தரி சித்த பின்பு இவ்விரு மூர்த்திகளையும் தரிசிப்பது இத்தலத்தில் வழக்கமாக இன்றும் நடை பெற்று வருகின்றது. இஃது இத்தல புராணத்திலுள்ள நாதசன்மா அநவித்தை முக்தியடைந்த படலத் தால் அறியலாகும். ''தண்டீசர்ப் போற்றியடி தாழ்ந்த பின் பும் வேறிருவர்க், கண்டாய்விற் போற்றவருள் காலூரும்'' (திருவிடைமருதூருலா).

நாதசன்மா அநவித்தை யென்பவர்களுடன் இத்தலத்திற்கு எழுந்தருளிய ஸ்ரீ ஐயாறப்பர் இங்கே ஸ்ரீ மாயூர நாதர் கோயி லின் மேலைதவீதியின் மேற்கே பரிவாரங்களுடன் கோயில் கொண்டெழுந்தருளி ஸ்தலதான உத்ஸவமும் கொண்டருளு கின்றனர். அந்த உத்ஸவம் இக்காலத்தும் சித்திரை மாதத்தில் நடைபெற்று வருகின்றது; அந்த ஸ்தானங்களின் பெயர்கள் வருமாறு : (1) புழுகீசுவரம் (தனியூர்), (2) ஸித்தவனம் (சித்தக்காடு), (3) மூவலூர், (4) சோழம்பேட்டை. (இது புருஷாமிருகம் பூசித்த விசேஷமுடைய ஸ்தலம்). (5) வள்ளலார் கோயில், (6) காசி விசுவநாதர் கோயில், (7) ஸ்ரீமாயூரநாதர் கோயில்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

மாயூர மேவு மாயூர நாதர்

ஆயிஅஞ் சலைநா யகிகா வேரி. (சிவ.)

ஏனவெயி றாடரவொ டென்புவரி
யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை யதளுடைய
படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்க ளாகுதியின்
மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட
மூசுமயி லாடுதுறையே

(திருஞா. 3-ஆம் திரு.)

கொள்ளும் காதன்மை பெய்துறும் கோல்வளை
உள்ளம் உள்கி உரைக்கும் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

மயிலாடுதுறை யிடமாமகிழ்ந்தான் கண்டாய்—கோடிகா. திருநா.
மயிலாடுதுறையுளார் மாகாளத்தார்—வீழிமிழலை. திருநா.
மயிலாடுதுறையுறையு மணாளனாரும்—வெண்ணியூர். திருநா.
மயிலாடுதுறை சுடம்பந்துறை யாவடுதுறை—பொது. திருநா.

225. மயிலாப்பூர் (தொண்டைநாடு)

சென்னையின் நடுவில் அமைந்துள்ளது. இத்தலம், பாலியாற்றுக்கு வடக்கேயுள்ளது.; கடற்கரையிலுள்ளது. மயிலாப்பூரென்பது மயிலாப்பு என்று முற்காலத்தில் வழங்கப் பெற்றது, 'மயிலாப்பிற் கொற்றன்' (தொல் குற்றியலுகரப் 12, ந. மேற்) உமாதேவியார் மயிலுருவத்தைப் பெற்றுப் பூசித்தமையின் இத்தலம் மயிலாப்பு, மயிலாப்பூ ரென்னும் பெயர்களைப்பெற்றது. அவற்றின் மரூஉவே மயிலையென்பது. வடமொழியில் இத்தலம் கேகயபுரியென்று வழங்கும். அம்பிகை பூசித்த இச்

செய்தியைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், ''மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக் கட்டிட் டிடங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்'' என்று புலப்படுத்தியருளினர். இத்தலம் யுகமுடிவிலும் அழிவில்லாதது.

இத்தலத்து விநாயகர் திருநாமம் ஸ்ரீ நடன விநாயகரென் பது; அது கூத்தாடும் பிள்ளையாரெனத் தமிழில் வழங்கும். சிவபெருமான் திருநாமம் கபாலீசுவரரென்பது. உமாதேவி யாருக்குப் பரமசிவன் கபாலியாகக் காட்சி கொடுத்தருளினமை யின் இத்திருநாமம் வழங்கலாயிற்று; இத்திருக்கோலத்தைத் திருநாவுக்கரசு நாயனார், ''மயிலாப்புள்ளே, செடிபடுவெண் டலை யொன் றேந்திவந்து'' என்று பாராட்டுகின்றார். கபாலீ சுவரர் வீற்றிருத்தலின் இத்தலத்திலுள்ள திருக்கோயில் கபாலீச் சரமென்னும் திருநாமம் பெற்றது இங்கே உள்ள அம்பிகையின் திருநாமம் கற்பகவல்லி யென்பது. முருகக் கடவுள் திருநாமம் சிங்காரவேலர் என்பது (முருகக் கடவுள் பூசித்து வேலாயுதம் பெற்ற தலமாதலின் அவர் திருநாமம் சிங்கார வேலர் என்று வழங்கலாயிற்று.)

சிவநேசச் செட்டியாரென்னும் வணிகச்செல்வர் தம் மகளாகிய பூம்பாவையென்பவள் இறந்த பின்பு சேமித்து வைத் திருந்த அவளுடலின் என்பை அம்மகளாகுமாறு திருஞானசம்பந் தர் திருப்பதிகம் பாடியருளிய பெருமையை யுடையது இத்தலம்; இவ்வரலாறு பற்றி இறைவர் பூம்பாவை யீசுவரரென்னும் ஒரு திருநாமத்தை இத்தலத்தில் உடையரானார்.

இந்தத் தலத்திற்குரிய விருட்சம் புன்னை; ஆதலின் இதற்குப் புன்னைவனமென்ற திருப்பெயரும் உண்டு; வேதங்கள் பூசித்தமையால் வேதபுரியென்றும், சுக்கிரன் பூசித்தமையால் சுக்கிரபுரியென்றும் பெயர் பெறும். இங்கே இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றோர் உமாதேவியார், முருகக் கடவுள், இராமர், வாலி, சுக்கிரன், வேதங்கள், முனிவர்கள் வாயிலார் நாயனார், ஏலேலசிங்கன் முதலியோர். இங்குள்ள தீர்த்தங்கள் சத்திகங்கை யென்னும் கபாலி தீர்த்தம், வேத தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், இராம தீர்த்தம், வாலி தீர்த்தம், கந்த தீர்த்தம் முதலியன.

இத்தலம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த ஒரு பதிகத்தை உடையது. திருநாவுக்கரசு நாயனார் வேறு தலங்களைப் பற்றி அருளிச் செய்த திருப்பதிகங்களில்

மூன்று இடங்களில் இத்தலத்தைப்பற்றிக் கூறியுள்ளார்; அப் பகுதிகள் வருமாறு:

''மங்குன் மதிதவழு மாடவீதி
மயிலாப்பி லுள்ளார் (புக்க திருத்தாண்டகம், 1)

''மயிலாப்பின் மன்னினார் (காப்புத்திருத்தாண்டகம், 12)

''மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலையொன்
றேந்திவந்து'' (திருவெற்றியூர்த் திருத்தாண்டகம், 6)

இத்தலத்தின் வரலாற்றை விளக்கும் புராணங்கள் வட மொழியிலும் தென்மொழியிலும் உண்டு. திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைச் சில அன்பர்கள் காப்பிய இலக்கணம் அமைய ஒரு புராணம் இத் தலத்துக்குப் பாட வேண்டுமென்று விரும்பியபடி அவர்கள் ஒரு புராணம் இயற்றத் தொடங்கிச் சிலபகுதிகளை இயற்றினார்கள்; நூல் முற்றும் நிறைவேறவில்லை. இயற்றிய பகுதிகளும் இப் பொழுது கிடைக்கவில்லை. இத்தல சம்பந்தமாக உள்ள பழைய தமிழ்ப் பிரபந்தங்களுள் இப்போழுது தெரிந்தவை. 1. தாண்ட வராய கவிராயர் இயற்றிய திருமயிலை யமக அந்தாதி. 2. திரு மயிலையுலா, 3. திருமயிலைக்கலம்பகம், (4) தொட்டிக்கலை நாராயணசாமி முதலியார் இயற்றிய திருமயிலை வெண்பா மாலை, (5) கபாலீசர் பஞ்சரத்தினம், (6) அம்பலவாணகவி ராயர் இயற்றிய சிங்காரவேலர் கோவை, (7) தாண்டவராய கவிராயர் இயற்றிய சிங்கார வேலர் பிள்ளைத்தமிழ், (8) ஷி யார் இயற்றிய சிங்காரவேலர் வெண்பா என்பன. கருவம் பாக்கம் ஆறுமுக முதலியாரென்பவர் இயற்றிய பூம்பாவையார் விலாசம் என்ற ஒரு நாடகமும் இத்தலசம்பந்தமாக உள்ளது.

மயிலாப் பூரின் வருகபா லீசர்
கயிலை நாயகி மயிலாடு கர்ணிகை (சிவ.)

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட் டிடங்கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பினுருத்திரப் பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

(திருஞா. 2-ஆம் திரு.)

226. திருமயேந்திரப்பள்ளி : (சோழநாடு)

கொள்ளிடத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ளது. சந்திரன், சூரியன், பிரமன், வழிபட்டதலம். முனிவர்கள் வழி படச் சிவபெருமான் திருநடனம் செய்தருளிய தலம். இந்திரன் மனைவியிருந்த இடம். கோயிலடிப்பாளையம் என வழங்கப்பெறும். இது மயேந்திரன் என்னும் ஓர் இந்திரன் வழிபட்ட தலம். பள்ளி-இடம்.

சுவாமி : அந்தமில் அழகர், திருமேனியழகர், சோமசுந்தரர்.
அம்பிகை : வடிவாம்பிகை, வடிவாளம்மை
தீர்த்தம் : மகேந்திர புஷ்கரிணி.

திடமயேந் திரம்திரு மேனி அழகர்
வடிவுள்ள மங்கை மகேந்திர புட்கரிணி. (சிவ.)

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை அழகனை அடியிணை பணிமினே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வெண்ணாவல் விரும்பு மயேந்திரரும்—திருவானைக்கா. திருஞா.
திருநனிபள்ளி சீர் மகேந்திரத்துப்—பொது. திருநா.

227. திருமருகல் : (சோழநாடு)

நன்னிலத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் திருஞானசம்பந்தர் ஒருவனுக்குச் ''சடையாய்'' என்னும் பதிகம் பாடிவிட நோயைத் தீர்த்தருளினர். வாழை பூசித்த தலம். இத்தலம் தலவிருட்சத்தையே தன் பெயராகக் கொண்டது; மருகு—மகரவாழை. கதலிவன கேஷத்திரம்.

தேவி சந்நிதிக்கு நேரே வீதியில் ''விஷம் தீர்த்த பிள்ளை யார் சந்நிதியும். பிராகாரத்தில் ''மருகலுடையார்—சௌந்தர நாயகி'' சந்நிதியும் உள்ளன. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : மாணிக்கவண்ணேசுரர், மாணிக்கவண்ணர்,
இரத்தினகிரீசர்.
அம்பிகை : வண்டுவார் குழலம்மை, ஆமோதளநாயகி.
விருட்சம் : வாழை.
வந்நிசாக்ஷி சந்நிதிக்குத் தெற்கே கீழவீதி ரத்னகிரீசுவரர்.

வண்டிரு மருகல் மாணிக்க வண்ணர்
வண்டுவார் குழலி மகிழ்சிவ கங்கை. (சிவ.)

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

(திருநா. 5-ஆம் திரு.)

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே

(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

மயிலாப்பிலுள்ளார் மருகலுள்ளார்—கோயில். திருநா.
நடமாடு நண்மருகல் வைகிநாளும்—புறம்பயம். திருநா.
மடையிடையே வாளையுகளும் பொய்கை மருகல்வாய்ச்
சோதி மணிகண்டனை—நாகைக்காரோணம். திருநா.
நல்லூரும் தேவன்குடி மருகலும்—அதிகை. திருநா.
தென்குன்ற மோத்தூர் நிறைநீர் மருகல்—பொது. திருநா
மருகலுறையு மாணிக்கத்தை—பொது, திருநா.
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி—பொது. திருநா.
வாழைகாய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே—பொது.
சு.
மருகலுறைவாய் மாகாளத்தாய்—பொது. சு.

228. திருமழபாடி : (சோழநாடு)

திருவையாற்றிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. கொள்ளிடநதி கடக்க வேண்டும். சரித்திரச்சான்றின்படி இத் தலத்தின் பெயர் மழவர்பாடி என்பதன் சிதைவென்பர். மழவர் கள் பாசறை அமைத்திருந்த இடமாதலின் இஃது இப்பெயர் பெற்றது. மழவர்—இளைஞர். ஒருவகை வீரர். பாடி-இருப்பி டம். புராணச் சான்றின்படி இற்றவன் மழு ஆயுதத்தை ஏந்தி நடனம் ஆடியதால் மழுவாடி எனப் பெயர் பெற்றதென்பர். இத்தலத்துக்கு வடமொழியில் பரசுநர்த்தன புரம் என்று ஒரு பெயர் உண்டு. திருமால் வழிபட்ட தலம்.

மறைகள், திருமால், தேவேந்திரன் பூசித்த தலம். சுந்தரரை 'மறந்தாயோ' என்று கூறி அழைத்த தலம். பிரம்மலோகத் திலிருந்த சிவலிங்கத்தைப் புருஷாமிருகம் கொணர்ந்துபிரதிஷ்டை செய்ய, பிரமன் அதைப் பெயர்த்தெடுக்க இயலாமற்போக 'இவர் வஜ்ரஸ்தம்பமூர்த்தி'' என்றார். இலிங்கம் வைரம் போன்று பளபளப்பாக இருக்கிறது.

கணபதி-சுந்தரகணபதி, சோமாஸ்கந்தர் சிலைவடிவில் இருக்கிறார். நந்திகேசுவரர், அவர்தேவி சுயம்பிரபை இவர்கள் விக்ரகங்களும் சிலை வடிவில் உள்ளன. மூவரும் பாடிய தலம்.

சுவாமி : வஜ்ரதம்பேசுவரர், வைத்தியநாதர் மழுவாடீசர்
அம்பிகை : அழகம்மை
தீர்த்தம் : கொள்ளிடம்
விருட்சம் : பனை.

ஸ்ரீ கமலைஞானப்பிரகாச தேசிகர் 'திருமழுவாடிப் புரா ணம்' என்ற நூலை இயற்றியிருக்கிறார்.

மாமழ பாடி வச்சிரத் தம்பர்
ஆமழ கியநா யகிசிவ கங்கை. (சிவ.)

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.
(சுந்தரர்)

களையும் வல்வினை அஞ்சல்நெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கிஎய் தான்மதுத் தும்பிவண்டு
அளையும் கொன்றையந் தார்மழ பாடியுள்
அண்ணலே.

(திருஞா. 2-ஆம் திரு.)

நீறேறு திருமேனி உடையான் கண்டாய்
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைந்தான் கண்டாய்
கூறாக உமைபாகம் கொண்டான் கண்டாய்
கொடியவிடம் உண்டிருண்ட கண்டன் கண்டாய்
ஏறேறி எங்கும் திரிவான் கண்டாய்
ஏழுலகும் ஏழ்மலையும் ஆனான் கண்டாய்
மாறானார் தம்அரணம் அட்டான் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் தானே.

(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

மழபாடி யுள்ளுறைவர் மாகாளத்தார்—இடைமருதூர்.
திருநா.
மழபாடி மேய மழுவாளனார்—வீழிமிழலை. திருநா.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. மழவமன்னர்களுக்குப் பாடி இடமாக இருந்த இடம். மார்க்கண்டேய முனிவருக்கு வைகாசி—விசாகநாளில் சிவபெருமான் வடிவுடை மழுவேந்திக் காட்சி கொடுத்து ஆடிய தலம். இத்தலத்தில் சந்திரனுக்கு நோய் நீங்கியது. பொன்னிநதி வடக்கு நோக்கி ஓடுகிறது. தவஞ்செய்பவர்களுக்குத் தக்க இடம். நந்திகேசுவரருக்கும் சுயம்பிரபா தேவிக்கும் திருமணம் நடந்த தலம். மூலலிங்கம் புருஷாமிருக முனிவரால் பிரதிட்டை செய்யப் பெற்றது. கோயிலில் நவக்கிரகங்கள் இல்லை. அதற்காகச் சுவாமி சந்நிதியில் மூன்று குழிகள் இருக்கின்றன. சிபிச்சக்கரவர்த்திக்கு நவக்கிரக தோஷங்கள் நீங்கிய தலம். நான்கு திசைகளிலும் ஐயனார் கோயில்கள் உள்ளன. ''மழபாடியை மறந்தாயோ'' என்று சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சிவபெருமான் கனவில் வந்து நினைப்பூட்டிய சிறப்புடையதலம்.

விரைவாக ஓடிவரும் ஆற்று வெள்ளத்தை அணையாக நின்று தடுப்பது போன்று இத்தலத்தில் சிவபெருமான் வச்சிரத்தம்பமாக—வயிரத்தூணாக நின்று உயிர்களுக்கு நேரிடும் துன்ப வெள்ளத்தைத் தடுத்துக் காப்பாற்றுகிறார். மழுவாடீசர் தம் கையிலுள்ள மழுவால் அடியார்களின் மனமாகிற புலத்தை வளப் படுத்துகின்றார்.

கலியாணசுந்தரர், அதிகார நந்தி, சுயம்பிரபாதேவி, அகத்தியர், சுந்தரர் முதலியோர் சிலை வடிவமாக இருக்கின்றனர். இவை மிகவும் பழமையானவை. நடராசர் மண்டபத்தில் பல சித்திரங்கள் உள்ளன. தட்சிணாமூர்த்திக்கு இரண்டு சிலைகள் இருக்கின்றன. பழமையான வெண்கலப் பாவை விளக்கு ஒன்று உள்ளது. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இத்தலத்தைக் குறித்துப் பாடல் இயற்றியிருக்கிறார். இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, அர்த்த சாமம் ஆகிய நான்கு காலங்களில் அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன. ஆண்டுதோறும் மாசிமக உற்சவம் 10 நாட்கள் நடைபெறுகிறது. பங்குனி மாதம் புனர்பூச நன்னாளில் நந்திகேசுவரருக்கும் சுயம்பிரபாதேவிக்கும் திருமணம் நடைபெறும்.

இத்தலக்கோயிலைப்பற்றி மூப்பது கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்கள் செந்தமிழில் செய்யுள் நடையில் உள்ளன. பெரும் பான்மையான கல்வெட்டுக்கள் சோழ அரசர்களுடைய மெய்க் கீர்த்தியைப் புலப்படுத்துகின்றன. இக்கல்வெட்டுக்களிலிருந்து இத்தலப்பகுதி சோழ அரசர் காலத்தில் வடகரை ராஜராஜ வளநாடு, வடகரை மழபாடிநாடு, பொய்கைநாடு, இராசேந்திர சிங்கவளநாடு, தியாகவல்லிவளநாடு என்று வழங்கப் பெற்று வந்தது என்றும், பெருமானுக்குத் திருமழுவாடி உடையார், திருமழுவாடி மகாதேவர் என்ற பெயர்கள் வழங்கி வந்தன என்றும், பல மன்னர்கள் கோயிலைக் கண்காணித்து வந்தது அன்றித் தேவிமார்களும் வழிபட்டு வந்தார்கள் என்றும் இறைவனுக்கு உப்பு முதல் தங்கம் வரை வேண்டிய பொருள்கள் அளிக்கப்பட்டன என்றும் கோயிலில் நந்தாவிளக்கு எரிக்க, சாவா மூவாப் பேராடுகள் விடப்பட்டன என்றும் தெரிகிறது.

229. திருமறைக்காடு : (சோழநாடு)

இரயில்வே நிலையம் உள்ள தலம். சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள தியாகராசமூர்த்

திக்குப் புவனி விடங்கர் என்பது திருநாமம். ஹம்ஸ பாத நடனம். வேதங்களே இவ்விடத்துள்ள ஈசுவரனைப் பூசித்த பெருமையைப் பெற்றுள்ளது இந்த க்ஷேத்திரம். வேதாரணியம் என்றும் வழங்கும் இராமன் இவ்விடம் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து தாம் இராவணாதியர்களைக் கொன்ற பாவம் நீங்கப் பெற்றார். இவ்விடம் 'ஆதிசேது' கோடிக்கரை என்றும் வழங்கப்படுகின்றது. இராமர் தமது பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டிப் பூசித்த விநாயகருக்கு 'வீரஹத்தி விநாயகர்' என்று பெயர். இந்த விநாயகர் சந்நிதி கோயிலின் பிராகாரத்தில் மேற்குத் திக்கில் உள்ளது. வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளைப் பதிகம்பாடி அப்பர் திறக்கவும், சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம். இங்கிருந்து சம்பந்தர் பாண்டி நாட்டிற்கு மங்கையர்க்கரசியார் அழைப்பின்படி எழுந்தருளினார். சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனாருடன் வந்து தரிசனம் செய்துள்ளார். இதன் வரலாற்றை பெரியபுராணத்திலும், தேவாரத்திலும் அறியலாம்.

கல்யாணத்திருக்கோலம் : பிரமன் பூசை செய்து தமது சிருஷ்டித் தொழிலைச் செய்யலானார். விசுவாமித்திர முனிவர் தாம் பிரம்ம ரிஷியாக ஆகவேண்டுமென்ற அவாவை இவ்விடத்திலுள்ள ஈசுவரனைப் பிரார்த்தித்துப் பூர்த்தி செய்து கொண்டார். அகத்தியர் தாம் பார்வதி கல்யாண காலத்தில் தென்றிசை அனுப்பப் பட்டதும் தமக்கு அந்தக் கோலத்தைக் காட்டவேண்டி ஈசுவரனை வேண்ட அப்படியே கல்யாண கோலத்தைக் காட்டியருளினார்.

இந்த ஐதிஹ்யத்தைக் காட்ட மூலலிங்கத்தின் பின்புறம் சிலையில் பார்வதி கல்யாண கோலம் அமைக்கப்பட்டுள்ளது. அகத்தியான் பள்ளிக் கோயிலிலும் அகத்தியருடைய சிலை இருக்கிறது. தியாகராஜ க்ஷேத்திரம்: முசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்ற ஏழு தியாகராஜ பிம்பங்களுள் ஒன்று இவ்விடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஒரு சமயம் கோயில் தீபத்திலுள்ள நெய்யைத் தனக்கு ஆகாரமாக உட்கொள்ள வந்த எலி விளக்கிலிருந்த திரியைத் தள்ள அதனால் அணையும் நிலையிலிருந்த தீபம் சுடர்விட்டுப் பெரியதாய் எரியலாயிற்று. இதன்பயனாக அடுத்த பிறவியில் மகாபலிச் சக்ரவர்த்தியாகப் பிறவியெடுத்தது. இதன் விவரம் அப்பரால் திருக்குறுக்கைத் தேவாரப் பதிகத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருக்குள மகிமை :

இவ்விடம் சமுத்திரக் கட்டத்தில் ஸ்நானம் செய்வது எல்லாப் புண்ணிய காலங்களிலும் விசேடமானது. கோயிலுக்குள்ளிருக்கும் திருக்குளமும் மஹா புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படுகிறது. கங்காதேவியே தனது பாவம் நீங்க வேண்டி ஸ்நானம் செய்ய, மணிகர்ணிகையும், காவிரி நதியும் ஸ்நானம் செய்து பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டி இவ்விடத்தில் ஸ்நானம் செய்த 'தேவ பூஷணம்' எனப்படும் புண்ணிய தீர்த்தமும் இதில் அடங்கியுள்ளன. ஆகையால் இத்திருக்குளத்தில் நீராடிப் பாவம், வியாதி முதலியவைகளைப் போக்கிக் கொள்ளலாம்.

இத்திருமறைக்காடு உம்பல் நாட்டிற்குள் குன்றூர் நாட்டைச் சார்ந்திருந்தது. குலோத்துங்க மன்னன் காலத்தில் கோயிலின்கண் திருப்பதிகம் பாட விசேட மூலதனம் வைக்கப் பட்டது. மூன்றாவது இராசேந்திரசோழன் காலத்தில் (கி.பி. 1250) கோயில் நிலங்கள் முப்பது வட்டம் அந்தணர்கள் வசமிருந்தன. இதே இராசேந்திரன் காலத்தில் 1262-ல் 'திருவிக்ரமன் சந்தி' உற்சவம் நடத்தப்பூமிதானம் விடப்பட்டது. தஞ்சை மஹாராஷ்டிர மன்னர்களாகிய பிரதாப சிம்மன் துளஜாமஹாராஜா இவர்கள் (கி.பி. 1763–87) செய்த திருப்பணி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகோர மூனிவரும் பரஞ்சோதியாரும் பாடிய புராணங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

(1) வீரஹத்தி விநாயகர் : கோயிலுக்கு மேல் வாயிலில் உள்ளார். மேற்குப் பார்த்த சந்நிதி. (2) வேதனவிநாயகர் (மூக்குறுணிப் பிள்ளையார் எனவும் பெயர்). தெற்குப் பிராகாரம்.

பிராகாரம் இரண்டு : வன்னி, புன்னை இரண்டு ஸ்தல விருக்ஷங்கள். முதற்பிராகாரத்தில் மணிகர்ணிகை தீர்த்தம். விசுவாமித்திர தீர்த்தம், விக்கினேசுவர தீர்த்தம், சுப்பிரமணிய தீர்த்தம். திருக்கோடி தீர்த்தம்—சுவாமிக்கு அபிடேகத்திற்கு உரியது. இவை கூபங்கள். வேதாமிர்தம்–ஏரி. பாய்ச்சலுள்ளது. வேத நதி கடலோடு கலந்து விட்டது. 96 தீர்த்தங்கள்.

வேதா ரணியம் வேதா ரணியர்
மூதுரைத் தியாகர் பண் மொழிமணி கர்ணிகை. (சிவ.)

இந்திர னோடு தேவர் இருடிகள் ஏத்து கின்ற
சுந்தர மானார் போலும் துதிக்கலாம் சோதி
போலும்
சந்திர னோடுங் கங்கை அரவையும் சடையுள் வைத்து
மந்திர மானார் போலும் மாமறைக் காடனாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

சிலைதனை நடுஇடை நிறுவி
ஒர்சினம் மலிஅரவு அது கொடுதிவி
தலம்மலி சுரர் அசுரர்கள் ஒலி
சலசல கடல் கடைவுழிமிகு
கொலைமலி விடம்எழ அவர்உடல்
குலைதர அதுநுகர்பவன் எழில்
மலைமலி மதில்புடை தழுவிய
மறைவனம் அமர்தரு பரமனே.
(திருஞா. 1-ஆம் திரு.)

யாழைப்பழித் தன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான் இடம்
பேணில்
தாழைப்பொழில் ஊடேசென்று பூழைத்தலை
நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

மறைக் காட்டுறையு மழுவாட் செல்வர்—கோயில். திருநா.
நிறைமறைக்காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னை—
குறுக்கை வீரட்டம். திருநா.
வானவனை வலிவலமு மறைக்காட்டானை—
கஞ்சனூர். திருநா.
மறைக் காட்டுறையு மணாளன் கண்டாய்—கோடிகா.
திருநா.

மறைக்காடனென்றோர் மழலைபேசி—புறம்பயம். திருநா.
மறைக்காடும் ஆவடுதண்டுறையுமேய திருவானை—
ஆலம்பொழில். திருநா.
மறைக்காடும் வலிவலமும் மன்னினானை—நள்ளாறு.
திருநா.
வளைகுளமும் மறைக்காடும் மன்னினானை—வீழிமிழலை.
திருநா.
மறைக்காட்டார் வலிவலத்தார் வாய்மூர்மேயார்—
வீழிமிழலை. திருநா.
வலஞ்சுழியாய் மறைக்காட்டெந்தாயென்றும்—புகலூர்.
திருநா.
திருமறைக்காட்டெந்தை சிவலோகனை—
நாகைக்காரோணம். திருநா.
மறைக்காடு மேயானை ஆக்கூரானை—
பள்ளியின் முக்கூடல். திருநா.
வாய்மூரும் மறைக்காடும் மருவினான்காண்—ஆரூர். திருநா.
மத்தம்மலிசூழ் மறைக்காடதன்றென்பால்
கோடிக்குழகர். திருநா.
மரவங்கமழ் மாமறைக் காடதன்றென்பால்—
கோடிக்குழகர். சு.
பாரூர் மலிசூழ் மறைக்காடதன்றென்பாலேரார் பொழில்
சூழ்தரு கோடிக்குழகை—கோடிக்குழகர். சு.
துகடீர் சங்க மாடேறிமுத்தினுங் கானல்வேலி
மறைக்காட்டு மாமணிகாண்—புத்தூர். திருநா.
மறைக்காடும் வாய்மூர் வலஞ்சுழியும் —அதிகை. திருநா.
மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி வாய்த்த இறைவன்—
இடையாறு. சு.
மருவினிய மறைப்பொருளை மறைக்காட்டானை—
மாற்பேறு. திருநா.
மாசிலாச்சீர் மறைக்காடு நெய்த்தானம் நிலையினான்—
இலம்பையங்கோட்டூர். திருஞா.
மறைக்காட்டுறையு மணிகண்டன்காண்—காளத்தி.
திருநா.
மறைக்காட்டுறையு மணாளனை—பொது. திருநா.
திருமறைக்காடு மேயவீசனே—பொது. திருநா.
ஊருத்திரகோடி மறைக்காட்டுள்ளும்—பொது. திருநா.
மறைக்காடு வண்பொழில்சூழ் தலைச்சங்காடு—பொது.
திருநா.
மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே.
பொது. சு.

230. திருமாகறல் : (தொண்டைநாடு)

காஞ்சீபுரத்திலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. பேருந்தில் இத்தலத்திற்குச் செல்லலாம். விநாயகர்: பொய்யா விநாயகர். தேவேந்திரன் பூசித்த தலம். ஓர் அசுரனுக்குப் பாசம் நீங்கிய தலம்; மாகு-பாசம். இராசேந்திர சோழனுக்குச் சுவாமி பொன்னுடும்பாகத் தோன்றி அவன் துரத்துங்கால் ஓடிப் புற்றில் ஒளிந்து வெளிப்பட்டருளினர். சுவாமி புற்றிலிருந்து உதயம். உடும்பு தழுவிக் கொண்டிருக்கிறது. இங்குச் சோம வார தரிசனம் விசேடம். காஞ்சியில் ''சர்வதீர்த்த ஸ்நாநம். சஹஸ்ரேசுவரர் தரிசனம். யமலோக பயம் நாஸ்தி. சிவலோகே நிரந்தரம்.'' என்பது போல இங்கே ''அக்னி தீர்த்த ஸ்நாநம் அகத்தியேசுவரர் தரிசனம் யமலோக பயம் நாஸ்தி சிவலோகே நிரந்தரம்'' என்று வழங்குகிறது. உடும்பு பூசித்த தலம். புற்றுக்குள் நுழைந்த உடும்பு போல ஒரு ரூபம் சிவலிங்கத்தருகில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : அகத்தீசுரர்.
அம்பிகை : திரிபுவனேசுவரி.
தீர்த்தம் : அக்னி தீர்த்தம்

திருமா காறல் சிவன்மா காறல்
அரன்மா நாயகி யகமகிழ் நவ்வி. (சிவ.)

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை
யாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழில்
மாக லுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி
செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள்
தீருமுடனே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப்பாடல்: ஆறைவடமாகறல்—பொது. திருஞா.

231. திருமாணிகுழி : (சோழநாடு)

கடலூரிலிருந்து 3½ மைல் தொலைவில் உள்ளது. மகா பலிச் சக்கரவர்த்தியிடமிருந்து மூவடி மண் கேட்டு மூவுலகங்

களையும் பெற்றுக் கொண்ட தோஷம் நீங்குவதற்காக வாமனர் (மாணி) பூசித்த தலம். வாமனபுரியென்று வழங்கும். உதவி மாணி குழியென்று திருஞானசம்பந்தர் இத்தலத்தைப் பாடியுள்ளார். பிரமன், வாமனர், சூரியன், இந்திராணி, கருடன், துருவாசமுனிவர், அட்டவசுக்கள், முனிவர்கள், தக்கன், சத்துருஜித் முதலியோர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பேற்றோராவர். இது வாமதேவர் இரகசியமாகச் சொல்லும் ஞானாகாச ஸ்தலமாகும். இத்தலக் கோயில் விமானத்தின் பெயர்கள்: ஆதித்த விமானம், பாஸ்கர விமானம் என்பன; இலிங்கம் சிவகலை, விஷ்ணுகலை சேர்ந்ததாய் அமைந்துள்ளது. சுவாமி தேவியாருடன் இருப்பதாக ஐதிஹ்யமாதலின் எப்பொழுதும் திரையிடப்பட்டிருக்கிறது. ஏகாதச ருத்திரர்களுள் ஏழாவது ருத்திரராகிய பீமருத்திரரின் திருவுருவம் திரையில் காணப்படுகிறது. இவருக்கே முதலில் அருச்சனை, தீபாராதனை முதலியன நடைபெறுகின்றன. பிறகுதான் மூலவராகிய இலிங்கத்தைத் தரிசிக்கலாம் வாமனர் பூசைக்கு பீமருத்திரர் காவலாக இருப்பதாக ஐதிஹ்யம். வணிகர் ஒருவருக்கு சுவாமி உதவி செய்த காரணத்தால் 'உதவி நாயகர்' என்று வழங்கப்பெறுவர். தல புராணத்தால் பாஸ்கரேசம், கருடேசம், துருவகேசம், தட்சகேசம், சசீசம், சத்துரு நாசேசம் முதலிய கோயில்கள் இத்தலத்தில் இருந்தன என்று தெரிய வருகிறது. இத்தலத்தின் மேற்கேயுள்ள புஷ்பகிரியில் ஒரு பிலத்தில் சாஸ்தா வீற்றிருக்கிறார் என்றும் அப்பிலத்தின் அருகிலுள்ள சிவாலயம் இராசராசேசம் என்னும் பெயருடையது என்றும் தலபுராணம் கூறும். கார்த்திகை சோமவாரத்தன்று வாமனேசுவரரையும், அம்புஜாக்ஷியையும் அர்ச்சிப்பது விசேடமாகும். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : வாமேனசுவரர், உதவிநாயகர்.
அம்பிகை : அம்புஜாக்ஷி, பங்கயக்கண்ணி.
தீர்த்தம் : மாணிக்க தீர்த்தம், சுவேத தீர்த்தம், கெடிலம்.

மாணிகுழி சிவன் மாணிக்க நாதர்
மாணிக்க வல்லி வாவிமாணிக்கம். (சிவ.)

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு
பங்கர்புனல் தங்கு சடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்துறை விடம்

கன்னியிள வாளைகுதி கொள்ளவிள
வள்ளைபட ரள்ளல் வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை
சேருதவி மாணிகுழியே.
(திருஞா. 3-ஆம் திரு.)

232. திருமாந்துறை : (சோழநாடு)

லால்குடியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. சூரியன், சந்திரன், கண்ணுவர் பூசித்த தலம். கோபுரத்தில் மகாவிஷ்ணுவின் அம்சமாகிய ஒரு பேயின் பிம்பம் இருக்கிறது. இது 'வடகரை மாந்துறை' என வழங்கப் பெறும். திருமாந்துறை : மா உரிச்சொல்லாதலின் மெலி மிக்கது.

சுவாமி : ஆம்பிரவனேசுவரர்.
அம்பிகை : அழகாலுயர்ந்த அம்மை.

அழகிய மாந்துறை அயிரா வணேசர்
அழகால் அமர்ந்தவள் அனக வான்நதி. (சிவ.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

ஒத்தூரும்மாற்பேறும் மாந்துறையும்—அதிகை. திருநா.
மறைக்காட்டானே திருமாந்துறையாய்
மாகோணத்தானே—பொது. சு.

செம்பொ னார்தரு வேங்கையும் ஞாழலும்
செருந்திசண் பகம்ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை
குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல்
ஏத்துதல் செய்வோமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

233. திருமாற்பேறு : (தொண்டைநாடு)

திருமாற்பேறு இரயில்வே நிலையத்திலிருந்து தென்மேற்கே 2½ மைல் தொலைவில் உள்ளது. திருமால் பூசிக்கச் சிவ

பெருமான் மகிழ்ந்து சக்கராயுதம் அளித்த தலம். பாலியாற்றின் தென்கரையிலுள்ளது இத்தலம். பாலி-பாலாறு. வடமொழியில் இவ்வூருக்கு 'ஹரிச் சக்கரபுரம்' என்று பெயர். குபன் என்னும் அரசன் பொருட்டு மகாவிஷ்ணு கதிசி முனிவருடன் போர் செய்ய, அவரது சக்கரம் முனிவரின் வஜ்ர சரீரத்திற்பட்டு வாய்மடிந்து விட்டதால் சலந்தரனைக் கொன்ற சக்கரம் சிவபெருமானிடம் இருப்பது தெரிந்து அதைப் பெற, தினமும் ஆயிரம் தாமரை மலர் கொண்டு சிவபெருமானை அர்ச்சிக்க, ஒருநாள் ஒரு பூ குறைய, தம் கண்ணையே பெயர்த்து அர்ச்சித்து ''சுதர்சனம்'' என்ற சக்கரத்தையும் 'பத்மாக்ஷன்' என்னும் பெயரையும் சிவபெருமானிடமிருந்து பெற்றார். இத் தலத்தில் ஒரு கணம் தங்கினாலும் முத்தி என்ற வானையும் பெற்றார். சோமன் பூசித்த தலம். நந்திகேசுவரர் நின்ற திருக்கோலம். சுவாமிக்கு எதிரில் விஷ்ணுகூப்பிய கையுடன் நின்ற திருக்கோலம். சுவாமி: தீண்டாத் திருமேனி. குவளை சாத்தி அபிடேகம். பழைய பாலாற்றின் தென்கரையில் தக்ஷிணா மூர்த்தி கோயில். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : மணிகண்டேசுவரர், மால்வணங்கீசுவரர்.
அம்பிகை : அஞ்சனாக்ஷியம்மை, கருணைநாயகி.
தீர்த்தம் : விஷ்ணுதீர்த்தம்.
விருட்சம் : வில்வம்.

திருமாற் பேறு சிவன்மால் வணங்கும்
அரன்சாந் தணிநா யகியரி தீர்த்தம். (சிவ.)

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

மாணிக் குயிர்பெறக் கூற்றை உதைத்தன மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன கண்டதொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன பேர்த்துமஃதே
மாணிக்க மாவன மாற்பே றுடையான் மலரடியே.
(திருநா. 4-ஆம் திரு.(

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

மாற்பேறு காப்பாய் மகிழ்ந்தார் போலும்—சாய்க்காடு. திருநா.
மாற்பேறு காப்பா மகிழ்ந்தான் கண்டாய்—மங்கலக்குடி. திருநா.
ஒத்தூரும் மாற்பேறும் மாந்துறையும்—அதிகை. திருநா.
மலையினார் பருப்பதந்துருத்தி மாற்பேறு—
இலம்பையங் கோட்டூர். திருஞா.
வலிவலம்மாற்பேறு வாய்மூர்வைகல்—பொது. திருநா.

234. திருமீயச்சூர் : (சோழநாடு)

பேரளம் இரயில்வே நிலையத்திற்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. முயற்சி நாதேசுவர சுவாமி ஆலயத்தில் சூரியனுடைய ஆலயமும் இருக்கிறது. சூரிய பூஜை சித்திரை 21-ஆம் தேதி யிலிருந்து 7 நாட்கள் நடைபெறுகிறது. ரதஸப்தமியில் உற்சவம். சுவாமி சந்நிதியின் துவாரபாலக ஸ்தானத்தில் கணபதி இருவர் இருக்கின்றனர். அம்பிகை திருவுருவம் அமர்ந்த திருக்கோலத்தில் அமைந்துள்ளது. சுவாமியையும், தேவியையும் யானை மேல் வைத்துச் சூரியன் பூசித்த தலம். கஜப்பிருஷ்ட விமானம். இத்தலத்தில் வெளவால்நத்தி மண்டபமொன்று இருந்து இப்பொழுது இடிந்து விழுந்துகிடக்கிறது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : மேகநாதேசுவரர், திருமேனிநாதர், முயற்சி நாதேசுவரர்.
அம்பிகை : சௌந்தர நாயகி, லலிதாம்பிகை.
தீர்த்தம் : சூரிய புஷ்கரிணி.
விருட்சம் : வில்வம்.

மூதமீ யச்சூர் முயற்சி நாதர்
காதல்கூர் சுந்தரி கங்கா கூபம். (சிவ.)

காயச் செவ்விக் காமற்காய்ந்து கங்கையைப்
பாயப்புன்சடையிற் பதித்த பரமேட்டி
மாயச்சூரன் றறுத்தமைந்தன்தா தைதன்
மீயச்சூரே தொழுது வினையை வீட்டுமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

235. திருமீயச்சூர் இளங்கோயில் : (சோழநாடு)

இக்கோயில் மீயச்சூர் சுவாமி சந்நிதிக்கு வடபுறத்தில்

உள்ளது. இளங்கோயில் பாலாலயம் என்று வடமொழியில் வழங்கப்பெறும். இவ்விளங்கோயிலில் அர்த்தமண்டபம் வட பக்கம். மஹேசுவரர். சோமாஸ்கந்தர் பாகத்தில் மூலலிங்கம் முதலிய மூர்த்திகள் ஸ்தாபிதிக்குப் பக்கத்தில் எழுந்தருளியுள்ளனர். காளி வழிபட்ட சிறப்பினையுடையது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

சுவாமி : சகல புவனேசுவரர்.
அம்பிகை : மேகாலம்பிகை, விதயுன்மேகலாநாயகி,
தீர்த்தம் : அமுத தீர்த்தம்.

சதிரிளங் கோயில் சகலபுவனேசர்
கதிர்நிற மின்னுமே கலையுமை அமிர்தம். (சிவ.)

தோற்றுங் கோயிலுந் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்
கேற்றங் கோயில்கண் டீரிளங் கோயிலே.

(திருநா. 5-ஆம் திரு.)

236. திருமுண்டீச்சுரம் : (நடுநாடு)

திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. பிரமனும், தேவேந்திரனும் பூசித்த தலம். நெல்லிக்குப்பத்திற்கு அருகில் உள்ளது. திருநாவுக்கரசர் பாடிய தலம்.

திருமுண்டீச்சுரம், திருக்கண்டீசுவரம்:

சுவாமி : சிவலோகநாதர், முண்டீச்சுரர்.
அம்பிகை : கானார்குழலியம்மை, சௌந்தரநாயகி.
தீர்த்தம் : முண்டக தீர்த்தம். விருட்சம்-வன்னி.
சந்நிதி மேற்கு.

நடனபாதேசுவரர். அம்பிகை : ஹஸ்ததாளாம்பிகை. அம்பிகை சந்நிதி : கிழக்கு.

திருமுண் டீச்சரம் திருமுண் டீசர்பால்
மருவுகா னார்குழல் மாதுமுண் டீகமாம். (சிவ.)

ஆர்த்தான்காண் அழல்நாகம் அரைக்கு நாணா
அடியவர்கட் கன்பன்காண் ஆனைத் தோலைப்

போர்த்தான்காண் புரிசடைமேல் புனலேற் றான்காண்
புறங்காட்டி லாடல் புரிந்தான் தான்காண்
காத்தான்காண் உலகேழும் கலங்கா வண்ணம்
கனைகடல்வாய் நஞ்சதனைக் கண்டத் துள்ளே
சேர்த்தான்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன்காண் அவனென் சிந்தை யானே.
(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:
முண்டீச்சுரம் வாதவூர் வாரணாசி—பொது. திருஞா.

237. திருமுதுகுன்றம் : (நடுநாடு)

இத்தலம் நடுநாட்டில் ஸ்ரீ மணிமுத்தா நதிக்கரையில் உள்ளது. விருத்தாசலம் இரயில்வே நிலையத்திலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டில் தலைமையான நான்கினுள் இத்தலம் ஒன்றாகும். (ஏனை மூன்று தலங்கள் காசி, சிதம்பரம், காளத்தியென்பன.) இது விருத்தாசலம் விருத்தகாசி, சிரகிரி, பழமலை, முதுகுன்று, குன்றை முதலிய திருநாமங்களால் வழங்கப்பெறும். இது பல புராணங்களாலும், இதிகாசங்களாலும், வேறு பல நூல்களாலும் பல படியாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இம்மலை சிவபெருமான் திருவுருவென்றும், திருமணிமுத்தாறு சத்தியுருவென்றும் இத்தலபுராணம் கூறும். சிதம்பரம் சிவபிரான் திரு நடனத்துக் குரிய தலமென்றும் இது குலாவி வீற்றிருத்தற்குரியதென்றும் கூறப்படும். இத்தலத்தில் தேவர்களின் பொருட்டு இறைவர் ஒரு முறை திருநடனம் செய்தருளினரென்று விருத்தாசல புராணம் கூறும்.

இந்த ஸ்தலத்தில் மரிக்கும் உயிர்களை மரண சமயத்தில் உமாதேவியார் தம்மடியில் வைத்த முன்தானையால் விசிறுவா ரென்பதும் சிவபெருமான் அவ்வுயிர்களின் வலக்காதில் பஞ்சாட்சர உபதேசம் செய்தருளுவாரென்பதும் பல நூல்களிற் காணப்படு கின்றன.

''தூசினா லம்மை வீசத் துடையின்மேற் கிடத்தித்துஞ்சும்
ஆசிலா உயிர்கட் கெல்லா மஞ்செழுத்தியல்பு கூறி
ஈசனே தனது கோல மீத்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையும் கண்டான்''

என்பது கந்தபுராணம்.

மகாப்பிரளய காலத்திலும் இந்தத் தலம் அழியாமல் மேலோங்கி நிற்பது,

''பாடு வாருக் கருளு மெந்தை பனிமுது பௌவமுந்நீர்
நீடு பாரு முழுதுமோடி யண்டர் நிலைகெடலும்
நாடு தானு மூடு மோடி ஞாலமு நான்முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத்துயர்ந்தது முதுகுன்றே''

''செழு நிலத்தை மூடவந்த மூவாத
முழங்கொலிநீர்
கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றமே''

ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றே''
(திருஞா. தே.)

என்னும் திருவாக்குக்களாலும்,

''பழமலை பகரிற் பாய்புனல் யாண்டும்
பரந்தொரு பற்றிலா துலகம்
முழுவதும் கரக்கப் பெறுபிர ளயத்தின்
முகட்டினின் முடிவிலாதிருக்கும்''
(திருக்காளத்திப்புராணம், தலவிசிட்ட முணர்த்திய47)

என்பதனாலும் இது விளங்கும்.

இங்கே அகத்தியர் முதலிய முனிவர்களும், பிரமன், திருமால், சூரியன், இந்திரன் முதலியவர்களும், வேறு பலரும் பூசித்துப் பேறு பெற்றனர். வில்வலன், வாதவிகளைக் கொன்ற தனால் வந்த பழியை இத்தலத்தில் இறைவனை வழிபட்டு அகத்தியமுனிவர் போக்கிக் கொண்டனரென்பது இத்தலபுராண வரலாறு. சுந்தரர் தாம் பெற்ற பொன்னை இத்தலத் தீர்த்த மான மணிமுத்தா நதியிலே இட்டுத் திருவாரூர்க் கமலாலயக் குளத்திலே சிவபெருமான் அருளால் பெற்றனர்.

மணிமுத்தா நதி:

மணிமுத்தா நதி இத்தலத்தை வழிபடும் குறிப்பாக வலஞ் செய்து ஓடுகிறதென்பர்.;

''முழங்கொலி நீர் முத்தாறு வலஞ் செய்யு
முதுகுன்றத் திறையை'' (திருஞா. தே.)

''முத்தி முத்தாறு வலஞ்செயு முதுகுன்றரை'' (சுந்தர.தே.)

என்பவற்றில் இது குறிப்பிக்கப் பட்டிருத்தல் காண்க. அந்நதி கங்கையிற் சிறந்ததாகக் கருதப்பட்டு இறந்தாரென்பு இடப் படுதலின் அத்தி முத்தாறென்றும், தன்பால் மூழ்கினவருக்கு முத்தியை வழங்குதலின் முத்தி முத்தாறென்றும் வழங்கப்பெறும்.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகரது திருநாமம் பாதாள விநாயகரென்பது; அது தமிழில் ஆழத்துப் பிள்ளையாரென வழங்கும். சிவபிரான் திருநாமம் விருத்தாசலேசர், பழமலை நாதர் முதலியன; அம்பிகையின் திருநாமம் விருத்தாம்பிகை, பெரிய நாயகி முதலியனவாம்.

இந்த ஸ்தலத்துக்குரிய விருட்சம் வன்னி. இதனைச் சார்ந்ததாகக் கோபருப்பதம் என்னும் ஒரு சிறந்த சிவஸ்தலம் உண்டு. அத்தலமும் இந்த ஸ்தல புராணத்தாலும் வேறு பல நூல்களாலும் இத்தலத்துடன் சேர்த்தே சிறப்பிக்கப்படுவது. மகாநந்தி பாராயண முனிவரென்னும் சித்தரொருவர் இருந்து சசிவர்ணனென்னும் மாபாவி யொருவனைத் தடுத்தாட்கொண்டு ஞானோபதேசம் செய்தற்கு இடமாகிப் பெருமை பெற்றது அது.

இத்தலத்தைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவரும் பாடியுள்ளார்கள். ஸ்ரீ ஞானக் கூத்தரென்னும் பெரி யாரால் தமிழில் இயற்றப்பட்ட புராணம் ஒன்று இதற்கு உண்டு. கவிஞர் பெருமானாகிய துறை மங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமி களால் இயற்றப் பெற்ற பழமலையந்தாதி, பிக்ஷாடன நவமணி மாலை, பெரிய நாயகியம்மை விருத்தம், பெரிய நாயகியம்மை கலித்துறையென்பனவும், குமார தேவரால் இயற்றப் பெற்ற பெரிய நாயகியம்மை பதிகம் என்பதும், குரு நமச்சிவாயரால் இயற்றப்பெற்ற சில வெண்பாக்களும், வேறொரு கவிஞரால் இயற்றப்பட்ட பழமலை வெண்பா வென்னும் ஒரு நூலும், பிறவும் இத்தல சம்பந்த மானவை. கந்தபுராணம், சூதசங் கிதை, சிதம்பர புராணம், திருக்காளத்திப்புராணம், திருக் காளத்தி நாதருலா முதலிய பல தமிழ்நூல்களில் இத்தலத்தின் பெருமை கூறப்படுகின்றது. இத்தலத்து முருகக் கடவுள் விஷய மாக அருணகிரிநாதரால் இயற்றப்பெற்ற திருப்புகழ்ப் பாடல்கள் சில உண்டு.

மெய்த்தாறு சுவையும் ஏழிசையும் எண்குணங்களும்
விரும்பு நால்வே
தத்தாலும் அறிவொண்ணு நடைதெளியப்
பளிங்கேபோல் அரிவைபாகம்

ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூர் உலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கும் முதுகுன்றமே.
(திருஞா. 1-ஆம் திரு.)

கருமணியைக் கனகத்தின்குன்றெப் பானைக்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவம் ஆட்டு வானைக்
கொல்வேங்கை அதளானைக் கோவணவன் தன்னை
அருமணியை அடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.
(திருநா. 6-ஆம் திரு.)

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை
அரைக்குஅசைத்தீர்
முன்செய்த மூஎயிலும் எரித்தீர் முதுகுன்று அமர்ந்தீர்.
மின்செய்த நுண்ணிடையாள் பரவை இவள்தன்
முகப்பே
என்செய்த ஆறு அடிகேள் அடியேன் இட்டளம்
கெடவே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள் :

முதுகுன்ற மூதூருடையார் போலும்—சாய்க்காடு. திருநா.
முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில்முட்டம்—இடையாறு. சு.
முதுகுன்றம் கொடுங்குன்றமும்—பொது. திருஞா.

238. திருமுருகன்பூண்டி : (கொங்குநாடு)

திருப்பத்தூரிலிருந்து அவிநாசிக்குச் செல்லும் வழியில் ஐந்து மைல் தொலைவில் உள்ளது இத்தலம்.

சுவாமி பெயர் : ஸகந்தநாதேசர், முருகநாதேசுவரர். மேற்குப் பார்த்த சந்நிதி.

அம்பிகை : லிங்கபூஷ்ண ஸ்தனாம்பிகை முயங்குபூண் முலையம்மை. தே. முல்லைவனம் எனவும் வழங்கும். இதன்பால் முருகர் ஆறுமுகமூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார்.

தீர்த்தம் : சுப்பிரமணிய சுத்தகூபம்; தெற்குப் பிராகாரத் திலுள்ளது. அக்கினி தீர்த்தம்: திருக்கோயிலின் வடக்கேயுள்ளது.

இது சுப்பிரமணியர் பிரதிஷ்டைசெய்த ஸ்தலம். இந்தத் தலத்தில் வடக்கே தீர்த்தம் உள்ளது. கோயிலின் தென்மேற்கில் பாலகப்பிரமணிய ஸ்தலம் உள்ளது. பிரமஹத்தி நீங்கிய குறிப்பு இலேகாவடிவ மாக இருக்கிறது. இதன் எதிரே யுள்ளது ஞான தீர்த்தம். அக்கினி மூலையில் புராதன ஸ்தலம் உள்ளது.

சுவாமி : மாதவிவனேசர்,
அம்பிகை : மங்களநாயகி.
தீர்த்தம் : மாதவிதீர்த்தம்.

அவிநாசிக்குப் போகும் வழியில் கூப்பிடுவிநாயகர் உள்ளார். இது பிரமஹத்தி விமோசனஸ்தலம். அவிநாசியிலுள்ள வணிகர் ஐந்நூற்றுவர். (சொக்கலிங்கம்) நகரத்தார், பன்னிரண்டாஞ் செட்டிகள்.

முருகன் பூசித்த தலம். சோமான்பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கொடுத்த பெரும்பொருளைச் சிவ பெருமான் வடுகவேடுவர் உருவில் பூதகணங்களை விட்டுக் கொள்ளையடிக்கச் செய்து, பிறகு சுந்தரர் பதிகம் பெற்று அப்பொருளைத் திரும்பக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்த தலம். துருவாசர் கற்பகலோகத்திலிருந்து மாதவிமரம் கொண்டு வந்தார். இங்கு நடராச தாண்டவம் பிரமதாண்டவம். கூப்பிடு பிள்ளையார். 'வழிப்பறித்த இறைவனைக் கூவென்று சுந்தர மூர்த்திக்குக் கூறிய இப்பிள்ளையார் அவிநாசிக்குப் போகும் வழியில் உள்ளார். சுந்தரர் பாடிய தலம்.

கோயிலுக்கு வெளியில் பிள்ளையார் கோயில் ஒன்று இருக் கிறது. அதற்கு எதிரில் ஒரு பாறையில் ஒரு சிறுகுழி உள்ளது. அக்குழி யிலிருந்து 12 வருஷங்களுக்கொருமுறை நீர் பொங்கு கின்றது.

கோயிலின் வாயிலில் பறிகொடுத்து முகம்வாடிய சுந்தரரும், மீட்டும் பெற்ற அவரும் இரு உருவங்களாக விளங்குகிறார்.

ஸ்தல புராணம் அச்சிடப்பெற்றுள்ளது.

முருகன் பூண்டி முருகா வுடையார்
அருகுறை யாவுடைநா யகியா வுடை. (சிவ.)

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமை சொல்லித்
திடுகு மொட்டென்னக் குத்திக்
கூறைகொண் டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர்
வாழ்முரு கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
எத்துக் கிங்கிருந் தீர்எம்பிரானிரே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:
முல்லைப்புறவம் முருகன்பூண்டி—பொது. திருநா.

239. வடதிரு முல்லை வாயில் (தொண்டை நாடு)

ஆவடி இரயில்வே நிலையத்திற்கு 2½ மைல் தொலைவில் உள்ளது. இந்தத் தலம் முல்லைக்காடாய் இருந்தது. தொண்டை நாட்டு மன்னன் ஒருவன் வேட்டையாட வரும்போது அவனுடைய யானையின் காலில் முல்லைக் கொடி சிக்கிக் கொள்ளவே யானை நின்று விட்டது. மன்னன் கீழே இறங்கி முல்லைக் கொடியை வெட்டும்போது அங்கிருந்து இரத்தம்வெளிப் பட்டது. அகழ்ந்து பார்த்தபோது ஒரு சிவலிங்கம் காட்சி யளித்து வெட்டுண்ட இடமும் தெரிந்தது. உடனே மன்னன் காட்டை அழித்துக் கோயில் அமைத்தான். இப்போதுள்ள மூலஸ்தானமூர்த்தியின் சிரசில் வெட்டுக்குறி இன்றும்காணலாம். இம் மூர்த்திக்கு வெந்நீரிலே அபிடேகம். கோயில் விதானத்தில் கஜசம்ஹரமூர்த்தியின் திருக்கோலம் அமைந்துள்ளது. கோயிலின் விமானம் கஜப்பிருஷ்ட அமைப்புடையது.

இந்தத் தலத்திற்கு அருகில் பெரிய மணல் வெளி உண்டு. பாலாற்றின் கிளையொன்று பழைய காலத்தில் இவ்வழிச் சென்று வறண்டது என்பது தேவாரத்தால் அறியலாம்.

கண்பார்வை இழந்த பிறகு சுந்தரர் முதன் முதலாக வணங்கிய தலம் இதுவே. ''படுதுயர் களையாய் பாசுப தாபரஞ்

சுடரே'' என்று ஒவ்வொரு பாசுரத்திலும் விண்ணப்பிக்கின்றார். தொண்டைமான் அநுக்கிரகம் பெற்ற திருப்பதி. அவருக்கு அவ சரக் காட்சி கொடுத்துப் போருக்குத் துணையாக நந்தியை அனுப்பியதாக ஐதிஹ்யம். ஒரு நந்தி கிழக்குப் பார்த்து இருக்கிற து. சுவாமி : தீண்டாத் திருமேனி. லிங்கத்தின்மேல் ஒரு சிறிய லிங்கம் தெரிகிறது. புராணம் அச்சிடப்பட்டுள்ளது. சுந்தரர் பாடிய தலம். சுவாமி : மாசிலாமணீசுரர்

அம்பிகை : கொடியிடை நாயகி.
சுப்பிரமணியர் பூசித்த தலம்.

வடமுல்லை வாயில் வருபசு பதியார்
படவல்குல் முல்லையங் கோதைபா லாறு. (சிவ.)

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

(சுந்தரர்)

240. தென் திருமுல்லைவாயில் : (சோழநாடு)

சீகாழிக்குக் கிழக்கே 9 மைல் தொலைவில் கடலோரத்தில் உள்ளது. தேவேந்திரன், கார்க்கோடகன், சுதர்மன் பூசித்த தலம். தேவி பஞ்சாட்சர உபதேசம் பெற்ற தலம். கிள்ளி வளவன் என்னும் சங்ககால மன்னனால் வழிபடப் பெற்றது.

வாமதேவர் என்ற பாண்டிய நாட்டு அந்தணர் தந்தை சுசாவி என்பவர் எலும்புகள் இத்தலத்தில் ரத்னமாயின. இத் தலத்தில் ஒரு சோழராசனுடைய குதிரைக் காலாற் குளம்பின் தழும்பு சிவபெருமான் திருமுடியில் உளதாயிற்று.

சுவாமி : முல்லைவனநாதர்
அம்பிகை : கோதையம்மை.
தீர்த்தம் ; சக்கரதீர்த்தம்.

முல்லை வாயிலின் முல்லை வனேசர்
நல்லணி கொண்ட நாயகி சக்கரம் (சிவ)

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்ப ருலகம் கடந்த
உமைபங்கன் எங்கள் அரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள் தங்கு மதுவில்
தெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடுந்
திருமுல்லை வாயில் இதுவே.

(திருஞா. 2-ஆம் திரு.)

241. மூக்கீச்சுரம் (சோழநாடு)

இத்தலம் திரிசிராப்பள்ளிக்கு மேற்கில் ஒரு மைல் தொலை விலுள்ளது. கரிகால்பெருவளத்தான் ஒருசமயம் சதுரங்கசேனை யுடன் சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து புறப் பட்டுத் திரிசிரபுரம் கடந்து போகையில் ஒரு கோழி வந்து அவன் ஏறியிருந்த யானையின் மத்தகத்தைக் கொத்த அது பின் வாங்கியது. யானையோ பெரிய மிருகம். கோழி சிறியது. ஆயினும் கோழி யானையை எதிர்த்ததையும், யானை பின் வாங்கியதையும் பற்றி அரசன் சிந்தனை செய்து இந்த இடம் வன்மையை அளிக்கவல்லதென்றுணர்ந்து ஒரு நகரங் கண்டு இங்கே உறைவானாயினான். இத்தலத்தையே உறை யூர் என்பார். கோழியினால் இந்தவிடம் அறியப்பட்ட மையால் உறையூர் கோழி யென்றும், கோழியின் மூக்கால் யானை கொத் தப் பெற்றவிடத்திலிருப்பது பற்றி இத்தலம் மூக்கீச்சரமென்றும் வழங்கலாயின. சிலப்பதிகாரத்திலும் இச் செய்தி காணப்பெறு கிறது.

''முரஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்''

(நாடுகாண் காதை, 247–8)

புகழ்ச்சோழ நாயனாருடைய தலம். மூவேந்தரும் சேர்ந்து தொழுத திருப்பதி. சூரவாதித்தன் என்னும் சோழ னால் சீர்திருத்தப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டதாம். கருடன் காசிபர் மனைவி கத்துரு, அவர்கள் மகன் கார்க்கோடகன்,

பூசித்த தலம். மகாவித்துவான் பிள்ளையவர்கள் பாடிய தல புராணம் உண்டு.

சுவாமி : பஞ்சவர்ணேசுவரர்.
அம்பிகை : காந்திமதியம்மை.
தீர்த்தம் : பஞ்சவர்ணதீர்த்தம்.

வாய்ந்த மூக்கீச்சரம் வருபஞ்ச வர்ணர்
காந்திமதி நாயகி கமழ்பஞ்ச வர்ணம்.. (சிவ.)

இங்குச் சிவபெருமான் உதங்கமுனிவருக்கு ஐந்து வர்ண முடைய திருக்கோலத்தை ஐந்து சாமங்களிற் காட்டியருளினர்.

சாந்தம்வெண்ணீ றெனப்பூசி வெள்ளஞ்சடை
வைத்தவர்
காந்தளாரும் விரலேழை யோடாடிய காரணம்
ஆய்ந்து கொண்டாங் கறியந் நிறைந்தாரவ
ராரிகொலோ
வேந்தன்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர்
மெய்ம்மையே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

ஒத்தூரும் உறையூருமேவினானை—ஆரூரரநெறி.
திருநா.
உறையூர் நறையூரரண நல்லூர்.அதிகை. திருநா.
கடலொற்றியூர் மற்றுறையூரவையும்—பொது. திருஞா.
உறந்தை யோங்கு சிராப்பள்ளி யுலகம்—பொது. திருநா.
உறையூர் கடலொற்றியூர் ஊற்றத்தூர்—பொது. திருநா.
உறையூரும் ஒத்தூரும் ஊற்றத்தூரும்—பொது. திருநா.

242. திருவக்கரை. (தொண்டைநாடு)

மயிலம் இரயில்வே நிலையத்திலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது. சந்திரன் பூசித்த தலம். கோயில் மிகப் பெரியது; மூலஸ்தான லிங்கம் நான்கு முகமுடையது; சதுர்முகலிங்கம். நடராசர் வசந்த தாண்ட மூர்த்தி. வக்கிரா சுரன் பூசித்த லிங்கம் கோயிலுக்குள் முன் புறத்தில் வடபால்

இருக்கிறது. வக்கிராசுரனோடு திருமால் போர் புரிகையில் சக்கரத்தை அவன் பல்லில் இடுக்கிக் கொள்ளக் கோணங்கிக் கூத்தாடி அதைத் திரும்பவும் பெற்று வக்கிராசுரனைச்சங் கரித்துப் பூசித்துப் பேறு பெற்ற தலம்.; வக்கிராசுரனைத் திருமால் சங்கரித்த போது அவனது இரத்தம் பூமியில் சிந்தாத படித் தன் நாவை நீட்டி உறிஞ்சிய காளியின் உருவம் தென்பால் உள்ளது. காளியின் வலது காதில் பிரேத குண்டலம் தொங்கு கிறது. இடது கையில் வில் இருக்கின்றது. பெரிய பிராகாரத் தில் வடக்கில் விஷ்ணு கோயில் மேற்கு நோக்கியுள்ளது. குண்டல ரிஷியின் உருவம் வடக்குப் பிராகாரத்தில் இருக்கிறது. இத் தலத்தைக் குண்டலி வனமெனவும் கூறுவர். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : சந்திரசேகரர்.
அம்பிகை : வடிவாம்பிகை.
தீர்த்தம் : சந்திர தீர்த்தம்.
திருவக் கரைவாழ் சிவன்சந் திரசே
கரரைப் பணிவக் கரையுமை சந்திரன் (சிவ)

கறையணி மாமிடற்றான் கரிகாடரங் காவுடையான்
பிறையணி கொன்றையினான் ஒருபாகமும்
பெண்ணமர்ந்தான்
மறையவன் தன்றலையிற் பலிகொள்பவன் வக்கரையில்
உறைபவன் எங்கள்பிரான் ஒலியார்கழல் உள்குதுமே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

நக்கனை வக்கரையானை நள்ளாற்றானை—நாரையூர். திருநா.
வக்கரை யுறைவானை வணங்குநீ—குடமூக்கு. திருநா.
வக்கரை யமர்வர்போலும்—நாகேச்சுரம். திருநா.
வக்கரையார் சக்கரமாற்கீந்தார்—வீழிமிழலை. திருநா.
வக்கரை மந்தாரம் வாரணாசி—பொது. திருநா.

243. வடகூர் (நடுநாடு)

சின்னபாபு சமுத்திரம் இரயில்வே நிலையத்திற்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது. சிவபெருமான் கூறாகிய

வடுக (வயிரவ)க் கடவுள் பூசித்த தலம். திருஆண்டார் கோயில் என்று வழங்குகின்றது. சுவாமியின் அறுபத்து நான்கு வடிவங்களுள் வடுகக்கோலமும் ஒன்று. எட்டுப்பைரவ மூர்த்தங்களுள் வடுகபைரவக் கோலமும் அடங்கும். அவை: அசிதாங்கபைரவர், குருபைரவர், சண்ட பைரவர், குரோதபைரவர், உன்மத்த பைரவர், கபாலி பைரவர், பீஷண பைரவர், சம்ஹார பைரவர்.

சம்ஹார பைரவரே வடுக பைரவர் என்று கூறப்படுகின்றார். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

இடப்பக்கம் நால்வர் சந்நிதி உள்ளது. பிராகாரத்தில் விநாயகர் இருக்கிறார். முருகன் திருவுருவம் அழகு வாய்ந்தது. வலப்பக்கம் அம்பாள் சந்நிதி. கார்த்திகை அஷ்டமி பைரவருக்கு விசேஷ பூசை நடப்பதுண்டு.

சுவாமி : வடுகூர்நாதர்
இறைவி : வடுவகிர்க்கண்ணியம்மை.
தீர்த்தம் : பெண்ணைநதி.
விருட்சம் : வன்னி.

வடுகூர் மேவிய வடுக நாயகர்
வடுவகிர்க் கண்ணி வடுக தீர்த்தம். (சிவ)

சுடுகூர் எரிமாலை அணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமம் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூர் அடிகளே.

(திருஞா. 1-ஆம் திரு.)

244. திருவலஞ்சுழி (சோழநாடு)

சுவாமிமலையிலிருந்து ½ மைல் தொலைவில் உள்ளது. கொட்டையூருக்கு அருகிலுள்ள இத்தலத்தில் ஒரு காலத்தில் காவிரியானது பூமிக்குட் புகுந்து சென்றது. அப்பொழுது அது மேலே ஓடி வருமாறு செய்வதற்காக ஹேரண்ட முனிவர். காவிரி பூமியிற் புக்கபிலத்தில் இறங்கினர்; உடனே காவிரி பிலத்திற் செல்லாமல் மேலே செல்லத் தொடங்கியதென்பர். பிலத்துள் புக்க காவிரி மீண்டும் மேலெழுந்து வலஞ்சுழித்து வந்த இட மாகிய காரணத்தால் இத்தலம் இப்பெயர் பெற்றது.

இத்தலத்தில் மூலஸ்தானத்திற்கு ஈசான மூலையிலுள்ள வலஞ் சுழிநாதர் என்னும் திருநாமமுடைய சிவலிங்கப் பெருமானை ஹேரண்ட முனிவருடைய திருவுருவமென்று சொல்லி அடியார்கள் வழிபட்டு வருகின்றனர்.

சுவாமி : கற்பகநாதேசுரர், கபர்த்தீசர்.

அம்பிகை : பெரியநாயகி, பிருஹந்நாயகி.

சுவாமி சந்நிதி : கிழக்கு. தேவி சுவாமியின் வலப்பக்கம்.

தலத்தின் பெயர் : சக்திவனம்.

விருட்சம் : வில்வம்.

உள்பிராகாரத்தின் ஈசானியத்தில் ஜடா தீர்த்தம் உள்ளது. மூன்றாவது வெளிப்பிராகாரத்தின் சந்நிதியின் இடப்பக்கத்தில் துர்வாசர் யாகம் செய்தார். துர்வாசர் செய்த யாகத்திற்கு வந்த தேவர்கள் தனித்தனியே லிங்கப் பிரதிஷ்டை செய்தார்கள். அவர்கள் பிரதிஷ்டை செய்த லிங்கங்கள் உட்பிராகாரத்தில் இருக்கின்றன. சுவேதவிக்னேசுவரர்—வெள்ளைப் பிள்ளையார். இவர் சுவாமி சந்நிதியில் முதற்பிராகாரத்தில் எழுந்தருளியிருக் கின்றார். தேவி வாணி கமலாம்பிகைசித்தி புத்தி ஷி விநா யகரை இந்திரன் பாற்கடல் கடைந்த பொழுது உண்டான அமிர்தத்தால் உண்டாக்கினான். அகலிகையால் உண்டான தோஷம் நீங்கும் பொருட்டு, தலந்தோறும் பூசித்து வருகையில் ஆன்மார்த்தமான இவரைச்சந்நிதியில் பூசித்துவிட்டுச் சுவாமி தரிசனம் செய்த பொழுது இவர் அங்கேயே இருந்து விட்டார். விநாயக சதுர்த்தி, இந்திரபூசை, மார்கழி மாதச் சுக்ல சஷ்டியில் மகாவிஷ்ணுபூசை மூன்றும் இங்கு விசேடமாக நடைபெறுகிறது. நிறைபணியுண்டு. ஹரித்துவஜன் காவிரியை அழைத்து வந்தவன். பிலங்களுள்ள தலங்களுள் ஒன்று. ஹேரண்டமுனிவர் கொட்டை யூர் ஹிதந்நவாச்சியம். மேலக்காவேரி வலஞ்சுழிநாதர். தக்ஷிணா வர்த்தீசுவரர். தேவியில்லை. மகா மண்டபத்தில் இடப்பக்கத் தில் மேற்றிசை நோக்கி எழுந்தருளி யிருக்கின்றனர். தேவியால் பூசிக்கப்பட்டவர். யாயாய முனிவரின் புத்திரியாக அவதரித்த அம்பிகை பூசித்து மணஞ் செய்து கொண்ட தலம்.

தப—நாச்சியார் வடக்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கிய உட்பிராகாரத்தில் ஈசானியத்திலுள்ளார். முத்தம் கொடுத்த இடம் சக்தி முத்தம். ஷி பூசைக்குச் சகாயம் செய்ய வந்த காமதேனு பூசித்த இடம் பட்டீச்சுரம். வலஞ்சுழி நாதருடைய கோயிலுக்கு வெளியே வலப்பக்கத்தில் மேற்கு நோக்கி ஹேரண்ட முநிவர் இருக்கிறார்.

சுகவ லஞ்சுழி வலஞ்சுழி வாணர்
பெரியநா யகியறு பத்தாறு கோடி. (சிவ.)

அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருநட்ட மாடி வேடம்
தொலையாத வென்றியார் நின்றி யூரும்
நெடுங்களமும் மேவி விடையை மேல்கொண்
டிலையார் படைகையி லேந்தி எங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி ஏத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே.

(திருநா. 6-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்.

காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதினானை—கோவில். திருநா.
வருமணி நீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்—
கொட்டையூர். திருநா.
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்—கொட்டையூர்
திருநா.
வலஞ்சுழியின் மன்னு மணாளன் கண்டாய்—கொட்டையூர்
திருநா.
வலஞ்சுழியான் கண்டாய் மழுவன் கண்டாய்—
கொட்டையூர். திருநா.
மணல்வருநீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்—
கொட்டையூர். திருநா.
வருதிரைநீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்—
கொட்டையூர். திருநா.
வளங்கிளர் நீர்ப்பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்.—
கொட்டையூர். திருநா.
வண்டார் பூஞ்சோலை வலஞ்சுழியான் கண்டாய்—
கொட்டையூர். திருநா.
வலஞ்சுழியெம்பெருமான்றன்னை—ஆலம்பொழில். திருநா.
வண்டலொடு மணற்கொணரும் பொன்னி நன்னீர் வலஞ்
சுழியார்—வீழிமிழலை. திருநா.
மன்னுள தேவர்கள் தேடு மருந்தே வலஞ்சுழியாய்—
புகலூர். திருநா.

வார்சடையார் வந்து வலஞ்சுழியார்—ஆரூர். திருநா.
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை—ஆரூரரதெறி. திருநா.
மறைக்காடு வாய்மூர் வலஞ்சுழியும்—அதிகை. திருநா.
மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி வாய்த்த—இடையாறு சு.
மருகலுறையு மாணிக்கத்தை வலஞ்சுழியின் மாமலையை—பொது. திருநா.
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி—பொது. திருநா.
வலஞ்சுழியே வலஞ்சுழியே என்பீராகில்—பொது. திருநா.
மைகொள் கண்டனெண்டோள்ன் முக்கண்ணன் வலஞ்சுழி பொது. சு.

245. திருவலம்புரம் (சோழநாடு)

சீகாழியிலிருந்து 8½ மைல் தொலைவில் உள்ளது. விஷ்ணு பூசித்து, வலம்புரிச்சங்கு பெற்ற தலம். பிக்ஷாடனமூர்த்தி உருவம் அழகானது.

திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கின ஏரண்ட முனிவர் இங்குக் கரையேறினார். பெரும்பள்ளம் என்று வழங்குகிறது. அவர் முடியில் உண்டான பள்ளம்போல் சுவாமி முடியிலும் பள்ளம் உள்ளது. ஏரண்ட முனிவர் பிம்பம் இருக்கிறது. ''பண் மலிந்த, மூவாத மூக்கப்'' என்ற தேவாரங்களில் சொல்லிய படி சிவபெருமான் அப்பர் சுவாமிகளைத் தாமே வரவழைத்துத் தரிசனம் தந்தனர். மூவரும் பாடிய தலம்.

வடிவள வலம்புரம் வலம்புர நாதர்.
வடுவகிர்க் கண்ணி மனமகிழ் பிரமம். (சிவ.)

தெண்டிரை தேங்கி ஓதம் சென்றடி வீழுங்காலைத்
தொண்டிரைத் தண்டார் கோனைத் தொழுதடி வணங்கி எங்கும்
வண்டுகண் மதுக்கண் மாந்தும் வலம்புரத் தடி தடிகடம்மைக்
கொண்டுநற் கீதம் பாடக் குழகர்தாம் இருந்த வாறே.

(திருநா. 4-ஆம் திரு.)

கொடியுடை மும்மதில் ஊடுருவக் குனிவெஞ்சி
லைதாங்கி
இடிபட எய்த அமரர்பிரான் அடியார் இசைந்தேத்தத்
துடியிடை யாளையொர் பாகமாகத் துதைந்தார்
இடம்போலும்
வடிவுடைமேதி வயல்படியும் வலம்புர நன்னகரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

எனக்கினித் தினைத்தனைப் புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்தமர்க் கினியவன் எழுமையும்
மனக்கினி யவன்தன திடம்வலம் புரமே.

(சுந்தரர்.)

246. திருவலிதாயம் (தொண்டைநாடு)

வில்லிவாக்கத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. வலிதாயம் வல்லீசுவரர் கோயில் விமானம் மிக்க அழகு வாய்ந்தது. பரத்வாசர், பிரகஸ்பதி, அநுமார் முதலியோர் பூசித்த தலம். தலமான்மியம் அச்சிடப் பெற்றுள்ளது. இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 14 உள்ளன. பாடி என வழங்கும்.

மகாமண்டபத்தூண்களில் அனுமார் பூசித்ததற்கு அடையாளம் உண்டு. இத்தலத்தேவாரத்தில் ''மந்தி வந்து கடு வன்னொடுங்கூடி வணங்கும் வலிதாயம்'' என்றதும் இது பற்றியே.

'வாசிதீர' என்று சம்பந்தர் இந்தத் தலத்துத் தேவாரத்தில் அருளிச் செய்தது திருவீழிமிழலையில் பாடி வாசிதீரப் பெற்றதை நினைந்து என்பது.

வலியான் பூசித்த தலமாதலின் வலிதாயம் என்று பெயர் வந்தது. வலியான் தாயம்—வலிதாயம். பரத்துவாசருக்கு வலியான் பறவை முகம். கோயிலுக்குத் தென்பால் பாரத்துவாச தீர்த்தம் என்று ஒரு குளமும், அனுமத் தீர்த்தமென்று கோயிலுக்குக் கிழக்கே ஒரு குளமும் உண்டு.

படைவீட்ட பாட்டன் ஊருக்கு வடக்கேயுள்ள சாலையின் வடபுறத்தில் ஒரு வேப்பமரத்தின்கீழ் ஒரு அம்மன் சிலையிருக் கிறது. புற்றுமூடப் பெற்றுள்ளது. இதனால் பாடி என்பதன் பெயர்க்காரணமும் தெரிகின்றது.

சுவாமி : வலிதாயநாதர்.
அம்பிகை : தாயம்மை.

தலமான்மியம் அச்சிடப் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

திருவலி தாயஞ் சேர்வலி தாயர்
வரமருள் தாயம் மன்வலி தாயம். (சிவ.)

பத்தரோடுபல ரும்பொலியம்மலர் அங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்த
உயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை
கின்றவலிதாயம்
சித்தம்வைத்தஅடி யாரவர்மேலடை
யாமற்றிடர்நோயே.

(திருஞா. 1-ஆம் திரு.)

247. வலிவலம். (சோழநாடு)

திருவாரூருக்குத் தென்கிழக்கே ஆறு மைல் தொலைவில் உள்ளது. வலியன் (கரிக்குருவி) இத்தலத்தை வலம் வந்து பூசித்தமையின் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. சூரியனும் காரணரிஷியும் பூசித்த தலம். சுவாமி சந்நிதி கட்டு மலைமேல் இருக்கிறது. தேவாரத்தை ஓதத் தொடங்குவோர் யாவரும் முதலில் ஓதும் ''பிடியதனுருவுமை'' எனவரும் திருப்பாட்டு இத்தலத்தேவாரப் பதிகத்திலுள்ளதே. இத்தலத்தின் வேறு திருநாமங்கள் ஏகசக்கரபுரம், கொன்றை வனம், வில்வவனம் முதலியன. இங்கே கோயில் கொண்டடெழுந்தருளியுள்ள திருமாலுக்குரிய திருநாமமாகிய ஏகசக்கர நாராயணப்பெரு மானென்பது இத்திருப்பதியின் பெயரால் வந்ததென்று தோற்று கின்றது. இங்கே எழுந்தருளியுள்ள சிவ பெருமான் திருநாமம் மனத்துணை நாதரென்பது. அம்பிகையின் திருநாமம் மாழை யுண் கண்ணி, மாழையொண் கண்ணி யென்பன. இவை ''மாழையுண்கண்ணி கேள்வநீ கேண்மோ'' நீளயின் மருட்டு

மாழையுண் கண்ணி'' ''மாழையுண் கண்ணி மாதுமை,'' ''மாழையொண் கண்ணி கேள்வன் (1,4,7,10) என்று வலிவல மும்மணிக்கோவையுள்ளும் ''மாழையொண் கண்ணுமையை மணந்தானை வலிவலந்தனில் வந்து கண்டேனே'' (சுந்தர. தே.) என்று தேவாரத்திலும் வந்துள்ளன.

முற்காலத்தில் இத்தலத்தில் மதிலும் அகழியும் இருந்தன வென்றும், அவற்றின் சின்னங்கள் இப்பொழுதும் காணப்படு கின்றனவென்றும் கூறுவர், ''வரைதிகழ்மதில் வலிவலம்'' ''வானணிமதில் வலிவலம்,'' மலைமலி மதில் வலிவலம்'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் ''நெடுங்கொடி நுடங்கும், செம் பொற் புரிசையும்,'' (22) என்று வலிவலமும் மணிக் கோவை நூலாசிரியரும் கூறியது அம்மதிலையே போலும். ''நிலஞ்சூழ் பரவை நிரைமலரேந்தி, வலஞ்சூழ் வரூஉம் வண்ண மேய்ப்பப், பொய்கை சூழ் வலிவலப் புகழ் நகரமைந்தோய் என்று வலிவலமும் மணிக் கோவை (25) என்பதில் அகழி கூறப்பட்டிருக்கிறது. கோயிலைச் சுற்றி அகழி நான்கு பக்கமும் இருந்தது. இப்போது மூன்று பக்கம் மட்டுந்தான் இருக்கிறது. அகழிக்குச் சூரிய தீர்த்தம் என்ற பெயர் உள்ளது. இத்தலத்தின் தெற்கெல்லையில் வெண்ணாற்றின் பிரிவாகிய வெள்ளாறு உள்ளது.

சுவாமி : மனத்துணை நாதர், ஹிருதய கமலநாதர்.
அம்பிகை : மாழையுண்கண்ணி, மாழையொண்கண்ணி
தீர்த்தம் : சக்கர தீர்த்தம்.
விருட்சம் : புன்னை. (கொட்டையில்லாத காய்).

வாழும் வலிவலம் மனத்துணை நாதர்
மாழையங் கண்ணி மகிழ்சூழ் சக்கரம். (சிவ.)

ஒல்லையாறி உள்ளம்ஒன்றிக் கள்ளம்ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை அகற்றி
நல்லவாறே யுன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலம் மேயவனே.
(திருஞா. 1-ஆம் திரு.)

நல்லான்காண் நான்மறைகள் ஆயினான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன்றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலானான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேதவேள்விச்

சொல்லான்காண் சுடர்மூன்றும் ஆயினான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வானீய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண் அவனென் மனத்துளானே.
(திருநா. 6-ஆம் திரு.)

ஊனங் கத்துயிர்ப் பாய்உல கெல்லாம்
ஓங்கா ரத்துரு ஆகிநின் றானை
வானங் கத்தவர்க் கும்அளப் பரிய
வள்ளலைஅடி யார்கள் தம்உள்ளத்
தேனங் கத்தமு தாகஉள் ளூறும்
தேச னைத்திளைத் தற்கினியானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ வந்தனில் வந்து கண்டேனே.
(சுந்தரர்)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வானவனை வலிவலமு மறைக்காட்டானை—கஞ்சனூர். திருநா.
மறைக்காடும் வலிவலமு மன்னினானை—நள்ளாறு. திருநா.
மறைக்காட்டார் வலிவலத்தார் வாய்மூர் மேயார்—
வீழிமிழலை. திருநா.
வலிவலமும் தேவூரு மன்னியங்கே யுறைவானை—
நாகைக்காரோணம். திருநா.
வலிவல மாற்பேறு வாய்மூர் வைகல்—பொது. திருநா.

248. திருவல்லம் (தொண்டைநாடு)

இத்தலம் தொண்டை நாட்டைச் சேர்ந்த 32 சிவ புண்ணிய க்ஷேத்திரங்களிலே ஒன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இவ்வூருக்குத் தீக்காலி வல்லமென்று பெயரிருந்ததாக இக்கோவிலிலுள்ள அனேக கல்வெட்டுக்களினால் தெரிய வருகின்றது. அந்நாளிலே இத்தலமானது சிலகாலம் வரையில் இதற்கு மேற்கிலேயிருந்த பாணபுரம் என்பதைச் சேர்ந்திருந்தது. திருவல்லமென்பது இவற்றிற்குப் பின்னிட்டு ஏற்பட்ட பெயர்.

இத்தலம் சென்னை இராஜதானியிலே, வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த குடியேற்றம் தாலுக்காவிலே உள்ள ஒரு சிறிய ஊர். இத்தலமானது சென்னையிலிருந்து பெங்களூருக்குப் போகும் வண்டிப்பாதையிலே 76 வது மைலிலும், இருப்புப் பாதையிலே 71 வது மைலிலுமாக அமைந்திருக்கின்றது. இருப்புப் பாதையானது இத்தலத்தின் வழியாகச் சென்றும், அதன் நிலைய மானது இத்தலத்துக்கு 1½ மைல் தூரத்திலே அமைந்திருக்கின்றது. அதன் பெயர் திருவலம். அவ்விடமிருந்து இத்தலத்துக்கு வர பகற்காலங்களிலே மாத்திரம் ஒற்றை மாட்டு வண்டிகள் கிடைக்கும்.

இத்தலமானது பெண்ணை ஆற்றின் மேற்குக் கரையிலே அமைந்திருக்கின்றது. இது நீர்வள நிலவளங்களிலே சிறந்தது. இது ஆற்றங்கரையோரமாக இருப்பதினாலே இங்கே கோடை காலங்களிலே வெயில் சிறிது அதிகமாகவும் காணப்படுகின்றது. இந்த ஆற்று நீரானது உடல் நலத்தைத் தரக்கூடியது. அதற் காகவும் சுவாமியின் தரிசனத்திற்காகவும் முன்னூரில் இங்கே சிலர் வந்து தங்குவார்கள்.

இத்தலம் ஒரு சிறிய கிராமமாகையினாலே அதிகமான ஜனத்தொகை கிடையாது. யாத்திரை வாசிகள் தங்குவதற்காக இத்தலத்திலே நான்கு தர்ம சத்திரங்கள் இருக்கின்றன.

சென்னை: சித்தூர்பஸ் ஆற்காடு—குடியேற்றம் பஸ் இவை யெல்லாம் இத்தலத்தின் வழியாகச் செல்லுகின்றன.

கோவிலானது இத்தலத்தின் வடகோடியிலே அமைந்திருக் கின்றது. இத்தலத்தின் கிழக்கே நான்கு மைல் தூரத்திலே யுள்ள லாலாப்பேட்டை என்னும் கிராமத்திற்கு அருகிலே, ஸ்தல புராணத்திலே குறிப்பிடுகின்ற கஞ்ச ராக்ஷஸன் மலையானது இருக்கின்றது. அதன்மீது ஓர் சமநிலமும் அதிலே ஓர் குளமும் இருக்கின்றது. அந்தச் சமநிலத்தின் ஆக்னேய மூலை யிலே மண்ணைத் தோண்டினால் ஆவுடையாளரம் போன்ற கற்கள் இப்பொழுதும் அகப்படுகின்றன. அவற்றிலே சில ஒன்றன் மீதொன்றாய் மூன்று அந்தஸ்துகளையுடையனவாக வுமிருக் கின்றன. அவற்றை இத்தலத்திலேயுள்ள சிலர் பார்வத லிங்கம் என்கின்றனர்.

மலைய நாட்டிலே வசித்து வந்த திருச்சிராப்பள்ளி வாசி யான ஸ்ரீலஸ்ரீ சிவஞானம் பிள்ளை அவர்கள் அந்த மலையிலே

ஒரு ஜோதி விளங்கி வருவதாகவும் அதைக் கண்ணுறும் பொருட்டு கி.பி. 1938 — ஸ்ரீ வெகுதான்ய ஆண்டு முதற் கொண்டு பிரதி சித்ரா பௌர்ணமியையும் ஓர் திருவிழாவாக அம்மலையின் மீது கொண்டாடி வருகின்றார். அப்பொழுது அநேக ஜனங்கள் அங்கே வருகின்றார்கள். அந்தப் பௌர்ணமி மாத்திரமே யல்லாமல் மற்ற பௌர்ணமிகளிலேயும் கூட இந்த ஜோதி தரிசனத்திற்காக சில பக்தர்கள் இம்மலைக்கு விஜயம் செய்கின்றனர்.

இத்தலத்திற்கு மேற்கிலே பாணபுரமானது இருந்ததாக மேல்பாடி சோமநாதீச்சுவரர் கோவிலுள்ள ஒரு கல்வெட்டினால் தெரிய வருகின்றது. அங்கே மிகப் புராதனமான ஓர் கிராம நத்தமிருக்கின்றது. அதன் அமைப்பாலும் மற்றுள்ள சில காரணங்களினாலும் அவ்விடத்திலே முன்னாளில் கோட்டை கொத்தளங்களிருந்ததாக நினைப்பதற்கிட முண்டாகின்றது. ஆனால் அவற்றின் சின்னங்கள் யாவும் இப்பொழுது அழிந்து விட்டிருக்கின்றன. அந்த இடமானது சமீப காலம் வரையில் இவ்வூரிலே வாழ்ந்து வந்த குடாருவம்சமென்று ஓர் பாளயப் பட்டுக்காரர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

இத்தலக் கோவிலானது இப்பொழுது சுமார் ஐந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பைக் கொண்டிருக்கின்றது. இக் கோவில் ஊரின் தெருமட்டத்திற்கு மூன்றடி பள்ளத்திலே கட்டப் பட்டிருக்கின்றது. இது ஓர் வியப்பு. நாற்புறமும் உயரமான மதில்களைக் கொண்டிருக்கின்றது. மதிலுக்குள்ளாகச் சிறிய திருக்குளமொன்று நீராழி மண்டபத்துடனிருக்கின்றது. இதற்குக் கௌரி தீர்த்த மென்று பெயர். ஆனால் இத்தீர்த்தம் இப்பொழுது உபயோகத்திலில்லை. இந்தத் திருக்குளமானது நீராழி மண்டபத்துடனிருப்பதினாலே இதிலே தெப்போற்சவம் எப்பொழுது நடைபெற்றதென்பதை அறிவதற்கில்லை. இப்பொழுது தெப்போற்சவமானது இருப்புப் பாதையின் நிலையத்திற்கு அருகாமையிலே சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டிருக்கின்ற தாண்டவராய முதலியார் குளத்திலே நடைபெற்று வருகின்றது.

இத்தலத்துக்கு நீவாநதி என்கின்ற நதிப் பெருமையேயன்றி வேறெவ்விதமான தீர்த்தப் பெருமையுமில்லை. ஸ்தல விருக்ஷம் வில்வ மரம். அது ஸ்தல புராணத்தினாலேற்படுகின்றது. ஆனால் இக்கோவிலுக்குள்ளே இப்பொழுது வில்வ மரமில்லை.

இக்கோவிலுக்கு சுவாமியினுடைய கர்ப்பக்கிரகம் ஒன்றே அடிப்படையானது. மற்றவை யாவும் அதற்குப் பிறகே ஏற் பட்டிருக்கின்றன. சுவாமியின் கர்ப்பக்கிரகத்தையும் அதற்கு எதிரி லுள்ள மகாமண்டபத்தையும் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தாசி மகன் அரிதீரன் என்பவன் புதுக்குவித் திருப்பதாக இக்கோயிலுக்கு ஈசான்ய பாகத்திலே சுமார் ஒரு மைல் தூரத்திலே ஆற்றிலே யுள்ள கற்பாறைகளில் ஒன்றின் மீது வெட்டியிருக்கும் சாசனத்தினால் தெரிய வருகின்றது.

சுவாமியின் ஆதிப்பெயர்கள்:

இச்சுவாமிக்கு ஆதியிலே நீக்காலி வல்லமுடைய பரமேசு வரர், நீக்காலிப் பெருமானடிகள், திருவல்லமுடையார், திருவல்ல முடைய மஹாதேவர், திருவல்லமுடையநாயனார், இவ்வாறான பெயர்களையே இக்கோவிலிலிருக்கும் கல்வெட்டுக்களிலெல்லாம் உபயோகப்படுத்தியிருக்கின்றனர். அவை யாவும் இத்தலப் பெயரினின்றேற்பட்டவைகள். வில்வநாதேசுவரர் என்பது பிறகாலத்திலே ஸ்தலபுராணத்தினாலேற்பட்டிருக்கும் பெயரா கின்றது.

சுவாமியின் பெருமை:

புராணக் கதையிலே இத்தலத்தை ஓர் வில்வாரண்யமாக எடுத்துக் கொண்டிருப்பதினாலே அவ்வரண்யவாசியானவர் வில்வத்திற்கு நாதனாக வில்வநாதேசுவரர் என்கின்ற திருநாமம் பெற்றிருக்கின்றார்.

நாதன் என்பதற்குத் தலைவன் என்பது ஒருபொருள். வில்வ மானது சிவபெருமான் கையிலே தரித்துக் கொண்டிருக்கின்ற திரிசூலத்தின் குறியாகையினாலும், திரிசூலமானது இச்சை, கிரியை, ஞானம் என்னும் முத்தலை வேலாகின்ற படியினாலும் அந்த வில்வத்திற்கு நாதனாய் விளங்குகின்றவர் திருவல்லத்திலே ஆக்கல், காத்தல், அழித்தல் என்கின்ற முத்தொழிலையும் செய்து வருகின்றார் என்பதை அறிவிக்கின்றது. அதனாலே அவர் ஆன் மாக்களுடைய குறைகளை எல்லாம் நீக்கி அவற்றை ரக்ஷிக்கின்ற நாதனாகின்றார்.

அவற்றை ரக்ஷிக்கின்ற வழியிலே கடைசித் தொழிலே பிரதானமாகின்றது. அதற்காக அவர் ஆன்மாக்களிடமாயுள்ள பாபங்களை, எல்லாம் அழித்து அவற்றிற்கு மோக்ஷ பதவியை அளிக்கின்றவராய் இத்தலத்திலே அமர்ந்திருக்கின்றார். இந்தக் கடைசித் தொழிலே இங்கே ஞானம் எனப்படுகின்றது. அதை

அறிவிப்பதற்காகச் சமயாசாரியர்களில் ஒருவரான திருஞான சம்பந்த ஸ்வாமிகள் இந்தத் திருஞான சம்பந்தமான தலத்தைக் குறித்துப் பாடியுள்ள க்ஷேத்திர பதிகங்களிலே முதற் பதிகத்தை 'எரித்தவன் முப்புரமெரியின் மூழ்க' வென்று ஞான மார்க்கத் தைப் போதிப்பவராய் ஆரம்பித்திருக்கின்றார்.

திருவல்லமெனும் க்ஷேத்திரப் பெயரும் இக்கருத்தையே அறிவிக்கின்றது. இவற்றால் திருவல்லமானது ஓர் முக்தி ஸ்தல மாகின்றது.

அம்பாள் பெருமை:

அம்பாள் சந்நிதி சுவாமி சந்நிதி யேற்பட்ட நெடுநாட்களுக் குப் பிறகு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. அம்பாள் பெயர் தனு மத்யாம்பாள்; தனு என்பதற்கு உடல் எனப்பொருளா கின்றது. மத்தி என்பது நடு. ஆகையினாலே அவர் சுவாமி யினுடைய உடலிலே நடுப் பாதியாகின்றார். ஆகையினாலே அவள் அர்த்த நாரீசுவரி.

காஞ்சீ காமகோடிபீடம் ஆதி சங்கராசாரிய சுவாமிகள் இவ்வம்பாளுக்கு யந்திரஸ்தாபிதம் செய்திருக்கின்றாராம். அதனால் அப்பீடத்திற்கு வருபவர்களெல்லாம் இக்கோவிலுக்கு விஜயம் செய்கின்றார்கள்.

இவ்வம்பாள் தம்மைப் பணிபவரின் குறையை நீக்குகின்ற சக்தி வாய்ந்தவள் அதை இத்தலப் பதிகத்திலே காணலாம்.

''சார்ந்தவர்க்கின்பங்கள் தழைக்கும் வண்ணம்,
நேர்ந்தவ னேரிழை யோடுங் கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்த வனுறைவிடந் திருவல்லமே''— திருஞான சம்பந்தர்.

இதிலே நேரிழை என்பது பெண். நேர்தலென்பது ஈதல். தேர்தல் என்பது அறிதல். இவற்றால் இங்குள்ள சிவபெருமான் தம்மை நாடிப் பணிபவர்களுக்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம் கொடுக்கின்ற மங்கையை யுடையவர் என்பது கருத்தாகின்றது. அதனாலே இவ்வம்பாள் ஈதலையே பெருமையாகக் கொண்ட வளாகின்றாள் அதனால் இவ்வம்பாள் இஷ்ட காம்ய சித்தியை யளிப்பவளாகின்றாள்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை அரசாங்க சர்வதலாசாலையிலே ஆந்திர பாஷா பண்டிதராக

இருந்த வரகவி கோக்கண்டம் வேங்கடரத்தினம் பந்துலு அவர் களுக்கு மேகநோய் தீர்த்த பெருமை வாய்ந்தவள்.

வேறு கோவில்கள்

கல்யாணசுந்தரர், அவர் பிராட்டியார், கூத்தப்பெருமான் என்கின்ற நடராஜப் பெருமான் இவர்களுக்காக இக்கோவி லுள்ளே தனிக் கோவில்களிருக்கின்றன.

சண்டேசுவரருக்காகத் தனிக் கோவிலொன்று கட்டியிருக் கின்றனர். இவர் ஏற்பட்ட பிறகு இப்பெருங் கோலிவின் வியவஹாரங்கள் யாவும் இத்தேவர் பெயராலே நடைபெற்று வந்திருப்பதாகச் சிலாசாசனங்களினால் தெரிய வருகின்றன.

விநாயகர், 1008 சிவ லிங்கம் (ஸஹஸ்ரலிங்கம்) முருகப் பெருமான், சூரிய பகவான், வீரபத்திரர், நால்வர், சனீசுவர பகவான், காளபைரவர் இவர்களுக்கெல்லாம் தனியிடங்களும், கோவில்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுளே நால்வரின் கோவில் மிகவும் புதுமையானது. சுமார் 79 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப் பட்டது. நவக்கிரகங்களே சுவாமி சந்நிதானத் திற் கெதிரேயுள்ள மண்டபத்திலே ஓர்மேடைமீது எழுந்தருளு வித்திருக்கின்றனர்.

இதற்கு முன்பாகக் கூறியுள்ள கிராம நத்தத்திற்கும் இத் தலத்துக்கும் இடையிலே ஏகவல்லி அம்மன் என்கின்ற கிராம தேவதையின் கோவிலொன்று இருக்கின்றது. அதுவும் இக் கோவிலைப் போலவே மிகவும் புராதனமானது. இவ்வம்மன் ஒரு மானிடக்குடலை மாலையாக அணிந்திருப்பதினாலே இவள் ஆதிதிக்காலி வல்லியாவாள். இத்தத் தேவதையின் பெயரி லிருந்த இத்தலத்துக்கு முன்னாளிலே தீக்காலி வல்லமென்ற பெயரை வழங்கியிருக்கின்றார்கள்.

இவ்வம்மையாரும் ஓர் பராசக்தியாகையினாலே இஷ்ட காம்யசித்தியை தரக்கூடியவளாகின்றாள். அதனாலே இந்தத் தேவதை இவ்வூரிலிருக்கும் கைக்கோளர்களுக்கும், வன்னிய குலத்தவர்களுக்கும் ஓர் முக்கியமான தெய்வமாக இருக் கின்றாள்.

வேறு சிலருக்கும் இத்தேவதையானவள் ஒரு குல தெய்வம் போலே விளங்கி வருகின்றாள்.

இக்கோவிலுக்கு அருகிலுள்ள பூராதன நத்தத்திலே வாழ்ந்து வந்த குடாருவம்சத்தினர் இத்தேவதையின் ஆதர

விலேயே அங்கே வாழ்ந்திருந்தனர் போலும். குடாரு என்பது குடர் என்பதன் திரிபுபோலும். இத்தேவதை அணிந்திருக்கும் குடல்மாலை அதற்குச் சான்றாகின்றது. இத்தேவதையை இப் பொழுது பூசை செய்பவர்கள், பிராம்மணர்களே. இந்த வழக்கம் மைசூர் சாமுண்டீசுவரி கோவிலின் வழக்கத்தை ஒத்திருக்கின்றது.

இக்கோவிலிலே உயர்தரமான சித்திர வேலைகள் எதுவும் இல்லை. ஆனால் சுவாமியின் கர்ப்பக்கிரகம் அம்பாளின் கர்ப்பக்கிரகம் இவையிரண்டும் மிக வேலைப்பாட்டுடன் கட்டப் பட்டிருக்கின்றன. இக்கோவிலேலே எவ்விதமான வர்ண வேலை களும் கிடையாது.

சுவாமியின் சந்நிதி கிழக்கு நோக்கியும் கோபுர வாயி லானது தெற்கு நோக்கியுமிருப்பதினாலே சில கோவில்களைப் போலே கோபுரவாயிலிலிருந்து சுவாமியின் தரிசனம் கிடைக்க மாட்டாது. இதுஓர் சிற்ப அமைப்பு. அம்பாள் அர்த்தநாரி என்று பெயர் பெற்றிருந்தும் சுவாமி சந்நிதியிலே அமர்ந்திராமல் வேறுஒரு தனியிடத்திலே அமர்ந்திருப்பது ஓர் சிற்ப அமைப்பாம்.

விநாயகர் இக்கோவிலிலே வடதிசையை நோக்கி வீற்றிருப் பது உலகம் கடத்தலைக் குறிப்பிடுமாம்.

நந்தியானவர் சுவாமியை நோக்கிய வண்ணமிராமல் இயற்கைக்கு மாறாக இக்கோவிலிலே முகம் திரும்பியிருக்கின்றார். இதைப் புராணக் கதையிலே கஞ்சன் திரும்பி வராமலிருக்க காவல் காப்பதாக கூறுகின்றனர்.

சுவாமியின் சந்நிதிக் கெதிரிலே சமாதியொன்றிருக்கின்றது. அங்குள்ள தீபஸ்தம்பத்திலே சிறிது நேரம் ஓர் விளக்கு எரி கின்றது. இதைச் சில பெரியோர்கள் அங்கே ஓர் சித்த புருஷர் ஜீவதசையுடன் வாழ்ந்து வருவதாகக் கூறுகின்றனர். அவர் சிலருக்கு மாத்திரம் யாதாயினும் ஒரு காலத்திலே தரிசனம் கொடுத்துக் கொண்டு வருகின்றார்.

சுவாமியின் பிராகாரத்திலே தென்மேற்கு மூலையிலே விஷ்ணுவின் கற்சிலை யொன்று நின்றபடியாயிருக்கின்றது. இவரே இக்கோவிலிலிருக்கும் கல்வெட்டுக்களிரண்டிலே குறிப் பிடும் தீக்காலி ஆள்வாரென்னும் சுருமாணிக்க தேவரென்று மதிக்கப் படுகின்றார்.

ஆனால் அவருக்குப் பக்கத்தில் நாச்சியார் இப்பொழுது இல்லை. அவரிருந்த இடமே மாறிவிட்டிருக்கின்றது. சுவாமி,

அம்மன் இவர்களிருவருக்கும் இரண்டு இரதங்களிருக்கின்றன. அவற்றிலே வருஷாவருஷம் இரதோற்சவம் நடைபெறுகின்றது.

மாசி மாதத்திலே நிகழ்கின்ற பிரமோற்சவ காலங்களிலே உபயோகப் படுத்துவதற்காக வேண்டிய வாகனங்களெல்லா மிருக்கின்றன. அவற்றுளே ரிஷப வாகனம் ஒன்று மட்டும் வெள்ளியிலிருக்கின்றது. வெள்ளி மூலாம் பூசப்பட்ட தொட்டி யொன்றிருக்கின்றது. சிறிய பிரபை ஒன்றும் பெரிய பிரபை ஒன்றும், ரிஷபத்தடி யொன்றும் ஆகிய இவை மூன்றும், வெள்ளியிலிருக்கின்றன. இவை தவிர மற்ற வாகனங்கள் முதலியன மரத்தால் செய்து வர்ணமிடப்பட்டிருக்கின்றன. மிகவும் விசேஷமான நகைகள் யாதொன்றுமில்லை.

இத்தலம் ஆதியிலே வில்வாரண்யமாக இருந்ததாகவும் அக் காட்டின் வழியே காசிக்ஷேத்திரத்தினிடமாக ஓடுகின்ற கங்கா நதியிலே சேர்த்து விடுவதற்காக எடுத்துக் கொண்டுபோன அஸ்திகளானவை இவ்வரண்யத்திலிருந்த ஒரு குளத்தினிடமாகக் கொண்டு வந்து அகஸ்மாத்தாகப் பார்க்கப்பட்ட பொழுது, மல்லிகைப் புஷ்பங்களாக மாறுபட்டிருந்ததாகவும் அவற்றைக் காசிக்கு எடுத்துக்கொண்டு போய் அங்கே பார்த்த பொழுது அஸ்திகளாகவே காணப்பட்டமையால் அவற்றைதிருப்பி எடுத்து வந்து இங்கிருந்த அந்தக் குளத்திலேயே சேர்த்து விட்டதாகவும் அதனால் இத்தலமானது காசியைவிட உயர்ந்த க்ஷேத்திரமெனவும் மதிக்கப்படுகின்றது.

சுவாமியின் திருமஞ்சனத்திற்காகக் கஞ்சன்மலையிலிருந்து நாள்தோறும் ஜலம் கொண்டு வருவது வழக்கமாம். அவ்வாறாகக் கொண்டுவரும் அருச்சகருக்கு அம்மலையிலே வாழ்ந்து வந்த கஞ்சன் என்னும் அரக்கன் தொல்லைகள் விளைவித்து வந்ததாகவும், அத்தொல்லைக்காக ஒருநாள் அவர் சுவாமியிடம் முறையிடவே, அவர் தமது வாஹனமாகிய நந்திதேவருக்கு அவ்வரக்கனை ஸம்ஹரிக்கும்படி கட்டளையிட அவர் அக் கட்டளைப்படி அவனைத் தமது கொம்புகளினாலே குத்திக் கொன்றுவிட்டதாகவும், அவ்வரக்கன்தன் கதியைக் குறித்து சுவாமியை வணங்க அவர் மனமிரங்கி அவனுக்கு மோக்ஷமளித்ததாகவும் கூறப்படுகின்றது.

அதன் பிறகு சுவாமி இத்தலக் கோவிலின் ஈசான்ய பாகத்திலிருந்து கொண்டு தமது திருமஞ்சனத்திற்காக நதியை நீவா என்று வரவழைத்ததாகவும் அதனால் வில்வாரண்யமாக இருந்த

இடம் இப்பொழுது நீவாநதியாக மாறியிருப்பதாகவும் கூறப் படுகின்றது.

நீவா(நிவா)நதி என்பது இப்பொழுது இவ்வூரின் ஓரமாய் சென்றுக் கொண்டிருக்கின்ற பொன்னை யாறாகின்றது. இவ் வாற்றிற்கு ஆதியிலே நுகாவாறு என்று பெயரிருந்ததாக இத் தலத்துக்குத் தெற்கிலே இரண்டு மைல் தூரத்திலே இப்பொழுது பாழடைந்து கிடக்கும் அகத்தீசுவரர் கோயிலின் தெற்குச்சுவரி லிருந்த ஒரு கல்வெட்டினாலும் இத்தலத்துக்கு வடக்கே 7 மைல் தூரத்திலே இருக்கும் மேல்பாடி என்னும் கிராமத்திலுள்ள அருஞ்சிகை ஈசுவரர் (சோளேசுவரர்) கோயிலிலே யிருக்கும் இரண்டு கல்வெட்டுக்களினாலும் தெரிய வருகின்றன.

நுகம் என்பதற்குக் கணைய மரம் என்பது ஒரு பொருள், கணையம் என்பது யானை கட்டும் ஸ்தம்பமாகையினாலே அது ஓர் பிரம்மாண்டமான விருக்ஷமாகின்றது. அதனாலே இவ்வாறானது ஆதியிலே ஓர் அடர்ந்த காடாக இருந்ததாகத் தெரிய வருகின்றது.

தெற்கே பொதிகை மலைக்கும் வடக்கே காசிக்குமாகப் போய்க் கொண்டிருந்த ராஜபாட்டையான ஜனநாதப் பெருவழியானது இத்தலத்தின் வழியாகப் போய்க் கொண்டிருந்ததாக இக்கோவில் லிருக்கும் சிலகல்வெட்டுக்களினாலே தெரிய வருகின்றது. அந்தப் பெருவழியிலே இத்தலமானது அந்நாளிலே ஓர் யாத்ரா க்ஷேத்திரமாக இருந்தது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்த இக்கோவிலின் வரு மானத்திலே யாத்ரா மார்க்கம் வருகிறவர்களின் போஜனத் திற்காக வருஷம் 600 காடி நெல் சுவாமி போகமாக ஒதுக்கப் பட்டிருந்ததாக ஒரு கல்வெட்டினால் தெரிய வருகின்றது. இக் கோவிலிலே நித்திய கருமங்கள் நான்கு கால பூசையுடனும் மற்றுமுள்ள நைமித்திக கருமங்கள் உற்சவாதிகளின் மூலமாகவும் நெடுங்காலமாக நடை பெற்று வருகின்றன.

புராணக்கதையைக் குறித்த ஐதிகங்கள் நடைபெறுபவை:

புராணக் கதையிலே கஞ்சனுக்கு மோக்ஷமளித்ததாகக் கூறு கின்ற காட்சியை இவ்வூர் சுவாமியானவர் தை மாதத்திலே ஒரு நல்ல நாளன்று கஞ்சராக்ஷஸன் மலையைப் பிரதக்ஷிணம் செய்து வரும் பொழுது அந்த மலையை நோக்கி நின்று செய் கின்ற தீபாராதனையின் மூலம் காட்டுகின்றார்.

வில்வாரண்யத்திலிருந்த குளத்தினிடமாகக் கொண்டு வந்த அஸ்திகளானவை புஷ்ப மலர்களாக மாறுபட்ட விசேஷதை ஒட்டி பிரமோற்சவ காலத்திலே கடைசி நாளாகிய மாசி மகத்தன்று காலையிலே தீர்த்தவாரி உற்சவம் நடைபெறு கின்றது. அந்தக் குளமானது இப்பொழுது ஓர் ஆறாக மாறி இருப்பதினாலே அந்த ஆற்றிலே அந்த உற்சவம் நடை பெறுகின்றது. அப்பொழுது சுவாமி அம்மன் இவர்களிருவரையும் அந்த ஆற்றிலே நீரோட்டமிரா விடில் அதிலே யுள்ள ஊற்றிலே நீராட்டுவார்கள். அவற்றுடன் அங்கே சதிபதிகளிருவரும் நீராடுவது, மோக்ஷத்தைப் பெறத் தக்கது.

சோம வாரத்தன்று சுவாமிக்கு இக்கோவிலிலே கிடைக் கின்ற மஹாவில்வங்களினால் அர்ச்சனை செய்வதும், சுக்கிர வாரத்தன்று அம்பாளுக்கு குங்குமார்ச்சனை செய்வதும், விசேஷமானவை.

இந்தக் கோவிலிலே அனேக கல்வெட்டுச் சாஸனங்களிருக் கின்றன. அவையே இதன் சரித்திரமாகின்றன. அவை தவிர வேறு கிரந்த மெதுவுமில்லை. அவைகளை எல்லாம் சென்னை அரசாங்கத்தார் பரிசோதித்து அவற்றுள்ளே சிலவற்றை அச் சிட்டிருக்கின்றனர். மற்றும் சில அச்சிட வேண்டியவை களுமிருக் கின்றன.

இந்தக் கல் வெட்டுக்களினாலே சுவாமியின் கர்ப்பக் கிரகம் புதுக்கு வித்தகாலம் தெரிய வருகின்றது. இக்கோவிலின் ஆதி காலத்திய ஆதாயச் செலவுகள் தெரிகின்றன. திரு உண்ணாழிக் காகவும், திருவிளக்கெரிப்பதற்காகவும் மற்ற செலவுகளுக்காகவும் விடப்பட்டிருந்த ஊர்மான்யம், நிலமான்யம், இறைமான்யம், முதலியவைகளெல்லாம் தெரியவருகின்றன. அவற்றுளே அடி யிற் கூறுபவை சில.

(1) குவலாலபுரம் என்னும் கோலாரைத் தலைநகரமாகக் கொண்டு வரும் வழி, பன்னீராயிரம் கிராமங்களை அரசாண்டு வந்த கங்கா பல்லவமன்னர் விஜயநந்தி விக்ரமவர்மருடைய அரசாட்சியின் அறுபத்திரண்டாவது ஆண்டிலே சுவாமியின் கர்ப்பக் கிரகமும், அதினெதிர் மண்டபமும் புதுக்கு வித்திருக் கின்றார்கள். இந்தக் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் முடி விற்குச் சற்று முற்பட்டதெனத் தெரிய வருகின்றது. ஆதி கர்ப்பக்கிரகம் ஏற்பட்ட காலம் இன்னதெனத் தெரியவில்லை. அதை அப்போதைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பென்று

வைத்துக் கொண்டால் இக்கோவில் ஏற்பட்டு இப்பொழுது 1547 ஆண்டுகளாயிருக்கலாமென்று மதிக்கப்படுகின்றது.

(2) ஐம்பூணி என்ற அம்முண்டி, விளத்தூர், அமரூன்றி, மங்கலம், ஆகிய இம்மூன்று ஊர்களின் வருமானம் 2000 காடி நெல்லும், 20 கழஞ்சுப் பொன்னும், மேலே குறிப்பிடும் அரசருடைய 17ஆது அரசாட்சி ஆண்டிலே, இக்கோவில் செலவு களுக்காகத் தேவர் போகமாக விடப்பட்டது.

இவ்வருமானத்திலே தேவாரப் பதிகம் பாடுவோர்க்காக ஓர் பாகம் நெல் ஒதுக்கியிருந்ததாக இச்சாஸனம் அறிவிக்கின்றது. இதனால் கோவிலிலே தேவாரம் பாடுகின்ற முறைமையானது ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஏற்பட்டிருப்பதாகவும் அவ் வாறானவைகளிலே இக்கோவிலின் சாசனமானது எல்லாவற்றிற் கும் முற்பட்டதாகவும் தெரிகின்றது.

(3) கோராஜகேசரி வர்மர் என்கின்ற முதலாம் ராஜராஜ தேவருடைய அரசாட்சியின் ஆண்டு 7ஆவதிலே விஷு ஆண்டு ஐப்பசித் திங்கள் பௌர்ணமியும், ரேவதியும் கூடின சந்திர கிரஹணத்தன்று இக்கோவிலிலுள்ள தீக்காலி ஆழ்வார்க்கு மது ராந்தகன் கண்டராதித்தன் என்னும் ஓர் அரச குலத்ததவர் ஆயிரம் கடாபிஷேகம் செய்வித்திருக்கின்றார். அந்தக் கிரஹணம் கி.பி. 26-9-991-ல் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தத் தீக்காலி ஆள்வார் சுவாமியின் பிராகாரத்திலே வடமேற்கு மூலையிலே இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்றார். இவர் பெயர் கருமாணிக்கத்தேவரென்று மற்றொரு சாசனத் தினால் தெரிகின்றது.

(4) மேலே குறிப்பிடும் 7ஆவது ஆண்டிலே இக்கோவிலின் கூத்தப் பெருமானடிகளுக்கு (நடராஜப் பெருமானுக்கு) உமா பட்டராகி என்கின்ற அம்மையாரை எழுந்தருளிவித்திருக்கி கின்றனர்.

(5) கோப்பரகேசரி வர்மர் என்கின்ற ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவருடைய அரசாட்சியின் 3-ஆவது ஆண்டிலே இக்கோவிலின் திருவுண்ணாழிபட்டர்கள் வேதமும் ஆகமமும் தெரிந்த தீக்ஷி தரான ஓர் சிவப்பிராம்மணரை நியமித்து அவரால் இக்கோவிலின் மஹாதேவர்க்குப் பூசை நடப்பித்து வந்திருக்கின்றனர். இக்காலம் கி.பி. 1053-ஆம் ஆண்டென்று தெரிகின்றது.

இதனால் ஆகம முறைப் படியான பூசையானது இக்

கோவிலிலே 11-ஆவது நூற்றாண்டின் மத்தியிலிருந்து ஏற்பட்டிருப் பதாகத் தெரிகின்றது.

(6) மேலே குறிப்பிடும் அரசருடைய அரசாட்சியின் ஆண்டு 4-ஆவதிலே இக்கோவிலிலே சண்டேசுவரர் கோவிலை எடுப்பித் திருக்கின்றனர்.

(7) கோப்பரகேசரி வர்மர் என்கின்ற ஸ்ரீ அதிராஜேந்திர தேவருடைய அரசாட்சியின் ஆண்டு 3ஆவதிலே இக்கோவிலி லிருக்கும் கல்யாண சுந்தர தேவர், கருமாணிக்க தேவர், இவர் களின் பிராட்டியார்கள் ஆகிய இவர்களின் திருவுண்ணாழிக்காக குக்கனூர், மேற்பாடிக்கருகிலிருந்த மந்திரம் ஆகிய இவ்விரு ஊர்களின் வருமானங்களை நியமித்தனர். இந்தக் காலம் சுமார் கி.பி. 1070 என்று தெரிகின்றது. பிரிட்டிஷ் சர்க்கார் கி.பி. 1870-ஆம் ஆண்டிலே இத் தன்மங்கள் யாவற்றையும் ஒருங்கு சேர்த்து அது முதற்கொண்டு ரூபாய்: 2283-2-0 சர் ஆக்கார் பேரீஜாக தமது கிராம வசூலிலிருந்து கொடுத்து வருகின்றனர். இதுவே இக்கோவிலுக்கு இப்பொழுதுள்ள பெரும் ஆதாயம். திருஞானசம்பந்தர் பாடியதலம்.

சுவாமி : வல்லநாதர், வில்வவனநாதர்.
அம்பிகை : வல்லாம்பிகை, தநுமத்யாம்பாள்.
தீர்த்தம் : கௌரி தீர்த்தம்.
விருட்சம் : வில்வம்.

சீர்திரு வல்லம் சிவன்வல்ல நாதர்
பேர்பெறு வாலாம் பிகைதிரு வல்லம். (சிவ.)

எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்ச டைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல் லமே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

சீக்காலி நல்வல்லமூரென வல்வினை மாய்யுமே—பூவனூர். திருநா.

சீக்காலி வல்லம் திருவேட்டியும்—அதிகை. திருநா.
ஆரூர் தில்லையம்பலம் வல்லம்நல்லம்—பொது. திருஞா.

249. திருவன்னியூர்: (சோழநாடு)

பூந்தோட்டத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ளது. அக்னி பூசித்த தலம். இது அன்னூர் என வழங்கப் பெறும்.

சுவாமி : அக்னீசுவரர்.
அம்பிகை : பார்வதி
தீர்த்தம் : அக்வி.

திருநாவுக்கரசர் பாடிய தலம்.

அவனியின் அன்னியூர் அக்கினி ஈசர்
கவுரி பார்வதி கனலோன் தீர்த்தம். (சிவ.)

காடு கொண்டரங் காக்கங்குல் வாய்க்கணம்
பாட மாநட மாடும் பரமனார்
வாட மானிறங் கொள்வர் மணங்கமழ்
மாட மாமதில் சூழ்வன்னி யூரரே.
(திருநா. 5-ஆம் திரு.)

250. திருவாஞ்சியம்: (சோழநாடு)

நன்னிலத்திலிருந்து மேற்கே ஆறு மைல் தொலைவில் உள்ளது. திருமகள் திருமாலை வாஞ்சித்து (விரும்பிச்) சிவபூசை செய்து பெற்றமையால் ஸ்ரீ வாஞ்சியம் என்று வழங்கலாயிற்று. திருவிழையூர் என்றும் வழங்கப் பெறும். இத்தலம் காசிக்கு நிகரான ஆறுதலங்களுள் ஒன்று. கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்தலத்திலுள்ள குப்த கங்கையில் நீராடுதல் விசேடமாகும். கங்கா தேவி தன்னிடம் நீராடுவோரால் தனக்கு ஏற்பட்ட பாவங்களைப் போக்கிக் கொள்ள விரும்பி இத்தலத்திற்கு இரகசியமாக வந்து இங்குள்ள முனிதீர்த்தத்தில் நீராடித் தனக்குற்ற பாவங்களைப் போக்கிக் கொண்டமையால் அன்று முதல் முனிதீர்த்தம் குப்த கங்கையென்று வழங்கலாயிற்று. இயமன் வழிபட்டுப் பேறு பெற்றதலம். காசியினும் சிறந்த தலமாதலின் இத்தலத்தில் இறப்பவர்களுக்கு இயமவாதனை யில்லை. சுவாமிக்கு இயமவர்கனம் உண்டு. இத்தலத்தில் இயமனுக்குத் தனிக்கோயில் இருக்கிறது. பிரமன், பராசரர், அத்திரி, யக்ஞபதி ஆகியோர் பூசித்த தலம். முத்தி தரும் தலங்களுள் ஒன்று.

சுவாமி : வாஞ்சிலிங்கேசுவரர்.
அம்பிகை : மங்களநாயகி.

தீர்த்தம் : குப்த கங்கை.
விருட்சம் : சந்தனம்.

திருவாஞ் சியம்சேர் சிவன்வாஞ் சிநாதர்
நரர்வாழ வந்த நாயகி முனியாம். (சிவ.)

படையும் பூதமும் பாம்பும்புல் வாயதள்
உடையும் தாங்கிய உத்தம னார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே.

(திருநா. 5-ஆம் திரு.)

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி வித்தபு ராணனார்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திரு வாஞ்சியம்
என்னையாளுடை யாளிட மாக உகந்ததே.

(திருஞா. 2-ஆம் திரு.)

குறிப்பு : புராணனார்—பழமையானவர். தென்ன—ஒலிக் குறிப்பு. தென்னனே எனினும் ஆம். தென்னன்—சிவபெருமான்.

பொருவ னார்புரி நூலர்
புணர்முலை உமையவ ளோடு
மருவ னார்மரு வார்பால்
வருவதும் இல்லைநம் அடிகள்
திருவ னார்பணிந் தேத்தும்
திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவ னாரடி யாரை
ஊழ்வினை நலியஓட் டாரே.

(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

சிரேறு தண்வயல் சூழோதவேலித் திருவாஞ்சியத்தார்—
கோயில். திருநா.
தொண்டர்களிறையுறை வாஞ்சியம் அல்லது எப்போதும்
என்னுள்ளமே—வீழிமிழலை. திருஞா.

திருவாஞ்சியமும் திருநள்ளாறும்—அதிகை. திருநா.
பேணுவார்கள் பிரிவரிய திருவாஞ்சியத்து எஞ்செல்வனை—
பொது. திருநா.
வலஞ்சுழி வாஞ்சிய மருகல் வன்னி.—பொது. திருநா.

251. வாட்போக்கி : (சோழநாடு)

இத்தலத்தை இப்போது இரத்தினகிரி என்று வழங்குவர். இதற்குச் சிவாயமலை, இரத்தினாசலம், ஐயர்மலை, மணிகிரி, முதலான வேறு பெயர்களும் உண்டு. இதைச் சார்ந்த பகுதி களில் உள்ளவர்கள் இரத்தினம் என்று முடியும் பெயர்களை வைத்துக் கொள்ளும் வழக்கம் இருக்கிறது. இராச ரத்தினம் ரங்கரத்தினம், சேதுரத்தினம், கணேசரத்தினம், என்பன போன்ற பெயர்களை உடையவர்கள் பலர்.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு இரத்தின கிரீசர், வாட்போக்கிநாதர், இராசலிங்கம், முடித்தழும்பர், மலைக்கொழுந்தர், சொக்கர் முதலிய திருநாமங்கள் வழங்கும். அம்பிகைக்குச் சும்பார் குழலி என்று பெயர். கல்வெட்டுக் களில் திருமாணிக்கமலை உடைய நாயனார், திருமாணிக்கமலை மகாதேவர் என்னும் திருநாமங்களும் அம்மைக்கு ஹரவட்சேசுவரி என்ற திருநாமமும் காணப்படுகிறது.

கடம்பர்கோயில், திரு ஈங்கோய்மலை, இரத்தினகிரி என்னும் மூன்று தலங்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்வது மரபு. ''காலைக்கடம்பர், மத்தியான்னச் சொக்கர், அந்தித் திருவீங்கோய் நாதர்'' என்று வழங்கும் பழமொழியில் இந்த வழக்கம் சொல்லப்பட்டுள்ளது. சொக்கர் என்றது வாட்போக்கி நாதரை.

ஒவ்வொரு நாளும் காவிரியாற்றிலிருந்து நீர் கொணர்ந்து இங்கே இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்கிறார்கள். இம் மலையைச் சுற்றி ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன.

ஆரிய மன்னன் ஒருவன் தன்முடியை இழந்து இறைவன் கட்டளையின்படி அதைப்பெற இங்கே வந்தான். ஒரு கொப் பரை நிறைய நீர் நிரப்பும்படி இறைவன் ஒரு வேதிய வடிவில் எழுந்தருளிச் சொன்னார். அரசன் அவ்வாறு நிரப்ப நிரப்ப அது நிறையவில்லை. அதனால் கோபங் கொண்ட ஆரிய அரசன் தன் வாளால் அவ்வேதியன் தலையில் வெட்ட அவன் மறைந் தான். ஆரிய அரசன் வெட்டிய வெட்டுச் சிவலிங்கப் பெருமான்

திருமுடியில் அமைந்தது. அதனால் அப்பெருமானுக்கு முடித் தழும்பர் என்ற திருநாமம் உண்டாயிற்று.

ஆரிய மன்னருடைய பரம்பரையினராகத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் ஆரியப் பண்டாரம் என்னும் வகுப்பினர் இராசலிங்கருக்குக் காவிரியிலிருந்து அபிடேக நீர் கொண்டு வந்து தருகின்றனர்.

வைரப் பெருமாள் என்ற ஆயர்குலப் பக்தர் ஒருவர் தம் பிரார்த்தனை நிறைவேறியதற்காக இங்கே தம் தலையை அரிந்து பலி கொடுத்தார். அவரை இங்கே காவல் தெய்வமாக வைத்துப் போற்றுகிறார்கள். அவரே இந்த மலையைப் பாது காத்து வருவதாக நம்புவர். அவருடைய உருவச் சிலை சுவாமி சந்நிதியிலும் அடிவாரத்திலும் இருக்கிறது.

இறைவனுடைய அபிடேகத்துக்காகக் கொண்டு வந்த பாற் குடத்தை ஒரு காகம் கவிழ்த்து விட்டது. அக்காகம் இறைவன் ஆணையால் எரிந்தது. அது முதல் இந்த மலையின் உச்சியில் காகம் பறப்பதில்லையாம். ''காகம் அணுகா மலை'' என்ற பெயர் இதற்கு உண்டாயிற்று. இங்கே அபிடேக நீரைப் பூசிக் கும் குடங்களில் காகத்தின் வடிவம் பொறிக்கப் பெற்றிருக்கும். இந்த வரலாற்றை நினைப்பூட்ட இந்த வழக்கம் இருப்பதாகத் தெரிய வருகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கே இடி பூசிப்ப தாக ஓர் ஐதிஹ்யம் உண்டு.

ஒரு வகைச் செட்டியார்கள் பதினொருவர் இங்கே வந்து பொன்னிடு பாறை என்னும் இடத்தில் தம் ஊதியத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு முறையும் பன்னிரண்டு பங்காகப் பிரிக்கும்படி ஆயிற்று. பதினொரு பங்குக்குப் பதி லாகப் பன்னிரண்டு பங்கு அமையவே, இறைவன் திருவருள் என்று எண்ணி அந்தப் பங்கை இறைவனுக்கே அளித்தனர். அதுமுதல் அவர்களுக்குப் பன்னிரண்டாம் செட்டிமார் என்ற பெயர் வழங்கி வருகிறது. இங்கே வழிபட்டோர் இந்திரன், சூரியன், வீரசேனன், ஆதிசேடன், துர்க்கை, அகத்தியர், சத்த கன்னியர் முதலியோர்.

இத்தலத்திற்கு ஒரு புராணமும், உலாவும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய கலம்பகமும், தேவாரப் பதிகம் ஒன்றும் உள்ளன.

சுவாமி : மேற்கு முகம்.
அம்பிகை : கிழக்கு முகம்.
திருநாவுக்கரசர் பாடிய தலம்.

இரும்பில் வாட்போக்கி இரத்ன கிரீசர்
சுரும்பார் குழலி துதிபெறு கவுரி. சிவ.)

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யர்எனார்
ஆல நீழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

மணிமாணிக்க மலையானை ஆனைக்கா. திருத்தாண்டகம் திருநா.
வாட்போக்கி யம்மானை எம்மா னென்று—திருவாலம்பொழில் திருநா.
பயில்சுற்குடி காளத்தி வாட்போக்கியும்—பொது. திருஞா.
(கேஷத்திரக்கோவை)

252. திருவாய்மூர் : (சோழநாடு)

திருநெல்லிக்காவிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ளது. அப்பருக்கு வருமாறு இறைவன் கட்டளையிட அவர் சென்று தரிசித்ததை தேவாரம் கூறும். சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் தியாகராச மூர்த்திக்கு நீலவிடங்கர் என்பது திருநாமம்; இவர் கமல நடனம் புரிபவர். சூரியன் பூசித்தது. இத்தலத்தில் எட்டு வைரவ மூர்த்திகள் இருந்தன. இப்பொழுது ஏழு உண்டு. 64 நடனத்துள் ஒன்று. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : வாய்மூர்நாதர்
அம்பிகை : பாலினுநன்மொழியம்மை, க்ஷீரோபவசனி.
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்.
விருட்சம் : பலா.

தென்றிரு வாய்மூர் தியாகரா சர்பா
லின்மொழி யாள்சூ ரியபுஷ் கரிணி. (சிவ.)

பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையில் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையில் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.

(திருநா. 6-ஆம் திரு.)

தளிரிள வளரென உமைபாடத் தாளம்
மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த் தாடும்
வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருள்நல்கி வெண்ணீ
றணிந்தோர் சென்னியின்மேல்
வளரிள மதியமொ டிவராணீர் வாய்மூர்
அடிகள் வருவாரே.

(திருஞா. 2-ஆம் திரு.)

குறிப்பு : கிறிமை—பொய். மாயம் எனினும் அமையும். இவராணீர்—இவர் ஆள் நீர்—இவர் ஆளும் தன்மை உடையவர். இவராணீர்—இவர்பாரீர் காணீர்.

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

மறைக்காட்டார் வலிவலத்தார் வாய்மூர் மேயார்—
வீழிமிழலை. திருநா.
மறையான்றன் வாய்மூருங் கீழ்வேளூரும்—நாகைக்காரோணம்.
திருநா.
மதுவாரும் பொழில்புடைசூழ் வாய்மூரானை—
பள்ளியின் முக்கூடல். திருநா.
வாய்மூரு மறைக்காடு மருவினான்காண்—ஆரூர். திருநா.
மறைக்காடும் வாய்மூர் வலஞ்சுழியும்—அதிகை. திருநா.
நளிர்சோலைஉஞ் சேனை மாகாளம்வாய்மூர்—பொது.
திருஞா

வானப்பேரார் வந்தேத்தும் வாய்மூர்வாழும் வலம்புரியை
—பொது. திருநா.
வலிவலமாற்பேறு வாய்மூர் வைகல்—பொது. திருநா.
மங்குற்றிரிவாய் வானோர் தலைவா வாய்மூர் மணவாளா
—பொது. சு.

253. திருவாளொளிபுற்றூர் : (சோழநாடு)

வைத்தீசுவரன் கோயிலிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. பஞ்சபாண்டவர் இலிங்கங்களும், திரௌபதி பூசித்த வலம்புரி விநாயகரும் எதிரில் நச்சுப்பொய்கையும் உண்டு. துர்க்கை சந்நிதி விசேடம். மகாவித்துவான் பிள்ளையவர்கள் பாடிய தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலம்.

சுவாமி : மாணிக்கவண்ணர்
அம்பிகை : வண்டார் பூங்குழலி.
தீர்த்தம் : பத்மதீர்த்தம்
விருட்சம் : வாகை.

வாளொளி புற்றூர் மாணிக்க நாதர்
நீளவண் டமர்பூங் குழல்நிறை பதுமம். (சிவ.)

பொடியுடை மார்பினர் போர்விடையேறிப் பூதகணம்
புடைசூழக்
கொடியுடையூர்திரிந் தையங் கொண்டு பலபலகூறி
வடிவுடைவாள்நெடுங் கண்ணுமைபாகம் ஆயவன்வாழ்
கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம்.
(திருஞா. 1-ஆம் திரு.)

தலைக்க லன்தலை மேல்தரித் தானைத்
தன்னை என்னைநினைக் கத்தரு வானைக்
கொலைக்கை யானையுரி போர்த்துகந் தானைக்
கூற்று தைத்தகுரை சேர்கழ லானை
அலைத்த செங்கண்விடை ஏறவல் லானை
ஆணை யால்அடி யேன்அடி நாயேன்
மலைத்த செந்நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறுதலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வாள்கொளிபுத்தூரார் மாகாளத்தார்—வீழிமிழலை. திருநா.

மண்ணிப்படிக்கரை வாள்கொளிபுத்தூர்—பொது. திருநா.

இத்தலம் அரதனபுரம் எனவும் வழங்கும்; தேவாரம் பெற்றது. இத்தலத்து ஸ்வாமியின் திருநாமம் மாணிக்கலிங்க ரென்பது; அம்பிகையின் திருநாமம் வண்டுவார்குழல் நாயகி யென்பது. 'தலவிருட்சம்' வாகை. குசகேது வென்னும் ஒரு சோழவரசன் பொருட்டு அரதனப் பாறையிலிருந்து சிவபெருமான் சிவலிங்க வடிவாகத் தோற்றினமையால் இத்தலம் அரதனபுர மெனப் பெயர் பெற்றது. வாசுகியென்னும் மகாநாகம் இத் தலத்தை அடைந்து சிவபெருமானை வழிபட்டு ஆபரணமாகும் பேறு பெற்றது. அப்பாம்பு ஒரு புற்றில் உறைந்தமையால் புற்றாரென்று முதலில் ஒரு பெயருண்டாயிற்று.

தீர்த்த யாத்திரை செய்து வந்த அருச்சுனன் இத்தலத்தை அடைந்த பொழுது மிக்க நீர்வேட்கையால் வருந்தினான். அப் பொழுது சிவபெருமான் ஒரு வயோதிகப் பிராமணராக அவன் முன் தோன்றி ஒரு தண்டைக் கொடுத்து, ''இதனை ஊன்று மிடத்தே தண்ணீர் தோன்றும்; அதனைப்பருகிச் சோகம் தீர்வாய் என்று அருளிச் செய்தனர். அருச்சுனன் தன்னுடைய வாளை அவர் முன்னே வைத்து, ''யான் நீர் பருகித் திரும்புமளவும் வேறொருவர் இதனைக் கவர்ந்து கொள்ளாதபடி பார்த்துக் கொண்டிரும்' என்று சொல்லித் தடாகத்திற்குச் சென்றனன். இறைவர் அவ்வாளை முன் கூறிய புற்றில் ஒளித்துத் திருவுருக் கரந்தனர். இதனால் வாளொளி புற்றாரென இத்தலத்திற்கு ஒரு பெயர் உண்டாயிற்று.

254. திருவான்மியூர் : (தொண்டைநாடு)

அடையாற்றிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. சப்த விடங்கக் கணக்கில் சேராத தியாகராச தலம். மூலஸ்தான சிவலிங்கத்தைக் காராம்பசு பால் கறந்து அபிடேகிக்க உருகிய தால் மூர்த்தி அந்நிலையில் காட்சி அளிக்கின்றார். கடற்கரைத் தலம். டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையம் இலங்கிக் கொண் டிருக்கும் தலம். வான்மீகி முனிவர் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. தேவர்கள் அமுதத்தால் அமைத்த மூர்த்தி என்பர். இலிங்கம் சற்று வடபால் சாய்ந்திருக்கிறது. இத்தலத் தில் தானே தோன்றி எழுந்தருளியிருக்கும் சுயம்பு லிங்கப் பெருமானைக் காமதேனு பால் சுரந்து அப்பாலால் அபிடேகம்

செய்து வழிபட்டமையால் அப்பெருமான் பால்வண்ணநாதர் என்ற திருப்பெயருடையவரானார். ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் இத்தலக் கோயிலின் கோபுரத்தை மணித்தட நெடுங்கோபுரம், மிக்குயர்ந்த கோபுரம் என்று தம் பெரியபுராணத்தில் சிறப்பித் துள்ளார். பௌர்ணமி தோறும் விசேஷ பூஜையும், ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவமும் நடைபெறு கின்றன. இத்தலத்திலுள்ள சிவலிங்கப் பெருமானுக்குத் தேவர் கள் அமுதத்தால் திருமஞ்சனம் செய்தமையால் சுவாமிக்கு அமுதேசர் என்ற திருநாமம் அமைந்தது. இத்தலத்துக்கும் அமுதபுரி என்ற பெயர் வழங்கலாயிற்று. சுவாமி சுயம்புலிங்கம். வேதம் பூசித்த தலமாதலின் இத்தலம் வேதபுரி என்று வழங்கப் பெறும். பசுவின் குளம்பின்வடு இலிங்கத்தில் தெரிகின்றது. ஔஷதபுரி என்று ஒரு பெயர் உண்டு. உற்சவமூர்த்தியான தியாகராசர், அம்பிகையுடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக் கிறார். இவருக்குத் தனியே சந்நிதியுண்டு; சந்நிதி பெரியது.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : பால்வண்ணநாதர், மருந்தீசர், ஔஷதபுரீசுவரர் வேதபுரீசுவரர், வன்மீகேசுவரர்.
அம்பிகை : திரிபுரசுந்தரி, சொக்கநாயகி. சந்நிதி தெற்கு.
விருட்சம் : வன்னி. வெளிப்பிராகாரம் வாயுமூலை.
தீர்த்தம் : ஞானதாயினி, சிவகங்கை வாயுமூலை,
காமதாயினி : திருக்குளம்.
காசி தீர்த்தம் : மோட்ச தாயினி.

பைந்திரு வான்மியூர் பால்வண்ண நாதர்
சுந்தர நாயகி துலங்கிய சுந்தரம். (சிவ.)

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ப்பிவன்
திரையு லாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொரு ளாயுல காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே.
(திருஞா. 2-ஆம் திரு.)

வீண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூர் ஈசனே.
(திருநா. 5-ஆம் திரு.)

255. விசயமங்கை: (சோழநாடு)

சுந்தரப்பெருமாள் கோயில் இரயில்வே நிலையத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. அருச்சுனன் வழிபட்டுப் பாசுபதம் பெற்ற தலம். தேவாரப்பதிகங்களாலும், கல்வெட்டுக் களாலும் விசயமங்கை என்பது கோவந்த புத்தூரிலுள்ள சிவால யமே என்பர். அருச்சுனன் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்றதலம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம்.

சுவாமி : விஜயநாதேசுரர்.
அம்பிகை : மங்கைநாயகி.
தீர்த்தம் : அருச்சுன தீர்த்தம்.

விசைய மங்கையில் வாழ்விசைய நாதர்பால்
இசையு மங்களமா தினியஅர்ச் சுனமாம். (சிவ.)

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கையெம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கையே.
(திருஞா. 3-ஆம் திரு.)

குசையும் அங்கையில் கோசமும் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையும் தானுமொன் றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே.
(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப் பற்றி வழங்கும் தேவாரப்பாடல்.
வேதிகுடி விசயமங்கை வியலூர்—பொது. திருநா.

256. திருவியலூர் : (சோழநாடு)

கும்பகோணத்திற்குக் கிழக்கே நான்கு மைல் தொலைவில் உள்ளது. திருமங்கலக்குடியில் திருப்பணி செய்து இறந்துபோன ஓர் அடியவரை இத்தலத்திற்குக் கொண்டு வரும்போது அவர் திருமங்கலக்குடித்தேவியாரின் அருளால் உயிர்த்தெழுந்தார்.

பிரமன் விஷ்ணுசர்மா என்பவருக்குப் புத்திரனாகித் தவம் புரிந்து தம்முடன் பிறந்த எழுவருடன் சிவராத்திரியில் இலிங்க

மூர்த்திக்குள் புகுந்தனர். அச்சடைகள் இன்றும் இலிங்கத்தின் முடியில் காணப்பெறுகின்றன. அகத்தியர் சிவராத்திரி தோறும் பூசிப்பதாக ஐதீகம். திருவிசைநல்லூர் என வழங்கப் பெறும். திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : சிவயோகிநாதர், யோகாநந்தேசுவரர்,
வில்வாரண்யேசுவரர்.
அம்பிகை : சௌந்தரநாயகி, சாந்தநாயகி.
தீர்த்தம் : சடாயு.
விருட்சம் : அரசு.

உயர்திரு வியலூர் யோகா நந்தர்
செயசெஞ் சாந்தநா யகிதிகழ் சடாயு. (சிவ.)

குரவங்கமழ் நறுமென்குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல்
அணிவோன்
அரவும்அலை புனலும்இள மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:
வேதிகுடி விசயமங்கை வியலூராழி அகத்தியான் பள்ளி—
பொது. திருநா.

257. விளநகர்: (சோழநாடு)

இவ்வூர் மயிலாடுதுறைக்குக் கிழக்கே நர்லரைமைல் தொலை வில் உள்ளது. மயிலாடுதுறைக்கு அடுத்த மண்ணம்பந்தல் இரயில்வே நிலையத்திலிருந்து ஒரு மைல்.

சம்பந்தமூர்த்தி சுவாமிகள் விளநகர் வருங்காலத்தில் காவிரி யில் வெள்ளம் வரவே போக முடியால் இருக்க வேறு வழி காட்டியவர் விநாயகர். ஆறுபாதி என்று மற்றொரு பெயரு முண்டு. விளநகரின் ஆறில் ஒரு பாகமாகையால் ஆறுபாதி. இத்தலத்தில் மாயூரஸ்தல தரிசனத்திற்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குக் காவேரிப் பிரவாகத்தை வடியச் செய்து துறையைக் காட்டி அவரை அங்கே வரவிடுத் தமையின் இத்தலத்தில் துறைகாட்டும் வள்ளல் என்னுந் திருநாமங் கொண்டு சுவாமி வீற்றிருக்கின்றனர்.

சுவாமி : துறைகாட்டும் வள்ளலார்.
அம்பிகை : வேயுறுதோளியம்மை (காம்பனதோளியம்மை)
தீர்த்தம் : காவிரி (மெய்ஞ்ஞான தீர்த்தம்)

அருள்வித்தன் என்னும் மறையவர் சுவாமிக்காகப் புஷ்பக் கூடையை எடுத்துக்கொண்டு ஆற்றில் வரும்போது, வெள்ளம் வந்து அடித்துச் செல்ல, அவர் கூடையை விடாது சிவபிரானைப் பிரார்த்திக்க, சிவபெருமான் அவருக்குத்துறை காட்டிக் கரை யேறவிட்டு ஞானோபதேசம் செய்த தலம்.

ஞானசம்பந்தர் கடைமுடி முதலிய தலங்களுக்குச் சென்று மயிலாடுதுறை வரும்வழியில் இங்குக் காவிரியாற்றுநீர் கரை புரண்டு செல்ல அங்கு ஒரு வேடன் தோன்றி அவருக்குத் துறை காட்டி அக்கரை சேர்ப்பித்தான். பிறகு மறைந்தான்.

ஊருக்கு விழல் நகர் என்றும், சுவாமிக்கு உசீரவனேசுவரர் என்றும் பெயர். உசீரம்—விழல். மற்றொரு பெயர் சுபித்தபுரம் (சுபித்தம்—விளா). கல்வெட்டுக்கள் 3.

உத்தம சோழன் மனைவி உத்தமச்சுரபியாள், நெறி யுடைச் சோழப் பேராற்றின் கரையில் நிலமளித்தாள்.

அச்சுதப்ப நாயகர் பல திருப்பணிகள் செய்துள்ளார். தீக்ஷிதர் ஒருவரும் இக்கோயிலுக்கு நிலம் அளித்துள்ளதாகத் தெரிகிறது.

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

கவின்விள நகர்துறை காட்டும் வள்ளல்
புவியணி தோளி பொன்னிமா நதியாம். (சிவ.)

ஒளிரிளம்பிறை சென்னிமேல் உடையர்கோவண
ஆடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற் கோலநீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை நங்கைகங்கையை
நண்ணினான்
மிளிரிளம்பொறி அரவினார் மேயதுவிள நகரதே.
(திருஞா. 2-ஆம் திரு.)

258. விளமர் : (சோழநாடு)

திருவாரூரிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. பதஞ்சலி பூசித்த தலம். பதஞ்சலி, வியாக்கிரபாதர் விக்கிரகங்கள்

கோயிலிலுள்ளன. கிழக்கு நோக்கிய சந்நிதி. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : பதஞ்சலி மனோஹரர்
அம்பிகை : யாழினுமென்மொழியம்மை, மதுரபாஷிணி
தீர்த்தம் : அக்னி தீர்த்தம்.

தென்கா விளமர் சிவன்பதஞ் சலியார்
மின்கொடி யாழினு மென்மொழி யக்கினி. (சிவ.)

மத்தக மணிபெற மலர்வதொர் மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதொர் அரவினர் ஒளிகிளர்
அத்தகவ டிதொழ அருள்பெறு கண்ணொடும்
உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வளநகர் விளமரே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

விண்ணூர் விடையான் விளமர் வெண்ணி—அதிகை.திருநா.
பெருவேளூர் விளமர் தெங்கூர்—பொது. திருஞா.
விளமர் விராடபுரம் வேட்களத்தும்—பொது. திருநா.
வேங்கூர் உறைவாய் விளமர் நகராய்.—பொது. சு.

259. திருவிற்குடி வீரட்டம் : (சோழநாடு)

விற்குடி இரயில்வே நிலையத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது இத்தலம். அட்டவீரத்தலங்களுள் ஒன்று. சலந்தராசுரனைச் சங்கரித்த தலம். உற்சவமூர்த்தியின் திருக்கரத்தில் சக்கரம் அமைந்துள்ளது. கோயிலுக்குப் பின்புறத்தில் மெய்ஞ்ஞானேசுவரரது கோயிலும், பக்கத்தில் பிருந்தை (துளசி மாடமும்) உள்ளன. தலத்தைப் பிருந்தைமயானம் என்றும் கூறுவர். மேற்குப்பார்த்த சந்நிதி. திருஞானசம்பந்தர் பாடிய தலம்.

சுவாமி : வீரட்டானேசுரர்
அம்பிகை : ஏலவார் குழலி
தீர்த்தம் : சக்கர தீர்த்தம், சங்கு தீர்த்தம்.
தலச்செடி : துளசி.

விற்குடி தனிலுறை வீரட்டேசர்
பொற்கொடி மடவாள் பூங்குழல் சக்கரம் (சிவ.)

வடிகொள் மேனியர் வானமா மதியினர் நதியினர்
மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினர்
உடைபுலி யதளார்ப்பர்
விடைய தேறும்எம் மானமர்ந் தினிதுறை விற்குடி
வீரட்ட மம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை அருவினை
யடையாவே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

கற்குடியார் விற்குடியார் கானப்பேரார்—வீழிமிழலை.
திருநா.

கோத்திட்டைகுடி வீரட்டானம்—பொது. திருநா.

விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி—பொது. திருநா.

260. திருவிற்கோலம் (தொண்டைநாடு)

கடம்பத்தூர் இரயில்வே நிலையத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து பஸ் மூலமாகவும் செல்லலாம். இப்பொழுது திருக்கூவமென்று வழங்கப்படுகிறது. திருவிற்கோலம்—சிவபெருமானுடைய வில் வீர வடிவம். திரிபுரம் எரிக்கச் செல்லும் வழியில் இத்தலத்தில் தேரின் கூவம் (�ஏர்க்கால்) ஒடிந்தமையால் சிவபெருமான் விற்கோலமாகக் காட்சியளித்ததால் தலப்பெயர் விற்கோலம்: கூவம் என்று வழங்கப்படுகிறது. சம்பந்தர் கூறும் கூகம் என்பது மருவி கூவம் என்று ஆயிற்று என்பர்.

மூலஸ்தானமூர்த்தி தீண்டாத் திருமேனி. அதிக மழை பெய்யுமுன் சுவாமி மேல் வெண்ணிறம் படர்கிறதென்றும் போர் நேரிடுவதானால் சிவந்த நிறம் படர்கிறதென்றும் கூறும் அதிசயத் தலம். துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய தலபுராணம் உண்டு.

சுவாமி : திரிபுராந்தகர்
அம்பிகை : திரிபுராந்தகி.

திருவிற் கோலம் திரிபு ராந்தகர்
திரிபு ராந்தக தேவி விற்கோலம். (சிவ.)

உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடந் திருவிற் கோலமே.
(திருஞா. 3-ஆம் திரு.)

261. திருவீழிமிழலை. (சோழநாடு)

பூந்தோட்டத்திலிருந்து ஏழுமைல் தொலைவில் உள்ளது. சக்கராயுதம் பெறுவதற்காகச் சிவபெருமானை இங்குத் திருமால் நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு அருச்சித்து வர ஒரு நாள் ஒரு மலர் குறையவே தம் கண்ணையே எடுத்து அர்ச்சனை புரிந்த தலம். திருமாலுக்குச் சக்கராயுதம் அருளிய சக்கரப்பிரதான மூர்த்தி கிழக்கு முகமாக உள்ளார். திருமால் விண்ணிலிருந்து கொண்டு வந்த விண்ணிழி விமானமே கோயிலாயிற்று. மூலஸ்தான இலிங்க மூர்த்தியின் பின்புறம் பார்வதி பரமேசுவரர் திருமணக்கோலம் உள்ளது. இத்தலத்தில் சிவபெருமான் காத்தியாயினியை மணந்த கோலத்துடன் தென் முகமாகக் காட்சியளிக்கிறார்.

பஞ்சம் வந்த போது அப்பருக்கும், சம்பந்தருக்கும் இறைவன் நாடோறும் படிக்காசு கொடுத்ததைத் தேவாரம் கூறும். சிவபெருமான் தாம் சீகாழியில் திருத்தோணியின் மேல் எழுந்தருளியிருக்கும் கோலத்தைத் திருஞானசம்பந்தருக்கு இத்தலத்தில் காட்டியருளினர். சித்திரைப் பெருவிழாவில் ஆறாம்நாள் காத்தியாயனி கல்யாண உற்சவம் பிரபலமானது.

வீழிச் செடிகள் நிறைந்தது. மூலலிங்கத்திற்குப்பின் பார்வதி பரமேசுவரர் திருவுருவங்கள். மாப்பிள்ளைச்சாமி என வழங்கும் கலியாண கோலமாயுள்ள மூர்த்தியின் பாதத்தில் விஷ்ணு தமது கண்ணைப் பறித்து அருச்சித்த குறி இருக்கிறது. இத்தலத்தில் வேலைப்பாட்டில் மிகச் சிறந்த வௌவால் நத்தி மண்டபம் ஒன்றிருக்கிறது. மூவரும் பாடிய தலம்.

தீர்த்த புஷ்கரிணி என்பது சந்நிதி தீர்த்தத்தின் பெயர் யஞ்ஞபதி பூசித்த தலம். கிருஷ்ணன் பூசித்த தலம்.

சுவாமி : வீழியழகீசுரர், நேத்ரார்ப்பணேசுவரர்.
அம்பிகை : பிருகத் சுந்தரகுசாம்பிகை.
தீர்த்தம் : விஷ்ணுதீர்த்தம்.
விருட்சம் : வீழி.

திருவீழி மிழலை சிவன்வீழி நாதர்சுந்
தரகுசாம் பிகைதா மோதர தீர்த்தம். (சிவ.)

பூதத்தின் படையர் பாம்பின் பூணினர் பூண நூலர்
சீதத்திற் பொலிந்த திங்கட் கொழுந்தர்நஞ் சழுந்து
கண்டர்
கீதத்திற் பொலிந்த வோசைக் கேள்வியர் வேள்வி
யாளர்
வேதத்தின் பொருளர் வீழி மிழலையுள் விகிர்த னாரே.
(திருநா. 4-ஆம் திரு.)

அரையார் விரிகோ வணஆடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையால் உணர்வார் உயர்வாரே.
(திருஞா. 1-ஆம் திரு.)

நம்பினார்க்கு அருள்செய்யும் அந்தணர் நால்மறைக்கு
இடமாய வேள்வியுள்
செம்பொன் ஏர்மடவார் அணி பெற்ற திரு மிழலை
உம்பரார் தொழுது ஏத்த மாமலையாளொடும்(ம்)
உடனே உறைவு இடம்
அம்பொன் வீழிகொண்டீர்-அடியேற்கும் அருளுதிரே.

(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

விரிநீர்மிழலையெழு நாட்டங்கிப் போகமும் பொய்யாப்
பொருளுமானார்—கோயில். திருநா.
வீழிமிழலையாய் நீயே யென்றும்—நெய்த்தானம். திருநா.
நிறைமறையோருறை வீழிமிழலை தனில் நித்தல்
காசருளிச் செய்தீர்—நாகைக்காரோணம். சு.
மீயச்சூர் வீழிமிழலை மிக்க கண்ணார் நுதலார்—அதிகை.
திருநா.
மணிமிழலை மேய மணாளர்போலும்—ஆமாத்தூர்.
திருநா.

வித்தாய் மிழலை முளைத்தானை—பொது. திருநா.
வீழிமிழலை வெண்காடு வேங்கைகூர்—பொது. திருநா.
மிழலை நாட்டுமிழலை வெண்ணி நாட்டு மிழலையே.
பொது. சு.

262. வெஞ்சமாக்கூடல் : (கொங்குநாடு)

கருவூருக்குத் தென்கிழக்கே பதினைந்து மைல் தொலைவில் உள்ளது. குடவனாற்றோடு ஒரு கான்யாறு கூடுவதால் கூடல். வெஞ்சன் என்ற அசுரன் பூசித்ததலம். இவனை வேட அரசன் என்றும் கூறுவர். கோயில் சற்றுப்பள்ளத்திலிருக்கிறது. சிவ பெருமான் முதிர்ந்த ஒரு கிழவியிடம் தம் பிள்ளைகளை ஈடு காட்டிப் பொன்வாங்கிச் சுந்தரருக்கு அளித்த இடம். இதனைத் தலபுராணத்தாலும் கொங்கு மண்டல சதகம் ''கிழவேதிய வடிவாகி'' என்ற செய்யுளாலும் அறியலாம்.

வெஞ்சமாக் கூடல் விகிர்தேசர் பங்கில்வாழ்
அஞ்சவிகிர் தாம்பிகை மனமகிழ் விகிர்தம்

எறிக்கும்கதிர் வேயுதிர் முத்தம்மோ
டேலம்மில வங்கத்தக் கோலம்இஞ்சி
செறிக்கும்புன லுட்பெய்து கொண்டுமண்டித்
திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
முறிக்குந்தழை மாமுடப் புன்னைஞாழல்
குருக்கத்திகள் மேற்குயில் கூவலறா
வெறிக்குங்கலை மாவெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே.

(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:

வெஞ்சமாக்கூடல் மீயச்சூர்வைகா—பொது. திருநா.

263. திருவெண்காடு. (சோழநாடு)

சீகாழியிலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ளது. கோயிலுக்குள் சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம் என மூக்குளங்கள் இருக்கின்றன. இவற்றில் நீராடி இறைவனை வழி

படுவோர் புத்திரப்பேறுடன் வேண்டிய வரமெலாம் பெறுவார் என்று தேவாரம் கூறும். பட்டினப்பாலையிலும் சிலப்பதி காரத்திலும் கூறப் பெற்றுள்ள இரு காமத்திணையோ யென்னும் இரண்டு ஏரிகள் சோமகுண்டம் சூரிய குண்டமென வழங்கப் பெற்று வந்தன. இவ்விரண்டும் இத்தலத்திலுள்ள சோம தீர்த் தமும் சூரிய தீர்த்தமு மாமென்று சில பெரியோர் கூறுவர். முற்காலத்தில் இத்தலம் காவிரிப்பூம்பட்டினத்தின் எல்லைக்குள் அடங்கியிருந்ததாகத் தெரிவதால் இது சரியெனவே தோற்று கின்றது. இத்தலத்தில் சிவபெருமான் ஆடிய நடனத்தை ஹஸ்தி நடனமென்பர்.

இத்தல இறைவனை வழிபட்டு அச்சுதகளப்பாளர் மெய் கண்டார் என்ற சந்தான குரவரைப் பெற்றார். தேவேந்திரனும் ஐராவதமும் வழிபட்ட தலம். சுவேதகேது மகரிஷியின் இருபத்தோராவது வயதில் அவருக்காகவும், சுவேதராஜவுக் காகவும் இரு முறை காலசம்ஹாரம் நடந்ததாகக் கூர்மபுராணம் கூறுகின்றது.

இத்தலத்தில் பஞ்சபிரம்ம மூர்த்தங்களுள் தென்முகமா யுள்ள அகோரமூர்த்தி சந்நிதியும் வழிபாடும் பிரபலம். இவர் எண்டோள் முக்கண் ஈசராகக் காட்சியளிக்கிறார். மாசிமகம் பெருவிழாவில் 5-ஆம் நாள் அன்று இவர் திருவீதி வலம் வருவது சிறப்பு. இவர் சந்நிதிக்கருகில் சிதம்பரத்தில் உள்ளது போலவே நடராச சபை, ரகசியம் உள்ளன. கணக்கற்ற இறந்தவர்களின் ஈமச்சுடலை இக்கோயில் சந்திர தீர்த்தத்தின் அருகில் உள்ளது கயாக்ஷேத்திரத்தில் உள்ளதுபோல என்றும் அழியாத அக்ஷயவடம் (ஆலமரமும்) உள்ளது. முக்குள நீராடி இங்குப்பலர் தென் புலத்தார் வழிபாடு செய்கின்றனர்.

ஆதி சிதம்பரம், சுவேதாரணியம் வேறு பெயர்கள். அகோர வீரபத்ரர் தரிசனம் ஞாயிற்றுக்கிழமை இரவுகளில் விசேஷம்.

இங்குச் சிவபிரான் யமனைக் கொன்றதாக வான்மீகி ராமாயணமும் சம்பந்தர் தேவாரமும் கூறுகின்றன.

சைவ எல்லப்ப நாவலர் என்னும் புலவர் இத்தலத்திற்குப் புராணம் இயற்றியிருக்கிறார்.

திருப்பதிகள் ஒன்றனையும் கூறாத இதிகாசச் சிறப்புடைய ஸ்ரீமத் ராமாயணத்தில் சுவேதாரண்யத்தில் முன்பு உருத்திர னுடைய நேத்ராக்னியால் இயமன் கொளுத்தப்பட்டது போல இராமன் கரனை அழித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

சுவாமி : சுவேதாரணியேசுவரர் (வெண்காடர்)
அம்பிகை : வேயனைய தோளுமை, பண்மொய்த்த இன்
மொழியாள், ஸ்ரீ பிரம்மவித்யா நாயகி.
தீர்த்தம் : சோம, சூரிய, அக்னி தீர்த்தங்கள்.
விருட்சம் : வில்வம், கொன்றை, வடவாலம்.

வெத்தி வெண்காடு வெண்காடர் பிரம
வித்தியா நாயகி வியன்மதி கதிர்ச்சுடர் (சிவ)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்

வெண்காடும் வியன்றுருத்தி நகருமேவி—திருக்கண்ணார் கோயில். திருநா.
வெண்காடு மேவினாய் நீயே யென்றும்—நெய்த்தானம். திருநா.
பராய்த்துறையும் வெண்காடும் பயின்றான்றன்னை—ஆலம்பொழில். திருநா.
வெள்ளானை வந்திறைஞ்சும் வெண்காட்டானை—கண்டியூர். திருநா.
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட்டுள்ளார்—இடைமருதூர். திருநா.
வெண்காட்டார் செங்காட்டங்குடியார் வெண்ணி—வீழிமிழலை. திருநா.
வேடனாய் விசயற்கருள் வெண்காடனார் உறைகின்ற—கருவிலி—திருநா.
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்—புகலூர். திருநா.
வேதியனை வெண்காடு மேயான்றன்னை—பள்ளியின் முக்கூடல். திருநா.
வெண்காடன் கண்டாய் வினைகள்போக—மறைக்காடு. திருநா.
திருக்காட்டுப்பள்ளி திருவெண்காடும்—அதிகை. திருநா.
வெண்காடு மேவிய விகிர்தன்றன்னை—முதுகுன்றம். திருநா.
வீழிமிழலை வெண்காடு வேங்கூர்—பொது. திருநா.
வெண்காடு மடைய வினைவேறாமன்றே—பொது. திருநா.
வெண்காடே வெண்காடே என்பீராகில்—பொது. திருநா.

கண்காட்டு நுதலானும் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங்
கொடியானே.
(திருஞா. 2-ஆம் திரு.)

264. திருவெண்டுறை (திருவண்டுதுறை) (சோழநாடு)

மன்னார் குடியிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. இத்தலம் பிரமரபுரி யென்று வடமொழியில் வழங்கப்பெறும். இத்தலத்தில் பிருங்கி முனிவர் வண்டின் உருவமெடுத்துச் சிவ பெருமானை மட்டும் பூசித்தனர். இன்றும் கருப்பக்கிரகத்தின் அருகில் வண்டின் ரீங்கார ஒலி கேட்கிறது. வெண்டு-வண்டு. ''தம் உடம்பிலும் வெண்டு அலைமாலையே'' (திருஞா. 2-ஆம் திரு.)

சுவாமி : வண்டுதுறைநாதர், பிரமரபுரீசுவரர்.
அம்பிகை : வேனெடுங்கண்ணியம்மை
தீர்த்தம் : அகத்திய தீர்த்தம்.

மால்தரு வெண்டுறை வெண்டுறை நாதர்
வேல்நெடுங் கண்ணி விளங்கு மகத்தியர் (சிவ.)

ஆதியன் ஆதிரையன் அனல்ஆடிய ஆரழகன்
பாதியொர் மாதினொடும் பயிலும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புனலோடர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும் பும்மிடம்
வெண்டுறையே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

பண்டெழுவர் தவத்துறை வெண்டுறை பைம்பொழில்
குயிலாலந்துறை—பொது. திருநா.

265. திருவெண்ணி (சோழநாடு)

கோயில் வெண்ணி இரயில்வே நிலையத்திலிருந்து ½ மைல் தொலைவில் உள்ளது. இப்பொழுது கோவிலுண்ணி யென்று

வழங்கப் பெறும் கற்கோயில். அழகிய வேலைப்பாடுடையது. சுவாமி கருப்பங்கழிகளை ஒன்று சேர்த்து வைத்தாற் போன்ற உருவினர்; இலிங்கத்தில் கரும்பு போன்ற ரேகைகள் உள்ளன. சுயம்புலிங்கம். மிக அழகிய விக்கிரகங்கள்.

சுவாமி : வெண்ணிக் கரும்பர்.
அம்பிகை : அழகிய நாயகி.
விருட்சம் : கரும்பு.

வியன்றிரு வெண்ணி வெண்ணிக் கரும்பர்
நயன்தரு மழகிய நாயகி நாதன் (சிவ.)

சடையானைச் சந்திர னோடுசெங் கண்அரா
உடையானை உடைதலை யிற்பலி கொண்டுரும்
விடையானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியை
உடையானை யல்லதுள் காதென துள்ளமே.
(திருஞா. 2-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வெண்காட்டார் செங்காட்டங்குடியார் வெண்ணி
நன்னகரார்—வீழிமிழலை. திருநா.
வெண்ணியின்றென்கரைப் பூவனூர்புகுவார்.—
பூவனூர். திருநா.
விண்ணார் விடையான் விளமர் வெண்ணி—அதிகை.
திருநா.
விடங்கரூர் திருவெண்ணியண்ணாமலை—இடையாறு. சு.
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி—பொது. திருஞா.
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி—பொது. திருநா.
வேலனூர் வெற்றியூர் வெண்ணிக் கூற்றத்து வெண்ணியே—
பொது. சு.
மிழலை நாட்டுமிழலை வெண்ணி நாட்டுமிழலையே—
பொது. சு.
வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே—பொது. சு.

266. திருவெண்ணெய் நல்லூர் (நடுநாடு)

இத்தலம் பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது. இரயில்வே நிலையத்திலிருந்து நான்கு மைல் தொலைவில்

உள்ளது. அம்பிகை வெண்ணெயால் கோட்டை யமைத்து அதனுள் இருந்து தவம் புரிந்து சிவபெருமானைத் துதித்த காரணத்தால் இத்தலம் வெண்ணெய் நல்லூர் என்ற பெயர் பெற்றது. இங்கு அம்பிகை திருவருள் பெற்றமையால் கோயிலின் பெயர் அருட்டுறை என்று வழங்கப் பெறும். கோயிலின் பெயரே தலத்தின் பெயராகி வடமொழியில் கிருபாபுரியென்று வழங்கப் பெறும். சிவபெருமான் முதிய வேதியராக வந்து சுந்தரமூர்த்தி நாயனாரை அற்புதப் பழ ஆவண ஓலை காட்டி ஆட்கொண்டருளிய தலம். கோபுர வாயிலுக்கு எதிரில் உள்ள நூற்றுக்கால் மண்டபம், அந்த முதிய வேதியர் சுந்தரரின் வழக்கை வென்ற இடமாதலின் வழக்கு வென்ற திருவம்பலம் என்று கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது. வேதம் மூங்கிலின் வடிவாயிருந்து வழிபட்ட காரணத்தால் வேணுவனம் என்ற பெயர் பெற்றது. தருமதேவதை பூசித்துச் சிவபெருமானுக்குக் கொடியாகவும் விடையூர்தியாகவும் ஆகிய தலம். 'வீதி கோத்திரர் என்ற அந்தணர் பூசித்து முத்தியடைந்த தலம். பரதநூல் இலக்கணப்படி வாத்திய பேதங்கள் விளங்கச் சிவபெருமான் திருநடனம் புரிந்தருளிய தலம். முருகப் பெருமான் தேவர்கள் வேண்ட மயில் மிசை திருநடனம் செய்தருளிய தலம். பங்குனி மாதம் வளர்பிறைக் கார்த்திகை நட்சத்திரத்தில் கொடி யேற்றிப் பத்தாம் நாள் உத்திர நட்சத்திரத்தன்று சுவாமி தீர்த்தவாரி கொடுக்கும் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. சிவஞான போதம் அருளிய சுவேத வனப்பெருமாள் என்னும் மெய்கண்ட தேவர் வாழ்ந்த தலம். அவர் இத்தல விநாயகராகிய பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்றவர். கதிராமங்கலம் சிவாலயத்தில் உள்ள விநாயகரின் பீடத்தில் வெண்ணெய் நல்லூர்ப் பிள்ளையார் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய தலம். இத்தலத்திற்குப் புராணமும், கலம் பகமும் உள்ளன.

சுவாமி : தடுத்தாட் கொண்டநாதர்
அம்பிகை : வேற்கண்ணியம்மை.
தீர்த்தம் : பெண்ணைநதி.

திருவெண்ணெய் நல்லூர் சிவனருட் டுறையார்
நரர்பணி யருட்டுறை நாயகி பெண்ணை. (சிவ.)

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை

வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.
(சுந்தரர்.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

அன்றுவந்தெனைய கலிடத்தவர்முனாளதாக வென்றா
வணங்காட்டி நின்று வெண்ணெய்நல்லூர் மிசை
யொளித்த நித்திலத்திரட்டொத்தினை—கோலக்கா
சு.

திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்—அதிகை.
திருநா.

வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை யாளும் கொண்ட
நாவலனார்க் கிடமாவது நந்திரு நாவலூரே—நாவலூர். சு.

நம்பனேயன்று வெண்ணெய் நல்லூரினாயினேன்றன்னை
ஆட்கொண்ட சம்புவே—வடதிருமுல்லை
வாயில். சு.

பெண்ணை யருட்டுறை தண் பெண்ணாகடம்—பொது.
திருநா.

267. திருவெண்பாக்கம் (திருவளம்பூதூர்) (தொண்டை நாடு)

திருவள்ளூரிலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ளது. பூண்டி நீர்த்தேக்கத்தில் இத்தலமும் கோயிலும் முழுகியுள்ளன. கோயிலிலிருந்த மூர்த்திகள் இத்தேக்கத்தின் கரையில் ஒரு அறையில் காட்சியளிக்கின்றன. கண்ணிழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஊன்று கோல் பெற்ற தலம். இத்தலத்தில் ஊன்று கோலோடு காட்சியளிக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பிம்பம் இருக்கிறது. அவர் காஞ்சீபுரம் போகும் வழியில் அம்பிகை மின்னல் போல அடிக்கடித் தோன்றி மறைந்தமையால் மின்னலொளியம்மை என்ற பெயர் பெற்றனள். வெண்கோயில் என்று இத்தலக் கோயிலைச் சுந்தரர் பாடியுள்ளனர்.

சுவாமி : ஊன்றீசுவரர்.
அம்பிகை : மின்னொளியம்மை.
விருட்சம் : இலந்தை.

கனவெண் பாக்கம் கயிலாச நாதர்
கனிவாய்மென்மொழி கவுரிகயி லாசம் (சிவ.)

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன்
பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண்
மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர்
என்றானே.

(சுந்தரர்.)

268. திருவேட்களம் : (சோழநாடு)

சிதம்பரத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்கு மஹாயுத்த களம் என்ற பெயரும் உண்டு. சுவாமியின் சிரசில் உள்ள பள்ளத்தில் தீர்த்தமுண்டு. சுவாமி வேடனாகக் காட்சியளித்து அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் தந்தருளியதலம். ஞானசம்பந்தர் இத்தலத்தில் தங்கியிருந்து, தில்லைக்கு அவ்வப்போது தரிசனம் செய்யச் சென்றனர் என்று பெரிய புராணத்தால் தெரிகிறது.

அர்ச்சுனன் கையால் அடியுண்ட சின்னமுடைய இத்தலத்திலுள்ள லிங்கம் பார்த்தப் பிரகரலிங்கமாகும்; இது விசேஷமானது. இந்தச் சிவலிங்கப் பெருமான் திருமுடியில் உள்ள பிளவே பள்ளமாகக் காட்சியளிக்கிறது. இங்குள்ள ஆலயமும் சிவபுரியிலுள்ளதும் ஒரே மாதிரியானவை.

பாசுபதாஸ்திரத்தினை ஏந்திய உற்சவ விக்கிரகமும், அர்ச்சுனனுடைய உற்சவ விக்கிரகமும் இங்கு உள்ளன. பினாகம், சார்ங்கம், காண்டீபம் இம்மூன்று விற்களும் உற்பத்தியான தலம். உசுப்பூர் பன்றியை உசுப்பிய இடம்.

சுவாமி : பாசுபதேசுவரர், வேடனார்.
அம்பிகை : நல்லநாயகி, பெண்ணின்நல்லாள்.
தீர்த்தம் : சிவகங்கை.
விருட்சம் : மூங்கில்.

பண்ணமர் வேட்களம் பசுபதி யீசர்
அண்ணல் நாயகி அருள்சிவ கங்கை.

நன்று நாடோறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

(திருநா. 5-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

விள்ளாத நெடுங்களம் வேட்களம் நெல்லிக்கா—பொது. திருநா.

நன்னகரார் வேட்களத்தார் வேதநாவார்—வீழிமிழலை. திருநா.

269. திருவேட்டக்குடி. (சோழநாடு)

காரைக்காலிலிருந்து ஐந்தரைமைல் தொலைவில் உள்ளது. அருச்சுனன் தவம் செய்து கொண்டிருக்கையில் சிவபெருமான் வேடரூபமாகத் தோன்றிய தலம்.

சுவாமி : திருமேனியழகர்.

அம்பிகை : சாந்தநாயகி.

தீர்த்தம் : சத்திய புஷ்கரிணி.

தேர்ந்தவேட் டக்குடி திருமேனி யழகர்
சாந்த நாயகி சத்தியபுட் கரிணி. (சிவ.)

விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி—பொது. திருநா.

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்
கொளிநீர்ச் சுடர்ப்பவளம்

தெண்டிரைக்கள் கொணர்ந்தெறியுந் திருவேட்டக்
குடியாரே
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

270 திருவேதிகுடி (சோழநாடு)

தஞ்சாவூரிலிருந்து 6 மைல் தொலைவிலுள்ள திருக்கண்டி யூரிலிருந்து இத்தலம் தென்கிழக்கே 2 மைல் தொலைவி லுள்ளது. பிரமன் பூசித்த தலம்; வேதி-பிரமன். வேதங்கள் பூசித்த தலமாகையால் வேதபுரியென்றும் வழங்கும். பங்குனி 13—15 தேதிகளில் உதய காலத்தில் சூரிய கிரணம் சுவாமியின் மீது படிவதால் சூரிய பூஜை நடைபெறுவதாக ஐதிஹ்யம் உண்டு. இத்தலப்பிள்ளையார் வேதங் கேட்கச் சாய்ந்திருக் கின்றார்; வேதப்பிள்ளையார் என்று பெயர். திருஞானசம்பந் தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலம். 'கையது காலெரி' எனத் தொடங்கும் இத்தலத் தேவாரப்பதிகத்தை இத் தலத்தைத் தரிசிப்பதற்கு முன்பே திருநாவுக்கரசர் பாடி யிருக்கின்றனர்.

சுவாமி : வேதபுரீசர்.
அம்பிகை : மங்கையர்க்கரசி.
தீர்த்தம் : சுந்தர தீர்த்தம்.

மேயவே திக்குடி வேத புரீசர்
ஆயி மங்கையர்க் கரசி சுந்தரமாம். (சிவ.)

கையது காலெரி நாகங் கனல்விடு சூலமது
வெய்யது வேலைநஞ்சுண்ட விரிசடை
விண்ணவர்கோன்
செய்யினில் நீல மணங்கமழும் திருவேதிகுடி
ஐயனைஆரா அமுதினை நாமடைந் தாடுதுமே.
(திருநா. 4-ஆம் திரு.)

சொற் பிரிவி லாதமறை பாடிநட
மாடுவர் தொலானையுரிவை
மற்புரி புயத்தினிது மேவுவர்எந்

நாளும் வளர் வானவர்தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமுன்
அயின்றவ ரியன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நகர்
என்பார்திரு வேதிகுடியே (திருஞா. 3ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்:

வேதிகுடியுளார் மீயச்சூரார்—வீழிமிழலை. திருநா.
குத்தங்குடி வேதிகுடி—பொது. திருஞா.
வேதிகுடி விசயமங்கை வியலூர்—பொது. திருநா.
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி—பொது. திருநா.

271. திருவேள்விக்குடி. (சோழநாடு)

குத்தாலத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது. ஓர் அரசகுமாரனுக்கு மணம்புரிய நிச்சயித்திருந்த பெண்ணை, மணம் நிறைவேறுமுன் தாய் தந்தையர் இறந்துவிடவே மண மகள் சுற்றத்தார் கொடதொழிய அரசகுமாரன் தவம்புரிய, சிவ பெருமான் ஒரு பூதத்தால் அப்பெண்ணை எடுப்பித்துக் கொண்டு வந்து அவனுக்குத் திருமண வேள்வியை முடிப்பித்த தலம். திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றும், சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றும் உள்ளன.

சுவாமி : கலியாணசுந்தரேசுரர்.
அம்பிகை : பரிமளசுகந்த நாயகி.
தீர்த்தம் : மங்கள தீர்த்தம்.

கனவேள் விக்குடி கலியாண சுந்தரர்
நனிபெறு சுகந்த நாயகி மங்களம். (சிவ.)

ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனற்
கங்கையை ஒருசடைமேல்
தாங்கினார் இடுபலி தலைகல
னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினால் உமையொடும் பகலிடம்
புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியார் இரவிடத்
துறைவர்வேள் விக்குடியே.
(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:

வித்தாய் மிழலை முளைத்தானை வேள்விக்குடி எம்வேதி யனை—பொது. திருநா.

272. திருவேற்காடு (தொண்டைநாடு)

ஆவடியிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. மூர்க்க நாயனார் தலம். காடுவெட்டியாறு என்னும் பழைய பாலாற்றின் ஓரமாக உள்ளது.

மூர்க்க நாயனார் உருவம் துவார பாலகர்களுக்கு வட பால் உள்ளது. சிவபெருமான் அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய நிலையில் உமாமகேசுவரராக மூலஸ்தானத்தின் பின் புறம் காட்சியளிக்கும் தலம். விநாயகர் திருவுருவம் வலப் பக்கத்தில் இருக்கின்றது. இத்தலத்தைச் சார்ந்த நதித்துறை யில் சூழ்ந்துள்ள 7 சிவஸ்தலங்களிலிருந்து சித்திராபௌர்ணமி யில் சுவாமிகள் எழுந்தருளுவது வழக்கம்.

திருவேற்காடு பாலாம்பிகையையும், திருவொற்றியூர் வடிவாம்பிகையையும் திருவலிதாயம் ஜகதாம்பிகையையும் ஒரே நாளில் தரிசித்தால்சிறப்பு. சூரசம்ஹாரம் செய்தபின் முருகவேள் பூசித்த தலம்.

புராணம் அச்சிடப்பட்டுள்ளது. சுப்பிரமணியர் தலம் வேல் விசேடம். தீர்த்தம் உண்டு.

சுவாமி : வேதபுரீசுரர், வேற்காட்டீசர்,
அம்பிகை : வேற்கண்ணியம்மை, பாலாம்பிகை.
தீர்த்தம் : வேலாயுத தீர்த்தம்.

வேற்காட் டுறைதிரு வேற்காட் டீசர்
வேற்கண் ணிநாயகி வேற்கண்ணி தீர்த்தம்.

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே.

(திருஞா. 1-ஆம் திரு.)

273. வைகன்மாடக்கோயில். (சோழநாடு)

ஆடுதுறையிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. சிவபெருமான் வைகும் இடமாதலின் வைகல் என்னும் பெயர் பெற்றது. கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில் இத்தலத்தின் மேற்குத்திசையில் உள்ளது. திருஞான சம்பந்தர் பாடிய தலம். திருமகளும் திருமாலும், பிரமனும் தவம் செய்து வழிபட்ட தலம். ஈசனும் யானையும் பூசை செய்த தலம்.

சுவாமி : வைகனாதர்.
அம்பிகை : வைகாலம்பிகை, கொம்பில் இளங்கோதை.

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை எந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வேறு தலத்தில் வழங்கும் தேவாரப் பாடல்:

வலஞ்சுழியார் வைகலின் மேன்மாடத்துள்ளார்—
வீழிமிழலை—திருநா.

274. திருவைகாவூர் (வில்வவனம்) (சோழநாடு)

சுந்தரப்பெருமாள் கோயில் இரயில்வே நிலையத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்தும் ஐந்து மைல்.

சிவராத்திரி விசேடம். வேடன் புலிக்குப் பயந்து வில்வ இலையைப் பறித்துப் போட்ட வரலாறு இங்கு நடந்தது. ஓமாம்புலியூர் என்ற தலத்திலும் இந்த ஐதிஹ்யம் உண்டு. கோயிலில் துவாரபாலகர் இல்லை. இயமனைத் தண்டிப்பதற் காக நந்தி திரும்பியிருக்கிறாராம். எல்லா நந்திகளும் திரும்பியே உள்ளன. சப்த மாதர்கள் உந்தாலமுனிவரால் தமக்கு ஏற் பட்ட சாபத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு இத்தலத்திற்கு வந்து இயம தீர்த்தத்தில் நீராடி தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்து வணங்கி வேண்ட அட்ட மாசித்திகளையும் திரும்பப் பெற்றனர்.

திருஞானசம்பந்தர் பாடியதலம்.

சுவாமி : வில்வவன நாதர்.
அம்பிகை : வளைக்கை நாயகி.
தீர்த்தம்: இயம தீர்த்தம், பிரம தீர்த்தம், அக்னி தீர்த்தம்.

வியன்வை காவூர் வில்வ வனேசர்
குயிலுரை வளைக்கை வல்லிகூற் றுவனாம்.

கோழைமிட றாகவி கோளுமில வாகஇசை
கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழு
மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும்
வைகாவிலே.

(திருஞா. 3-ஆம் திரு.)

இத்தலத்தைப்பற்றி வழங்கும் தேவாரப்பாடல்:
வெஞ்சமாக்கூடல் மீயச்சூர் வைகா—பொது. திருநா.

275. திருவிடைவாய் (சோழநாடு)

கொரடாச் சேரியிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது. கூத்தாநல்லூர் செல்லும் வழியில் செல்ல வேண்டும்.

திருமுறை கண்ட காலத்தில் கிடைக்காமல் 1917-ஆம் ஆண்டு அரசாங்கக் கல்வெட்டிலாகாவினரால் கண்டு பிடிக்கப் பட்டதலம். சம்பந்தர் பதிகம் கல்வெட்டில் உள்ளது. 11-ஆம் திருமுறை கூேத்திரக் கோவையில் இத்தலம் 'பாண்டவாய்', இடைவாய் எனக் கூறப்பட்டுள்ளது. விடையவன் என்னும் சூரிய குலத்தரசன் கட்டியது. இடபதேவர், ஆதிசேடர், அகத்தியர், அத்திரி முதலியோர் பூசித்த தலம். திருவிடைவாசல் என வழங்கப் பெறும். திருநாவுக்கரசர் இத்தலத்தை 'விடைவாய்க்குடி' என்று அடைவுத் திருத்தாண்டகத்தில் கூறுகிறார்.

சுவாமி : புண்ணியகோடிநாதர்.
அம்பிகை : அபிராமி.
தீர்த்தம் : புண்ணியகோடி தீர்த்தம்.

மறியார் கரத்தெந்தை யம்மாதுமையோடும்
பிறியா தபெம்மான்உறையும் இடமென்பர்
பொறிவாய் வரிவண்டுதன்பூம் பெடைபுல்கி
வெறியார் மலரில் துயிலும் விடைவாயே.

(திருஞா. புதிய பதிகம்.)

அநுபந்தம் 1.

1. அகத்தியான் பள்ளி : வேதாரண்யத்தில் ஈசுவரன் கல்யாணக் காட்சியைத் தரிசிக்க வந்த அகத்தியர் பர்ணசாலை கட்டிக் கொண்டு தங்கிய இடமாதலால் இத்தலத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று. மூல லிங்கத்தின் பின்புறச் சிலையில் பார்வதி கல்யாணக் கோலம் அமைந்திருப்பது அகத்தியருக்கு ஈசுவரன் கல்யாணக் கோல தரிசனம் இங்கு அருளிய ஐதிஹ்யத்தைக் காட்டுகிறது. மான் பூசித்த தலம்.

ஸ்வாமி: அகஸ்தியேசுவரர்.

ஸந்நிதி: கிழக்கு.

அம்பிகை : ஸௌந்தர நாயகி.

ஸந்நிதி: தெற்கு.

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம் கடலில்.

பிராகாரம் : ஒன்று.

2. அஞ்சைக்களம் : சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''மகோதை அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே'' என்று பாடியுள்ளார்.

மகோதை: சேர ராசதானியாகிய கொடுங்கோளூரின் பரியாய நாமம்; பெரிய சேரமான் 4.

கொடுங்கோளூர்: சேர நாட்டில் இத்தலத்துக்குச் சமீபத்தில் உள்ளதோரூர்; இக்காலத்துக் கொடுங்கலூரென்று வழங்குகிறது.

ஸ்வாமி: வஞ்சிக் குளேசுவரர்.

ஸந்நிதி: கிழக்கு

அம்பிகை: பார்வதி நடராஜா உண்டு.

மற்ற இடங்களில் இல்லை.

3. அண்ணாமலை : (அருணசலப் புராணக் குறிப்புக்கள்) இத்தலம் அண்ணாவெனவும் வழங்கும். விநாயகர்: யானை திறைகொண்ட விநாயகர்.

ஸ்பாபதி : அதிருங்கழலார்.

தேவி: உண்ணாமுலையம்மை,

சுப்பிரமணியர்: கோபுரத்திலும் வடக்கு வீதியிலும் எழுந்தருளியுள்ளார்.

துர்க்கை: அம்பிகையின் ஏவலாற் சென்று மகிடனைச் செற்றனள்.

மலைநான்கு: கீழ்த் திசையில் அர்க்கமலையும், தெற்கில் தேவமலையும், மேற்கில் தண்டமலையும், வடக்கில் திரிசூலகிரியும் உள்ளன.

ஆறு 4: பெண்ணை, சேயாறு, கபிலை, திருநதி, போகலிங்கம், அருணைபுரி.

மலையின் பெயர்: மலை மருந்து; மரணபவ மருந்தானமையின்.

அருணகிரி: சிவ பூசை காமிகாகமப்படி.

தீர்த்தம்: 360.

பிரம விஷ்ணுக்களுடைய பிரார்த்தனையால் மலையின் கீழே ஸ்வாமி சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளியிருக்கிறார்.

திருநதி: வடக்கு; தீர்த்தச் சருக்கம், 20
சோணைநதி: தெற்கு; தீர்த்தச் சருக்கம் 20
புண்ணிய நதி: மேற்கு; தீர்த்தச்சருக்கம் 21
புண்ணியாற்றூர்: தீர்த்தச் சருக்கம் 21

சேயாறு: திருநதிக்கு வடக்கு தீர்த்தச் சருக்கம், 22
முருகக்கடவுளாலழைக்கப் பெற்றறது இது.

இத்தலத்தில் ஐந்து முகூர்த்தத்திற்கும் ஐந்து மடங்கள் உண்டு: 1. ஓங்காரத் தேவர் 2. அண்ணா மலைத்தேவர், 3. பசுபதித்தேவர் 4. திருமாளிகைத்தேவர் 5. ருத்திரதேவர்.

அண்ணாமலை : நேர்வடக்கே ஆதி அருணாசலம் உண்டு.

4. அதிகை: இது சிவபெருமான் திரிபுர சம்ஹாரஞ் செய்த தலம். இது பண்ணுருட்டி ஸ்டேஷனுக்கு வட மேற்கில் மூன்று மைல் தூரத்திலுள்ளது.

ஸ்வாமி : வீரட்டானேசுவரர்.
தேவி: பிரகந்நாயகி.
ஸந்நிதி: கிழக்கு முகம்.
தீர்த்தம்: சூல தீர்த்தம்: இது வடக்குப் பிராகாரத்தில் ஒரு கிணற்று வடிவமாக உள்ளது.
விருக்ஷம்: கொன்றை.

ஆறு: கெடில நதி; இது ஸந்நிதியில் ஓடுகின்றது.

விமானம்: பல தேவர்களையும் உறுப்பாகப் பெற்ற தேர் வடிவமாக விளங்கி மிக்க அழகாக இருக்கிறது. இதில் பிரதிமைகள் மிக அதிகம்.

கெடிலத்தின் தெற்கே இரண்டுகாத வழிக்கப்பால் இருக்கும் வேகாகக் கொல்லை யென்ற இடம் திரிபுரங்களின் தலைவர்களாகிய மூவரும் வேகாமல் இருந்தவிடமென்று சொல்லுகிறார்கள்; அது மட்டும் வெள்ளை நிறமாக இருக்கிறது.

இத்தலத்தில்: உபயபாத நர்த்தனம். நவதாண்டவபுரங்களில் ஒன்று.

தீர்த்தம்: கடில நதி. இது கருடநதி எனவும் வழங்கும். (சூத)

இது வீரையாற் பூசிக்கப் பெற்றது.
வீரை—பத்திரகாளி.

தென் திசைக் கங்கை யென்று இத்தல நதியாகிய கெடிலம் திருநாவுக்கரசரால் பாராட்டப் பெற்றுள்ளது.

5. அம்பர்: இத்தலத்திலிருந்த சோமாசி மாற நாயனாருடைய வேண்டுகோளின்படி இவர் செய்த யாகத்திற்கு நேரே ஸ்ரீ தியாகராஜர் எழுந்தருளி அவிர்ப்பாகத்தை ஏற்றருளினரென்பது ஒரு வரலாறு. இது பக்த விலாஸத்திலும் திருஅம்பர்ப் புராணத்திலும் கூறப்பெற்றுள்ளது. இத்தலத்துக்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகத்தால் கோச்செங்கட்சோழன் இத்தலத்தில் பிறந்தவனென்று தெரிகிறது.

சுவாமி: பிரமபுரீசுவரர்.
அம்பிகை: சுகுந்த குந்தளாம்பிகை.
விநாயகர்: அச்சந்தீர்த்த விநாயகர்.
தலத்தின் வேறு பெயர்கள்: இந்திரபுரி, பிரமபுரி.

ஆகாச நகரம். ஆகாச கிரி; அம்பன், அம்பர னென்ற இரண்டு அசுரர்களைப் பத்திரகாளி கொன்ற இடம்.

அம்பாகரத்தூர்: மேற்படி இடத்திற்குச் சமீபம்; அம்பனைப் பிடித்தது காளியாகுடி

கொல்லாகுடி: த்வம்ஸாபுரி.

யுத்தகளம்: ஒரிடம்: சிலவேலி நிலம் ஒன்றுக்கும் உபயோகமின்றி இருக்கிறது. அம்பல் மேலை வீதியிலுள்ள விஷ்ணு

கோயிலில் கர்ப்பக் கிரகத்தில் காளி உள்ளாள். மற்ற விஷ்ணு கோயில்களில் காளியில்லை. புன்னாகாரணியம். பிரமன் பூசித்தது. கோச் செங்கட்சோழர் விக்கிரகம் உண்டு.

6. அம்பர்மாகாளம்:

ஸ்வாமி: மஹாகாளேசுவரர்; இவர் சந்நிதி கிழக்கு.

அம்பிகை: பயக்ஷயநாயகி. சுவாமிக்கு வலப்புறமாக அம்பிகை சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளது. தீர்த்தம்: அமிர்த பிந்து தீர்த்தம். ஸோமயாஜி, அவர் மனைவி விக்கிரகங்கள் உள்ளன.

7. அழுந்தூர்: மேற்குப் பார்த்த சந்நிதி.

சுவாமி: வேதபுரீசுவரர்.

அம்பிகை: சௌந்தரநாயகி.

தீர்த்தம்: சித்தாமிர்த தீர்த்தம்.

விருக்ஷம்: சந்தன மரம், சந்தனாரணியம் என்றும் இத் தலத்திற்குப் பெயர் உண்டு. கோயில் துவஜஸ்தம்பத்துக்கு வட புறம் கிழக்குப் பார்த்திருக்கும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமான் திருநாமம் ஸ்ரீ மடேசுவரர் என்பதாகும்; இந்த லிங்கந்தான் ஆதியில் உள்ளதென்றும் வேதபுரீசுவரர் என்ற சிவலிங்கப் பெருமான் பின்பு உண்டானவ ரென்றும் சொல்லு கின்றனர்.

இத்தலத்துக்கு வடக்கேயுள்ள ஸர்வமான்ய அக்ரஹாரத் தின் மேற்புறமுள்ள கடம்பைக் குளத்தின் வடகரையில் கடம்ப வனேசுவரரென்று ஒரு சிவலிங்கப் பெருமானிருந்தனர். அவரை இக்கோயிலின் தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதிக்கு மேற்புறமாக வைத் திருக்கின்றனர்.

8. ஆக்கூர்த்தான் தோன்றிமாடம்.

சிதம்பர விநாயகர் கோயில்: ஊருக்கு மேற்கே சாலைக்கு வடக்கேயுள்ளது.

பொய்யாத பிள்ளையார் கோயில்: ஸத்யாக்குப் பிள்ளை யார் கோயிலின் பின்புறத்துள்ள தீர்த்தத்தின் தென் கரையி லுள்ளது. சிறப்புலி நாயனாருடைய திருவுருவம் தெற்குப் பிரா காரத்தில் தெற்கே யுள்ளது. தீர்த்தங்கள் ஐந்துள்ளன. இத் தலத்தில் மூன்று விஷ்ணு ஆலயங்களும் ஒன்பது சிவாலயங்களு முள்ளன.

1. கைலாஸநாத ஸ்வாமி கோயில். 2. செங்கழுநீர் ஓடைத்திடல். 3. லிங்கத்தடித்திடல். கிழக்கே மாதவப் பெருமாள் திடல். இதில் மிகப் பழையதான பொன்முசுட்டைச் செடிப்பரப்பின் கீழ் மாதவப் பெருமாள் இரண்டுநாச்சியாரோடும் எழுந்தருளியிருக்கிறார்.

9. ஆடானை: இத்தலத்துக்கு அஜகஜபுரமென்பது ஒரு திருநாமம். அஜம்—ஆடு. கஜம்—யானை.

10. ஆப்பனூர்:

அவந்திநகர்ச் சந்திரசேன மகாராஜன் ஒரு பார்ப்பனியைச் சேரவிரும்பி அவள் கணவனைக் கொன்றாவது அவளைக் கொணர்கவென்று தன்மந்திரி சுகுணன்பாற் சொல்ல, அமைச்சன் அவனைக் கொன்று அவளை அரசன்பாற் புகுத்தலும், அப்பிரம ஹத்தி அரசனையும், மந்திரியையும் அலைப்ப வருந்தி அகத்தி யோபதேசத்தாலிடப தீர்த்தம் வைரவக் கடவுளுக்குப் பிரம ஹத்தி நீக்கியதை யுணர்ந்து அமைச்சனோடு அரசனும் அத்தீர்த் தத்தாடி சிவதரிசனஞ் செய்து கயிலைபுக்கு உய்ந்தார்கள்.

அளகையென்னும் ஊரில் பாட்களனென்னும் அந்தணன் வேசைக்குப் பொருளீவான் திருடி ஒருகால் அறுப்புண்டு தவழ்ந்து விதிவசத்தால் இடபபுரத்தில் இடபமடுவில் மூழ்கலும் முன்போற் கால்வளரப் பெற்றுக் கிலகேசனைத்துதிப்ப இவையெல்லாங் கேட்ட பாண்டியன் அவனை மந்திரியாக்க, சின்னாள் அத்தொழில் பார்த்துச் சிவசாயுச்சியமடைந்தான்.

இந்திரன் அகலிகையைச் சேர்ந்து சகசிரபகவானாயம் மடு மூழ்கி சகசிர அம்பகனானான். வைகாசி மாதம் தேர்விழா நடத்தித் தன்னாடுற்றான்.

மதுரைச் சோழாந்தக பாண்டியன் கீழ்த்திசையில் ஒரு நாள் வேட்டமாடச் சென்ற பொழுது, தனித்து ஒருமானைத் துரத்தியெய்து, மரத்தடியில் தூங்கினான். மந்திரி முதலானோர் தேடிக் கொண்டு சைத்தியோபசாரஞ் செய்ய, அவன் எழுந்து, 'சோமசுந்தர' என்றனன். பின்பு அமைச்சர்கள் பலவாறாக அமுதுண்ண வேண்டவும் சுயம்புலிங்க தரிசனஞ் செய்தாலன்றி உண்ணேனென்றதனால் அவர்கள் கொன்றை மர நிழலில் ஓர் ஆப்பை நிறுவி, இலிங்கமாகக் காட்டி அரசனுக்குப் பசியை நீக்கினார்கள். பின்பு அரசன் கோயிற்கட்ட வெண்ணி இலிங்கத் தருகே வரப்பின் வருபவர் போன்று இலிங்கஞ் செய்தோரொளித்

தார்கள். பின் சிலரோடு மன்னன் வந்து பார்த்து விரதபங்கம் நேர்ந்ததென்றஞ்சிப் பல உண்மை கூறி இவையுண்மையானால் இவ்வாப்பு இலிங்கமாகுக; இன்றேல் உயிர் விடுவேன் எனச் சிவபெருமான் ஆகாசவாணியால் விரதபங்கமன்றெனவும் ஏழ் நிலம் ஊடுருவி ஆப்புடைய ஈசனென்றானேம் எனவுங் கூற மகிழ்ந்து பின் திருப்பணி முதலியன செய்து சுகுணபாண்டியனைப் பெற்று அவன்பால் அரசுரிமையை நிறுவி ஆப்பனூருற்றுச் சிவதரிசனஞ் செய்து சிவலோகம் அடைந்தின்புற்றான்.

சுகுணபாண்டியன் அரசாளுங்கால் ஓராண்டு வற்கடகால மாக ஆப்பனூரந்தணர் பருத்திப் பயிர்விளைத்தார்கள். கடவுள் பங்குமட்டிலும் நெற்பயிரை ஆதி சைவன் வளர்த்தான். இது கண்ட மற்றையோர் கொதித்து இருந்த நீரைப் பருத்திக் கிறைத்துச் சிவாபராதஞ் செய்தார்கள். பின்பு ஆதிசைவன் கடவுளுக்குத் தெரிவிப்ப அவர் நாம் மனத்திற் கிசைந்த இடஞ் செல்வேம். நீ குடும்பத்தோடும் வா இவ்வூரில் கல்மழை பெய்யுமென அவன் எவ்வாறு தெரிந்து வருனேனென, இடபச் சுவடுங் கொன்றைப் பூவுங் கண்டு வாவென்று சொல்லி விட்டுத் திருவாலவாய்க் கருகில் வையை வடகரையிலிருக்க நினைத்த பொழுது இடபமானது பெருமானை நோக்கி, நீ இங்கே இருக்க வேண்டும் தலப்பெயரும் நின்பெயரும் என் சம்பந்தம் பெற வேண்டுமென அவ்வாறியைந்து தனக்குத் தென்பால் ஒருவிற் கிடையளவிலுன் பெயரால் ஒரு குளம் உண்டாக்கி அந்நீர் கொண்டாட்ட வென்றான். அவ்வாறு இடப நாயகன் செய்ய அவ்விடபதீர்த்த மகிமையைக் கூறி நந்தியை மகிழ்வித்து அம்மை விநாயகாதிகளோடும் ஆங்கமர்ந்தான். அவ்விடம் இடபபுரமென வும் கடவுள் இடபபுரேசனெனவும் விளங்கும். ஆப்பனூரில் இருந்த சிவாபராதிகளெல்லாரும் கல்மழையால் அழிந்தார்கள்.

பின்பு அருச்சகன் சொன்ன வழியே நடந்து இடப புரத்தை யடைந்து பூசையில் நிவேதிக்க அன்னத்துக்கு என்ன செய் வேனென, வையை மணலை உலையிலிட்டாற் சோறாகும். அதை நிவேதித்து அச்சோற்றாற் குடும்பமோம்புக ஈதென்று வெளிப்படுமோ. அன்று முதற் சோறாகாது என்றார். அதைக் கேட்ட அருச்சகன் ஒருவரும் அறியாது இவ்வாறு செய்து வருங் கால் அவன் மனைவி ஊர் முழுதும் பசியால் வருந்தவும் தமக்கு அன்னக் குறைவின்மையைக் கருதித் தன் கணவனை விசாரித் தாள். அவன் நான் சொல்லேன்; சொல்லில் நாளை முதற் சோறு கிடைக்காதென்றான். மனைவி உயிர் விடுவேன் என்று சாகஸம் செய்தாள். அதற்காகச் சொல்லிவிட்டு மறுநாள்

மணலெடுத்து அட்டுச் சோறாகாமையால் கடவுளிடம் நிகழ்ந்த வற்றைத் தெரிவிக்க, அவர் நாம் சுகுண பாண்டியனிடம் நேற்று உனக்காகக் கனவிற் போய்ச் சொன்னோம். அவன்பால் யாவுஞ் சொல்லென்றார். அவ்வாறு செய்ய அரசன்தான் கண்ட கனவையும் அருச்சகன் வரவையுங் கருதி இடபபுரத்தையடைந்து துதித்துக் கோயில் முதலிய கட்டிக் குறைவறப் பூசிப்பித்து அன்ன வினோதனென்று கடவுளை வழிபட்டுப்பின்பு மகப்பெற்று வாழ்ந்தான்.

குபேரன் அத்தியோப தேசத்தால் இடபதீர்த்தமாடி இடப புரேசனைத் தரிசித்துத் தவஞ் செய்து நிதிக்கிறைமையும் திசாதி பத்தியமும் பெற்று இடபமிசை பெருமானோடு தோன்றிய உமையைப் பார்த்து நம்மினும் மிக்க தவம் செய்தாளோ என்று ஒரு கண்ணால் குறிப்பிட்டுப் பார்த்தான். பின்பு உமையவள் கோபத்தால் கண்ணும் உயிரும் இழந்து அரனருளால் உயிரும் உமையருளால் பொற்கண்ணும் பெற்றுக் குபேரனென வாழ்ந்தான். (குபேரன்–குற்சித சரீரன்).

கஞ்சனூரிலுள்ள சுதரிசனர் என்னும் உத்தம பிராமணர் சிவதீர்த்த யாத்திரையில் இடபபுரத்து வசிக்கையிலொரு நாளிரவிற் கோயிலுள் நிட்டை புரிந்தார். அர்த்தாயாமமான பிறகு இவருக்குக் கோயில் மெய் காவற்காரனென்று வீடுவரை துணையாய் வந்து சுதரிசனர் ஈந்த சோற்றைத் தான் மனைவி மக்களோடுண்டு பலி பீடத்திலும் இறைத்துத் தன் முடிமீதும் சுமந்தார். காலையில் அடியார் கண்டு வருந்திக் காவலாளிகளை அரசன்பாற் சொல்லி வருத்துவிக்கச் சுதரிசனர் சிவனென்று என்பின் வந்தோனைத் தெரிவியென்ன அவனை விசாரித்து, அவனல்லாமையைக் கண்டு இடபபுரேசனே இக்கோலமானானென்று தெரிந்து யாவரும் மகிழ்ந்தார்கள்.

அகத்தியர் அரிச்சந்திரனைச் சேர்ந்து நின் ஜன்ம நாளில் ராகுவுறலாற் பீடை படுத்தும்; தீர்த்த யாத்திரை செய்தல் நலமென அவ்வாறு அரசன் பல தீர்த்தமுமாடி இடபபுரத்திடப தீர்த்தத் தாடி உரோமசரால் ஓரிடையன் சூலமிட்ட எருதைச் சிவபிரானாகக் கருதினமைக்குப் பெருமானருளியது கேட்டு அவ்வுரோமசர் மொழிப்படி 1008 நூதனகிரகங்களைக் கட்டி அந்தணர்க்களித்துத் துன்பம் நீங்கித் துந்துமாரனென்னும் பெயருடைனாய் மெய் பேசி வாழ்ந்தான்.

(ஆப்பனூர்ப் புராண வசனம் கையெழுத்துப் பிரதி எண். 88a)

11. ஆப்பாடி: சண்டேசுவரர் சிவபூஜை செய்து முக்தி பெற்ற ஸ்தலம். இத்தலம் திருப்பனந்தாளைச் சார்ந்தது. மண்ணியாற்றின் தென்கரையிலுள்ளது.

12. ஆமாத்தூர்: இத்தலத்தைச் சார்ந்த ஒரு நதி 'பம்பை' என்னும் பெயருடையது.

13. ஆரூர்: இத்தலத்துக்குரிய ஆகமம் காமிகம். விராட் புருஷனுடைய மூலாதாரமெனவும் பூமிதேவியின் இதய கமல மெனவும், பஞ்ச பூதத்தலங்களுள் பிருதுவித்தலமெனவும், தேவர் கள் கறையான் வடிவு கொண்டியற்றிய புற்றை இடமாகக் கொண்டு இறைவன் சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளினமை யின் வன்மீக புரமெனவும், தன்பாற் பிறந்தவர்களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க முத்தி தருவதெனவும், தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங்களாதலின் ஸ்பரிசதோஷம் முதலியன இல்லாததெனவும், நன்றி கொன்ற பாவத்தையும் தீர்க்கும் பெருமை வாய்ந்ததெனவும், ஸ்ரீ காசிக்கும் தில்லைக்கும் மேலான தெனவும், ஸப்த விடங்கத் தலங்களுள் முதலாவதெனவும், அம்பிகை தவஞ் செய்தமையின் பராசக்தித்தலமெனவும், திரு மகள் வழிபட்டுப் பேறு பெற்றமையால் கமலாலயம் ஸ்ரீ புரம் எனவும், வீதிவிடங்கராகிய ஸ்ரீ தியாகேசர் எழுந்தருளியிருத்தலின் வீதிவிடங்கமெனவும் இத்தலம் கூறப்படும்.

சோழ அரசர்கள் முடிகவித்தற்குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன்றாக இருந்ததன்றி அவர்களுடைய இராசதானியாக உள்ள தும், சங்கர சேவகனென்னும் சோழ மன்னனது வேண்டுகோளின் படி ஸ்ரீ தியாகேசர் அரச வடிவந்தாங்கிப் பல வருடங்கள் அரசாட்சி செய்தது, மனுநீதிச் சோழர் ஒரு பசுவின் குறையைத் தீர்த்தற் பொருட்டுத் தம் செல்வப் புதல்வன் மீது தேரைச் செலுத்தித் திருவருளை வெளிப்படுத்தியது, ஸ்ரீதியாகேசர் பாதம் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவை தன்பால் தூதன்று சென்றது, ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்தது ஆகிய நிகழ்ச்சிகளுக்கு இடமாக உள்ளதும் இத்தலமே.

கழற்சிங்க நாயனார், செருத்துணை நாயனார், சோமாசி மாறர், தண்டியடிகள் நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடிகள், விறன்மிண்ட நாயனாரென்பவர்கள் இங்கே வழிபட்டுப் பேறு பெற்றனர்.

ஸ்தலவிநாயகர்: வாதாவி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர் முதலியோர்.

ஸ்வாமியின் திருநாமங்கள்: புற்றிடங் கொண்டார், வன்மீக நாதர் முதலியன.

அம்பிகைகளிருவர்: (1) கமலாம்பிகை, (2) அல்லியங் கோதை.

ஸ்தலத்தின் மற்றைத் திருநாமங்கள்: ஆடகேச்வரம், கலி செலாநகரம், சக்திபுரம், சமற்காரபுரம், தேவயாகபுரம், தேவாசிரயம், பிரணவஸ்தலம், முசுகுந்தபுரம், மூலாதாரநகரம், ஸ்ரீ நகரம், ஸ்கந்தபுரம் முதலியன.

தீர்த்தங்கள்: உருத்திரகோடி, கயை, சங்க தீர்த்தம், சர்வ தீர்த்தம், சூரியபுட்கரிணி தேவதீர்த்தம், வாயு தீர்த்தம், விசு வாமித்திர தீர்த்தம் முதலியன. இவற்றுள் தேவ தீர்த்தமென்பது கமலாலயமென்றும் கூறப்படும். இதன் நாற்புறத்தும் 64 கட்டங்கள் உள்ளன. பண்டைக் காலத்தில் இதில் ஒரு யாகம் நடந்த பொழுது நடுவ நாயனாரென்னும் சிவலிங்கப் பெருமான் பரிவாரங்களுடன் இதன் இடையே பிரதிஷ்டிக்கப் பெற்றாரென்று திருவாரூர் மாலையால் தெரிகின்றது.

வழிபட்டுப் பேறு பெற்றோர்: அகத்தியர், அசன், அரிச் சந்திரன், இடையனொருவன், இந்திரன், இராமன், கருணாகரத் தொண்டைமான், குலிசராசன், கேமசருமன், கோகரணர், கோடிமுனிவர், சங்க முனிவர், சண்டதருமன், சமற்காரவரசன், சனகாதி நால்வர், சித்தரொருவர், சித்தீசனென்னு மரசன், தசரதர், தசார்ணவ தேசத்தரசன், திரிசங்கு, திருடனொருவன், திருமகள், திருமால், துருவாசர், நளன், பசுவொன்று, பட்டின சாமி என்னும் வணிகன், பதஞ்சலி, பிரமர், மனுநீதிச்சோழர், முசுகுந்த சக்கரவர்த்தி, மூன்றரைக்கோடி புண்ணிய தீர்த்தங் கள், மன்மதன், மேனகை, வாணாசுரன், விசுவாமித்திரமுனிவ ரென்பவர்கள். ஸ்ரீ வன்மீகநாதர் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக் கிருகம் திருமூலட்டானமென்றும் பூங்கோயிலென்றும் கூறப்படும்.

இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கமலாம்பிகையின் மகுடம் கரண்ட மகுடமென்றும் ஆசனம் குட்டிகாசனமென்றும் கமலாம்பிகையின் தியான சுலோகத்தில் கூறப்பெறும். தியாகேசருடைய பக்கத்துள்ள தேவியின் திருநாமம் கொண்டியென்று தியாகராசலீலை திருநகரப் படலம் 175-ஆம் செய்யுளால் தெரிகின்றது. திருநாவுக்கரசு நாயனா ரளிச் செய்த ''கொக்கரைகுழல்'' என்னும் பதிகத்தில் 7-ஆம் செய்யுளில் கொண்டியென்னும் பெயர் வந்துள்ளது. இத்தலத்

தில் தியாகேசருடைய திருவிழாத் திருமுகத்தை எவ்விடத்திற்கும் சண்டேசநாயனார் அனுப்புதல் மரபு. இதனைத் திருவாரூர்ப் புராணத்தால் அறியலாம்.

அசலேசுவரர்: ஆனந்தேசுவரர்.

ஸித்தேஸ்வரர்: ஸோமநாதேஸ்வரர்.

ஸோமகலாம்பா ஸமேத வல்மீகேஸ்வரர். நீலோத்பலாம்பா ஸமேத தியாகராஜமூர்த்தி.

இத்தலத்தில் நீலோற்பல அம்மையார் விஜயை என்னும் சகியிடத்திருக்கும் சுப்ரமணியர் சிரசில் தமது இருகைகளையும் வைத்துக் கொண்டிருக்கின்றார்.

14. ஆரூர்ப்பரவையுண் மண்டளி: பரவையார் வழிபட்டு வந்த ஸ்தலம்; இதில் எழுந்தருளிய மூர்த்திக்குத் தூவாயரென் பது திருநாமம்.

15. ஆலங்காடு: வடாரண்யம் என்று வடமொழியில் வழங்கப்பெறும். இத்தலத்திற் சிவபெருமான் காளியோடு வாதஞ்செய்து ஊர்த்துவதாண்டவ மாடினமையின் திருக்கழுக் குன்றத்துலா (216 ஆம் கண்ணி) இவரை வாதாளன் என்று கூறுகிறது. தக்ஷிணாமூர்த்தியின் 24 முக்கிய தலங்களுள் ஒன்று. ஊருக்குக் கிழக்கே காரைக்காலம்மையாரைத் தழுவிய பழை யனூர் உள்ளது. நவதாண்டவ புரங்களில் ஒன்று.

இத்தலத்திற் செய்த தாண்டவம் சண்ட தாண்டவம். உலகிலுள்ள நடத்தானம் அறுபத்து நான்கினுள் இஃது உயர்ந் தது. மூலத்தான விநாயகரென்று ஒரு விநாயகர் உண்டு.

திருவாலங்காட்டுத் தோவரம்.

திருஞானசம்பந்தமூர்த்தி:

1. ''வஞ்சம் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகை கேட்டஞ்சும் பழையனூராலங்காடு''.

6. சிறுத்தொண்டர்கள்.

9. இத்தலம் முல்லை நிலத்தது. இதில் காட்டிலாடல் பெரும்பாலும் குறிப்பிக்கப்பட்டிருக்கிறது.

திருநாவுக்கரசு நாயனார் [முதற்பதிகம்—திருநேரிசை]. இப் பதிகத்துள் ஒன்பதொழிந்த ஒன்பது பாடல்களில் பைம்பொழிற் பழனையென்று பழையனூர் சிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

[திருத்தாண்டகம்]

இப்பதிகத்தில் எல்லாப் பாடல்களிலும் பழனை கூறப் பட்டுள்ளது.

[சுந்தரமூர்த்திநாயனார்]

1. தேவர்சிங்கம்—ஸ்வாமி பெயர்; புராணத்தில் வந்திருக் கிறது. பல புலவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

7. வண்டார்குழலி.

எல்லாத் தேவாரங்களிலும் சிவபெருமான் காட்டிலாடல் கூறப்பட்டிருக்கிறது.

16. ஆலவாய்: தத்தனென்னும் பாண்டியன் அரசாளுகை யில் சமணரனுப்பிய நாகம் உமிழ்ந்த விடவாற்றின் கொடுமை சிவபெருமானுடைய சடையிலிருந்த சந்திரனிடத்துள்ள அமுதத் துளியால் சமனமுற்று மதுரமாயிற்று. அதனால் இந்நகர்க்கு மதுரையென்பது பெயராயிற்று. திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு மாடங்கள் கூடும் இட மாகிய இத்தலத்துக்கு நான்மாடக் கூடல் என்பது பெயராயிற்று. நான்கு மாடங்களையும் கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்று சொல்லுவதும் உண்டு. மதுராநகரம் கன்னி, கரியமால், காளி, ஆலவாய்த்தருமமூர்த்தி என்பவர்களால் பாதுகாக்கப்படுவது. இத்தலம் சிவபெருமானுடைய படைவீடும் சத்திபீடமுமாகும்.

விருத்திர ஹத்தியைப் போக்குதற்குத் தேவலோகத்திற் பல விமானங்கள் இந்திரனாற் செய்விக்கப் பெற்றன. இந்திர விமானம் 8 யானை, 64 கணநாதர், 32 சிங்கங்களால் தாங்கப் பெறுவது (திருவிளை. இந்திரன் 83) இந்திர விமானத்திற்குத் தென்பாலுள்ளதாகிய வெள்ளியம்பலத்திற் பதஞ்சலி முனிவருக் காகச் சிவபெருமான் திருநடனம் செய்தருளினர். அது சொக்கத் தாண்டவமென்று பெயர் பெறும் [மதுரையில் திருக்கோயி லுக்குத் தென் பால் வெள்ளியம்பலமென்ற பெயருள்ள ஒரு மண்டபமிருத்தலும், அதில் இக்காலத்துப் பங்குனித் திருவிழா நடைபெறுதலும், வெள்ளியம்பலம் தென்பாலுள்ள தென்றற்கும் பங்குனி உத்தரத்தில் திருமணம் முதலியன நடை பெற்றதற்கும் சான்றாக உள்ளன.] இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெரு மானுடைய அழகிய வடிவத்தைக் கண்டு இந்திரன் சொக்கனென் னும் திருநாமத்தைச் சாத்தினன். இந்திரன் பெயரால் ஐராவதம் தாபித்துப் பூசித்த சிவலிங்கப் பெருமானுடைய

திருநாமம். இந்திரேசுவரர் என்பது. ஐராவத தீர்த்தக்கரையில் ஐராவதத்தால் பூசிக்கப் பெற்ற சிவ லிங்கப் பெருமான் ஐராவதேசுவரர் ஆவர். பழைய கணக்குகள் முதலியவற்றில் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளுக்கு திருவாலவாய்த் தம்பிரானார் என்ற திருநாமமே வழங்கப் பெற்று வந்ததாம். தம்பிராற் கேது குலம் என்பதனாலும் உணர்க. ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளின் விருதாவளித்திரு நாமங்களுள் பாண்டிய மண்டலாதீசுவரர் என்பதும் ஒன்று. ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் பாண்டிய ராசவாக வீற்றிருந்த பொழுது சுந்தரமாறன் என்று கைச் சாத்திட்டருளினர். சுந்தரமாறர் பதினாறு தெய்வ வருடம் அரசாண்டார்; கீரிடமணிந்து அரச போகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது பற்றி, சொக்கநாதர், அபிடேகச் சொக்கரென்றும் புழுகுநெய்ச் சொக்கரென்றும் திருநாமம் பெற்றனர். 'இந்திரனுக்கு முன்னம் ஆடிய ஈசான கோணத்தில் சிவபெருமான் பாண்டியனுக்காக மாறியாடி திருவடியின் மேற்கொடி கட்டினர். அதனால் அதிரவீசியாடுவார், மாறியாடிக் கொடியிட்ட பெருமானென்னும் திருநாமங்கள் அவருக்கு உண்டாயின. பழியஞ்சிச் சொக்கரென்பது மதுரேசருக்கு ஒரு திருநாமம்; பழியஞ்சிய திருவிளையாடலால் உண்டாகியது இது. ஸ்ரீசோம சுந்தரக் கடவுள் சங்கப் புலவராக எழுந்தருளியிருந்த பொழுது அவருக்கு மதுரைப் பேராலவாயா ரென்பதும் இறையனாரென் பதும் திருநாமம்; செந்தமிழாகரன் என்னும் திருநாமமும் உண்டு. ஆலவாயக் கோயிலின் கீழைமதிற்பால் அட்டாலை மண்டபம் தெய்விக்கம்மியராற் கட்டப் பெற்றது; வில்வீரவடிவங் கொண்டு அதில் எழுந்தருளி யானையை எய்த சிவபெருமானுக்கு அட்டாலைச் சேவகரென்பது திருநாமம். அம்பிகையின் திருநாமங்கள்: அங்கயற்கண்ணி, அருட்பெண், தமிழறியும் பேராட்டி, மரகதவல்லி, மாணிக்கவல்லி. தலவிநாயகர்: கற்பக விநாயகர் (இவர் கோயில் இப்பொழுது காணப்பட்டிலது), சித்திவிநாயகர்.

ஐராவதகணேசர்: ஆனையூருணிக் கரையில் ஐராவதத்தாற் பூசிக்கப் பெற்றவர்.

மதுரையிலுள்ள ஆலயத்தின் திருநாமம் ஆலவாய். ஸ்ரீசோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயிலிலுள்ள பெரிய பிராகாரத்தில் வாயுமூலையில் சங்கத்தார் கோயில் உள்ளது. இதில் முருகக் கடவுள், அகத்திய முனிவர், சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் ஆகிய இவர்களுடைய திருவுருவங்கள் முதலியன உள்ளன. பொற்றாமரைப் பொய்கையின் வடகரை மண்டபத்துள்ள தூணப் பத்திகளிலும் ஸ்வாமி கோயிலின் வாயு

மூலையின் கண் உள்ள ஆலயத்திலும் சங்கத்தார்களுடைய திருவுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. பொற்றாமரைப் பொய்கையிற் பாண்டியன் படித்துறையிற் கிழக்குத் தூணில், முதலில் இத்தலத்தைக் கண்டு மணலூரிலிருந்த குலசேகர பாண்டியனுக்கு இத்தல விசேடத்தைத் தெரிவித்த வணிகனாகிய தனஞ்சயன் வடிவம் உள்ளது.

பொற்றாமரைப் பொய்கை வடபாலுள்ள பாண்டியன் படித்துறையில் மேல் பாற்றூணில் குலசேகர பாண்டியன் வடிவம் உள்ளது. குலசேகர பாண்டியனென்பவன் தனஞ்சயன் சொல்லக் கேட்டு இத்தலத்தைக் கண்டு நகராகச் செய்வித்து இதனை ராசதானியாக்கிக் கொண்டவன். திருவாலவாய்த் திருக்கோயிற் கருவூலம் முதலியவற்றில் வைக்கப்பட்டு வழங்கி வருகின்ற முத்திரைகளாவன: 1. இடபமுத்திரை 2. மீன முத்திரை, 3. இராசகர நாகர் முத்திரை.

காஞ்சனமாலைக் கோயில்: எழுகடற்றீர்த்தத்தின் தென் மேற்கிலுள்ள மிகப் பழமையான கோயில்; இதில் ஜலகண்டேசுவரரென்ற சிவலிங்கப் பெருமானும் அவரைத் தரிசித்த வண்ணமாக அமைந்த காஞ்சனமாலையின் வடிவமும் உண்டு.

தீர்த்தங்கள்:

எழு கடல்: ஒரு தீர்த்தம்; காஞ்சனமாலைக்காக வருவித்த ஏழு கடல்களும் தன்பால் வந்து அடங்கப் பெற்றமையின் இஃது இப்பெயர் பெற்றது. சிவதீர்த்தமெனவும் வழங்கப் பெறும்.

ஐராவத தீர்த்தம் : ஐராவதத்தால் உண்டாக்கப் பெற்றது; யானையூருணியெனவும் கணபதி யேந்த லெனவும் வழங்கும்; மதுரைக்கு மேற்கேயுள்ளது. பொற்றாமரைப் பொய்கை கோயிலுக்குள் இருக்கிறது.

தலவிருட்சம்: கடம்பு.

அகத்தியர் பளிங்குத் துண்டு ஒன்றைக் கலைப்பீடமாக இத்தலத்தில் வைத்தார் என்று திருவையாற்றுப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மன்றம்: வெள்ளிமன்று.

மண்டபம்: மண்டபங்கணாயன், அன்னக்குழி மண்டபம், அட்டாலை மண்டபம்.

வாயில் : முத்தளக்குந்திருவாயில். மதுரைக் கோயிலின் வெளிமதில் 'கபாலி மதில்' என்னும் பெயருடையது.

17. ஆவடுதுறை:

இத்தலத்தில் தருமதேவதை தவஞ் செய்து இறைவனுக்கு வாகனமாகிய விடையாயிற்று என்று தலபுராணங் கூறுகிறது; ''ஆவினருங் கன்றுறையு மாவடுதண்டுறையணைந்து'' (பெரிய திருமுல—9.) இதனால் இத்தலத்தைக் கோவடு என்று சூதசங்கிதை கூறும். இத்தலத்துக்கு அருகிலுள்ள சாத்தனூரிலுள்ள அந்தணர் களில் ஆயிரவர் ஸ்ரீமாசிலாமணி யீசருக்குக் கைங்கரியம் செய்து வந்தாரென்று சேந்தனார் திருவிசைப்பாவால் தெரிகிறது.

துணைவந்த விநாயகரென்பவர் இத்தலத் திருக்கோயிற் கோபுர வாயிற்குத் தென்பால் கோயில் கொண்டவர். அழகிய விநாயகர் தட்சிணாமூர்த்தியின் கீழ்பாலுள்ளவர்.

18. ஆவூர்: இத்தலக் கோயிலின் பெயர் பசுபதீச்சரம்

19. ஆனைக்கா:

இறைவனது தீயுருவம் நீருருவமான தலம். ஸ்வாமி பெயர் கள்:

என்னானைக் கன்று: திருநாவுக்கரசு நாயனாரருளிச் செய்த (திருத்தாண்டகம்) ''முன்னானை'' என்னுந் தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது.

செழுநீர்த்திரள்: திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் (திருத்தாண்டகம்) முன்னானை என்னும் பதிகச் செய்யுளிறுதி யில் ஒவ்வொன்றிலும் கூறப்பட்டுள்ளது. 1—10. பின்னிரக்குஞ் செய்வான்: திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் ''முன்னானை'' 3; இத்திருநாமம் வடமொழியில் பச்சாதாபேசுவரர் என வழங்கு கும்.

ஆதி: சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரச செய்யுள் மூன்றாம் அடிகள் தோறும் வந்துள்ளது.

ஆரங்கொண்டான்: சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத் தில் ''தாரமாகிய'' என்னும் செய்யுளிற் கூறப் பட்டுள்ளது.

திருவானைக்கா தலக்குறிப்புக்கள்: (திருவானைக்காஉலா) ஆரம் பூண்டான்.

அழகுக்கு ஆருமொவ்வாதான். சம்பு நிழலில் 48 சதுர்யுகம் பூசை கொண்டவன்.

அம்பிகை: அகிலாண்டேசுவரி—வடிவுடையமங்கை.

தீர்த்தம்: பிரமபுட்கரிணி, இந்திர தீர்த்தம்.

தலப் பெயர்கள்: ஞானபூமி, அமுதீச்சரம்.

சுவாமி சந்நிதி சிறியது; திருச்சாலகம் என்னும் பெயருடையது. வயிராவிகள்: தாழக்குடி என்னும் ஊரில் இருக்கிறார்கள். இவர்கள் ஸ்வாமி தேரிலிருந்து சேர்த்திக்கு எழுந்தருளுகையில் உள்ளங் கழுத்திற் சலாகை குத்திக் கொண்டு கூடப் போவது இன்றும் வழக்கமாக இருக்கிறது.
மலைகள்: பிரமகிரி, சுவேதகிரி.

மூவர் நகருக்குள்ளே வாராமற் பாடியது. அப்பர்துறை ஈசானத்தில் கொள்ளிடத்திற்கு அப்பாலுள்ளது. நாற்பத் தெண்ணாயிரர், பதினெண்மடத்து முதலிகள்—பத்திதிக்காரர், சுவேதமலைக்கவுசிகர், சோழியர், பெரிய சரணமறையோர், சிவமறையோர், கங்காகுலத்தோர், ஆரியப்பட்டர் (காவல்)

ஒதுவார்: பஞ்சப் பிராகார உத்ஸவத்தில் திருவானைக்காத் திருப்பணி மாலை படித்து வருவதுண்டு. தெற்கு வீதியில் ரத்னம் பிள்ளை யென்று ஒருவர் இருந்தார்.

ஆவண வோலை வாசிப்போர்: கணக்கர். இப்போது இருக்கிறார்.

தேவரடியார், கைக்கோளர்.

கண்காணியோர் (உமாபதியார்) அறையிலுள்ள...அகம்படியார், ஆதிப்பெருஞ்செல்வர்.

திருநீறிட்டான்மதில்

இது திருவானைக்காகக்கோயிற் பெரிய திருமதில், ஸ்ரீ சம்புநாதர் சித்தர் வடிவம் கொண்டு எழுந்தருளியிருந்து, தம்முடைய வேலைக்குத்தக்கபடி பொன்னாகும் வண்ணம் வேலை யாட்களுக்குத் திருநீறளித்து கட்டுவித்தமையின் இஃது இப்பெயர் பெற்றது.

20. இடைமருதூர்:

இடங்கண்டீசுவரர்: காவிரிக்கு வடகரை ஸ்தலத்திற்குள் வரக்கூடாதென்று புறத்தே யிருந்து பாடிய மூவர்க்குக் காட்சி கொடுத்தவர்.

ஸ்வாமி: மகாலிங்கம்.

அம்பிகை: பெருநலமாமுலை

திருவாசகம்: 'பாதந்தன்னைக் காட்டிய பரிசும்' மாணிக்க வாசகர்க்குத் திருவடி தீக்ஷையான இடம். தெற்கு வீதியில் ஒரு கோயிலுண்டு; அதற்கு ஆளுடையார் கோயிலென்று பெயர். அதில் மூலஸ்தானம் திருவடிகள் இரண்டு அமைந்தபலிபீட மாக உள்ளது. அம்பிகையின் பெயர் யோகாம்பிகை.

இழுப்புணி வயல்: மாயூரம் போகிற சாலைக்கு வடக்கே யுள்ளது. வரகுண பாண்டியர் வடிவம்—வெளியிலிருந்து மூன்றாவதாவதாகிய பாண்டியன் தோரணத்தில் தென்புற முள்ளது. பட்டணத்துப் பிள்ளையார் வடிவமுள்ளது. ஐராவதத் துறை. கலியாண தீர்த்தத்திற்குக் கிழக்கே யுள்ளது.

இத்தலத்திலுள்ள சோமாஸ்கந்தமூர்த்தி (உற்சவமூர்த்தி)க்கு ஏகநாயகர் என்பது திருநாமம். மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய ஸ்ரீகாசி ரகசியம் என்னும் நூல் ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமி திருக்கோயிலிலுள்ள நூற்றுக் கால் மண்டபத்தில் அரங்கேற்றப் பெற்றது. மத்தியார்ஜு னம் என்ற பெயருக்கு வெண்மையாகிய இருதயாகாசத் தின் மத்தியென்று பொருள் செய்து இத்தலம் தகராகாசத் திற்குச் சமமானதென்று தத்துவார்த்தம் கூறுவர். தஞ்சை மகாராஷ்டிர மன்னரது வம்சத்தைச் சேர்ந்த அமரசிம்மரென்ப வர் இத்தலத்திலுள்ள ஸ்ரீ மகாலிங்க மூர்த்திக்கு வெள்ளிரதமும் மகாரதத்தின் முன்பு கட்டும் நான்கு குதிரை உருவங்களும் செய்வித்தளித்தவர். அந்த வெள்ளி ரதமும் குதிரையுருவங் களும் இப்பொழுது உள்ளன. இத்தலத்தில் வெளிப்பிராகரம் வலம் வருதலை அசுவமேதப் பிரதக்ஷிணம் என்பர். முறையாகச் சிலகாலம் இப்பிரதக்ஷிணம் செய்து கொடிய நோய்கள், பைத்தி யம், பேய்க்கோள் முதலியவற்றிலிருந்து நீங்கினவர்கள் பலர் உண்டு. இத்தகைய நிகழ்ச்சி இன்றும் நடைபெறுகிறது. இத் தலத் திருக்கோயிலிலுள்ள பாண்டியன் தோரணமென்ற வாயிலின் வலப் பக்கத்தே வரகுண பாண்டியருடைய திருவுருவம் அமைக்கப் பெற்றுள்ளது. கோயிலில் கணநாதர் பிம்பம் இருக் கிறது. ஹரதத்த சிவாசாரியார் இத்தலத்திலுள்ள காருண் யாமிர்தமென்னும் தீர்த்தத்திற்குப் படிக்கட்டுக்கள் கட்டுவித் தார். ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் இத்தலத்தில் புஷ்ய மண்டபமும் புஷ்ய மண்டபப் படித்துறையும் கட்டுவித்தவர்.

அருகநாய்ச்சி: ஏகநாயகர் பீடத்திலேயே இருப்பவர். மருத வாணர் பக்கத்துள்ள அம்மை. மருத மரம். இதன்பட்டை கோயிலில் உள்ளது. மேற்படி மரம் கல்வடிவமாக மருதவாணர் கோயிலுக்கு வடக்கில் உள்ளது.

மூர்த்திகள்: கலியாணசுந்தரர், செப்பு அர்த்தநாரீசுவரர் சிலை, ஜ்வரகரேசுவரர் சிலை. சட்டைநாதர் தெற்கு வாயிலில் காவலாக இருந்தவர். இப்போது அம்பிகை கோயிலிலுள்ளார்.

வீரபத்திரர்: இவர் வடக்கு வாயில் காவல்; இவருக்கு இப்போது கோயிலுண்டு. மேற்கு வாயிலில் சிங்காரவேலர்.

கிழக்கு வாயிலில் கணநாதரும் 18 ஆம்படிக் கறுப்பரும் இருந்தனர். உக்கிரம். இவர்களை ஒரு பெரியவர் எடுத்துத் துண்டராயம் பேட்டையில் வாயு மூலையில் வைப்பித்தனர். கணநாதரைக் குருக்களும் கறுப்பண்ணரைப் பூசாரியும் பூசிக்கின் றனர். பின் விநாயகரையும், சுப்பிரமணியரையும் பிரதிஷ்டிப் பித்தார்.

இடை மருது: பிராகாரம் 5. உள்ளிருந்து ஸோம சூத்திரம், அம்பாய, கொடுமுடி, அசுவமேதம், மடவளாகம் வீதி.

மூர்த்தி: கங்கையம்மன்—ஸ்வாமி கோமுகியின் கீழண்டை.

ஸாம்பதக்ஷிணாமூர்த்தி: ஸ்வாமியின் மகாமண்டபத்தில் வடபுறமாகத் தெற்கு நோக்கியுள்ளார். கோபுரங்கள் கிழக்கே யிருந்து: கீழ்க்கோபுரம், ஏகநாயகர் கோபுரம், பாண்டியன் கோபுரம், மேற்கு 6 கோபுரம். (திருவிளை.) காந்திமதி, வரகுணன் மனைவி. பிம்பம்; ஸோம சூத்திரத்தில் வடபுறம் தெற்கு நோக்கியுள்ளார்.

நகஸ்தித லிங்கம்: 27 வடிவம். யாகசாலையின் வட புறத்துள்ளார்.

சுந்தரேசர் கோயில் கொடுமுடிப் பிராகாரத்தில் வட பாகத்தில் தெற்கு நோக்கியுள்ளது.

சொக்கநாதர் கோயில்: சுவாமி அம்பிகையோடும் உள்ளார். வரகுணனுக்குத் தரிசனம் கொடுத்தவர். கிருஷ்ணன் கோயில்: மகாலிங்கம் கண்ணுவருக்குக் கண்ணன் வடிவாகக் காட்சி கொடுத்தவர். அர்ச்சுன மரம் உண்டு.

நாயடியார் கோயில்: சிவசர்மாவுக்கு மகாலிங்கம் வில்வ மரத்தின் கீழே குழந்தையாக வந்த இடம். சிவசர்மா பூசை பண்ணும் குருக்கள். இவர் வீடு ஐயா ஸாமி ஐயர் வீடு. இவர் மனைவி சுசீலை. இவர்களுக்கு மருதவாணர் மூன்று வயதுக் குழந்தையாகத் தோன்றினர். சிவசர்மா தம்பாலுள்ள எல்லாப் பொருளையுங் கொண்டு திருப்பணி செய்து மிக்க வறுமையுற்றார்.

ஆவுடையார் கோயில்: இது தெற்கு வீதியில் வடபுற முள்ளது. லிங்கம். மாணிக்க வாசகர் பிம்பமுண்டு. இதற்குரிய வர் ஐந்து கொத்துப் பண்டிரங்கள்.

வீதி நான்கிலும் 17 மடங்கள். கிழக்கு வீதி குற்றாலச் செட்டி மடம். ஸொர்க்கபுர மடம்; தஞ்சாவூர் 64 வேளாஞ் செட்டி மடம். தெற்கு வீதியில் சாலியர் மடம், குறைச்செட்டி மடம், அணைக்குடியார் மடம், திருப்பணிமடம், அஞ்சு கொத்து மடம், 5, தருமபுரமடம், மேற்கு வீதியில் குன்றக்குடி மடம், திருவாவடுதுறை மடம், சூரியனார் கோயில் மடம், வடபாதி மங்கல முதலியார் மடம்.

21. இராமநந்தீசுவரம்: சோமாஸ்கந்தரின் அம்பிகை கையில் விருஷபம் இருக்கிறது.

22. இராமேசுவரம்

தீர்த்தம்: தனுஷ்கோடி. முன்னம் இது பினாக கோடியாக இருந்தது. பினாக கோடி சிதம்பராதிகளிலுமுண்டு. இவ் வரலாறு உத்தர ராமாயணம் லவணாசுர வரலாற்றிலும் ராமாயண தாத்பர்ய ஸங்கிரகத்திலும் காணலாகும்.

ஆட்சி: திருஞா . காந்தார பஞ்சமம். [பழம்பஞ்சுரம்—1]

77. பகலவன் மீதியங்காமை காத்த பதியோன்—இராவணன்

இப்பதிகத்தில் இராவணனைக் கொன்ற தோஷம் நீங்கு தற்கு, இராமன் பூசித்ததும், இராமன் பெருமையும் கடல் சார்ந்த தலமென்னுங் குறிப்புமுள்ளன.

இராமாவதாரம் முற்றும் பூசித்த ஸ்தலங்கள்: இராமேசுவர வரம் முதலியனவாம்.

அயோத்தியிலிருந்து இலட்சுமணரோடு காட்டுக்குப் புறப் படும்போது கோடிலிங்கப் பிரதிஷ்டை செய்வதாகச் சங்கற்பித்து

அங்ஙனம் சங்கற்பித்தவாறே அநேக லிங்கங்களைப் பூமியிலே அங்கங்கே பிரதிஷ்டை செய்து பூசித்த பின்னர் அயோத்தியா புரியை அடைந்து கோடிலிங்க பிரதிஷ்டைக்கு இரண்டு லிங்கங் கள் குறைவுபட்டிருத்தல் கண்டு இலட்சுமணர் வாயிலாக சரயுநதி தீரத்து இருபுறத்திலும் மகேசுவரர், மகாதேவர் என் னும் திருநாமங்களோடு இரண்டு லிங்கங்கள் பிரதிஷ்டை செய்து பூசித்தார்.

இராமநாதர் எழுந்தருளியிருக்கும் இடம் திருக்கந்த மாதன மென்னும் மலையாகும். இராமநாதர் திருமேனி சீதையால் வெண் மணலாற்செய்த திருவுருவமாக ஸைகதலிங்கமாக அமைக்கப் பெற் றது. உங்கார காலவைரவரென்பது இத்தல வைரவர் திருநாமம். சேதுபந்தமாகாளி, ஸ்தலதேவதை, 'ஏகாந்தராமம்' என்பது இத் தலத்திலுள்ள ஓரிடம்; இராமர் இராவணசங்காரத்திற்குரிய காரியங்களைப் பலருடன் ஆலோசித்துக் கொண்டிருக்கையிற் கடல் முழக்கம் ஒருவர் பேசியது ஒருவர்க்குக் கேளாமலிருக்கும்படி செய்வித்தமையின் அவர் கோபிக்க உடனே கடல் ஓசையின்றி அடங்கியதனால் அவ்விடத்திற்கு ஏகாந்த ராமமென்றும், ஏகாந்தராம நகரம் என்றும் அங்கு எழுந்தருளியிருக்கும் இராம பிரானுக்கு ஏகாந்த ராமனென்றும் பெயர்கள் உண்டாயின.

இரகுநாத ஸேதுபதி கட்டுவித்த மண்டபம் ஒன்றில் உத்ஸவ காலத்தில் இராமநாதர் எழுந்தருளினரென்பது தேவையுலா 63-ஆம் கண்ணியாலும், திருத்தேர் சேதுபதிகளாற் செய்விக்கப் பெற்றதென்பது 108-ஆம் கண்ணியாலும் இராமநாதருக்குச் சாத்திய திருவாடை விஜயரகுநாத ஸேதுபதியால் அளிக்கப் பெற்றதென்பது 67-ஆம் கண்ணியாலும் அவர் திருத்தேர் வட முகூர்த்தம் செய்தனரென்பது 138 ஆம் கண்ணியாலும் விளங்கு கின்றன.

23. இரும்பூளை (ஆலங்குடி)

இத்தலக் கோயில் முசுகுந்த சக்கரவர்த்தியின் மந்திரியாகிய ஒகுடையான் (அமுதோகன்) என்பவனாற் கட்டப்பட்டது. தமது திரவியங்கொண்டு கட்டவில்லையே என்று சினந்த முசு குந்தனால் அம்மந்திரி கொல்லப்பட்டு ஸ்வாமியை அடைந்து ஐக்கியமானான். அத்தலை ஸ்வாமியின் கோமுகியின் கீழே யிருக்கிறது. ஊரின் கிழக்கே அவ்விடம் ஒகுடையான் கள மென்று இப்போது வழங்கப்பட்டுள்ளது. இத்தலக் கோயில் பெரிய ஆலயமாக இருந்ததென்றும் விரிவான ஸப்தப்பிராகாரம் இருந்தனவென்றும் சொல்வர். ஆலங்குடிக்குத் தெற்கிலும்

கிழக்கிலும் பூளைவனத்தாறு என்று ஒரு நதி ஓடுகிறது. இது கிழக்கே கம்பா நதி என்று சொல்லப்படும். சுந்தரமூர்த்திநாயனுர் விக்கிரகம் வடுவமைந்த திருமேனியுள்ளதாக இருக்கிறது. ஸ்வாமியின் திருமுடியில் சுபிலக் கிழங்கு தோண்டிய வேடனுல் உண்டாகிய தழும்புண்டு. அம்பிகை இறைவனை விவாகஞ் செய்து கொண்ட இடம் திருமண மங்கலமென்று வழங்குகிறது. அங்கே ஓமஞ் செய் பள்ளம், ஓமக்குளமென்றும், அம்பிகை பாவம் நீங்கிய தீர்த்தம் பாப விமோசன தீர்த்தமென்றும் இப் போது வழங்கி வருகின்றன. இத்தலம் காசியாரண்யம் என்று வடமொழியில் வழங்கப் பெறும்.

பழைய கல்வெட்டுக்களில் இரும்பூளை என்ற இத்தலப் பெயர் சொல்லப் பட்டிருக்கிறது. பூளை வனம் என்றும் வழங் கும். தக்ஷிணாமூர்த்தியின் முக்கிய தலங்கள் 24-இல் ஒன்று. விருட்சம். ஆல்.

24. இரும்பை மாகாளம்: அத்திரி மகரிஷி இருந்த தலம்.

25. இன்னம்பர்.
சுவாமி: தான்றோன்றியீசர்.

26. ஈங்கோய்மலை

இது மதுகிரியென வழங்கும். (சூத.)
மரதக வல்லி—மரகதாசலேசுரர்.

சுகந்தகுந்தளாம்பாள்—சிவ சக்தி கிரீசுவரர்.

ஈவேங்கைமலை என்னும் பெயரில் உள்ள இத்தலம் ஈங்கோய்மலை என வழங்கப் படுகிறது.

இஃது ஈக்களால் பூசிக்கப் பெற்ற தலம். முன் காலத்தில் இருந்த அரசரொருவர் இத்தலக் கோயிலில் நக்கீரருடைய திருவுருவத்தைப் பிரதிட்டிப்பித்துப் பூசை முதலியன நடை பெற்று வரும்படி நிபந்தம் அமைத்திருந்தாரென்று இத்தலத்துச் சிலாசாஸன மொன்றால் தெரியவருகின்றது.

27. ஊறல்: கூவத்திலிருந்து 6 மைல். இரண்டு ஆலயங் கள் உள்ளன. கங்காதரேசுவரர், உமாபதி ஆலயங்கள் இரண் டும் சேர்ந்தாற் போலவே யுள்ளன. உமாபதி, உமையம்மை ஆலயங்களுக்கு அருகிலுள்ள ஆற்றில் தண்ணீர் என்றும் வற்றாது. உமை சுவாமியைப் பூஜித்ததாக ஐதிஹ்யம். கருங்கல் திருப்பணி மிகவும் அற்புதம். கோயில் மிகவும் இடிந்திருக்கிறது. சுவாமி ஸந்நிதி கிழக்கு. தேவி சந்நிதி ஸ்வாமிக்கு வலப்புறத்தில் வடக்கு

நோக்கியது. பூஜை ஒரே வேளைதான். தட்சிணாமூர்த்தியின் உருவம் பெரியதாகவும் மிகவும் அழகாகவும் இருக்கிறது. பழைய கல்வெட்டுக்கள் பல உட்பிராகாரத்தில் மிகத் தெளிவாக இருக்கின்றன. கங்காதரேசுவரர் ஆலயத்தின் கர்ப்பகிருகத்தில் மேல் புறத்தில் ஒரு சிறு நந்தியின் சிலை இருக்கிறது. அதன் வழியாக எப்போதும் ஜலம் வந்து கொண்டிருக்கிறது. ஜலம் ஸ்வாமியை வலம் வந்து வேறு ஒரு நந்தி வாயின் வழியாக வெளியே ஒரு குளத்தில் வந்து விழுகிறது. ஜலம் மிகத் தெளிவு. குளம் மிகச் சிறியது. அதில்தான் ஸ்நானம் பண்ணுவது வழக்கம். குளத்து ஜலம் வடிகால் வழியாக ஓடிப் பக்கத்திலுள்ள ஆற்றில் விழுகிறது.

28. எருக்கத்தம்புலியூர் (ராஜேந்திரபட்டணம்): இது வெள்ளாற்றின் தென்கரையில் ஒரு மைல் தூரத்திலுள்ளது. ஸ்ரீ முஷ்ணத்தின் மேற்கே நான்கு மைல். இது முருகக் கடவுளுக்கு மூகத்துவம் நீங்கிய ஸ்தலம். இதில் முன்பு அரசாண்டு கொண்டிருந்த நரேந்திரன் என்பவனுடைய புத்திரன் சார்ங்கதரன் தனது இளைய தாயாகிய சித்திராங்கி யென்பவள் விரும்ப இணங்காமையால் மாறுகால் மாறுகை வாங்கும்படி அவள் செய்விக்க அவன் அவ்வாறு செய்வித்தான். அப்பால் சார்ங்கதரன் வெள்ளாற்றங் கரையிலுள்ள சிவஸ்தலங்கள் ஏழையும் பூசித்து குறைந்த காலும் கையும் வளரப் பெற்றான்.

கால்வாங்கு குடி: கார்மாங்குடி. இது இவ்வூருக்கு வடக்கே இரண்டு மைலிலுள்ளது; இது சார்ங்கதேவனுடைய கால் வாங்கிய இடமென்பர்.

கால்கூடல்: கார் கொடல்; இதுகார்மாங் குடிக்கு வடக்கே இரண்டு மைலிலுள்ளது. இது கால்கூடிய இடம்.

29. ஏடகம்

ஸ்வாமி: பத்திரிகாபரமேசுவரர்.

அம்பிகை: ஏலவார்குழலி.

விருட்சம்: புன்னாகம்.

தீர்த்தம்: பிரம தீர்த்தம்.

நடராஜர் பிம்பம். அமிர்த புஷ்கரிணி.

விநாயகர்: முகூர்த்தவிநாயகர்.

30. ஒற்றியூர்.

வட்டப்பாறை நாச்சியார். பௌர்ணமியில் த்வஜாரோகணம். படம் பக்கம் கொட்டும் ஒற்றியூர்.

படம்பக்கம்–ஒருபறை; கலிய நாயனார் திருவிளக்குப்பணி செய்து வந்த தலம்.

31. ஒத்தூர்: கல்லால் பனை செய்து பூசித்து வருகின்றனர்.

32. ஓமாம்புலியூர்: இத்தலக்கோயில்களுள் ஒன்று வடதளி; வடதளி–ஆலமரத்தின் கீழுள்ள தளி, தளி–கோயில். அக்னி பூசித்த தலம். புலி பூசித்த தலம்.

சுவாமி: மணவாளநம்பி.
விருட்சம்: இலந்தை.

33. கச்சிஅநேகதங்காவதம்: இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அஷ்ட மகாநாகங்கள் பூசித்தமையால் அட்ட புயங்கப் பிரான் என்னும் திருநாமம் அவருக்கு வழங்கலாயிற்று. அட்டபுயங்கப் பிரானது இடமாம் கலிக்கச்சி அநேகதங்காவதமே (திருஞா. தே.)

34. கச்சி ஏகம்பம் : ஏகம்பம்–ஏகாம்பரேசர் கோயில்.

திருவேகம்பம் கம்பமென்றும் பெரிய கம்பமென்றும் கூறப்படும். ''காலகாலனைக் கம்பனெம்மானை,'' ''உமைநங்கை மருவியேத்தி வழி படப்பெற்ற, பெரிய கம்பனை'' தே. சுந்தர. மற்றும் ஒரு மூன்று கம்பம்–நல்ல கம்பம் கள்ளக் கம்பம், வெள்ளக் கம்பமென்பன; இவை முறையே உருத்திரர், திருமால், பிரமன் ஆகிய மூவரால் பூசிக்கப் பெற்றவை; காஞ்சிப். திருவேகம்ப. 86–9.

35. கச்சி (காஞ்சீபுரம்) பொது.

நான்கு வேதங்களாகிய ஒரு மாமரமே இத்தல விருட்சமாகும்.

முத்தி மண்டபம் மூன்று: முத்தீச்சுரத்திற்கு எதிரில் ஒன்றும் சர்வதீர்த்தத்தின் பக்கத்தில் ஒன்றும் திருவிராமேச்சுரத்தின் சந்நிதியிலொன்றும் உள்ளன; காஞ்சிப்.சருவ. 24–5

புட்கரிணி ஐந்து: சூரிய புஷ்கரிணி, சந்திர புஷ்கரிணி, அக்கினி புஷ்கரிணி, சுவர்ண புஷ்கரிணி, அமிர்தபுஷ்கரிணி. காஞ்சிப். திருக்கண். 10.

நதிகள் ஏழு: பம்பை, கம்பை, மஞ்சணதி, வேகவதி, பாலி, சேயாறு, புண்ணிய நதி, காஞ்சிப். தல. 23

தீர்த்தங்கள் இரண்டாவன, உமாபத்திரை, கீர்த்திமதி என்பன. இவை முறையே திருவேகம்பத்தின் வடபாலும் தென்பாலுமாக உள்ளன; காஞ்சிப். கழுவாய்: 329–30.

பீடம் எட்டு: சத்தி பீடம், ருத்ரபீடம், சசாங்கபீடம், முத்திபீடம், ஆரியாபீடம், தர்மார்த்த காமபீடம், ஆதிபீடம், யோகபீடம், காஞ்சிப். திருக்கண். 9.

பழைய காஞ்சிப்புராணம் அரிதிருமுற்றச் 53; பீடம் இரண்டெனவும் கூறப்படும்; பெரிய. திருக்குறிப்பு. 83.

சாத்தர்கள் எண்மர்: காஞ்சிப். திருக்கண். 11.

துர்க்கையர்கள் எண்மர்: ''பஞ்ச தீர்த்தத் தவள்காஞ்சிப் பதியாள் மணித்தானத்துடையா, ளஞ்சந்தியினில் வாழ்வாள் சேயாற்றங்கரையாள் கீர்த்திமதி, கஞ்சவதனத் தென்மலையாள் காப்புத் தீர்த்தத் தவளென்னுந், துஞ்சு மினவண் டுளர்கூந்தற் றுர்க்கை கூற்றி னெண்மர்களும்'' காஞ்சிப். திருக்கண்.

திருமாலுக்குச் சிறந்த எட்டிடம்: அத்திகிரி, திருவெஃகா, நிலாத் திங்கட்டுண்டம், நிராகாரம், அட்டபுயம் (அட்டபுயங்கம்), சகளாங்கம், ஊரகம், பாடகம்; காஞ்சிப். இருபத்தெண். 8 10. திருமாலுக்குரிய காஞ்சியிலுள்ள தலங்கள் பன்னீராயிர மென்று (காஞ்சிப். இருபத்தெண். 3) தெரிதலால் அவற்றுள் இந்த எட்டும் சிறந்தனவென்பதைப் புலப்படுத்தற்குக் கச்சியப்ப முனிவர் சிறந்த எட்டிடமென்றார்.

ஏழு வாரத்தும் ஆடும் ஒன்பது தீர்த்தங்கள்: ஞாயிறு இட்ட சித்தி; திங்கள் சிவகங்கை, கம்பை, செவ்வாய் மங்கள தீர்த்தம்; புதன் இந்திர தீர்த்தம், சங்க தீர்த்தம், வியாழன் சூலதீர்த்தம்; வெள்ளி பஞ்ச தீர்த்தம்; சனி தீர்த்த ராசம்; காஞ்சிப். தீர்த்த. 112–8.

தலங்கள் இருபது: திருவேகம்பம், கச்ச பாலயம், கச்சிக் காரோணம், திருமேற்றளி, இந்திராலயம், பணாதரேசம், மணீசம், சதுரானன சங்கரம், சுரகரேசம், பரசுராமம், உருத்திரர்கா, மாகாளம், வராகபுரம், திருவோத்தார், திருமாற்பேறு, அநேகதங்காவதம், வேதநூபுரம், கச்சி மயானம், கடம்பர் கோயில், வீராட்டகாசம், காஞ்சிப். இருபத்தெண். 8–9; இவை சில நூல்களில் வேறு வகையாகவும் காணப்படுகின்றன; கந்த. நகர 89. ஸ்ரீ காஞ்சியிலுள்ள சிவபெருமானாலயங்கள் பதினாயிரமென்று தெரிகிறது. (காஞ்சிப் இருபத்

தெண். 2) கற்பகாலத்திலும் காஞ்சி நகரம் அழியாதிருக்கும் படிச்சிவபெருமான் செய்வித்தனர். இதனாற் காஞ்சி நகரத் திற்குப் பிரளய சித்தென்று ஒரு பெயருண்டு; காஞ்சிப். கழு வாய். 227. காஞ்சியில் வைகுவோர் சிவத்தோடொன்றுவர் என் பது புராணவரலாறு. காமாட்சியின் திருக்கோயிலாகிய காமக் கோட்டத்தில் தூண்டா விளக்கு உள்ளதென்பது ஐதிஹ்யம். ''அறம்புரி காமக் கோட்டி மந்திரத்துளம்மை வாழ் பிலத்தி னினுளழியா துறைந்திடு தூண்டா விளக்குமொன்று ''(கந்த. நகரப். 92) ஸ்ரீ காமாட்சியம்மன் கோயிலுக்கு நேரே செல்லாமல் சந்திராதித்தர் ஆகாயத்தில் வழிவிலகிச் செல்வரென்பது ஐதிஹ் யம். பெரிய திருக்குறிப்பு. 74. ஊமையாக இருந்த ஒருவர் இத்தலத்திற் சில பெரியோர்களது கட்டளையின்படி தேவியை வழிபட்டு அருள்பெற்றுச் சிறந்த வாக்கியாய்த் தேவியைத் துதித் தனரென்றும் அதனால் அவர் மூககவியென்று புகழ் பெற்று விளங்கினரென்றும் வடமொழியறிஞர் கூறுவர்.

இந்நகரத்தில் முக்காலச் செய்திகளையும் நன்கு தெரி விக்கும் கந்திற்பாவைத் தெய்வமும் துணையிளங்கிள்ளி யென் பவனாற் கட்டப்பட்டுள்ள புத்தாலயமொன்றும் தென்மேற்கு மூலையில் தருமத வனமென்று பெயருள்ள ஒரு சோலையும் இருந்தன; மணிமேகலை பலநாள் தங்கியிருந்து, அன்னமளித்துப் பலவுயிர்களையும் பாதுகாத்துத் தவத்திறம் பூண்டு அறவண வடிகள் பால் தருமங்கேட்டு மரித்தவிடமும் இந்நகரமே.

36. கச்சித்திருநெறிக்காரைக்காடு:

கார்காத்தார் என்ற பெயர் காரைக்காட்டார் என்பதன் மரூஉ என்பர். காரைக்காடு என்பது காஞ்சிபுரத்திற்கருகி லுள்ளது. திருநெறிக்காரைக்காடு என்று இக்காலத்து வழங்கப் படுகிறது. மிக பழமையானதொரு சிவஸ்தலம்.

37. கச்சூர் ஆலக்கோயில்:

சுவாமி: கச்சபேசுவரர், மருந்தீசர், விருந்திட்டநாதர். இத்தலம் மலைமேலுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தில் தெற்கு மதிலில் தெற்கு முகமாக ச் சிலாவடிவில் நிற்கிறார்.

38. கஞ்சனூர்:

ஸ்வாமி: சிவகற்பகம்—அக்னிமஹாலிங்கம்
இத்தலம் த்யுதிக்ஷேத்ரமென்று வழங்கும். சூத)

கஞ்சனூர்:

கம்ஸன் பூசை செய்தமையின் இஃது இப்பெயர் பெற்றது.

பெயர் (1) பிரஹ்மபுரம்: பிரமனுக்கு மணக்கோலங்காட்டியமையின். 2. பலாசவனம், 3. கம்ஸபுரம், 4. வன்னிபுரம்: அக்னி பூஜை செய்தமையின். 5. பராசரபுரம்: ...

தீர்த்தம்: (1) அக்னி தீர்த்தம்: கோயிலுக்குக் கிழக்கேயுள்ள தடாகம், (2) பிரம தீர்த்தம்: இஃது காவேரி யுத்தர வாகினியிலுள்ளது. 3. சந்திரபுஷ்கரிணி: கோயிலுக்கு மேற்கேயுள்ள தடாகம். 4. பராசர தீர்த்தம்: கோயிலுக்கு வடக்கேயுள்ள தடாகம். ஸ்தலவிருக்ஷம்:

1. புரசு. இது முதல்யுகத்தில் வில்வம், இரண்டாம் யுகத்தில் புன்னை, மூன்றாம் யுகத்தில் கதலி, நான்காம் யுகத்தில். புரசாகின்றது.

மாசிமகநக்ஷத்திரத்தில் தீர்த்தம் பிரமதீர்த்தத்திலும், விசாக நக்ஷத்திரத்தில் தீர்த்தம் அக்னீ தீர்த்தத்திலும், மகர சங்கராந்தியில் சந்திர புஷ்கரிணியிலும் கொடுப்பது வழக்கம். ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியாரின் மகாயாத்திரை கலியப்தம் 3974 விளம்பி வருஷம் தை மாசம் சுக்லபக்ஷ பஞ்சமி.

இவர் முற்கல கோத்திரம்.

சுரைக்காய் பத்தர் அப்பக்கம் வசித்தனர்; சோழமண்டல சதகம். தேவி வலப்புறம். பெயர் கற்பகாம்பிகை. வேடன் பூசித்தான். கஞ்சனூர் ஆழ்வார் புராணமென்று தமிழ்நூலொன்று வழங்குகின்றது.

கம்ஸபுர மான்மிய ஸங்கிரகம்:

நைமிசாரண்ணிய வாசிகளான சௌனகாதி ரிஷிகள் சூத மகரிஷியைப் பிரார்த்ததித்துக் கம்ஸபுரமான்மியம் திருவுளம் பற்றவேண்டும் என்று விண்ணப்பம் செய்ய மகரிஷியான சூதர் சொல்லியது:

பூலோகத்தில் மகாமேருவுக்குத் தெற்கே சோழ நாட்டுக் காவேரிக்கு வடகரையில் திருவிடைமருதூருக்கு ஈசானத்திலும் திருப்பனந்தாளுக்கு அக்கினிதிக்கிலும் பந்தணை நல்லூருக்கு நிருதியிலும் திருவாவடுதுறைக்கு வாயுதிக்கிலும் இந்நான்கின் மத்தியில் கம்சபுரமென்னும் கஞ்சனூர் முன்னர் வில்வவனமாகவும், புன்னைவனமாகவும், கதலிவனமாகவும் இக்கலியுகத்தில்

புரசவனமாகவும் விளங்குகின்றதுமான சுயம்பு லிங்கத்தை ஆதியில் கம்சன் வேட்டைக்குச் சென்றவிடத்தில் பசியால் பிராமணக் குழந்தையை அன்னம் கேட்க, பிதா கிருகத்திலில்லை. சிவபூஜை செய்து சீக்கிரத்தில் அன்னம் தருவேனென, என்னிலும் பூஜை அதிகமோ என்று அக்குழந்தை துடித்துக் கீழே விழ அடித்தான். தாயானவள் குற்றமில்லாது அடித்த அரசனே! நீ காக்கை வலிப்பென்னும் நோயால் துடிக்கக் கடவாய் என்று சபிக்க, அரசன் துன்பத்தை மந்திரிகள் சகிக்காது, நாரதரைப் பிரார்த்தித்து விண்ணப்பம் செய்ய, நாரதர், ''புரசவனத்தில் சுயம்பு லிங்கத்தை அக்னி பகவான் பூஜித்து மகாசந்நிதானமான கிழக்குத் திக்கில் தன்பேரால் தீர்த்தம் உண்டாக்கி தான தர்மாத்மா என்னும் பிராமணக் குழந்தையை வீட்டோடு தகனம் பண்ணின தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு அநேக நாள் தவம் செய்து பூஜித்து அநுக்கிரகம் பெற்ற ஸ்தலமானதால் அக்னிபுரீஸ்வரர் என்னும் நாமகரணம் ஏற்பட்டது.'' என்றார். அந்தக்ஷேத்திரத்தை அடைந்து அக்னி தீர்த்தத்தில் கம்சனை ஸ்நானம் செய்வித்து தவம் செய்யில் வலிப்பு நீங்கும் என, அப்படித் தவஞ்செய்து பூசித்து வலிப்பு நீங்கி அருள் பெற்று அந்த வனத்தை யழித்துத் தன் பேரால் அங்கே நகரம் உண்டாக்கி சிவபெருமானுக்குரிய பல திருப்பணிகளுஞ் செய்து ஆலயத்திற்கு மேற்கில் இரண்டு விற்கிடையில் ஆனந்த தீர்த்தமென்றும், கம்ச தீர்த்தமென்றும் ஞானாமிர்தமென்றும் பெயருள்ள ஒரு தடாகக் கரையில் கம்சனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விசாலாக்ஷி விசுவ லிங்கம் ஆனந்த விக்னேசுவரருடைய அருளும் பெற்று சிவானுக்ரகமும் பெற்றான். விஷ்ணு, பிருகுமகரிஷி பத்தினி சாபத்தால் சங்கரிக்க, ஷிரிஷி அநேக ஜன்மம் எடுக்க சபிக்க ஆற்றாதவராயும் கவலையுற்று இந்த வில்வாரண்ணிய க்ஷேத்திரத்தில் சுயம்பு லிங்கத்தைத் தவம் செய்து பூஜிக்க சிவபெருமான் வாராய், விஷ்ணுவே! பிருகு மகரிஷி சாபப்படி அனேக ஜன்மம் எடுக்க வேண்டும்; உலகத்துக்கு உபகாரமாய் இருபத்தைந்து ஜன்மம் எடும் என்று அநுக்கிரகம் பண்ணின ஸ்தலம்.

பிரமதேவர் ஐந்துதலை தனக்கு இருக்கின்றதென்ற மமதையால் தலை ஒன்றும், சிருஷ்டிப்புத தொழிலும் போய் இந்த ஸ்தலத்தை யடைந்து தவம் செய்து உத்தரவாகினி யாகிய காவிரி நதியில் ஸ்நானம் செய்து சிவபெருமானைப் பூசித்து சிருஷ்டிப்புத் தொழில் பெற்ற ஸ்தலம்.

காவேரி உத்தரவாகினி, பிரம்மதீர்த்தமென்றும் விளங்குகின்றது. சந்திரபகவான், வியாழபகவான் பத்தினி தாரையென்

பவளை இச்சித்த தோஷத்தால் இந்தக் கம்சபுரத்தில் அனேகநாள் தவம் செய்து மேலவீதியில் சந்திர தீர்த்தம் என்றும் தன்பேரால் உண்டாக்கி ஸ்நானம் செய்து சிவபெருமானைப் பூஜித்து தனக்கு நேரிட்ட சாபம் நிவிர்த்தியாகிப் பேறு பெற்ற ஸ்தலம்.

சித்திரசேனன் என்கின்ற கந்தர்வன் மகரிஷியான அகஸ்தியரைக் கண்டு சிரித்துப் பரிகாசம் பண்ணின குற்றத்தால், மகரிஷி பைசாசமாகச் சாபமிட, கந்தர்வன் பைசாச ஜன்மம் எடுத்து அனுபவித்து இந்தஸ்தலம் அடைந்து பைசாசம் நீங்கி இந்த ஆலயத்திற்கு ஈசானியத்தில் ஆறு விற்கிடை தூரத்தில் தன்பேரால் கந்தர்வநகரம் உண்டாக்கி அதில் கந்தர்வேசுவரர் என்றும் ஞானாம்பிகை என்றும் சுவாமியையும் அம்பிகையையும் பிரதிஷ்டை செய்து கந்தர்வ தீர்த்தம் உண்டாக்கி சிவனது அநுக்கிரகம் பெற்ற ஸ்தலம்.

ஸ்ரீராமன் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து தன்பிதாவாகிய தசரதரை விட்டுப் பிரிந்து துன்பமாத்திரம் அதிகரித்து துக்கத்துடன் வரும்போது இந்த ஸ்தலம் வந்தவுடன் துக்கம் நீங்கி அதிசயித்து அங்கு வந்த மகரிஷியைக் கேட்க, இந்த வனத்தில் அநேகமகான்களால் பூஜிக்கப் பெற்று சுயம்புலிங்கம் விளங்குகின்றது. ஆதியில் விஷ்ணுவுக்குச் சாபம் நிவிர்த்தியான ஸ்தலமென அதன் உண்மை தனக்குள் தெரிந்து சிலநாள் தவம் செய்து பூஜித்துத் துன்பம் நிவிர்த்தியான ஸ்தலம். பின்பு, சிலநாளில் அனுமார் மூலபல சண்டையில் கொஞ்சம் பின்வாங்க, மூலபலம் முடிந்தவுடன் ஸ்ரீராமரிடத்தில் வரமிகுந்த இலச்சையுள்ளவராய் துன்பத்தை யடைய ஸ்ரீராமன் அறிந்து அநுமான் முன்னே நான் பிதாவை விட்டுப் பிரிந்துவந்த துன்பம் கம்ஸபுரம் என்கிற ஸ்தலத்தில் சுயம்பு லிங்கத்தைப் பூசித்து நிவிர்த்தியானதால் நீயும்போய் பூசித்து வந்தால் உன்னுடைய மனத் துன்பம் நிவிர்த்தியாகுமென, அப்படியே வந்து தவம்செய்து பூசித்து ஆலயத்துக்கு இரண்டு விற்கிடை தூரத்தில் தெற்கில் முந்தி அரிதீர்த்தம் என்றும் இப்போது அநுமார் குளம் என்றும் வழங்குகிற அநுமதீர்த்தம், என்றும் தன்பேரால் வழங்குகிற அநுக்ரகம் பெற்ற ஸ்தலம்.

உமாதேவி யாகிய கற்பகாம்பாளை வலது பாகத்தில் அமைத்துப் பிரமதேவருக்குத் திருக்கலியாண கோலம் காட்டி அருளிய ஸ்தலம்.

மார்க்கண்டேயர் யமவாதனைக்குப் பயந்து இந்தஸ்தலத்தில் தவம் செய்து பூசிக்க சிவபெருமான் திருக்கடலூரில் யம வாதனையைத் தீர்த்தருளுவோம் என்றநுக்ரகித்த தலம்.

கும்ஸபுரத்தில் பிராமண சிரேஷ்டரானவர் அடியார்களுக்கு சுரைக்காய் கறியுடன் அன்னம் அளித்து அருளினால் விதைக்கு விட்ட சுரைக்காய் ஒன்றுதவிர வேறு இல்லாத சமயத்தில் சிவ பெருமான் அடியார் வேடமாய் பசியால் அன்னங் கேட்க, பிராமணன் வெளியில் போயிருக்க பிராமண ஸ்திரீ அன்ன மளிக்கக் கறியில்லை என்று கவலை யடைவதை அடியாரான சிவபெருமான் அறிந்து பாதிசுரைக்காய் விதைக்குப்போதும் பாதி கறிக்காகலாமென அந்தப்படி சமைத்து அன்னமளிக்க வெளியே சென்ற பிராமணன் வந்ததும் நடந்த சங்கதியைச் சொல்ல, உன்கையை வாங்கிவிட வேண்டும் என்று மிகுந்த கொடுமையாய்ச் சொன்னவுடன் தன்கையை வெட்டி நின்றாள். அப்பிராமணன் சுரைக்காயைப் பார்க்கக் கொல்லையில் வந்தார். முழுக்காயா யிருந்ததையும் உள்ளே வந்து பார்க்கத்தன் பாரியை எப்போதும் போல இரண்டு கைகளுடன் நிற்பதையுங் கண்டு சிவபெருமான் என்று தெரிந்து, ''என்பத்தினிக்குத் தரிசனம் தந்து மறைந்தீரே. என் பிராணனை விட்டு விடுகிறேன்,'' என்று பிராணனை விடும் சமயத்தில் சிவபெருமான் தடுத்துச் சுரைக்காய்ப் பத்தர் என்று அப்பிராமணனுக்கு அநுக்ரகம் பண்ணின ஸ்தலம்.

ஸ்ரீமத் அப்பர் சுவாமிகள் கைத்தொண்டு வாய்த்தொண்டு மனத்தொண்டு பாடல்பெற்று அருளிய ஸ்தலம்.

மானக்கஞ்சாற நாயனார் கும்ஸபுரத்தில் வேளாளர் குலத் தில் அவதரித்து அரசனிடத்தில் சேனாதிபதித் தொழிலில் அமர்ந்து அடியார்களுக்கு வேண்டியதைக் கொடுத்தருளுஞ் சமயத்தில் தன் புத்திரியைக் கலிக்காம நாயனார்க்கு விவாகம் செய்து கொடுக்கும் சமயத்துக்குமுன் சிவபெருமான் அடியார் வேடங் கொண்டு வந்து இந்தப் பெண்ணின்மயிர் நமக்குப் பஞ்சவடிக்காகுமென அடியோடரிந்து அநுக்ரகம் பெற்ற ஸ்தலம். விவாகம் செய்துகொள்ள வந்த கலிக்காமநாயனார் பின்னலறு பட்ட பெண்ணை விவாகம் செய்ய அடாதென, சிவபெருமான் முன்போலக் கூந்தலளித்து விவாகம் முடித்தருளிய ஸ்தலம்.

இந்திரன், வேடன் பூசித்து அநுக்ரகம் பெற்ற ஸ்தலம். விஷ்ணுவானவர் சிவபெருமான் திரிபுரத்தைத் தகனம் பண்ணு கிற காலத்தில் தான் பாணமாக இருந்து தகிக்கப் போகிறோ மென்ற மமதையையறிந்து சிவபெருமான் சிரித்துப் புரத்தை எரித்தார். அந்தத் தோஷம் நிவிர்த்தியாக மாயோன் பிரார்த் திக்க வாராய், விஷ்ணுவே! ஆதியில் திரிபுராதிகளை நல்லொழுக் கமாகிய விபூதி ருத்ராக்ஷம் முதலிய சிவஞானத்தை மாற்றி புத்தமதத்தையுபதேசித்து உம்முடைய மாயையால் தேவ

கண்டராகி உலகை உபத்ரவம் செய்து அவர்கள் மடியக் காரண பூதராயிருந்தபடியால் நீர் பூலோகத்தில் வில்வாரண்ய க்ஷேத்திர மான கம்ஸபுரம் என்கிற கஞ்சனூரில் வைஷ்ணவர்கள் சிவ மதத்தை நிந்திப்பதால் அந்தக் குலத்திற் பிறந்து வைஷ்ணவமத கண்டனம் செய்து சிவமதஸ்தாபனம் செய்தால் உமக்கு நேரிட் டிருக்கின்ற சாபம் நீங்குமென்று திருவுளம் பெற்ற விஷ்ணு வானவர் மானிட கெர்ப்பத்தில் மயங்குவேனென, உபநயன காலத்தில் உபதேசம் செய்து நமது சுவரூபத்தைக்காட்டி அருளுவேனென்று திருவுளம் பெற்று அப்படியே சுதரிசன ஆசாரிய புத்திரனாய் அவதரித்து பிதாவினால் வாசுதேவ ஆசாரியனாகப் பேர்பெற்று, பள்ளிக்கூடத்தில் வாசிக்க வைக்க உபாத்தியாயர் சொல்லும் அக்ஷரத்தைச் சொல்லாது நமச்சிவாய நமவென்று சொல்லியும் அறுபத்து நான்கு வீடுகளுள்ள தன்சுற்றத்தார் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டிகளைக் கொடுத்து நமச்சிவாய நம வென்ற உபதேசமே திருவருளால் பாடமாய்விட்டது. அந்தந்த வீட்டுப் பிள்ளை வீட்டில் போய் நமச்சிவாயமென வாசிக்க அவர்களைப் பிதா அடிக்க, இவ்வித சமயத்தில் சுதரிசன ஆசாரிய வம்சத்தில் மூன்று தலைமுறையாய்ப் புத்திரன் இல்லா அவா வினாலும் குழந்தைப் பருவமெனப் பொறுத்திருக்கும் பிதாவான சுதரிசன ஆசாரியர் தன் புத்திரனுக்கு உபநயனம் செய்ய முகூர்த்தம் நிச்சயித்து தன் சீடனாகிய மகாராஜனுக்குத் தெரி விக்க இராஜாவும் குருபுத்திரருக்கு உபநயனத்துக்கு வேண்டிய உபகரணங்களுடன் வந்திருந்து சிறப்புச் செய்து உதய முகூர்த்தத் தில் பூரி கொடுக்க அரசன் காத்திருக்க சுதர்சன ஆசாரியர் காவேரி நதிக்குப் போய் தீர்த்தமாடி வரச்செல்ல, அச்சமயத்தில் சிவபெருமான் சூரியனைத் தோற்றாது மறைக்க சுதரிசன ஆசாரி யர் உதயமாகவில்லை யென்று நதியில் காத்திருக்க சிவபெருமான் சுதரிசன ஆசாரியரைப் போல சுற்றத்தாருக்கும் அரசனுக்கும் தோற்றும் படியாகவும் குழந்தைக்குத் திரிநேத்திரம் நீலகண்டம் சடா சந்திரசேகரராகத் தன்நிசசுவரூபத்தைக் காண்பித்து உப நயன உபதேசம் செய்து தனக்குச் சகாவான குபேரனை அரசனைப் போல வடிவெடுத்து பூரிகொடுக்கச் செய்து அந்தர்த் தியான மானார். பூரிவாங்கின பிராமணர்கள் வீதியில் செல்லக் கண்ட இராஜா, பூரி நாம் கொடுக்க வந்திருக்க உபநயனமாகி பூரி வாங்கிச் செல்லுகிறது நம்முடைய குரு உதய முகூர்த்தம் தப்பி வெகு நாழிகை சென்று வருகிறதையும் பார்த்து குருவுடன் கிரகத்தில் சென்று குருவானவர் தன் பத்தினியை யார் செய்து வைத்தாரென்று கேட்க நீங்கள் தானே செய்தீர்களென்னவென ஆச்சரியப்பட, புத்திரனைப் பார்த்து நீ பிறந்த நாள் முதல் நம்முடைய குலத்துக்குத் தக்க ஒழுக்கமில்லாது செய்கை மாறின

தும் உதய முகூர்த்தத்துக்குத் தீர்த்த மாடி வரப்போக சூரியன் மறைந்து உச்சியில் வந்து தோற்றினதும் நான் வருகிறதற்கு முன் உபநயனம் நடந்ததும், பூரி கொடுக்க வந்த இராசன் காத்திருக்க பூரி கொடுத்து பிராமணர்கள் சென்றதும் இவை என்ன காரணமென்று கேட்க, அந்தக் குழந்தை சிவனருள் தான் யாவருக்கும் சிவபெருமானைத் தவிர வேறே தெய்வம் இல்லை யென்று சொல்ல, ஆனால் நீ தீமுக்காலியிலிருந்து வேறே தெய்வம் இல்லையென்று சொல்வாயென, அநேக திருப்பதி களிலுள்ள வைஷ்ணவ சிரேஷ்ட மகான்களை வரவழைத்து அச் சபையில் தீமுக்காலியிலேறி சிவபெருமானை ஸ்தோத்திரம் செய்து வைஷ்ணவ மதத்தைக் கண்டித்து சிவமதஸ்தாபனம் செய்து யாவருக்கும் சிவதீக்ஷை செய்வித்து சிவபெருமான் அருளி னால் வந்திருக்கும் மஹா இரதத்தில் அறுபத்துநான்கு வீட்டி லுள்ளவர்களுடன் மஹா கைலாசத்திற்குப் போகிறோமென்ற எண்ணத்தை அறிந்த அக்கடவுள் ஒரு பிராமணத்தியை நிறுத்தி விட்டார். அந்த வைதீகமுள்ள பிராமணத்தி கற்பகப் பிள்ளை யாருக்கு மோதகம் நிவேதனம் செய்ய வழிபடுகிற வழக்கத்தால் மோதகம் வேகவில்லாத சமயத்தில் ஹரதத்தர் விமானத்தில் ஏறக் கூப்பிட அம்மாள் நிவேதனம் பண்ணாது போக மன மில்லாது தவிக்க, அவர்கள் போகட்டும் யாவருக்கும் முன் கொண்டுபோய் விடுகிறேனென, அவர்கள் கைலாசம் சேர்வதற்கு முன் அம்மாளால் நிவேதனத்தையும் பெற்று தும்பிக்கையால் அம்மாளை ஹரதத்தர் இரதங்களுக்கு முன் கைலாசத்தில் தூக்கி வைத்தனர்.

39. கடம்பந்துறை:

இத்தலத்து மூர்த்தி கடம்பவன நாதர், சுந்தரேசர், ஸௌந் தரரென வழங்கப் பெறுவர்.

அம்பிகையின் திருநாமம் முற்றாமுலையம்மையென்பது; இது வடமொழியில் பாலகுசாம்பிகை என வழங்கும்.

தலவிருட்சம்: கடம்பமரம்.

தீர்த்தம்: காவிரியாறு; பிரமதீர்த்தமென்ற ஒரு தீர்த்தமும் உண்டு; திருக்கோவையாரில், ''தண்கடம் பைத்தடம் போற் கடுங் கானகந் தண்ணெனவே ''(220) என்று சொல்லப்படும் கடம்பைத்தடம் இதுவாக இருத்தல் கூடுமென்று தோற்றுகிறது.

தொண்டை நாட்டில் திருக்கூவமென்னுந் தலத்துக்கு அருகிலுள்ள பாகசாலையென்னும் 'ஊரினராகிய சரவண முதலி யாரென்பவர் இற்றைக்குச் சற்றேறக் குறைய 256 வருடங்

களுக்கு முன்பு திரிசிராப்பள்ளி நவாபினிடம் மந்திரியாக இருந்தவர். அவர் இத்தலத்தில் இருந்த திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் மடாதிபதியாக இருந்தவர் பால் நேசம் உடையவராக இருந்தார். அவ்விருவரும் சேர்ந்து கடம்பந்துறைக் கோயிலைப் புதுப்பித்துத் திருத்தேர், திருவாபரணம் முதலியவை செய்து வைத்திருக்கிறார்கள். கலியப்தம் 4790 இல் பல ஜமீன்தார்கள் இவரது சிவபக்தி முதலியவற்றை உணர்ந்து இவருக்குப் பல கிராமங்களைச் செப்புச் சாஸனம் மூலமாக அளித்திருக்கிறார்கள். இவருடைய உருவம் கடம்பந்துறைக் கோயில் தூணில் அமைக்கப் பட்டுள்ளது. கலி 4890 இல் இவரது பௌத்திரராகிய சரணவ முதலியார் என்பவர்காலத்தும் சில நிலங்கள் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகின்றது.

40. கண்ணார்கோயில்:

திருஞானசம்பந்தர், இத்தலத்தைத் 'திருக்கண்ணார்' என்றும் பாடியுள்ளார்.

41. கருப்பறியலூர்:

கலந்தவர் கருப்பறியல் (திருஞா.தே.) ஆதலின் இத்தலம் காரணப் பெயருடையது.

அம்பிகை: கோலவளைநாயகி, விசித்திரவலையாம்பிகை. ஸ்தலக்கொடி: கொகுடிமுல்லை.

42. கருவிலி:

யமன், மஹாபலி, திருமால், சூரியன் பூசித்த தலம். தக்ஷிணாமூர்த்தி விக்கிரகம் தேவ கோஷ்டத்திலின்றி மஹாமண்டபத்தின் தெற்கில் வெளியே உள்ளது. பரணி தீர்த்தம். மஹாமண்டபத்தின் கிழக்கே யமனுக்கு உபதேசம்.

43. கருவூர்:

இவ்வூர் ஆனிலைக் கோயிலின் முதற்பிராகாரத்தில் தெற்கு மூலையில், திருவிசைப்பாச் செய்த கருவூர்த்தேவர் சமாதிக்கோயில் இருக்கின்றது. இத்தலத்துக்கு வடமொழியிலும் தென்மொழியிலும் புராணம் உண்டு. இத்தலம் பெரிய புராணத்தில் எறிபத்த நாயனார் புராணத்திலும் புகழ்ச்சோழ நாயனார் புராணத்திலும் கூறப்படும். பேரூர்ப் புராணத்திலும் கூறப் பெற்றுள்ளது. சிவகாமியாண்டார் அவதரித்த ஸ்தலம். சங்கச் செய்யுட்களில் கூறப்படும் கருவூர் வேறென்பர்.

தீர்த்தம்: ஆம்ராவதி (அமரவாதி) ஸங்கமம்; முக்கூடல் (சூத).

44. கழிப்பாலை:

கழிப்பதியென்றும் தேவாரம் கூறுகிறது. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமம் கபாலப்பனார் என்பது. கபாலப்பனார்: கபாலத்தில் விசேடமுடையவர். இத்தலத்தில் ஸ்வாமியின் தலையில் பள்ளமுண்டு. சுவாமி: நவநீதேசுவரர்.

45. கழுக்குன்றம்:

இத்தலத்து மூர்த்திக்குரிய திருநாமங்களுள் கங்கபதி, சுரகுருச் சோளேசன் என்பன பூசித்துப் பேறு பெற்றோர் பெயர்களோடு தொடர்புடையன. மலையின் கண் எழுந்தருளியிருக்கும் இத்தலத்து மூர்த்தியாகிய மலைமருந்தைப் பாராட்டிக் கட்டளைக் கலித்துறையால் ஒரு பதிகம் பிற்காலத்தில் ஒருவராற் பாடப்பெற்று வழங்குகின்றது. கள்ளம் வல்லாரென்பது இம் மூர்த்தியின் திருநாமங்களுள் ஒன்று.

''கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே'' என்பது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம். இத்தலத்து மூர்த்திக்குரிய இருபத்தைந்து திருநாம அர்ச்சனைகளில் ஒன்று, ''தஸ்கரபதயே நம:'' என்பது. கண்ணார்ந்த கற்பகமென்னும் திருநாமம் ஒன்று திருக்கழுக்குன்றத்துலாவிலும் கழுகாசல சதகமென்னும் நூலிலும் காணப்படும். திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில், ''காவலனைக் கழுக்குன்ற மமர்ந்தான் றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே,''

என்றுள்ள பகுதியிலிருந்து இத்திருநாமம் எழுந்தது போலும்.

கலியுகத்து மெய்யன், பொய்யாத மெய்யன் என்னும் இரண்டு திருநாமங்கள் திருக்கழுக்குன்றத்து உலாவில் சொல்லப்படும். வடமொழியருச்சனையில், 'கலியுக பதயே நம.' என்பது ஒரு திருநாமம். மாசிலாமணியென்பது மற்றொரு திருநாமம். ''அகளங்கமண்யே நம:'' என்பது அருச்சனை. இறைவருடைய திருமேனி வெள்ளை நிறமுடையது. இத்தலத்தில் இறைவன் ஒரு காலத்தில் அன்பர்களுக்கு மிகுதியாகப் பொன்னை அளித்தருளினரென்றும் அதற்கு அறிகுறியாக சோமாஸ்கந்த மூர்த்தியின் இடத்திருக்கரத்தில் பொற்கட்டி யொன்று உள்ளதென்றும் பெரியோர் கூறுவர்.

பழைய காலத்தில் இத்தலத்தின் அதிகாரம் பெரும்பாலும் உருத்திர கணிகையரிடம் இருந்ததென்றும் நாச்சிமுத்து இங்கே முத்தி பெற்ற உரிமையினால் அந்நிலையை அவர்கள் பெற்றிருந்தனரென்றும் சிலர் கூறுவர். ஆறு கணிகையர் தலைமை வகித்தனரென்றும் அவர்களுக்கு ஆறுவட்டத் தாரென்னும் பெயர் வழங்குமென்றும் அவருள் ஒருத்தி முத்தி நல்லாளென்றும் அவள் பெயரால் முத்திநல்லாள் சுரோத்திரியமென ஒரு நிலம் உண்டென்றும் தெரிய வருகின்றது. கோயிலுக்குரிய கைங்கரியங்கள் செய்யும் கோயிற்கொத்தினர் குறைவின்றி இருந்தனர். ஆதிசைவர்களிலும் ஆறு வட்டத்தாரென்று ஒரு வகையினர் இருந்தனராம்.

இங்கே பேரம்பலத் தம்பிரானென்னும் ஒரு பெரியார் இருந்தனர். அவர் திருக்கோயிலில் பல திருப்பணிகள் செய்து புகழ் பெற்று விளங்கினார். அவருடைய பிம்பம் இத்தலத்தில் உள்ளதென்பர். சங்க தீர்த்தத்தின் வடகரையில் அவர் மடம் இருக்கிறது.

46. களர்:

இக்கோயிற் சிலாசாசனத்தில் சுவாமியின் திருநாமம் அடைந்தார்க் கருள் செய்த நாயனார் என்றும் அடைந்தார்க்கருள் செய் நாயனார் என்றும் இருத்தலின் இந்தத் தலத்திற்குரிய திருஞா. தேவாரத்தில் அடைந்தார்க் கருளாயே என்று வந்திருக்கிறது. இது துர்வாஸமஹரிஷி பூசித்த ஸ்தலம். இதற்குக் களந்தை ஆதியப்ப நாவலராற் செய்யப்பட்ட தமிழ்ப் புராண மொன்றுண்டு. வடமொழியிலும் புராணமுண்டு.

47. காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம்: அம்பிகை திருநாமம்: கூகூவென்ற குயின் மொழியாள். காரணம்: இந்திரன் தேரைப் பூட்டி ஸ்வாமியை இழுத்த பொழுது இவர் கூகூவென்றமை—கோஷாம்பா. ஸ்வாமி: ரத்நசாயா வனேசுவரர். காரணம்: தமது திருமேனி அசைந்த பொழுது பருவிரலால் அழுத்தக் கீண்ட பூமி வழியே ஆதிசேஷனுடைய தலையிலுள்ள ரத்நச்சாயை மிகுதியாகத் தோன்றினமையின். முத்தியப்பர் கோயில்: இது இயற்பகை நாயனார்க்கு ஸ்வாமி முக்தி கொடுத்த ஸ்தலம். இக்கோயிலில் இயற்பகை நாயனார் பிம்பமும் உண்டு; கோயில் ஜீர்ணம். மேலையூரில் சொக்கலிங்கபிள்ளை சத்திரத்திற்கு மேற்கேயுள்ளது.

பிரியாவிடங்கர்: இயற்பகை நாயனார் சுற்றத்தை வெட்டிய பின்பு ஸ்வாமி தமது மனைவியை அழைத்துச் செல்லுகை

யில் பிரிய அவள் கதற ஷி நாயனார் சுற்றத்தார் தீங்கியற்று கின்றனரென்று வாளுடன் வந்த பொழுது உண்மையை யறிந்து தம்மைக் கொன்று கொள்ள வாளையெறிந்து கழுத்தை நீட்டிய பொழுது வாளைப்பிடித்துக் கொண்டு ஸ்வாமி தேவியுடன் தோன்றிக் காட்சி கொடுத்து ஆடிய இடம் இது. கோயில் முத்தீசுவரர் கோயிலுக்குக் கீழ்புறமுள்ளது. பிம்பங்களெல்லாம் முத்தீச்சுரர் கோயிலில் உள்ளன. கோயில் ஜீர்ணம். பட்டினத்துப் பிள்ளையாருடைய மூலவிக்கிரகம் பல்லவனீச்சரத்துள்ளது. மேலையூரில் எவ்விடத்திலும் அஸ்திவாரங்கள் பழங்கிணறுகள் முதலியன மிகுதியாக உள்ளன.

48. ஸ்ரீ காழி:

கணநாத நாயனார் புட்பப்பணி செய்த தலம். இத் தலம் 'மாமகளூர்' என்று ஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறப் பட்டுள்ளது. இது இத்தலத்துக்குரிய 12 திருநாமங்களில் சேர்ந்த தன்று.

இத்தலத்தில் ஸ்ரீ பிரமபுரேசர் திருக்கோயிலில் வலம்புரி மண்டபம் உள்ளது. இத்தலத்திற் பிரமர் பற்பலர் சிவபெரு மானை வழிபட்டுய்ந்தனர் என்பது புராண வரலாறு.

'தொல்பறவை சுமந்தோங்கும் தோணிபுரம்' என்று தேவா ரத்தில் இத்தலம் குறிக்கப் பெற்றுள்ளது.

1. ஸ்வாமி: பிரமபுரீசுவரர்.

அம்பிகை: திரிபுரசுந்தரி, திருநிலையழகி—ஸ்திரசுந்தரி.

2. தோணியப்பர், உமாமகேசர். புயம்—4; ஆதிமூர்த்தி.

3. ஆபதோத்தாரணர், சட்டைநாதர். மூர்த்தி: 12.1. நாக நாதேசுவரர், 2. அண்ட நாதேசுவரர், 3. ஸர்வமுனீசுவரர், 4. பராசரேசுவரர், 5. அக்கினீசுவரர், 6. பதினெண் புராணேசு வரர், 7. காளீசுவரர், 8—12...

விருக்ஷம்: 12. வேணு, பாரிசாதம் முதலியன. ஸம்பந்த ஸ்வாமியாலயம் கோயிலுள் வடக்கேயுள்ளது. இவருடைய ஆன்மார்த்தம் ஞானபுரீசுவரர், ஞானாம்பிகை. இவர்கள் மேற் படி கோயிலுக்குள் உளர்.

ஆண்டபிள்ளையார் கோயில்: கோயில் உட்பிராகாரத்தில் மேலைக் கோடியில் பஞ்ச மூர்த்தியாலயத்திற்குத் தெற்கே யுள்ளது.

பெரியநாயகர்: உமாமகேசர்.

ஆபத்துக்காத்த விநாயகர்: தெற்குப் பெரிய கோபுர வாயி லின் மேல்புறம் வெளியேயுளளார். சந்நிதி தெற்கு நோக்கியது.

அட்ட வைரவர்: வெளிப் பிராகாரத்தில் தென்புறம் சட்டை யப்பர்க்கு நேரே ஷே ஸ்வாமியின் பள்ளியறையைச் சூழ இவர்கள் எழுந்தருளிய மண்டபமுள்ளது. இதற்கு வலம்புரி மண்டப மென்றும் பெயர்.

குணதலைப்பாடியுடையார்: இவ்வூர் சீகாழிக்கு வடக்கில் ஒரு மைலில் உள்ளது. இவருடைய பிம்பம் திருநிலைநாயகி– ஸ்திரசுந்தரியின் ஆலயத்தில் ஸந்நிதியிலுள்ளது.

சூல தீர்த்தம்: முதலியார் குளம். சுக்கிரவார பூசைதான் சட்டைநாதருக்கு.

விளந்தூர்க்காழிக்குட்டியாபிள்ளை: இவர் சீகாழியில் இருந் தவர்; வேளாளர். தீர்த்தம் சித்திரை நட்சத்திரத்தில் கொடுப்பது வழக்கம். கழுமல அம்மன்: இந்த அம்மன் திருநாமம் பிடாரியம்மன் என்றும் சொல்லப்படும். நாலுவீதி யுண்டு; பெரியகோயில்.

செங்குந்த குலத்தார்: கைக்கோளர். சித்திரை 8ஆம் திரு நாளில் இவர்கள் உதவியாக வருவது இன்றும் வழக்கம்.

வயிராவிகள்: சட்டைநாதரை முன்பு வயிராவிகள் பூசித்த தாக வதந்தி.

காணிக்கர்:

காலாயிரஞ் சமைத்த காவணப்பூ மண்டபம் கிழைக் கோபுரத்திற்கு வெளியே வட பக்கத்தில் இப்பொழுது இடிந்து கிடக்கின்றது. விளந்தூர்–விளந்த சமுத்திரம்; சீகாழிக்கு வடக்கேயுள்ளது. குணதலைப்பாடி–எரிஞ்சமாங்குடி.

செண்டாடுமையனார்: இவர் கோயில் இவ்வூருக்குக் கிழக்கேயிருக்கின்றது.

நாகேசுரமுடையார்: இவர் ராகுவாற் பூசிக்கப் பட்டவர்; இவராலயம் பிடாரி கோயில் வடக்கு வீதியின் மேலைக் கோடி யிலுள்ளது.

செம்பொன்குடி: செம்பாம்பன்குடி; இதில் கேது பூசை பண்ணிய சிவலிங்கப் பெருமான் எழுந்தருளிய கோயிலொன் றுண்டு. இவ்வூர் சீகாழிக்குக் கிழக்கேயுள்ளது.

குமரன் கோயில்: இது பிடாரி கோயில் வடக்கு வீதிக்கு வடக்கேயுள்ளது. கோயிலுக்கு எதிரே சத்தி தீர்த்தம் அல்லது வேல் தீர்த்தமென்று சொல்லப்படுகிற குளமொன்றுண்டு.

பதினெண் புராணேசுவரர்: இவர் கோயில் சட்டைநாதர் குளத்தின் வடகரையில் மேல் பக்கத்திலுள்ளது. இதில் அக்கினி தீர்த்தமென்கிற தீர்த்தம் ஒன்றுண்டு.

அண்டநாதர் கோயில்: தாடாளன் கோயிலுக்கு வட மேற்கிலுள்ளது.

புறவாய்க்கால்—புறா வாய்நதி. இது புறாமூக்கால் உண் டாக்கப்பட்டதென்பர். ஊருக்கு வடக்கேயுள்ளது. கழுமலநதி—கழுமல வாய்க்கால். இது ஊருக்கு மேற்கே தெற்கு வடக்காக ஓடுகின்றது; பிள்ளையார் வருவித்தது; பழவாற்றிலிருந்து பிரிவு;

கருவிளாஞ்சேரி—கை விழுந்தான் சேரி. இது அயமுகியின் கை மகாகாளரால் துண்டுபட்டு விழுந்த இடமென்பர்; திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அவதரித்த இடம்: இஃது (1900 ஆம் ஆண்டு) இரட்டைத் தெருவில் 225—வது கதவிலக்கமுள்ள வீடாக இருந்தது. இப்பொழுது வீட்டு எண் மாறியிருக்கலாம். இந்தத் தலத்திற்குச் சிந்தென்றும் பள்ளென்றும் இரண்டு பிர பந்தங்கள் உள்ளன.

49. காளத்தி:

கோயிலில் கணநாதர் பிம்பம் இருக்கிறது. திருக்காளத்தி நாதருக்குத் தனியே ஒரு ஸகஸ்ரநாமமுள்ளது. அன்றி மூலத் தானத்துக்குத் தெற்கே 5 நாழிகை வழித்தூரத்திலுள்ள தரும க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய சகஸ்ரலிங்கேசுவரரென்னும் சிவ லிங்கப் பெருமானைப் பேராயிரம் உடையான் என்று திருக் காளத்தி நாதர் உலா கூறுகிறது. சிதம்பரத்திலிருந்த நாத சன்மா என்பவருடைய நூல்களைத் திருடிய பீமன் என்பவன் அவராற் சபிக்கப் பெற்று ஊமையாகிப் பல இடங்களிலும் அலைந்து வருந்தி ஸ்ரீசைலத்தில் இருந்த உரோமசமுனிவரின் கட்டளையின்படி இத்தலத்தை யடைந்து சிவபெருமானை வழி பட்டு மூலத்தானத்திற்குத் தெற்கேயுள்ள சக்தி க்ஷேத்திரத்தில்

சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்து வாக்கு உண்டாகப் பெற்றுச் சிவபெருமானையும் ஞானப் பூங்கோதையையும் துதித்து உய்ந்தனன். இத்தலத்தில் பண்டைக் காலத்திருந்த மடங்கள் இன்னவென்பதும் திருத்தொண்டு பூண்டொழுகியவர் இன்ன இன்ன வகையாரென்பதும் இன்ன இன்ன செயல்கள் விசேட மென்பதும் திருக்காளத்தி நாதர் உலாவால் விளங்குகின்றன. அவை வருமாறு:

மடங்கள்:

பதினெண்மடம், பரத்துவாசாச்சிரமம், மணிகங்கைமடம், வடமடம்.

திருத்தொண்டு பூண்டொழுகியவர்கள்: ஆறுகொத்தார், எட்டுக்கொத்து இளையநாயக்கர்கள், கோயிற்கணக்கர், சிட்டய ராமன், பத்துக்குடி வேதபாரகர், மந்திர வோலைக்கணக்கர்.

விசேடச் செயல்கள்: தென் கைலையை வலம் வருதல், மேற்குச் சாரளவாயிலின் வழியே திருக்காளத்திநாதரைத் தரி சித்தல். (இத்தலத்தில் சிவராத்திரி தினத்தன்று சுவாமி கிரிப் பிரதக்ஷிணம் வரும்போது அடியார்களுக்குத் தாக சாந்திக்காகத் தண்ணீர்ப் பந்தல் அமைத்து நீர்மோர் முதலியன ஸ்ரீமத் ஐயரவர் கள் வழங்கியதாகத் தெரிகிறது.

50. காறாயில்:

இத்தலத்தின் பெயராகிய காராகரு அல்லது காரகில் என்பது காறாயில் என்று மருவி வழங்குகிறது. விருட்சம்—அகில். பிரமன் லிங்கஸ்தாபனம் செய்து பூசித்த தலம். 18 வேலி நிலம் உள்ளது. பூஜை 4 காலம் நடந்து வருகிறது.

51. கானப்பேர்:

கானப்பெயரென்றும், கானப்பேறு என்றும், இலக்கியங் களில் வழங்குகிறது. இந்தத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஒரு சிவலிங்க மூர்த்திக்கு உக்கிரபாண்டியேசுவரர் என்பது திருநாமம்.

52. குடமூக்கு:

மகாமகக் குளத்தின் வடகரையில் துலாபார மண்டபம் என்று ஒன்று உள்ளது. தஞ்சையில் அரசாண்ட அச்சுதப்ப நாயக்கர் என்பவர் இம்மண்டபத்தில் துலாபார தானம் செய் தனர். ஒரு தராசுத் தட்டில் ஒருவர் ஏறித் தமது எடையுள்ள பொன்னை மறு தட்டில் வைத்து அதனைத் தக்காருக்குத் தானம் செய்வதைத் துலாபார தானம் என்பர். இம்மண்ட

பத்தின் நடுவே உச்சியில் அம்மன்னர் தானம் செய்யுங் காட்சியைப் புலப்படுத்தும் உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஸ்ரீ நாகேசுவர ஸ்வாமி இம்மண்டபத்தில் தங்கித் தீர்த்தம் கொடுத்தருள்வர். கோவிந்த தீக்ஷிரென்னும் மகான் மகாமக தீர்த்தத்தைப் பிற மதத்தினர் தங்களதென்று கவர்ந்து கொள்ளாதபடி அதைச் சுற்றிலும் பதினாறு சிலலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கோயிலைக் கட்டுவித்தார். அபிமுக்தேசுவரர் கோயில், சோமநாதசுவாமி கோயில், சக்கர பாணிப் பெருமாள் கோயில், ஆழ்வார்களுடைய மங்களாசாஸனம் பெற்ற ஸ்ரீ சாரங்கபாணிப் பெருமாள் கோயில், இராமஸ்வாமி கோயில் முதலிய வேறு பல கோயில்கள் இங்கேயுள்ளன. இராமஸ்வாமி கோயிலில் இராமாயணக் கதை ஆரம்பம் முதல் இறுதிவரையில் சுவரில் வர்ண சித்திரங்களால் புலப்படுத்தப் பெற்றிருக்கின்றது. பிரமதேவருக்கு இந்நகரத்தின் தென்பாகத்தில் ஒரு கோயில் உள்ளது. அக்கோயில் உள்ள தெருவுக்குப் பிரமன் கோயில் தெரு என்று பெயர். ஜைனர்கள் வழிபடும் ஆலயம் ஒன்றும் இங்கே இருக்கிறது. அக்காலத்தில் சுவாமி மலையிலிருந்து இத்தலம் வரை வந்த காவிரிக்குக் குமாரதாரை என்ற பெயர் உண்டாயிற்று. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய மூர்க்க நாயனார் இங்கே தங்கியிருந்து மகேசுவர பூஜை செய்து முத்தியடைந்தனர் என்பர். பகவர் என்னும் முனிவர் ஒருவர் இவ்வூரில் தவம் புரிந்து வாழ்ந்து முத்தி பெற்றனர். இவருடைய திருவுருவம் நாகேசுவரஸ்வாமி திருமஞ்சன வீதியில் உள்ள பிள்ளையார் கோயிலில் இருக்கிறது. கும்பேசுவரர் கோயிலின் வாசலில் நிருத்த கணபதி இருக்கிறார். நிர்த்த கணபதி: கணபதியானவர் தாண்டவம் லாசியம், நாட்டியம், நிருத்தம், நடனம் என ஐந்து வகை செய்து அவற்றைத்தாம் ஆடிச் சிவபெருமானால் நிருத்த கணபதியென்னும் சிறப்புத்திருநாமம் பெற்றார்'' (பரத சேனாபதீயம் சூ. 43 உரை)

53. வடகுரங்காடு துறை:

வாலிக்காக நடனம். இத்தலக் கோயிலில் நடேச பிம்பம் சிலாரூபத்தில் இருக்கிறது. மூலஸ்தானம் வேறே உத்ஸவவிக்கிரகம் வேறேயுள்ளன. 20-தளத்திற்குக் குறையாத பத்திரங்களையுடையதும் சுவையும் மணமும் உள்ளதுமாகிய வில்வமரமொன்றுண்டு. ஆண்டு ஒன்றுக்கு இதற்கு வருவாய் ரூ. 3,000. திருஞா. பதிகம் 1. எல்லாப் பாடல்களிலும் காவிரி வடகரை அடை குரங்காடுதுறையென்று கூறப்பட்டுள்ளது. இதற்குக்

கிழக்கே ½ நாழிகை வழித்தூரத்தில் பாடல் பெற்ற பெருமாள் கோயில் உள்ளது.

54. தென்குரங்காடுதுறை: சுக்கிரீவனுக்கு நடனம்.

55. குருகாவூர்: வெள்ளடை: குருகாவூர்க் கோயில்.

பசியுற்ற சுந்தரமூர்த்திநாயனார் வருமுன்பு காத்திருந்து இத்தலத்தில் பந்தரின் கீழ்ச் சிவபெருமான் கட்டமுதோடு எழுந்தருளியிருந்தார்.

பரத்துவாஜனென்னும் அந்தணனுக்கு நேர்ந்த வறுமையைப் போக்குதற்குக் குபேரனைக் கொண்டு அளவிறந்த மணிகளை அருளி, அவன் அம்மணிகளைக் கொண்டு அருச்சிக்கப் பெற்று அம்மணிகளை ஜ்வாலையோடு இருக்கச் செய்தமையின் சுவாமியின் திருநாமம் ரத்நாங்குரேசுவரர். தாகசாந்திக்குத் தயிர் கொடுத்த இடம் தயிர்க்குளம்; வரிசைப் பற்றுக்கு மேற்கு. பால் கொடுத்த இடம் பாற்குளம். இலை நறுக்கிக் கொண்டு வந்த இடம் கருவாழைப் பட்டம் (வரிசைப்பற்றுக்கு மேற்கு)

56. குற்றாலம்:

இத்தலத்திலுள்ள வீதிக்கும் சங்க வீதி என்ற பெயர் வழங்கும். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குக் கூத்தனார் என்ற திருப்பெயரும் உண்டு. குற்றாலமுடைய நாயனார் தேவதானமும், விக்ரம பாண்டீஸ்வரமுடைய நாயனார் தேவதானமும் என்று தென்காசிச் சாஸனத்தில் குறிக்கப்பட்டுள்ளது. குற்றாலம் வேறு குறும்பலா வேறுதலம். இத்தலத்தைச் சார்ந்த பூஞ்சோலைக்குச் சண்பகாரணியமென்று பெயர் வழங்குவது பற்றியே இத்தலம் சண்பகக் குற்றாலம் என்று வழங்கப்படும். குறும்பலாவாகிய இத்தல விருக்ஷம் தனியே தேவாரப் பதிகம் பெற்றது (திருக்குற்றாலச்சிலேடை வெண்பா 70 ஆம் செய்யுளின் குறிப்புரை) இத்தலத்துச் செண்பகவிநாயகர் மேலகரத்திலுள்ளார்.

57. கூடலையாற்றூர்:

தினகரன் என்னும் அரசன் பூசித்த தலம்.

சுவாமி: ரத்ந வல்லபேசுவரர்.

தீர்த்தம்: பிரமதீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், காத்யாயன தீர்த்தம்.

58. கேதாரம்

தீர்த்தம்: கேதாரம், மந்தாகினி: கனகலம், இது ரேதோ தகம்; குளவடிவமாகவுள்ளது. புரோதாயம் என்பது இதுவே.

கேதாரம்: வளைந்த பூமி, வடவெல்லை.

சிதம்பரபுராணம் திருச்சிற்றம்பலச் சருக்கம்: 71.

இலிங்கம் எருமையின் பின்புற வடிவம் போன்று இருக் கிறது; அருணாசலபுராணம்.

59. கொட்டையூர்:

இத்தலத்து விருட்சம் கொட்டையாதலின் இவ்வூர் கொட்டையூர் என்னும் பெயர் பேற்றது. அப்பெயர் ஹேரண்ட புரமென வடமொழியில் வழங்கும்; ஹேரண்டம்—கொட்டைச் செடி. இத்தலத்துச் சிவலிங்கப் பெருமான் திருநாமம் கோடி சுவரரென்பது. இச்சிவலிங்கப் பெருமான் திருமேனி பல சிவ லிங்கங்களால் அமைந்ததென்பதும் இவரைத் தரிசித்ததனால் கோடி லிங்கங்களைத் தரிசித்த பயனுண்டென்பதும் ஐதிஹ்யங் கள். அத்திரி மகரிஷியின் புத்திரரான ஆத்திரேய முனிவர் இத்தலத்திற் கொட்டைச் செடியின் அடியில் இருந்து தவம் புரிந்து அருள் பெற்றனர். அம்முனிவர் கொட்டைச் செடியின் கீழிருந்து தவம் புரிந்தமையால் ஹேரண்ட முனிவர் என்னும் திருநாமமும் பின்பு பெற்றனர். அவர் சிவபூசை செய்யும் நிலையில் அமைந்துள்ள திருவுருவமொன்று இத்தலத்தில் உண்டு.

சிவக்கொழுந்து தேசிகர் இத்தலத்தில் சந்திரசேகரமூர்த்தி யின் திருவுருவம் கிலமாக இருந்ததையறிந்து புதியமூர்த்தி வார்ப்பித்து வைத்ததன்றி, சங்கராந்தியன்று தீர்த்தங் கொடுத் தற்கு அந்த மூர்த்தி எழுந்தருளுவதற்காக இரதம் ஒன்றும் செய்வித்து அத்திருநாள் வருஷந்தோறும் நடைபெறுவதற்காக அவ்வூரிலுள்ள தென்னந்தோப்பொன்றை வழங்கினார்.

60. கொடிமாடச் செங்குன்றூர்.

அம்பிகை தவஞ்செய்து சிவபெருமான் திருமேனியில் பாதிப்பாகம் பெற்ற தலம். மலைமேல் கண்ணகி கோயில் உள்ளதென்று சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

61. கொடுங்குன்றம்: சிவபெருமான் இத்தலத்தில் பூமி, அந்தரிக்ஷம், சுவர்க்கம் என்னும் மூன்று இடங்களைக் காட்டி எழுந்தருளி யிருக்கின்றார். இம்மலையில் பூமியிலிருந்து மூன்று சிவசந்நிதிகள் உள்ளன.

62. கோகர்ணம்:

ஸ்வாமி: மஹா பலலிங்கம்—மஹாபலேசுரர், ஸப்தரிஷீ சுவரர். அம்பிகை: தாம்ரகௌரி, குங்குமவல்லி.

தீர்த்தம்: ப்ரபாஸ தீர்த்தம், கோடி தீர்த்தம். இது தடாகம். பிரபாஸதீர்த்தத்தின் தெற்கே உள்ளது.

63. கோடிக்கா (திருக்கோடிகா):

இது திரிகோடிகே என வடமொழியில் வழங்கும் (சூத). திரிபுரசுந்தரி—திருகோடீசுரர்.

64. கோணமலை:

இத்தலம் கோணாசலம் என்று வடமொழியில் வழங்கும்.

65. கோயில்:

பொன்னம்பலத்துக்குத் தெற்கேயுள்ளதும் கிழக்கு நோக்கி ஊர்த்துவ தாண்டவமூர்த்தி எழுந்தருளியிருப்பதுமாகிய நிருத்த சபையின் வெளி மண்டபத்தின் தெற்குச் சுவரோரமாக நந்தனார் உருவம் உள்ளது. நடராஜ மூர்த்திக்கு நேரே அம்மூர்த்தியைத் தரிசித்த வண்ணமாக அத்திருவுருவம் அமைக்கப் பட்டிருக்கிறது. அவ்வுருவத்தின் கையில் கடப்பாரையும் தோளில் மண்வெட்டியும் உள்ளன.

இத்தலக் கீழைக் கோபுரத்துள்ள தூண்களில், இறைவன் ஆடிய சாந்திக்கூத்து வகையினுள் ஒன்றாகிய சொக்க நிருத்த மென்னும் சுத்த நிருத்தத்தின் நூற்றெட்டுக் கரணங்களையும் விளக்கும் சிற்ப உருவங்களும் அவற்றின் விதியாக உள்ள சுலோகங்களும் உள்ளன. தக்கயாகப் பரணி 810 ஆம் தாழிசையால் இத்தலத்தின் எல்லையில் இரண்டாம் குலோத்துங்கன் மண்டபங்கள் கட்டினன் என்று தெரிகிறது. கி. பி. 1500 இல் ஸ்ரீ சிதம்பரம் கோயில் கோட்டை மதில்கள் திருமலை நாயக்கரின் முன்னோரான பெரிய வீரப்ப நாயக்கரால் கட்டப் பட்டன. ஷி கோயிலின் வடக்குக் கோபுரம் விஜய நகரத்து அரசனாகிய கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஷி கோபுரத்தின் ஒரு பிறையில் கிருஷ்ண தேவ ராயரின் சிலையொன்றிருக்கிறது. ஷி கோபுரவாசலின் கிழக்கில் வீரப்பிரதாப கிருஷ்ண தேவமகாராசா சிம்மாத்திரி அரசன் மீது யுத்தம் செய்து விட்டுத் திரும்பினதும் கடவுளைப் பக்தியுடன் பூஜித்து வடக்குக் கோபுரம் கட்டி வைத்த விஷயம் கூறியிருப்பதைப் பார்க்கலாம். ஷி கோபுரம் பண்டைய அரசரால் கட்டப்பட்டதாயினும் இந்த வடக்குக் கோபுரம் ஈசு

வரனாலேயே அமைக்கப்பட்ட தென்றும் கூறியிருக்கிறது. தெற்குக் கோபுரம் பெருஞ்சிங்கத் தேவனால் கட்டப்பட்ட தெனக் கூறியிருக்கிறது.

சிதம்பரசித்ஸபையில் ஸ்ரீ தாண்டவமூர்த்தி உமையோடு வீற்றிருக்கிற ஸ்தானமும் ஆயிரக்கால் மண்டபத்தில் மஹா பிஷேகத்தில் வீற்றிருக்கிற உயர்ந்த மேடையும் ஒரே அளவு என்றும், அந்த ஸ்தானத்தின் மகிமையை எடுத்துச் சொல்வதற்கு ஆதிகாலத்திலிருந்த மகான்களாலேயே முடியவில்லை யென்றும் ஒரு சமயம் சுருதி, ஸ்மிருதி, புராணங்களில் எங்கேயாவது இருக் கிறதா என்று ஆராய்ந்தும் சாஸனக்காரர்களுக்குக் கிடைக்க வில்லையென்றும் தெரிகிறது. ஷே திவ்ய சுந்தர மஹாபீடத் தின் கீழ் ஜீதேந்திரியர்களும் வித்யா தரங்கிணி முதலான சிவ கணங்களும் ஸதாகோஷங்களுடன் வசிக்கிறதாகவும் காணப்படு கிறது. ஸ்ரீ குஞ்சிதபாத தீர்த்தமாகிய சிவகங்கைக்கும் பதஞ்சலி வியாக்கிரபாதர் தீர்த்தத்திற்கும் கீழே ஒருபாதை இருப்பதாகவும் அந்த மார்க்கமாகப் பிரதிதினமும் ஆனந்த நிருத்தனத்தைக் கண்டு களிக்க வந்து கொண்டிருக்கிறார்களென்றும் பழைய நூல்களாலும் தெரிகிறது. இந்தத் தில்லை வாழந்தணரின் திருக்கை மணி யான பதஞ்சலி சூத்திரத்திலும் சிவசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து இந்த க்ஷேத்திர நிர்ணயம் முதலிய நூல்களியற்றிய ஸ்ரீ மீனாக்ஷி நாத தீக்ஷிதரவர்கள் எழுதிய கற்பகம், காரிகை முதலிய கிரந்தங் களும் கூறுகின்றன. ஆதலின் இந்த க்ஷேத்திரம், ஸபாநாதர், வீற்றிருக்கும் ஜோதி ஸ்வரூபமான திவ்ய மங்களஸபை, இதனடியிலுள்ள பர்வதம் ஆகிய இம்மூன்றும் அந்தணர் மதிக்கும் ஒரு பெருநிதி யெனப்படுகிறது. நரமுகமுந் துதிக்கையும் வாய்ந்த நரமுகப் பிள்ளையார் தெற்கு வீதியில் இருக்குந் தலம்.

66. கோவலூர்:

இது சேதி நாட்டிலுள்ள தென்று தெரிகிறது; ''சேதி நன்னாட்டு நீடுதிருக்கோவலூரில்'' என்று மெய்ப் பொருள் நாயனார் புராணத்தில் வந்துள்ளது; இதன் தலைவராகிய மெய்ப்பொருள் நாயனார் 'மலாடர் கோமான்' என்று பெரிய புராணத்தில் சொல்லப்படுகிறார். [மலாடு-மலையமானாடு] மலாடு—கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று.

இதனையடுத்த பெண்ணையாற்றில் ஔவையின் பாடலால் அங்கவை சங்கவை என்பவர்களுடைய விவாகத்தின் பொருட்டுத் தயிர், நெய், பால் பெருகின (வில்லிபுத்தூரார் பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தில் ஔவை பாடலுக்கு. தனிப்பாடற்றிரட்டு, தமிழ் நாவலர் சரித்திரம்) கிழையூரென்று சொல்லப்படும். நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. முதலாழ்வார் மூவருக்கும்

பெருமாள் பிரத்தியக்ஷமாகிய ஸ்தலம். இது பழங்காலத்து நகரம். மலையமான் என்ற சிறப்புப் பெயர் அமைந்த அரச பரம்பரையினர் ஆதிகாலத்தில் இருந்தார்களென்றும் அவர்களுள் மலையமான் திருமுடிக்காரி என்பவன் மிக்க கொடையாளி யென்றும் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட முள்ளூர்மலை யென்று ஒரு மலை இருந்ததென்றும் எட்டுத்தொகை சிறு பாணாற்றுப் படை முதலிய நூல்களாலும் வரபதியாட் கொண் டானென்ற கொங்கராயனுடைய இராசதானியாகப் பிற்காலத் திருந்ததென்று வில்லிபுத்தூரார் பாரதத்தாலும் தெரிகின்றது. இதில் சிவஸ்தலத்திற்குத் தமிழிற் புராணமொன்றுண்டு. குரு பரம்பரையில் விஷ்ணுஸ்தலம் பாராட்டப்பட்டுள்ளது.

67. சத்திமுற்றம்:

இத்தலத்தில் அம்பிகை தவம் புரிந்து இறைவன் பிரசன்ன மான பொழுது தழுவிக் கொண்டதாக ஓர் ஐதிஹ்யம் உண்டு. அங்ஙனம் தழுவிய திருக்கோலத்தில் ஒரு விக்கிரகம் இங்கே இருக்கின்றது. இங்கே ஆலய வாசலில் உச்சிஷ்ட கணபதியின் கோயில் ஒன்று இருக்கிறது. இந்த மூர்த்தியை உபாஸனை செய்தால் நல்ல வாக்கு உண்டாகுமென்று பெரியோர்கள் கூறு வர். நரமுகமுந் துதிக்கையும் வாய்ந்த நரமுகப்பிள்ளையார் இருக்குந் தலம். வாயுமூலையில் சத்தி தீர்த்தம்.

68. சாய்க்காடு: (சாயாவனம்) சூரியன் மனைவிகளாகிய சாயாதேவியும் ஸமுஞ்ஞா தேவியும் தனித்தனி ஆயிரம் ஆயிரம் ரூபமாகப் பூசித்த ஸ்தலமாதலின் சாயாவனம். சாயாவனம் 2. ஒன்று ரத்னசாயை பூசித்தது ரத்னசாயாவனம். முதலாவது கடலில் மூழ்கியது. சாயை புலிக்கண் இரண்டாயிரம் பெற்றுப் பூசித்தாள். இவள் பூஞ்செடிகள் கொடிகளாய்ச் சூழ்ந்து நிற் கின்றனள்; சிவரகசியம் 11ஆவது அம்சம் புஷ்பாத்தியாயம். ஸம்ஞை பூசித்தது இரண்டாவது; இப்போதுள்ள சாயாவனம். இங்குக் கடலில் பெரிய முருகக் கடவுள் விக்கிரஹம் அகப்பட்ட தாம்.

69. சிறுகுடி:

இதற்கு விசுவாமித்திர புரமென்று பெயருண்டு; திருவீழி மிழலையைச் சார்ந்தது.

70. செம்பொன்பள்ளி: சுவர்ண்புரி.

தேவி பெயர்: ஸுகந்தகுந்தளாம்பிகை; மருவார் குழலி [திருஞா. தே. 1], தாக்ஷாயணி தேவிக்குப் புயமிரண்டே. அம்பிகையின் கால்களுள் வலக்கால் தூக்கி வைக்கப்பட்ட வண்ண மாக இருக்கின்றது. வெளிமதில் முற்றும் போய்விட்டது.

மாயூரப் புராணத்திலும் திருப்பறியலூர்ப் புராணத்திலும் இத்தல மகிமை கூறப்பட்டுள்ளது.

71. சேறை:

செந்நெறி—சேறைக் கோயில். இத்தலத்திற்குச் சமீபத்தில் திருமங்கையாழ்வரால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட விஷ்ணு ஸ்தலம் இருக்கிறது. இந்த விஷ்ணுஸ்தலம் பஞ்சசார க்ஷேத்திரம் என்று வழங்கப் படுகிறது. காவேரி யம்மனும், மார்க்கண்டேயமுனிவரும் பூசித்த தலம்.

72. தருமபுரம்:

சப்த மாதர்களுள் இந்திராணி பூசித்த தலம்.

ஸ்வாமி: யாழ்முரிநாதர்—

யாழ்மீறி நாதரும் உண்டு. தர்மபுரீசுவரர் ஸந்நிதி கிழக்கு.

அம்பிகை: தேனமிர்தவங்லி—மதுரமின்னாம்பிகை. ஸந்நிதி தெற்கு; தேனமிர்தமெனவும் வழங்கும்

தீர்த்தம்: தர்ம தீர்த்தம் வடக்கேயுள்ளது. ஸ்தல விருக்ஷம் வாழை; இப்போது இல்லை. ஸ்வாமி: அக்கினி புரீசுவரர்.

73. தலையாலங்காடு:

சுமலமுனி தலையாலே நடந்து வந்து தரிசித்தமையின் இப்பெயர் பெற்றது.

74. திலதைப்பதி:

மணிமுத்து—திலதைப்பதி.

75. துருத்தி: இத்தலத்தில் செங்குந்தர்கள் வசிக்கும் தெருவிற் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் விநாயகர் திருநாமம் கச்சிவிநாயகர் என்பது. காஞ்சீபுரத்திலிருந்து இங்கே எழுந்தருளினமையின் இவர் இத்திருநாமம் பெற்றனர்.

விசுவநாதசுவாமி கோயில்: மேலைவீதியில் வீதிக்கு மேற்கே ஸந்நிதிக்கு வடக்கேயுள்ளது. சேது பாவாஸ்வாமி ஸமாதிக் கோயில்: ஸந்நிதியில் பழைய காவிரியின் மேல் கரையில் உள்ளது. இதற்குத் தெற்கே மேற்படியாரால் கட்டப்பட்டு இப்போது இடிந்து கிடக்கும் சத்திரமொன்றுண்டு. பரிகல வகுப்பார்கள் முதலியோர் கந்தஷஷ்டி உத்ஸவத்தில் வேஷம் போட்டுக் கொள்வ துண்டு.

76. தெளிச்சேரி—கோயிற்பற்று.

அம்பிகை: ஸ்வயம் வரபார்வதி—மேவருந் தொழிலாள். தே. பீ ஜாவபனபுரம்.

விருட்சம்—வன்னி.

ஸந்நிதி—மேற்கு.

அம்பிகை: தெற்கு.

தீர்த்தம் 5: 1. பிரம தீர்த்தம்: கிழக்கு. 2. முனிதீர்த்தம் ஸந்நிதியில் உள்ளது, 3. ஸரஸ்வதி தீர்த்தம்: தெற்கு. 4. ஹோம தீர்த்தம்: வடக்கு. 5. சக்தி தீர்த்தம்: வடகிழக்கு. கோயிலின் ஈசானத்தில் நித்தீசுவரம்.

ஸ்வாமி: நித்தீசுவரர். ஸந்நிதி: கிழக்கு; மயில் வடிவங் கொண்ட உமை மணத்தின் பொருட்டுத் தவஞ் செய்த இடம்.

தீர்த்தம்: சக்தி தீர்த்தம்.

பூசித்தோர்: பார்வதி; பிரமன், ஸரஸ்வதி, தேவர், ரிஷிகள். இத்தலத்து வன்னி விருக்ஷத்தின் அடியில் வன்னீசுவரர் இருக்கிறார். அக்கினிமூலை வெளிப்பிராகார தீர்த்தம் முனி தீர்த்தம். சம்பந்தமூர்த்தி திருவேட்ட குடியிலிருந்து தரிசனத் திற்கு வரும்போது க்ஷாம காலமாக இருந்தமையின் ஸ்வாமி வேட வடிவங் கொண்டு குதிரை வாகனத்துடன் அம்பிகையுடன் வெளியே வயலில் விதை தெளிக்கச் சென்றனர். அதனை அறிந்த ஸம்பந்தர் வயலிற் சென்று தரிசனஞ் செய்தனர். இத் தோற்றங்கள் சிலாவடிவங்களாக ஒரே கல்லிலுள்ளன. அம்பிகை வன்னியடியில் ஸ்வாமியைப் பூசித்த தோற்றமும் சிலா வடிவ மாக உள்ளது. ஸம்பந்தர் வடிவங்கள் இரண்டுள்ளன. செங் கழுநீரம்மன் தலைமட்டும் கிராம தேவதை. சிலாவடிவம். காரைக்காலம்மையார் சிலையும் உள்ளது. சித்திராபௌர்ணமி யில் விதை தெளியுத்ஸவம் நடக்கிறது. மேற்படி வயல் ஈச மானியம்; மேற்கே யுள்ளது. நித்தியேசுவரத்திற்கு எழுந்தருள் வதுண்டு; பாகற்காய் உத்ஸவமுண்டு. ஞான ஸித்தி விநாயகர் ஸந்நிதிக்கு எதிரில் கோபுரத்திற்கு வெளியேயுள்ளார். ஸ்வாமி விதை தெளிக்கப் போன பொழுது ஸம்பந்தருக்குக் காட்டிக் கொடுத்தனர். இத்தலத்திற்கு நேர் மேற்கில் 2 மைலில் புத்த மங்கலமென்று ஓர் ஊருண்டு. இத்தலத்தில் கோயிலுக்கு எதிரில் வாதாடி மண்டபமென்று ஒன்றுண்டு; இம்மண்டபத்திலே தான் ஸம்பந்தருக்கும் புத்தருக்கும் வாதம் நடந்ததென்று சொல் லுவர்.

77. தென்குடித்திட்டை:

சுவாமி: சுயம்பூதேசர், தேனுபுரிநாதர். அரசியலாரின் கணக்குகளில் தக்ஷிணகுடேசர், தேனுநாதர், வசிஷ்டேசுவரர் என்னும் திருநாமங்கள் காணப்படுகின்றன.

78. தேவூர்:

இது தேவையென்றுங் கூறப்படும். சுயாதரம் செய்த ஆசிரியர் இவ்வூரினர் என்று தெரிகின்றது. இவ்வூரில் கௌதமர்க்கு அரிசிக் கதிரே விளைந்தது. இவ்வூரில் வரிசைக்குடி வேளாளன் ஒருவன் இருந்தான். சோழ மண்டல சதகம். 49. இதற்குத் தெற்கே அரை மைல் தூரத்தில் பசுபதீச்சரமென்று ஒரு ஸ்தலமுண்டு; திருவாசகம் கீர்த்தித் திருவகவல், 71—72 ''தேவூர்த்தென் பாற்றிகழ்தரு தீவிற் கோவார் கோலங் கொண்ட கொள்கையும்''

திருஞா. தேவாரம். பண்—காந்தாரம்:

1. பண்ணிலாவிய மொழியுமை—மதுரபாஷிணி (அம்பிகை திருநாமம்).

7. தென்றமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர். பண்—சாதாரி:

1. பண்தடவு சொல்லி (அம்பிகை திருநாமம்)

79. நணா:

காவிரியும் பவானி நதியும் சங்கம மாகுமிடத்திலுள்ள சிவ ஸ்தலம். இதற்குத் தமிழ்ப்புராண மொன்றுண்டு.

80. நல்லம்: நல்லபூமி.

இது பூமி தேவி, பிரமன் பூசித்த ஸ்தலம்.

ஸ்வாமி: பௌமேசர்.

ஸந்நிதி: மேற்கு.

தீர்த்தம்: பிரமதீர்த்தம்.

விருக்ஷம்: பத்திராசுவத்தம்; உரிய வல்லாத காலங்களிற் கூடப் பிரதக்ஷிணம் செய்யலாம். இந்த ஸ்தலத்தில் செவ்வாயும் வெள்ளியும் நல்லன செய்வர் என்பது ஐதிஹ்யம்.

81. நல்லூர்:

சுந்தரபுரம். சுந்தரகிரி. மேரு சிகரங்கள் மூன்றனுள்

ஒன்று. ராதந்திரகல்பம். ஸ்வாமி: அமிர்தேசுதவரர், அபராத சுஷபணேசுவரர், விசயேசுவரர்.

அம்பிகை: கிரிசுந்தரி.

சுவாமி, கருடன், நரலிம்மம், முனிவர் எழுவர்க்காக வந்த தாக ஐதிஹ்யம். தடாகத்தில் முத்து விளைகிற ஸ்தலம் இது.

82. நல்லூர்ப்பெருமணம்:

ஸ்வாமி: சிவலோகத் தியாகர்; சந்நிதி கிழக்கு. விருஷ பந்துருத்தி—ஒருர். இந்த ஸ்தலத்திற்கு 2 மைல். பஞ்சாக்கர உபதேசமில்லாதவர்கள் ஒளியைக்கண்டு ஓடியபொழுது ஸ்வாமி நந்தியை அனுப்பி அழைத்த இடம். களைத்த இடபத்திற்குக் கப்பி கொடுத்த இடம். கப்பிகுடி—காப்பியக்குடி. இத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஒரு விநாயகருக்குப் பொய்யாத விநாயகரென்றும், மற்றொரு விநாயகருக்கு வழித்துணை விநாயக ரென்றும் திருநாமங்கள் உள்ளன. இத்தலத்தில் எழுந்தருளி யுள்ள அம்பிகையின் திருநாமமாகிய திருவெண்ணீற்றுமையென் பது விபூதி கல்யாணியென்று வடமொழியில் வழங்கும்

சுவாமி: பூலோகத்தியாகர்.

அம்பிகை: சுவேத விபூதிநாயகி—திருவெண்ணீற்றுமை.

தீர்த்தம்: பஞ்சாக்ஷர தீர்த்தம். முதலில் அம்பிகை பூஜித் தது.

விருட்சம்: ஆச்சா.

83. நள்ளாறு:

நளன் பூசித்துச் சனி பாதையை நீக்கிக் கொண்ட இடம்; நளன் ஆறு, நளபுரி, விஷ்ணுபுரி, பிரமபுரி, இந்திரபுரி. தர்ப் பைக்காடு—தர்ப்பாரணியம்.

ஸ்வாமி: தர்ப்பாரணியேசுவரர், நளேசுவரர், ஆதிபுரீசுவரர்,

அம்பிகை: பிராணேசுவரி (பிராணாம்பா)

தீர்த்தம்: ஹம்ஸ தீர்த்தம்; குளம்; வடக்கு வீதி. இதில் அகஸ்திய தீர்த்தம் உண்டு. மேற்கு.

பிரம தீர்த்தம்: கோயிலுக்கு வெளியே உள்ள குளம். ஸரஸ்வதி தீர்த்தம்: தெற்கு மடவளாகக் குளம். நள தீர்த்தம்: குளம்; வடக்கு வீதி. தீர்த்தம் 27. சனிபகவான் அம்மன் ஸந்நிதிக்கு மேற்கே இருக்கிறார். நாகராஜா, நாககன்னிகை.

ரிஷிகள் மூவர், பைரவர் மூவர். அறுபத்து மூவர், இடையன், இடைச்சிகள் சிலைகள் வெளியே இருக்கின்றன. வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் தீர்த்தங் கொடுக்கும் உத்ஸவம் நடைபெறும். இடையன் இடைச்சிகளுக்குத் தியாகராஜா காட்சி கொடுப்பதுண்டு.

84. நனிபள்ளி:

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இத்தலத்துக்கு எழுந்தருளியபோது இத்தலம் பாலையாக இருத்தலால் உயிர்கள் வருந்துதலையறிந்து அதனை நெய்தல் நிலமாகச் செய்தருளினர்.

85. நாட்டியத்தான்குடி:

ஸ்வாமி: ரத்னபுரீசுவரர்.

அம்பிகை: மங்களாம்பிகை.

தீர்த்தம்: கருவறுத்த தீர்த்தம், சூரிய புஷ்கரிணி, வெள்ளையாறு—சுவேத நதி, கபி தீர்த்தம், அக்னி தீர்த்தம்.

விருக்ஷம்: மாவிலிங்கம்.

86. நின்றியூர்—திருநின்றவூர்:

ஸ்வாமி: லக்ஷ்மீபுரீசுவரர்; ஸந்நிதி கிழக்கு.

அம்பிகை: லோகநாயகி: ஸந்நிதி தெற்கு.

தீர்த்தம்: பரிகேசுவர தீர்த்தம். இது கோயிலைச் சூழ அகழியாக உள்ளது.

87. நீடூர்:

ஸ்வாமி பெயர்: கானநிர்த்தப்ரியர்; ''பாடி யாடும் பரிசே புரிந்தானை'' சுந்தரர் தேவாரம் 6. ஸோமநாதேசுவரர், பத்ரகாளீசுவரர், கர்க்கட கேசுவரர் என்பன. அம்பிகை பெயர்; ஆதித்திய அபயாம்பிகை, வேதநாயகி, வேத துளிபங்கநாயகி, ஆலால சுந்தரநாயகி, அதிகாந்தி, வேயுறுதோளி யென்பன. சுந்தரர் தேவாரம். 8. ''வேய்கொ டோளுமை பாகனை''. இரண்டாம் யுகத்தில் பிறதேவர்களும் சந்திரனும் பூசித்த தலம். ஆநந்த நாம தீர்த்தம் ஷஷ்டப்தகோடி தீர்த்த மென்றும் பெயர் பெறும். இக்கோயிலுக்கு முற்காலத்தில் இரண்டு பிராகாரம் இருந்தன வாம். இக்காலத்தில் வெளி மதில் முற்றிலும் போய்விட்டது.

88. நீலக்குடி:

ஸ்வாமி: மநோக்கியநாதர்.

அம்பிகை இருவர்: 1. அநூபமகுசாம்பிகை, 2. அபீஷ்ட ப்ரதநாயகி.

விருட்சம்: பலா.

89. நெடுங்களம்:

64 வகை நடனத்துள் ஒன்று.

90. நெல்வாயில்:

சிவபெருமானுடைய சிரசில் ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் ஸ்தலம் இது.

சுவாமி: சிகாபுரீசுவரர்.

91. நெல்வாயில் அரத்துறை (நெய்வாசல்):

தீர்த்தம்: ஹர தீர்த்தம்.

ஒரே வட்டமூள்ள குருமூர்த்தியை இரண்டு இருடிகள் பூஜை செய்தார்கள். அஷ்டோத்திர சிவலிங்கம். வலஞ்சுழி விநாயகர் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார். சுவாமி: அரத் துறைநாதர், தீர்த்தபுரீசுவரர்,

அம்பிகை: சுந்தரநாயகி, திரிபுர சுந்தரி.

தீர்த்தம் அன்னமலர்ப்பெய்கை, (வடமேற்கு) நீலமலர்ப் பொய்கை (கோயிலுக்கு வடகிழக்கு) விஷ்ணு ஸ்தாபித்தது. இங்கு வன்மீக நதியும் சுவேத நதியும் சங்கமம். சேரசோழ பாண்டியரால் 3 சிவலிங்கப் பிரதிஷ்டை; சப்த ரிஷிகள் பூசித்தது; சிவலிங்கங்கள் ஏழு உள்ளன. வட(ஆல்) விருக்ஷம் தல விருக்ஷம்.

92. பட்டீச்சுரம்:

இத்தலம் சக்திவனத்தில் உள்ளதென்று பட்டீச்சுர மகாத் மியத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தச் சக்திவனம் பராசக்தியி னால் ஏற்படுத்தப்பட்டது.; அம்பிகையாகிய பராசக்தி தவம் செய்த வனமாகையால் சக்தி வனம் என்னும் பெயர் பெற்றது. அந்தச் சக்தி வனத்தில் தவஞ்செய்யும் அம்பிகை முன் சிவ பெருமான் ஜடாமகுட தாரியாகப் பிரசந்நமானமையின் அவருக்குக் கபர்த்தீசுவரரென்ற திருநாமம் உண்டாயிற்று. சிவ பெருமான் திருவுள்ளம் மகிழுமாறு சக்தி வனத்தில் தவஞ்

செய்யும் அம்பிகைக்குப் பணிவிடை செய்யும் பொருட்டுக் காம தேனு தனது மூத்த பெண்ணாகிய பட்டியை அனுப்பினாள். பட்டி அம்பிகைக்குப் பணிவிடை செய்து வருங்காலத்தில் சக்தி வனத்தில் தானும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிக்க விரும்பிச் சிற்ப சாத்திரப்படியும் சைவாகமப்படியும் உயர மான பீடத்தில் மணலால் லிங்கத்தை ஸ்தாபித்து சுப்பிர மணியர் முதலிய பரிவார தேவதைகளை ஆவாகனம் பண்ணி சிவலிங்கப் பெருமானைப் பூஜை செய்தாள். சிவ லிங்கப் பெருமான் சந்நிதிக்கு எதிரில் ஒரு தீர்த்தத்தை உண் டாக்கி அதில் கங்கை முதலிய அறுபத்தாறு கோடி தீர்த்தங் களையும் ஆவாகநம் செய்து ஞான தீர்த்தமென்னும் பெயர் வைத்து மணல் ரூபமாக இருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் முதலான பூஜை செய்து வந்தாள். பட்டியின் பக்தி யோகத்தால் உண்டான லிங்கத்துக்குப் பட்டிலிங்கமென் றும் இத்தலத்திற்குப் பட்டீச்சுரமென்றும் திருநாமங்கள் முறையே ஏற்பட்டன. இத்தலத்தில் தர்மலிங்கம் என்னும் திருநாமம் பெற்ற லிங்கமொன்றும் உண்டு. ஒரே காலத்தில் சக்திவனத்தையும், பட்டிலிங்கத்தையும், கபர்த்தீசுவரரையும் தருமலிங்கத்தையும் தரிசிப்பவர் முத்தி பெறுவர் என்பதற்கு ஐயமில்லை. ஞானதீர்த்தத்தால் அபிஷேகம் செய்பவன் அசுவமேதயாக பலனை அடைவான். இத்தலம் விராட்புரு ஷனுக்குச் சுழிமுனைத்தலமென்று இத்தலமான்மியம் கூறு கிறது. பராசக்தி வாசஞ்செய்யும் திருத்தலம் இதுவாகும். சந்நிதி இரண்டும் கிழக்கு முகம்.

இத்தலம் சத்திமுற்றத்துக்குத் தெற்கேயுள்ளது. அகராதி நிகண்டு, திருமேற்றளிப் புராணம் செய்த சிதம்பரம் இரேவண சித்தரென்பவர் இத்தலத்திலேயே பெரும்பாலும் வசித்தவரென்று தெரிகிறது. இத்தலத்தில் திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீன மடங்களும் உண்டு. அமர்நீதி நாயனார் அவதரித்த பழையாறைக்கு ஒரு மைலில் வட மேற்கில் இத்தலம் உள்ளது. சில காரணத்தால் பட்டீச்சுரம் முதலிய தலங்களுக்கு ஷி பழை யாறை பிரதான நகரமாக இருந்ததென்று தெரிகிறது.

93. பரங்குன்றம்:

பாண்டி நாட்டுச் சைவத்திருப்பதிகளுள் ஒன்று; முருகர் சூரன் முதலியோரைக்கொன்ற பின்பு வந்து தெய்வயானையைத் திருமணம் புரிந்த தலமென்று கூந்தம் தெரிவிக்கின்றது; திருமுரு காற்றுப்படையில் முதலிற் கூறப்பட்டுள்ளது; மதுரைக் காஞ்சி யிலும் கல்லாடத்திலும் கலித்தொகையிலும் இத்தலத்தின் புகழ்

வந்துள்ளது. முருகக்கடவுள் திருப்பதிகளுள்ளும் இஃது ஒன்று. திருப்புகழுண்டு. இத்தலத்திற்குத் தமிழில் புராணமுண்டு. கல்லாடத்துள்ள பல செய்யுட்களால் கூடல் இத்தலத்திற்குக் கிழக்கே இருந்ததாகத் தெரிகின்றது.

இத்தலத்தில் துவஜஸ்தம்ப மண்டபத்தில் வடபாலுள்ள பெரிய கருங்கற்றூண்களுள் ஆறாவதில் சிவபெருமானுடைய திருவுருவம் புலியைக் கொண்டு புல்வாய்க் கன்றிற்குப் பாலருத்திய வண்ணமாகப் பெரியோர்கள் அமைத்திருக்கின்றனர். இங்ஙனம் அமைத்திருப்பது பண்டைக்காலத்தில் புலியின் முலைப் பாலைச் சிவபெருமான் புல்வாய்க் கன்றுக்கு அளித்தருளிய திருவிளையாடல் நிகழ்ந்ததென்பதை நன்கு விளக்குகின்றது.

திருப்பரங்கிரிப்புராணம்: கையெழுத்துப்பிரதி எண் 88b
(அபூர்த்தி)

கந்தமாதன பருவதத் தெண்சிகரங்களில் ஆறாவதாகிய சத்திய சிருங்கம் சேடனொடு இகலிய வாயுவினாற் போர்த்து வந்து போகடப் பெற்றமையாற் திருப்பரங்கிரிக்குச் சத்தியகிரி யென்றும் ஒரு பெயர். மலைக்கு வடக்கு ஸ்த்தியகூபம், மேற்கு புத்திரகூபம். ஈசானத்தில் தாமரைத் தடாகம். சிவபெருமானாற் பார்வதிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரார்த்தத்தைத் தான் தெரிந்து வெளிப்படுத்திய தோஷமறக் குமரக்கடவுள் இங்கு தவஞ் செய்தார். அவருக்குச் சிவபிரான் தைப்பூசத்திற் காட்சி கொடுத்து இட்ட சித்தியையும் அருளினார். சத்தியகிரி, சுகந்தவனம், விஷ்ணுத்துருவம், குமாரபுரி இவை முறையே நான்கு உகத்தும் பெயர்களாகும்.

சிபிவேந்தன் கௌதமோபதேசத்தால் இத்தலத்துக்குக் காசியிலிருந்து ஐஞ்ஞாறு வேதப் பிராமணர்களை வருவித்து சதுர்வேத மங்கலம் என்னுங் கிராமத்திலே ஒருபாதி கோயிலுக்கு, மறுபாதியை இவர்களுக்குப் பங்கிட்டுங் கொடுத்து வருகையில் ஒருவர் குறைய சிவபெருமான் பரங்கிரிக் குமரனென்னும் பெயரோடும் வந்து தாம் தானம் வாங்கினர். பின்பு அரசன் மகிழ்ந்து சேது யாத்திரை செய்து காம்பிலி அடைந்து சுகமாக அரசாட்சி செய்து வாழ்ந்தான்.

சத்திய கூபத்துக்குக் கிழக்கிலுள்ள வைத்தியசார கூபம் சந்திரனுக்கு க்ஷயரோகத்தை மாற்றியது; எந்நோயையும் தீர்க்கும்.

ஈசானத்துள்ள தாமரைத் தடாகம் முருகன் வேலாயுதத்தினாலே கிழிக்கப்பட்டுச் சரவணப் பொய்கை என்னும் பெயர் பெற்றது.

பிரமகூபம்: இதற்கு வேதகூபமெனவும் பெயர்; பிரமன் இதில் மூழ்கிச் சரசுவதியைக் கலியாணம் செய்தமையாற் கல்யாண கூபமெனவும் ஒரு பெயர். அகஸ்தியர்உத்தரவுப்படி மாணாக் கராகிய பிரமிட்ட முனிவராற்குட்ட நோயுறச் சாபமேற்ற விசாலைநகர்க் கோவிதாரத் துவஜபாண்டியன் இப்பிரம கூபத்து மூழ்கி வெண்குட்ட நோய் தீர்ந்தான். இத்தீர்த்தம் மலைக்கு வாயு கோணத்தில் நானூறு விற்கிடையிலுள்ளது.

பிரமன் தன் விவாக காலத்தில் இத் தலத்துள்ள சுற்பக விநாயகரைப் பூசித்தான். மேற்கிலுள்ள திருமாலையும் பூசித்துத் துதித்தான். நீலநிறத் துர்க்கை வடக்கு நோக்கி மகிடன் தலை யில் நிற்கிறாள். அவளையும் பூசித்தான்.

இத்தலத்துப் புனிதத் தீர்த்தங்கள் ஒன்பது. அவற்றுள் சரவணப் பொய்கையும் சத்திய தீர்த்தமும் மிக்க விசேடம்.

அரிச்சந்திரனென்னும் அரசன் சத்தியகூப தீர்த்தத்தில் முழுகி சிந்தியம் என்னும் சிவாகம விதிப்படி தை உத்திரட் டாதி தொடங்கிப் பூசம் வரை திருவிழா நடத்தி முருகக் கடவுள் சரவணப் பொய்கையில் தீர்த்தம் அருளப் பெற்றுச் சத்தியம் தவறாத விரதம் முற்றுப்பெறவரம் பெற்றுச் சேது யாத்திரை செய்து நகரடைந்து வாழ்ந்தான்.

சத்தியகூப ஸ்நாநத்துக்கு மாமகம் விசேடம்.

மலையினுச்சியில் தென்பக்கத்துள்ள கங்கா குண்டஸ்நா நத்துக்குக் கார்த்திகைக் கார்த்திகை பதினேழாவது நாழிகை விசேடம். நக்கீரர் பொருட்டு ஐந்நிறமான தேளிமீனோடு குமரன் அழைத்தது. சரவணப் பொய்கைக்கும் இதுவே.

திருப்பாற்குண்ட நீருக்கும் மாசிஸோமவாரம் விசேடம். நக்கீர குண்டத்தில் நீராடித் தானஞ் செய்தல் மிக விசேடம்.

எக்காலமும் முருகக்கடவுள் திருவிழா நடக்க வேண்டும் என்றும், அவன் அன்பில்லார் தம் அன்பில்லார் என்றும் சிவபெருமான் வரங்கொடுத்தார். இவ்வரம் பெற்று எல்லாருக்கு மேலாய்ச் சண்முகக் கடவுள் வீற்றிருத்தலாற் சுவாமிபுரம் என்றும் ஒரு பெயர்.

குமாரக்கடவுள் நக்கீரர் தம்மைப் பாடாமையால் அவர் மீது ஒரு குற்றமேற்றிக் குகையிலடைப்பித்தார். (குற்றம்: மீனும் பறவையுமான அரசிலையைத் துண்டிக்க அவைகள் இறத்தல்). நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிமஃலகிழவோனே என முடிக்க,

முருகனருளால் நக்கீரர் உள்ளிட்ட அனைவரும் குகையினின்றும் விடுபட்டனர் என்பது புராணவரலாறு.

94. பரிதி நியமம்.

நடன ஸ்தலம். யமனுடைய சாயா ஹத்தி நீங்கிய இடம். ஆண்டு தோறும் பங்குனி 18ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை சூரிய பூஜை நடைபெறுகிறது.

95. பருப்பதம்:

இத்தலம் கிருஷ்ணவேணியோடு துங்கபத்திரா நதி சங்கம மாகும் இடத்திலுள்ளது (சூதசம்ஹிதை). வண்டு பூசித்த தலம். சிவபெருமான் திருநந்தி தேவரைக் கயிலையினின்றும் மூன்று சிகரங்களைப் பெயர்த்துவைக்கும் வண்ணம் கட்டளை யிடஅவர் அங்ஙனமே மூன்றைப் பெயர்த்து இத்தலத்தில் ஒரு சிகரத்தை வைத்தனர். பிரமராம்பிகை: இத்தலத் திலுள்ள அம்பிகையின் திருநாமம். மல்லிகார்ச்சுனன்: இத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாமம். திரைலோக் கிய மல்லனென்னும் சாளுக்கிய அரசன் பணிசெய்த தலம். ஜங்கம பூசை. சிவநிசி விழாவின் பின் அம்பா தேவிக்கு விழா உண்டு. மாதம் இரண்டு நிகழும். கோயில் 660 அடி நீளமும் 510 அடி அகலமும் உள்ளது. திரிபுராந்தகம் — ஸ்ரீசைலத் தின் கிழக்குவாயில்.

96. பறியலூர்:

தக்ஷபுரியென்று வடமொழியில் வழங்குந் தலம். யாக சங்கார மூர்த்தியாகிய அகோர வீரபத்திரரின் தியான சுலோகத் திற் கூறியபடியே அவருடைய திருவுருவம் உள்ளது. தக்ஷயாக சங்கார மூர்த்தியின் மீது பதிகமொன்றும் அகவலொன்றும் உள்ளன.

97. பனந்தாள்:

சுவாமி திருநாமங்கள்: 12.

(1) அருணஜடேசுவரர், (2) மிருதஜீவேசுவரர், (3) அஜே சுவரர், (4) ஜராவதேசுவரர். மற்ற நாமங்கள் குறிக்கப் பெற வில்லை.

ஸந்நிதி: மேற்கு முகம்.

அம்பிகைக்குப் பாலாம்பிகை யென்றும், விருத்தாம்பிகை யென்றும் இரண்டு திருநாமங்கள்.

அம்பிகை: பாலாம்பிகை: ஸ்வாமி ஸந்நிதிக்கு வலப்பக்கம்; ஸ்வாமிபால் ஞானோபதேசம் பெற்றதாக ஐதிஹ்யம்.

பூசித்தோர்: 1. பிரஹ்மா, 2. ஐராவதம், 3. யக்ஷஸ்திரீ யாகியதாடகை, புத்திரோத்பவத்தின் பொருட்டுப் பூசித்தாள்; ராவணன்பாட்டியென்றுஞ் சொல்லுகின்றனர். 4. சூரியன், 5. சந்திரன், 6. நாக கன்னிகை, 7. சங்குகன்னனாகிய வேடராஜன், 8. தருமசேனமஹாராஜா; இவர் புத்திரப் பேற்றின் பொருட்டுப் பூசித்தனர். 9. வீரசேன மகாராஜா இவர் மூர்த்தியை நிமிர்த்தற்கு முயன்றவர், 10. குங்குலியக் கலயநாயனார், 11. யக்ஞகுப்தன் என்னும் வைசியன். 12. காகம்.

விருக்ஷம்: பனை. இரண்டு பனைகள் கிழக்குப் பிராகாரத் தில் உள்ளன.

தீர்த்தங்கள்: 10.

பிரஹ்ம தீர்த்தம்: குளம்; கோயிலுக்குப் பின்னேயுள்ளது.

சூரிய தீர்த்தம்: புழுதிகுடி மடத்துக்குப் பின்னேயுள்ளது; பைரவர் காவலாக இருக்கிறார்.

தர்ம தீர்த்தம்: குளம்; நத்தமென்னும் குளத்தைச் சார்ந் தது.

சேஷதீர்த்தம்: குளம், அக்கினிமூலை. பாலூர்.

காகதீர்த்தம்: குளம்; நைருதி மாரியம்மன் கோயிற் பக்கம் உள்ளது.

ஸத்திய நதி: மேற்கேயுள்ளது.

கஜகாதம்: குளம். வீராக்கண்குளம் (ஐராவதம்)

நாக தீர்த்தம்: வாயு மூலையில் கோயிலுள் குளமாக உள்ளது.

தாடகா தீர்த்தம்: வீரியம்மன் குளம். வடமேற்கே யுள்ளது.

சந்திர தீர்த்தம்: வடக்கே கிணறாக உள்ளது.

நாரை வாய்க்கால்: மேற்கேயுள்ளது.

விருக்ஷம்: பனை. இது, ஆதியில் ஐந்து கிளையையுடைய தாக இருந்தது. உள் பிராகாரத்தின் பின்னுள்ளது. இது ஷண்மங்கல க்ஷேத்திரம். 1. க்ஷேத்திரம், 2. நதி, 3. வனம், 4. சைலம்—ஊருடையப்பர் கோயில், 5. புரம்—பிரமபுரம். 6. விமானம்.

குங்குலியக்கலயர் லிங்கத்தை நிமிர்க்கக் கழுத்திற் பூட்டிக் கொண்டது அயோந்திரமாம்.

தாடகை 3 வருஷம் பூசித்து மாலை சாத்தி 16 கை பெற்றாள். பூசைக்காகப் பெற்ற 16 கைகள் பூசித்த பின்பு மறையுமாம். வீரியம்மன் தாடகா தீர்த்தத்திற்குக் காவல். வீரசண்டிகை. மேற்படி தீர்த்தத்திற்குப் பைரவரும் விக்கி நேசுவரரும் காவல். சூரியன் பூசித்தது பாஸ்கரலிங்கம். புழுதி குடி; அம்பிகை: ஸௌந்தரநாயகி. தருமஸேனன் பூசித்தது தர்மபுரீசர். தேவி தர்ம ஸம்வர்த்தனி. (பாலூர்—தெற்கு) அஜேசுவரர்—மலைக்கோயில். ஊருடையப்பர்; தேவி: திரிபுர சுந்தரி. ஐராவதேசுவரர். வீராக்கண். மேற்கு. வீரசேன சோழன் இருந்த இடம்.

அகத்தியேசுவரர்—மேலைக் காட்டூர். நிலம் 150 வேலி. பனை இரண்டுக்கு கிழக்கு சிலையில் சிவலிங்கம்.

நாக கன்னிகையும் யஞ்யகுப்தன் தரும சேனனும்...நாக பிலம் :கிணறு.

விநாயகர்: ஆண்ட விநாயகர்.

98. பாசூர்:

இத்தலம் ஈக்காட்டுக் கோட்டத்துக் காக்கஞ்சூர் நாட்டி லுள்ளது.

99. பாண்டிக்கொடுமுடி:

இது மகுடேசுவரமென வழங்கும் (சூத). சௌந்தர நாயகி—சுத்த தாண்டவ மூர்த்தி.

100. பாதிரிப்புலியூர்:

முயல் பூசித்துச் சிவபெருமான் திருவருள் பெற்ற தலம். முன்ன நின்ற முடக்கான்முயற்கருள் செய்து நீள்புன்னை நின்றுகமழ் பாதிரிப்புலியூருளான். திருஞா. தே.

கடை ஞாழல்—இத்தலத்தின் திருநாமம். இஃது இக்கோயிற் சிலாசாஸனத்தும், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் ஆறாம் செய்யுளிலும் காணப்படும்.

ஸ்தல விருக்ஷம்; ஞாழல்—புலிநகக் கொன்றைப்பூ, ஊமத் தம்பூ, பாதிரி, தாழம்பூ முதலியவற்றைப் பூத்ததென்பதை திருப்

பாதிரிப்புலியூர்க் கலம்பகம் 39,41 ஆம் செய்யுட்களாலும், 'பன்னிரு பூமலர் பாதிரிக்கணே' (திருநகர 73) எனவும், ''புன்னை புண்டரீகம் பூக்கும் பாதிரிப்புலியூர்'' (பிரமசீல. 2) எனவும், ''கோங்கு சண்பகம் பிச்சி வெள்ளெருக்குச் செங்குவளை தாமரை புன்னை, தேங்கமழ் கொன்றை ஞாழலுன் மத்தங்கான் செழித்தலர் தாழம்போ, தோங்கு பாதிரி காலையு மாலையு முகைத் தவிழ்ந்துமை பூசைக், காங்கு வேண்டிய தருணத்திலுதவிடு மற்புதஞ் சொலற்பாற்றோ'' (பாடலமூல. 12) எனவும் வரும் இத்தலபுராணச் செய்யுட்களாலும் உணர்க. கெடிலநதி இத்தலத்திற்குத் தெற்கே ஓடிக் கொண்டிருந்தது என்பதும், தில்லைமூவாயிரவர் போன்ற குழாத்தினராகிய முந்நூற்றறுபது அந்தணர்கள் ஒரு நாளைக்கு ஒருவராகப் பூசித்து வந்தனர் என்பதும் திருப்பா திரிப்புலியூர்க் கலம்பகத்தால் அறியலாகும்.

ஸ்ரீ ஞானியார் மடம் இத்தலத்தில் உள்ளது.

101. புகலூர்:

இதில் வர்த்தமானீசுவரமென்பது கோயிலின் வடக்கு உட்பிராகாரத்திலுள்ளது. ஸந்நிதி: கிழக்கு. அம்பிகை: கருந்தார்குழலி. இப்பெயர் அப்பர் பதிகத்தில் (பெருந்தாழ்சடை) 'கருந்தார் குழலியுந் தாமுங் கலந்து' என்று வந்திருக்கிறது.

102. புள்ளமங்கை:

சனகாதியர் நால்வர் பிரணவ ஆராய்ச்சி செய்த தலம். பிள்ளைமங்கை போலும். ஆலந்துறை யெனப்படும்.

103. புறம்பயம்:

இத்தலத்தில், சிவபெருமான் பிடாரவுருக் கொண்டு வந்து ஒரு வணிகனுக்கு விடந்தீர்த்து அவனுக்கும் அவன் விரும்பி வந்த கன்னிகைக்கும் விவாகம் செய்வித்ததுண்டு என்று சொல்லுவர். இந்த ஐதிஹ்யத்தைப் புலப்படுத்தி வன்னி நாடகமென்று ஒரு நூல் செய்யப்பட்டு அஃது ஆடப்பட்டும் வருகிறது. இந்த ஸ்தலத்திற்குப் புராணமொன்று தமிழில் இருக்கிறது. சாட்சி நாதவெண்பாவென்று ஒரு நூல் இருப்பதாகத் தெரிகிறது. அது முற்றுங் கிடைக்கவில்லை. அதில் ஒன்று வருமாறு:

வன்னியிலிங்க மடைப்பள்ளி கூபமுன்னாள் இந்நான்குந் தென் மதுரைக் கெய்தியே—வன்னசெட்டி பெண்ணலத்தாற் சான்றுரைத்த பேரோய் புறம்பயம்வாழ் நன்னத்தா சாக்ஷிநாதா. புறம்பயம்—பாஹ்யாம்புபுரம். பிரளயகாலத்தில் பெருகி

வந்த கடல் வெள்ளத்தை ஸ்வாமி புறத்தே செல்லும்படி செய் தமையின் இப்பெயர் பெற்றது.

பிரளயங்காத்த பிள்ளையார்: இவர் உருவம் நத்தாங் கூடு, கிளிஞ்சல், மணல் இவற்றால் ஆக்கப்பட்டது போல் தோற்றுகின்றது. கடல் வெள்ளத்திலிருந்த நத்தாங்கூடு முதலிய வற்றை விநாயகராகப் பிடித்து வைத்துக் கடல் வெள்ளம் நகரை அழிக்காதபடி காவென்று சிவபெருமான் நியமிக்க இவர் காத்த மையின் இப்பெயர் பெற்றனர்.

இவர் மஹாமண்டபத்தில் வலப்புறத்தே கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். விநாயக சதுர்த்தி தோறும் நூறு சேருக்குக் குறையாமல் தேன் அபிஷேகமாகும். எல்லாம் திருமேனியிலேயே சுவறிவிடும்.

சுவாமி: புன்னைவனநாதர், புறம்பயநாதர், கல்யாண நாதர், சாட்சிநாதர். சந்நிதி: கிழக்கு. தேவி: இக்ஷுவாணி—கரும்படு சொல்லி. விருக்ஷம்: புன்னை. செட்டிப் பெண்ணுக்குச் சாட்சியாக மதுரைக்குச் சென்ற மிகப் பழைய வன்னி மரமும் உண்டு.

தீர்த்தங்கள்:

1. சப்தலாகரகூபம்: உலகத்தை யழிக்க வந்த ஏழு கடல் களையும் அடங்கச் செய்தமையின் இஃது இப்பெயர் பெற்றது. பெரிய கோபுரத்திற்கு இடப்புறமாக நந்தவனத்துக்குள் பிரம தீர்த்தத்தென்கரையில் உள்ளது. அமாவாசை தோறும் இதில் ஸ்நானஞ் செய்தல் விசேடம்.

2. பிரமதீர்த்தம்: பெரிய கோபுரத்திற்கு இடப்புறத்தே குள வடிவமாக உள்ளது. நாற்புறமும் மிகப் பழையதாக கட்டுக் கோப்பு இதற்கு உண்டு. 3. சூரியபுட்கரிணி: இத்தலத்துக்கு ஈசானத்தில் தடாக வடிவமாக உள்ளது. புரட்டாசி அமா வாசை (மகாளய அமாவாசை) தோறும் இதில் சுவாமி தீர்த்தங் கொடுப்பதுண்டு.

4. சந்திரபுட்கரிணி: மேற்கு வடக்கு மதிலின் புறத்தே ஓடை வடிவமாக உள்ளது. சித்திராபௌர்ணமி தோறும் இதில் ஸ்நானஞ் செய்தல் விசேடம்.

ஸ்தலப்பெயர்: 1. புறம்பயம்—பாஹ்ய யாம்புபுரம், 2.கலியாண நகரம்: வணிகப் பெண்ணுக்கு விவாகம் நடந்தமை காரணம். புன்னாக கானனம்—புன்னைவனம். இத்தலத்தில்

தவஞ் செய்த சனகாதிகளுக்குச் சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தி வடிவமாய் எழுந்தருளி வந்து ஞானோபதேசஞ் செய்தனர். இம்மூர்த்தியாலயம் பெரிய கோபுரத்துக்கு வெளியே ஸந்நிதிக்கு வடக்கே இடப்புறத்தே தனியாக உள்ளது. திருவுருவம் மிகச் செவ்விது. இது பற்றியே திருவாசகத்தில் ''புறம் பயந்தனில் அறம்பல அருளியும்'' என மாணிக்க வாசகரும் ''நால்வர்க்கு அறம்பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்'' எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் அருளிச் செய்வாராயினர்.

இவ்வாலயத்தின் பின்னிருந்த மிகப் பழையதான கல்லால விருக்ஷமொன்று 89 வருடங்களுக்கு முன்பு விழுந்து விட்டது. வன்னி மரமும் கிணறும் மடைப் பள்ளியும் சிவலிங்கமும் அம்பிகையும் செட்டிப் பெண்ணை வணிகன் மணம் புரிந்த தற்குச் சாக்ஷியாக மதுரை சென்றன. அம்பிகை யொழிந்த நான்கு வடிவங்களும் இதற்கு அறிகுறியாகப் பெரிய பிராகாரத்துள் அக்கினி மூலையில் ஒரு சேரவுள்ளன. பிரத்தியக்ஷநாதர்: இவர் லிங்க வடிவமாக உள்ளார். சிவலிங்கப் பெருமான் மதுரைக்குச் சாக்ஷியாகச் சென்றிருந்த பொழுது மூலஸ்தானத்திலிருந்து காட்சி கொடுத்துக் கொண்டிருந்து அவர் எழுந்தருளிய பின்பு தனியே வேறிடத்து வந்தவர். இவர் ஆலயம் கர்ப்பக் கிரகத்திற்கு வடக்கே தனியாக உள்ளது. சனகாதிகள் பூசித்த சிவலிங்கங்கள் 4.: இவைகள் மேற்குப் பிராகாரத்தில் முருகக் கடவுளின் ஆலயத்துக்கு வடக்கே கிழக்கு முகமாக உள்ளன. இவற்றிற்கு எதிரே தான் புன்னை விருக்ஷம் மிகப் பழையதாக நிற்கின்றது.

வழிபட்டோர்:

1. துரோணாசாரியார் உபாஸித்து அசுவத்தாமனைப் பெற்றார். 2. இமவான் வழிபட்டு மைநாகத்தைப் பெற்றது. 3. கோவந்த புத்தூரில் இருந்தவனும் தினந்தோறும் விறகு கொணர்ந்து கொடுத்தவனுமாகிய சண்டாள னொருவன் ஒரு நாள் கொள்ளிடப் பெருக்கில் நீந்தி வந்து குளிரால் நடுக்குற்றுப் பிரம தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பிராமண ரூபங்கொண்டு உபாஸித்து முத்தி பெற்றான். 4. ஆதனூரிலுள்ள அரசனாகிய அரித்துவசனுடைய காதற் பரத்தையாகிய இவ்வூர் வஸந்ததிலகையென்பவளுடைய அணிகலங்களைக் கொள்ளை கொண்ட ஒருவன் இருபுறத்துங் கூர்மையுள்ள குந்தமென்னும் ஆயுதத்தால் குத்தி அவளை மண்ணியாற்றில் வீழ்த்திவிட்டு வீடு வந்து மனைவியின் தூண்டுதலால் பார்த்தற்கு மீட்டுஞ் சென்று

நின்ற பொழுது பாரிடிந்து வீழ வீழ்ந்து ஷி ஆயுதத்தின் மற்றொரு பக்கத்துக் கூரில் கோப்புண்டு இறந்தான். இவ்விஷயம் சிவசிவ வெண்பாவில் 32–ம் செய்யுளில் ''புறம்பயத்து மின்னையுயிர் போக்க வந்தான்பட்ட திறந்தெரியாதோ சிவ சிவா'' என்று கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில், ''குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்தகளவெலாஞ், செற்றொருவரைச்செய்த தீமைகளிம் மையே வருந்திண்ணமே'' என்றது முதலியன இக்கதையை யுட் கொண்டென்று சொல்லுவர். இத்தலத்துக்கு முதலில் சங்கர மூர்த்தி என்னும் புலவராற் செய்யப்பட்டதும் 12 சருக்கங்கள் மட்டும் கிடைத்துள்ளதும் விலைமாதுச் சருக்கம் மட்டும் கும்ப கோணம் பேட்டைத் தெரு சாமிவாத்தியாராற் செய்யப் பட்டதுமான தமிழ்ப்புராணமும்,

குடிதாங்கி பாலசுப்பிரமணிய கவிராயராற் செய்யப் பட்டனவான புறம்பயமாலை முதலிய ஏழு பிரபந்தங்களும், மீனாட்சி சுந்தரகவிராயர் என்பவராற் செய்யப்பட்ட வணிக நாடகமும் உள்ளன.

பெரிய கோபுரத்தின் நிலையின் மேற்பரப்பில் 'கண்ணங் குடை தெய்வரங்கப் பெருமாள் சதாசேர்வை' என்பது எழுதப் பட்டுள்ளது. தேவி திருநாமம் திருஞா. தேவாரத்துள் ''பெரும்பிணி'' என்பதில் கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்' என்றும் சிவபெருமான் உபதேசஞ் செய்தமை திருநா. தேவாரத்துள் ''செத்தவர்தந்'' என் பதில் 'புத்தகங் கைக்கொண்டு புலித்தோல் வீக்கி'' என்றும் கூறப்பட்டுள்ளன. திருஞா. பதிகம்—1. திருநா. பதிகம்—1 சுந்தரமூர்த்தி. பதிகம்—1. ஈண்டுள்ள பெண்களுக்குக் கரும்பா ளென்பதும், பிள்ளைகளுக்குச் சாக்ஷியென்பதும் பெயர்களாக இடுவது வழக்கம்.

பொன்பற்றி: தென்மேற்கில் ஒரு மைலில் உள்ள ஒரூர். இது சுந்தரமூர்த்திநாயனார் பொன்பெற்ற இடம்.

சுக்கிரீவனும் விசுவாமித்திரரும் பூசித்த ஸ்தலம்.

104. புன்கூர்:

கோபுரத்தின் கீழ்ப்புறம் தேவேந்திரன் தீர்த்தம். கோயிலின் மேற்புறம் திருநாளைப் போவார் வெட்டிய குளம் இருக்கிறது.

ஸ்தலவிநாயகர்: பெரிய பிள்ளையார்.

புன்கு விருட்சம்: இதனடியில் பஞ்சலிங்கங்கள். இதற்குக் கிழக்கே முனீசுவரர்; கஞ்சவனேசுவரர்.

காசிபர், கௌதமர், பாரத்துவாசர், வசிஷ்டர் ஆகிய நான்கு ரிஷிகளுந் தவஞ் செய்ய அவர்களுக்குக் கஞ்சவனேசுவரர் ஈசானாதி ஐந்து லிங்கமாகக் காட்சி கொடுத்த தலம். சுவாமி பிருதுவிலிங்கம். உள்ளே மூல லிங்கத்தைச் சேர்ந்த லிங்கங்கள் 4. நந்தனார் வெட்டியே குளம் அவர் வெட்டுவதற்குமுன் ரிஷப தீர்த்தம் என்று வழங்கி வந்தது. ரிஷியாக இருந்தவர் லிங்கமாக ஆகிவிட்டார்.

சொக்கநாயகி தெற்குப் பார்த்த சந்நிதி. ஏயர்கோன் கலிக்காம நாயனார் அவதரித்த பெருமங்கலம் இதற்கு வடக்கே அரைமைலில் உள்ளது.

105. பூவணம்:

இதில் கோரக்க நாதஸ்வாமி கோயில் சிவாலயத்திற்குக் கீழ்புறம் இருக்கிறது. கோரக்கர்—கோரக்ஷரென்னும் சித்தர். இதிலுள்ள சிவஸ்தலத்தின் மேற்புறத்தில் லக்ஷ்மீ தீர்த்தமென்று ஒன்றுண்டு. சந்நிதி ஈசானம். சந்நிதிக்கு நேரே வையைக்கு வடக்கே இராக்ஷசப் பிள்ளையார் கோயில் ஒன்றுண்டு. இதற்குச் சமீபத்தில் பிரமதீர்த்தமென்று ஒரு கிணறுண்டு. இராக்ஷசப் பிள்ளையார் என்ற சித்தரொருவர் இருந்தாரென்றும் அவரடங்கிய இடத்தே இப்பிள்ளையார் இருப்பதாகவும் சொல்லு கிறார்கள். இதைச் சூழ ஆயிரஞ் சிவலிங்கங்கள் இருந்தன. இவற்றைச் சேர சோழ பாண்டியர் மூவரும் பூவேந்திப் பூசித்தனர். திருக்கோயிலுக்குத் தெற்கே யக்ஞ விநாயகர் கோயிலும் யக்ஞ தீர்த்தமும் உள்ளன. இவர்நளனாற் பூசிக்கப் பட்டவர். கோரக்க சுவாமியைப் பூசிப்பவர் நடுமண்டலஞ் செட்டியார். இவர்கள் ஏழு வகுப்பினர். செட்டியார்களின் ஏழு வகுப்பு: 1. சோழியர், 2. மஞ்சப் புத்தூரார், 3. காசுக்காரச் செட்டியார். மற்றவை விளங்கவில்லை. இவர்களுக்கு நூற்றெட்டுக் கோத்திரமுண்டு. 1. சோழிரிஷி, 2. குளத்துடை மகரிஷி. மற்றவை விளங்கவில்லை. சந்நிதியில் மேற்புறமாகப் பொன்னனையாள் மண்டபமென்று ஒன்றுண்டு. இதற்கு வருடந் தோறும் ஒரு முறை மதுரைச் சுந்தரேசர் முற்காலத்து எழுந் தருளுவதுண்டு. இத்தலத்தின் வடமொழிப் பெயர்களுள் சதுர் வேதபுரி என்பதும் ஒன்று.

தீர்த்தங்கள்:

1. மணிகர்ணிகா தீர்த்தம்: கூபம்; அக்கினிமூலை,

2. பிரமதீர்த்தம்: நதிக்கு வடக்கே கூபம்; முன்பு குளமாயிருந்தது.

3. தேவிகுண்டம்: ஆலயத்துக்குள் கிணறு.

4. பாபநாசம்: குளம்; ஈசானம்.

5. மார்க்கண்டேய தீர்த்தம்: ஊருக்கு அக்கினி மூலை; அரை மைலிலுள்ளது.

6. நள தீர்த்தம்: யக்ஞ தீர்த்தமென்று சொல்லப்படும்.

7. விஷ்ணு தீர்த்தம்: ஊருக்குத் தெற்கே 2 மைல் தூரத்திலுள்ள நயினார் பேட்டையில் இருக்கிறது.

8. லக்ஷ்மி தீர்த்தம்: கோயிலுக்கு வடக்கே நதியோரத்தில் உள்ளது.

9. சந்திர தீர்த்தம்: இப்போது ஓரோரியில் மறைந்து விட்டது.

10.—11. வசிட்ட தீர்த்தம், இந்திர தீர்த்தம்: இவ்விரண்டும் வையையில் மறைந்து விட்டன.

பிரமோற்சவம்: பங்குனி மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஆரம்பம். உத்திரத்தில் தீர்த்தம்.

106. மண்ணிப்படிக்கரை:

நிருத்த விநாயகர்: இந்த ஸ்தல புராணத்தில் நடன விநாயகப் படலமென்று ஒன்றுள்ளது.

இதில் ஐந்து சிவ சந்நிதிகளுண்டு. அவற்றுள் (1) நீல கண்டேசுவரர்: இவர் பிரதானமான வாயிலை சந்நிதியாகப் பெற்றவர்; தருமபுத்திரரால் பூசிக்கப்பட்டவர். இந்த ஸ்வாமிக்கு அம்பிகை: அமிருதகரவல்லி. (2) படிக்கரைநாதேசுவரர்: மண்ணிப்படிக்கரை நாதேசுவரர். அருச்சுனன் பூசித்த ஸ்தலம். அம்பிகை: மங்களநாயகி. இக்கோயில் வடக்கே உள்ளது.

(3) மகதீசர்: தெற்கேயுள்ள மூர்த்தி. இவர் வீமசேனனாற் பூசிக்கப்பட்டவர்.

(4) பரமேசுவரர்: தட்சிணா மூர்த்திக்கருகேயுள்ளவர். இவர் நகுலனாற் பூசிக்கப்பட்டவர்.

(5) முத்தீசுவரர்: சகாதேவனால் பூசிக்கப்பட்டவர்.

ஸ்தல விருக்ஷம் இருப்பை ஆகையால் இத்தலம் மதூ காரணியம் என்று கூறப்படும். சில வருடத்திற்கு முன்பு

பெருங்காற்றால் இம்மரம் அடியோடு சாய்ந்து வீழ்ந்து போய் அப்பால் வேரிலிருந்து கிளைத்து முன்போலவே செழித்திருக்கிற தென்று சொல்லுகிறார்கள்.

புன்னைவனம்: இதிலுள்ள ஸ்வாமி: நாக நாதேசுவரர். அம்பிகை: சௌந்தரநாயகி. இந்தஇடம் இப்போது மணல் மேடென்னும் ஊராக இருக்கிறது.

வரதராஜப் பெருமாள் கோயில்: இது மண்ணிப்படிக் கரைக்கு வடக்கே இரண்டு கூப்பிடு தூரத்திலுள்ளது இது பாபாகுடி என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. இது தக்ஷிணகாஞ்சீபுரமென்றும் பெயர் பெறும்.

குழமணம்பிள்ளையார்: இவர் கோயிலுக்கு எதிரே யுள்ளவர்.

குன்னமுடையார்: இஃது இவ்வூரிலுள்ள ஐயனாருடைய பெயர்.

பிரம தீர்த்தம்: இது சந்நிதியில் தடாக வடிவமாகவுள்ளது. இது ஒரு சமயத்தில் நச்சுப் பொய்கை என்றும், பின்பு அமிர்த புஷ்கரிணி என்றும் பெயர் பெற்றது.

இத்தலத்திற்கு மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் செய்த தமிழ்ப் புராணம் ஒன்று உண்டு.

107. மயேந்திரபள்ளி (மகேந்திரபள்ளி)

விருத்திராசுரனைக் கொன்றபின் இந்திரனுக்கு மகேந்திரன் என்ற பெயர் ஏற்பட்டது.

ஸ்வாமி: சுந்தரேசுவரர்.
அம்பிகை: அலங்காரவதி, அலங்காரபூஷணவதி.
சந்நிதி: கிழக்கு.
விருட்சம்: கருங்காலி.
தீர்த்தம்: இந்திர தீர்த்தம், வச்சிர தீர்த்தம்.

108. மருகல்:

ஒரு கற்புடை மங்கைக்கு வன்னிமரம் முதலியன சான்று பகர்ந்தமை இத்தலத்தில் இன்றும் கர்ண பரம்பரையாக வழங்கு கின்றது; அந்நிகழ்ச்சியைப் புலப்படுத்தும் சின்னங்களும் இத் தலத்தில் உள்ளன.

109. மழபாடி:

லிங்கத்தில் வைரமிருக்கிறது. சிவபெருமானைப் புருஷா மிருகம் பூசித்துப் பேறுபெற்ற தலம். இக்கதையை இத்தல புராணத்தால் உணர்க.

கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருமழபாடி என்னும் தலத்தில் புருஷாமிருகம், என்றும் சிவ பூசை செய்து கொண் டிருந்தது. அதற்கு உடல் வலியும் தீர்க்காயுளும் பிறரால் வெல்ல முடியாத ஆற்றலும் இறைவன் அளித்தார். சிவபக்தியில் மிகச் சிறந்ததானமையால் இதைச் சிவபக்தர்கள் மிக பாராட்டுவார் கள். தாம் செய்யக் கருதிய யாகத்துக்கு அதனை அழைத்து வரும்படி பீமசேனனைத் தரும புத்திரர் அனுப்பினார். செயித்து அழைத்து வருவது மரபாதலின் பீமன் அதனை யுத்தத்திற்கு அழைத்தான்.

மழபாடியில் வந்து சிவலிங்கத்தைப் பெறத் தவம் செய்தது. பல வருஷமான பின்பு பூமியைப் பிளந்து கொண்டு வச்சிர ஸதம்ப வடிவமாக ஈசன் தோன்றினார். அதனால் அவருக்கு வச்சிரஸ்தம்பேசுவரர் என்று பெயர். பிரமதேவருடைய சிவ லிங்கமே இங்கு இவ்வடிவமாகத் தோற்றியது. அந்த லிங்கத்தை இம்மிருகம் பூசித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது தம்முடைய சிவலிங்கத்தைக் காணாத பிரமதேவர் அச்சிவலிங்கம் இங்கு வந்திருப்பது தெரிந்து புருஷா மிருகமே திருடிக் கொண்டு வந்து விட்டதென்று நினைத்து திருமழபாடிக்கு வந்து இதனோடு சண்டை செய்யத் தொடங்கினார். இதுவும் உடன் செய்தது. அப்பொழுது பரமசிவன் சிவலிங்கத்தினின்றும் தோற்றினார், தோற்றியவர் பிரம தேவரைப் பார்த்துத் நாமே இந்த மிரு கத்தின் தவத்திற்கு இரங்கி இங்கு வந்து விட்டோம். மிருகம் திருடிக் கொண்டு வரவில்லை. இனி இத்தலத்திலேயே இருப் போம். நீ வந்து பூசித்துச் செல்லலாம் என்று கட்டளை யிட்டார். அப்பால் சிவலிங்கப் பெருமானைப் புருஷாமிருகம் துதித்தது. பரமசிவன் தீர்க்காயுசும் பிறரால் வெல்ல முடியாத வன்மையும் எம்மிடத்து அன்பும் கொடுத்தோமென்று சொல்லி மறைந்து விட்டார். அப்பால் அந்த மூர்த்திக்குக் கோயில் முதலியவற்றைக் கட்டுவித்து நாள்தோறும் சிவபூசை செய்து கொண்டு அப்பால் விடை பெற்று ஆடகேசுவரர் என்னும் மூர்த்தி எழுந்தருளியிருக்கும் கீலமலை என்னும் தலத்தில் இருந்து தவம் செய்து கொண்டிருந்தது.

தருமபுத்திரர் தாம் செய்யும் யாகத்திற்குப் புருஷா மிருகத்தை அழைத்து வரும்படி பீமசேனனை அனுப்பினார். அவன் திருமழபாடியில் புருஷாமிருகத்தைக் காணாமையால் அது இருக்குமிடத்தை அங்குள்ளாராலறிந்து கீலமலைக்கு வந்து புருஷா மிருகத்தைக் கண்டான். அம்மிருகம் பீமனைப் பார்த்து நீ ஆயுதத்துடன் இருக்கின்றாய்.

என்கையில் ஆயுதமில்லை என்று சொல்லிற்று. உடனே அவன், கையிலிருந்த கதாயுதத்தைக் கொடுத்தான். நீ நிராயுத பாணியாயிருத்தலால் உன்னோடு யுத்தம் செய்வது தருமமன்று என்று சொல்லிற்று, யுத்தத்தால் அதனை வென்று அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்பது பீமசேனன் கருத்து. அதனை அறிந்த அந்த மிருகம், நான் விரைந்து திருமழபாடியை நோக்கி ஓடுவேன். என்னைப் பின்னே பிடிப்பதற்குத் துரத்தி ஓடி வர வேண்டும் அந்த ஸ்தலத்தின் எல்லையைத் தாண்டுவதற்குள் என்னைப் பிடித்து விட்டால் என்னை வென்றாயாவாய் என்று சொல்லிவிட்டு ஓடியது. அப்படி ஓடுகையில் அது திருமழ பாடியைத் தாண்டிய பொழுது இவன் ஓரடியைத் திருமழபாடி யெல்லையிலும், மற்றோரடியை வேறு எல்லையிலும் வைத்து அதனைப் பிடித்துக் கொண்டு தான் வென்றேனென்றான். அது நீ வெல்லவில்லை; இங்ஙனம் சொல்லுவது, நீதியன்று என்று சொல்லியது. இந்த வழக்கைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இரு வரும் தர்மரிடம் சென்றார்கள். அவரிடம் சொன்னபொழுது வழக்கை அவர் கேட்டுப்புறவெல்லையில் வைத்த பீமசேனன் பாதத்தை நீ வெட்டி எடுத்துக் கொள்ளலாமென்று தீர்ப்பளித் தார். அதனைக் கேட்ட புருஷா மிருகம் அவருடைய நடுவு நிலைமையைக் குறித்து வியந்து பீமனைக் கொல்லாமல் விட்டு விட்டது.

இது திருமழபாடிப் புராணத்துள் ஸ்தலச் சுருக்கத்தில் உள்ள கதை.

110. மறைக்காடு—வேதாரணியம்:

வேதம் தீர்த்த வடிவாய்ச் சமுத்திரத்தில் நதியோடுள்ள ஸ்தலம் மறைக்காடு.

ஸ்வாமி: வீணாவாத விதூஷணி ஸமேத வேதாரணியேஸ்வ ரசுவாமி.

தீர்த்தம்: வேத தீர்த்தம், இது ஸமுத்ரம்.

விருக்ஷம் 5; பதினான்கென்பதும் உண்டு; சுரபுன்னை முதலியன.

வேதங்கள் நான்கும் ஷடங்கங்களும் சுவாமியை நோக்கி, சுவாமீ, மரம் செடி கொடிகளாய்ப் பூமியில் உண்டாகின்ற எங்களுக்குக் கீழே நீவீர் சிவலிங்க ரூபமாய் எழுந்தருளியிருத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்து ஸ்ரீ ருத்திரத்தினால் ஸ்தோத்திரஞ் செய்து வரங்கள் பெற்றுள்ளன. கொடி, சிறுகொடி முதலியன

ஸ்தலத்துக்கு ஆதாரமாய் இருப்பது பிரத்தியக்ஷம். காடில்லாமற் பூமியில் ஸ்தலங்கள் இல்லை.

இத்தலக்கோயிலில் குலோத்துங்க சோழன் காலத்தில் ஒரு வனுக்குத் திருப்பதிகம் பாடத் தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. புஷ்பவனம்: இது வேதாரணியத்துக்கு அருகிலுள்ளது. வேதத் தால் உண்டாக்கப்பெற்றது.

இத்தலத்திற்கு வடக்கே நாலுவேதபதியென்ற கிராமம் உள்ளது. இது நான்கு வேதங்களும் இருந்த இடம்.

111. தென்திருமுல்லைவாயில் (முல்லாவனம்)

ஸ்வாமி: ஸங்கமேசுவரர்.

அம்பிகை: பிருஹந்நாயகி.

தீர்த்தம்: பழவாறு சங்கமம், விசுவாமித்திர தீர்த்தம், பராசர தீர்த்தம்.

ஸ்தலக் கொடி : முல்லை.

பூசித்தோர்: விசுவாமித்திரர், பராசரர்.

112. வடுகூர்:

நடன விசேட தலம்.

113. வல்லம்:

மகாபலியின் பரம்பரையைச் சேர்ந்தவராகிய பாணவம் சத்து அரசர்களின் கல்வெட்டுக்கள் வட ஆர்க்காடு ஜில்லா வேலூருக்கு அடுத்துக் கிராமமாக இருக்கும் இத்தலத்தில் காணப் படுகின்றன.

114. வலஞ்சுழி:

இத்தலம் ஸ்வயாவர்த்த புரியென்றும், தக்ஷிணுவர்த்த புரியென்றும் வடமொழியில் வழங்குகிறது. இத்தலமும் வலம் புரமும் சம்பந்தமுள்ளவை.

பிருகதாம்பா ஸமேத சுபர்த்தீசுவரர்

ஸுகந்த குந்தளம்பா ஸமேத ஸ்ரீகண்டேசுவரர்.

115. வலிதாயம்—பாடி:

ஸ்வாமி: ஸ்ரீவல்லீசுவரர்; வலிதாயநாதர்.

அம்பிகை: ஜகன்மாதா—ஜகதம்பிகை.

விநாயகர்: வரஸித்தி விநாயகர்.

விருட்சம்: பாதிரி.

தீர்த்தம்: பரத்வாஜ தீர்த்தம்.

கோயிலுக்கு வெளியே தெற்கு பிரம்ம தீர்த்தம். கோயிலுக்கு வடக்குஹனுமத் தீர்த்தம்; அக்நிமூலை.

இங்கே பிரும்ம தீர்த்தக் கரையில் கைலாச நாத ஸ்வாமி கோயில் இருக்கின்றது. பஞ்சமூர்த்திகளோடும் இஃது இருக்கிறது.

இத்தலத்திற்கு வடக்கே ஒரு கருங்கல் மண்டபமும் அதன் கிழக்கே ஒரு சத்திரமும் இருக்கின்றன. வட பக்கத்துச் சாலையின் வடக்கே ஓரத்தில் ஒரு வேம்பின் கீழ் படைவீட்டு அம்மன் என்றோரம்மன் இருக்கிறது. கோயிலில்லை; பல ஊர்களிருந்து பலர் பூஜித்துச் செல்லுகின்றார்கள்.

116. ஸ்ரீ வாஞ்சியம்:

ஸ்வாமி: மருந்தீசுவரர், வாஞ்சீசர்.

ஸந்நிதி: கிழக்கு.

அம்பிகை: மங்களநாயகி.

ஸந்நிதி: தெற்கு.

தீர்த்தம்: குப்த கங்கை.

விருக்ஷம்: சந்தனம்: இதனால் இந்தத் தலத்திற்குச் சந்தனாரணியம் என்று பெயர்.

குப்தகங்கை: கங்கை குப்தமாக வஸிக்கப் பெற்றது. ஸ்வாமி சூலத்தால் குத்தியுண்டாக்கப் பெற்றது. குத்தியதற்கு அடையாளமாக இதில் மூன்று கிணறுகள் உண்டு.

யமன் அக்கினி மூலையில் தவஞ் செய்து கொண்டிருக்கிறார். எதிரே யமதீர்த்தம்; மாசி மாதம் நடக்கும் பிரமோத்ஸவத்தில் மகத்தில் தீர்த்தம்.

2-ம் நாள், பரணியில் ஸ்வாமி யமவாகனத்திற் சென்று யமதீர்த்தத்தில் ஸ்வாமி தீர்த்தம் கொடுப்பது மரபு.

திருமால், பூமிதேவியைத் தழுவிக் கொண்டது பற்றி ஊடிய லக்ஷ்மி பிரிந்து போயினள். லக்ஷ்மியை அடைதற்குத் திருமால் தவம் செய்த இடம் நாரணமங்கலம்; இது ஊருக்கு மேற்கே 2மைலிலுள்ளது.

லக்ஷ்மி திருமாலை அடைதற்குத் தவம் செய்த இடம் அச்சுதமங்கலம்.

கருவறுத்தான் ஸந்நிதி: இதில் நந்தி மட்டும் உண்டு.

பண்டைக் காலத்தில் இந்த ஸ்தலம் மேற்குமுகமாக இருந்த தென்றும், ஒருவர் பொய்ப் பிரமாணஞ் செய்தமையின் ஸ்வாமி கிழக்கு முகமாகத் திரும்பி விட்டார் என்றும் சொல்லுகிறார்கள்.

தலமூர்த்திகள் முதலியன:

1. ஸ்ரீ வாஞ்சியநாதஸ்வாமி, 2. சோமாஸ்கந்த மூர்த்தி, 3. வெண்ணெய்ப் பிள்ளையார், 4. அறுபத்து மூவர், 5. தக்ஷிணா மூர்த்தி, 6. காசிவிசுவநாதர், 7. சந்திரமௌளீஸ்வரர், 8. சந்திரசேகரர், 9. பாலசுப்பிரமண்யர், 10. மீனாக்ஷி சுந்தரேஸ்வரர், 11. சுப்பிரமண்யஸ்வாமி, 12. பிருதுவிலிங்கம், 13. அப்பு லிங்கம், 14. மஹாலக்ஷ்மி, 15. தேயுலிங்கம், 16. வாயுலிங்கம், 17. ஆகாய லிங்கம், 18. தக்ஷிண கைலாஸ நாதர் ஸரஸ்வதி, 19. சனீஸ்வரபகவான், 20. ஷட்லிங்கம், 21. சண்டிகேஸ்வரர், 22. துர்க்கையம்மன், 23. ஆனந்தகூபம், 24. நடராஜர் கோயில், 25. பைரவர், 26. நட்டுவன்பிள்ளை யார், 27. துவஜஸ்தம்பம், 28. பலிபீடம், 29 நந்தி கேசுவரர், 30. மங்கள நாயகியம்மன், 31. பள்ளியறை, 32. உத்ஸவ மூர்த்தியம்பாள் (வாழவந்தாள்) 33. மெய்க்காவல் அறை, 34. கருவூலம், 35. அலங்கார மண்டபம், 36. யாகசாலை, 37. ஸ்டோர், 38. மடைப்பள்ளி, 39. விக்னேஸ்வரர், 40. சுப்பிரமண்யர், 41. ஸ்தலவிருட்சங்கள் (சந்தனமரங்கள்) 42. யமதர்மராஜாகோயில், 43. புஷ்யமண்டபம், 44. குப்த கங்கை, 45. கங்கைக்கரைப் பிள்ளையார், 46. கருஅறுத்தான் ஸந்நிதி, 47. சிறிய தேரடி மண்டபம், 48. பெரிய தேரடி மண்டபம், 49. சந்தியாவந்தன மண்டபம், 50. திருமாலை.

117. திருவான்மியூர்:

மார்க்கண்டேயர் கட்டளையின்படி வான்மீகர் வந்து வழி பட்டுப் பேறு பெற்றமையின் வான்மியூர் என்பது திருநாமம்.

ஸ்தலவிருக்ஷம்: வன்னி.

தீர்த்தம்: 1. ஜன்மநாசனி—கிழக்கு. 2. காமநாசனி—தெற்கு. 3. பாபநாசனி—மேற்கு. 4. ஞானதாயினி— வடக்கு. 5. மோக்ஷதாயினி—நடு. இவை ஐந்தும் இறைவன் சிரத்திலுள்ள கங்கையின் ஐந்து துளிகள். 4. ஞானதாயினியிற் படிந்து வான் மீகர் ஆடி சிவஞானம் பெற்றனர். இவர் பேறு பெற்றது பங்குனி உத்தரம்.

1. இரட்சசு என்பவன்: ஜன்மநாசனியிற் படிந்து தனக்கு இடையில் நேர்ந்திருந்த பெண் வடிவம் நீங்கினான்.

அம்பிகை: திரிபுரசுந்தரி, சொக்கநாயகி.

ஸ்வாமி: மருந்தீசர், பால்வண்ணநாதர்; மேற்கு முகம்.

2. காமநாசனி: இதில் சந்திரன் ஆடி க்ஷயரோகம் நீங்கப் பெற்றான். சூரியன் இரவிற் பூசித்த தலம்.

பிரம தீர்த்தம்: சமுத்திர தீர்த்தம்.

வேதசிரேணி: வேளச்சேரி. வேதங்கள் சோமுகன் கையிற் பட்ட குற்றத்தைப் போக்கிக் கொள்ள இங்கே சிவப்பிரதிட்டை செய்து பூசித்தமையின் இஃது இப்பெயர் பெற்றது. பால்வண்ணர்: காமதேனுவின் பாலபிஷேகத்தால் வெண்மை நிறமுடைய வரானமையின் இத்திருநாமம் பெற்றனர். ஸ்வாமியின் திருமுடியில் காமதேனுவின் காற்சுவடுள்ளது.

மோக்ஷ தாயினி: சதயூவென்னும் அரசன் இதில் முழுகி முத்தி பெற்றான்.

தண்டபாணி: இது, வேத சிரேணியில் யமன் தண்டத்தை நாட்டி அதனை லிங்கமாகப் பாவித்து பூசித்தமையின் இப் பெயர் பெற்றது. பிருங்கி: இவர் பூசிக்க வருகையில் தங்கிய மலை பிருங்கிமலை; இதில் இவர் பிரதிட்டித்த பிருங்கி லிங்கம் உண்டு. பூசித்தோர்: ராமர், சந்திரன், வேதங்கள், காமதேனு.

திருவான்மியூர் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டம் கோட்டூர் நாட்டிலுள்ளது. இதன் கோயிற் சாசனத்தில் திருவுண்ணாழிகை திருச்சபையோம் என்றிருக்கிறது.

118. விற்கோலம்:

இது கூவம்; கூகமெனவும் வழங்கும் (தேவாரம்). திரிபுராந்தகர், திரிபுராந்தகி. இரண்டு சந்நிதிகளும் கிழக்கு

நோக்கியுள்ளன. தேவி சந்நிதி, சுவாமி சந்நிதிக்கு வலப்புறத்தில் திருக்குளம் ஆலயத்தின் கீழ்புறம். குருக்கள் வீடு அதிகம். பிராந்தீசராலயம் ஒன்று ஆலயத்துக்குள் இருக்கிறது. கடம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து கூவம் 6 மைல். கூவத்தின் ஏரித் கரையிலிருந்து பார்த்தால் இலம்பையங் கோட்டூர்க் கோபுரம் நன்றாகத் தெரியும்; 1 மைல் தூரமிருக்கும்.

119. வீழிமிழலை:

இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகத்தில் விவாக காலத்திலும் நேத்திரார்ப்பண காலத்திலும் எல்லாத் தலத்துத் தேவர்களும் இத்தலத்திற்கு எழுந்தருளினமை கூறப் பெற்றுள்ளது. அருணம் முதற் பிரச்னத்தில் 11 ஆவது அநுவாகத்தில் உருத்திரமூர்த்தி ஒருவர் அளவற்ற உருவினராக அங்கங்கே தோன்றினமை கூறப் பெற்றுள்ளது. இதில் வடக்கு வீதியில் ஈசான்யத்தில் ஸம்பந்த மூர்த்தி கோயில் இருக்கிறது. இதில் ஸ்வாமி ஐந்நூற்றொருவர்.

சிவகிரி விமானம்; விவாக ஸ்தம்பம் (மணக்கால்), சதுர்த்து வாரம், 8-ஸிம்ஹம் தாங்குதலால், ஸிம்ஹ கர்ப்பக்கிரகம், 8 துவாரபாலகர். கைலாஸ விமானம்.

கல்யாணமூர்த்தி—ஸ்வர்க்காவதரணமூர்த்தி. இவர் பாதத்தில் நேத்திரம். ஜோதிவன நாதன், தேஜினீவனநாதன்; வீழிக் கொடி, எரிவல்லிக் கொடி.

திரிவேணி: காவேரி (அரிசில்) பாலாறு (முட்டையாறு;) காமதேனு அபிஷேகித்த பால் ஆறாகப் பெருகியது; கங்கை—இது ருத்திர கங்கை பரியந்தம். விஷ்ணு இரண்டு காலமும் தரிசித்து வந்தார்.

கல்யாண தீர்த்தம்: ஸந்நிதி தீர்த்தம்.

கல்யாண சிகரம்: இந்த மலை கைலையின் ஒரு சிகரம். கல்யாண விமானம், கல்யாண புரம், கல்யாணவனம், கல்யாண மூர்த்தி; ஷண்மங்கல க்ஷேத்திரம். பலாக்காடு.

சம்பந்தர்க்குப் படிக்காசு கிடைத்தது கிழக்குப் பலிபீடத்தில்; அப்பர்க்குக் கிடைத்தது மேற்குப் பலி பீடத்தில் படிக்காசுப் பிள்ளையார் ஸந்நிதியில்; இருவரும் மஹாகணபதியின் அருள் பெற்றனர். மேற்படியார் கோயில், கோயிலின் வடக்கேயுள்ளது. முசுகுந்தன் இரண்டாவது முறை சென்று அசுரர்களை வதைத்துத் தியாகராஜருக்குப் பிரியமாக இருக்கிற

திராக்ஷைப் பழக்கொத்தை (கோஸதனீகுச்சம்) இந்திரன் கொடுக்க மேற்படி அரசன் தியாகராஜாவைப் பார்க்க அவர் அங்கில்லை. சக்கரத்தைக் கொடுத்தற்கு வீழி சென்றாரென்று ஆகாய வாணி கூற வந்து இங்கே வந்து மேற்படி மூர்த்தியைக் கண்டு தரிசித்தார். ஐந்நூற்றுவர்களுக்குச் சிபி வீடு கட்டிக் கொடுக்க சுவாமி அவர்களில் ஒருவரானார். தக்ஷிணாமூர்த்தியின் பாதத்தில் முயலகன் இல்லை; இந்தக் கோயில் கட்டுவித்த புரூரவாவின் மனைவியின் முயலக நோயைப் போக்கினமையின். அந்த நோயை உங்காரத்தால் அதட்டுகையில் முயலகனும் போயிற்று. தேவாரப்பதிகத்தால் மிழலை ஊரெனவும் வீழி கோயி லெனவும் தெரிகின்றன.

120. திருவெண்காடு:

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் பெருங்கருணையாற் சதாசிவமூர்த்தியாயும், சங்காரமூர்த்தியாகிய அகோரமூர்த்தியா யும், ஆனந்த நடேசமூர்த்தியாயு மெழுந்தருளியிருந்து வியாக்கிர பாதர் முதலிய முனிவர்கட்கும் இந்திரன் முதலிய தேவர்கட்கும் மற்றையருக்கு மெளிவந்து அனுக்கிரஞ் செய்த தலமன்றோ திருவெண்காடு. அம்மட்டோ, அவர் ஆனந்த நடனம் செய் தருளும் பொழுது திரிநேத்திரங்களினின்றும் வீழ்ந்த ஆனந்த பாஷ்பங்களினால் உண்டாகி அந்நேத்திரங்களின் திருநாமங்களை யும் பெற்று இக்கலியிலும் பிரத்தியக்ஷமாக இஷ்ட சித்திகளைக் கொடுத்தருளவல்ல திருமுக்குளங்களையுமுடைமையால் தீர்த்த விசேடமு முடையதன்றோ! அம்மட்டோ! தமிழுலகம் உய்தற் பொருட்டுச் சிவஞானபோத நூலினை மொழி பெயர்த்துக் கூறிச் சைவசித்தாந்தத்தை ஸ்தாபித்து நம்மைக் கரையேற்றிய மெய்கண்ட சிவாசாரியராகிய நமது பரமாசாரியரைப் பிள்ளை யாகப் பெறுதற்கு அவர் பிதாவாகிய களப்பாளனச்சுதனார் ''பேயடையாப்பிரி வெய்தும் பிள்ளையினோடுள்ள நினைவாயின வெலாம் பெறுவரையுற வேண்டாமொன்றும்'' என்னும் பிள்ளையார் திருவாக்கை நம்பி திருமுக்குளங்களில் ஸ்நாநஞ் செய்து தவஞ் செய்ய அவருக்கு அங்ஙனம் பிள்ளைப் பேறுதவிய தலமென்றோ திருவெண்காடு. மேலும் திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் முதலிய மூவருடைய தேவாரத் திருப்பதிகப் பெரும் பேறு பெற்றுக் கைவந்ததன்றோ இத்தலம்.

தீர்த்தம்: காவேரி ஸங்கம தீர்த்தம் (சூத).

ஸ்ரீ வான்மீகி ராமாயணத்தில் கரனை இராமர் கொன்ற தற்கு உபமானமாக இத்தலத்தில் பரமசிவன் யமனை வதைத்தது கூறப்பட்டுள்ளது.

இத்தலத்தில் உமையம்மையார் சந்நிதானத்திற் புதன் சந்திர புஷ்கரிணியில் இருக்கின்றார். இவருக்குத் தனிக்கோயில் உளது; இவருக்குப் பூசை நடந்து வருகின்றது.
கோக்குளம்—வெண்காடு.

121. வேட்களம்:

வேடரூபங் கொண்டு அருச்சுனனோடு பொருது பாசுபத மளித்த சரித்திரம் விழாவாக நடைபெறுகின்றது. வேடுகளமென் பதின்மரூஉ.

சிவபுரி. கிராதார்ஜுனீயம். வேடன்களம்—வேட்களம். அருச்சுனனோடு பரமசிவன் வேடவடிவங் கொண்டு யுத்தம் செய்த இடம். ஸ்தல விருக்ஷம்: புன்கு.

தீர்த்தம்: ஞான தீர்த்தம். ஞானகங்கை.

122. வேட்டகுடி:

ஸ்வாமி: திருமேனியழகர்-சுந்தரேசுவரர். ஸந்நிதி: கிழக்கு.
அம்பிகை: ஸௌந்தர நாயகி. ஸந்நிதி. தெற்கு.
விருக்ஷம்: புன்னை.

தீர்த்தம்: ருத்திர புஷ்கரிணி. ஸந்நிதிக்கு எதிரில் உள்ள தடாகம்.

அருச்சுனனோடு போர் செய்தற்கு ஸ்வாமி வேட வடிவங் கொண்டமையின், வேட்டகுடி. அக்காலத்தில் காவலாக இருந் தனர் சாஸ்தா. இவர் பெயர் பிரமனார். சண்டிக்கு வடக்கு. ஸந்நிதி: வடக்கு. இதற்கு மேற்கே 1 மைலில் வலிட்டாகுடி—வரிச்சகுடி.

பூவம்: இதற்கு வடக்கே ½ மைலில் உள்ளது. ஸ்வாமி: ஸித்தநாதர். அம்பிகை நித்திய கல்யாணி. ஆலயம் மிகப் பழையது.

கோட்டுச்சேரி: இதற்குத் தெற்கே 1 மைல்.
ஸ்வாமி: ரிஷ்யசிருங்கேசுவரர்.
அம்பிகை: ஸௌந்தர நாயகி.
விநாயகர்: நிர்த்தன விநாயகர்.

123. வைகாவூர்:

சிவராத்திரியில் வேடனுக்குக் காட்சி கொடுத்த தலம். யமனைச் சங்காரம் செய்த இடமென்பர். தீர்த்தம் ஒன்றுண்டு. நந்தி திரும்பியிருக்கிறது.

ஸ்வாமி: வில்வாரணியேசுவரர், வில்வவனேசுவரர்.
அம்பிகை: ஸர்வஜனரக்ஷகி—வளர்க்க வல்லவள்.
ஸந்நிதி: கிழக்கு.

தீர்த்தம்: அக்கினி தீர்த்தம், அக்கினி மூலையில் கிணற்று வடிவம். யமதீர்த்தம்: பெரிய கோபுரத்தின் எதிரில் குளவடிவம்.

விநாயகர்: நிர்த்தன விக்கினேசுவரர், இந்த ஸ்தலத்திலு லுள்ள விநாயகமூர்த்தங்களெல்லாம் இப்படியே. பிராகாரம் இரண்டு.

விருக்ஷம்: வில்வம்.

முதல் வாயிலின் தென்புறத்தும் வடபுறத்தும் விஷ்ணு பிரம வடிவங்கள் தனித்தனியே துவார பாலர்கள் ஸ்தானத்தி லுள்ளன.

தக்ஷிணாமூர்த்தி நின்றதிருக்கோலம். இவருக்குக் கிழக்கே ஒரு ரிஷிவடிவமும் நிர்த்தன விநாயகருமுள்ளார். எதிரில் ஸப்த கன்னிகைகள் இருக்கின்றனர்.

இடபதேவர்: ஸ்வாமி ஸந்நிதியிலும் அம்பிகை ஸந்நிதியி லும் உள்ளவை கிழக்கு நோக்கியே யிருக்கின்றன.

மான்வேட்டையாட வந்த வேடன் புலிக்கு அஞ்சி வில்வ மரத்தின் மீதேறி வில்வதளங்களை இரவு முழுவதும் உதிர்த்துக் கொண்டே நின்று திருவருள் பெற்ற ஸ்தலம். இக்குறிப்பு உள்கோபுரத்தின் இடைசுழியில் தென்புறச் சுவரிலும் முருகக் கடவுள் ஸந்நிதியிலுள்ள ஒரு தூணிலும் சித்திரமாக அமைக்கப் பட்டுள்ளது.

அதிகமானல்லூர்: கிழக்கே யுள்ளது; வேடன் மான்களின் மிகுதியைக் கண்ட இடம்.

மான்சேரி: மேற்கேயுள்ள ஊர். இதற்குத் தமிழில் புராண முண்டு.

திருஞா: பதிகம் ஒன்றே.
கோயில், அதிகஜீர்ணம்.

பிராகாரம்: 2.

உள்பிராகாரம் தெற்கில் உள்ள மதிற்சுவரில் 'கீழ்க்கண்ட கல்வெட்டு உள்ளது. ''புகழ்மாது விளங்கிய அவனிமுழுதுடை யாளோடு திரிபுவன சக்கர வர்த்திகளான முதற்குலோத்துங்க தேவர்க்கு யாண்டு நாற்பது.

இராஜராஜ வளநாட்டுடையார் பாரைவையாற்றுப் பூண்டி பூண்டியுடையார் உய்யவந்த சோழவளநாட்டு உண்டாட்டுக் கூற்றத்து.

திருவைகாவுடையார்.

படிமாற்று

உலகுய்ய வந்த சோழவளநாட்டு விறைக் கூற்றத்துக் களப் பாக்குடி விக்கிரம சோழ வளநாட்டு இன்னம்பர்.

அநுபந்தம் 2

சிவஸ்தலக் குறிப்புக்கள்: (சுவடியில் உள்ளபடி பதிப்பிக்கப் பட்டுள்ளது). சுவடி எண் 1173.

அநாதி சிவஸ்தலங்கள் சோழ நாட்டில் காவேரிக்கு வட கரையில் பாடல் பெற்ற ஸ்தலங்கள், 63க்கு விவரம்:

கோயில் என்பது: சிதம்பரம்: சபாநாயகர், சிவகாமியம்மை. திருமூலநாயகர், உமையம்மை. அதற்குக் கிழக்கே 3 கடிகை திரு வேட்களம்: மூங்கில்வனம். பாசுபதேசுவரர், நல்லநாயகியம்மை. அதற்குத் தென் மேற்கே ½ கடிகை நெல்வாயில் என்பது சிவபுரி: உச்சிநாதேசுவரர், கனகாம்பிகையம்மை. அதற்குத் தெற்கே ½ கடிகை திருக்கழிப்பாலை: காரைமேடு. பால்வண்ண நாதேசுவரர், பொற்பத வேதநாயகி. அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை மயேந்திரப்பள்ளி—கோவிலடிப்பாளையம்: திருமேனி யழகர், வடிவாம்பாளம்மை. அதற்குத் தென்மேற்கே 5 கடிகை திருநல்லூர்ப் பெருமணம் என்பது ஆச்சாள்புரம்: சிவலோகத் தியாகேசர், நங்கையுமையம்மை. அதற்குத் தென்மேற்கே 5 கடிகை கோலக்கா: சப்தபுரீசுவரர், ஓசை கொடுத்த அம்மை அதற்குத் தெற்கே ½ கடிகை சீகாழி: பிரமபுரீசுவரர், திருநிலை நாயகியம்மை. அதற்குக் கிழக்கே 3 கடிகை குருகாவூர்: திருமேனி வெள்ளடைஈசுவரர், காவியங்கண்ணியம்மை. அதற்குக் கிழக்கே 2 கடிகை திருமுல்லை வாயில்: முல்லை வனநாதர், கோதையம்மை. அதற்குத் தெற்கே 3 கடிகை கலிக்காமூர் என்பது அன்னப்பன் பேட்டை: சுந்தரேசுவரர், அழகிய வனமுலை யம்மை. அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை சாய்க்காடு என்பது சாயாவனம்: சாயாவனேசுவரர், குயிலினு நன்மொழியம்மை. அதற்குத் தென்மேற்கே ½ கடிகை பல்லவனீச்சரம் என்பது சங்க முகத்துறை; காவிரிப் பூம்பட்டினம். பல்லவனப் பூரணே சுவரர், சௌந்தரியம்மை. அதற்கு மேற்கே ½ கடிகை திருவெண் காடு: சுவேதாரணியேசுவரர், பிரம வித்யாநாயகி. அதற்கு மேற்கே ½ கடிகை திருக்காட்டுப்பள்ளி: ஆரணியசுந்தரர், அகிலண்ட நாயகி. அதற்கு மேற்கே 7½ கடிகை கடைமுடி என்பது என்பது கீழூர்: கடைமுடிநாதேசுவரர், அபிராமி யம்மை. அதற்கு வடமேற்கே 2 கடிகை கண்ணார்கோயில் குறுமாணக்குடி: கண்ணாயிரேசுவரர், முருகுவளர் கோதை யம்மை. அதற்கு வடமேற்கே 3 கடிகை வயித்தீஸ்வரன் கோயில்: வயித்தியநாதேசுவரர், தையல் நாயகியம்மை. அதற்குத் தெற்கே 3 கடிகை நின்றியூர்: மகாலட்சுமீசுவரர், உலகநாயகியம்மை. அதற்கு மேற்கே 3 கடிகை புன்கூர்:

சிவலோகநாதேசுவரர், சொக்கநாயகியம்மை. அதற்குத் தெற்கே ¼ கடிகை நீடூர்: அருட்சோமநாதேசுவரர், வேயுறு தோளியம்மை. அதற்குத் தென்மேற்கே ¼ கடிகை அன்னியூர் ஆபத்சகாயேசுவரர், பெரிய நாயகியம்மை. அதற்குத் தெற்கே 1 கடிகை வேள்விக்குடி: கலியாண சுந்தரேசுவரர், பரிமளசுகந்த நாயகி. அதற்கு வட மேற்கே ¼ கடிகை எதிர் கொள்பாடி: ஐராவதேசுவரர், மலர்க்குழல் நன்மாது. அதற்கு மேற்கே ½ கடிகை மணஞ்சேரி: அருள்வள்ளல் நாயகேசுவரர், யாழின் மொழியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை குறுக்கை: வீரட்டேசுவரர், ஞானாம்பிகையம்மை. அதற்கு வடமேற்கே 1 கடிகை கருப்பறியலூர் என்பது தலைஞாயிறு—மேலைக்காழி: குற்றம் பொறுத்த ஈசுவரர், கோல்வளையம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை குரக்குக்கா: குந்தளேசுவரர், குந்தள நாயகியம்மை. அதற்குத் தென்மேற்கே 3 கடிகை வாளொளிபுற்றூர்: மாணிக்க வண்ண ஈசுவரர், வண்டார் பூங்குழலம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை மண்ணிப்படிக்கரை—இலுப்பைப்பட்டு: நீலகண்டேசுவரர், அமிர்தகரவல்லியம்மை. அதற்கு வடக்கே 1 கடிகை ஓமாம்புலியூர்: துயரந்தீர்த்த ஈசுவரர், பூங்கொடியம்பிகை. அதற்குக் கிழக்கே 1 கடிகை கானாட்டு முள்ளூர்: பதஞ்சலி நாதேசுவரர், கோல்வளைக்கை யம்மை. அதற்கு வடகிழக்கே ¼ கடிகை திருநாரையூர்: செளந்தரேசுவரர், திரிபுர சுந்தரியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை கடம்பூர் என்பது மேலைக்கடம்பூர்: அமிர்தகட நாயகேசுவரர், சோதிமின்னாம்பாளம்மை. அதற்குத் தெற்கே 8 கடிகை பந்தணைநல்லூர்: பசுபதீசுவரர், காம்பன்ன தோளியம்மை. அதற்கு மேற்கே ¼ கடிகை திருக்கோடிகா: கோடிகா வீசுவரர், வடிவுடையாளம்மை. அதற்கு மேற்கே ¼ கடிகை கஞ்சனூர்: அக்கினீசுவரர், கற்பகநாயகியம்மை. அதற்கு மேற்கே ¼ கடிகை திருமங்கலக்குடி: பிரதான வரதேசுவரர், மங்களநாயகியம்மை. அதற்கு வடமேற்கே 3 கடிகை திருப்பனந்தாள்: சடையப்ப ஈசுவரர், பெரிய நாயகியம்மை. அதற்கு மேற்கே 2 கடிகை திருவாப்பாடி: பாலுகந்தஈசுவரர், பெரிய நாயகவல்லியம்மை. அதற்குத்தெற்கே ¼ கடிகை சேய்ஞலூர்: கிரீசுவரர், ஜெகதேவியம்பாளம்மை.

அதற்கு மேற்கே ¼ கடிகை தேவன்குடி: கர்க்கடகேசுவரர், அருமருந்தம்மை. அதற்குத் தெற்கே 1 கடிகை வியலூர்: ஏகாந்தநாதேசுவரர், கௌந்தரநாயகியம்மை. அதற்குத் தென் மேற்கே 3 கடிகை கொட்டையூர்: கோடீசுவரர், பந்தாடும் நாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை இன்னம்பர்: அம்பா முத்தீசுவரர், கொந்தார் பூங்குழலியம்மை. அதற்கு வட

கிழக்கே 1 கடிகை திருப்புறம்பயம்: சாக்ஷிநாதேசுவரர், கரும் பன்னசொல்லம்மை, அதற்கு மேற்கே 1 கடிகை திருவிசயமங்கை: விசயநாதேசுவரர், மங்கைநாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை திருவைகாவூர் என்பது வில்வவனம்: வில்வவனேசுவரர், பூவை வல்லியம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை குரங்காடுதுறை: குலைவணங்கீ சுவரர், அழகுசடைநாயகியம்மை. அதற்கு மேற்கே 12 கடிகை திருப்பழனம்: ஆபத்சகாயேசுவரர், பெரியநாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை திருவையாறு: செம்பொற் சோதீசுவரர், அறம் வளர்த்தநாயகியம்மை. அதற்கு மேற்கே ½ கடிகை நெய்த்தானம் என்பது தில்லைத்தானம். நெய்யாடியப்ப ஈசு வரர், வாலாம்பிகையம்மை.

அதற்கு வடமேற்கே 1 கடிகை பெரும்புலியூர்: வியாக்கிர புரீசுவரர், சௌந்தரநாயகியம்மை. அதற்கு வடமேற்கே 1 கடிகை திருமழபாடி: வச்சிரதம்பேசுவரர், அழகாம்பிகையம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை திருப்பழுவூர் என்பது மேலைப் பழுவூர்: வடமூலநாதேசுவரர், அருந்தவ நாயகியம்மை.

அதற்குத் தென்மேற்கே 3 கடிகை திருக்கானூர்: செம் பொன்மேனியப்பசுவரர், சிவயோக நாயகியம்மை.

அதற்கு வடமேற்கே 1 கடிகை அன்பிலாலந்துறை என்பது திருமாலையன்துறை: சத்தியவாகீசுவரர், சௌந்தர நாயகி யம்மை. அதற்கு மேற்கே 3 கடிகை திருமாந்துறை: ஆம்பிர வனேசுவரர், அழகிலுயர்ந்தாளம்மை. அதற்குத் தென்மேற்கே 1கடிகை திருப்பாற்றுறை: திருமூலநாதேசுவரர், மோகாம்பிகை. அதற்குத் தெற்கே 1 கடிகை திருவானைக்கா என்பது ஜம்பு கேசுவரம்: ஜம்புகேசுவரர், அகிலாண்டேசுவரியம்மை.

அதற்கு வடமேற்கு 8 கடிகை திருப்பைஞ்ஞீலி: நீலகண்டே சுவரர், விசாலாட்சி அம்மை. அதற்கு வடக்கே 3 கடிகை திருப் பாச்சிலாச்சிராமம் என்பது திருவாசி: மாற்றறி வரதேசுவரர், வாலசுவந்தரி அம்மை. அதற்கு மேற்கே 10 கடிகை ஈங்கோய் மலை: மரகதாசலேசுவரர், மரகதவல்லியம்மை. ஆக 63 ம்.

தென் கரையில் ஸ்தலங்கள் 127க்கு விவரம்: ஈங்கோய் மலைக்கு மேற்கே 1 கடிகை வாட்போக்கி என்பது இரத்தினகிரி: இரத்தினகிரீசுவரர், சுரும்பார் குழலியம்மை. அதற்கு வட கிழக்கே 5 கடிகை கடம்பந்துறை: கடம்பவனத் தீசுவரர், முற்றி லாமுலையம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை பராய்த்துறை: பராய்த்துறை நாதேசுவரர், பொன்மயிலாம்பிகை யம்மை.

அதற்குக் கிழக்கே 3 கடிகை சுற்குடி: உச்சீவ நாயகேசுவரர், அஞ்சனாக்ஷியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை மூக்கீச்சுரம் என்பது உறையூர்: பஞ்சவர்ணேசுவரர், காந்திமதியம்மை.

அதற்குக் கிழக்கே 5 கடிகை திரிசிராப்பள்ளி: மாத்ரு பூதேசுவரர், மட்டுவார்குழலியம்மை அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை எறும்பியூர்: எறும்பீசுவரர், நறுங்குழல்நாயகியம்மை. அதற்குக் கிழக்கே 3 கடிகை நெடுங்களம்; நித்திய சுந்தரேசுவரர், ஒப்பிலா நாயகியம்மை. அதற்குக் கிழக்கே 3 கடிகை மேலைக் காட்டுப்பள்ளி: தீயாடிப்ப ஈசுவரர், வார்கொண்ட முலையம்மை.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை ஆலம்பொழில்: ஆத்மநாதேசுவரர், ஞானாம்பிகையம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை திருப்பூந்துருத்தி: புஷ்பவனநாதேசுவரர், அழகாலமர்ந்த அம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை திருக்கண்டியூர்: வீரட்டானேசுவரர், மங்களநாயகியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை சோற்றுத்துறை: தொலையாத செல்வஈசுவரர், ஒப்பிலாம்பிகையம்மை.

அதற்குத் தென்கிழக்கே ¼ கடிகை வேதிகுடி: வேதபுரீசுவரர், மங்கையர்க்கரசியம்மை. அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை தென்குடித் திட்டை: பசுபதீசுவரர், உலகநாயகியம்மை. அதற்கு வடக்கே 10 கடிகை புள்ளமங்கை: பசுபசுதிநாதேசுவரர், பால்வளைநாயகியம்மை.

அதற்கு வட கிழக்கே 7¾ கடிகை சக்கரப்பள்ளி என்பது ஐயம்பேட்டை: ஆலந்தரித்த ஈசுவரர், அல்லியங் கேதையம்மை அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை கருகாவூர்: முல்லைவனேசுவரர், கரும்பனையாளம்மை. அதற்கு வடகிழக்கே 1 கடிகை பாலைத்துறை: பாலைவனநாதேசுவரர், தவளவெண்ணகையம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை நல்லூர்: பெரியாண்டேசுவரர், திரிபுரசுந்தரியம்மை. அதற்குக் கிழக்கே ¼ கடிகை ஆவூர் என்பது பசுபதீச்சுரம்: பசுபதீசுவரர், மங்கள நாயகியம்மை.

அதற்குக் கிழக்கே ¼ கடிகை சத்தி முத்தம்: சிவக்கொழுந்தீசுவரர், பெரியநாயகியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை பட்டீச்சுரம்: பட்டீசுவரர், பல்வளைநாயகியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை பழையாறை: சோமேசுவரர், சோமகலாநாயகியம்மை. அதற்குக் கிழக்கே ¼ கடிகை வடதளி: வடதளிநாயகேசுவரர், கௌரியம்மை. அதற்கு வட கிழக்கே 3 கடிகை

திருவலஞ்சுழி: கற்பகத்தீசுவரர் (கபர்த்தீசுவரர்), பெரியநாயகியம்மை. அதற்குக் கிழக்கே 3 கடிகை குட மூக்கு என்பது கும்ப கோணம்: கும்பகேசுவரர், மங்களநாயகியம்மை.

அதற்குக் கிழக்கே ½ கடிகை குடந்தைக் கீழ்க்கோட்டம்: மடந்தைபாக ஈசுவரர், பெரியநாயகியம்மை.

அதற்குக் கிழக்கே ½ கடிகை குடந்தைக் காரோணம்: சோமநாதேசுவரர், தேனார் மொழியம்மை.

அதற்குத் தென் கிழக்கே 10 கடிகை திருநாகேசுவரம்: சண்பகாரண்யேசுவரர், குன்றமுலைநாயகியம்மை.

அதற்குக் கிழக்கே 10 கடிகை திருவிடை மருதூரானது மத்தியார்ச்சுனம்: மருதப்ப ஈசுவரர், பெருநலமாமுலை நாயகியம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை தென்குரங்காடுதுறை: ஆபத்ஸகாயேசுவரர், பவழக்கொடியம்பிகை. அதற்குத் தெற்கே 1 கடிகை நீலக்குடி. நல்லநாயகேசுவரர், அழகாம்பிகையம்மை. அதற்குத் தெற்கே 1 கடிகை வைகன் மாடக் கோயில்: கோமளேசுவரர், இளங்கோதையம்மை.

அதற்கு வட கிழக்கே 1 கடிகை திருநல்லம்: மாமணீசுவரர், மங்களநாயகியம்மை. அதற்கு வடகிழக்கே 1 கடிகை கோழம்பம்: கோகிலேசுவரர், சௌந்தரநாயகியம்மை. அதற்கு வடகிழக்கே 3 கடிகை திருவாவடுதுறை: மாசிலாமணித்தியாகேசர், ஒப்பிலாமுலையம்மை. அதற்கு வட கிழக்கே 3 கடிகை திருத்துருத்தி என்பது குற்றாலம்: வேதேசுவரர், முகிழாம்பிகையம்மை.

அதற்குக் கிழக்கே 5 கடிகை திருவழுந்தூர்: வேதபுரீசுவரர், சௌந்தராம்பிகையம்மை.

அதற்குக் கிழக்கே 2 கடிகை மாயூரம்: மாயூர நாதேசுவரர்: அஞ்சல் நாயகியம்மை. அதற்கு வட கிழக்கே 1 கடிகை திருவிளநகர்: துறைகாட்டும் வள்ளல் நாதனார், வேயுறு தோளியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 2 கடிகை திருப்பறியலூர்: வீரட்டேசுவரர், இளங்கொடியாளம்மை. அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை செம்பொன்பள்ளி: சொர்ணபுரீஸ்வரர், சுகந்தவன நாயகியம்மை.

அதற்கு வடக்கே ½ கடிகை திருநனிபள்ளி; நற்றுணையப்ப ஈசுவரர், பர்வதராஜ புத்திரியம்மை.

அதற்குக் கிழக்கே ¼ கடிகை வலம்புரம்: வலம்புரிநாதேசுவரர், வடுவகிர்க்கண்ணம்மை. அதற்கு வடகிழக்கே 5 கடிகை தலைச்சங்காடு: சங்கருணாதேசுவரர், சௌந்தரியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை தான்றோன்றி மாடம் என்பது ஆக்கூர்: சுயம்புநாதேசுவரர், கட்கநேத்திரியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை கடலூர் மயானம்: பிரமபுரீசுவரர், மலர்க் குழல் மின்னம்மை. அதற்குத் தென்மேற்கே 1 கடிகை கடலூர்: அமிர்தகடேசுவரர், அபிராமியம்மை. அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை. திருவேட்டக்குடி: திருமேனியழகீசுவரர், சௌந்தர நாயகியம்மை.

அதற்குத் தென்மேற்கே 1 கடிகை தெளிச்சேரி: பார்வதீசுவரர், சத்தியம்மை. அதற்குத் தெற்கே 5 கடிகை தருமபுரம்: யாழ்மூரிநாதேசுவரர், மதுர மின்னாம்பிகை யம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை நள்ளாறு: தர்ப்பராண்யேசுவரர், போகமார்த்தபூண்முலையம்மை. அதற்கு வடமேற்கே 3 கடிகை கோட்டாறு: ஐராவதேசுவரர், வண்டமர் பூங்குழலம்மை. அதற்கு மேற்கே 4 கடிகை அம்பர்ப் பெருந் திருக்கோயில்: பிரமபுரீசுவரர், பூங்குழல்நாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை அம்பர் மாகாளம்: காளகண்டேசுவரர், பயகூய நாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை மீயச்சூரிளங் கோயில் என்பது பேரளம்: திருமுயற்சி நாதேசுவரர், சௌந்தரநாயகியம்மை. சகலபுவனேசுவரர், மேகலாம்பாளம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை திலதைப்பதி: முத்தீசுவரர், பொற்கொடிநாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை வன்னியூர்: அக்கினீசுவரர், பார்வதியம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை பாம்புரம்: பாம்புரேசுவரர், வண்டார்பூங்குழலியம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை சிறுகுடி: மங்களேசுவரர், மங்களநாயகியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை திருவீழிமிழலை: வீழியழகேசுவரர், சுந்தரகுஜாம்பிகையம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை கருவிலியூர்: சற்குணேசுவரர்: சர்வாங்க நாயகியம்மை—சர்வாங்கசுந்தரியம்மை.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை அரிசிற்கரைப் புத்தூர் என்பது பேணு பெருந்துறை: படிக்காசளித்த ஈசுவரர், அழகம்மை. பேணுபெருந்துறை: சிவானந்தேசுவரர், மலையரசியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை நறையூர்ச்சித்தீச்சரம்: சித்திநாதேசுவரர், அழகாம்பிகையம்மை அதற்கு மேற்கே 1 கடிகை சிவபுரம்: பிரமபுரிநாயகேசுவரர், பெரியநாயகியம்மை.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை கலைய நல்லூர் என்பது சாய்க்கோட்டை: அமிர்தகலேசுவரர், அமிர்தவல்லியம்மை.

அதற்குத் தெற்கே ½ கடிகை சுருக்குடி: சற்குணலிங்கேசுவரர், சர்வலாங்கிருத மின்னம்மை. அதற்குத் தெற்கே 1 கடிகை திருவாஞ்சியம்: வாஞ்சிலிங்கேசுவரர், மங்களநாயகியம்மை.

அதற்குத் தென்மேற்கே 1 கடிகை நன்னிலத்துப்பெருங் கோயில்: பிரகாசேசுவரர், பிரகாசேசுவரியம்மை. அதற்குத் தென்கிழக்கே 2 கடிகை. திருக்கொண்டீச்சுரம்: பசுபதீசுவரர், சாந்த நாயகியம்மை. அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை திருப்பனையூர்: சௌந்தரேசுவரர், பெரிய நாயகியம்மை. அதற்குக் கிழக்கே ½ கடிகை திருவிற்குடி: வீரட்டானேசுவரர், மைவார் குழலியம்மை. அதற்குக் கிழக்கே 1 கடிகை திருப்புகலூர்: அக்கினீசுவரர், கருந்தாழ்குழலியம்மை. அதற்குத் தெற்கே ¼ கடிகை வர்த்தமானீச்சரம்: வர்த்தமானேசுவரர், கருந்தாழ் குழலியம்மை. அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை இராமன தீச்சரம்: இராமலிங்கேசுவரர், கருவார் குழலியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை திருப்பயற்றூர்: திருப் பயற்றீசுவரர், காவியங்கண்ணியம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை திருச்செங்காட்டங்குடி: கண பதீசுவரர், திருகுகுழல் மாதம்மை.

அதற்குத் தென்கிழக்கே 8 கடிகை திருமருகல்: மாணிக்க வண்ணமயேசுவரர், வண்டுவார் குழலியம்மை.

அதற்குக் கிழக்கே 3 கடிகை திருச்சாத்தமங்கை: அயவந்தீசு வரர், மலர்க்கண்ணி யம்மை. அதற்குத் தெற்கே 3 கடிகை: திருநாகைக்காரோணம்: காயாரோகணேசுவரர், நீலாயதாக்ஷி யம்மை. அதற்கு மேற்கே 3 கடிகை திருச்சிக்கல்: நவநீ தேசுவரர், வேலெடுங் கண்ணியம்மை. அதற்கு மேற்கே 5 கடிகை கீழ்வேளூர்: அக்ஷயலிங்கேசுவரர், வனமுலைநாயகி யம்மை. அத்ற்கு மேற்கே 3 கடிகை தேவூர்: தேவகுரு நாதேசு வரர், மதுர பாஷிணியம்மை. அதற்கு வடக்கே 8 கடிகை பள்ளி யின் முக்கூடல்: முக்கோணேசுவரர், மைமேவுகண்ணியம்மை. அதற்குத் தென்கிழக்கே 7 கடிகை திருவாரூர்: வன்மீகத்தியா கேசர், அல்லியங்கோதையம்மை. அதற்குத் தெற்கே ¼ கடிகை திருவாரூர் அரநெறி: அகிலேசுவரர், அகிலேசுவரியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை பரவையுண் மண்டளி: பரவையுண் மண்டளீசுவரர், பஞ்சின் மெல்லடியம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை விளமர்: பதஞ்சலி மனோகரேசுவரர், யாழின்மொழியம்மை. அதற்கு வடக்கே ¼ கடிகை கரவீரம்: கரவீரேசுவரர், பிரத்தியக்ஷ மின்னாளம்மை. அதற்கு வடமேற்கே 3 கடிகை பெருவேளூர்? பிரியா ஈசுவரர், மின்னனையாளம்மை. அதற்கு வடமேற்கே 2 கடிகை தலையாலங்காடு: ஆடவல்ல ஈசுவரர், திருமடந்தையம்மை. அதற்கு மேற்கே 2 கடிகை குடவாயில்: கோணேசுவரர், பெரியநாயகியம்மை. அதற்கு வட மேற்கே 1 கடிகை திருச்சேறை: செந்நெறியப்ப ஈசுவரர், ஞானவல்லியம்மை. அதற்கு மேற்கே 1 கடிகை நாலூர்மயானம்: பலாசவனேசுவரர், பெரியாம்பிகையம்மை. அதற்கு வடமேற்கே 8 கடிகை கடுவாய்க்கரைப்புத்தூர்: சொர்ணபுரீசுவரர், சிவாம்பிகையம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை இரும்பூளை: காசியாரண்யேசுவரர், ஏலவார் குழலியம்மை.

அதற்குத் தெற்கே ¼ கடிகை அரதைப் பெரும்பாழி: பாதாளேசுவரர், அலங்காரநாயகியம்மை.

அதற்கு மேற்கே 1 கடிகை அவளிவணல்லூர்: சாக்ஷி நாயகேசுவரர், சௌந்தரநாயகியம்மை.

அதற்கு மேற்கே ½ கடிகை பருதி நியமம்: பருதியப்ப ஈசுவரர், மங்களநாயகியம்மை. அதற்கு வடமேற்கே 1 கடிகை வெண்ணியூர்: வெண்ணிநாயகஈசுவரர், அழகியநாயகியம்மை.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை பூவனூர்: புஷ்பவனேசுவரர், கற்பகவல்லியம்மை. அதற்குக் கிழக்கே 5 கடிகை திருஉசாத்தானம்: மந்திரபுரீசுவரர், பெரியநாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை சிற்றேமம்: பொன் வைத்த நாயகேசுவரர், அகிலாண்டகேசுவரியம்மை.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை திருக்களர்: களர்முளை ஈசுவரர், அழகேசுவரியம்மை. அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை பாதாளீச்சரம்: சர்ப்பபுரீசுவரர், அமிர்தநாயகியம்மை.

அதற்குக் கிழக்கே 2 கடிகை இடும்பாவனம்: சற்குண நாயகேசுவரர், மங்களநாயகியம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை கடிக்குளம்: கற்பககேசுவரர், சௌந்தர நாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை தண்டலைநீணெறி: நீணெறிநாதேசுவரர், ஞானாம்பிகையம்மை.

அதற்குக் கிழக்கே ¾ கடிகை கோட்டூர்: கொழுந்தீசுவரர், மதுரவசனியம்மை, அதற்குக் கிழக்கே 1 கடிகை வெண்டுறை: வெண்டுறைநாதேசுவரர், வேனெடுங்கண்ணியம்மை.

அதற்குக் கிழக்கே ½ கடிகை கொள்ளம்பூதூர்: வில்வ வனேசுவரர், சௌந்தராம்பிகையம்மை.

அதற்குக் கிழக்கே ¾ கடிகை பேரெயில்: ஜகதீசுவரர், பெண்ணமிர்த நாயகியம்மை.

அதற்குக் கிழக்கே ½ கடிகை கொள்ளிக்காடு: அக்கினி வண்ணஈசுவரர், பஞ்சினும்மெல்லடியம்மை.

அதற்குக் கிழக்கே ½ கடிகை தெங்கூர்: வெள்ளி மலையப்ப ஈசுவரர், பெரியாம்பிகையம்மை.

அதற்குக் கிழக்கே ½ கடிகை நெல்லிக்கா: நெல்லிவன நாதேசுவரர், மங்களநாயகியம்மை.

அதற்கு வடக்கே ½ கடிகை நாட்டியத்தான்குடி: மாணிக்க வண்ணர், மலைமங்கையம்மை.

அதற்குத் தென்கிழக்கே 8 கடிகை திருக்காறாயில்: கண்ணாயிர நாதேசுவரர், கயிலாயநாயகி.

அதற்குக் கிழக்கே 1 கடிகை கன்றாப்பூர்: நடுதறியப்பர், மாதுமையம்மை.

அதற்குத் தெற்கே 3 கடிகை வலிவலம்: மனத்துணை நாதர், மாழையொண்கண்ணி.

அதற்குக் கிழக்கே 2 கடிகை கைச்சினம்: கைச்சின நாதேசு சுவரர், வெள்வளையம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை கோளிலி என்பது கொன்றை யூர்—திருக்குவளை: கோளிலியப்ப ஈசுவரர், வண்டமர்பூங்குழ லம்மை.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை திருவாய்மூர்: வாய் மூரடிகளீசுவரர், பாலினுநன்மொழியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 8 கடிகை திருமறைக்காடு என்பது வேதாரணியம்: மறைக்காட்டீசுவரர், யாழைப்பழித்த மொழி யம்மை.

அதற்குத் தெற்கே 1 கடிகை அகத்தியான்பள்ளி: அகத்தீசு வரர், மங்கைநாயகியம்மை.

அதற்குத் தெற்கே 5 கடிகை கோடிக்குழகர்: அமிர்தகடே சுவரர், மையார் தடங்கண்ணியம்மை. ஆகத் தென்கரை ஸ்தலங்கள் 127.

ஈழநாடு அல்லது சிங்கள நாடு: திருக்கோணமாமலை: கோணேசுவரர், மாதுமையாளம்மை.

அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை திருக்கேதீச்சரம் கேதீஸ்வரர், கௌரியம்மை.

பாண்டி நாட்டிலுள்ள ஸ்தலங்கள்: ஆலவாய் என்பது மதுரை: சொக்கநாதேசுவரர், மீனாக்ஷியம்மை.

அதற்கு வடமேற்கே 1 கடிகை ஆப்பனூர்: ஆப்பனூரப்ப ஈசுவரர், அம்பிகையம்மை.

அதற்குத் தென்மேற்கே 3 கடிகை திருப்பரங்குன்றம்: பரங்கிரி நாயகேசுவரர், ஆவுடை நாயகியம்மை.

அதற்கு மேற்கே 8 கடிகை திருவேடகம்; ஏடகநாதேசுவரர், மாதேவியம்பாளம்மை: அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை கொடுங்குன்றம்: கொடுங்குன்றீசுவரர், குயிலமுதநாயகியம்மை. அதற்குக் கிழக்கே 15 கடிகை திருப்புத்தூர்: புத்தூரீசுவரர், சிவகாமியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை புனவாயில்: பழம்பதி நாயகேசுவரர், கருணேசுவரியம்மை. அதற்குத் தென்கிழக்கே 38 கடிகை ராமேசுவரம்: இராமலிங்கேசுவரர், பர்வதவர்த்தனியம்மை.

அதற்கு வடமேற்கே 38 கடிகை ஆடானை: ஆதிரத்தினேசுவரர், அன்பாயியம்மை.

அதற்குத் தென்மேற்கே 10 கடிகை கானப்பேரூர் என்பது காளையார் கோயில்: காளைஈசுவரர், மகமாயியம்மை. (சொர்ணவல்லி).

அதற்குத் தென்மேற்கே 5 கடிகை திருப்பூவணம்: பூவணநாதேசுவரர், மின்னாம்பிகையம்மை.

அதற்குத் தென்மேற்கே 8 கடிகை திருச்சுழியல்: திருமேனிநாதேசுவரர், துணைமாலையம்மை:

அதற்குத் தென்மேற்கே 150 கடிகை திருக்குற்றாலம்: குறும்பலாஈசுவரர், குழல்வாய்மொழியம்மை.

அதற்குக் கிழக்கே 26 கடிகை திருநெல்வேலி: வேணுவனேசுவரர், காந்திமதியம்மை. ஆகப் பாண்டி நாட்டில் 14·

மலைநாடு:

திருவஞ்சைக்களம்: அஞ்சைக்களத்தீசுவரர், உமையம்மை.

கொங்கு நாட்டிலுள்ள ஸ்தலங்கள்: அவிநாசி: அவிநாசி ஈசுவரர், பெருங்கருணையம்மை.

அதற்குக் கிழக்கே 4 கடிகை திருமுருகன் பூண்டி: முருக ஈசுவரர், ஆவுடை நாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 11 கடிகை திருநணாஎன்பது பவானி கூடல்: சங்கமுகநாதேசுவரர், வேதமங்கையம்மை.

அதற்குத் தென்கிழக்கே 11 கடிகை செங்குன்றூர்: அர்த்த நாரீசுவரர், அர்த்தநாரீசுவரி.

அதற்குத் தென்கிழக்கே 11 கடிகை வெஞ்சமாக் கூடல்: விகிர்தேசுவரர், விகிர்தேசுவரி.

அதற்குத் தெற்கே 8 கடிகை பாண்டிக் கொடுமுடி: கொடுமுடி நாதேசுவரர்: பண்மொழியம்மை.

அதற்குக் கிழக்கே 8 கடிகை கருவூர்: பசுபதேசுவரர், கிருபாநாயகியம்மை. ஆகக் கொங்கு நாட்டில் 7.

நடுநாடு அல்லது மகத நாட்டிலுள்ள ஸ்தலங்கள்: திரு வரத்துறை: அரத்துறையப்பஈசுவரர், ஆனந்த நாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை தூங்கானைமாடம் என் பது பெண்ணாகடம்: சுடர்க்கொழுந்தீசுவரர், கடந்தை நாயகி யம்மை.

அதற்குக் கிழக்கே 1 கடிகை எருக்கத்தம்புலியூர்: என்பது நாகேந்திரப்பட்டணம்: நீலகண்டேசுவரர், நீலமலர்க்கண்ணி யம்மை.

அதற்குத் தென்மேற்கே ½ கடிகை கூடலையாற்றூர்: நெறி காட்டு நாயகேசுவரர், புரிகுழலாம்பிகையம்மை.

அதற்கு வட கிழக்கே 1 கடிகை திருத்தினை நகர்: திருந்தீசுவரர், ஒப்பிலா நாயகியம்மை. அதற்கு வடகிழக்கே 10 கடிகை சோபுரம்: தியாகவல்லி: சோபுர நாதேசுவரர், சோபுர நாயகியம்மை.

அதற்கு வட மேற்கே 7½ கடிகை திருவதிகை: வீரட்டானேசு வரர், திரிபுரசுந்தரியம்மை.

அதற்கு வடமேற்கே 3 கடிகை திருநாவலூர்: நாவலேசு வரர், சுந்தரநாயகியம்மை. அதற்கு வட மேற்கே 10 கடிகை

திருமுதுகுன்றம் என்பது விருத்தாசலம்: பழமலைநாதேசுவரர், பெரியநாயகியம்மை.

அதற்கு வடமேற்கே 3 கடிகை திருநெல்வெண்ணெய் வெண்ணெயப்ப ஈஸ்வரர், கிருபாபுரீசுவரர், நீலமலர்க்கண்ணியம்மை.

அதற்கு வடமேற்கே 5 கடிகை திருக்கோவலூர்: வீரட்டானேசுவரர், சிவானந்த வல்லியம்மை. அதற்குத் தெற்கே ½ கடிகை இடையாறு: இடையாற்றீசுவரர், சிற்றிடைநாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை அறையணி நல்லூர்: அறையணிநாயகேசுவரர், அருள்நாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 10 கடிகை திருவெண்ணெய் நல்லூர் தடுத்தாட்கொண்ட ஈசுவரர், வேற்கண்ணியம்மை.

அதற்கு வடக்கே 1 கடிகை துறையூர்: துறையூரப்ப ஈசுவரர், பூங்கோதையம்மை.

அதற்கு வடக்கே 1 கடிகை வடுகூர்: வடுகேசுவரர், வடுவகிர்க்கண்ணியம்மை.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை திருமாணிக்குழி: மாணிக்கவரதேசுவரர், மாணிக்கவல்லியம்மை.

அதற்கே வடகிழக்கே 1½ கடிகை திருப்பாதிரிப்புலியூர்: தோன்றாத்துணைஈசுவரர், தோகையம்பிகையம்மை. (மயூராம்பிகை).

அதற்குக் கிழக்கே 1 கடிகை முண்டீச்சுரம்: முண்டீசுவரர், கானார் குழலியம்மை.

அதற்கு வடமேற்கே 1 கடிகை புறவார்பனங்காட்டூர்: பனங்காட்டீசுவரர், திருப்புறவாம்பிகை.

அதற்கு வடமேற்கே 10 கடிகை திருவாமாத்தூர்: காமார்த்தேசுவரர், அழகிய நாயகியம்மை.

அதற்கு வடமேற்கே 22½ கடிகை திருவண்ணாமலை: அருணாசலேசுவரர், உண்ணமுலையம்மை.

தொண்டை நாட்டிலுள்ள ஸ்தலங்கள்: கச்சியேகம்பம்: ஏகாம்பரநாதேசுவரர், காமாக்ஷியம்மை.

அதற்கு வடமேற்கே 1 கடிகை ஓணகாந்தன் றளி: ஓணகாந்தேசுவரர், காமர்க்ஷியம்மை.

அதற்குத் தென்மேற்கே. ¼ கடிகை கச்சி அனேகதங் காவதம்: கயிலாச நாதேசுவரர், காமாகூியம்மை.

அதற்குத் தென்கிழக்கே ¼ கடிகை கச்சித் திருமேற்றளி: கச்சியப்பசுவரர், காமாகூியம்மை.

அதற்கு வட கிழக்கே 2 கடிகை கச்சிநெறிக் காரைக்காடு: காரைத் திருநாதேசுவரர், காரார் குழலியம்மை.

அதற்குத் தென்மேற்கே 5 கடிகை குரங்கணின் முட்டம்: வாலீசுவரர், இறையார் வளையம்மை.

அதற்குத் தென்மேற்கே 7½ கடிகை திருமாகறல்: அடைக் கலங்காத்த நாதேசுவரர், புவனநாயகியம்மை.

அதற்குத் தென்மேற்கே 15 கடிகை திருஒத்தூர்: வேத நாதேசுவரர், இளமுலையம்மை. அதற்கு வடமேற்கே 8 கடிகை பனங்காட்டூர்: பனங் காட்டீசுவரர், அமிர்த வல்லியம்மை.

அதற்கு வடமேற்கே 20 கடிகை வல்லம்: வல்லநாயகேசு வரர், வல்லாம்பிகையம்மை.

அதற்குக் கிழக்கே 16 கடிகை திருமாற்பேறு: மால் வணங்கி சுவரர், கருணை நாயகியம்மை.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை திருவூறல் என்பது தக் கோலம்: உமாபதீசுவரர், உமையம்மை.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை இலம்பையங் கோட்டூர்: சந்திரசேகரேசுவரர், கோடேந்து முலையம்மை.

அதற்கு வடகிழக்கே 1½ கடிகை திருவிற்கோலம் என்பது சுவம்: புராந்தகேசுவரர், புராந்தகியம்மை.

அதற்கு வடமேற்கே 10 கடிகை ஆலங்காடு: அமிர்த தாண்டவேசுவரர், வண்டார்குழலியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை திருப்பாசூர்: பாசூர் நாதேசுவரர், பசுபதி நாயகியம்மை.

அதற்கு வடக்கே 3 கடிகை வெண்பாக்கம் என்பது திரு திருவிளம்பூர்: வெண்பாக்க ஈசுவரர், கனிவாய்மொழியம்மை.

அதற்கு வடகிழக்கே 10 கடிகை திருக்கள்ளம் என்பது திருக்கள்ளில்: சிவானந்தேசுவரர், ஆனந்தவல்லியம்மை.

அதற்கு வடமேற்கே 37 கடிகை காளத்தி: காளத்தி நாதேசுவரர், ஞானப்பூங்கோதையம்மை.

அதற்குத் தென்கிழக்கே 45 கடிகை திருவொற்றியூர் மாணிக்கத்தியாகேசர், வடிவுடையம்மை.

அதற்குத் தென்மேற்கே 7 கடிகை வலிதாயம் என்பது—பாடி: வலிதாய நாதேசுவரர், தாயம்மை.

அதற்கு வடமேற்கே 5 கடிகை வடதிருமுல்லைவாயில்: பாசுபதேசுவரர், கொடியிடையாளம்மை.
அதற்குத் தென்மேற்கே 2 கடிகை திருவேற்காடு: வேற் காட்டீசுரர், வேற்கண்ணியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை மயிலாப்பூர்: கபாலீ சுவரர், கற்பகவல்லியம்மை.

அதற்குத் தென் கிழக்கே 3 கடிகை வான்மியூர்: மருந்தீசு வரர்—வன்மீகத் தியாகர், சுந்தரமாது—சொக்கநாயகி.

அதற்குத் தென்மேற்கே 15 கடிகை கச்சூராலக் கோயில்: விருந்திட்ட ஈசுவரர், அஞ்சனாக்ஷி, கன்னியுமையாள்.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை இடைச்சுரம்: இடைச்சுர நாதேசுவரர், இமயமடக்கொடி யம்மை.

அதற்குத் தெற்கே 5 கடிகை கழுக்குன்றம்: வேதகிரீசுவரர், பெண்ணினல்லாளம்மை.

அதற்குத் தென்மேற்கே 10 கடிகை அச்சிறுபாக்கம்: பாக்க புரேசுவரர், ஆட்சீசுவரர், சுந்தர மின்னம்மை—மரகதவல்லி யம்மை.

அதற்குத் தென்மேற்கே 10 கடிகை திருவக்கரை: சந்திர சேகரேசுவரர், வடிவாம்பிகை.

அதற்குக் கிழக்கே 5 கடிகை அரசிலி என்பது ஒழுந்தியாப் பட்டு: அரசிலி காத்த ஈசுவரர், பெரிய நாயகியம்மை.

அதற்குத் தென்கிழக்கே 2 கடிகை இரும்பை மாகாளம்: மாகாளேசுவரர், குயில்மொழியம்மை. ஆகத்தொண்டை நாட்டில் உள்ள ஸ்தலங்கள் 32.

துளுவ நாட்டில் கோகர்ணம்: மகாபலலிங்கேசுவரர், பெரிய நாயகியம்மை.

வட நாட்டிலுள்ள ஸ்தலங்கள்:

திருப்பருப்பதம்: பருப்பதேசுவரர், பருப்பத நங்கையம்மை.

இந்திரநீலப்பருப்பதம்: நீலாசலநாயகேசுவரர், நீலாம்பிகை யம்மை.

அனேகதங்காபதம்: அருள் மன்னேசுவரர், மனோன்மணி யம்மை.

திருக்கேதாரம்: கேதாரேசுவரர், கேதார கௌரியம்மை.

நொடித்தான் மலையென்பது கயிலாயம்: பரமசிவன், பார் வதியம்மை. ஆக 5.

ஆகச்சிவஸ்தலங்கள் 274.

அநுபந்தம்—3

தேவாரத்தில் வரும் சுவாமியின் திருநாமங்கள்:

வேடனூர்—வேட்களம். நா.
உச்சியார்—நெல்வாயில். ஞா.
அழகன், அந்தமில் அழகன்—மகேந்திரப்பள்ளி. ஞா.
அழகனீர் (விளி)—திருநல்லூர். ஞா.
முன்னமே தோன்றி முளைத்தார்—சாய்க்காடு. நா.
மாணிக்க முளைத்தெழுந்த வித்தன்—குருகாவூர். சு.
தீராநோய் தீர்த்தருள வல்லான்—புள்ளிருக்கு வேளூர். நா.
சிவலோகன்—புன்கூர். நா.
பாடியாடும் பரிசேபுரிந்தான்—நருத்தகானப்பிரியர் நீடூர். நீ சு.
அஞ்சலஞ்சலென்றார்—அன்னியூர். நா.
வள்ளலார்—மணஞ்சேரி. நா.
குற்றமறியாத பெருமான்—கருப்பறியலூர். ஞா.
மாணிக்கம்—வாளொளிபுற்றூர். சு.
திருநீலமிடற்றெம்பிரான்—மண்ணிப்படிக்கரை.
துயரந்தவிர்ப்பான்—ஓமாம்புலியூர். நா.
மணவாளநம்பி—ஓமாம்புலியூர். நா.
திருமேனியாளன்—நாரையூர். ஞா.
அழகன்—சுந்தரேசர்) நாரையூர். ஞா.
பசுபதியார்—பந்தணைநல்லூர். ஞா.
செஞ்சடைவேதியன், தாழ்சடையான், சடையவன்—பனந்தாள். ஞா.
தான்தோன்றியீசனார்—இன்னம்பர். நா.
செம்பொற்சோதி—ஐயாறு. நா. (பொற்சுடர்).
நெய்யாடிய பெருமான்—நெய்த்தானம். ஞா.
பின்னுசடைப் பெருமான்—பெரும்புலியூர். ஞா.
வயிரத்தூண்—மழபாடி. நா.

வயிரத்திரள்—மழபாடி. ஞா.
முளைத்தவன்—காஞ்ர். நா.
பவளவண்ணர்—காஞ்ர். ஞா.
மெய்யன்—அன்பிலாலந்துறை. நா.
ஆதிமுதல்வர்—பாற்றுறை. ஞா.
அழகா(அழகன் என்ற திருநாமத்தின் விளி)—ஆனைக்கா. ஞா.

ஆதி—ஆனைக்கா. சு.
என்னானைக்கன்று—ஆனைக்கா. நா.
பின்னிரக்கஞ் செய்வான், மணியாரமார்பன், மந்திரிப்பார் மனத்துளான்—ஆனைக்கா. நா.
மலைமேல்மாமருந்து—கற்குடி. சு.
ஆரணிய விடங்கர்—பைஞ்ஞீலி—சு.
தாயுமாய்(ஆனவர்)—சிராப்பள்ளி. நா.
ஆதியினான்—காட்டுப்பள்ளி. ஞா.
பொய்யிலி—பூந்துருத்தி. நா.
செல்வமுடையார்—சோற்றுத்துறை. ஞா.
செல்வனார், பொன்னித் தென்னவன்—சோற்றுத்துறை. நா.

சிவக்கொழுந்து—சத்திமுற்றம். நா.
படர்சடையார்—(கபர்த்தீசர்) வலஞ்சுழி. ஞா.
புரிசடைப்புண்ணியன் (கபர்த்தீசர்) வலஞ்சுழி. நா.
வள்ளல்—பழையாறைவடதளி. நா.
குழகன்—குடமூக்கு. ஞா.
கூத்தனார்—குடந்தைக்கீழ்க்கோட்டம். நா.
மடந்தைபாகர்—குடந்தைக் கீழ்க்கோட்டம். நா.
எரியாடி—தென்குரங்காடுதுறை. ஞா.
கூத்தன்—தென்குரங்காடுதுறை. ஞா.
மாசிலாமணி—ஆவடுதுறை. சு.
சொன்னவாறறிவார்—துருத்தி. சு.
வள்ளல்—மயிலாடுதுறை. நா.
காவிரித்துறை காட்டினார்—விளநகர். ஞா.
(துறை காட்டும் வள்ளல்), துறையும் போகுவர்—விளநகர். ஞா.

நற்றுணையாவர்—நனிபள்ளி. நா.
தான் தோன்றியப்பனார்—ஆக்கூர். நா.
காலனைச்சாடினான் (கால சம்ஹாரமூர்த்தி)—கடலூர். ஞா.

குணத்தினான்—கருவிலிக்கொட்டிட்டை. நா.
அழகியர்—அரிசிற்கரைப்புத்தூர். ஞா.
மருந்தனார்—ஸ்ரீ வாஞ்சியம். சு.
அழகியர்—பனையூர். சு.
ஆதிபுராணன்—நாகைக்காரோணம். நா.
வெண்ணெய்ப் பெருமான், வெண்ணெய்ப்பிரான், பால் வண்ணன்—சிக்கல். ஞா.
கோணப்பிரான்—புகலூர். நா.
ஆழித்தேர்வித்தகர், தேவரகண்டன், வீதிவிடங்கன், வள்ளல்—ஆரூர். நா.
பிரியார், பிரியாத பெருமானார்—பெருவேளூர். ஞா.
கற்பகம் (கற்பகநாதர்)—கடிக்குளம். ஞா.
வெள்ளியங்குன்றமர்ந்தார்—தெங்கூர். ஞா.
மாணிக்க வண்ணர்—நாட்டியத்தான்குடி. சு.
கண்ணான்—காறாயில். ஞா.
நடுதறி—கன்றாப்பூர். நா.
சிந்தையான். வலிவலம். ஞா.
மனத்துளான். வலிவலம். நா.
மங்கைபாகத்தவன்—கொடுங்குன்று. ஞா.
திருத்தளியான்—புத்தூர். நா.
மதிநிலாவட்டத்தாடி—திருப்புத்தூர். நா.
ஆதியான்—ஆடானை. ஞா.
காளை—கானப்பேர். சு.
திருமேனிப் பெருமான்—சுழியல். சு.
விகிர்தர்(விகர்தர) வெஞ்சமாக்கூடல். சு.
சுடர்க்கொழுந்து—கடந்தை—பெண்ணாகடம். நா.
சுடர்க்கொழுந்து—தினைநகர். சு.
தோன்றாத்துணை—பாதிரிப்புலியூர். நா.
அழகன் (அழகர்)—ஆமாத்தூர். நா.
அதிருங்கழலடிகள்—அண்ணமலை. ஞா.
நல்லகம்பன், கள்ளக்கம்பன்—கச்சியேகம்பம். சு.
அவுணர்கள் புரங்கள் வெந்தறச் செற்றவன்— திரிபுராந் தகன். விற்கோலம். ஞா.
பாசுபதர்—வடதிருமுல்லைவாயில். சு.
மாசிலாமணி—வடதிருமுல்லைவாயில். சு.
மலைமேன் மருந்து—கச்சூர் ஆலக்கோயில். சு.
கள்ளம் வல்லான்—கழுக்குன்றம். ஞா.
ஆட்சி கொண்டார்—அச்சிறுபாக்கம். ஞா.
சந்திரசேகரன்—வக்கரை. ஞா.

தேவாரத்தில் வரும் அம்பிகையின் திருநாமங்கள்:

கரும்பமரு மொழிமடவாள்—கோயில். நா.
பெண்ணினல்லாள்—வேட்களம். ஞா.
தூவளமாது—கழிப்பாலை. ஞா.
உமை, வெண்ணீற்றுமை. —நல்லூர்ப்பெருமணம். ஞா.
அணிகொண்ட கோதை (கோதையம்மை)—தென்
திருமுல்லைவாயில். ஞா.
காவியங்கண்மடவாள்—குருகாவூர். ஞா.
பெரியாள் (பெரியநாயகி)—சீகாழி. ஞா.
வேய்கொள் தோளுமை—நீடூர். சு.
நாறுசாந்திளமுலையாள்—வேள்விக்குடி. ஞா.
குயிலாருமென் மொழியாள்—மணஞ்சேரி. ஞா.
கோல்வளையாள்—கருப்பறியலூர். சு.
வண்டமர்பூங்குழலாள்—வாளொளிபுற்றூர். ஞா.
மொய்குழலாள்—வாளொளி புற்றூர். ஞா.
பூங்கொடிமடவாள்—ஓமாம்புலியூர். ஞா.
காம்பேய்தோளி—பந்தணைநல்லூர். நா.
கற்பகம்—(கற்பகநாயகி) கஞ்சனூர். நா.
வடிவுடை மங்கை—கோடிகா. நா.
கொம்பனாள்—இன்னம்பர். நா.
ஏலவார்குழலாள்—மங்கலக்குடி. ஞா.
கரும்பொடுபடுஞ் சொலின் மடந்தை (கரும்படு
சொல்லம்மை) புறம்பயம். ஞா.
மங்கை—விசைய மங்கை. நா.
அங்கிளமங்கை—பாச்சிலாச்சிராமம். ஞா.
நீணெடுங்கண்ணி—பைஞ்ஞீலி. சு.
முற்றிலாமுலையாள்—கடம்பந்துறை. நா.
மையார்கண்ணி (அஞ்சனாக்ஷி)—கற்குடி. சு.
தன்னொப்பாரில்லாத மங்கை—சோற்றுத்துறை. நா.
மட்டுவார் குழலாள்—சிராப்பள்ளி. நா.
நறுங்குழன்மடவாள்—எறும்பியூர். நா.
மருவை வென்ற குழன்மடவாள்—எறும்பியூர். நா.
வாரு மன்னு முலைமங்கை—மேலைத்திருக்காட்டுப்பள்ளி.
ஞா.
உருவுடை மங்கை—பூந்துருத்தி. நா.
மடமங்கை—மங்கையர்க்கரசி. வேதிகுடி. ஞா.
மடமொழி மங்கை—மங்கையர்க்கரசி. வேதிகுடி. நா.
பண்ணினேர்மொழியாள்—கருகாவூர். ஞா.
தவள வெண்ணகை மங்கை (தவளவெண்ணகையாள்) —
பாலைத்துறை. நா.

எழிலாயிழை (கிரிசுந்தரி)—நல்லூர். ஞா.
வரை மங்கை (கிரிசுந்தரி)—நல்லூர். ஞா.
மலை பெற்ற மகள் (கிரி சுந்தரி). நா.
பல்வளை—பட்டீச்சரம். ஞா.
மங்கை (மங்களநாயகி) குடமூக்கு. ஞா.
வாடாமுலை, அன்பிற்பிரியாதவள், பெருநலமுலையாள்—
இடைமருதூர். ஞா.
தளிர் நிறத்தையல்—தென்குரங்காடுதுறை. ஞா.
கொம்பியல் கோதை—வைகன் மாடக் கோயில். ஞா.
அங்கோல் வளைமங்கை—நல்லம். ஞா.
அழகமர்மென் முலையாள்—கோழம்பம். ஞா.
அழகாகும் ஆகத்தவள் (சௌந்தரநாயகி) நல்லம். ஞா.
ஒப்பிலாமுலையாள்—ஆவடுதுறை. சு.
அஞ்சலாள்—மயிலாடுதுறை. நா.
வேய்த்தோளி—விளநகர். ஞா.
இளங்கொம்பனாள்.—பறியலூர். ஞா.
மருவார் குழலி—செம்பொன்பள்ளி. ஞா.
அணியார் தடங்கண்ணி—வலம்புரம். ஞா.
வடித்தடங்கண்ணி—வலம்புரம். நா.
வாடாமுலையாள்.—கடலூர்மயானம். சு.
அம்படுத்த கண்ணாள்—தெளிச்சேரி. ஞா.
அத்திரநயனி—நள்ளாறு. ஞா.
போகமார்த்த பூண்முலையாள்—நள்ளாறு. ஞா.
கோலவார்குழலாள்—கோட்டாறு. ஞா.
ஏலமலர்க் குழன் மங்கை (ஏலமலர்க் குழலாள்)—
கோட்டாறு. ஞா.
மின்னுமேகலையாள்—மீயச்சூர் இளங்கோயில். நா.
பொற்கொடி—(ஸ்வர்ணலதாம்பிகை) திலதைப்பதி. ஞா.
வண்டுசேர்குழலி—பாம்புரம். ஞா.
மங்கை—சிறுகுடி. ஞா.
மங்கை—வீழிமிழலை. ஞா.
சந்தணி கொங்கையாள்—வீழிமிழலை. நா.
கரும்பனையாள்—வீழிமிழலை. நா.
வீறுநன்குடையவள்—சிவபுரம். ஞா.
நாறுசாந்தணிநன்முலையாள்—கொண்டீச்சுரம். சு.

கருந்தாழ்குழலி—புகலூர். நா.
காவியங் கண்ணள்—பயற்றூர். நா.
திருகு குழலுமை மங்கை—செங்காட்டங்குடி. நா.
இருமலர்க்கண்ணி—சாத்தமங்கை. ஞா.
கருந்தடங்கண்ணி—நாகைக் காரோணம். நா.
பண்தடவுசொல்லி—(மதுரபாஷிணி) தேவூர். ஞா.
மைமேவு கண்ணியாள் (அஞ்சனாக்ஷி) பள்ளியின் முக்கூடல்.
நா.

அல்லியங்கோதை—ஆரூர். ஞா.
பொன்னுலாவல்லி—ஆரூர். ஞா.
பூங்குழலாள்—ஆரூர். நா.
பஞ்சேரு மெல்லடியாள்—ஆரூர்ப்பரவையுண்மண்டளி. சு.
யாழன மொழியுமை—விளமர். ஞா.
நறுவிள நறுமென் கூந்தனங்கை—பெருவேளூர். நா.
மடந்தை—தலையாலங்காடு. நா.
காமக்கொடி—கச்சி. ஞா.
உமை—இரும்பூளை. ஞா.
தேன்மொழிப்பாவை—கோட்டூர். ஞா.
வேலனகண்ணுமை—வெண்டுறை. ஞா.
பஞ்சுதோய் மெல்லடிப்பாவை—கொள்ளிக்காடு. ஞா.
உமை—கன்றாப்பூர். நா.
மாழையொண் கண்ணுமை—வலிவலம். சு.
வெள்வளை—கைச்சினம். ஞா.
வண்டமருங்குழலாள்—கோளிலி. சு.
பாலின்மொழியாள்—வாய்மூர். நா.
யாழைப் பழித்தன்ன மொழி மங்கை—மறைக்காடு. சு.
மையார் தடங்கண்ணி—கோடிக்குழகர். சு.
அங்கயற்கண்ணி—ஆலவாய். ஞா.
அஞ்சொலணியிழையாள்—பரங்குன்றம். ஞா.
தேனிற்பொலிமொழியாள்—கொடுங் குன்றம். ஞா.
மலைவளர்காதலி—இராமேச்சுரம். ஞா.
மின்னனைய நுண்ணிடையாள்—பூவணம். நா.
மின்னனையாள்—பூவணம். சு.
வடிவுடைமங்கை—நெல்வேலி. ஞா.
பந்தணவும் விரலாள்—கொடிமாடச் செங்குன்றூர். ஞா.

தேனமரும்மொழிமாது.—பாண்டிக்கொடுமுடி. ஞா.
புரிகுழலுமை—கூடலையாற்றூர்—சு.
வீறாமுலையாள்—எருக்கத்தம் புலியூர். ஞா.
உண்ணாமுலை—அண்ணமலை. ஞா.
கருந்தடங் கண்ணினாள்—கச்சியேகம்பம். நா.
நெடுங்கண்மங்கை, மலரங்கண்ணி—கச்சியேகம்பம். நா.
கெண்டையந் தடங் கண்ணுமை (பரியாயம்) கச்சியேகம்பம். சு.

இறையார் வளையாள்—குரங்கணின்முட்டம். ஞா.
வண்டார்குழலி—ஆலங்காடு. சு.
ஞானப்பூங்கோதை—காளத்தி. நா.
வடிவுடை மங்கை—ஒற்றியூர். நா.
கொடியிடையுமையவள்—வடதிருமுல்லைவாயில். சு.
உமையாள்—கச்சூர் ஆலக்கோயில். சு.
பொண்ணின் நல்லாள்—கழுக்குன்றம். ஞா.
இளங்கிள்ளையரிவை; கிள்ளை—கிளி.
—அச்சிறுபாக்கம். ஞா.

அநுபந்தம்—4

தீர்த்தங்கள்

1. ஸோமநாதம்: நர்மதை ஸங்கமத்தினுடைய வடபாகம். ஸமுத்திர ஸங்கமம். பிரபாஸ தீர்த்தம் கோகர்ணம். ஸோம நாதம்.
   56.
2. பிரயாகை
3. காசி: மாணிகர்ணிகை.
4. கங்காஸாகரம்
5. கயை
6. நர்மதை
7. கோதாவரி
8. கிருஷ்ணவேணி
9. கிருஷ்ணவேணி நதியில் துங்கபத்திரை ஸங்கமம் ஸ்ரீ சைலம்.
10. ஸ்ரீ காளஹஸ்தி. ஸ்வர்ணமுகரி.
11. கம்பா—காஞ்சி.

12. கெடிலநதி—கருடநதி; திருவதிகை. வீரை பூசித்தது. வீராட்டகாஸம்.

13. மணிமுத்தாநதி—விர்த்தாசலம்

14. கோபர்வதம்; கோபுராபுரம்—ஞானசக்தி தீர்த்தம். 14—ஈசானம்—2—குரோசம் சிவனாந்த மஹாசிவ யோகிகள் (இருந்த இடம்).

15. சிவகங்கை—ரஹஸ்ய தீர்த்தம்—குஹ்ய தீர்த்தம். கொள்ளிடம். மணி முக்தா நதியின் ஸங்கமத்தின் மத்தி. சிதம்பரம்.

16. பிரமதீர்த்தம் சீகாழி.

17. சூரிய தீர்த்தம். திருக்கோலக்கா ஸந்நிதி. இந்திரசித்தின் ரதத்தை அழுத்தியது. சிவலிங்கங்கள் 6 மேற்படி தீர்த்தத்தினுள் உள்ளன. [கோலம்—மணக்கோலம்].

18. காவேரி ஸங்கமம். சுவேதாரணியம்—திருவெண்காடு.

19. மாயூரம்.

20. (அ) காவேரி கன்னியாதீர்த்தம். (கும்பகோணம்)

21. கல்யாண தீர்த்தம், காருணியாமிருதம். (இடைமருது)

22. ஆம்பிரகேஷத்திரம்—காவேரி தக்ஷிணாமூர்த்தி பேதம். வீரயோகாஸனம்; 8—ஆஸனத்திலொன்று. ஆம்ர தீர்த்தம்.

23. துயுதி—கஞ்சனூர். துருதியென்பார்கள். அக்கினி மகா லிங்கம்.

24. திருமங்கலக்குடி—மங்கல வாசகர் (திருநா. தே.) பிருகு முதலியவர்கள். காவேரி மங்கல தீர்த்தம்.

25. திரிகோடிகே—காவேரி—உத்தர வாகினி.

3—11. கோடி.

1. கஞ்சனூர்
2. திரிகோடி
3. வடாரணியம்
4. கோவடுநாயகம்
5. கபிநாதன்—ஆடு துறை
6. திருமாந்துறை

26. திருவாரூர்: ஆராதேசுவரம்—சித்தேசுவரத்திற்கு மத்தி. க்ஷீரகுண்டம். வன்மீகி லிங்கத்திற்கு வடக்கு.

கமலாலயம்

க்ஷீரகுண்டத்திற்கு மேற்கே தேவதீர்த்தம்.

ராமேசுவரம்

27. தனுஷ்கோடி — முன்னம் பினாககோடி. சிதம்பராதி களிலுள்ளது. உத்தர ராமாயணத்தில் லவணாசுர வர லாற்றில் காணப்படும். ராமாயணதாற்பரிய ஸங்கிரகத் திலும் காணலாம்.

ஹாலாஸ்யம்

பொற்றாமரை—மஹாதீர்த்தம்

சூத—சிவமாஹாத்மிய கண்டம். 20—வது அத்தியாயம். சூத—ஞானயோக கண்டம். 3 ஆம் அத்தியாயம். மத்தி யத்தியாயம். பிரஹஸ்பதிக்குச் சிவன் சொல்லியது.

மேற்கூறிய வரிசையாகத் தீர்த்தங்கள் கூறப்பட்டன. அதிக தீர்த்தங்கள்:

1. வேதாரணியம்: வேத தீர்த்தம்—ஸமுத்திரம்.
2. பஞ்சநதம்: காவேரி
3. கோகர்ணம்: கோடி தீர்த்தம். தடாகம், சமுத்திரம். பிர பாலத்தின் தெற்கு.
4. பகண்டக க்ஷேத்திரம்: காவேரியுத்பத்தி. திரிவேணியுத்தர வாகினி; கனகை, சுஜ்யோதி, காவேரி ஆகிய 3 நதிகளும் சேர்க்கை. காவேரியில் மற்ற இரண்டும் லிகண்டகாடரிஷி.
5. இடைத்துறை. ராமநாதபுரம்—பசுவாய்வழி காவேரி வரு கின்றது. இதில் காயத்திரி சிலையில் காயத்திரி யந்திரம்.
6. ஸ்ரீ கண்டேசுவரம்—காவேரி, கபிலை ஸங்கமம்.
7. கருவூர்—அமராவதி ஸங்கமம். முக்கூடல்.
8. பாண்டிக் கொடுமுடி. மகுடேசுவரம். காவிரி.

கோபர்வதம்: சக்தி தீர்த்தம் (தடாகம்); சுந்தரர் பொன்னைப் போட்டது மணி சக்கர தீர்த்தம்.

பிரமபுரம்: பிரமதீர்த்தம்.

திருபுவனம்: சுவர்க்கபுரி.

அம்பிகை: தர்மலம்வர்த்தனி.
விருக்ஷம்: விளா.
தீர்த்தம்: மஹாசரபதீர்த்தம்.

சூத ஸம்ஹிதை முக்தி கண்டத்தில் 7-ஆம் அத்தியாயம், 9-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்ட தீர்த்தங்கள்:

1. கேதாரம்—கனகலம் (கங்கை ஜடையிலிருந்து விழுந்த இடம்) மந்தாகினி; ரேதோதகம்—குளம்.
2. காசி—மணிகர்ணிகை.
3. ஸ்ரீ காளஹஸ்தி—ஸ்வர்ணமுகரி.
4. விருத்தாசலம்—மணிமுத்தம்.
5. கோபர்வதம்—சக்தி தீர்த்தம் (தடாகம்). சுந்தரர் பொன்னைப் போட்டது மணி சக்கர தீர்த்தம்.
6. சிதம்பரம்—சிவகங்கை.
7. பிரமபுரம்—பிரமதீர்த்தம்.
8. திருவெண்காடு—மணிகர்ணிகை, முக்குளம், காவேரி உத்தர வாகினி.
9. ஆரூர்—கமலாலயம்.
10. வேதாரணியம்—வேத தீர்த்தங்கள்.

தலவிருட்சங்கள்:

மா—காஞ்சி, மாயூரம்.
மகிழ்—உடையார்பாளையம், ஒற்றியூர், கோகர்ணம். கல்லால் (திருப்புறம் பயம்), காளஹஸ்தி.
ஆல்—திருவாலங்காடு, ஆலங்குடி.
மருது—திருவிடைமருதூர்.
ஆத்தி—திருவாப்பாடி.
பாலை—திருப்பாலைத்துறை.
மூங்கில்—திருநெல்வேலி, திருப்பாஞ்சூர்.
பலா—திருக்குற்றாலம்.
நீலி—திருப்பைஞ்ஞீலி.

புன்னை—மருகல், சங்கர நயினார் கோயில், திருப்புறம்பயம்.
கூவிளை—கடலூர், திருத்தருப்பூண்டி.
புன்கு—திருப்புன்கூர்.
நீர்க்கடம்பு—கடம்பூர்.
வன்னி—திருநள்ளாறு, பழமலை.
கொன்றை—திருவதிகை, திருப்புத்தூர்.
முல்லை—தென்திருமுல்லை வாயில், வடதிருமுல்லை வாயில்.
பாதிரி—திருப்பாதிரிப்புலியூர்.
தில்லை—சிதம்பரம்.
சாய்—திருச்சாய்க்காடு.
பனை—திருப்பனந்தாள், திருப்பனையூர், பனங்காட்டூர், பனைய வரம்.
இலந்தை—கீழ்வேளூர், உத்தர கோசமங்கை, திருவெண்பாக்கம், வதரிவனம்.
பராய்—திருப்பராய்த்துறை
குருந்தை—திருப்பெருந்துறை.
நெல்லி—திருநெல்லிக்கா.
நாவல்—திருவானைக்கா.

அநுப்பந்தம்—5

64 மூர்த்தி ஸ்தலங்கள்

1. திருவிடைமருதூர்: இலிங்கமூர்த்தி.
2. அருணாசலம்: லிங்கோத்பவர்.
3. கொட்டையூர்: முகலிங்கர். திருமாணி குழிக்கு அடுத்ததாகிய தலம் ஒன்று, கரிவலம் வந்த நல்லூர்.
4. சிதம்பரம், திருமூலட்டானம். பிரகாரத்தில் ஐந்து பீடங்கள். சதாசிவம்.
5. மஹாஸதாசிவம்; ஸ்ரீ கண்டர் (ரூபம்).
6. கோனேரிராஜபுரம் (மூர்த்தியுண்டு; உமாமஹேசர்).
7. காழி: சுகாசநர்.
8. இடைமருது (மருதம்) உமேசர்.
9. ஆரூர் (தியாகர்) சோமாஸ்கந்தர்.
10. புகலூர் : சந்திரசேகரர்.

11. திருவாவடுதுறை, ஐயாறு: ரிஷபாரூடர்.
12. ,, ,, ரிஷபாந்திகர்.
13. பெரும்புலியூர்: புஜங்கலளித மூர்த்தி (பாம்பின் மீதாடல்) முயலகனில்லை.
14. ஷி களக்காடு: புஜங்கத்திராஸர், கொள்ளம்பூதூருக்கு மேற்கே ஒரு மைல்.
15. கைலாஸம் 4—மர்ம ஸந்தியாந்ருத்தர்.
16. சிதம்பரம் : ஸதாந்ருத்தர்.
17. குடந்தைக் கீழ்க்கோட்டம்: அம்பிகை தாளம் போட ஆடல், அரசிலை தொங்கல்: அம்பிகை தாளம்.
18. இமயம் : கங்காதரமூர்த்தி.
19. கேதாரம்—கங்கா விஸர்ஜநர்.
20. அதிகை : திரிபுராந்தகர்.
21. வீழி : கல்யாணசுந்தரர், திரைலோக்கி, பனசை.
22. செங்கோடு: அர்த்த நாரீசுவரர்.
23. வழுவூர், பெருஞ்சேரி, செங்காட்டங்குடி: கஜயுத்தர்.
24. சாட்டியக்குடி : ஜ்வரா பக்கனர்.
25. வழுவூர்: சார்த்தூலஹரமூர்த்தி, கீர்த்தி வாலேசுவரர்.
26. கொள்ளம்பூதூர் முதலிய 64 பாசுபத மூர்த்தி.
27. சீகாழி, சிறுபுலியூர்: கங்காளேசுவரர்.
28. சங்கரநாராயணர் கோயில்: சங்கர நாராயணர்—கேச வார்த்தர்.
29. வழுவூர் : பிக்ஷாடனர்.
30. திரிபுவனம் (சரப மூர்த்தி) ஸிஹ்மக்நர், தாராசுரம்.
31. திருவாப்பாடி : சண்டேசாலுக்கிரஹர்.
32. ஆலங்குடி முதல் 12 தக்ஷிணாமூர்த்தி.
33. குறுக்கை—யோகதக்ஷிணா மூர்த்தி.
34. வீணாதக்ஷிணாமூர்த்தி.
35. கடலூர்—காலாந்தகமூர்த்தி.
36. குறுக்கை—காமதஹனர்.
37. திருவானை, சத்திமுத்தம், காஞ்சி: லகுலேசுவரர்.
38. காசி முதல் 16 பைரவர்.
39. காழி—ஆபதோத்தாரணர்.
40. காழி—வடுகர்.
41. க்ஷேத்திரபாலபுரம் (தனிப்பைரவர்.)

42. பெருந்துறை: வீரபத்திரமூர்த்தி.
43. வெண்காடு: அகோராஸ்திர மூர்த்தி.
44. பறியல்—தக்ஷயஞ்ஞ ஹதமூர்த்தி.
45. திருக்கொள்ளம்பூதூர்: சிநாத மூர்த்தி திருக்குடந்தை.
46. பெருந்துறை, தேரழுந்தூர் குருமூர்த்தி.
47. பெருந்துறை, மதுரை, வீழிமிழலை: அசுவாரூடர்.
48. வெண்காடு, கோட்டாறு, மருத்துவக்குடி. கஜாந்திகர்.
49. விற்குடி: சலந்தரவதமூர்த்தி.
50. இடைமருது : ஏகபாததிரிமூர்த்தி.
51. இடைமருது : திரிபாததிரிமூர்த்தி.
52. தப்பளாம்புலியூர் : ஏகபாதமூர்த்தி.
53. காஞ்சி, இடைமருதூர்: கௌரீவரப்ரதமூர்த்தி.
54. வீழிமிழலை : சக்கரதானஸ்வரூப மூர்த்தி.
55. பூவனூர், மந்தரம்: கௌரீலீலாசமனுவிதர் தேரழுந்தூர்.
56. கொண்டீசுவரம், நஞ்சுண்டேசுவரம், மண்ணிப் படிக்கரை: விஷ்பாஹரணர்.
57. நாகநாதம், பட்டீசுவரம்; கருடாந்திகர்.
58. கண்டியூர்: பிரஹ்மசிரச்சேதர்.
59. கச்சபாலயம் (காஞ்சி)—கூர்மஸம்ஹாரர்.
60. மச்சஸம்ஹாரமூர்த்தி.
61. பழமலை; காசி: வராஹஸம்ஹார்ரமூர்த்தி.
62. உருத்திர கங்கை முதலியன ஷி பிரார்த்தனாமூர்த்தி.
63. காசி: ரக்தபிக்ஷாப்ரதானர்.
64. சாமிமலை, பேணு பெருந்துறை: சிஷ்யபாவமூர்த்தி.

பஞ்ச சாதாக்கியம்

1. சிவசாதாக்கியம்—மஹாகைலாஸம்.
2. அமூர்த்தி சாதாக்கியம்—பெருந்துறை.
3. மூர்த்தி சாதாக்கியம்—தில்லை நடராஜர்.
4. கர்த்துருஸாதாக்கியம்—லோம சுந்தரர்.
5. காம ஸாதாக்கியம் : காசி, கேதாரம்.

அட்டாட்ட மூர்த்த நாமங்கள்

லிங்கம்	லகுளேசுவரம்
லிங்கோத்பவம்	ன்பரவம்

முகலிங்கம்
சதாசிவம்
மகாசதாசிவம்
உமாமஹேசம்
சுகாசனம்
உமேசம்
சோமாஸ்கந்தம்
சந்த்ரசேகரம்
விருஷபாரூடம்
விருஷபாந்திகம்
புஜங்கலளிதம்
புஜங்கத்ராசம்
சந்த்யாந்ருத்தம்
சதாந்ருத்தம்
தாண்டவம்
ஜாந்நவீதரம்
கங்காவிஸர்ஜனம்
திரிபுராந்தகம்
கல்யாணசுந்தரம்
அர்த்தநாரீசுவரம்
கஜயுத்தம்
ஜ்வராபக்நம்
சார்த்தூலஹரவிக்ரஹம்
பாசுபதம்
கங்காளம்
கேசவார்த்தம்
பிக்ஷாடநம்
சிம்ஹக்நம்
சண்டேசுவரப்ரஸாதம்
தக்ஷிணமூர்த்தி
யோகவீணாதரம்
காலாந்தகம்
காமாரி

ஆபதுத்தாரணம்
வடுகம்
க்ஷேத்ரபாலகம்
வீரபத்ரம்
அகோராஸ்திரம்
தக்ஷயக்ஞஹரம்
கிராதம்
குருமூர்த்தி
அச்வாரூடம்
கஜாந்தகம்
ஜலந்தரவதம்
ஏகபாதம்
திரிமூர்த்திகம்
திரிமூர்த்தி
திரிபதம்
கௌரீவரப்ரதம்
சக்ரதாநஸ்வரூபம்
கௌரீலீலாசமன்விதம்
விஷாபஹரணம்
கருடாந்திகம்
பிரமசிரச்சேதம்
சூர்மசம்ஹாரம்
மத்ஸ்யாரிம்
வராஹாரிம்
பிராத்தநாமூர்த்தம்
ரக்த பிக்ஷாப்ரதாநம்
சிஷ்யபாவம்
ஷடாநநம்
தக்ஷிணாமூர்த்தி

காலாந்தகம்

அநுபந்தம்—6

பூசித்தவர்களும் ஸ்தலங்களும்

பூசித்தவர்	ஸ்தலங்கள்
உருத்திரர்	திருக்கோடிகா, உருத்திரகோடி, சீகாளத்தி.
பிதிரர்	கயையிற் பிரபிதாமகர்.
தர்ம தேவதை	திருவாவடுதுறை, தருமபுரம்.
செவ்வாய்	வைத்தீசுவரன் கோவில்
புதன்	கச்சித் திருநெறிக்காரைக்காடு
குரு	காஞ்சீபுரம்
ராகு	—
கேது	காழியைச் சார்ந்த செம் பாம்பன்குடி. (செம்பன்குடி)
ஆதிசேடர்	திருவேடகம்
ஸப்தரிஷிகள்	திருத் தவத்துறை
மயானம் ஐந்து	1. வீழிமயானம் 2. கடலூர் மயானம் 3. கச்சிமயானம் 4. காழிமயானம் 5. நாலூர் மயானம் —இவற்றில் 1, 2, 5 ஸ்வாமி பிரமபுரீசர் அம்பிகை: ஞானாம்பிகை.
லக்ஷ்மி பூசித்ததலம்	8
மன்மதன்	இஞ்சிக்குடி. காமரசவல்லி.
பிரம்மா	—
சரசுவதி	கோகர்ணம், ருச்யச்ருங்கம், உடுப்பி, சுப்பிரமணியம் மூகாம்பிகை.
சூரியர் பூசித்த தலம்	12.
அசுவினி தேவர்	ஆரூர்
வாதாபிவில்வலர்	ஆரூர்.
சுற்கி	—

சனகர் முதலிய இருபத்து நால்வர்

கபிலர்	இடைததுறை, ராமநாதபுரம்
தத்தாத்திரேயர்	திருவிடைமருதூர், சிவசைலம்

மோகினி	மகாகாசி
யஜ்ஞபதி	திருவீழிமிழலை, வாஞ்சியம்
வியாசர்	பதரிகாச்சிரமம், இலந்துறை.
தன்வந்தரி	சிவசைலம்
அத்திரி	சிவசைலம்
தசரதர்	கடையம்
விஷ்ணு	காசி முதலிய தலங்கள்.
மச்சம்	நாகூர், காஞ்சி
கூர்மம்	திருக்கச்சூர், கச்சபேசம்
வராகம்	சிவபுரம்
நரசிங்கம்	நல்லூர்.

பூசித்தவர்	தலங்கள்
வாமனம்	திருமாணிகுழி
பரசுராமன்	பழுவூர், காஞ்சீபுரம்
இராமன்	இராமேச்சுர முதலியவை.
பலராமன்	குழகர் கோயில் (கோளாச் சிரமம்). இதில் பலராமருடைய பிம்பமுண்டு.
கிருஷ்ணன்	திருவீழிமிழலை, சோமநாதம் குருகேஷத்திரம், இடைமருதூர்.
பூசித்தவைகள்	தலங்கள்
மேகம்	உச்சயினி மாகாளம்
இடி	திருக்கழுக்குன்றம், வாட்போக்கி.
நந்தி	திருவையாறு, மாயூரம்.
உமை	அம்பிகை, தென்புறமுள்ள இடங்களெல்லாம்.
கங்கை	ஹரித்துவாரம், ஹரத்துவாரம்

முருகர் பூசித்த தலம் : 12.

வீரபத்திரர்	பறியல், பெருந்துறை
பைரவர்	சீகாழி, காசி, வாஞ்சியம்
ஐயனார்	வழுவூர்
துர்க்கை	துர்க்காச்சி, கடகம் பாடி, சிதம்பரம், தவத்துறை (விலங்கு நீங்கினது).

காடு கிழாள்	வேதாரணியம்.
மிருகம், பறவை	ஸ்தலங்கள்
யாளி	இது பூசித்த தலம் தில்லையாளி. இது பிறையாற்றுக்கு மேற்கே உள்ளது.
கருடன்	பட்டீசுவரம், சத்திமுற்றம்.
யானையாளி	கேதாரம்
புலி	பெரும்பற்றப்புலியூர், அத்திப் புலியூர் முதலியன.
யானை	திருவானைக்கா, சீகளாத்தி, திருக்குற்றாலம், திருவெண் காடு, மதுரை, திருவிடை மருதூர், மருத்துவக்குடி, திருக்கொட்டாரம், வரகூர் சுண்டமங்கலத்துக்குச் சமீ பம். ஜராவதேசுவரர்.
குதிரை	திருக்குற்றாலம்—அசுவக்காடு, அயவந்தி—ஹயவந்தி.

சூரியன் குதிரை பூசித்த ஸ்தலம்.

	திருமாந்துறை, திருமங்கலக் குடி.
பசு	திருவாடுதுறையும், ஐந்து பசுபதீசுவரமும்.
கஸ்தூரி மிருகம்	கேதாரம்
புனுகுபூனை	கேதாரம்,
சிங்கம்	மல்லிகார்ச்சுனம், பெருங்காடு, நரசிங்கம்பேட்டை
பசுபதிஸ்தலம்	5 1. ஆவூர், 2. நேபாளம், 3. திருக்கொண்டீசுவரம், 4. பந்தணைநல்லூர், 5. கருவூர்.
பூசித்த மிருகம்	ஸ்தலங்கள்
நரி	சிறுகுடி, இதற்கு விசுவாமித்திர திரபுரமென்று பெயருமுண்டு. திருவீழிமிழலையைச்

	சார்ந்தது. இதில் அம்பிகை யின் தோளில் சுவாமியின் கை. மேலக்கூந்தலூர்.
எருது	திருவாவடுதுறை, திருக்கோழம் பம், தருமபுரம், திலகே சுவரம் (தரும தீர்த்தம்) மாயூரம்.
எருமை	கேதாரம், இதில் லிங்கம் எரு மையின் பின்புறம் போன்றது. (அருணாசல புராணம்.)
ஆடு	திருவாடானை.
புருஷாமிருகம்	சிதம்பரம், கேதாரம், மாப்படுகைக்குச் சமீபித்த தாகிய ஓரூர்.
பன்றி	பெரும் பன்றியூர்.
முட்பன்றி	—
கரடி	சங்கர நாராயணர் கோயில் கரடி—ஜாம்பவான்.
சாமரம் (சுவரி)	ஜ்வாலாமுகி; இஃது இமய மலையின் பக்கத்துள்ளது. ஸ்வாமி : சங்கரர். அம்பிகை : சூல தாரிணி.
சௌரி:	பஞ்சாப், பஞ்சாபர்; பஞ்சநதி
காட்டுப்பசு	—
கீரி	நகுலேசுவரம்
மான்	குழகர்; கோளாச் சிரமம். அகத்தியான்பள்ளி, மறைசை.
நாய்	மஹாபைரவம், வீழிமிழலை சோமேச்சுவரம், வைக்கம்.
கலை	—
புல்வாய்	—
கழுதை	கரபுரம், கரவீரம்.
பூசித்த மிருகம்	ஸ்தலம்.
கோவேறு கழுதை	—
ஒட்டகம்	நெடுங்களம்
நரி	சிறுகுடி
குயில்	கருங்குயினாதன்பேட்டை; கருநாமம்பேட்டை; மாயூரம்.

குரங்கு	தென்குரங்காடுதுறை, வடகுரங்காடுதுறை, வாலிகொண்டபுரம், குரங்கணில் முட்டம்; குரக்குத் தளி, சுபிஸ்தலம் முதலியன.
முசு	திருவாரூர்
வாலி	வாலீசுவரம்; இது கருவூர்க்கும், முக்கூடற்கும் அருகு.
நாய்	திருப்பராய்த்துறை
செந்நாய்	—
கரும்பூனை	கருநாதம்பேட்டை.
பூனை	சிக்கல்
நாவி	கேதாரம்.
கருங்குரங்கு	—
ஒந்தி	—
மூஞ்சூறு; எலி	வேதாரணியம்,
எலி	அரித்துவாரமங்கலம்.
பன்றி	அரித்துவார மங்கலம்
காரெலி	—
பெருச்சாளி	—
அணில்	கிட்கிந்தை, குரங்கணில் முட்டம், கொல்லிமலை.
உடும்பு	—
முயல்	திருப்பாதிரிப்புலியூர்.
பாம்பு	சுப்பிரமணியம், காளத்தி.
சாரைப்பாம்பு	திருக்களாஞ்சேரி
மண்டலிப்பாம்பு	—
கண்குத்திப்பாம்பு	—
பெரும் பாம்பு	கேதாரத்திற்கு அருகேயுள்ள மலயேசுவரம்.
நாகம்	—
பூசித்த பட்சி	ஸ்தலம்
பெட்டைப்பருந்து	வேளூர், தேதியூர்.
அன்னம்	அம்பர்
மயில்	மாயூரம், மயிலாப்பூர், திருமயிலாடி.
சாதகப் புள்	திருவஞ்சிக் களம்
எண்காற்புள்	திருபுவனம், தாராசுரம்

சக்கரவாகம்	சக்கரப்பள்ளி
கழுகு	திருக்கழுக் குன்றம்
பருந்து	—
அசுணம்	—
கிளி	கீரனூர்; இதிற் கிளி வடிவ முண்டு. கிளியனூர்.
கருங்கிளி	—
சகோரம்	நிலாமுகி, வலியான், தவிட்டுக் குருவி, காடை என்னும் பறவைகள் பூசித்த ஸ்தலம்.
குருவி	திருப்பள்ளியின் முக்கூடல் ராமேசுவரம்.
நிலாமுகி	சகோரம்—திருப்பள்ளியின் முக்கூடல்.
குக்கில்	—
குயில்	கருங்குயினாதர் கோயில்
கோட்டான்	—
நாகணவாய்ப்புள்	—
வலியான்	மதுரை
காரிப்பிள்ளை	—
கரிக்குருவி	—
சிச்சிலி	—
கூகை	—
கோழி	திருச்செந்தூர்க்கு அருகேயுள்ள ஐந்தூர்.
ஊர்க்குருவி	—
பூழ்	—
காட்டுக்கோழி	—
வானம் பாடி	—
காடை	—
சிவல்	—
கவுதாரி	—
பகண்டை	—
பொய்யாப்புள்	—
காக்கை	சிதம்பரம், அம்பர்மாகாளம் இடைமருதூர், குரங்கணில் முட்டம்.

ஆந்தை	—
கரும்புறா	—
மாடப்புறா	வல்லமுதல் மூன்று ஸ்தலம்.
உள்ளான்	—
தூக்கணங்குருவி	—
சம்பங்கோழி	—
அன்றில்	—
நாரை	திருநாரையூர், செங்காட்டங்குடி; மதுரை.
பெருநாரை	—
கருநாரை	—
வெள்ளைநாரை	—
நீர்க்காக்கை	—
கொக்கு	செங்காடு.
வண்டு	திருவண்டுதுறை; வாஞ்சியத்திற்கு அருகேயுள்ள சிறுவண்டூர், நல்லூர்.
துருஞ்சில்	—
வாவல்	புகலூர், ராமநந்தீசுவரம்; ஏனங்குடிக்கு அருகே வெளவாலடியென்று ஓரிடமுண்டு.
இந்திர கோபம்	—
தேனீ	ஈங்கோய்மலை, நன்னிலம், கந்தங்குடி.
தேன்வண்டு	திருக்கொண்டீசுவரம், கந்தங்குடி.
சிள்வீடு	—
குளவி	கோளிலி
விட்டில்	—
நுளம்பு	—
மின்மினி	—
கொதுகு	—
மகரமீன்	நாகூர்

ஐந்துக்களும் தலங்களும்

சங்கு	காசி

ஆமை	கச்சிக்கச்சபேசம், திருக்கச்சூர்.
பல்லி	—
சிலம்பி	திருவானைக்கா, காளத்தி.
எறும்பு	எறும்பீசுவரம்.
நாங்கூழ்	—
செல்	ஆரூர்
தேள்	—
நண்டு	திருந்துதேவன்குடி, நீடூர்.
உளு	—
தவளை	தப்பளாம் புலியூர்.
புழு	—
உலண்டு	—

காமதேனு: பட்டீச்சுரம், திருவீழிமிழலை, முதலான 16 ஸ்தலங்கள்.

யானையும் ஆடும்: திருவாடானை.

காட்டுக்காளை: காளையார் கோவில்.

மான்: காளத்தி முதலான பலதலங்கள்.

கரடி: திருக் குற்றாலம் முதலிய பல தலங்கள்.

யாளி: திருக்களாஞ்சேரி, சாத்தனூரில் சாஸ்தா. மாதுளைப் பூ பூஜை பண்ணினது அந்த ஸ்தலம்.

விருக்ஷம்: மாதுளை, வாழை.

பக்ஷிகள் பூஜை பண்ணின ஸ்தலங்கள்:

ஆந்தை: ஆந்தைக்குடி.

புறா: வைகல் மாடம்

வலியன், கொக்கு: திருவாலவாய்

மூஞ்சூறு: வேதாரண்யம், கிளி கீரனூர், கிளியூர் கிளிமங்கலம், கிள்ளுகுடி.

குருவிகள் 32-ம் சேர்ந்து பூஜைபண்ணினது:

குருவி, இராமேச்சுரம், திருப்பள்ளியின்முக்கூடல்.

பன்றி: சிறுபன்னியூர்

எருமை : மைசூர் (மகிஷூர்), கிடாமங்கலம்.

ஜவ்வாது: புனுகு.

சமரி கஸ்தூரி: இவைகள் அத்யாபி பின் 6 மாசம் கேதாரம்.

லிங்கத்தைப்பூஜை பண்ணிக்கொண்டிருக்கின்றவை:

மரு, மருக் கொழுந்து, வெட்டிவேர்,
வனத்தின் கீழ் அங்கேலிங்கம்,
ஓணான், பச்சோந்தி: உடுப்பி.
பல்லி: சிதம்பரம், திருமூலஸ்தானம்.
புழு, சிலந்தி, எட்டுக்கால்பூச்சி: ஜம்புகேச்வரம், காளஹஸ்தி
எறும்பு: திருவெறும்பியூர்.
ஈக்கள்: ஈங்கோட்டுமலை. (ஈங்கோய்மலை)
(திருணத்ஜோதி, மக்ஷிகாசலம், ரத்னகிரிக்கு எதிரே)
வண்டு: சிறுவண்டுதுறை, நல்லூர்.
மீன், முதலை: திருமுல்லை வாசல்.
கறையான்: திருவாரூர்.
பாம்பு: திருநாகேச்வரம், திருப்பாம்பூர் திருக்களாஞ்சேரி,
சுப்ரமணியம். திருவாலம்புழை.
வேடர்: காளஹஸ்தி.
தென்னை: திருத்தெங்கூர் முதலியன.
வாழை: தேவூர்.
மா: காஞ்சி, மாயூரம், திருமாந்துறை.
அரசு: திருவாவடுதுறை, திருமாந்துறை, திருநல்லம்.
பலாசு: கஞ்சனூர், தலைஞாயிறு, ஆச்சாபுரம்.
அத்தி: திருமங்கலக்குடி, திருவன்னியூர்.
ஆல்: திருவெண்காடு (வட திருவாலங்காடு, தென் திருவாலங்
காடு : திருவலஞ்சுழி)
வன்னி: விருத்தாசலம், பெருவேளூர். முதலிய அனேகம்.
கடம்பு: திருவாலவாய்கடம்பர் கோவில் முதலிய அனேகம்.
மருது: திருவிடைமருதூர், திருமாகாளம்.
சந்தனம்: ஸ்ரீ வாஞ்சியம்.
தேவதாரு: பெருஞ்சேரி, வழுவூர்.
அகில்: திருக்காறாயில்.
நெல்லி: திருநெல்லிக்கா.
மூங்கில்: சீகாழி, திருநெல்வேலி, திருப்பாசூர்,
பலா: திருவீழிமிழலை.
புங்கமரம்: திருப்புன்கூர்.
வாகை: திருவாளெளி புற்றூர்.
வேம்பு: வைத்தீசுவரன் கோயில், நெட்டிலிங்கை. மத்தியார்ச்
சுனத்தை சேர்ந்த மருத்துவக்குடி. கடம்பும் உண்டு.

கொடை: கொடையூர், பெரும் பள்ளம்.
புன்னை: திருப்புகலூர், அம்பல்.
இலுப்பை: இலுப்பைப்பட்டு, நன்னிலம் கீழகரம்.
புளி: கேகரை.
கோங்கு: கைச்சின்னம்.

சிவப்புப்பாதிரி: —
இலந்தை: கீழ்வேளூர், இலந்துறை.
பஞ்சபில்வம்; உத்தரகோசமங்கை, திருநீலக்குடி.
சண்பகம்: திரு நாகேசுவரம், கும்பகோணம்.
மகிழமரம்: திருவாமாத்தூர்; திருவொற்றியூர்.
மந்தாரை: திலதைப்பதி, திருமீயச்சூர்.
எருக்கு: தூத்துக்குடி, பிரமலிங்கம்.
கடுக்காய்: குறுக்கை.
பாரிஜாதம்: நீடூர், ஆனந்த தாண்டவபுரம். குற்றாலை—குற்றாலம்.
பூவரசு: கொல்லிமலை, கரூர், திருவெண்காடு, ஆக்கூர்.
விருக்ஷி—கடவூர், கடவூர்மயானம்.
பூக்கள்ளிமரம்: திருத்துறைப்பூண்டி, பரமோடு,
சதுரக்கள்ளி: கடுவெளி.
திருக் கள்ளியும் கொடிக் கள்ளியுமுள்பட கள்ளிமோடு,
வேதாரணிய ஸமீபம்.
மருதாணி: நாகூர், நாகப்பட்டினம்.
பாக்குகோஷம்: கோயம்புத்தூருக்குச் சமீபம், பேரையூர்.
பஞ்சநாரங்கம்: ஒடத்துறை, ராமனாதபுரம் திருப்பூவணம், பூவனூர்.
பூந்தோட்டம்: பூங்குளம், வேதாரணியம், வில்வாரண்யம், அகண்டவில்வாரணியம். காளஹஸ்தி.
விற்குடி: பிருந்தாவனம்-துளசி வனம்.
பனை—திருப்பனையூர், திருப்பனந்தாள்.
ஈச்சை—ஈச்சங்குடி.
நாகமரம்: ஐம்பு கேசுவரம்.
நுணா: கூந்தலூர், ருத்திரகாசம், நேப்பாளம், அச்சுதமங்கலம், திருத்தலையூர்.
செங்கரும்பு: கொள்ளிடக் கரையோரம், இக்ஷீவனேசுவரம்.
கோவில் வெண்ணி, உறையூர்.
நாணல்: திருநள்ளாறு.
குசம்: பெஞ்சியூர்.
மட்டி: குங்கிலியம்.
சாம்பிராணி: திருக்குற்றாலம், பாபவிநாசம், சிவசைலம்.

பெருங்காயம்: ஹிமவத்பர்வதம்.
இவ்விருக்ஷத்தின் கீழ் சிவலிங்கமிருக்கிறது.
விளாமிச்சை: விளநகர். மாயூரத்துக்குக்கிழக்கு.
பூளைச்செடி: ஆலங்குடி. ஹரித்துவார மங்கலம் ஸமீபம்.
அன்னமேலிங்கமாயிருக்கிறதலம் திருச்சோற்றுத்துறை—தாழை—தாழமங்கை—சாயாவனம்.

அநுபந்தம் : 7

திருப்பதிகக் கோவை

தேவார விவரம்

1. சேடர்மலி வளர்காழிக் கவுணியர்தா முலகிற்
நிகழ்வுறுத்த திருத்தோணிச் சிவனார் பங்கிற்
பீடுடைய வுமை முலைப்பா லருளா லுண்டு
பிஞ்ஞகனைச் சிவன்விடைமேற் பெருகக் கண்டு
தோடுடைய செவியன்முதற் கல்லா ரென்னுந்
தொடர்முடிவாய்ப் பரசமயத் தொகைகள் மாளப்
பாடினரப் பதிகங்கள் பாவி லொன்றாய்
பதினாறா யிரமென்று பகரு மன்றே.

2. திருநாவுக் கரையரெனுஞ் செம்மையாளர்
தீயமணர் சிறைநீங்கித் திருவதிகை யருளுங்
குருநாமப் பரஞ்சுடராற் சூலை நீக்கிக்
கூற்றா யினவெடுத்துக் கோதிலென்னு முடிவாய்
ஒருமானைத் தரித்தானை யொருவனையு மல்லா
லுணராதென் றவர்நாற்பத் தொன்பதினா யிரமாம்
பெருநாமத் திருப்பதிக மருளியவர் புகலூர்
பிஞ்ஞகனா ரடியடையப் பெற்று ளாரே.

3. பின்புசில நாளின்கண் வன்றொண்டப் பெருமான்
பிறங்குதிரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தாவென்
றெடுத்தே
இன்பமுறத் திருப்பதிகந் தானெனையீறாக
வெடுத்ததொகை முப்பத்தே ழாயிரமா யிசைப்பார்
முன்பவன்றன் கவிநொடித்தான் மலையைச் சேர்ந்து
முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர் தன்னில்
அன்பர்கை யிலச்சினையாய் வைத்து மன்னர்
ஆராய்ந்து தருகவென வருளிச் செய்தார்.

4. நண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகம்
நவிலுமுந்நூற் றெண்பத்து நான்குமுறை மூன்று
பண்புற்ற நாவரசர் பதிகம்முந்நூற்றுப்
பனிரண்டு முறைமூன்று பரவு மிப்பால்
வன்புற்ற வன்றொண்டர் பாடல்முறையே ழாகும்
வளர்பதிகம் நூற்றொன்று வருமுறையே ழாகும்.
எண்புற்ற மூவர்களு முரைசெய்யும் பதிக
மெழுநூற்றுத் தொண்ணூற்றேழென் றெவரும் பகர்வர்.

5. பன்னுசிவ தலமொருநூற் றைம்பதிற்று மூன்று
பதிகமொன்று நாற்பத்தொன் பதிற்பதிக மிரண்டாம்
உன்னுமிரு பதிற்றெட்டு நகர்பதிகம் மூன்றாம்
ஒருபதிற்றோர் தலம்பதிக மொருநான்கென்றுணர்க
மன்னுமிரு நான்குதல மோரைந்தே பதிகம்
மற்றுமைந்து தலங்களுக்கு வரும்பதிக மாறாம்
பின்னுமைந்து தலங்களுக்குப் பெறும்பதிக மேழாம்
பெயர்த்துமொரு நான்குதலம் பெறும்பதிகமெட்டே.

6. பரவுமொரு நான்குதலம் பதினொன்றாம் பதிகம்
பன்னுமிரு தலம்பதிகம் பன்னிரண்டாய்ப் பகரும்
உரைசெயிரு தலம்பதிகம் பதினெட்டா மிப்பா
லொருமூன்று தலங்களுக்கு முறுபதிக முரைக்கில்
நிரவிவரு மறுநான்கு முப்பத்து நான்கும்
நீடெழுபத் தொன்றுமென நிரனிறையாமாகக்
கருதுசிவ தலமிருநூற்றெழுபத்து நான்காம்.
கடைகாப்பு மெழுநூற்று நாற்பத்தொன்பானே.

7. திருஞான சம்பந்த ரருளிச் செய்த
திருப்பதிகம் பொதுவகையா லோரே ழாகும்.
அருநாவுக் கரையர்பிரான் முப்பத்தே
ழாகுமா சூர்நம்பி யொருநான்காமாக
வருஞானப்பொதுப்பதிகம் நாற்பத்தெட்டாகும்
மற்றுமிந்தப் பதிகமொடு மறைந்தே மூவர்
இருநாவின் மொழிந்த திருப்பதிகம் யாவு
மெண்ணியிடி லெழுநூற்றுத் தொண்ணூற்றே மெனவே.

8. திருப்பழுவூர் சேய்ஞலூர் திருமுல்லை வாயில்
திருவைகா கொடிமாடச் செங்குன்றூர் வியலூர்
கருக்குடிதெங் கூர்பனந்தாள் கலிக்காமூர் தலைச்செங்
காடுமயேந் திரப்பள்ளி கச்சினங்கன் றாப்பூர்

குரக்குக்கா பெரும்புலியூர் திருக்காட்டுப்பள்ளி
குடந்தைக்கீழ்க் கோட்டமொடு குடந்தைக்காரோணம்
எருக்கத்தம் புலியூர்வெண் டுறைகண்ணார்கோயில்
இலம்பையங்கோட் டூர்சிக்கல் ராமநந்தீச் சுரமே.

9. பள்ளியின்முக் கூடல்திரு விரும்பூளை யாவூர்ப்
பசுபதீச் சுரம்பாலைத் துறைபருதி நியமம்
கள்ளில்குரங் கணின் முட்டந் திருமுருகன் பூண்டி
கஞ்சனூர் கச்சிநெறிக் காரைக்கா டோத்தூர்
புள்ளமங்கை நாட்டியத்தான் குடிகலைய நல்லூர்
புக்கொளியூ ரவிநாசி பூவனூர் துறையூர்
கொள்ளிக்கா டிடைச்சுரமச் சிறுபாக்கம் விளமர்
கொட்டையூர் கொடுங்குன்றங் கூடலையாற்றூரே.

10. நெல்வேலி திருவழுந்தூர் தருமபுரம் பயற்றூர்
நெடுங்களம் வக்கரை யிரும்பைமா காளம்வடுகூர்
நெல்வெண்ணெய் வடகரைமாந் துறைதிருவிற் கோலம்
நீடூர்ச் கரப்பள்ளி யகத்தியான் பள்ளி
நெல்வாயில் பேணுபெருந் துறைநாலூர் மயானம்
நெல்லிக் காவிற்குடிவீ ரட்ட மதிமுத்தம்
வல்லமறை யணிநல்லூர் தலையாலங் காடு
வாட்போக்கி திருநாவ லூர்மயிலாப் பூரே.

11. திருவாரூர்ப் பரவையுண்மண் டளி சாத்தமங்கை
சிற்றேமந் தெளிச்சேரி திருவுசாத் தானம்
கரவீரம் திருவாலம் பொழில்வெண்ணெய் நல்லூர்
கச்சியனேக தங்காவ தங்கோடிக் குழகர்
அரசிலிதென் குடித்திட்டை வடமுல்லைவாயில்
அம்பர்ப்பெருந் திருக்கோயில் வெண்பாக்கஞ் சுழியல்
பெருமணமிந் திரநீலப் பருப்பதம் வேற்காடு
பேரெயில்பாற் றுறைமூக்கீச் சுரமுண்டீச் சுரமே.

12. பறியலூர் வீரட்டங் கானாட்டு முள்ளூர்
பாதாளீச் சுரமெதிர்கொள் பாடிவலி தாயம்
சிறுகுடிகச் சூராலக் கோயில் கொள்ளம் பூதூர்
திருப்புறவார் பனங்காட்டூர் விளநகர்தண்டலைநீள்
நெறியரதைப் பெரும்பாழி யூறல்கரு வூரா
னிலையிடும்பா வனங்கடுவாய்க் கரைப்புத்தூர் கடம்பந்
துறைதிருவே டகந்திருவஞ் சைக்களமா டானை
சோபுரங்கா றாயில்வட குரங்காடு துறையே.

13. திருமாணி குழிவேட்டக் குடிதிருவாப்பாடி
திருந்துதே வன்குடிமா கறல்சத்தி முத்தம்
திருவாப்ப னூர்மீயச் சூரவ்வூர் தன்னிற்
றிகழ்ந்த திரு விளங்கோயில் வெஞ்சமாக் கூடல்
திருநீலக் குடிமண்ணிப் படிக்கரை நன்னிலத்துப்
பெருங்கோயில் திருநண்ணா திருப்பட்டீச் சுரமே
திருவீங்கோய் மலைவன்பார்த் தான்பனங்காட்டூரே
திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்பாம் புரமே.

14. கடைமுடியே ஓணகாந் தன்றளிகோட் டூர்வை
கன்மாடக் கோயிலிடை யாறுபழையாற்று
வடதளிநற் றினைநகரங் கோணமா மலைசீர்
வன்னியூர் கருவிலிய னேகதங்காவதம்நல்
இடைமருவு கடிக்குளந் திருக்களரென் றிவைகட்(கு)
இரும்பதிக மொவ்வென்றென்றிசைத்திடுக விப்பாற்
குடவாயில் புனவாயில் தூங்கானை மாடம்
கோழம்ப மவளிவணல் லூர்கோலக் காவே.

15. குருகாவூர் திருவேள்விக் குடிவிசைய மங்கை
குற்றாலங் குடமூக்கு கோட்டாறு பனையூர்
தருகாவூர் குரங்காடு துறையோமாம் புலியூர்
கண்டியூர் வேதிகுடி கானூர்கோ கரணம்
திருவாரூ ரரன்நெறிபந் தணைநல்லூர் நல்லம்
திருக்கொண்டீச் சுரந்தேவூர் திருச் சிராப்பள்ளி
பெருவேளூர் கீழ்வேளூ ரெறும்பியூர் கானப்
பேர்திருமங் கலக்குடியாக் கூர்கோவ லூரே.

16. திருப்பரங்குன் றந்திருப்பா திரிப்புலியூர் குறுக்கை
திருப்புத்தூர் மணஞ்சேரி பாச்சிலாச் சிராமம்
கருப்பறிய லூர்திருக்கே தீச்சுரங்கே தாரம்
கச்சிமேற் றளிதிருமே லைக்காட்டுப் பள்ளி
அருத்தியுறும் பட்டினத்துப் பல்லவனீச்சுரம்பே
ரன்பிலா லந்துறை பராய்த்துறைவேட் களமிங்(கு)
உரைத்ததிரு வன்னியூரிவ் விரண்டா மிப்பா
லுள்ளதலந் திருக்கடவூர் மயானம்வாஞ் சியமே.

17. துருத்தி திரு நனிபள்ளி திருமருகல் திருப்பூந்
துருத்திபுறம் பயங்கட்டம்பூர் புள்ளிருக்கு வேளூர்
அரத்துறைவா ளொளிபுற்றூர் வான்மியூர் பாசூர்
அம்பர்மா காளம்மயி லாடுதுறை வாய்மூர்

திருக்கழுக்குன்றம் பாண்டிக் கொடுமுடி ராமேசம்
செங்காட்டங் குடிவெண்ணி திருச்செம்பொன்பள்ளி
பருப்பதம்புன் கூர்அரிசிற் கரைப்புத்தூர் செந்நெற்
பைஞ்ஞீலி கற்குடிமா மலைப்பதிக மூன்றே

18. வலம்புரமா லங்காடு சிவபுரங்காளத்தி
வலிவலஞ்சாய்க் காடுதிருக் கோடிகா நகரம்
நலந்திகழும் பூவணம்கோ ளிலிநின்றியூரும்
நறையூர்ச்சித் தீச்சுரமும்நான்காகும் பதிகம்
வலஞ்சுழிநல் லூர்பழன மாமாத்தூ ரண்ணா
மலைகடவூ ரின்னம்பர் நாரையூ ரைந்தாம்
திலந்திகழு நாகேச்சுரம்மாற்பேறு மழபாடி
நெய்த்தானம் வெண்காடு நீள்பதிக மாறே.

19. கயிலாய மானைக்கா நள்ளாறு நாகைக்
காரோணந் திருச்சோற்றுத் துறையேழு புகலூர்
வயலாருங் கழிப்பாலை யொற்றியூர் திருவா
வடுதுறையெட் டாந்தில்லை மறைக்காடு மதுரை
இயலாரு முதுகுன்றம் பதினொன்று கச்சி
யேகம்ப மிடை மருதீ ராறையாறதிகை
அயலீரொன் பான்வீழி யாரூர்சீ காழி
யாறுநான்கு முப்பானான் கெழுபத் தொன்றாமே.

தேவார விளக்கம்

1. திருவூறல் விளநகர்நெல் வேலிவலி தாயம்
சேய்ஞலூர் கொடிமாடச் செங்குன்றூர் வியலூர்
கருவூர்பாற் றுறைமூக்கீச் சரங்கள்ளில் கொள்ளிக்
காடுகச்சி நெறிக்காரைக் காடுவேற் காடு.
திருவாலூர்ப் பசுபதீச் சரங்காட்டுப் பள்ளி
சிக்கல்சக் கரப்பள்ளி யகத்தியான் பள்ளி
கரவீரம் நெல்வாயில் வல்லம்முல்லை வாயில்
காறாயில் கொடுங்குன்றம் நெடுங்களம்வக் கரையே

2. அறையணிநல் லூர்பழூர் மீயச்சூர் தேங்கூர்
ஆப்பனூர் கலிக்காமூர் மயிலாப்பூ ரழுந்தூர்
பறியலூர் பெரும்புலியூ ரெருக்கத்தம் புலியூர்
பாம்புரஞ்சோ புரந்தரும புரமோத்தூர் பனந்தான்
சிறுகுடிவிற் குடிவீரட் டம்நண்ணா திருந்து
தேவன்குடி கருக்குடி வேட்டகுடிசிற் றேமம்
புறவார்பனங் காடு நெல்லிக் காவைகா
புள்ளமங்கை சாத்தமங்கை கொள்ளம்பூ தூரே.

3. பருதிநிய மந்தலைச்சங் காடிந்திர நீலப்
பருப்பதங்கண் ணார்கோயி லரதைப்பெரும்பாழி
பெருமணமச் சிறுபாக்கங்கைச் சின்னமம்பர்ப்
பெருந்திருக் கோயில்பேணு பெருந்துறை வெண்டுறை
ழயோ(டு)
அரசிலிதென் குடித்திட்டை களர்வடுகூர் கோட்டூர்
அனேகதங்கா பதம்விளம ரேடகமா டானை
திருவிரும்பை மாகாளங் குடந்தைக்கா ரோணம்
தெளிச்சேரி மதிமுத்த மிராமனதீச் சரமே.

4. வடகரைமாந் துறையிடும்பா வனமுசாத்தானம்
மாணிகுழி கோணமா மலையீங்கோய் மலையே
கடைமுடிபட் டீச்சுரம்விற் கோலம்மா கறல்வை
கன்மாடக் கோயில்மயேந் திரப்பள்ளி நெல்வெண்ணெய்
வடகரைநற் குரங்காடு துறைபுபகலூர் வர்த்த
மானீச்சரம்நாலூர் மயானமிரும் பூளை
நெடிய குரங் கணின்முட்ட மிடைச்சுரந்தண் டலைநீள்
நெறியிலம்பை யங்கோட்டூர் பாதாளீச் சரமே.

5. கோலக்கா கடிக்குள மிவைக்குப் பிள்ளையார் கூறும்
கோமளமெய்ப் பதிகங்க ளொவ்வோன்றே பயற்றூர்
பாலைத்துறை கடம்பந்துறை பள்ளியின்முக் கூடல்
பழையாறை வடதளிமுண் டீச்சரம்வாட் போக்கி
நீலக்குடி மீயச்சூ ரிளங்கோயில் வன்னியூர்
நிகழ்கடுவாய்க் கரைப்புத்தூர் பேரெயில் கன்றாப்பூர்
ஆலம்பொழில் கொட்டையூர் குடந்தைக்கீழ்க் கோட்டம்
ஆப்பாடி குரக்குக்கா தலையாலங் காடே.

6. கருவிலி கஞ்சனூர் பூவனூர் மேலா...
கருதுசத்தி முற்றமிவை கட்குநா வரசர்
உரைசெய்தருள் திருப்பதிகமொவ் வொன்றே சுழியல்
ஓணகாந் தன்றளிக் சூரலாக் கோயில்
பரவையுண் மண் டளிகச்சி யனேகதங்கா பதம்வெண்
பாக்கம்பார்த் தான்பனங்காட்டூர்துறையூர் நீடூர்
திருமுருகன் பூண்டியஞ்சைக் களங்கலைய நல்லூர்
தினைநகர்நன் னிலத்துப்பெருங் கோயிலிடையாறே.

7. வெண்ணெய்நல்லூர் நாட்டியத்தான் குடிகோடிக் குழகர்
வெஞ்சமாக் கூடல்திருக் கானாட்டு முள்ளூர்
மண்ணிப்படிக் கரையெதிர்கொள் பாடிவட முல்லை
வாயில்திருக் கூடலையாற்றூர்நாவ லூரோ(டு)

உண்மையரு ளவிநாசி யிவைக்கூரர் பதிகம்
ஒவ்வொன்றே யிரண்டுபெற்ற பதியுரைக்கில் தேவூர்
வண்மையுள்ள பல்லவனீச்சரந்திருக்கோட் டாறு
வளர்குற்றா லங்குடவா யிற்பதிக்கு மன்னோ,

8. பிள்ளையா ரருள்பதிக மிவ்விரண்டே யிப்பாற்
பெரியவா சூரிலர னெறிகொண்டீச் சரத்தோ(டு)
உள்ளெறும்பி யூர்குறுக்கைக் கிவ்விரண்டே பதிகம்
உரைத்தனர் நா வுக்கரசர் தாம்ஓ மாம் புலியூர்
தெள்ளியகோ ழம்பம் மணஞ் சேரிநல்ல மாக்கூர்
சிராப்பள்ளி பெருவேளூர் கீழ்வேளூர் கானூர்
வெள்ளைவிடை யோன்விசைய மங்கைதிருப் புத்தூர்
விளங்கியமே லைக்காட்டுப் பள்ளிகுட மூக்கே.

9. திருவேதி குடிபராய்த் துறைகோவ லூர்பா
திரிப்புலியூ ரவளிவணல் லூர்பந்தணைநல்லூர்
கருகாவூ ரன்பிலாலந்துறைகோ கரணம்
கண்டியூர் தூங்கானை மாடம்வேட் களமே
அரியகுரங் காடுதுறை திருமங்கலக்குடியோ
டன்னியூ ரிவைக்குச்சம் பந்தர்நா வரசர்
உரைசெய்தருள் பதிகமொவ் வொன்று கருப்பறிய
லூர்கானப் பேர்வேள்விக் குடிகுருகா வூரே.

10. பனையூர்கே தாரம் பரங் குன்றங்கோ லக்கா
பாச்சிலாச்சி ராமங்கே தீச்சர மணியும்
புனவாயி லிவைக்குச்சம் பந்த ராரூரர்
புகல்பதிக மொவ் வென்றே கச்சிமேற் றளிக்கு
முனமரச ராரூரர் பதிகமொவ் வொன்று
மொழிந்தனரிப் பால்மூன்று பெறும் பதிகமொழியின்
நினைவரிய அம்பர்மா காளம்பூந் துருத்தி
நீர்நிறைசம் பந்தரப்பர் நிகழ்த்தினர்மும் மூன்றே.

11. மருகன்மயி லாடுதுறை திருவிரா மேச்சுரம்
வான்மியூர் செங்காட்டங் குடிவளரைந் திற்கு
முருகுபந்தரீரண்டரச ரொன்று திருப் பதிகம்
உரைத்தனர்பா சூர்கடம்பூர் புள்ளிருக்கு வேளூர்
திருவாய்மூர் வெண்ணிசெம்பொன் பள்ளிதிருச் சேறை
திகழுமே ழினுக்குப்பந்த ரொன்ற ரசரிரண்டே
பொருவில்வா ளொளிபுற் றுக்குச்சம் பந்தர்
புகன்றதிரண் டுரொன்று புறம்பயம் வாஞ்சியமே.

12. அரத்துறைபுன் கூர்பாண்டிக் கொடுமுடிபைஞ்ஞீலி
அரிசிற்கரைப் புத்தூர்நற் கடவூரின் மயானம்
துருத்திதிரு நனிபள்ளி கற்குடிமா மலைதான்
சுருதிகள் தோத்திரஞ் செய்யும் துகளில்கமழ்க் குன்றம்
பருப்பதம்பன் மூன்றினுக்கு மூவருமொவ் வொன்று
பகர்ந்தனரிப் பனாளகார் பதிமுதலாம் பதியிற்
திருத்திகழ்மூ வர்கள் பதிகம் முறையேயெண் ணிடுவன்
சிவனடியா ரடிபரவித் தெரிந்தறிந்த வாறே.

13. வலம்புரங்கோ ளிலியாலங் காடொன்றிரண் டொன்றே
வலிவலங்கா ளத்திபூ வணமிரண்டுடன் றொன்றாம்
இலங்கு சாய்க் காடதற்கு ஞானசம் பந்தன்
அரிய நாவுக்கரைய ரருள்தமிழிரண் டிரண்டே
வலங்கொள்நின் றி யூர்க்கொன் றிரண்டுசிவ புரமாம்
வளநகர்க்குப் பிள்ளையார் மூன்றரச ரொன்றே
நலங்கிளருங் கோடிகா நகரினுக்கவ் விருவர்
நவின்றதொன்று மூன்றாக நற்பதிகந் தானே.

14. நறையூர்ச்சித் தீச்சரஞ்சம் பந்தர்மூன்றூரன்
நவின்றதொன்று வலஞ்சுழி நல்லூர்நாரை யூர்க்குக்
குறைவிலாச் சம்பந்தர் மூன்றரச ரொன்றே
கூறிய இன்னம்பருக்கங் கவர்களொன்று நான்காம்
அறையண்ணா மலைநகர்க்கு மவ்விருவர்தாமே
அருள்செய்த விரண்டுமூன் றாகுமருளாரும்
இறையுறையு மாமத்தூர்க் கிரண்டிரண்டொன் றாகும்
எழிற்கடவூ ரதனுக்கொன் றியன் மூன்றொன்றாமே.

15. மழபாடி வெண்காடு மூன்றிரண்டொன் றாகும்
மன்னுநா கேச்சத்துக் கிரண்டுமூன் றொன்றே
பழனம்நெய்த்தானமொன் றைந்து பந்தர்
பலர்பகர்மாற் பேறதகறவாகளி ரண்டு நான்காகும்
மொழி சோற்றுத் துறைக்கொன்று நான்கொன்றானைக்கா
மூன்று மூன் றொன்றுநள் ளாறு நான் கிரண்டொன்(று)
அழகாருங் கயிலாயமிரண்டு நான்கொன்றாம்
அணிநாகைக் கிரண்டுநான் கிரண்டாக வறையே.

16. முதுபுகலூர் கழிப்பாலைக் கிரண்டஞ்சொன் றொததி
முதற்பதியா வடுதுறைக்கொன்றஞ்சிரண்டெல்லோர்க்கும்
கதியளிக்குந் தில்லைநான் கிரண்டெட்டொன்றாகும்
கடியிலரு மறைக்காட்டுக் கஞ்சொன்றோ.....

முதுகுன்றுக் கேழொன்று மூன்றுமது ரைக்கும்
மொழிப் பந்த ரொண்பத்தப் பரிரண்டேகம்பத்துக்(கு)
அதிகமா நான்கேழொன்றிடை மருதாறஞ்சொன்
றையாற்றுக் கஞ்சுபன் னிரண்டொன்றா மறையே.

17. வாழதிகைக் கொன்றுபதி னாறுடனொன்றாகும்
வளர்வீழிக் கொருபதினைந் தெட்டொன்றாரூர்க்குத்
தாழ்வில்லா வைந்திருபத் தொன்றுடனெட் டழகே
தருகாழிக் கறுபத்தேழ் மூன்றொன்றே தரங்க
ஆர்கலிசூழ் பதிகளிரு நூற்றெழுபா னான்குக்
கருள்பதிக மெழுநூற்று நாற்பத்தொன்பானோ(டு)
ஏழ்முப்பத் தேனான்கு பொதுப் பதிக மாக
எழுநூற்றுத் தொண்ணூற்றே ழிசைப்பதிகந்தானே.

சோடச உபசார வெண்பா

மாசிலுப சாரங்கள் மஞ்சனம்பூக் கந்தமணி
நேசவனந் தூபமொழி நீறதன்பின்—தூசடைக்காய்
ஆடைகுடை கவரி ஆடலிசை. வாச்சியங்கள்
நீடுபதி னாறாய் நினை.

திருப்பதிக்கோவை

(சுவடி எண் 664)

1. திருவளருந் தில்லைநகர் வேட்களம்நெல் வாயில்
திருந்துகழிப் பாலைநல்லூர்ப் பெருமணந்திக் கெல்லாம்
பரவுமயேந்திரப்பள்ளி பொன்னிவட கரைமேல்
பயில்முல்லை வாயில்கலிக் காமூசாய்க்காடு
கருதுதிருப் பட்டினத்துப் பல்லவனீச் சரம்வெண்
காடுகடற் கரைக்காட்டுப் பள்ளிகுரு காவூர்
பிரமபுரம் கோலக்காப் புள்ளிருக்கு வேளூர்
பிறங்கு கண்ணார் கோயில்கடை முடிநின்றி யூரே.

2. விருப்புறுபுன் கூர்நீடூர் வன்னியூர் வேள்விக்
குடிஎதிர்கொள் பாடிமணஞ் சேரியியன் குறுக்கை
கருப்பறியல் குரக்குக்கா வாழ்கொளிபுத் தூர்முக்
கணன் மண்ணிப் படிக்கரை ஓமாம்புலியூர்கற்றோர்
உரைதிருக்கா னாட்டுமுள்ளூர் தென்னாரை...
யூர்கடம் பூர்பந்த ணைநல்லூர் கஞ்சனூர்வாழ்
திருக்கோடி காதிருமங் கலக்குடி தண் பனந்தாள்
திகழ்ந்ததிரு ஆப்பாடி திருச்சேய்ஞ லூரே.
வாழ்கொளிபுத்தூர்—வாளொளிபுற்றூர்.

(3, 4 ஆம் செய்யுட்கள் சுவடியில் இல்லை)

5. சீராருந் திருஆலம் பொழில்திருப்பூந் துருத்தி
திருக்கண்டி யூர்சோற்றுத் துறைவேதி குடிபைபங்
காரர்தென் குடித்திட்டை புள்ளமங்கை நகர்ச்சக்
கரப்பள்ளி கருகாவூர் திருப்பாலைத் துறையோ(டு)
ஏராருந் திருநல்லூர் திருஆவூர்ப் பசுபதீச்
சரந்தென் சத்திமுற்றம் எழிற்பட்டீச் சரமிப்
பாராரும் பழையாறை வடதளிசெந்தமி ழோர்
பரவுதிரு வலஞ்சுழிமால் பணிந்தகுட மூக்கே.

6. காமருபூம் பொழிற்குடந்தைக் கீழ்க்கோட்டங் குடந்தைக்
காரோணந் திருநாகேச் சரத்தோடிடை மருதூர்
மாமகிழ்தென் குரங்காடு துறைநீலக் குடிவாழ்
வைகலின்மா டக்கோயில் நல்லங்கோ ழம்பந்
தேமருமாஆ வடுதண்டு றைதுருத்தி அழுந்தூர்
செப்புமயி லாடுதுறை விளநகரெப் போதும்
நாமருவு பறியலூர் திருச்செம்பொன் பள்ளி
நனிபள்ளி வலம்புரநன் னகர்தலைச்சங் காடே

7. சிறந்தருள்ஆக் கூர்கடவூர் திருக்கடவூர் மயானந்
திருவேட்டக் குடிவளமைத் தெளிச்சேரி செசுத்தில்
அறந்தழையுந் தருமபுரம் நள்ளாறு கோட்டாறு
அம்பர்பெருந் திருக்கோயில் அம்பர்மா காளம்
நிறைந்ததிரு மீயச்சூர் திருமீயச் சூரில்
நிகழும்இளங் கோயில்தில தைப்பதிபாம் புரந்தே
வுறைந்தசிறு குடிவீழி மிழலைநகர்வன்னி
யூருயர்ந்த கருவிலிநற் பேணுபெருந்துறையே.

8. காசினியில் நறையூர்ச்சித் தீச்சரம் ஓங்(கு)அரிசிற்
கரைப்புத்தூர் சிவபுரம்அந் தண்கலைய நல்லூர்
பேசரிய கருக்குடிவாஞ் சியந்திருநன் னிலத்துப்
பெருங்கோயில் திருக்கொண்டீச் சரம்பெருகும் பனையூர்
மாசணுகா விற்குடிபூம் புகலூர்அப் புகலூர்
வர்த்தமானீச்சரத்தோ டிராமனதீச் சரமெய்த்
தேசுவளர் திருப்பயற்றூர் செங்காட்டங் குடிவண்
திருமருகல் நீலநக்கர் சாத்தமங்கைப் பதியே.

(9, 10 ஆம் செய்யுட்கள் சுவடியில் இல்லை)

11. காறாயில் கன்றாப்பூர் வலிவலங்கச் சினமென்
கருத்தகலாக் கோளிலிசங் கரர்க்கினிய வாய்மூர்
கூறுமறைக் காடுஅகத்தி யான்பள்ளி கோடிக்
குழகரிவை நூற்றிருபத் தேழுதல மாகும்
வீறான காவிரிக்குத் தென்கரைமுன் பகுத்து
விளம்புமவற் றுடன் நூற்றுத் தொண்ணூறாஞ் சேவைப்
பேறான சோணாட்டில் திருப்பதிக ளிப்பால்
பேணுபுகழ் ஈழநாட்டிற் கோணமா மலையே.

12. பாலாவிக் கரைகேதீச் சரத்தினுட னிரண்டாம்
பாண்டிவள நாடதனிற் பூவணமல்சூழ் மதுரை
மேலான ஆப்பனூர் பரங்குன்றுஏ டகமாம்
மேவுதிருக் கொடுங்குன்றம் விளங்குதிருப்புத்தூர்
சேலாரும் புனவாயில் சேது இராமீசஞ்
சிறந்ததிரு ஆடானைத் திருக்கானப் பேரோ(டு)
ஆலமுண்டோன் பூவணநன் னகர்சுழியல் திருக்குற்
றாலம்நெல் வேலிப் பதியொடவை பதினான்காமே.

13. மலைநாட்டில் திருஅஞ்சைக் களமொன்றே தலமாம்
வகுத்ததிரு அவிநாசி திருமுருகன் பூண்டி
சிலைமலையான் திருநணாத் திகழ்ந்தகொடி மாடச்
செங்குன்றூ ரெங்கள்பிரான் வெஞ்சமாக்கூடல்
நிலையானகொடுமுடியோ டியம்புகரு வூரா
னிலையிவைகொங் கேழ்நடுநாட்டரத்துறைசை
வத்தோர்
குலமாருந் தூங்கானை மாடமணி மாடக்
கூடலையாற் றூரெருக்கத் தம்புலியூர்தானே.

14. தினைநகர்சோ புரம்அதிகை நாவலூர் ஈசன்
திருமுதுகுன் றந்திருநெல் வெண்ணெய்திருக் கோவல்
இனியஅறை யணிநல்லூர் இடையாறு பெண்ணை
இருங்கரைமே லுயர்ந்ததிரு வெண்ணெய் நல்லூர்
[துறையூர்
குனிசிலைவே டனைவென்றோன் திருவடுகூர் மாணி
குழிதிருப்பா திரிப்புலியூர் திருமுண்டீச் சரம்பால்
அனையமொழி யார்புறவார் பனங்காட்டூர் திருஆ
மாத்தூர் அண்ணாமலைமூ வேழுட னொன்றாமே.

அநுபந்தம் 8 :

சுவாமி, அம்பிகையின் வடமொழித் திருநாமங்கள்:

அகத்தியான்பள்ளி:
அகஸ்தீசுவரர்—சௌந்தர்யநாயகி.

அச்சிறுபாக்கம்:
ஆட்சீசுவரர், ஸ்திரவாசபுரீசுவரர்—பாலசுகாம்பிகா.

அஞ்சைக்களம்:
மகாதேவர்—உமாதேவி (உமையம்மை).
வஞ்சிக்குளேசுவரர்—பகவதிநாயகி.

அண்ணாமலை:
அருணாசலேசுவரர்—அபீதகுசாம்பிகா.

அதிகை:
வீரட்டேசுவரர்—திரிபுரசுந்தரி, பிருகந்நாயகி.

அம்பர்ப்பெருந்திருக்கோயில்:
பிரமபுரீசுவரர்—சுகந்த குந்தளாம்பிகா.

அம்பர்மாகாளம்:
மகாகாளேசுவரர், காளகண்டேசுவரர்—பயக்ஷயநாயகி.

அரசிலி:
அஸ்வத்தேசுவரர்—பிருஹந்நாயகி.

அரதைப் பெரும்பாழி:
பாதாளேசுவரர்—அலங்காரேசுவரி.

அரிசிற்கரைப்புத்தூர்:
சொர்ணபுரீசுவரர்—சௌந்தராம்பிகா.

அவளிவணல்லூர்:
ஸாக்ஷிநாதேசுவரர்—ஸௌந்தராம்பிகா.

அவிநாசி:
அவிநாசிலிங்கேசுவரர்—கருணாம்பிகா.

அழுந்தூர்:
வேதபுரீசுவரர் மகாமடேசுவரர்—ஸௌந்தராம்பிகா.

அறையணிநல்லூர்:
அதுல்யநாதேசுவரர்—சௌந்தர்ய சுகனாம்பிகா.

அநேகதங்காபதம்:
கிருபாராஜேசுவரர், நித்ய கருணேசுவரர்—மனோன்மணி (மநோன்மனி)

அன்பிலாலந்துறை:
பிரேமபுரீசுவரர், சத்தியவாகீசுவரர்—பிரேமாம்பிகா, சௌந்தராம்பிகா.

அன்னியூர்:
ஆபத்சகாயேசுவரர், லிகுசாரண்யேசுவரர், பாண்டவேசுவரர், ரதீசுவரர்—பிருஹந்நாயகி.

ஆக்கூர்:
சுயம்புநாதேசுவரர்—கட்காரநேத்ராம்பிகா.

ஆடானை:
அஜகஜேசுவரர், ஆதிரத்னேசுவரர்—ஸ்நேகவல்லி.

ஆப்பனூர்:
அன்னவிநோதர், ரிஷபபுரேசுவரர்—அம்பிகா.

ஆப்பாடி:
தேனுபுரீசுவரர்—பிருஹந்நாயகி.

ஆமாத்தூர்:
அபிராமேசுவரர்—முக்தாம்பிகா, சௌந்தரியநாயகி.

திருவாரூர்:
அசலேசுவரர்—ஆனந்தேசுவரர்.
ஸித்தேசுவரர்—லோமநாதேசுவரர். வன்மீகேசுவரர், தியாகராஜமூர்த்தி, கமலாம்பிகா, நீலோதபலாம்பிகா.

ஆரூர் அரன்நெறி:
அகிலேசுவரர்—அகிலேசுவரி (புவனேசுவரி)

ஆரூர்ப்பரவையுண்மண்டளி:
சுத்தவாகீசுவரர்—மிருதுபாதாம்பிகா.

ஆலங்காடு (வடராணியம்; பழையனூர்):
வடாரண்யேசுவரர்—பிரமராளகாம்பிகா.

ஆலம்பொழில்:
ஆத்மநாதேசுவரர்—ஞானாம்பிகா.

ஆலவாய் (மதுரை):
கலியாணசுந்தரேசுவரர், சோமசுந்தரேசுவரர்—மீனாக்ஷி.

ஆவடுதுறை:
கோமுக்தீசுவரர், ஸ்ரீ ஸ்வயம்விபக்தேசுவரர் பூகைலாஸேசுவரர், போதிவனேசுவரர்—அதுல்ய குசாம்பிகா.

ஆவூர்:
பசுபதீசுவரர்—பங்கஜவல்லி, மங்களாம்பிகா.

ஆனாக்கா: ஜம்புகேசுவரர், பச்சாதாபேசுவரர்—அகிலாண்டேசுவரி.

இடும்பாவனம்:
ஸத்குணநாதேசுவரர்—மங்களாம்பிகா.
கல்பவனேசுவரர்—பாலசுந்தரி.

இடைச்சுரம்:
ஞானபுரீசுவரர்—கோபரத்னாம்பிகா.

இடைமருதூர்:
ஸ்ரீ ஜோதிர்மயமகாலிங்கேசுவரர்—பிருகத்சுந்தரகுசாம்பிகா.

இடையாறு:
கிருபாபுரீசுவரர், மத்தியநதீசுவரர்—ஞானாம்பிகா, சூக்ஷ்ம மத்யாம்பிகா (சிற்றிடைநாயகி).
இந்திரநீல பருப்பதம்:
நீலாசலநாதர்—நீலாம்பிகா.

இராமனதீச்சரம்:
இராமனந்தீசுவரர்—சூளிகாம்பிகா.

இராமேச்சுரம்:
இராமநாதேசுவரர், இராமலிங்கேசுவரர்—பர்வதவர்த்தனி.

இரும்பை மாகாளம்:
மகாகாளேசுவரர்—மதுரபாஷாம்பிகா, மதுரசுந்தராம்பிகா.

இலம்பையங்கோட்டூர்:
ரம்பாநாதேசுவரர், தெய்வ நாயகேசுவரர், சந்திரசேகரர்—கனக குசாம்பிகா.

இரும்பூளை:
காசிகாரண்யேசுவரர், ஆபத்ஸகாயேசுவரர்—ஏலாளகாம்பிகா.

இன்னம்பர்:
ஐராவதேசுவரர், அக்ஷரஞானேசுவரர்—இக்ஷுவாணியம்பிகா, சுகந்தகுந்தளாம்பிகா, நித்யகல்யாணி.

ஈங்கோய்மலை (மகிகாசலம்):
மரகதாசலேசுவரர்—மரகதவல்லி.
சிம்மபுரீசுவரர்—சுகந்தகுந்தளாம்பிகா.

உசாத்தானம்:
மந்திரபுரீவரர்—பிருஹந்நாயகி.

ஊறல் (தக்கோலம்):
ஜலநாதேசுவரர்—கிரிராஜகன்னிகா, மோகனவல்லி.

எதிர்கொள்பாடி:
ஐராவதேசுவரர்—சுகந்த குந்தளாம்பிகா.

எருக்கத்தம்புலியூர்:
சுவேதார்க்கவனேசுவரர்— அபிந்நகுசாம்பிகா, நீலோத்பலாம்பிகை.

எறும்பியூர்: (எறும்பீசுரம்)
பிப்பிலிகேசுவரர்—சுகுந்தகுந்தளாம்பிகா, ரத்னாம்பிகா.

ஏடகம்:
பத்திரிகாபரமேசுவரர், பத்திரிகாபுரீசுவரர்—ஏலாளகாம்பிகா, சுகந்த குந்தளாம்பிகா.

ஐயாறு:
பஞ்சநதீசுவரர், பிரணதார்த்திஹரேசுவரர்—தர்மஸம்வர்த்தனி.

ஒற்றியூர்:
ஆனந்தத்தியாகர், மாணிக்கத்தியாகர்—திரிபுரசுந்தரி.

ஒணகாந்தன்தளி:
ஓணேசுவரர், காந்தேசுவரர்—காமாக்ஷி.

ஒத்தூர்:
வேதபுரீசுவரர்—பாலகுசாம்பிகா.

ஓமாம்புலியூர்:
பிரணவபுரீசுவரர், பிரணவ வியாக்ர புரீசுவரர்—புஷ்பலதாம்பிகா.

கச்சி அநேகதங்காபதம் (காஞ்சீபுரம்):
அநேகதங்காவதேசுவரர்—காமாக்ஷி.

கச்சி ஏகம்பம்:
ஏகாம்பரநாதர், ஏகாம்பரேசுவரர்—காமாக்ஷி.

கச்சிநெறிக்காரைக்காடு:
சத்தியவிரதேசுவரர், சத்திய நாதேசுவரர்—பிரமராம்பிகா.

கச்சிமேற்றளி:
பச்சிமாலயேசுவரர்—காமாக்ஷி.

கச்சூர்:
கச்சபேசுவரர், ஒளஷதேசுவரர்—அஞ்சனாக்ஷி.

கஞ்சனூர்:
அக்னிமஹாலிங்கம், அக்னீசுவரர்—கற்பகவல்லி.

கடம்பந்துறை (கடம்பர் கோயில்):
சுந்தரேசர், சௌந்தரர்—பாலகுசாம்பிகா.

கடம்பூர்:
அமிர்தகடேசுவரர்—வித்யுத்ஜோதி நாயகி.

கடவூர்:
அமிர்த கடேசுவரர், கால ஸம்ஹாரமூர்த்தி, மார்க்கண்டேசுவரர்—அபிராமி.

கடவூர்மயானம்:
பிரமபுரீசுவரர்—நிர்மலகுசாம்பிகா.

கடிக்குளம்:
கற்பகேசுவரர்—சௌந்தராம்பிகா.

கடுவாய்க்கரைப்புத்தூர்:
ஸ்வர்ணபுரீசுவரர்—சிவாம்பிகா.

கடைமுடி:
அந்திசம்ரக்ஷணேசுவரர்—அபிராமி (அபிராமவல்லி).

கண்டியூர்:
பிரமசிரக்கண்டேசுவரர், வீரட்டேசுவரர்—மங்களாம்பிகா.

கண்ணார்கோயில்:
ஸஹஸ்ரநேத்ரேசுவரர்—சுகுந்தகுந்தளாம்பிகா.

கயிலாயம்:
பரமேசுவரர்—பார்வதி.

கரவீரம்:
கரவீரநாதர்—பிரத்யக்ஷநாயகி.

கருகாவூர்:
கர்ப்பரக்ஷாபுரீசுவரர்—கர்ப்பரக்ஷாம்பிகா.

கருக்குடி:
சற்குணலிங்கேசுவரர், பிரமபுரீசுவரர்—சர்வாலங்கிருத நாயகி, அத்வைதநாயகி.

கருப்பறியலூர்:
அபராதக்ஷமேசுவரர்—விசித்ர வலயாம்பிகா.

கருவிலி:
சற்குணநாதேசுவரர்—சர்வாங்கசுந்தரி.

கருவூர்:
பசுபதீசுவரர்—கிருபாநாயகி, சௌந்தர்யநாயகி.

கலயநல்லூர் (சாக்கோட்டை):
அமிர்தகலசநாதர், அமிர்தகலசேசுவரர்—அமிருதவல்லி.

கலிக்காமூர்:
சுந்தரேசுவரர்—சுந்தராம்பிகா.

கழிப்பாலை:
நவநீதேசுவரர்—வேதநாயகி.

கழுக்குன்றம்:
வேதகிரீசுவரர், பக்தவத்சலேசுவரர், உருத்திரகோடீசுவரர், சுரகுருச்சோளேசுவரர்—திரிபுர சுந்தரி, வேதநாயகி.

களர்:
பாரிஜாதவனேசுவரர்—அமிர்தவல்லி.

கள்ளில்:
சிவானந்தேசுவரர்—ஆனந்தவல்லி.

கற்குடி:
உஜ்ஜீவநாதர், கற்பகநாதர்—அஞ்சனாக்ஷி.

கன்றாப்பூர்:
வஸ்ததம்பபுரீசுவரர்—ஸ்ரீவல்லி நாயகி.

கீழைத் திருக்காட்டுப்பள்ளி:
ஆரண்யசுந்தரேசுவரர்—அகிலாண்டநாயகி (அகிலாண்டேசுவரி).

மேலைத்திருக்காட்டுப்பள்ளி:
அக்னீசுவரர்—சௌந்தர்யநாயகி.

காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சுரம்:
பல்லவனேசுவரர்—சௌந்தர்யநாயகி.

காழி:
பிரமபுரீசுவரர், உமாமகேசுவரர்—திரிபுரசுந்தரி, ஸ்திரசுந்தரி.

காளத்தி:
காளஹஸ்தீசுவரர்—ஞானப்பிரஸூனாம்பிகா,
ஞானசுந்தரி.

காறாயில்:
சஹஸ்ரநேத்ரேசுவரர்—கைலாசநாயகி.

கானப்பேர்:
சுந்தரேசுவரர், சோமேசுவரர் உக்கிரபாண்டீசுவரர்—சௌந்தர்யநாயகி, ஸ்வர்ணலதாம்பிகா, மீனாக்ஷி.

கானாட்டுமுள்ளூர்:
பதஞ்சலிநாதேசுவரர்—அம்புஜாக்ஷி.

காஞ்சீ:
இக்ஷ்வனேசுவரர்—சிவயோகநாயகி, ஸௌந்தரிய நாயகி.
யோகத்திலிருந்த அம்பிகைக்குச் சுவாமி ஒளிவடிவாகக் காட்சி கொடுத்தமையின் தேஜோமயர், (செம்மேனியப்பர்).

கீழ்வேளூர்:
அக்ஷயலிங்கேசுவரர், பிரமபுரீசுவரர், ரத்னகிரீசுவரர்—சுந்தரகுசாம்பிகா, ஸௌந்தர்யநாயகி, பிரத்யக்ஷநாயகி.

குடந்தைக்காரோணம்:
சோமநாதேசுவரர்—சோமசுந்தரி.

குடந்தைக்கீழ்க் கோட்டம்:
நாகேசுவரர்—பிருஹந்நாயகி.

குடமூக்கு:
கும்பேசுவரர், அமிர்தேசுவரர்—மங்களாம்பிகா, மந்திர பீடேசுவரி.

குடவாயில்:
கோணேசுவரர்—பிருஹந்நாயகி.

குரக்குக்கா:
குந்தளேசுவரர்—குந்தளாம்பிகா.

குரங்கணில் முட்டம்:
வாலீசுவரர்—விசாலாக்ஷி.

வடகுரங்காடுதுறை:
தயாநிதீசுவரர்—ஜடாமகுடேசுவரி.

தென்குரங்காடுதுறை:
ஆபத்ஸஹாயேசுவரர்—பிரவாளவல்லி.

குருகாவூர்:
சுவேதரிஷபேசுவரர், ரத்நாங்குரேசுவரர்—நீலோத்பலாக்ஷி.

குறுக்கை:
வீரட்டேசுவரர் (மன்மதசம்ஹாரமூர்த்தி)—ஞானாம்பிகா.
யோகேசுவரர்—பூர்ணம்பிகா.

குற்றாலம்:
திரிகூடாசலேசுவரர்—வேணுவாக்வாஹினி.

கூடலையாற்றூர்:
நர்த்தனவல்லபேசுவரர்—பராசக்தி, ஞானசக்தி.

கேதாரம்:
கேதாரேசுவரர்—கேதாரகௌரி.

கேதீச்சரம்:
கேதீசுவரர்—கௌரி.

கைச்சினம்:
கரச்சின்னேசுவரர்—சுவேதகங்கணாம்பிகா.

கொடிமாடச்செங்குன்றூர்:
அர்த்தநாரீசுவரர்—அபின்னும்பிகை.

கொடுங்குன்றம்:
உக்கிரகிரீசுவரர், சுடோரகிரீசுவரர்—அமிர்தேசுவரி.

கொட்டையூர்:
கோடீசுவரர்—கந்துகக்கிரீடாம்பிகா.

கொண்டீச்சரம்:
பசுபதீசுவரர்—சாந்தநாயகி (சாந்தசுந்தரி).

கொள்ளம்பூதூர்:
வில்வவனேசுவரர்—ஸௌந்தர்யாம்பிகா.

கொள்ளிக்காடு:
அக்னீசுவரர்—மிருதுபாதநாயகி.

கோகர்ணம்:
மகாபலேசுவரர், ஸப்தரிஷீசுவரர்—குங்குமவல்லி, தாம்ர கௌரி.

கோடி (குழகர் கோயில்):
அமிர்தகடேசுவரர்—அஞ்சனாக்ஷி.

கோடிகா:
திரிகோடீசுவரர் (திரிகோடிகேசுவரர்)—திரிபுரசுந்தரி.

கோட்டாறு:
ஐராவதேசுவரர்—சுகந்தகுந்தளாம்பிகா.

கோட்டூர்:
சமீவனேசுவரர்—மதுரவசனாம்பிகா.

கோணமலை:
கோணேச்சலேசுவரர்—கோணநாயகி.

கோயில்:
சனகசபாபதி, ஆனந்த நடராஜர், ஸ்ரீ மூலாஸ்தானேசுவரர்—சிவகாமசுந்தரி, உமாதேவி.

கோலக்கா:
சப்தபுரீசுவரர்—சப்தப்ரதாம்பிகா.

கோவலூர்:
வீரட்டேசுவரர் (அந்தகாசுர சம்ஹாரேசுவரர்)
யோகேசுவரர்—சிவானந்தவல்லி.

கோழம்பம்:
கோகிலேசுவரர்—சௌந்தரநாயகி.

கோளிலி:
பிரமபுரீசுவரர்—பிரமராளகாம்பிகா.
அவனிவிடங்கத்தியாகர்—நீலோத்பலாம்பிகா.

சக்கரப் பள்ளி:
சக்கரவாகேசுவரர், சக்கரப்ரதானேசுவரர்—தேவநாயகி.

சத்திமுற்றம்:
சக்திவனேசுவரர்—பிருஹந்நாயகி.

சாத்தமங்கை:
அயவந்தீசுவரர், பிரமபுரீசுவரர்—உபய புஷ்ப விலோசனி.

சாய்க்காடு:
சாயாவனேசுவரர், இந்திரேசுவரர்—கோஷாம்பிகா.

சிக்கல்:
நவநீதேசுவரர்—சக்தியாயுதாக்ஷி.
பார்வதீசுவரர்—பார்வதவர்த்தனி.

திருசிராப்பள்ளி:
மாத்ருபூதேசுவரர்—சுகந்த குந்தளாம்பிகா.

சிவபுரம்:
சிவபுரீசுவரர் (சிவபுரநாதர்) பிரமபுரீசுவரர்—ஆர்யாம்பிகா, சிங்காரவல்லி, பிருஹந்நாயகி.

சிறுகுடி:
சூக்ஷ்மபுரீசுவரர், மங்களேசுவரர், கல்யாணசுந்தரேசுவரர்—மங்களநாயகி.

சிற்றேமம்:
ஸ்வர்ண ஸ்தாபனேசுவரர்—அகிலாண்டேசுவரி.

சுழியல்:
ஸ்ரீதனுநாதர், பூமிநாதர்—ஸகாயவல்லி.

செங்காட்டங்குடி:
கணபதீசுவரர், உத்தராபதீசுவரர்—சூளிகாம்பிகா.

செம்பொன்பள்ளி:
ஸ்வர்ணபுரீசுவரர்—சுகந்தகுந்தளாம்பிகா.

சேய்ஞலூர்:
சத்தியகிரீசுவரர்—சகிதேவி.

சேறை:
ஞானபரமேசுவரர்—ஞானவல்லி, ஞானாம்பிகா.

சோபுரம்:
சோபுரநாதர், மங்களபுரீசுவரர்—சோபுரநாயகி, சக்தியாயுதாக்ஷி.

சோற்றுத்துறை:
ஓதனவனேசுவரர்—அன்னபூரணி.

தண்டலைநீள்நெறி:
ஸ்திரபுத்தீசுவரர்—ஞானாம்பிகா.

தருமபுரம்:
தருமபுரீசுவரர்—மதுரதடிதாம்பிகா, மதுராமிருதவல்லி, அபயாம்பிகா.

தலைச்சங்காடு:
சங்காரண்யேசுவரர், சங்கப்ரதானேசுவரர்—சௌந்தர்யநாயகி, பிருகத்சுந்தராம்பிகா.

தலையாலங்காடு:
நடனேசுவரர், நர்த்தனவல்லபேசுவரர்—உமாதேவி.

திருந்துதேவன்குடி:
கர்க்கடகேசுவரர்—அரவிந்தநாயகி, அபூர்வநாயகி, அநூபமநாயகி.

திலதைப்பதி:
திலதர்ப்பணபுரீசுவரர், மந்தாரவனேசுவரர்—சுவர்ணவல்லி.

தினைநகர்:

சிவாங்குரேசுவரர்—நீலாயதாக்ஷி.

துருத்தி:

உக்தவேதீசுவரர்—மிருது முகுளகுசாம்பிகா, பரிமளசுகந்த நாயகி.

துறையூர்:

சிஷ்டகுருநாதேசுவரர், பசுபதீசுவரர்—சிவலோகநாயகி.

தெங்கூர்:

ராஜதகிரீசுவரர்—பிருஹந்நாயகி.

தெளிச்சேரி:

சமீவனேசுவரர்—ஸ்வயம்வரதபஸ்வினி, ஸ்வயம்வரபார்வதி.

தென்குடித்திட்டை:

பசுபதீசுவரர், வஸிஷ்டேசுவரர், தக்ஷிணகுடித்வீபேசுவரர்—லோகநாயகி, சுகந்த குந்தளாம்பிகா, மங்களநாயகி.

தேவூர்:

தேவபுரேசர், தேவகுருநாதர், கதலிவனேசர்—மதுரபாஷிணி

நணா:

சங்கமுகநாதேசுவரர், சங்கமேசுவரர்—வேதாம்பிகா.

நல்லம்:

உமாமகேசுவரர், பௌமேஸர், பூமிநாதர்—தேகசுந்தரி.

நல்லூர்

பஞ்சவர்ணேசுவரர், கல்யாணசுந்தரேசுவரர்—கிரிசுந்தரி, கல்யாணசுந்தரி.

நல்லூர்ப்பெருமணம்:

சிவலோகத்தியாகேசர்—சுவேத விபூதிநாயகி, விபூதி கல்யாணி.

நள்ளாறு:

தர்ப்பாரணியேசுவரர், நளேசுவரர், ஆதிபுரீசுவரர்—பிராணேசுவரி, பிராணாம்பிகா.

நறையூர்ச்சித்திச்சரம்:

சித்தநாதேசுவரர், வேதேசுவரர், நரேசுவரர்—சௌந்தர்ய நாயகி, சுந்தராம்பிகா.

நனிபள்ளி

ஸகாயேசுவரர்—பர்வதபுத்திரி.

நன்னிலம்:

மதுவனேசுவரர், பிரகதீசுவரர், மதுவனேசுவரி, தேவகாந்தாரநாயகி, பிரகதீசுவரி.

நாகேச்சுரம்:

நாகேசுவரர், சண்பகாரண்யேசுவரர்—கிரிகுசாம்பிகா.

நாகைக்காரோணம்:

காயாரோகணேசுவரர், ஆதிபுராணேசுவரர்—நீலாயதாக்ஷி

நாட்டியத்தான்குடி:

ரத்னபுரீசுவரர்—ரத்னபுரீசுவரி, மங்களாம்பிகா.

நாரையூர்:

சௌந்தரேசர், சுந்தரேசுவரர்—திரிபுரசுந்தரி.

நாலூர் மயானம்:

ஞானபரமேசுவரர், பலாசவனேசுவரர்—ஞானாம்பிகா.

நாவலூர்:

பக்த ஜன ரக்ஷகர், பக்தஜனேசுவரர், ஜம்புபதீசுவரர்—சுந்தரநாயகி, சுந்தராம்பிகா.

நின்றியூர்:

மகாலக்ஷ்மீசுவரர், மகாலக்ஷ்மிபுரீசுவரர், பரிகேசுவரர்—லோகநாயகி.

நீடூர்:

சோமநாதேசுவரர்—ஆதித்யாபயப்ரதாம்பிகா, வேத நாயகி.

நீலக்குடி:

மனோக்ஞநாதசுவாமி, வில்வாரண்யேசுவரர், நீலகண்டேசுவரர், காமதேனுபுரீசுவரர்—அநுபமகுசாம்பிகா பக்தாபீஷ்ட தாயினி.

நெடுங்களம்:

நித்யசுந்தரேசுவரர்—அதுல்யாம்பிகா, மங்களநாயகி.

நெய்த்தானம்:

கிருதஸ்நானேசுவரர்—பாலாம்பிகா.

நெல்லிக்கா:
ஆமலகவனேசுவரர், ஆமலகேசுவரர்—ஆமலகவனேசுவரி, ஆமலகேசுவரி, மங்களநாயகி.

நெல்வாயில்:
சிகாபுரீசுவரர், மத்தியாந்நேசுவரர், சிவபுரீசுவரர்— கனக காம்பிகா.

நெல்வாயில் அரத்துறை:
தீர்த்தபுரீசுவரர்—திரிபுரசுந்தரி.

நெல்வெண்ணெய்:
ஸ்வர்ணகடேசுவரர், நவநீதேசுவரர்—பிருஹந்நாயகி.

நெல்வேலி:
சாலிவாடீசுவரர், வேணுவனேசுவரர்—காந்திமதி.

பட்டீச்சுரம்:
பட்டீசுவரர், தேனுபுரீசுவரர்—ஞானாம்பிகா.

பந்தணைநல்லூர்:
பசுபதீசுவரர்—வேணுபுஜாம்பிகா.

பயற்றூர்:
முற்கபுரீசுவரர்—நீலோத்பலாயதாக்ஷி.

பரங்குன்றம்:
பரங்கிரிநாதர்—பரங்கிரிநாயகி.

பராய்த்துறை:
தாருகாவனேசுவரர்—ஹேமவர்ணாம்பிகா.

பரிதிநியமம்:
பாஸ்கரேசுவரர்—மங்களாம்பிகா.

பருப்பதம்:
மல்லிகார்ச்சுனர், ஸ்ரீசைலேசுவரர்—பிரமராம்பிகா.

பழனம்:
ஆபத்சகாயர்—பிருஹந்நாயகி.

பழூர்:
வடமூலேசுவரர்—அபூர்வதபஸாம்பிகா.

பழையாறை வடதளி:

பழையாறை: சோமேசுவரர்—சோமகலாம்பிகா.

வடதளி: தர்மபுரீசுவரர்—விமலநாயகி.

பள்ளியின்முக்கூடல்:

திரிகோணநாதேசுவரர்—அஞ்சனாக்ஷி.

பறியலூர்:

தக்ஷபுரீசுவரர், வீரட்டேசுவரர்—பாலாம்பிகா.

பனந்தாள்:

அருணஜடேசுவரர், தாலவனேசுவரர்—பிருஹந்நாயகி.

பனையூர்:

சௌந்தரேசுவரர்—பிருஹந்நாயகி.

பாசூர்:

பசுபதீசுவரர்—பசுபதிநாயகி, மோகனாம்பிகா.

பாச்சிலாச்சிராமம்:

சமீவனேசுவரர், பிரமபுரீசுவரர்—பாலம்பிகா, பாலசுந்தரி.

பாண்டிக்கொடுமுடி:

மகுடேசுவரர், கல்யாணமகுடேசுவரர்—சௌந்தராம்பிகா.

பாதாளீச்சுரம்:

சர்ப்பபுரீசுவரர்—அமிர்த வல்லி.

பாதிரிப்புலியூர்:

பாடலேசுவரர், கன்னிவனநாதர்—பிருஹந்நாயகி.

பாம்புரம்:

சேஷபுரீசுவரர்—பிரமராம்பிகா (பிரமராளகாம்பிகா)

பாலைத்துறை:

பாலைவனேசுவரர்—தவளாம்பிகா.

பாற்றுறை:

ஆதிமூலேசுவரர், க்ஷீரபுரீசுவரர்—மேகலாம்பிகா.

புகலூர்:

அக்னீசுவரர், சரண்யபுரீசுவரர்—சூடிகாம்பிகா.

புகலூர் வர்த்த மானீச்சரம்:
வர்த்தமானேசுவரர்—மனோன்மணி (மநோன்மனி)
சூடிகாம்பிகா.

புத்தூர்:
ஸ்ரீ தளீசுவரர்—சிவகாமி (சிவகாமசுந்தரி).

புள்ளமங்கை:
பசுபதீசுவரர், வடதீர்த்தநாதர், பிரம்புரீசுவரர்—
சௌந்தர்ய நாயகி.

புள்ளிருக்கு வேளூர்:
வைத்யநாதேசுவரர்—பாலம்பிகா.

புறம்பயம்:
சாக்ஷிநாதேசுவரர்—இக்ஷுவாணியம்பிகா.

புறவார்பனங்காட்டூர்:
தாலவனேசுவரர்—ஸத்யாம்பிகா.

புனவாயில்:
விருத்தபுரீசுவரர், மகாலிங்கேசுவரர்—பிருஹந்நாயகி.

புன்கூர்:
சிவலோகநாதர்—சௌந்தர்யநாயகி.

பூந்துருத்தி:
புஷ்பவனேசுவரர், ஆதிபுராணர், சத்யவாகீசுவரர்—
சௌந்தர்யநாயகி.

பூவணம்:
புஷ்பவனேசுவரர், பாஸ்கரபுரீசுவரர், பிதுர்மோக்ஷபுரீசுவரர்,
பிரஹ்மபுரீசுவரர்—சுந்தரநாயகி, ஸ்வர்ணவல்லி, தடிதம்பிகா.
அன்னபூரணி.

பூவனூர்:
புஷ்பவனேசுவரர், சதுரங்கவல்லபநாதர்—கற்பகவல்லி,
ராஜாராஜேசுவரி.

பெண்ணாகடம்:
பிரளயகாலேசுவரர்—ஆமோதளாம்பிகா.

பெரும்புலியூர்:
பிருஹத்வியாக்ரபுரீசுவரர்—சௌந்தர்ய நாயகி.

பெருவேஷூர்:
அபிபக்தேசுவரர்—அபின்னாம்பிகா.

பேணுபெருந்துறை:
சிவாநந்தேசுவரர், பிரணவேசுவரர்—மங்களாம்பிகா.

பேரெயில்:
ஜகதீசுவரர்—ஜகதீசுவரி.

பைஞ்ஞீலி:
நீலகண்டேசுவரர், ஆரண்யவிடங்கர், கதலிவனேசுவரர்—விசாலாக்ஷி.

மங்கலக்குடி:
பிராணவரதேசுவரர்—மங்களாம்பிகா.

மணஞ்சேரி
கல்யாணசுந்தரேசுவரர்—கோகிலாம்பிகா.

மண்ணிப்படிக்கரை:
நீலகண்டேசுவரர், முக்தீசுவரர், பரமேசுவரர், மகதீசுவரர்—மங்களாம்பிகா, அமிர்தவல்லி.

மயிலாடுதுறை:
பிரமலிங்கேசுவரர், ஸ்ரீவதானீசுவரர், கௌரீதாண்டவேசுவரர், மாயூரநாதர்—அபயாம்பிகா, அபயப்பிரதாம்பிகா.

மயிலாப்பூர்:
கபாலீசுவரர்—கற்பகவல்லி.

மயேந்திரப்பள்ளி:
சுந்தரேசுவரர், சோமசுந்தரர்,—அலங்காரவதி, அலங்கார பூஷணவதி.

மருகல்
ரத்னகிரீசுவரர்—ஆமோதளநாயகி.

மழபாடி (மழுவாடி):
வஜ்ரதம்பேசுவரர், வைத்யநாதர், பரசு நர்த்தனபுரேசுவரர்—சுந்தராம்பிகா.

மறைக்காடு:
வேதாரண்யேசுவரர்—வீணாவாதவிதுரஷணி.

மாகறல்:
அகத்தீசுவரர்—திரிபுவனேசுவரி.

மாணிகுழி

வாமனேசுவரர், வாமனபுரீசுவரர்—அம்புஜாக்ஷி.

மாந்துறை:

ஆம்பிரவனேசுவரர், சுத்தரத்னேசுவரர்—பாலாம்பிகா.

மாற்பேறு:

மணிகண்டேசுவரர், பிரவாளேசுவரர், தயாநிதீசுவரர், சக்கரப்ரதானேசுவரர்—அஞ்சனாக்ஷி, கருணாம்பிகா.

மீயச்சூர்:

மேகநாதேசுவரர், நிகராருணபூர்ணேசுவரர்—லலிதாம்பிகா.

மீயச்சூர் இளங்கோயில்:

சகலபுவனேசுவரர்—மேகலாம்பிகா. வித்யுன் மேகலாநாயகி.

முண்டீச்சுரம்:

சிவலோகநாதர், முண்டீசுவரர்—சௌந்தர்யநாயகி.

நடனபாதேசுவரர்—ஹஸ்த தாளாம்பிகா.

முதுகுன்றம்:

விருத்தாசலேசுவரர்—பாலாம்பிகா, விருத்தாம்பிகா, பிருஹந்நாயகி.

முருகன் பூண்டி:

ஸ்கந்த நாதேசுவரர், மாதவிவனேசுவரர்—மங்களநாயகி (மங்களாம்பிகா), ஆலிங்கபூஷணஸ்தனாம்பிகா.

வடதிருமுல்லைவாயில்:

நிர்மல மணீசுவரர், பாசுபதேசுவரர்—லதா மத்யாம்பிகா.

தென்திருமுல்லைவாயில்:

யூதிகாப்ரமேசுவரர், யூதிகாவனேசுவரர்—சத்யானந்த சௌந்தரி.

மூக்கீச்சுரம்:

பஞ்சவர்ணேசுவரர்—காந்திமதி.

வக்கரை:

சந்திரசேகரேசுவரர், சந்திரமௌலீசுவரர்—அமிர்தேசுவரி

வடுகூர்:

வடுகேசுவரர்—திரிபுரசுந்தரி.

வலஞ்சுழி:

கபர்த்தீசுவரர், அருணஜடேசுவரர்—பிருஹந்நாயகி.
ஸ்ரீ கண்டேசுவரர்—சுகந்தகுந்தளாம்பிகா.

வலம்புரம்:

வலம்புரிநாதேசுவரர்—விசாலாக்ஷி, ஆம்ப்ரபின்னலோசனி (வடுவகிர்க் கண்ணி) ஆம்ப்ரம் இங்கு மாவடுவைக் குறிக்கும்.

வலிதாயம்:

வல்லீசுவரர்—ஜகதாம்பிகா.

வலிவலம்:

ஹ்ருதயகமலநாதர், ஹ்ருதயஸகாயேசுவரர்—மீனாக்ஷி.

வல்லம்:

வில்வநாதேசுவரர்—தநுமத்யாம்பிகா.

வன்னியூர்:

அக்னிபுரீசுவரர், அக்னீசுவரர்—கௌரி.

ஸ்ரீவாஞ்சியம்:

ஸ்ரீ வாஞ்சியேசுவரர்—மங்களாம்பிகா.

வாட்போக்கி:

ரத்னகிரீசுவரர்—அராளகேசாம்பிகா, ஹரவட்சேசுவரி.

வாய்மூர்:

லீலாஹாஸ்யபுரேசுவரர்—க்ஷீரவசனி.

வாளொளி புற்றூர்:

மாணிக்கலிங்கேசுவரர், ரத்னபுரீசுவரர்—பிரமரகுந்தளாம்பிகா.

வான்மியூர்:

ஔஷதீசுவரர், வேதபுரீசுவரர்—திரிபுரசுந்தரி.

விசயமங்கை:

விஜயநாதேசுவரர்—மங்களாம்பிகா.

வியலூர்:

யோகாநந்தேசுவரர், வில்வாரண்யேசுவரர்—சௌந்தர்ய நாயகி, சாந்தநாயகி.

விளநகர்:

உசிவனேசுவரர்—வேணுபுஜாம்பிகா.

விளமர்:
பதஞ்சலிமனோஹரர்—மதுர பாஷிணி.

விற்குடி:
வீரட்டானேசுவரர்—ஏலாளகாம்பிகா.

விற்கோலம்:
திரிபுராந்தகேசுவரர் (வீராஷ்டஸ்தானேசுவரர்)—திரிபுராந்தகி, திரிபுரசுந்தரி.

வீழிமிழலை:
நேத்ரார்ப்பணேசுவரர், சக்கரப்ரதானேசுவரர்—பிருஹத் சுந்தரகுசாம்பிகா.

வெஞ்சமாக்கூடல்:
கல்யாணவிகிர்தேசுவரர், விகிர்தநாதேசுவரர்—மதுர பாஷிணி.

வெண்காடு:
ஸ்வேதாரண்யேசுவரர்—பிரஹ்மவித்யாநாயகி.

வெண்டுறை:
பிரமரபுரீசுவரர்—சக்தியாயுதாக்ஷி.

வெண்ணியூர்:
இக்ஷுநாதேசுவரர், ஜயபுரீசுவரர்—சௌந்தர்யநாயகி.

வெண்ணெய் நல்லூர்:
கிருபாபுரிசுவரர், வேணுபுரீசுவரர்—மங்களாம்பிகா.

வெண்பாக்கம்:
ஆதாரதண்டேசுவரர்—தடித்கௌரி, தடித்ப்ரகாசாம்பிகா.

வேட்களம்:
பாசுபதேசுவரர்—சற்குணாம்பிகா.

வேட்டக்குடி:
சுந்தரேசுவரர்—சௌந்தர்யநாயகி.

வேதிகுடி:
வேதபுரீசுவரர்—பார்வதி, பாலாம்பிகா.

வேள்விக்குடி:
கல்யாணசுந்தரேசுவரர்—பரிமளசுகந்தநாயகி.

வேற்காடு:
வேதபுரீசுவரர்—பாலாம்பிகா.

வைகன் மாடக்கோயில்:
சண்பகாரண்யேசுவரர்—சாகாகோமளவல்லி.

வைகாவூர்:
வில்வாரண்யேசுவரர், வில்வவனேசுவரர்—ஸர்வஜனரக்ஷகி

விடைவாய்:
புண்யகோடீசுவரர்—அபிராமி.

அநுபந்தம் 9

சிவஸ்தலங்களுக்குரிய மரம், செடி கொடி, முதலிய விவரம்.

வில்வம்: கோடிகா.
சந்தனம்: வாஞ்சியம், நறையூர், சிவபுரம்.
அகில்: பெருஞ்சேரி, தேவதாருவனம், வழுவூர், திருப்பராய்த் துறை.
பராய்: திருப்பராய்த்துறை.
வெண்பாதிரி: திருப்பாதிரிப்புலியூர்.
செம்பாதிரி: திருவாரூர்.
மகிழ்: ஆமாத்தூர், ஒற்றியூர், உடையார்பாளையம்-(முற்கபுரம்).
கோங்கு: ஆரூர், மங்கலக்குடி.
சண்பகம்: திருநாகேசுவரம்.
புன்னை: புகலூர், அம்பர், மயிலாப்பூர், சங்கரநயினார் கோயில்.
சுரபுன்னை: வேதாரணியம்.
நாரத்தை: (பெம்பளீஸ்) பிரான்மலை.
குருக்கத்தி: அத்திப்புலியூர்.
வெட்சி: சிவபுரம்; இந்தத் தலம் ஸ்ரீ முஷ்ணத்துக்குத் தெற்கே ஒரு மைல்; கங்கை கொண்டானுக்கு வடக்கே 4 மைல்.
சிறுசண்பகம்: பாம்பணிப்பாதாளேச்சுரம்.
பித்திகை:—
மஞ்சாடி: திலகேசுவரர்: தேவிபுரம்.
மகர வாழை: மருகல்.
வனமல்லிகை, கிரிமல்லிகை, மல்லிகை: மல்லிகார்ச்சுனம்.
காயா: உடையார் பாளையம்.
வெட்சி: கங்கை கொண்ட சோழபுரம், சிவபுரம்.
துளசி: விற்குடி.
ஐவேலிக்கொடி: திருமழபாடிக்கு வடக்கேயுள்ள ஒரு ஸ்தலம்.
வெண்செவ்வந்தி: திருச்சிரப்பாள்ளி.
செருந்தி: திருச்சிரபுரம்.

வெள்ளழிஞ்சில்: அரதைப் பெரும்பாழி.
குங்குமம்: பதரிகாச்சிரமம்.
பட்டிகை:—
நந்தியாவர்த்தம்: குடந்தைக்காரேணம், பட்டீசுவரம் (பெரும் புலியூர்—விஷ்ணுஸ்தலம்)
செவ்வரத்தம்:—
பனை: திருப்பனந்தாள், திருப்பனையூர், திருவோத்தூர், பனங் காட்டூர்.
கூந்தற் கமுகு:—
கூந்தற்பனை:—
கமுகு: பேரூர்.
பலா: திருவீழிமிழலை, திருக்குற்றாலம்.
ஈரப்பலா: திருக்கோளக்குடி.
மஞ்சட்கரும்பு: திருமாணிகுழி.
நாணற் கரும்பு: திருவேடகம்.
செவ்விளநீர்த்தென்னை: வைகல்; கலிபொய்...தெங்கு பொய்யா வதில்லையென்று ஒரு பழமொழி.
கர்ச்சூரம்: ஈஞ்சு—ஈச்சங்குடி, திங்களூர், திருவைகா.
மா: மாயூரம், கச்சி ஏகம்பம், வீழிமிழலை, மாந்துறை, ஹஸ்தினாபுரம்.
தேமா:—
தென்னை: திருத்தேங்கூர், குடந்தை அபிமுகம், வைகல்.
வாழை: தேவூர், திருப்பைஞ்ஞீலி, மருகல், திருக்களாஞ்சேரி.
கரும்பு: திருவேடகம், ஆப்பனூர், திருமாணிகுழி. காஞ்சியி லுள்ள கரும்பூர்.
மூங்கில்: சீகாழி, திருநெல்வேலி, பாசூர்.
வெட்பாலை: குளிராசூர், குழகர் கோயில்.
இலுப்பை: மண்ணிப்படிக்கரை.
குங்குமம்: பதரி காச்சிரமம்.
இந்த ஸ்தலத்தில் அம்பிகையின் கையில் சிவலிங்கமிருக்கின்றது.
அனிச்சம்:—
அலரி: திருக்கரவீரம்.
மருக்கொழுந்து: கேதாரத்திற்குப் போகும் வழியிலுள்ள குருத் துவாரம்—ஒரு ஸ்தலம்.
இருவேரி:—
இருவாட்சி: முல்லைவாசல்; இது பிரம்பூரைச் சார்ந்தது.
உருத்திராக்கம்: திருவலஞ்சுழி, அச்சுத மங்கலம், தாராசுரம்.
தாழை: சாயாவனம்; ரத்னச்சாயாவனம் போயிற்று.
பூளை: ஆலங்குடி, (திருவிரும்பூளை).

ஆல்: ஆலங்குடி, பழுவூர், வெண்காடு, இரண்டு திருவாலங்காடு, கயை.

குடைவேல்:—

புன்கு: புன்கூர், பேரளம், தருமபுரம்.

அசோகு: திருக்கோகர்ணம், பேரூர், பத்திரகோடி.

வேம்பு: புள்ளிருக்கு வேளூர், திருவரன்குளம், போரூர்.

புளி: கயக்கரை.

தேக்கு:—

கொன்றை: வேதாரணியம், வெண்காடு, அதிகை.

முண் முருக்கு—செங்குரு—இடும்பாவனம்.

எலுமிச்சை: ஆண்டார்பந்தி, ஐயம்பேட்டை, இலிகுசவனம்.

காட்டு ஆத்தி: செங்காட்டங்குடி, எட்டிகுடி, மங்கலக்குடி.

அகத்தி: சேரமாதேவி.

புளிமா:—

இலந்தை: கீழ்வேளூர், வழுவூர், உத்தரகோசமங்கை, இலந்துறை, திருவெண்பாக்கம்.

மாதுளை: கீழ்வேளூர்.

தாது மாதுளை:—

பிரம்பு: பிரம்பூர்.

ஆத்தி: திருவாப்பாடி.

தேறு:—

வாகை: திருவாளொளிபுற்றூர்.

கிளுவை: கொல்லிமலை, கொடுமுடி.

கிலுகிலுப்பை:—

ஓமை: ஓமாம் புலியூர்.

வாடாக்குறிஞ்சி:—

குறிஞ்சி:—

பேரீந்து:—

மழைவண்ணக்குறிஞ்சி:—

நாயுருவி: (அபாமார்க்கம்)—புதுச்சேரி; கீழ்வேளூரைச் சார்ந்த தோரூர்; ஸ்வயம்பு.

முல்லை: முல்லைவாயில்.

களா: திருக்களாச்சேரி, பாபவிநாசம், திருப்புடை மருதூர்.

விளா: திருவீழிமிழலை, விருத்தாசலம், கோபருப்பதம்.

வெண்கடுகு:—

மருது: அம்பர்மாகாளம், திருவிடைமருதூர், திருப்புடைமருதூர்.

வேங்கை: ஸ்ரீ காளஹஸ்திக்கு அருகே வடக்கு ஸந்நிதியுள்ள ஒரு ஸ்தலம்.

முந்திரிகை: திருமயிலாடி; இவ்வூர், ஆணிக்காரன் ஸத்திரத் திற்கருகேயுள்ளது.
அதிமதுரம்:—
செங்காந்தள்:—
வெண்காந்தள்:—
புனமுருக்கு:—
வன்னி: பெருவேளூர், வேதாரணியம், பட்டீசுவரம், வள்ளலார் கோயில், விருத்தாசாலம், குரங்காடுதுறை.
குருந்து: திருப்பெருந்துறை.
குமிழ்:—
கடம்பு: மதுரை, கடம்பர் கோயில், கடம்பூர்.
வெண்ணொச்சி: தலைஞாயிறு, வடரங்க ஜம்புகேசுவரம், உத்தர கோகர்ணம்.
சத்திக்கொடி:—
கடு: குறுக்கை.
நெல்லி: திருநெல்லிக்கா.
திப்பிலி:—
கொத்துமல்லி:—
கருவிளை:—
துரிஞ்சில்:—
ஆடாதோடை: அசுவதந்தி-திருக்களர்.
பருத்தி: கார்ப்பாஸம்—மாப்படுகைக்குப் போகும் வழியிலுள்ள தும் புருஷாமிருகம் பூசித்ததுமான ஒரு ஸ்தலம்.
இத்தி: தென்குரங்காடுதுறை.
ஆமணக்கு: கொட்டையூர்.
எட்டி: திருக்காளத்தி.
செங்கருங்காலி: அம்பர்மாகாளம், திலதைப்பதி.

மந்தாரம்: திலதைப்பதி.
ஆச்சா:
இலவு: திருக்கொண்டீசுவரம், வில்வமும் உண்டு

வழுதுளை:—
கண்டங்கத்திரி: ஸ்ரீ சைலம்.
கழல்: திருக்கருகாவூர்.
வெள்ளெருக்கு: எருக்கத்தம்புலியூர், (கானாட்டம் புலியூர்) வெண்காடு.
கற்றுழை:—
புளிதொடக்கி:—
ஈகை:—

ஊமத்தை:—
காரூமத்தை: தூர்த்துக்குடி—தூர்த்தூரபுரம்.
ஸ்வாமி: பிரமபுரீசுவரர்.
அம்பிகை: ஞானாம்பிகை.
ஊமத்தையாகவும் எருக்காகவும் பிரமதேவருடையதலை முளைத்தது.
அகத்தி:—
எருக்கு: கானாட்டம்புலியூர்.
பச்சிலைமரம்: மணம் வந்த புத்தூர்.
ஏழிலைப்பாலை: திருக்கழுக்குன்றம்.
சுண்டி:—
வறட்சுண்டி:—
சதுரக் கள்ளி:—
மலைப்பச்சை:—
சிறுகீரை:—
சேம்பு:—
ஞாழல்:—
நறுவிலி: திருமணஞ்சேரி.
கூதாளி: குத்தாலம்.
சாறடை:—
வெள்ளரி:—
கக்கரி:—
தாளி:—
காஞ்சொறி:—
சிவேதை:—
ஏலம்:—
இசங்கி:—
பாகல்:—
பாலை:—
பூளை: ஆலங்குடி.
தான்றி: காளத்தி.
குன்றி:—
நுணா:—
கருங்காலி: அம்பர் மாகாளம்.
கோட்டம்:—
கொவ்வை:—
பசிரி—
தும்பை: காஞ்சி; தும்பை வனம்.
சுரை: சுரைக்குடி.

கொடிக்கொத்தான்:—
முருங்கை: பாம்பணி—சிக்குருபுரம்.

பீர்க்கு.
சீந்திக்கொடி: வேதாரணியத்திலுள்ள கோள ஸ்தலத்தி லுள்ளது; குழகர்.
நாணல்: நள்ளாறு, குசாரணியம், திரியம்பகம்; இது கோதாவிரிக் கரை.
வெற்றிலைக்கொடி: தேதியூர்; இது தேர்தகையூர்.
கருவேலி: கருவிலி; ஐவேலி.
மிளகு:—
கிளுவை: பெரும்பன்றியூர்.
நெல்: நெல்வேலி.
கோதூமை: கேதாரம், பிரபாஸம்.
கம்பு: வள்ளிமலை, பிரியங்கு அலர்மேலுமங்காபுரம்.
தினை: பிரான்மலை.
துவரை:
அவரை:
பூவரசு: திருநணா; இதற்கு இலந்தையுமுண்டு.
இலந்தை: திருநணா.
வெள் அறுகு: வளளலார் கோயில்.
வன்னி: வள்ளலார் கோயில்.

தேவாரத்தில் வந்துள்ள நதிகள்.

அரிசில்: நா: 4232, 4242—சு: 4244, 4246, 4247, 4248, 4250–52, 4297, 4299, 4300, 4302–4, 4266—ஞா. 4277, 4289—நா. 3868, 3870, 3885. 3802—ஞா. 3824 ஷி, 3841, 3842, 3845, 4221, 4226, ஞா.
கங்கை: 868, 973, 2998, 2981, 1827, 7991.
ஆறு—கடுவாய்: 5425.
கடுவாய்: 5219–28.
கம்பை: 5893.
காஞ்சி வாயாறு: 115.
காவிரி: 2661–2, 2665, 395, 397, 973, 3007, 2993, 2998, 2968, 2969, 2973, 6493, 3076–8; 3196–சு. 2133–23.
பூசத்துறை: 3078–ஞா.; 3140–நா.
பொன்னி: 1939, 1940, 2372, 2377, 3159, 3180.
குடைத்தலை நதி: 7565
குமரி: 7651, 7991, 8123.

கெடிலம்: எதுகை: 6446, 6493.
கொட்டாறு. எதுகை. 1025
கொள்ளிடம் 1506–7
கோட்டாறு, கோதாவிரி.
கோமி 2985, எதுகை.
கோவி. 2986, எதுகை.
சிற்றாறு: வெஞ்சமாக் கூடலின் அருகே யோடும் நதி. 6200–8.
நிவா.
பம்பை. 6785 ஆமாத்தூரைச் சார்ந்த ஒரு நதி.
பழங்காவிரி: 2970, 3022, 3024.
பாலி—. பெண்ணை 6651, 6653, 6760.
மண்ணி 1219, 1461, 1699.
முகலி
முத்தாறு, அத்திமுத்தாறு. 7738–அத்திகளைப் போடுதற்குரிய
முத்தாறு. மணிமுத்தாறு வலஞ்செயும் 6624, 6625.
வெண்ணி: வெண்ணியின் தென்கரைப் பூவனூர் 5317
வெள்ளாறு:
வைகை: இது சுடலோடு கலத்தல் 6066–8.

வேறு சில தீர்த்தங்கள்:

சிந்து பூந்துறை (நெல்லை) 6144, எதுகை. தியதிலான் (சிராப் பள்ளி) 2552.
நன்றுடையான் (சிராப்பள்ளி) 2552
பொற்றமரைப்புட்கரிணி 2998

4 ஸ்தலங்கள்

2351-61: திருக்கயிலை, ஆனைக்கா, திருமகேந்திரம், திருவாரூர்.
பஞ்ச ஸ்தலங்கள்: தில்லை, கீழ்வேளூர், வீழிமிழலை, புறம் பயம், ஆரூர்.

குறிப்பு: ஐயரவர்கள் தொடர் எண்ணிட்டுப் பயன்படுத்திய இராமசுவாமிப்பிள்ளையவர்களின் தேவாரத் தலமுறைப் பதிப்பின்படி எண்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஸ்தலங்கள் இருக்கும் திசைகள். (மயிலாடு துறைக்கு)

திருக்கடவூர்—அக்கினிமூலை	12 மைல்
வழுவூர்—தென்மேற்கு	4 மைல்
பெருஞ்சேரி—தென்கிழக்கு...	
குறுக்கை—வடமேற்கு	7 மைல்

திருப்பறியல்—தென்கிழக்கு	6 மைல்
தாந்தோன்றி—வடக்கு	3 மைல்
கஞ்சாறு—வடக்கு	4 மைல்
கருணாம்பேட்டை—கிழக்கு	2 மைல்
பசுபதீசுவரம்—வடக்கு	10 மைல்
வள்ளலார் கோயிலுக்கும் தர்மபுரத்திற்கும் இடையில்	
கழுக்காணிவட்டம்—வடக்கு	2 மைல்
சித்தர் காடு—மேற்கு	2 மைல்
மூவலூர்—மேற்கு	2½ மைல்
சோழம் பேட்டை—வட மேற்கு	3 மைல்
ஐயாறப்பர் கோவில்—மேற்கு	
விசுவநாதர் கோவில்—வடக்கு	
வள்ளலார் கோவில்—வடக்கு	
திருவிளநகர்	

பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் முதலியவற்றின் முடிபுப் பெயர்கள்.

அம்பர்: அம்பர், இன்னம்பர்.

அகம்: ஏடகம்.

அல்: ஊறல், கூடல், கோவல், சிக்கல், சுழியல், சேய்ஞல் நாவல், பள்ளியின் முக்கூடல், மருகல், மாகறல், பவானிகூடல், வெஞ்சமாக்கூடல்.

ஆச்சிராமம்: பாச்சிலாச்சிராமம்.

ஆப்பூர்: கன்றாப்பூர், மயிலாப்பூர்.

ஆலந்துறை: அன்பிலாலந்துறை, குயிலாலந்துறை, புள்ளமங்கை ஆலந்துறை.

ஆற்றூர்: கூடலையாற்றூர், நல்லாற்றூர் (வை)

ஆறு: தே: 8135: இடையாறு, ஐயாறு, கோட்டாறு தெள்ளாறு (வை), நள்ளாறு, நாலாறு, (பழையாறு. வை), வெள்ளாறு (வை).

ஆனை: ஆடானை.

இல்: ஆலவாயில், கள்ளில், காறாயில், குடவாயில், குணவாயில் பாச்சில்.

இலி: அரசிலி, கருவிலி, கோளிலி.

இளங்கோயில்: கடம்பையிளங்கோயில், மீயச்சூரிளங் கோயில்.

ஈச்சுரம்: தே. 8133. அக்கீச்சுரம் (வை), அகத்தீச்சுரம் (வை), அத்தீச்சுரம் (வை), அயனீச்சுரம் (வை), ஆடகேச்சுரம் (வை),

ஆலூர்ப்பசுபதீச்சுரம், இராப்பட்டீச்சுரம் (வை) இராம நதீச்சுரம், இராமேசுரம், ஏயீச்சுரம் (வை) கணபதீச்சுரம், குக்குடேச்சுரம் (வை).

கேதீச்சுரம், கொண்டீச்சுரம், கோடீச்சுரம், சித்தீச்சுரம் (வை) செம்புகேச்சுரம் (வை) சோமீச்சுரம் (வை), தாடகேச்சுரம், திண்டீச்சுரம் (வை), தேவீச்சுரம் (வை), நக்கீச்சுரம் (வை), நந்திகேச்சுரம் (வை), நாகளேச்சுரம் (வை) நாகேச்சுரம், மாகளீச்சுரம்.

பசுபதீச்சுரம், பட்டீச்சுரம், பல்லவனீச்சுரம், பாதாளீச்சுரம், புகலூர் வர்த்தமானீச்சுரம், மயிண்டீச்சுரம் (வை), மாகாளேச் சுரம் (வை), முண்டீச்சுரம், மூக்கீச்சுரம், வர்த்த மானீச்சுரம், விவீச்சுரம் (வை), வெகுளீச்சுரம் (வை) வேதீச்சுரம்.

ஊர்; தே. 8129: அழுந்தூர், அளப்பூர், அன்னியூர், ஆற்றூர், ஆப்பனூர், ஆமாத்தூர், ஆரூர், ஆவூர், இடைமருதூர், உறையூர், ஊற்றத்தூர், எறும்பியூர், ஒற்றியூர், ஒத்தூர், ஓமாம் புலியூர், கச்சூர், கஞ்சனூர், கடம்பூர், கடவூர், கண்டியூர், கருகாவூர், கருப்பறியலூர், கலிக்காமூர், கன்றாப்பூர், கானாட்டு முள்ளூர், கானூர், குண்டையூர், குருகாவூர், கூடலையாற்றூர், கொட்டையூர், கொடிமாடச் செங்குன்றூர், கோவலூர், சேய்ஞலூர், சேற்றூர், துடையூர், துவையூர், துறையூர், தெங்கூர், தேவூர், தோலூர், நல்லாற்றூர், நல்லூர், நறையூர், நாரையூர், நாலூர், நாவலூர், நின்றியூர், நீடூர், பயற்றூர், பழுவூர், பறியலூர், பனையூர், பாசூர், புகலூர், புறவார்பனங்காட்டூர், புன்கூர், பூவனூர், பெரும்பற்றப்புலி யூர், பேராவூர், மயிலாப்பூர், மீயச்சூர், வடுகூர், வனபார்த் தான் பனங்காட்டூர், வன்னியூர், வாய்மூர், வாளொளி புற்றூர், வான்மியூர், வியலூர், வைகாவூர், ஏமப் பேரூர்.

ஏயில்: பேரெயில்.

ஏமம்: சிற்றேமம், நல்லேமம் (வை).

கரை: காரிக்கரை(வை), மண்ணிப்படிக்கரை, (திருவக்கரை, வக்கரா என்பது வக்கரை என்றாயிற்று).

கர்ணம்: கோகர்ணம்.

களம்: 5: அஞ்சைக்களம், நெடுங்களம், வேட்களம்...

கா: ஆனைக்கா, காரைக்கா, குரக்குக்கா, கோட்டுக்கா (வை), கோடிக்கா, கோலக்கா, நெல்லிக்கா.

காட்டூர்: பனங்காட்டூர், புறவார்பனங்காட்டூர், வன்பார்த்தான் பனங்காட்டூர்.

காடுகள்: ஆலங்காடு, இறைக்காடு (வை), கச்சிநெறிக் காரைக் காடு, கொள்ளிக்காடு, கோட்டுக்காடு(வை), சாய்க்காடு, தலைச்சங்காடு, தலையாலங்காடு, நிறைக்காடு (வை), பழையனூராலங்காடு, பனங்காடு (வை), மறைக்காடு, மிறைக்காடு (வை) வெண்காடு, வேற்காடு.

காரோணம்: கச்சிக்காரோணம், குடந்தைக் காரோணம், நாகைக்காரோணம்.

காவதம்: அநேகதங்காவதம், கச்சியநேகதங்காவதம்.

கிரி: அத்திகிரி, அரதனகிரி, உதயகிரி, கடோரகிரி, புவனகிரி.

குடி: பரம்பக்குடி, கடையக்குடி, (வை) ஈங்கோய்பக்கம், கருக்குடி, கருந்திட்டைக்குடி (வை) கற்குடி, கிள்ளிகுடி (வை) குத்தங்குடி(வை), குருந்தங்குடி (வை), சாலைக்குடி (வை). கோத்திட்டைகுடி, சிறுகுடி, செங்காட்டங்குடி, செம்பங்குடி (வை) தனிச்சாத்தங்குடி (வை) திருந்து தேவன் குடி, திருவண் குடி (வை) தென் களக்குடி (வை) தென்குடித்திட்டை, தேவன் குடி, நல்லக்குடி(வை) நாட்டியத்தான்குடி, நீலக்குடி, புதுக் குடி (வை) புற்குடி(வை) மங்கலக்குடி, மத்தங்குடி (வை), மாகுடி(வை) மாணிகுடி(வை) விடைவாய்க்குடி(வை) விற்குடி, வேட்டக்குடி, வேதிகுடி, வேள்விக்குடி.

குழி: மாணிகுழி.

குளம் ஆறு: இடைக்குளம், கடிக்குளம், தஞ்சைத்தளிக் குளம், திருக்குளம், பாற்குளம், வளைகுளம்.

குன்றம்: கழுக்குன்றம், கழுநீர்க்குன்றம் (வை) கொடிமாடச் செங்குன்றம், (கொடிமாடச் செங்குன்றூர்), கொடுங்குன்றம், திருநற்குன்றம் (வை), திருநெற்குன்றம் (வை) பரங்குன்றம் (பரங்குன்று), முதுகுன்றம், வெள்ளியங்குன்றம், செங்குன்றூர்.

கூடல்: கூடல், பள்ளியின் முக்கூடல், பவானி கூடல், வெஞ்ச மாக் கூடல்.

கை: அதிகை, குறுக்கை.

கோட்டம்: குடந்தைக் கீழ் கோட்டம்.

கோட்டூர்: இலம்பையங் கோட்டூர், கோட்டூர்.

கோணம்: கோணமலை, மாகோணம்.

மாகாளம்: அம்பர் மாகாளம், இரும்பை மாகாளம், உஞ்சேனை மாகாளம் (வை).

கோயில்: அகம்படிக் கோயில் (வை), அம்பர்ப் பெருந்திருக் கோயில், ஆண்டார் கோயில் (வடகூர்), ஆலக்கோயில், ஆரூர்ப்

பூங்கோயில், கச்சூராலக் கோயில், கடம்பூர்க்கரக் கோயில், கடம்பை இளங்கோயில், உடையார் கோயில் (சேறை), கண்ணார் கோயில், கரக்கோயில், கருப்பறியலூர்க் கொகுடிக் கோயில், காளையார் கோயில் (கானப்பேர்) கோயில், சங்கர நாராயணர் கோயில், ஞாழற்கோயில் (வை) திருக்கோயில், திருத்தாளமுடையார் கோயில், பருதியப்பர் கோயில், நன்னிலத்து பெருங்கோயில், பெருந்திருக்கோயில், மணிக் கோயில், மீயச்சூரிளங் கோயில், வைகன் மாடக் கோயில், வைத்தீசுவரன் கோயில்.

கோலம்: தக்கோலம், விற்கோலம்.
மிழலை: பெருமிழலை, வீழிமிழலை.
சாக்கை: தஞ்சாக்கை (வை) பஞ்சாக்கை (வை).
சின்னம்: கைச்சின்னம்.
சுரம்: இடைச்சுரம்.
சுழி: வலஞ்சுழி, திருச்சுழியல்.
சேரி: இறையான் சேரி (வை), தெளிச்சேரி, மணஞ்சேரி.
தளி: ஆரூர்ப்பரவையுண்மண்டளி, ஆறைவடதளி, ஓணகாந்தன் தளி, ஓமாம்புலியூர் வடதளி, கச்சிப்பலதளி (வை) கச்சி மேற்றளி, குரக்குத்தளி (வை), திருத்தளி (திருப்புத்தூர்), பழையாறை வடதளி.

தாயம்: வலிதாயம்.

தாள்: திருப்பனந்தாள்.

தானம்: இடைத்தானம் (வை), உசாத்தானம், மாதானம் (வை) நாற்றானம், நெய்த்தானம்.

திட்டை: கருந்திட்டை குடி(வை), கோத்திட்டை (கோத்திட்டை குடி வீரட்டானம்), தென்குடித்திட்டை,

துருத்தி: பூந்துருத்தி.

துறை: அன்பிலாலந்துறை, ஆலந்துறை, திருச்செந்துறை, ஆவடு துறை, கடம்பந்துறை, குயிலாலந்துறை (வை), குரங்காடு துறை, சோற்றுத்துறை, தவத்துறை(வை), திருமாந்துறை, தென்குரங்காடுதுறை, நெல்வாயிலரத்துறை, (திருவரத்துறை) பராய்த்துறை, பாலைத் துறை, பாற்றுறை, பூந்துறை (வை) பெருந்துறை (வை), பேணுபெருந்துறை, மயிலாடுதுறை, மாந்துறை, வட குரங்காடுதுறை, வெண்டுறை.

தோட்டம்: தண்டந்தோட்டம் (ஞை), மாதோட்டம் (வை).
நகர்: தினைநகர், விளநகர்.

நல்லூர்: அரணநல்லூர் (வை), அவளிவணல்லூர், அறையணி நல்லூர், ஏமநல்லூர் (வை), கலய நல்லூர், சேய்நல்லூர், நல்லூர், நியமநல்லூர் (வை), பந்தணை நல்லூர், வெண்ணெய் நல்லூர், பெருமணநல்லூர், பொய்கை நல்லூர்.

நாசி: அவிநாசி.
நிலம்: நன்னிலம்.
நிலை: கருவூரானிலை.
நியமம்: பருதி நியமம்.
நெறி: ஆரூரநெறி, கச்சித் திருநெறி (காரைக்காடு) சேறைச் செந்நெறி, தண்டலை நீணெறி, பிறவாநெறி.
பட்டினம்: காவிரிப்பூம் பட்டினம் (வை)
திருவாதிரையான்பட்டினம் (வை).
பதம்: அநேகதங்காபதம், கச்சியநேகதங்காபதம்.
பதி: திலதைப்பதி.
பயம்: புறம்பயம்.
பருப்பதம்: இந்திர நீல பருப்பதம், கோபருப்பதம், பருப்பதம், வடபருப்பதம்.

பள்ளி: அகத்தியான்பள்ளி, அறப்பள்ளி (வை), இடைப்பள்ளி (வை), கீழைத் திருக்காட்டுப்பள்ளி, சக்கரப்பள்ளி, சிரப்பள்ளி (வை), சிராப்பள்ளி, சிவப்பள்ளி (வை), செம்பொன்பள்ளி, தவப்பள்ளி (வை), நனிபள்ளி, பரப்பள்ளி (வை),பொருப்பள்ளி (வை), மயேந்திரப்பள்ளி, மேலைத் திருக்காட்டுப்பள்ளி.

பாக்கம்: அச்சிறுபாக்கம், வெண்பாக்கம்.
பாடி: தே. 7739: பாடி—4, ஆப்பாடி, எதிர்கொள்பாடி, மழ பாடி, பாடி (வலிதாயம்).

பாலை: கழிப்பாலை, பாலை(த்துறை).

பாழி: தே: 7739. அரதைப் பெரும் பாழி,

புத்தூர்: அரிசிற் கரைப்புத்தூர்; (அழகார்புத்தூர்), கடுவாய்க் கரைப் புத்தூர், கோவந்த புத்தூர் (வை), திருப்புத்தூர்.

புரம்: கரபுரம் (வை), சிவபுரம், சோபுரம், தருமபுரம், தோணி புரம், பாம்புரம், பிரமபுரம், வலம்புரம், விராடபுரம், வேணு புரம்.

புலியூர்: எருக்கத்தம்புலியூர், ஓமாம்புலியூர், பாதிரிப் புலியூர், பெரும்பற்றப்புலியூர், பெரும்புலியூர்.
பூண்டி: முருகன் பூண்டி.

பூதூர்: கொள்ளம்பூதூர்.
பேர்: தானப்பேர்.
பேறு: மாற்பேறு.
பேறூர்: ஏமப்பேறூர் (வை), வடபேறூர் (வை).
பொழில்: ஆலம்பொழில்.

மங்கை: அதியரைய மங்கை (வை), உத்தரகோசமங்கை, சாத்த மங்கை, சூலமங்கை (வை), புள்ளமங்கை, விசயமங்கை, ஸப்த மங்கை.
மணம்: நல்லூர்ப் பெருமணம்.
மயானம்: சுச்சிமயானம் (வை), கடலூர் மயானம், காசிமயானம், நாலூர் மயானம், வீழிமயானம்.
மர்: இளமர், விளமர்.
மலை: அண்ணாமலை, அணியண்ணாமலை (வை), அத்தமலை, ஈங்கோய்மலை, உதயமலை (வை), கந்தமாதனமலை (வை), கயிலைமலை, காளத்தி மலை, கேதாரமலை, கொல்லிமலை, கோணமலை, சைய மலை (வை), திருமலை (வை), நீலமலை (வை), நொடித்தான்மலை, பிரான்மலை, பொதியில்மலை (வை), மகேந்திரமலை, மேருமலை (வை), விந்தமலை (வை), வேதமலை(வை).
மாகாளம்: அம்பர்மாகாளம், இரும்பைமாகாளம், உஞ்சேனை மாகாளம் (வை); உஞ்சேனைதேவி கோட்டைக்குப்பக்கம்.
மாத்தூர்: ஆமாத்தூர்.
மிழலை: பெருமிழலை, வீழிமிழலை.
முட்டம்: குரங்கணில் முட்டம்.
முடி: கடைமுடி, சடைமுடி(வை), பாண்டிக்கொடுமுடி.
முத்தம்: சத்திமுத்தம், மதிமுத்தம் (திலதைப்பதி), மணிமுத்தம் (வை)
முள்ளூர்: கானாட்டு முள்ளூர்.
மூலட்டானம்: ஆரூர், சிதம்பரம்.
மூக்கு: குடமூக்கு.
வலம்: புலிவலம், வலிவலம்.
வனம்: இடும்பாவனம், சாயாவனம், பூவனம் (பூவணம்).
வாய்: ஆலவாய்.
வாயில்: அண்ணல்வாயில் (வை), ஆலவாயில் (வை), குடவாயில், குணவாயில் (வை), ஞாழல்வாயில் (வை), தென்றிருமுல்லை வாயில், நெடுவாயில் (வை), குடவாயில், நெய்தல்வாயில் (வை), ஞாழல்வாயில், நெடுவாயில், நெல்வாயில், புனவாயில், தென்றிரு முல்லைவாயில், வட திருமுழ்ஞை வாயில்.
வேலி: திருநெல்வேலி.

வீரட்டனம்: 8.
''கோத்திட்டையுங் கோவலுங் கோயில் கொண்டீர்''தே.
கோத்திட்டைகுடி வீரட்டானம்.
வீரம்: கரவீரம்.
வேளூர்: கீழ்வேளூர், புள்ளிருக்குவேளூர், பெருவேளூர்,

சிரம் உடைபட்ட ஸ்தலங்கள்:

ரத்நகிரி: இதில் உடைபட்ட பிம்பம் தெற்கே விழுந்து ஒரு சிவ லிங்கமாக இருக்கின்றது.
கஞ்சனூர்: மூளிலிங்கம்.
திருக்கொண்டீசுவரம்: இரண்டு பிளப்பு.; அம்பிகை பசுவாகிக் கொம்பால் பிள்ந்தது.
கீரனூர்: சுகபுரம். அக்கினிக்குக் கிளி வடிவம் தீர்ந்த இடம். உத்ஸவங்கள் இது ஸம்பந்தமாக உண்டு. பேரளம் பக்கம்.

திருவேட்டி (திருவேட்டீசுவரன் பேட்டை):
திருக்காறாயில்: கலப்பைக் கொழுவினால் உழுகையில் உடை பட்டது.

திருக்கோழம்பம்:
4 ஸ்தலங்கள்: திருக்கயிலை, ஆனைக்கா, திருமகேந்திரம், திருவாரூர்.
பஞ்ச ஸ்தலம்: தில்லை, கீழ்வேளூர், வீழிமிழலை புறம்பயம், ஆரூர்.

சில ஸ்தலங்களில் விமானங்களுக்குச் சிறப்புப் பெயர் களுண்டு: (ஐயரவர்கள் தொடர் எண்ணிட்டுப் பயன்படுத்திய இராமசுவாமிப் பிள்ளையவர்களின் தலமுறைப்பதிப்பு).

இந்திர விமானம் (மதுரை)
வீண்ணிழி விமானம் (மதுரை)
வீண்ணிழி விமானம் (காழி) 612.
கஜப்பிருஷ்ட விமானம் (இன்னம்பர், திருநின்றவூர்).
சில கோயில்களுக்கு மாடத்தாற் பெயருண்டு:
தான்றோன்றி மாடம் (ஆக்கூர்).
தூங்கானை மாடம் (பெண்ணகடம்).
வைகன் மாடக்கோயில். 3229, 3231, 3233, 3236, 3237, 3238, 3239.
தலைச்செங்காடு மாடக் கோயில்.

அநுபந்தம் 10

கோயில்கள்:

ஆலக்கோயில்,
இளங்கோயில்,
கரக்கோயில்,
கருப்பறியற் கொகுடிக் கோயில்,
ஞாழற் கோயில்,
திருக்கோயில்.
மணிக் கோயில்.
சிகாழி: 456, 457, 499, 500, 518, 548, 558.
வீழிமிழலை: 590, 601.
வெண்காடு: 335, 337.
சாய்க்காடு:
ஆரூர்:
அரதைப் பெரும்பாழி:
பாதாளேச்சுரம்:
கைச் சினம்:
வாய்மூர்:
திருப்புத்தூர்:
எருக்கத்தம் புலியூர்:
முதுகுன்று:
வலிதாயம்:
திருக்கழுக்குன்றம்:

பெருங் கோயில்—2.

பெருந்திருக்கோயில்—2: 578, 667, 1185, 2870, 4288 அம்பர்.

பெருந்திருக்கோயில்:
கீழ் வேளூர்: 4673—81.

கோயில்கள்—10

வீழிமிழலை: 590—601.
வெண்காடு: 335—337
சாய்க்காடு: 266—276.
ஆரூர்: 4978.
அரதைப் பெரும்பாழி: 5239—48.
பாதாளீச்சுரம்: 5325—34.
கைச்சினம்: 5547—66.

வாய்மூர்: 5617.
திருப்புத்தூர்: 5960.
எருக்கத்தம் புலியூர்: 6302
முதுகுன்றூர்: 6556; 6566–75.

பெருங்கோயில்கள்—78.

8130.
1. அம்பர்ப் பெருந்திருக்கோயில்.
2. கோளிலிப் பெருங்கோயில் 1185.
3. விண்ணிழி கோயில் (வீழி).
4. நன்னிலத்துப் பெருங்கோயில்.
5. பெண்ணாகடத்துப் பெருங்கோயில் 6288.
6. கீழ் வேளூர் 4673, 4674, 4681.

கோயில்களின் அடை: காழிக் கோயில்.

862. வென்றி சேர்வியன் கோயில்.
603. விண்ணள வோங்கி, வந்திழிகோயில்.
667. பெருங் கோயில்.
578. உயர்ந்தார் பெருங் கோயில்.
601. விண்ணிழி கோயில் (எதுகை).
927. வெள்ளமேறி வளர் கோயில்.
1074. நிச்சல்விழ வோவாச் சிரபுரம்.

கோலக்கா:

1168. கோலக்காவு கோயிலாக் கண்டான்.

கோளிலி:

1185. கோளிலிப் பெருங் கோயிலுள்ளானை.

வீழிமிழலைக் கோயில்.

4012: மிழலை மாடக் கோயில்.
4018:
3990: விண்ணிழி விமானம்.
4047: மயானங் கோயில்.
601: விண்ணிழி கோயில் (எதுகை)

வைகன் மாடக் கொயில்:

3230, 3232, 3233, 3235—வைகன் மேற்றிசைக் கோயில்.

குடவர்யில் கோயில்:

5158: நீடும் பெருங் கோயில்.
5166: உயரும் பெருங் கோயில்.
5167: பெருங்கோயில்,

நல்லூர்க் கோயில்:

2839: மலைமல்கு கோயில்.
2838–47: கோயிலே.
2870: பெருங்கோயில்.
2842: மணங் கமழுங் கோயில்.
4202. மலையின்கண் நன்னிலத்துப் பெருங்கோயில்.
4344–54.

பழசை மழபாடி:

2903—2913: மாடமழபாடி.

திருநாரையூர்.

1537: கோயிலாகு மணி நாரையூர்.

திருமங்கலக்குடி:

1678: மங்கலக்குடி... செல்வன்றேவியொடுந் திகழ்கோயிலே.

சேய்ஞல்:

1711: சீரடைந்த கோயின் மல்கு சேய்ஞலூர் மேயவனே.

திருவிசய மங்கை:

1830: அடிகள் கோயிலாம் விசயமங்கை.

திருவையாறு:

1936: புரமவை சிந்தக்கறை கொண்டவர் காதல்செய் கோயில்.
1955–64: கோயில் ஐயாறே.

திருநெய்த்தானம்:

2145, 2146: நெயத்தான மென்னும் குளிர் பொழிற் கோயில்.

சிராப்பள்ளி:

2558: சேயுயர் கோயிற் சிராப்பள்ளி.
2561: சேணார் கோயில் சிராப்பள்ளி

ஆவூர் பசுபதீச்சரம்:

2883: கோயில்.

திருநாகேச்சரம்:

3025: நாகேச்சரம் திருக்கோயிலாக் கொண்டவன்.

திருவிடை மருதூர்:

3129: கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

தென்குரங்காடுதுறை:

3202: கோயில்—குரங்காடுதுறையே.

திருவாக்கூர்:

3571: தொல்கோயில்..... தான்றோன்றி மாடமே.

தலைச்சங்காடு:

3560–69: கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

அம்பர்ப் பெருந் திருக்கோயில்:

3802–3812.

அம்பர் மாகாளம்:

3831: இறைவனுறை கோயில்.

மீயச்சூரிளங் கோயில்:

3857–66.

கருக்குடி:

4308–4314: கருக்குடிக் கோனுயர் கோயில், கருக்குடிப் பூங் கமழ் கோயில்.

திருவாஞ்சியம்:

4317: ஞாலம் வந்து பணியப் பொலிகோயில்.

கோட்டாறு:

3788: உயர் கோயில்.

திருப்புகலூர் வர்த்த மானீச்சரம்:

4483: நாதனார் நவின்றுறை கோயில்.

திருச்செங்காடு:

4549: மணிக்கோயில்.

திருநாகைக்காரோணம்:

4621—2: காரோணங் கோயில் கொண்ட

ஆச்சிராமம், ஆனைக்கா:

4641: ஆச்சிரா மன்னகரு மானைக்காவு முன்னமே கோயிலாக் கொண்டான்றன்னை.

அரதைப் பெரும்பாழி:

5239—49: கோயிலரதைப் பெரும்பாழியே.

இராமேச்சரம்:

6005: கோயிலராமேச்சரம்.

திருமுது குன்றம்:

6529: மறையோனுறை கோயில்முது குன்றடைவோமே.
6566—75: கோயில் முதுகுன்றே.

வலிதாயம்:

7401: கள்வனுறை கோயில்.
7402, 7404, 7407.

திருக்கழுக்குன்றம்:

7496—7505: காதல் செய்கோயில் கழுக்குன்றே.

அநேகதங்காவதம்:

7628: உறையுங் கோயில்

வைகன் மாடக் கோயில்:

3230, 3232: செய்யகண் வளவன் முன் செய்த கோயில்.

நன்னிலம்:

4353: நரபதி நன்னிலம்.

கோயிற் பெயர்கள்:

அருட்டுறை—வெண்ணெய நல்லூர்.
ஆனிலை—கருவூர்க் கோயில்.
உயர்கோயில்—கோட்டாறு—
பசுபதீச்சரம்—ஆவூர்க் கோயில்
பூங்கோயில்—ஆக்கூர்; 3574. ஆரூர், 4802.
மதிமுத்தம்—திலதைப்பதிக்கோயில், 3867—77.
மாமாடம்—தேரழுந்தூர்க் கோயில். 3391, 3401.
மீயச்சூரிளங் கோயில்.
விண்ணிழி கோயில், மிழலை. 593—601.

வெண்கோயில்—வெண்பாக்கக் கோயில்: 7272.
வெள்ளடை—குருகாவூர்க் கோயில்: 404–9, 3331.
தாடகேச்சரம்—பனசைக் கோயில். 1684–94.
தான்றோன்றிமாடம்: திருவாக்கூர்க் கோயில்: 3571-81.
பெருந்திருக் கோயில்—கீழ்வேளூர்: 4673.
பெருங்கோயில்—குடவாயில். 5157–67.
செந்நெறி—சேறைக் கோயில்: 5189, 5199, 5206.
தடங்கோயில்—தூங்கானை மாடம் 6278–88.
தூங்கானைமாடம்: கடந்தைக் கோயில்: 6278–88.
மிகுகோயில்: எருக்கத்தம் புலியூர்: 6308.
கடம்பை யிளங் கோயில்: 8119.

2. மாடக்கோயில்:

3229—
4107—உண்ணாழிகை.
4202—
5860—

விண்ணிழி கோயில்:

591—601, 3990—வீழிமிழலை. 603—612 காழி.

பூங்கோயில்:

4802—ஆரூர்

மூலட்டானம்

தில்லை, ஆரூர்.

திருவிழாக்கள்

ஆரூர்:
4882—பங்குனி உத்தரம்
4983—விழவாரூர்.

ஆவூர்:

2886, 2887, 2888, 2890.

ஆனைக்கா:

2330: விழாவாரும் வெண்ணாவல்.

இடைமருது:
3078: பூசம் புகுந்தாடிய.
3133: தைப்பூச மாடியுலகம் பொலிவெய்த.
3140: பூசநாம் புகுதும்.

ஒற்றியூர்:
6174: ஒற்றியூரையுமுத்தரநீர் மகிழ்வீர்.
7374: உத்தர நாள் தீர்த்தம்.

கச்சி:
2628: விழா.
2929: விழவு.
3595: விழவு.

கடுவாய்க்கரைத்தென் புத்தூர்:
5226: பூசநீர்க் கடுவாய்க்கரைத் தென் புத்தூர்.

கற்குடி:
2540: விழவமருங் கற்குடி.

குடவாயில்:
5172: விழவார்ந்த கோயில்.
காழிவிழா—619.

கோட்டாறு:
3782, 3784, விழா.

கோடிகா:
1646: கொடியணி விழவது.

கோயில்:
18. விழவாரணி தில்லை.

கோலக்கா:
1172: விழவார் கோலக்கா.

சிவபுரம்:
4271: விழவு.

சீகாழி:
778:
918: விழ வோசை.
951,957: விழவொலி மலி கழுமலம்.

991: விழவினொலி.
1073: நிச்சல் விழவோவாச் சிறபுரம்.
1074: ஷி.
1153: விழவொடு நாடொறு மல்குகாழி.
2467: விழவார் வேணுபுரம்.

செங்காட்டங்குடி:
4516: விழவு.

சோற்றுத்துறை:
2687: விழவார் மறுகிற் சோற்றுத்துறை.

திருநெல்வேலி:
6145: திங்கணாள் விழமல்கு திருநெல்வேலி.

திருப்புன்கூர்:
1284: தேர் கொள்வீதி விழவார் திருப்புன்கூர்.

திலதைப்பதி:
3867: விழவார் திலதைப்பதி.

தென்குடித்திட்டை:
2764: பருவநாள் விழவு.

நல்லூர்:
2853: விழமல்க.

நள்ளாறு:
3737: மந்த முழவந் தருவிழா வொலியும்.

நறையூர்:
4192, 4218:

நாகைக்காரோணம்:
4590:

பட்டீச்சுரம்:
2907: மத்தவிழவு.

பனையூர்:
4379:

புகலூர்:
4411: விழவினோசை.

மயிலாப்பூர்:

7434: ஐப்பசியோரைவிழா.
7435: விளக்கீடுதொல் கார்த்திகை நாள்.
7436: ஆதிரை நாள்.
7437: தைப்பூசம்.
7438: மாசிக் கடலாட்டு.
7439: பலிவிழாப்பாடல்செய் பங்குனி உத்தரநாள்.

7440: அட்டமி நாள் (குறுக்கை)
7441: பொற்றாப்பு.
7442: பெருஞ்சாந்தி.

மருகல்: 4650:

மறைக்காடு: 5664:

வலஞ்சுழி:
2929: பூசநீர் பொழியும் புனற் பொன்னி.

விற்குடி:
2887: விழாச்சொற் கவிபாட
2540:
6145: நாள் விழவு.

அம்பர்:
3806: விழவ மரம்பர்.

ஆலவாய்:
3715: எடுக்கும் விழவு நன்னாள் விழவுமிரும் பலியன் பினொ டெத்திசையுமடுக்கும் பெருமை சேர்மாடக்கூடல்.

குற்றாலம்:
6116: நாள் விழ மல்கு குற்றாலம்.

கோளிலி: 5581:

சிவபுரம்:
4271: விழவு.

(திருச்) செங்காடு: 4516

நறையூர்:
4218: விழவு.

நன்னிலம்: 4352:

(திரு) நாகைக்காரோணம்.
4590: தேரார் விழவோவா.

பனையூர்: 4379:

புகலூர்:
4411: விழவினோசை.

(திருப்)புத்தூர்:
5965: விழவார் திருப்புத்தூர்.

(திரு)மறைக்காடு:
5664: தேரியல் விழாவினொலி.
5679: திருவினார் செல்வ மல்கு விழாவணி.

மிழலை:
3914: பெருவிழவு.
4049: விழவறாவீழி.

முதுகுன்றம்:
6529: விழவு.

வெஞ்சமாக்கூடல்:
6205: விழவார் மறுகில் வெஞ்சமாக்கூடல்.

(ஐயரவர்கள் தொடர் எண்ணிட்டுப் பயன்படுத்திய இராம சுவாமிப்பிள்ளையவர்களின் தேவாரத்தலமுறைப்பதிப்புப்படி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன).

சிவஸ்தலம்:

வெஞ்சமாக்கூடல்:
அகஸ்தீசுவரர்: சிற்றாறு.

மேற்குசந்நிதி:
குஸ்ருணீசம் (யமுனாதீரம்)
நாக நாதம் (ஸ்ரஸ்வதீ தீரம்)

பரளீ வைத்யநாதம் (க்ஷிப்ராநதீ தீரம்)
திருவான்மியூர்.
திருமயிலை.
ஸ்ரீ காளஹஸ்தி.
திருக்கடலூர்
புள்ளிருக்கு வேளூர்
ஜம்புகேசுவரம்
திருச்சிராப்பள்ளி
ஸ்ரீவாஞ்சியம்: பண்டு மேற்குச் சந்நிதி.

அக்கீனீசுரம்: 7
(அக்கினி மஹாலிங்கம்)

1. திருப்புகலூர்
2. கஞ்சனூர்
3. திருவஞ்னியூர்
4. திருக்கொள்ளிக்காடு
5. திருக் கோட்டூர்
6. திருக் காட்டுப்பள்ளி
7. —

மதுவன க்ஷேத்ரம்—5:

1. மக்ஷிகாசலம்—ஈங்கோய்மலை.
2. நன்னிலம்.
3. திருக்கொண்டீசுவரம்.
4. கந்தங்குடி. இது பேரளத்துக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது. இதில் தேருக்கு ஸ்வாமி வந்தால் உடனே தேனீக்கள் தேருக்கு வருவது பிரத்தியக்ஷம்.
5. —

காவேரி யுத்தர வாகினியான இடங்கள்: 32.

1. பகண்டக க்ஷேத்ரம்
2. இடைத்துறை ராம நாதபுரம்
3. கபிலாநதி ஸங்கமம்
4. ஸ்ரீ கண்டேசுவரம்
5. சிந்து நதி சங்கமம்.
6. ஆவிடை ஸ்தானம்
7. பெரியூறல்
8. பாலீபுரம்
9. மிருகண்டு ஸ்தானம்
10, 11, 12: இவை மலைக்குள்ளே யிருத்தலால் தெரிய மாட்டா.

13, 14: சேரங்கப்பட்டணம்.

கொள்ளிடத்தில் மூன்று:

1. வடரங்கம்
2. ஆச்சாபுரத்துக்குக் கிழக்கு
3. ..... ஸங்கமம்.

திருமங்கலக்குடி
திருமாந்துறை
கஞ்சனூர்
திருக்கோடிகா
குற்றாலம்
மாயூரம்
குறுக்குக் காவேரி
சுவேதாரண்யத்தில்—2.

காவேரிப்பட்டினத்துக்குக் கிழக்கே—3.
கல்யாண பேத க்ஷேத்ரம்—44
(பிராமண விவாஹ அங்கம்—44).

1. திருநல்லூர் (த்ருவதர்சனம்)
2. திருமறைக்காடு(விவாஹஹோமம்)
3. இடும்பாவனம்
4. திருவீழிமிழலை (கல்யாணம்)
5. ருத்ர கங்கை.
6. அம்பர்
7. திருமணஞ்சேரி (லாலி)

இதற்குச் சமீபத்தில்—3.:

8. பாபநாசம் (மணக் காட்சி)
9. புஞ்செய்க் கிடாரங் கொண்டான் (மாங்கல்யதாரணம்)
10. மணக்கால்—மணிக்கால் (இருவரும் மனையிலிருந்த இடம்).

கால ஸம்ஹர க்ஷேத்ரம்—4.:

1. திருவெண்காடு:

இதில் சுவேத கேது மஹரிஷியின் இருபத்தோராவது வயசில் அவருக்காகவும் சுவேத ராஜாவுக்காகவும் இருமுறை கால ஸம் ஹாரம் நடந்தது. கூர்மபுராணம்: சுவேதன் கூற்றினைக் கடந்த அத்யாயம்.

2. திருக்கடலூர்:

பதினாறாவது பிராயத்தில் மார்க்கண்டேயருக்காகக் கால ஸம்ஹாரம்.

3. திருவீழிமிழலை:

19—வது வயசில் சுவேதகேது வென்னும் ராஜரிஷிக்காகக் கால ஸம்ஹாரம்.

4. திருவையாறு:

ஔத்தாலகிக் (கொஸுர்பிந்தர்க்)காகக் கால ஸம்ஹாரம். த்வார பாலகர்களின் மேல்பாலுள்ள சங்கநிதியைக் கொண்டு ஸம்ஹாரம் செய்வித்து ஸ்வாமியமனை யமலோகத்தில் விழும்படி செய்வித்தருளினர்.

கீழ்ப்புறத்தார் பெயர்: பத்மநிதி:

சூரியபூசை க்ஷேத்திரம்: 12

மீயச்சூர்—சாயாவனம்.
திருவாவடுதுறை—திருக்கோலக்கா.
திருநாகேசுவரம்—தலைஞாயிறு
குடந்தைக் கீழ்க்கோட்டம்— ஸ்ரீவாஞ்சியம்.
வேதாரணியம்—நாகப்பட்டினம்.
புள்ளிருக்குவேளூர்—இன்னம்பர்.

இவற்றில் சூரியனுக்கு ஆலயமுள்ள இடங்கள்: மீயச்சூர், திருநாகேசுவரம், குடந்தைக் கீழ்க்கோட்டம்.

கோமதி க்ஷேத்ரம்—9:

சிவசைலம், சங்கர நயினார் கோயில் முதலியன.

க்ருஷ்ணாரண்யம்—32.

1. திருப்புகலூர்—32. திட்டை நியமம்.
2. புகலூர்.
3. ஸ்ரீ வாஞ்சியம்.
4. கொண்டீசுவரம்.
5. நன்னிலம்.
6. குடவாயில்.
7. சேற்றூர்.
8. —31—

ரக்தாரண்யம்—32:

திருச்செங்காட்டங்குடி, மாத்ரு பூதம், முதலியன.

சுவேதாரண்ய க்ஷேத்ரம்—32:
இவற்றுள் கால ஸம்கார க்ஷேத்ரம்—4.

1. திருவெண்காடு—திருவானைக்கா—32.
2. சாயாவனம்
3. திருக்கடவூர்
4. திருவீழிமிழலை
5. கும்பகோணம்
6. ஆவடுதுறை
7. மத்யார்ச்சுனம்
8. மாயூரம்
9. திருநல்லம்
10. கருவிலி
11. புறம் பயம்
12. வடகுரங்காடுதுறை
13. அன்பில்
14. தவத்துறை
15. மூவலூர்
16. துருத்தி

ஸப்த சாகர க்ஷேத்திரங்கள்:

1. திருநல்லூர்:
கருடன், நரஸிம்மம், முனிவர் எழுவர்க்காக ஸப்த சாகரங்களும் வந்தன.

2. மோட்டூர்:
ஓர் அரசனுக்காக ஸப்தசாகரங்களும் வந்தன. உன்னத புரீஸ்வரர், சிவப் பிரியாம்பிகை; விருக்ஷம்: பனை; கர்ச்சூரம்.

மதுரை:
காஞ்சன மாலைக்கு ஸப்தசாகரங்களும் வந்தன.

சிஸபுரம்: 1. திருமருகல்.
2. திருப்புறம்பயம்.
1814: முனிதாண்டவம்: ஸத்தியாஷாட முனிவர் முதலியோர்.

3 இடத்தில் நடன தரிசனம்:
1. உத்தர கோசமங்கை.
2. கீழ்வேளூர்.
3. புறம்பயம்.

நல்லாடை:
(நூதன வஸ்திர புரி.)
மிருகண்டுவின் ஆச்சிரமம் அரசர்கள் கொடுத்த வஸ்திரங்களை ஷி முனிவர் அக்கினியிற் சாத்தி அவை இலிங்கத்திற் காணப்பட்டன.

ஷிதலத்தில் மிருகண்டு மார்கண்டேயர் முதலியோருடைய விக்ரஹங்கள் உள்ளன.

சிதம்பரத்தில் அர்த்த சாமத்தில் எல்லாத் தலங்களையும் விட்டுவிட்டுச் சிவ பெருமான் வருதலைத் திருநாவுக்சுரசர் புக்க திருத்தாண்டகத்தில் குறிப்பிக்கின்றார்.

திருவதிக் காப்பில் திருவாரூரிலும் இப்படியே.

மயிலாடி: ஆச்சா புரத்திற்கு ஸமீபம்.

கொள்ளம்புதூர்: கிராத தாண்டவம். (திருநா.தே.)
பாகப் பொழுது பகல் 5 நாழிகை. (திருநா.தே.)
—எழுநாள்—(திருநா.தே.)

அலங்கிருத நடராசமூர்த்தி மிழலையில்.
கட்டங்கம்: (திருநா.தே).—கட்டுவாங்கம்—வளைவுக்கத்தி.

தாண்டவம்: ஒன்பதுக்கொன்பது.
—பரத சாத்திரத்துள்ளது ஆடல்—81

சோமாஸ் கந்தம்—41
சந்திரசேகரம்—12
தக்ஷிணாமூர்த்தி—3
கணேசம்—16
சுப்பிரமணியம்—12
பைரவம்—8
வீரபத்திரர்—4
விங்கபேதம்—7

திருத்தலையூர்: சிரபுரம். உருத்திர பசுபதி நாயனார் தலை மட்டும் தெரிந்தமையின் திருத்தலையூர்.

தாராபுரம்: கோயம்புத்தூர் ஜில்லா (விராடபுரம்)

ஸ்வாமி: அகஸ்தீசுவரர். கிழக்கு—சந்நிதி.
அம்பிகை: பிருகந் நாயகி. கிழக்கு—சந்நிதி இடது பக்கம்.
பெருமாள்: உத்தர வீரராகவர்
நதி: அமராவதியின் மேற்கு.

அநுபந்தம்: 11

மகாலிங்கம்:

லிங்கத்தினுடைய கீழ்ப்பாகம் பிரம பீடம். பிரம தத்துவம். கிழ் ஆவுடையார் மேல் ஆவுடையார்: விஷ்ணு தத்துவம். சோமசூத்திரம் என்று தீர்க்கமாயிருக்கிறது.

ஆவுடையாரைக் கட்டிக்கொண்டு மேலே லிங்காகாரமாய் நீட்டிக் கொண்டிருக்கிற வரிசையில் கீழ்ப்பாகம் ருத்திரன். நடுப் பாகம் ஈசுவரன்; மேல்பாகம் சதாசிவம். ஆக, பிரமத்துவம், விஷ்ணுதத்துவம், உருத்திரதத்துவம், ஈசுவரன், சதாசிவம் என ஐந்து தத்துவங்கொண்டது லிங்கம்.

அதனால் 5 அக்ஷரம் (பஞ்சாக்ஷரம்), ஐந்து முகங்கள் ஏற்பட்டன.

மூர்த்தங்கள்:

ஒவ்வொரு முகத்துக்கு ஐந்து மூர்த்தியாய் ஏற்பட்டு 25 மூர்த்தங்கள் இருக்கின்றன.

இதைத் தவிர ஜகத்தாகிற ஒரு லிங்கத்திற்கு எட்டு தத்துவங் கள்: அவை 1. பிருதிவி, 2. அப்பு, 3. தேயு, 4. வாயு, 5. ஆகாசம் 6. சந்திரன், 7. சூரியன், 8. எஜமானன்.

ஒவ்வொரு தத்துவத்திற்கும் எட்டு மூர்த்திகள்: ஆக 64 மூர்த்திகள். இந்த 64 மூர்த்தங்களுள் மேல் சொன்ன 25 மூர்த்தங்களும் அடங்கியுள்ளன.

ஐந்து முகங்களாவன:

1. சத்யோஜாதம்—மேற்கு முகம்.
2. வாமதேவம்—வடக்கு முகம்.
3. அகோரம் — தென்முகம்.
4. தத்புருஷம் — கிழக்கு முகம்.
5. ஈசானம் — ஊர்த்துவமுகம்.

முகம் 5க்கும் ஆகும் 25 மூர்த்தங்களாவன:

1. லிங்கோத்பவம்:

இது அருணாசலத்தில் மேற்குமுகம்: லிங்கத்தில் உள்ளி ருந்து வெடித்துக் கிளம்பிப் பாதம் லிங்கத்தினுள்ளிருக்கும். நெற்றிக்குமேல் லிங்கத்தினுள் எல்லாச் சிவஸ்தலங்களிலும் இந்தச் சிலா மூர்த்தம் இருக்கிறது. கிழக்கு முகமாகச் சிவாலயம் இருந்தால் கர்ப்ப கிரஹத்தில் தக்ஷிணாமூர்த்தி இருப்பது போல் மேல் புறத்தில் இருக்கும். அந்த லிங்கத்தின் கீழே வராகமும் மேலே ஹம்ச பக்ஷியுமிருக்கும். இவர் அருணாசல மேற்புறத் துள்ளார்.

2. தக்ஷிணாமூர்த்தி: ஆலங்குடியில். தென்முகம். (தக்ஷிணா மூர்த்திக்கே ரதம்). இவருக்குச் சமீபத்தில் சமயாசாரியர் மூவரும்,

சனகாதி நால்வரும் தரிசனஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆறுகாலபூஜையும், உத்ஸவாதிகளும், இரதோத்ஸவமும் அந்த மூர்த்தத்துக்கே நடைபெறுகின்றன.

3. ஏகபாதமூர்த்தி: மாண்டுகரிஷிக்குத் தரிசனம் கொடுத்துக் கொண்டு வடக்கே சோமேசுவர க்ஷேத்திரத்தில் ஆவிர்ப்பாவம். திருவாரூர்க்குத் தெற்கே மண்டுகவியாக்கிரபுரம் என்கிற தப்பளாம்புலியூரிலிருக்கிறது. ஒரே கால்; நான்கு கைகள், மற்ற ஸ்தலங்களிலே கோபுரங்களிலே இருக்கும் மூர்த்தி வடக்கு முகம்.

4. சுகாசன மூர்த்தி: சீகாழியில், தோணியப்பர் என்ற மூர்த்தம். சம்பந்த ஸ்வாமிக்குப் பால் கொடுத்தது. மூர்த்தி வடக்கு முகம். இவர் உத்தரகோச மங்கையில் இருக்கிறார்.

5. விக்கினேசானுக்கிரக மூர்த்தி: செங்காட்டங்குடி. மடியில் கணபதிக்கு அநுக்ரகம். கிழக்கு முகம். இவர் ஸோமாஸ்கந்தர் போல, சுவாமியும் அம்பிகையும் இருபக்கத்தினும் நடுவிலே கணபதியுமாக திருச்செங்காட்டங் குடியில் இருக்கிறார்.

6. சோமாஸ்கந்த மூர்த்தி—திருவாரூர். இங்கேதான் முதல் மூர்த்தி. இதைப் பார்த்துத்தான் உலகம் முழுவதும் (சோமாஸ்கந்த) மூர்த்தம். மூர்த்தி கிழக்கு முகம்; சிதம்பரத்தில் மாத்திரம் தெற்கு முகம்.

7. விருஷபாரூடமூர்த்தி: திருவாவடுதுறை. எல்லா ஸ்தலங்களிலேயும் விருஷபாரூடர் தரிசனம் விசேஷம். இங்கு அதிகவிசேஷம். கிழக்குமுகம்.

8. திரிபுராரி: திரிபுரசம்ஹாரமூர்த்தி—திருவதிகையில்; மேரு: வில்—விஷ்ணு: பாணம்; தெற்கு முகம்.

9. சண்டேசாநுக்ரகமூர்த்தி திருவாப்பாடி. மடியில் சண்டேசுரனை வைத்துக் கொண்டு அநுக்ரகம் செய்தத தலம். கிழக்கு முகம். சேசங்கனூர், திருவாப்பாடி கிராமங்களில் இருக்கிறார்.

10. மன்மத சம்ஹாரம் (காமாரி) குறுக்கை: தெற்கு முகம். கடுக்காய் மரம். சுவாமி சந்நிதானத்துத் தெற்கு வீதியில் மன்மதன் சரீரம் சாம்பராய்க் கிடக்கிறது என்பது ஐதிஹ்யம்.

11. காலசம்ஹாரமூர்த்தி (காலாரி): திருக்கடையூர். தெற்கு முகம்.

12. கஜசம்ஹார மூர்த்தி (மாதங்காரி): நழுவூர் என்கிற வழுவூர். கை எட்டு. யானைத் தலையில் சுவாமியினுடைய வலது கால். இடது உள்ளங்கால் தரிசனம். முக்கோணபிரான். தெற்கு முகம்.

13. தக்ஷநாசனம்: (திருப்பறியலூர்). வீரபத்திர மூர்த்தம்; தென் முகம்.

14. பிக்ஷாடனம்: வழுவூர், தாருகாவனம். தென் முகம்.

15. கிராதமூர்த்தி: திருவேட்களம். அருச்சுனன் நிமித்தம். கிழக்கு முகம். பாண்டவர்கள் பூஜித்தது 14 ஸ்தலம். முதல் ஸ்தலம் வேட்களம். கடைசி கோளம்பூர். (கோடம்பூர் என்னும் ஸ்தலத்திலும் உள்ளார்).

16. கங்காளம்: சீகாழி. விஷ்ணு உலகத்தை 3 அடிகளில் அளந்த சமயத்தில் ஸ்வாமி வடுகனாய் (8 வயது உள்ளவராய்) அவர் தோலைச் சட்டையாயும், மாமிசங்களைப் புனுகு போலவும் தேகத்தில் தரித்து, அஸ்தி என்கிற கங்காளத்தைச் சுக்குமாம் தடிபோல் இடக்கையில் இருத்திக் கொண்டு, தென்முகமாய் நோக்கியிருக்கிற சட்டையப்பர் என்றும், வடுகன் என்றும், ஆபதோத்தாரணர் என்றும், கங்காள பைரவர் என்றும் பெயர் பெற்று விளங்குகிறார்.

அவ்வளவு ஆகிருதியுள்ளவருடைய தோலானது 8 வயதுள்ள வடுக மூர்த்திக்கு இடுப்பு அளவு மட்டுந்தான் கண்டது. இந்த மூர்த்தம் திருச்சிராப்பள்ளியில் விக்கிரகமாக இருக்கிறது. சீகாழியில் மூலமூர்த்தியும், உத்ஸவமூர்த்தியும் இருக்கின்றன. இந்த மூன்றடி அளந்த விஷ்ணு சீகாழியிலே தாடாளங்கோவிலில் இருக்கிறார். விஷ்ணு நிக்ரக நிமித்தம் இந்த வடுக மூர்த்தி ஏற்பட்டது.

17. கலியாணசுந்தரர்: திருவீழிமிழலை: காத்யாயனி கலியாணம். தென்முகம்.

18. சக்கரப்பரதர்: திருவீழிமிழலை. விஷ்ணுவுக்குச் சக்கரம் கொடுத்தது. சக்கரதான மூர்த்தம் கிழக்கு.

19. அர்த்த நாரீசுவரம்: திருச்செங்கோடு. மேற்கு முகம். சுவாமியினுடைய பாதத்தில் கங்கை உற்பத்தி.

20. உமாமகேசுவரர் (உமாசகாயர்): (சிகாழியில் உமாமகேசர் எழுந்தருளியுள்ளார்). திருவிடைமருதூர்: மருதப்பர். லிங்கத்துக்கு மேற்புறத்தில் கிழக்கு முகம். அதனடியில் மருதமரம்.

21. ஹரியர்த்தர்: (சங்கரநாராயணர்) திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரநாராயணர் கோயில். விஷ்ணுவும் சிவனும் ஒரே சரீரம். கிழக்கு முகம்.

22. சந்திரசேகரர்: திருப்புகலூர். கிழக்கு முகம்.

23. ஜலந்தராரி: ஜலந்தராசுரவதம்: விற்குடி: மேற்குமுகம்;

24. சபாபதி (நடராஜ மூர்த்தி) சிதம்பரம். தக்ஷிண முகம்.

25. காலபைரவர்: காசி. இந்தப் பைரவமூர்த்தி எல்லா ஸ்தலங்களிலும் மேற்கு முகம். திருவிடைமருதூர், அவிநாசி முதலிய ஸ்தலங்களில் தெற்கு முகம்.

ஈசுவரன்:

4 திக்கும் நோக்கும் ஸ்தலங்கள்:
கிழக்கு: பிரஹித்தம். கணக்கிட முடியாதது.
தெற்கு: திருப்பெருந்துறை, அத்திப்புலியூர்.
மேற்கு: புராணோக்தமாய் 500 ஸ்தலங்கள்.
கோகர்ணம், காளஹஸ்தி, தேர்தகையூர் (தேதியூர்) முதலியன 250.

வடக்கு: கடம்பர் கோயில், ஐயாறு (தென்கயிலாயம்), வடமுல்லைவாயில் முதலிய பல லிங்க பேதங்கள்.

ஸ்வாயம்புவம், ஸித்தம், தைவிகம், ஆசுரம், ராக்ஷஸம், ஆர்ஷம் மானுஷம்.

சிற்பங்களால் ஸ்வரூபமுணர்க.
சூக்ஷ்ம லிங்கம்—கோகர்ணம்.
மத்திம சூக்ஷ்மம்—மத்யார்ஜுனம், வீழி முதலியன.
ஸ்தூலம்: தஞ்சாவூர், புனல்வாயில், கங்கை கொண்ட சோழபுரம், திருச்சி முதலியன.

மகாஸ்தூலம்: வீமசங்கரம் (கேதாவிரிதீரம்) அருணகிரி. ஆறாதாரஸ்தலங்கள் 7.
ஆரூர்—மூலாதாரம்
ஆனைக்கா—ஸ்வாதிஷ்டானம்.
அருணகிரி—மணிபூரகம்.

சிதம்பரம்—அநாகதம்.
காளஹஸ்தி—விசுத்தி.
காசி—ஆஞ்ஞா.
கைலாஸம்—பிரமரந்தரம்.

அஜபா நடனஸ்தலங்கள்:

திருவாரூர், திருமறைக்காடு, நாகை, திருநள்ளாறு, திருவாய்மூர், கோளிலி, திருக்காரைவாசல்.

பஞ்சபூதஸ்தலங்கள்:

பிருதிவி—திருவாரூர், கச்சி.
அப்பு—திருவானைக்கா.
தேயு—திருவண்ணாமலை
வாயு—காளஹஸ்தி.
ஆகாசம்—சிதம்பரம்.

அஷ்டமூர்த்தி ஸ்தலங்கள்:

பிருதிவியாதி ஐந்தோடுகூட சந்திரன் (ஆலவாய்), சூரியன் (காசி) ஆன்மா (பெருந்துறை).

பஞ்ச பிரம ஸ்தலங்கள்:

நடுவே மூலஸ்தானம், நாலுபக்கமும் நாலு லிங்கம்: திருப்புகலூர், திருவாரூர், மாகாளம் முதலியன.

சோதிர் லிங்க ஸ்தலம்: 12.

1. கேதாரம்.
2. ஓங்காரம்: இது நர்மதையின் வடகரையில் இலிங்க மெடுக்குமிடம்.
3. வைத்ய நாதம்.
4. குஸ்ருணீசம்
5. நாக நாதம்
6. மகா காளம்
7. பீமசங்கரம்: இது கோதாவரி தீரத்திலுள்ளது.
8. திரியம் பகம்: இது கோதாவரி யுற்பத்தியிலுள்ளது.
9. காசி விசுவேசுவரம்.
10. ஸ்ரீ சைலம்.
11. கோகர்ணம்
12. கந்தமாதனேசுவரம் ''பூர்வஜேது''.

சிவலிங்க பேதங்கள்:

8 பட்டை லிங்கம்: திருவீரட்டானம், கூந்தலூர், கீழைத் தஞ்சாவூர், ஐயம் பேட்டை. முதலியன.

5 கோண ஆவுடையார் ஸ்தலம்: சோத்தக்குடி; கௌதம ஸ்தாபனம்.

சதுர ஆவுடையார் ஸ்தலம்: வீழி முதலியன.

சக்ராகார ஆவுடையார் ஸ்தலம்: அநேகம்.

லிங்கமில்லாத ஸ்தலம்—மாணிகுழி, புன்கூர், திரியம்பகம், பெருந்துறை முதலியன.

மனோன்மணியில்லாத ஸ்தலம்—ஆலவாய், சிதம்பரம் முதலியன.

மனோன்மணி தியானபேதம்—திருநல்லம்.

அஷ்ட வீரட்ட ஸ்தலம்: கண்டியூர், வழுவூர், கோவலூர், குறுக்கை, விற்குடி, அதிகை, கடவூர், பறியலூர்.

லிங்காதிகஸ்தலம்: (அதாவது ஆவுடையாரிலும் பெரிது) திருநல்லம், கூந்தலூர், மிலட்டூர், வாட்போக்கி, புனவாசல், வீமசங்கரம், சிராப்பள்ளி முதலியன.

அதி சுவாயம்பு ஸ்தலம்: கேதாரம், காளஹஸ்தி, கீழ்வேளூருக்கு அடுத்த புதுச்சேரி, திருக்கொண்டீசுவரம், சிறுகுடி.

லிங்கம் ஸர்ப்பாகாரமாயிருக்கிற ஸ்தலம்: காளாஹஸ்தி.

பலகைப் பாடாயிருக்கிற லிங்கம்: கீழ்வேளூருக்கடுத்த புதுச்சேரி.

ஈச அங்க ஸ்தலம்:

கைலாஸம்	சிரசு
கேதாரம்	நெற்றி
காசி	புருவம்
திரியம்பகம்	நேத்திரம்
ஓங்காரம்	வலக்கை
வீமசங்கரம்	இடக்கை
உச்சயினி	மார்பு
சிதம்பரம்	ஹ்ருதயம்.

சிவரகஸ்யத்தில் 5 ஆம் அம்சம் 20 ஆம் அத்தியாயம்

விராட்புருஷனின் அங்கஸ்தலம்:

காளத்தி	கழுத்து
சிதம்பரம்	ஹ்ருதயம்
அருணாசலம்	வயிறு
ஆனைக்கா	நாபி
திருவாரூர்	மூலாதாரம்

மேற்கண்ட தலங்களைப் பற்றிஹாலாஸ்ய மான்மியத்தாலும் சூதஸம்ஹிதையாலும் அறியலாம்.

பூமியின் 2 காது ஸ்தலம்—கோகர்ணம், ஆரூர்.

(வன்மீகத்தை வேதங்கள் பூமியின் காதுகள் என்கின்றன).

லிங்கம் துளையாயிருக்கிற ஸ்தலம் நல்லூர்; அபிஷேக மில்லை.

மலையின் மேலிருக்கிற சிவஸ்தலங்கள்: ரத்னகிரி, ஈங்கோய் மலை, திருச்சி, செங்கோடு, வீழி, பரங்குன்றம், காளஹஸ்தி, கழுக்குன்றம், விருத்தாசலம், பிரான்மலை, கேதாரம். மல்லி கார்ஜுனம் முதலியன.

இலங்கையில் 2 ஸ்தலம்.

பைரவர் பூசித்த ஸ்தலங்கள்—காசி, சீகாழி முதலிய 8 ஸ்தலங்கள்.

அஷ்டபைரவ ரூப பேதம்—காலபைரவர், சரபர், ஆப தோத்தாரணர், வீரபத்திரர், தண்டதரர், ஸ்வர்ணாகர்ஷணர், அழகபத்திரர்.

நந்திகேசுவரர் பூஜித்த ஸ்தலம்—ஐயாறு, ஸ்ரீ சைலம்.

நவதாண்டவ ஸ்தலம்:

கைலாஸம்—ஸந்தியா நிருத்தம்.
வெண்காடு—புஜங்க தாண்டவம்.
வட ஆலங்காடு—ஊர்த்துவ தாண்டவம் (8 கைகள்).
சிதம்பரம்—பரமானந்த தாண்டவம்.
மதுரை, கீழ்வேளூர்—வியத்தியஸ்த தாண்டவம் (10 கை)
கும்பகோணம்—அம்பிகா தாண்டவம்.
அம்பிகை கையில் தாளம். இடுப்பிற் சங்கிலிமாத்திரம்
வைகல்—இடுப்பிற சங்கிலி மாத்திரம்.
வழுவூர்—வாமாங்கிரிமுக தரிசனம் (8 கை)
பேரையூர்—ஸம்ஹாரதாண்டவம்
உத்தரகோசமங்கை—அதிரகசிய தாண்டவம்.
(குஞ்சித பாதத்தில் பேயார்)

மிருத்திகை, விபூதி, மணல், சந்தனம், பஞ்சலோகம் இவற்றால் லிங்கமிருக்கிற ஸ்தலங்கள்:

மிருத்திகை—திருவொற்றியூர், திருவாரூர்.
விபூதி—ஐயாறு.
மணல்—கும்பகோணம்.
சந்தனம்—காஞ்சி.
பஞ்சலோகம்—நல்லூர்.

தக்ஷிணாமூர்த்தி:

பேதமாயிருக்கிற ஸ்தலங்கள்: அஷ்டாஷ்ட விக்ரகத்தில் வெண்காடு முதல் பேதம் கூறப்பட்டுள்ளது.

தக்ஷிணாமூர்த்தி இல்லாத ஸ்தலம்—காஞ்சி.
ஸ்தான பேதமாயிருக்கிற ஸ்தலம்—கருவேலி.
பாதத்தில் முயலகனில்லாத ஸ்தலம்—வீழிமிழலை.
2 கால்களும் முயலகன் மீதுள்ள ஸ்தலம்—களாக்காடு ஆதியில் தலையாலங்காட்டில் மிதித்தது.

சண்டேசுவரர் பேதங்கள்:

பிரமசண்டர், யமசண்டர், சுவபாவபிரமசண்டர், பிரம சண்டர்: சிதம்பரம், திருச்செங்காட்டங்குடி.

யமசண்டர்—ஆரூர், மற்றதலங்களில் சுபாவ சண்டர். சண்டேசுவரை நீக்கிச் சுவாமி போதல் ஆரூர்.

லக்ஷ்மி, சூரியன், பைரவர், சுப்பிரமணியர், கணபதி இவர் களை உள் வைத்துப் பிரதக்ஷிணம் பண்ணுகிற ஸ்தலங்கள்:

லக்ஷ்மி—திருவாரூர்.
பைரவர்—சிகாழி, அவிநாசி, தேதியூர் முதலியன.
சூரியன்—திருமிகைச்சியூர், குடந்தைக் கீழ்க் கோட்டம்.
சுப்பிரமணியர்—கீழ்வே ளூர், பெருவேளூர், எண்கண், சிக்கல்.
கணபதி—திருவலஞ்சுழி, திருச்செங்காட்டங்குடி, திருவிடை மருதூர், கும்பகோணம் முதலியன.

ஸோமாஸ்கந்தர் உள்ளே இருக்க வேண்டிய ஸ்தலங்கள்:— ஆரூர் முதலிய ஸப்ததியாகஸ்தலம், மத்யார்ஜுனம், ஐயாறு, கும்பகோணம், மாயூரம், ஆவடுதுறை-இவற்றில் உள்ளேயே இருக்க வேண்டும். ஸ்தல விசேஷமூர்த்திகள் உள்ளிருந்தால் ஸோமாஸ்கந்தர் வெளியே இருக்கலாம. இல்லாவிட்டால் கூடாது.

கீரனூர்: ஸோமாஸ்கந்தர் கையில் ஸர்ப்பம்.
வீழிமிழலை: மூலத்யாகர் கையில் ஸர்ப்பம்.

இராமந்தீசுவரம்: ஸோமாஸ்கந்த அம்பிகை கையில் ரிஷபம்.

திருப்புகலூர்: சந்திரசேகரருக்கு ஆதிக்கம்.

சிதம்பரம் நடராஜா, ஆலங்குடி தக்ஷிணாமூர்த்தி, வீழி சக்ரதானம், விண்ணெழுந்தார் இப்படிப்பட்ட இடங்களில் விசேஷ மூர்த்தங்களுக்கு எஜமானத்துவம்—ஸோமாஸ்கந்தருக்கு நாயகத்வம்.

நந்தி:

பஞ்ச நந்தி இருக்கவேண்டிய ஸ்தலம்—உள்ளே-தர்மநந்தி, அடுத்த நந்தி—விஷ்ணு. துவாரத்தில் வடக்கு முகம்—சிலாதர் நந்தி. அசுவமேதப்ரதக்ஷிணம்—பிரம்ம நந்தி. வீதி—இந்திர நந்தி.

தியாகருடைய சாபத்தால் இந்திரனுக்குக் கிடைத்த நந்தித்வம் இல்லாமற் போயிற்று.

மஹேந்திரப்பள்ளி: இந்திரன் விருஷப ரூபமடைந்தது.

பிரம்ம நந்தீசுவரம்: பிரம்மா ரிஷபமானது.

ராமநந்தீசுவரம்: விஷ்ணு ரிஷபத்துவம் பெற்றது.

ஐயாறு, ஸ்ரீ சைலம்: சைலாதி என்ற நந்திக்கு ரிஷபத்வம்.

திருவாவடுதுறை: சுயமான தருமநந்தி.

எல்லா ஸ்தலங்களிலும் நந்தி இருக்கும்படியான காரணம் ஆவடுதுறையே. நந்தி இல்லாமல் ஸ்தலம் இருக்கக்கூடாது.

பூசித்தவர்களும் ஸ்தலங்களும்:

திரிமூர்த்தி: பூசித்த ஸ்தலங்கள்: பாண்டிக் கொடுமுடி. மூவலூர், (மூவரூர்), மத்யார்ஜுனம், ஸ்ரீ சைலம்.

விஷ்ணு பூசித்த ஸ்தலங்கள்: வீழியில்—சக்கரம்.

திருநல்லம்—பூமி. மற்ற க்ஷேத்திரங்களில் அநேக ஆயுதங்கள், வைகுந்த பதம் எல்லாம் அடைந்தது. மகாஸ்தலங்களை விஷ்ணு பூசிக்காமல் இல்லை.

பிரமன் பூசித்த ஸ்தலங்கள்: முதன் முதலில் சிகாழி, மாயூரம், விரிஞ்சிபுரம். இவற்றில் சுவாமிக்குப் பிரமேசுவரர் என்று பெயர். பிரமர் பூசித்ததனால்தான் பிரமோற்சவங்கள் நடக்கின்றன.

மன்மதன் பூசித்த ஸ்தலம்: அம்பர் மாகாளம்.

அஷ்டதிக்பாலகர்கள் பூசித்த தலங்கள்:

இந்திரன்: மகேந்திரப்பள்ளி, மதுரை, ஆரூர், அருணாசலம் நன்னிலம். வல்லம் முதலியன.

அக்கினி பூசித்த தலங்கள் 16. அவற்றில் சில: திருப்புகலூர், திருக்கோட்டூர், திருக்காட்டுப்பள்ளி, நல்லாடை (நூதன வஸ்திரபுரி), திருக்கொள்ளிக்காடு, திருக்கஞ்சனூர், வன்னியூர். இந்த க்ஷேத்திரலிங்கங்களுக்கு அக்கினீசுவரர் என்று பெயர். ஒவ்வொரு ஸ்தலத்திலும் நாக்கு முதலியன உண்டாயின.

யமன்: ஆரூர், தருமபுரம். ஸ்ரீவாஞ்சியத்தில் யமன் ஸ்திரமாய் இருக்கிறார். திருச்செங்காட்டங்குடி, கருவேலி, தாராசுரம். மேலே ஸ்தலங்களில் யம தீர்த்தம் உள்ளது.

நிருதி: கரையபுரம், திருச்சி, கோகர்ணம், கங்கைகொண்ட சோழபுரம்உள்ளிட்ட 9 தலங்கள்.

வருணன்: சிதம்பரம், கோகர்ணம், சத்தியேசுவரம் உள்ளிட்ட 12 தலங்கள்.

வாயு: காளஹஸ்தி, கேதாரம், குணவந்தீசுவரம், ரிஷிவந்தியம் முதலிய 6 தலங்கள்.

குபேரன்: கேதாரம், ஸோமேசுவரம், பிரயாகை, கும்பகோணம், மானாமதுரை, அச்சுதமங்கலம்.

ஈசானர்: திருக்கோடிகா, வெண்காடு முதலியன. வஸு ருத்ர ஆதித்தர் பூசித்த ஸ்தலங்கள்:

அஷ்டவஸுக்கள்—கேதாரம்
ருத்ரன்—காசி, பிரயாகை

ஆதித்யர்—கங்காஸாகரம், மஹேசுவரம், கயை. கயையில் பிரபிதாமஹேசுவரர். லிங்கம் அவர் ஸந்நிதியில். ருத்ரபாதம், ஆலமரத்தடியில் விஷ்ணுபாதம். நவக்கிரகங்கள் ஒன்றாயிருந்து பூசித்த ஸ்தலம் சூரியநாராயணார் கோயில்.

நவக்கிரகங்கள் ஒவ்வொன்றாய்ப் பூசித்த ஸ்தலங்கள்:

சூரியன்: குடந்தைக் கீழ்க்கோட்டம், இன்னம்பர் (இனன்பர்; இனன்—சூரியன்) ஆவடுதுறை திருமிகைச்சூர், (திருமீயச்சூர்) வெண்காடு, சாயாவனம், தேதியூர், திருவையாறு, திருத்தாளமுடையார் கோயில், கழுக்குன்றம், பருதி நியமம், ஆடானை.

ஸோமன்: கேதாரம், ஸோமேசுவரம், பிரயாகை, கும்பகோணம், மானாமதுரை, அச்சுதமங்கலம். சோமனால் பூசிக்கப்பட்ட லிங்கங்கள் சோமேசுவரர் எனப்பெயர் பெறுவர்.

அங்காரகன்: சுச்சித்திருநெறிக்காரைக்காடு.
புதன்: வெண்காடு, சீகாழி, குருகாவூர், .
குரு: திருக்கொண்டீசுவரம்,பெருஞ்சேரி, கோயில், மாங்குடி.
சுக்ரன்: ஸ்ரீ வாஞ்சியம், காஞ்சி, கரையபுரம்.
சனி: திருநள்ளாறு, வேதாரணியம், ஆரூர், செங்காட்டங்குடி.
ராகு: கேதாரம், சீகாழி.
கேது: கேதீசுவரம் (இலங்கையில்).

வேதங்கள் பூஜித்த ஸ்தலங்கள்:

வேதாரணியம், திருவேதிகுடி, தேரழுந்தூர், திருக்கழுக்குன்றம். ஒவ்வொன்றிலும் 4 வேதங்களும் பூஜித்தன.

33 கோடி தேவதைகள் ஒன்றாய்ப் பூஜித்தது கேதாரம், காசி.

ஷி தேவதைகள் தனியாயிருந்து பூஜித்த ஸ்தலங்கள்: திருக்கோடிகா, கோடீசுவரம், கோடிவல்லாரி, ஸ்ரீ ஹர தீர்த்தம்.

திருவொற்றியூர்க்கடுத்த 3 மைலில் ஹரஹரிகோடி தீர்த்தம்.

கங்காஸாகரம், மகேசுவர கோடி.

ஸித்தர்கள் பூஜித்த ஸ்தலங்கள்: சித்தர்க்காடு, ஆவடுதுறை, திருநறையூர், செல்லூர், வல்லம், குப்ஜம், சித்தன்வாழூர், கடுவெளி.

சப்த மாதர்கள் பூசித்த தலங்கள்: ஹாலாஸ்யம் (மதுரை) திருப்பத்தூர், திருவையாறு, திருவானைக்கா. இந்தத் தலங்களில் சப்த மாதர்கள் பூசித்துக்கொண்டு தட்சிணாமூர்த்தி சந்நிதானத்தில் இருக்கின்றனர்.

நவதுர்க்கைகள் பூசித்த தலங்கள்:

ஸ்ரீ சைலம், திருக்குறுக்கை, துர்க்காச்சி, திருவாஞ்சியம் கீழகரம்.

அஷ்டகாளி பூசித்த தலங்கள்:

உச்சயினி மகாகாளம், திருவதிகை, சீகாழி, திருவெண்காடு, ஸ்ரீஹரதீர்த்தம், கிழ்வேளூர், புதுச்சேரி (கீழ்வேளூருக்குத் தென் கிழக்கில் உள்ளது) அம்பர் மாகாளம், காளியாக்குடி.

முப்பத்து முக்கோடி தேவர்கள் மூன்று தொகுப்பாக இருந்து தாபித்துப் பூசித்த தலங்கள்:

பதினொருகோடி தேவர்கள் ஆகாசத்தில் தாரகேசுவரம் முதலிய பதினொருகோடி லிங்கங்களையும்.

பதினொரு கோடி தேவர்கள் பூமியில் காசிப்பதியில் விசு வேசுரம் முதலிய பதினொரு கோடி லிங்கங்களையும்.

பதினொரு கோடி தேவர்கள் பாதாளத்தில் ஹாடகேசுவரம் முதலிய பதினொரு கோடி லிங்கங்களையும் தாபித்துப் பூசித் தார்கள்.

உச்சயினியில் மகாகாளலிங்கத்தை முப்பத்து முக்கோடி தேவர்களும் இரவில் பூசிக்கின்றார்கள். அத்தமனமாய் விடின் மனிதர்கள் அங்கே பூசிக்கச் செல்ல முடியாது. தேவர்கள் பூசை செய்வதினால் உண்டாகும் வாத்திய கோஷம் இப்போதும் கேட்பதாகச் சொல்லுகின்றார்கள்.

நவசித்தர்கள் பூசித்த தலங்கள்:

செல்லூர்: இது திருக்கொள்ளம்பூதூர்க்குக் கிழக்கே ஒரு பர்லாங்கிலுள்ளது. இதில் 9 சித்தர்கள் பூசித்த தலங்கள் உள்ளன. இது சல்லியபுரம் எனவும் வழங்கும்.

1. கடுவெளிச்சித்தர்: கடுவெளி என்னும் ஊர் திருவை யாற்றுக்கு மேற்கே மூன்று மைல்தொலைவில் உள்ளது.

2. வல்லசித்தர்: வல்லம் தஞ்சாவூர்க்கு மேற்கேயுள்ளது.
தீர்த்தம்: வச்சிர தீர்த்தம்.
மூர்த்தி: இந்திரேசுவரர்.
தலம்: வச்சிரபுரி.
இவ்வூரில் வல்லசித்தர் பொன்செய்த கிட்டான்கள் உள்ளன.

3. முறங்கட்டுசித்தர்: வேணுநாதர்.

4. வரகுலசித்தர்: இவர் திருக்குறுக்கை வீரட்டானத்திற்கு வடக்கேயுள்ள சித்திபுரத்தினர்.

5. பாம்பாட்டுச்சித்தர்: இவர்பேழைகுடியில் வாழ்ந்தவர்.

6. கல்லுளிசித்தர்: இவர் இருப்பிடம் நாகப்பட்டினத்திற் குப் பக்கத்தில் உள்ள சித்தவனம்.

7. குகைசித்தர்:

8. குரு சித்தர்:

9. பஞ்சாக்ஷர சித்தர்: இவர் இருப்பிடம் திருவண்ணா மலையின் பக்கத்துள்ள பவளமலையிலுள்ள குகை.

திருவாவடுதுறை—நவசித்தபுரம்.
திருப்புடைமருதூர்.
சாத்தனூர்: சுவாமி :சித்தேசர்.
சித்தர்காடு—சித்தவனம்.

வல்லம், குப்ஜம், கரூர், சித்தன்வாழூர், கடுவெளி.
வஸிஷ்டர்: பெருமுளை.

48,000 ரிஷிகள் ஒன்றாய்ப் பூசித்த ஸ்தலங்கள். பெருஞ்சேரி, வழுவூர், தாருகாவனம்.

தனியாய் ரிஷிகள் பூஜை பண்ணினவை:

காவேரி தீரங்களில் ஸமுத்ரம் முதல் கரூர் வரையில் ஒவ்வொரு திடல்களிலும் ஸ்தலங்களிலுமிருக்கிற லிங்கங்களெல்லாம் ரிஷிகளால் அரண்யமாயிருந்து பூஜிக்கப் பட்டவை. ஊர்களானதும் அநேக இடங்களில் வயல்களில் மறைந்தும் மறையாமலுமிருக்கின்றன. காளஹஸ்தி முதல் இராமேசுவரம் வரை பார்க்கலாம்.

அசுரர்கள், இராக்ஷஸர்கள் பூசித்த தலங்கள்: கோகர்ணம் முதலான மேற்கு ஸமுத்ரதீரங்களில். கேரளம் முழுவதும் அசுர ராக்ஷஸ லிங்கம். வாதாபி வில்வலன்: வில்லிவாக்கம்.

பூதகணங்கள் பூசித்த தலங்கள்: கேதாரம், காசி, ஹிமகிரி தேவப்ரயாகை, நைமிசாரணியம்.

லக்ஷ்மி 8 பேதமாயிருந்து பூசித்த ஸ்தலங்கள்: ஆரூர். ஸ்ரீவாஞ்சியம். வைகல் மாடம். திருக்கோழம்பம், திருநின்றியூர், மாயூரம், திருமருகல், திருப்புகலூர்.

ஜாம்பவதி: சங்கர நாரயணர் கோயிலின் வடக்கே 10 மைலில் உள்ள சதுரகிரியிலும் திருச்சுழியலிலும் இவள் பூசித்துக் கண்ணனை மணந்தனள்.

ஸரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி பூசித்த தலம்: திருவீழிமிழலை.

மூதேவி: பழையாறை, ஆரூர், மயிலை.

விஷ்ணு தசாவதாரத்திலேயும் பூசித்த ஸ்தலங்கள்:

இராமர்: இராமேசுவரம் முதலானவை.

பரசுராமர்: பழுவூர், குடிமல்லம், பேரையூர், அவிநாசி, கேரளம், முழுமையும்.

பலராமர்: வேதாரணியம், குழகர்கோயில், கோடிக்கரை.

கிருஷ்ணர்: பெருஞ்சேரி, குருக்ஷேத்திரம், விருஷபேசுவரம் வில்வகேசுவரம் முதலியன. வழுவூரில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்தார். வீழிமிழலை (வீழிநாதரைப் பூசித்துச்சாம்பன் என்னும் புதல்வனைப் பெற்றார்).

விசேடமாகக் காஞ்சி ஏகாம்பரேசுவரரையும் பூசித்தார்.

கல்கியவதாரம்: திருநெல்வேலி, சிவசைலம், புடார்ஜுனம், பாபநாசம். ஹநுமார் முதலிய வானரகோடிகள்: இராமேசுவரம். கந்தமாதனபர்வதம் முழுமையும். இராமலக்ஷ்மணர் சீதை இவர்கள் பூசித்த லிங்கங்களையும் ஹநுமார் பூசித்தார். குரங்காடுதுறை 108 சிவாலயம். ஆடுதுறைப் பெருமாள் கோயிலில் ஹநுமாருக்கு வால் வளர்ந்தது.

ஸப்தரிஷிகள் ஒன்றாய்ப் பூசித்த தலங்கள்: லால்குடி (திருத்தவத்துறை), ரிஷியூர், நல்லூர், நல்லூரில் மோக்ஷம். ஸப்தரிஷிகள் வெவ்வேறாய்ப் பூசித்த தலங்கள்:

திருவையாறு முதலிய 7 ஸப்த ஸ்தலங்கள்.
திட்டை—வஸிஷ்டர்
திருப்பழனம்—காசியபர்

திருக்கண்டியூர் (சிவன் பிரமன் தலையைக் கொய்த தலம்) இப்படி ஸ்தலங்கள் தோறும் இவர்கள் பூசிக்காத இடங்கள் இல்லை. 8 திக்கிலும் இவர்கள் தீர்த்தமில்லாத ஸ்தலமில்லை.

நவவியாக்கிரபுரம்:

பெரும்பற்றப்புலியூர், திருப்பாதிரிப் புலியூர், கானாட்டாம் புலியூர், ஓமாம்புலியூர், தப்பளாம்புலியூர், அத்திப்புலியூர், முனிபுலியூர், சிறுபுலியூர், பெரும்புலியூர்.

வியாக்கிரபாதர், பதஞ்சலி பூஜித்தது: விளமர், ருத்ரகங்கை, மொத்தம் 9 புலியூர்.

மாணிக்கவாசகர் பூசித்த தலங்கள்: பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருவாலவாய், சிதம்பரம்.

சூதர் பூசித்த தலங்கள்: கொற்றங்குடி, கூகூர்.

லனகாதி நால்வர் பூசித்த தலங்கள்: ஆவடுதுறை, திருக் கோழம்பம், திருநல்லம், மிருடேசுவரம், தாரேசுவரம், குணவந் தீசுரம், லஜ்ஜேசுவரம், கோகர்ணம்.

15 திதிகள் பூசித்த ஸ்தலங்கள்:

பிரதமை: காஞ்சி.
துவிதியை: கருவேலி, திருச்செங்காட்டங்குடி முதலியன.
திரிதியை: கேதாரம், சிந்தாமணி.
சதுர்த்தி: திருவலஞ்சுழி.
பஞ்சமி: லால்குடி.
ஷஷ்டி: வெண்காடு (ஸ்கந்தஷஷ்டி).
ஸப்தமி: ஆவடுதுறை, திருவொற்றியூர், சிதம்பரம்.
அஷ்டமி: பைரவ தீர்த்தம், காசி, ஐயாறு, மாகாளம்.
நவமி: காஞ்சி, காமதீர்த்தம், சிதம்பரம், வீழிமிழலை.
தசமி: ஆரூர், (கமலாலயம்).
ஏகாதசி, துவாதசி: சிந்தாமணி.
திரயோதசி: கோகர்ணம்.
சதுர்த்தசி: காளத்தி, மல்லிகார்ஜுநம் (சிவராத்ரி).
அமாவாசை, பௌர்ணமி: ஸகல தீர்த்தம், மாயூரம், அர்த்தோதயம், மஹோதயம்.

வாரங்கள் பூசித்த ஸ்தலங்கள்:

ஞாயிறு: திருநாகேசுவரம், ஸ்ரீவாஞ்சியம், திருத்தாள முடையார் கோயில், சாயாவனம்.
திங்கள்: திருக்கடையூர், சிவபுரம்.
செவ்வாய்: வைத்தீசுவரன்கோயில், அத்திப்புலியூர்.
புதன்: வெண்காடு (சந்திரபுஷ்கரணி).
வியாழன்: பெருஞ்சேரி, திருக்கொண்டீசுவரம், கச்சி, கழுக்குன்றம்.
வெள்ளி: காஞ்சி (வாமதீர்த்தம்).
சனி: திருநள்ளாறு, ஆரூர் முதலியன.
மாஸ, பர்வ பூஜைகள் ஆகமங்களால் அறியலாம்.

27 நக்ஷத்திரங்கள் பூசித்த ஸ்தலங்கள்:

அசுவதி: திருக்கடையூர்.
பரணி: ஸ்ரீ வாஞ்சியம்.
கார்த்திகை: சரவணப்பொய்கை, காசி.
ரோஹிணி: எல்லா விஷ்ணுத்தலங்களும்.
மிருகசீர்ஷம், திருவாதிரை: சிதம்பரம் (சிவகங்கை).
புனர்பூசம்: இராமேசுவரம் முதலான இராமதீர்த்தம்.
பூசம்: பிரசித்தம்.

ஆயில்யம்: வழுவூர், மாகாளம்.
மகம்: பிரசித்தம்.
பூரம்: பிரசித்தம்.
உத்தரம்: பங்குனி உத்தரம் (திருவாரூர்).
ஹஸ்தம்: திருவாரூர்.
சித்திரை: பிரசித்தம்.
சுவாதி: கேதாரம் (தீபாவளி).
விசாகம்: (வைசாகம்) பிரசித்தம்.
அநுஷம், கேட்டை: திருநெல்வேலி.
மூலம்: மதுரை.
பூராடம்: சங்கர நயினார்கோயில்.
உத்திராடம்: திருச்செந்தூர்.
திருவோணம்: அர்த்தோதயம், மகோதயம்.
அவிட்டம், சதயம்: காளஹஸ்தி, மல்லிகார்ஜுனம் (சிவராத்திரி).
பூரட்டாதி, உத்தரட்டாதி: திருவாரூர் (தேவதீர்த்தம்).

ரேவதி, திருக்கடையூர்: அமிருத தீர்த்தம், திருவாவடுதுறை. மாஸம் பூர்வ பக்ஷத்தில் ஆரம்பமாகி அமரபக்ஷத்தில் தீர்த்தம்—அமரபக்ஷம்.

ஸ்நாநம்—வெண்காடு, ஆனைக்கா. மாஸம் அமரபக்ஷம் ஆரம்பித்து, பூர்வபக்ஷம் ஸ்நாநம் திருச்செங்காட்டங்குடி. சிதம்பரம், ஆவடுதுறை, திருமிகைச்சியூர் (திருமீயச்சூர்).

பூர்வபக்ஷத்தில் ஆரம்பித்து அதே பக்ஷத்தில் தீர்த்தம்: அநேக ஸ்தலங்கள். மாயூரம், ஸ்ரீவாஞ்சியம், திரு நாகேசுவரம்-இந்த 3க்கும் மாஸாந்தமும் வாரமும் கணக்கு.

ஈசுவரனுக்குச் சாத்தக்கூடாத புஷ்பங்கள்:

மாம்பூ, தாழம்பூ, வாகைப்பூ, சம்பரத்தை, கருப்புப் புஷ்பங்கள் (கருநீலம் தவிர).

ஈசுவரனுக்கு மிகப் பிரியமுள்ள புஷ்பங்கள்:

செங்கழுநீர், சரக்கொன்றை, கருஊமத்தை, வெள்ளெருக்கு. செங்கழுநீர் எப்போதும் இவர் சிரசிலும் அம்பிகை கையிலும் உண்டு.

பூசிக்கிற லிங்க வகைகள் 42 விதம்.

(1) க்ஷணம், (2) ஸ்திரசரம்.

க்ஷணம்: கோமயம், பஸ்மம், பால், தயிர், மிருத்திகை,

வெண்ணெய், நெய், கூர்ச்சம், சந்தனம், மஞ்சள், உதககும்பம், புஷ்பப்பந்து (12).

ஸ்திரசரம்: பஞ்சலோகங்கள் (ஈயம் முதல் தங்கம் வரை) யந்திரம், லிங்கம், மூர்த்தி 3 விதமாய் நவரத்னம்—தனியாயும் லிங்கமாயும்.

ருத்ராக்ஷம்—தசாயுதங்களிலும் பூஜை.

அக்னி, சூரிய சந்திரர், ஹிருதயம் 4 இலும்...அடியார் களுக்கு ஆலயத்தில் ஸதாகாலமும் பூஜை.

கருங்கல், தாரு, இவைகளால் யந்திரம், லிங்கம் மூர்த் தியைக் கிரகத்தில் பூஜிக்கக் கூடாது. பூசித்தால் தோஷம் காட்டும். ஆனால் பாணலிங்கம், மரகதம், ஸ்படிகம், ஸாளக் கிராமம் முதலியவற்றிற்குச் சிலா தோஷமில்லை. நாலு வருணத் தாரும் பூசிக்கும் லிங்கம்:

கிருஷ்ணா நதிக்கும் உடுப்பிக்கும் வடக்கே ஹிமகிரி வரை யிலுமுள்ளதை யாரும் பூஜிக்கலாம்.

வைதிகர்கள் வைதிகமாய்ப் பூசிக்கிற ஸ்தலங்கள்:
சிதம்பரம், திருவொற்றியூர், திருச்செந்தூர் முதலியன.

அம்பிகை கையில் லிங்க மிருக்கிற ஸ்தலம்: கேதாரம்.

அம்பிகை கட்டிக்கொண்டு அவயவங்கள் லிங்கத்தில் அழுந்தி யிருக்கிற ஸ்தலம்: காஞ்சி.

மார்க்கண்டேயருடைய ருத்ராக்ஷம் அழுந்தியிருக்கிற க்ஷேத்ரம்:
திருக்கடையூர்.

சுவேத கேதுவின் ருத்ராக்ஷம் அழுந்தியிருக்கிற லிங்கம்:
திருவீழிமிழலை.

திரிமூர்த்தி இருக்கிற தலம்: தலைக்காவேரி, பாண்டிக் கொடுமுடி, மூவலூர் (மூவரூர்).

பூதேவி பூசித்த தலம்: திருநள்ளாறு.

சுவாமிக்குச் சிகையிருக்கிற தலம்: கண்ணபுரம் சமீபத்திலுள்ள கோட்டூர், குடுமியாமலை.

சுவாமி அகஸ்தியருக்குக் கலியாண தரிசனம் கொடுத்த ஸ்தலங்கள்:
நல்லூர், திருமணஞ்சேரி, திருவீழிமிழலை, ருத்திர கங்கை, அம்பல், திருமறைக்காடு, இடும்பாவனம், பாபவிநாசம்.

விஷ்ணு ஸ்தலம் சிவஸ்தலமானது: திருக்குற்றாலம்.

விஷ்ணு சயனத்திலும் லிங்கத்தைப் பூசிக்கிற ஸ்தலம்: திருவனந்த புரம். விஷ்ணு களத்திரமாயிருக்கிற ஸ்தலம்: வழுவூர்.

சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலமானவை: திருக்கோஷ்டிபுரம், திருப்பதி, அழகர்கோயில், நாச்சியார் கோயில்.

4 புறமும் பொய்கையாயிருக்கிற ஸ்தங்கள்:

திருப்புகலூர், திருவாலம்புழை, ஆலங்குடி, திருக்கொண்டீசுவரம், திருநந்தியூர்.

திருக்கொண்டீசுவரத்தில் அம்பிகை பசுவாகி கொம்பால் உழும்போது லிங்கம் இரண்டு துண்டானது. (கொண்டி-பசு).

நந்தி விலகின ஸ்தலம்—தெற்கு வடக்கானது: திருப்புன்கூர், பட்டீசுவரம், ஏனனூர்.

நந்தி முகம் திரும்பின ஸ்தலம்: சுஞ்சனூர்.

நந்தி தேகம் துளைபட்டிருக்கிற ஸ்தலம்: வெண்காடு.

நந்தி பின்புறத்தைக் காட்டிக் கொண்டிருக்கிற ஸ்தலம்: பொன்னரை ஸ்டேஷனுக்கு ஸமீபம்.

ஓர் ஆலயத்தில் 2 லிங்கம் பாடல்பெற்றவை: ஆரூர், திருப்புகலூர், திருமிகைச்சியூர் (திருமீயச்சூர்).

லிங்கத்திற்கு லிங்கம் எதிரிலிருக்கிற ஸ்தலம்: வீழி, திருமாகாளம்.

காவேரி

காவேரி உற்பத்தி முதல் ஸங்கமம் பரியந்தம் உத்தரவாகினி, தக்ஷிணவாகினி: பச்சிமவாகினி ஸ்நாநகட்ட பேதங்கள் முதலியன:

மேற்கே: தலைக்காவேரி—உத்தரவாகினி.

திரிவேணி ஸங்கமம்—பச்சிமவாகினி—வலம்புரி— மேற்கு முகம். அதிலிருந்து வடக்கே உத்தரவாகினி. அங்கிருந்து கிழக்கே-ஓடத்துறை ராமநாதபுரம் உத்தரவாகினி:—கபில ஸங்கமம்—

ஸ்ரீரங்கபட்டணத்தில் ஒரு கிளை உத்தரவாகினி—கரூர் பரியந்தம் தக்ஷிணவாகினி. மத்யார்ச்சுனம் வரை பூர்வ வாகினி: திருமங்கலக்குடி, திருக்கோடிகா, இவ்விடங்களில் உத்தரவாகினி-குற்றாலம், மாயூரம் உத்தரவாகினியாயிருந்து தவறிப்போயின.

பிஞ்சை, கடாரங்கொண்டான் 2 லும் மேற்கு முகம்—உத்தரவாகினி திரும்பல்—மற்றவை பூர்வ வாகினி — சாயாவனத்திற்கு மேற்கு — வெண்காடு, அகோர நடராஜா ஸந்நிதிக்குத் தெற்கே, அதாவது, அகஸ்தியாச்சிரமம் செங்கழுநீர்ப் படித்துறை என்றும் பெயர். தாசில் சொக்கலிங்கம்பிள்ளை சத்திரவாசல், காவேரி உற்பத்திலய பரியந்தம் எங்கெங்கே என்ன என்ன பலமோ அந்தப் பலம் முழுமையும் அவ்விடத்தில் ஒரு ஸ்நாநத்தால் கிடைக்கும்.

அங்கே 360 நாளும் ஜலமிருக்கும். காவேரி ஸங்கமம்—உத்தரவாகினி ஸ்தலங்கள் கோடி கோடியாயிருக்கின்றன.

3 நாள் தோஷம்: ஆடிமீ முதல் 3 நாளுக்கு நதிகட்குத் தோஷம். முக்கியமாய் காவேரிக்கு. அதனால்தான் 18 ஆம் பெருக்கு ஆடியில் கொண்டாடப்படுகிறது. துலாமாஸத்தில் காவேரிக்கு மஹிமை. அதனால் தோஷம் அறியலாம்.

காவேரியில் கங்கை வருகிற காலம்:

திருக்கோடம்பூர்: அமாவாசை வரும்போது.

மாயூரம்: அமாவாசை மத்தியில்.

வீழி: மார்க்கண்டதீர்த்தம்—அமாவாசை—அந்தத்தில்.

ஸப்தஸ்தலங்கள் (ஒரு தலமே குறிக்கப்பெற்றுள்ளது):

மோக்ஷ ஸப்தஸ்தலம்: கஞ்சனூர்—ஹரதத்தர்.
தர்மார்த்த காமிய ஸப்தஸ்தலம்: திருவையாறு—நந்தி.
ஆயுச ஸப்தஸ்தம்: திருநீலக்குடி—மார்க்கண்டேயர்.
மற்ற ஸ்தலங்களில் பாபவிமோசனார்த்தம்.

நடேசர் நித்யம் வருகிற ஸ்தலங்கள்: திருப்பாசூர், வீழிமிழலை.
திருவிசைப்பாப் பாடலுள்ள ஸ்தலங்கள்: வீழிமிழலை, சிதம்பரம், ஆவடுதுறை.

சம்பந்த மூர்த்திக்கு கங்கை வரவழைத்த ஸ்தலம்: குருகாவூர்;

கட்டுச்சாதம், முத்துப்பல்லக்கு அளித்த தலம்: பட்டீசுவரம்.

பஞ்ச பாண்டவர் பூசித்த ஸ்தலங்கள்: கோடம்பூர், தலையாலங்காடு, பெரும்பன்றியூர் முதலியன.

ஒரு ஆவுடையாரில் 2 லிங்கம்: நல்லூர்.
லிங்கத்தில் ரந்தரமுள்ள ஸ்தலம்: நல்லூர்.
நந்தி வாயில் ஜலம் ஊறுகிற ஸ்தலம்: நந்தியூறல் (திருவூறல்).

தீர்த்தத்துக்குள் லிங்கமிருக்கிற ஸ்தலங்கள்:

சிதம்பரம்—சிவகங்கை.
சீகாழி, திருத்தாளமுடையார் கோயில்.

கங்கை முதலிய 12 நதிக்கரையிலுள்ள க்ஷேத்திரங்கள்:

கங்கை: கேதாரம், காசி முதல், மகேசுவரம் வரை.
யமுனை: கோகிலம் முதல் பிரயாகை வரை.
ஸரஸ்வதி: குஸ்ர நாகப் பிரயாகை வரை.
நர்மதை: தாரையடி ஓங்காரம் சோமேசுவரம் வரை.
கோதாவரி: திரியம்பகம் முதல் பீமஸங்கரம் வரை.
கிருஷ்ணா: நந்திபர்வத முதல்—ஸ்ரீ சைலம் வனர.
வடபிநாகிநி: உற்பத்தி முதல் 64 ஸ்தலம் திருக்கோவலூர், அருணாசலம் முதலியன.

காவேரி: ஸஹ்யாத்ரி முதல் வெண்காடு. ஸங்கமேசுவரம் வரை கோடிஸ்தலங்கள்.

ஆவுடையார் கோவில் தெற்கு—சிதம்பரம் வடக்கு—9 கோடி லிங்கங்கள். திரிகோடிகாவில் 3 கோடி லிங்கம்.

ஈசன் பாதத்தில் ஜலம் ஊறிக்கொண்டிருக்கிற ஸ்தலம்: திருச்செங்கோடு.

ஈசன் தலையில் ஜலம் ஊறுகிற ஸ்தலம்: திருவேட்களம்.

லிங்க பீடத்தில் ஜலம் ஊறி ஓடுகிற ஸ்தலம்—கார்வரை.

உத்ஸவமத்தியில் 2 தீர்த்த வாரிகளுள்ள ஸ்தலங்கள்: மாயூரம், வெண்காடு, ஸ்ரீ வாஞ்சியம்.

உத்ஸவமத்தியில் 4 மைல் சுவாமி போகிற தலங்கள்: வழுவூர், வெண்காடு, திருச்செங்காட்டங்குடி.

ஸ்தல புராணங்களைக் கொண்டேதான் ஸ்நாந உற்சவாதிகள் செய்ய வேண்டும். வேதாரணியம், கோகர்ணம், கன்யாகுமரி,

ஸேது—இவை, ஸமுத்ரத்தைத் தொடக் கூடாது. என்பதற்கு விலக்கு—நித்யம் ஸமுத்ர ஸ்நாநம்.

சம்பந்தர் வாகீசர் இரண்டு பேருக்குப் படிக்காசு கொடுத்தது: வீழி.

சம்பந்தர் ஸ்தலங்கள்

சம்பந்தர் இடதுகை விரல் காட்டி, வலக் கையில் பால் கிண்ணமும் கொண்டு கோவணமுங் கட்டாத சில ஸ்தலங்கள். கையில் தாளம், கௌபீநத்தோடே சில ஸ்தலங்கள். ஸம்பந்தர் ஆச்சாபுரத்தில் மாத்திரம் ஸ்தீரீ ஸஹிதம். மற்றவிடங்களில் இல்லை.

சுந்தரர் 2 நாச்சியாரோடிருக்கிற ஸ்தலம்: திருநல்லம் கருநாகப்பேட்டை.

திருவாரூரில்—பரவை மாத்திரம்.

திருவொற்றியூர்—சங்கிலி மாத்திரம்.

எந்த ஸ்தலங்களில் நாயன்மார்கள் பிறந்தார்களோ அந்த ஸ்தலங்களில் நாயகியோடிருப்பர். மற்ற ஸ்தலங்களிலில்லை.

ஈசுவர விமாந பேத ஸ்தலங்கள்:

வீழி, திருமிகைச்சியூர்—கர்ப்பக் கிரகத்தில் விசேஷமுள்ள ஸ்தலம்—வீழி, பிஞ்சை.

சிவராஜதாநி க்ஷேத்திரங்கள்: காசி, காஞ்சி, மத்யார்ஜுநம் மதுரை, நாகை, திருமறைக்காடு, வீழிமிழலை.

சிவாலயத்தில் ஸமஸ்த தேவதைகளையும் பார்க்கலாம். எல்லாத் தேவர்களுமிருக்க வேண்டும். கருப்பக்கிரகப் பிரம்ம ரந்த்ரத்துக்கு நேரே சிவலிங்கம் ஒன்று தானிருக்கலாம். மற்ற தேவர்களை அதற்கு நேரே வைக்காமல் பதவிந்யாஸமாய் வைக்க வேண்டும். அப்படியே இருக்கின்றன உலகத்தில். சில க்ஷேத்திரத்தில் சிவமூர்த்தியினிடத்தில் பிரமா, விஷ்ணு, ஸரஸ்வதி, லக்ஷ்மி, இவர்கள் இல்லாமலிருக்கக் கூடாது. ஒவ்வொரு சிவக்ஷேத்ரத்துக்கும் ஒவ்வொரு விருக்ஷம் பிரதானம். அநேக விருக்ஷங்களுமிருக்கும். பில்வம் முக்யம். பில்வமில்லாமலிருக்கக் கூடாது. செடிகளும் அப்படியே; கொடிகளும் அப்படியே. பூளைச் செடிக்குச் சிறியது லோகத்திலில்லை. அதற்கும் கீழே சிவலிங்கம் இருக்கிறது. மரு, மருக்கொழுந்து, சிவகரந்தை இவைகளுக்குக் கீழே சிவலிங்கம். காடு என்று வெகு ஸ்தலங்கள்

உள்ளன. அவற்றிலும் மனோவாக்குக் கெட்டாத செடி கொடிகள் உள்ளன.

அரணியம்-பெரிய காடு; சுமார் 100 மைலுக்குக் குறையாது.

உலகத்திலுள்ள லிங்கங்கள்

புராணோக்தமான பெயர்கள் தவிர ஹிமஸ்ஸேது பரியந்தம் இராமநாதம், இராமலிங்கம் என்று அநேகம்; கணக்கிடமுடியாது. விந்திய முதல் ஸேது பரியந்தம் அகஸ்தியலிங்கம், அகஸ்தியேசுவரம் என்று வெகு ஸ்தலங்கள். அதிலும் காவேரி, உற்பத்தி ஸங்கம பரியந்தம் ஒவ்வொரு புண்ணிய ஸ்தலத்திலும் அகஸ்திய லிங்கமும் அகஸ்திய மூர்த்தியுமில்லாமலில்லை. தனியாயிருக்கிற அகஸ்திய லிங்கங்கள் கோடி. 16 பேதமாய் அகஸ்தியருக்குக் கலியாண தரிசனம் கொடுக்கப்பட்டுள்ளது. கைலாஸநாதர், விசுவலிங்கம், சுந்தரேசுவரர், சிவ காஞ்சி ஏகாம்பரேசுவரர். அவற்றிலும் சில காளஹஸ்தீசுவரர், சில அருணாசல லிங்கம்.

அரண்யேசுவரர், தேஜினீசுவரர், பிபிலிகேசுவரர், மத்யார்ஜுநேசுவரர் நாகேசுவரர் முதலியவைகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

நாலு வேதம் 4 முகம். நடுமுகம் ஆகமம்.

ஈசுவரனுக்குக் கோரம், சிவம் என்ற 2 ரூபங்கள்.

ராப் பட்டீசுவரத்தில் ஸரஸ்வதியும் லக்ஷ்மியும். மத்யார்ஜுனம்—ஸப்த மாதர்கள்.

பெரியதாயிருக்கின்ற மூர்த்திகள்:

1. கணபதி, சுப்ரமணியர்: சிதம்பரம்.
2. ஸபாபதி: திருநல்லம், திருநெல்வேலி.
3. ஸோமாஸ்கந்தர்: பெருவேளூர், விருத்தாசலம்.
4. தக்ஷிணாமூர்த்தி: மாங்குடி, ராப்பட்டீசுவரம்.
5. பைரவர்: க்ஷேத்ரபால புரம்.

திருவாரூர், மாங்குடி தக்ஷிணாமூர்த்திக்கு இடக்கை தொங்கல். கும்பகோணம் (அவிமுத்தி) திருமாந்துறை, வெண்காடு, மூன்றிலும் ஒரே மாதிரியான தக்ஷிணாமூர்த்தி.

அம்பிகை:

வண்டார்குழலி, பூங்குழலி முதலியனவும் பெரியநாயகி, லோகநாயகி முதலியனவும் கிரிகுசாம்பிகை, வேணுகுசாம்பிகை

சுந்தரகுசாம்பிகை, பாலகுசாம்பிகை, முதலியனவும், நீலாய தாக்ஷியும், நீலாம்பிகை ஸ்வர்ணாம்பிகை, மங்களாம்பிகை, ஞானாம்பிகை, முதலியவும் பிரவாளவல்லி, அமிர்தவல்லி, மரகதவல்லி, நீலோத்பலாம்பிகை முதலியனவும் பிரஹ்மவித்யை, அகிலாண்டேஸ்வரி முதலியனவும் தர்ம ஸம்வர்த்தனி, அபயாம்பிகை (பயக்ஷயே) திருமாளம், முதலியனவும், பாலை திரிபுர சுந்திரி, கிரிசுந்தரி, வேதநாயகி, வீணாவாத விதூஷணி (வேதாரண்யம்) ஞான பிரஸூநாம்பிகா, (பிரஸூநாபுஷ்பம்) காளஹஸ்தி, கோஷாம்பிகை (சாயாவனம்) வித்யுன்மேகலா வல்லி, (மின்னற் கொடி மேகலை) ஸர்வாவயஸுந்தரி (சுருவேலி), காந்திமதி, கோமதி, பார்வதீ, கௌரி முதலியனவும் இப்படி ஒவ்வொரு வகைக்கும் அனேக கோடி ஸ்தலங்கள் உண்டு.

மதுரபாஷிணி, மதுராம்பிகை, யோகாம்பிகை, வாத்ஸல்யாம்பிகை, (திருக்குவளை) கிருபாகடாக்ஷி, பரிமள கந்தி, ஸர்வாங்க சுந்தரி, அபிஷேகாம்பிகை க்ஷீராம்பிகை (கீரனூர்) பவானி (பேரளம்) நாராயணி ஈச்வரி முதலியவை உண்டு.

அம்பிகை:

நான்கு திசைகளையும் நோக்கிக் கொண்டிருக்கிற தலங்கள்: கிழக்கு முகம், தெற்குமுகம் இரண்டும் மிக அதிகம். மேற்கு: செம்பொனார்கோயில், சீயாத்த மங்கை, திருச்சி, குற்றாலத்துக்கு அருகிலுள்ள சிவகிரி, திருவாமாத்தூர்-வீதிக்குக் கிழக்கு–நடுவே வீதி பசு கொம்புண்டாகப் பூசை செய்தது — அபிராமர் பூசித்தது.

வடக்கு: பந்தணை நல்லூர், மத்யார்ச்சுனம் முதலியவை களுக்குக் காரணமில்லை.

பூசித்த தலங்கள்: (பசுவாய் இருந்தும் வேறேயாயிருந்தும்) பசு: நேபாளம், பந்தணைநல்லூர், கரூர், ஆவணம், திருக்கொண்டீசுவரம், ஆவூர். ஆவடுதுறையில் பசுரூபம் நிவிர்த்தியாகி ஈசனால் அணைக்கப் பெற்றது. இத்தலங்களிலுள்ள லிங்கத்திற்குப் பசுபதீசுவரர் என்னும் திருநாமம் உண்டு. பூசித்தும் தென்புறமாயும் இருக்கிற தலங்கள்: மதுரை, திருநெல்வேலி, திருவலஞ்சுழி, இராமேசுவரம், திருப்பூவணம், உத்தரகோசமங்கை, ஆக்கூர், திருமாந்துறை, திருமாகாளம், பாற்றுறை முதலியன.

வடபுறமாயிருக்கிற தலங்கள்: ஆனைக்கா, வீழிமிழலை, மாயூரம், திருவையாறு, கும்பகோணம் முதலியன.

உட்கார்ந்திருக்கிற தலங்கள்: காஞ்சி, ஆரூர், பெருவேளூர் திருமிகைச்சியூர் (திருமீயச்சூர்), இஞ்சிகுடி, களப்பாகரம், காசி, தட்டாத்திமூலை.

நான்கு கைகளோடு இருக்கிறதலங்கள்: நின்ற அவசரம்: அநேகம். இரண்டு கைகளோடு நின்ற அவசரம்: மதுரை, திருநெல் வேலி, திருப்புகலூர், திருவாரூர், திருச்செங்காட்டங்குடி.

அம்பிகை கையில் லிங்கமிருக்கிற தலம்: கேதாரம்.

அம்பிகையின் அவயவங்கள் லிங்கத்தில் அழுந்தி இருக்கிற தலம்: காஞ்சி.

நான்கு கையில் ஆயுதபேதமிருக்கிற தலம்: காஞ்சி, (திரி புரசுந்தரி அவசரம்) இக்ஷுகோதண்டம், புஷ்பபாணம், அங்குசம், பாசம் மற்றவை. 4 கைகளோடு இருந்தாலும் உட்கார்ந்தாலும் பத்மம், அக்ஷமாலை.

இரண்டு கைகளில் பேதமாயிருக்கிற தலம்: நின்றாலும் உட்கார்ந்தாலும் இருகைகளையுடைய அம்பிகைக்கு செங்கழு நீர் அல்லது நீலோற்பலம். அகிலாண்டேசுவரிக்கு மாத்திரம் இரண்டு கைகளிலும் பத்மம் மாத்திரம். அக்ஷமாலையில்லை மற்ற இருகைகள். சிவகாமி: அக்ஷமாலை, கிளி, அபயம், வரதம் செங்கழுநீர், கடிகரம் மற்ற அம்பிகைகளுக்கு அபயவரதம் கடி ஹஸ்த மாயிருக்கும். நிற்கின்ற அம்பிகைக்கு இடதுகை தொங் கல்.

பிரமரந்திரத்தில் அம்பிகை இருக்கின்ற தலங்கள்: காஞ்சி, மதுரை.

இரண்டு அம்பிகை இருக்கின்ற தலங்கள்: விருத்தாசலம், அருணகிரி, மூவலூர், ஆரூர், அவிநாசி, பூவனூர், ஆனந்த தாண்டவபுரம், திருநீலக்குடி, திருநாகேசுவரம், காசி. அம்பிகை பிருகத்பேதமாயிருக்கிற தலங்கள்: கருவேலி, திருவாமாத்தூர், கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சாவூர்.

உமையம்மை நான்கு கைகளோடு உட்கார்ந்துள்ள தலங்கள்:

காஞ்சிபுரம், பெருவேளூர், திருவானைக்கா என்பன. காஞ்சி புரத்தில் அம்பிகை கருப்புவில், புஷ்பம், பாசம், அங்குசம் என்ப வற்றைத் தமது நான்கு திருக்கரங்களிலும் தரித்துக் கொண்டிருக் கிறாள். பூமியிலுள்ள தலங்களில் அம்பிகை தாமரை, உருத்தி ராக்ஷமாலை, அபயம் கடிகரம் என்பனவற்றோடு எழுந்தருளி

யிருக்கின்றாள். சிதம்பரத்தில் சிவி, நீலோற்பலம். ருத்ரா க்ஷமாலை கடிகரம் என்பனவற்றைறோடு எழுந்தருளியிருக்கின் றாள்.

கேதாரத்தில் அம்பிகை இருகரங்களோடு எழுந்தருளியிருக் கின்ருள். அன்னபூரணி அம்பிகை தமது ஒரு திருக்கரத்தில் அன்ன பாத்திரத்தையும் மற்றோர் திருக்கரத்தில் கரண்டியும் கொண்டு காசிக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ருள்.

கோகர்ணத்தில் எல்லாத் தலங்களையும் தராசிலிட்டு நிறுத்திக் கொண்டிருக்கின்றாள்.

திருவாரூரில் நீலோத்பல அம்பிகை விஜயை என்னும் சகி யிடத்திருக்கும் முருகன் சிரசில் தமது இருகைகளையும் வைத்துக் கொண்டிருக்கிறாள்.

இரு அம்பிகை இருக்கும் தலங்கள்: விருத்தாசலம், அருணா சலம், ஆவூர், பூவனூர், திருநீலக்குடி, ஆனந்த தாண்டவ புரம், அவிநாசி என்பன.

சுவாமியும் அம்பிகையும் எதிர்முகமாய் இருக்கும் தலம்: திருவாமாத்தூர்.

பன்னிரண்டு தலத்திற்கும் ஒரு அம்பிகை உள்ள தலம்: காஞ்சீபுரம்.

அம்பிகை இரண்டு கைகளுடன் நிற்கிற தலங்கள்:

திருவாரூர்: நீலோத்பலாம்பிகை.
மதுரை: மீனாட்சி.
திருநெல்வேலி: காந்திமதி.
திருச்செங்காடு திருகுகுழல்நாயகி.
திருப்புகலூர்: கருந்தாழ் குழலி.

அம்பிகை இரண்டு கைகளுடன் உட்கார்ந்த தலங்கள்:

திருவாரூர்: கமலாம்பிகை.
திருமீயச்சூர்: லலிதாம்பிகை.
இஞ்சிகுடி: பார்வதி.

அம்பிகை நான்கு கைகளுடன் உட்கார்ந்த தலங்கள்:

காஞ்சி: காமாட்சி.
பெருவேளூர்: மின்னனையாள்.

அம்பிகை எட்டுக்கைகளுடன் நிற்கிற தலம்:
ஸ்ரீசைலம்: பிரமராம்பிகை.

தேவியின் இருந்த திருக்கோலம்:

காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன்: ஆஸனம். பஞ்சப்பிரம்மாஸனம்.

ஆரூர் கமலாம்பிகை ஆஸனம் குட்டிகாஸனம்; கை இரண்டு.
மீயச்சூர்: லலிதாம்பிகை. கை இரண்டு.
பெருவேளூர் அம்பிகை: கை நான்கு.
இஞ்சிகுடி: மன்மதபுரி.

ஸ்வாமி: பார்வதி நாதர்.
அம்பிகை: பார்வதி. கை இரண்டு.
காசி: அன்னபூரணி. ,,

காஞ்சியிலுள்ள ஆலயங்கள் எல்லாவற்றிலும் அம்பிகை யாலயம் தனியேயில்லை.

அம்பிகை மேற்கு முகமான இடங்கள்:
திருச்சிராப்பள்ளி: சுகந்த குந்தளாம்பிகை.
வாட்போக்கி: அராளகேசி.
சிவ சைலம்: கோமதி.

அம்பிகை வலப்புற ஸ்தலங்கள்:

சோழநாடு:
திருவிடைமருதூர், திருமாந்துறை.
அம்பர்மாகாளம், திருவலஞ்சுழி.
கஞ்சனூர், கரவீரம்.

புள்ளிருக்கு வேளூர், திருச்சோற்றுத்துறை, பாலைத்துறை.

பாண்டிநாட்டிலுள்ள மதுரை முதலிய பாடல் பெற்ற 14 ஸ்தலங்களிலும் அம்பிகை ஸ்வாமிக்கு வலப்புறமே. உத்தரகோசமங்கையிலும் இங்ஙனமே.

கொங்கு நாடு: அவிநாசி.

நடுநாடு:

திருவதிகை (ஸ்ரீவீதி க்ஷேத்ரம்) திருவண்ணாமலைக்குத் தென்கிழக்கேயுள்ள ரிஷிவந்திய லிங்கத்தில் தேன் அபிடேகம்

செய்யும்போது அம்பிகை சுவாமியின் இடது பாகத்தில் சர்வா பரண பூஷிதையாய் இப்போதும் தரிசனம் கொடுக்கின்றாள் என்பது ஐதிஹ்யம்.

தென்புறமாய் எந்த ஸ்தலத்தில் அம்பிகை இருக்கின்றாளோ அந்த ஸ்தலம் அம்பிகையால் பூசிக்கப்பட்ட ஸ்தலமாம்.

மந்தாகினி தீரத்திலே தெய்வப் பிரயாகை என்னும் ஸ்தலத்துக்குத் தென் கீழ்த்திசையிலே உள்ள நைமிசாரணிய ஸ்தலத்திலே அம்பிகை தனது கரத்தில் லிங்கத்தை வைத்துப் பூசித்துக் கொண்டிருக்கின்றாள்.

அம்பிகை சுவாமியை ஆலிங்கனஞ் செய்து கொண்டிருக்கும் ஸ்தலம்: காஞ்சீபுரம்.

அம்பிகை திருக்கரத்தில் ரிஷபம் வைத்திருக்கும் ஸ்தலம்: இராமனதீச்சுரம்.

அம்பிகை சுதையினால் ஆகியுள்ளதலம்: திருநாகேசுவரம்.

கணபதி நான்கு திசைகளையும் நோக்கிக் கொண்டிருக்கிற ஸ்தலங்கள்:

மத்தியார்ஜுனம், குடமூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம் நாகேசுவரர் ஆலயம், கேதாரம் (நரமுகம்) இவைகளில் வடக்குமுகமாக ஈசனைப் பூஜித்துக் கொண்டிருக்கிற அவசரம்; கதைகளை ஷ தலபுராணங்களால் அறியலாம்.

திருவெண்காட்டிலும் வடக்குமுகம், சிதம்பரம் தெற்கு வீதியில் அநாதியாய் வடக்குமுகம்.

நரமுகக் கணபதி விபரம்:

சபையை நோக்கிக் கொண்டிருக்கிறார் என்றபடி வடக்குமுகமாய் இருப்பதற்குக்காரணம்:

ஹரித்துவாரத்தில் நரமுகக் கணபதி வடக்குமுகம்; வடக்கே உள்ள கேதாரத்தைக் காட்டும் பொருட்டு.

திருவெண்காட்டில் திருவிசைப்பா ஆசிரியர் சேந்தனாருடைய விலங்குதெறிக்கும் பொருட்டு வடக்கு நோக்கியிருக்கிறார்.

நரமுகப்பிள்ளையார் பட்டீசுவரத்தில் கிழக்குமுகமாய் இருக்கிறார்.

திருச்செங்காட்டங் குடியில் கஜமுகாசுரனை வதம் செய்யப் பூஜித்தும் பாசாங்குசம் வாங்கிக் கொண்டும் வதம் செய்தவுடன் ஈசன் கிழக்கு முகமாய்த்தானிருந்து மடியில் கணபதியையும் கிழக்குமுகமாய் வைத்து உமையம்மையுடன் விக்நேசுவராநுக்கிரக மூர்த்தமாய் எழுந்தருளியுள்ளார்.

உன்னைப் பூஜிக்கிறவர்கள் வேண்டிய வரங்களை அடைவர் என்று ஈசன் அருளியது முதல் எல்லாக் கணபதியும் கிழக்கு முகம்.

தெற்குமுகமாய் இருத்தற்குக் காரணம்:

சிதம்பரம்: சபையை நோக்கல், மதுரையில் மீனாக்ஷியம்மை பட்டாபிஷேக அவலோகனம். கஞ்சனூரில்: ஔவையாரைக் கயிலாயத்தில் கொண்டு போய் விடுவதற்கு வந்த நிலையில். இது ஹரதத்தர் சரித்திரம்.

மேற்கு முகமாயிருத்தற்குக் காரணம்:

சிதம்பரம், வேதாரண்யம், சோமேஸ்வரம் (அதாவது நர்மதாசங்கமத்தில் ஸோமேஸ்வரம் என்பது)

சிதம்பரம் கூத்தாடும் பிள்ளையார் (நர்த்தனவிநாயகர்) துர்வாசருக்கும் அகோர சிவாசாரியார்க்கும் தாண்டவதரிசனம் கொடுத்தது.

வேதாரண்யம்: ராமனுக்கு வீரஹத்தியைப் போக்கும் பொருட்டு. சோமேஸ்வரத்தில் சமுத்திரம் ஆக்கிரமிக்காமலிருக்கும் பொருட்டு. இம்மூன்றும் நர்த்தன விநாயகர்.

நர்த்தனவிநாயகர்: (நர்த்தனப்பிள்ளையார்): பெருவேளூர், திருக்கொண்டீசுவரம், அச்சுதமங்கலம். திருவானைக்காவில் ஆதிசங்கரரால் அகிலாண்டேசுவரியின் கோபச் சமனத்தின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டது. தலைக்காவேரியிலும், மேற்கு முகம்; சுவாமியைப் பார்த்தும் காவேரியைப் பார்த்துக் கொண்டும். ஸ்தம்ப கணபதிகள்.

பித்திக்கணபதியாவன: திருவலஞ்சுழியில் 2 அம்பிகை களுடன் உட்கார்ந்திருக்கிற அவரசம்; உத்ஸவவிக்கிரகம், ஆதி யான கணபதி ஸ்தலம் (வல்லபை, அனாதி லக்ஷ்மி).

குட்டிக் கொள்வதற்கும், தோப்பிக்கரணத்திற்கும் காரணம்:

கஜமுகாசுரன் எல்லாத் தேவர்களையும் துன்புறுத்துங் காலத்து எல்லாத் தேவர்களும் தன்னைக் கண்டு குட்டிக் கொள்ளவும் தோப்பிக் கரணம் போடவும் செய்துவர, அவனை வதம் செய்த பிறகு தேவர்களாகிய யாவரும் பெருமானாகிய கணபதியை நோக்கி நாங்கள் செய்த தொழிலை இந்த இடத்தில் செய்கிறோம் பலனடையும் பொருட்டு என்றனர். கோகர்ணத்தில் இராவணன் இருபது கைகளினால் குட்டியிருந்த காரணத்தால் தோப்பிக் கரணம் முடிந்தது. அப்பொழுது கணபதி தன் சொரூபத்தைக்காட்ட இராவணன் நடு நடுங்கி ஆயிரந்தரம் தன் சிரசில் குட்டித் தோப்பிக் கரணம் போட்டு இப்படி எல்லாரும் செய்து அனுக்ரகம் பெற்றுக்கொள்ளும்படி அவன் பிரார்த்தித் தான்.

உச்சிப்பிள்ளையார்:

திருச்சியிலுள்ள இந்த மூர்த்தியை விபீஷணர் குட்டிக் கொண்டு வழிபட்டார். இவ்வளவும் ஆதிபௌதிகம். ஆத்தி யாத்மிகத்திலும் குட்டல், அதாவது நாலு அங்குலம் கூடிய முஷ்டிகங்கை உற்பத்தி கேதாரம். லலாட ஸ்தானம் 16 தரம் குட்டும்போது கங்கை சொரிந்து மூலாதார கணபதிக்கு அபி ஷேகமாம். இளை, பிங்களை (இடை, பிங்கலை) இடை வழியே பெருகிச் சுழிமுனையில் அபிஷேகம். தோப்பிக் கரணம் இதற்குச் சகாயம், இல்லையேல் பிராணாயாமம். இந்த ஸ்தலங் களை தவிர, கணபதி பிரதானமாய் சுவாமியைப் பூஜித்த ஸ்தலங்கள் 6, காசி, கேதாரம், சோணபத்ரை, இந்திர நீலகிரி, சீகாழி, உத்தரகோசங்கை, திருவலஞ்சுழி, முதலானவை.

சொரூபங்கள்:

சுமுகர் தொடங்கி மகா கணபதியாகிய சித்திவிநாயகர் வரை 16 மூர்த்தி உலகத்தில் பிரசித்தம். சுண்டாவக்ர கவசர், சுண்டாவக்ர தக்ஷிணவாமர், நரமுகர், நிருத்தர், உச்சிஷ்டர், வல்லபை ஸமேதர், பஞ்சமுக தசபுஜர், துவிபுஜர், உலக மாண் டவர், ஸ்ருஷ்டிஹர்த்தர், பிரமசாரி. ஏனைய விநாயகமூர்த்திகளைச் சிற்பாகமத்தால் அறியவேண்டும்.

புஷ்பங்கள் 21: இவற்றை விநாயக கற்பத்தால் அறிக.

கணபதி பூசித்த ஸ்தலங்கள்:

செங்காட்டங்குடி முதலிய அநேக ஸ்தலங்கள்: ஸ்வாமியின் திருநாமம் கணபதீசுவரர்.

சுப்பிரமணியர் பூஜித்த தலங்கள்: திருப்பரங்குன்றம், பெரு வேளூர், புள்ளிருக்கு வேளூர், திருவீழிமிழலை, சிக்கல், கீழ் வேளூர், சேய்ஞலூர், கூந்தலூர், திருச்செங்காடு, திருப்பந்துறை, திருமுருகன் பூண்டி, மயிலாடி என்னும் ஸ்தலங்களிற் சிவபெரு மானைச் சுப்ரமணியர் பூசித்தார். பேணு பெருந்துறையில் மூகை நீங்கு நிமித்தம் பூசித்தது.

சுப்பிரமணியர்க்குரிய அஷ்டபுரிகள்:

திருச்செந்தூர், பெருவேளூர், புள்ளிருக்கு வேளூர், திருவீழி மிழலை, சிக்கல், கீழ்வேளூர், திருப்பந்துறை, திருமுருகன் பூண்டி என்பனவாம்.

சுப்பிரமணியருக்குரிய ஒன்பது மலைகள்:

பழனிமலை, விராலிமலை, குன்றக்குடி, பராசலம் (பரங் குன்று) திருச்செங்கோடு, சுவாமிமலை, திருப்பதி, திருத்தணிகை, திருமயிலம் என்னும் ஒன்பதுமாம். இவற்றில் நவவீரர்க்கும் அனுக்கிரகிக்குமாறு எழுந்தருளியுள்ளார்.

சுப்பிரமணியர் நான்கு திசைகளையும் நோக்கிக்கொண்டிருக் கின்ற தலங்கள்:

கிழக்குமுகம்: உலகமெங்கும் பிரசித்தம்.
தெற்கு: எண்கண், ஐயாறு, வெண்காடு, சிக்கல்.
மேற்கு: பழநி, விராலிமலை, கும்பகோணம்.
வடக்கு: திருப்பரங்குன்றம், கீழ்வேளூர், திருப்பைஞ்ஞீலி.

தனித்தலங்கள்: திருச்செந்தூர், குன்றக்குடி, விராலிமலை, பழநி, சுவாமிமலை, செங்கோடு, திருத்தணிகை, வேங்கடம். மயிலத்தில் 9 சகோதரர்களையும் மறைத்திருத்தியது.

7 ஊர்கள்:

திருச்செந்தூர், சேங்கனூர், திருப்பேணுபெருந்துறை, கூந் தலூர், கீழ்வேளூர், பெருவேளூர், புள்ளிருக்குவேளூர்.

7 குடிகள்:

எட்டுக்குடி, கந்தன்குடி, நேத்திரக்குடி, இடைக்கழி, சிக்கல், வேத்திரக்குடி, முருகன்பூண்டி.

சுப்பிரமணியம்: உடுப்பியில் சிவனைப் பூசித்துப்பாம்புருவம் நீங்கிய தலம். குமரகிரி உடுப்பியில் இருக்கிறது.

பர்ணசாலை: கதிர்காமம் (முதலியன): வீரமஹேந்திர பட்டணத்திலும் இருக்கிறது.

ஆரூடங்கள்: அஜாரூடம், கஜாரூடம், மயூராரூடம், (மயில் மீது: சிக்கல், பரசலூர்) சண்முக ஏகாஸ்யம், தநுர்த்தரம், தண்டதரம் (சுவாமலை), சக்திதரம், குக்குடதரம் (கூந்தலூர்) பங்கஜதரம், பிரமவிஷ்ணுக்களை இருகரங்களிலும் தூக்கியரூபம். கயிலையில் ஆதிசைவம், மகாவிசுவரூபம். 13ம் பிறவும்.

சுப்பிரமணியர் நோக்கிக் கொண்டிருக்கும் தலங்கள்:

1. தெய்வயானையம்மையாரை விவாகம் செய்யும் பொருட்டுத் திருப்பரங்குன்றத்தில் வடக்கு நோக்கி இருக்கின்றார்.

2. அக்ஷயநாதப் பெருமானை அர்ச்சனை செய்யும் பொருட்டுக் கீழ்வேளூரில் வடக்கு நோக்கியும் இருக்கின்றார்.

3. பிரமதேவர்க்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டு எண்கண் என்னும் தலத்தில் தெற்குமுகமாய் இருக்கின்றார். திருவையாற்றிலும், திருவெண்காட்டிலும் தெற்குமுகமாய் இருக்கின்றார்.

பழநி, விராலிமலை, கும்பகோணம் நாகேசுவரர் கோயில் மேற்பாகத்தில்.

சுப்பிரமணியர் மூர்த்திபேதம்:

அஜாரூடர், பிரமசிக்ஷகர், (திருவேரகத்துச்) சுவாமிநாதர் (உடுப்பிச்சுப்பிரமணியத்துச்) சர்ப்பாகாரர் (சிக்கலில் பாணத்தோடு கூடிய மூர்த்தம்) சிங்காரவேலர் (கதிர்காமத்திலுள்ள) யுத்தாவசர மூர்த்தம். (திருப்பரங் குன்றத்தில் தெய்வயானையம்மையாரைத் திருக்கலியாணம் செய்யும் அவரசம் (திருத்தணிகையில்) வள்ளிக்கல்யாண அவசரம். கஜவல்லி மகாவல்லி சமேத ராய்ப்பிரம விஷ்ணுக்களுக்குக் கந்தன் குடியில் தரிசனமளித்த அவசரம் என்பனவாம்.

தெய்வயானையாருக்குத்தனியே உள்ள தலம் கந்தன்குடி.

சுப்பிரமணியர் மாத்திரம் இருக்கும் தலங்கள்:

பழனி, விராலிமலை, குன்றக்குடி, எட்டுக்குடி, கந்தன்குடி பிரம்பூர், வீரசோழன், சுவாமிமலை என்னும் தலங்களாம்.

பிடாரி, காளி, துர்க்கை வடக்கு முகமாய் இருக்கின்றனர்.

நந்தி திக்குமாறி இருக்கும் தலங்கள்:

தெற்குவடக்காய் இருக்கும் தலங்கள் திருப்புன்கூர், பட்டீசுவரம், ஏனனூர்.

காஞூர்

ஸ்வாமி: இக்ஷுவனேசர், செம்மேனியப்பர், தேஜோமயர். பழமை.

அம்பிகை: சிவயோகநாயகி, ஸௌந்தரியநாயகி.

சரித்திரம்: யோகத்திலிருந்த அம்பிகைக்கு ஒளி வடிவாகக் காட்சி கொடுத்தமையின், தேஜோமயர், செம்மேனியப்பர்.

தீர்த்தம்: கொள்ளிடம் தடாகம்; அக்கினிமூலையிலிருந்தது அழிந்து போயிற்று. அதில் பரசுராமருக்கு மாதுர்ஹத்தி, க்ஷத்திரியஹத்தி விமோசனமாயிற்று.

விருக்ஷம்: இக்ஷுவனம்; வெண்கரும்பு. கோயிலில் ஒரே பிராகாரம். கொள்ளிடத்திற்குத் தெற்குள்ளது இத்தலம். ஸ்வாமி ஸந்நிதி கிழக்கு முகம். அம்பிகை ஸந்நிதி தெற்குமுகம். காஞூர், காடு; பராந்தகன் மனைவியுடன் உறையூரிலிருந்து வந்த பொழுது மண்மாரி பெய்து கொண்டு வந்ததென்றும் இவ்வூர் வந்தவுடன் அவளுக்கு பிரஸவமாயிற்றென்றும் வதந்தி. மண்மேடுகளும் விசேஷமாக உண்டு. கிணறு அம்மன் ஸந்நிதியில்; வெளுத்தே யிருக்கிறது.

அநுபந்தம் 12

தேவார வைப்புஸ்தலங்கள்

அக்கினீசுவரம்:

திருத்துருத்தியின் ரயில்வேஸ்டேஷனுக்குப் பக்கத்துள்ளது.

அக்கீச்சுரம் அடைவு திருத்தாண்டகம். 6-ஆம் திருமுறை 71-ஆம் பதிகம் 8-ஆம் செய்யுள்—

நாடகமாடிட...

குக்குடேச்சுரம் அக்கீச்சுரங் கூறுங்காலாட கேச்சுரம்.

அக்கசாலீசுவரம்.

தஞ்சை மாவட்டம் கஞ்சனூரில் உள்ள சிவாலயம் திருவக்கீச்சரம் எனக் கல்வெட்டுக் குறிக்கிறது.

அகத்தீச்சுரம்: அடைவு திருத்தாண்டகம்
6-ஆம் திருமுறை 71—ஆம் பதிகம் 8-ஆம் செய்யுள்.
நாடகமாடிட...
ஆடகேச்சுரம் அகத்தீச்சுர மயனீச்சுரம்.

கன்னியா குமரியிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது என்பர். திரு. செங்கல்வராயபிள்ளை.

வையைச்சேரி, நெல்லைக் குறுக்குத்துறைக்குக் கிழக்கே ஒன்று உள்ளது.

அகம்படிக் கோயில்: திருக்குறுந்தொகை—5-ஆம் திருமுறை 91-ஆம் பதிகம் 1-ஆம் செய்யுள்.

ஏயிலானை என்னிச்சை அகம்படிக் கோயிலானை.

அசோகந்தி: காப்புத்திருத்தாண்டகம் 6-7-10

சிந்தும் புனல் திருவாஞ்சியமும் திரு நள்ளாறும் அந்தண்பொழில் புடைசூழ் அசோகந்தியும் ஆக்கூரும். அசோகந்தி, அயோகந்தி இவையிரண்டும் ஒன்று.

க்ஷேத்திரக்கோவை.
6—70—9—திண்டீச்சரம்
ஐயாறு அசோகந்தி

திருச்சாத்த மங்கையிலுள்ள அயவந்தி என்னும் ஸ்தலம் வேறு. இது வேறு என்று தெரிகிறது.

அட்ட புயங்கம்:

7—10-7. திருக்கச்சியநேகதங்காவதம்.
கட்டு மயக்க.....
மட்டுமயங்கியவிழ்ந்த மலரொருமாதவியோடு மணம் புணரும்
அட்ட புயங்கப்பிரானதிடங் கலிக்கச்சியனேகதங்காவதமே.

அட்டபுயங்கப்பிரான்—அஷ்டமஹாநாகங்கள் பூசித்தபிரான்.

அண்ணல் வாயில்: அடைவுதிருத்தாண்டகம் 6-71—7

கடுவாயர் தம்மை நீக்கியென்னை யாட்கொள் கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல் வாயில் நெடுவாயில் நிறை வயல் சூழ் நெய்தல் வாயில்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல். புதுக்கோட்டைக்கு மேற்புறம் 10 மைலில் உள்ளது. சிற்றன்ன வாயில் என்று ஒரூர் இதன் பக்கத்து உள்ளது.

சுவாமி: விருத்த புரீசுவரர்.

அத்த மலை: அடைவுதிருத்தாண்டகம் 6-71-9

கந்தமாதனங்கயிலை... வியன்பொதியின் மலை மேருவுதயம் அத்தம் இந்து சேகரன் உறையும்மலைகள் மற்றும் ஏத்துவோம் இடர் கெட நின்றேத்துவோமே.

இது சூரியபூஜை. மனுஷ்யாராதனமன்று.

ஸ்வாமி: சூரியேசுவரர். ஸந்நிதி: கிழக்கு அம்பிகை...

அத்தீச்சுரம்: அடைவுதிருத்தாண்டகம். 6-71-8.

நாடகம் ஆடிட...
அகத்தீச்சுரம் அயனீச்சுரம் அத்தீச்சுரம் சித்தீச்சுரம்.

சிவ சைலம்—ஆழ்வார் குறிச்சி புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ளது, என்பர் திரு செங்கல் வராய பிள்ளை. அத்திப்புலியூர்.

அதியரைய மங்கை: திருத்தாண்டகம் 6—82—2.

விண்ணோர்பரவ... அதியரைய மங்கை
அமர்ந்தார் போலும்

6-3-1-ஏழைத்திருத்தாண்டகம். வெறிவிரவு... அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை.

6—ஆம் திருமுறை 3—ஆம் பதிகம் ஏழைத்திருத்தாண்டகம்.
4—ஆம் செய்யுள். மந்திரமும் மறைப்...
அதியரையமங்கை அமர்ந்தான் தன்னை.

அயனீச்சுரம்: அடைவுதிருத்தாண்டகம். 6—71—8.

நாடகம் ஆடிட... ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம் அயனீச்சுரம் அத்தீச்சுரம். அயனீச்சுரம்-பிரம தேசம்.

அம்பா சமுத்திரத்திற்கு அருகில் ஒரு மைல் தொலைவில் உள்ள பிரமதேசம் என்பர். திருப்பனந்தாளில் அசனீச்சரம் என்று ஒரு கோயில் உண்டு. வடஆர்க்காடு வழுவூர் கோயில், அயனீச் சரம் எனக் கல்வெட்டுக் குறிக்கிறது. இம்மூன்றில் எது என்று தீர்மானிக்க இயலவில்லை.

அயோகந்தி: காப்புத்திருத்தாண்டகம் 6—7—10

சிந்தும் புனல்..... அந்தண் பொழில் புடைசூழ் அயோகந்தியும்.

இஃது அசோகந்தியோ வேறோ தெரியவில்லை.

அரண நல்லூர்: காப்புத்திருத்தாண்டகம் 6—8—7.

தெண்ணீர்புனல்..... உறையூர் நறையூர் அரண நல்லூர்

அரிச்சந்திரம்: 6—51—10.

அரிச்சந்திரத்துள்ளார் அம்பலுள்ளார்.

சூத சங்கிதை பக்கம் 369. பாட்டு 10.

கும்ப கோணத்தை அடுத்த பட்டீச்சுரத்திற்கு வடதிசை யில் அமைந்துள்ளது.

அளப்பூர்: திருத்தாண்டகம் 6—51—3.

அண்ணாமலையமர்ந்தார்..... அளப்பூரார் அந்தணர்கள் மாடக்கோயில் உண்ணாழிகையார்

காப்புத்திருத்தாண்டகம்: 6—7—12.

திருநீர்ப்புனல்..... திருஅளப்பூர் தெற்கேறுசித்த வடம்

தரங்கம் பாடி புகை வண்டி நிலையத்திற்கு அருகிலுள்ளது.

கூடித்திரக் கோவை. 6—70—4.

எச்சில் இளமர்..... அச்சிறு பாக்கமளப்பூர் அம்பர் ஆவடு தண்டுறை.

அடைவு திருத்தாண்டகம். 6-71-4.

பிறையூரும்..... அளப்பூரோமாம் புலியூரொற்றி யூரும்

ஊர்த்தொகை 7—47—4.

ஆரூரத்தாஐ யாற்றமுதே யளப்பூர் அம்மானே
அறப்பள்ளி—அறைப்பள்ளி. கேஷத்திரக் கோவை. 2—39—4.

அறப்பள்ளி யகத்தியான் பள்ளி வெள்ளைப் பொடிப்பூசி நீறணிவானமர் காட்டுப்பள்ளி

கேஷத்திரக்கோவை. 6—70—1.

தில்லைச் சிற்றம்பலம்..... கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்

ஆடகேச்சுரம்: அடைவுதிருத்தாண்டகம். 6—71—8.

நாடகமாடிட... அக்கீச்சுரங் கூறுங்கால் ஆடகேச் சுரம் அகத்தீச்சுரம்.

திருவாரூர்க் கோயிலுக்குள் 'நாகபிலம்' என வழங்கும் ஆலயம் என்பர்.

ஆதிக்கைலாயம்: திருத்தாண்டகம் 6—41—2.

ஆர்த்த எனக்கன்பன்..... ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்

திருத்தாண்டகம் 6—41—3.

அல்லாய்ப்... ஆதிக்கயிலாயன் நீயே யென்றும்

திருத்தாண்டகம் 6—41—5.

முந்தியிருந்தாயும்..... முன் கயிலை மேவினாய் நீயே என்றும்.

திருத்தாண்டகம் 6—41—6.

தக்கார் அடியார்க்கு ..... தலையார் கயிலாயன் நீயே யென்றும்

திருத்தாண்டகம்: 6—41—9.

தந்தை தாயில்..... தலையார் கயிலாயன் நீயே ஆதிக்கயிலாயம்—திருப்பெருந்துறை.

திருப்பெருந்துறை:

பாண்டிவள நாட்டில் மிழலைக்கூற்றத்தில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ளதும் பழைய கிரந்தங்களால் பாராட்டப் பெற்று மிகப்புராதனமாக விளங்குவதுமாகிய ஒரு சிவஸ்தலம். இதன் வடமொழிப் பெயர் ப்ருஹத் தீர்த்தம். இதற்கு அநாதி மூர்த்தத்தலம், ஆதிகைலாசம், ஆளுடையார் கோயில், ஆவுடையார் கோயில், உபதேசத்தலம். (ஆளுடையார் கோயில் முதலிய இரண்டு பெயர்களும் பழைய தாம்பிரப் பட்டயங்களில் காணப்படுகின்றன.) சின்ன ஆளுடையார் கோயில் என ஒரு தலம் இதற்கு வடக்கே (இராசாமடத்திற் அருகில்) இருத்தலின் இது பெரிய ஆளுடையார் கோயில் என வழங்கும்) குந்தவனம், அல்லது குருந்தவனம், சதுர்வேதபுரம், சிவபுரம், ஞானபுரம், திரிமூர்த்திபுரம், தென்கைலை, தேசுவனம், பராசத்திபுரம், பவித்திரமாணிக்கம், பூலோக கைலாசம் அல்லது பூகைலாசம், யோகபீடபுரம், யோகவனம் முதலிய வேறு காரணத்திருநாமங்களும் உண்டு. இவற்றின் காரணங்களைத் திருப்பெருந்துறைப்புராணத்தால் அறியலாம். காந்தம் முதலிய மகாபுராணங்கள் மஹேதிஹாசமாகிய சிவரகசியம், மணிவாக்கிய சரித்திரம் அல்லது மணிவசன மாகாத்மியம், ஸ்ரீஹாலாஸ்ய மாகாத்மியம் ஆகிய வற்றுள்ளும், வேறுதல புராணங்களுள்ளும் உரிய இடங்களில் இத்தலத்தின் பெருமைகள் பெரிதும் பாராட்டப் படுகின்றன.

உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுள்ளே சிவபெருமான் அம்பிகையும் தாமும் அருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்குவது இந்தத்திருப்பதியிலேயே ஆகும்.

பிரமன் முதலியவர்களுக்கும், திருவாதவூரடிகளுக்கும் பரம சிவன் குருமூர்த்தியாய்க்காட்சி கொடுத்து உபதேசித்தருளின மையாலும், திருவாதவூரடிகளைப் பாதுகாத்தற்பொருட்டுப் பாண்டியன் முன்னிலையில் கருணைக்கட்டளையிட எம்பெருமான் வேதமாகிய குதிரையின்மீது எழுந்தருளினமையாலும், அறுபத்து நான்குமூர்த்தங்களுள் குருமூர்த்தத்திற்கும் அசுவாரூடமூர்த்தத் திற்கும் மூலமாகிய தலம் இஃதென்று பெரியோர் கூறுவர். தக்ஷனுடையயாகத்தை அழித்த வீரபத்திரக்கடவுள், அந்தத் திருக்கோலத்துடன் அம்பிகையின் யோகத்தைப் பாதுகாப்பவராய் அம்பிகையின் சந்நிதியில் சிவாஞ்ஞையால் எழுந்தருளி வழிபடுவோருக்கு இட்டசித்திகளை அளித்துக் கொண்டிருக்கின்றமை

யின், தக்ஷாத்துவர சம்ஹாரமூர்த்தி தலமென்றும் இதனைச் சொல்லுவதுண்டு.

இன்னும் சோடசாந்த தலம் என்றும் உலகமாகிய புருஷனுக்குத் துரியாதீத ஸ்தானமென்றும் காரணஸ்தலம் என்றும் இதனைக் கூறுவர்.

திருவாசகத்தில் இந்தத் தலமும் குருந்த விருட்சமும் அங்கங்கே மிகப் பாராட்டப் பெற்றுள்ளன என்பதும், சிவ புராணம், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து. வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்த பத்து, உயிருண்ணிப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா பண்டாய நான்மறையென்னும் திருவாசகப்பகுதிகள் இந்தத் தலத்திலிருந்தே அருளிச் செய்யப்பெற்றன என்பதும் யாவருக்கும் தெரிந்தனவே.

இதன் பழைய வரலாற்றைத் தெரிவிக்கும் புராணங்கள் வடமொழியில் ஸ்ரீ ஆதிகைலாச மாஹாத்மியம், பிருஹத்தீர்த்த மாஹாத்மியம், அஷ்டாத்யாயி என மூன்றுள்ளன.

தமிழில் திருப்பெருந்துறைப் புராணத்தையன்றி இந்தத் தலசம்பந்தமாக வேறே பழையனவாக மூன்று புராணங்களும், திருப்பெருந்துறை யமகவந்தாதி, சிவயோகநாயகி பிள்ளைத் தமிழ் என இரண்டு பிரபந்தங்களும் உள்ளன.

தலவிநாயகர்களும் மற்றவிநாயகர்களும்

(1) ஆதபகணபதி அல்லது வெயிலுவந்த விநாயகர்; இவர் கனகசபைக்கு மேற்கே அக்கினி தீர்த்தத்தின் தென்கரையில் எழுந்தருளியுள்ளார்; திருமேனியில் வெயில்படுவதே இவர் திருவுள்ளத்திற்கு உவப்பு; அதனால் இவருக்குக் கோயில் முதலியன யாதொன்றுமில்லை. ஆதவப் பிரியர் எனவும் நிழலு வவாக்குஞ்சரமெனவும் இவர் பெயர் வழங்கும்.

(2) சொக்கவிநாயகர்: கோயிலின் உட்பிரகாரத்தில் தென் மேற்கு மூலையில் இவர் திருவுருவமுள்ளது.

(3) சம்சர்க்க விநாயகர்: இறைவனை மணஞ்செய்து கொள்ளுதற் பொருட்டு யோகஞ் செய்யவந்த அம்பிகையால் பூசிக்கப் பெற்றவராதலின் இவர் இப்பெயர் பெற்றார். சேர்க்கை

விநாயகர் எனவும் இவர்பெயர் வழங்கும். இவர் திருதிமூலை யிலுள்ளார். சொக்கவிநாயகரையும் இவரையும் ஒருவரே யென்று கூறுவதும் உண்டு.

(4) பள்ளிக்கூடப் பிள்ளையார்: அந்தணர் முந்நூற்று வருடைய பிள்ளைகளுக்கு வேதாத்தியயனம் செய்வித்தற்கு வயோதிகப் பிராமணவடிவங் கொண்டு வந்த ஆளுடைய நாயக ரால் பூசிக்கப் பெற்றவர் இவர்.

(5) சக்தி கணபதி: (வல்லபகணபதி) இவர், தேவதீர்த்தத் தின் வடகரையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவர்.

(6) முக்தி விநாயகர்: தியாகராச மண்டபத்தில் ஸ்ரீ மகா லிங்கமூர்த்திக்கு எதிரே எழுந்தருளியிருப்பவர் இவர்.

(7) ஆகண்டல விநாயகர்: இந்திர தீர்த்தத்தின் மேல்கரை யிலுள்ளவர் இவர் (மடத்து முகப்பின் கீழ்பக்கம்). சுவாமியின் திருநாமங்கள்: அச்வநாதர், ஆதிகைலாசநாதர், ஆத்மநாதர், உபதேசஸ்தலநாயகர், உபாத்தியாயர், குருந்தவனேசர், ஜகத் குரு, சதுர்வேதபுரேசர், சிவபுரேசர், ஞான கேஷத்திரேசர், தக்ஷிணைகைலாச நாதர், திரிமூர்த்திதேசிகர், திரிமூர்த்திபுரவாசர், தேசுவனேசர், பரமசுவாமி, பராசக்திபுரவாசர், பவித்திர மாணிக்கபுரவாசர், பெருந்துறைநாதர், முந்நூற்றொருவர் (முந் நூற்றுவரில் ஒருவர்) யோகபீடப்பதியினர், யோகவனேசர், ஆவுடையார், ஆளுடையார், விப்பிரநாதர் என்பன; ஆளுடைய பரமசுவாமி என்னும் பெயர், இத்தலத்திற்குரிய தாம்பிரப் பட்டயம் முதலியவற்றில் காணப்படும்.

அம்பிகையின் திருநாமங்கள்: சிவயோகாம்பிகை, சிவயோக நாயகி, சிவயோகம்பிரியாள், யோகம்பிரியாள், யோகநாயகி, ஆளுடைநாயகி, ஆளுடையாள் என்பன; இவற்றைத் திருப்பெருந் துறைப்புராண யோகபீடச் சிறப்புரைத்த படல முதலியவற்றா லும், சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ் நூலாலும் உணரலாம்.

பீடங்கள்:

(1) பிரணவபீடம்: இது சுவாமியின் பீடம்.

(2) யோகபீடம்: உலகத்திலுள்ள சக்திபீடங்கள் 50, அவற் றுள் 49 காரிய பீடங்கள். இஃது ஒன்றே காரண பீடம்.

தலவிருட்சம்: குருந்து, பரமாசாரியராகிய குருமூர்த்தி இதனடியில் தென்முகமாக எழுந்தருளியிருக்கின்றனர். பிரம

தேவர் முதலியோரும் திருவாதவூரடிகளும் உபதேசம் பெற்றது இவ்விடத்தில்தான். இந்த விருட்சம் சிவரூபம் என்று நூல்களில் பாராட்டப்பெறும். ''குருந்தவன்காண்'' என்னும் தேவாரமும் இதனை வலியுறுத்தும்.

ஆறு: இந்தத் தலத்திற்குரிய நதி வெள்ளாறு. இது சுவேதநதி என்று வடநூல்களுள் வழங்கும்.

இதற்கு ஆனந்த வெள்ளாறு என்று பெயர் உண்டு என்றும் திருவாசகத்துள்ள தசாங்கத்தில் ''ஆனந்தங்காணுடையானாறு'' எனச்சுட்டியது இந்நதியையே என்றும் இத்தலத் தமிழ்ப்புராண முடையார் ஒருவர் வெளியிட்டிருக்கின்றனர். ''வெள்ளாற்றை, ஈனந்தம் பானீப் பார் தோய்ந் தானந்த மெய்தலாலே, ஆனந்த வெள்ளா றென்று மறைகுவர் அறிந்து ளோரே'' என்று திருப் பெருந்துறைப் புராணமும் கூறுகின்றது.

நவதீர்த்தங்கள்: இறைவன் அருளால் இந்தத் தலத்தில் முன்னொரு காலத்தில் 66 கோடி தீர்த்தங்கள் உண்டாயின வாதலின், பிருகத் தீர்த்தமென வடமொழியிலும், பெருந்துறை எனத் தமிழிலும் இத்தலம் பெயர் பெற்றதென நூல்கள் கூறினும் திருப்பெருந்துறைப் புராணத்தில் கூறப்படும் தீர்த்தங்கள் ஒன்பதே. இவை ஸ்ரீ ஆத்மநாதப் பெருமானுடைய நவந்தரு பேதங்களாகப்பாராட்டப் பெற்றுள்ளன; அவையாவன: பிரமதீர்த்தம், பிரஹ்மா, நாராயண தீர்த்தம் திருமால், உருத்திர தீர்த்தம் உருத்திரர், வாயுதீர்த்தம் மகேசுவரர், அசுரதீர்த்தம் சதாசிவம், தேவ தீர்த்தம் நாதம், முனிவர் தீர்த்தம் விந்து, அக்கினி தீர்த்தம் சக்தி, ஆத்ம கூபம் சிவம் என்பன. அவற்றுள் (1) பிரமதீர்த்தம்: அக்கினி தீர்த்தத்திற்கு மேற்கேயுள்ளது; இதன் கரையில் பிரமபீடமிருக்கின்றது. முதலியப்பர் என்னும் ஒரு தெய்வத்தின் சந்நிதி இதன் கரையிலுள்ளது. இது வேத தீர்த்தமெனவும் வழங்கும்.

(2) நாராயண தீர்த்தம்: திருமாலாலுண்டாக்கப் பெற்றது; பள்ளிக்கூடப் பிள்ளையார் கோயிலுக்கு மேல் பாலுள்ளது. இதன் வடகரையில் ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் எழுந்தருளியிருக்கின்றனர்; இது தொண்டர் குழியென வழங்கும்.

(3) உருத்திர தீர்த்தம்: காலாக்கினி ருத்திரரால் உண்டாக்கப் பெற்றது; இது காலாக்கினி ருத்திர தீர்த்தமெனவும் சிவகங்கை எனவும் வழங்கும்; இது வடக்கூரில் (வடக்குஞர்) ஆதிகைலாச நாதசுவாமி கோயிலின் வடக்கேயுள்ளது.

(4) வாயு தீர்த்தம்: திருக்கோயிலுக்கு வாயுமூலையிலுள்ளது; வாயுதேவனால் உண்டாக்கப்பெற்றது.

(5) அசுர தீர்த்தம்: ஸ்ரீ ஆத்ம நாதர் உபாத்தியாயராக எழுந்தருளிய பள்ளிக்கூடத்திற்கு மேற்கேயுள்ளது. அசுரர்களால் உண்டாக்கப் பெற்றது.

(6) தேவதீர்த்தம்: சுவாமி சந்நிதியிலுள்ளது; தேவர்கள் இடைவிடாமல் நீராடி இஷ்டசித்திகளைப் பெற்றுச் செல்லுதலின், இஃது இப்பெயர் பெற்றது. இதற்குரிய விருட்சம் கருநெல்லி, இத்தீர்த்தம் நெல்லியடி என வழங்கும்.

(7) முனிவர் தீர்த்தம்: வடக்கு வீதிக்குச் சமீபமாக உள்ளது; அகத்தியரால் உண்டாக்கப்பெற்றது.

(8) அக்கினி தீர்த்தம்: திருக்கோயிலினுள் வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கில் உள்ளது.

(9) ஆத்ம கூபம்: முதற்பிராகாரத்தில் குருந்தமூலத்தின் கிழக்கேயுள்ளது. ஸ்ரீ ஆத்மநாதருக்கு அபிஷேகம் செய்தற் பொருட்டுச் சிவயோகாம்பிகையால் இது நிருமிக்கப் பெற்றது.

இவற்றுள், ஆத்மகூபமும், அக்கினி தீர்த்தமும் திருக்கோயிலின் அகத்தும் மற்ற ஏழும் புறத்தும் உள்ளன. ஆத்மகூப மல்லாதவை தடாக வடிவங்களாகவுள்ளன.

இவையன்றி, இத்தலத்தில் மானவதீர்த்தம், காந்தர்வ தீர்த்தம், இந்திரதீர்த்தம், பராசரதீர்த்தம் சூரிய தீர்த்தம், சந்திரதீர்த்தம், லக்ஷ்மிதீர்த்தம், சரஸ்வதிதீர்த்தம், பாண்டவ தீர்த்தம், கௌதமதீர்த்தம், பக்ததீர்த்தம், வேததீர்த்தம் எனப் பல தீர்த்தங்கள் வாபிகூப தடாகவடிவங்களாக உள்ளன என்று ஸ்ரீ ஆதிகைலாச மாஹாத்மியம் தெரிவிக்கின்றது. மெய்யார் தடம்பொய்கை என இத்தலத்தில் ஒரு விசேட தீர்த்தம் உண்டு என்றும் தெரிகின்றது. ''மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக் கையாற் குடைந்து'' (திருவாசகம், திருவெம். 11) ''திரைபொரு மொய்யார் பொய்கைத் திருப்பெருந்துறையைச் சேர்ந்தார்'' (திருவால்.) ''மொய்யார் தடம்புக்கு'' (சிவயோக. அம்புலி. 4) என்பவற்றாலும் அறியலாகும்.

தெய்வங்கள்:

ஸ்ரீ ஆதிகைலாசநாதர்: இவர் காலாக்கினிருத்திரரால் பூசிக்கப்பெற்றவர். இவர் திருக்கோயில் வடக்கூரிலுள்ளது. தீர்த்தம் சிவகங்கை, விருட்சம் மகிழ்.

ஸ்ரீ அசுவாரூடர்: இவர்கனகசபையில் தென்முகமாக எழுந்தருளியுள்ளார்.

மாணிக்கவாசகர் திருவுருவங்கள்:

மாணிக்கவாசகருடைய திருவுருவங்கள் இத்திருக்கோயில் அகத்தும் புறத்தும் பல அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் குருந்த மூலத்துள்ள திருவுருவம் அருண்மூல ஸ்தானம் என்றும் மாணிக்கவாசகர் மண்டபத்துள்ளது திருமூலஸ்தானம் என்றும் வழங்கப்பெறும்.

மகாலிங்கம்: இவர் பெரிய பிராகாரத்தில் தியாகராச மண்டபத்தின் மேற்கே திருமதிலில் ஆகாயவடிவமாக இருந்து வழிபடப் பெற்று விளங்குகிறார். கணநாதரென்றும் இவர்க்குப் பெயருண்டு. இவரை முனீசுவரரென்றும் முதலியப்பர் என்றும் கூறுவது உண்டு. அடியிற்குறிப்பிட்ட ஒன்பது இடங்களில் ஒன்பது கூறாகத் தங்கி இத்தலத்தைப் பாதுகாக்கின்றனர் என்பர்.

(1) இத்தலத்தின் மேற்குக் கம்வாய்க்கரை (முதலியப்பர்)
(2) திருவீதியில் தென்மேற்குமூலை.
(3) மாரியம்மை கோயில்.
(4) பனைவாயில் (கிராமக்) கம்வாய்க்கரை.
(5) புண்ணியவயல் (கிராமக்) கம்வாய்க்கரை.
(6) காரவயல் (கிராமக்) கம்வாய்க்கரை.
(7) பழந்தாமரைக் (கிராமக்) கம்வாய்க்கரை.
(8) கருங்காட்டில் (ஒரு கிராமம்) ஐயனார் கோயில்.
(9) ...

ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்; இவர் நாராயண தீர்த்தத்தின் வடகரையிலுள்ளார்.

மூந்நூற்றுவர்: இவர்கள் ஸ்ரீ ஆத்மநாதரைப்பூசிக்கும் பெருமை வாய்ந்தவர்கள்; தில்லை வாழ்ந்தணர்களைப் போன்று சிவபெருமானைத் தம்முள் ஒருவராகப் பெற்று நூல்களில் துதிக்கப்படும் மேன்மை பெற்றவர்கள். இவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதாத்தியயனம் செய்வித்தற்பொருட்டே ஸ்ரீ ஆத்மநாதர் விருத்தப் பிராம்மண வடிவம் கொண்டு எழுந்தருளிப்பாடசாலை வைத்துக் கற்பித்தருளினர். ஷி பாடசாலையிருந்த மண்டபமொன்று (பள்ளிக்கூடம்) இன்றும் காணப்படுகிறது.

சபைகள்:

இத்திருக் கோயிலில் உள்ள சபைகள் ஆறு; அவை வருமாறு

(1) ஆனந்தசபை: இது கர்ப்பக்கிருகம்.

(2) சித்ஸபை: இது அர்த்த மண்டபம்.

(3) சத்ஸபை: இது நிவேதன மண்டபம். அமுது மண்டபம் எனவும் வழங்கும்.

(4) தேவசபை: இது யாவரும் நின்று தரிசனம் பண்ணும் இடம்; ஸ்ரீ மாணிக்கவாசகரைத் திருவிழாக்காலத்தில் எழுந்தருளச் செய்யும் தானம் இதுவே. சுந்தர பாண்டியர் என்பவரால் திருப்பணி செய்யப் பெற்றமையின், இது சுந்தர பாண்டிய மண்டபம் என்றும் பெயர் பெறும்.

(5) நிருத்தசபை: இது இரண்டாம் பிராகாரத்திலுள்ள சந்நிதி மண்டபம். தில்லைமண்டபம் என்றும் இது கூறப்படும். முன்னொரு காலத்தில் சுவாமி சோழபாண்டியர்களுக்குச் சபாபதியாகக் காட்சி கொடுத்தமையின் இஃது இப்பெயர் பெற்றது. இதில் பதஞ்சலி வியாக்கிர பாதர்களின் திருவுருவங்களும் சங்கநிதி பத்மநிதிகளின் வடிவங்களுமுண்டு.

கனகசபை: இது 3ஆம் பிராகாரத்துள்ள சந்நிதி மண்டபம். இதில் அசுவாரூட மூர்த்தி எழுந்தருளியிருக்கின்றமையின், இது குதிரைஸ்வாமி மண்டப மெனவும் வழங்கும். ஜபிப்பவர்களுக்கு பஞ்சாட்சர ஜபசித்தியைத் தருதல் பற்றி இது பஞ்சாட்சர மண்டபம் என்றும் கூறப்படும். இம்மண்டபத்தில் பாக்கற்களில் ஆறு அத்துவாக்கள் முறையாகச்செவ்வனே செய்விக்கப்பெற்றுள்ளன. மேற்படி கண்டபம் கலி 3700-ல் இயற்றப்பெற்றதென இதிலுள்ள சாஸனமொன்று தெரிவிக்கின்றது.

மண்டபங்கள்:

(1) மாணிக்கவாசகர் மண்டபம்: இது கோபுரத்திற்கு வெளியில் உள்ளது.

(2) சுந்தரபாண்டிய மண்டபம்: இது முதற்பிராகாரத்துள்ள சந்நிதி மண்டபம்; இது தேவசபை என்றும் வழங்கப்பெறும்.

(3) தில்லை மண்டபம்: இது நிருத்தசபை.

(4) தியாகராச மண்டபம்: இது மூன்றாம் பிராகாரத்தில் மேல் பக்கத்துள்ளது.

தீபங்கள்:

இந்தத் திருக்கோயிலில் இடப்படும் தீபவகைகள் விசேடப் பெயர் பெற்று விளங்குகின்றன. அவற்றுள்,

(1) நட்சத்திரமாலை: இதிலுள்ள தீபங்கள் இருபத்தேழு. சக்கரத்தில் இருபத்து நான்கு மேலே மூன்று. இஃது ஆனந்த சபையில் மூலஸ்தானத்திற்குப் பின்னேயுள்ளது.

(2) கலாதீபம்: இதிலுள்ள தீபங்கள் ஐந்து; இது சித்ஸபையில் உள்ளது.

(3) வர்ணதீபம்: இதில் உள்ள தீபங்கள் ஐம்பத்தொன்று. இது ஸத்ஸபையிலுள்ளது. வர்ணம்—அக்ஷரம்.

(4) தத்துவ தீபம்: இதிலுள்ள தீபங்கள் முப்பத்தாறு. இது தேவ சபையிலுள்ளது. தத்துவம் 36.

(5) புவனதீபம்: இதிலுள்ள தீபங்கள் 224. இது தேவசபையில் தத்துவ தீபத்திற்கு முன்னேயுள்ளது. இதனைத் தீபமாலை என்றும் கூறுவர். புவனம் 224.

(6) பததீபம்: இதிலுள்ள தீபங்கள் 81; இது குதிரைச் சேவகர்க்குப்பின் உள்ளது. பதம் 81.

ஸ்ரீ ஆத்மநாதருடைய திவ்வியலீலைகளையும், ஸ்ரீவாத புரீசர் உபதேசம் பெற்றமையையும் புலப்படுத்துவனவான ஊர்களும் இடங்களும் வேறு ஆதாரங்களும் பலவுள்ளன.

வழக்கங்கள்:

குருந்த மரத்தின் அடிமண்: கருங்குட்ட நோயுள்ளவர்கள் இம்மண்ணைப் பூசிக்கொண்டால் அந்நோய் தீரும். இது ''முதுகுருந்தடியின்மண் பூசிக் கருங்குட்ட முற்றுந் துடைத்து விடலாம்'' (அம்புலி. 4) என்னும் சிவயோகநாயகி பிள்ளைத் தமிழாலும் அறியலாகும்.

அம்பிகையின் அபிஷேக தீர்த்தம்: தரிசிப்பவர்களுக்கு அம்பிகை சந்நிதியில் இத்தீர்த்தம் கொடுத்தல் மரபு; உட்கொள் பவர்களுக்கு இது சிவஞானத்தை அளிக்கும். இது ''கையார வபிடேக மாட்டுகுங் குமமஞ்சள் கமழ்மஞ்சனம் பருகிமேற், கருமும் மலக்கறைகள் கழுவியே சிவஞான கலையெலா நீவார லாம்'' (சிவயோக. அம்புலி. 4.) என்பதனாலும் அறியலாகும்.

நிவேதனம்: சமைத்த பாத்திரங்களுடன் கொணர்ந்து ஸத்ஸபையிலுள்ள படைகல்லிற்கொட்டி மிகுதியாகப் புகையை எழுப்பும் அன்னத்தைச் சுவாமிக்கு நிவேதனம் செய்வது இத்தல வழக்கம். இதனால் இது அமுது மண்டபம் என்று வழங்கும்.

புழுங்கலரிசியன்னம், பாகற்காய்ப்புளிங்கறி, அரைக்கீரைச் சுண்டல் இவைகளின் நிவேதனம்:

முந்நூற்றுவர்களுக்குரிய நிலங்களை வேறொருவன் அபகரித்துக் கொண்டபொழுது அவை அவர்களுக்கே உரியன என்று தாபித்தற் பொருட்டு அவர்களுடன் பாண்டியனுடைய சபைக்கு வழக்காட ஓரந்தணர் வடிவங்கொண்டு சென்ற ஸ்ரீ ஆத்மநாதர், தத்தம் வீடுகளிலிருந்து மேற்கூறிய வியஞ்சனங்களோடு அவர்கள் கொணர்ந்த கட்டமுதை வழியில் உவப்புடன் அமுது செய்தருளினமையின், இவைகள் நிவேதிக்கப்படுகின்றன என்று சொல்வர். இது வீரவனப் புராணத்துள்ள பொதிசோறு நிவேதனம் செய்த படலத்தாலும் தெரிகின்றது.

இத்தலத்தில் திருநந்திதேவரும், ஸ்ரீ சண்டேசரும் இல்லையாதலால் சுவாமி தரிசனம் செய்ய விரும்பியவர்கள் உள்ளே செல்லும்போது ஸ்ரீ மாணிக்க வாசகரைத் தரிசித்துச் சுவாமி தரிசனம் செய்த பின்பு மீண்டும் மாணிக்க வாசகரைத் தரிசிப்பது மரபாக உள்ளது.

ஆவணம்

திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை 25—ஆம் பதிகம் 4—ஆம் செய்யுள்.

கோவணமோ . . . . . ஆவணமோ வொற்றியோ
அம்மானார் தாமறியேன் மற்றூராமாறாரூர்தானே.

இது நன்னிலந் தாலுகா குடவாயிலுக்கு ஈசான மூலையில் உள்ளது. பருத்தியூர்க்கு அருகே இருத்தலின் ஆவணம் பருத்தியூரென வழங்கும். அக்கிர ஹாரத்திற்கு மேற்கில் உள்ளது. சிவலிங்கமும் விருஷபமுமாத்திரமுள்ளன. விருஷபம் மிக அழகிது.

ஸ்வாமி: உக்கிர பசுபதீசுவரர்.

தீர்த்தம்: விருஷப தீர்த்தம்; வடக்கே தடாக வுருவம். கோயில் முதலியவையில்லை.

ஆழியூர் — க்ஷேத்திரக்கோவை: 6—70—7.

வீழிமிழலை... வியலூர் ஆழியகத்தியான் பள்ளியண்ணா...

திரு நாட்டுத் தொகை: 7—12—7.

ஈழநாட்டு... நெய்த்தானந் திருமலை

ஆழியூரன நாட்டுக் கெல்லாமணியாகிய கீழையில்லரனார்க் கிடங் கிள்ளி குடியதே.

இது கீழ்வேளூர்க்குக் கிழக்கே கீழ்வேளூருக்கும்—சிக்கலுக் கும் இடையில் உள்ளது.

ஆறை: கேஷத்திரக்கோவை 2—39—5.

ஆறைவடமகாறல் அம்பர் ஐயாறணியார் பெருவேளூர்.

கேஷத்திரக் கோவை. 6—70—4.

எச்சில் இளமர் . . . ஆவடு தண்டுறையழுந்தூர் ஆறை.

பழையாறை. ஆற்றூர் என்பதன் மருவிய வடிவம்.

ஆறைமேற்றளி: 7—35—1.

அங்கமோதியோர் ஆறை மேற்றளி நின்றும் போந்து வந்தின்னம்பர்த் தங்கினோம்.

ஆன்பட்டி (பேரூர்): காப்புத் திருத்தாண்டகம் 6—7—10.

சிந்தும்புனல் . . . ஆக்கூருமாவூரும் ஆன்பட்டியும். கோயமுத்தூருக்கு அருகில் உள்ளது.

இச்சையூர்: இடையாற்றுத்தொகை: 7—31—4.

சுச்சையூர் . . . இச்சையூரெய்த மானிடையாறிடைமருதே.

இடங்கொளூர் (இடங்கள்ளூர்)
இடையாற்றுத்தொகை. 7—31—3.

சுடங்களூர் . . . . . வெய்ய படங்களூர்கின்ற பாம்பரையான் பரஞ்சோதி இடங்கொளூரெய்த மானிடை யாறிடைமருதே.

இது இடைமருதூர்க்கு வடமேற்கில் காவிரியின் வடகரை யிலுள்ளது.

இடவை: கேஷத்திரக்கோவை 6—70—3.

இடைமருதீங்கோய் . . . இன்னம்பர் ஏர் இடவை ஏமப் பேறூர்

திருவாசகம், 11–ஆம் திருமுறை.

இராசேந்திர சிங்க வள நாட்டு, மண்ணி நாட்டு 'இடவை' எனக் கல்வெட்டுக் குறிக்கிறது. இடவை ஒருதலம்.

இடைக் குளம்:

அடைவுதிருத்தாண்டகம் 6—71—10.

நள்ளாறும் . . . தெள்ளாறும் வளைகுளமும் தளிக்குளமும் நல் இடைக்குளமும்.

தஞ்சைஜில்லா பாவநாசம் தாலுகா மருத்துவக் குடி.

ஆவடுதுறைக்கு அருகில் மருத்துவக்குடி என இன்று வழங்குகிறது.

இடைத்தானம்: 6–7–8.

தெள்ளும்புனற் . . . . திண்டீச்சரமுந் திருப்புகலூர் எள்ளும் படையான் இடைத் தானமும்.

இடைப்பள்ளி: கேஷத்திரக்கோவை 2–39–4.

அறப்பள்ளி . . . . விரும்பும் இடைப்பள்ளி சக்கரமால் உறைப்பாலடி போற்றக் கொடுத்த பள்ளி.

இராசசிங்கம்: 4–15–7.

எழிலார் இராசசிங்கத்தை இராமேச்சுரத்து எம்எழிலேற்றை.

ஸ்வாமி: கைலாஸநாதர்.

ஸந்நிதி: கிழக்கு.

அம்பிகை: ஸௌந்தர நாயகி.

இராமநாதபுரம் சீமையில் உள்ளது.

இராப்பட்டீச்சுரம்: திருத்தாண்டகம் 6—25—10.

நல்லூரே நன்றாக . . . . . இல்லார்ந்த பெருவேளூர்த் தளியே பேணி இராப்பட்டீச்சரம் கடந்து மணக்கால் புக்கு. மணக்காலைச் சார்ந்தது.

கும்பகோணம்—திருவாரூர்ப் பெருவழியில் பெருவேளூருக்குத் தெற்கே, கரவீரத்திற்கு வடக்கு முகமாக அமைந்துள்ளது.

இரும்புதல்: திருத்தாண்டகம் 6—51—6.

பெரும்புலியூர் . . . . . இரும்புதலார் இரும் பூளையுள்ளார். ஆவூர்க் கூற்றத்தைச் சார்ந்த ஒரு ஸ்தலம்.

மாயூரம் தாலூகா; இரும்புதலை என்று வழங்குவர்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் ஒரு சிற்றூர்.

இளமர்: கூஷத்திரக்கோவை 6—70—4.

எச்சிலிளமர் ஏம நல்லூர்

எச்சில் என்பது ஓர்ஊர். இளமர் என்பது ஓர் ஊர்.

இறைக்காடு: ஊர்த்தொகை 7—47—3.

நிறைக்காட்டானே . . . . . .
இறைக்காட்டானே யெங்கட்குன்னை யெம்மான்றம்மானே.

இறையான்சேரி: கூஷத்திரக்கோவை 6—70—4.

எச்சில் இளமர் . . . . . இலம்பையங் கோட்டூர் இறையான்சேரி.

திருத்துறைப்பூண்டிக்கு அருகில் இறைவான்சேரி என்ற ஊர் உளது. காஞ்சிக்கு அருகிலும் இப்பெயர் கொண்ட ஊர் ஒன்று உளது.

இறைவனூர்: இடையாற்றுத்தொகை 7—31—5.

நிறையனூர் . . . . . வலஞ் சுழி வாய்த்த இறைவனூரெய்த மானிடையாறிடை மருதே.

ஈசனூர்: இடையாற்றுத் தொகை 7—31—8.

தேசனூர்வினை . . . . . நள்ளாறையமர்ந்த ஈசனூர். எய்த மானிடை யாறிடை மருதே.

உஞ்சேனை மாகாளம்: 6—7—11.

தேனார்புனல் . . . . மதிலுஞ்சை மாகாளம் வாரணாசி

கோவை. 2—39—9.

நெற்குன்றம் . . . . நளிர் சோலைஉஞ்சேனை மாகாளம் வாய்மூர்.

உச்சயினி—வடநாட்டுத்தலம்.

கோவை. 6—70—8.

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்.

உண்ணாழிகை: திருத்தாண்டகம் 6—5—13.

அண்ணமலையமர்ந்தார் . . . . . அந்தணர்கண் மாடக் கோயில் உண்ணாழிகையார் உமையாளோடும் இமையோர் பெருமானார் ஒற்றியூரார்.

திருவுண்ணாழிகை யென்று காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் திருவரங்க முதலியவற்றிற் காணலாம்; பெரும்பாலும் கருக்கிரகத்தைச் சூழவுண்டு.

உண்ணாழிகை—உட்பிராகாரம்.

(நாழிகை—நாடிகை; நாடி—ஜீவதாது)

உண்ணீர்

6—ஆம் திருமுறை. 7—ஆம் பதிகம்
7—ஆம் செய்யுள்.

தெண்ணீர்ப்..... உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர்.

உத்தரமாமலை

4—ஆம் திருமுறை. 25—ஆம் பதிகம்
5—ஆம் ஆம் செய்யுள்.

பத்தியால்..... துத்தியைந்தலைய நாகஞ் சூழ் சடை முடிமேல் வைத்து உத்தரமலையர் பாவை உமை யவள் நடுங்க அன்று அத்தியின்உரிவை போர்த்தார்.

உதயமலை. அடைவு

6—ஆம் திருமுறை. 71—ஆம் பதிகம்
9—ஆம் செய்யுள்.

ஞாயிறு தோன்றும் மலை.

கந்தமாதனங்... வியன் பொதியின் மலை மேருவுதயமத்தம்.

இது ஸூர்யனுடைய ஆத்மார்த்த பூஜை.

ஸ்வாமி: ஸூரியேசர்; திருவுருவம் சூரியகாந்தச் சிலை, சிவரகஸ்யம்.

ஸந்நிதி: மேற்கு.

மனுஷ்யாராதனமன்று. அஸ்தகிரியும், உதயகிரியும் சூரியனுடைய ஆத்மார்த்த லிங்கங்கள்.

உருத்திரகோடி. க்ஷேத்திரக்கோவை

6—ஆம் திருமுறை. 70—ஆம் பதிகம்.
8—ஆம் செய்யுள்.

உஞ்சேனை..... உருத்திரகோடி மறைக் காட்டுள்ளும்.

உருத்திரகோடி: திருக்கழுக்குன்றத்தில் சங்கதீர்த்தத்தின் அக்கினி மூலையில் உள்ளது. கோடி ருத்திரர் பூசித்ததலம்.

ஸ்வாமி: ருத்திர கோடீசுவரர்.

அம்பிகை: அபிராமி; மிகப்பழமை.

காக்கைக்குன்று:—இது சங்க தீர்த்தத்தின் மேல்புறமுள்ளது. காஞ்சியிலும் திருக்கழுக்குன்றத்திலும் உள்ளது என்பர்.

ஊற்றத்தூர் க்ஷேத்திரக்கோவை

6—ஆம் திருமுறை 70—ஆம் பதிகம்
10—ஆம் செய்யுள்.

நறையூரிற்..... உறையூர் கடலொற்றியூர் ஊற்றத்தூர்.

ஊற்றத்தூர்: இஃது ஊட்டத்தூரென வழங்கும். இதனைத் தலைநகராகக் கொண்ட நாடு ஊறைநாடென்றும் அந்நாட்டில் இருந்த ஒரு பகுதியினராகிய வேளாளர் ஊற்றை நாட்டாரென்றும் வழங்கப்படுவர். இத்தலத்தின் வேறு பெயர் அரதனபுரம் என்பதாகும். இத்தலத்திலுள்ள மலை தேவகிரி எனவும், நதிநந்தா நதி எனவும் வழங்கப்படும். இத்தலத்து மூர்த்தியின் திருநாமம் சுத்தரத்தினேசுவரர். அம்பிகையின் திருநாமம் க்ஷீரவாணி.

அடைவு திருத்தாண்டகம்

6-ஆம் திருமுறை. 71—ஆம் பதிகம்
4-ஆம் செய்யுள்.

பிறையூருஞ்..... உறையூரும் ஓத்தூரும் ஊற்றத்தூரும்.

திருச்சி மாவட்டம் ஊட்டத்தூர்—ஊறைப் பதிற்றுப்பத்தந் தாதி, மகாவித்துவான் பிள்ளையவர்களால் பாடப்பெற்றது.

எங்கூளூர் திரு இடையாற்றுத் தொகை.

7—ஆம் திருமுறை. 31—ஆம் பதிகம்.
6-ஆம் செய்யுள்.

திங்கூளூர்..... தங்கூளூர் தமிழாஞென்று பாவிக்க வல்ல எங்கூளூரெய்த மானிடையாறிடைமருதே.

எச்சில் (எச்சிலிளமர்) கூேத்திரக் கோவை.

6—ஆம் திருமுறை. 70—ஆம் பதிகம்
4—ஆம் செய்யுள்.

எச்சில் இளமர் ஏம நல்லூர்.

எந்தையூர் திரு இடையாற்றுத்தொகை.

7—ஆம் திருமுறை. 31—ஆம் பதிகம்
1—ஆம் செய்யுள்.

முந்தையூர்..... எந்தையூர் எய்த மானிடை யாறிடைமருதே.

எய்த மான் திரு இடையாற்றுத் தொகை

7—ஆம் திருமுறை 31-ஆம் பதிகம்
1—10—ஆம் செய்யுட்கள்.
முந்தையூர்..... எந்தையூர்எய்தமான்
ஊறிவாயின..... வெள்ளேறு ஏறுவார் எய்தமான்.

எழுமூர் கூேத்திரக்கோவை

6—ஆம் திருமுறை 70—ஆம் பதிகம்
5—ஆம் செய்யுள்.
கொடுங்கோளூர்..... இடும்பாவன மெழுமூர் ஏழூர் தோழூர்..... தற்போதைய சென்னையின் எழும்பூர்.

ஏம கூடம் திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை. 51—ஆம் பதிகம்
10—ஆம் செய்யுள்.

அரிச்சந்திரத்துள்ளார்..... எரிச் சந்தி வேட்கு மிடத்தார் ஏமகூடத்தார்.

கேஷத்திரக் கோவை

6—ஆம் திருமுறை 70—ஆம் பதிகம்
5-ஆம் செய்யுள்.

கொடுங்கோளூர்..... எறும்பியூர் ஏராரும்ஏமகூடம்.

அடைவு திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை 71—ஆம் ஆம்பதிகம்
9—ஆம் செய்யுள்.

கந்தமாதனங்கயிலை..... மகேந்திரமாமலை நீலம் ஏம கூடம்.

இலங்கையில் உள்ள கதிர்காமம் என்பர் சிலர்.

ஏம நல்லூர்

கேஷத்திரக்கோவை. 6—70—4.

எச்சில் இளமர் ஏமநல்லூர்.

கும்பகோணம் தாலூகாவில் உள்ள திரைலோக்கி என்னும் பதி. இது திருவிசைப்பா பெற்ற பதி.

மண்ணி நாட்டு ஏம நல்லூராகிய திருலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்று கல்வெட்டுக் குறிக்கிறது. தெ. இ.க. தொகுதி. 2. பக்கம். 331.

ஏமப்பேறூர்

கேஷத்திரக்கோவை 6—70—3.

இடைமருதீங்..... இன்னம்பர் ஏரிடவை ஏமப்பேறூர்.

பண்ணுருட்டியை அடுத்த திருவதிகைக்கு அருகில் உள்ள சிற்றூர்.

ஏயீச்சுரம்

காப்புத் திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை. 7—ஆம் பதிகம்.
8—ஆம் செய்யுள்.

தெள்ளும்புனற்..... எள்ளும் படையான்
இடைத்தானமும் ஏயீச்சரமு நல்லேமங் கூடல்.

தனித் திருக்குறுந்தொகை.
5—ஆம் திருமுறை. 91—ஆம் பதிகம்.
1—ஆம் செய்யுள்.

ஏயிலானை 6—91—1

ஏழூர் கேஷத்திரக்கோவை

6—ஆம் திருமுறை. 70—ஆம் பதிகம். 5—ஆம் செய்யுள்.
கொடுங்கோளூர்..... இடும்பாவன எழுமூர்
ஏழூர் தோழூர்.

ஏழூர்: எழுஞாரென்று திருக்களருக்குக் கிழக்கேயுள்ளது. ஸப்தரிஷிகள் பூசித்தமையால் ஏழூர் என்று வழங்குகிறது.

ஏறனூர்

திருஇடையாற்றுத்தொகை

7—ஆம் திருமுறை. 31—ஆம் பதிகம்
9—ஆம் செய்யுள்.

பேறனூர்..... ஏறனூரெய்த மானிடையாறிடை மருதே.
ஏறனூர்—ஏற்றுமான்—மலைநாடு.

கச்சிப்பல தளி

கேஷத்திரக்கோவை. 6—70—4.

எச்சில் இளமர்..... கச்சிப்பலதளியும் ஏகம்
பத்தும் கயிலாய நாதனையே காணலாமே.

காஞ்சீபுரத்திலுள்ள திருமேற்றளி, ஓணகாந்தன் தளி, திருக்காமக்கோட்டம், கச்சிநெறிக் காரைக்காடு முதலிய பல திருக்கோயில்களைக் குறித்ததாகலாம்.

கச்சிமயானம் வினாவிடை 6—97—10.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சிமயானத்தான்.

காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் திருக்கோயிலுக்குள் கொடி மரத்திற்கு அண்மையில் விளங்கும் ஓர் சிவ சந்நிதி.

கச்சையூர் 7—31—4.

கச்சையூர் காவங் கழுக்குன்றங் காரோணம்.

கஞ்சாறு

சேக்கிழார் திருக்கோவை 6—70—8.

உஞ்சேனை மாகாளம்..... கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும்.

மாயூரத்திற்கு அண்மையில் இன்று ஆனந்த தாண்டவபுரம் என வழங்கப்படும் ஊர். மானக்கஞ்சாற நாயனார் பிறந்த தலம். பாரிசாதவனம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

கடங்கநேரி

7—ஆம் திருமுறை. 31—ஆம்பதிகம்
3—ஆம் செய்யுள்.
கடங்கநேரி திருக்காரிக்கரை கயிலாயம்.

கடையக்குடி அடைவுதிருத் 6—71—3

நற்கொடி..... கருந்திட்டைக்குடி கடையக்குடி காணுங்கால் விற்குடி

[பாண்டி குலாசனி வளநாட்டுமீய் செங்கிளி நாட்டுக் கடையக்குடி' என்று கல்வெட்டுக் குறிக்கிறது.]

கண்ணை

சேக்கிழார் திருக்கோவை 6—70—6.

மண்ணிப்..... கண்ணை களர் காறை கழிப்பாலையும்.

திருவண்ணாமலை தாலூகா செங்கண்மா என்பது.

[செங்கண்மா என்பதன் மருவிய வடிவம்; தற்கால வடார்க் காடு மாவட்ட 'செங்கம்' என்ற ஊர்.]

கந்தமாதனம்

6—ஆம் திருமுறை 81—ஆம் பதிகம்
1—ஆம் செய்யுள்.

கண்டலஞ்சேர்..... கன்மதில் சூழ் கந்தமாதனத் தான் கண்டாய்.

திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை. 51—ஆம் பதிகம்
1—ஆம் செய்யுள்.

கயிலாயமலையுள்ளார் கந்தமாதனத்துளார் காளத்தியார்.

அடைவு திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை 71—ஆம் பதிகம்.
9—ஆம் செய்யுள்.

கந்தமாதனங் கயிலைமலை கேதாரம்.

[திருச்செந்தூர்க் கோயிலின் வடபால் உள்ளது என்று திரு. ரா.பி.சே. குறிக்கிறார்.]

கரந்தை (கருந்தட்டான்குடி)

2—ஆம் திருமுறை. 94—ஆம் பதிகம்.
6—ஆம் செய்யுள்.

தண்டும் தாளமும்..... கண்டு கோடலும் அரியார் காட்சியும் அரியதோர் கரந்தை வண்டு வாழ்பதியுடையார்.

2—ஆம் திருமுறை. 98—ஆம் பதிகம்
7—ஆம் செய்யுள்.

கணிச்சியம்படை..... துணிச்சிரக் கிரந்தை யாய் கரந்தையாய்.

கரபுரம்—விரிஞ்சீபுரம்

காப்புத்திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை. 7—ஆம் பதிகம்.
7—ஆம் செய்யுள்.

தெண்ணீர்ப்புனல்..... கண்ணார் நுதலார் கரபுரமுங் காபாலி யாரவர்தங் காப்புக்களே.

வேறோரிடம்: கரபுரம், திருப்பாற்கடல் என்னும் சிற்றூர். இது வாலாஜா தாலூகாவில் காவிரிப்பாக்கத்திற்குத் தெற்கே இரண்டு மைலில் இருக்கின்றது. இது படவூர்க் கோட்டத்தில் காவிரிப்பாக்கம் அமளி நாராயண சதுர்வேதி மங்கலமென சாஸனத்தில் காணப்படுகின்றது.

கருகற் குரல்

7—ஆம் திருமுறை. 47—ஆம் பதிகம்
5—ஆம் செய்யுள்.

மருகலுறைவாய்..... கருகற் குரலாய்
வெண்ணிக் கரும்பே கானூர்க்கட்டியே.

கருந்திட்டைக்குடி

அடைவுதிரு.

6—ஆம் திருமுறை. 71—ஆம் பதிகம்
3—ஆம் செய்யுள்.

நற்கொடி..... கருந்திட்டைக்குடி கடையக்குடி

தஞ்சையை அடுத்த 'கரந்தை' என்னும் கருந்தட்டான்குடி, என்று வழங்கப்பெறும் இடம்.

கருப்பூர்

7—ஆம் திருமுறை. 98—ஆம் பதிகம்.
3—ஆம் செய்யுள்.

கச்சியனின் கருப்பூர் விருப்பன்.

கருமாரி காப்புத்திரு. 6—7—11.

தேனார் புனல்..... ஏணார் சோலைக் கானார்
மயிலார் கருமாரியுங் கறைமிடற்றார் தம்முடைய காப்புக்களே.

சோலை வளம் மிக்க ஓர் சிற்றூராகக் குறிக்கப்படுகிறது. இருப்பிடம் விளங்கவில்லை.

கழுநீர்க் குன்றம்

6—ஆம் திருமுறை. 13—ஆம் பதிகம்.
4—ஆம் செய்யுள்.

பன்மலிந்த..... கன்மலிந்தோங்கு கழுநீர்க்குன்றம்.

குடுமிமாமலையென்று குறிக்கப் பெற்றுள்ளது.

களக்குடி

6—ஆம் திருமுறை 71—ஆம் பதிகம்.
3—ஆம் செய்யுள்.

நற்கொடி..... கற்குடி தென்களக்குடி செங் காட்டங்குடி

களந்தை—களக்காடு

திருத்தொண்டத்தொகை

7—ஆம் திருமுறை. 39—ஆம் பதிகம்.
6—ஆம் செய்யுள்.

வார் கொண்ட..... ஆர் கொண்டவேற் கூற்றன் களந்தைக் கோனடியேன்.

களக்காடென்னும் தலம் நாங்குநேரித்தாலுகாவிலுள்ளது. சோரராணியமென்றும் புன்னை வனமென்றும் இது வழங்கும். சுவாமி: சத்தியவாசகர் (பொய்யாமொழியார்) அம்பிகை: ஆவுடைநாயகி.

களரி—காடு

5—ஆம் திருமுறை. 20—ஆம் பதிகம்
7—ஆம் செய்யுள்.
தளரும்வாள்..... களரியார் கடம்பூர்க் கரக்கோயிலே.

காகம்பர்

4—ஆம் திருமுறை. 58—ஆம் பதிகம்.
7—ஆம் செய்யுள்.

மேகம்போல்..... இமையவர் பரவியேத்தக் காகம்பர் கழறராகிக்கடியதோர் விடையொன்றேறிப்பாகம் பெண்ணுருவமானார்.

காட்டூர். க்ஷேத்திரக்கோவை.

2—ஆம் திருமுறை. 39—ஆம் பதிகம்
7—ஆம் செய்யுள்.

மாட்டூர்மட..... காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டுங்கடலொற்றியூர்.

ஊர்த்தொகை

7—ஆம் திருமுறை. 47—ஆம் பதிகம்
1—ஆம் செய்யுள்.

காட்டூர்க்கடலே கடம்பூர் மலையே கானப்பேரூராய்.

திருவாரூர்—குடந்தைப்பேருந்துப்பாதையில் உள்ளது.

காம்பீலி

7—ஆம் திருமுறை. 74—ஆம் பதிகம்
7—ஆம் செய்யுள்.

வரையின் மாங்கனி..... காம்பீலி சுமந்தொளிர்
நித்திலங்கை போய்.

கூேத்திரக்கோவை

6—ஆம் திருமுறை. 70—ஆம் பதிகம்.
2—ஆம் செய்யுள்.

ஆரூர் மூலட்டானம்..... பெருந்துறை காம்பீலி
பிடவூர் பேணுங் கூரார் குறுக்கை வீரட்டானமும்.

பெல்லாரி மாவட்டத்தில் உள்ள காம்பிலி என்னும் ஊர்.

காரிகரை

7—ஆம் திருமுறை. 31—ஆம் பதிகம்
3—ஆம் செய்யுள்.

கடங்கரூர் திருக்காரிகரை கைலாயம்.

செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலூகா நாமகிரி என்று வழங்குவது.

திருவெள்ளூருக்கு வடக்கே இருபத்திரண்டு மைலிலுள்ள நாகலாபுரத்துக்கு வடமேற்கில் ஒன்றரை மைலிலுள்ளது. ராமகிரியென்று வழங்கப்படுகின்றது. குன்றவர்த்தனக்கோட்டத்து நின்றையூர் நாட்டில் இஃது உள்ளதாகச் சிலா சாஸனம் தெரிவிக்கின்றது.

நாகலாதேவி கிருஷ்ண தேவராயருடைய தாய்; இவர் பெயரால் கட்டுவிக்கப் பெற்றது நாகலாபுரம்; இதன் பழம் பெயர் அரிகண்டபுரம்; இதில் பெரிய பெருமாளின் கோயிலுண்டு.

ராமகிரியில் ஒரு மலையுண்டு; அதற்கு வைரமலை என்று பெயர்; அதில் சிவாலயமுண்டு; ஸ்வாமி. வாலீச்சரமுடையார். சிகாளத்திப் புராணத்தில் கூறப் பெற்றது.

நின்றையூர் இராமகிரிக்குத் தென் மேற்கில் 9—ஆம் மைலி லுள்ளது.

காவம்

7—ஆம் திருமுறை. 31—ஆம் பதிகம்.
4—ஆம் செய்யுள்.

கச்சையூர் காவங் கழுக்குன்றங் காரோணம்.

காவிரிப்பூம்பட்டினம்.

3—ஆம் திருமுறை. 112—ஆம் பதிகம்.
10—ஆம் செய்யுள்.

பிறை கொள் சென்னியர் பட்டினத்துறை பல்லவனீச்சரத் திறைவர்.

6—ஆம் திருமுறை. 22—ஆம் பதிகம்.
6—ஆம் செய்யுள். பூம்புகார்க்கற்பகத்தை.

2—ஆம் திருமுறை. 41—ஆம் பதிகம்.
4—ஆம் செய்யுள்.

கட்டலர்த்த..... மொட்டலர்த்த தடந்தாழை முருகுயிர்க்குங் காவிரிப்பூம் பட்டினத்துச் சாய்க் காட்டெம் பரமேட்டி பாதமே.

திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை. 82—ஆம் பதிகம்.
3—ஆம் செய்யுள்.

கானிரிய வேழ..... காவிரிப்பூம் பட்டினத்துள்ளார் போலும்.

1—ஆம் திருமுறை. 65—ஆம் பதிகம்.
1—ஆம் செய்யுள்.

அடையார்..... படையார் புரிசை பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே.

1—ஆம் திருமுறை. 65—ஆம் பதிகம்.
4—ஆம் செய்யுள்.
தாரார் கொன்றை..... பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே.

1—ஆம் திருமுறை. 65—ஆம் பதிகம்.
7—ஆம் செய்யுள்.
வெந்தலாய வேந்தன்..... பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே.

1—ஆம் திருமுறை. 65—ஆம் பதிகம்.
11—ஆம் செய்யுள்.
பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத் தெம்மத்தன்.

3—ஆம் திருமுறை. 112—ஆம் பதிகம்.
1—ஆம் செய்யுள்.
பரசு பாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை பல்ல வனீச்சரத்தரசு. ஈரடி

காளிங்கம் காப்புத்திரு 6—7—5.

செழுநீர்ப்புனல்..... கழுநீர் மதுவிரியும் காளிங்கமும்.

நீர் வளமுடையதாகக் குறிக்கப்பெறும் இதன் இருப்பிடம் விளங்கவில்லை.

காற்றூர் கூத்திரக்கோவை. 2—39—8.

குலாவு திங்கள்..... பூழியூரும் காற்றூர்.

காறை திருத்தாண்டகம்

6—ஆம் திருமுறை. 79—ஆம் பதிகம்.
8—ஆம் செய்யுள்.
கரும்பிருந்த கட்டி..... கன்றாப்பின் நடு தறியைக் காறையானை.

வாலாஜா தாலூகாவில் காறை நாடு என்று ஒரு நாடு உண்டு.

சப்த விடங்கத் தலங்களுள் ஒன்றாகிய திருக்காறாயில் என்பதன் திரிபாகலாம்.

கிரந்தை

2—ஆம் திருமுறை. 98—ஆம் பதிகம்.
7—ஆம் செய்யுள்.

கணிச்சியம்படை..... கழிந்தவர்க் கொழிந்த சீர்
துணிச்சிரக் கிரந்தையாய்.

1—ஆம் திருமுறை. 61—ஆம் பதிகம்.
3—ஆம் செய்யுள்.

வரந்தையான்..... கிரந்தையான்

கிழையம்: திருநாட்டுத் தொகை

7—ஆம் திருமுறை. 12—ஆம் பதிகம்.
5—ஆம் செய்யுள்.

குழலைவென்ற..... கீழைவழி பழையாறு கிழையமும்.

கிள்ளி குடி: திருநாட்டுத்தொகை

7—ஆம் திருமுறை. 12—ஆம் பதிகம்.
7—ஆம் செய்யுள்.

ஈழநாட்டு..... கீழையில்லரனார்க்கிடங் கிள்ளி குடியதே.

கீழையில்: திருநாட்டுத்தொகை 7—12—7.

ஈழ நாட்டுமாந்தோட்டந்..... திருமலையாழி யூரன நாட்டுக் கெல்லாமணியாகிய கீழையில்லரனார்க்கிடங் கிள்ளி குடியதே.

கீழைவழி: திருநாட்டுத்தொகை 7—12—5.

குழலை வென்ற..... கீழைவழி பழையாறு.

திருப்பூர்த்தாலுகா; கோயம்புத்தூர் ஜில்லா. திருப்பூர்க்கு வடகிழக்கில் 4-மைல்.

குக்குடேச்சுரம்: அடைவு திருத்தாண்டகம் 6—71—8

நாடகமாடிட..... திண்டீச்சுரங்குக்குடேச்சுரம் அக்கீச்சுரம்

சிற்றூர் மாவட்டம் புங்கனூரில் உள்ள திருக்கோழீச்சுரம் என்று கல்வெட்டில் குறிக்கப் பெற்ற தலமே இது என்பர். ரா.பி.சே.

குண்டையூர். 7—20—1.

நீளநினைந்..... குண்டையூர்.

7—20—8 அரக்கன்முடிகரங்..... குண்டையூர்.

குணவாயில்—திருக்குணவாயில்.

கேஷத்திரக்கோவை 2—39—7

மாட்டூர்..... கொடுங்கோவலூர் திருக்குணவாயில்.

அடைவுதிருத்தாண்டகம் 6—71—7

கடுவாயர்தமை நீக்கி..... குடவாயில் குண வாயிலான வெல்லாம் புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே.

குணவாயிற் கோட்டம்—சேர நாட்டுத்தலம். கொடுங் கோளூருக்கு மேற்புறத்தில் உள்ளது.

குத்தங்குடி: (கொத்தங்குடி)

கேஷத்திரக்கோவை 2—39—10.

குத்தங்குடி வேதிகுடி புனல் சூழ் குருந்தங்குடி.

தேரழுந்தூருக்கு அருகில் உள்ளது.

குமரி: 7—78—6

தளிசாலைகள்..... குருக்கேத்திரங் கோதாவிரி குமரி. குமரி—ஓர் ஆறு.

பாவநாசத் திருக்குறுந்தொகை. 5—99—2.

கொங்குதண் குமரித்துறையாடிலென்.

கேஷத்திரக்கோவைத்திருத் தாண்டகம் 6—70—9.

திண்டீச்சரஞ்..... குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு. குமரி—கன்னியாகுமரி.

குயிலாலந்துறை அடைவு திருத்தாண்டகம் 6—71—11.

கயிலாயமலை..... பைம் பொழிற் குயிலாலந் துறை சோற்றுத்துறை.

தருமபுரத்திற்கு வடமேற்கே கருங்குயினாதம் பேட்டை என்ற பெயரில் உள்ளது.

குரக்குத்தளி ஊர்த்தொகை 7—47—2.

கொங்கிற் குறும்பிற் குரக்குத்தளியாய் குழகா குற்றாலா.

குருக்கேத்திரம் 7—78—6.

தளிசாலைகள்..... குளியீர் உளங் குருக் கேத்திரம் கோதாவிரி குமரி.

5—12—4. மாடத்தாடு..... குருக்கேத்திரத்தார்.

குருகாவையூர் கோத்திரக்கோவை 2—39—1.

ஆரூர்தில்லை..... குருகாவையூர், நாரையூர் நீடுகானப் பேரூர்.

குருந்தங்குடி கோத்திரக்கோவை 2—39—10.

குத்தங்குடி..... புனல் சூழ் குருந்தங்குடி தேவன்குடி.

குழகர்

குளகரிஷி பூசித்த தலம். கோடி வேறு.

குளிராரூர் திருத்தாண்டகம் 6—23—6.

வேதாரணியத்திற்கு மேற்கே ஒரு குளவடிவமாய் உள்ளது. குழகர் கோயிலுக்கும் அகத்தியான் பள்ளிக்கும் இடையில் காட்டி யுள்ளது என்பர்.

ஆடல்மால்..... குளிராரூர் கோயிலாக் கொண் டான் கண்டாய்.

குன்றியூர் 2—106—7.

குன்றியூர் குடமூக்கிடம் வலம்புரங் குலவிய நெய்த்தானம்.

கேஷத்திரக்கோவை 2—39—1.

ஆரூர் தில்லை..... நீரூர் வயல் நின்றியூர் குன்றியூரும்.

கேஷத்திரக்கோவைத்திருத்தாண்டகம் 6—70—5.

கொடுங்கோளூர்..... கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்.

இது தண்டலை நீணெறிக்குத் தெற்கு 1 மைல். குறும்பல் குன்றியூரென வழங்கும்.

ஸ்வாமி: ஞானபுரீசுவரர்.

ஸந்நிதி: கிழக்கு.

அம்பிகை: விஞ்ஞானேசுவரி.

ஸந்நிதி: தெற்கு.

தீர்த்தம்:

விருக்ஷம்: குருந்தம்.

கூடல் கேஷத்திரக்கோவை 6—70—9.

திண்டீச்சரஞ்..... கூழையூர் கூடல்.

காப்புத்திருத்தாண்டகம். 6—7—8.

தெள்ளும்புனற்..... நல்லேமங் கூடல்.

கூந்தலூர் கேஷத்திரக்கோவை. 6—70—9.

திண்டீச்சரம்..... கொண்டீச்சரம் கூந்தலூர் கூழையூர் கூடல்.

பேணு பெருந்துறைக்கு அருகில் உள்ள சிற்றூர்.

கூரூர் கேஷத்திரக்கோவை 2—39—1.

ஆரூர் தில்லை..... கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி. திருநறையூர் நாட்டுக்கூரூர் என்பது கல்வெட்டு.

கூறனூர் இடையாற்றுத்தொகை 7—31—9

பேறனூர்..... திருமாலோர் கூறனூர்.

கூழையூர் கேஷத்திரக்கோவை 6—70—9.

திண்டீச்சரம்..... கொண்டீச்சரம் கூந்தலூர் கூழையூர் கூடல்.

கைம்மை

திருநாட்டுத்தொகை 7—12—5.

தென்னூர் கைம்மை.

கொங்கணம் கேஷத்திரக்கோவை 6—70—5.

கொடுங்கரூர்..... கொங்கணம் குன்றியூர்.

கொண்காணம் என்னும் மலை புறநானூறு 154, 156,—ஆம் பாடல்களில் மோசிகீரனாரால் குறிக்கப் பெற்றுள்ளது.

கொங்கு பாவநாசத்திருக்குறுந்தொகை 5—99—2.

கங்கையாடிலென்... கொங்கு தண் குமரித்துறை யாடிலென்.

கேஷத்திரக் கோவை 6—70—9.

திண்டீச்சரஞ்..... குருகாவூர் வெள்ளடைகுமரி கொங்கு.

ஊர்த்தொகை

7—ஆம் திரு. 47—ஆம் ப. 2—ஆம் ப.

கொங்கிற் குறும்பிற்.....

கொடுங்கோவலூர் கேஷத்திரக்கோவை. 2—39—7.

மாட்டூர்..... கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமும் கொடுங்கோவலூர் திருக்குண வாயில்.

கொடுங்கோளூர். திருத்தாண்டகம். 6—13—1.

கொடிமாட..... கொடுங்கோளூர் தண்வளவி கண்டியூரும்.

கேஷத்திரக்கோவை 6—70—5.

கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங்குன்றூர்.

கொண்டல் நாட்டுக் கொண்டல்

திருநாட்டுத் தொகை 7—12—2.

அண்டத்தண்ட..... கொண்டல் நாட்டுக் கொண்டல் குறுக்கை நாட்டுக் குறுக்கையே.

கொண்டல்—சீகாழிக்கு மேற்கே 30 மைல் தொலைவில் உள்ள சிற்றூர்.

கொல்லிமலை. திருக்குறுந்தொகை 5—34—1.

கொல்லியான் குளிர்தூங்கு குற்றாலத்தான்.

மேற்கு மலைத்தொடர்களில் ஒன்று. சேலத்திலிருந்து 30 மைல் தொலைவில் உள்ளது.

கேஷத்திரக் கோவை 6—70—1.

தில்லைச் சிற்றம்பல..... கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல் வீரட்டம்.

கொல்லிக்குளிரறைப்பள்ளி கேஷத்திரக்கோவை 6—70—1.

தில்லைச்சிற்றம்பல..... கொல்லிக் குளிரறைப்பள்ளி கோவல் வீரட்டம்.

கொல்லிமலையில் உள்ள சிவதளி. அறப்பளீசுவரர் சதகம் இத்தலத்து இறைவன் மேல் பாடப்பெற்றதேயாகும்.

கொழுநல் ஊர்த்தொகை 7—47—1.

காட்டூர்..... கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே கொழுநல் கொல்லேறே.

கோட்டுக்கா காப்புத்திரு. 6—7—5.

செழுநீர்ப்புனல்..... கொழுநீர் புடை சூழிக்கும் கோட்டுக்காவும் குடமூக்கும்.

நீர் சூழ்ந்த ஒரு பகுதியாகக் குறிக்கப்பட்டுள்ளது. இருப்பிடம் விளங்கவில்லை.

கோட்டுக்காடு கேஷத்திரக்கோவை 6—70—3.

இடைமருதீங்..... கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு.

கோடி திருத்தாண்டகம் 6—82—4.

ஊனுற்ற..... மறைக்காட்டுக்கோடி மகிழ்ந்தார் போலும்

கோடி வேறு; குழகர் வேறு. கோடி கடல் கொள்ளப் பட்டமையால் அதிலிருந்த சிவலிங்கப் பெருமான் முதலிய வற்றைக் குழகரிற் கொணர்ந்து வைத்திருக்கின்றனர்.

திருத்தாண்டகம் 6—23—6.

ஆடல் மால் யானை..... கோடியான் கண்டாய் குழகன் கண்டாய்.

7—17—3. வேகங் கொண்டோடிய..... கடற் கோடியின் மோடியைப்பூண்பதாக நாகங் கொண்டார்க்கு.

திருகேஷத்திரக்கோவை 2—39—1.

ஆரூர்தில்லை..... கடல் சூழ் கழிப்பாலை தென்கோடி.

கோணம்—திருக்கோணமலை.

திருகேஷத்திரக்கோவை 2—39—2.

அண்ணாமலையீங்கோய்..... கண்ணார் கழுக்குன்றம் கயிலை கோணம்.

கோணாகரம் 1—72—10.

நாணாரமணர்..... நெடுவீதிக் கோணாகரம் ஒன்றுடையார்.

கோத்திட்டை

7—17—6.

கோட்டங் கொண்டார் குடமூக்கிலும் கோவலுங் கோத்திட்டையும்.

கோத்திட்டைக்குடி 'வீரட்டானம்' என்றார் அப்பர். அட்ட வீரட்டத்துள் ஒன்றாகலாம்.

கேஷத்திரக்கோவை. 6—70—3.

இடைமருதீங்கோய்..... கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு.

கோத்திட்டை குடி வீரட்டானம். அடைவு திருத் 6—71—2.

காவிரியின்..... கோத்திட்டை குடிவீரட்டானம் இவை கூறி நாவில் நவின்று உரைப்பார்க்கு நணுகச் சென்றால் நமன் தமரும் சிவன் தமரென்று அகல்வர் நன்கே.

கோவந்த புத்தூர் திருக்குறுந்தொகை. 5—71—3.

கொள்ளிடக்கரைக் கோவந்த புத்தூரில் வெள்விடைக்கு அருள்செய் விசயமங்கை உள்ளிடத்து உறைகின்ற உருத்திரன்.

திருவிசயமங்கை என்னும் பாடல் பெற்ற தலம். கோவந்த புத்தூர் என வழங்கும் தலம்.

சங்கர நாராயணர் கோயில். இடையாற்றுத்தொகை 7—31—9.

பேறனூர்..... திருமாமகள் கோன் திருமால் ஓர் கூறனூர்.

சங்கர நாராயணர் கோயில்

பாண்டிநாட்டுச் சிவஸ்தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் சிவபெருமான் சங்கரநாராயணராக எழுந்தருளியிருக்கின்றார். அவருக்குரிய அறுபத்து நான்கு மூர்த்தங்களில் சங்கர நாராயண மூர்த்தம் ஒன்று. அம்பிகையின் வேண்டுகோளுக்கிரங்கி அவர் இத்திருவுருவத்தோடு இத்தலத்தில் எழுந்தருளினர்.

சங்கன், பதுமன் என்னும் மகாநாகர் இருவருள் ஒருவர் உண்மைப்பொருள் சிவபெருமான் என்றும், மற்றொருவர் திருமால் என்றும் வாதித்துக்கொண்டிருந்து பின்னர் வியாழ பகவானது ஏவலால் வந்து இத்தலத்தில் தவஞ்செய்ய, இருவரும் ஒருவர் என்பது அவர்களுக்குப் புலப்படச் செய்தற்கு இறைவர் சங்கரநாராயணத் திருவுருவத்தைக் காட்டியருளினர்.

சிராத்தத்திற்காக அந்தணன் ஒருவன் வைத்திருந்தபழத்தை உண்டதனால் சோழன் ஒருவன் உற்றநோயை இறைவர் புற்று மண்ணாகிய மருந்தை அளித்து நீக்கினார். இக்காலத்தும் இத் தலத்தில் புற்றுமண்ணை மருந்தாக உண்டு பிணி தீர்ந்து காணிக்கை அளித்துச் செல்வோர் பலர்.

இத்தலத்து மூர்த்தியின் திருநாமங்கள்: வன்மீகநாதனார், சங்கர நாராயணர்.

அம்பிகையின் திருநாமம்: ஆவுடைநாயகி, வடமொழியில் கோமதி.

இத்தலத்தின் பெயர்கள்: இராசை, சீராசை, வரராசை, கூழை என்பன. இராசை என்பது ஸ்ரீ ராஜபுரம் என்பதன் மரூஉ. இத்தலத்து விருட்சம் புன்னையாதலின் இது புன்னைவனம், நாகவனம் எனவும் வழங்கப்பெறும். இத்தலத்தில் உள்ள தீர்த் தங்கள் பல. இத்தலத்தின் ஏனைய சிறப்புக்களை சங்கரலிங்க உலா, சங்கர நயினார் கோயில் அந்தாதி முதலியவற்றால் அறியலாம்.

சடைமுடி கேடகத்திரக்கோவை 6—70—3.

இடைமருதீங் கோய்..... சடைமுடி சாலைக்குடி தக்களூர்.

கோயிலடி என வழங்கும் சிற்றூர். கோயிலடிப் பக்கத்துள்ள திருச்சன்னம் பூண்டி சாஸனம்.

சாலைக்குடி கேடகத்திரக்கோவை 6—70—3.

இடைமருதீங்கோய்..... சடைமுடி சாலைக்குடிதக்களூர்.

சித்தவடம் 4—2—3.

ஒத்த வட..... சித்த வடமும் அதிகைச் சேனையர் வீரட்டஞ் சூழ்ந்து.

நம்பி ஆரூரர்க்குத் திருவடி சூட்டப்பெற்ற இடம். திருவதிகை வீரட்டானத்தின் எல்லையில் உள்ளது.

காப்புத்திரு 6—7—12.

திருநீர்ப்..... திருவளப்பூர் தெற்கேறு சித்த வடம் வருநீர் வளம் பெருகு மாநிருபமும்.

இது சிறந்த சிவஸ்தலமுள்ளது.

சித்தீச்சரம் திருத்தாண்டகம் 6—87—4.

பித்தன் காண்..... அரிசில் பெருந்துறையே ஆட்சி கொண்ட சித்தன் காண் சித்தீச்சரத்தான் தான் காண்.

அடைவுதிருத். 6—71—8.

நாடகமாடிட..... அத்தீச்சுரம் சித்தீச்சுரம் அந்தண் கானல் ஈடு திரை இராமேச்சுரம்.

சிவப்பள்ளி அடைவுதிருத். 6—71—1.

பொருப்பள்ளி..... கலவஞ்சாரற் சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன்பள்ளி.

மாயூரத்தை அடுத்த திருச்செம்பொன்பள்ளி என்னும் ஊராகலாம் என்பர். ரா. பி. சே.

சிறப்பள்ளி கேஷத்திரக்கோவை 2—30—4.

அறப்பள்ளி..... சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி.

சுரியல் இடையாற்றுத்தொகை 7—31—2.

சுற்றுமூர் சுரியல் திருச்சோபுரம்.

சுற்றுமூர் இடையாற்றுத்தொகை 7—31—2.

சுற்றுமூர் சுரியல் திருச் சோபுரம்.

சூலமங்கை கேஷத்திரக்கோவை 6—70—10.

நறையூரிற்..... துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை.

பசுபதி கோயில் என்று தற்காலத்தில் வழங்கும் சிற்றூர்.

செங்குன்றூர் கோத்திரக்கோவை 6—70—5.

கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங்குன்றூர்.

மலைநாட்டுத் தலமாகிய செங்குன்றூர் விறல்மிண்ட நாயனார் பிறந்த தலம்.

செந்தில் திருத்தாண்டகம் 6—23—4.

கள்ளி முதுகாட்டில்..... நஞ்செந்தில் மேய வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்.

அறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர்.

செம்பங்குடி அடைவுதிருத். 6—71—3.

நற்கொடிமேல் கொடி உயர்த்த நம்பன் செம்பங்குடி நல்லக்குடி.

சீகாழிக்கு வட கிழக்கே 2—மைல் தொலைவிலுள்ள சிற்றூர்.

சையமலை அடைவுதிருத். 6—71—9.

கந்த மாதனங்கயிலை..... விந்த மாமலை வேதம் சைய மிக்க வியன் பொதியின் மலை.

சேற்றூர் திருத்தாண்டகம் 6—25—10.

நல்லூரே..... பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர் மீதே பலர் காண.

அடைவுதிருத். 6—71—4.

பிறையூருஞ்..... நாலூரும் சேற்றூரும் நாரையூரும்.

இத்தலம் விசலூருக்குப் பக்கத்தேயுள்ளது; கிலமாக இருக்கிறது. வந்தவாசித்தாலுகாவில் இப் பெயருள்ளதோர் ஊருண்டு.

சோதிலிங்கம் திருத்தாண்டகம் 6—33—5.

சுடர்ப்பவளத்..... சோதிலிங்கந் தூங்கானை மாடத்தானே.

சோமீச்சரம் (சோமேசம்) கூத்திரக்கோவை 6—70—10.

நறையூரிற்..... தோணிபுரம் துருத்தி சோமீச்சரம்.

கும்பகோணம் சோமநாத சுவாமி திருக்கோயில்.

ஞாழல் வாயில். அடைவுதிருத். 6—71—7.

கடுவாயர்..... நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்.

ஞாழற் கோயில் அடைவுதிருத். 6—71—5.

பெருக்காறு..... கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற் கோயில்.

பாடல் பெற்ற தலமாகிய திருப்பாதிரிப்புலியூர்க் கோயில் ஆதல் கூடும்.

தக்களூர்—தங்களூர் திருத்தாண்டகம் 6—51—8.

அஞ்சைக்களத்து..... தஞ்சைத்தளிக் குளத்தார் தக்களூரார்.

கூத்திரக்கோவை 6—70—3.

இடைமருதீங்கோய்..... சடைமுடி சாலைக்குடி தக்களூர்.

திருநாட்டுத்தொகை 7—12—1.

வீழக்காலனை..... தாழையூர் தகட்டூர் தக்களூர் தருமபுரம்.

தகட்டூர் திருநாட்டுத்தொகை 7—12—1.

வீழக்காலனை..... தாழையூர் தகட்டூர் தக்களூர் தருமபுரம்.

தங்களூர் இடையாற்றுத்தொகை. 7—31—6.

திங்களூர்..... தங்களூர் தமிழானென்று பாவிக்க வல்ல எங்களூர் எய்த மானிடையாறிடை மருதே.

தஞ்சாக்கை திருநாட்டுத்தொகை 7—12—9.

தழலுமேனி..... பழனம் பரம்பணி பாம்புரந் தஞ்சை தஞ்சாக்கையே.

தஞ்சை க்ஷேத்திரக்கோவை 6—70—8.

உஞ்சேனை..... அஞ்சார் பொதியின் மலை
தஞ்சை வழுவூர்.

திருநாட்டுத்தொகை 7—12—9.

தழலுமேனி..... பழனம் பாம்பணிபாம்புரந்
தஞ்சை தஞ்சாக்கையே.

மருகல் நாட்டுத்தஞ்சை இக்காலத்துக் கீழைத்தஞ்சாவூர் என்று வழங்கப்படுகிறது.

தஞ்சைத்தளிக்குளம் திருத்தாண்டகம் 6—51—8.

அஞ்சைக்களத்து..... தஞ்சைத்தளிக்குளத்தார்
தக்கரூரார்.

தஞ்சைத் தலத்திற்குரிய தீர்த்தங்களுள் சிவகங்கையென்பது தஞ்சைத்தளிக்குளம் என்பர்.

வெண்ணி நாட்டுத் தஞ்சை. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் முன்னைய நிலை. முதல் இராச இராசன் காலத்துக்கு முன்னரே தஞ்சை தளிக்குளம் என்ற ஓர் கோயில் இருந்திருக்கிறது என்பதனை திரு. சதாசிவ பண்டாரத்தார் ஆய்ந்து எழுதுகிறார். சோழர் வரலாறு முதற்பாகம்.

தண்டங்குறை திருநாட்டுத்தொகை. 7—12—2.

அண்டத்தண்டத்..... தண்டந் தோட்டம்
தண்டங்குறை தண்டலையாலங்காடு.

தண்டந்தோட்டம் திருநாட்டுத்தொகை 7—12—2.

அண்டத்தண்டத்..... தண்டந்தோட்டம் தண்டங்
குறை தண்டலையாலங்காடு.

தண்டலை (தண்டலையாலங்காடு)

திருத்தாண்டகம் 6—51—9.

கொண்டலுள்ளார்..... தண்டலையார் தலை
யாலங் காட்டினுள்ளார்.

தண்டலையாலங்காடு : தலையாலங்காடு என்ற பாடல் பெற்ற சிவத்தலம். தண் என்பது அடைமொழி.

தண்டலை: திருவாரூருக்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ள 'தண்டலை நீணெறி' என்ற பாடல் பெற்ற சிவத்தல மாகாலாம்.

திருநாட்டுத்தொகை 7—12—2.

அண்டத்தண்டத்..... தண்டந்தோட்டம் தண்டங்குறை தண்டலையாலங்காடு.

தவத்துறை அடைவு திருத். 6—71—11.

கயிலாயமலை..... பண்டெழுவர் தவத்துறை வெண்டுறை பைம் பொழிற் குயிலாலந்துறை.

'பண்டெழுவர் தவத்துறை' என்பது அப்பர் தேவாரம். 'திருச்சி மாவட்டம் 'லால்குடி' திருத்தவத்துறை என வழங்கப் பெற்றிருக்கிறது.

திருத்தவத்துறை (லாலுகுடி)

தலத்தின் வேறுபெயர்கள்: அளகை, அளகாபுரி, வயிரவி வனம், பஞ்ச புண்ணியத்தலம் என்பன. பஞ்சபுண்ணியத்தல மாவது நதி, வனம், புரம், புஷ்கரிணி, க்ஷேத்திரமென்னும் ஐந்தும் அமைந்தது.

விநாயகர்: திருவாளப்பிள்ளையார்.

சுவாமி: வாழவித்த பெருமான், ஸ்தரி ஷீசுவரர்.

அம்பிகை: பெருந்திருப்பிராட்டியார் (ஸ்ரீமதி)

தீர்த்தங்கள்: கொள்ளிட நதி, சிவகங்கை.

பூசித்துப்பேறு பெற்றோர்: திருமால், ஏழுமுனிவர்கள், வயிரவி, இலக்குமி.

தவப்பள்ளி அடைவு திருத். 6—71—1.

பொருப்பள்ளி..... செழுநனிபள்ளி தவப்பள்ளி சீரார் பரப்பள்ளி.

தவ முனிவர்கள் இருப்பிடமாகத் தெரிகிறது. விளக்க மில்லை.

தனிச்சாத்தங்குடி திருத்தாண்டகம் 6—25—10.

நல்லூரே..... எல்லாரும் தனிச்சாத்தங்குடியிற் காண இறைப் பொழுதிற் திருவாரூர் புக்கார் தாமே.

பெருவேளூருக்குத் தென் பக்கத்திலும் மணக்காலுக்கு வட புறத்திலும் உள்ள சிற்றூர்.

தாழையூர் திருநாட்டுத்தொகை 7—12—1.

வீழக்காலனை..... தாழையூர் தகட்டூர் தக்களூர் தருமபுரம்.

திங்களூர் திருத்தாண்டகம் 6—25—3.

தேருரார் மாவூரார் திங்களூரார்.

திருவையாற்றுக்கு அருகிலுள்ள அப்பூதியடிகள் அவதரித்தருளிய தலம்.

திட்டைக்குடி

இது வலிட்டகுடி என்பதன் மரூஉ. வெள்ளாற்றின் வடபாலுள்ளது; ஷி ஆறே தீர்த்தம்.

ஸ்வாமி: வலிட்டேசுவரர்; வலிஷ்டமுனிவராற் பூசிக்கப் பெற்றவர். வைத்திய நாதரென்று ஒரு திருநாமமுண்டு.

அம்பிகை: அஸனாம்பிகை.

விருக்ஷம்: வேங்கை; இது காரணம் பற்றித்தான் அம்பிகைக்கு இப்பெயர் வந்தது.

அஸனம்: வேங்கை மரம்; இக்காலத்தும் ஷி கோயிலில் இதனைக்காணலாம்.

இவ்வூருக்குக் கிழக்கே ½—மைலில் நானூற்றொருவர் கோயி லென்று ஒரு சிவாலய முண்டு. ஷிகோயில் பரிவார தேவர் களின் கோயில்களோடு கூடியது. திருத்தமாகவுள்ளது.

இந்த ஸ்தலத்தில் ஸ்தாபித்தற்கு கங்கா தீரத்திலிருந்து அழைத்து வந்தபொழுது வலிஷ்டேசுவரர் அவர்களில் நானும் சேர்ந்தவன்; என்னையும் சேர்த்துக் கொள்ளுக என்று சொல்லி அவர்களுடைய தூய்மையைப் புலப்படுத்துவதற்கு தனித்தனியே, அவர்களுக்கு கொடுக்கப்படும் வீடு, நிலம் முதலியவற்றில் தாமும்

ஒரு பாகம் பெற்றுக் கொண்டு அங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளி விட்டனராம். ஷே கோயிலுக்குரிய நிலம் முதலியவை அந்த நாஞ்ஞாற்றொரு பாகத்திலொன்றுதானாம்.

நாஞ்ஞாற்றொருவர் என்பதற்கு நாஞ்ஞாற்றுவரில்ஒருவர் என்றும் பொருள் கூறுவதுண்டு.

ஸ்ரீ வைஷ்ணவர்களில் வலிஷ்டபுரத்தாரென்று ஒரு வகுப் பினருண்டு. அவர்கள் முதலிலிருந்தது அந்தவூரே;

திண்டீச்சரம்: 7—31—6.

பத்மகிரி: திண்டுக்கல்மலை. இதில் ஒரு சிவலாயமுண்டு.

சுவாமி பெயர்: பத்மகிரீசர். அம்மை: அபிராமி. இதற்கு இருபத்துநான்கு அத்தியாயமுள்ள வடமொழிப்புராணம் ஒன்றுண்டு. சிவபெருமான் ஆயிரம் தளங்களுடைய தாமரை மலரில் சிவரூபமாக இருந்து அகத்தியமுனிவருக்குக் காட்சி கொடுத்தமையால் இஃது இப்பெயர் பெற்றது. பாண்டவர்கள் வனவாசம் செய்த பொழுது பூசித்தனர். மலைசிவலிங்க வடிவமாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இங்கு ஐந்து புண்ணிய தீர்த்தங்கள் உண்டு. (1) பாண்டவ தீர்த்தம், (2) துரௌபதி தீர்த்தம், (3) வருண தீர்த்தம், (4) ..... (5) .....

இம்மலையில் ஒரு கல்வெட்டுச்சாசனம் உண்டு. அது கி.பி. 1542-ல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. விஜயநகரம் துங்க பத்திரா நதிக்கரையில் மகாராசா அவர்கள் அத்தலத்துக்குச் சில கிராமமானியம் விட்டிருப்பதாகக் கண்டிருக்கிறது.

காப்புத் திருத்தாண்டகம் 6—7—8.

தெள்ளும்புனற் கெடில வீரட்டமுந்திண்டீச்சரமும்.

கேத்திரக்கோவை 6—70—9.

திண்டீச்சரம் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி.

அடைவுதிருத். 6—71—8.

நாடகமாடிட.....

கோடீச்சுரம் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்.

ஓய்மாநாட்டுக் கிடங்கில் திருத்திண்டீசுரம் எனக் கல் வெட்டுக் குறிக்கும்.

திருச்சேலூர். கோயில் தேவராயன் பேட்டை. இத்தலத்தில் உள்ள விக்கிரகத்தின் பீடத்தில் மச்சபுரீசுவரர் என்னும் பெயர் வரையப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் 364-ம் செய்யுளிற் காண்க.

திருத்தேவனூர் திருநாட்டுத்தொகை 7—12—6.

தென்னூர்..... எங்கள் பிரானுரையும் திருத்தேவனூர்.

செஞ்சிக்கு வடக்கே 6—மைலில் தேவனூரென்று ஓர் ஊருண்டு. இதில் பெரியதான ஒரு சிவாலயமுண்டு.

திருநற்குன்றம் கூத்திரக்கோவை 2—39—9.

நெற்குன்றம்..... நீடு திருநற்குன்றம் வலம்புர நாகேச்சுரம்.

திரிபுராந்தகம் காப்புத் திருத்தாண்டகம் 6—7—5.

செழுநீர்ப்புனல்..... திரிபுராந்தகம் தென்னார் தேவீச்சரம்

நாகலாபுரத்துக்கு வடக்கே ஏழு மைலில் திரிபுராந்தகக் கோட்டையென்று ஓரூர் இருக்கிறது.

இதில் சிவன், கோயிலுண்டு.

திருக்குளம் அடைவுதிருத். 6—71—10.

நள்ளாறும்..... இடைக்குளமும் திருக்குளத்தோடு அஞ்சைக்களம்

திருச்சிற்றம்பலம் திருநாட்டுத்தொகை. 7—12—4.

தேங்கூரும் சிற்றம்பலம் சிராப்பள்ளி.

புதுச்சேரிக்கருகில் இரும்பை மாகாளத்திற்குப் பக்கத்தில் இப்பெயருள்ளதோர் ஊருண்டு.

திருமலை 7—82—10.

நீரூர் தருநிமலன் திருமலையார்க்கயலருகே தேரூர் தருமரக
கன்சிரநெரித்தான்.

திருநாட்டுத்தொகை 7—12—7.

ஈழ நாட்டு..... சோழநாட்டுத்துருத்தி
நெய்த்தானம் திருமலை.

போரூர்த் தாலூரக்காவில் திருமலையென்று ஒருமலையுண்டு; இப்போது சைஜஸ்தலமாக உள்ளது. இதில் முன்னம் சிவாலய மிருந்ததாம்.

திருவண்குடி கேஷத்திரக்கோவை 2—39—10.

குத்தங்குடி..... அத்தங்குடிதண் திருவண்குடியும்.

திருவாதிரையான் பட்டினம்

இடையாற்றுத் தொகை. 7—31—6.

திங்களூர் திருவாதிரையான் பட்டினமூர்.

திருவேட்டி காப்புத்திரு 6—7—7.

தெண்ணீர்ப்புனல்..... சீக்காலி வல்லந் திருவேட்டியும்.

சென்னை திருவல்லிக்கேணிப் பகுதியைச் சார்ந்த
திருவேட்டீசுவரன் பேட்டை.

இந்த ஸ்தலம் மிகவும் புராதனமானது. இது தேவாரத்தில் ''சீக்காலி வல்லந் திருவேட்டியும்'' என்ற தாண்டகத்தில் வைப் பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தலத்தில் உள்ள லிங்கம் ஸ்வயம்புமூர்த்தி. பாறையின்மீது தான் ஸ்வாமி இருக் கிறார். வேட்டீசுவரன் என்றால் வேடரூபமாக வந்த ஈசுவரன் என்பது பொருள். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்காகத் தவம் செய்த பொழுது வேட வடிவம் எடுத்துக்கொண்டு சிவ பெருமான் அவன்முன் எழுந்தருளி அவனோடு சண்டையிட்டு அவனுடைய கையால் அடியுண்டார். அந்த அடியானது ஸர்வ லோகங்களிலும் பட்டது. சிவபெருமானுடைய தலையில்பட்ட அந்த அடியின் சின்னம் உடைய சிவலிங்கங்கள் பார்த்தப் பிரகர லிங்கம் என்று சொல்லப்படும். அவை மிகவும் விசேஷமானவை. இந்த ஸ்தலத்தில் உள்ள லிங்கம் பார்த்தப் பிரகர லிங்கமாகும். இந்தச் சிவலிங்கப் பெருமான் திருமுடியில் ஒருபிளவு இருக்கிறது.

தீர்த்தமாமலை (கைலை) 4—27—10.

தீர்த்தமாமலையை நோக்கிச் செருவலி அரக்கன் சென்று.

துடையூர் அடைவுதிருத். 6—71—4.

பிறையூரும்..... துடையூரும் தொழ இடர்கள் தொடராவன்றே.

திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள துறையூர். திருப்பாச் சிலாச்சிராமத்திலிருந்து மூன்று மைல் என்பர் திரு செங்கல்வராய பிள்ளை. இங்குள்ள கோயில் கடம்பந்துறை.

துலை. க்ஷேத்திரக்கோவை 2—39—5.

ஆறைவட..... சேறை துலை புகலூர் அகலாது இவை காதலித்தானவன் சேர்பதியே.

துவையூர் அடைவுதிருத். 6—71—4

பிறையூரும்..... துறையூரும் துவையூரும் தோழூர்தானும்.

தெங்கூர் க்ஷேத்திரக்கோவை. 2—39—5.

ஆறைவட..... பெருவேளூர் விளமர் தெங்கூர்.

க்ஷேத்திரக்கோவை 6—70—1.

தில்லைச்சிற்..... தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்.

தெள்ளாறு 7—92—9.

நள்ளாறு தெள்ளாறு அரத்துறைவாய் எங்கணம்பனே.

இது வந்தவாசித் தாலூகாவில் உள்ளது.
ஸ்வாமி: திருமூலத்தானமுடைய நாயனார்.

தென் களக்குடி திருத்தொண்டத்தொகை 7—39—6.

வார் கொண்ட..... ஆர் கொண்ட வேற் கூற்றன் களந்தைக் கோனடியேன்.

அடைவுதிரு. 6—71—3.

நற்கொடி..... கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி

பாண்டிய நாட்டில் களக்குடி நாட்டின் தலைநகர்; கர வந்தபுரம் என்று வழங்குகிறது.

தேசனூர் இடையாற்றுத்தொகை. 7—31—8.

தேசனூர் வினைதேய நின்றான் திருவாக்கூர்.

தேயன நாடு 4—33—2.

தேயன நாடராகித் தேவர்கள் தேவர் போலும்.

தேரூர். திருத்தாண்டகம் 6—25—3.

தேரூரார் மாவூரார் திங்களூரார்.

தேவன்குடி காப்புத்திருத்தாண்டகம் 6—7—1.

செல்வப்புனற்..... நல்லூரும் தேவன்குடி மருகலும்.

'திருந்து தேவன் குடி' என்ற பாடல் பெற்ற தலமாக இருக்கக் கூடும். ஆனால் சரியாக விளங்கவில்லை.

கூேத்திரக்கோவை 2—39—10.

குத்தங்குடி..... குருந்தங்குடி தேவன்குடி மருவும்
அத்தங்குடி.

கூேத்திரக்கோவை 6—70—1.

தில்லைச்சிற்..... தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்.

அடைவு திருத்தாண்டகம் 6—71—3.

நற்கொடி..... புற்குடி மாகுடி தேவன்குடி
நீலக்குடி.

தேவீச்சுரம் காப்புத்திருத்தாண்டகம். 6—7—5.

செழுநீர்ப்..... திரிபுராந்தகம் தென்னார்
தேவீச்சரம்.

இன்ன தலமெனப் புலனாகவில்லை. 'தென்னார் தேவீச் சுரம்' என்பர் அப்பர் பெருமான்.

தேறனூர் 7—31—9.

பேறனூர்..... தேறனூர் திருமாமகள் கோன்
திருமாலோர்.

தேனூர் திருத்தாண்டகம் 6—41—9.

தந்தை தாயில்லாதாய்..... சிந்தையாய் தேனூராய் நீயே என்றும்.

திருச்சிக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர். பாண்டி நாட்டில் தேனூர் இருப்பதாக ஐங்குறுநூற்றில் குறிப்புள்ளது.

1—61—9—ஆனூர் ஆவுழி..... தேனூரான் செங் காட்டங்குடியான் சிற்றம்பலத்தான்.

தோழூர் கேஷத்திரக்கோவை 6—70—5.

கொடுங்கோளூர்..... இடும்பாவனம் எழுமூர் ஏழூர் தோழூர்

இராசேந்திர சிங்க வளநாட்டு, அண்டாட்டுக் கூற்றத்துத் தோழூர் எனக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

அடைவு திருத் 6—71—4.

பிறையூரும்..... துறையூரும் துவையூரும் தோழூர் தானும்.

நங்கூர் இடையாற்றுத்தொகை. 7—31—6.

திங்களூர்..... நங்கூர் நறையூர் நனிநாலிசை நாலூர்.

நந்திகேச்சுரம் அடைவுதிருத். 6—71—8.

நாடகமாடிட நந்திகேச்சுரம் மாகாளேச்சுரம்.

மைசூர்நாட்டு நந்தீச்சுரம் என்றும், செங்கற்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி புகைவண்டி நிலையத்தை அடுத்த நந்திவரம் என்றும், குடந்தையை அடுத்த 'நந்திவனம்' என்றும், அறிஞர்கள் பலவாறு கூறுவர்.

நல்லக்குடி அடைவுதிருத் 6—71—3.

நற்கொடி மேல்விடை உயர்த்த நம்பன் செம்பங்குடி நல்லக்குடி.

மாயூரத்திற்கு அருகிலுள்ள நல்லத்துக்குடி என்பர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை.

நல்லாடை:

ஸ்வாமி: அக்கினீசுவரர்.

நல்லாற்றூர் (நல்லாத்தூர்)

அடைவுதிருத் 6—71—4.

பிறையூரும்..... நறையூரும் நல்லூரும் நல்லாற்றூரும்.

திருக்கழுக்குன்றத்திற்குக் கிழக்கே 8 மைல் நல்லாற்றூர் ஜமீன்.

புதுவை மாநிலம் கண்ட மங்கலம் அருகில் உள்ள சிற்றூர் என்பர் திரு. செங்கல்வராயபிள்ளை. தஞ்சை நரசிங்கன் பேட்டையை அடுத்த நல்லாற்றூர் நாட்டின் தலை நகராதலே பொருத்தம் என்பர் திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் வெள்ளை வாரணனார்.

நல்லேமம் காப்புத்திரு. 6—7—8.

தெள்ளும் புனற்..... ஏயீச்சுரமும் நல்லேமம் கூடல்.

நற்குன்றம். கேஷத்திரக்கோவை 2—39—9.

நெற்குன்றம்..... திருநற்குன்றம் வலம்புர நாகேச்சுரம்.

திருச்சி மாவட்டம் முசிரி வட்டம் தின்னகோணம் என்னும் ஊர். (தெ. இ.க. 249.57)

நம்பனூர் நாட்டுத்தொகை 7—12—3.

மூலனூர்..... நாலனூர் நரையேறு கந்தேறிய நம்பனூர்.

நாங்கூர்—நாற்றானம்

திருநாட்டுத்தொகை 7—12—4.

தேங்கூரும்..... நாங்கூர் நாட்டு நாங்கூர் நறையூர் நாட்டு நறையூரே.

ஊர்த்தொகை 7—47—6—.

தாங்கூர்..... நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்.

வந்த வாசிக்கு வடக்கே வடநாங்கூர் தென்னாங்கூர் என்று இரண்டு ஊர்களுள்ளன.

நாசனூர் (பாவநாசனூர்) 7—31—8.

தேசனூர்வினை..... பாவ நாசனூர் நனி பள்ளி நள்ளாறை அமர்ந்த ஈசனூர் எய்த மானிடை யாறிடைமருதே.

நாகளேச்சுரம்

அடைவுதிருத். 6—71—8.

நாடகமாடிட..... நாகேச்சுரம் நாகளேச்சுரம் நன்கான கோடீச்சுரம்.

சிகாழியிலுள்ள நாகேச்சுரம் என்பர் திரு. செங்கல்வராயப் பிள்ளை. நன்னிலத்தை அடுத்த குழிக்கரையிலுள்ள சிவாலயம் நங்காளீச்சுரம் என வழங்கப்படுகிறது.

நாலனூர் நாட்டுத்தொகை 7—12—3.

மூலனூர்..... நாலனூர் நரையேறுகந்தேறிய நம்பனூர்.

நாலாறு அடைவுதிருத் 6—71—10.

நள்ளாறும்..... நலம் திகழும் நாலாறும் திருவையாறும்.

நாலூர் 7—31—6.

திங்களூர்..... நங்களூர் நறையூர் நனி நாலிசை நாலூர்.

நாலூர்: ஓரூர். நாலூர் மயானம்.

நாற்முனம். (திருக்கோளக்குடி)

ஒரு சிவஸ்தலம், ஒருமலை.

இம்மலையில், பூமி, அந்தரிக்ஷம், ஸவர்க்கமென்று பெயரிய மூன்று ஸந்நிதிகளுள்ளன.

பூமி: ஸ்வாமி: பொய்யாமொழீசுவரர்.
தேவி: மரகதவல்லி.
அந்தரிக்ஷம்: ஸ்வாமி: சிவதருமபுரீசுவரர்.
தேவி: சிவகாமவல்லி.
ஸவர்க்கம்: ஸ்வாமி: கோளகிரீசுவரர்.
தேவி: ஆன்மநாயகி.

தீர்த்தம்: சிவகங்கை; இதுசுனை. அகஸ்தியர், புலஸ்தியர் பூசித்த ஸ்தலம்.

கோளகிரீசுவரர் எழுந்தருளியிருக்கிற கர்ப்பக்கிரக மண்டபம் முழுவதும் மலையிலே குடைந்து எடுக்கப்பட்டது.

இவ் சிவலிங்கப் பெருமானும், திருநந்தியும், அகஸ்திய புலஸ்திய முனிவர்களும் ஒரேசிலை. இதற்கு நந்திகுட போக மென்று பெயர்.

இம்மலையினுச்சியில் சுப்பிரமணிய ஸ்வாமி ஆலய மொன்றுண்டு.

இதிலுள்ள திருப்பணிகள் யாவும் சுந்தர பாண்டியதேவர் திருப்பணியென்று சொல்லுகின்றனர்; இதைப்புலப்படுத்தும் சில சாஸனங்கள் அங்கே இருப்பதல்லாமல் சுந்தரபாண்டிய மண்டப மென்றும் ஒரு மண்டபம் அங்கேயுள்ளது.

இதில் வேதவதி என்பவள் தவஞ்செய்து பேறுபெற்றா ளென்றும் அதனால் இதற்குக் கன்னிகாபுரம், கன்னிமலை யென்றும் பெயர் வந்ததென்றும் சொல்லுகிறார்கள்.

இதற்கு மதுரையாதீனத்து வேலாயுத முனிவர் செய்த தமிழ்ப் புராணமும் மிதிலைப்பட்டி கவிராயர் செய்த வண்ண மும் வருக்கக் கோவையும் முருகக் கடவுள்மீது செய்யப்பட்ட குறவஞ்சியும் வேறுசில பிரபந்தங்களுமுள்ளன. புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் கோனூர்பட்டுக்குக் கிழக்கே மேற்றூனம், கீழ்த்தானமென இரண்டு சிவதலங்கள் மிகப் பழையனவாக இருக்கின்றன.

7—38—4. நாற்றானத்து ஒருவனை நானாயபரனை

நியம நல்லூர். கேஷத்திரக்கோவை 6—70—5.

கொடுங்கோளூர்..... நின்றியூர் நீடூர் நியம நல்லூர்.

பூந்தமல்லிக்குக் கிழக்கே குத்தமபாக்கம், நியமம் என்று இரண்டு ஊர்கள் உள்ளன.

நியமம் 6—13—4.

பன்மலிந்த..... நியமம் துருத்தி நீடூர் பாச்சில்.

தஞ்சை—திருக்காட்டுப் பள்ளியை அடுத்த நேமம் என வழங்கும் ஊராகலாம்.

6—36—5. சீரால் வணங்க..... நீரார் நியம முடையார் தாமே.

நிலாத்திங் கட்டுண்டம் 6—25—9.

நீரருஞ் செஞ்சடையாய்..... நிலாத் திங்கள் துண்டத்தாய்.

நிறைக்காடு 7—47—3.

நிறைக்காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே.

நிறையனூர் 7—31—5.

நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றம்.

நீலமலை. அடைவுதிருத் 6—71—9.

கந்தமாதனங்..... மகேந்திரமாமலைநீல ஏமகூடம்.

நீலகிரி மலையாதல் கூடும். விளங்கவில்லை.

நெடு வாயில் க்ஷேத்திரக்கோவை 2—39—9.

நெற்குன்றம்..... நெடுவாயில் குறும்பலா நீடு திருநற்குன்றம்.

அடைவுதிருத். 6—71—7.

கடுவாயர்..... நெடுவாயில் நிறைவயல் சூழ் நெய்தல் வாயில்.

நெய்தல் வாயில் அடைவு திரு 6—71—7.

கடுவாயர்..... நெடுவாயில் நிறைவயல் சூழ் நெய்தல் வாயில்.

விளங்கவில்லை. தஞ்சை மாவட்டத்தில் நெடுவாசல் என்ற ஓர் சிற்றூர் உண்டு.

நெற்குன்றம் க்ஷேத்திரக்கோவை. 2—39—1.

நெற் குன்றம் ஒத்தூர் நிறை நீர் மருகல்.

தொண்டை நாட்டிலுள்ளது.

பஞ்சாக்கை. கோத்திரக்கோவை. 6—70—8.

உஞ்சேனை..... கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும். திருக்கடவூருக்கு அருகில் உள்ள சிற்றூர்.

பந்தையூர். 7—31—1.

முந்தையூர்..... பந்தையூர் பழையாறு, பழனம்.

பரப்பள்ளி. அடைவுதிருத். 6—71—1.

பொருப்பள்ளி..... சீரார் பரப்பள்ளி என்று என்று பகர்வோர் எல்லாம் பரலோகத்தில் இனிதாகப்பாலிப் பாரே.

கோவை மாவட்டம் தாசாபுரத்தை அடுத்த பரன்சேர் பள்ளி என்னும் சிற்றூர்.

பருத்தி நியமம். ஊர்த்தொகை 7—47—8.

துருத்திச் சுடரே..... பருத்தி நியமத்து உறைவாய்.

பழையனூர் திருவாலங்காடு

முத்தா முத்தி..... போற்றும் பரமா பழையனூர்.

7—ஆம் திருமுறை 52—ம் பதிகத்தில் 1—10—செய்யுட் களிலும் பழையனூர் காணப்படுகிறது.

6—41—2.

ஆர்த்த எனக்..... பழையனூர் மேவிய பண்பா என்றும்.

பழையாறு 3—73—1.

பாடல்மறை சூடல்..... பொழில் சூழ் பழைசை.

[குடந்தையை அடுத்த பழையாறை என்பது சோழர் தலைநகரம்].

6—13—1. கொடிமாட பழையாறும் பாற் குளமும் கைவிட்டு இந்நாள் பொடியேறு மேனியராய்பூதஞ் சூழப் புறம் பய நம்மூரென்று போயினாரே.

3—73—1. பாடல்மறை..... நிழல்கூடு பொழில் சூழ் பழைசையுள்.

திருத்தாண்டகம் 6—25—10.

நல்லூரே..... நரையேற்றைப் பழையாறே பாய வேறி.

7—31—1. முந்தையூர்..... பந்தையூர் பழையாறு பழனம்.

கேஷத்திரக்கோவை 6—70—1.

தில்லைச்சிற்..... முழையூர் பழையாறை சத்தி முற்றம்.

அடைவு திருத்தாண்டகம் 6—71—10.

நள்ளாறும் பழையாறும் கோட்டாற்றோடு.

திருநாட்டுத் தொகை. 7—12—5.

குழலை வென்ற..... கீழைவழிப் பழையாறு கிழையமும்.

வேலூருக்குத் தெற்கே இருபது மைலில் கண்ணமங்கலம் ரயில் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் உள்ளது. படைவீடு என்று வழங்கப்படுகிறது.

பனங்காடு அடைவுதிருத் 6—71—6.

மலையார்தம்..... பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க.

இப்பெயருள்ளதோர் ஊர் தொண்டை நாட்டிலுண்டு.

பாங்கூர் திருநாட்டுத்தொகை 7—12—4.

தேங்கூரும்..... பாங்கூர் எங்கள் பிரானுறையும் கடம்பந்துறை.

பாகூர் என்று காஞ்சிக்குப் பக்கத்தில் ஓர் ஊருண்டு. [பாகூர் நாடு].

பாசனூர். 7—31—8.

தேசனூர்..... பாசனூர் பரமேட்டி பவித்திர பாவ நாசனூர்.

பாட்டூர் ஊர்த்தொகை 7—47—1.

காட்டூர்..... பாட்டூர் பலரும் பரவப்படுவாய் பனங் காட்டூரானே.

பாம்பணி திருநாட்டுத்தொகை 7—12—9.

தழலு மேனியன்..... பழனம் பாம்பணி பாம்புரத் தஞ்சை தஞ்சாக்கையே.

பாய்ஞலூர் [பாய்ஞலம்]

திருநாட்டுத்தொகை. 7—12—6.

தென்னூர்..... பன்னூர் புக்குறையும் பரமர்க் கிடம் பாய்ஞலம்.

பல்லாவரத்தின் அருகிலுள்ளது.

பாயனநாடு 4—33—2.

தேயன நாடராகி..... பாயன நாடறுக்கும் பணியவம்மின். நாடு பாயிற்று. பெருங்கதை.

பாவநாசம் 4—51—10.

பழக நானடிமை செய்வேன் பசுபதி பாவநாசா.

6—17—2.

மருங்குன்மதி பளிக்கு வடம்புனைவர் பாவநாசர்.

6—99—5.

நீரேறு செஞ்..... பண்ட நங்கைப் பார்த்தானே பாவநாசா.

பொதிய மலையை அடுத்த பாவநாசமாதல் வேண்டும்.

6—31—9.

பாசத்தைப்..... பரஞ்சோதீ பண்டரங்கா பாவநாசா.

திருத்தாண்டகம் 6—61—8.

திருதிமையால்..... பரிதிதனைப்பற் பறித்த பாவநாசா.

7—31—8. தேசனூர்..... பாசனூர் பரமேட்டி பவித்திர பாவநாசனூர்

காப்புத்திருத்தாண்டகம் 6—7—6.

தெய்வப்புனற்..... பறியலூர் வீரட்டம் பாவநாசம்.

பாற்குளம் 6—13—1.

கொடிமாட..... பழையாறும் பாற்குளமுங்
கை விட்டு இந்நாள் பொடியேறு மேனியராய்ப்பூதஞ் சூழப்புறம்
பய நம்மூரென்று போயினாரே.

பாற்குளம் என்பது பட்டீசுவரத்திற்கு ஈசானத்தில் உள்ள ஓரூர்; இதில் குடியிருப்பு ஒன்றுமில்லை. ஒரு பெரிய குளமுண்டு. (புஷ்கரம் போலத் தீர்த்த ரூபமாக உள்ளது). அதில் பட்டீசுவரத்து ஸ்வாமி தீர்த்தங் கொடுப்பது வழக்கம்.

பிடவூர். காப்புத்திரு. 6—7—6.

தெய்வப் புனற்கெடில வீரட்டமும் செழுந்தண் பிடவூரும்.

க்ஷேத்திரக்கோவை 6—70—2.

ஆரூர் மூலட்டானம்..... பெருந்துறை காம்பீலி பிடவூர்.

[திருச்சி—துறையூரை அடுத்த சிற்றூர் என்பர் திரு. செங்கல்வராயபிள்ளை.

தஞ்சை திருவிடை கழிக்கு அருகில் உள்ளது என்பர் பண்டாரத்தார்].

7—96—6. அம்மனேயாக..... பேரருளாளன் பிடவூரன் அம்மானே.

பிரம்பில் க்ஷேத்திரக்கோவை 6—70—6.

மண்ணிப்படி..... பிரம்பில் பெரும் புலியூர் பெருவேளூரும்

[தஞ்சையை அடுத்த கள்ளப் பிரம்பூர். மாயூரம்—திருவாரூர் தடத்தில் மங்கை நல்லூரை அடுத்த பிரம்பூர் என்பர் திருசெங்கல் வராய பிள்ளை.

பிறவாநெறி ஊர்த்தொகை 7—47—4.

ஆரூரத்தா..... பேரூருறைவாய் பட்டிப்பெருமான் பிறவா நெறியானே.

பிறவாநெறி—பேரூர்ப்புராணத்தால் அறியலாம்.

பிறையனூர் 7—31—5.

நிறையனூர்..... பிறையனூர் பெருமூர் பெரும் பற்றப்புலியூர்.

திருத்தாண்டகம்
[நாகைக்காரோணம். நா.]

6—திரு. 22—ப. 6—செ.

புலங்கள் பூந்..... பூம்புகார்க் கற்பகத்தை

புத்தூர்
கேஷத்திரக்கோவை

6—திரு. 70—ப. 11—செ.

புலிவலம்புத்தூர்

புதுக்குடி
அடைவு திரு.
[பொது. நா.]

6—திரு. 71—ப. 3—செ.

நற்கொடிமேல்..... புதுக்குடியும் போற்ற இடர் போகுமன்றே.

உய்ய கொண்டான் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுப் புதுக்குடி என்று கல்வெட்டுக் குறிக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இப்பெயரில் பல சிற்றூர்கள் உண்டு.

புரிச்சந்திரம்
திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 52—ப. 10—செ.

அரிச்சந்திரத்துள்ளார்..... புரிச்சந்திரத்துள்ளார் போகத்துள்ளார்.

புரிசை நாட்டுப்புரிசை
நாட்டுத் தொகை
[பொது. க.]

7—திரு. 12—ப. 6—செ.

தென்னூர்..... பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப்புரிசையே.

புரிசையென்பது தக்கோலத்துக்கு அருகிலுள்ள தோரூர். வந்தவாசி தாலூகாவில் இப்பெயருள்ள ஓர் ஊருண்டு.

புலி வலம்
திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 52—ப. 11—செ.

புன்கூரார்..... பூவணத்தார் புலிவலத்தார்

திருவாரூருக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. தற்போது, சிறந்த வைஷ்ணவத்தலமாக விளங்குவது. தொண்டை நாட்டுத் திருப்புலிவலம் என்பர்.

[ஞானம்]

கேஷத்திரக்கோவை
[பொது.நா.]

6—திரு. 70—ப. 11—செ.
புலிவலம்புத்தூர் புகலூர் புன்கூர்

புற்குடி
அடைவுதிரு
[பொது. நா.]
6—திரு. 71—ப. 3—செ.

நற்கொடி..... புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி

பூங்கூர்
திருநாட்டுத்தொகை
[பொது. சு.]

7—திரு. 12—ப. 4—செ.
தேங்கூரும்..... பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலுமூர்

பூந்துறை
அடைவுதிரு. [பொது. நா.]
6—திரு. 71—ப. 11—செ.

கயிலாயமலை..... குயிலாலந்துறை சோற்றுத்துறை பூந்துறை

திருநெல்வேலி மாவட்ட சிந்துபூந்துறை.

பூழியூர்
திருகேஷத்திரக்கோவை
[பொது. ஞா.]
2—திரு. 39—ப. 8—செ.

குலாவு திங்கட்..... தென் புறம் பயம் பூவணம் பூழியூரும்
பூழி நாட்டில் தலைநகராகலாம்.

பெரும் பாழி
திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 51—ப. 6—செ.

பெரும் புலியூர் விரும்பினார் பெரும் பாழியார்

பெருமூர்
[இடையாறு. சு.]

7—திரு. 31—ப. 5—செ.

நிறையனூர்..... பிறையனூர் பெருமூர் பெரும் பற்றப் புலியூர்

திருவாலங்காட்டிற்குக் கிழக்கு இரண்டு மைலில் இப் பெயருள்ளதோர் ஊர் உண்டு.

பெருமூர்நாடு அரக்கோணத்திற்கருகே உள்ளது.

பேராவூர்
திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 51—ப. 3—செ.

அண்ணாமலை அமர்ந்தார்..... பெருந்தூங் கானை மாடத்தார் கூடத்தார் பேராவூரார்

கேஷத்திரக் கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 1—செ.

ஆரூர் மூலட்டானம்..... பேரூர் பிரமபுரம் பேராவூரும்

அடைவுதிரு. [பொது. நா.]

6—திரு. 71—ப. 4—செ.

பிறையூருஞ்..... பெரும் பற்றப்புலியூரும் பேரா வூரும்

திண்டிவனத்திற்குக் கிழக்கு இப்பெயருள்ளதோர் ஊரும் அதில் சிவாலயமுண்டு.

பேரூர்
[கோயில். சு.]

7—திரு. 90—ப. 10—செ.

பாரூருமர..... மீ கொங்கிலணி காஞ்சி வாய்ப் பேரூரர் பெருமானை

திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திருமுறை. 51—ப. 8—செ.

அஞ்சைக்களத்துள்ளார்..... ஆரூரார் பேரூரார் அழுந்தூரத்துள்ளார்

கூேத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 2—செ.

ஆரூர் மூலட்டானம்..... பேரூர் பிரமபுரம் பேராவூரும்

ஊர்த்தொகை [பொது. சு.]

7—திரு. 47—ப. 4—செ.

ஆரூரத்தா..... பேரூர் உறைவாய் பட்டிப் பெரு மான் பிறவாநெறியானே

பேறணூர்
[இடையாறு. சு.]

7—திரு. 31—ப. 9—செ.

பேறணூர் பிறைச் சென்னியினன் பெருவேரூர்

பொதியின்மலை
(பிரமபுரம். ஞா.)

1—திரு. 79—ப. 1—செ.

அயிலுறு..... கயிலையும் பொதியிலும் இடம் என உடையார்

[வலிவலம். ஞா.]

1—திரு. 50—ப. 10—செ.

பொதியிலானே பூவணத்தாய்

பாவநாசத்திருப்பதிகம்
[பொது. நா.]

4—திரு. 15—ப. 10—செ.

புத்தூர் உறையும்..... பொதியின் மேய புராணனை

கேஷத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 8—செ.

உஞ்சேனை..... மஞ்சார் பொதியின் மலை தஞ்சை வழுவூர்

அடைவுதிரு. [பொது. நா.]

6—திரு. 71—ப. 9—செ.

கந்தமாதனங்..... வியன் பொதியின் மலை மேரு உதயம் அத்தம்
பாபநாசம் நெல்லை மாவட்டம்.

பொய்கை
[பசுபதீச்சரம். ஞா.]

1—திரு. 8—ப. 3—செ.

பொங்கி வரும்..... விளைவயல் சேரும் பொய்கை பங்கய மங்கை விரும்பும் ஆலூர்ப்பசுபதியீச்சரம் பாடு நாவே.

கேஷத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 11—செ.

புலிவலம் புத்தூர்..... பூவணம் பொய்கை நல்லூர்

பொய்கை என்னும் பெயருள்ள இடம். 2.

(1) வேலூருக்கு மேற்கே 8 மயிலிலுள்ளது. இதில் விஷ்ணுத்தலம் சிவஸ்தலம் இரண்டுமுண்டு.

(2) திருக்காளத்திற்குக் கிழக்கே ஐந்து மைலில் உள்ளது. இது வேங்கடக்கோட்டத்துப் பொய்கை நாடு. பொய்யா வென்று வழங்கும்.

பொய்கை நல்லூர்
க்ஷேத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 11—செ.
புலிவலம் புத்தூர்..... புறம் பயம் பூவணம்
பொய்கை நல்லூர்

பொருப்பள்ளி
அடைவுதிரு. [பொது. நா.]

6—திரு. 71—ப. 1—செ.
பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன் ரெய்து

பொன்னூர் நாட்டுப் பொன்னூர்
[பொது. சு.]

7—திரு. 12—ப. 6—செ.
தென்னூர்..... பொன்னூர் நாட்டுப்பொன்னூர்
புரிசை நாட்டுப் புரிசையே.

மகா மேரு மலை
அடைவு திரு. [பொது. நா.]

6—திரு. 71—ப. 9—செ.
கந்தமாதனங்..... வியன் பொதியின் மலை
மேரு உதயம் அத்தம்

மகேந்திர மாமலை

அடைவுதிரு. [பொது. நா.]
6—திரு. 71—ப. 9—செ.

கந்த மாதனங்..... மகேந்திரமாமலை நீலம்ஏமகூடம்.

மாகோதை
திருஅஞ்சைக்களம்
[பொது. சு.]

7—திரு. 4—ப. 1—செ.

தலைக்குத்தலை..... கடலங்கரை மேல் மகோதை அணியார்

7—திரு, 4—பதிகத்தில் 1—10 உள்ள செய்யுட்களில் மகோதை காணப்படுகிறது.

மணக்கால்
[ஆரூர். நா.]

6—திரு. 25—ப. 10—செ.

நல்லூரே..... இராப்பட்டீச்சரங் கடந்து மணக்கால் புக்கு

மணிக்கோயில் ஆரூர்க்கோயில்
அடைவுதிரு. [பொது. நா.]

6—திரு. 71—ப. 5—செ.

பெருக்காறு..... இருக்கோதி மறையவர்கள் வழிபட்டடேத்தும் இளங்கோயில் மணிக் கோயில் ஆலக்கோயில்.

மணிமுத்தம்
காப்பு திரு. [அதிகை. நா.]

6—திரு. 7—ப. 6—செ.

தெய்வப்புனற்..... பாவநாசம் அவ்வந்திரையும் மணிமுத்தமும்

மத்தங்குடி
கூத்திரக்கோவை
[பொது. ஞா.]

2—திரு. 39—ப. 10—செ.

குத்தங்குடி..... மத்தங்குடி தண்டிருவண் குடியும்

மந்தாரம்
கூத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 6—செ.

மண்ணிப்படி..... வக்கரை மந்தாரம் வாரணாசி.

மயானம்
புக்க திருத்தாண்டகம்
[கோயில். நா.]

6—திரு. 2—ப. 4—செ.

வாரேறுவன மழு வாள் கையேந்தி மயானத் தாடி

இவ்வூர் சோழ நாட்டில் மாயூரத்திற்கு வடக்கே மண்ணி யாற்றின் தென்கரையில் உள்ள ஒரு சிவஸ்தலம். க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்திலுள்ள.

''மண்ணிப் படிக்கரை வாள்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்''

எனவரும். பகுதியில் கூறப்பட்ட மந்தாரம் என்பது இத் தலம் என்றே கருதப்படுகின்றது. இது முதன் முதலில் மந்தார வனம் என்னும் பெயரையுடையதாதலினாலும் இப்பகுதியில் இதற்கருகிலுள்ள மண்ணிப்படிக்கரை, வாள்கொளிபுத்தூர், விளத்தொட்டி முதலியன உடன்கூறப்படுதலினாலும் இங்ஙனம் கொள்வது பொருத்தமுடைய தாகின்றது. தேவார வைப்புத் தலங்களுள் இவ்வாற்றூர் ஒன்றாகும் என்பது பெறப்படும்.

மந்தாரவனம், சொன்னயான நிரோதபுரம், நடனபுரம், நதிபுரம் என்னும் திருநாமங்களும் இத்தலத்துக்கு உண்டு.

இங்கேயுள்ள தலவிநாயகர் திருநாமம் மந்தார விநாயகர் என்பது சிவபெருமான் திருநாமங்கள் சொன்னயான நிரோதர், மந்தாரவனேசர் என்பன. அம்பிகையின் திருநாமம் அஞ்சனாட்சி யென்பது தலவிருட்சம் மந்தாரம். தீர்த்தங்கள் மண்ணிநதி, பழவாறு, சிவதீர்த்தம் இத்தீர்த்தங்கள் மூன்றும் சிவபெருமானின் முக்கண்களுக்கு ஒப்பானவை என்று சொல்லப்பட்டிருக்கின்றன; (ஆற்றூர்ப்புராணம் 5 : 38.) சிவதீர்த்தம் என்பது கைலாச கங்கையெனவும் பெயர் பெறும். அது திருக்கோயிலுக்கு எதிரே உள்ளது.

இத்தலத்தில் சிவபெருமான் வாதுலகோத்திரத்தினரான ஒரு பிராமணருடைய குமாரியாகிய கயற்கண்ணியார் என்ப வரைத் திருமணம் செய்து கொண்டனர். அவ்வம்மையாருடைய சந்நிதி மகாமண்டபத்தில் இருக்கிறது. அந்தத் தேவியின்

திருநாமத்தை மீனாட்சி என்றும் வழங்குவதுண்டு. சுயற்கண்ணி யார் அவதரித்த இடம் இத்தலத்தில் தெற்கு வீதியில் உள்ள ஒரு வீடென்று சொல்லுகிறார்கள். மார்கழித் திருவாதிரை யன்று ஸ்ரீ நடராசமூர்த்தி திருவுலாப்போதுகையில் அவ்வீட்டில் எழுந்தருளுவதும் மணமகனுக்குரிய சிறப்புக்கள் செய்யப் பெறு வதும் வழக்கமாக உள்ளன. சோழேந்திரன் என்னும் அரசனுக் காக ஒரு முறையும் சங்கரன் என்னும் அந்தணனுக்காக ஒரு முறையும் சிவபிரான் இங்கே திருநடனஞ் செய்தருளினார். சங்கரமறையோன் ஸ்ரீ நடராச மூர்த்தியின் திருவுருவொன்றைப் பிரதிஷ்டை செய்ததாக இப்புராணம் கூறுகின்றது. இப்பொழுது ஆலயத்தில் நடராச மூர்த்தியின் விக்கிரகங்கள் இரண்டு உள்ளன.

இத்தலத்தில் பூசித்துப் பேறு பெற்றோர்: இடபதேவர், இந்திரன், ஒருமண்டூகம் (தவளை), சங்கரமறையோன், சாத் தனார், சில முனிவர்கள், சோழேந்திரன், திருமால், துர்க்கை, நந்திதேவர், பிரமதேவர், முருகக் கடவுள் முதலியோர். நந்தி தேவரும், மண்டூகமும் பூசிப்பதைக் காட்டும் இரண்டு சிற்பங்கள் இவ்வாலயத்தின் அர்த்த மண்டபத்தில் உள்ளன. ஆற்றுரர்ப் புராணத்தில் கூறப்படும் சுகாசீன நாராயணப் பெருமானது திருக்கோயில் இப்பொழுதும் இத்தலத்தில் இருந்து வருகின்றது. பெருமாள் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கின்றார்; நாச்சியார் திருநாமம் கோமளவல்லி என்பது பெருமாள் திரு நாமம் சுகவாசி நாராயணப் பெருமாள் என்று வழங்குகின்றது.

இத்தலத்தில் மரணமடைவோர்களுக்கு மரண சமயத்தில் அம்பிகை ஐந்தெழுத்தை உபதேசிக்கிறதாக ஓர் ஐதீகம்.

பண்டைக்காலத்தில் இங்கே மாசி மாதத்தில் மகநட்சத்திரத் தில் பிரமோற்சவமும், தைமாதம் வெள்ளிக்கிழமையில் கயற் கண்ணியார் திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்று வந்தன.

ஸ்ரீ காந்த புராணத்திலும், பிரம்மாண்ட புராணத்திலும் இத்தலவரலாறு சொல்லப்பட்டுள்ளதென்று ஆற்றூர்ப்புராணத் திலிருந்து தெரிய வருகின்றது.

திருத்தாண்டகம்

[திருவானைக்கா. நா.]

6—திரு. 63—ப. 6—செ.

கலையானை..... மயான மன்னு நிலையானை.

[எறும்பியூர். நா.]

6—திரு. 91—ப. 3—செ.

கருவையென்ற..... மயானத்து மாகிலாமணியை

திருத்தாண்டகம்
[ஆரூர். நா.]

6—திரு. 24—ப. 9—செ.

மலைவளர்த்த..... மயானத்தான் காண் மதியம் சூடினான் காண்

திருத்தாண்டகம்
[காளத்தி. நா.]

6—திரு. 8—ப. 1—செ.

விற்றுரண்..... மயானத்து மைந்தன் காண்

மயிண்டீச்சுரம்
க்ஷேத்திரக்கோவை
[பொது. ஞா.]

2—திரு. 39—ப. 7—செ.

மாட்டூர் மட..... மயிண்டீச்சரம் வாதவூர் வாரணாசி

சேலம் ஜில்லா தர்மபுரி தாலுக்கா அதமன் கோட்டை.

மறையனூர்

[இடையாறு. சு.]

7—திரு. 31—ப. 5—செ.

நிறையனூர்..... மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி

மாகாளம்—கோயில் திருமாகாளம்
திருத்தாண்டகம்
[ஆணைக்கா. நா.]

6—திரு. 62—ப. 10—செ.

கொடியேயும்..... மதிலானைக்காவுளதாய் மாகாளத்தாய்

திருத்தாண்டகம்
[இடைமருதூர். நா.]

6—திரு. 17—ப. 10—செ.

விட்டிலங்கு..... மழபாடியுள் உறைவர்
மாகாளத்தர்.

திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 51—ப. 1—செ.

கயிலாய மலை..... மயிலாடு துறையுளார்
மாகாளத்தார்.

திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 51—ப. 7—செ.

மறைக் காட்டார்..... வாழ்கொளி புத்தூரார்
மாகாளத்தார்.

திருத்தாண்டகம்
[புகலூர். நா.]

6—திரு. 99—ப. 6—செ.

விரிசடையாய்..... மருவினியார் மனத்துளாய்
மாகாளத்தாய்

காப்புத்திருத்தாண்டகம்
[அதிகை. நா.]

6—திரு. 7—ப. 4—செ.

திரையார்புனற்..... மாகாளம் கேதாரம்
மாமேருவும்...

தனித்திருத்தாண்டகம்
[பொது. நா.]

6—திரு. 96—ப. 5—செ.

அந்தகனை..... மாகாளன் வாசல் காப்பாகக்
கொண்டார்.....

ஊர்த்தொகை
[பொது. சு.]

7—திரு. 47—ப. 5—செ.
மருகலுறைவாய் மாகாளத்தாய்

மாகாளேச்சுரம்
அடைவுதிரு.
[பொது. நா.]

6—திரு. 71—ப. 8—செ.

நாடகமாடிட நந்திகேச்சுரம் மாகாளேச்சுரம்

மாகுடி
அடைவுதிரு.
[பொது. நா.]

6—திரு. 71—ப. 3—செ.
நற்கொடி..... புற்குடி, மாகுடி தேவன்குடி நீலக்குடி

மாகுடி வைப் மாங்குடி

இது பேரளத்திற்கு வாயு மூலையில் ஒரு பர்லாங்கிலுள்ளது.
ஸ்வா: மகாகாளநாதர்.
ஸந்: கிழக்கு.
அம்: ஞான வல்லி.
ஸந்: தெற்கு.

தீர்த்தம்: ஞானகுரு தீர்த்தம்; தகவடிவம்; மார்கழி குரு வாரமும் பங்குனி குருவாரமும் விசேடகாலம்.

விருக்ஷம்: கொன்றை.

பூசித்தவர்கள்: குரு, விசுவாமித்திரர், காசியபர், புதன். இதில் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவம் மிகப் பெரியது.

மாகுடி என்பது மாங்குடி என வழங்குகின்றது. பேரளத் திற்கு வாயுமூலை. 1—பர்லாங்கு.

ஸ்வா: மகாளாநாதர்.
ஸந்: கிழக்கு.
அம்: ஞானவல்லி. ஸந்: தெற்கு.
தீர்: ஞானகுரு தீர்த்தம்.

காலம்: மார்கழி குருவாரம்.
விரு: கொன்றை.

குரு: விசுவாமித்திரர், காசியபர், புதர் இவர்கள் பூசித்த ஸ்தலம்.

இதில் தக்ஷிணா மூர்த்தியின் திருவுருவம் மிகப் பெரியது.

மாகோணம்
திருத்தாண்டகம்
[நெய்த்தானம். நா.]

6—திரு. 41—ப. 6—செ.

தக்கார் அடியார்க்கு..... தெக்காரு மாகோணத் தானே யென்றும்

மாட்டூர்
ஊர்த்தொகை
[பொது. சு.]

7—திரு. 47—ப. 1—செ.

காட்டூர்க்..... மாட்டூர் அறவா மறவாது உன்னைப் பாடப்பணியாயே.

மாயூரத்திற்கு அருகிலுள்ள சேலூர்.

மாடக் கோயில் உண்ணாழிகை.
திருத்தாண்டகம்
[வீழிமிழலை. நா.]

6—திரு. 51—ப. 3—செ.

அண்ணாமலையமர்ந்தார்..... அந்தணர்கள் மாடக்கோயில் உண்ணாழிகையார்

மாணிக்க மலை
திருத்தாண்டகம்
[ஆனைக்கா. நா.]

6—திரு. 63—ப. 6—செ.

கலையானை..... கன வயிரத் திரளானை மணி மாணிக்க மலையானை

மாணிகுடி
அடைவுதிரு.
[பொது. நா.]

6—திரு. 71—ப. 3—செ.

நற்கொடி..... வேதிகுடி, மாணிகுடி, விடை வாய்க்குடி ஆமையின் ஓட்டை விநாயகர் பிடுங்கிச் சிவபெருமானிடம் கொடுத்த ஸ்தலம்.

மாத்தூர்
பாவநாசத்திரு
[பொது. நா.]

4—திரு. 15—ப. 10—செ.

புத்தூருறையும்..... வைத்தேன் என்றன் மனத் துள்ளே மாத்தூர் மேய மருந்தையே.

மாதானம்
க்ஷேத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 8—செ.

உஞ்சேனை..... வீரட்டம் மாதானம் கேதாரத்தும்

மாநிதி (மாநதி)
காப்புத்திருத்தாண்டகம்
[அதிகை. நா.]

6—திரு. 7—ப. 4—செ.

திரையார்புனல்..... வரையார் அருவி சூழ் மாநதியும்

மா நிருபம்
காப்புதிரு
[அதிகை. நா.]

6—திரு. 7—ப. 12—செ.

திருநீர்ப்புனற்..... வருநீர்வளம் பெருகு மாநிருபமும்.

மாவூர்
திருத்தாண்டகம்
[ஆரூர். நா.]

6—திரு. 25—ப. 3—செ.

தேரூரார் மாவூரார் திங்களூரார்.....

மிழலைநாட்டு மிழலை
இடையாறு. சு.

7—திரு. 31—ப. 4—செ.

கச்சையூர்..... கச்சியூர்கச்சி சிக்கல் நெய்த்தானே மிழலை.

திருநாட்டுத் தொகை
[பொது. சு.]

7—திரு. 12—ப. 5—செ.

குழலை வென்ற..... மிழலை நாட்டு மிழலை வெண்ணி நாட்டு மிழலையே.

மிறைக்காடு
ஊர்த்தொகை
[பொது. சு.]

7—திரு. 47—ப. 3—செ.

நிறைக்காட்டானே..... மிறைக்காட்டானே.

முந்தையூர்
[இடையாறு. சு.]

7—திரு. 31—ப. 1—செ.

முந்தையூர் முதுகுன்றங் குரங்கணின் முட்டம்...

முழையூர்
க்ஷேத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 1—செ.

தில்லைச் சிற்றம்பலமும்..... முழையூர் பழையாறை சத்தி முற்றம்...

முறையூர்

சேஷத்திரக்கோவை
[பொது. நா.]

6—திரு. 70—ப. 10—செ.

நறையூரிற்..... சோமீச்சர முறையூர்...

மூதூர் மூர்த்திநல்லூர்
திருக்குறுந்தொகை
[பூவனூர். நா.]

5—திரு. 65—ப. 5—செ.

புல்லம் ஊர்தி..... நல்லமூர்தி நல்லூர்...

மூலனூர்
திருநாட்டுத்தொகை
[பொது. சு.]

7—திரு. 12—ப. 3—செ.

மூலனூர் முதலாய முக்கண்ணன் முதல்வனூர்...

மூவலூர்
திருத்தாண்டகம்
[நெய்த்தானம். நா.]
6—திரு. 41—ப. 9—செ.

தந்தைதாயில்லாதாய்..... மூவலூர் மேவினாய் நீயே யென்றும்...

திருக்குறுந்தொகை
[பூவனூர். நா.]
5—திரு. 65—ப. 8—செ.

பூவனூர் தண்... மூவலூரு முக்கண்ணனூர் காண்மினே.

மெய்யம்
[புகலூர். ஞா.]
1—திரு. 2—ப. 5—செ.

செய்யமேனி வெளி..... மெய்யநின்ற பெருமான்...

மேரு

அடைவுதிரு
[பொது. நா.]

6—திரு. 71—ப. 9—செ.

கந்த மாதனங்..... வியன் பொதியின் மலை மேரு உதயம் அத்தம்...

மோட்டூர்

மோட்டூர்—உன்னதபுரி (மேலட்டூர்)
ஸ்வா: உன்னதபுரீசுவரர்.
ஸந்:
அம்: சிவப்பிரியாம்பிகை, ஊர்தபுரீசுவர்.
ஸந்:
தீர்த்தம்:
விருக்ஷம்: பனை, கர்ச்சூரம்.

மோட்டூர்?
கேஷத்திரக்கோவை
[பொது. நா.]

2—திரு. 39—ப. 7—செ.

மோட்டூர் மடப் பாச்சிலாச்சி ராமம்...

வடகச்சி
கேஷத்திரக்கோவை
[பொது. ஞா.]

2—திரு. 39—ப. 1—செ.

ஆரூர்தில்லை அம்பலம்..... வடகச்சியும் அச்சிறு பாக்க நல்ல...

வடகஞ்சனூர்
திருநாட்டுத் தொகை
[பொது. சு.]

7—திரு. 12—ப. 8—செ.

நாளும் நன்னிலம் தென்பனையூர் வடகஞ்சனூர்...

வடகயிலை

[சாய்க்காடு. நா.]

6—திரு. 82—ப. 3—செ.

கானிரிய வேழம்..... வட கயிலை மலை அது தம் இருக்கை போலும்...

திருத்தாண்டகம்

[ஐயாறு. நா.]

6—திரு. 38—ப. 4—செ.

வானுற்ற மாமலை..... வடகயிலை மன்னியிருந்தாய் நீயே....

வடபர்ப்பதம்

அடைவு திரு.

[பொது. நா.]

6—திரு. 71—ப. 9—செ.

கந்தமாதனங்..... மந்தமாம் பொழிற் சாரல் வடபர்ப்பதம்...

வடபேறூர்

[இடையாறு. சு.]

7—திரு. 31—ப. 4—செ.

கச்சையூர்..... பிச்சையூர் திரிவான் கடலூர் வடபேறூர்...

வடமாகறல்

கேஷத்திரக்கோவை

[பொது. ஞா.]

2—திரு. 39—ப. 5—செ.

ஆறை வடமாகறல் அம்பர் ஐயாறணியார் பெரு வேஞர்...

பாடல் பெற்ற திருமாகறல் தலமாகலாம்.

திருவள்ளூருக்கு வடக்கே எட்டு மைலிலுள்ளது.

மேற்படி ஸ்தல புராணம் தமிழில் 1500 செய்யுளில் சாமி நாதகவிராயர் என்பவரால் செய்யப்பட்டது.

ஸ்வா: புற்றில் உடும்பு வடிவம்.
''பொன்னுடும்பாய்ப் புற்றிற் புகுந்தார் காணம்மானை:

வடமேரு
[சத்திமுத்தம். நா.]
4—திரு. 96—ப. 9—செ.
தக்கார்..... மிக வடமேரு என்னும் திக்கர்

வண்குடி (திருவண்குடி)
க்ஷேத்திரக்கோவை
[பொது. நா.]
2—திரு. 39—ப. 10—செ.

குத்தங்குடி..... அத்தங்குடி தண்டிரு வண் குடியும்

வழுவூர்: அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. வைப்புத்தலம். சுதபுரம், நடுவூர் சுவாமி. கிருத்திவாசேசுவரர், வீரட்டே சுவரர் சந்நிதி: கிழக்கு. அம்பிகை: பாலாங்குராம்பிகை; இளங்கிளை நாயகி. (இளங்கிள்ளை நாயகி.) அம்பிகை சந்நிதி கிழக்கு.

தீர்த்தம்: பஞ்சப்பிரம தீர்த்தம் அஸ்தி தீர்த்தம். இது நந்தி சங்கரர் மத்தியிலுள்ளது. விருட்சம். மாமரம். முனிவர் களுடைய உற்சவ விக்கிரக இரண்டு உள்ளது. பிக்ஷாடனமூர்த்தி மோகனாம்பாள். தக்ஷிணாமூர்த்தி, கிருத்திவாசேசுவரர். ஸ்ரீ மூலநாதர் மூலஸ்தானத்திற்கு வடக்கே ஆதி சகஸ்ர லிங்கம் 48000 வர்களுக்குக் காட்சி கொடுத்த இடம்:

பரசிவனை விழுங்கிய யானை பஞ்சபிரம தீர்த்தத்தில் மூழ்க 30 நாழிகை வெளிப்படாமல் இருந்தது. அப்பொழுது அஞ்சிய அம்பிகை வெளிப்பட்ட சுவாமியை முருகக் கடவுள் சுட்டிக்காட்ட மகிழ்ந்தனர். கிருத்தி வாகேசுவரர் இடத் திலுள்ள அம்பிகை இடத்தில் இத்தோற்றம் விளங்கும்.

சபை: ஞானசபை 48000 முனிவர்களுக்கு ஞானோபதேசம் செய்த இடம். எதிர்த்து வந்த யானையைத் தூக்கி எறிந்தனர். விழுந்த இடம் குளமாயிற்று. பூத தீர்த்தம் இத்தலத்தில்.

வண்டு வாழ் பதி(க்கை)
[வாள்கொளி புத்தூர். ஞா.]
2—திரு. 94—ப. 6—செ.

தண்டும் தாளமும்..... வண்டு வாழ்பதி உடை
யார் வாள்கொளி புத்தூர் உளாரே.

வரந்தை

[செங்காட்டங்குடி. ஞர.]

1—திரு. 61—ப. 3—செ.

வரந்தையான் சோபுரத்தான்

வழுவூர்

கேஷத்திரக்கோவை

6—திரு. 70—ப. 8—செ.

உஞ்சேனை..... மஞ்சார் பொதியின் மலை தஞ்சை வழுவூர்

மாயூரத்தின் அருகிலுள்ள வழுவூர் வீரட்டம்.

வளவி

[புறம்பயம். நா.]

6—திரு. 13—ப. 1—செ.

கொடிமாட..... கொடுங்கோளூர் தண் வளவி கண்டியூரும்...

[பள்ளியின் முக்கூடல். நா.]

கேஷத்திரக்கோவை

6—திரு. 69—ப. 9—செ.

ஊனவனை..... வானவனை மதிசூடும் வளவி யானை...

வளைகுளம்

திருத்தாண்டகம்

[வீழிமிழலை. நா.]

6—திரு. 50—ப. 8—செ.

வானவர்கோன்..... வளை குளமும் மறைக்காடு மன்னினானை...

வட ஆர்க்காடு ஜில்லா அரக்கோணம் தாலூகா வளர்புரம் என்பது.

திருத்தாண்டகம்

[வெண்ணியூர். நா.]

6—திரு. 59—ப. 2—செ.

நெருப்பனையமேனி வளைகுளமும் மறைக் காடும் மன்னினாரும்

அடைவு திரு.
[பொது. நா.]
6—திரு. 71—ப. 10—செ.

நள்ளாறும்..... தெள்ளாறும் வளைகுளமும் தளி தளிக்குளமும்...

இது மேலூர்க்கோட்டம் மேலூர் நாடு. (சிலாசாஸனம்) திருத்தணிகையின் பக்கம்.

வன்னி

கேஷத்திரக்கோவை
[பொது. நா.]
6—திரு. 70—ப. 11—செ.
புலி வலம்புத்தூர்..... மருகல் வன்னி...

வாதவூர்
கேஷத்திரக்கோவை
[பொது. நா.]
2—திரு. 39—ப. 7—செ.
மாட்டூர்..... முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி பாண்டி நாட்டு திருவாதவூர்.

வாரணாசி
காப்புத்திருத்தாண்டகம்
[அதிகை. நா.]
6—திரு. 7—ப. 11—செ.
தேனா புனற்..... மதிலுஞ்சை மாகாளம் வாரணாசி.

கேஷத்திரக்கோவை
[பொது. ஞா.]
2—திரு. 39—ப. 7—செ.
மாட்டூர்..... முண்டீச்சரம் வாதவூர் வாராணாசி காசி வடநாட்டுத்தலம்.

விடங்கஞர்

கடங்கஞர் திருக்காரிக்கரை கயிலாயம் விடங்கஞர் திருவெண்ணியண்ணாமலை வெய்ய
இடங்கொஞ ரெய்த மானிடை யாறிடைமருதே''

விடைவாய்க்குடி

நற்கொடி மேல் விடையுயர்த்த நம்பன் செம்பன்குடி வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி புதுக்குடி யும் போற்ற இடர் போகுமன்றே.

திருநா. 6—71—3

விந்தமாமலை

கந்தமாதனங் கயிலைமலை கேதாரங் காளத்தி விந்தமாமலை வேதஞ்சையமிக்கவி..... ஏத்துவோம் இடர்கெட நின்றேத்துவோமே.

திருநா. 6—71—9

விராடபுரம்

மண்ணிப்படிக்கரை வாழ்கொளிபுத்தூர்வக்கரை... விளமர் விராடபுரம் வேட்களத்தும்... கயிலாய நாதனையே காணலாமே.

திருநா. 6—70—6

விராடபுரம்

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தாராபுரத்திற்கு இப் பெயருண்டு.

ஸ்வா: அகஸ்தீசுவரர்.

ஸந்: கிழக்கு, இடப்பக்கம்.

பெருமாள்: உத்தர வீரராகவர்.

நதி: ஆம்ராவதியின் மேற்கு.

வில்வேச்சுரம் (வில்வநல்லூர்)

வில்வநல்லூர் என்பது தொண்டை நாட்டைச் சார்ந்தது. இங்கே முத்தாறு என்னும் நதியினிடையில் பிரமதேவர் ஒரு வில்வவனம் உண்டாக்கிச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தமையின் இதற்கு முதலில் வில்வவனம் என்னும் திருநாமம் உண்டாயிற்று. அப்பால் தருமபாலன் என்னும் சோழன் ஆலயமும் நகரமும் நிர்மாணம் செய்ய இவ்வூர் வில்வநல்லூர் என்னும் பெயரால் வழங்கலாயிற்று. வில்வம் என்பது வில்லம் எனவும் வழங்கும். வில்வவனம் என்பது வில்லவனமாகி அது மருவி வில்லையாயிற்று இது தேவாரத்தில் வரும் வில்வேச்சுரம் என்னும் வைப்புத்தல மாகும். பல ஊர்களின் பெயர்கள் இக்காலத்தில் மருவி வழங்கு தல் போல இத்தலத்தின் பெயரும் வில்லியனூர் என்று வழங்கு

கின்றது. இத்தலத்திற்குக் காமீசம், வில்லபுரி, வில்லமா நகரம் என்பனவும் பெயர்களாக வில்லைப்புராணத்தில் காணப்படு கின்றன.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகர் திருநாமம் வலம்புரி விநாயகர் என்பது. சிவபெருமான் திருநாமம் ஸ்ரீ காலமகுவர ரென்பது, காமன் இங்கே பூசித்துப்பேறு பெற்றமையின் இத்திரு நாமம் ஏற்பட்டது. இங்ஙனமே நரசிங்கமூர்த்தி பூசித்தமையிஞ் நரசிங்க நாதர் என்பதும், ஆதிசேடனது நோயை நீக்கியருளிமை யின் வைத்திய நாயகர் என்பதும், இந்திர பதவியை விரும்பித் தவம் புரிந்த நிருப முனிவனுக்குக் கணநாதர் பதவியளித்து இந்திரனது துயர் தவிர்த்து இருவருக்கும் நடுவாக நின்றமையின் நடுவறிவார் என்னும் திருநாமமும் உண்டாயின. தலத்தின் தொடர்பால் வில்வவனேசர் என்னும் திருநாமமும் அமைந்தது. சுவாமியின் சந்நிதி கிழக்கு நோக்கியது. அம்பிகையின் திருநாமம் கோகிலாம்பிகை என்பது. அது தமிழில் குயிலம்மை என வழங் கும் அம்பிகையின் திருக்கோயில் தெற்கு நோக்கியது. இத் தலத்து முருகக் கடவுளுக்கு முத்துக்குமாரர் என்பது திருநாமம்.

பெண்ணை, புஷ்டிமதி, வேகவதி, பம்பை, முத்தாறு என்னும் ஐந்து நதிகள் இத்தலத்தில் சேர்கின்றன என்று வில்லைப்புராணம் கூறும். முத்தாறு என்பது வடமொழியில் மௌத்திக நதியென்று சொல்லப்பெறும்.

இத்தலத்திற்குரிய நதி அம்முத்தாறேயாகும். கிவாலயத் தில் வடக்கு மதிலுக்குள்ளே உள்ள தீர்த்தம் ருத்தாபநாசம் எனப் பெறும்; இது ருத்தாபசமனம், சற்ருத்தாபநாசனம் எனவும் வழங்கும். பிரமதேவரால் உண்டாக்கப்பட்டதாதலின் பிரமதீர்த்தம் என்னும் பெயரும் இதற்கு உண்டு. இத்தலத்திற் குரிய விருட்சம் வில்வம்.

இங்கே பூசித்துப் பேறு பெற்றோர்: ஆதிசேடன், இந்திரன், காமன், கோவிந்தன் என்னும் பிராமணன், சகலாங்க சௌந்தரி என்னும் தாசி, தருமபாலன் என்னும் சோழன், நரசிங்கமூர்த்தி, பிரமதேவன் முதலியோர். இவர்கள் பூசித்ததற்கு அடையாளங் கள் சில உண்டென்பர்.

இந்திரன் பூசித்தபோது இவ்வூருக்கு வடக்கே ஒரு நாழிகை வழித்தூரத்தில் ஓர் இடத்தில் தங்கினனென்றும் அவ்விடம் தேவர்க்கரசனாகிய அவன் தங்கினமையின் அரசூர் என்னும் பெயர் பெற்றதென்றும். ஒரு செய்தி வழங்குகின்றது. மன்மதன்

தங்கிய இடம் இத்தலத்திற்கு மேற்கே இரண்டு கல் தொலைவி லுள்ள தென்றல் என்னும் கிராமம் என்பர். நரசிங்கமூர்த்தி இங்கே பூசித்த பின்பு சிவபெருமான் கட்டளைப்படி கடற்கரை யில் கோயில் கொண்டு மேற்கு முகமாக எழுந்தருளினரென்றும், அவ்விடம் அவர் பெயரால் ஓர் ஊராயிற்று என்றும் வில்லைப் புராணம் கூறும். அவ்விடம் சிங்கர்கோயில் என்று வழங்கும். பிரமதேவர் இத்தலத்துக்கருகில் ஓர் இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்தார் என்பதும் அவ்விலிங்கத்தின் திருநாமம் பிரமீச் சுரர் என்பதும் தெரியவருகிறது. அவ்விடம் பஞ்சநதி சங்கமத் திற்கு வடதிசையில் ப்ரம்மேசுர் என்னும் திருநாமமுடைய தாகும் என்று வடமொழிப்புராணம் கூறும்.

இந்தத் தலத்தில் சந்திரன் பூசித்தான் என்றும் அவன் வந்து தங்கிய இடம். இவ்வூருக்கு வடமேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ள பிறையூர் என்றும், சூரியனும் ஸ்ரீ காமீசரைப் பூசித்தான் என்றும் அவன் தங்கிய இடம் உதயம்பட்டு என்றும், இப்போது அப்பெயர் ஒதியம்பட்டு என வழங்குமென்றும் அவ் வூர் இத்தலத்திற்குத் தென்கிழக்கிலுள்ளதென்றும் சில செய்தி கள் கர்ண பரம்பரையாக இவ்வூரிலும் இதைச் சார்ந்த இடங் களிலும் வழங்கி வருகின்றன.

இங்கே தருமபாலச்சோழன் வைகாசி மாதத்தில் பௌர்ணமி யில் விசாக நட்சத்திரம் கூடிய தினத்தில் திருவிழா நடத்தினா னென்று வில்லைப்புராணம் அறிவிக்கும். இப்பொழுதும் வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறுகின்றது.

விவீசுரம்

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர்
வேதீச்சுரம் விவீசுரம் வொற்றியூருங் கயிலாய
நாதனையே காணலாமே.

திருநா. 6—70—8.

விளத்தூர் நாட்டுவிளத்தூர்

திரு—7 செய்—8

நாஞநன்னிலந்தென்பனையூர் வடகஞ்சனூர்
வேளார்நாட்டுவேளூர் விளத்தூர்நாட்டுவிளத்தூரே.

சு. 7—12—8

விளத்தொட்டி

திரு.: 6 செய்—6 கேஷத்

''மண்ணிப்படிக்கரை வாழ்கொளிபுத்தூர் வக்கரைமந்தாரம்
வாரணாசி வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி.
கயிலாய நாதனையே காணலாமே.

திருநா. 6—70—6.

விளத்தொட்டி:

குத்தாலம் என்னும் இரயில்வே நிலையத்தில் இறங்கி வடக்கே சென்றால் இத்தலத்தை அடையலாம்.

விளத்தொட்டி என்பது சோழநாட்டில் மண்ணியாற்றின் கரையில் உள்ள ஒரு சிவஸ்தலம். இது திருநாவுக்கரசு நாயனாரால் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் குறிக்க வைப்புத் தலங்களுள் ஒன்று. இங்கே தலவிருட்சம் வில்வமாதலின் வில் வாரணியம், வில்வவனம், வில்வக்கானம், வில்வாடவி, கூவிள வனம் என்றும், பிரமன் பூசித்துப்பேறு பெற்றதனால் பிரமபுரி என்றும், கூவிளம் தொட்டி என்னும் இரண்டன் பெயரும் இணைந்து விளத்தொட்டி என்றும், முருகக்கடவுள் தொட்டியில் கண் வளர்தலால் வளர்தொட்டி என்றும் இத்தலத்தின் திருநாமங்கள் வழங்கும்.

இங்கேயுள்ள தலவிநாயகர் திருநாமம் ஆபத்துக்காத்த விநாயகர் என்பது. இவர் இத்தலத்தில் தெற்கு வீதியின் மேல்பால் எழுந்தருளியிருக்கின்றார். சிவபெருமான் திருநாமங்கள். புரமபுரீசர், வில்வமூலநாதர், வில்வழநாயகர் என்பன. அம்பிகையின் திருநாமம். வடமொழியில் இட்சுரஸநாயகி என்றும், தமிழில் கரும்பிரதநாயகி என்றும் வழங்கும். இக்காலத்து இத்தலத்திலுள்ள பெண்களுக்குக் கரும்பாயி என்னும் பெயர் வைக்கப்பெற்று வழங்குகின்றது. இங்கே முருகக் கடவுள் அம்பிகையின் விருப்பப்படி பாலசுப்பிரமணியராக அவதரித்து எழுந்தருளியிருக்கின்றனர். அவர் தொட்டியில் (தொட்டிலில்) என்றும் இளங்குழந்தையாகவே எழுந்தருளியுள்ள காரணம் பற்றி இத்தலத்தில் உள்ளோர்கள் தம் குழந்தைகளுக்குத் தொட்டில் இடுவது வழக்கமில்லை. இத்தலத்தில் பூசித்துப்பேறு பெற்ற வேணுகோபாலர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளனர். அகத்தியரால் பூசிக்கப்பெற்ற இலிங்கமொன்றும், பிரமதேவரால் பூசிக்கப்பெற்ற இலிங்கமொன்றும் இருந்தனவென்று தெரிய வருகின்றது. வில்வவிருட்சத்தினடியில் சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கும் தோற்றத்தோடு உள்ள பிரமதேவரது உருவம் ஒரு சிலையில் அமைக்கப்பட்டுள்ளது. சிவபிரான் கட்டளைப்படி வைரக்கடவுள் பூசித்துப்பேறுபெற்று இத்தலத்தைப்பாதுகாத்து

வருகின்றதாக விளத்தொட்டிப்புராணம் கூறும். அம்மூர்த்தியின் திருக்கோயில் அம்பிகையின் திருக்கோயிலுக்கு எதிரே உள்ளது.

இத்தலத்தில் உள்ள தீர்த்தங்கள் வைரவ தீர்த்தம், மண்ணி நதி, பிரமகூபம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், யமதீர்த்தம், நிருதி தீர்த்தம் ரருண தீர்த்தம், வாயு தீர்த்தம், சோமதீர்த்தம் ஈசான தீர்த்தம் என்பன. இவற்றுள் வைரவ தீர்த்தம் என்பது கொள்ளிடத்தில் உள்ள ஒரு துறையாகும். பிரமகூபம் என்பது பிரமதேவரால் அமைக்கப்பட்டது. இது சுவாமி திருக்கோயிலுக்கும் அம்பிகை திருக்கோயிலுக்கும் இடையே உள்ளது.

அக்கினி, அகத்தியமுனிவர், அகலிகை, இந்திரன், ஈசானன், சந்திரன், நிருதி, பிரமதேவர், யமன், வருணன், வாயு, வேணு கோபாலர், வைரவக் கடவுள் என்பர் இத்தலத்தில் பூசித்தும் பேறு பெற்றோராவர்.

பண்டைக்காலத்தில் தை மாதத்தில் திருத்தேர் விழாவும், ஆவணி மாதத்தில் திருக்கலியாண உற்சவமும் இங்கே நடந்து வந்தன என்பதும் ரதோற்சவத்தின் மறுநாள் இந்திர தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுக்கப்பட்ட தென்பதும் விளத்தொட்டிப் புராணத்தால் புலப்படுகின்றன. இப்போது வைசாக சுத்த பௌர்ணமியில் உற்சவம் நடைபெறுகிறதென்றும் அக்காலத்தில் கொள்ளிடத்திலுள்ள வைரவதீர்த்தத்தில் தீர்த்தம் கொடுக்கப்படுகிறதென்றும் தெரியவருகின்றது.

இத்தலத்திற்குரிய வடமொழிப் புராணம் இப்பொழுது கிடைக்கவில்லை. இதற்கருகிலுள்ள திருச்சிற்றம்பலம் என்னும் தலத்திற்குரிய வடமொழிப்புராணத்தில் இத்தலத்தைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சந்திரன் தனக்கு வந்த கூய ரோகத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு விளத்தொட்டிக்கு வந்தபோது தனது ஆத்மார்த்த இலிங்கத்தைத் திருச்சிற்றம் பலத்தில் வைத்து வந்தான் என்பதும் விளத்தொட்டியிற் பூசை புரிந்து சாபத்துயர் நீங்கி மீட்டும் திருச்சிற்றம்பலம் சென்று அவ்விலிங்கத்தை எடுக்க அது பெயரால் இருப்பது கண்டு வருந்தினன் என்பதும் பிறகு சிவபெருமானால் வேறு இலிங்க மொன்றும் பெற்றுச் சென்றனன் என்பதும், சந்திரனால் வைக்கப்பட்ட காரணத்தால் சந்திரசுவரர் என்பது அம்மூர்த்தியின் திருநாமமாயிற்று என்பதும் அப்புராணத்தால் அறியப் படுகின்றன.

வீரணம்

வீரணருறைவது வெறிகமழ் பொழில் விழிமிழலையே
திருஞா. 3—85—9

வெகுளீச்சரம் (வை)

ஏனோர்கள் ஏத்தும் வெகுளீச்சரம். திருநா. 6—7—11

இலகுளீச்சரம் என்று ஐயரவர்கள் தாம் பயன்படுத்திய தேவாரத்தலமுறைப்பதிப்பில் குறித்துள்ளார்.

வெண்ணிக் கூற்றத்து வெண்ணி
சு. 7—12—3

வெண்ணிக் கூற்றத்து வெண்ணியே

வெள்ளாறு (வை)

நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியை.
சு. 7—38—4.

வெற்றியூர் (வை)

வெற்றியூருறை வேதியர்—திருநா. 5—25—4.
இரும்பைப்பதி மாகாளம் வெற்றியூரும் திருஞா. 2—39—6
வெற்றியூரில் விரிசுடரை—திருநா. 4—15—1
வேதீச்சுரம் வீவிசுரம் வெற்றி யூரும்—திருநா. 6—70—8.
வேலனூர் வெற்றியூர்—சு. 7—12—3

வேங்கூர் (வை)

வீழிமிழலை வெண்காடு வேங்கூர்—திருநா. 6—70—7
வேங்கூருறைவாய் விளமர்நகராய்—சு—7—4—76.

வேதமலை (வேதஞ்சையம்)

விந்தமாமலை வேதஞ்சையம். திருநா. 6—71—9

வேதீச்சுரம் (வை)

வெஞ்சமாக்கூடல் மீயச்சூர் வைகா வேதீச்சுரம்
திருநா. 6—70—8.

வேலனூர் (வை)

வேலனூர் வெற்றியூர் வெண்ணிக் கூற்றத்து வெண்ணியே.
சு. 7—12—3.

வேளார்நாட்டு வேஞூர்

வேளார் நாட்டு வேஞூர் விளத்தூர் நாட்டு விளத்தூரே.
சு. 7—12—8.

சேஞூர் அல்லது சேவையம்பதி அவநாசிக்கு வடக்கே 5 மைல். வாலி பூசித்த ஸ்தலம்.

பெரும் பழனம் பெருமாநல்லூர். அவிநாசிக்குக் கிழக்கே 6—வது மைல். பழங்கரை பெருமா நல்லூருக்கு மேற்கில் 4 மைல். ஸ்வாமி: பொற் சோளீசுவரர்.

வைப்புத் தலக்காட்டு

1. திங்களூர் பிடவூர்கோ வந்த புத்தூர் குருக்கேத்
திரம் பொதிய மலைதேனூர் விராடபுரஞ் சூல
மங்கைமாவூரளப்பூ ரூற்றத்தூர் சேற்றூர்
மாநிருப மிராப்பட்டீச் சுரஞ்சித்த வடங்கா
ளிங்கமுஞ்சை மாகாளம் நல்லாற்றூர்பேரூ
ரேமப்பே ரூர்குன்றி யூரிடவை வேங்கூர்
செங்குன்றூர் வெற்றியூர் மூவலூர் கருப்பூர்
திருத்தேவனூர்மயிண்டீச் சுரங்குருந்தங்குடியே.

2. காட்டூர்கொங் கணம்பிரம்பி லேமநல்லூர் மணற்கால்
கருமாரி திருப்பெருமூர் களப்பாள்பேராவூர்
மாட்டூர்காம் பீலிநெடு வாயில்நெய்தல் வாயில்
வாதவூர் குணவாயில் வழுவூர்வீரட்டம்
கோட்டுக்காடிடைப்பள்ளி யிடைக்குளம் நெற்குன்றம்.
கூரூர்கஞ் சாறுதஞ்சைத் தளிக்குளம்மா மேரு
நாட்டுதஞ்சை தஞ்சாக்கை பஞ்சாக்கை நியம
நல்லூர்தேரூர் பொய்கைநல்லூர்பாற்குளமே.

3. அடிதொழும்வைப் பூர்க்காரிக் கரைகொடுங்கோளூரே
யாயவண்ணல் வாயிலிறை யாஞ்சேரி மாணி
குடிவிடைவாய்க் குடிவாரணாசிகருந்திட்டைக்
குடிகடையக் குடிதகட்டூர் கொள்ளியறப்பள்ளி
துடையூர்திண் டீச்சுரஞ்செம் பங்குடிபுற் குடிபூந்
துறைதண்டந் தோட்டந் தண்டங்குறை மாத்தூர்
சடைமுடிமத் தங்குடிசாலைக்குடிசோ. மேசம்
தக்களூர் தளிச்சாத்தஞ் குடியரிச்சந்திரமே.

4. புலிவலம்மா நதியில குளீச் சரமேம கூடம்
பூழியூர் முழையூர்பொன் னூர்புரிசைக் கச்சிப்
பலதளிசீ காலிதிரு வேட்டிமணி முத்தம்
பனங்காடு புதுக்குடிதென் களக்குடியோ டுதைய
மலைதென்னு ரத்தமலை மயேந்திரந்தெள் ளாறு
மாகாளேச் சுரங்கச்சி மயானமக்கீச் சுரமாம்
தலமயனீச் சுரநல்ல குடியத்தீச் சுரமாம்
தவப்பள்ளி விளத்தொட்டி யாடகேச் சுரமே.

5. கந்தமா தனம்ஞாழல் வாயில்திரு நாங்கூர்
கடங்கரூ ராழியுயர் கள்ளிகுடி வேளூர்
விந்தமா மலையகத்தீச் சுரங்கிழையம் விளத்தூர்
வேலனூர் நாவலனூர் மூலனூர் துவையூர்
நந்திகேச்சுரந் திருவண் குடிதிருநற் குன்றம்
ஞாழற்கோ யிற்குரக்குத் தளியுருத்திர கோடி
எந்தையூ ரிடைத்தான நகர்பாவ நாச
மிமாப்பள்ளி வேதீச்சு ரந்திரிபுராந் தகமே.

6. தாழையூர் வீவீச்சுரங்கூந்த லூர்குத்
தங்குடியே மூராமா குடியேவீச் சுரமென்
றேழுலகு மேத்துகோத் திட்டைகர புரத்தோ
டிறையவனார் கோட்டுக்காத் தேழூர் தேறச்
சூழுமிருங் குக்குடேச் சுரமாநா லாறு
சோதிதவத் துறைநாக ளேச்சுர மாகோணம்
கீழையில்மா மணிக்கோயில் பொருப்பள்ளி சுரியல்
கிளர்ந்த சிவப் பள்ளிதிரு மலைமுந்தை யூரே.

7. மறையனூர் பிறையனூர் தேனூர்கா வதமே
வரந்தையெச்சி விளமர்கச்சை யூர்விடங்கரூர்சீர்
நிறையனூ ரெச்சனூர் பேறனூ ருடனே
நிகழ்த்து முண்ணீ ரோடகமென் னெஞ்சகலா திருக்கு
மிறையவனார் மருவியவைப் புத்தலங்க ளிவை நூற்
றெண்பத்தா றாகுமென வியம்பிடுமித் தலங்கள்
முறையுடனே தெரிசிப் போர் துதிப்போரிப் புவியில்
முசியாமல் வாழ்ந்திருந்து முடிவில் முத்தி பெறுவார்.

அநுபந்தம்

ஐயரவர்கள் குறித்து வைத்துள்ள மற்ற ஸ்தலங்கள்:

4. அத்திப்புலியூர் (அஸ்திவியாக்கிரபுரம்)

கூத்தூருக்கு மேற்கே முக்கால் மைல்
மூல லிங்கத்திற்குப் பின்புறம் சோமஸ்கந்தர்
அகத்தியருக்குத் திருக்கல்யாண காட்சி

கேசரித்துவசன் என்னும் பாண்டியன் மாண்டவயர் சாபத்தால் யானையாய் இருந்து இங்குச் சாபவிமோசனம் பெற்ற தலம்.

8. அம்பாசமுத்திரம்
எரிச்சா வுடையார்

சாசனங்கள் 1. வரகுணபாண்டியன் 2. சோழதலைகொண்ட வீரபாண்டியன், 3. விக்கிரம பாண்டியன்.

திருப்போத்துடைய மகாதேவர்

மலைநாட்டு இருவகைக் கோவில்களிலும் நிவேதனத்தில் அந்தணர்களுக்குச் செய்விக்கும் போசனம்.

திருவரங்கம்: பெண்ணைக்கரையிலுள்ளது. ஸ்ரீரங்கத்துக்குப் பிரதி.

12. திருவரன்குளம் (நிம்பரண்யம்)

ஸ்வாமி: ஹரதீர்த்தேசுவரர்.
அம்பிகை: மிருகந்நாயகி (ப்ரகதாம்பா)
ஹரதீர்த்தம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள பழையதொரு சிவஸ்தலம். பல சாசனங்கள் உள்ளன. வடமொழியில் 12 அத்தியாயங்களில் ஒரு புராணமிருக்கிறது தென்மொழியில் ஸ்ரீமகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடத் தொடங்கினார்கள். புராணம் முற்றுப்பெறவில்லை.

இங்கே ஒரு குதிரை வீரனுடைய உருவில் ஒரு தனிச்சிலையும் அதன் கீழ்ச்சிலாலேகையும் இருக்கின்றன. சிலாசாசனத்தில் உள்ளவை. ''இராஜராஜேந்திரச்சதுவிசைராயர் மிண்டரான கண்டயதேவர் வீரப்பிரதாபன் முழுக்கைவகன்

இங்கே மூவரசர்களும் வந்து பணிந்துள்ளனர்.

திருவரன்குளம்:

புதுக்கோட்டை சம்ஸ்தானத்திலுள்ள பழையதொரு சிவஸ்தலம் இங்கே பல சாசனங்கள் உள்ளன. இதற்கு வடமொழியில் 12 அத்தியாயங்களில் ஒரு புராணம் இருக்கிறது. தென்மொழியில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பாடத்தொடங்கினார். ஆனால் முற்றுப்பெறவில்லை.

சுவாமி பெயர்: ஹரத் தேசுரர். அம்பிகை: பிருகந்நாபகி. இங்கே ஒரு குதிரை வீரனது உருவமுடைய ஒரு தனிச்சிலையும் அதன்கீழ்ச் சிலாலேகையும் உண்டு. சிலாசாசனத்தால் அறிந்தவை. வருமாறு:

இராஜராஜேந்திரச் சதுர விசையராயர் மிண்டரான கண்டயதேவர் வீரப்பிரதாபன் முழுக்கை.

இத்தலத்திற்கு நிம்பாரண்யம் என்னும் பெயர் உண்டு. இங்கே மூவரசர்களும் வந்து பணிந்துள்ளனராம். அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சேரசோழ பாண்டிய லிங்கங்கள் உள்ளன. புராணவரலாறு: சிவபெருமானுக்குக்குடை பிடிக்கும் கனநாதனான புஷ்பதந்தன் ஒருமுறை சிவபெருமானோடு வருகையில் கந்தர்வப்பெண்களை கண்டு மோகித்தான். அதனால் நீ நான்கு யுகங்களிலும் நான்கு பொருளாகுக என்று சாபம் பெற்றான் அவை முறையே 1. நிம்பம், 2. ஆத்தி, 3. பனை, 4. மண்டபமென்பன.

முதலில் நிம்பமாகத் தீர்த்தத்தின் மேல்கரையில் தோன்றினான். அத்தீர்த்தமே ஹரதீர்த்தம்.

மூன்றாவது யுகமுடிவில் புஷ்பதந்தன் பொற்பனையாக இருந்தான். வல்லநாட்டிலிருந்து வந்த இடையன் ஒருவன் தினந்தோறும் இடறினாள் பிறகு ஆராய்ந்து பார்க்கையில் சிவலிங்கம். இருக்கக் கண்டான். அதனை அவ்வனத்திற்கு வந்த கல்மாஷபாத அரசனிடம் காட்டினான். அவ்வரசன் கோயில் கட்டினான்.

வனத்திலிருந்த வேடனொருவன் நாள்தோறும் அப்பனையிலிருந்து விழும் பனம்பழம் ஒன்றை வல்லநாட்டுச்செட்டியும் திருக்கட்டளையென்றும் ஊரிலிருந்தவனும் ஆகிய ஒருவனிடம் கொடுத்து வந்தான். ஒருநாள் கல்மாஷபாதன் என்றும் அரசன் அப்பொன் பனம்பழத்தைக் காட்டச் சென்னான். வேடன் அன்று மாலையில் கொண்டுபோய்க்காட்டினான். அன்று மூன்றாவது யுகமுடிவு. பனமரமாக இருந்த புஷ்பதந்தன் அரசகுமார வடிவில் தோன்றித் தன் வரலாற்றைக் கூறினான்.

அதன் பிறகு அரசன் பொற்பனைக் கோட்டை ஒன்றைக் கட்டினான். புஷ்பதந்தன் பிறகு மண்டபரூபத்தில் விளங்கி வரலானான்.

பனம் பழம் வாங்கிய கட்டையப்புச் செட்டிக்கு ஒரு பெண்

பிறந்தாள். அவளுக்கு மணப்பருவம் வந்தது. கோயிலுக்கு அழைத்து வந்தார்கள். தீர்த்தத்தில் மூழ்கினாள்; வெளிவர வில்லை. இங்கேயே கலியாணம் செய்யுங்கள் என்று அசரீர் வாக்குக் கேட்டது. சிவபெருமானுக்கு அப்பெண்ணைச் சிறப் புடன் திருமணம் செய்து வைத்தார்கள். வல்லநாட்டுச் செட்டி மார்களால் இக்கல்யாண விழா ஆடிப்பூரத்தில் 9-ஆம் திருநாள் இரவு நடத்தப்படுகின்றது. அப்பொழுது சின்னரதம்.

வைகாசி மாத விசாகத்தன்று ரதோற்சவம் வல்லநாட்டுச் செட்டிமார்கள் 1,500க்கு மேல் தலைக்கட்டுடையார்.

கட்டுடையான் செட்டியார் என்ற ஒருவர் இக்கோயிலுள்ள விசுவநாதர், விசாலாக்ஷியம்மையைப் பிரதிஷ்டை செய்திருக் கிறார். அம்மூர்த்திகளுக்கெதிரில் அச்செட்டியாருடைய உரு வம் இருக்கிறது.

இங்கே முன்மண்டபத்தின் மேலே உள்ள பாவுகல்லில் 27 நட்சத்திரங்கள் 12 இராசிகள் அப்பிரதக்ஷிணமாக வரையப் பட்டிருக்கின்றன.

சேதுபதிகள் இங்குள்ள கட்டைக் கோபுரத்தின் கிழக்குப் பகுதியைக் கட்டியுள்ளார்கள்.

குலோத்துங்க அரசன் ஒரு அந்தணனது நிலத்தைக் குடியான வன் ஏடுத்துக் கொண்டதே சரி என்றமையின் பிள்ளைப்பெறாச் சாபம் அடைந்தான். இங்கே கோயில் கட்டிச்சாபம் நீங்கப் பெற்றதாக ஐதிஹ்யம்.

வல்லநாட்டு அரசருக்குச் சாந்தவ்ய மகரிஷி குரு. இங்கே ஆத்திமரமும் வேம்பும் உள்ளன. பனையிருந்த இடத்தில் பனை போன்ற உருவம் எழுதிய சிலையிருக்கிறது.

ஜேஷ்டையின் விக்ரகம் உண்டு.

துருவாசரை அவமதித்த குற்றம் நீங்கப்பிராமன் இங்கே பூசித்தான்.

தக்ஷிணாமூர்த்தி இங்கே நின்ற திருக்கோலமாக இருக் கிறார்.

இங்குள்ள தீர்த்தங்கள் ஏழும்: 1. ஹர தீர்த்தம், 2. பிரம தீர்த்தம் (கோயிலுக்கு வெளியே), 3. சர்ப்ப தீர்த்தம் (ஆதி சேடன் உண்டாக்கியது), 4. லக்ஷ்மி தீர்த்தம், 5. இந்திர

தீர்த்தம் (ஈசானியதிக்கில் இருக்கிறது), 6. சுப்பிரமணிய தீர்த்தம் 7. தக்ஷிணாமூர்த்தி தீர்த்தம்.

இங்கேயுள்ள கலியாணசுந்தர மூர்த்தியைத் தியாகராசர் என்று கூறுகின்றார்கள். இவ்வூருக்கருகில் பொற்பனைப்பட்டி யென்றோரூர் உண்டாம்.

14. அருகிருந்த மங்கலம் (அருகந்த மங்கலம்)
திருமானிக்குழிக்குப் பக்கத்திலுள்ளது.

ஆதிசிதம்பரம்:

வதரிவனம்: பதரிகாரண்யம்.

உமாமகேசுவரமூர்த்தி—சிதம்பரத்திலுள்ள தானத்தி லுள்ளது சந்நிதி-கிழக்கு.

மாணிக்கவாசகர் சந்நிதி: சிற்றம்பலத்தில் உமாமகேசுவர ருக்கு எதிரே உள்ளது.

சஹஸ்ர லிங்கம்: இது அக்கினி தீர்த்தக்கரையில் க்ஷேத்திர விருட்சமாகிய. இலந்தை மரத்தின் வடபாகத்திலிருக்கும் சிறிய கோயிலிலுள்ளது. இந்த லிங்கத்தில் அக்கினி நேத்திரருடைய சிஷ்யர்கள் ஆயிரவரும் அக்கினி தீர்த்தத்தில் நீராடி இங்குள்ள ஆயிரலிங்கத்தில் ஐக்கியமானார்கள். என்பர்.

அக்கினி நேத்திராட மாணிக்கவாசகருடைய பழம்பிறப்பு

ஆப்பக்கூடல்: சிவஸ்தலம். ஓர் அகரமுண்டு இது பவானி தாலுக்காவில் உள்ளது.

ஆறுமுக மங்கலம்: பெருங்குளத்துக்குக் கிழக்கேயுள்ளது; பெரிய ஊர் ஆயிரத்தெட்டுப் பிராமணர் வீடுகள் முன்பு இங்கே உண்டென்றும் அவருள் விநாயகர் ஒருவரென்றும் சொல்வார்கள். இங்குள்ள விநாயகருக்கு ஆயிரத்தெண் விநாயகரென்பது திரு நாமம்.

32. இடைக்கழி

பெருமுனைக்குக் கிழக்கே
முருகன் சந்நிதி விசேடம். திருவிசைப்பா, புராணம் பிள்ளைக்கவியுண்டு.

இடைக்கழி: முருகர் சந்நிதி விசேடம். இவ்வூர் பெரு முனைக்குக் கிழக்கே உள்ளது. திருவிசைப்பா, புராணம், பிள்ளைக்கவியும் உண்டு.

30. இஞ்சிக்குடி:

சுவாமிபெயர்: பார்வதீசர்.

அம்பிகை பெயர்: சாந்த நாயகி.

பூந்தோட்டத்திற்கு வடக்கே ½ மைலில் உள்ளது. ஆலயம் பெரியது சிவலிங்கப் பெருமானார் சுவாமி என்பர். அம்மன் கோயில் விமானத்தின் தென்பால் சட்டையப்பர் வேடனுக்கு முக்தி கொடுத்த இடம். தெற்கு உள்மதிலில் வடக்குப் பார்க்க பார்க்க வேடன் வடிவம். எதிரில் காட்சி கொடுத்த நாயகன். வடமொழியில் 13 அத்தியாயத்தில் ஒரு புராணம் உள்ளது. கம்பர் இந்த ஊரில் இருந்ததாகச் சொல்வார்கள். இங்குப் பூந்தோட்டம் சைத்திரத்தோடியார் கோயிலுண்டு.

இசிலந்துறை

மங்களாம்பிகை—பதரிவனேசுவரர்.

உடையார்பாளையம்: இவ்வூருக்குப்பத்ராண்யம், முற்க புரி முதலிய பல பெயர்கள் உண்டு.' இங்கே உள்ள சிவாலயம் மிகவும் பழமையானது. ஸ்வாமியின் திருநாமம் வடமொழியில் முற்கபுரீசரெனவும் தமிழில் பயறணிநாதரெனவும் வழங்கும். அம்பிகையின் திருநாமம் நறுமலர்ப்பூங்குழல்நாயகியென்பது, ஸுகந்த குந்தளாம்பிகையென்பது வடமொழி நாமம்.

மலை நாட்டின் கண் திவாகரபுரமென்னும் ஊரிலிருந்த வணிகனொருவன் சோழ நாட்டிலும் பிறநாட்டிலும் மிளகு பொதிகளைப் பலமாடுகளின் மேல் ஏற்றிக் கொணர்ந்து வியா பாரம் செய்து வந்தான். ஒரு சமயம் இவ்வூர் வழியாக விருத்தா சலத்திற்குப் போனான். அப்பொழுது இவ்வூரில் ஒரு சுங்கச் சாவடி இருந்தது..

மிளகிற்கு வரி அதிகமாக வாங்குவது வழக்கம் அதனை அறிந்த வணிகன் சுங்க அதிகாரிகளிடம் 'பொதி மூட்டையி லிருப்பது பயறு' என்று பொய் கூறி, அதற்குரிய சிறிதளவு வரியை மட்டும் கொடுத்துவிட்டுச் சென்றான். அதிகாரிகள் மூட்டையைச் சோதிக்கவில்லை. விருத்தாசலம் சென்று பொதியை அவிழ்க்கும்போது எல்லாம் பயறாக இருந்தன. அதிக விலைபெற்ற மிளகெல்லாம் குறைந்த விலையுள்ள பயறாக மாறி யதனால் வணிகன் வருந்தினான். 'இது நாம் பொய் சொன் னதற்காக இறைவன் செய்த தண்டனைபோலும்' என் றெண்ணிப் பழமலைநாதர் முன்னிலையிலே போய் முறையிட் டான். அப்போது ''கெட்ட இடத்தில் தேட வேண்டும்.''

என்று ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. உடனே அவ்வணிகன் இந்தத் தலத்திற்கு வந்து சிவபெருமானை வழிபட்டுப் பிரார்த்தித் தான். இறைவனருளால் பயறெல்லாம் மீண்டும் மிளகாயின.

மிளகைப் பயறாகச் செய்த காரணம் பற்றிச் சிவபெரு மானுக்குப் பயறணி நாதர் என்னும் திருநாமமும் இவ்வூருக்குப் பயறணீச்சுரம், முற்கபுரி என்னும் திருநாமங்களும் உண்டாயின இத்தலத்தை ஐயரவர்களுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் தாம் இயற்றிய மாயூர புராணத்தில் ''மன்னன் முதல் வானரெல்லாம் வந்துதொழ வரங் கொடுத்து

முன்னவனெக் காலுமமர் முற்கபுரம்''

(திருநாட்டுப்படலம், 58)

என்று பாராட்டியிருக்கிறார்கள்.

தமிழில் ஒரு புராணமும் அம்பிகை விஷயமாக ஒரு மாலை யும் இத்தலத்திற்கு உண்டு.

இங்கே காண்டீப தீர்த்தம் என்ற ஒரு பெரிய தீர்த்தம் இருக்கின்றது. அத்தீர்த்தம் அருச்சுனனுடைய காண்டீபத்தால் உண்டாக்கப் பட்டதென்பர். அருச்சுனனுக்குக் காண்டீபத்தை வளைத்துக் கொடுத்தருளினமையின் இத்தலத்து விநாயகருக்கு வில் வளைத்தபிள்ளையாரென்னும் திருநாமம் உண்டாயிற்று. அதற்கு அறிகுறியாக அம்மூர்த்தியின் திருக்கரத்தில் இப் பொழுதும் ஒரு வில் இருக்கின்றது. காண்டீப தீர்த்தத்தின் தென் கரையில் திருவாவடுதுறை யாதீனத்திற்குரிய ஒரு மடமும் வடகரையில் தருமபுர ஆதீனத்திற்குரிய மடம் ஒன்றும் இருக் கின்றன. இன்னும் பல மடங்கள் இத்தீர்த்தத்தைச் சுற்றி இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது.

இவ்வூரில் விஷ்ணுவாலயம் ஒன்று உண்டு, அதில் பிரசன்ன வேங்கடேசப் பெருமாளென்னும் திருநாமத்துடன் திருமால் எழுந்தருளியிருக்கிறார். பிறநாட்டார் தமிழ் நாட்டுக்கு வந்து போர் புரிந்த 'கலாப' காலத்தில் இங்கே இருந்த ஜமீன்தார் களுடைய பாதுகாவலில் பிற தலங்களிலிருந்து மூர்த்திகள் கொணர்ந்து வைக்கப்பட்டன. அப்போது அம்மூர்த்திகள் எழுந் தருளியிருப்பதற்கு அமைக்கப்பட்ட மண்டபங்கள் இன்னும் அவ் வம்மூர்த்திகளின் பெயராலேயே வழங்கி வருகின்றன.

உத்தரகோசமங்கை

இதற்கு நேர் தெற்கே 4 மைல் வலைவீசுபட்டிணம். இவ் வூரில் பரதவர்கள் மிகுதியாக வுண்டு. குடிக்கு ஒருபணம்

அம்பிகைக்கு இவர்கள் கொடுப்பது வழக்கம். திருக்கல்யாணம் வைகாசி மீ நட்சத்திரத்தில் நடக்கிறது.

திருவுத்தரகோசமங்கை
சீதப்புனல்—சீதள தீர்த்தம்.
சிற்றம்பலம்—திருவாசகம்.
மொய்யார் தடம் பொய்கை—வியாச தீர்த்தம். வேட்ட மண்டபத்தின் பக்கம்.
பங்கயப்பூம்புனல்—பிரம தீர்த்தம்.
பொன்னாசி—திருவாசகம்.

1. கொடி மங்கையுள்ளுறை கோயில்.
2. நடராஜ க்ஷேத்திரம். திருப்பெண்ணூசல். சுனைநீர். கும்மாய்க் கரையிலுள்ளது. ஒருருருவப் பூம்புனல் - தென்கிழக்கி லுள்ளது. மாதாடு பாகத்தன் ஊசல் மங்களேசுவரராலயத்தி லுள்ள நடராசருக்கு ஆதிரையில் அர்த்த நாரீசுவரவேடம்.

வாத்துல மானவாசிகை அக்கினி தீர்த்தம். இதில் ஆனந்த சாகரம் ஆதிகங்கை என்று இரண்டும் கலந்துள்ளன.

உத்தரகோச மங்கைப் புராணம்

வேத மித்திரன் சுவர்க்கமடைந்த அத்தியாயம்

கேரள தேசத்திற் பிருகு குலத்துதித்த வேதமித்திரன் தகுதியல்லாதவனுக்கு வேள்வி செய்து வைத்ததனால் பிரம ராக்கதனாய் விந்தமசைச் சுரத்துத் திரிந்தான். அவன் காசிக் காவடி கொண்டு வரும் இருவேதியரையுண்ண வந்தபொழுது அவர்கள் சொன்ன மங்களநாதர் சாதஞ் செவிப்கவுடன் தேவ வுருப்பெற்று அவர்களை வணங்கினான் அவர்கள் அதிசயித்துக் கேட்கத் தன் வரலாறுகூறி வியாக்கிரபுரேச சரிதங் கேட்டதனால் வீடடைந்தேனென்று அங்கி தீர்த்த ஸ்நாநம் மங்கள நாயக தரிசனம், வியாக்கிரபுரவாசம் முதலிய விசேடங்களைச் சொல்லி சுவர்க்கம்புக்கான் .இதைக்கண்ட அவ்விரு முனிவரும் வியாக்கிர புரியடைந்து அங்கி தீர்த்த, பிரம தீர்த்த சதாசீதள தீர்த்தங் களிற் படிந்து அங்குள்ளாருக்கு வேதமித்திர சரிதமுங் கூறி முத்திங்களாங் குறைந்து பின் பிச்சையின் வழிச் சென்றார்கள். அத்தலம் மேன்மை கூறற்கரிது. இந்திரன் மார்க்கண்டன், பிருங்கி முதலியோர் சிவார்ச்சனை புரிந்தார்கள்.

கந்தருவ கன்னியர் பிரம சாபந் தீர்ந்த அத்தியாயம்.

சாங்கல தேயத்துச் சோணபத்திரை நதித் தென்கரையுறை யுஞ் சுமர்ந்து மகருஷி மரபிலுதித்த யோகமித்திரன் மிக்க நிய

மத்துடன் யோகாப்பியாசஞ் செய்யும் பொழுதில் அதிசுந்தர முடைய இரு கந்தருவ கன்னியர் நுமக்கு யாம் துணைவியரென்று தழுவினார்கள். அம்முனி அப்பொழுதும் விகாரமின்றி இவர் களை அலகைகளாகச் சபித்தான். உடனே பல சொல்வி அவர்கள் மணம் புரியும்படி வேண்ட, வியாக்கிரபுரத்துச் சென் மின் சின்னாளில் நும் சாபத்தையும், என் பிரமசரியத்தையும் முடித்து மணப்பேன் என்றான். கன்னியர் அவ்வாறு செய்ய முனியுமாங்கடைந்து பிரம தீர்த்த நீரைப் பஞ்சாக்ஷராபி மந்திரத் தோடிறைத்துப் பேயுரு நீக்கி அவர்களை மணந்து சிவாலயாக்கி னேயாச்சிரமத்து வதிந்தார். பின்பம்முனி மனைவியிருவரும் சிவபெருமானை எமது நுரிதமெல்லாம் போக்கியதால் நுரிதாப ஹநாமம் பூணவெனப் பூண்டார் அம்பிகையை மலராவருச்சித்து வேண்டப்புட்ப தனிப்பெயர் பூண்டாள். வடிக்கட்டிய அங்கி தீர்த்த நீராற் பெருமானை யாட்டல் முதலியன பெரும்பேறு தரும்.

அரித்துவசன் சாபம் சாபந் தீர்ந்த அத்தியாயம்.

மகத நாட்டிற் சந்திரகுலத்துதித்த அரித்நுவசமகாராசன் தன் மனைவி சுமதிபாலுள்ள அதிமோகத்தால் தன் காம்பிலி நகரடைந்த பதிதுயருற்ற துர்வாசமுனிவரை விசாரியாத குற்றத் தாற் குமரகண்டனோயுறச் சாபமேற்றுப் பின்பு. அப்பப்புரு குமாரரைப் பணிந்து வேண்ட அவர் பிராமணசாபம் வீண்டு போகாது. ஆயினும் பிரதிகோசபுர (உத்தரகோச நகர்)த்தில் நிருத்தாம்பரேசர்க்கே திருமங்களேச்சுரற் கீசானமுமாமிடத் துள்ள உதவக தீர்த்தத்திற் கிர்த்திகாசோம வாரத்து விதிப்படி மூழ்குவோர் பிரம சாபத்தினின்று நீங்குவார். அத்தடத்து நளன் மூழ்கி நகுஷனாலுற்ற புன்மை தீர்த்தான். நீ அத்தடத்தின் மூழ்கென்று இமயமலை அடைந்தார். அரித்துவசன் அவர் சொன்னவாறே அவ்வங்கி தீர்த்த நீராடி பூண்முலையாளையு மங்களேசனையு ந்துதித்துச் சாபம் நீங்கி அரசாண்டு அந்தியத் தில் வீடு பெற்றான். அவனமைத்த அரித்துவசகூபம் மங்களேச் சுரற்கு வாயுதிக்கில் மூன்று (3) விற்கிடையிலும் நடராசருக்கு வலப்பால் ஐந்து(5) விற்கிடையிலுமுள்ளது. அவன் கேட்டுக் கொண்டபடி அவன் சொன்ன துதியால் துதிப்பவர்க்கும் வீடருளு வார்.

6. நளன் கலிவிமோசன அத்தியாயம்

வள்ளலுமிராசர்ஷி வரனுமான நளசக்கிரவர்த்தி வேட்டை யாடி வருந்தி நன்பகலிலோர் தடாகநீரருந்தி மரழிநிழலிற்

றூங்குகால் தன்னை அராத் தீண்ட மெய்கருகக் கனாக்கண்டு வெருவி எழுந்தான். அமைச்சர் முதலானோர் நேர்ந்தது கேட்டுச் சாந்தி புரியாதொழியிற் கனாப்பலிக்கு மென்று கனாக் கால பலன் சொல்லவும் ஊழ்வலியாற் செய்யானாய்ப் பின் பரசிழந்து காடடைந்து மனைவியைப் பிரிந்து அகத்திய சாபத் தாற் பாம்பான நகுடனாற்றீண்டப் பெற்றுடல் கருகி இருது பன்னன் வாகுகனாய்ப் பின்பு மனைவி அரசு முதலிய அடைந்து மனைவி மக்கள் அமைச்சர் முதலோருடன் காசி முதலிய தல யாத்திரை செய்து இலந்தை வனத்தடைந்து பாதாள நாதனை யும் நாதவதியையுந் தொழுது பரிமேத முடிக்கச் சந்நிதிக்கு மூவிற்கிடை கிழக்கில் 1000 கால் மந்டபங் கட்டுவித்துத் தொடங்கி அடுத்த வருடம் வசந்த காலத்தில் முடித்து அங்கி தீர்த்தத்தவ பிருது நீராடி வைகாசி மீ புனர் பூசத்தில் விடைக் கொடியேற்றி முறைப்படி விழாமுற்றுவித்துத் தீமையாகவுந் தீர்ந்துதன்னுடு நண்ணிப் பல்லாண்டரசாண்டு சிவகதி பெற்றான். அவன் செய்த தேரின் பெயர் சருப்பதோபத்திரம்.

7. மங்கலபுரி சதுர்வேதபுரியானது முதலான பலசரிதை யுரைத்த அத்தியாயம்:

மங்கலபுரி வியாதன் முதலிய முனிவருறைவதாற் சதுர் வேதபுரி என்னும் பெயர் பெற்றது.

காளிவாதாடிய குற்றந்நீர மங்களேச்சுரர் தென்பாலிரு குரோசத்திலிலிங்கந் தாபித்து அக்காளீசன் பால் வைகுவான்.

திருதத்துப் பிரமபுரம், திரேதையில் வதரிவனம் துவா பரத்து வியாக்கிரபுரம், கலியில் மங்கலபுரம்—என்பர்.

சூமாகாலத்துச் சலந்தரன் தவளையாயலரி மூலத்துறைய அதனாற்பூத்த பூ சிவார்ச்சனைக்குதவியதால் அவனுக்கு அரசு கொடுப்ப அவன் விண்டு முதலிய எல்லாத் தேவருக்குந் தீங்கிழைத் கிழைத்ததாற் சக்கரத்தைத் திருமாலிடங் கொடுத்து அவனை வீட்ட அவ்வாழி மீட்டுஞ் சிவபிரானிடம் சேர அவரை அருச் சித்து மாயனவ வாழியைப் பெற்றான்.

தாழை பொய்க்கரி யுரைத்த தோடத்தை மங்கலபுரியிற் சிவபெருமானைப் பூசித்துத் தீர்த்துக் கொண்டது.

வைகாசி விசாகத்திற் கலப்பாவபிடேகிப் போருக்கு அர்த்த நாரீச்சுர தரிசனங் கொடுப்பார் எச்சித்தியுமுண்டாம். மார் கண்டர் முதலானோரிவ்வாறு செய்து சீவன் முத்தரானார்கள்.

பார்ப்பதி தவம் புரிந்த அத்தியாயம்: 8

மங்கள நாதர் மந்தோதரி பொருட்டிலங்கைக்கேகுங்கால் ஆயிரம் இருடிகள் அவர் பாற்போதம் பெற்று நிருதி கோணத் திருந்தார்கள். அவர்கள்பால் திருமுறையைக் கொடுத்துத் தான் செல்வதைச் சொல்ல இராக்கதருறையிடஞ் சேறல் நன்றோ என்றார்கள். அதற்குப் பரமன் என்னை இராவணன் தொடுங் கால் இத்தடத்து அழற் பிழப்பு திக்குமென்று கூறி இலங்கை சென்று மணந்திருந்தார். அப்பொழுது அங்கிராவணன் வரக் குழந்தையாயினார். இராவணன் குழந்தையேதென ஓர்தவமாது தவமா தந்து அகன்றாள் என்றாள். அவனக் குழந்தையைத் தன் மடிவைத்துத் தொடும்பொழுது இத்தடத்துத் தீயுற 999 இருடிகளும் அதில் வீழ்ந்துவிட்டார் மாணிக்கவாசகர் மட்டும் முறையை நிலத்திடவொண்ணாதென்று கையிலேயே வைத்து நெடுநாளக்குளக்கரையுறைந்தார். மண்டோதரியிலிடத் திருந்துந் தவவனிதையாய்ப் பெருமானைக் கொண்டு போனாள்? தடத்து வீழ்ந்த 999 பேர்களுக்கும் மங்களேசுரர்க்குத் தர பாகத்திற் காட்சி கொடுத்தமையாற் காட்சி கொடுத்த நாயக னென்றும், சுந்தர நாயகியென்றுக் பெயராயிற்று. அவர்களோடு தானுமோரிலங்கமாய் சகசிரலிங்கமாயிவ் விங்கங்களைத் தரிசிப் போர்க்குஞ் சாரூப்பியம் அளிப்போமென்று சொல்லிவிட்டு மாணிக்க வாசகரை நோக்கி யெம் தலங்களை யடைந்து செய் யுளாற் புகழ்பின்பு ஒருபதியின் மும்மலநீக்கி உனக்கு வீடருள்ளே மென்று அந்தர்தானம் ஆயினார். அது முதலது அக்கினி தீர்த்தமாயிற்று.

இந்திரன் நடராஜர் சன்னதிக்குக் கீழ்பாலோரிலிங்கந் தாபித்துப் பூசித்து கோதம சாபந் தீர்ந்தான். விமானமின்னு முளது.

பிரமன் இராசுந்தர கற்பத்து இராசததோடந் தீர அக்கினி தீர்த்த மேல்கரையில் மார்சுழித் திருவாதிரையிலம்பிகைக் குஞ்சல் விழா நடத்தி விரதமிருந்து ஓர் குளமுந் தொட்டான். அது கோயிற்குக் கிழக்கு ஒருவிற்கிடையிற் பதுமதீர்த்தம் என விளங்கும்.

கௌரி, தக்கன் மகளாய் சதிநாமம் பூண்டு தந்தை மகத் திகழ இமவான் மகளாகப் பெருமானவளை மணந்து பர்த்திரு வாக்கியத்தை மறுத்தமாசுதீர பூமியினமையருச்சிக்க இலந்தை வனத்தென அவளாங்குவந்து ஓரிலந்தை வளர்ந்து கோயிலுக் கீசானத்திலொரு குளமுந் தொட்டு அதன் கீழ்கரையிற் பன்ன

சாலையமைத்திருந்து வாயு பக்ஷணி யர்ச்சித்தாள் அப்பெருமான் சத்தி நாமம் பூண்முலை யாளென்பது.

முதல் யுகத்து இலந்தை. திரேதையிற் குருந்து துவாபரத்துச் சண்பகம். கலியில் மகிழ் தவ விருக்ஷங்களாம். முதலிற் பிரமனும் பின் பார்வதியும் பின் இலக்குமியும் பின்பு இருடிகளும் பூசித்தார்கள்.

அவ்வூரிலொருவருக்குச் சாதமளிப்பதனாலுறுபயன் அயலூரில் அறுசுவை யூணிடலாலுமாகாது. அவ்வூரிலதிக சுந்தரனென்னுமொரு சாகாசனன் பாடிகளென்னு மொருவனுக்குத் தன்னுணவு பகுத்திய அவன் பசி தீர்ந்து மகிழ்ந்தான். உடனே சிவபெருமானும் யாவையு மகிழ்ந்தன. ஆதலால் அவ்வூரில் அறுசுவையூண் அளிப்போர். பயன் சொல்ல முடியாது. பின்னும் சின்னாள் ஆங்குறைந்து சிவஞானபோதத்தைப் பெற்று சாயுச்சியம் பெற்றான்.

9. மணம் புரிந்த அத்தியாயம்

மங்கலபுரியின் தெற்கு ஐந்து குரோசத்தளவில் வேத வியாசாச்சிரம முள்ளது. அந்நகருக்கு அதுவே பெர். அதற்கு வடக்குப் புரூரவனாற் கண்டது இராசமாணிக்க சதுர்வேதபுரம். ஆங்குள்ள ஓரந்தணன் மங்களபுரியிற் கௌமார தீர்த்தத்தாடி சிவபிரானைக் குறித்துக் கடுந் தவம் புரிய பிரசந்நராய் முப்புதல் வரையும் ஒரு பெண்ணையும் பெறவரமீந்தார். அவ்வாறாக அப்பெண்ணுக்குப் பொன்னேறு பூண்முலை யெனப் பெயரிட்டு வளக்குங்காற் பெருமான் பிரமசாரியாய் வந்து வேட்டு ஊஞ்சலாடும் பொழுது மறைந்தருளினான். பின் ஈன்றோர் வருந்த விடைமேற்றோன்றி முன்நீவிர் செய்தவத்தால் மணம் புரிந்தேன் என்றார். அவர் பெயர் கலியாணேச்சுரன். கலியாண சுந்தரி கல்யாணபுரம் என்றாயின. பின் சேடஹோம மொருகுரோசந் தெற்குள்ள இடத்தில் முடித்தார். அவ்வூர் தீயனூர் அக்கினீச் சுரமெனப் பெயர் பெற்றது. இக்கனியைச் சிவபிரானுக்கீந்தால் மறையோர் எவரினும் சிறந்தார்.

பிருகு சாபந் தீர்ந்த அத்தியாயம்

அகத்தியமுனிவர் வருணனை நோக்கி துர்வாசராசனின் மகன் பிருகுவுக்கு நேர்ந்த சாபத்தைப் போக்க மங்கள நாத தரிசனம் அக்கினி தீர்த்த ஸ்நாநமுபாயமென்று சொல்ல அவ்வாறே வருணன் மகனொடு வந்து செய்ய மகனுற்றிருந்த யானை வடிவு நீங்கி மங்கள நாதரைத் துதித்தான். அவன் வேண்டிய

வரங்களைக் கொடுத்து பிரான் மறைந்தருளினான். பின் வருணன் பிருகுவை அங்கிருத்தித் தன்னிடஞ் சென்றான். அங்கு வருண தீர்த்தம் என்று ஒன்றுண்டு. அதன் மேல் கரையிலிங்க பூசையைப் பிருகு செய்து வருங்கால மார்க்கண்டர் விதிப்படி பிரதக்ஷணஞ் செய்து வில்வமரத்தேறித் தளமெடுத்திற் தலத்தர்ச்சித்தல் விசேடமென்று விசேட காலங்களையுங் கூட அவ்வாறு செய்து பெருமானருளை மிகப் பெற்றுத் தாதையொடுந் தன்னிடஞ் சேர்ந்தான்.

வலைவீசுமத்தியாயம்

சிவபெருமான் பார்வதிக்குப தேசித்த பொழுது முருகவேள் வண்டுருவாய் அம்மை கூந்தலுற்றம் மனுவை யுணர்ந்தான். அதனைப் பெருமானறிந்து மகனை மீனாகவும் அம்மையைக் கடலிற் பெண்ணாகவும் சபித்தான். பின் பல்வாறாகக் கடலில் வலைவீசிய வலைஞர் கரையிலிப் பெண்ணைக் கண்டு நெய்தல் நிலத்தலைவன் பாலளிக்க அவன் வளர்த்து வந்தான். முருகன் சுறாவாய்க் கடலிற் செருக்கித் திரிதலால் ஒருவகை மரக்கலமும் போக்கு வரவற்றன. அப்பொழுது விக்கிரம நகரிலுள்ள அம்புராசி காவலன் இச்சுறவைப் பிடிப்பாருக்கு என்மகளைக் கொடுப்பேன் என்று மீனறத்திற் சூளிடப் பெருமான் சைவ முதனெடுங் கயிற்றால் மயிற்கண் வலைதாங்கி தவசியாய் வந்து அம்மீனைப் பிடித்து மகளைக் கேட்க. அப்பெண்ணுந் தாயும் இப்பிச்சைக் காரன் மாப்பிள்ளையாகப் பொருந்தாராய் நஞ்சயின்றுயிர் துறப்ப, நீ சொன்ன மொழியை நிறைவேற்றென்று பெருமான் சொல்ல இறந்தமகளைக் கொடுத்தான். அவளைப் பெருமான் கைப்பற்றியவுடன் பிழைத்தாள். பின் மாமன் துதிப்ப மாமியைப் பிழைப்பித்தான். அவ்வூரந்தணர்கள் மிகச் சிறந்தோர்கள். எருக்கட்டாஞ்சேரி: (எழுப்பிவிட்டாஞ்சேரி)

இங்குள்ள சிவபெருமானுக்கு எதிர் காவேச்வரர் என்றும், அம்பிகைக்கு அபிராமி என்றும் பெயர். திருக்கடவூருக்கு நேர் மேற்கில் யானையூர் என்று ஓரூர் இருக்கிறது. யானைக்குளம் என்று சந்நிதியில் ஒருகுளம் இருக்கிறது. அவ்வூரிலுள்ளவர்கள் யானை என்று பலர் பெயர் வைத்துக் கொள்கிறார்கள். திருவாசல் என்று வழங்குவது வாசற்படியில்லாதது.

ஔவையார் கோயில்: கோட்டாற்றருகில் உள்ளதோர் ஊர். இங்கு ஔவையாருக்குக் கோயில் இருக்கிறது.

கங்கை கொண்ட சோழபுரம்: இத்தலத்திலுள்ள சிவாலயம் இராஜேந்திரனென்னும் சோழ சக்கரவர்த்தியால் அமைக்கப்

பெற்றது. இந்த ஆலயத்தின் பெயர். கங்கை கொண்ட சோழீச்சுரமென்பது. கோயில் மிகப்பெரியது. இந்தப் பெரிய கோவிலுக்கு ஏற்றபடி சிவலிங்கப் பெருமானும் மிகப் பெரிய திருவுருவத்தை உடையவர். இங்கே சாரத்தில் ஏறித்தான். அபிஷேகம் முதலியன செய்வார்கள். அரிய சிற்பத்திறன் அமைந்த இவ்வாலயம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. வட நாட்டுக்குச் சென்று வெற்றி கொண்ட இராஜேந்திர சோழன் வடநாட்டு அரசர்கள் தலையில் கங்கா ஜலத்தை ஏற்றிக் கொணர்ந்தானென்றும் அதனால் அவனுக்குக் கங்கை கொண்ட சோழனென்னும் சிறப்புப் பெயர் வந்ததென்றும் சொல்வர். தனது வடநாட்டு வெற்றிக்குப்பின் அச்சக்கரவர்த்தி கங்கை கொண்ட சோழபுரத்தை நிருமாணம் செய்து இங்கே சிவா லயத்தையும் அரண்மனையையும் அமைத்தான். பழைய காலத்தில் சோழ ராஜதானியாக இந்நகரம் இப்போது சிற்றூராக இருக்கிறது. ஆலயம் பழைய நிலை மாறிப் பல இடங்களில் குலைந்து காணப்படுகின்றது. இந்த ஆலயத்தில் சிங்கக் கிணறு என்ற ஒரு தீர்த்தம் உண்டு. சிங்கத்தின் வாய்க் குள் புகுந்து செல்வதுபோல் இதன் படிகள் அமைந்துள்ளன. வடநாட்டு அரசர்களால் எடுப்பித்து வந்த கங்காஜலத்தை இந்தக் கிணற்றில் விடும்படி அரசன் கட்டளையிட்டான். அதனால் இதனைக் கங்கையென்றே கூறுவார்கள். பிற்காலத்தில் கங்கை இதில் ஆவிர்ப்பவித்ததாக ஓர் ஐதிஹ்யம் ஏற்பட்டு விட்டது. இந்த ஆலயத்தின் தேவகோஷ்டத்தைச் சூழ்ந்து சுவரில் அமைந்துள்ளன சிவபெருமானுடைய அறுபத்துநான்கு மூர்த்தங் கள். தேவ கோஷ்டத்தின் முன்பு தெற்கும் வடக்குமுள்ள வாயில்களில் கீழ்ப்பக்கத்துச் சுவரில் மேற்கு முகமாக மிகப் பெரியனவாகவும் அழகுடையனவாகவும் லக்ஷ்மி வடிவமும் ஸரஸ்வதி வடிவமும் உள்ளன.

கடையம்: இவ்வூர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது. இங்குள்ள அம்பிகையின் பெயர் கல்யாணி. இவ்வம்பிகை விஷய மாக ஒரு பிள்ளைத்தமிழ் உண்டு. அந்நூல் அச்சிடப் பட்டுள்ளது.

கந்தங்குடி

இது பேரளத்துக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது. இதில் தேருக்கு ஸ்வாமி வந்தால் உடனே தேனீக்கள் தேருக்கு வருவது பிரத்தியக்ஷம்.

கரிவலம் வந்த நல்லூர்: தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கும் மாணாக்கர்களுக்கு இந்த ஸ்தலத்தைப் பற்றித் தெரியாமலிராது.

வரதுங்க ராமபாண்டியர் இயற்றிய கருவைப் பதிற்றுப்பத்தந் தாதி, கருவைக் கலித்துறையந்தாதி, வெண்பா என்ற மூன்று பிரபந்தங்களும் இத்தலத்தைப் பற்றியனவேயாகும். கரிவலம் வந்த நல்லூர் என்பதன் மரூஉவே கருவை என்பது. இத்தலத்தில் ஸ்வாமி பால்வண்ணநாதருக்குப் பழையகளாச்செடி நிழல் அளித்து நிற்கிறது.

கருப்பூர்

அபிராமி—சுந்தரேசுரர்.

கலைசை: இத்தலம் கலைசை, கலைசாபுரி, கோவிந்த புரம் என்னும் பெயர்களால் வழங்கப்பெறும். இங்கே பண்டைக் காலத்தில் பசுக்கொட்டில்கள் மிகுதியாக இருந்தனவென்றும் அதனால் தொட்டிக்கலை என்னும் பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். தொட்டி-பசுத்தொழுவத்திலுள்ள கழுநீர்த்தொட்டி. இங்கே இருந்த பழைய கோயிலானது கேசவ முதலியார், வேதா சல முதலியார் என்பவர்களுடைய முன்னோர்களால் மிகப் பெரி தாக அமைத்து நித்திய நைமித்திகளுங்கள் சிறப்புறை நடத்தப் பெற்று வரலாயின. இக்காலத்தும் அவர்களுடைய பரம்பரை யினரது மேற்பார்வையில் இக்கோயில் இருந்து வருகின்றது.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகர் திருநாமம் செங்கழுநீர் விநாயகர் என்பது. சிவபிரான் திருநாமம் சிதம்பரேசர் என்பது. அம்பிகையின் திருநாமம் சிவகாமியம்மை என்பது. இங்கே தியாகேசப்பெருமான் சந்நிதியும் உண்டு. இத்தலத்தில் பிரம தேவர் சிவபெருமானை வழிபட்டு அமிர்த கலசத்தைப் பெற்ற னர். அதனால் அப்பெருமானுக்குக் கலசத் தியாகரென்றும் திருநாமம் வழங்கலாயிற்று. சிவபெருமான் ஒருகால் இங்கே நடனம் செய்தருளியதாக ஓர் ஐதீகம் உண்டு. சிவகங்கை என் னும் தீர்த்தம் ஒன்றும் திருவொற்றியூரிலுள்ளதைப்போல நந்தி யோடை என்னும் நீர்நிலை ஒன்றும் இங்கே உள்ளன. திருவொற் றியூரில் தியாகேசப் பெருமானுக்கு நடந்துவரும் விசேடங்களைப் போன்ற சிறப்புக்கள் இங்குள்ள மூர்த்திக்கும் நடைபெற்றன. வசந்தோற்சவம். சிறப்பாக நடைபெற்று வந்தது. இந்தத்தல சம்பந்தமான செய்திகள் கர்ணபரம்பரையில் வந்தனவாகத் தெரி கின்றனவேயன்றி வேறு வகையாக அறியப்படவில்லை.

காழூர்: திருவோத்தூருக்குக் கீழ்ப்பக்கம் உள்ளது. கருணா கரக்கவிராயர் பிறப்பிடம்.

தலக்குறிப்புகள்

குசப்பேட்டை: திருவேட்களத்திற்கும் சிவபுரிக்கும் இடையில் இங்கே திருநீலகண்ட நாயனார் அவதரித்தார். அவர் அவதரித்த இடம் இப்பொழுது மடமாக இருக்கிறது.

குடுமிமாமலை: சிகாக்ரீசுவரர் அம்பிகை: அகிலாண்டேச்வரி. ஜயந்திவனேசுவரர். விருக்ஷம்: ஜயந்தம் கிழக்கு ஸ்வாமி. அம்பாள் இடப்பாகம் ஸகதீர்த்தம்- கொக்கூருணி, இந்திர தீர்த்தம்—நெல்லிக்குளம். மலைகுடைந்த நாதர். மலையுச்சியில் முருகன் புதுக்கோட்டை

குழுமூர்: இங்கே வராகவதார மூர்த்தி. அவித்த நெல் முளைக்கும் என்பர்.

''சென்ற நாள் செல்லாத''
(பேயாழ்வார் அருளிச் செய்த மூன்றாந்திருவந்தாதி. செய். 17)

குன்றஞ்ரிற்கரை: குன்றஞ்ரூர் இடும்பாவனத்திற்கு அருகில்ள்ளது. கரையும் இப்பொழுது காணப்படுகின்றது.

குன்னலூர்: இடும்பாவனத்துக்கு அருகில் சனிமூலையில் குன்னலூர் என்று ஓரூர் இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது.

கோபர்வதம்

இது கோபுராபுரமென வடமொழியில் வழங்கும்.
ஸ்வாமி:
அம்:
தீர்த்தம்: ஏஹஞான சக்தி தீர்த்தம்: (சூத). இத்தலம் சிவானந்த யோகிகளால் உபசரிக்கப் பெற்றது. சிதம்பரபுராணம், விருத்தாசலபுராணம் முதலியவற்றில் இதன் புகழ் கூறப்பெற்றுள்ளது.

சசி வர்ணன் முத்தி பெற்ற தலம். தத்துவராயரால் நிரம்ப பாராட்டப்படும். சித்தீச்சரம்.

கோபருப்பதம்: ஒரு தலம். பசுக்களாற் பூசிக்கப் பெற்றமையின் இத்தலம் இப்பெயர் பெற்றது.

சோமநாதம்: ஒரு சிவஸ்தலம்; சந்திரன் பூசித்தது.

கோபிநாதப் பெருமாள் கோயில்: இப்பொழுது கோணப் பெருமாள் கோயிலென்று வழங்கும்; தக்ஷிணத்துவாரகையென்

றும் சொல்லப்படும். பழையாறையில் அடங்கியிருக்கும் பட்டீச் சுரம் முதலிய பல தலங்களுள் ஒன்றாகும்.

கோயம்பேடு: கோயை என்றும் வழங்கும்.

சுவாமி பெயர்: செல்வபுரீசுவரர். அம்பிகை: தர்மசம் வர்த்தனி. தீர்த்தம்: க்ஷீரநதி. சந்நிதி வடக்குப் பார்த்தது. அம்மன் வலப்புறம்.

பெருமாள்: வைகுண்டப் பெருமாள். குசலவர்கள்; வன் மிகர், சீதை இவர்கள் படிமங்கள் உள்ளன. வான்மீகர் சிரமம் என்றும் பெயருண்டு. திருப்புகழ் உண்டு. கோசைநகர் எனவும் வழங்கும்.

கோயிலூர்: கோயிலூரென்பது சமிவனம், கழனியம்பதி, வன்னிவனம், சாலிவாடி, ஸ்ரீ வல்லபமெனவும் வழங்கும். இத் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமங்கள் திரி புவனேசர், கொற்றவாளீசர், கழனிநாதரென்பன. அம்பிகை யின் திருநாமங்கள் திரிபுவனேசை, நெல்லை நாயகி யென்பன. தலவிருட்சம் வன்னி.

சாத்தனூர்: திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள தோரூர், இங்கே மிகப் பிரசித்தி பெற்ற ஐயனார் கோயில் ஒன்றுண்டு; இதில் உள்ள அந்தணர்களில் ஆயிரவர் திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணியீசருக்குக் கைங்கரியம் செய்த வந்தனரென்று சேந்தனார் திருவிசைப்பாவால் தெரிகிறது; சாந்தையெனவும் வழங்கும்; பெரியபுராணத்திலும் இவ்வூர் கூறப் பெற்றுள்ளது.

சாத்தனூர்

பூந்தோட்டத்துக்கு 1 மைல் மேற்கே ஹரி ஹரன் கூடல் ஒரு அக்கிர கூடம். சாஸ்தா பூஜித்த தலம்.

சுவாமி: நித்திய வினோதர், கதலிவனேசுவரர்.

அம்பிகை: தாடிம குஹ்ய மங்கை.

சித்தக்காடு: மாயூரத்திற்கு மேற்கேயுள்ள தோரூர்; ஸித்த வனமென வழங்கும்; பல ஸித்தர்கள் இருந்தமையால் இப்பெயர் பெற்றதென்பர்.

சின்ன ஆவுடையார் கோயில்: சின்ன ஆஹுடையார்கோயில் என்பது இப்படி வழங்குகின்றது. இவ்வூர் ராஜாமடத்துக்கு

அருகில் உள்ளது. திருப்பெருந்துறை ஐதிஹ்யங்கள் இங்கும் உள்ளன.

சின்னமனூர்: இவ்வூரிற் கிடைத்த தாமிரசாசனம் மிகப் பிரஸித்தி பெற்றது.

இங்கே சுருளிநதி என்ற ஒரு ஆறு உண்டு. அதன் பெயர் சுரபி ஆறு என்று கூறுகின்றனர். இதற்கு வடமொழியில் ஸ்தல புராணம் இருக்கிறது. இங்குள்ள கோயில் ராஜசிம்ம பாண்டியனால் கட்டுவிக்கப்பட்டதென்பர்.

சூரியமூலை: இப்போது சூரிய மலையென்று வழங்குகிறது. கஞ்சனூருக்கு ஈசானிய மூலையில் இவ்வூர் இருக்கின்றது. இதனைச் சூரிய கோடி யென்று வடமொழியில் வழங்குவர். இவ்வூர்ச் சிவாலயத்திலுள்ள சிவபெருமானுக்குச் சூரிய கோடீ சுவரரென்பது திருநாமம். சூரிய மூலைக்கு வடபால் பழவாறு என்ற நதி ஓடுகிறது. காவிரியிலிருந்து வயல்களுக்குப் பாய்ந்த கழிவு நீரோடை இது. இது முதலில் ஓட்டை வாய்க்கா லென்னும் பெயரோடு வருகிறது.

சூரியனார் கோயில்: ஆடுதுறைக்கு அருகில் உள்ளது; நவக்கிரக ஸ்தலம்; இங்கே உள்ள சிவாக்கிரயோகிகள் மடம் ஸ்கந்தபரம்பரையென்று சொல்லப்படும்.

சூரை: பாண்டி வளநாட்டில், கிழக்கே வீரவனத்தையும் தெற்கே கோயிலூரையும், மேற்கே மயூரகிரியையும், வடக்கே திருமெய்யத்தையும் ஐவைந்து நாழிகை வழித்தூரத்தில் எல்லை களாகப் பெற்று இவற்றினிடையே விளங்குவதொரு புராதன சிவத்தலம்; இது சூரைக்குடி, சூரை, விசயாலயபுரம் எனவும் வழங்கும்.

ஸ்தல விநாயகமூர்த்திகள்: இருவர்: (1) காட்சி விநாயகர், (2) சங்கர விநாயகர்.

சுவாமியின் திருநாமங்கள்: சங்கரநாதர், சுந்தரேசர் என் பன. அம்பிகையின் திருநாமங்கள்: பார்வதி, மீனாக்ஷி, கயற் கண்ணியம்மை என்பன.

தீர்த்தங்கள் மூன்று: சூரிய தீர்த்தம், பொற்றாமரை, விஷ்ணு தீர்த்தம்.

தலவிருட்சம் இரண்டு: (1) இலந்தை (2) கடம்பு.

வழிபட்டுப் பேறு பெற்றோர்கள், சூரியன், சூரன், பொன்னான விசயாலயதேவன். சங்கப்புலவர்கள், திருமால் என்பவர்கள். இதைச் சார்ந்துள்ள சுப்பிரமணிய தலங்கள் நான்கு: (1) திருவேலன்குடி, (2) பலவானவர்குடி (3) ஆலத்திப் பட்டி (4) மாலையிட்டான்.

செங்குன்றூர்: தென்பாண்டி நாட்டில் உள்ளதோரூர். செங்கனூர் என்று இப்பொழுது வழங்குகின்றது. இங்கே பகவதி கோயில் இருக்கிறது. திருவிதாங்கூரில் ஒரு தாலுகா.

த்ரைலோக்கி: இங்கே இரண்டு சிவாலயங்களும் ஒரு விஷ்ணு வாலயமும் உள்ளன. ஒரு சிவாலயம் நல்ல நிலைமையிலிருக் கிறது. அங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம் சுந்தரேசுவரர் என்பது. அம்பிகை: அகிலாண்டேசுவரி யென வழங்குகிறது; சுந்தராம்பாள் என்று புராணம் கூறுகின்றது. தல்விருக்ஷம் சரக்கொன்றை.

இதற்கு ஒரு புராணம் எட்டு அத்தியாயங்கள் உடையதாக இருக்கின்றது என்று தெரிகிறது. ஐந்து அத்தியாயங்கள் சிவஸ் தலத்தைப் பற்றியும் மூன்று அத்தியாயங்கள் விஷ்ணு ஸ்தலத்தைப் பற்றியும் உள்ளன என்று தெரிகிறது. இங்கே குரு பூசித்துச் சிவபெருமான் இடபாரூடராகக் காட்சி கொடுத்தார். லக்ஷ்மி பூசித்துத் திருமாலோடு சேரப் பெற்றனள். இக்கோயிலிலுள்ள நடராஜமூர்த்தி மிக்க சுந்தரமாக இருக்கிறார். அவருக்கு வலப் பால் கல்யாண சுந்தர மூர்த்தியும் தனியாக எழுந்தருளியிருக் கின்றனர். இவ்விரு மூர்த்தியும் சிலா விக்கிரகங்கள். இட பவாகனருக்கருகில் குரு இருக்கிறார். இடபவாகனருக்குப் பின் பக்கம் ஒரு சிவலிங்கம் போன்ற அமைப்பு இருக்கிறது. சிவ லிங்கத்திலிருந்து ரிஷபவாகனராக ஆவிர்ப்பவித்துக் காட்சியளித்த ஐதிஹ்யத்தைக் காட்டுவதாக இருக்கலாம்.

இக்கோயிலில் இவ்வூரிலுள்ள கைலாசநாதர் கோயிலிலிருந்த அம்பிகையின் பழுதுபட்ட விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கிறது.

இக்கோயிலில் சில சிலாசாசனங்கள் உள்ளன. அவற்றால் இவ்வூர் விருதராஜபயங்கர சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரது என்று தெரிகிறது. ''பூமருவிய பொழிலேழும்'' என்ற மெய்க் கீர்த்தியையுடைய சாசனம் ஒன்று இருக்கிறது. இத்தலத்துச் சுவாமி திருப்பரசுராமீசுவர முடையார் எனச் சாசனத்தில் வழங்கப்படுகிறார்.

இங்கே கிழக்கேயுள்ள பழைய கோயில் மிகச் சிறந்த கோலத்தோடு இருக்கிறது. இராசேந்திர சோழதேவனுடைய சாசனங்கள் இங்கே இருக்கின்றன. அவற்றில் இவ்வூர் திரை லோக்கிய மகாதேவிச் சதுர்வேதி மங்கலமென்று கூறப்படுகிறது. ஸ்ரீ கைலாயமுடையார் என இக்கோயில் சிவபெருமான் வழங்கப் படுகிறார்.

இவ்வூர்த் திருமால் கோயிலில் திருமால் பள்ளிகொண்ட திருக்கோலத்தோடு சாந்தாகாரமூர்த்தியாக எழுந்தருளியிருக் கிறார். கூரீராப்திசயன நாராயணர் என்பது திருநாமம். வரத ராஜர், ஆழ்வார்கள் முதலிய விக்ரகங்கள் இருக்கின்றன. இங்கே உள்ள சில தூண்களில் சாசனங்கள் காணப்படுகின்றன.

திருநாவுக்கரசர் அடைவு திருத்தாண்டகத்தில் 'எச்சில் இளமர் ஏமநல்லூர்' என்ற தொடர் உள்ளது. இங்கு ஏம நல்லூர் என்று கூறப்படுவது தஞ்சைப் பெரிய கோயிலில் கண்ட சாசனம் ஒன்றில் ''மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய.

திரைலோக்கி மகாதேவிச் சதுர்வேதி மங்கலம்''

என்று கூறப்பட்டிருத்தலால் தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலுகாவில் உள்ள திரைலோக்கி என்ற ஊரே என்பது தெரிய வருகின்றது.

தஞ்சாவூர்: சுவாமி பெயர்: பிருகதீசுவரர். அம்பிகை: பிருகந்நாயகி. (சுயம்வரக்காட்டினாள்). தீர்த்தம் பன்னிரண்டு இருந்தன என்பர். விநாயகர்: அருமொழி விநாயகர்; இராச மகேந்திர விநாயகர்.

தஞ்சைக் கோட்டைக் கீழ்வாசலில் வெள்ளைப்பிள்ளையார் என்ற திருநாமமுடைய ஒருவிநாயகர் எழுந்தருளி இருக்கிறார். இம்மூர்த்தி விஷயமாக ஒரு குறவஞ்சி உண்டு. அது சிதைந்த நிலையில் சரஸ்வதி மகால் புத்தக சாலையில் உள்ளது. அச்சாகி யுள்ளது.

அம்பிகை: சந்நிதானத்தில் தலசரித்திர சம்பந்தமான உருவங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

கருவூர்ச் சித்தர் கோயில் வேப்பமரத்தடியில் அமைந்திருக் கின்றது. (மேலைப் பிராகாரத்தில்).

சுப்பிரமணியர் கோயிலும் சுவாமி கோயிலும் பழையனவே. அம்மன் கோயில் பிற்காலத்தமைந்தது போலும்.

சுவாமி கோயில் முன்பக்கத்தில் பைரவருடைய திருவுருவம் அமைந்திருக்கிறது.

அம்மன் கோயிலில் குடைந்த ஒரு கல் இருக்கிறது. அது சுவாமி அபிடேக எண்ணெய் இடுவதற்குரிய பாத்திரமாக அமைந் திருக்கிறதென்பர்.

இத்தலத்தில் உற்சவகாலத்தில் சோழனுடைய உற்சவ விக்ரகத்திற்கு ரட்சாபந்தனம் செய்த பின்னரே உற்சவம் தொடங் குதல் வழக்கம். தியாகராச சுவாமி உற்சவம் நடைபெறுகிறது. குறவஞ்சி நாடகமும் இப்பொழுது நடைபெறுகின்றது.

கோயிலைச் சுற்றிப்பல லிங்கங்கள் இருக்கின்றன. இக் கோயிலுக்குத் தனியே கோட்டையும் அகழியும் உள்ளன.

இங்குள்ள சிவகங்கை என்னும் தீர்த்தத்தில் ஒரு சிவ லிங்கப் பெருமான் திருவுருவம் இருக்கிறது. அக்குளமே தஞ்சைத் தளிக்குளம். இறைவனை இங்கே பூசிக்கையில் கங்கை பெருகியதால் தேவி இறைவனை அணைத்தனள் என்பர். அந்த வரலாறு அம்பிகை கோயிலில் அமைந்துள்ள ஓவிய மொன்றில் விளக்கப்பட்டிருக்கிறது.

காவிரியிலிருந்து அகழிக்கு ஜலம் வந்தது என்பர்.

இத்தலம் பராசர க்ஷேத்திரமென்று இப்பொழுது வழங்கு கின்றது. இதற்குரிய வடமொழிப் புராணமொன்று சரசுவதி மகால் புத்தகசாலையில் இருக்கிறது. அப்புராணத்தில் சோழர் களுடைய வரலாறும் கூறப்பட்டிருக்கிறது என்று கேள்வி.

தஞ்சையில் பூமாலை ராவுத்தர் தெரு என்று ஒன்று உண்டு. அங்குள்ள சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமம் இராவுத்தேசுவரர் என்பது. வைப்புத்தலம். சுவாமி திருமூலநாதர். அம்பிகை: அகிலாண்டேசுவரி.

தணிகாசலம்:

தணிகாசலம் என்பது தொாண்டை நாட்டிலுள்ள சுப்பிர மணிய தலங்களுள் ஒன்று; செங்கல்வகிரி எனவும், திருத்தணிகை எனவும் வழங்கும். இங்கே உள்ள ஒரு குன்றின்மீது முருகக் கடவுள் ஞானசத்திதரர் என்னும் திருநாமத்தோடு எழுந்தருளி யிருக்கின்றனர்.

தலவிநாயகர்: 1. ஆபத்சகாய விநாயகர் (2) செங்கழுநீர் விநாயகர்.

முருகக் கடவுள் திருநாமம்: ஞானசத்திதரர்.

சிவபெருமான் திருநாமம்: குமார லிங்கம்; வீரேசர்.

தலத்தின் திருநாமங்கள்: கணிகவெற்பு; கந்தாசலம். கல்லாரவெற்பு, காவியங்கிரி, குருகிரி, சீபரிபூராணம், செருத் தணிகாசலம், நீலகிரி.

தீர்த்தங்கள்: இந்திரசுனை, எழுமுனிவர்சுனை, குமார தீர்த்தம், சரவண தீர்த்தம், நந்தி நதி, நாகசுனை, பிரமசுனை, விஷ்ணு தீர்த்தம்.

தனியூர்:

சோழவள நாட்டில் மாயூரத்திற்கு மேற்கே ஒரு நாழிகை வழித்தூரத்திலுள்ளதாகிய ஒரு சிவதலம். இது பாரிசாதவனம் எனவும், புழுகீச மெனவும் வழங்கப்பெறும். மிகப்பெரிதாகிய ஊரைத் தனியூர் என்றல் மரபு; அது பழைய சிலாலசாசனங் களாலும் விளங்கும்.

நெய்தல் தொழிலிற் புகழ் பெற்றவர்களும் சிவநேசச் செல்வர்களுமான சாலியர்கள் பரம்பரையாக வாழ்தற்கிடமாகிய கூறைநாடு என்பது இவ்வூரின் ஒரு பக்கத்தே உள்ளது.

தலவிநாயகர்: வரத விநாயகர்.

சுவாமியின் திருநாமம்: புழுகீசர் என்பது. இங்கே பூர்வ புண்ணிய விசேஷத்தால் புழுகுபூனை ஒன்று சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றமையின் இவர் இத்திருநாமம் பெற் றார்.

அம்பிகையின் திருநாமம் சாந்த நாயகி என்பது; சாந்தம்மை சாந்து எனவும் வழங்கும்.

தலவிருட்சம், பாரிசாதம் (பவளமல்லிகை)

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இத்தல விஷயமாக ஒரு புராணம் இயற்றியுள்ளார்.

புழுகீசப்படலத்தில் யானை முதலிய பல அஃறிணைப் பொருள்கள் சிவபிரானைப் பூசித்துப் பேறு பெற்றனவென அத்

தலத்தில் பூசித்துப் பேறு பெற்ற புழுகு பூனை ஒன்று எண்ணிய தாக உள்ள பகுதி சிவநேசச் செல்வர்களுக்கு இன்பத்தைப் பயக்கும்.

திருத்தருப்பூண்டி:

பிருஹந் நாயகி ஸமேத பவஷதீஸ்வரர்.
ப்ரமரகுஸுமாம்பா ஸமேத வல்மீகேசுவரஸ்வாமி.

திருத்தலையூர்:

இது சிரபுரமெனவும் வழங்கும். உருத்திரபசுபதி நாயனார் ஒரு குளத்தில் தலைமட்டும் தெரியும்படி நின்று உருத்திரத்தை ஜபித்தமையின் இது இப்பெயர் பெற்றது.

திருத்தலையூரென்று பெயருள்ளதோரூர் உருத்திரபசுபதி நாயனாரவதரித்ததாகத் திரிசிரபுரத்திற்கு மேற்கேயுள்ள தென்றும் கூறுகின்றார்கள்.

திரு நகரி: சீகாழியைச் சார்ந்த ஒரு விஷ்ணு ஸ்தலம்.

12. தாராசுரத்திலுள்ள கோயிலுக்கு ஐராவதேசுவர சுவாமி கோயில் என்று பெயர். ஐராவதம்—இந்திரனுடைய பட்டத்து யானை; இங்குள்ள இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றதால் இங்கே எழுந்தருளியிருக்கின்ற இறைவனுக்கு 'ஐராவதேசுவரர்' என்று பெயர் வந்தது என்பர். தாராசுரம் கோயில் ஒரு கலைக்களஞ்சியம் ஆகும்.

பிருஹந்நாயகி—பிருஹதீசுரர்.

திரிசூலகிரி:

இது ஒரு சிவஸ்தலம். திருவண்ணாமலைக்கு வடக்கே பங்களை நாட்டிலுள்ளது. இதற்குத் தேவாரமில்லை. தமிழில் புராணம் ஒன்று இருக்கிறது. அது மாயூரம் சந்திரசேகர உபாத்தியாயரால் அச்சிடப்பட்டுள்ளது.

திரிபுவனம்:

தர்மஸம்வர்த்தனி ஸமேத கம்பஹரேசுவரர்.

தில்லையாடி: பங்குனி மாதம் இவ்வூரில் திருவிழா நடைபெறும்.

நஞ்சுண்டேசுவரர் கோயில்: மைசூரின் தென்மேற்கில் 18 கல் தொலைவில் உள்ளது. இந்தத் தலத்தில் சுவாமிக்கு நஞ்சணிக்கூடலீசுவரர் என்றும் பெயருண்டு. கபிலநதி, வசிஷ்ட நதி, குண்டலநதி என்ற நதிகள் இங்கே கூடுகின்றமையால் இது கூடல் என்றும் பெயர் பெற்றது.

நல்லாடை: (நூதனவஸ்திரபுரி) பெருமுனைக்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. சுவாமி: அக்னீசர். அம்பிகை: சௌந்தர நாயகி. தலவிருக்ஷம்; மா.

நூதன வஸ்திரபுரி இது மிருகண்டுவின் ஆச்சிரமம். ஸ்வாமி: ஸுந்தர நாயகி ஸமேத அக்னீஸ்வர மஹா லிங்கம்.

அரசர்கள் கொடுத்த வஸ்திரங்களை ஷிமுனிவர் அக்கினியிற் சேர்த்துவிட அவை பின்பு லிங்கத்திற் காணப்பட்டமையின் இத்தலம் இப்பெயர் பெற்றது. இத்தலத்தில் மிருகண்டு, மார்க்கண்டேயர் முதலியோர்களுடைய வடிவங்களுள்ளன.

நாகூர்:

நாகவல்லி ஸமேத நாகேஸ்வரர்.

ப்ரமர ஸங்கித குஸுமாம்பா ஸமேத ஐராவதேசுவரர்.

நியமம்: ஒரு சிவஸ்தலம், நேமமென வழங்கும்.

நீடாமங்கலம்: ஒரு கொக்கு சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றமையால் இஃது இப்பெயர் பெற்றது. நீடா-கொக்கு.

பிராந்தை—சாத்தனூர்:

இது புரையாற்றுக்கு மேற்கே 2½ மைலில் உள்ளது.

புதுக்கோட்டை: இந்தச் சமஸ்தானத்திலுள்ள கோயில்களில் திருக்கோகர்ணம், திருவரன்குளம், குடுமியார்மலை, பேரையூர், அம்புக்கோயில் என்னும் ஐந்தும் விசேஷமுள்ளவை.

பிருகந்நாயகி என்னும் பெயருடைய அம்பிகை மூன்று தலங்களில் உண்டு.

1. திருவரன்குளம்.

2. ஊரிலுள்ள பல்லவன் குளத்துக்கரையிலுள்ள சிவாலயம் (இங்கேயுள்ள சுவாமியின் பெயர் சாந்தநாதேசுவரர் என்பது)

3. கோகர்ணம் (சிவபிரான் திருநாமம் கோகர்ணேசுவரர் என்பது.)

கலசமங்கலம்: புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ளது. கலசக் கோயில் என்ற ஒரு கோயில் இருக்கிறது. புதுக்கோட்டையில் விசேடமுள்ள மாரியம்மன் கோயில் ஊர்கள் 1. கொன்னையூர், 2. திருவெப்பூர், 3. தென்னங்குடி, 4. நார்த்தாமலை. பொற்பனைக் கோட்டை: திருவரன் குளத்துக்கருகிலுள்ளது. இங்கே பொற்பனை முனியென்ற தெய்வம் ஒன்று இருக்கிறது.

அம்புக்கோயில்: சங்க நூல்களில் காணப்படும் அழும்பில் என்பது இதுவே யென்பர். அம்புநாட்டுக்கள்ளருடைய கோயில் இது. புதுக்கோட்டை அரச பரம்பரை இக்கள்ளர் வகுப்பைச் சார்ந்ததே.

இரும்பாழி: இது புதுக்கோட்டைச் சமஸ்தானத்துச் சத்திய மங்கலத்துக்கு அருகில் உள்ள ஒரு பழைய சிவாலயம்.

புலியூர்:

அமராவதிக்குத் தென்கரை. வியாக்ரபுரீச்வரர் மேற்கு சந்நிதி. அம்பிகை. கருணாகடாக்ஷி.

பூவாளூர்: இச்சிவஸ்தலம் சோழ நாட்டின் பழங்காலப் பிரிவுகளுள் மேல் மழநாடு என்பதைச் சார்ந்தது. இக்காலத்துப் பிரிவில் திருச்சிராப் பள்ளியில் லாலுகுடி என்னும் தாலுகாவில் இருக்கிறது.

மன்மதன் இத்தலத்திற்கு வந்து சிவபெருமானைப் பூசித்தானென்பது புராண வரலாறு. அதனால் இது பூவாளியூர் என்ற பெயரையுடையதாகி அப்பால் மருவிப் பூவாளூரா யிற்றென்பர். காமர்பதி என்பது இதற்குரிய வேறொரு பெயர். பெரிய புராணத்தில் உள்ள திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் வரலாற்றில் திருவானைக்கா முதலிய தலங்களுக்கு அவர் சென்றாரென்னும் செய்தி வரும் இடத்தில் திருவானைக்காவுக்கு அருகிலுள்ள பல தலங்களின் பெயர்கள் சொல்லப் படுகின்றன.

''ஆரணத் துட்பொரு ளாயினாரை
ஆனைக்கா வின்கட் புகழ்ந்து பாடி
ஏரணியும்பொழில் சூழ்ந்தசண்பை
ஏந்தலா ரெல்லையி லின்பமுற்றார்''

என்பதில் அவர் திருவானைக்காவைத் தரிசித்த செய்தி வருகிறது. அதன்பின்.

''கைதொழு தேத்திப் புறத்தணைந்து
காமர் பதியதன் கட்சிலநாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார்
மன்னுந் தவத்துறை வானவர்தான்
எய்தி யிறைஞ்சி யெழுந்துநின்றே.
இன்றிமிழ் மாலைகொண் டேத்திப்போந்து
வைதிக மாமணி யம்மருங்கு
மற்றுள்ள தானம் வழுத்திச்செல்வார்.

என்ற செய்யுள் உள்ளது. இதன் முதலடியில் வரும் காமர்பதி என்பது பூவாளூரைக் குறிப்பதாக எண்ண இடமுண்டு. பூவாளூர்ப்பதிற்றுப் பத்தந்தாதி யென்னும் பிரபந்தத்தில் இவ் வூர், 'காமர் வளம்பதி' 'காமர் பூம்பதி' காமளூர், காமர்பதி' எனவும் வறுங்கப் பெறுகின்றது. திருவானைக்காவுக்கும் திருத்தவத்துறை (லாலுகுடி)க்கும் அருகில் இத்தலம் இருப்பதால் திருவானைக்காவிலிருந்து திருத்தவத்துறைக்கு எழுந்தருளிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இத்தலத்தில் தங்கி யிருத்தல் இயல்பே.

பூவாளூர்த்தல விஷயமாக வடமொழியில் ஒரு புராணமும், தமிழில் ஒரு புராணமும் உள்ளன. தமிழ்ப்புராணத்தை இயற்றி யவர் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்த ஸ்ரீகச்சி யப்ப முனிவரராவார். இங்கே எழுந்தருளிய ஸ்வாமியின் திரு நாமம் திருமூலநாதரென்பது. குங்கும ஸௌந்தரி என்பது அம்பிகையின் திருநாமம். இத்தலத்துக்குரிய விருட்சம் வில்வம். திருக்கோயிலுக்கு வடக்கே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஒரு சிற்றாறு ஓடுகிறது. அது பங்குனி நதியென்னும் பெயருடையது. சுயாபங்குனி எனவும் வழங்கும்.

பெருமுனை: திருக்கடலூருக்கு மேற்கே ஐந்து மைல்.
சுவாமி: சுயம்புநாதர்.

அம்பிகை: முல்லைவனநாயகி. கோயில் கட்டுமலையின்மேல்.
சந்நிதி: தெற்கு முகம். தீர்த்தம்: வசிஷ்ட தீர்த்தம்.

பேரளம்:

பவானியம்பா ஸமேத ஸ்வயம்பு நாதேஸ்வரர்.

திருப்பேரூர்: சிவபெருமான் காமதேனுவின் கன்றினுடைய குளம்படியின் சுவட்டைத்தாங்கிய தலம்.

பொதுவுடையார் கோயில்: சிதம்பர பாரதியாரின் தகப்பனாராகிய முத்துராமையராற் பாடப்பட்ட பதிகமொன்று இத்தலத்துக்கு உண்டு. இங்கே ஆல மரந்தான் இருக்கிறது. அதற்குத்தான் பூசை. திங்கட்கிழமை இரவு 12 மணிக்குப் பூசை நடைபெறுவது வழக்கம்.

மணலூர்ப்பேட்டை: இவ்வூர் திருக்கோவிலூருக்கருகில் உள்ளது. சுவாமி பெயர் அகத்தீசுவரர். காமாட்சி அம்மை, சௌந்தர வல்லி என்று இரண்டு அம்பிகை இங்கே முதல் ராஜராஜனுடைய சாசனம் இருக்கிறது.

இத்தலத்தில் பாவனாரிஷி யென்ற ஓர் உற்சவ விக்கிரகம் இருக்கிறது.

மணற்பள்ளி: இது நாமக்கல் தாலுக்காவில் உள்ள ஓரூர் காவிரிக்கரையிலுள்ளது. பல இடங்களில் மணல்மேடுகள் இருக்கின்றன.

சுவாமி: பீமேசுவரர். அக்கோயிலில் சிலாசாசனங்கள் இருக்கின்றன. அவை முதற்குலோத்துங்கன் காலத்தவை என்று தெரிகின்றன.

மருத்துவக்குடி:

அபிராமி—ஐராவதேசுரர்.

மாதூர் பூதம்: பெண்ணைக்கரையில் உள்ள சிவஸ்தலம். கள்ளிப்பேட்டை என்னும் ஊரிலுள்ளது.

திருமானூர்:

காமாக்ஷி—கைலாசநாதர்.

திருமுக்கூடல்: இது கருவூருக்கு வடகிழக்கில் ஏழு மைலில் உள்ளது. காவிரியும் அமராவதியும் சங்கமமாகும் இடம்.

மூகளூர்:

ஸௌந்தர நாயகி ஸமேத மார்கஸஹாயேஸ்வரர்.

ரிஷிவந்தியம்

திருவண்ணாமலைக்கு ஸமீபமாக பசுபூசித்த ஸ்தலம்.

வயலூர்: திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்திலுள்ள சுப்பிரமணிய ஸ்தலம்.

வழுவூர்: எட்டு வீரட்டத்துள் ஒன்று.

வள்ளலார் கோயில்: மாயூரத்திற்கு வடக்கேயுள்ளதொரு சிவஸ்தலம்.

வாங்கல்:

ரவீஸ்வரர்:—மேற்கு சந்நிதி.

வருஷத்தில் ஒருநாள் சூரியன் கிரணம் மதிற் சுவரிலுள்ள துவாரத்தின் வழியாகச் சிவலிங்கத்தின் மீதுபடும்.

ஐம்பை: திருத்தாந்தோன்றியென்று சிலாசாசனங்களில் வழங்கும். இக்கோயிலிலிருந்து ஓர் ஊற்று பெண்ணையாற்றில் வந்து விழுகின்றது.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	20	ஆலள	ஆலய
13	22	வாலை	விரலை
21	20	ரம்பாயி	ரன்பாயி
41	17	ஆதினத்	ஆதீனத்
42	8	சுலந்தநஞ்சை	கலந்த நஞ்சை
45	14	தேவர்களும்	தேவர்களும்
123	17	(திருஞா. 4ஆம்திரு)	(திருநா. 4ஆம்திரு)
126	13	திருஒத்தூர்	திருஒத்தூர்
92	6	உத்தாலகவனமென்றும்	தெனாது உத்தாலக வனமென்றும்
171	25	சித்தீச்சரம்	சித்தீச்சரம்
172	20	தெலைவில்	தொலைவில்
176	26	உன்டதென்னே	உண்டதென்னே
180	7	(கிவ.)	(சிவ.)
184	5	பெய்கை	பொய்கை
185	23	முந்றூற்றறறுபது	முந்நூற்றறுபது
188	18	ஆதித்யாபயாப்ரம்பிகை	ஆதித்யாபயப்ர தாம்பிகை
190	4—5	தேவாரப்பாடல்கள்	தேவாரப்பாடல்
197	21	வழிப்பட்டுப்	வழிபட்டுப்
226	22	குப்பமென்	குப்பமென்று
227	3	இத்தலத்தைப்	இத்தலத்தைச்
240	1	—	திருத்தலங்கள்
242	7	சுந்ரதரும்	சுந்தரரும்
263	8	ஸ்ரீவரதானேசுவரர்	ஸ்ரீவதானீசுவரர்
279	28	(சோழநாடு)	(நடுநாடு)
337	6	கோயுலுளாயே	கோயிலுளாயே.
340	17	கொடதொழிய	கொடாதொழிய
346	22	பெற்றறது	பெற்றது
348	30	ஸத்யாக்குப் பிள்ளையார்	ஸத்யவாக்குப் பிள்ளையார்
351	10	அத்தியோபதேசத்தால்	அகத்தியோபதேசத்தால்
353	36	ரளிச் செய்த	ரருளிச் செய்த
422	24	குற்றாலம்	குத்தாலம்
608	13	அழுந்தூரத்து	அழுந்தூரு
608	26	பெருவேஞர்	பெருவேஞர்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
609	30	மயிலி	மைலி
610	14	ரெய்து	றெய்து
610	29	மாகோதை	மகோதை
613	18	ஆற்றுரர்ப்	ஆற்றூர்ப்
613	29	ஸ்ரீ காந்த	ஸ்ரீ ஸ்காந்த
616	17	மாகுடி வைப் மாங்குடி	மாகுடி—மாங்குடி
623	15	பாலாங்குராம்பிகை	பாலசுகாம்பிகை
623	19	விக்கிரக	விக்கிரகம்
627	6	ஸ்ரீ காலேமசுவர	ஸ்ரீ காமேசுவர
627	22	மௌத்திக	மௌக்திக
627	24	ருத்தாப	ஹ்ருத்தாப
628	11	ப்ரம்மேசுர்	ப்ரம்மேசுவரம்
629	10	குறிக்க	குறித்த
629	21	புரமபுரீசர்	பிரமபுரீசர்
629	21	வில்வழ	வில்வவன
630	6	ரருண	வருண
630	31	பெயரால்	பெயராமல்
630	6	சோமதீற்த்தம்	சோமதீர்த்தம்
632	4	அவநாசி	அவிநாசி
632	6	பெரும்பழனம்	பெரும்பழனம்;
633	27	யெச்சி	யெச்சில்
634	5	மாண்டவயர்	மாண்டவ்யர்
634	17	(நிம்பரண்யம்)	(நிம்பாரண்யம்)
634	19	மிருகந்நாயகி	பிருகந்நாயகி
635	2	ஹரத்தேசுவரர்	ஹரதீர்த்தேசுவரர்
635	2	பிருகந்நாபகி	பிருகந்நாயகி
635	21	இடறினாள்	இடறினான்
635	27	யென்றும்	யென்னும்
638	13	இசிலந்துறை	இலந்துறை
638	15	பத்ராண்யம்	பத்ராரண்யம்
640	12	திருப்பென்	திருப்பொன்
640	13	ஒருருருவப்	ஏருருவப்
640	22	விந்தமசை	விந்தமலைச்
640	24	சாதஞ்	சரிதஞ்
640	24	செவிப்க	செவிப்புக
641	12	நுரித	துரித
641	12	நுரிதாப	துரிதாப
641	13	மலராவ	மலரால

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
641	14	பூண்டாள்	பூண்டான்
641	18	அரித்நுவச	அரித்துவச
641	22	வீண்டு	வீண்
641	24	நிருத்தாம்பரேசர்க்கே	நிருத்தாம்பரேசர்க்கெ
641	33	ஐந்து	ஐந்து
641	36	ர்ஷி	ரிஷீ
642	12	மந்டபங்	மண்டபங்
642	15	யாகவுத்	யாவுத்
642	23	பாவபி	பாலபி
643	8	பிழப்பு	பிழம்பு
643	19	யென்றுக்	யென்றும்
643	20	ரிலங்க	ரிலிங்க
643	20	விங்கங்	விலிங்கங்
643	23	வீடருள்ளே	வீடருள்வே
643	24	அந்தர்தானம்	அந்தர்த்தானம்
643	26	சன்னதி	சந்நிதி
643	29	இராசுந்	இராதந்
643	31	குஞ்சல்	குஊஞ்சல்
644	2	பக்ஷணி	பக்ஷணியா
644	5	தவ	தல
644	10	பாடிகளெ	பாடிகனெ
644	18	பெர்	பெயர்
644	24	வளக்குங்	வளர்க்குங்
645	5	வருங்கால	வருங்கால்
645	6	தளமெடுத்திற்	தளமெடுத்தித்
645	7	கூட	கூற
647	17	நைமித்திகஞங்கள்	நைமித்திகங்கள்
647	17	சிறப்புறை	சிறப்புற
648	2	தவக்	தலக்